ஜமாபந்தி தணிக்கைக் குறிப்பில் நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்படுவதற்காக அனுப்பப்படும் மேலெழுத்து 435

இணைப்பு III.

[12 ஆவது நிலை ஆணை 15 ஆவது பத்தி.]

கிராமப் புள்ளி விவரப் பதிவேடுகள் தயாரிக்கப்படுவதற்கு வேண்டிய அறிவுரைகளைக் கொண்டுள்ள குறிப்பு 438

இணைப்பு IV.

[15 ஆவது நிலை ஆணை 6 ஆவது பத்தி.]

ஒப்படைக்குறிப்பு 462

அ. அரசாங்க நிலத்திற்குச் செய்யப்பட்டிருக்கும் விண்ணப்பத்தைப் பற்றிய அறிவிப்பு .. 463

ஆ. பட்டியல் நீக்கப்பட்டது 464

இ. பதிவேடு 465

இணைப்பு V.

[15 ஆவது நிலை ஆணை, 9, 12, 29, 41, 42 பத்திகள்.]

இ. படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] .. 466

ஈ. படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] .. 466

பக்கம்

தனிப்பட்ட விற்பனையில் அல்லது கிரயமின்றி நிலத்தைக் கொடுக்க முடிவு செய்வதற்காகப் பிறப்பிக்கப்படும் அறிவிப்பின் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] 470

விற்பனையால் செய்யப்படும் நில ஒப்படை ஆணையின் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] 475

நீலகிரி மேல் பீடபூமியில் தோட்ட விளை பொருள் பயிர் செய்வதற்காகப் பிறப்பிக்கப்படும் நில ஒப்படை ஆணையின் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] 479

ஆனமலைப் பகுதிகளில் தோட்ட விளை பொருள் பயிர் செய்வதற்காகப் பிறப்பிக்கப்படும் நில ஒப்படை ஆணையின் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] 483

பழனி மலைப் பகுதியில் (கொடைக்கானல் நகர எல்லைக்கு வெளியில் தோட்ட விளை பொருள் பயிர் செய்வதற்குப் பிறப்பிக்கப்படும் நில ஒப்படை ஆணையின் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] 488

ஏலக்காய் விளைவிப்பதற்குக் கொடுக்கப்படும் சோலை நிலக் கொடை ஆணையின் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] 493

ஏலக்காய் விளைவிப்பதற்குக் கொடுக்கப்படும் சோலை நிலத்தை எடுத்துக் கொள்ளும் உரிமை விற்பனை அறிவிப்பின் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி] 497

அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கு நிலங்கள் ஒப்படை செய்வதற்குப் பிறப்பிக்கப்படும் தனி ஆணைப் படிவம் [இணைப்பு V—தொடர்ச்சி]. 502

இணைப்பு V அ.

[15 ஆவது நிலை ஆணை 38 (viii) ஆவது பத்தி.]

துறைமுகங்களின் எல்லைக்குள் இருக்கும் நிலங்களைக் கடல் துறை சம்பந்தமில்லாதவற்றின் உபயோகங்களுக்காக வருவாய்த் துறையினரால் கொடுக்கப்பட்டவற்றின் குத்தகைத் தொகை விதங்கள் 506

பக்கம்

இணைப்பு VI—நீக்கப்பட்டது.

இணைப்பு VII.

[15 ஆவது நிலை ஆணை 38 (x) ஆவது பத்தி குறிப்பு]

இருப்புப் பாதை நகரங்களை ஏற்படுத்தும் பொழுது கவனிக்க வேண்டியவை 508

இணைப்பு VIII.

[15 ஆவது நிலை ஆணை 7, 39 பத்திகள்] ஆக்கிரமிப்பு குறித்து 510

இணைப்பு IX.

[15 ஆவது நிலை ஆணை, 42 ஆவது பத்தி.]

செங்கல்பட்டு மாவட்டத்திற்குரிய தனிப் படிவங்கள் நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தின் படிவம் 512

அரசினர் வசமுள்ள நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தைப் பற்றிய அறிவிப்பு 512

இணைப்பு X—நீக்கப்பட்டது.

இணைப்பு X. அ.

[15 ஆவது நிலை ஆணை.]

விவசாய உபயோகங்களுக்காக அரசினர் வசமுள்ள நிலத்தைத் தற்காலிகமாகக் கொடுப்பதற்குப் பிறப்பிக்கப்படும் ஆணையின் படிவம் 513

இணைப்பு XI.

[18 ஆவது நிலை ஆணை, 2 ஆவது பத்தி (ii) உட்பிரிவு.]

மரவரித் திட்டத்தின்கீழ்க் கொடுக்கப்படும் மரப் பட்டாக்களின் படிவம் 519

பக்கம்

இணைப்பு XI அ.

[18அ ஆவது நிலை ஆணை, 3-ஆவது பத்தி.]

மரங்களின் விற்பனை அறிவிப்பு 521

இணைப்பு XI ஆ.

[18அ ஆவது நிலை ஆணை 3 ஆவது உட்பத்தி.]

200 ரூபாய் மதிப்பிற்கும் அதிகமான விலை மதிப்புள்ள மரங்களின் விற்பனை அறிவிப்பு 523

இணைப்பு XII.

[19 ஆவது நிலை ஆணை, 1 ஆவது பத்தி (iii) ஆவது உட்பிரிவு.]

சொந்த தோப்புகளுக்குரிய நீண்ட நிலக் குத்தகை பட்டயம் 526

இணைப்பு XIII.

[19 ஆவது நிலை ஆணை 2ஆவது பத்தி (iii) உட் பிரிவு.]

பொதுத் தோப்புகளுக்குரிய நீண்ட நிலக் குத்தகைப் பட்டயம் 530

இணைப்பு XIV.

[19 ஆவது நிலை ஆணை, 2 ஆவது பத்தி].

அரசினரின் புறம்போக்கு நிலங்களில் மரங்கள் நடுவதற்குக் கொடுக்கப்படும் உரிமத்தின் பட்டயம். 534

இணைப்பு XV.

[21 ஆவது நிலை ஆணை, 2 வது பத்தி (iv) ஆவது உட்பிரிவு.]

கிராம நத்தம் அல்லது கிராம மனைக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தைப் பற்றிய அறிவிப்பு 535

பக்கம்

இணைப்பு XVI.

[21 ஆவது நிலை ஆணை, 2 ஆவது பத்தி (v), (vii) ஆவது பிரிவுகள் (7) ஆவது பத்தி (i) ஆவது பிரிவு, 11 ஆவது பத்தி (2) ஆவது உட்பத்தி, (ii) ஆவது பிரிவு 15 ஆவது பத்தி (i) ஆவது பிரிவு.]

கிராமத்தின்
———————வீட்டு மனைக்காகச் செய்யப்படும்
நகரத்தின்
விண்ணப்பங்களின் பதிவேடும் அறிக்கையின் பதிவேடும் 537

இணைப்பு XVII.

[21 ஆவது நிலை ஆணை, 2 ஆவது பத்தி (vii) ஆவது உட்பிரிவு].

21 ஆவது நிலை ஆணை 2 (vii) ஆவது பத்தி இவற்றின் கீழ்க் குறிப்பிட்ட தரைப்படங்களும் பதிவேடும் 538

இணைப்பு XVIII.

[21 ஆவது நிலை ஆணை, 7 (i), 15 (ii) ஆவது பத்திகள்].

வீட்டு மனைகளின் ஒப்படைப் பதிவேடு 541

இணைப்பு XIX.

[21 ஆவது நிலை ஆணை, 7 ஆவது பத்தி (ii) ஆவது உட்பிரிவு].

கிராமங்களின் வீட்டு மனை ஒப்படை ஆணைப் பத்திரம் 542

இணைப்பு XIX அ.

நீக்கப்பட்டது. 546

இணைப்பு XX.

[21 ஆவது நிலை ஆணை, 7 ஆவது பத்தி (ii) ஆவது உட்பிரிவு.]

கிராமங்களில் கால்நடைகளை வைத்திருப்பதற்காக மனைகள் ஒப்படைச் செய்வதற்குப் பிறப்பிக்கப்படும் ஆணையின் பத்திரம் 546

பக்கம்

இணைப்பு XXI.

[21 ஆவது நிலை ஆணை, 7 ஆவது பத்தி (i) ஆவது உட்பிரிவு.]

..... தாலூகாவில் வீட்டு மனைகளுக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்களின் பதிவேடு 551

இணைப்பு XXII.

[21 ஆவது நிலை ஆணை, 11(1) ஆவது பத்தி.]

சென்னை மாநகரில் அரசினருக்குச் சொந்தமான காலி நிலம் கொடுப்பதற்கும் மனைத் தீர்வை திருத்தி அமைப்பதற்கும் வகுக்கப்பட்டுள்ள விதிகள் 552

அ. படிவம். சென்னை மாநகரத்தில் அரசினருக்குச் சொந்தமான காலி நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்களின் பதிவேடு

விண்ணப்பத்தின் மீது அனுப்பப்படும் அறிக்கை. 561

ஆ படிவம். சென்னை மாநகரில் அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் இருப்பு உரிமை விற்பனை அறிவிப்பு 562

இ. படிவம். சென்னை மாநகரில் அரசினருக்குச் சொந்தமான நிலங்களின் ஒப்படைப் பதிவேடு 565

ஈ படிவம். சென்னை மாநகரில் செய்யப்படும் நில ஒப்படை ஆணைப்படிவம் 566

உ படிவம். சென்னை மாநகரில் அட்டவணையில் கண்ட வகுப்பினருக்குச் செய்யப்படும் நில ஒப்படை ஆணை 570

சென்னை நகரில் தனிப்பட்டவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட அரசினரின் நிலங்களின் மனைத் தீர்வையைத் திருத்தி அமைப்பதற்கு வகுக்கப்பட்டுள்ள விதிகள் 574

இணைப்பு XXIII.

[21 வது நிலை ஆணை, 11(2) (v) ஆவது உட்பிரிவு.]

வீட்டு மனை இருப்புரிமை விற்பனை அறிவிப்பு 582

பக்கம்

இணைப்பு XXIII அ.

[21 ஆவது நிலை ஆணை, 14 ஆவது பத்தி குறிப்பு.]

தனிப்பட்ட விற்பனையில் அல்லது ஆரம்பத்தி லேயே தொகை எதுவுமின்றி வீட்டு மனை கொடுக்கப்படுவதற்கு செய்ய வேண்டிய அறிவிப்பு 586

இணைப்பு XXIV.

[21 ஆவது நிலை ஆணை, 15 ஆவது பத்தி (ii) ஆவது உட்பிரிவு.]

நகர மனைகளின் ஒப்படை ஆணைப் படிவம் .. 587

இணைப்பு XXV.

[21 ஆவது நிலை ஆணை, 16 ஆவது பத்தி.]

பாளைய நில ஆட்சி விதிகள் 592

இணைப்பு XXVI.

[22 ஆவது நிலை ஆணை; 6 ஆவது பத்தி.] 656

கட்டட விற்பனைச் சான்றுப் படிவம்

இணைப்பு XXVI அ.

நீக்கப்பட்டது .. ..

இணைப்பு XXVII.

[22 ஆவது நிலை ஆணை, 6 ஆவது பத்தி.]

கட்டடத்துடன் மன நில விற்பனை உரிமைப் பத்திரப் படிவம் 656

இணைப்பு XXVIII.

நீக்கப்பட்டது.

இணைப்பு XXIX.

[24 ஆவது நிலை ஆணை, 5 ஆவது பத்தி.]

அரசினர்களுக்குச் சொந்தமான நிலத்தைத் தனிப்பட்டவர், நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் விட்டுவைக்கப் படுவதற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தின் படிவம். 660

பக்கம்

இணைப்பு XXX.

[24 ஆவது நிலை ஆணை, 12 ஆவது பத்தி.]

அரசினருக்குச் செலுத்த வேண்டிய நிலத் தீர்வை விலக்குக்காகச் செய்து கொள்ளப் படும் விண்ணப்பம். 660

இணைப்பு XXX அ.

[24 ஆவது நிலை ஆணை.]

விவசாயமில்லாத உபயோகத்திற்காக அரசினரின் நிலத்தைத் தற்காலிகமான அனுபோகத்திற்குக் கொடுப்பதற்குப் பிறப்பிக்கப் படும் ஆணையின் படிவம் 661

இணைப்பு XXXI.

[24 ஆவது நிலை ஆணை, 16 ஆவது பத்தி.]

(தற்காலிகமாகத் தீர்வை அமைக்கப்பட்டுள்ள) அரசுக் குடிப் பகுதிகளில் அளிக்கப்படும் தீர்வை விலக்கு 670

இணைப்பு XXXI அ.

[26 ஆவது நிலை ஆணை, 7 ஆவது பத்தி.]

நில ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதில் மேற் கொள்ள வேண்டிய நடைமுறையைப் பற்றிய அறிவுறைகள் 674

இணைப்பு XXXII.

[26 ஆவது நிலை ஆணை, 3 ஆவது பத்தி.]

1905 ஆம் ஆண்டு சென்னை III-ஆவது நில ஆக்கிரமிப்பு சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் அறிவிப்பு. 677

பக்கம்

இணைப்பு XXXII அ.

[26 ஆவது நிலை ஆணை, 10 ஆவது பத்தி.]

மாவட்ட நகராட்சிகளின் (சென்னை 1920 ஆம் ஆண்டு) சட்டத்தின் 183 (5) ஆவது பிரிவின் கீழும் சென்னை மாவட்டக் கழகங்களின் (சென்னை 1920 ஆம் ஆண்டு) சட்டத்தின் 160(5) ஆவது பிரிவின் கீழும் இயற்றப்பட்ட விதிகள். 678

இணைப்பு XXXIII—நீக்கப்பட்டது.

இணைப்பு XXXIV.

[31-5 ஆவது நிலை ஆணை, 5 ஆவது பத்தி.]

பசலியில் பதிவு மாற்றதலுக்காக ஒரு தரத்தினராலும் விண்ணப்பம் செய்து கொள்ளப்படாத நிலத்தின் முழு உரிமைப் பதிவு மாற்றுதல்களைக் காட்டும் விவரப் பட்டியல். 684

இணைப்பு XXXV.

[31 ஆவது நிலை ஆணை, 9 ஆவது பத்தி.] 686

வருவாய்க் கணக்குகளில் பதிவு மாற்றுதலுக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தின் படிவம்—

I. பத்திரப் பதிவாளரிடமும் உதவிப் பதிவாளரிடமும் தாக்கல் *செய்யும்போது உபயோகிக்க வேண்டிய விண்ணப்பத்தின் படிவம் 686

II. வருவாய்த் துறை அலுவலர்களிடம் தாக்கல் செய்யும்போது உபயோகிக்க வேண்டிய விண்ணப்பத்தின் படிவம் 687

இணைப்பு XXXVI —நீக்கப்பட்டது.

இணைப்பு XXXVII.

[33 ஆவது நிலை ஆணை, 2 ஆவது பத்தி.]

மாவட்டங்களில் நில உரிமையை விட்டுவிடுவதற்குரிய கடைசியான நாள். 690

வருவாய்த் துறை வாரிய நிலை ஆணைகள்

(நில வருவாய், நிர்ண்யம், மற்றும் பலவகையின.)

தொகுதி I.

அத்தியாயம் .

தீர்வை விதித்தலும், நிலத்தைக் கொடுக்க முடிவு செய்தலும்

பாகம் 1. நிலத்திற்குத் தீர்வை விதித்தல்.

1. தீர்வை வீதங்கள்.—1. அரசுக் குடி நிலங்களின் தீர்வை நிர்ணயக் கொள்கைகள்:—

கீழே கண்டுள்ள கொள்கைகள் அரசுக் குடி நிலங்களின் தீர்வை நிர்ணயத் திற்கானவை:—

(1) நிலத்திற்கே தீர்வை விதிக்க வேண்டும்.—நிலத்திற்கே தீர்வை விதிக்க வேண்டுமே அன்றி, நிலத்தின் விளை பொருள்களின் தன்மையில் தீர்வை விதித்தலாகாது. மக்களில் சிலர் குறிப்பான வகுப்பினர்கள் என்ற அடிப்படையிலும் தீர்வை வீதங்கள் விதித்தல் ஆகாது.

31–8–1854 தேதி, வ.து.வா.செ. (மா. 1854 தொகுதி II பக் 21).
18–9–1854 தேதி, வ.து.வா.செ. (மா. 1858 தொகுதி III, பக். 142–143).

(2) மண் வயணப் பாகுபாடு.—மண் வயணப் பாகுபாடு கூடிய வரையில் எளிதாகவும், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு வகையில் இல்லாமல் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரே மாதிரியாகவும் இருக்கவேண்டும்.

31–8–1854 தேதி, வ.து.வா.செ. (மா. 1854 தொகுதி II, பக். 21–22)

(3) தீர்வையை எவ்வாறு நிர்ணயிக்க வேண்டும்.—விவசாயச் செலவுகள் முதலியவை கழிக்கப்பட்ட பின்னர், கைவரப் பெறும் நிகர விளை பொருள் மதிப்பின் பாதிக்கு மிகையாகாதவாறு தீர்வை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

20–3–1885 தேதி, 1006, வ.து.வா. செ.

(4) இரண்டாம் போகத்திற்குரிய தீர்வை.— [1] புன்செய் நிலங்களில் விளையும் இரண்டாம் போகப் பயிருக்குத் தீர்வை விதிக்கத்தக்கதில்லை. [2]

---

[1] 13–8–1854 தேதி, வ.து.வா.செ. (மா. 1854, தொகுதி II, பக். 22).
[1] ஆ 14–7–1874 தேதி, 880, அ.ஆ.

இ 15–2–1858 தேதி, க.நி.சு. 191.
4–6–1918 தேதி, 112, வ.து.வா.செ. நிர்.
7–6–1956 தேதி, 475 எண். அ.ஆ. வாலாயம்.
13–8–1956 தேதி, 1146 எண். வ.து.வா.செ. கை.ப.

ஆனால், சாதாரண பருவ காலங்களிலெல்லாம் அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து, நன்செய் நிலங்களில் விளையும் இரண்டு போகங்களின் பயிர்களுக்குத் தேவையான தண்ணீர் தவறுது கிடைக்குமாயின், அந்நன்செய் நிலங்களை இரு போக நஞ்சை நிலங்களாகப் பதிவு செய்ய வேண்டும்.[1] இரண்டாம் போகப் பயிருக்குத் தீர்வை சாதாரணமாக முதல் போகப் பயிர்த் தீர்வையின் பாதியாகும். இப்பாசனத்திற்குத் தண்ணீர் வரத்து இல்லையாயின், தீர்வையைத் தள்ளிக் கொடுக்கலாம். இறைத்து உயர்த்தப்பட்ட தண்ணீர் பாய்ச்சப்படும் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் தீர்வை தள்ளுபடி செய்யப்படுகிறது.

(5) **இரண்டாம் போகத்திற்குரிய தீர்வையை இணக்கம் செய்து கொள்வது.**—நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படுவதற்குத் தண்ணீர் வரத்து, சாதாரணமாகத் தவறுமல் கிடைக்கக்கூடுமானால், அந்நிலங்களில் பயிராகும் இரண்டாம் போகத்திற்குரிய தீர்வையை இணக்கம் செய்து கொள்ள, [2] தாசில்தார் அல்லது நிலத் தீர்வை விதிப்பு மாற்றம் நடை பெறும்போது, நிலவரித் திட்டம் தனி அலுவலர் [3] அல்லது நிலவரித் திட்ட உதவி அலுவலர் [4] அனுமதிக்கலாம். இணக்கத் தீர்வை வீதங்கள் பொதுவாகக் கீழ்க் கண்டவாறு இருக்க வேண்டும்.

இரண்டாம் வகுப்பு நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து நீர் பாய்ச்சப்படும் நன்செய்க்கு—மூன்றில் ஒரு பாகம்.

மூன்றும் வகுப்பு நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து நீர் பாய்ச்சப்படும் நன்செய்க்கு—நான்கில் ஒரு பாகம்.

நான்காம் வகுப்பு நீர்ப்பாசனத்திலிருந்து நீர் பாய்ச்சப்படும் நன்செய்க்கு—ஐந்தில் ஒரு பாகம்.

ஐந்தாம் வகுப்பு நீர்ப்பாசனத்திலிருந்து நீர் பாய்ச்சப்படும் நன்செய்க்கு—ஆறில் ஒரு பாகம்.

[5] நிலத் தீர்வையை நிர்ணயித்து முடிவு செய்வதற்காக, முதல் அல்லது இரண்டாம் வகுப்பாகத் தொகுக்கப்பட்டிருக்கும் ஆதாரங்களின் பாசனம் நீங்கலாக, மற்ற நன்செய் நிலங்களைப் பொறுத்த வரையில் பாசனத்திற்கு வேண்டிய தண்ணீர் நிச்சயமாகத் தொடர்ந்து கிடையாத போது, அதற்குக் கிணற்று நீரும் கூடுதலாக உபயோகிக்கப்பட்டால், கோட்ட ஆட்சியாளர் அல்லது நிலத் தீர்வை விதிப்பு மாற்றம் நடைபெறும் போது நிலவரித் திட்டத் தனி அலுவலர் [6] அல்லது நிலவரித் திட்ட உதவித் தனி அலுவலர் [6] இரண்டாம் போகத் தீர்வையை, மேலே சொல்லப்பட்டிருக்கும் வீதங்களில் பாதித்

---

[1] 26–8–1910 தேதி, 404, வ.து.வா.செ. நிர்.
[1] 9–4–1918 தேதி, 79, வ.து.வா.செ. நிர். பலவ.
[2] 6–10–1917 தேதி, 1379, அ.ஆ. வரு.
31–3–1928 தேதி, 748, அ.ஆ. வரு. பலவ.
14–4–1928 தேதி, 1235, வ.து.வா.செ. பலவ.
[3] 26–5–1921 தேதி, 70, வ.து. வா.செ. பலவ.

தி.ஆ. 1:1]

தொகைக்கு இணக்கம் செய்து கொள்ள அனுமதிக்கலாம். இரண்டாம் போகத் தீர்வை சாதாரண வீதங்களில் எந்நிலங்களுக்கு இணக்கம் செய்து கொள்ள முன்னமே அனுமதிக்கப்பட்டதோ அந்நிலங்களுக்கு இத்தகைய அனுகூலமான வீதங்களில் தீர்வை இணக்கம் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

[1] இணறுகள் பழுது பார்க்கப்படாமல் இருக்குமானல், அக் கிணறுகளுள்ள நிலம் இணக்கத் தீர்வை செலுத்தும் இரு போக நில இனத்திலிருந்து ஒரு போக நன்செயாக மாற்றப்பட வேண்டும். தீர்வை நிர்ணயம் முடிவு செய்யப் பட்ட பின்னரும், எந்தச் சமயத்திலும், எந்த அளவிலும் தீர்வையை இணக்கம் செய்து கொள்ளக் குடியானவர்களுக்கு அனுமதி வழங்கலாம்.

குறிப்பு.—பாசனத்திற்குக் கூடுதலாக உதவும் எந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளப்படுகிறதோ, அந்தக் கிணறு நன்செயில் இருக்கலாம் அல்லது அதில் இல்லாமல் வேறு நிலத்திலும் இருக்கலாம். ஆனல் பாசன ஆதாரத்துடன் கிணற்று நீரும உண்மையில் உபயோகப்படுத்தப்பட்டதாக கோட்ட ஆட்சியாளர் அல்லது நிலவரித் திட்ட அலுவலர் மன நிறைவு கொள்வாரெனில் தனி வீதத்தில் தீர்வை இணக்கம் செய்துகொள்ள அனுமதிக்கத்தக்கதாகும். ஆண்டு தோறும் ஆய்ந்து பார்த்து அந்தக் கிணறு சரியான நிலமையில் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதையும், அந்தக் கிணற்று நீரும் பாசன ஆதாரத்துடன் பாசனத்திற்கு உபயோகமாக்கப்பட்டு வருகிறதா என்பதையும் கண்டறிந்து கொள்வது அவசிய மாகும்.

(6) இருபோக நன்செய் நிலங்களாகப் பதிவு செய்யப்பட்ட நிலங்களும், இரு போகமாக இணக்கம் செய்யப்பட்ட நிலங்களும், ஒரு போக நன்செய் நிலமாக மாற்றப்படுவது.—இரு போக நன்செய் நிலங்களாகப் பதிவு செய்யப் பட்ட நிலங்களுக்கும், இரு போக நன்செய் நிலங்களாக இணக்கம் செய்து கொள்ளப்பட்ட நிலங்களுக்கும் பாசன ஆதாரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆதாரத்திலிருந்து கிடைக்கப் பெறும் தண்ணீர் எந் நிலங்களில் விளைவிக்கப் படும் நன்செய்ப் பயிர் ஒன்றுக்கு மாத்திரம் போதுமானதாக இருப்பின் அத் தகைய நிலமுடையவர்கள் அவற்றை ஒரு போக நன்செய் நிலங்களாக மாற்ற வேண்டுமென விண்ணப்பம் செய்து கொண்டால், அவற்றை அவ்வாறே மாற்றக் கலெக்டர் ஒப்பளிப்பு செய்யலாம்.

4–8–1908 தேதி, 2125, அ.ஆ. வரு.

20–10–1925 தேதி, 2992, வ.து.வசெ. பலவ.

(7) நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என இரண்டு தலைப்பு களின் கீழ்ப் பாகுபாடு செய்யப்படுதல்.—எல்லா நிலங்களும் பொதுவாக 'நன்செய்', 'புன்செய்' என இரண்டு தலைப்புகளில் பாகுபாடு செய்யப்படுவது விதி முறையாக இருப்பினும், சில மாவட்டங்களில், 'மானவாரி' என்று வழங்கப்படும் வேறொரு வகை இருப்பது அரசினரால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. நிலத்தில் தேக்கப்பட்ட மழை நீரைக் கொண்டு அல்லது சதுப்பு நிலங்கள், சிறிய குட்டைகள், அல்லது அவை போன்ற நீர் நிலைகள், இவற்றில் உள்ள தண்ணீரைக் கொண்டு நன்செய்ப் பயிர் விளைவிக்கப்படும் நிலங்கள் "மானவாரி" ஆகும். ஏரியின் உள்வாய் நிலங்களில் சில மான

[1] 18–5–1921 தேதி, 1121, ஆ.

வாரிகளாக உள்ளன. புன்செய், நன்செய் நிலத் தீர்வைகளுக்கிடையே மற்ற வகையில் பொருத்தமாகவுள்ள தனிப்பட்ட விதங்களில் மானவாரி நிலங்களுக்கு வழக்கமாகத் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது.

குறிப்பு.—நிலவரித் திட்ட நடைமுறைக் காலத்தில் அரசுக்குடிப் புன்செய் நிலங்களை நன்செயாகவும், நன்செயைப் புன்செயாகவும் மானவாரியைப் புன்செய் அல்லது நன்செயாகவும், புன்செய் அல்லது நன்செயை மானவாரியாகவும் மாற்றுவதற்கு அந்தந்த நிலமுடையவரின் இசைவு பெற்று ஒப்பளிப்பு செய்யக் கலெக்ருக்கு அதிகாரம் இருக்கிறது.

31–8–1854 தேதி, வ.து.வா.செ. (1854 தொகுதி II பக். 21).

(8) துரவுக் கிணறுகளின் ஆயக்கட்டில் உள்ள நிலங்கள்.—"தொரு" கிணறுகளின் ஆயக்கட்டிலுள்ள நிலங்களைப் புன்செய்களாகக் கருதி அவற்றிற்குக் கீழ்க்கண்டவாறு தண்ணீர்த் தீர்வை விதிக்க வேண்டும். பாசன ஆதாரங்களின் கரைகளில் உள்ள துரவு கிணறுகளின் நீர்ப் பாசனத்திற்குட்பட்ட நிலங்களைப் புன்செயாகக் கொண்டு, அவற்றிலிருந்து ஒற்றை அல்லது இரட்டை இறைப்பிஞல் நீர் பாய்ச்சிக் கொள்வதை அனுசரித்து, அப்பாசன ஆதாரங்களிலிருந்து புன்செய் நிலங்களில் விளையும் நன்செய் பயிருக்குத் தண்ணீர் நேராகப் பாய்ச்சிக் கொள்வதற்கு விதிக்கத்தக்க தண்ணீர்த் தீர்வையில் நான்கில் ஒரு பாகம் அத்தகைய ஒற்றை இறைப்பிற்கும், எட்டில் ஒரு பாகம் இரட்டை இறைப்பிற்கும் தீர்வையாக விதிக்க வேண்டும். இவ்விதியை அனுசரிப்பதில் முதல் போக நெற்பயிருக்கும் மற்ற யாதொரு நன்செய் பயிருக்கும் வெவ்வேருன தீர்வை வீதங்கள் விதிக்கப்பட்டிருக்குமாஞல், முதல் போக நெற்பயிருக்கு விதிக்கத்தக்க தீர்வை வீதத்தை மேற்கொள்ள வேண்டும். துரவுக் கிணறுகளிலிருந்து இரண்டாம் போகப் பயிருக்கும் மூன்ரும் போகப் பயிருக்கும் நீர் பாய்ச்சப்படுவதற்குத் தண்ணீர் தீர்வை விதிக்கலாகாது. இனும் நன்செயாக நிர்ணயிக்கப்பட்ட நிலங்கள் தற்போது நன்செயாகப் பாகுபாடு செய்யப்பட்டிருப்பினும், புன்செயாகப் பாகுபாடு செய்யப்பட்டிருப்பினும், அவற்றில் எத்தகைய பயிர்கள் விளைவிக்கப்பட்டிருப்பினும், அத்தகைய நிலங்கள் நீங்கலாகத் துரவு கிணறுகளின் ஆயக்கட்டிலுள்ள மற்ற எல்லா நிலங்களுக்கும் இச் சலுகைகள் பொருந்தும்.

23–11–1937 தேதி, 2386, அ.ஆ. வரு. அச்சு.
13–12–1937 தேதி, 141, வ.து.வா.செ. அச்சு.

குறிப்பு.—(1) ஆறுகள் அல்லது ஓடைகள் அல்லது "வங்கா" அல்லது "வாகு" இவற்றின் கரைகளில் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு வெட்டப்பட்டவை துரவுக் கிணறுகளாகும்.

(அ) நிலத்தின் அடியில் குடைந்து அல்லது அதன் மேல் பரப்பில் தோண்டி அமைக்கப்பட்ட வாய்க்கால்களினுல், ஆறுகள் அல்லது ஓடைகளுடன் இணைக்கப்பட்ட செங்கல் அல்லது கருங்கல் கிணறுகள்.

(ஆ) ஆறுகள் அல்லதுஓடை அல்லது "வம்கா" அல்லது "வாகு" ஆகியவற்றின் கரைகளின் முன்பக்கம் தோண்டப்பட்ட வரிக் கற்களுடன் அமைக்கப்பட்ட கிணறுகள்.

4–10–1910 தேதி, 3234, அ.ஆ.
16–8–1921 தேதி, 127, வ.து.வா.செ. நிர்.
17–10–1910 தேதி, 518, வ.து.வாசெ. நிர்.
23–9–1921 தேதி, 2133, அ.ஆ.

நி. ஆ. 1:2]

(2) தரவுக் கிணறுகளிலிருந்து எருதுகளால் அல்லது உடல் உழைப் பால் தண்ணீர் உயர்த்தப்பட்டால் மாத்திரமே மேலே சொன்ன விதிகள் பொருந்துவனவாகும். இயந்திர சக்தியால் தண்ணீர் உயர்த்தப்பட்டால், அத்தகைய தண்ணீர் இறைத்தலுக்காகத் தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட மாட்டாது.

4–2–1961 தேதி, 546 எண். அ.ஆ. வரு. கை. ப.
19–4–1961 தேதி, 533 எண். வ.து.வ.ாசெ. பலவ.

(3) மேற்கண்ட விதியின் நோக்கத்தை முன்னிட்டு, தரவுக் கிணறு கள் உள்ள மாவட்டங்களில் பணி ஆற்றும் கலெக்டர்கள் தங்கள் மாவட்டங் களில் உள்ள தரவுக் கிணறுகளின் பட்டியல்களை தயாரிக்கவும் அக்கிணறுகளின் ஆயக்கட்டுகள் எவையென நிர்ணயிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். புதிதாக வெட்டப்படும் தரவுக் கிணறுகளைப் பொறுத்த வரையில், அக் கிணறுகளி லிருந்து இறைப்பு நீர் பாய்ச்சப்படுவதற்கு, இறைப்பு நீர்ப்பாசனத்திற்குச் சாதாரணமாக எத்தகைய சலுகை கொடுக்கப்படலாமோ, அத்தகைய சலுகை மட்டுமே அளிக்கப்படும்.

18–3–1937 தேதி, 635, அ.ஆ. வரு. கை.ப.
7–6–1956 தேதி, 475 எண். அ.ஆ. வரு. தவாலாயம்.
8–5–1937 தேதி, 52, வ.து.வா.செ. அச்சு.
13–8–1955 தேதி, 1141 எண்., வ.து.வா.செ. கை.ப.

3. அரசினர் விதித்த தொகை எவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளது.—மூன்பு கூறியுள்ள கொள்கைகளை மேற்கொண்டு நிலத் தீர்வை நிர்ணயம் செய்யும் போது, நிலவரித் திட்டத் துறையினர் மண்ணின் கூட்டுச் சேர்க்கை அமைப்பை ஆராய்ந்தும், நிலங்களின் மண் வயணங்களை அனுசரித்தும், நிலங்களைக் குறிப் பான சில பாகுபாடுகள் செய்கின்றனர். பின்னர், அவற்றின் ரசாயன, பௌதிகத் தன்மைகளையும், அம்மண் வயணங்களின் வளத்தைப் பாதிக்கக் கூடிய மற்றச் சூழ்நிலைகளையும் அனுசரித்து, மேலும் அவற்றை பலவகை இனங் களாகப் பிரித்து வகுக்கின்றனர். ஒவ்வொரு வகுப்பு அல்லது இனத்தைச் சேர்ந்த மண் வயணத்தின் முக்கிய விளை பொருளின் உண்மையான விளைச்சல் அளவைப் பலவிதமாகப் பரிசோதனை செய்து, ஒவ்வொரு இனத்திற்கும் உரிய சரியான தானிய மதிப்பை அம்மண் வயணத்திற்குப் பொருத்தமாக்குகிறார்கள். நிலத் தீர்வை நிர்ணய முடிவிற்கு முந்தி அடுத்து பஞ்சம் ஏற்படாத 20 ஆண்டு களின் சராசரி தானிய விலையை மாவட்ட முழுமைக்கும் அடிப்படையாகக் கொண்டு, அதிலிருந்து இலாபத்திற்காகவும் தானியத்தை வழக்கமாக விற்பனை செய்யச் சந்தைக்குக் கொண்டு செல்ல வேண்டிய தூரத்திற்குத் தக்கவாறுகவும் கழிவு செய்து கொண்டு மீதி இருக்கும் தொகையிலிருந்து விவசாயச் செலவைக் கழித்துக் கொண்ட பின்னர் பருவ மாறுபாட்டிற்காகவும், பயனில் லாமல் கிடக்கும் நிலப்பரப்பிற்காகவும் குறிப்பிட்ட சதவிகிதங்கள் கழிக்கப் படுகின்றன. எஞ்சியுள்ள தானிய மதிப்பு பணமாக மாற்றப்பட்டு மதிப்பிடப் படுகிறது. இந்த மதிப்பின் பாதித் தொகை நிலத்திற்காக அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய உச்ச நிலத் தீர்வையாக கருதப்படுகிறது. இதன் பின்னர், ஒத்த தானிய மதிப்புள்ள மண் வயணங்கள், அவற்றின் பாகுபாடு எத்தன்மைத் ததாக இருப்பினும், அவை "தரங்கள்" என்ற வரிசை முறையில் ஒன்று

சேர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு தரத்திற்குரிய நீர்வை வீதமும் குறிப்பிடப் படுகிறது. மேலும் அந்நிலங்களுக்குரிய கிராமங்கள் இருக்கும் இடத்தை அனுசரித்தும், அந்நிலங்களுக்குரிய நீர்ப்பாசன ஆதாரங்களின் தன்மையை அனுசரித்தும் இத் தீர்வை வீதங்கள் சரிகட்டப்படுகின்றன. இதன்பொருட்டு, நிலங்கள் புன்செய்களாயின் அவை சாலைகளுக்கும், சந்தைகளுக்கும் அருகில் இருப்பதை அனுசரித்தும் நன்செய்களாயின் அவற்றின் பாசன ஆதாரங்களின் தன்மையையும் தகுதியையும் அனுசரித்தும் கிராமத் தொகுதிகளாக்கப்படு கின்றன. இதனாலே, வெவ்வேறு தொகுதிகளில் அல்லது வெவ்வேறு வகை பாசன ஆதாரங்களில் உள்ள ஒரே மாதிரியான நிலங்களுக்கு வெவ்வேறு தீர்வைகள் விதிக்கப்படுகின்றன.

14–8–1855, தேதி, 951, க.நி.சு.
22–4–1857 தேதி, 372, க.நி.சு.
23–11–1894 தேதி, 1594, அ.ஆ.
13–8–1883 தேதி, 975, 976 அ.ஆ. ஆணைகள்.
9–10–1883 தேதி, 1261, அ.ஆ.
23–1–1884 தேதி, 120, அ.ஆ.
30–7–1885 தேதி, 881, அ.ஆ.

3. அரசினர் விதித்த தொகை எதைக் குறிக்கிறது?— [1] இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தீர்வை, நிலத்தின் மேல்பரப்பு விளைவில் அரசினரின் பங்கு எவ்வளவு இருக்கிறதோ அப்பங்கு, பணத் தொகையாக மாற்றப்படும்போது அதற்குள்ள மதிப்பைக் குறிக்கிறது. நிலத்தில் கனிப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டு எடுக்கப்பட்டால் அதற்காகத் தனிப்பட்ட தீர்வை விதிக்கப படும். [12] நிலத்தின் அடியில் உள்ள கனிப் பொருள்களின் முழு உரிமையும் அரசினர் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டனர் என்பதாக 1879 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதி 2029 எண் அரசாங்க ஆணை பிடிக்கப்பட்டு எடுக்கப்பட்டால் அதற்காகத் தனிப்பட்ட தீர்வை விதிக்கப் பட்ட நிலங்களுக்கு இந்த விதி பொருந்தாது.

20–3–1884 தேதி, 1006, வ.து.வா.செ.
19–5–1884 தேதி, 1692, வ.து.வா.செ.

குறிப்பு.—சுரங்க விதிகளைப் பற்றித் தமிழ்நாடு சுரங்க நடைமுறை நூலைக் காண்க.

4. நிர்ணயமான நிலத் தீர்வை எவ்வளவு காலம் நடைமுறையிலிருக்கும்?— நிலத் தீர்வை நிர்ணயம் அல்லது நிலத் தீர்வை விதிப்பு மாற்றம் செய்யப்படும் ஒவ்வொரு காலத்திலும், நிர்ணயம் செய்யப்படும் நிலத் தீர்வை அல்லது தீர்வை விதிப்பு மாற்றம் எவ்வளவு காலத்திற்கு நடை முறையில் இருக்க வேண்டு மென்பதை அரசினர் தங்கள் யுக்தம்போல், தீர்மானிப்பர். அவ்வாறு அரசினர் தீர்மானிக்கக்கூடிய கால அளவை கலெக்டர் மாவட்ட அரசிதழில் அறிக்கை வெளியிட்டு, புதிய தீர்வை வீதங்கள், நிலத் தீர்வை நிர்ணயம் நடைமுறை யிலிருக்கும் காலத்தில் மாற்றப்படமாட்டா என்றும், ஆனால், அந்தக் கால அளவு முடிவடைந்த பின்னர், விளைவாசிகளின் ஏற்றத் தாழ்வை மாத்திரம் அனுசரித்து அல்லது நிலங்களின் மண் வயணங்களை மறுமுறை பாகுபாடு செய்வதற்கு அல்லது தானிய விளைச்சலின் மதிப்பை மறுமுறை கணக்கிடுதல்

நி. ஆ. 1:4, 2:1–3]

முதலியவற்றிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தையும் அனுசரித்து அதற்குரிய ஏனைய காரணங்களைக் கருத்தில் கொண்டு, தங்களுக்கு நியாயமானதென்றும், தகுதியானதென்றும் தோன்றுகிற அத்தகைய வகையில், நிலத் தீர்வை நிர்ணயத்தை மாற்றி அமைப்பதற்கு அரசினருக்கு உரிமை உண்டென்றும் குடியானவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும். மேலும், குடியானவர்கள் தங்கள் நிலங்களுக்குத் தாங்கள் செய்திருத்த மேம்பாடுகளினால் ஏதாவது கூடுதலான மதிப்பு ஏற்பட்டிருக்குமாயின், அத்தகைய மேம்பாடுகள் அரசினரிடம் கடனுதவி பெற்றுச் செய்யப்பட்டவையென்றாலும், அக் காரணத்திற்காக அரசினர் தீர்வையை உயர்த்தமாட்டார்கள் என்பதை எடுத்து விளக்கிக் கூற வேண்டும்.

28–2–1907 தேதி, 479, அ.ஆ
31–3–1928 தேதி, 748, அ.ஆ.வரு. பலவ.
11–3–1907 தேதி, 76, வ.து.வா.செ. நிர்.
14–4–1928 தேதி, 1235, வ.து.வா.செ. பலவ.

2. நிலங்களின் பரப்பு, பதிவான பரப்பினும் மிகுந்திருக்குமாயின் அல்லது குறைந்திருக்குமாயின், மிகுந்துள்ள அல்லது குறைந்துள்ள பரப்பிற்குரிய தீர்வை—1. நில அளவையும் தீர்வை நிர்ணயமும் செய்யப்படாத மாவட்டங்களில்—புலமொன்று அளந்து கணக்கெடுக்கப்பட்டதின் காரணமாக அதன் பரப்பு, கணக்கில் பதிவு செய்யப்பட்ட பரப்பைவிட பத்துச் சதவிகிதத்திற்கு அதிகமாக இருக்குமானால், அந்தப் பத்துச் சதவிகிதத்திற்கும் கூடுதலாக உள்ள பரப்பிற்கு மாத்திரம் தீர்வை விதிக்க வேண்டும். அது போன்றே புலமொன்றின் பரப்பு, அதன் பதிவு செய்யப்பட்ட பரப்பில் 10 சதவீதத்திற்கு அதிகமாகக் குறைந்திருக்குமானால் மாத்திரமே, 10 சதவிகிதத்திற்கும் அதிகமாகக் குறைந்துள்ள அப்பரப்பிற்குத் தீர்வை தள்ளிக் கொடுக்க வேண்டும்.

(7–6–1956 தேதி, 475 எண். அ.ஆ. வரு. வாலாயம்.)
(13–8–1956 தேதி, 1141 எண்., வ.து.வா.செ. கை.ப.)

2. புலங்கள் மறுமுறை அளவு செய்யப்பட வேண்டுமென்னும் மனப் போக்கைத் தணிக்க வேண்டும்—புலத்தின் பரப்பை விடப் பெரும்பான்மையாக அதன் விளைவை ஒட்டியே அதன் தீர்வை முதன் முதலில் நிர்ணயிக்கப்படுவதால், பதிவு செய்யப்பட்ட பரப்பின் அளவுக்கு நிலம் இல்லை என்பது புலத்தின் தீர்வை கூடுதலாக்கப்படுவதற்கு அல்லது தள்ளிக் கொடுக்கப் படுவதற்கு எப்பொழுதும் தகுந்த காரணம் ஏற்பட நியாயம் இல்லை. ஆகையால் இயன்றவரையில், அரசினர் சார்பில் அல்லது குடிகளின் சார்பில் நிலம் மறு முறை அளவுசெய்ய வேண்டும் என்னும் மனப் போக்கைத் தணிக்க வேண்டும்.

18–10–1852 தேதி, 3 ஆவது குறிப்பு (மா. 1852 தொகுதி II, பக். 102).
8–12–1853 தேதி, 2551, வ.து.வா.செ.

3. நில அளவையும் தீர்வை நிர்ணயமும் செய்யப்பட்ட மாவட்டங்களில்.—நில அளவையும் நிலத் தீர்வையும் நிர்ணயமான மாவட்டங்களில் புலன்களின் உண்மையான பரப்பிற்கும் கணக்குகளில் அவற்றிற்குப் பதிவு செய்யப் பட்டிருக்கும் பரப்பிற்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி எம்முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது நில அளவையிலும் எல்லை வரையறுத்

[நி. ஆ. 2:3, 3, 4:1-2

தவிலும் ஏற்படும் பிழைகளைத் திருத்தம் செய்வதற்கான விதிகளில் அடங்கியிருக்கிறது. அவ்விதிகள் சங்கிலி அளவை நடைமுறை நூலின் சேர்ப்பில் உள்ளன.

7–6–1956 தேதி, 475 என். அ.ஆ. வரு. (வாலாய).
13–8–1856 தேதி, 1141 என். வ.து.வா.செ. (கை.ப.).

3. நில அளவைப் புலங்களை உட்பிரிவு செய்தல்.—ரத்து செய்யப்பட்டது

4–9–1909 தேதி, 319 வ.து.வா.செ. நிர்.

4. புன்செய் நிலத்திற்குரிய தண்ணீர் தீர்வை—

குறிப்பு.—இந்நிலை ஆணையின் உள் விதிகளில் யாதொன்றும் நன்செய் நிலத்தில் விளைவிக்கப்படும் இரண்டாம் போகப் பயிர்களுக்கும் பொருந்தாது. அப்பயிர் களுக்கு வழக்கமாக ஏற்பட்டுள்ள தீர்வை ஏதாவது சாதாரணமாக ஒருபோகத் தீர்வையின் பாதித் தீர்வை விதிக்கப்படும்.

22–8–1956 தேதி, 3200, என். அ.ஆ. (கை.ப.).
25–9–1956 தேதி, 1327 என்., வ.து.வா.செ. (கை.ப.)

1. விதிகள் எந்த அளவில் இயங்கும்.—புன்செய்யாய்ப் பாகுபாடு செய்யப் பட்டுள்ள நிலங்களுக்கு அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து தண்ணீர் வழங்கப்படுமானால், நிலத் தீர்வையுடன் கூடுதலாகத் தண்ணீர்த் தீர்வையும் விதிப்பதற்குரிய விதிகள் கீழே வகுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கக் காடுகளில் உள்ள ஓடைகளிலிருந்து நீர் பாய்ச்சப்படுவதற்குத் தீர்வை விதிப்பதை பற்றிய விதிகள் கீழே 13-வது பத்தியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

15–11–1873 தேதி, 2328 வ.து.வாசெ.
21–9–1880 தேதி, 1356, வ.து.வாசெ.
30–1–1894 தேதி, 56, வ.து.வா.செ. நிர்.
4–9–1917 தேதி, 212, வ.து.வா.செ. நிர்.

2. தரப்படுத்தப்பட்ட தண்ணீர்த் தீர்வை வீதங்கள்.—அரசாங்க நீர்ப் பாசன ஆதாரத்திலிருந்து நீர் பாய்ச்சப்படுகிற புன்செய் நிலத்திற்கு, முன்னதாக எந்த முறை கையாளப்பட்டு வந்தபோதிலும், அந்த முறைக்குப் பதிலாக, -வது இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கும், தரப்படுத்தப்பட்ட வீதங்களின் அளவை அனுசரித்து நிலையான தண்ணீர்த் தீர்வை செலுத்தப்பட வேண்டும். இயந்திர சாதனங்களால் நிலத்திற்கு தண்ணீர் இறைத்துக் கொள்ளப்பட்டு, அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து நேராகக் கண்ணீர் பாய்ச்சப்படாமலிருக்குமேயானால், தண்ணீர்த் தீர்வையில் நான்கில் ஒரு பாகம் குறைக்கப்படும். குடங்கொண்டு தண்ணீர் எடுத்துக் கொண்டாலும், அந்தப் பாசனத்திற்கும் இந்த விதி பொருந்துவதாகும். இருப்பினும், வீட்டுக் கொல்லைகளில் குடங்கொண்டு தண்ணீர் பாய்ச்சப்படும் விவசாயத்திற்குத் தீர்வை விலக்கு முற்றிலும் அளிக்கப்பட்டிருக்கிறது .

15–11–1873 தேதி, 2328, வ.து.வா.செ.
14–8–1879 தேதி, 1694, அ.ஆ.
[1]25–3–1880 தேதி, 430, வ.து.வாசெ.
[2]14–3–1893 தேதி, 100 , வ.து.வா.செ. நிர்.

நி.. ஆ. 4:2]

இவ்விதிகள் கீழ்க்கண்ட நிலப் பரப்புகளுக்குப் பொருந்தா—

(1) தராதரத் தண்ணீர்த் தீர்வை நடைமுறையிலிருக்கும் நிலப்பகுதிகளாகிய செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மாவட்டங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூர் தாலுகா, சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தாலுகா, சாம்பள்ளி, நவப்பட்டி, தின்னப்பட்டி, சிங்கிரிப்பட்டி, மூலக்காடு, போலமலி, ஆலமரத்துப்பட்டி, குளத்தூர் கண்ணூச்சி, காவேரிபுரம் கிராமங்கள்.

(2) I-ஆவது இணைப்பு "ஆ" பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் நிலப் பகுதிகள்.

(3) தராதரத் தண்ணீர்த் தீர்வைகள் அல்லது திருத்தப்பட்ட வேறொரு முறை அல்லது குறிப்பிட்ட நிலையான தண்ணீர்த் தீர்வைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக அரசினரால் பொது விதங்கள் எந்த நிலப் பகுதிகளில் அவ்வப்போது நடவடிக்கையில் அனுசரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப் படலாமோ அந்நிலப் பகுதிகள்.

(4) மேலே குறிக்கப்பட்டுள்ள தனி நிலப் பகுதிகளுக்குத் தண்ணீர்த் தீர்வை பொருத்தமாக விதிக்கப்படுவதற்காக I-ஆவது இணைப்பின் "ஆ" பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விதிகளை மேலே (3) ஆவது உட்பிரிவின்கீழ் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் ஆணையினால் ஏற்படும் மாறுதல்கள் இருப்பின் அவற்றிற்கு உட்பட்டவையாகும்.

22–8–1956 தேதி, 3200, எண். அ.ஆ. (வரு.)
25–9–1956 தேதி, 1327, எண். வ.து.வாசெ. (கை.ப.).

குறிப்பு.—(1) அரசாங்க நீர்பாசன ஆதாரத்திற்கு **மிகச் சமீபத்தில் நன்செய்** பயிர் விளைவிக்கப்பட்டு, அந்த ஆதாரத்தின் கசிவினால் தண்ணீர் கிடைத்திருக்கு மென்று ஏற்கத்தக்க அளவிற்கு அனுமானிக்கக் கூடுமானால், அத்தகைய கசிவு அந்தப் பயிருக்குப் பயனளிக்கவில்லை என்று அல்லது அது பயிர் விளைவிக்கப்படுவதற்குப் போதுமான அளவில் இல்லை என்று காட்டப்பட்டாலன்றி அப்பயிருக்கு 1900 ஆம் ஆண்டு V-ஆவது சென்னைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1865-ஆம் ஆண்டு VII-ஆவது சென்னைச் சட்டத்தின் கீழ்த் தண்ணீர் தீர்வை விதிக்கப்படும்.

2–12–1910 தேதி, 3808, அ.ஆ.
7–1–1911 தேதி, 3, வ.து.க.செ. நிர்.

(2) புன்செய்ப் பயிர்களாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளவை கசிவினால் நீர் பாய்ச்சப்பட்டால், அக்கசிவு இல்லாவிடில் வறட்சியால் அல்லது மற்ற சூழ்நிலைகளால் அந்த நிலம் தரிசாய் இருந்திருக்கக் கூடும் அல்லது பயிர் அழிந்திருக்கக்கூடும் என்பது வெளிப்படையாய்த் தெரிய வந்தாலன்றித் தண்ணீர் தீர்வை விதிக்கலாகாது. அந்தக் கசிவு இல்லாமலிருந்தால் சரிவரப் பயிராக்க முடிந்திருக்கும் என்பதில் சந்தேகம் ஏற்படுமேயானால் தீர்வை விதிக்கலாகாது.

22–6–1907 தேதி, 217, வ.து.வாசெ. நிர்.
23–7–1928 தேதி, 72, வ.து.வா.செ.

நி. ஆ. 4:3–6]

வகுப்பு நிலப் பகுதிகளில் உண்மையாகத் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் காலத்திற்குத் தகுந்தவாறு, இம்மர வளர்ப்புகள் ஒரு போகமாக அல்லது இரு போகமாகக் கருதப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சப் பட்டால், நீர் பாய்ச்சப்பட்ட முதல் பயிருக்குரிய தீர்வை விதிக்க வேண்டும். அதற்கு மேற்பட்ட காலத்திற்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளப்பட்டால், அந்தத் தீர்வையைப் போல ஒன்றரை மடங்கு விதிக்க வேண்டும்.

(1–9–1943 தேதி, 2431, அ. ஆ. வரு. கை.; 18–9–1943 தேதி, 23வ.து.வா. செ. அச்சு.).

3. தண்ணீர்த் தீர்வை விதிக்க அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்கள்.— கலெக்டர்களும், கோட்ட ஆட்சியாளர்களும், தாசில்தார்களும், துணைத் தாசில்தார்களும் எல்லாவற்றிலும் தண்ணீர்த் தீர்வை விதிக்கத் தக்கவாறார்கள். மேலும், ஏற்றங்கள் போன்ற இயந்திர சாதனங்களினால் தண்ணீரை உயர்த்திப் பாய்ச்சிக் கொள்வதற்குக் குறிப்பிட்ட தீர்வையைக் குறைக்க அவர்கள் ஒப்புளிப்பு செய்யலாம்.

9–10–1908 தேதி, 367, வ.து.வா.செ. நிர்.
24–6–1915 தேதி, 185, வ.து.வா.செ. நிர்.
15–10–1917 தேதி, 249, வ.து.வா.செ. நிர்.

4. குளத்தின் ஒரு பகுதிக்கு நீர் பாய்ச்சிக் கொள்ளுதல்.—ஒரு குளத்தின் சில பகுதிகள் நீர் பாய்ச்சப்பட்டால் அவ்வாறு உண்மையில் நீர் பாய்ச்சப்பட்ட பரப்புக்கு மட்டும் தீர்வை கணக்கிடவேண்டும்.

15–11–1873 தேதி, 2328, வ.து.வா.செ.
13–8–1888 தேதி, 575, அ.ஆ.
14–3–1803 தேதி, 100, வ.து.வா.செ. நிர்.
15–10–1917 தேதி, 249, வ.து.க.செ. நிர்.
14–8–1957 தேதி, 3256, எண். , அ.ஆ. வரு.
18–3–1958 தேதி, 6 எண். வ.து.வா.செ. அச்சு.
19–11–1914 தேதி, 343, வ.து.வாசெ. நிர்.
24–6–1915 தேதி, 185, வ.து.வாசெ.
9–10–1908 தேதி, 367, வ.து.வா.செ. நிர்.
3–3–1958 தேதி, 8024, ஏ 3158–3, அ. குறிப்பு.

5. ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்படுதல்.—வெவ்வேறு வீதங்களில் தண்ணீர் தீர்வை விதிக்கத்தக்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு பயிர்களைக் குடியானவர் ஒருவர் பயிரிடுவாரெனில், ஒவ்வொரு பயிரின் பரப்பிற்கும் தக்கவாறு தீர்வை விதிக்க வேண்டும்.

6. தீர்வை விதிக்கப்படாத நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படுதல்.—தீர்வை விதிக்கப்படாத நிலங்கள் அல்லது புறம்போக்கு நிலங்களுக்கு நீர் பாய்ச்சப் பட்டால், அவற்றிற்கு, தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை விதிப்பது போலவே தண்ணீர் தீர்வை விதிக்க வேண்டும்.

14–12–1874 தேதி, 3617, வ.து.கசெ.

[நி. ஆ. 4:7–10

7. நாற்றங்கால்களுக்கு நீர் பாய்ச்சப்படுதல்.—புன்செய் நிலங்களில் நாற்றங்கால்களுக்கு அரசாங்கப் பாசன ஆதாரத்திலிருந்து நீர் பாய்ச்சப் பட்டால், தண்ணீர்த் தீர்வை விதிக்கலாகாது. [1]ஆனல் [1] முறை தவறித் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டால், இச்சலுகை பொருந்தாது.

8–7–1882 தேதி, 1748, வ.து.வா.செ.
15–4–1885 தேதி, 1434, அ.ஆ.
[1]17–5–1923 தேதி, 794, அ.ஆ. வரு. பலவ.
[1]28–5–1923 தேதி, 1169, வ.து.வா. செ. பலவ.

8. ஏற்றம் முதலியவற்றல் நீர் பாய்ச்சப்படுதல்.—நீர்ப் பாசன வேலைகளின் உறுதித் தன்மைக்கு அபாயமுண்டாக்கலும் தனிப்பட்டவர்கள் நன்மைகளைப் பாதிக்காமலும் இருக்கும் வரையில் அத்தகைய நீர்ப் பாசன வேலைகளின் கரைகளிலும் கரை மேடுகளிலும் ஏற்றங்கள் முதலியவை போன்ற இயந்திர சாதனங்களை கலெக்டரின் அனுமதி பெற்று அமைத்துக் கொள்ளலாம். அச் சாதனங்களினல் நீர் பாய்ச்சப்படுவதற்கு முக்கால் பங்குத் தண்ணீர்த் தீர்வை வீதம் அல்லது சம்பந்தப்பட்ட நிலத்தின் தரத்தை அனுசரித்து அந்த மாவட்டத்திற்கு வழக்கமாக உள்ள தீர்வை ஜாஸ்தி விதிக்க வேண்டும்.

6–4–1866 தேதி, 2321, வ.து.வா.செ.

9. ஒரே பயிர் இரு தடவைகளில் அறுவடை செய்யப்படுதல்.—ஒரே பயிர் இரு தடவைகளில் அறுவடை செய்யப்பட்டாலும், ஒரே தண்ணீர்த் தீர்வை வீதம் விதிக்க வேண்டும். உதாரணமாக குடியானவர் ஒருவர் அரசாங்க நீர்ப் பாசன ஆதாரத்திலிருந்து தமது அவுரிப் பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சி அதை வளர்த்து, அதை அந்த ஆண்டிலேயே ஒரு தடவையும், அடுத்த ஆண்டிலே மற்றொரு தடவையும் அறுவடை செய்வாரெனில், ஓராண்டிற்கு மட்டும் அதற்குத் தண்ணீர்த் தீர்வை விதிக்க வேண்டுமே தவிர இரண்டு ஆண்டு களிலும் விதிக்கக்கூடாது.

31–3–1886 தேதி, 797, வ.து.வா,செ.

10. தண்ணீர் எடுத்துக் கொள்வதற்காகச் செய்யப்படும் ஒப்பளிப்பு.—இவ் விதிகளின்கீழ் எழுத்து வடிவில் ஒப்பளிப்பு பெறுமல் அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுக்கலாகாது. வருவாய்த் துறையின் பொறுப் பிலுள்ள நீர்ப்பாசன ஆதாரங்களையும் பொறி இயல் பணித் துறைச் சிறு பாசனங்களிலிருந்து தண்ணீர் வழங்கும் கட்டுப்பாடு வருவாய்த் துறை அலுவலர்களின் மேற்பார்வையில், இருக்குமானல், அப்பாசன ஆதாரங்களையும் பொறுத்த வரையில், அந்த அந்தத் தலத்து நிலைமையை அனுசரித்துத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள ஒப்பளிப்பு செய்யும் அலுவலர் யார் என்பதைக் கலெக்டரும் ஏனைய பொறி இயல் பணித் துறை ஆதாரங்களைப் பொறுத்த வரையில், அத்தகைய ஒப்பளிப்பு செய்யும் அலுவலர் யார் என்பதை மேல் பார்வை பொறியாளரும் நிர்ணயிப்பர். இத்தகைய எழுத்து வடிவிலான ஒப்பளிப்புகளில் கூடிய வரையில் எந்த மடை அல்லது எந்த வாய்க்கால்

ந. ஆ. 4:11–13]

அல்லது எவ்வாய்க்கால்களிலிருந்து அல்லது இவற்றுள் யாதொன்றின் வழியாய் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதையும் விளக்கமாய்க் குறிப்பிட வேண்டும்.

21–1–1919 தேதி, 133, அ.ஆ.
17–2–1919 தேதி, 23, வ.து.வா.செ நிர்.
26–2–1927 தேதி, 360, அ.ஆ. வரு.
1–11–1934 தேதி, 2263, அ.ஆ. வரு.
8–3–1927 தேதி, 13, வ.து.வா.செ.
9–11–1934 தேதி, 163, வ.து.வா.செ. அச்சு.

11. தடைத் தீர்வை வீதங்கள்.—அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து எந்த நிலத்திற்காவது நீர் பாய்ச்சப்படுவதற்காகத் தண்ணீரை முறை தவறி எடுத்துக்கொள்ளும் பொழுதெல்லாம் கலெக்டர் அல்லது கோட்ட ஆட்சியாளர் அல்லது தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார், இதன் பொருட்டு அவ்வப் போது அரசினரால் அமைக்கப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து அதிகப்படி யான வீதங்களில் தண்ணீர் தீர்வை விதிக்கலாம். தற்பொழுது நடைமுறையில் இருக்கும் விதிகள் இந்த நிலை ஆணையின் I-வது இணைப்பின் "இ" பிரிவில் அடங்கியுள்ளன.

5–6–1909 தேதி, 1522, அ.ஆ.
21–6–1909 தேதி, வ.து.222.வா.செ. நிர்.
24–6–1915 தேதி, 185, வ.து.வாசெ. நிர்.
15–10–1917 தேதி, 249, வ.து.வாசெ. நிர்.
22–8–1956 தேதி, 3200 எண். அ.ஆ. வரு. கை. ப.
25–9–1956 தேதி, 1327 எண். வ.து.வா.செ. கை.ப.

12. காட்டோடைகள்.—எப்பொழுதாவது மாத்திரமே தண்ணீர் ஓடும் காட்டோடைகளை வழக்கம் போல் தண்ணீர்த் தீர்வை செலுத்தாமல் உபயோகம் செய்து கொள்ளலாம்.

15–11–1873 தேதி, 2328, வ.து.வா.செ.
2–10–1885 தேதி, 1130, அ.ஆ.

13. ஒதுக்கக் காடுகளிலுள்ள ஓடைகள்.—"I (1)-ஆவது இணைப்பின் (1) ஆவது படிவத்தில் கலெக்டர் வழங்கக்கூடிய லீசென்ஸ் இருந்தால்தான் ஒதுக்கக் காடுகளில், ஓடைகளில் தண்ணீரைத் திருப்பி நீர்ப்பாசனத்திற்குப் பயனுக்கிக் கொள்ள அனுமதிக்கப்படும். தற்போதுள்ள உரிமைகள் பாது காக்கப்படவேண்டுமென்பதோடல்லாமல் உரிமம் கொடுக்கப்படுவதால், தற் காலத்தில் அல்லது பிற்காலத்தில் நீர் மின்சாரம் வழங்கல் பாதிக்கப்படலா மென்று நம்புவதற்கு காரணம் இருக்குமெனில் உரிமம் அளித்தலாகாது. உரிமம் கொடுப்பதற்கு முன்னர் வனப் பாதுகாவலருடன் எப்பொழுதுமே கலெக்டர் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். ஓடைகளில் கட்டுப்பாடின்றி ஓடும் தண்ணீருக்குத் தங்குதடை ஒன்றும் செய்யாமல், அதைப் பாய்ச்சிக் கொண்டால் அவ்வாறு தண்ணீர் பாய்ச்சிக் கொண்ட பரப்பிற்குத் தண்ணீர்த்

[நி. ஆ. 4:13, 5:1

தீர்வையும் தல மேல்வரிகளும் மட்டுமே விதித்து வசூலிக்க வேண்டும். ஓடையில் கட்டுப்பாடின்றி ஓடும் தண்ணீரைத் தடுத்துப் பாய்ச்சிக் கொள்வதற்கான அனுமதி உரிமத்தில் வழங்கப்பட்டிருக்குமானால், சூழ்நிலைக்குத் தகுந்தவாறு ஒவ்வொன்றிலும் கலெக்டரால் நிர்ணயிக்கப்படும் கூடுதலான கட்டணத்தை உரிமம் பெறுவோர் செலுத்த வேண்டும். மேல்வரிகளுடன் இந்தக் கூடுதல் தீர்வை வசூலிக்கப்பட்டு கிராம 7 எண் கணக்கில் சேர்க்கப்படவேண்டும்.

குறிப்பு.—நீலகிரி மாவட்டத்தில் ஒதுக்கக் காடுகளிலுள்ள ஓடைகளிலிருந்து செய்யப்படும் நீர்பாசனத்திற்கு 1 ஆவது இணைப்பின் ''அ'' பிரிவிலுள்ள வீதங்களுக்குப் பதிலாக ஏக்கர் ஒன்றுக்கு 3 ரூபாய் சம வீதத்தில் தீர்வை விதிக்க வேண்டும்.

ஒதுக்கக் காடுகளில் ஓடைகளிலிருந்து தண்ணீர் எவ்வகையிலாவது திருப்பப்பட்டால், அதைக் கலெக்டருக்குத் தெரிவிக்க வேண்டியது மாவட்ட வன அலுவலரின் கடமையாகும். பின்னர், தண்ணீர் திருப்பப்பட்ட விவரங்களை வருவாய்த் துறை அலுவலர்களிடமிருந்து கலெக்டர் வரப் பெற்றுக் கொண்டு, இத்தகைய நீர்ப்பாசனம் செய்வதற்கு உரிமம் வழங்கலாமா அல்லது அந்நீர்ப்பாசனத்தைத் தடை செய்ய வேண்டுமா என்பதை அவர் முடிவு செய்வர்.

இவ்விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்வதற்காகக் கலெக்டரின் அலுவலகத்தில் தனிப்பதிவேடு ஒன்று எழுதிவைத்து வரவேண்டுமென்பதில்லை. ஆனால் வழங்கப்பட்ட எல்லா உரிமைகளையும் (1)-வது இணைப்பின் 8-வது படிவப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலும் அத்தாலுகாவுக்குச் சம்பந்தப்பட்ட உரிமங்களுக்கு இது போன்ற பதிவேடு ஒன்று எழுதி வைத்து வரவேண்டும். இந்தப் பதிவேட்டின் குறிப்புரைக் கட்டத்தில் ஒவ்வொரு உரிமத்திற்கும் பொருத்தமான தனி நிபந்தனைகள் எவையேனும் இருக்குமானால், அவற்றைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். உடனடியாக எளிதில் பார்வையிட வசதியாக இருக்குமாறு, இப் பதிவேட்டின் முன் பக்கத்தில், வழங்கப்பட்ட உரிமங்கள் எந்த எந்தக் கிராமங்களுக்கு உரியனவோ, அந்த அந்தக் கிராமங்களின் வரிசையில் தயாரிக்கப்பட்ட அட்டவணை சேர்க்கப்பட வேண்டும்.

இப்பதிவேடு தாசில்தாரால் அவ்வப்போது சரிவர எழுதி வைக்கப்படுவதற்காகவும் அந்த அந்த தேதி வரையிலும் கிராம அடங்கலில் தேவையான பதிவுகள் செய்யப்படுவதற்காகவும் கலெக்டர் தாம் பிறப்பித்த ஆணைகளின் நகல்களையும் வழங்கிய உரிமங்களின் நகல்களையும் தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும்.

25–6–1930 தேதி, 1190, அ.ஆ.
8–7–1930 தேதி, 49, வா.து.வா.செ.
22–8–1956 தேதி, எண். 3.200, அ.ஆ.வரு.கை.ப.
25–9–1956 தேதி, 1327 எண். , வ.து.வா.செ.கை.ப.

5. இரண்டாம் போகம்—1. தீர்வை வீதம்.—(i) ஒரு போக நன்செய் நிலங்களில் விளையும் இரண்டாம் போக நன்செய்ப் பயிர்.—ஒரு போகமாக பாகுபாடு செய்யப்பட்டிருக்கும் நன்செய் நிலங்களில் விளைவிக்கப்படும் இரண்டாம் போக நன்செய்ப் பயிருக்குச் சாதாரணமாகத் தீர்வையின் பாதி அளவு

நி. ஆ. 5:1–3]

இருக்கக் கூடிய [5] கூடுதல் தீர்வை [5] விதிக்கப்படும். [5] இருப்பினும் நீர்ப் பாசன ஆதார்ரந்தில் அல்லது ஒருதனிப்பட்ட நிலப் பகுதியில் உள்ள நிலங் களில் விளைவிக்கப்படும் அத்தகைய பயிர்களில் நீர்ப் பாசனத்திற்கென்று குறிப்பிடப்பட்ட ஒரு தனித் தீர்வை விதம் நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அதற்குக் கூடுதலாக விதிக்க வேண்டிய தீர்வையானது ஒரு போகத் தீர்வையில் பாதியாக இல்லாமல் அந்த அந்தத் தனித் திட்டத் தீர்வை விதத்தை அனுசரித் திருக்க வேண்டும்.

15–2–1958 தேதி, 191, க.நி.சு.

23–11–1894 தேதி, 497, வ.து.க.செ.நிர்.

4ஆவது நிலை ஆணையையும் அதன் இணைப்பையும் காண்க.

[5]5–8–1920 தேதி, 1109, வ.து.செ. நிர்.

(ii) மூன்றும் போகம்:- ஊ புலம் முழுமைக்கும் இரண்டாம் போகத் தீர்வை விதிக்கப்பட்டிருந்தால், அதில் விளைவிக்கப்படும் நீர் பாய்ச்சப்பட்ட. மூன்றும் போகப் பயிருக்குத் தீர்வை விதிக்கத் தக்கதில்லை ஊ.

(22–8–1956 தேதி, 3200 எண். , அ.ஆ.வரு.கை.ப.)

(25–9–1956 தேதி, 1327, எண். , வ.து.க.செ. கை.ப.)

2. நன்செய் நிலத்தில் விளையும் இரண்டாம் போகப் புன்செய்ப் பயிர்.— அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்தைக் கொண்டு நன்செய் நிலத்தில் புன்செய் பயிர்கள் விளைவிக்கப்பட்டால், நன்செயின் முழுத் தீர்வை விதிக்க வேண்டும். ஆனால் 5-அ நிலை ஆணையின் 2 ஆவது பத்தி (ii) (2) ஆவது உள்பத்தியின் கீழ் வருவனவற்றைத் தவிர மற்றவற்றில், முதல் போகம் அறுவடை செய்யப் பட்ட பின்னர் புன்செய் பயிர் விளைவிக்கப்பட்டிருந்தால், அதற்கு, அத்தகைய பயிர் புன்செய் நிலங்களில் பயிரிடப்பட்டிருந்தால் அப்பயிருக்கு நிர்ணயம் செய்யப்பட்ட எத்தகைய விதத்தில் தீர்வை விதிக்கப்படுமோ, அதே விதத்தில் தீர்வை விதிக்கவேண்டும். அவ்விதங்களில் கணக்கிடப்பட்ட. தீர்வை நிலத் தீர்வையின் பாதிக்கு மேற்படுமானால், அப்போது அத்தீர்வைக்குப் பதிலாக நிலத் தீர்வையின் பாதியை விதிக்க வேண்டும். நன்செய் நிலத்தில் விளைவிக்கப்பட்ட முதல் போகப் பயிர் அறுவடை செய்யப்பட்ட பின்னர், அரசாங்க நீர்ப் பாசன ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளாமல் அந்நிலத்தில் விளைவிக்கப்படும் புன்செய்ப் பயிர் யாதொரு தீர்வை விதிப் புக்கும் உட்படாது.

(19–2–1881 தேதி, 298 அ.ஆ. வரு.).

(26–11–1934 தேதி, 2443, அ.ஆ.வரு.)

(8–12–1934 தேதி, 4433, வ.து.க.செ.பலவ.)

(22–8–1955 தேதி, 3200 எண்., அ.ஆ.வரு.)

(25–9–1956 தேதி, 1327, எண். வ.து.வா.செ.கை.ப.)

3. இரண்டாம் போகத் தீர்வை :—

(அ) தீர்வை விதிக்க அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்கள்.

(ஆ) புலத்தின் பாகங்களுக்கு விதிக்கப்படும் தீர்வை.

[நி. ஆ. 5:4–5, 5 அ:1

4 ஆவது நிலை ஆணையின் 3, 4 பத்திகளில் உள்ள விதிகள் நன்செய் நிலங்களில் பயிரிடப்படும் இரண்டாம் போகத்திற்கும் பொருந்தும்.

(22–8–1956 தேதி, 3200 எண்., அ.ஆ.வரு.)
(25–9–1956 தேதி, 1327, எண்., வ.து.வா.கை.ப.)

4. சமய நிலையங்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட ஒருபோக நன்செய் நிலத்தில் விளையும் இரண்டாம் போகம்.—தஸ்திக் படிகளுக்குப் பதிலாகச் [1] சமய நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு போக நன்செய் நிலங்களில் இரண்டாம் போகப் பயிர் விளைவிக்கப்பட்டால், அப்பயிருக்கு இரண்டாம் போகத் தீர்வை விதிக்கப்படும் [1] [2] ஆனால், அத்தகைய தீர்வையை அப்பயிர் விளைவித்த குடியானவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டுமே தவிர, முதல் போகத் தீர்வை செலுத்தும் உரிமை பெற்றவர்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது.

[1] 14–12–1874 தேதி, 3617, வ.து.வா.செ.
[2] 24–4–1878 தேதி, 101, வ.து.வா.செ.

5. இறைப்பு நீர்ப்பாசனத்திற்கு அளிக்கப்படும் தீர்வைக் கழிவு.—[3] இறைப்பு நீர்ப்பாசனத்தினால் நன்செய் நிலங்களில் விளைவிக்கப்படும் முதல் போகம் அல்லது இரண்டாம் போகப் பயிருக்கு இறைப்பின் நிமித்தம் அளிக்கப்படும் தீர்வைக் கழிவு பல மாவட்டங்களில் வெவ்வேறாக இருந்து வருகிறது. அது ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அல்லது முழுத் தீர்வையில் நான்கில் ஒன்று அல்லது இரண்டாம் போகத் தீர்வையாக உள்ளது. இ ஊ ஈ ஏற்றவாறான [4] முழுத் தீர்வை அல்லது தண்ணீர்த் தீர்வையைக் கணக்குக்குக் கொண்டு வந்து இறைப்புக்காக வழங்கத்தக்க கழிவை, இறைத்தலின் நிமித்தம் நிலையாகத் தள்ளிக் கொடுக்கப்படும் தீர்வையைக் காட்டும் கணக்கில் காண்பிக்க வேண்டும்.

[3] 5–10–1878 தேதி, 2714, வ.து.வா.செ.
[3] 1–11–1878 தேதி, 1754, அ.ஆ.
[3] 27–9–1879 தேதி, 1954, அ.ஆ.
[6] 15–5–1928 தேதி, 1064, அ.ஆ.
[4] 29–2–1884 தேதி, 683, வ.து.வா.செ.
[1] 5–4–1864 தேதி, 577, அ.ஆ.
[6] 12–1–1960 தேதி, 8, வ.து.வா.செ.நிர்.
[4] 31–5–1928 தேதி, 1744, வ.து.வா.செ.பலவ.

5. அ. இயல்பான விவசாய காலத்திற்குப் பின்னர் தண்ணீர் பாய்ச்சப் படுதல்.—1. ஒரு போகப் பயிர்கள்—ஒரு போக நன்செய் நிலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலத்தின் உரிமையாளர்கள் தங்கள் ஒரு போகப் பயிரை ஆண்டின் எப்பருவத்திலும் விளைவித்துக் கொள்ளலாம். அவர்கள் பயிரிடுவதைக் காலங்கடத்துவார் எனில், இரண்டாம் போகப் பருவத்தில் தங்கள் பயிருக்குத் தண்ணீர் கிடைக்க இயலாத நிலை நேரிடுமாறு தாங்கள் செய்து கொள்வதுடன், ஒரு போக நன்செய்ப் பயிர் விளைவிக்காமலிருந்தும் அவர்கள்

நி. ஆ. 5 ஆ:2]

தீர்வை செலுத்த வேண்டியவராகின்றனர். ஆனால், இரண்டு பருவ காலங்களின் பாகங்களில் அல்லது இரண்டாம் போகப் பருவத்தில் அவர்களால் விளைவிக்கப்படும் ஒரு போகப் பயிர் இரு பசலிப் பயிராக இல்லாவிடின், அவர்கள் முதல் போகப் பயிரை விளைவிப்பதற்குக் கூடுதலான தீர்வை செலுத்த வேண்டியதில்லை.

குறிப்பு.—பிஷானப் பயிர் விவசாய காலத்தில் மாத்திரம் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்படுத்தி, திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி நீர்ப்பாசன ஆதாரங்களின் நிலங்களைக் கலெக்டர் ஒருபோக நன்செய் நிலமாக மாற்றலாம்.

(11–10–1928 தேதி, 2398, அ.ஆ.வரு.பலவ.)
(2–8–1956 தேதி, 3200, என். அ.ஆ.பலவ.)
(23–10–1928 தேதி, 3539, வ.து.வா.செ.பலவ.)
(25–9–1956 தேதி, 1327, என். வ.து.வா.செ. பலவ.)
18–10–1906 தேதி, 1040, அ.ஆ.
21–7–1908 தேதி, 1893, அ.ஆ.

2. ஒரு போக நன்செய் நிலத்தில் இரு பசலிப் பயிர்.—(i) இரு பசலிப் பயிர்களின் பாகுபாடுகள்—இரு பசலிப் பயிர்களை அல்லது இரண்டு விவசாய காலங்கள் வரையில் நீடித்து விளையும் பயிர்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

கரும்பு, வெற்றிலை, வாழை, மஞ்சள், காசினை ஆகியவை முதற் பிரிவில் அடங்கும்.

ஆங்காங்குள்ள வழக்கத்தை அனுசரித்துச் சாதாரணமாக இரண்டு நன்செய்ப் பயிர்கள் விளைவிக்க எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் தேவையோ அவ்வளவு காலத்திற்கு, அதாவது, ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய மற்றெல்லாப் பயிர்களும் இரண்டாம் பிரிவில் அடங்கும்.

20–5–1937 தேதி, 1042, அ.ஆ.வரு.
16–11–1937 தேதி, 127, வ.து.வா.செ.தரு.

(ii) ஒரு போக நன்செய் நிலங்களில் விளைவிக்கப்படும் இரு பசலிப் பயிருக்குத் தீர்வை.—(1) இரு பசலிப் பயிர் ஒரு பசலியில் விளைவிக்கப்பட்டு, அப்பசலியிலேயே அப்பயிர் அறுவடை செய்யப்படுமானால், அதற்கு ஒன்றரை மடங்கு ஒரு போக நன்செய்த் தீர்வை விதிக்க வேண்டும்.

(2) இருப்பினும், இரு பசலிப் பயிர், ஒரு பசலியில் பயிரிடப்பட்டு அடுத்த பசலியில் அறுவடை செய்யப்படுமானால், கீழ்க் கண்டவாறு தீர்வைகள் விதிக்க வேண்டும் :—

(அ) அவ்விரண்டு பசலிகளில் ஒவ்வொன்றிலும் நீர் பாய்ச்சப்பட்ட பயிர் வேறொன்றும் விளைவிக்கப்படாவிட்டால், ஒவ்வொரு பசலியிலும், ஒரு போக நன்செய்த் தீர்வை விதிக்க வேண்டும்.

[நி. ஆ. 5 அ:2

(ஆ) இரு பசலிப் பயிருக்கு முன்னர் அல்லது அதற்குப் பின்னர் நீர் பாய்ச்சப்பட்ட பயிர் வேறொன்று விளைவிக்கப்பட்டால், முதல் பசலியில் ஒரு போக நன்செய்த் தீர்வையும், இரண்டாவது பசலியில் அந்தத் தீர்வையின் ஒன்றரை மடங்கும் விதிக்க வேண்டும்.

(இ) நீர் பாய்ச்சப்பட்ட வேறு இரண்டு பயிர்கள், இரு பசலிப் பயிருக்கு முன்னர் ஒன்றும், அதற்குப் பின்னர் ஒன்றும் விளைவிக்கப்பட்டால், முதல் பசலியில் ஒரு போக நன்செய்த் தீர்வையும் இரண்டாவது பசலியில் அந்தத் தீர்வையின் இரு மடங்கும் விதிக்க வேண்டும்.[1]

(ஈ) [2] இரு பசலிப் பயிர் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட ஆண்டுகளில் பருவப் பயிராயிருந்து, நீர் பாய்ச்சப்பட்டால் அதற்கு ஒவ்வொரு பசலியிலும் ஒவ்வொரு மடங்கு ஒரு போக நன்செய்த் தீர்வை விதிக்க வேண்டும்:

ஆனால், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு போக நன்செய்யாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் அரசுக்குடி நிலங்களில் காவேரித் தண்ணீர் பாய்ச்சப்பட்டு விளைவிக்கப்படும் இரு பசலிப் பயிருக்குத் தீர்வை கீழ்க் கண்டவாறு விதிக்க வேண்டும் :—

( ) நீர் பாய்ச்சப்பட்ட ஒரு போகப் பயிர் அறுவடை ஆன பின்னர் அதே பசலியில் இரு பசலிப் பயிருக்கு நீர் பாய்ச்சப்படுவதற்கு எக்கர் ஒன்றுக்கு 7 ரூபாய் 50 பை. வீதம்.

(ii) நீர் பாய்ச்சப்பட்ட இரு பசலி முதல் பயிருக்கு நன்செய்த் தீர்வையுடன் எக்கர் ஒன்றுக்கு 7 ரூபாய் 50 பைசா வீதம்.

1933 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 474 அ. ஆ. வரு.

1934 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி, 2030 எண். அ.ஆ.வரு.

"ஆனல், தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒரு போக நன்செய் எனப் பதிவு செய்யப்பட்ட அரசுக்குடி நிலங்களில் நீர்ப்பாய்ச்சப்படும் முதல் இரு பசலிப் பயிரின் நீர்ப்பாசனத்திற்கும் அதே பசலி ஆண்டில், நீர்ப்பாய்ச்சப்பட்ட ஒரு போகப் பயிர் அறுவடை செய்யப்பட்ட பின்னர் நீர்ப்பாய்ச்சப்பட்ட இரண்டாம் இரு பசலிப் பயிரின் நீர்ப்பாசனத்திற்கு, காவேரி ஆற்று நீரைப் பயன்படுத்துவதற்காக 1372 ஆம் பசலி முதல் விதிக்கப்பட்டத்தக்க கூடுதல் வரி எக்கருக்கு 5 ரூபாய்க் குறுமத்திற்கு உட்பட்டு நன்செய்த் தீர்வையின் பாதித் தொகையாக இருக்க வேண்டும். இவ்விலக்கின் நோக்கத்திற்கு "வரி விதிப்பு" என்னும் சொற்றொடர் (1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு 8-வது சட்டமாகிய) 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி விதிப்பு கூடுதல் தண்ணீர்த் தீர்வைச் சட்டத்தால் உயர்த்தப்பட்டவாறுள்ள நன்செய் வரி விதிப்பாக இருக்க வேண்டும்.

தி. ஆ. 5 ஆ:2]

(1967 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாளும் 292 (ந) என்னுமிட்ட நிலை வ.வா.செ.)

(1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் நாளும் 2197 என்னுமிட்ட நிலை அ.ஆ.வரு.)

[1968ஆம் ஆண்டு சனவரி மாதம் 8ஆம் நாளும் 1 என்னுமிட்ட நிலை வ. வா.செ.]

குறிப்புகள்.—(i) பதிவு செய்யப்பட்ட அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்தில் ஒரு சாதாரண நெற்பயிர் விளைவிக்கத் தேவையான காலத்திற்கு அதிகமான காலத்திற்கு தண்ணீர் இருக்குமாகில், எவ்வளவு காலத்திற்கு உண்மையில் தண்ணீர் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் மேலே 2(ii) ஆவது பத்தியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தீர்வை விதித்தல் வேண்டும். அவ்வாறு தண்ணீர் இல்லாவிட்டால் ஒரு போக நஞ்சை தீர்வைக்கு அதிகமான தீர்வை விதிக்கக்கூடாது.

1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதி, 2253 என், அ.ஆ.வரு.பல வ

1940 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் தேதி, 121 என், வ.து.க.செ. அச்சு.

(ii) ஒரு போக நன்செய் நிலத்தில் தென்னந் தோப்புக்கும் மற்றத் தோப்பு வளர்ப்புகளுக்கும், ஆண்டுஒன்றில் இரண்டு நெற்பயிர்களின் விளைவுக்குப்போதுமான பல மாத காலம் அதாவது ஆறு மாதங்களுக்கு, அதிகமான காலத்திற்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளப்பட்டால், அவற்றை இரு பசலிப் பயிர்களாகக் கருதி அவற்றிற் குப் பசலி ஜாஸ்தி நீர்வைவிதிக்க வேண்டும்.

1908 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி, 1459 என், அ. ஆ.

1908 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் தேதி, 1983 என், அ. ஆ.

1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி, 304 என், வ. து. வா. செ. நிர்.

1915 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் தேதி, 689 என், அ. ஆ. வகு.

1915 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி, 103 என், வ.து.வா. செ. நிர்.

1916 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் தேதி, 72 என், வ.து.வா. செ. நிர்.

(iii) சவுக்கு, மூங்கில் மரங்களும் கட்டடம் அல்லது விறகுக்குப் பயனாகும் மற்ற வெட்டு மரங்களும் புன்செய் பயிர்களாகக் கருதப் பட வேண்டும். ஒரு போக நன்செய் நிலங்களில் இம்மர வளர்ப்புக்குச் செய்யப்படும் நீர்ப்பாசனத்திற்கு நன்செய்த் தீர்வை யுடன் முதல் நன்செய் பயிருக்குரிய தண்ணீர்த் தீர்வையில் மூன்றில் ஒரு பங்கு விதிக்க வேண்டும்.

1943 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி, 2431 என், அ.ஆ.ப.

1943 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி, வ.து. வா. செ. அச்சு.

[நி. ஆ. 5 அ:2-3, 6:1

(iv) ஒரு போக நன்செய் நிலங்களில் ஒட்டடம் விளைவிக்கப்பட்டால், பயிர் முழுமைக்கும் ஆறு மாதங்களுக்குச் சற்று அதிகமான காலத்திற்குத் தண்ணீர் தேவையாக இருந்தாலும், ஒரு போக நன்செய் தீர்வையே விதிக்க வேண்டும். இவ்விவசாயத்தில், மூன்றிலிருந்து மூன்றரை மாதங்களில் முதிரும் நெல் வித்துக்களும் ஏறக்குறைய ஆறரை மாதங்களில் பயிர்முதிரும் நெல் வித்துக்களும் ஒன்றுசேர்ந்து விதைக்கப்படுகின்ற தனித் தன்மை உள்ளது. முன்னதாக முதிரும் பயிர் அறுவடைக்குத்தகுதியெய்தியபொழுது இரு பயிர்களும் சேர்ந்து அறுக்கப்படுகின்றன. பின்னர் முதிர்வதாகிய ஒட்டடைப் பயிர் மறுமுறையும் தளிர்விட்டு வளர்ந்து விளைகிறது. அது உரிய காலத்தில் அறுவடை செய்யப்படுகிறது.

(v) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊடு விவசாயத்திற்கு தண்ணீர்த் தீர்வை விதிக்கும் முறையைப் பொறுத்த மட்டில் முதல் போக அறுவடையான பின்னர் நிலத்தில் நிலையிலிருக்கும் ஒட்டம் அல்லது சம்பாப் பயிர்கள் இரண்டாம் போகப் பயிர்களாக கருதப்படத் தக்கன அல்ல என அம்மாவட்டத் தண்ணீர் தீர்வை விதிகள் திருத்தப்பட்டிருக்கின்றன.

1924 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் தேதி, 76 எண், வ.து.வா.செ.
1933 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் தேதி, 474 எண், அ.ஆ.வரு.
1935 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி, 382 எண், வ. அ. ஆ. வரு.
1955 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் தேதி, 2672 எண், அ.ஆ.அச்சு.
1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22 ஆம் தேதி, 3200 எண், அ.ஆ.வரு.கை.ப.
1956 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் தேதி, 1327 எண், வ.து.வா.செ. கை.ப.

3. புன்செய் நிலத்தில் விளைவிக்கப்படும் இரு பசலிப் பயிர் நீர் பாய்ச்சப்படுவதற்கு விதிக்கப்படும் தீர்வை.—இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் நிலத்தில் நிலைத்திருக்கும் கரும்பு, மஞ்சள், காணை ஆகிய இரு பசலிப் பயிர்களுக்கு நிர்ணயமான தண்ணீர்த் தீர்வை விதத்தில் அல்லது தராதரத் தண்ணீர்த் தீர்வை விதத்தில், தக்கவாறு, எந்தப் பசலியில் பயிர் அறுவடை செய்யப்படுகிறதோ, அந்தப் பசலியில் தீர்வை விதிக்க வேண்டும். நீர் பாய்ச்சப்பட்ட மற்றொரு பயிர் அதே பசலியில் அறுவடை செய்யப்படுமானால், அதற்குப் பொருத்தமான விதத்தில் தண்ணீர்த் தீர்வை கூடுதலாக விதிக்கத் தக்கதாகும். இரண்டு பசலிகளுக்கும் அதிகமாக காலத்தின் பருவப் பயிர்களான வெற்றிலைக் கொடிகள், வாழைகள் போன்ற இரு பசலிப் பயிர்களின் நீர்ப்பாசனத்திற்கு (அவை பயிரிடப்பட்ட பசலி உட்பட), ஒவ்வொரு பசலிக்கும் பொருத்தமான தண்ணீர்த் தீர்வை விதிக்க வேண்டும். இருப்பினும், பயிரிடப்பட்ட பசலியில் சிறிது பயனும் கிடைக்காவிட்டால், அவற்றிற்கு அந்தப் பசலிக்குத் தீர்வை விதிக்கப்பட மாட்டாது.

26—1—1935 தேதி, 211, அ.ஆ.வரு.பலவ.
4—6—1935 தேதி, 1281, அ.ஆ.வரு.கை.ப.
22—8—1956 தேதி, 3200, எண், அ.ஆ.வரு.பல.
31—1—1935 தேதி, 428, வ.து.வா.செ.பலவ.
10—5—1935 தேதி, 50, வ.து.வா.செ.அச்சு.
15—6—1935 தேதி, 71, வ.து.வா.செ.அச்சு.
25—9—1956 தேதி, 1327, எண், வ.து.வா.செ.கை.ப.

6. சொந்தக் கிணறுகள்—1. சொந்தக் கிணறுகளிலிருந்து நீர்பாய்ச்சப்படும் நிலங்களுக்கு விதிக்கப்படும் தீர்வை.—குடியானவர்களின் சொந்தச் செலவில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளிலிருந்து விவசாயம் செய்யப்படும்

[தி. ஆ. 6:2—5]

நிலங்களின் தீர்வை, மாவட்டத் தீர்வை வீதங்களைப் பொதுவாய்த் திருத்தியமைக்கப்படும்போதன்றி எப்பொழுதுமே உயர்த்தப்படமாட்டாதெனவும், அவ்வாறு திருத்தியமைக்கப்படும் காலத்திலும், அத்தீர்வைக்கு ஏதாவது ஒரு மாறுதல் வேண்டியிருக்குமானால், அவர்களால் வெட்டப்பட்ட கிணறுகளினால் மேம்பாடடைந்த நிலங்களுக்கு உண்டாகும் அதிகமான மதிப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலே, அந்நிலங்களின் தீர்வையில் அம்மாறுதல் செய்யப் படும் எனவும் மிகத் தெளிவாக குடியானவர்களுக்கு உறுதி அளிக்க வேண்டும்.

2. கிணறுகள் வெட்டுதல் பற்றிய பதிவு.—கிணறுகள் வெட்டப்படும் தருணத்தில் கலெக்டருக்கு அக்கிணறுகளைப்பற்றி அறிவிக்க வேண்டிய அவசியமில்லை[1] வெட்டப்படும் கிணற்றின் விவரத்தை நிலையான 'அ' பதிவேட்டிலும், கிராம அடங்கல் கணக்கின் குறிப்புரைக் கட்டத்திலும் கிராமக் கணக்கர் பதிவு செய்து கொள்வாரெனில், அதுவே போதுமானதாகும்[1].

25—11—1952, தேதி, வ.து.வா.செ.
(1852, மா. தொகுதி II, பக். 110—119).
[1]5—3—1908 தேதி, 64, வ.து.வா.செ.

3. அரசாங்க நீர்ப்பாசன வேலைகளின் அருகிலுள்ள கிணறுகள்.—அரசாங்க நீர்ப் பாசன வேலைகளின் அருகில் கிணறுகள் வெட்டப்படுவதற்கு இருந்த தடைகள் எல்லாவற்றையும் அரசினர் நீக்கிவிட்டனர். ஆனால் வெட்டப்படும் கிணறுகள் உள்ள நிலம் அக்கிணறுகளை வெட்டுகிறவரின் சொந்த நிலமாக இருக்க வேண்டும்.

4. சொந்தக் கிணறுகளிலிருந்து புன்செய் நிலத்திற்கு நீர் பாய்ச்சிக் கொள்ளுதல்.—சொந்த நிலத்திலேயே உள்ள சொந்தக் கிணறுகளிலிருந்து முற்றிலுமே நீர் பாய்ச்சப்படும் புன்செய் நிலங்களுக்கு அல்லது 1884 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் தேதிக்கு முன்பு வெட்டப்பட்டுள்ள கிணறுகள் அரசாங்க நீர்ப் பாசன ஆதாரத்திற்கு எவ்வளவு தூரத்திற்குள் இருந்தபோதிலும், அக் கிணறுகளிலிருந்து புன்செய் நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படுவதற்கு தீர்வை விதிக்கப்படமாட்டாது.

4—9—1884 தேதி, 3108, வ.து.வா.செ.
27—4—1885 தேதி, 1270, வ.து.வா.செ.
11—5—1888 தேதி, 423, வ.து.வா.செ.

5. சொந்தக் கிணறுகளிலிருந்து நன்செய் நிலத்திற்குள் நீர் பாய்ச்சிக் கொள்ளுதல்.—புன்செய்த் தீர்வை வீதம் என்பதின் விளக்கம்.—நன்செய் நிலத்தில் விளைவிக்கப்பட்ட பயிர்களில், அந்நன்செய் நிலத்திற்குரிய அரசாங்க நீர்ப் பாசன ஆதாரத்தில் தண்ணீர் போதிய அளவு இல்லாமையால், அந் நிலத்தில் சொந்தக் கிணறு இல்லாதிருந்தால் அந்த நன்செய் நிலத்தைப் பொறுத்தமட்டில், அதற்கு 13-2 ஆவது நிலை ஆணையைக் கொண்டு தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடும் அல்லது அதற்கு 13--9 ஆவது நிலை ஆணையின் கீழ்ப் புன்செய்த தீர்வை விதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்கிற சூழ் நிலைகளில், சொந்தக் கிணற்றிலிருந்து நீர்ப் பாய்ச்சிக் கொண்டால் அதற்குப் புன்செய்த் தீர்வை மட்டும் விதிக்க வேண்டும். அதுபோன்ற சூழ்நிலைகளில் ஒரு போக நன்செய் எனப் பாகுபாடு செய்யப்பட்ட நிலத்தில் சொந்தக்

[நி. ஆ. 6:5

கிணற்றுத் தண்ணீரைக் கொண்டே இரண்டாம் போகப் பயிர் விளைவிக்கப் பட்டால், அத்தகைய இரண்டாம் போகப் பயிருக்குத் தீர்வை விதிக்கக் கூடாது. இரு போகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலத்தில் இரு பயிர்கள் விளைவிக்கப்பட்டிருந்து, மேலே குறிப்பிட்டுள்ள சூழ்நிலைகளில் அரசாங்க ஆதாரத்தில் போதுமான தண்ணீர் இல்லாததால் ஒரு பயிர் சொந்தக் கிணற்றின் தண்ணீராலேயே முழுவதும் விவசாயம் செய்யப்பட்டிருந்தால். ஒரு போக நன்செய்த் தீர்வை மட்டுமே விதிக்க வேண்டும். ஆண்டு முழுவதற்கும் தண்ணீர் போதாமலிருந்தாலன்றி இணக்கம் செய்யப்பட்ட நன்செய் நிலங்களுக்கு இணக்கம் செய்யப்பட்ட முழுத் தீர்வையும் விதிக்க வேண்டும். மேலே குறிக்கப்பட்ட சூழ்நிலைகளில் விதிக்கப்பட வேண்டிய தீர்வை கீழ்க்காணும் வரிசை அட்டவணையில் காட்டப்பட்டிருக்கிறது :—

	முதல் போகம்.	இரண்டாம் போகம்.	செலுத்த வேண்டிய தீர்வை.
	(1)	(2)	(3)	(4)
ஒரு போக நிலம்	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெற்றது.	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	ஒரு நன்செய்த் தீர்வை.
	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெற்றது.	,,
	,,	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	ஒரு போக புன்செய்த் தீர்வை வீதம்.
சாதாரணமான நிலம்.	இரு போக	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	ஒரு போக புன்செய்த் தீர்வை வீதம்.
	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெற்றது.	,,	ஒரு போக நன்செய்த் தீர்வை, அத்தகைய தீர்வை தனியாக விதிக்கப் பட்டிருந்தால் இல்லாவிட்டால், மொத்த இரு போக நன்செய்த் தீர்வையில் மூன்றில் இரண்டு பாகம்.
	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெற்றது.	,,

தி. ஆ.. 6:5]

	முதல் போகம்.	இரண்டாம் போகம்.	செலுத்த வேண்டிய தீர்வை.
(1)	(2)	(3)	(4)
இணக்கம் செய்யப்பட்ட இரு போக நிலம்.	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெற்றது.	முழு இணக்கத் தீர்வை விதம்.
	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெற்றது.	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	ஷை
	போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.	ஷை	ஒருபோக புன் செய்த் தீர்வை விதம்.

விளக்கம்.—புன்செய்த் தீர்வை விதம் என்பதை நிலத் தீர்வை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலத்தின் பாகுபாடு, தரம், இனம் ஆகிய இவற்றை அனுசரித்து நிர்ணயிக்கப்பட்ட புன்செய் தீர்வையாகவும், தீர்வை நிர்ணயம் செய்யப்படாத மாவட்டங்களில் கிராமத்தில் மிக உயர்ந்த புன்செய்த் தீர்வையாகவும் கொள்ள வேண்டும்.

4—9—1884 தேதி, 3108, வ.து.வா.செ.
30—3—1887 தேதி, 636, வ.து.வா. செ.
4—5—1887 தேதி, 425, அ. ஆ.
11—5—1888 தேதி, 423, வ.து.வா.செ.
20—5—1908 தேதி, 1402, அ.ஆ.
3—9—1908 தேதி, 337, வ.து.வா.செ.நிர்.

[1]குறிப்புகள்.—(1) மேலே குறிப்பிடப்பட்டவை சாதாரண விதிகள் ஆகும். தீய பருவ காலங்களில் கோட்ட ஆட்சியாளர்கள் சுழ்நிலைக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுத்துக் கொண்டு, சொந்தக் கிணற்றிலிருந்து முற்றிலுமே நீர் பாய்ச்சப்படாமலிருந்த போதிலும், அதிகமான அளவில் சொந்தக் கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சி பயிர் விளைவிக்கப்பட்டிருந்தால், நன் செய்த் தீர்வைகளுக்கும் புன் செய்த தீர்வைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தள்ளிக் கொடுக்கலாம். தீய பருவ காலத்தில், அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்வதில் எத்தனை நாட்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டால் மாத்திரமே, அது நடவடிக்கையின்றி விடப்படலாம் என்பது பற்றி அழுத்தம் திருத்தமாக விதி வகுக்க இயலாது. பயிரை முதிர் நிலைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் பாசன ஆதாரத்தில் கிடைக்கத்தக்க தண்ணீர் முற்றிலும் போதவில்லை என்பதையும் சொந்தக் கிணற்று வசதி பெறுத மற்ற நன்செய் நிலங்களில் விளைவிக்கப்படும் பயிர்களுக்கு கெடுதல் செய்யக்கூடாதென்பதையும் கருத்திற்கொண்டு தண்ணீர் எடுக்க வில்லையென்றால் அவ்வாறு தண்ணீர் எடுக்காமலிருந்ததற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தகும் என்பது இதில் பொதிந்துள்ள கொள்கையாகும். தீய பருவ ஆண்டுகளுக்கு மாத்திரம் இது பொருந்தும். மற்ற ஆண்டுகளிலே, விதிகளைப் புரிந்து கொண்டு அவற்றைக் கண்டிப்பாய் அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[நி ஆ. 6:5–7

(2) பயிரை முதிர விளைவிப்பதற்கு நீர்ப்பாசன ஆதாரமாகவே இருக்கிற சொந்தக் கிணறுகளுக்கு இந்த நில ஆணையும் மேலே கண்டுள்ள குறிப்பும் பொருந்தும். சில வேளைகளில் சொந்த நீர்ப்பாசன ஆதாரம், மற்றொரு விதமாக இருக்கலாம். அப்பொழுதும் இதே கொள்கையை அனுசரிக்க வேண்டும். ஆனால் அது சொந்த நீர்ப்பாசன ஆதாரமே யாகும் என்பதைச் சந்தேகமற கவனித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.[1]

[1]20—10—1927 தேதி, 2081, அ.ஆ. வரு. பலவ.
[1]7—12—1927 தேதி, 80, வ.து.க.செ.

6. நீர்வை தள்ளிக் கொடுக்கப்படுவதற்காகச் செய்துகொள்ளப்படும் உரிமைக் கோரிக்கைகள்.—சொந்தக் கிணறுகளிலிருந்து நீர் பாய்ச்சப்படக் கூடிய நிலங்கள் அல்லது அத்தகைய கிணறுகளை உள்ள நன்செய் நிலங்கள் தரிசாகக் கிடக்குமானாலும், அவற்றிலுள்ள பயிர்கள் வாடி விடுமானாலும் [1] அல்லது அவற்றில் [1] புன்செய்ப் பயிர் விளைவிக்கப்பட்டாலும் [1] அவற்றிற் காக அந்நிலங்களில் உரிமையாளர்களுக்குச் சாதாரண விதிகளை அனுசரித்துத் நீர்வைகளைத் தள்ளிக் கொடுப்பதை மேலே கண்டுள்ள விதிகளில் ஒன்றும் கெடுதலாகப் பாதிக்காது.

4—9—1884 தேதி, 3108, வ.து.வா.செ.
[1]11—2—1890 தேதி, 125, அ.ஆ.
[1]5—6—1894 தேதி, 226, வ.து.வா.செ.நிச்.

7. நன்செய் நிலங்களில் கிணறுகள் வெட்டப்படுதல்.—ஒரு போக நன்செய் நிலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நன்செய் நிலத்தில் வெட்டப்படும் கிணறு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்படுமேயானால் அந்நிலத்திற்கு ஒரு போக நன்செய்த் தீர்வைக்கு அதிகமான தீர்வை விதிக்கப்படமாட்டாது :—

(1) [1] அரசாங்கத்திற்குரிய நீர்ப் பாசனத்தில் [1] எதன் கீழ் நிலம் பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ, அதன் ஆயக்கட்டில் யாதொரு பாகத்திலாவது கிணறு வெட்டப்படும் ஆண்டிற்கு முன் தொடர்ந்துள்ள ஏழு ஆண்டுகளில் எதாவதொரு ஆண்டிலும் இரண்டாம் போக நன்செய்ப் பயிர் விவசாயம் செய்யப்பட்டிருக்கக்கூடாது.

(2) கிணறு வெட்டி முடிக்கப்படும் தேதியிலிருந்து கூடுதலான தீர்வை செலுத்த வேண்டியதில்லை என்பதோடு அதிலிருந்து நீர் பாய்ச்சிக் கொள்ளக் கூடிய பரப்பு மாத்திரமே அத்தகைய கூடுதல் தீர்வைக்குட்படாததாகும்.

(3) கிணறு பழுதடைந்து கிடக்குமானால் அல்லது அரசினர் செலவில் இரண்டாம் போக விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்கத்தக்க அளவிற்கு [1] அரசாங்க நீர்ப் பாசன ஆதாரத்திற்கு மேம்பாடு செய்யப் பட்டால், கூடுதலான தீர்வை செலுத்தாமலிருப்பதற்கு அளிக்கப்படும் விலக்கு நீங்கிவிடும்.

22—8—1908 தேதி, 320, வ.து.வா.செ.நிர்.
[1]20—10—1927 தேதி, 2081, அ.ஆ.வரு.
[1]7—11—1927 தேதி, 80, வ.து.வா.செ.

நி. ஆ. 6:8, 7:1–2]

8. கிணறுகளைப் பற்றிய பதிவேடு.—வெட்டப்பட்ட கிணறுகளின் விவரங்களாகிய, அவற்றின் தன்மை, நிலைமை, அளவுகள், அவற்றில் சாதாரணமாய் இருக்கும் தண்ணீர் ஆழம், நீர் பாய்ச்சிக் கொள்ளக்கூடிய பரப்பு போன்ற வற்றை நிலையான "அ" பதிவேட்டின் குறிப்புரைக் கட்டத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

17—12—1904 தேதி, 58 வ.து.வா.செ.நிர்.
5—3—1908 தேதி, 64 வ.து.வா.செ.நிர்.

7. அரசினரின் கட்டுப்பாட்டிலில்லாத நீர் நிலைகளின் தண்ணீரை பாசனத்திற்கு உபயோகித்தல்—(1) இயற்கையான உரிமைகள்.—(i) நிலத்திற்கு உரியவர் ஒவ்வொருவருக்கும் தமது நிலத்தின் நன்கமைந்த வாய்க்கால் வடிவத்தில் ஓடாத மேற்பரப்புத் தண்ணீரைச் சேகரித்து நிறுத்திக்கொள்ளவும், அதைத் தமது விருப்பம் போல் உபயோகித்துக் கொள்ளவும் இயற்கையான உரிமை உண்டு. அரசுக்குடி முறையில் நிலமுடையவருக்கும் இதே உரிமையுண்டு. இந்த உரிமை முறையில் செய்து கொள்ளும் ஏற்பாடுகளுக்குச் சம்பந்தப்பட்ட வேலைகளில் அரசாங்க அலுவலர்கள் தலையிடக் கூடாது.

(ii) மேற்பரப்புத் தண்ணீர் மாத்திரம் கொண்ட சொந்த ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்படுவதற்குத் தண்ணீர்த் தீர்வை விதிக்கலாகாது. இருப்பினும், மாவட்டத்தின் நிலவரித் திட்ட அறிவிக்கை அனுமதிக்குமெனில், நன்செய்க்கு நிலையாக மாற்றப்பட்ட நிலத்திற்கு அதற்கேற்ற தீர்வை விதிக்க அரசினருக்கு உரிமையுண்டு. சாதாரணமாக, இத்தகைய சொந்த நீர்ப் பாசன வேலைகளிலிருந்து செய்து கொள்ளும் பாசனத்தை, கிணறுகளிலிருந்து செய்து கொள்ளப்படும் நீர்ப் பாசனம் போன்றே, கருத வேண்டும். இதற்குக் கூடுதலான தீர்வை விதிக்க வேண்டியதில்லை.

(iii) தமது சொந்த நிலத்தில் சொந்த ஏரி வெட்டப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட குடியானவர் கலெக்டரிடமிருந்து வழக்கத்திற் கிசைந்த ஏற்பைப் பெற்றிருப்பார் எனில், அவர் அந்த ஏரியின் நீர்ப் பிடிப்புக் குட்பட்ட நிலத்திற்குத் தீர்வை விதிக்கப்படாததான சலுகையைப் பெறுவார். ஆனால், ஏரி, வெட்டப்படுவதற்கு முன்னர் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்குள் பயிர் செய்யப்பட்ட நிலங்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்பட மாட்டாது. மற்றவர்களுக்கு உரித்தான நிலம் நீர்ப் பிடிப்புக்குட்படுமானால், அவர்களின் இசைவைக் கிணறு வெட்டுபவர் முதலில் பெற்றுக் கொள்ளவில்லையென்றால், அந்நிலத்தைப் பொறுத்த வரையில் கலெக்டர் இச்சலுகையை வழங்க மாட்டார்.

(iv) சொந்த நிலத்திலிருக்கும் இயல்பான குட்டைகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சிக் கொள்வதற்குத் தீர்வை விதிக்கப்பட மாட்டாது.

(2). அரசாங்க ஆதாரங்களின் தண்ணீரை உபயோகிப்பதற்கு அளிக்கப்படும் அனுமதி—(i) அரசாங்க நிலத்தில் இயற்கையாக உள்ள குட்டைகள்.—யாதொரு பொது அல்லது சமுதாய உரிமைக்கு பாதகம் விளைவிக்காமலும், அரசாங்கப் பாசன ஆதாரத்தின் நீர் வரத்துக்கு இடையூறு செய்யாமலும், அல்லது அந்நீர் வரத்தை எவ்வகையிலும் குறைக்காமலும் பயனுக்குக் கொள்

[நி. ஆ. 7:2

வதோடு அரசாங்க ஆதாரங்களின் மேம்பாடுகளுக்குத் தேவையான எவ்வேலை களையும் எக்காலத்திலும் அரசினர் செய்து கொள்வதற்கும் அத்தகைய ஆதாரங்கள் விரிந்த வகையில் பயனுகுமாறு செய்வதற்குமுள்ள அரசினரின் உரிமைகளைப் பாதிக்காமலும் இத்தகைய குட்டைகளின் தண்ணீரைப் பாசனத்திற்கு உபயோகித்தால், இப்பாசனத்திற்குத் தண்ணீர்த் தீர்வை விதிக்க வேண்டியதில்லை, தண்ணீர்த் தீர்வை விதிக்க அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்கள், மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு அல்லது பொது நன்மையை உத்தேசித்து அக்குளங் குட்டைகளிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ளுவதை தடை செய்ய வேண்டியது அவசியம் எனக் கருதுவாரெனில், அவர்கள் அவ்வாறு தடை செய்யலாம். அத்தடையை மீறித் தண்ணீர் பாய்ச்சப்பட்டால், அது முறையற்ற நீர்ப்பாசனமாகக் கருதப்பட்டு, அதற்குப் பொருத்தமான தீர்வை அல்லது தண்டத் தீர்வை விதிக்கப்படும்.

3—5—1949 தேதி, 1166 அ.ஆ.வரு.கை.ப.
25—5—1949 தேதி, 17 வ.து.வா.செ.அச்சு.

(ii) சிற்ரோடைகள்.—ஒழுங்கான நீர்ப்பாசனத்திற்கு உதவ இயலாத வாறு நிச்சயமில்லாமல் ஒரு சமயத்தில் சில நாட்களில் மாத்திரம் தண்ணீர் ஓடக் கூடிய ஓடைகளைப் பொறுத்த மட்டில், நிலையாக இருக்கத்தக்க தன்மை யுடைய புதுப் பாசன வேலைகளைக் குடியானவர்கள் அமைத்துக் கொள்ளவில்லை என்றால், அவர்கள் அவற்றின் தண்ணீரை முன் அனுமதியில்லாமல் பாசனத் திற்கு உபயோகம் செய்துகொள்ளலாம். அத்தகைய நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படமாட்டாது. ஆனால், சிற்ரோடைகள் அல்லது இயற்கையாக உள்ள குட்டைகளின் தண்ணீரை உபயோகிக்க ஏதாவதொரு நிலையான பாசன வேலை அமைக்கப்பட வேண்டியிருந்தால், அதற்கு (iii) ஆவது உள்பத்தியில் கண்டுள்ள விதிகள் பொருந்தும்.

(iii) இயற்கையாக உள்ள குட்டைகளும் சிற்ரோடைகளும் அல்லாத மற்ற ஆதாரங்கள்.—(அ) அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து புதிய தான சொந்தப் பாசன வேலைக்குத் தண்ணீர் எடுக்க விருப்பமுடையவர் எவரா யினும், அவர் அவ்வாறு செய்வதற்குக் கலெக்டரிடமிருந்து அனுமதி பெறுவ தற்காக, உத்தேசம் செய்யப்பட்டிருக்கும் பாசன வேலையின் தன்மையும் அதன் அளவுகளையும், அதற்காகத் தெரிந்து எடுக்கப்பட்ட குறிப்பிட்ட இடத்தையும் தெளிவாகக் குறித்து விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) கலெக்டர், தம்மிடம் அத்தகைய விண்ணப்பம் வரப்பெற்றபின், மேற்கொள்ள யோசனை செய்யப்பட்டிருக்கும் பாசன வேலை, ஏனைய பொது அல்லது சொந்த நீர்ப் பாசனங்களுக்குரிய தண்ணீர் கிடைப்பதைத் தடுத்து விடக்கூடுமா அல்லது அப்பாசன வேலையினால் அவ்வாறு தண்ணீர் கிடைப்பது உணரக்கூடிய அளவில் குறைந்துவிடக்கூடுமா என்பதையும், எவற்றின் விவசாயத்திற்காவது இடைஞ்சல் ஏற்படுத்தி, நியாயமான முறையீடு ஒன்றுக்கு இடம் கொடுத்து விடுமா என்பதையும் தானாகத் தாசில்தார் அல்லது தகுதி வாய்ந்த மற்றொரு அலுவலரை நேரில் பார்வையிட்டு விசாரிக்கு மாறு ஆணையிடுவார். தொழில் நுட்பக் கருத்து அவசியமெனக் கருதப் பட்டால், கலெக்டர் சிறு பாசனத் துறை அல்லது பொறியியல் பணித் துறைப் பொறியாளர் ஒருவர் இதைப் பார்வையிடுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நி. ஆ. 7:1

யோசனை செய்யப்பட்டிருக்கும் பாசன வேலை, பொறியியல் பணித் துறையினர் பொறுப்பில் இருக்கக்கூடிய நீர்ப்பாசன வேலைக்கு மிக அண்மையிலிருக்கு மாலல். பொறியியல் பணித் துறையினரின் கருத்தைத் தவருமல் அறிந்து கொள்ள வேண்டும்.

(இ) தற்போதைய உரிமைகளுக்கு யாதொரு கெடுதியும் விளையாது என விசாரணையில் தெரியவருமானால், சிறு பாசனத் துறை அல்லது பொறியியல் பணித் துறைப் பொறியாளரால் அத்திட்டம் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும். அது ஏற்றுக் கொள்ளப்படுமானால், அவ்வேலையைச் செய்து முடிக்கக் கலெக்டர் அனுமதி கொடுக்கலாம்.

(ஈ) தனிப்பட்டவர் ஒருவர் கலெக்டரின் முன் அனுமதியில்லாமல் பாசன வேலையைக் கட்டி முடிப்பதற்கு ஆரம்பம் செய்துவிட்டாரெனில், அதற்கு விரோதமாய் முறையீடுகள் வருமாயின் அல்லது அதனால் அரசாங்கத்தின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடுமென்று தெரிய வருமானால் அந்த வேலை நிறுத்தப்படக்கூடுமென்பதாக அவருக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனால் ஆட்சேபனை இல்லையென்றால், அவ் வேலையை ஆரம்பித்தவர் இவ் விதிகளின் கீழ் அவ் வேலையில் மேம்பாடுகளிலிருந்து அடையக்கூடிய நலன்களை, அவ் வேலையைக் கட்டி முடிப்பதற்குரிய முன் அனுமதியைப் பெறுத காரணத்தால், அவர் இழந்துவிட மாட்டார்.

(உ) யாதொரு சொந்தப் பாசன வேலையையும் நேரில் பார்வையிட்ட பொறியியல் பணித் துறை அல்லது சிறு பாசனத் துறை அலுவலர், எடுத்துக் காட்டாக கரையைப் பலப்படுத்துவது அல்லது புதிய அல்லது மிகப் பெரிய கலிங்கல் ஏற்படுத்துவது அல்லது வடிகால் வசதிகளை அதிகப்படுத்துவது அல்லது அதிகமான மடைகள் கட்டுவது போலவே, அப்பாசன வேலையைப் பலப்படுத்த வேண்டுமென்று அல்லது யாதொரு வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று அல்லது விரிவாக்க வேண்டுமென்று அறிவிப்பார் எனில், அவ் வேலையை செய்து முடிப்பதற்குப் பொறுப்பேற்ற தனிப்பட்டவர், இவ்வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டியவற்றைக் கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படக் கூடிய தக்க காலத்திற்குள் செய்து முடித்து விட வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவசியமானவற்றை மாற்றி அமைப்பதில் அவர் தவறிவிடுவாரெனில் நிலையான நன்செயாக மாற்றப்பட்ட அந்நிலத்திற்குக் கூடுதலான தீர்வை அல்லது புன்செய் நிலத்தின் நீர்ப் பாசனத்திற்குரிய தண்ணீர்த் தீர்வை விதிக்கலாம். அவசியமானால், அரசினர் தாங்களே அவ் வேலைக்கு வேண்டியவற்றை மாற்றி அமைத்துக்கொண்டு, அரசாங்க நிலத்தில் இருக்கும் அவ்வேலையின் பகுதிகளை, ஈடு கொடுக்காமலே தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்வர்.

(ஊ) உத்தேசிக்கப்பட்ட வேலையினால் மற்றக் குடியானவர்களின் நிலங்கள் பாதிக்கப்படக் கூடுமானால், அவ்வேலையை ஆரம்பம் செய்ய அனுமதிக்கப்படுவதற்கு முன்னதாக, அவ்வேலையை மேற்கொண்டவர், முதல் முதலில் அக்குடியானவர்களிடமிருந்து எழுத்து வடிவில் அவர்களின் இசைவைப் பெற்று, அதை ஒப்புவிக்க வேண்டும். மேலும் அவ்வேலை முடிக்கப்படுவதற்கும் அவ்வேலைக்காகச செலவிடப்படும் தொகை அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுவதற்குமுரிய இசைவு ஒப்பந்தத்தை அவர்களிடமிருந்து

எழுத்து வடிவில் பெற்று அதை அவர் தாக்கல் செய்யாவிட்டால், அக்குடியானவர்கள் அவ்வேலையினால் அடையக்கூடிய நன்மைக்காக அவர்களிடமிருந்து அத்தொகையை வசூலிப்பதற்காகச் செய்து கொள்ளப்படும் கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ஏ) பெரிய நீர் ஓட்டத்திலிருந்து நீர்ப் பாசனத்திற்குத் தண்ணீர் பெற உத்தேசிக்கப்பட்டிருப்பின் அல்லது ஆற்றின் அடித் தளத்தில் கிணறுகள் வெட்ட உத்தேசிக்கப்பட்டிருப்பின், அதற்குரிய விண்ணப்பங்களில் வருவாய்த் துறை வாரியத்தினர் பாசனத் தலைமைப் பொறியாளரைக் கலந்துகொண்டு நடவடிக்கை எடுப்பர். அத்தகைய ஒவ்வொன்றையும் பொறுத்த வரையில், தலைமைப் பொறியாளர் தகுந்த நிபந்தனைகளைக் குறிப்பிடுவார். இது வருவாய்த் துறை வாரிய 1·1(3) ஆவது நிலை ஆணையின் 1-ஆவது குறிப்பில் விவரிக்கப் பட்டிருக்கும் தரவுக் கிணறுகளுக்குப் பொருந்தாது. மாவட்ட வழக்கத் திற்கும், மாவட்ட ஆணைகளுக்கும் உட்படுத்தப்பட்டுத் தரவுக் கிணறுகள் வெட்டப்படுவதற்கு வருவாய்த் துறை வாரியத்தின் அனுமதி அவசியமில்லை. ஆனால், வெட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பது, தரவுக் கிணறு அல்லது ஆற்றின் அடித் தளக் கிணறு என்ற சந்தேகம் ஏதாவதொன்றில் ஏற்படுமானால், அது முடிவு செய்யப்பட்டு அதில் ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு, அதைப் பற்றிய அறிக்கை வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்ப வேண்டும்.

(iv) **தண்ணீர்த் தீர்வையும் நிலத் தீர்வையும்.**— (அ) மேலே (iii)— ஆவது உள்பத்தியில் உள்ள விதிகளை அனுசரித்து நீர்ப் பாசன வேலையின் கீழ் வரக்கூடிய நிலம் நிலையான நன்செய் நிலமாக மாற்றப்படுமானால், அதற்கு நன்செய்த் தீர்வை விதிக்கலாம் என்று மாவட்டத்தின் நில வரித் திட்ட விளம்பரத்தில் கூறப்பட்டிருக்குமேயானால், அவ்வாறு அந்த நிலத்திற்கு நன்செய்த் தீர்வை விதிப்பதற்கும், நில வரித் திட்ட காலம் முடிவடையும்போது நிலத் தீர்வை வீதத்தை திருத்தியமைப்பதற்கும், அந்த நீர்ப் பாசன வேலையிலிருந்து நீர் பாய்ச்சிக்கொள்ளப்பட்ட புன்செய்க்குத் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு மான உரிமையை அரசினர் தங்களிடம் வைத்துக் கொண்டுள்ளனர் என்பதை விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவருக்குத் தெளிவாக விளக்கிச் சொல்ல வேண்டும். விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவரின் சொந்த நிலம் இவ் விதிகளை அனுசரித்து அமைக்கப்பட்ட ஏரியின் நீர்ப் பாப்பில் மூழ்குமேயாயின், 1 (iii)·ஆவது உள்பத்தியில் குறிக்கப்பட்டுள்ள சலுகை வழங்கப் படும்.

(ஆ) சொந்த நீர்ப் பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டுமென்று கலெக்டர் கருதுவாரெனில், அவர் அந் நிலங் களுக்கு விதிக்கத் தக்க குறைந்த தீர்வை வீதம் அல்லது தண்ணீர்த் தீர்வை யைப் பற்றியும், அந்தச் சலுகை எவ்வளவு காலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியும் வருவாய்த் துறை வாரியத்திற்குத் தமது யோசனையை அறிவிக்கலாம். விதிக்குப் புறம்பானவை எனினும், அவை அங்கீகாரம் பெற்றுள்ள ஆயக்கட்டு நிலங்களாக இருப்பின், அவற்றிற்குத் கூடுதலான தீர்வை விதிக்கப்பட மாட்டாது. நீர்ப் பாசனத்தின் ஆயக் கட்டில் உள்ளவை இவை என அங்கீகாரம் பெற்ற நிலங்களுடன் சேர்க்கப் படாத நிலத்திற்கு அப்பாசன ஆதாரம் விரிவாக்கப்படக் கலெக்டர் அனுமதித் திருந்தாலும், அவ்வனுமதி முன்னதாகவே பெறப்பட்டிருந்தாலன்றி, அப் பாசனத்திற்கு இயல்பான முழுத் தீர்வை வீதங்கள் விதிக்கப்படும்.

நி. ஆ. 8:1]

(v) அங்கீகாரம் அளிக்கப்படுவதற்குரிய நிபந்தனைகள்.—நிபந்தனைகளுக்குட்படுத்தி அனுமதி அளிக்கத் தக்க வேலைகளைப் பொறுத்த வரையில் அவ்வனுமதி வாய்க்காலில் தண்ணீர் வரத்தை அல்லது ஏரியின் தண்ணீர் தேக்கத்தை அதிகப்படுத்துவதற்கு அல்லது கழிவுத் தண்ணீர் அல்லது வடிகால் ஏற்பாடுகளில் மாறுதல் செய்வதற்கு அல்லது வேறு பயனை முன்னிட்டு நீர்ப் பாசன வேலை முடிவு பெற்ற பின்னர், முன் அனுமதியின்றி, அவற்றின் அமைப்பில் மாறுதல் செய்யக் கூடாதென்ற நிபந்தனைக்கு எப்பொழுதும் உட்பட்டிருக்க வேண்டும். இந் நிபந்தனை மீறப்பட்டால், அதற்குத் தண்டனையாக எல்லாச் சலுகைகளையும் ரத்து செய்து விடலாம். மேலும் சொந்த நீர்ப் பாசன வேலை செய்து முடிக்கக் கொடுக்கப்பட்ட அனுமதி கலெக்டரால் திரும்ப எடுத்துக் கொள்ளத் தகும். அதன் பின்னர், ஆசினர் நிலத்தில் உள்ள அவ்வேலையின் பகுதிகள் அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசினர் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும்.

9—8—1945 தேதி, 1466 அ.ஆ.வரு.கை.ப.
7—9—1945 தேதி, 1334 வ.து.வா.செ.கை.ப.

8. அரசினருக்கு உரியனவாகிய வானம் பார்த்த தூர்ந்த ஏரிகள் சொந்தத்தில் பழுது பார்க்கப்படுதல்—(1) "தூர்ந்த ஏரி என்பதன் விளக்கம்—இங்கே தூர்ந்த ஏரிகள் எனக் குறிப்பிட்டுள்ளவை ஐந்து ஆண்டுகளாக தூர்ந்த நிலைமையில் இருந்து வருபவை ஆகும். ஏரியின் நீரைப் பாய்ச்சி விவசாயம் செய்யக்கூடிய பரப்பில் இருபத்தைந்து சதவீதம் விவசாயமாகுமானால், அந்த ஏரியைத் தூர்ந்த ஏரியாகக் கருதக் கூடாது. "நீர் பாய்ச்சக்கூடிய" பரப்பு என்றால் சாதாரணமான சூழ்நிலைகளில், நீர் பாயக்கூடிய பரப்பை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, பெயரளவில் உள்ள ஆயக்கட்டை எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏரியின் உரிமையை விட்டுவிடுவதால் நிலையான நிலத் தீர்வைக்கு இழப்பு நேரிடுமென்று தெளிவாகத் தெரியுமானால், அரசினரின் தனி அனுமதியில்லாமல் எந்த ஏரியின் உரிமையையும் விட்டுவிடக் கூடாது. இவ் வகையில் உரிமை விட்டுவிடப்படுவதால், ஆண்டிற்கு நிலையான தீர்வை இழப்பு ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், அத்தகைய ஏரியின் உரிமை விடுவிடப்படுவதற்கு வருவாய்த் துறை வாரியம் ஒப்பளிக்கலாம்.

10—12—1935 தேதி, 2944 அ.ஆ.வரு.
7—2—1936 தேதி, 14 வ. து.வா.செ.அச்சு.
22—8—1956, தேதி, 3200 எண். அ.ஆ. வரு.
25—9—1956 தேதி, 1327 எண். வ.து.வா.செ.

இருபத்தைந்து ஏக்கருக்கு மேற்படாத பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுள்ள சிறு பாசன ஆதாரங்களின் உரிமையை விட்டுவிடுவதையும் அவற்றின் ஆயக்கட்டு நிலத்தைப் புன்செய்யாக மாற்றப்படுவதையும் கலெக்டர்கள் அனுமதிக்கலாம். மற்றவற்றில், வருவாய்த் துறை வாரியத்தின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

4—12—1907 தேதி, 2965, அ.ஆ.வரு
7—2—1936 தேதி, 14 வ.து.வா.செ.அச்சு.

[தி. ஆ. 8:2-4

(2) அனுமதிப்பதற்குரிய நிபந்தனைகள்.—ஐந்து ஆண்டுகளுக்கு அதிக மாகத் தூர்ந்த நிலைமையிலிருக்கும் ஏரிகளைப் [1] பொறி இயல் பணித் துறை யினர் பழுது பார்க்க யோசனை செய்யவில்லையென்றால் அவ்வேரிகளின் ஆயக்கட்டில் சேர்ந்த நிலத்திற்கு, வருவாய்த் துறை வாரியத்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட தனித் தீர்வை விதத்தை அனுசரித்து அல்லது [1]கலெக்டர்[1] நிர்ணயிக்கும் நிபந்தனைகளுடன் கூடிய நீண்ட நிலக் குத்தகைக் கொள்கையை அனுசரித்து தீர்வை செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையில் கலெக்டர்கள் அவ்வேரிகள் தனிப்பட்டவர்களின் சொந்தச் செலவில் பழுது பார்க்கப்பட அவர்களிடம் அவற்றை ஒப்புவிக்கலாம்.

12—1—1863 தேதி, 155, வ.து.வா.செ.
[1]26—2—1897 தேதி, 171 வ.து.வா.செ.நிர்,

3. வானம் பார்த்த ஏரிகள்.— [6]விட்டு விட்டு மழை பெய்யும் இடைவேளையில் ஏறத்தாழ அகன்ற நிலத்தின் மேற்பரப்பில் வழிந்தோடும் மழை நீரையே உண்மையில் ஆதாரமாகக் கொண்ட [6] ஏரிகள் வானம் பார்த்த ஏரிகள் எனப் படும். வானம் பார்த்த ஏரிகளுக்கு உண்மையில் மழை நீர் ஆதாரமாக உள்ளதா என்பதைப் பற்றி மட்டும் கலெக்டர் பொறியியல் பணித் துறை யினருக்கு எழுதி தெரிந்துகொண்ட பின்னர்,)-ஆவது இணைப்பில் உள்ள 2-ஆவது படிவத்தில் இதற்குரிய பதிவு ஒன்று தமது அலுவலகத்தில் செய்து கொண்டு, அத்தகைய ஏரிகள் பழுது பார்க்கப்படுவதற்கு கலெக்டர் அனுமதி அளிக்கலாம்.

12—1—1863 தேதி. 155, வ.து.வா.செ.
25—8—1863 தேதி, 5304, வ.து.வா.செ.
22—8—1956 தேதி, 3200, எண் அ.ஆ.வரு.
25—9—1956 தேதி, 1327, எண் வ.து.வா.செ.

4. பொறி இயல் பணித் துறையினரிடம் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும்.—மற்றவற்றில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் வேலை அரசினர் உரிமைகளை அல்லது சொந்த உரிமைகளைப் பாதிக்குமா என்பதைப் பற்றிப் பொறி இயல் பணித் துறையினரை முதலில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பொருட்டுக் கலெக்டர் [1] கீழ்க்கண்ட தகவலைப் பெற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். (1) ஏரி எப்போது வெட்டப்பட்டது. அதற்குத் தண்ணீர் கிடைத்தது எவ்வாறு? (2) எவ்வளவு காலமாகப் பழுது பார்க்கப்படா மலிருந்தது. (3) ஆகியில் அதை வெட்டியதற்குச் செய்த செலவு (ஏறத்தாழ எவ்வளவு). (4) அரசினரால் சென்ற பத்தாண்டுகளில் பழுது பார்க்கச் செலவிடப்பட்ட தொகையும், தெரிந்தவரையில் அதற்கும் முந்திய காலத்தில் செலவிடப்பட்ட தொகையும். (5) பழுதுற்ற நிலைமையில் அதன் ஆயக்கட்டின் பரப்பு. (6) பழுதுற்ற நிலைமையில் இருந்தபோது உண்மையாகவே விவசாயம் செய்யப்பட்ட சராசரி பரப்பு. (7) அந்த ஏரி ஏதாவதொரு நீர்ப்பாசனப் பொதுத்திட்டம் அல்லது மேம்பாட்டைப் பாதிக்கும் காரணமாக, அது அரசினருக்குத் தேவையாகக்கூடுமா? (8) அது பழுதுபார்க்கப்படுவதால் மற்ற பாத்தியதை ஏதாவது பாதிக்கப்படக் கூடுமா? (9) அது சொந்தமாகப் பழுது பார்க்கப்படுமாறு செய்துகொள்ளும் கோரிக்கைக்கு இவ்வேரியில்

நி. ஆ. 8:5–6]

அக்கறை கொள்ளக்கூடிய சம்பந்தப்பட்டவரெல்லாம் இசைவு தந்துள்ளார்களா; (10) இது சம்பந்தமாய் நிர்வாகப் பொறியாளர் கொண்டுள்ள அபிப்பிராயம்.

12—1—1863 தேதி, 155 வது.வா.செ.
26—3—1863 தேதி, 1777, வ.து.வா.செ.
26—2—1897 தேதி, 171, வ.து.வா.செ.நிர்.

5. ஏரிகள் பழுது பார்க்கப்படத் தனிப்பட்டவர்களிடம் ஒப்புவிக்கக் கலெக்டர் தக்கவாறு முடிவு செய்தல்.—தூர்ந்த ஏரிகள் தனிப்பட்டவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டு, பழுது பார்க்கப்படுவதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களைக் கலெக்டர் தாமே கூர்ந்து கவனித்துத் தக்கவாறு முடிவு செய்ய வேண்டும். இத்தகைய வேண்டுகோளை அதன் போக்கு முறையில் நிறைவேற்ற வேண்டுமென்பதில்லை. வருங்காலத்தில் ஏதாவது ஒரு சமயத்தில் ஏரி பழுது பார்க்கப்படக் கூடுமானால், அரசாங்கத்திற்கு ஆதாயம் கிடைக்கக் கூடுமென்ற காரணம் ஒன்றைக் கொண்டே விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யக் கூடாது. ஆனால், 'ஏரியின்கீழ், நீர் பாயக்கூடிய பரப்பில் நான்கில் ஒரு பாகம் நன்செய்ப்பயிர் விளைவிக்கப்பட்டு வரும்போது, சாதாரணமாக எந்த விண்ணப்பத்தையும் இவ்வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பது விதி'. 'ஆனால் தூர்ந்த நிலைமையில் இருக்கும் யாதொரு அரசாங்க நீர்ப் பாசன வேலையும் பழுது பார்க்கப்பட அனுமதி கொடுக்கப்படும்போது, அவ்வாறு கொடுக்கப்படுவதால், அயலார்களின் உரிமை பாதிக்கப்படுமென்று எப்போதாவது தெரியவருமானால், கொடுக்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படுமென்பதையும், பழுது பார்க்கப்பட அனுமதி கொடுக்கப்பட்டதன் காரணமாகச் சேதம் ஏதாவது ஏற்படுமானால், அதற்கு அரசினர் பொறுப்பாளராகார் என்பதையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

12—1—1863 தேதி, 155, வ.து.வா.செ.
9—7—1866 தேதி, 4686, வ.து.வா.செ.
9—2—1885 தேதி, 435, வ.து.வா.செ.
(22—8—1956 தேதி, 3200 எண். அ.ஆ.வரு.கை.ப.)
(25—9—1956 தேதி, 1327 எண். வ.து.வா.செ.கை.ப.).

6. ஆயக்கட்டு நிலங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தீர்வை.—இவ் விதிகளை அனுசரித்து, ஏரிகள் ஒப்புவிக்கப்படும்போது, அவற்றின் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு முழுவதற்கும், அத்தகைய ஆயக்கட்டு நன்செயாக அல்லது புன்செயாக எவ்வாறு விவசாயம் செய்யப்பட்டிருப்பினும், தீர்வை, நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விதத்தில் செலுத்தப்பட வேண்டும். ஆனால், அந்த ஏரியிலிருந்து நீர் பாய்ச்சிக்கொள்ளப்படும் அதன் [1] ஆயக்கட்டுக்கு மிகுதியாக நீர் பாய்ச்சிக்கொள்ளப்படும் பரப்பிற்குத் தனித் தீர்வை விதம் அல்லது தண்ணீர் தீர்வை விதிக்கப்பட மாட்டாது.

9—7—1866 தேதி, 4566, வ.து.வா.செ.
12—11—1866 தேதி, 2454, வ.து.வா.செ.
10—2—1908 தேதி, 38, வ.து.வா.செ.நிர்.

[நி. ஆ. 8:7–9

7. ஏரியின் பொறுப்பேற்கும் குடிகள் அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகள்.— ஏரி சரியாகப் புதுப்பிக்கப்பட்ட பின்னர், அதன் நீர்ப் பாசனத்தில் அடங்கியுள்ள எல்லா நிலங்களிலும் விவசாயம் செய்யப்பட்டாலும் அல்லது செய்யப்படாவிட்டாலும், முன்னர் அவற்றிற்குக் குறைந்த விதத்தில் நிலத் தீர்வை விதிக்கப்பட்டிருந்தாலும், அவற்றிற்குத் தனித் தீர்வை வீதம் செலுத்த வேண்டுமென்பதையும் நிலங்களின் தீர்வைப் பாக்கிக்காக நிலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டிய நிலை ஏற்படுமாறல், அந்த ஏரியிலிருந்து தண்ணீர் எடுத்து உபயோகிக்கும் உரிமையும் அந்நிலத்தை ஏலத்தில் எடுப்பவருக்குச் சேர்ந்துவிடும் என்பதையும், ஏரியைப் பழுது பார்க்க எடுத்துக்கொள்பவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஒழுங்கான நிலைக்கு ஏரியைக்கொண்டு வருவதற்குப் போதுமான கால அனுமதிக்கும் பொருட்டு, ஒவ்வொன்றிலும் கலெக்டர் எந்தத் தேதியிலிருந்து தீர்வை செலுத்தப்பட வேண்டும் என்பதைத் தக்கவாறு முடிவு செய்வார்.

28—5—1869 தேதி, 1507, அ.ஆ.
20—9—1869 தேதி, 6990, வ.து.வா.செ.
19—8—1869 தேதி, 2371, அ.ஆ.

8. கிராமத்தார்களால் பழுதுபார்க்கப்படுதல்.—ஏரியின் பாசன நிலமுடைய குடியானவர்கள் எல்லோரும் ஏரியைப் பழுது பார்க்கவும், குறிப்பிடப்பட்ட தீர்வை வீதத்தை அரசினருக்குச் செலுத்தவும், ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கும் எனில், ஏரியைப் பழுதுபார்க்க கிராமத்தின் குடியானவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துள்ளனரா அல்லது அவ்வேலையை அவர்கள் தங்களுக்குள் ஒருவரிடம் அல்லது பலரிடம் அல்லது அக்கிராமத்தவரல்லாத ஒருவரிடம் ஒப்புவித்துள்ளனரா என்பதைப் பற்றி அரசினர் கவனிக்கத் தக்கது ஒன்றுமில்லை. மற்ற நிபந்தனைகளைக் குடியானவர்கள் தங்களுக்குள்ளேயே ஒற்றுமை மனப்பான்மையுடன் ஒழுங்கு செய்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தல் வேண்டும். [2] ஆனல், ஒப்புக்கொண்டவாறு, குறிப்பிட்ட காலத்திற்குள் ஏரி பழுது பார்க்கப்படாவிட்டால் [1]அல்லது[3] பின்பு அது நன்னிலைமையில் பாதுகாக்கப்பட்டு வராவிட்டால் கொடுக்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

13—6—1864 தேதி, 1008, .ஆ.
14—12—1892 தேதி, 788, வ.து.வா.செ.நிர்.
6—9—1894 தேதி, 359, வ.து.வா.செ.நிர்.

9. ஏரியின்கீழ் உள்ள கைப்பற்று நிலங்களின் உரிமையை விட்டு விடுதல்.— இந்த நிலை ஆணையின் கீழ் வழங்கப்பட்ட ஏரி ஆயக்கட்டுகளை உடையவர்கள் [3] கலெக்டரின் [4] தனி ஒப்பளிப்பில்லாமல் தங்கள் நில உடமைகளின் உரிமையை விட்டுவிடுவதற்கு அனுமதிக்கக் கூடாது.

27—10—1886 தேதி, 2350, வ.து.வா.செ.
26—2—1897 தேதி, 171, வ.து.வா.செ.நிர்.

நி. ஆ. 8:10–11, 9, 10, 11]

10. தனித் தீர்வை வீதங்களை மாற்றி அமைத்தல்.—இந்த நிலை ஆணையின் கீழ் விதிக்கப்படும் தனித் தீர்வை வீதங்கள் மாவட்டத்தின் நிலத் தீர்வை விதிப்பின் பொது மாற்றத்தின்போது மாற்றியமைப்பதற்குள்ளாகும். அத்தகைய நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தின்போது, எந்தக் கிராமத்தில் அத்தனித் தீர்வை வீத நிலங்கள் உள்ளனவோ, அக்கிராமத்தின் புன்செய் நிலத்தின் சராசரி தீர்வை மாறுதல் அடையும் வீத முறையில் தனித் தீர்வை மாறுதல் செய்யப்படும். ஆனால் கொடையின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரையில் நிலங்கள் மறுமுறை பாகுபாடு செய்யப்பட மாட்டா.

4—12—1899 தேதி, 402 வ.து.வா.செ.நிர்.

நி.ஆ. 8: 11

„ 9

„ 10

„ 11

„ 11 அ:1

11. வண்டல் எடுத்துக்கொள்ளுதல்.—இவ்விதிகளின் கீழ், தூர்ந்த ஏரிகளைப் பழுது பார்க்கவும், அவற்றை நன்னிலையில் வைக்கவும் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் ஒருவராயிருப்பினும், பலராயிருப்பினும், அத்தகையோரே அவ் வேரிகளின் உள் வாயிலிருக்கும் வண்டலை எடுத்துக்கொள்ளும் தனி உரிமையை வகிப்பர். மற்றவர்கள் ஏரியின் வண்டலை எடுத்துக்கொள்ள விரும்புவார் எனில், அவர்கள் இத்தன்மைத்தான பொறுப்பேற்றுக் கொண்டவர்களிட மிருந்து தெளிவான அனுமதியைப் பெற்ற பின்னரே அவ்வாறு வண்டலை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(15—11—1944 தேதி 1945 வ.து.வா.செ.பல.)

9. தனித்துள்ள சிறிய ஏரிகள் சொந்தத்தில் பழுது பார்க்கப்படுதல், ரத்து செய்யப்பட்டது.

8—11—1902 தேதி, 256, வ.து.க.செ.

10. காட்டோடைகள் அல்லது இயற்கையாக உள்ள குட்டைகளில் இருந்து நீர் பாய்ச்சப்படுதல்.—நீக்கப்பட்டது.

9—8—1945 தேதி, 1466, அ.ஆ.கை.ப.
7—9—1945 தேதி, 1334, வ.து.வா.செ.கை.ப.

11. நீர் பாய்ச்சப்பட இயலாத நன்செய் நிலம்.—ஐந்து ஆண்டுகளுக்கு மேற்கொண்டு தூர்ந்து கிடக்கும் ஏரிகளைப் பொறி இயல் பணித் துறையினர் பழுது பார்க்க யோசனை செய்யவில்லையெனில், அவற்றின்கீழ் அவ்வாறுள்ள நிலங்களும், யாதாவதொரு நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து தண்ணீர் பாய்ச்சப் பட இயலாதவாறுள்ள நன்செய் நிலங்களும் அவற்றிற்குப் பொருத்தமான புன்செய்த் தீர்வை வீதத்தில் செலுத்தப்பட்டு அவை விவசாயம் செய்யப்படுவ தற்காகக் கொடுக்கப்பட வேண்டும். முன்னர் குறிக்கப்பட்டுள்ளவற்றில், அரசினர் அவ்வேரிகளைப் பழுது பார்க்கக் கூடுமானால், தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு, அல்லது ஏரிகள் சொந்தத்தில் பழுது பார்க்கப்படுவதற்கு

[நி. ஆ. 11 அ:1

அனுமதி கோரி விண்ணப்பம் செய்திருப்பவர்கள் எவரிடமாயினும் அவ்வேரிகளை ஒப்புவிப்பதற்கு அரசினருக்கு உரிமை உண்டு. இவ்வுரிமையை அரசினர் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டுள்ளார்.

4—9—1863 தேதி, 5334, வ.து.வா.செ.

11. அ. மனை வாழ்க்கை உபயோகங்களுக்கும், தொழில் சம்பந்தமான காரியங்களுக்கும் அரசாங்க நீர்ப்பாசன ஆதாரங்களின் தண்ணீரைப் பயனுக்கிக் கொள்வதற்குப் பெற வேண்டிய உரிமங்கள்.—

குறிப்பு.—ஒதுக்கக் காடுகளில் ஓடும் ஓடைகளின் தண்ணீரைப் பாய்ச்சிக் கொள்வதற்கு விதிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை பற்றிய விதிகள் 4-ஆவது நிலை ஆணை 13-ஆவது பத்தியில் உள்ளன.

பிரிவு 1—பொதுவான அறிவுரைகள்.

1. இந்நிலை ஆணையின் நோக்கம்.—முன்பு கூறப்பட்டுள்ள நில ஆணைகள் புன்செய், நன்செய் நிலங்களின் பாசனத்திற்குத் தண்ணீர் உபயோகிப்பதைப் பற்றி எடுத்தியம்புகின்றன. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுரைகள், அரசாங்கப் பாசன ஆதாரங்கள் ஒதுக்கக் காடுகளில் இருப்பினும் அல்லது அவற்றிற்கு அப்பால் இருப்பினும் அத்தகைய ஆதாரங்கள் எல்லாவற்றின் தண்ணீரைக் கொண்டு செய்யப்படும் விவசாய நீர்ப்பாசனத்தைத் தவிர மற்றக் காரியங்களுக்கெல்லாம் தண்ணீர் உபயோகிப்பதற்கு அல்லது தண்ணீரைத் திருப்பிக் கொள்வதற்கு உரிமங்கள் கொடுப்பதற்காக எற்பட்டவையாகும். புறம்போக்கு நிலங்களிலும் அரசினரின் மற்ற நிலங்களிலும் உள்ள கிணறுகள் உட்பட, அரசாங்கத்தின் இயற்கை அல்லது செயற்கை நீர் ஓட்டங்கள், நீர்த் தேக்கங்கள், ஏரிகள், குட்டைகள், குழிகள், மேலும் தனிப்பட்ட அநுபோகத்தில் இருக்கும் நிலங்களில் உள்ள அரசாங்க நீர்ப்பாசன ஆதாரங்களின் கசிவினால் அல்லது மற்ற வகையில் அநுகூலம் அடையும் குட்டைகள், கிணறுகள், குழிகள் இவையெல்லாம் நீர்ப்பாசன ஆதாரங்களாக அங்கீகாரம் பெற்றிருப்பினும் அல்லது இவ்வாறு இல்லாவிட்டாலும், இவை இவ்விதிகளைப் பொறுத்தமட்டில் நீர்ப்பாசன ஆதாரங்களாகக் கருதப்பெறும். பொறி இயல் பணித் துறையினர் நிர்வாகத்தில் அல்லது பாதுகாப்பிலிருக்கும் ஆதாரங்கள் அவர்கள் பொறுப்பில் இருக்கும். மற்ற ஆதாரங்களெல்லாம் வருவாய்த் துறையினர் பொறுப்பில் இருக்கும். ஒதுக்கக் காடுகளில் இருக்கும் ஆதாரங்கள் வனத் துறையினர் பொறுப்பிலிருப்பதாகக் கருதப்பட வேண்டும். இருப்பினும், அவ்வாதாரங்களிலிருந்து தண்ணீர் திருப்பிக் கொள்ளப்பட்டால் அல்லது உபயோகப்படுத்தப்பட்டால் அவ்வாறு செய்யப்பட்டதைக் கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டுவரும் அளவிற்கே வனத் துறையினரின் பொறுப்பு அமைந்துள்ளது, உரிமம் கொடுப்பதற்கு முன்னர் கலெக்டர் எப்பொழுதும் வனப் பாதுகாவலரிடம் கலந்து ஆலோசனை செய்து கொள்ள வேண்டும். இந்த நிலை ஆணையின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரியால் கொடுக்கப்படும் உரிமம் அல்லது அனுமதியின்றி அடுத்து வரும் பத்தியில் குறிப்பிடப்பட்ட காரியம் எதற்கேனும் தனிப்பட்டவர்கள் அல்லது தனிப்பட்டவர்களின் தொகுதி, தல ஆட்சிக் கழகங்கள், இருப்புப்பாதை அல்லது

நி. ஆ. 11 அ:2]

தொழில் நிறுவனங்கள் போன்ற கூட்டு நிறுவனங்கள் அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து தண்ணீரைத் திருப்பிக்கொள்ள அல்லது உபயோகிக்கக் கூடாது.

12—3—1931 தேதி, 558 அ.ஆ.வரு.பலவ.
22—8—1956 தேதி, 3200 எண். அ.ஆ. வரு.கை.ப.
16—3—1931 தேதி, 918 வ.து.வா.செ.பலவ.
25—9—1956 தேதி, 1327 வ.து.வா.செ.கை.ப.

குறிப்பு : (i) தனிப்பட்ட அநுபோகத்தில் இருக்கும் நிலங்கள், குட்டைகள், கிணறுகள், குழிகள் அரசாங்க ஆதாரத்திலிருந்து ஐம்பது அடிகளுக்கு அதிகமான தூரத்தில் இருக்குமாறால், அவை அரசாங்க ஆதாரத்தின் கசிவினால் அநுகூலம் பெறவில்லையென்று சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இந்த தூரம் ஐம்பது அடிகள் அல்லது அடிகளுக்குக் குறைந்திருக்குமாறாலும், கசிவினால் அநுகூலம் ஏற்பட்டதென்பதற்கு ஏதாவது சான்று வேண்டும். இத்தூரம் ஐம்பது அடிகளுக்கும் அதிகமாக இருந்தாலும், கசிவினால் அநுகூல மடைந்ததாக மெய்ப்பிக்கப்படுமாறால் தீர்வை விதிக்கப்பட வேண்டும்.

1—6—1942 தேதி, 1171 அ.ஆ.
21—12—1932 தேதி, 3779 வ.து.க.செ.பலவ.

(ii) மனை வாழ்க்கை உபயோகங்களுக்காக இயந்திர வலன் அல்லது மின் சார வலன் உண்டாக்கப்பட்டால் 5-ஆவது பத்தியின் 9-ஆவது பத்தியின் கீழும் நிர்ணயிக்கப்பட்டிருப்பவற்றில் பாதி வீதங்கள் விதிக்கப்பட வேண்டும்.

(27—7—1954 தேதி, 2037 எண். அ.ஆ. வரு.
23—9—1954 தேதி, 1094 எண். வ.து.வா.செ.கை.ப.
17—2—1955 தேதி, 182 எண், வ.து.வா.செ.கை.ப.)
(22—8—1956 தேதி, 3200 எண், அ.ஆ. வரு.கை.ப.)
(25—9—1956 தேதி, 1327 எண், வ.து.வா.செ.கை.ப.)

2. உரிமங்கள் என்ன என்ன உபயோகங்களுக்காக வழங்கப்படலாம்— கீழ்க்கண்ட தலைப்புகளின் உபயோகங்களுக்கு உரிமம் வழங்கலாம்:—

(1) மனை வாழ்க்கை உபயோகங்கள் (பசை செய்தல் உட்பட)

(2) (பசை உபயோகம் நீங்கலாக) மின்சார வலனை உண்டாக்குதல் தவிர மற்ற உபயோகங்கள்.

(3) மின்சார வலன் உண்டாக்குதல் தற்போதைய உரிமைகள் பாதுகாக்கப்படுவதுமன்றி இப்போதுள்ள அல்லது கிடைக்கத்தக்க நீர் மின்சார கலனைப் பிரதிகூலமாகப் பாதிக்கக்கூடும் என்று நம்புவதற்குக் காரணம் இருக்குமாறால், எத்தகைய உபயோகங்களுக்கும் உரிமம் வழங்கலாகாது.

[நி. ஆ. 11 அ:2—3

குறிப்பு : மேலே குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களில் ஒன்றுக்கு மேல்பட்ட வற்றிற்குத் தண்ணீரை உபயோகித்தால் அல்லது திருப்பிக் கொண்டால் அவற்றில் எந்த உபயோகத்திற்கு உரிமை ஊதியம் மிக உயர்ந்தவீதத்தில் விதிக்கத் தக்கதோ அத்தகை வீதமே அத்தகைய உபயோகத்திற்கு ஏற்றதாகும்.

3—4—1935 தேதி, 860, அ.ஆ.கை.பல.
24—4—1935 தேதி, 41 வ.து.வா.செ.அச்சு.
(22—8—1956 தேதி, 3200 என். அ.ஆ.வரு.பலவ.)
(25—9—1956 தேதி, 1327 என். வ.து.வா.செ. கை.)

பிரிவு (ii) மனை வாழ்க்கை உபயோகங்கள் (பசை செய்தல் உட்பட).

3. உரிமங்கள் கொடுத்தல்.—பசை செய்தல் உட்பட மனை வாழ்க்கை உபயோகங்களுக்குத் தேவையான தண்ணீரை நேராகப் பயனுக்கிக் கொள் வதற்கு அல்லது தண்ணீரை தடுத்துத் திருப்பிப் பயனுக்கிக் கொள்வதற்குத் தகுதியாக உள்ள நீர்ப்பாசன ஆதாரங்கள், ஒதுக்கக் காடுகளில் இருப்பின் வனப் பாதுகாவலருடனும், பொறியியல் பணித் துறையினரின் பொறுப்பி லிருக்குமானால், மேற்பார்வை பொறியாளருடனும் கலெக்டர்கள் கலந்து ஆலோசனை செய்து, (i) ஆவது இனைப்பின் 3 ஆவது படிவத்தில், அத்தகைய நீர்ப்பாசன ஆதாரங்களிலிருந்து அத்தகைய பயனுக்கு அவ்வாறு எடுத்துக் கொள்ள உரிமங்கள் வழங்குவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். ஏனைய ஆதாரங்களைப் பொறுத்தவரையில் நிர்வாகப் பொறியாளர்களைக் கலந்து ஆலோசனை செய்வதும் ஆலோசனை செய்யாததும் கலெக்டர்கள் விருப்பத்தை அனுசரித்ததாகும்.

(அ) எல்லா உபயோகங்களுக்கும் ஒதுக்கக் காட்டிலிருந்து தண்ணீரைத் திருப்பிக் கொள்வதற்கும்.

(ஆ) மற்ற இடங்களிலிருந்து அதிகமான அளவில் உதாரணமாக ஒரு தொழிற்சாலைக்கு அல்லது ஒரு பெரிய வீட்டிற்கு குழாய் வழியாய்த் தண்ணீர் வழங்குவதற்கும் அல்லது ஒரு நிலத்திற்கு மக்கள் புதிதாகக் குடியேறிய இடத் திற்கு மனை வாழ்க்கை உபயோகத்திற்காகத் தண்ணீரைத் திருப்பிக் கொள்வ தற்கும் உரிமம் அவசியமாகும். ஆனால், உதாரணமாக தண்ணீரைத் திறந்த வாறே கிராமத்தில் ஒரு வீட்டிற்குத் தேவையான அளவில் உபயோகம் செய்து கொள்ள உரிமம் அவசியமில்லை. ஒவ்வொன்றின் சந்தர்ப்பங்களை அனுசரித்து உரிமை ஊதியத்தை நிர்ணயிப்பதற்குக் கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. சாதாரணமாக, மனை வாழ்க்கை உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் தண்ணீருக்கு விதிக்கப்படும் உரிமை ஊதியம் பெயரளவில் சொற்பமாக இருக்கும். பசை செய்வதற்கு எடுக்கப்படும் தண்ணீருக்காக விதிக்கப்படும் உரிமை ஊதியம் சாதாரணமாய் ஆண்டிற்கு 10 ரூபாய்க்குக் குறைந்தாது. கிராமங்களிலிருந்தும் குடிதண்ணீர் ஏரிகள் பஞ்சாயத்துக்களின் எல்லை களுக்குள் இருப்பினும், அவ்வாறு இல்லாவிட்டாலும், அந்த ஏரிகளுக்கு வழங்கப்படுவதற்கு அல்லாமல் மற்ற உபயோகங்களுக்கு, உதாரணமாக நீர்ப் பாசனத்திற்கும் தொழில் காரியங்களுக்கும் தண்ணீர், உபயோகப்படுத்தப் பட்டால் அன்றி உரிமை ஊதியம் விதிக்கலாகாது. நீர்ப்பாசன ஆதாரம்

நி. ஆ. 11 அ:3]

பொறியியல் பணித் துறையின் பொறுப்பில் இருக்குமாறும் "மற்ற செலுத்தல்கள் பொறி இயல் பணித் துறை வரவுகள்" என்ற தலைப்பில் உரிமை ஊதியம் வரவு வைக்கப்பட வேண்டும்; பாசன ஆதாரம் வருவாய்த் துறையினர் பொறுப்பில் இருக்குமாறும் சந்தர்ப்பத்தை அனுசரித்துத் தகுந்தவாறு XVII நீர்ப்பாசனம் கப்பலோட்டு இயல் கட்டுக்கரை வடிகால் வேலைகள்—வாணிப சம்பந்தமானவை—அ. நீர்ப்பாசன வேலைகள்—தண்ணீர் விற்பனைகள்" என்ற தலைப்பிலாவது அல்லது XVIII நீர்ப்பாசனம், கப்பலோட்டு இயல் கட்டுக்கரை வடிகால் வேலைகள்—வாணிபமல்லாதவை—அ. நீர்ப்பாசன வேலைகள்—தண்ணீர் விற்பனைகள்" என்ற தலைப்பிலாவது கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். உரிமங்களுக்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்குத் தனிப் பதிவேடு வைக்க வேண்டியதில்லை. கலெக்டரால் கொடுக்கப்படும் எல்லா உரிமங்களும் இந்தப் பிரிவில் (1) ஆவது இணைப்பின் 9-ஆவது படிவப் பதிவேட்டில் "மனை வாழ்க்கை உபயோகங்கள்" "பசை செய்தல்" என்ற தனித் தலைப்புகளில் பதிவு செய்ய வேண்டும். இப்பதிவேடானது பொறியியல் பணித் துறையினரின் பொறுப்பிலுள்ள பாசன ஆதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டது ஒரு பிரிவிலும், வருவாய்த் துறையினர் பொறுப்பிலுள்ள ஆதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டது மற்றொரு பிரிவிலும் எழுதி வைக்கப்பட வேண்டும். அதன் முன் பக்கத்தில் கிராம வரிசையில் ஒரு அட்டவணையும் இருக்க வேண்டும். ஒவ்வொரு பசலி ஆண்டிற்கும் செலுத்தத்தக்க உரிமை ஊதியங்களை அந்தப் பசலிக்கு முந்திய ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதிக்குள் முன் பணமாகச் செலுத்திவிட வேண்டும். இது செய்யத் தவறினால், உரிமங்கள் ரத்து செய்யப்படுவதற்குள்ளாகும். இருப்பினும் வாப்பெற வேண்டிய தொகைகள் செலுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க கலெக்டரின் அலுவலகத்திலும் தாலுகாவிற்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திலும் I (1) ஆவது இணைப்பின் 7-வது படிவத்தில் இந்தப் பதிவேட்டைச் சரிவர எழுதிவைத்து வருவதற்கும், வசூல் செய்வதை எளிதாக்கும் பொருட்டும், கலெக்டர் தம்முடைய ஆணைகளின் பிரதிகளையும், தாம் வழங்கும் உரிமங்களின் பிரதிகளையும் தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். உரிமைகளின் நிபந்தனைகள் மீறப்படாமல் இருப்பதைக் கவனிக்கும் பொருட்டு கோட்ட ஆட்சியாளர்களும், தாசில்தார்களும், வருவாய் ஆய்வாளர்களும் தங்கள் சுற்றுப் பயணங்களில் உரிமங்கள் கொடுக்கப்பட்டவற்றில், எத்தனை வேலைகளைப் பார்வையிட முடியுமோ, அத்தனை வேலைகளையும் பார்வையிட வேண்டும். பசை செய்தல் உட்பட மனை வாழ்கை உபயோகத்திற்காகத் தண்ணீரைப் பயனுக்கிக் கொண்டால் அல்லது தண்ணீரை திருப்பி உபயோகம் செய்துகொண்டால் அவற்றைக் கண்டு பிடிப்பதும் அவர்களின் கடமையாகும். அவற்றை உடனடியாகக் கண்டுபிடித்து மேலதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்புவது தாசில்தார்களின் பொறுப்பாகும். வழங்கப்பட்ட ஒவ்வொரு உரிமத்தின் சாராம்சத்தைக் கிராம அடங்கல் குறிப்புரைக் கட்டத்தில் சம்பந்தப்பட்ட ஆதாரத்தின் நில அளவை எண்ணுக்கு எதிரில் வருவாய் ஆய்வாளர் பதிவு செய்து வருகிறாரா என்பதைத் தாசில்தார்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். கீழ்க்கண்ட படிவத்தில் வருவாய் ஆய்வாளர் பதிவு செய்து எழுத்து வடிவில் உறுதிமொழி அளிக்க வேண்டும்.

[நி. ஆ. 11 அ3–5

"மீன வாழ்க்கை உபயோகத்திற்குத் தண்ணீர் திருப்பிக் கொள்வதற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் முன் பணமாக . . .ரூபாய் செலுத்தப்பட்டதால் தேதி கலெக்டரின் எண் ஆணையில் உரிமம் ஒழுங்கப்பட்டது.

(கையொப்பம்)

தேதி

வருவாய் ஆய்வாளர்"

1—12—1932 தேதி, 3779 எண். வ.து.வா.செ. பலவ.
22—8—1956 தேதி, 3200 எண், அ.ஆ. வரு.கை.ப.
25—9—1956 தேதி, 1327 எண். வ.து.வா.செ.கை.ப.

இவ்வுரிமங்களின் பிரதிகள் வருவாய் ஆய்வாளரிடமிருந்து திருப்பி வந்த பின் தாலுகா அலுவலகத்தில் இறுதி நிலையில் கோப்பாகச் சேர்க்கப் பட்டுக் கிராம வரிசை அட்டவணையுடன் ஒரு நிலையான குறிப்புப் பதிவுக் கோப்பாக வைக்கப்பட வேண்டும்.

—உரிமம் கொடுக்கப்படும் ஆண்டுக்கு முன்னதாகத் தண்ணீர் எவ் வாறுகவேனும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தால், இதற்காகச் செலுத்தப் பட வேண்டிய தண்ணீர் தீர்வை பாக்கியை உரிமம் கொடுக்கும் சமயத்தில் வசூல் செய்து கொள்ள வேண்டும். வருவாய்த் துறை வாரியம் ஒவ்வொரு உரிமம் சம்பந்தமாகவும் 100 ரூபாய் வரையில் நிலுவையிலிருக்கும் முந்திய தீர்வைப் பாக்கிகளை வசூலிக்கும் உரிமை விட்டுவிடுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறது, இதற்கு மேற்பட்ட தொகை வசூலிக்கும் உரிமையை விட்டுவிடுவதற்கு அரசினரன் ஒப்பளிப்பு வேண்டும்.

5—5—1939, தேதி 1085 எண். அ.ஆ.வரு.கை.ப.
2—3—1940, தேதி 20 எண். வ.து.வா.செ.அச்சு.

விதி (iii) —மின்சார வலன் உண்டாக்குதல் அல்லாத ஏனைய தொழில் உபயோகங்கள் (பசை செய்தல் நீங்கலாக)

4. தொழில் உபயோகங்களின் வகுப்புகள்.—தொழில் காரியங்களுக்காக அரசாங்க ஆதாரங்களிலிருந்து பயனுக்கிக் கொள்ளப்படும் தண்ணீர். (i) தனிப்பட்டவரால் அல்லது ஒரு தொழில் நிறுவனத்தால் நிர்வாகம் செய்யும் தொழில் நிலயத்திற்கு வழங்கப்படுவதற்கும் (ii) தல ஆட்சிக் கழகங்களால், மூக்கியமாக, நகராட்சிகளால் நகரங்களுக்கு வழங்கப்படுவதற்கும் (iii) இருப்புப்பாதைத் துறையினரால் இருப்புப் பாதைப் பணியாளர் குடியிருப்பு இடங்களுக்கு வழங்கப்படுவதற்கும் உபயோகம் ஆகிறது.

5. தனிப்பட்டவராலோ, தொழிற்கூட்டு நிறுவனத்திலோ நிர்வாகம் செய்யப்படும் தொழில் நிலையங்கள்.—நீர்ப்பாசன ஆதாரங்கள் பொறியியல் பணித் துறையினரின் பொறுப்பில் இருக்குமானல், ஒவ்வொரு விண்ணப்பம் சம்பந்தமாகவும் கலெக்டரின் அனுமதி பெற்ற பிறகு சந்தர்ப்பங்களுக்கேற்ற வாறு அவசியமான சிறு மாறுதல்களுடன் I (i) ஆவது இணைப்பின் 4 ஆவது படிவத்தில் மேற்பார்வைப் பொறியாளர் தொழில் உபயோகத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டவர்களிடமிருந்து உடன்படிக்கை பெற வேண்டும். ஆதாரங்கள் வருவாய்த் துறையினரின்

கி. ஆ. 11அ:5]

பொறுப்பில் இருக்குமானால், உடன்படிக்கைகள், வாங்குவதற்குக் கலெக்டர் ஏற்பாடு செய்ய வேண்டும். தேவையானால், இதற்காக அவர் நிர்வாகப் பொறியாளரிடம் கலந்து ஆலோசனை செய்துகொண்டு ஏற்ற மாறுதல்களுடன்

(i) ஆவது இணைப்பில் 4 ஆவது படிவத்தை உபயோகித்துக்கொள்ள வேண்டும். அவ்வுடன்படிக்கைகளை பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அவற்றிற்கு முத்திரை வரியும் பதிவு செய்வதற்குரிய கட்டணமும் செலுத்துவது உரிமம் பெற்றவர்களின் பொறுப்பாகும்.

இந்த வகுப்பின் உரிமங்களுக்கு உரிமை ஊதியங்கள் கீழ்க்கண்ட விதங்களில் விதிக்கப்படும்.

நேராக அரசாங்க ஆதாரங்களிலிருந்து—

(அ) கையால் இயக்கப்பெறும் சாதனங்களைக் கொண்டு தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு—

(i) 99 கனகெஜம் வரை தீர்வையில்லை.

(ii) 100 கன கெஜங்களுக்கும் அவற்றிற்கு மேற்பட்ட ஒவ்வொரு 100 கன கெஜத்திற்கும் ஆண்டிற்கு 8 ரூபாய் வீதம் விதிக்க வேண்டும். இவ்வாறு விதித்ததில் 100 கன கெஜத்திற்குக் குறைந்ததை விட்டு விடலாம்.

[ஆ] இயந்திர இயக்கங்களால் ஆண்டுக்கு குறுமம் 200 ரூபாய் உட்பட்டு 1,000 கன மீட்டர்களுக்கு 16 ரூபாய் வீதம், குறைக்கப்படாமலும் தூய்மை கெடுக்கப்படாமலும் அரசு ஆதாரங்களுக்குத் திருப்பப்பட்ட தண்ணீருக்காக 1,000கன மீட்டர்களுக்கு 4 ரூபாய்ச் சலுகை வீதத்தில் தீர்வை விதிக்கப்பட வேண்டும். எஞ்சிய தண்ணீருக்குக் குறிக்கப்பட்ட குறுமத்திற்கு உட்பட்டு, 1,000 கன மீட்டர்களுக்கு 16 ரூபாய் முழு வீதத்தில் தீர்வை விதிக்கப்பட வேண்டும்.

1915 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17 ஆம் தேதி, 689 எண். அ.ஆ.வரு.
1931 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி, 1492 எண். அ.ஆ.கை.ப.
1932 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதி, 1171 எண். அ.ஆ.கை.ப.
1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் தேதி, 2501 எண். அ.ஆ.
1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் தேதி, 674 எண். அ.ஆ.வரு.
1936 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ஆம் தேதி, 674 எண், அ.ஆ.வரு.
1936 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி, 45 எண். வ.து.வா.செ. அச்சு.

1953 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி, 385 எண். அ.ஆ.கை.ப. பொ.ப.

1953 ஆம் ஆண்டு மே மாதம் 2-ம் தேதி, 11 எண். வ.து.வா.செ. அச்சு.

1932 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி, 3779 எண். வ.து.வா செ.கை.ப.

(1956 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் தேதி, 1327 எண். வ.து.வா. செ.கை.ப.)

(1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22 ஆம் தேதி, 3200 எண். அ.ஆ.. வரு.)

குறிப்புகள்.—(i) மிகச் சிறிய ஏதாவதொரு தொழில் நிலையம் உபயோகித்த தண்ணீரின் அளவை ஒப்பிட்டுப்பார்த்து அதற்கு உரிமை ஊதியமாகிய 100 ரூபாய் விதிப்பது அதிகம் என்று பொறியியல் பணித்துறை மேற்பார்வையாளராயினும் கலெக்டராயினும் கருதுவாரெனில், அதில் வருவாய் துறை

[நி. ஆ. 11அ:5

வாரியத்தின் ஆணை பிறப்பிக்கப்படுவதற்காக அறிக்கை மேலனுப்பப்பட வேண்டும். வருங்காலத்தில் ஆரம்பிக்கப்படும் ஏதாவதொரு தொழிலுக்குச் சலுகை வீதம் அனுமதிப்பது விரும்பத்தக்கதெனில், இவ்வகையில் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் வருவாய்த் துறை வாரியத்தின் வழியாய் அரசாங்கத்திற்கு மேலனுப்பப்பட வேண்டும்.

1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் தேதி, 2382 என். அ.ஆ.வரு. கை.ப.

1932 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி. 3779 என். வ.து.வா. செ.

(ii) ஒவ்வொரு நிதி ஆண்டிற்குமுரிய உரிமை ஆதாம் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட முதல் ஆண்டுக்குரிய உரிமை ஊதியத்தை முன் பணமாக ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும். உடன்படிக்கை செய்து கொள்ளும்போதே வசூலித்துவிட வேண்டும். உடன்படிக்கை செய்து கொள்ளும் நிதி ஆண்டிற்கு முந்தி உபயோகித்த தண்ணீருக்காகச் செலுத்த வேண்டிய பாக்கியையும் உடன்படிக்கை செய்து கொள்ளும்போதே வசூலித்து விடவேண்டும். ஒவ்வொரு உரிமம் சம்பந்தமாகவும் 500 ரூபாய் வரையில் உள்ள நிலுவைபாக்கியை வசூலிக்கும் உரிமையை விட்டுவிடுவதற்கு வருவாய்த் துறை வாரியத்திற்கு அதிகாரம் உண்டு. இந்த வரம்புக்கு மேற்பட்டவற்றிற்கு அரசாங்கத்தின் ஒப்பளிப்பு பெற வேண்டும்.

1932-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ஆம் தேதி, 1664 என், அ.ஆ.வரு.

1932-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி, 2907 என், வ.து.வா. செ.பலவ.

(iii) உலவும் திரைப்படக் கம்பெனிகளின் இயந்திரங்கள் அல்லது இயந்திர தளவாடங்களை ஆறவைப்பதற்காக அரசாங்க நீர்ப்பாசனங்களிலிருந்து எடுத்துக் கொள்ளும் தண்ணீருக்கு உரிமை ஊதியம் விதிக்கத் தக்கதில்லை.

1939-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் தேதி 3107 என், அ.ஆ.வரு. கை.ப.

1940-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி, 21 என். வ.து.வா.செ. அச்சு.

மின்சார வலனை உபயோகிக்காமல் இயந்திர சாதனங்களால், உதாரணமாக தண்ணீரால் இயக்கப்படும் இயந்திரத்தால் செய்யும் உபயோகங்களுக்கு மட்டும் நீர்விசை சத்தியை உபயோகப்படுத்துவதாகயிருப்பின், இதைப் பற்றிய யோசனைகளைப் பொறி இயல் பணித்துறையினர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவ்வகையில் விதிக்கப்படும் உரிமை ஊதியங்களெல்லாம் வருவாய்த் துறையினரால் வசூலிக்கப்பட்டு "III மற்றச் செலுத்தல்கள் பொறியியல் பணித்துறை நிமித்தமானவை" என்ற தலைப்பில் வரவு வைக்க வேண்டும்.

இத்தகைய யாதொன்றிலும் விதிக்கப்படும் உரிமை ஊதியம் மின்சார வலன் உற்பத்தி செய்வதற்கு விதிக்கப்படும் உரிமை ஊதியத்தை விட அதிகமாயிருக்கக்கூடாது.

நி. ஆ. 11அ:5]

குறிப்பு.—மின்சார வலனையும் யந்திர சாதன வலனையும் செய்வதற்கு நீர் விசை உபயோகம் செய்யப்படும்போது அந்த அந்தக் காரியத்திற்கு உபயோகப்படுத்தப்பட்ட தண்ணீரின் அளவை அனுசரித்து இதற்காக வசூலிக்கப்பட்ட உரிமை ஊதியங்கள் மின்சாரத் துறைக்கும் பொறி இயல் பணித் துறைக்கும் பகிர்ந்து வரவு வைக்கவேண்டும்.

1934-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி, 1062 எண், அ.ஆ.கை.ப.

1934-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ஆம் தேதி, 860 எண்.அ.ஆ.

1934-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் தேதி, 72 ஏண், வ.து.வா.செ.

1935-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி, 41 எண், வ.து.வா.செ. அச்சு.

அருகில் வீடு கட்டுவதின் நிமித்தமாய் ஒருவர் செங்கல் உற்பத்தி செய்வதற்காக ஒரு முறை தண்ணீர் எடுத்துக்கொண்ட பின் மறுமுறையும் தண்ணீர் எடுத்துக் கொள்வது வழக்கமாக ஏற்படாது எனக் கருதத்தக்கவை போன்ற சிறிய அளவில் தண்ணீர் எடுத்துக் கொள்ளப்படுவனவற்றில் உடன் படிக்கை தேவையில்லை.

1933-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ம் தேதி, 66 எண், வ.து.வா.செ. அச்சு.

இந்த வகையில் விதிக்கப்படும் உரிமை ஊதியங்களெல்லாம் வருவாய்த் துறையினரால் வசூலிக்கப்பட்டுப் பாசன ஆதாரம் பொறியியல் பணித் துறையினர் பொறுப்பில் இருக்குமானால் "III மற்றச் செலுத்தல்கள்—பொறியியல் பணித் துறை நிமித்தம் வரவுகள்" என்ற தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும் அல்லது நீர்ப்பாசன ஆதாரம் வருவாய்துறையின் பொறுப்பில் இருக்குமானால் சந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு XVII நீர்ப்பாசனம் கப்பலோட்டிய வேலைகள் கட்டுக்கரை, வடிகால், வேலைகள்—வாணிப சம்பந்தமானவை அ. நீர்ப்பாசன வேலைகள், தண்ணீர் விற்பனைகள்" என்ற தலைப்பில் "XVIII நீர்ப்பாசனம் கப்பலோட்டியல் கட்டுக்கரை வடிகால் வேலைகள்—வாணிப சம்பந்தமல்லாதவை—அ. நீர்ப்பாசன வேலைகள்—தண்ணீர் விற்பனைகள்" என்ற தலைப்பில் வரவு வைக்க வேண்டும். ஒவ்வொரு தொழில் நிலையத்திலிருந்தும் வசூலிக்க வேண்டிய தொகையை பற்றி நிர்வாகப் பொறியாளர் கலெக்டருக்கு ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலாவது அதற்கு முன்பாவது தெரிவிக்க வேண்டும்.

செய்துகொண்ட உடன்படிக்கைக்கு I (1) ஆவது இணைப்பின் 10 ஆவது படிவத்தில் பதிவேடு ஒன்று கலெக்டர் அலுவலகத்தில் எழுதி வைத்து வர வேண்டும். அதன் முன் பக்கத்தில் ஒவ்வொரு தாலுகாவைப் பொறுத்த வரையில் கிராம வரிசையில் அட்டவணை ஒன்று இருக்க வேண்டும். ஒவ்வொரு உடன்படிக்கையைப் பற்றியும் ஏதாவது தனி நிபந்தனைகள் இருக்குமானால் அவற்றை அந்தப் பதிவேட்டின் குறிப்புரைக் கட்டத்தில் பதிவு செய்ய வேண்டும். மாவட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட எல்லா உடன்படிக்கைகளையும் சேர்த்து கேட்பு, வசூல் நிலுவைப் பதிவேடு I (1) ஆவது இணைப்பின் 7-ஆவது

நி. ஆ. 11அ:5

படிவத்தில் கலெக்டர் அலுவலகத்தில் எழுதி வைத்து வர வேண்டும். அவ் வாறே ஒவ்வொரு தாலுகாவிற்கும் சம்பந்தமானவற்றிற்கு மாத்திரம் பதிவேடு ஒன்று அந்தத் தாலுகா அலுவலகத்தில் எழுதிவைத்து வரவேண்டும். உடன்படிக்கைகளின் பதிவேட்டைக் கொண்டும் உண்மையாக வசூலான தொகைகள் பற்றிய விவரங்களைக் கொண்டும் கேட்பு, வசூல், நிலுவைப் பதி வேடு தயாரிக்கப்பட வேண்டும். தாலுகா கேட்பு, வரவு, நிலுவைப் பதி வேட்டை அந்த அந்த நாள் வரை சரிவர எழுதி வைக்கப்பட்டு வரும் பொருட்டு ஒவ்வொரு உடன்படிக்கையின் ஒவ்வொரு பிரதியையும் கலெக் டர்கள் தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். இவ்வுடன்படிக்கைகளின் பிரதிகள் இறுதி நிலையில் தாலுகா அலுவலகத்தில் கோவையாகச் சேர்க்கப் பட்டு, கிராம வரிசையில் ஒரு அட்டவணையுடன் ஒரு நிலையான குறிப்புக் கோப்பாக அமையும்.

பொறியியல் பணித் துறை அலுவலர்களும் வருவாய்த்துறை அலுவலர் களும் தங்கள் சுற்றுப் பயணங்களில் எத்தனை உரிமங்கள் சம்பந்தமான வேலை களைப் பார்வையிட முடியுமோ, அவற்றையெல்லாம் பார்வையிட்டு, உடன் படிக்கையின் நிபந்தனைகள் மீறப்படாமல் இருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் பொறுப்பில் இருக்கும் நீர்ப்பாசன ஆதாரங் களிலிருந்து அனுமதியில்லாமல் தண்ணீர் எடுக்கப்பட்டிருந்தால் அல்லது தண்ணீர் திருப்பி உபயோகப்படுத்தப்பட்டிருந்தால் அவ்வாறு செய்யப் பட்டதைக் கண்டு பிடிப்பதும் அவர்கள் கடமையாகும். அத்தகைய வற்றைத் தாசில்தார்களும், பிரிவு அலுவலர்களும் உடனுக்குடன் கண்டு பிடித்து கலெக்டருக்கேனும் நிர்வாகப் பொறியாளருக்கேனும் தக்கவாறு அறிக்கை செய்வதற்கு முக்கிய பொறுப்பாளர்களாகிறார்கள். இவ்வாறு கண்டுபிடிப்பதை எளிதாக்கும் பொருட்டு ஒவ்வொரு உடன்படிக்கையின் சாராம்சத்தையும் கிராம அடங்கலின் குறிப்புரைக் கட்டத்தில் சம்பந்தப்பட்ட ஆதாரத்தின் நில அளவை எண்ணின் எதிரில் பதிவு செய்யப்படுமாறு தாசில்தார் கவனிக்க வேண்டும். வருவாய் ஆய்வாளர் அவற்றைப் பதிவு செய்து கீழே கொடுத்திருக்கும் படிவத்தில் உறுதிமொழி அளிக்க வேண்டும்—

"பெயர் உடன் உடன்படிக்கை (காரியத்திற்கு)
தண்ணீர் உபயோகிப்பதற்காக நிறைவேற்றப்பட்டது.

(கலெக்டர் ஆணை என் தேதி.)

கையொப்பம்

தேதி.

வருவாய் ஆய்வாளர்."

உடன்படிக்கை எழுதிக் கொடுக்க அல்லது அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுத்ததற்கு உரிமை ஊதியம் செலுத்த தண்ணீர் எடுப்பவர் மறுப்பாளனின்

நி. ஆ. 11அ:6]

அல்லது உரிமம் மறுக்கப்பட்ட பின்னரும் அரசாங்க ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டிருப்பாரானால், இயன்ற வரையில் நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் அல்லது இந்திய தண்டனை விதித் தொகுப்பின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. தல ஆட்சிக் கழகங்களால் நகரங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படுதல்.— நகரங்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்காகத் தல ஆட்சி கழகங்கள் செய்து கொள்ளும் விண்ணப்பங்களில் அரசாங்கத்தின் ஆணை பிறப்பிக்கப் பெறுவதற்காக அவை மேலே அனுப்பப்பட வேண்டும். நடைமுறையில் இருக்கும் திட்டத்தின் கீழ் தண்ணீர் வழங்கப் பெறுவதற்கு இது வரையிலும் தீர்வை விதிக்காமலிருந்தால் புதிதாகத் தீர்வை விதிக்கத் தக்கதில்லை. ஆனல், வருங்காலத்தில் எப்பொழுதாவது இப்பொழுதுள்ள திட்டங்களுக்குரிய மேம்பாடுகள் சம்பந்தமாக அல்லது புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படுவது சம்பந்தமாக நீர்ப்பாசன ஆதாரங்களிலிருந்து அதிக அளவில் தண்ணீரைத் திருப்பிப் பயன்படுத்த வேண்டுமானல், அதன் நிமித்தமாகத் தீர்வை விதிக்க வேண்டியிருக்குமா என்பதையும், தீர்வை விதிக்க வேண்டியிருக்குமானல் அந்த தீர்வை எந்த அளவில் விதிக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தை அரசினர் வகித்துள்ளார். குறிப்பாகத் தீர்வை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால் அன்றி, தல ஆட்சிக் கழகங்கள் ஒவ்வொரு 1,000 கன கெஜத் தண்ணீருக்கும் ஒரு ரூபாய் வீதம் செலுத்து மாறு தீர்வை விதிக்க வேண்டும். அரசாங்கப் பாசன ஆதாரத்திலிருந்து தல ஆட்சிக் கழகம் கட்டணமின்றித் தண்ணீர் பெற்றுக்கொண்டு மனை வாழ்க்கை உபயோகமல்லாதவற்றிற்குத் தண்ணீரை விற்பனை செய்யுமானல், ஒவ்வொரு ஆண்டிலும் அத்தகைய விற்பனையிலிருந்து கிடைக்கக் கூடிய மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்கை அத் தல ஆட்சிக் கழகம் அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும். ஆனல் தல ஆட்சிக் கழகம் எந்த ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்கிறதோ அந்த ஆதாரம் சொந்தமானது அன்றென்றுல் அல்லது அந்த ஆதாரம் அரசாங்கம் நிலம் அல்லாத நிலத்திலிருந்தால், அது அரசாங்க ஆதாரத்தின் கருவினுல் தண்ணீர் வரப் பெற்றிருந்தபோதிலும் அதிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளப் படுவதற்குத் தீர்வை விதிக்கப்பட மாட்டாது. நகராட்சிகளில் தண்ணீர் வழங்குவதற்குக் கட்டணம் முற்றிலும் செலுத்தப்படாமலிருப்பதற்கு அல்லது அக் கட்டணத்தில் ஒரு பாகம் மட்டும் செலுத்துவதற்குரிய விதிவிலக்கு இருக்குமானலும், அத்தகையவற்றையும் முன் பத்தியில் கண்டுள்ள உடன்படிக்கைப் பதிவேட்டில் ஒரு தனித் தலைப்பில் காட்டவேண்டும். இந்த உள் தலைப்புடன் பதிவேடு ஒன்றும் கேட்பு, வசூல், நிலுவைப் பதிவேடு ஒன்றும் மாவட்டத்தின் முழுமைக்கும் கலெக்டரின் அலுவலகத்தில் எழுதி வைத்து வர வேண்டும்.

(1934-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி, 1297-I ச எண், அ.ஆ. அச்சு.பா.)

(1934-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6-ஆம் தேதி, 87 என், வ.து.வா.செ. அச்சு).

7. இருப்புப் பாதைக் காரியங்களுக்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ளுதல்.— பொறியியல் பணித் துறையினர் பொறுப்பில் இருக்கும் அரசாங்க ஆதாரத்திலிருந்து இருப்புப் பாதைக்குத் தண்ணீர் வேண்டுமானால் இருப்புப்பாதைத் துறையினரிடமிருந்து மேற்பார்வை பொறியாளர் நிபந்தனைகள் அடங்கிய I (1) ஆவது இணைப்பின் 5-ஆவது படிவக் குறிப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்தகைய குறிப்புகளில் ஒவ்வொன்றையும் கலெக்டர் அரசினரின் சார்பாக ஒப்புக்கொள்ள வேண்டும். வருவாய்த் துறையினர் பொறுப்பில் உள்ள ஆதாரங்களைப்பற்றிய குறிப்பைக் கலெக்டர் கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். அதற்கு முத்திரை வரி செலுத்தத் தேவையில்லை. அதைப் பத்திரப் பதிவு செய்யவும் வேண்டியதில்லை. இதன் தீர்வை வீதம் பத்து ஆண்டுகளின் இறுதியில் மாற்றியமைக்கப்படுவதற்குட்படும் தீர்வை செலுத்த வேண்டியதில்லை என அரசினரால் குறிப்பாக விதி விலக்களிக்கப்பெற்றிருந் தாலன்றித் தொழில் நிலையங்களுக்கு விதிக்கத்தக்க வீதத்திலேயே இருபபுப் பாதை துறையினர் செலுத்த வேண்டியதற்கும் தீர்வை விதிக்கவேண்டும். ஆனால் ஆண்டிற்கு 100 ரூபாய் குறுமத் தீர்வை வீதம் இவற்றிற்குப் பொருந்தாது. இருப்புப்பாதைத் துறையினர் செலுத்த வேண்டிய தீர்வைகள் நிர்வாகப் பொறியாளர் அளிக்கும் அறிக்கையிலிருந்து அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவரால் ஒவ்வொரு அரை ஆண்டிலும் கணக்கில் பற்று வைத்துச் சரிக்கட்டப்படும். இவற்றை I (1) ஆவது இணைப்பின் 10 ஆவது படிவத்தில் குறிப்பிட்ட உடன்படிக்கைப் பதிவேட்டில் எழுதிக் கொள்ள வேண்டும். இத் தலைப்புள்ள பதிவேடு ஒன்றும் கேட்பு, வசூல், நிலுவைப் பதிவேடு ஒன்றும் மாவட்ட முழுமைக்கும் கலெக்டரின் அலுவலகத்தில் எழுதி வைத்து வர வேண்டும்.

8. பொது-அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்பப்படும் ஆண்டு விவர அறிக்கை.—கலெக்டர்களும், நிர்வாகப் பொறியாளர்களும் ஒவ் வொரு ஆண்டும் மே மாதம் முதல் தேதிக்குள் முந்திய ஆண்டில் தங்கள் தங்கள் மாவட்டங்களிலும் கோட்டங்களிலும் உள்ள தல ஆட்சிக் கழகங்கள், இருப்புப் பாதைத் துறைத் தொழில் நிறுவனங்கள் முதலியவை அரசாங்க ஆதாரங்களிலிருந்து எவ்வளவு அளவு தண்ணீர் எடுத்துக்கொண்டன என்பதைப்பற்றிய கூட்டு விவர அறிக்கை அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். அதிலே ஒவ்வொரு நிறுவனமும் தண்ணீர் எடுத்துக்கொண்ட அளவு, அதற்காகச் செலுத்த வேண்டிய தொகை, வசூலித்த தொகை, முந்தின மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியில் பாக்கி இருந்த தொகை ஆகியவை குறிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் அக்கூட்டு விவர அறிக்கையுடன் அவ்வறிக்கை ஆண்டில் அரசாங்க ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளப்பட்டவற்றில் விதிக்கப்படாதது வேறொன்றுமில்லை என்ப தாக நிர்வாகப் பொறியாளரும் கலெக்டரும் கையொப்பமிட்டசான்றிதழ் ஒன்று அனுப்பவேண்டும். தீர்வை விலக்குப் பெற்றவையும் அவ்விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விவர அறிக்கையை கீழே கொடுக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கவேண்டும்

நி.ஆ. 11அ:8—9]

ஆண்டில் மாவட்டத்தின் அரசாங்க ஆதாரங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்ட தொழில் நிறுவனம் முதலியவற்றின் விவரங்களைக் காட்டும் அறிக்கை.

(1) வரிசை எண்.	(2) உரிமம் பெற்றவரின் பெயர்.	(3) எந்த ஆதாரத்திலிருந்து தண்ணீர் திருப்பப்பட்டது ஆதாரமும் அந்த ஆதாரத்தின் திற்கு என்பதும்.	(4) எந்த நோக்கத்திற்காக தண்ணீர் எடுக்கப்பட்டது அதன் குறிக்க.	(5) எடுக்கப்பட்ட தண்ணீரின் அளவு. உரிமை ஊதியங்கள்.		(6) கேட்பு.	(7) வசூல்.	(8) நிலுவை.	(9) குறிப்புரை (தீர்வை விலக்களிக்கப் பெற்றிருந்தால் அதற்கு இங்கே விலக்கு அளிக்கப் பெற்றதென்று குறிக்க).
				ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.			

இந்த விவர அறிக்கை ஆண்டில் அரசாங்க ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டவற்றில் தீர்வை விதிக்கப்படாதவை வேறொன்றுமில்லை என்பது சான்றுரை பகருகிறேன்.

கையொப்பம்.

கையொப்பம்.

நிர்வாகப் பொறியாளர். கலெக்டர்.

(1951-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ஆம் தேதி, 1474 என், அ.ஆ.வரு.)

(1951-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி, 22 என், வ.து.வா.செ. அச்சு).

(1956-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 22-ஆம் தேதி, 3200 என், அ,ஆ,கை. ப.)

(1956-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதி, 1327 என், வ.து. வா.சை.ப.)

பிரிவு IV—மின்சார வலன் உண்டாக்குதல்.—

9. **மின்சார வலன் உண்டாக்குவதற்குப் பெற வேண்டிய உரிமங்கள்.—** அரசாங்கப் பாசன ஆதாரங்களிலிருந்து தண்ணீரைத் திருப்பி மின்சாரம் உண்டாக்குவதற்காக உரிமங்கள் வழங்கவேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்கள் மின்சாரத் தலைமைப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும். மற்ற அதிகாரிகளும் இவ்வகையில் தங்களிடம் வரப்பெறும் விண்ணப்பங்களையும் அவருக்கே அனுப்பிவிடவேண்டும். தலைமைப் பொறியாளர், விண்ணப்பத்தை வரப் பெற்றுக்கொண்டவுடன், தாம் அதை ஆராய்ந்து பார்த்து,

[நி. ஆ. 11அ:9, 12:1

வரைவு உரிமத்தைத் தயாரித்து உரிமத்திற்குச் செலுத்தவேண்டிய உரிமை ஊதியம் எவ்வளவு என நிர்ணயம் செய்து தம் குறிப்புரைகளுடன் கலெக்டர் வழியாகவும் வருவாய்த் துறை வாரியம் வழியாகவும் அரசாங்கத்திற்கு மேலனுப்புவர். அரசாங்கப் பாசன ஆதாரம், ஒதுக்கக் காட்டில் இருக்கு மானுல், வனத்துறைத் தலைவரையும், அந்த ஆதாரம் மற்ற இடங்களில் இருக்குமானுல், அதில் மேற்பார்வைப் பொறியாளருடன் கலெக்டர் கலந்து ஆலோசனை செய்து உரிமம் வழங்குவது நகுதியுடையதாகுமா என்பதைப் பற்றி அவர் தமது கருத்தைத் தெரிவிப்பார். பின்னர் அதில் அரசினரின் ஆணையைப் பெறுவதற்காக அது வருவாய்த் துறை வாரியத்தால் மேலனுப்பப் படும் (1)-ஆவது இணைப்பிலுள்ள 6 ஆவது படிவத்தில் உரிமம் வழங்கப்படும். வருவாய்த் துறையினர் அல்லது பொறி இயல் பணித் துறையினர் பொறுப்பில் இருக்கும் ஆதாரங்களுக்குத் தகுந்தவாறு, கலெக்டர் அல்லது மேற்பார்வைப் பொறியாளர் உடன்படிக்கை எழுதிக் கொடுப்பார். உரிமை ஊதியம் ஒவ் வொரு அரை ஆண்டிற்கும் முன் பணமாகச் செலுத்தத்தக்கது; அது விதிக்கப் படவேண்டிய அளவு உரிமைப் படிவத்தின் 4 ஆவது பிரிவில் காட்டப்பட் டிருக்கிறது. நீர்ப்பாசன ஆதாரம் எந்தத் துறையினர் பொறுப்பிலிருந்த போதிலும் உரிமை ஊதியங்கள் வருவாய்த் துறையினரால் வசூலிக்கப்பெற்று "XXXVI பலவகைத் துறைகள்" என்ற தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும். ஆனுல் ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் உரிமம் பெற்றவர்களிட மிருந்து வரவேண்டிய தொகைகளைப் பற்றி ஒவ்வொரு ஆண்டு மார்ச்சு மாதமும் செப்டெம்பர் மாதமும் முடிவதற்குள், மின்சாரத் தலைமைப் பொறி யாளர் அறிவிக்கவேண்டும். கொடுக்கப்பட்ட உரிமங்களின் விவரங்களைக் காட்டும் பதிவேடு ஒன்று I (1) ஆவது இணைப்பில் 10 ஆவது படிவத்தில் கலெக்டர் அலுவலகத்தில் எழுதி வைத்து வர வேண்டும்.

(1934-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி, 1062 என், அ.ஆ.வரு.).

(1934-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் தேதி, 72 என், வ.து.வா.செ. அச்சு).

(1954-ஆம் ஆண்டு மே மாதம் 31-ஆம் தேதி, 1368 என், அ.ஆ.வரு.கை. ப.).

(1956-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25-ஆம் தேதி, 2928 என், அ.ஆ.வரு. கை.ப.).

(1956-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ஆம் தேதி, 3200 என், அ.ஆ.வரு. கை.ப).

(1956-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதி, 1327 என், வ.து. வா.செ.கை.ப.).

12. ஜமாபந்தி—(1) ஜமாபந்தியின் நோக்கம்.—நிலையாக வரியமைந்த ஜமீன்களிலும், முழு இனும் கிராமங்களிலும், சிறு இனும்களிலும், அரசினருக்குச் சேரவேண்டிய நிலத் தீர்வை முழுவதும் உட்பட்ட வருவாய் இனங்களெல்லாம் சரியாக நிர்ணயிக்கப்பட்டுக் கணக்குகளில் எழுதப் பெற்றுள்ளனவா என்பதையும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆட்சி முறைக்கும் வேண்டியவையெனக் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் தக்க முறையில் தரப்பட்டுள்ளனவா என்பதையும் நிச்சயம் செய்துகொள்ளும் நோக்கத்துடன், சாமப் பதிவேடுகளையும், தாலுகாப் பதிவேடுகளையும் விரிந்த வகையில்

நி. ஆ. 12:2]

ஆழ்ந்து ஆய்ந்து பார்ப்பது ஜமாபந்தியின் நோக்கமாகும். அரசினர் எதிர் பார்க்கும் அளவில் எல்லாவற்றிலும் முக்கியமாகப் பயிராய்வு செய்வது, புறம் போக்கு நிலங்களைக் கவனமாகப் பார்வையிடுவது, ஆக்கிரமிப்புகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், நில ஒப்படைகள், நில உரிமை விட்டுவிடுதல், நிலங்களை மாற்றுவது ஆகிய இவற்றில் ஒழுங்காகவும் உடனடியாகவும் முடிவு செய்வது, பணக் கணக்குகளையும், நீர்வை தள்ளிக்கொடுக்கப்படுவதற்குச் செய்யப்படும் கோரிக்கைகளையும் ஆராய்வு செய்வது நிலத் தீர்வைகள் எவ் வெப்போது வசூலிக்கத்தக்கனவோ, அவ்வப்போது அவற்றை வசூலிப்பது, [2]கிகையாகச் செலுத்தின தொகைகளைத் திருப்பிக் கொடுப்பது,[1] இவற்றை யெல்லாம் தாசில்தாரும் அவரது சார்நிலையில் தாலூகாவில் அதிகாரம் வகிப் பவர்களெல்லாரும் செய்திருக்கிறார்களா என்பதைக் கவனித்துப் பார்க்க இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(2) எந்த அலுவலரால் ஜமாபந்தி நடத்தப்பட வேண்டும்.—பொதுவாக கலெக்டர் தமது மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தாலூகா ஜமாபந்தியைக் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்குள் ஒரு தடவையாவது நடத்தவேண்டும். பத்து தாலூகாக்களுக்கு அதிகமான தாலூகாக்கள் உள்ள மாவட்டத்தின் கலெக்டர் ஒவ்வொரு ஆண்டிலும், குறைந்தது இரண்டு தாலூகா ஜமாபந்தியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.[1] ஒவ்வொரு கோட்ட ஆட்சியாளரும் இரண்டு தாலூகாக்களுக்கு மேற்படாத அளவில் ஜமாபந்தியை நடத்த வேண்டும். ஏதாவதொரு கோட்டத்தில் இரண்டு தாலூகாக்களுக்கு அதிகமான தாலூகாக்கள் இருக்குமானால் இரண்டு தாலூகாக்களின் ஜமா பந்தியைச் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர் நடத்தவும், மற்றத் தாலூ காகளின் ஜமாபந்தியைக் கலெக்டர் தாமாயினும் மற்றக் கோட்ட ஆட்சியாளர் களில் ஒருவராயினும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தலைமை யிடத்துச் சப் கலெக்டர் அல்லது நேர் உதவி அலுவலர் உள்ள மாவட்டங்களில் கலெக்டர் இவ்வலுவலரை ஒரு தாலூகா ஜமாபந்தியை நடத்துமாறு செய் விக்கலாம். ஆனால் இவ்வாறு ஜமாபந்தி நடைபெறும்போது, கலெக்டர் தாமே ஜமாபந்தி நடத்துவாரெனில், ஜமாபந்தி நடத்துவதில் அவரது அலுவலகப் பணியாளர்கள் அவருக்கு எவ்வாறு உதவி செய்வார்களோ அவ் வாறே ஜமாபந்தி நடத்தும் அலுவலருக்கும் கலெக்டரது அலுவலகத்துப் பணியாளவர்கள் உதவி செய்ய வேண்டும்.

---

[1] 1908-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி, 118 எண். வா.து.வா.செ.

[2] 1911-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24-ஆம் தேதி, 2245 எண். அ.ஆ.

1931-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ஆம் தேதி, 475 எண், அ.ஆ.வரு.

1931-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 11-ஆம் தேதி, 582 எண், வ.து.வா.செ. பலவ.

1957-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ஆம் தேதி, 220 எண், அ.ஆ.வரு.

1957-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் தேதி, 169 எண், வ.து.வா.செ. பலவ.

[நி. ஆ. 12:2

உரிமையை விட்டு விடுதல், மாற்றுதல்கள், நில ஒப்படைகள் அரசாங்க நிலங்களில் அனுமதியில்லாமல் செய்யப்படும் ஆக்கிரமிப்பு அல்லது அவற்றில் விவசாயம் செய்தல், அரசாங்க நீர்ப்பாசனத்தை உபயோகித்தல், தீர்வையைத் தள்ளிக்கொடுக்குமாறு செய்துகொள்ளும் கோரிக்கைகள் ஆகிய இவற்றைச் சாதாரண முறையில் முடிவு செய்ய அதிகாரம் வகிக்கும் அலுவலர்கள், இவற்றை ஜமாபந்தி நடைபெறுவதற்கு முன்னதாகவே முடிவு செய்துவிட வேண்டும். விசாரணை செய்து அல்லது இடத்தை நேரில் பார்வையிட்டு முடிவு செய்யப்படவேண்டியவற்றில், விசாரணை செய்யும் வரையில் அல்லது இடத்தைப் பார்வையிடும் வரையில் இவற்றில் ஆணை பிறப்பிக்கக்கூடாது. உரிமை விட்டுவிடுதல் பதிவு மாற்றுதல்கள் ஆகிய இவற்றில் பிறப்பிக்கப்படும் ஆணைகளை எதிர்த்து மேல் முறையீடு செய்ய இயலாது. நில ஒப்படையில் மேல் முறையீடு ஒன்று மட்டுமே செய்துகொள்ள அனுமதி உண்டு.

2 அனுமதியின்றி அரசாங்க நிலங்களில் விவசாயம் செய்து அநுபோகம் செய்யப்படுவதில் ஆணை பிறப்பிக்கத் தாசில்தாரும் துணைத் தாசில்தாரும் செலுத்தும் அதிகாரம் 26-ஆவது நில ஆணையின் 4 முதல் 7 வரையிலும் உள்ள பத்திகளில் அவர்களுக்காக வகுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை அனுசரித்திருக்க வேண்டும். இவற்றில் அவர்களுக்குள்ள அதிகாரமும், அரசாங்க பாசன ஆதாரத்தின் தண்ணீர் உபயோகிப்பதில் ஆணைகள் பிறப்பிப்பதற்கு அவர்களுக்குள்ள அதிகாரமும், அவர்களின் மேலதிகாரிகள் செலுத்தும் அதிகாரத்திற்குட்பட்டவையாகையால், பின்பு கிடைக்கத்தக்க தகவல்களைக் கொண்டு அவ்வலுவலர்கள் பிறப்பித்த ஆணைகளை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவ்வாறே ஜமாபந்தி அலுவலர் மாற்றியமைக்கலாம்.

தீர்வையைத் தள்ளிக் கொடுக்குமாறு செய்யப்படும் விண்ணப்பங்களில் கோட்ட ஆட்சியாளர்கள் பிறப்பிக்கும் ஆணைகள், அவை அந்த அந்தக் கிராம ஜமாபந்தியில் உறுதி செய்யப்படும் வரையில், அல்லது அவ்வாணைகளின் சாராம்சம் அங்குக் கூடியுள்ள எல்லோருக்கும் விளக்கம் செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு ஆட்சேபணைகள் எவையேனும் இருக்குமானால் அவற்றை ஜமாபந்தி அலுவலர்கள் விசாரித்து முடிவு செய்யும் வரையில் இறுதியானவை எனக் கருதத்தக்கவையல்ல.

1886-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி, 1827 என், வ.து.வா.செ.

1904-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி, 157 என், வ.து.வா.செ.

1 1915-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ம் தேதி, 678 என், அ.ஆ.வரு.

1 1915-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ஆம் தேதி, 105, என், வ.து.வா.செ.நிர்

1931-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் தேதி, 1615 என், வ.து.வா.செ.பல.

1916-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி, 110 என், வ.து.வா.செ.

2 1916-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் தேதி, 2051 என், அ. ஆ.வரு.

2 1916-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதி, 261 என், வ.து.வா.செ.

1931-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி, 1050 என், அ.ஆ.வரு.

தி. ஆ. 12:3]

(3) ஜமாபந்தி நடத்த வேண்டிய இடம்.— [2] சாதாரணமாக, ஜமாபந்தி தாலுகாவின் தலைமை இடத்தில் நடத்த வேண்டும். [2] சார்நிலைத் துணைத் தாசில்தார் பொறுப்பிலிருக்கும் உள் தாலுக்காக்கள் உள்ள மாவட்டங்களில், உள் தாலுகாவின் ஜமாபந்தியும் தாலுகாவின் தலைமையிடத்திலே நடத்த வேண்டும். உள் தாலுகாவிற்குச் சேர்ந்த கிராமங்களின் கணக்குகளை ஆய்ந்து பார்ப்பதற்குத் தேவையான தாலுகா பதிவேடுகளைத் துணை தாசில்தார்கள் தாங்களே எடுத்துச் சென்று அவற்றை ஜமாபந்தி முடியும் வரையிலும் தங்களிடமே வைத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட சந்தர்ப்பங்களில், தாலுகா அல்லது உள் தாலுகாவின் ஜமாபந்தி அதன் தலைமையிடமல்லாத வேறொரு இடத்தில் நடத்த வேண்டியிருக்குமானால், அவ்வாறு நடத்துவதற்கு வருவாய்த்துறை வாரியத்தினிடமிருந்து அனுமதி பெற வேண்டும். [3] ஜமாபந்தியின் நிகழ்ச்சி நிரல் மாவட்ட ஆசிரியரின் சாமர்த்தியத்தில் வெளியிடப்பட வேண்டும். ஜமாபந்தி நாள் இன்னதென குறிப்பிடப்பட்ட தேதிக்கு ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு முன்பாக எந்தத் தினத்தில் ஜமாபந்தி நடக்கும் என்பதை அந்த அந்தக் கிராமத்தில் தமுக்கடிப்பினால் தெரிவிக்கவேண்டும். தாசில்தாரும், துணைத் தாசில்தாரும் ஜமாபந்தி அலுவலரும் தாங்கள் கச்சேரி நடத்தும் இடங்களில் எந்த வரிசையில் கிராமங்களின் ஜமாபந்தி நடைபெறும் என்பதைக் காட்டும் பட்டியல் சுலபப் பொதுவாய் எல்லோரும் தெரிந்து கொள்ளுமாறு வெளிப்படையாக ஒட்டிவைக்க வேண்டும். [3] [4]¼ மிகையாகச் செலுத்தப்பட்ட தொகை அந்த அந்தக் கிராமத்தின் சம்பந்தப்பட்ட பட்டாவில் வரவு வைக்க இயலாதென்றால் அத் தொகையைத் திரும்பப் பெற உரிமை கொண்டாடுபவரெல்லாரும் ஜமாபந்தி அலுவலரின் முன்பாக வந்து தங்கள் உரிமையைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்பதாகவும் அவ்வாறு செய்யத் தவறினால் மிகையாகச் செலுத்திய தொகை கணக்குகளிலிருந்து நீக்குபடி செய்யப்படுவதற்குட் படும் என்பதாகவும் அதே சமயத்தில் அறிவிக்கை செய்ய வேண்டும். [4]

1937-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ஆம் தேதி, 286 என், அ.ஆ.கை.ப.

1937-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ஆம் தேதி, 12 என், வ.து.வா.செ. அச்சு.

1938-ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் தேதி, 1270 என், அ.ஆ.வரு.

[2] 1925-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13-ஆம் தேதி, 884 என். அ.ஆ.வரு.

[3] 1927-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ஆம் தேதி, 2037 என், அ.ஆ.வரு.

1938-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ஆம் தேதி, 110 என், வா.தூ.வா. செ. அச்சு.

1925-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13-ஆம் தேதி, 34 என், வ.து.வா.செ.

[3] 1927-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ஆம் தேதி, 3165 என், வ.து.வா. செ. பலவ.

[4] 1926-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13-ஆம் தேதி, 47 என், வ.து.வா.செ.

மாவட்டக் கலெக்டரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரலை அனுசரித்து ஜமாபந்தி நடத்தப்படத்தக்கதாகும். நிகழ்ச்சி நிரலை வகுக்கும் போது கீழ்க்கண்ட விதிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். இயன்ற வரையில் ஒரு தாலுகாவின் அல்லது உள் தாலுகாவின் ஜமாபந்தியை ஒரே தொடர்ச்சி

[நி. ஆ. 12:4–5

நிலையில் முடித்துவிடவேண்டும். இருப்பினும் ஜமாபந்தியை இரண்டு நிகழ்ச்சிகளில் நடத்துவதற்கு நியாயமான சூழ்நிலைகள் இருக்குமெனில், கலெக்டரின் அனுமதியுடன் அவ்வாறு செய்யலாம். ஜமாபந்தி அலுவலர் தணிக்கைக்கு உண்மையில் ஏறத்தாழ அவசியமான பத்து நாட்களும், மேலும் ஜமாபந்தி அலுவலரால் ஆய்ந்து பார்க்கப்படுவதற்காக ஜமாபந்தி கணக்குகளைத் தயார் செய்வதற்கு அவ்வாறு தயார் செய்யும் பணியாளர்களுக்குக் கூடுதலாக ஏறக்குறைய ஒரு வார காலமும் அனுமதிக்க வேண்டும். ஒவ்வொரு தாலுகாவிலும் செய்து முடிக்க வேண்டிய வேலையை அனுசரித்து அவசியமான கால வரையைக் கலெக்டர் நிர்ணயிப்பார்.

1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதி, 34 எண், வ.து.வா.செ. அச்சு.

(4) ஜமாபந்திக்குக் கிராமக் கணக்கர்களின் வருகை.—கிராம அலுவலர்கள், குறிப்பாகக் கிராமக் கணக்கர்கள் தங்கள் கிராமத்தை விட்டுச் செல்ல அவசியமேற்படின் இயன்ற வரையில் எவ்வளவு குறைந்த காலத்திற்கு அவ்வாறு கிராமத்தை விட்டுச் செல்ல அனுமதிக்கத்தக்கதோ அவ்வளவு காலத்திற்கு மட்டுமே அவ்வாறு அவர்கள் இருக்கத்தகும் என்பது மிகவும் முக்கியமாகும். கிராமக் கணக்கர்கள் ஜமாபந்தி முகாம் இடத்திற்கு வருவதற்கு முன்னதாகவே, கூடுமான வரையில் கணக்குகளை முடிவு செய்யும் பொருட்டு வசூலிக்க வேண்டிய அரசாங்க வருவாய் சம்பந்தமானவற்றிற்கெல்லாம் அறிக்கைகள், தாமதமின்றி ஆண்டு முழுவதிலும் வரப் பெற்று அவற்றை முடிவு செய்யும் வகைகளில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய கணக்குகளை ஜமாபந்தி காலம் வரையில் முடிவு செய்யாமல் ஒன்று சேர்த்து வைத்துக்கொள்ளக் கூடாது. அவ்வாறு கணக்குகளைச் சேர்த்து வைப்பதால் மூன் மாதங்களிலேயே தயாரித்திருக்க வேண்டிய கணக்குகள் எழுதி முடிக்கப்படுவதற்காகக் கிராமக் கணக்கர்களைத் தாலுகாக் கச்சேரிகளில் வாரக்கணக்கில் நிறுத்திவைக்க வேண்டிய அவசியம் நேரிடும். ஜமாபந்திக்கு முன்னதாக நடவடிக்கை எடுக்க இயலாத இனங்களையும் ஜமாபந்திக்குப் பின்னர் அறிவிக்கப்படும் இனங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட தொகையின் விவரப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். [(5)-ஆவது பத்தியைக் காண்க.]

1901-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் தேதி, 1 எண், வ.து.வா,செ.

1934-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ஆம் தேதி, 117 எண், வ.து,வா.செ. அச்சு.

(5) ஜமாபந்தி முடிவு செய்வதற்குரிய காலம்.—பசலி முடிவடைவதற்கு முன்னதாக ஒவ்வொரு தாலுகாவின் ஜமாபந்தியையும் முடிவு செய்துவிட வேண்டும். தாலுகாவில், விதிக்கப்பட்ட தொகையின் விவரப்பட்டியல்களைப் பசலி முடிவடைந்த பதினைந்து நாட்களுக்குள் பூர்த்தி செய்துவிட வேண்டும். கிராமக் கணக்குகள் நடைமுறை நூலில் கிராம ரொக்கக் கணக்குகளை முடிவு செய்வதற்கு வகுக்கப்பட்டுள்ள அறிவுரையிலுள்ளவாறன்றி ஜமாபந்தி அலுவலரின் அங்கீகாரத்தைப் பெறுமல் அல்லது அவர் மாவட்டத்தில் இல்லையெனில், கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை எழுத்து வடிவில் முன்னதாகப் பெறுமல், ஜமாபந்தி அலுவலர் தாலுகாவை விட்டுச் சென்ற பின்னர், அவர் ஏற்றுக் கொண்ட கணக்குகளை மாற்றக் கூடாது. பசலி முடிந்த ஒரு மாதத்

நி. ஆ. 12:6–7]

திற்குள் விதிக்கப்பட்ட தொகைகளின் பொது விவரப் பட்டியல் மாவட்ட முழுமைக்குமாக இருக்கும் பொருட்டு, அதைத் தாலுகா விவரப் பட்டியல் களிலிருந்து நிரட்டித் தயார் செய்ய வேண்டும்.

1887 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி 51 வது வா. செ

(6) ஜமாபந்தி அலுவலர்களுக்குரிய அறிவுரைகள்.—கீழ்க்காணும் பத்தி களில் ஜமாபந்தி அலுவலர் தாமே நேரில் முக்கியமாக கவனிக்கவேண்டியவை சுருக்கமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. அரசுக்குடி நிராமங்களில் கணக்கு களைத் தனித்தனியாக விவரமாகப் பார்த்து தணிக்கை செய்வதற்கு உதவும் அறிவுரைகள் II ஆவது இணைப்பில் உள்ளன. ஜமீன் நிராமங்கள் சம்பந்த மான அறிவுரைகள் I (அ) ஆவது இணைப்பில் உள்ளன. நிராமக் கணக்கர்களின் பொறுப்பும் வருவாய் ஆய்வாளர்களின் பொறுப்புகளும் இவ் வறிவுரைகளில் முக்கியமான இடம் பெற்றிருக்கின்றன. இருப்பினும், தாலுகாவின் நிலைமைக்குத் தாசில்தாரே நேரான பொறுப்பாளர் என்ப தையும். தாலுகாவில் முக்கியமான நிர்வாக அலுவலாக அவர் இருப்பதால், அவர் தமது சார்நிலையில் வருவாய்த் துறையிலுள்ள எல்லாப் பணியாளர் களின் நடத்தைக்கும் பெர்றுப்பாளர் என்பதையும் ஜமாபந்தி அலுவலர் மறந்துவிடக் கூடாது. சார்நிலை வருவாய்த்துறை அலுவலர்கள் ஆற்றிய வேலை முழுவதையும் மேற்பார்வை செய்வதும், அவர்கள் புரிந்த வேலையை இடையருமல் தணிக்கை செய்வதுமாகிய கடமைகள் எல்லாவற்றையும் தாசில் தார் பசலி ஆண்டில் நிறைவேற்றியுள்ளாரா என்பதைக் கவனிப்பது ஜமா பந்தி அலுவலரின் கடமையாகும். தாலுகாவில் தாசில்தாருக்கு அடுத்த நிலை யில் உள்ள முக்கிய அலுவலர் தாலுகாந் துணைத் தாசில்தார் ஆவர். அத் தகைய துணைத் தாசில்தார் இல்லாத இடத்தில், நிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்து அவற்றைச் சரியாகத் தயார் செய்வதற்குத் தாலுகாத் தலைமைக் கணக்காளர் முக்கியமான பொறுப்பு வகிக்கிறார். இக்கடமைகள் திறமையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை ஜமாபந்தி அலுவலர் கவனிக்கவேண்டும்.

1934-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி, 128 எண். வ.து.வா. செ. அச்சு.

1887 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி, 51 எண், வ.து.வா.செ

(1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் தேதி, 220 எண், அ.ஆ.வரு.)

(1957 ஆம்ஆண்டு பிப்ரவரிமாதம் 7 ஆம்தேதி, 169 எண், வ.து.வா.செ.பலவ.)

(7) பார்வையிடும் வேலையை ஆய்ந்து பார்த்தல்.—தாலுகா அலுவலர் கள் தாங்கள் உண்மையில் நேரில் பார்வையிட்டவற்றைப் பற்றிக் கணக்கு களில் சான்றிட்டிருக்கிறார்களா என்பதை ஜமாபந்தி அலுவலர் கவனிக்க வேண்டும். உரிமை விட்டுவிடப் பட்டவை, ஆக்கிரமிப்புகள், நில ஒப்படை கள், தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட்டவை, நிலையான குத்தகைகள் ஆகிய இவற்றையெல்லாம் வருவாய் ஆய்வாளர் பார்வையிட வேண்டும். வருவாய் ஆய்வாளர் பார்வையிட்டவற்றில் ஒரு கணிசமான விகிதத்தைத் தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் பார்வையிட வேண்டும். கணக்கிற்குக் கொண்டுவர நிராமக் கணக்கர் தவறி விட்டாரா என்பதைக் கண்டுபிடிப்பது மேலதிகாரிகள் பார்வையிடுவதின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டுமென்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் நிராமக் கணக்கர் கணக்கில்

[நி. ஆ. 12:8

கொண்டு வந்திருப்பனவற்றை மட்டும் பார்வையிடுவதோடு நின்றுவிடக் கூடாது. ஆக்கிரமிப்புச் செய்யப்படவில்லை என்பதாகக் கணக்கில் கிராமக் கணக்கரால் காட்டப்படும் புறம்போக்குகளையும் விவசாயமாகவில்லை என்பதாகக் கணக்கில் கிராமக் கணக்கரால் காட்டப்படும் புறம்போக்குகளையும் விவசாயமாகவில்லை என்பதாகக் கூறப்படும் தரிசு நிலங்களையும், நீர் பாய்ச்சிக் கொள்ளப்படவில்லை என்பதாகக் குறிப்பிடப்படும் புன்செய் நிலங்களையும், ஒரு தடவையே அறுவடை ஆயிற்று என்று காட்டப்படும் ஒரு போக நன்செய் நிலங்களையும், கணிசமான விகிதத்தில் மேல் நில அலுவலர்கள் பார்வையிட வேண்டும். மூன் ஆண்டுகளில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டு, நடப்பு ஆண்டில் 6 என் கணக்கிலிருந்து நீக்கப்பட்டவற்றை ஒரு விகிதத்தில் அவசியமாகப் பார்வையிட வேண்டும். மேலும் விட்டு விடப்பட்டன என அறிவிக்கப்படும் ஆக்கிரமிப்புகள் எல்லாவற்றையும் முக்கியமாகப் பார்வையிட வேண்டும். மேலும் கணக்குகளில் பார்வையிட்டதாக அலுவலர்கள் கொடுத்திருக்கும் சான்றுரைகளை, நில அளவைக் கற்கள் பதிவேட்டிலும் அவர்கள் நாட்குறிப்புகளிலும் அவ்வலுவர்கள் பார்வையிட்டதாக அவர்கள் செய்துள்ள பதிவுகள் உறுதி செய்கின்றனவா என்பதையும் ஜமாபந்தி அலுவலர் கவனிக்க வேண்டும். தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட்டவற்றில் 5—1 விவரப் பட்டியலில் செய்யப்பட்ட அறிக்கைகளை 20 என் அறிக்கை (பருவ கால நிலை அறிக்கை) யில் உள்ள பதிவுகள் உறுதி செய்கின்றனவா என்பதையும் கோட்ட ஆட்சியாளரின் ஆணைகள் அவாலே மையினால் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் ஜமாபந்தி அலுவலர் கவனிக்க வேண்டும். தண்ணீர்த் தீர்வை பசலி ஜாஸ்தி இவை சம்பந்தமான 6 என் கணக்கைத் தணிக்கை செய்வதில் கீழ் கண்டுள்ள நடைமுறையை மேற் கொள்ள வேண்டும்.

2 என் (அடங்கல்) கணக்கை 6 என் கணக்கோடு கவனமாய் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். தம் எழுத்தரும் சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளரும் இதைச் செய்யுமாறு தாசில்தார் ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லா இனங்களையும் அவ்வாறு தணிக்கை செய்துவிட்டதாக எழுத்து வடிவில் அவர்கள் சான்றுரை செய்த பின்னர், தாசில்தார் தாமே இடையிடையே சதவிகிதத்தில் இனங்களைத் தணிக்கை செய்து அவற்றிற்கு நேராக தமது சுருக்கொப்பமிட வேண்டும். ஜமாபந்தியில் ஆணை பிறப்பிக்கும் முன்னர், இவ்வாறே ஜமாபந்தி அலுவலரும் தமது அலுவலக எழுத்தர்களில் ஒருவரைக் கொண்டு தணிக்கை செய்வித்து அவரிடமிருந்து அவ்வாறு செய்யப்பட்டதென்ற சான்றுரை பெறவேண்டும். தாசில்தார் சுருக்கொப்பமிடாத இனங்களில் சிலவற்றை ஜமாபந்தி அலுவலர் தாமாகவே தணிக்கை செய்ய வேண்டும்.

1887 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி, 51 என், வ.து.வா.செ.

1928 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் தேதி, 1128 என், அ.அ. (இரக) வரு.

1929 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் தேதி, 479 என், வ.து.வா.செ. பல.

(8) நில ஒப்படை முதலிய பதிவேடுகளை ஆய்ந்து பார்த்தல்.—நில ஒப்படை, உரிமையை விட்டுவிடுதல், பட்டா மாற்றுதல் இவற்றில் நில ஆணைகளின் விதிகளைச் சரியாய் அனுசரித்து அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதா என்பதையும் இவற்றை முடிவு செய்வதில் தகாத கால தாமதமொன்றும் இல்லையா என்பதையும் பதிவேடுகள் தகுந்த முறையில்

நி. ஆ. 12:8–9]

எழுதி வைக்கப்பட்டு வருகின்றனவா என்பதையும் தெரிந்துகொள்ளும் பொருட்டு, இவற்றிற்குச் சம்பந்தமான அசல் கோப்புகளை கணிசமான வீதத்தில் 4 முதல் 7 என் வரையுள்ள தாலூகா கணக்குகளில் உள்ள பதிவுகளுடன் ஜமாபந்தி அலுவலர் ஒப்பிட்டுப் பார்த்துத் தணிக்கை செய்ய வேண்டும் வருவாய்த் துறை ஆட்சி முறையில் எழுதி வைத்து வரவேண்டிய வருவாய்ப் பதிவேடுகளும் அவற்றில் பதிவு செய்தலும் பற்றிய விதிகளை அனுசரித்து உட்பிரிவுகளாகப் பிரிக்கப்படவேண்டியவை தணிக்கை செய்யப்பட்டு புலங்களின் படத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதை ஜமாபந்தி அலுவலர் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

1887 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி, 51 என், வ.து.வா.செ.

1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் தேதி, 220 என், அ.ஆ.வரு.

1957 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7 ஆம் தேதி, 169 என், வா.து.வா.செ. பலவ.

(9) 11 என் தாலூகா கணக்கையும் 12 என் தாலூகா கணக்கையும் 12 என் கிராமக் கணக்கையும் கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ளுதல்.— 12 என் கிராமக் கணக்கு (நிலத் தீர்வை நிர்ணயச் சுருக்கம்) தயாரித்துத் தணிக்கைச் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் அக்கணக்கிலுள்ள விவரங்களை 12 என் தாலூகாக் கணக்கில் (நிலத் தீர்வை நிர்ணயச் சுருக்கத்தில்) பதிவு செய்து கொள்ள வேண்டும். ஜமாபந்தி அலுவலர் அவை சரிவரப் பதிவாயிருக்கின்றனவா என்பதைப் பார்த்து அவ்விரண்டு கணக்குகளிலும் கையெழுத்திட வேண்டும். அவ்வாறு 11 என் தாலூகா கணக்கும் அதன் உள்ளடக்கமும் தயாரானவுடனே ஜமாபந்தி அலுவலர் அவற்றின் பதிவுகள் சரியாயிருக்கின்றனவா எனச் சரி பார்த்து அவற்றிற்குக் கையெழுத்திட வேண்டும். ஜமாபந்தி நடத்தும் அலுவலர் அந்தத் தாலூகாவின் கோட்ட ஆட்சியாளர் அல்லர் எனில், 12 என் தாலூகாக் கணக்குச் சுருக்கத்தின் (நிலத் தீர்வை நிர்ணயச் சுருக்கம்) ஒரு பிரதியையும் 11 என் தாலூகாக் கணக்கையும் அதன் உள்ளடக்கத்தையும் ஜமாபந்தி முடிந்தவுடன் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்பவேண்டும். பசலி ஆண்டு முடிவடைந்ததும், அவற்றை ஜமாபந்திக்குப் பின்னர் நிர்ணயிக்கப்படும் கேட்புத் தொகை பற்றிய கணக்குடன் சேர்த்து கோட்ட ஆட்சியாளர் கலெக்டருக்கு அனுப்புவார். கோட்ட ஆட்சியாளர் தாம் ஜமாபந்தி நடத்தின இடங்களில், 11 என் தாலூகா கணக்கின் பிரதிகளையும் அதன் உள்ளடக்கத்திற்கும் 12 என் கணக்கின் பிரதிகளையும் தம் அலுவலகத்தில் எழுதி வைத்துக் கொண்டு அசல் கணக்குகளை ஜமாபந்தி நடத்தப்பட்ட பின்னர் மேலே குறிக்கப்பட்டவாறு சேர்த்துக் கொள்ளப்படும் இனங்களின் கணக்குடன் கலெக்டருக்கு அனுப்புவார்.

1939 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் தேதி, 1887 என், அ.ஆ.வரு.பலவ

1938 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி, 73 என், வ.து.வா.செ. அச்சு.

1894 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ஆம் தேதி, 131 என், வ.து.வா.செ.நிர்.

[தி. ஆ. 12:10–12

(10) பட்டாக்களைத் திருத்துதலும் புதிய பட்டாக்களை வழங்குதலும்.—திருத்தங்கள் செய்யவேண்டிய எல்லாப் பட்டாக்களையும் திரட்டி ஜமாபந்தியில் சேர்க்க வேண்டுமென்று கிராம அலுவலர்களுக்கு ஆணையிட வேண்டும். ஒவ்வொரு கிராமத்தின் கேட்புத் தொகையின் விவரப் பட்டியலின் சுருக்கம், கையெழுத்து இடப்பெற்றவுடன், தேவையான மாறுதல்களைப் பட்டாக்களில் செய்ய வேண்டும்; அல்லது அவசியமானால் புதிய பட்டாக்களைத் தயாரிக்க வேண்டும். திருத்தம் செய்யப்பட்ட பட்டாக்களையும் உள்ளபடியான பழைய பட்டாக்களையும் புதிய பட்டாக்களையும் கிராமங்களில் உள்ள குடியானவர்களிடம் சேர்ப்பிக்கப்படுவதற்காக, அவற்றைக் கிராம அலுவலர்களிடம் ஒப்புவிக்க வேண்டும். அவ்வாறே குடியானவர்கள் பட்டாக்கள் எவற்றையேனும் கொண்டு வருவார்களெனில், அவற்றைத் திருத்திக் கொடுக்க வேண்டும். அவசியமானால், புதிய பட்டாக்களை தயாரித்து அவற்றைப் பழைய பட்டாக்களுடன் அவர்களிடம் கொடுத்துவிட வேண்டும். குடியானவர் ஒருவர் தம்து கிராம ஜமாபந்தி நடக்கும்போதே, திருத்தி அமைக்கப்பட்ட பட்டா தமக்கு வேண்டுமென்று தெரிவிப்பாரெனில், அவருக்கு, ஜமாபந்தி அலுவலர் உடனடியாகத் தயார் செய்யப்பட்ட பட்டாவை வழங்க வேண்டும்.

1928 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி; 453 என் அ.ஆ.வரு.பலவ.
1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் தேதி, 16 என் வ.து.வா.செ.

(11) ஜமீன் உரிமை வரி முதலியவற்றின் விவரப் பட்டியல்களின் சுருக்கத்தில் கையெழுத்திடுதல்.—நிலையான வரியமைந்த எல்லா எஸ்டேட்டுகள், இனம் கிராமங்கள் முதலியவற்றில் உள்ள சிறிய இனும்கள் ஆகிய இவற்றின் எல்லாத் தலைப்புகளின் கீழும் வருவாய்க் கேட்புத் தொகையைக் காட்டும் விவரப் பட்டியல்களின் சுருக்கம் தாலுகா 'ஆ' பதிவேட்டிலிருந்து (நிலையாக வரியமைந்த ஜமீன் கிராமங்கள் முதலியவற்றின் கிராம வசூல் கழிவுப் பதிவேட்டியிலிருந்து) தயாரித்து ஜமாபந்தி அலுவலரால் கையொப்பமிடப்பட மேலனுப்ப வேண்டும்.

1894 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் தேதி; 131 என், வா.து.வா.செ. நிர்

(12) ஜமாபந்தி தணிக்கைக் குறிப்பை முடிவு செய்தல்.—நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை அடங்கிய ஒவ்வொரு அசல் தணிக்கைக் குறிப்பையும் அதன் இறுதிப்பாகத்தில் II ஆ. இணைப்பின் படிவத்தில் உள்ளவாறு மேலெழுத்துடன் அந்நிலையிலே தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். அந்த அந்தக் கிராமங்களுக்குச் சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அலுவலகத்தில், அந்த மேலெழுத்தே அங்கேயே ஆரம்பக் கோப்பாகும். அதிலுள்ள அம்சங்களில் நடவடிக்கைகளெல்லாம் முற்றிலும் முடிவடைந்து கோட்ட அலுவலகத்திற்கு அறிவிக்கப்படும் வரையில், கோட்ட அலுவலகத்திலும் தாலுகா அலுவலகத்திலும் சம்பந்தப்பட்ட கோப்பு முடிவடையாத நடப்புக் கோப்பாகவே இருக்க வேண்டும். எதாவதொரு தாலுகாவின் ஜமாபந்தியானது அத்தாலுகாவிற்குச் சம்பந்தமில்லா வேறொரு அலுவலரால் நடத்தப் பெற்றிருந்தால், நடவடிக்கை எடுக்கவேண்டிய கிராமங்களுக்குரிய தணிக்கைக் குறிப்புகள், கோட்ட ஆட்சியாளரின் அலுவலகத்திலிருந்து இவற்றின் மேலெழுத்துகளுடன் வெளியனுப்பப்படுவதற்காக, அவை ஜமாபந்தி அலுவலரால் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

1949 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி 13 என் வ.து.வா.செ.

நி. ஆ. 12:12–13]

குறிப்பு.—மேலே குறிக்கப்பட்டுள்ள நடப்புகள் பகிர்மானப் பதிவேட்டிலும், ஜமாபந்தி எழுத்தரின் தன் பதிவேட்டிலும் பதிவு செய்யப்படவேண்டும். சம்பந்தப் பட்ட எழுத்தர்களிடமிருந்து தேவையான தகவல்கள் எல்லாவற்றையும் வரப் பெற்றுக் தணிக்கைக் குறிப்பில் கண்டுள்ள எல்லா அம்சங்களுக்கும் ஒன்று சேர்ந்த வரைவுப் பதில் தாசில்தாருக்குப் பணிந்தனுப்பும் பொறுப்பு ஜமாபந்தி எழுத்த ரைச் சாரும். மேலும் தேவையான தகவல்களைத் தருவதில் சம்பந்தப்பட்ட எழுத்தர்கள் கால தாமதம் ஏதாவது செய்வார்களெனில், அல்லது அவர்கள் கவனக் குறைவாக இருப்பவர்கள் எனில், அதைப்பற்றித் தாலுக்காத் தலைமை கணக்காளர் அல்லது தாசில்தார் கவனத்திற்கு ஜமாபந்தி எழுத்தர் கொண்டு வரவேண்டும்.

1929 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் தேதி, 2381 என், அ.ஆ. வரு.பலவ.
1931 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதி, 1303 என், அ.ஆ.வரு.
1931 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் தேதி 59 என், வ.தூ.வா.செ.
1894 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ஆம் தேதி, 131 என், வ.து.வா.செ.நிர்.

(13) கிராமக் கணக்குகளையும் தாலுகா கணக்குகளையும் முடிவு செய்தலும் வசூலாகாத பாக்கிகளை ஆய்ந்து பார்த்தலும்.—பசலி முடிந்த பின்னர், கிராமக் கணக்கு நடைமுறை நூலில் உள்ள அறிவுரைகளை அனுசரித்து வருவாய்க் கோட்ட ஆட்சியாளர் இவ்வலுவலின் செயல் முறையை மேற்கொள்ள வேண்டும். இருப்பினும், இவ்வறிவுரைகள் நடப்புப் பசலி ஆரம்பத்திலே மேற்கொள்ளப்பட்டனவா என்பதைப் பார்ப்பதற்காகக் கணக்குகளை ஆய்ந்து பார்ப்பது ஜமாபந்தி அலுவலரின் கடமையாகும். முக்கியமாக, முந்திய பசலிகளில் மிகையாகச் செலுத்தியுள்ள தீர்வைகள் இயன்ற இடங்களில் அந்த ஆண்டிற்குச் சேரவேண்டிய பாக்கிகளுக்கு மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் வரவு வைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஜமாபந்தி அலுவலர் கவனிக்க வேண்டும். குடியானவர் ஒருவர் மிகையாகச் செலுத்திய தொகை 14-இ எண் விவரப் பட்டியலில் காண்பிக்கப்பட்டிருந்தால். அவருக்குச் சேர வேண்டிய தொகை, தமக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று அவர் கேட்பாராஞல், ஜமாபந்தி அலுவலர் அதைத் தாமாகவே கணக்கில் குறித்துக்கொண்டு அத்தொகையை அக் குடியானவர்க்குத் திருப்பிக் கொடுக்கலாம். அக்குடியானவர் அத்தகைய தொகை தமக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்காமலிருந் தால், முந்திய ஆண்டின் 14-இ கணக்கையும் மற்ற பதிவேடுகளையும் ஆய்ந்து பார்த்த பின்னர் கணக்கில் சரி கட்ட முடியாத இனங்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக ஏற்றுக் கொள்ளத்தக்க முயற்சிகள் எல்லாம் எடுக்கப் பெற்றன என்று அவர் மன நிறைவு கொள்வாரெனில், அவ் வினங்களைக் கணக்கிலிருந்து தள்ளி விட அவர் ஆணையிடலாம். மேலும், தகுந்த விசாரணைகள் செய்த பின்னரே பாக்கிகள் வசூலிக்க முடியாதவை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளனவா என்பதையும், தகுந்த அதிகாரியின் ஒப்பளிப்பு பெற்ற பின்னரே கணக்குகளிலிருந்து அவை தள்ளுபடி செய்யப் பட்டனவா என்பதையும் ஜமாபந்தி அலுவலர் கவனிக்க வேண்டும். முன்னமே கணக்குகளிலிருந்து தள்ளுபடி செய்யப்படப் பரிந்துரை பகரப்பட்டவற்றின் அல்லது தள்ளுபடி செய்ய அனுமதிக்கப்பட்டவற்றில், ஏதாவது பாக்கி வசூலிக்க முடியுமென்று தெரிய வருமாஞல், அத்தகைய பாக்கியை வசூலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை ஜமாபந்தி

[நி. ஆ. 12:14–15

அலுவலர் கவனிப்பதோடு, அதைப் பற்றி விசாரணை செய்து, அதைப் பொறுத்த மட்டில் முன்பு விசாரணை செய்த அலுவலர், இதில் கவனக் குறைவாக நடந்திருந்தார் என்பது தெரிய வருமாறால், அது பற்றிய அறிக்கையில் அந்த அலுவலரின் பெயரைக் குறித்து அதை ஜமாபந்தி அறிக்கையுடன் சேர்த்தனுப்ப வேண்டும்.

(14) **கிராமக் கணக்கர்களின் நில அளவைக் கருவிகளையும் படங்களையும் பதிவேடுகளையும் பார்வையிடுதல்.**—கிராமக் கணக்கர்களின் நில அளவைக் கருவிகளையும் கிராமப்படங்களையும் பதிவேடுகளையும் ஜமாபந்தி அலுவலர் பார்வையிட வேண்டும். 1928-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் தேதி 230 என் வருவாய்த்துறைக் கழகச் செயல் முறைகளை அனுசரித்து நில அளவைக் கருவிகள் ஒழுங்காக ஆராய்ந்து பார்க்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றனவா என்பதை அவர் அறிந்து கொள்ளவேண்டும். மேலும் அவர் கிராமக் கணக்கரின் கிராமப் படம் நல்ல நிலைமையில் இருக்கிறதா என்பதையும் புலப் படப் புத்தகம் அட்டவணையுடன் கவனத்துடன் பாதுகாக்கப் பெற்று வருகிறதா என்பதையும் கவனிக்கவேண்டும். நிலையான பதிவேடுகளில் குறிக்க வேண்டிய மாறுதல்கள் ஒழுங்காகப் பதிவு செய்ய பெற்றிருக்கின்றனவா என்பதை ஜமாபந்தி அலுவலர் கவனித்து பார்க்கவேண்டும். மேலும் கிராம அலுவலர்களிடம் உள்ள மாவட்ட அரசிதழ்களும், சுற்றறிக்கை கோர்வையும் பூர்த்தியாக இருக்கின்றனவா என்பதையும் அவர் கவனித்துப் பார்க்க வேண்டும்.

(15) **கிராமப் புள்ளி விவரப் பதிவேடுகள்.**—பற்பல கிராமக் கணக்கு களிலிருந்து திரட்டி எடுக்கப் பெறும் இப்புள்ளி விவரங்கள் மாவட்ட அலுவலருக்கும் பொதுவாக நிர்வாகம் நடத்துவதற்கும் பயனுகக் கூடிய வையாகும். அவ்விவரங்கள் பல ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக உள்ளன வாதலால், அவற்றை சற்று பார்த்தவுடனே கிராமங்களின் பொருளாதார நிலைமையும் கிராமங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளன அல்லது அவ்வாறில் லாமல் இதற்கு மாறுபாடான நிலைமையில் உள்ளன என்பதும் புலனுகும். மேலும் கிராமத்தில் அனுபோகத்திலுள்ள பரப்பின் அளவு, நன்செய் விவசாயம், மக்கள் தொகை அல்லது வேறு விவசாய வேலைகள் ஆகிய இத தகைய அம்சங்களில் ஒரு கிராமம் நிலை தாழ்ந்து விடுவது போன்ற முக்கிய மான மாறுதல்களை இடரின்றிக் கண்டு கொள்வதற்கும் அவற்றின் காரணங் களை இன்னவை எனக் கண்டு பிடிப்பதற்கும் புள்ளி விவரங்கள் மாவட்ட அலுவலர்களுக்கு உதவுகின்றன. இதைப் போலவே, கிராமம் முன்னேற்றம் அடைந்திருந்தால் அதற்குரிய சான்றும் காரணமும் உடனடியாகக் கண்டு பிடிக்க உதவும். இத்தகைய புள்ளி விவரங்கள் உபயோகமுள்ளனவாய் இருக்க வேண்டுமாதலால், அவை உண்மையாகவும் அந்த அந்த நாள் வரைக்கும் சரி யாக இருக்க வேண்டியதும் அவசியம். இப்பதிவேடுகளைப் பொதுவாய் ஆராய்வு செய்வதற்கு ஆண்டு தோறும் நடத்தப்படும் ஜமாபந்தி ஒரு சிறந்த வாய்ப்பு அளிக்கிறது. ஆராய்வின் முடிவையும் கண்டுபிடிக்கப்பட்ட குறை களைப் போக்கிக்கொள்ள எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும் ஜமாபந்தி அலுவலர் தமது ஆய்வுரையிற் சேர்க்க வேண்டும். இப் பதிவேடுகள் தயாரிப்பதற்கு விவரமான அறிவுரைகள் III ஆவது இணைப்பில் உள்ளன.

நி. ஆ. 12:16–17]

1909 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் தேதி; 3044 என், அ.ஆ.

1909 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி, 456 என், வ.து.வா.செ.

1911 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் தேதி, 2245 என், அ.ஆ.

1915 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் தேதி, 198 என், வ.து.வா.செ.நீர்.

(16) நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்திற்குத் தேவையான புள்ளி விவரப் பதிவேடுகள்.—இந்தப் பதிவேடு தயாரிப்பதற்கு விவரமான அறிவுரைகள், நிலத் தீர்வை விதிப்பு மாற்ற நடைமுறை நூலின் 1 ஆவது பிரிவின் 11 ஆவது பத்தியில் உள்ளன. தாலுகா நடைமுறை நூலில் விதிக்கப்பட்டுள்ள கணக்குகளை ஆண்டுதோறும் ஆய்வு செய்யும் போது கோட்ட ஆட்சியாளர் மேலே குறிக்கப்பட்டுள்ள நிலத் தீர்வை விதிப்புமாற்றப்புள்ளி விவரப் பதிவேட்டில் குறிப்பிட்ட இ, ஊ, கி, கீ, கு, கூ படிவங்களில் சரியாக எழுதி வைக்கப்பட்டு வருகின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் அவர் அதை, ஜமாபந்தி விவர அறிக்கைகளோடும், தாலுகாப் பதிவேடுகளில், எப்பதிவேடுகளிலிருந்து அது தயாரிக்கப்பட்டிருக்கிறதோ, அப்பதிவேடுகளோடும் அதை ஒத்துப் பார்த்து, அதிலுள்ள பதிவுகள் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் சரியாயிருக்கின்றனவா என்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டும். கோட்ட ஆட்சியாளர் செய்த ஆய்வுகளின் முடிவுகள் ஜமாபந்தி அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகத் தாசில்தார் கலெக்டருக்குச் சரியான காலத்தில் அவற்றைப் பற்றி அறிக்கை அனுப்பவேண்டும். மாவட்ட கலெக்டர் தாலுகாவின் ஜமாபந்தியைத் தாம் நடத்தும்போது, அந்தப் பதிவேடு மனநிறைவு கொள்ளத்தக்க வகையில், சரியாய் எழுதி வைக்கப்பட்டு வருகிறதா என்பதையும்; தாலுகாக் கணக்கு நடைமுறை நூலில் வகுக்கப்பட்டுள்ளவாறு கணக்குகளை ஆண்டுதோறும் ஆய்வு செய்யத்தக்க கோட்ட ஆட்சியாளரால் போதுமான அளவில் அது தணிக்கை செய்யப்பட்டுள்ளதா என்பதையும் கவனித்துப் பார்க்க வேண்டும். இவ்வகையில் குறிப்பு ஒன்று ஜமாபந்தி அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

1927 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி, 1956, அ.ஆ.வரு.பலவ.

1928 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதி, 1560, அ.ஆ.அச்சு.

1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி, 84, வ.து.வா.செ.அச்சு.

1929 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் தேதி, 915, அ.ஆ.வரு.கை.ப.

1929 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் தேதி, 1392, வ.து.வாசெ.பலவ.

1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி, 166 வ.து.வா.செ. அச்சு.

1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி, 736, அ.ஆ.கை.ப.

1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி, 38, வ.து.வா.செ.அச்சு.

(17) பஞ்ச நிவாரணத் திட்டங்கள்.—பஞ்ச நிவாரணத் திட்டங்களைத் தயார் செய்து அனுப்புவதற்கு வேண்டிய அறிவுரைகள் பஞ்ச விதித் தொகுப்பின் 12 ஆவது பிரிவில் அடங்கியுள்ளன. அப்பிரிவின் மூதல் வாக்கியத்தை அனுசரித்துப் பஞ்சத்தின் ஆரம்ப நிலைகளில் நிறைவேற்ற வேண்டிய வேலைகளை மூதலில் தேர்ந்தெப்பது கலெக்டரின் பொறுப்பாக இருப்பினும், வேலைகளைத் தெரிந்தெடுக்கப்பெற்ற பின்னர் அவற்றில் எதையாவது எக்காரணத்தைக்

[நி. ஆ. 12:17–18

கொண்டாவது திட்டத்திலிருந்து நீக்கவேண்டுமா என்பதை முடிவு செய்ய அவற்றை ஆண்டுதோறும் சரிபார்ப்பது கோட்ட ஆட்சியாளரின் கடமையாகும். தெரிந்தெடுக்கப்பெற்ற வேலைகளின் பயன் பற்றியும், பட்டியலிலுள்ள வேலைகளில் எவையேனும் பட்டியலிருந்து நீக்கப்பட வேண்டியது விரும்பத்தக்கதா என்பதைப் பற்றியும் கோட்ட ஆட்சியாளர் ஜமாபந்தி காலத்தில் கலெக்டர்ருக்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

1937 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி, 1990. அ.ஆ.வரு.கை.ப.
1937 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் தேதி, 109 வ.து.வா.செ. அச்சு.

18 (1) ஊராட்சி வருவாய்த் தண்டல் பற்றிய கணக்குகளை கூர்ந்தாய்வு செய்தலும் ஊராட்சி வருவாய்கள் ஊர் அலுவலர்களால் தண்டல் செய்யப்படுவதன் முன்னேற்றத்தை சீராய்வு செய்தலும். ஊர் அலுவலர்கள் மற்றும் ஊராட்சி வருவாய் கணக்குகளை பேணுவது மற்றும் தண்டல் செய்வது பற்றிய நடைமுறையைக் குறிப்பிடும் அறிவுரைகள் ஊர் அலுவலர்கள் மற்றும் குடியானவர்கள் நடைமுறை நூலிலும் அதன் இணைப்பு 11 (இ) லும் உள்ளன.

(2) அவ்வூராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊர்களின் ஜமாபந்தி நாட்களைப் பற்றி வட்ட ஆட்சியர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும் அவர்கள் மூலமாக ஊராட்சி விரிவாக்க அலுவலர்களுக்கும் அறிவிக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் ஊராட்சி விரிவாக்க அலுவலர்களும் ஜமாபந்திக்கு வந்திருந்து ஊராட்சி வரித்தண்டல்களின் முன்னேற்றத்தையும் வரித்தண்டல்களுக்கு குறிப்பிடப்பட்ட நடைமுறையை ஆய்வு செய்தலில் ஜமாபந்தி அலுவலருக்கு உதவி புரிய வேண்டும், ஜமாபந்தியின் போது, ஜமாபந்தி அலுவலர், தண்டல்களின் முன்னேற்ற ஷதத்தை முந்திய ஓராண்டுகளின் முன்னேற்ற விதத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிட முயற்சிக்க வேண்டும். அந்நடைமுறையைச் செயற்படுத்துவதில் உள்ள நடைமுறை இடர்பாடுகளுக்கு இயன்றால் அதே இடத்தில் தீர்வு காணப்பட வேண்டும். மற்றும் எழுகின்ற பெரும் செய்திக் கூறுகளை மேலனுப்பப்படுவதற்கான தொகுப்புச் சீராய்வில் சேர்க்கப்படுவதற்காக அவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

(3) ஜமாபந்தி இறுதியில், நடைமுறையைச் செயற்படுத்துவதில் காணப்பட்ட முக்கியமான சிறப்புக் கூறுகளை வெளிப்படுத்தி குறிப்பிடப்பட்ட நடைமுறையைச் சீராய்வு செய்து அறிக்கை ஒன்றை ஜமாபந்தி அலுவலர் தயாரிக்க வேண்டும். மேலும் குறிப்பிட்ட நடைமுறை பற்றிய முழு அளவிலான மதிப்பீட்டையும் அளிக்க வேண்டும்.

11. (ஈ) இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஊராட்சி ஒன்றிய வரிசையிலான கேட்பு தண்டல் நிலுவை விவரப்பட்டி சீராய்வு அறிக்கையுடன் இணைக்கப்பட வேண்டும். இவ்வாய்வுரையின் நகல் ஒன்று மாவட்ட வளர்ச்சி உள்ளாட்சித்துறை, ஊராட்சி நிதி இயக்குநருக்கும் மற்றொன்று வருவாய் வாரியச் (நில வருவாய்) செயலாளருக்கும் அனுப்பப்பட வேண்டும். இதன் படிகள் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர்

நி. ஆ. 12:18, 13:1]

சம்பந்தப்பட்ட கோட்டத்தின் கோட்ட ஆட்சியர் ஆகியோருக்கும் அனுப்பப் பட வேண்டும். மாவட்ட ஆட்சியர் தங்கள் மாவட்டங்களிலுள்ள பல்வேறு வட்டங்களில் ஜமாபந்தி நாட்களையும் ஊராட்சி நிதி இயக்குநருக்கு உடனடி யாக அறிவிக்க வேண்டும்.

(4) பின்னர் கோட்ட ஆட்சியர்கள் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத் திலுமுள்ள ஊராட்சித் தலைவர்களின் மாநாட்டைக் கூட்டி ஜமாபந்தி அலுவல ரால் தயாரிக்கப்பட்ட சிராய்வுரையை அத்தலைவர்களுடன் கலந்து பேச வேண்டும். இதற்காக, ஜமாபந்தி அலுவலரின் சிராய்வுரை முன்னதாக ஊராட்சித் தலைவர்களுக்கு சுற்றனுப்பப்பட வேண்டும். இந்த மாநாட்டில், வட்ட ஆட்சியர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஊராட்சி விரிவாக்க அலுவலர் சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை ஆய்வாளர் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும். ஊராட்சித் தலைவர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொண்ட பின்னர், ஊர் அலுவலர்களால் ஊராட்சி வருவாய்த் தண்டல் செய்வதற்கு குறிப்பிடப்பட்ட நடைமுறைச் செயற்பாடு குறித்து ஓர் அறிக்கை தயாரிக்க வேண்டும். இந்த அறிக்கைகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்கள் இந்த நடைமுறைச் செயற்பாடு குறித்து, மதிப்பீட்டு வருவாய் வாரியத்திற்கும் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைக்கும் அறிக்கை அனுப்புவார்கள்.

(5) ஜமாபந்தி முடிவு பெற்றவுடனேயே கேட்பு, தண்டல், நிலுவை விவரப்பட்டியும் ஜமாபந்தி அலுவலரின் அறிக்கையும் மேலனுப்பப்பட வேண்டும். ஊராட்சித் தலைவர்களுடன் மாநாடு ஜூலை மாதம் 15-ம் நாள் அளவில் முடிக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர்களின் மதிப்பீடு அறிக்கை அரசுக்கும் வருவாய் வாரியத்திற்கும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் அளவில் வந்து சேர வேண்டும்.

(13) பருவ காலத்திற்கு ஏற்றவாறு தீர்வை தள்ளிக் கொடுத்தல்.—கீழே கண்ட விதிகள் நன்செய் நிலத் தீர்வையையும் நீர் பாய்ச்சப்பட்ட புன்செய் நிலத் தண்ணீர்த் தீர்வையையும் தள்ளிக் கொடுத்ததற்குப் பொருந்தும்.

ந.க.—இவ்விதிகளின் கீழும் 14 ஆவது நிலை ஆணையில் உள்ள விதிகளின் கீழும் கொடுக்கப்படும் சலுகைகள் தனை காரணமாகக் கொடுக்கத்தக்கவை என்பதை யும் இவ்விதிகளெல்லாம் அவ்வப்போது அரசினரின் விருப்பத்திற்கினங்க மாறுதல் பெறத்தக்கவை என்பதையும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

1. தீர்வை தள்ளிக் கொடுக்குமாறு கேட்கும் நோக்கத்தை அறிவித்தல்—(i) அதை எப்பொழுது எவ்வாறு செய்யலாம்.—தீர்வையைத் தள்ளிக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் குடியானவர், பயிரைப் பார்வையிடுவ தற்கு வேண்டிய அவகாசம் இருக்குமாறு வருவாய் ஆய்வாளர், துணைத் தாசில் தார், தாசில்தார், கோட்ட ஆட்சியாளர் இவர்களில் எவரிடமாயினும் எழுத்து வடிவில் சரியான காலத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டும். அறுவடைக் காலத்தை அனுசரித்து, மாவட்டக் கலெக்டர் குறிப்பிட்டு அறிவிக்கை செய்யக்கூடிய தேதிக்கு முன்னதாக ஒவ்வொரு விண்ணப்பமும் கொடுத்துக் கொள்ள வேண்டும். விண்ணப்பம் செய்பவர்களில் ஒவ்வொரு வரும் தமக்குத் தீர்வை தள்ளிக் கொடுப்பதற்குரிய நிலங்களைக் குறிப்பிட்டுத் தமது கையெழுத்து அல்லது அடையாளக் குறியை இடுவார் எனில், இவ் வகையில் இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்களின் கோரிக்கைகள் ஒரே தாளில் இருப்பதில் ஆட்சேபனை இல்லை. விண்ணப்பம் செய்து கொள்ளத்

தவறினுல், தீர்வை தள்ளிக் கொடுக்கப்படக்கூடிய வாய்ப்பின் இழப்பை ஏற்க நேரிடும் என்பதாகவும், பயிரைப் பார்வையிடுவதற்கு முன்னரே பயிர் அறுவடை செய்யப்பட்டிருந்தால், அல்லது அப்புறப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது கால் நடைகளால் மேயப்பட்டிருந்தால், தீர்வையை தள்ளிக் கொடுக்க மறுத்து விடுவதற்கு ஜமாபந்தி அலுவலருக்கு உரிமை உண்டு என்ப தாகவும் குடியானவர்களை எச்சரிக்கவேண்டும். கூடுமான வரையில் உடனடியாக நிலங்களைப் பார்வையிடுதல் நிறைவேற்றப் பெறுவற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் செய்யவேண்டும்.

(ii) எப்பொழுது விதியைத் தளர்த்தலாம்.—எழுத்து வடிவிலே விண்ணப்பங்கள் செய்து கொள்ள வேண்டும் என்பதில் குறிப்பான சந்தர்ப்பங்களில் ஜமாபந்தி அலுவலர் தம் யுக்தாநுசாரத்தில் விலக்களிக் கலாம். மேலும் விண்ணப்பங்கள் மேலனுப்பவதற்கு ஏற்படக் கூடிய கால தாமதத்தையும் போதுமான காரணங்களுக்காக அவர் மன்னிக்க லாம். பயிராய்வு செய்ததிலிருந்து தீர்வை தள்ளிக் கொடுத்தற்குரிய நிலைமை இருப்பதாகத் தெரிய வரும்போது, விண்ணப்பம் செய்து கொள் ளாமை தீர்வை தள்ளிக் கொடுப்பதற்குரிய தகுதியைப் போக்கிவிடாது.[1]

[1] 1912 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி, 1353 அ.ஆ.
[2] 1912 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி, 291 வ.து. வா.செ. நிர்.

பிரிவு I—நிலத்தீர்வை நிர்ணயம் செய்யப்பட்ட நிலப் பகுதிகள்—

2. ஒரு போக நிலங்களின் முழுத் தீர்வையும் தள்ளிக் கொடுத்தல்.—நிலத் தீர்வை நிர்ணயமான நிலப் பகுதிகளில், பாசன ஆதாரத்தில் தண்ணீர் குறைந்திருந்ததினுல் அல்லது பாசன ஆதாரத்தில் அளவுக்கு மிகையாகத் தண்ணிர் இருந்ததினுல் நிலம் தரிசாக விடப்பட்டிருந்தால், அல்லது பயிர் முழுவதும் இழக்கப்பட்டால், அவ்வாறு பாசன ஆதாரத்தில் தண்ணீர் மிகையானது அல்லது குறைந்தது நிலத்தின் உரிமையாளரின் செயல் அல்லது தவறுதல் ஏதாவது ஒன்றினுல் நிகழவில்லை[2][3] அல்லது நிலத்தின் பாசன ஆதாரத்தை வழக்கமாகப் பழுது பார்க்கவேண்டிய வற்றைச் சம்பந்தப்பட்ட குடியானவர்கள் செய்யத் தவறியதால் ஏற் படவில்லை[3] என்றுல் ஒருபோக நன்செய் நிலங்களின் முழுத் தீர்வையும் தள்ளிக் கொடுத்து விடலாம்.

[1] 1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139 வ.து.வாசெ.
[2] 1865 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 7009, வ.து.வாசெ.
[3] 1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி, 87, வ.து.வா.செ.
[5] 1872 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி, 2400, வ.து.வா.செ.
[2] 1890 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி, 2262, அ.ஆ.பலவ.
[3] 1890 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி, 226, வ.து.வா.செ.

3. இரு போக நிலங்களின் தீர்வையைத் தள்ளிக் கொடுத்தல்—(i) எப்பொழுது தள்ளிக் கொடுக்கலாம்.—இரு போகமாகப் பதிவுசெய்யப் பட்ட நன்செய் நிலங்களிலும் இரு போக [7]நன்செய் நிலங்களிலும் தீர்வை இணக்கம் செய்யப்பட்டுள்ள இருபோக நிலங்களிலும் தண்ணீர் குறைந்ததால் அல்லது தண்ணீர் மிகையானதால் ஒரு பயிரும் விளை விக்கப்படவில்லை என்றுல் அல்லது பயிர்கள் முழுவதும் இழக்கப்பட்டன என்றுல் 2ஆவது விதியிலுள்ள நிபந்தனைகளை அனுசரித்து இவ்வகையில் இரு போகத் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படும்.

நி. ஆ. 13:3–4]

(ii) தள்ளிக் கொடுக்கப்படத் தக்க தொகை.—இரு போகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலங்களில் நீர் பாய்ச்சப்பட்ட பயிர் ஒன்று மாத்திரம் விளைந்திருந்தது, மற்றப் பயிர் தண்ணீர் குறைந்து விட்டதால் அல்லது தண்ணீர் மிகையானதால் விளைவிக்கப்படவில்லை என்றால் அல்லது அப்பயிருக்கு இழப்பு ஏற்பட்டுவிட்டது என்றால் மேலே 2 ஆவது விதியிலுள்ள நிபந்தனையை அனுசரித்து, ஒரு போகத் தீர்வை மாத்திரம் விதிக்கவேண்டும். தீர்வை இணக்கம் செய்யப் பெற்றுள்ள இரு போக நிலங்களுக்கு இந்தச் சலுகை பொருந்தாது.

1899 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி, 336 எண். அ.ஆ.
1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி, 401 எண். அ.ஆ.
7 1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதி, 1738 எண். அ.ஆ.வரு.
1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி 139 எண். வ.து.வா.செ.
4 1903 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி, 194 எண். வாது.வா.செ.நிர்.
7 1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி, 87 எண். வா.து.வா.செ.

4. முழுப் புலங்களுக்கு மாத்திரமே தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட வேண்டும்.—அளவை நிலம் முழுமையுமாவது அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்டுள்ள முழு உட்பிரிவாவது, தரிசாக விடப்பட்டிருந்தால், அல்லது அதன் முழுப் பரப்பிலுள்ள பயிர் முழுவதும் விளையவில்லை என்றால் மாத்திரமே, இத்தகைய தீர்வை தள்ளிக் கொடுக்கப்படும். 6 பகுதிக்குப் புலங்களுக்குத் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படமாட்டாது. புலத்தின் ஒரு பகுதி தரிசாக விடப்பட்டு, எஞ்சிய பாகத்திலுள்ள பயிருக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் ஊ 2 ஆவது ஊ விதியின் நிபந்தனைகளை அனுசரித்து முழுப் புலத்தின் தீர்வையையும் தள்ளிக் கொடுக்கலாம்.

1879 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் தேதி, 1427 எண். அ.ஆ.
1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139 எண். வ.து.வா.செ.
5 1900 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் தேதி 1159 எண். அ.ஆ.பலவ.
6 1903 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி, 194 எண். வ.து.வா.செ.நிர்.
1890 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி, 54 எண். வ.து.வா.செ.
1914 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் தேதி, 2895 எண். அ.ஆ.வரு.
1914 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் தேதி, 495 எண். வ.து.வா.செ.

குறிப்புகள்.—(i) அளவைப் புலத்தில் அதன் ஒரு பகுதியில் அவசியமான புலவாய்க்கால் அல்லது வடிகால் அல்லது ஒரு சிறிய களமும் இருக்க நேரிடலாம். அத்தகைய வாய்க்கால்களும் களங்களும் உண்மையாகவே விவசாய உபயோகத்திற்கு உதவுகின்றன. ஆகவே அவற்றின் பரப்பில் விவசாயம் செய்யப்படவில்லை என்பதன் காரணம் காட்டி அவற்றிற்குத் தீர்வை தள்ளிக் கொடுப்பதற்கில்லை எனக் கூறக்கூடாது. நிலத்தின் மற்றப் பகுதியிலுள்ள பயிர் விளைவுக் குறைவினால் அல்லது பயிர் இழப்பு ஏற்பட்டதினால் தீர்வை தள்ளிக் கொடுக்கலாமென்றால் வாய்க்கால்கள் முதலியன உள்ள பரப்பும் சேர்ந்த முழு நிலத்திற்கும் தீர்வை தள்ளிக் கொடுக்க வேண்டியதே முறையாகும். அதாவது அந்தப் புலத்தில் விவசாயமாகக் கூடிய பகுதியில் உள்ள பயிரின் உண்மையான விளைவை அல்லது இழப்டை அனுசரித்து அந்தப் பகுதி நிலத்தின் தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட வேண்டும் என்றால், விவசாயம் செய்யப்படாத பகுதியும் உட்பட்ட முழுப் புலத்திற்கும் அத அளவில் அதன் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படுவதற்கு அது தகுதியுடையதாகு பே

[நி. ஆ. 13 :14–6

(ii) ஆனல் அளவைப் புலத்தில் விவசாயம் செய்யப்படாத பாகம், உதாரண மாக பண்படுத்தி விவசாயம் செய்ய ஒரு முயற்சியும் செய்யாமல் மேட்டுப் பாகம் ஒன்றை ஆண்டுதோறும் தரிசாகவே விட்டு வைத்து வந்தால், அத்தகைய நிலமும் சொற்பபரப்பினது அன்றென்றால் அப்பாகம் அளக்கப்பட்டு அதற்குரிய விகிதாசாரத் தீர்வை விதிக்கப்படவேண்டும். இதன் பொருட்டு, நிலத்தின் ஒரு பகுதியில் நீர் பாய்ச்சப்படுவதற்குத் தீர்வை விதிப்பதற்கான 6 என் கணக்கு தயார் செய்வதில் நீர் பாய்ச்சப்பட்ட பகுதிக்குத் தோராய வரைப்படங்கள் தயாரித்தது போலவே இத்தகைய பகுதிகளுக்கும் தோராய வரை படங்களைத் தயாரிக்க வேண்டும். ஆனல், விவசாயமாகாத பகுதியின் பரப்பு சொற்பமாயிருந்தாலும், அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளமால். முழுப் புலத்திற்கு மேலே (1) ஆவது குறிப்பில் கண்டவாறு தீர்வை தள்ளி கொடுத்து விடலாம்.

(1956 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி, 3314 என். அ.ஆ.வரு.)

(1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் தேதி, 1276 என். வா.நு.வா.செ. பலவ.)

5. அனுமானிக்கப்பட்ட மொத்த இழப்பு.—நிலம் தரிசாய் இருந்தால் மாத்திரம் அல்லது பயிருக்கு முழுமையான இழப்பு நேர்ந்தால் மாத்திரம் மேலே சொல்லியவாறு நிலத் தீர்வை தள்ளிக் கொடுக்கத் தகும். இவ்விதி களின் கொள்கைகளுக்கு இணங்கக் கலெக்டர்கள் தங்கள் யுக்தானுசாரத்தில் ஒரு புலத்தின் முழுமைக்கும் ஏற்பட்ட இழப்பு நியாயமாக முழு இழப்பே ஆகுமா என்பதைத் தீர்மானிக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதி, 523, அ.ஆ.
1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139, வ.து.வா.செ.

பிரிவு II—நிலத்தீர்வை நிர்ணயமாகாத நிலப்பகுதிகள்—

6. நிலத் தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட தக்கவை.— நில வரித் திட்டத் துறையினரால் தீர்வை நிர்ணயிக்கப்படாத நிலப் பகுதிகளில் 2-வது விதியிலுள்ளது போலவே நன்செய் நிலத்தின் இழப்பிற்கும் அதன் முழுத் தீர்வையையும் கொடுக்கலாம். நன்செய் நிலத்தில் ஏற்பட்டக்கூடிய ஒரு பகுதி இழப்பிற்கு அத்தகைய ஒரு பகுதி இழப்பு, பாசன ஆதாரத்தில் தண்ணீர் குறைந்திருந்ததினல், அல்லது பாசன ஆதாரத்தில் அளவுக்கு மிகை யான தண்ணீர் இருந்ததினல் நிலம் தரிசாக விடப்பட்டிருந்தால், அல்லது[2] பயிர் முழுவதும் இழக்கப்பட்டிருந்தால், அவ்வாறு பாசன ஆதாரத்தில் தண்ணீர் மிகையாளது அல்லது குறைந்தது, நிலத்தின் உரிமையாளரின் செயல் அல்லது தவறுதல் ஏதாவது ஒன்றினுல் நிகழவில்லை என்றால் அல்லது[3] நிலத்தின் பாசன ஆதாரத்திற்கு வழக்கமானப் பழுதுபார்க்கத்தக்கவற்றைச் சம்பந்தப்பட்ட குடியாவனர்கள் செய்யத்தவறினதால் ஏற்படவில்லையென்றால், ஒரு போக நன்செய் நிலங்களின் முழுத் தீர்வையும் தள்ளிக் கொடுத்து விடலாம்.

1902 ஆம்ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம்தேதி, 139, வ.து.வா.செ.
[1] 1865 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 7009, வா.து.வா.செ.
[1] 1872 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி, 2400, வ.து.வா.செ.
[2] 1903 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி, 145, வா.து.வா.செ.நி.
[3] 1890 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி, 226, வ.து.வா.செ.

நி. ஆ. 13:7–9]

7. தள்ளிக் கொடுக்கப்படத் தக்க ஒரு பகுதித் தீர்வை எவ்வாறு கணக்கிடப்படவேண்டும்.—ஒரு பகுதித் தீர்வை தள்ளிக் கொடுப்பதில் தனித்தனி புலங்களின் இழப்பை மதிப்பிட முயற்சி செய்யக் கூடாது. கணிசமான விஸ்தீரணம் இடைத்திருக்கும் நிலங்களையும் அநுபோகத்திலிருக்கும் தரிசு நிலத்தையும் அநுபோகம் செய்யப்படாத தரிசு நிலத்தையும் விலக்கி விட்டு, ஒவ்வொரு நீர்பாசன வேலையின் ஆயக்கட்டு நிலங்களில் உள்ள பயிர்களுக்கு சேர்ந்த இழப்பை, அவ்வவ்வாறே கணக்கில் எடுத்துக் கவனித்துப் பார்க்கவேண்டும். போதுமான எண்ணிக்கையில் பாதிக்கப்பட்ட நிலங்களின் நிலைமையை ஆராய்வு செய்து சராசரி ஏத இழப்பைத் தீர்மானிக்க வேண்டும்.

1865 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி, 7009, வ.து.வா.செ.
1872 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி, 2400, வ.து.வா.செ.
1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139. வ.து.வா.செ.

8. கணக்கிடப்பட்ட இழப்பின் சதவிகிதத்தை எவ்வாறு பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.—இழப்பு ஏற்பட்ட எல்லா நிலங்களின் [4] கேட்புத் தொகையையும் இவ்வாறு கணக்கெடுக்கப்பட்ட சதவீத முறையில் குறைக்க வேண்டும். [4] இவ்வகையில் நீலப்பகுதி ஒரு குறைந்த அளவிலாவது இருக்க வேண்டுமென்பது தீர்வை தள்ளிக்கொடுக்கும் வீதத்தை ஒரு தனிக் கிராமம், அல்லது ஒரு தனி ஏரியின் பாசனப் பரப்புக்கு அல்லது அதன் ஒரு பாகத்திற்குக் கலெக்டர் சரிகட்டுவதில் தடையில்லை. ஒரே கிராமத்தில் நீர்ப்பாசன ஆதாரங்கள் இரண்டு அல்லது மூன்று இருந்து. ஒவ்வொன்றின் கீழும் பயிர்களுக்குக் குறிப்பாக வேறுபாடான அளவுகளில் ஒரு பகுதி இழப்பு ஏற்பட்டிருக்குமானால், தனித் தனி சதவிகிதத்தில் தீர்வை தள்ளிக் கொடுப்பது ஒழுங்கான முறையாகும். [5]

[4] 1865 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி, 7009, வ.து.வா.செ.
[4] 1872 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி, 2400, வா.து.வா.செ.
[5] 1877 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் தேதி, 1622, வ.து.வா.செ.
[6] 1866 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6-ம் தேதி, 4587, வ.து.வா.செ.
1902ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் தேதி, 139, வ.து.வா.செ.

பிரிவு III—பொது—

9. நன்செய் நிலத்தில் விளைவிக்கப்படும் புன்செய்ப் பயிர்களுக்குத் தீர்வை தள்ளிக்கொடுத்தல்.—[1] எல்லா மாவட்டங்களிலும், அவற்றில் தீர்வை நிர்ணயமாகி இருந்தாலும் இல்லாவிட்டாலும், தண்ணீர் குறைவினால், நனசெய் நிலங்களில் புன்செய்ப் பயிர்கள் விவசாயம் செய்யப் பட்டிருந்தால், அத்தகைய புன்செய்ப் பயிர்கள் விளைவிக்கப்படாமலிருக்குமானால், அந்நிலங்கள் தரிசாகக் கிடந்திருக்கக் கூடும் என்றால், ஆவது விதியை அனுசரித்து அவற்றிற்கு 2-ஆவது விதியின் நிபந்தனைகளுக்கிணங்க புன்செய்த் தீர்வையே விதிக்க வேண்டும். தீர்வை நிர்ணயமான மாவட்டங்களில் நன்செய் வகுப்புக்கும் தரத்திற்கும் குறிப்பாக ஏற்றவாறுள்ள புன்செய் வீதம் எதுவோ அவ்வீதம் புன்செய்த் தீர்வையாகும். [2] தீர்வை நிர்ணயமாகாத நிலப் பகுதிகளில் கிராமத்திலேயே ஏற்பட்ட மிக உயர்ந்த புன்செய்த் தீர்வை புன்செய் தீர்வை வீதமாகும். இதன் பொருட்டு, நிலங்கள் இருக்கக் கூடிய சிற்றூர்களென்று இல்லாமல்,

[நி. ஆ. 13:9]10

கிராமம் முழுவதற்குரிய உயர்ந்த நீர்வையை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இத்தகைய புன்செய்த் நீர்வை, நன்செய்த் நீர்வைக்கு அதிகமாயிருந்தால், கலெக்டர் தமது யுக்தாலுசாரத்தில், அண்மையிலுள்ள புன்செய் நிலத்தின் நீர்வையை அல்லது அதே தன்மையுள்ள புன்செய் நீர்வையைத் தற்காலிகமாக மேற்கொள்ளலாம். [10] இத்தகைய புன்செய்த் நீர்வை, நிலங்களில் எவ்வளவு பரப்பு விவசாயம் செய்யப்பட்டிருப்பினும், அப்பரப்பை அனுசரிக்காமல் நில அளவைப் புலங்கள் அல்லது அவற்றின் உட்பிரிவுகளின் முழுப் பரப்பிற்கும் விதிக்க வேண்டும். நில அளவைப் புலத்தில் அல்லது உட்பிரிவின் ஒரு பகுதியில் புன்செய்ப் பயிரும் மற்றொன்றில் நன்செய்ப் பயிரும் விளைவிக்கப்பட்ட பின்னர், அத்தகைய நன்செய்ப் பயிர் முழுமைக்கும் இழப்பு ஏற்படுமாகில், இவ்விதியை அனுசரித்து ஏற்படுத்தப்பட்டுள்ள சலுகை கொடுக்கத்தக்கதாகும்".

1902ம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139, வ.து.வா.செ.
[7] 1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி, 2400, வ.து.வா.செ.
[7] 1903 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி, 145, வ.து.வா.செ.நிர்.
[8] 1873 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதி, 1690, வ.து.வா.செ.
[2] 1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் தேதி, 1805, வ.து.வா.செ.
[10] 1900 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் தேதி, 1159, அ.ஆ.

10. நன்செய் நிலத்தில் விளைவிக்கப்படும் புன்செய்ப் பயிருக்கு ஒரு பகுதி தீர்வை தள்ளிக் கொடுத்தல்.—ஒரு போக நன்செய் நிலத்தில் புன்செய்ப் பயிர் விளைவிக்கப்பட்டிருந்தால், அந்த நீர்ப்பாசன ஆதாரத்தில் அந்த ஆண்டின் எப்பகுதியிலாவது எக்காலத்திலாவது நன்செய்ப் பயிர் ஒன்று விளைவிப்பதற்கு வேண்டிய தண்ணீர் இருந்திருக்குமானால் அப்போது வழக்கமான நன்செய் தீர்வையை விதிக்க வேண்டும். ஆனால் ஆதாரத்திலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை எனில், அல்லது ஒரு நன்செய்ப் பயிருக்கு உபயோகிக்க முடியாத காலத்தில் தண்ணீர் கிடைத்ததென்றால் அல்லது கிடைத்த தண்ணீர் ஒரு நன்செய்ப் பயிர் விளைவிக்கப் போதுமான அளவில் இல்லை என்றால், [1]விளைவிக்கப்பட்ட பயிருக்கும் நீர் பாய்ச்சப்பட்டாவிடின், அதற்குப் புன்செய்த் தீர்வை மாத்திரமே விதிக்க வேண்டும். [2] புன்செய்ப் பயிருக்கு நீர் பாய்ச்சப்பட்டால், கலெக்டர் தம் யுக்தாலுசாரத்தில் புலம் முழுமைக்குரிய நன்செய்த் தீர்வையை அல்லது அந்தப் புலத்திற்குரிய முழு புன்செய்த் தீர்வையும், நீர் பாய்ச்சப் பெற்ற பரப்பின் தண்ணீர்த் தீர்வையும் சேர்ந்த கூட்டுத் தொகையை, இத் தொகை முழு நிலத்திற்குமுரிய ஒரு போக நன்செய்த் தீர்வைக்கு மேற்படாமலிருக்குமானால் அத்தீர்வையை விதிக்கலாம். [2]

([2]) குறிப்பு.—வெவ்வேறு வீதங்களில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படக் கூடிய ஒன்றுக்கு மேற்பட்ட புன்செய் பயிர்கள் நன்செயில் விளைவிக்கப் பெற்றிருந்தால், அவற்றின் பரப்பிலுள்ள பயிர்களில், எந்தப் பயிர் அதிகமான பரப்பில் உள்ளதோ அப்பயிருக்கு விதிக்கப்படவேண்டிய தீர்வை வீதத்தில், நீர் பாய்ச்சப் பெற்ற முழுப் பரப்புக்கும் தீர்வை விதிக்க வேண்டும். ஆ

1894 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் தேதி. 497, வ.து.வா.செ. நீர்.
1802 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139, வ.து.வா.செ.
(அ) 1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி, 401, அ.ஆ.
(ஆ) 1909 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி, 342, அ.ஆ.
(ஆ) 1909 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் தேதி, 809, அ.ஆ.
(ஆ) 1909 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி, 134, வ.து.வா.செ.

நீ. ஆ. 13:11]

11. இணக்கம் செய்யப்பெற்றுள்ள இரு போகப் புன்செய் நிலங்களின் தீர்வையையும் இருபோக நன்செய்யாகப் பதிவு செய்ய பெற்றுள்ள மற்ற நிலங்களின் தீர்வையையும் தள்ளிக் கொடுத்தல்.—9, 10 விதிகளை அனுசரித்து அளிக்கப்படத்தக்கச் சலுகை, இணக்கம் செய்யப்பெற்றுள்ள இருபோக நன்செய் நிலங்களுக்கும் இரு போகமாகப் பதிவு செய்யப் பெற்றுள்ள மற்ற நன்செய் நிலங்களுக்கும் பொருந்தும்; ஆனால் நீர்ப் பாசன ஆதாரத்திலிருந்து கிடைக்கத் தக்க தண்ணீர் நன்செய்ப் பயிர் ஒன்று விளைவிப்பதற்குப் போதாமலிருந்து அவற்றில் விளைவித்த பயிர்களெல்லாம் புன்செய்ப் பயிர்களாகவேயிருந்து, அப்பயிர்களில் எதற்காகவாவது நீர்ப்பாசன ஆதாரத்திலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படாமலிருந்தால் மட்டுமே, இரு போக நன்செய் நிலங்களுக்குப் புன்செய் நீர்வை விதிக்கத்தக்கதாகும் என்று தெளிவாய் அறிந்து கொள்ள வேண்டும்.[1] ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்களுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டால், முழு புலத்தின் புன்செய்த் தீர்வையுடன் நீர் பாய்ச்சப் பெற்ற பரப்பிற்கும் பொருந்தமான தண்ணீர் தீர்வையும் சேர்க்கப்பட்ட விதாகை கீழே கண்டுள்ள பெருமம் தீர்வைகளுக்கு மேற்படாவிடில், இத்தகைய இரு தீர்வைகளையும் சேர்த்து விதிக்க வேண்டும்.

(1) இணக்கம் செய்யப்பட்டுள்ள இரு போக நிலங்கள்—இணக்கம் செய்யப்பட்ட இரு போக வீதம்.

(2) இரு போக நன்செய் நிலங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள மற்ற நன்செய் நிலங்கள்—

(அ) ஒரு பயிர் நீர் பாய்ச்சப்பட்டால்—ஒரு போக நன்செய் தீர்வை.

(அ) இரண்டு பயிர்கள் நீர் பாய்ச்சப்பட்டால்—மொத்தமாக ஒன்று சேர்க்கப்பட்ட இரு போக நன்செய்த் தீர்வை'.

'குறிப்பு.—வெவ்வேறு வீதங்களில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படக் கூடிய ஒன்றுக்கு மேற்பட்ட புன்செய்ப் பயிர்கள் நன்செயில் விளைவிக்கப்பட்டால், அவற்றின் பரப்பிலுள்ள பயிர்களில், எந்தப் பயிர் அதிகமான பரப்பில் உள்ளதோ அப்பயிருக்கு விதிக்கப்படவேண்டிய தீர்வை வீதத்தில் நீர் பாய்ச்சப் பெற்ற முழுப் பரப்புக்கும் தீர்வை விதிக்கவேண்டும்'.

நீர்ப்பாசன ஆதாரத்தின் கிடைக்கப் பெற்ற தண்ணீர் நன்செய்ப் பயிர் ஒன்று விளைவிக்கப் போதுமானதாயிருக்குமானால், விளைவிக்கப்பட்ட புன்செய்ப் பயிர்கள் நீர் பாய்ச்சிக் கொள்ளப்பட்டாலும், இல்லாவிட்டாலும் கீழ்க் கண்டவாறு நன்செய்த் தீர்வை வீதம் விதிக்க வேண்டும்.

(1) இணக்கம் செய்யப்பட்டுள்ள நன்செய் நிலங்கள்—இணக்கம் செய்யப்பட்ட இரு போக வீதம்.

(2) இரு போகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள மற்ற நன்செய் நிலங்கள்—

(அ) நன்செய்ப் பயிர் ஒன்று விளைவிக்கத் தண்ணீர் போதுமானதாயிருக்குமானால்—ஒரு போக நன்செய்த் தீர்வை:

[நி. ஆ. 13:12–13

(ஆ) இரண்டு நன்செய்ப் பயிர்கள் விளைவிக்கத் தண்ணீர் போதுமானதாயிருக்குமானால், மொத்தமாக ஒன்று சேர்க்கப்பட்ட இரு போக நன்செய்த் தீர்வை.

(1) 1909-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ஆம் தேதி, 342, அ.ஆ.
(1) 1909-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ஆம் தேதி, 134 வ.து.வா.செ.நிர்.
(1) 1909-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் தேதி, 809 அ.ஆ.

12. தண்ணீர்த் தீர்வையைத் தள்ளிக் கொடுத்தல்.—தண்ணீர் குறைவினால் அல்லது தண்ணீர் மிகையினால் பயிருக்கு இழப்பு ஏற்பட்டு, அத்தகைய தண்ணீர் மிகையானது அல்லது தண்ணீர்க் குறைந்தது நிலத்தின் உரிமையாளர்களின் செயலால் அல்லது நவறுதலினால் ஏற்படவில்லை என்றால் மாத்திரமே, தனி விதங்களில் தீர்வை விதிக்கப்பெற்றுள்ள அரசாங்க நீர்ப் பாசன ஆதாரங்களின் நீர்ப் பரப்பிலுள்ள நிலங்கள் உட்படப் புன்செய் நிலங்களின்[1] தீர்வை தள்ளிக் கொடுக்கத்தக்கதாகும். இந்த விதி அரசுக்குடி நிலங்களுக்கு[5] மாத்திரம் அல்லாமல் அரசாங்கப் பாசன ஆதாரத்திலிருந்தே நீர் பாய்ச்சிக் கொள்ளப்படும் நிலையான வரி அமைந்த நிலங்களுக்கும், இனம் நிலங்களுக்கும் பொருந்துவதாகும்.[4] இதே விதி ஒரு போக நன்செய் நிலத்திற் குரிய இரண்டாவது போகத் தீர்வைக்கும் பொருந்தும்.

[5]1893 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி, 64, வ.து.வா.செ.
[5]1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139, வ.து.வா.செ.
[5]1941 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி, 319, அ.ஆ.வரு.
[5]1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி 401, அ.ஆ.
[5]1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி, 87, வ.து.வாசெ.
1941 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 34, வ.து.வா.செ. அச்சு.

குறிப்பு.—அனுமதி பெற்ற ஒரு சமயத்தில் தண்ணீர் பாய்ச்சப் பெற்ற 4 ஆவது நிலை ஆணை 2-ஆவது பத்தியின் 1-வது இணைப்பின் ஆ பிரிவின் கீழ்த் தண்ணீர் தீர்வை செலுத்துவதற்குட்பட்ட அரசுக்குடி நிலங்களுடன் ஜமீன் நிலங்களும், சிறிய இனம் புன்செய் நிலங்களும் தண்ணீர் மிகையினால், அல்லது குறைவினால் தரிசாக விடப்பட்டிருந்தால் அவற்றிற்குத் தண்ணீர்த் தீர்வையைத் தள்ளிக் கொடுக்கலாம்.

1901 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் தேதி, 22, வ.து.வா.செ.நிர்.
1908 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி, 384, வ.து.வா.செ.நிர்.
1917 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 626, அ.ஆ.வரு.
1917 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் தேதி, 163, வ.து.வா.செ.நிர்.

13. தீவனப் பயிர்களுக்கும் தழை உரப் பயிர்களின் தீர்வை தள்ளிக் கொடுத்தல்.—முதன்மையான நன்செய்ப் பயிர் நடுவதற்கு முன் நன்செய் நிலத்தில் அல்லது அது அறுவடை செய்யப்பட்ட பின் உடனடியாக[1] நன்செய் நிலத்திலாவது அல்லது நீர் பாய்ச்சப்படும் புன்செய் நிலத்திலாவது கால்நடைகளின்[1] தீவனப் பயிர்கள், கதிர் விடுமுன்னே அறுக்கப்பட்டு அல்லது தீவனமாக உபயோகிக்கப்படும் வகையில் விவசாயம் செய்பவரின் உண்மையான விவசாயக் காரியங்களுக்கு அவைபயனுகுமானால்[1], அத்தீவனப் பயிர்களுக்குத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படமாட்டாது. இக்கையவிளைவினால் ஒரு போக நன்செய்

நி. ஆ. 13:13]

நிலத்திற்கு விதிக்கத்தக்க இரண்டாம் போகத் தீர்வை இழப்பு ஏற்படுமாறுல் அல்லது புன்செய் நிலத்திற்கு மூறைதவறுதலாக நீர் பாய்ச்சிக் கொள்ளப்படும் என்றால், இந்தச் சலுகை நிருபிப எடுத்துக்கொள்ளப்படும். தீவனப் பயிர்கள் விற்பனைக்காக விளைவிக்கப்பட்டனில்லை என்று நிச்சயம் செய்து கொள்ளும் பொருட்டு, அலை 6 என் கிராமக் கணக்கில் தாக்கல் செய்யப்படும். அக்கணக் கிற்குக் கொண்டுவரப்பட்ட ஒவ்வொவ்றிலும் தண்ணீர்த் தீர்வை விதிக்க அதிகாரம் பெற்றுள்ள அலுவலர் இச்சலுகை கொடுக்கத்தக்கதா அல்லது தக்கதில்லையா என்பதை முடிவு செய்வார். இப்பயிர்கள், புள்ளி விவரக் காரியங்களுக்காக 1, 2 என் கிராமக் கணக்குகளுக்குள்ளும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பு —

குறிப்புகள்.—(1) இருப்பினும், புன்செய் நிலங்களில் கால்நடைகளின் தீவனச் சோளப் பயிர் விளைவிக்க நீர் பாய்ச்சிக்கொள்வதற்கும், நன்செய் நிலங்களில் அத்தகைய தீவனச் சோளப் பயிர் இரண்டாம் போகப் பயிராக விளைவிப்பதற்கும் நிபந்தனை ஒன்றும் விதிக்கப்படமாட்டாது. ஆனால் நீர்ப்பாசனம் முறையற்றதாக இருக்கக் கூடாது. நிலம் நன்சையாக இருப்பினும் அல்லது புன்சையாக இருந்து அந்நிலத்தில் அந்தப் பசலியில் ஏதாவது ஒரு பயிருக்கு நீர் பாய்ச்சிக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கப் பட்டிருந்தாலும் அத்தகைய நிலங்களில் தீவனச் சோளப் பயிர் விளைவிக்கத் தண்ணீர் உபயோகம் செய்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் தேவை யில்லை. நீர்பாசனம் முறையற்றதாக இல்லையெனில், புன்செய் நிலங்களில் தீவனச் சோளப் பயிர் விளைவிக்கப்படுவதற்கும் நன்செய் நிலங்களில் இரண்டாம் போக மாக விளைவிக்கப்படும் அத்தகைய தீவனச் சோளப்பயிருக்கும் இரண்டாம் போகத் தீர்வை விதிக்கப்பட மாட்டாது.

1935 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ஆம் தேதி, 2627, அ.ஆ.

1936 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி, 20 வ.து.வா.செ. அச்சு.

(2) தீவனச் சோளப் பயிர் விளைவிக்கப்படுவதற்கு அளிக்கப்படும் சலுகை ஒரு போக நன்செய் நிலங்களில் நன்செய்ப் பயிர் ஒன்றுக்கு முன்னதாக முதல் பயிராக நீர் பாய்ச்சித் தீவனச் சோளப் பயிர் விளைவிக்கப்படுவனவற்றிற்கும் பொருந்தும்.

1937 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 588, அ.ஆ.வரு.

1904 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி, 1157. அ.ஆ. வரு.

1906 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் தேதி. 1146, அ.ஆ. வரு..

1914 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி, 2364, அ.ஆ.வரு.

1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் தேதி, 43. வ.து.வா.செ. அச்சு.

1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி, 971, அ.ஆ.வரு.

1913 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் தேதி, 3788, அ.ஆ. வரு.

1917 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி, 439, வது.க.செ.பலவ.நிர்.

1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி 148. வ.து.க.செ.அச்சு.

(3) இருப்பினும், தனித் தண்ணீர்த் தீர்வை விதிகளுக்குட்பட்டுள்ள கிழ்ப் பவானி திட்டம் போன்ற நீர்ப் பாசனத் திட்டங்களில் அடங்கிய பகுதிகளுக்குத் தீவனச் சோளப் பயிருக்குரிய விதி விலக்குச் சலுகை பொருந்தாது.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் தேதி, 2310. அ.ஆ.வரு.

1956 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதி, 1169, வ.து. க.செ. பலவ.

[நி. ஆ. 13:13–14

நன்செய் நிலத்தில் அல்லது நீர் பாய்ச்சப்பட்ட புன்செய் நிலத்தில் குடியானவரின் சொந்த உபயோகத்திற்காக அல்லது விற்பனை செய்வதற்காக விளைவிக்கப்படும் தழை உரப் பயிர்கள் சம்பந்தமாக ஆணைகள் மேற்கொண்டு பிறபிக்கப்படும் வரையில் கீழ்க்கண்டவாறு சலுகைகள் வழங்கப்படும்.—

(அ) மற்றப் பயிர்களுடன் அவை கூடுதலாக விளைவிக்கப்படுமாயின் அவற்றிற்குத் தண்ணீர்த் தீர்வை விலக்கு அளிக்கப்படும்.

(ஆ) அவை எந்த நிலத்திலாவது ஆண்டிற்கு ஒரே பயிராக விளைவிக்கப் பட்டால் தீர்வை கீழ்க் கண்டுள்ளவாறு விதிக்கப்படும்.

(i) புன்செய் நிலங்களில் புன்செய்த் தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட மாட்டாது. ஆனல், தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படமாட்டாது.

(ii) ஒரு போக நன்செய் நிலத்தில், மற்றொரு பயிர் விளைவித்திருக்கக் கூடும் என்றலும், அவ்வாறு விளைவித்திருக்க முடியாது என்றலும் தீர்வை விதிக்கப்படமாட்டாது.

(iii) இரு போக நன்செய்யாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலங்களின் நன்செய் பயிர் ஒன்று விளைவிப்பதற்கு மாத்திரம் தண்ணீர் போதுமானதா யிருந்தால் இரு போக முழு நன்செய் தீர்வையும் தள்ளிக் கொடுக்கத்தக்க தாகும். ஆனல் தண்ணீர் இரண்டு நன்செய் பயிர்களுக்குப் போதுமானதா யிருந்தால், ஒரு போக நன்செய்த் தீர்வை விதிக்கப்பட்டு வித்தியாசத் தொகை தள்ளிக் கொடுக்கப்படும்.

(iv) இணக்கம் செய்யப்பட்டுள்ள இரு போக நிலங்கள் சாதாரண இரு போக நிலங்களைப் போலவே கருதப்படத்தக்கவை.

உண்மையாகத் தழை உரப்பயிர்கள் விளைவிக்கப்பட பாப்பிற்கு மாத்திரமே மேலே உள்ள (ii) (iii) and (iv) உட்பிரிவுகளை அனுசரித்துத் தீர்வை தள்ளிக்கொடுத்தல் அனுமதிக்கப்படவேண்டும். இவ்வாறு தீர்வை தள்ளி கொடுக்கப்படுவன 13 ஆவது நிலை ஆணையின் 4 ஆவது பத்தியுள்ள நிபந்தனை களுக்குட்பட்டா. இருப்பினும் தழை உரப்பயிர் விளைவிக்கப்படாத நில அளவைப் புலங்களின் அல்லது அவற்றின் உட்பிரிவுகளின் பாகங்களுக்குத் தீர்வை தள்ளிக்கொடுக்கப்படுவதற்குப் பொது விதிகளை அனுசரிக்க வேண்டும்.

ஓராண்டு முன் அறிவிப்பு கொடுத்து விட்டுப் பொதுவாக அல்லது குறிப்பான யாதாவதொரு தனி நிலப் பகுதிக்கு இச்சலுகைகளைக் கொடுக்காமல் திரும்ப எடுத்துக்கொள்ளும் உரிமையை அரசினர் வகிக்கின்றனர்.

(1) 1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் தேதி, 406, அ.ஆ.வரு.
(1) 1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் தேதி, 14, வ.து.வ.செ.

14. முன்னதாகவே செலுத்திய தொகைகளைத் திருப்பிக் கொடுத்தல்.— முன்னதாகவே செலுத்திய தொகைகள் அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் விதிகளை அனுசரித்துத் திருப்பித் தரத் தக்கனவாகும். நிலத் தீர்வை தள்ளிக் கொடுப்பதைப்பற்றியே மேல்வரிகளையும் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்ப தில்லை.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் தேதி, 2310, அ.ஆ.வ
1956 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதி, 1169, வ.து.வா.செ.

நி. ஆ. 13:15–17, 14]

15. நாற்றங்கால்கள்.—தீர்வை தள்ளிக் கொடுக்கப்படுவதற்குச் செய்யப் படும் கோரிக்கைகளை முடிவு செய்யும்போது, நாற்றங்கால்களுக்கு அச்சலுகை அனுகூலம் இல்லாதவாறு செய்து விடக்கூடாது.

1885 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி, 434, அ.ஆ.
1885 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி, 1337, வ.து.வா. சே.
1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139, வ.து.வா.செ.

16. மாமூல் தரிசு.—மாமூல் தரிசைப் பொறுத்தவரையில் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படமாட்டாது.

குறிப்புகள் :—

குறிப்பு.—மாமூல் தரிசு என்பது ஒரு சாதாரண ஆண்டில் ஒழுங்காகப் பயிர் விளைவிக்கப்படாமலும், பருவ காலமும் தண்ணீர் வசதியும் இயல்பாக இருந்திருக்கு மாயினும் பயிர் விளைவிக்கப்படாமலும் விடப்பட்டிருக்கக்கூடும் என்பதாகக் கருத தக்க அனுபோகத்திலிருக்கும் நிலமாகும்.

1898 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் தேதி ,761, அ.ஆ.
1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139, வ.து.வா.செ.
1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி, 401, அ.ஆ.
1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 139, வ.து.வா.செ.

17. தாசில்தார்கள் தீர்வை வசூலிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.—இந்நிலை ஆணையின் கீழ், நிலைமையை அனுசரித்து ஜமாபந்தியில் நிச்சயமாக தள்ளிக் கொக்கப்படத்தக்கத் தீர்வைகளை வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்குரிய காரணங்களை எழுத்து வடிவில் விவரித்துக் காட்டி, அவற்றை வசூலிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தாசில்தார்கள் ஆணையிடலாம். தாசில்தார்கள் அவ்வாறு செய்யும்போது கலெக்டருக்கும் கோட்ட ஆட்சி யாளர்களுக்கும் அத்தகைய ஆணையின் பிரதிகளை உடனடியாக மேலனுப்ப வேண்டும்.

1921 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி, 81, வ.து.வா.செ.நிர்.

14. வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் நிலத் தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைத்தலும் அதைத் தள்ளிக் கொடுத்தலும்—வழக்கத்திற்குமாறான சூழ்நிலைகளில் நிவாரணம் அளித்தல்.—பஞ்சம், வறட்சி அல்லது பொதுவாகப் பயிர் விளையாமை ஆகிய இத்தகைய பரவலான இடர்கள் அல்லது ஆலங்கட்டி, வெள்ளப்பெருக்கு, வெட்டுக் கிளிகள் ஆகிய இவை போன்றவற்றாலும், அவ்வவ் விடங்களில் இடர்கள் நேரிடக்கூடிய வழக்கத்திற்கு மிகவும் மாறுபட்ட சூழ் நிலைகளில் கீழ்க் கண்டுள்ள விதிகளை அனுசரித்துத் தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைக்கலாம் அல்லது தீர்வையை தள்ளிக் கொடுத்தும் விடலாம்.—

குறிப்பு.—இந்நிலை ஆணையில் கூறப்பட்டுள்ள காரணங்கள் தவிர மற்ற காரணங் களுக்காகத் தீர்வை வசூலிப்பதை ஒத்தி வைத்தோ அல்லது மற்ற வழியிலோ தனி நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கலெக்டருக்குத் தோன்று மாகில் ,அவர் இவ்வகையில் அரசினரிடமிருந்து ஆணைகள் பெறுவதற்காக வருவாய்த் துறை வாரியத்திற்கு விவரமான அறிக்கை உடனடியாக அனுப்ப வேண்டும்.

1931 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி, 912, அ.ஆ.வரு.பலவ.
1931 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதி, 1405, வ.து.வா.செ.பலவ.

[நி. ஆ. 14:1–2

அ. பரவலான இடர்கள்—

அ. பரவலான இடர்கள்.—தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைத்தல் அல்லது தீர்வையைத் தள்ளிக்கொடுத்தல்.—

1. நிலத் தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்கு அல்லது அதைத் தள்ளிக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை வருவாய்த்துறை அலுவலர்கள் முதலில் துவக்கித் தம் கருத்துக்களை எழுதி மேலனுப்ப வேண்டும்.—வழக்கத்திற்கு மாறுபட்ட அல்லது பஞ்ச காலங்களில் பொதுவாகப் பயிருக்கு இழப்பு, ஏற்பட்டிருக்கும்போது, வறட்சி அல்லது பஞ்ச காலங்களில் பருவத்தின் அறிகுறிகள் தோன்றியவுடன் பயிர்கள் முழுமையும் பார்வையிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வருவாய்த் துறை அலுவலர்கள் தொடங்கி; அவசியமானால் கீழே கண்டுள்ள 2 ஆவது முதல் 6 ஆவது பத்தி வரையிலும் உள்ள குறிப்பிட்ட முறையில் தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்கு அல்லது தீர்வையை தள்ளிக் கொடுப்பதற்குப் பிறப்பிக்கத்தக்க ஆணைகளைப் பெறுவதற்காக வருவாய்த் துறை வாரியத்திற்கும் அரசாங்கத்திற்கும் யோசனை அறிக்கைகளை அனுப்ப வேண்டும்.

1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதி, 523, ஆ. ஆ. 8 ஆவ பத்தி.

2. நிவாரணம் ஏதாவது அளிக்க வேண்டியது அவசியமா என்பதைப் பற்றியும் அத்தகைய நிவாரணம் தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைக்கத்தக்க அல்லது தீர்வை தள்ளிக் கொடுக்கத்தக்க வகையில் இருக்கவேண்டுமா என்பதில் முடிவு செய்வதற்குச் சிந்தனை செய்ய வேண்டிய சூழ்நிலைகள்.—நிவாரணம் அளிக்கப்படுவதற்காக யோசனைகளை மேலனுப்புவதிலும் மற்ற வற்றினோடு கீழ்க்கண்டவற்றையும் கலெக்டர்கள் தங்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் :—

(அ) எந்த நிலப் பகுதியைப் பற்றி அறிக்கை செய்யப்படுகிறதோ அந்நிலப் பகுதியில் அந்த ஆண்டின், ஒன்று முந்தியதும் மற்றையது பிந்தியதுமான இரண்டு புன்செய்ப் பயிர்களின் மதிப்பீடு.

(ஆ) இதற்கு முந்திய இரண்டாண்டுகளில் அந்நிலப் பகுதியின் வரலாறு.

(இ) அந்நிலப் பகுதியில் கிணறுகள் உட்பட நீர்ப்பாசன ஆதாரங்கள் ஏராளமாக அல்லது சொற்பமாக உள்ளனவா என்பதைப் பற்றி விவரமும் அந்த ஆண்டு நீர்ப்பாசனத்தின் பயன்களைப் பற்றியும் அந்நிலப் பகுதியில் புன்செய் விவசாயம் முக்கியத்துவம் வகித்துள்ளதா அல்லது அது சார்நிலைத் தன்மையில் இருக்கிறதா என்பதையும் பற்றிய விவரம்.

(ஈ) அந்த ஆண்டின் விளைபொருள்களின் நடப்பு விலைகளைப் பற்றியும் அடுத்த படுவத்திலும் விலைகள் உயரக் கூடுமாவென்பது.

(உ) நிவாரணம் அவசியமென்றே அல்லது நிவாரணம் அவசியமில்லையென்றே காட்டக்கூடிய அந்திப் பகுதியின் தனிச் சூழ்நிலைகள்.

1900 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி, 36, வ.து.வா.செ.நிர். 2 ஆவது பத்தி.

நீ .ஆ. 14:3]

3. தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைத்தல்.—(i) குறிப்பிட்ட தவணைக்குரிய நிலத் தீர்வை குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே நிறுத்தி வைக்கத் தக்கது. இத்தகைய குறிப்பிட்ட காலமும் நடப்புப் பசலிக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடாது.—குறிப்பிட்ட தவணைக்குரிய நிலத்தீர்வையை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே நிறுத்தி வைக்கத்தக்கது. இத்தகைய குறிப்பிட்ட காலமும் நடப்புப் பசலிக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடாது. அரசினரின் ஒப்பளிப்பில்லாமலே நடப்புப் பசலிக்கப்பாற்பட்ட காலத்திற்குத் தீர்வையை வசூலிக்காமல் நிறுத்திவைப்பதற்குரிய ஆணையை வருவாய்த் துறை வாரியம் பிறப்பிக்க வேண்டும். ஆனால், அவ்வாறு தீர்வை வசூல் நிறுத்தி வைக்கிற ஆணை வசூல், தேதிக்கு முன்னரே பொது மக்களுக்கு பகிரங்கமாக்கப்படுவது விரும்பத்தக்கதாகும். ஆதலால், வருவாய்த்துறைக் கழகத்தின் ஒப்பளிப்பை, தீர்வை வசூல் ஆரம்பமாகும் தேதிக்கு முன்னதாகப் பெற இயலாதென்றால், பசலிக்குள் குறிப்பிட்ட காலத்திற்குத் தீர்வை வசூலிப்பதை ஒரு ஆணை பிறப்பித்து ஒத்தி வைக்கலாம். இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இதைப் பற்றி உடனடியாக வருவாய்த் துறை வாரியத்திற்கு அறிவிக்க வேண்டும். தீர்வை வசூலிப்பதை ஒத்தி வைக்கக் கலெக்டர் அல்லது வருவாய்த் துறை வாரியம் ஆணை பிறப்பித்தவுடனேயே, சம்பந்தப்பட்ட கிராமங்களிலேனும் சம்பந்தப்பட்ட நிலப் பகுதிகளிலேனும் உள்ள குடியானவர்கள் அவ்வாணையைத் தெரிந்து கொள்வதற்காகத் தமுக்கடிப்பினால் அல்லது மற்ற வகைகளில் அவ்வாணையை உடனடியாகப் பகிரங்கமாக்க வேண்டும்.

1914 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ஆம் தேதி, 343, வ.து.வா.செ.
1918 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15-ஆம் தேதி, 57, வ.து.வா.செ. நிர்.

இந்த நிலை ஆணையின் கீழ் நிலை மதிப்புள்ள நிலங்களை ஒப்படை செய்வதற்குள்ள அதிகாரங்கள் நடப்பு விலை மதிப்பின் அளவைக்கியலில் கீழ்க்காணும் அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன :—

அதிகாரி.	நடப்புவிலை மதிப்புத் தொகை.
(1)	(2)
கோட்ட ஆட்சியாளர்கள்	2,000 ரூபாய் வரையில்
மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட வருவாய்அலுவலர்களும்	5,000 ரூபாய் வரையில்
வருவாய் வாரியம்(முழு)	10,000 ரூபாய் வரையில்

10,000 ரூபாய்க்கு மேற்பட்டவை ஆணை பிறப்பிக்கப்படுவதற்காக அரசினருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(ii) குறிப்பான ஆணைகள் வரப் பெறுவதற்குள் தீர்வை வசூலிப்பதை ஒத்தி வைத்த காலம் முடிவடையுமானால், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை.—தீர்வை வசூலிப்பது அல்லது தீர்வை தள்ளிக்கொடுப்பது பற்றிக் குறிப்பான ஆணைகள் வரப் பெறுவதற்கு முன்னர், முன்னுள்ள உட்பிரிவின் கீழ்த் தீர்வை வசூலிப்பதை ஒத்தி வைத்த காலம் முடிவடையுமானால், தீர்வை வசூல் நிறுத்தி வைத்த காலத்தைக் கலெக்டர், அந்த பசலிக்குள் மேற்கொண்டும் அவ்வாறு தாம் எடுத்த நடவடிக்கையைப்பற்றி வருவாய்த் துறை வாரியத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்ப வேண்டும்.

(iii) தீர்வையைத் தவணைகளில் வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்கு, நிதி நிலை எவ்வாறுக்க் கூடும் என்பதைப்பற்றி வருவாய்த் துறை வாரியம் அரசினருக்கு அறிக்கை அனுப்பவேண்டும்.—நிதியாண்டுக்கப் பால் நிலத் தீர்வையைத் தவணைகளில் வசூலிப்பதை ஒத்தி வைக்கும்பொழு தெல்லாம் வருவாய்த்துறை வாரியம் தனது ஆணையின் நகல் அல்லது ஆணை கலெக்டரால் பிறப்பிக்கப்பட்டிருந்தால், அவர் பிறப்பித்த ஆணையின் நகலை அரசாங்கத்தின் வருவாய்த்துறைக்கும், நிதித் துறைக்கும் உடனடியாக அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்வதோடு, நிலத் தீர்வை வசூலிக்கத்தக்க நிதி ஆண்டின் திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீட்டையும், நிலத் தீர்வை வசூலித்ததில் ஒத்திவைக்கப்பட்ட நிதி ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப் பீட்டையும், தீர்வை வசூலிப்பதை ஒத்தி வைத்தது எவ்வாறு பாதிக்கும் என்பதைப்பற்றிய தகவலையும் அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும். ஆகையால் தீர்வை வசூலிப்பதை ஒத்தி அல்லது நிறுத்தி வைக்கத் தாங்கள் பரிந்துரை பகரும்போதெல்லாம் அல்லது ஆணை பிறப்பிக்கும் போதெல்லாம் தாங்கள் அனுப்பிய யோசனைகளினால் வருவாய் நிலை சம்பந்தமாக ஏற்படக் கூடியதைப் பற்றி வருவாய்த்துறை வாரியத்திற்கு கலெக்டர்கள் அறிக்கை அனுப்ப வேண்டும்.

1938 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி, 521, வ.து.வா.செ.

1938 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி, 105, எண், வ.து.வா.செ. அச்சு.

(iv) தீர்வை வசூலிப்பதை பசலிக்கப்பால் நிறுத்தி வைப்பதற்கும், தீர்வையைத் தள்ளிக் கொடுப்பதற்கும் அரசினருக்கே அதிகாரம் உண்டு.—ஒரு பசலிக்கப்பால் தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்கும் தீர்வையைத் தள்ளிக் கொடுப்பதற்கும் ஒப்பளிப்பு அளிக்கத்தக்கவர் அரசினரேயாவர். ஆகையால் இந்தப் பத்தியின் கீழ் வசூல் நிறுத்தி வைக்கப்பட்ட தீர்வை வசூலிப்பதை பசலிக்கப்பாலும் நிறுத்தி வைக்க வேண்டியது அல்லது வழக்கத் திற்கு மாறுபட்ட சூழ்நிலைகளில் நிறுத்தி வைத்த தீர்வையை ஒத்தி வைக்க வேண்டியது முற்றிலும் அவசியமென்று கலெக்டர் கருதுவாரெனில் நிறுத்தி வைத்த காலம் முடிவடைவதற்கு முன்னதாக அல்லது பசலி முடிவடைவதற்கு முன்னதாக இதில் வருவாய்த் துறைக் கழகத்தின் ஆணைகளையும், அரசினரின் ஆணைகளையும் வரப் பெறுவதற்காக, போதுமான அவகாசம் இருக்குமாறு முன்னதாகவே அவர் தமது பரிந்துரையை வருவாய்த் துறை வாரியத்திற்குப் பகர வேண்டும்.

1905 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதி, 3-99-2, இந்திய அரசாங்கத் தீர்மானம் (8-ஆவது பத்தியிலிருந்து 11 வரையிலும்).

1905 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதி, 461-99-3, இந்திய அரசாங் கத்தின் கடிதம் (3-வது பத்தி).

1905 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் தேதி, 1131, இந்திய அரசாங்கத் திற்கு மாநில அரசாங்கத்தின் கடிதம் (4-ஆவது பத்தி).

(v) ஜமீன் உரிமை வரி வசூலிப்பதை நிறுத்தி வைத்தல்.—பொது வாகப் பயிர்களுக்கு இழப்பு நேர்ந்த காரணமாகவும், பரவலான இடர்கள் காரணமாகவும் ஜமீன் உரிமைப் பகுதிகளில், ஜமீன் உரிமை வரியையும் மேல் வரிகளையும் வசூலிப்பதைப் பசலி ஆண்டிற்குள் நிறுத்தி வைக்க வருவாய்த்

நி. ஆ. 14:3-4]

துறை வாரியம் அதிகாரம் பெற்றிருக்கிறது. அத்தகையவற்றில் வேண்டிய ஆணைகளைப் பெறுவதற்குக் கலெக்டர்கள் வருவாய்த்துறை வாரியத்திற்கு எழுதிக்கொள்ள வேண்டும். அத்தகைய வாவினங்கள் வசூலிப்பதைப் பசலிக் கப்பால் நிறுத்தி வைப்பதற்கு வேண்டிய யாதொரு யோசனையையும், வருவாய்த் துறை வாரியம் வழியாக அரசினருக்கு மேலனுப்பி அவர்கள் ஆணையைப் பெறவேண்டும்.

1936 ஆம் ஆண்டு மார்ச் மாதம் *3* ஆம் தேதி, *499*, அ.ஆ.வரு.
1936 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *17* ஆம் தேதி, *50*, வ.து.வா.செ.
1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் *9* ஆம் தேதி, *2310*, அ.ஆ.வரு.பலவ.
1956 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் *20* ஆம் தேதி, *1169*, வ.து.வா. செ.பலவ

4. நன்செய் நிலங்களின் தீர்வையைத் தள்ளிக் கொடுத்தல்.—(i) நிலத்திலுள்ள பயிருக்கு முற்றிலும் இழப்பு ஏற்பட்டால்.—நன்செய் நிலங்களிலுள்ள பயிருக்கு முற்றிலும் இழப்பு ஏற்பட்டிருக்குமாயின் 13-வது நிலை ஆணையில் உள்ள விதிகளை அனுசரித்துப் பருவ காலத்திற்கு ஏற்றவாருக தீர்வையைத் தள்ளிக் கொடுக்கலாம்.

(ii) நிலத்திலுள்ள பயிருக்கு ஒரு பகுதி இழப்பு ஏற்பட்டால்.—நன்செய் நிலங்களில் உள்ள பயிருக்கு ஒரு பகுதி இழப்பு மட்டும் ஏற்பட்டிருப்பின், அரசினர் தங்கள் ஒப்புதலைத் தந்திருப்பார்களானால், நிலத் தீர்வை நிர்ணயம் செய்யப்பட்ட நிலப் பகுதிகளிலும், நிர்ணயம் செய்யப்படாத நிலப் பகுதிகளிலும், நிலத் தீர்வை நிர்ணயம் செய்யப்படாத நிலப் பகுதிகளைச் சம்பந்தமான 13-வது நிலை ஆணை (II)-ஆவது பிரிவின் கீழ் உள்ள விதிகளை அனுசரித்தும், இவ்வாறு தீர்வை தள்ளிக் கொடுக்கப்படும் முழு நிலப் பகுதியின் சராசரி இழப்பை அனுசரித்தும், தீர்வையைத் தள்ளிக் கொடுக்கலாம்.

1889 ஆம் ஆண்டு மே மாதம் *21* ஆம் தேதி, *249*, வ.து.வா.செ.

1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் *7* ஆம் தேதி, *172*, வ.து.வா.செ.நிர். *12*-ஆவது பத்தி

1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் *10* ஆம் தேதி, *185*, வ.து.வா.செ. *4* ஆவது பத்தி.

1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் *11* ஆம் தேதி, *523*, அ.ஆ.அ.ஆ.*5* ஆவது பத்தி.

(iii) மாமூல் தரிசு.—தண்ணீர் இல்லாத காரணத்தினால் யாதொரு நன்செய் மாமூல் தரிசு நிலமும் எவ்வகையிலும் விவசாயம் செய்யப்பட்டிருக்க முடியாதென்றால், அதே சமயத்தில், கலெக்டர் அத்தகைய நிலங்களின் உரிமையாளர்களுக்குத் தனி நிவாரணம் அளிக்க வேண்டுமென்று தாம் கருதுவதற்கு ஏற்ற காரணங்கள் நன்கு விளக்கப்படுமாயின், அத்தகைய நன்செய் தரிசு நிலத்தை, இந்தப் பத்தியில் (i)-ஆவது அல்லது (ii)-ஆவது உட்பிரிவின் கீழ் நிலத் தீர்வை தள்ளிக் கொடுப்பதற்காகக் கலெக்டர் தம் யோசனைகளைத் தயாரிக்கும்போது அவ்வாறு தீர்வை தள்ளிக்கொடுக்க உத்தேசிக்கப்படும் நிலப் பகுதியுள் சேர்த்துக் கொள்ளலாம்.

குறிப்பு.—மாமூல் தரிசு என்பது ஒரு சாதாரண ஆண்டில் ஒழுங்காகப் பயிர் விளைவிக்கப்படாமலும், பருவ காலமும் தண்ணீர் வசதியும் இயல்பாக இருந்திருக்கும்போதிலும் பயிர் விளைவிக்கப் படாமலும் விடப்பட்டிருக்கக்கூடும் என்பதாகக் கருதத்தக்க அனுபவத்திலிருக்கும் நிலமாகும்.

1902 ஆம் ஆண்டு ஜூன் மாதம் *11* ஆம் தேதி, *523*, அ.ஆ. *7* ஆவது பத்தி,

(iv) ஒரே வகையான வீதம் விதிக்க இயலாதபோது.—இழப்பு அதிக அளவில் ஏற்பட்டிருப்பினும், அது ஒரு சிறிய ஏரியின் ஆயக்கட்டுபோல வரையறுத்த பரப்பிற்கு மாத்திரம் ஏற்பட்டிருக்குமானால், அத்தகைய நிலப் பகுதியின் தீர்வை தள்ளிக் கொடுப்பதற்கு ஒரே வகையான வீதத்தை நிச்சயம் செய்ய இயலாதபோது, அந்நிலப் பகுதி முழுவதற்குமே ஒரே சதவீதத்தில் தீர்வையைத் தள்ளிக் கொடுப்பதற்குப் பதிலாக, பயிர் முழுவதற்கும் இழப்பு நேர்ந்த நிலங்களின் பாகங்களுக்கு மாத்திரம் கிழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட் பட்டுத் தீர்வையைத் தள்ளிக் கொடுப்பதில் தேவையான ஒப்பளிப்பைப் பெறுவதற்குக் கலெக்டர்கள் பிறப்பாகப் பரிந்துரை பகர்வார்கள். ஆனால் அத்தகைய ஒவ்வொரு பாகத்தின் பரப்பும், ஒரு ஏக்கருக்குக் குறைந்திராமல் இருக்க வேண்டுமென்பதைத் தவிர நிலத் தீர்வை தள்ளிக் கொடுக்கத்தக்க ஒவ்வொரு நிலமும் தக்க வகையில் பார்வையிடப்பட்டு அதன் இழப்பு உரிய முறையில் சரி பார்க்கப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஜமாபந்தி அலுவலர் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் செய்து கொள்ள முடியுமான நிலை இருக்க வேண்டும்.

5. புன்செய் நிலங்களின் தீர்வையைத் தள்ளிக்கொடுத்தல்—(i) தனித் தனி நிலங்களில் ஏற்பட்ட இழப்பை அனுசரித்து இல்லாமல் நிவாரணத்தைப் பெறும் முழு நிலப் பகுதியில் ஏற்பட்ட சராசரி இழப்பை அனுசரித்து ஒரே வகையான வீதங்களில் தள்ளிக் கொடுக்கவேண்டும்.—அரசாங்க நீர்ப்பாசன ஆதாரங்களின் நீர்ப் பரப்பில் உள்ள தனித் தீர்வை விதிக்கப்பட்ட நிலங்கள் உட்படப் புன்செய் நிலங்களிலுள்ள பயிரின் இழப்பிற்குத் தீர்வை தள்ளிக் கொடுப்பதற்கு அரசினர் ஒப்பளிப்பு இருப்பின், அவற்றிற்குக் கீழே கண்டுள்ள பிரிவில் கொடுத்திருக்கும் அளவை அனுசரித்து நிலத் தீர்வையைத் தள்ளிக் கொடுக்கலாம். ஆனால், இது தனித் தனி நிலங்களில் ஏற்பட்ட இழப்பை அனுசரிக்காமல் நிவாரணத்தைப் பெறும் முழு நிலப் பகுதியில் ஏற்பட்ட சராசரி இழப்பை அனுசரித்து ஒரே வகை வீதங்களில் தள்ளிக் கொடுக்க வேண்டும்.

1941 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி, 319, அ.ஆ.வரு.பல.
1898 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் தேதி, 761, அ.ஆ.
1941 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 34, வ.து.வா. செ.அச்சு.
1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி, 401, அ.ஆ.

(ii) எந்த அளவை அனுசரித்துத் தீர்வையைத் தள்ளிக்கொடுக்கலாம்.—சராசரி விளைவு சாதாரண விளைவில் பாதி அல்லது அதற்கு அதிகமாக இருக்கும் நிலப் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படமாட்டாது. இதற்குக் குறைந்திருக்குமானால் கீழ்க்கண்ட அளவை அனுசரித்துச் சாதாரணமாகத் தீர்வையைத் தள்ளிக் கொடுக்கலாம்:—

விளைவு சராசரி விளைவின் பாதிக்கும் மூன்றில் ஒரு பங்குக்குமிடையே இருக்குமானால்.	இருபத்தைந்திலிருந்து ஐம்பது சதவீதம் வரையில்.
அது மூன்றில் ஒரு பங்கிற்கும் ஆறில் ஒரு பங்கிற்குமிடையே இருக்குமானால்.	ஐம்பதிலிருந்து எழுபத்தைந்து சதவீதம் வரையில்.

கி. ஆ. 14:5-67

அது ஆறில் ஒரு பங்காக அல்லது அதற்குக் குறைந்ததாக இருக்குமானால். எழுபத்தைந்திலிருந்து நூறு சதவீதம் வரையில்.

1885 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் தேதி, 810, வ.து.வா.செ.

1887 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் தேதி, 457, வ.து.வா.செ.

1889 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதி, 64, வ.து.வா.செ.நிர்.

1896 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதி, 328, வ.து.வா.செ. 4-ஆவது பத்தி.

குறிப்பு.—பாதிக்கப்பட்ட நிலப்பகுதியின் சராசரி விளைவை மதிப்பீடு செய்யும் வகையில், பாதுகாப்புப் பெற்ற நிலங்கள், அவையாவன, கிணறுகளிலிருந்தும் துரவுக் கிணறுகள் முதலியவற்றிலிருந்தும் நீர் பாய்ச்சப்பட்ட நிலங்கள் (ஈச்ச மரங்கள், பனை மரங்கள் முதலிய) நிலையான தோப்புகள் அடங்கிய எல்லா நிலங்கள் மாமூல் புன்செய் தரிசு நிலங்கள் ஆகிய இந்நிலங்களில் விளைந்த பயிரை விலக்கிட வேண்டும். இருப்பினும், கணிசமான விளைவு நன்முய் விளைந்த மற்ற நிலங்களின் பயிரையும், மழையில்லாத காரணத்தால் விவசாயம் செய்யாமல் விட்டுவிடப்பட்ட நிலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாமூல் தரிசு என்பது ஒரு சாதாரண ஆண்டில் ஒழுங்காகப் பயிர் விளைவிக்கப் படாமலும், பருவ கலமும் தண்ணீர் வசதியும் இயல்பாக இருக்குமாயினும் பயிர் விளை விக்கப்படாமலும் விடப்பட்டிருக்கக் கூடும் என்பதாகக் கருதத்தக்க அனுபவத் திலிருக்கும் நிலமாகும்.

1900 ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி, 465, அ.ஆ.

1900 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி, 935 அ. ஆ.

(iii) தரிசாய் விட்டு விடப்பட்டிருக்கும் நிலத்திற்கு அளிக்கத்தக்க நிவாரணம்.—சம்பந்தப்பட்ட நிலப் பகுதியில் பயிர் இழப்பு ஏற்பட்டதற்கு எவ்விதத்தில் நிவாரணம் அளிக்கப்படலாமோ, அதே விதத்தில் மாமூல் தரிசைச் தவிர அனுபோகத்திலுள்ள மற்றப் புன்செய் தரிசிற்கும் நிவாரணம் அளிக்கப்படும்.

1898 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ஆம் தேதி, 61, அ.ஆ.வரு.

1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி, 401, அ.ஆ.

6. அனுமதியில்லாமல் விவசாயம் செய்யப்படும் நிலங்களும் சிறு இனம் நிலங்களும்.—அனுமதி பெறுமல் விவசாயம் செய்யப்படும் நிலங்களைப் பொறுத்தமட்டில் அத்தகைய விவசாயம் செய்வதற்கு ஆட்சேபனையில்லை என்பதாகக் கலெக்டர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் கருதுவாரெனில், சாதாரண அரசுக்குடி நிலங்களுக்கு எத்தகைய சலுகைகள் அளிக்கத் தக்கனவோ அத்தகைய சலுகைகள் அளிக்கப்படலாம்; முழுத் தீர்வை விதிக்கப்பட்ட அல்லது முழுத் தீர்வைக்குச் சமமான அல்லது அதற்கு அதிகமாக இனம் விடுவரி அல்லது ஜோடி விதிக்கப்பட்டுள்ள சிறு இனம் நிலங்களுக்கும் இத்தகைய சலுகைகள் அளிக்கப்படலாம். மற்றச் சிறு இனம் நிலங்களை பொறுத்த மட்டில் பிரத்தியேகமானவற்றில் மாத்திரமே சலுகைகள் அளிக்கப்படும். அவ்வாறு செய்வதற்குக் கலெக்டர் முழுக் காரணங்களையும் குறிப்பிட வேண்டும்.

1892 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி, 275, வ.து.வா.செ 8 ஆவது பத்தி.

(இந்திய அரசாங்கத்திற்கு மாநில அரசினர் எழுதிய 1906-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி கடிதம் 181, 2 ஆவது பத்தி.)

[தி. ஆ. 14:7-8

7. (i) திருப்பிக் கொடுத்தல்.—தீர்வை தள்ளிக் கொடுக்கப்பட்ட தொகைகள் முன்னமே வசூலிக்கப்பட்டிருந்தாலும் அவை அவ்வப்போது நண்டமுறையிலிருக்கும் விதிகளை அனுசரித்துத் திருப்பித்தரத்தக்கன.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் தேதி, 2310, அ.ஆ. வரு.

1956 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதி, 1169, வ.து.வா.செ. பலவ.

7 (11) மேல் வரிகள்—நிலந்தீர்வை நிறுத்தி வைப்பதே சாதாரணமான அதனுடன் மேல் வரிகளை நிறுத்தி வைப்பதாகாது. இதை நிலத்தீர்வையில் எத்தனை விகிதம் நிறுத்தி வைக்கலாம் என்று பரிந்துரை செய்யாது. மாவட்ட ஆட்சியர் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் யாதொரு ஊரின் தீர்வைத் தவணைத் தண்டல் முழுவதும் நிறுத்தி வைக்கப்படும் போது மேல்வரிக்காக உள்ள கேட்புத்தொகை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு துன்பமான நேரங்களில் சிறுதொகைகளின் கேட்பினால் தனிப்பட்ட தீர்வை செலுத்துவோர்கள் துன்பத்திற்குள்ளாக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக உள்ள படியாகத் தண்டல் செய்யப்படும் நில வருவாயில் அடுத்த தவணையோடு சேர்த்துத் தண்டல் செய்யப்பட வேண்டும்.

உள்ளூர் மேல்வரி, உள்ளூர் மிகுமேல்வரி ஆகியவற்றின் தண்டல், தீர்வை தள்ளிக்கொடுக்கும்போது நிகரக் கேட்புகளின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

(1971 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 ஆம் நாளும் 819 (ஊ) எண்ணுமிட்ட நீலை வா.வ.நி.செ.)

(1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாளும் 4066 எண்ணுமிட்ட அ.ஆ.வரு.)

II. நிறுத்திவைக்கப்பட்ட நிலத்தீர்வையைச் சரிக்கட்டிக் கொள்ளுதல்.

8. நிறுத்தி வைக்கப்பட்ட நிலத் தீர்வையை எவ்வகையில் வசூலிக்க வேண்டும்.—நிறுத்தி வைக்கப்பட்ட தீர்வையை வசூலிப்பதற்கு முன்னதாகத் தீர்வையை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் மேற்பட்ட அனுகூலமற்ற பருவத்தினால் நேர்ந்த பலன்களிலிருந்து மீண்டு கொள்ளக் குடியானவர்களுக்கு அவகாசம் ஏளவு கொடுக்க வேண்டும். ஆகையால் 3 ஆவது பத்தியின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட தீர்வையைத் தீய பருவத்திற்குப் பின்னர் கணிசமான அளவில் நன்றாக விளைந்த பயிர் அறுவடையாகும் வரையில் வசூலிக்கக் கூடாது. தீர்வையை நிறுத்தி வைக்கப்பட்ட ஆண்டிற்கு அடுத்து வரும் ஆண்டின் நிலத் தீர்வை தவணை ஆரம்பத்திற்கு ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்னமே, அந்த ஆண்டின் ஆரம்ப காலத்துப் பயிர்களின் நிலைமை எவ்வாறுள்ளது என்பதைப் பற்றியும், நிறுத்தி வைக்கப்பட்ட தீர்வை முழுவதையும் நடப்புத் தீர்வைத் தவணைகளுடன் சேர்த்து வசூலிக்கலாமா அல்லது அவ்வாறு முழுவதையும் வசூலிக்கக் கூடாதென்றால், அதில் எவ்வளவு பகுதியை அவ்வாறு வசூலிக்கலாம் என்பதில் இவ்வகையில் கவனம் செலுத்தப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்காக, வருவாய்த்துறை வாரியத்திற்கும் அரசாங்கத்திற்கும் கலெக்டர் அறிக்கை அனுப்ப வேண்டும். நிறுத்தி வைக்கப்பட்ட தீர்வை முழுவதும் வசூலாகும் வரையில் அல்லது அந்த ணைக்கி விருந்து தள்ளுபடி செய்யப்படும் வரையில், அடுத்து வரும் தீர்வைத் தவணைகளுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தீர்வையில் எவ்வளவு பகுதியை

நி. ஆ. 14:8-10]

வசூலிக்கலாம் என்பதைப் பற்றிய அறிக்கைகள் அடுத்து வரும் ஆண்டுகளிலும் அனுப்பப்பட வேண்டும்.

1905 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதி இந்திய அரசாங்கத் தீர்மானம் 3-99-13 (VII)-ஆவது பத்தி.

9. நிறுத்தி வைக்கப்பட்ட நிலத் தீர்வைத் தவணைகளை எச்சந்தர்ப் பங்களில் தள்ளிக் கொடுத்தல் நியாயமாகும்.—மூன்று ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தீர்வையைச் சாதாரணமாக நடைமுறையில் தள்ளிக் கொடுக்க வேண்டும். இதற்காகவே, இத்தொகையை வசூலிக்க முடியாத மும்மாத நிலுவை விவரப் பட்டியில் சேர்க்க வேண்டும். மேலும் நிலையான தீர்வை முழுவதும் விதிக்கப்பட்டுள்ள நிலப் பகுதியில் ஒரே சீராக நன்றாய் விளைந்த நிலங்களுக்குரிய நிறுத்தி வைக்கப்பட்ட தீர்வைத் தொகை குறிப்பிட்ட யாதொரு காலத்திலுமே ஒரு சாதாரண ஆண்டின் கேட்புத் தொகைக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்பது விதிமுறை. இத்தலைப்புத் தொகை இந்த வரம்பிற்கு அதிகமாக இருக்குமானால் அந்த அதிகத் தொகை தள்ளிக் கொடுக்கப்படுவதற்கு மேலே காட்டப்பட்டுள்ளவாறு பரிந்துரை பகரலாம். மழை நிச்சயம் இல்லாத காரணம் அல்லது மற்றக் காரணங்களைக் கொண்டு மிகக் குறைந்த நிலையில் தீர்வை விதிக்கப்பட்டுள்ள நிலங்களில் பெருக்கமான விளைவு கிடைக்கக்கூடிய ஆண்டில், மக்கள் ஒரு ஆண்டிற்கு உரிய தீர்வையைவிட மிகவும் அதிகமாகச் செலுத்த முடியும். இத்தகைய நிலப் பகுதிகளுக்குச் இச்சலுகைகள் நடைமுறைப் போக்கில் பொருந்தா.

(அ) எடுத்துக் காட்டு.—1318 ஆம் பசலியில் செலுத்தத்தக்க தீர்வை 1318, 1319, 1320 ஆம் பசலிகளில் வசூலிக்கப்பட்டாமலிருந்தால், அது மூன்று ஆண்டுகளாக வசூலிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

1905 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதி இந்திய அரசாங்கத் தீர்மானம் 3-99-2 12(V)ஆவது பத்தி.

(அ) 1910 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி, 4025 என் அ. ஆ.

(ஆ) 1910 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி, 608 என் வ. து. வா. செ. நிர்.

(ஆ) அந்த அந்தத் தலத்து இடர்கள்—

10. அந்த அந்தத் தலங்களில் நேரிடும் இடர்களின் நிமித்தமாக நிவாரணம் அளிப்பதற்குரிய விதிகள்.—பாவலான இடர்கள் நேரிடும்போது நிவாரணம் அளிப்பதற்கு அனுசரிக்க வேண்டிய விதிகளாகிய அவ்விதிகளில் மேலே 1 முதல் 9 வரையிலும் உள்ள பத்திகளில் வகுக்கப்பட்டுள்ள விதிகள் கீழ்க் கண்டுள்ள மாறுதல்களுக்குட்பட்டு அந்த அந்தத் தலங்களில் நேரிடும் இடர்களில் அளிக்க வேண்டிய நிவாரணத்திற்கும் பொதுவாகப் பொருந்தும்—

(i) புலன்களைத் தொடர்ச்சியாகப் பார்வையிட்ட தணிக்கை அடிப் படையில் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.—இத்தலைப்பு நிவாரணம் பாதிக்கப்பட்ட நிலப் பகுதி முழுவதற்கும் ஒரே அளவில் அளிக்கப்படுவதற்குப் பதிலாக, தனிப்பட்டவர் ஒவ்வொருவருக்கும் நேர்ந்த உண்மையான இழப்பைத் தீர்மானிக்கும் பொருட்டுச் சம்பந்தப்பட்ட புலன்களைத் தொடர்ச்சியாகப் பார்வையிட்ட தணிக்கை அடிப்படையில் இருக்கவேண்டும்.

[நி. ஆ. 14:10, 15:1

(ii) குறிப்பாக ஒவ்வொன்றிக்கும் உள்ள நிலைமையை அனுசரித்து அளிக்கத்தக்க நிவாரணங்களின் அளவை அரசினர் தீர்மானிப்பார்.—மேலே கண்டுள்ள 5 ஆவது பத்தியில் குறிப்பிட்ட நிவாரண அளவுக்குப் பதிலாக, குறிப்பாக ஒவ்வொன்றின் நிலைமையை அனுசரித்து அதற்கு அளிக்கத்தக்க நிவாரணத்தின் அளவை அரசினர் தீர்மானிப்பார்.

(iii) நிலத்தின் உரிமையாளர் அல்லது குடியானவரின் சொத்து அல்லது நிலம் முழுவதையும் சேர்த்துக் கணக்கிட்டுக்கொண்டு நிவாரணம் எவரால் கோரப்படுகிறது என்பதைத் கவனித்துப் பார்க்க வேண்டும்.—நிவாரணம் அளிப்பது அவசியமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் பாதிக்கப்பட்ட நிலத்தில் மாத்திரம் கவனிப்பதுடன் நின்றுவிடாமல், சம்பந்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர் அல்லது குடியானவரின் சொத்து அல்லது நிலம் முழுவதையும் சேர்த்துக் கணக்கிட்டுக் கொண்டு, நிவாரணம் எவரால் கோரப்படுகிறது என்பதையும் கவனித்துப் பார்க்க வேண்டும்.

1905 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி இந்திய அரசாங்கத்தின் தீர்மானம் 3–99–2 (18)-ஆவது பத்தி.)

1905 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் தேதி, 83 எண், வ.து.க.செ நிர்.

பாகம் II —நிலத்தைக் கொடுக்க முடிவு செய்தல்.

15. 1. தீர்வை செலுத்துவதற்குட்பட்டு அனுபோகம் செய்துகொள்வதற்கு நிலங்களை கொடுத்தல்.—(i) பொதுவான கொள்கைகள்.—(i) நிலம் ஒப்படை செய்ய அதிகாரம் பெற்றுள்ள அலுவலர் நிலத்தை ஒப்படை செய்யு முன், அந்நிலம் அடுத்து வருங்காலத்தில் பொதுக் காரியத்திற்குத் தேவையாயிருக்குமோ அல்லது அந்நிலம் நிலையான ஒப்படை செய்யப்படத் தகுமா என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு பொதுக் காரியத்திற்கு நிலம் தேவையாயிருக்குமானால் அல்லது நிலையான ஒப்படை செய்வது அறிவுக்குகந்ததன்று என்பதற்குச் சிறப்பான காரணங்களிருக்குமானால், ஒப்படை தற்காலிகமான முறையில் இருக்கவேண்டும். தனிர, ஒப்படை அரசினரால் நிலையாகச் செய்யப் பெற்றால் அன்றி அல்லது அவ்வாறு செய்யப் படும் வரைக்கும் எந்தச் சமயத்திலும் அரசினர் தங்கள் விருப்பத்தை அனுசரித்து அந்நிலத்தை திரும்ப எடுத்துக் கொள்வதற்கான அதிகாரத்தை அரசினரிடம் ஒதுக்கி வைத்துவிட வேண்டும். அவ்வாறு திரும்ப எடுத்துக் கொள்ளும் அதிகாரத்தை அரசினரிடம் ஒதுக்க வைக்கும்போது, நிலம் அவ்வாறு திரும்ப எடுத்துக் கொள்ளப்படுமேயாகில், ஈடு ஏதேனும் கொடுக்கப்பட வேண்டுமானால், அவ்வாறு கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகை யாதென ஒப்படை ஆணையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அத்தகைய அதிகாரத்தை அரசினரிடம் ஒதுக்கி வைத்துவிடத் தவறிவிட்டால், அந்நிலம் பின்னர் பொதுக் காரியத்திற்குத் தேவையாயிருக்குமானால் நிலம் உரிமை பெறும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க நேரிடுவதுடன், நில ஒப்படை பெற்றுக் கொண்டவருக்கு அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை அனுசரித்து ஈடும் கொடுக்க வேண்டியிருக்கும்.

(ii) ஒப்படை நிச்சயமாய்த் தற்காலிகமாகச் செய்யப்படாதிருந் தாலன்றி, அல்லது நிலத்தின் மேல் பாரப்புக்கு மாத்திரம் நில ஒப்படை பெற்றவரின் சொத்து உரிமையை நிலையாகக் கட்டுப்படுத்தக்கூடிய நிபந்தனை

நி. ஆ. 15:1]

விதிக்கப்பட்டிருந்தாலன்றி, அவ்வொப்படையின் நில உரிமையைப் பொறுத்த மட்டில், அது பூரணமாக ஒப்படையாகக் கருதப்பட்டு, அந்நிலம் பொதுக் காரியத்திற்குத் தேவையாக இருக்குமானால் சட்ட முறையில் நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் நிலம் எடுத்துக்கொள்ளப்பட நேரிடும். ஒப்படை நிச்சயமாகத் தற்காலிகமாகச் செய்யப்பட்டிருந்தால், அல்லது ஒப்படை பெற்றவரின் சொத்து உரிமை அந்நிலத்தின் மேல் பரப்புக்கு மாத்திரம் நிலையாகக் கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைக்குட்படுத்தப்பட்டிருந்தால், நிலம் பொதுக் காரியத்திற்குத் தேவையாகுமென்றால் வேண்டியபொழுது, அதைத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கும் நியாயமான ஈடு கொடுப்பதற்கும் வசதியாகத் தக்கவாறான காப்பு வாசகங்களை ஒப்படை ஆணையில் சேர்க்க வேண்டும். ஒப்படை பெற்றவரின் சொத்து உரிமை நிலத்தின் மேல் பரப்புக்கு மாத்திரம் கட்டுப்படுத்தப்படாமல் நிலத்தில் அவருக்கு உள்ள உரிமைகளை காப்பாற்றுவ தற்கான தனி நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய ஒப்படை, நிலத்தை விற்பனை செய்து கொள்வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்படாத ஒப்படை போலவே, பூரணமாகக் கருதப்படும்.

(iii) நில ஒப்படை எல்லாவற்றிலும், அவற்றிற்குரிய நிபந்தனைகள் முற்றிலும் நிர்ணயிக்கப்பட்டு ஒப்படை ஆணையில் தெளிவாகக் குறிக்கப்படுவ தற்குப் போதுமான கவனம் வைத்துக் கொள்ள வேண்டும். நிபந்தனை மீறப் படுமானால், ஒப்படை ரத்து செய்யப்பட்டு, நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப் படுவதற்குத் தேவையான நிபந்தனைகள் முன்னமே வகுக்கப்பட்டிருந்தாலன்றிப் பிரத்தியேகமான நிபந்தனைகள் விதிக்கும்போது, ஒவ்வொரு நிபந்தனையும் மீறப்பட்டால், அரசினர் நிலத்தைத் திரும்ப எடுத்து அதில் பிரவேசிப்பர் என்பதான உட்பிரிவை ஒவ்வொரு நிபந்தனையிலும் சேர்க்க வேண்டும்.

1940 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் தேதி, 1538 என், அ.ஆ. வரு. பல.

1942 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் தேதி, 1760 ஊ, 42–I, என் குறிப்பு, வரு.

1940 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதி, 118 என். வ.து.வா.செ. அச்சு.

1942 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் தேதி, 31 என், வ.து.வா.செ. அச்சு.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வரு.

(2) இந்நில ஆணையின் நோக்கம்.—(i) (அ) நகரங்களிலும் கிராமங் களில் வீட்டு மனைகளும் (21-வது நில ஆணையைக் காண்க). தீர்வை பாக்கியுள்ள உரிமை விட்டுவிடப்பட்ட விலை மதிப்பான நிலங்களும் (33-5 ஆவது நில ஆணையைக் காண்க) தீர்வை பாக்கிக்காக விற்கப்பட்டு அரசினரால் வாங்கப்பட்ட நிலங்களும் (45-2 ஆவது நில ஆணையைக் காண்க) பொதுக் காரியத்திற்காக அரசினரால் நில உரிமை பெறப்பட்டுப் பின்னர் அக்காரியத் திற்குத் தேவை இல்லையென்றால் அந்நிலங்களும் (90-32 ஆவது நில ஆணையைக் காண்க) ஆகிய இவையெல்லாம் நீங்கலாக அரசினர் வசமிருக்கும் மற்ற நிலங்களுக்கு இந்த நிலஆணை பொருந்தும்.

1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி. 10 என், வ.து.வா.செ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வரு. கைப.

(ii) இந்த நிலை ஆணையின்கீழ்த் தனிப்பட்டவர்கள், தொழில் நிறுவனங்கள், சங்கங்கள், இவற்றிற்கு நிலங்களின் கிரயமின்றி அல்லது முழு விலை மதிப்புத் தொகை பெற்றுக் கொண்டு அல்லது சலுகையோடுங்கூடிய விலை மதிப்புத்தொகையை பெற்றுக்கொண்டு தனிப்பட்ட காரியங்களுக்கு மாத்திரமே நிலங்கள் கொடுக்கத்தக்கனவாகும். தொழில் வாணிபம் அல்லது கூட்டுறவுக் காரியங்களுக்குச் செய்யும் ஒப்படை சாதாரண ஒப்படை நிபந்தனைகளுடனும் 24-வது நிலை ஆணை 6 ஆவது பத்தியில் தகுந்த மாறுதல்களுடன் கூடிய நிபந்தனைகளையும் அனுசரித்திருக்க வேண்டும். ஒப்படை பெறுபவர் முழு விலை மதிப்புத் தொகை செலுத்துவார் எனில் (ii) ஆவது உள்பத்தியில் கண்டுள்ள நிபந்தனைகளையும், மற்றவற்றில் (1) ஆவது உள்பத்தியில் உள்ள நிபந்தனைகளையும் அனுசரிக்க வேண்டும். பொது காரியங்களுக்கு நிலம் கொடுக்கப்பட வேண்டுமானால் 24 ஆவது நிலை ஆணையை அனுசரித்து கொடுக்க வேண்டும்.

(3) வருவாய்த் துறை வாரியத்திற்கும் அரசினருக்குமுள்ள அதிகாரங்கள்.—இந்த நிலை ஆணைக்கு இணங்க வருவாய் துறை வாரிய (பொறுப்பி லுள்ள உறுப்பினர்)—

(அ) சிறப்பான விலை மதிப்புள்ள நிலங்களை இலவசமாகக் கொடுக்க வேண்டிய போதும்,

(ஆ) 50 ஏக்கருக்கு மேற்பட்டு பெரும் பகுதியில் உள்ள விலை மதிப்புள்ள நிலம் அல்லது 100 ஏக்கருக்கு மேற்பட்டுப் பெரும் பகுதியில் விலை மதிப்பில்லாத நிலத்தை ஒப்படை செய்ய வேண்டிய போதும்,

(இ) நிலை ஆணைகளைத் தளர்த்த வேண்டிய போதும், ஆகிய இவற்றைத் தவிர மற்ற எல்லா ஒப்படைகளிலும்.

ஒவ்வொன்றிலும் சம்பந்தப்பட்ட நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை 10,000 ரூபாய்க்கு மேற்படாவிடில் ஒப்பளிப்பு அளிக்கலாம். நிலத்தின் விலை மதிப்புத் தொகை 10,000 ரூபாய்க்கு அதிகமாக உள்ளவற்றிலும் மேலே கண்டுள்ள விலக்குகளுக்குட்பட்டவற்றிலும் அரசினரின் ஒப்பளிப்பு பெறுவதற்கு அறிக்கைகள் மேலனுப்பப்பட வேண்டும்.

1942 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதி, 81-ஊ-42–1, அ. குறிப்பு.

1942 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் தேதி, 2, வ.து.க.செ. அச்சு.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316, அ.ஆ.வரு.

குறிப்பு.—இந்த நிலை ஆணையின்கீழ் செய்யப்படும் ஒப்படைகள் விற்பனைகள் ஆகிய இவற்றிலெல்லாம் நில அளவு செய்தல், எல்லை வரையறுத்தல் ஆகிய இவற்றின் செலவு சங்கிலி அளவை நடைமுறை நூலில் கண்டுள்ளவாறு வசூலிக்கப் படவேண்டும்.

1929 ஆம் ஆண்டு மார்ச் மாதம், 1 ஆம் தேதி, 432, எண். வ.து.வா. செ.பல்வ.

1929 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் தேதி, 854 எண். வா.தூ.வா. செ.

1958 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் தேதி, 3316 எண். வ.து. வா.கை.ப.

நி. ஆ. 15:2]

பிரிவு 1.—நிலத்தைப் பாகுபாடு செய்தல்.

2. நிலத்தின் வகுப்புகள்.

(1) நிலத்தை எவ்வகையில் பாகுபாடு செய்யலாம்.—இந்த நியம ஆணையைப் பொறுத்தமட்டில் நிலத்தைக் கீழ்க் கண்டுள்ளவாறு பாகுபாடு செய்யலாம்.

(i) பார்வையிட்டவுடன் ஒப்படை செய்யத்தக்க நிலம்.

(அ) ஒதுக்கி வைக்கப்படாத, ஆனால் தீர்வை விதிக்கப்பட்ட நிலம்.

(ஆ) ஒதுக்கி வைக்கப்படாததும் தீர்வை விதிக்கப்படாததுமான நிலம்.

(ii) பார்வையிட்டவுடன் ஒப்படை செய்வதற்கு இல்லை என்பதான நிலம்.

(அ) புறம்போக்கு.

(ஆ) ஒதுக்கி வைக்கப்பட்ட நிலம் (தீர்வை விதிக்கப்படாததும் தீர்வை விதிக்கப்பட்டதும்).

பாகுபாடும் தீர்வை விதிப்பும் செய்யப்படாத நிலம் "தீர்வை விதிக்கப்படாத" நிலம் என்பதாம்.

(2) பிரத்தியேகமான காரியங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட நிலம்.—பிரத்தியேகமான காரியங்களின் தேவைக்கு உரியது அல்லது தேவைக்குப் பயனுகும் என்று ஒதுக்கி வைக்கப்பட்டு நிலவரித் திட்டப் பதிவேட்டிலும் கிராம அடங்கலிலும் தடை ஆணைப் புத்தகத்திலும் (மாவட்ட நடைமுறை நூலைக் காண்க). அவ்வாறு குறிக்கப்பட்டுள்ள நிலம் "ஒதுக்கி வைக்கப்பட்ட" நிலம் என்று சொல்லப் பெறும். இருப்பினும், அட்டவணையில் கண்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பெறும் நிலங்களைத் தடை ஆணைப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டியதில்லை. ஆனால், அவற்றை நிலவரித் திட்டப் பதிவேட்டிலும், கிராம அடங்கலிலும் தேவையான முறையில் பதிவு செய்ய வேண்டும். தீர்வை விதிக்கப்படாத நிலம் ஒப்படை செய்யப்படுவதற்கு முன்னர், அது "தீர்வை விதிக்கப்பட்ட" நிலமாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்பட்ட பின்னர், அதற்கு II-வது பிரிவின் கீழ் உள்ள சாதாரண விதிகள் பொருந்தும். இத்தகைய மாறுதல்களை, இதன் பின் வரும் 33, 35 பத்திகளில் கண்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கோட்ட ஆட்சியாளர் அனுமதிக்கலாம். "தீர்வை விதிக்கப்பட்ட" நிலத்தையும் "தீர்வை விதிக்கப்படாத" நிலத்தையும் "புறம்போக்காக" மாற்றி ஒதுக்கி வைக்கப்பட்ட நிலம் என்று குறிப்பதற்கு வேண்டிய ஆணையை அவர் பிறப்பிக்கலாம்.

(3) புறம்போக்காகவும் தீர்வை விதிக்கப்பட்ட தரிசாகவும் நிலங்களை மாற்றுவதற்கு வேண்டிய அதிகாரம்.—

(i) நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ், உரிமை பெறப்பட்ட நிலம் தீர்ப்பு ஆதாரத்தின் அடிப்படையில் புறம்போக்காக மாற்றப்படலாம்.

(ii) புறம்போக்கு நிலத்தை அதன் ஒரு தலைப்பிலிருந்து மற்றொன்றுக்கு அல்லது தீர்வை விதிக்கப்பட்ட தரிசுக்கு மாற்றுவதற்கு வேண்டிய அதிகாரத்தைக் கலெக்டர் தாமே வகித்துள்ளார்.

(4) சாலைகள், வாய்க்கால்கள் முதலியவற்றிக்கு நில விளிம்பை ஒதுக்கி வைத்தல்.—ஒப்படை நிலத்தின் வழியாகச் சாலை செல்லுமானால் குறைந்தது ஒரு சங்கிலி அகலத்துக்கு அச்சாலைக்காக நிலத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டு மீதியுள்ள பாகத்தைக் கொடுத்துவிடுவதற்கு விதிகளை அனுசரித்து முடிவு செய்ய வேண்டும். அவ்வாறே ஒப்படை நிலத்தின் அருகில் அல்லது அதன் வழியாக நீர்ப்பாசன வேலையின் கரை இருக்குமானால், அந்த நீர்ப்பாசன வேலை முதன்மையான கால்வாய், முதன்மையான கிளை வாய்க்கால் அல்லது முதன்மையான வடிகால் வாய்க்கால் போன்ற முக்கியமான பாசன வேலையாக இருக்குமானால், அதன் முழு நீளத்திற்கும் கரையின் அடிப்பாகத்தில் அதை ஒட்டி ஒரு சங்கிலி அகல விளிம்பிற்குத் தேவையான நிலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். சார்நிலை அல்லது சிறு பாசன அல்லது சிறு வடிகால்வாயைப் பொறுத்தமட்டில், 30 லிங்குகள் விளிம்பு போதுமானது. மேலே சொல்லப்பட்ட இரு வகைப் பாசன வேலைகளின் விவரமான பட்டியல்கள் பொறியியல் பணித் துறையினரால் கொடுக்கப்படும். சம்பந்தப்பட்ட நீர்ப்பாசன வேலை இவ்விரு பட்டியல்கள் ஒன்றிலாவது இல்லாவிட்டால், ஒரு சங்கிலி விளிம்பிற்குத் தேவையான நிலத்தை ஒதுக்கி விட்டு வைக்க வேண்டும் அல்லது இது பற்றி நிர்வாக பொறியாளரைக் கேட்டறிய வேண்டும்; கரைகள் இல்லாத வாய்க்கால்களுக்கு 15 லிங்குகள் விளிம்பிற்குத் தேவையான நிலத்தை ஒதுக்கி வைத்துவிட்டால் அதுவே போதுமானதாகும். ஒப்படை நிலத்தின் வழியாக அல்லது அதன் சமீபமாக ஓடை செல்லுமானால், சாதாரணமாக அதன் இரு கரைகள் ஒவ்வொன்றிலும் 50 லிங்குகள் விளிம்பிற்கு நிலத்தை ஒதுக்கி வைத்து அதைப் புறம்போக்காகப் பதிவு செய்ய வேண்டும். மேலே சொன்னவாறு ஒதுகக்ப்பட்ட நிலத்தைக் கணக்குகளில் முறையே சாலை, எரி, வாய்க்கால் அலலது ஓடைப் புறம்போக்கென்று ஏற்றவாறு குறித்துக் கொள்ள வேண்டும்.

1872 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் தேதி, 1604, வ.து.வா.செ.
1893 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி, 406, அ.ஆ.
1922 ஆம் தேதி பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 வ.து.வா.செ.
1929 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் தேதி, 1926, அ.ஆ.வரு.
பல.

1866 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி, 320 வ.து.வா.செ.
1892 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதி, 502, வ.து.வா.செ.
1900 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் தேதி, 112, வ.து.வா.செ.
1929 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி, 79 வ.து.வா.செ.
1913 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் தேதி, 1913 அ.ஆ. வரு.
1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் தேதி, 19, வ.து.வா.செ.
1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316, அ.ஆ. வரு.
பல.

குறிப்பு.—சம்பந்தப்பட்ட கோட்ட நிர்வாகப் பொறியாளருக்குத் தெரிவிக்காமல் பொறி இயல் பணித் துறையினர் வழக்கமாக குத்தகைக்கு விடும் நீர்பாசன வேலையின் விளிம்பிலுள்ள நிலத்தின் பாகுபாட்டில் யாதொரு விதமான மாறுதலையும் வருவாய்த் துறையினர் செய்யக்கூடாது.

(5) ஒப்படை செய்யப்பட்ட தக்க நிலங்கள் எவை என்பதும் அவ்வாறு செய்யப்படத்தகாத நிலங்கள் எவை என்பதும்.—எந்நிலம் ஒப்படை செய்தால்

நி. ஆ. 15:2-3]

ஆட்சேபணையில்லாமலிருக்குமோ அந்நிலம் மாத்திரமே ஒப்படை செய்யப்பட வேண்டும். அத்தகைய நிலங்கள், அவை தனித் தனி துண்டுகளாகவோ அல்லது பெரும்பகுதி நிலங்களாகவோ இருப்பினும் தனிப்பட்டவர்களுக்கு ஒப்படை செய்யப்படலாம். சமுதாயப் பொதுக் காரியங்களுக்காக உரிமை பெறப்பட்ட நிலங்களை ஒப்படை செய்யக்கூடாது. கால்நடைகள் ஒவ்வொன் றுக்கும் மேய்ச்சல் நிலம், ஒரு ஏக்கர் வீதம், அவற்றின் தேவைகளுக்குத் தக்க வாறு போதுமான (பஞ்சாயத்துக் காடு அல்லது ஒதுக்கக்காடு தவிர) மேய்ச்சல் நிலம் இருந்தால் அன்றி, மேய்ச்சல் தரைப் புறம்போக்குகளை ஒப்படை செய்ய லாகாது. பொருத்தமான தொழில் நுட்ப அறிவுடன் கலந்தாலோசனை செய்து கொள்ளாமல், ஏரியின் உள்வாய் நிலத்தை ஒப்படை செய்யலாகாது. சமுதாயப் பொதுக் காரியங்களின் தேவைகளுக்கு அல்லது வீட்டு மனைகளை அமைப்பதற்குப் பயனுக்கூடியவையா தோன்ற நத்த நிலங்களுக்கு அடுத்தாற் போல் உள்ள நிலங்களை ஒப்படை செய்யக் கூடாது. அடர்த்தியாகவும் விலை மதிப்புள்ளவையுமான மரஞ் செடிகள் உள்ள நிலங்களுக்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அத்தகைய நிலங்களைத் தடை ஆணைப் புத்தகத்தில் சேர்க்கலாம்.

1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி, 2955, அ.ஆ.வரு.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296, அ.ஆ. வரு.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316, அ.ஆ. வரு· கை.ப.

பிரிவு II—ஒதுக்கி வைக்கப்படாத ஆனல் தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களைக் கொடுக்க முடிவு செய்வதற்குரிய சாதாரண விதிகள்.

அ. துவக்கவுரை.

3. இப்பிரிவு விதிகளின் நோக்கம்—(1) பொது விதிகள்.—இந்தப் பிரிவின் பொது விதிகள் "ஒதுக்கி வைக்கப்படாத" ஆனல் தீர்வை விதிக்கப்பட்ட நிலத்தின் ஒப்படைகளெல்லாவற்றிற்கும் பொருந்தும். இத் தகைய நிலம் சாதாரணமாக மேலே கண்டுள்ள 15 முதல் 18 வரையிலு முள்ள பத்திகளில் வகுக்கப்பட்டுள்ள விதிகளை அனுசரித்துச் செய்யப்படும் மேல்முறையீட்டுக்கும் ரிவிஷனுக்கும் உட்பட்டு, 4 முதல் 14 வரை உள்ள பத்திகளில் வகுக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ்த் தாசில்தாரால் தமது அதிகார அடிப்படையில் ஒப்படை செய்யத்தக்கதாகும். இவ்விதிகளின் கீழ்க் கோட்ட ஆட்சியாளர்களும் கலெக்டர்களும் ஒப்படை செய்யும் வகையில் தாங்களாகவே முதலில் ஆணைகள் பிறப்பிப்பதற்குத் தடை யில்லை நன்செய் நிலம் அல்லது நீர்ப்பாய்ச்சப்படத்தக்க புன்செய் ஆயின் 1½ ஏக்கர் அல்லது புன்செய் ஆயின் 3 ஏக்கர் பெருமத்திற்குட்பட்ட சிறப்பான விலை மதிப்புள்ள நிலங்கள் உட்பட விலை மதிப்புள்ள எல்லா நிலங்களையும் ஒப்படை செய்யத்தக்க அதிகாரி கோட்ட ஆட்சியாளராவர். தாலுகாத் தாசில்தாரும் தனி நிலைத் துணைத் தாசில்தாரும், உள் தாலுகாவின் பொறுப்பை வகிக்கும் சார்நிலைத் துணைத் தாசில்தாரும், விலை மதிப்பில்லாத 3 ஏக்கர் பெருமம் வரம்பிற்குட்பட்ட நிலத்தை ஒப்படை செய்யத்தக்கவ ராவர். நில ஒப்படை செய்வதற்கெனச் சிறப்பாக நியமிக்கப்படும் தாசில்

[நி. ஆ. 15:3

தாரும் துணைத் தாசில்தாரும் இத்தகைய அதிகாரங்களைச் செலுத்தத்தக்க வராகின்றனர். (1) தனி வகுப்பு நிலங்களுக்கும், (2) தனி வகுப்பினர்களுக்கும், (3) தனித் தலங்களுக்கும் பொருந்தத்தக்க சிறப்பான விதிகள் வகுக்கப் பட்டுள்ளன.

குறிப்பு.—இந்நிலை ஆணையின் 22 (1) ஆவது பத்தியில் சிறப்பான விலை மதிப் புள்ள நிலங்கள் எவையென விவரிக்கப்பட்டுள்ளனவோ அவை அத்தகைய சிறப்பான விலை மதிப்புள்ள நிலங்களாகும்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296, அ.ஆ.வரு.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி, 336, அ.ஆ.வரு.

1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் தேதி, 236, அ.ஆ. வரு.பலவ.

1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி 896, அ.ஆ.வரு.

1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 396, அ.ஆ. வரு.

1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் தேதி, 328 வ.து.வா.செ. வரு. பலவ.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி, 344, அ.ஆ.வரு.கை.ப.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி, 408, வ.து.வா.செ. பலவ.

1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 4131 அ.ஆ. வரு. கை.ப.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316, அ.ஆ. வரு. கை.ப.

(2) விளக்கங்கள்.—(i) "தாசில்தார்".—"தாசில்தார்" என்னும் சொல் தனி வரம்பினையுடைய தனி நிலைத் துணைத் தாசில்தாரையும் உள் தாலுகாவின் பொறுப்பை வகிக்கும் சார்நிலைத் துணைத் தாசில்தாரை யும் ஒப்படை வேலைக்கென்றே சிறப்பாக நியமிக்கப்படும் தாசில்தார்களையும் துணைத் தாசில்தார்களையும் குறிக்கும்.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி, 844 அ.ஆ.வரு.

1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி, 1791, வ.து.வா.செ பலவ.

1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் தேதி, 89586 ஊ—56—2, அ. குறிப்பு. வரு.

1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 4131, அ.ஆ. வரு. கை.ப.

(ii)" நிலமில்லாதவர் "—எனப்படுவோர், மொத்தம் 3 ஏக்கர் பரப்பிற்குக் குறைந்துள்ள புன்செய் நிலம் அல்லது மொத்தம் 1½ ஏக்கர் பரப்பிற்குக் குறைந்துள்ள நன்செய் நிலம் உடையவராவர்.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296, அ.ஆ.வரு.

குறிப்பு.—(i) ஒருவர், பதிவு செய்யப்பட்ட நிலமுடையவர் அல்லது "மிச்ச வாரம்" மாத்திரமே பெறும் ஜென்மி அல்லாத ஜென்மி, அல்லது திருத்தி அமைக்கப் பட்டுள்ள 1929-ஆம் ஆண்டு மலபார் குடிவாரச் சட்டம் (1930 ஆம் ஆண்டு சென்னை XIV-ஆவது சட்டம்), 3 (27) பிரிவின் பொருளில் அடங்கும் பயிரிடுவோர்

நி. ஆ. 15:3]

என்ற முறையில் நிலத்தை உடமையில்கொண்டிருப்பவாராக இருப்பின், அவர் இந்த விளக்கத்தில், நிலத்தைச் சொந்தமாக உடையவர் எனப்படுவர். இவ் வுரை விளக்கம் மலபார் குடிவாரச் சட்டம் பொருந்துகின்ற நீலகிரி மாவட்டத் தில் கூடலூர் தாலூகாவிலுள்ள கிராமங்களுக்கும் பொருந்தும்.

1954 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி, 3466, அ.ஆ. வரு.

(ii) பிரிவினை ஆகாத குடும்பங்களில் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மேற்கூறப்பட்ட விளக்கத்தின் பொருளில் நிலமில்லாதவரா அல்லது நிலமுள்ளவரா என்பதை முடிவு செய்யும் பொருட்டு அத்தகைய உறுப்பினரின் பங்கையும் கேட்டறிய வேண்டும்.

1950 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி, 2856, அ.ஆ.வரு.

(iii) "ஏழை".—ஒருவர் குடும்பத்தின் அளவு, வருமானம் இவற்றை அனுசரித்து ஈப்படை செய்யும் அதிகாரியால் ஏழை எனக் கருதப்படும் அத்தகையவரை "ஏழை" எனக் கொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாக ஒரு குடும்பத்தில் ஐவர் அல்லது ஐவருக்கும் குறைந்த உறுப்பினர்கள் இருந்து, எல்லா ஆதாரங்களைக் கொண்டும் அக்குடும்பத் திற்குக் கிடைக்கும் மொத்தம் மாத வருமானம் 100 ரூபாய்க்கும் குறைந்த தாக இருக்குமாயின், அவர் ஏழையெனக் கருதப்படலாம். ஒரு குடும்பத் தில் ஐவருக்கும் அதிகமானவர் இருப்பாரெனில், இதில் மாத வருமான வரம்பு 50 ரூபாய்க்கு உயர்த்தப்படலாம்.

(iv) அடக்கமான பெரும் பகுதி நிலங்கள்.—ஏக்கர் அல்லது அதற்கு அதிகமான பரப்பைக் கொண்டு ஒரே பகுதியாக இருக்கும் விலை மதிப்பில்லாத நிலமும், 25 ஏக்கர் அல்லது அதற்கும் அதிகமான பரப்பைக் கொண்டு ஒரே பகுதியாக இருக்கும் விலை மதிப்புள்ள நிலமும் "பெரும்பகுதி நிலங்கள்" எனப்படும். ஏனைய நிலங்கள் "தனித் துண்டு நிலங்கள்" எனக் கருதப்படும்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296, அ.ஆ.வரு.
1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி, 1791, வ.து.வா.செ. பலவ.

( ) நன்செய் நிலங்கள்.—நீர் பாய்ச்சப்படக்கூடிய புன்செய் நிலங் களும் "நன்செய் நிலங்களின்" வகையில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தோட்ட நிலங்கள் அவ்வாறு சேரா.

1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் தேதி, 2856, அ.ஆ.வரு.
1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296, அ.ஆ.வரு.

[நி. ஆ. 15:3

(vi) "விலை மதிப்புள்ள நிலங்கள்".—ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்கு அதிகமான விலை மதிப்பீடு செய்யப்படும் புன்செய் நிலங்களும் நன்செய் நிலங்களும், நீர் பாய்ச்சப்படும் புன்செய் நிலங்களும் 15 ஆவது நிலை ஆணையின் 22 ஆவது பத்தியில் விளக்கப்பட்டுள்ள தன்மை வாய்ந்த மற்ற நிலங்களும் விலை மதிப்புள்ள நிலங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி, 336, அ.ஆ. வரு.

(vii) நேர்முக விவசாயம்.—ஒருவர் சொந்தக் கணக்கில் சொந்த உழைப்பினால் அல்லது ஒருவர் குடும்பத்தின் உறுப்பினர் ஒருவரின் உழைப்பினால் அல்லது சொக்கமாக அல்லது தானியமாக (ஆனால் பயிரில் பங்கு அல்லாத வகையில்) கூலிபெறத்தக்க வேலையாட்களின் உழைப்பினால் அல்லது ஒருவர் சொந்த மேற்பார்வையின் கீழ் அல்லது ஒருவரது குடும்பத்தின் உறுப்பினர் ஒருவர் புரியும் மேற்பார்வையில் கூலி பெறுவோரின் உழைப்பினால் செய்யப்படும் விவசாயம் நேர்முக விவசாயம் எனப்படும்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296, அ.ஆ.வரு.

(viii) அரசியல் தியாகிகள்.—இந்திய தேசிய காங்கிரசினால் அல்லது இந்திய தேசிய காங்கிரசின் ஒப்பளிப்பில் தொடங்கி வைக்கப்பட்ட இயக்கங்களில் ஈடுபட்டதின் காரணமாக இந்தியாவின் சுதந்திரத்திற்காகச் சிறை சென்றவர்கள் அரசியல் தியாகிகள் என்பவராவர். 1930 ஆம் ஆண்டு சாராயக் கடைகளின் மறியலில் பங்கு கொண்டவர்கள் அரசியல் தியாகிகளாக கருதப்படமாட்டார்.

1947 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் தேதி, 3102, அ.ஆ.வரு.
1952 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி, 543, அ.ஆ.வரு.

(ix) முன்னாள் போர் வீரர்கள்.—1930-45 காலத்திய உலகப் போரில் சேவை செய்தவர்களும் இந்தியத் தேசியப்படைத் தொகுதியினரும், ஜப்பான் சரண் அடைந்த தேதிக்கு முன்னதாகப் பிரமபுத்திரா நதிக்குக் கிழக்குப் பகுதியில், மொத்தத்தில் 180 நாட்கள் கால அளவிற்குச் சிவில் பயனியர்பகுதியில் சேவை செய்தவர்களும் முன்னாள் போர் வீரர்கள் ஆவர்.

1949 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதி, 1523, அ.ஆ.வரு.
1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் தேதி, 81877 ஊ—53—2 அ. குறிப்புரு.

(x) ஒப்படை செய்யும் அதிகாரி.—இவ்விதிகளுக்கு இணங்கி நன்செய் அல்லது நீர் பாய்ச்சப்படும் புன்செய் ஆயின் 1½ ஏக்கர் பெருமத்திற்குட்பட்டும், புன்செய் ஆயின் 3 ஏக்கர் பெருமத்திற்குட்பட்டும் விலை மதிப்புள்ள எல்லா நிலங்களையும் ஒப்படை செய்யும் அதிகாரி கோட்ட ஆட்சியாளராவர். தாலுகாத் தாசில்தாரும் தனி நிலை துணைத் தாசில்தார்களும், உள் தாலுகாவின் பொறுப்பை வகிக்கும் சார்நிலைத் துணைத் தாசில்தார்களும்

நி. ஆ. 15:3]

விலை மதிப்பில்லாத 3 ஏக்கர் பெருமம் வரம்பிற்குட்பட்ட நிலத்தை ஒப்படை செய்யத்தக்கவராவர். நிலை ஒப்படை செய்வதற்கெனப் பிரத்தியேகமாக நியமிக்கப்படும் தாசில்தார்களும் துணைத் தாசில்தார்களும் 5 ஏக்கர் வரம்பு பெருமத்திற்குட்பட்ட இத்தகைய ஒப்படை அதிகாரங்களைச் செலுத்தக்கவராகின்றனர்.

1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 896, அ.ஆ. வரு.

குறிப்பு.—அரசினரின் தற்போதைய கொள்கைக்கு நேராகப் பொருந்தாமல் 1947-ஆம் ஆண்டிலிருந்து முடிவு செய்யப்படாமல் இருக்கும் விண்ணப்பங்களில் துவக்க ஆணை பிறப்பிக்கத்தக்க அதிகாரி கலெக்டராவார்.

(x) திரும்ப எடுத்துக்கொள்ளும் அதிகாரி.—ஒப்படை நிபந்தனைகளில் யாதொன்றுவது மீறப்பட்டால், ஒப்படை நிலங்களைத் திரும்ப எடுத்துக்கொண்டு அவற்றில் பிரவேசம் செய்யத் தகுதியுடைய அதிகாரி;

(அ) நிலம் விலை மதிப்பில்லாதாக இருப்பின், சாரில்தாரும்,

(ஆ) நிலம் விலை மதிப்புள்ளதாக இருப்பின், கோட்ட ஆட்சியாளரும், ஆவர். இருப்பினும், நன்செய் அல்லது நீர் பாய்ச்சப்படக்கூடிய புன்செயில் "1½ ஏக்கர் அல்லது புன்செயில் 3 ஏக்கருக்கு" அதிகமான பரப்புள்ள நிலத்தைக் கலெக்டர் பிறப்பித்த ஆணையை அனுசரித்து ஒப்படை செய்யப்பட்டிருந்தால், நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கும், அதில் திரும்பப் பிரவேசிப்பதற்கும்தகுதியுடைய அதிகாரி கலெக்டராவர்.

1955 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 3379 என், அ.ஆ.வரு.

குறிப்பு.—''தாசில்தார்'' என்னும் சொல்லின் விளக்கத்தை 3 (2) ஆவது பத்தியில் காண்க.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வரு

வருவாய் வாரிய நிலை ஆணைகள் 1 ஆவது தொகுதி :—1 5-3 (3) (1) ஆவது நிலை ஆணை பக்கம் 70 "5 ஏக்கர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 3 ஏக்கர் என்னும் சொற்களை அமைத்துக்கொள்க.

(3) ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையவர்கள்.—(1) நேர்முக விவசாயம் செய்வதில் ஈடுபடக்கூடியவர் நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர் "ஈ" படிவப் பட்டாவில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிலத்தின் விலை மதிப்புத் தொகையைச் செலுத்தாமல் நில ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையவராவர். நேர்முக விவசாயம் செய்வதில் ஈடுபடக் கூடியவர்களில் நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர் களையே முற்றிலும் அங்கத்தினர்களாகக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள், விலை மதிப்புத் தொகை செலுத்தாமல் பெரும் பகுதிகளில் இருக்கக் கூடிய விலை மதிப்புள்ள நிலங்களையும் விலை மதிப்பில்லாத நிலங்களையும் ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையன.

1854 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296 என், அ.ஆ.வரு.

1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி, 1791 என், வ.து.வ. செ.பலவ.

[நி. ஆ. 15.:3

(ii) அரசியல் தியாகிகளும் முன்னுள் போர் வீரர்களும், அரசியல் தியாகிகள் அல்லது முன்னுள் போர் வீரர்கள் என்ற முறையில், நிலத்தின் கிரயத் தொகை செலுத்தாமல் நில ஒப்படை பெறுவதற்குக் கீழே வகுக்கப் பட்டுள்ளவாறன்றி தகுதியுடையவரல்லர். இருப்பினும், அவர்களில் நிலமில்லாதவர்களும் ஏழைகளாகவும் இருப்பவர்கள் நிலம் இல்லாதவர் களாகவும் இருக்கும் மற்றவரைப் போன்றே நில ஒப்படை பெறத் தக்கவராவார்கள்.

(iii) கீழேயுள்ள பத்திகளில் வகுக்கப்பட்டுள்ளவாறன்றி, நில மில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்கள் விலை மதிப்பில்லாத நிலங்களை மாத்திரம் சாதாரணமாக ஒப்படையில் பெறுவதற்குத் தகுதி யுடையவராவார்கள்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி. 296 என், அ.ஆ.வரு.
1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி, 336 என், அ.ஆ.வரு.

(iv) நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் இருப்பவர் பெறத்தக்க பெருமம், விலை மதிப்பில்லாத நிலம் அவர் உடைமையில் இருக்கக் கூடிய எல்லா நிலத்துடனும் எவ்வளவு பரப்புள்ள ஒப்படை செய்யப்படும் நிலம் சேர்ந்தால் 5 ஏக்கர் புன்செய் நிலத்திற்கு சமமாகுமோ, அவ்வளவு பரப்புள்ள நிலமாகும். இவ்வகையில் ஒரு ஏக்கர் நன்செய் நிலம் இரண்டு ஏக்கர் புன்செய் நிலத்திற்குச் சமம் என எடுத்துக்கொள்ளலாம்.

1054-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி 396 என், அ.ஆ.வரு.
1953-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி, 3316 என், அ.ஆ வரு.

(4) வீட்டு மனை.—ஈ இவ்விதிகளில் எவ்வாறு கூறப்பெற்றிருப்பினும் சாதாரண விதிகளை அனுசரித்து நிலம் பெறுவதற்குத் தனித்த வகையில் உரிமையில்லாமல் தாங்களே நிலத்தை வாங்கிக் கொள்ள முடியாத நிலைமையில் இருப்பவர்கள், வீட்டு மனைக்காக விண்ணப்பம் செய்து கொண்டிருப்பாரெனில், அவர்களுக்கு 20 சென்டு பரப்பிற்கு மேற்படாத தர்வை விதிக்கப்பட்ட நிலங்களை வீட்டு மனைக்காகக் கொடுக்கலாம். இத்தகைய நில ஒப்படைகள் தனி ஒப்படை படிவத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டிருக்கவேண்டும்.

[4]1922 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் தேதி, 12431 என், அ.ஆ.
[5]1922 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி, 84 என், வ.து.வா.செ.
[5]1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி, 1738 என், அ.ஆ.வரு. பல்வ.

[5]1928 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் தேதி, 87 என், வ.து.வா.செ.
[4]1928 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வருபல்வ

நி. ஆ. 15 :3—5]

(5) வேறு வகை ஒப்படை.—இதுவரை செய்யப்பட்டது போலவே அரசினர் தங்கள் யுக்தானுசாரத்தில் இவ்விதிகளை அனுசரிக்காமல் வேறு வகையில் நிலங்களை ஒப்படை செய்வதைத் தடை செய்யக்கூடியது ஒன்றும் இவ்விதிகளில் இல்லை.

[6] 1899 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதி, 217 எண், வ.து. வா.பிச.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண், அ.ஆ. வரு. கை.ப.

ஆ. நடைமுறை சிறப்பான விலை மதிப்பில்லாத நிலம்.

4. விண்ணப்பம் எழுத்து வடிவில் இருக்க வேண்டும். (i) விண்ணப்பத்தின் படிவம் யாது என்பதும் அதில் என்ன என்ன அடங்கியிருக்க வேண்டுமென்பதும்.—தீர்வை விதிக்கப்பட்ட நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள் எழுத்து வடிவில் இருப்பதுடன் அவற்றில் கோரிய நிலம் தெளிவாக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களில் 25 பைசா மதிப்புள்ள நீதி மன்றக் கட்டண வில்லை ஒட்டப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பங்கள் சாதாரணத்தாளில் எழுதி ஆண்டில் எந்தக் காலத்திலும் கொடுத்துக் கொள்ளலாம். நிலத்திற்காக விண்ணப்பம் செய்து கொள்ளும் சமயத்தில் அந்த நிலம், உண்மையில் அநுபோகம் செய்யப்படாமலிருக்க வேண்டும் அல்லது தக்க அனுமதி பெறுமல் அநுபோகம் செய்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும் அல்லது உண்மையில் நிலத்தின் அநுபவம் கைவிடப்பட்டிருந்தாலும் அல்லது அவ்வாறில்லாவிட்டாலும், வழக்கத்திற்கிசைந்த முறையில் உரிமை விடப்பட்ட நிலமாக இருக்க வேண்டும். இவ்வாறில்லாவிட்டால் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் கவனிக்கப்பட மாட்டாது. உரிமை விட்டு விடப்பட்ட நிலம் 33-5 ஆவது நிலை ஆணையின்கீழ் விற்பனை செய்யப்படவேண்டி இருக்கும்போது, அந்நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள் உடனடியாகத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். 1955 ஆம் ஆண்டு நீதி மன்றக் கட்டண வழக்கு மதிப்பீட்டுச் சட்டத்தின் விவர அட்டவணையின் 10 ஆவது விதி.

(ii) நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படை மனுக்கள்.—நிபந்தனைக்குட்பட்ட ஒப்படை மனுக்களை உடனடியாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

1886 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி, 1943 எண், வ.து. வா.செ.

[1] 1921 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி, 2815 எண், அ.ஆ வரு.

[2] 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 எண், வ.து. வா செ.

1893 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி, 406 எண், அ.ஆ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண், அ.ஆ. வரு. கை.ப.

5. யாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.—தீர்வை விதிக்கப்பட்ட சாதாரணமான நில ஒப்படை பெறுவதற்காக கிராம அலுவலர் அல்லது பிர்க்கா 'வருவாய் ஆய்வாளர்' அல்லது தாசில்தாருக்கு

[நி. ஆ. 15:5—6

விண்ணப்பம் செய்து கொள்ளலாம். ஆனல் முறையீடு செய்யப்படுவதற்குட் பட்டு அத்தகைய விண்ணப்பங்களை முடிவு செய்தல் எப்போதும் தாசில்தாரையே சாரும். நிலத்திற்காக விண்ணப்பம் செய்பவர்கள் தங்கள் விண்ணப்பம் சம்பந்தமாகக் கிராம அலுவலர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலைமை ஏற்படாமல் இருக்குமாறு தாசில்தார் தங்களிடம் வரும் விண்ணப்பங்களைத் தாங்களே பெற்றுக்கொண்டு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராம அலுவலர்களும் அவர்களின் குடும்பத்தினரும் நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்களை எப்பொழுதும் முதல் முதலிலே வருவாய் ஆய்வாளரிடமாயினும் தாசில்தாரிடமாயினும் கொடுக்க வேண்டும்.

1863 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி, 6632 என், வ.து. வா.செ.

1893 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி, 406 என், அ.ஆ. வரு. கை. ப.

(1) 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி, 20 என், வ.து.வா. செ.

6. விண்ணப்பம் வரப்பெற்ற பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.—நேராக அல்லது வருவாய் ஆய்வாளர் வழியாக வரப்பெற்ற விண்ணப்பத்தில் கிராம அலுவலர்களின் அறிக்கை பெறுவதற்காகத் தாசில்தார் அவ்விண்ணப்பத்தை அவர்களுக்கு அனுப்ப வேண்டும். நேராக அல்லது தாசில்தாரிடமிருந்து விண்ணப்பம் வரப் பெற்றதும், கிராம அலுவலர்கள் அதை ஆவது இணைப்பில் கண்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு, விண்ணப்பத்தைப் பற்றிக் கிராமத்தில் தமுக்கடிப்பினுல் விளம்பரம் செய்து அதன் அறிவிப்பு (IV) ஆவது இணைப்பு அ-1 படிவத்தில் கிராமச் சத்திரத்திலும், ஒப்படை கோரிய நிலத்திலும் 15 நாட்களுக்கு இருக்குமாறு அங்கு அதை ஒட்டி வைக்க வேண்டும். அந்தக் கால அளவு முடிவடைந்த பின்னர் (IV) ஆவது இணைப்பு (படிவத்தில்) இரண்டு பிரதியில் குறிப்பு தயாரித்து (அ 1 படிவ) அறிவிப்புடன் தாசில்தாருக்குத் தாமதமின்றி அனுப்ப வேண்டும். இவ்வாறு அனுப்பப்படும் அறிவிப்பு, கிராமத் தலைமை அலுவலர், கிராமக் கணக்கர் ஆகிய இவ்விருவர்களாலும் கையெழுத்திடப்படுவதுடன், எழுதப்படிக்கத் தெரிந்த கிராம குடி மக்கள் இருவரால் சான்றுக் கையெழுத்திடப் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட நிலமும் அதைச் சுற்றிலுமுள்ள நிலங்களும் எங்குள்ளன என்பதையும், பாதுகாக்க வேண்டிய அளவைக்குறிகள் எவை என்பதையும் விளக்கும் வரைபடம் அக்குறிப்புடன் சேர்த்தனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவரிடமிருந்து எத்தனை அளவைக் குறிகளின் கிரயத்தை வசூலிக்க வேண்டும் என்பதற்குக் கிராமக் கணக்கர் அவ்வரை படத்தில் சான்று செய்ய வேண்டும். அத்தகைய அளவைக் கற்கள் வரை படத்தில் சிவப்பு மையினுல் அல்லது சுழிக்கப்பட்டு விளக்கமாகக் காட்டப்பட்டிருக்க வேண்டும்.

(2) 1934 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 ஆம் தேதி, 1566 என், அ.ஆ. வரு.பல.

1934 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி, 108 என், வ.து.வா. செ.

[நி. ஆ. 13:7–8]

1963 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி, 5632 என், வ.து.வா. செ.

1886 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி, 1943 என், வ.து. வா.செ.

1872 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி, 1532 என், வ.து.வா. செ.

1893 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி, 406 என், அ.ஆ.

1872 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் தேதி, 1615 என், வ.து.வா. செ.

1912 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 ஆம் தேதி, 216 என், வ.து.வா. செ.

[1] 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 என், வ.து.வா. செ.

1916 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி, 20 என், வ.து.வா. செ.

7. வழக்கத்திற்கு இசைந்த விண்ணப்பம் செய்து கொள்ளப்படாமல் அநுபோகம் செய்யப்படும் தீர்வை விதிக்கப்பட்ட நிலம்.—வழக்கத்திற்கு இசைந்த விண்ணப்பம் செய்து கொள்ளப்படாமல் தீர்வை விதிக்கப்பட்ட நிலம் அநுபோகம் செய்யப்பட்டிருந்தால், அநுபோகம் செய்து கொண்டிருப்பவர்கள் நில ஒப்படை வேண்டுமென விரும்புவாரெனில், கிராம அலுவலர்கள் அவர்களிடமிருந்து வழக்கத்திற்கு இசைந்த விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு, 6ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு அத்தகைய அநுபோகத்தின் அறிவிப்பை முன்னதாகவே விளம்பரம் செய்து அ. படிவத்தில் குறிப்பு தயாரித்துத் தாசில்தாருக்கு மேலனுப்ப வேண்டும். 3 ஆவது பத்தியை அனுசரித்துத் தாசில்தார் ஒவ்வொன்றையும் பின்னர் முடிவு செய்யவேண்டும். 'நிலத்தை அநுபோகம் செய்து கொண்டிருப்பவர்கள் நில ஒப்படை விரும்பாவிடில்,' கிராம அலுவலர்கள் அவ்வநுபோகத்தைப் பற்றி பின்வரும் 36ஆவது பத்தியில் கண்டுள்ளவாறு தாலூகா அலுவலகத்திற்கு மாதந்தோறும் அனுப்ப வேண்டிய ஆக்கிரமிப்புக் குறிப்பில் தாசில்தாருக்கு அறிக்கை செய்ய வேண்டும்.

1908 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி, 476 என், அ.ஆ.

1908 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் தேதி, 66 என், வ.து.வா.செ.

1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதி, 1738 என், அ.ஆ. வரு.

1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி, 87 என், அ.ஆ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வரு.பல.

8. ஒப்படை குறிப்பு தயாரித்தல்.—ஒப்படைக் குறிப்பின் 5 ஆவது கட்டத்தில் நிலம் நன்செயா அல்லது புன்செயா என்பதை விவரிக்க வேண்டும். 12ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்யும்பொழுது பொது வழிக்கான உரிமை ஒப்படை செய்யப்படாத வேளை நிலங்களுக்குச் செல்வதற்கு வேண்டிய பாதைக்காகவா அல்லது மற்ற உபயோகத்திற்காகவா என்பதைப் பற்றி விளக்க வேண்டும். நீர்ப்பாசன வாய்க்கால் அல்லது பாசன வேலியின் கரை அல்லது ஓடை அந்த நிலத்தின் வழியே அமையாதிருந்து, அது எந்த நிலத்தை அடுத்திருக்கிறதோ அந்நிலத்திலிருந்து அது எவ்வளவு

[நி. ஆ. 15:8–9

தூரத்திலிருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டெழுத வேண்டும். 13 ஆவது கட்டத்தில் அந்நிலத்திற்காக விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவர்களின் பெயர்களையும் அல்லது நிலத்திற்காக விண்ணப்பம் செய்து கொண்டவர்களுக்கு அல்லது நிலத்தை அநுபோகம் செய்திருப்பவர்களுக்கு நிலத்தை ஒப்படை செய்வதற்கு ஆட்சேபனை செய்பவர்களின் பெயர்களையும் குறிக்க வேண்டும். 1 முதல் 16 வரையிலுள்ள கட்டங்களைக் கிராம அலுவலர்கள் பூர்த்தி செய்து குறிப்பில் கிராமத் தலைமை அலுவலர், கிராமக் கணக்கர் ஆகிய இருவரும் தேதியுடன் கையெழுத்து இட வேண்டும். ஒப்படைக் குறிப்பு அனுப்புவதில் விண்ணப்பம் ஏற்பெற்ற தேதியிலிருந்து 20 நாட்களுக்கு அதிகமாகத் தாமதமாகியிருக்குமானால், குறிப்புரைக் கட்டத்தின் தாமதத்தின் காரணத்தை விவரிக்கவேண்டும். ஒப்படைக் குறிப்பைப் பூர்த்தி செய்வதற்குக் கிராம அலுவலர்கள் பொறுப்பாளிகளாகப்படுகிறார்கள். 18-19 கட்டங்கள் தாசில்தாரால் பூர்த்தி செய்யப்பட்டு, குறிப்பின் ஒரு பிரதி கிராம அலுவலர்களுக்குத் திருப்பி அனுப்பப்படும். பின்னர் கிராம அலுவலர்கள் 20 ஆவது கட்டத்தைப் பூர்த்தி செய்து தாசில்தார் பிறப்பித்த ஆணையை நிறைவேற்றுவார்கள்.

1863 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி, 5632 என், வ.து. வா.செ.

1886 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி, 1943 என், வ.து. வா.செ.

1881 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி, 289 என், வ. து. வா. செ.

1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி, 20 என், வ.து.வா. செ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வரு.கை.ப.

9. நில ஒப்படை செய்தல்.—விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட நிலத்தை ஒப்படை செய்யத் தடையில்லை எனவும், நிலம் கொடுக்கப்பட வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவர் ஒருவரே எனவும் கிராம அலுவலர்களின் அறிக்கையிலிருந்து தெரிய வருமானால், விண்ணப்பம் செய்து கொண்டவர் பின்வரும் 14 முதல் 29 வரையிலுள்ள பத்திகளில் கண்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவாரெனில், நிலத்தை அவருக்கு ஒப்படை செய்ய வேண்டும். நிலம் கொடுக்குமாறு பலர் விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்கள் எனில், நில ஒப்படை பெறுவதற்கு அவர்களில் எவருக்கு அதிக உரிமை இருக்கிறது என்பதைத் தாசில்தார் தீர்மானித்து, அவரிடமிருந்து நிலத்தில் இருக்கும் மாங்களின் கிரயம், நில எல்லை வரையறுத்தல், செலவு முதலியவற்றை வசூலிப்பது கைவிடப்பட்டாலன்றி அவற்றை அவரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு இணைப்பின் இ-1 படிவத்தில் அவருக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும். அவர் அவ்வாறு அத்தொகைகளைச் செலுத்தாவிடின், அவருக்கு அடுத்து அந்த நிலத்தைப் பெறுவதற்கு எவருக்கு அதிக உரிமையுள்ளது எனத் தாசில்தார் கருதி முடிவு செய்கிறாரோ அவருக்குத் தாசில்தார் ஒப்படை செய்யலாம். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் பெயரில் 'கூட்டு ஒப்படை

நி. ஆ. 15:9–10]

செய்தல் கூடாது.' இந்த நிலே ஆணையின் 22ஆவது பத்தியில் சிறப்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள வகுப்புகளில் யாதாவதொன்றில் அடங்கக்கூடிய தீர்வை விதிக்கப்பட்ட நிலமாக இருந்தாலன்றி, தீர்வை விதிக்கப்பட்ட நிலத்தை ஒப்படை செய்யத் தாசில்தார் தமது சொந்த அதிகாரத்தின் அடிப்படையில் மறுக்கக் கூடாது. ஒப்படை மறுக்கப்படத் தக்கது எனத் தாசில்தார் கருதுவாரெனில் அந்த நிலத்தைக் கணக்குகளில் புறம்போக்கென்றுவது அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்றுவது பதிவு செய்து கொள்வதற்காகக் கோட்ட ஆட்சியாளரின் ஆணையைப் பெற வேண்டும். நில அளவை செய்யப்பட்ட புலத்தின் ஒரு பாகம் மாத்திரம் ஒப்படை செய்யப்பட வேண்டும் என விண்ணப்பம் வரப்பெற்றால், அது ஒரே பகுதியாகவும் பல துண்டுகளையுடைய்தல்லாத நிலமாகவும் அதற்குப் போக்கு வரத்து சாதக மிருக்குமாயினும், விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட பாகத்தைத் தவிர மீதியுள்ள பாகம் பிற்காலத்தில் நில ஒப்படை செய்வதற்குத் தகுந்தவாறு பல துண்டுகளாகவோ நீண்டு குறுகிய துண்டுகளாகவோ இல்லாமல் அடக்கமான பகுதியில் இருக்கும் வசதிபெற்றிருக்குமானால், கேட்டுக்கொண்ட நிலத்தைக் கொடுத்து விடலாம். இத்தகைய நிபந்தனைகளுக்குட்படாத புலத்தின் ஒரு பாகத்திற்கு விண்ணப்பம் செய்பவர், நில அளவை செய்யப் பட்ட புலத்தின் முழுப் பரப்பிற்கும் தீர்வை செலுத்தச் சம்மதித்தாலன்றி விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்ட கோரிக்கையை மறுத்துவிடத் தாசில்தாருக்கு உரிமை உண்டு.

1863 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி, 5632 என், வ.து.வா.செ.

1909 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் தேதி, 319 என், வ.து. வா.செ.நிர்.

1905 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதி, 54 என், வா.து.வா. செ.

1908 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் தேதி, 687 என், அ.ஆ.

1886 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி, 500 என், வ.து. வா.செ.

1908 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி, 79 என், வ.து.வா. செ.

1909 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி, 1936 என், அ.ஆ.

1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 என், வ.து.வா. செ.

1921 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி, 2815 என், அ.ஆ. வரு.

1915 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் தேதி, 24 என், வ.து.வா. செ.நிர்.

10. இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர் விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்களேயானால் அவர்களில் முதல் உரிமை பெறத்தக்கவர் எவர் என்பதைத் தீர்மானிப்பதற்குரிய விதிகள்.—(1) 3 (3)ஆவது பத்தியில் சொல்லப்பட்டுள்ளவாறு நேரடுக விவசாயத்தில் ஈடுபடக்கூடியவர்களில் நிலமில்லாதவர்களாகவும், ஏழைகளாகவும் இருப்பவர்கள் மாத்திரமே நில ஒப்படை பெறத்தக்கவராவர். கிராமத்தில் குடியிருப்புடையவர்களுக்குள்

[நி. ஆ. 15:10

எவருக்கு ஒப்படை செய்யத்தக்கது என்பதில் முடிவு செய்வதில் நேர்மையான கொள்கைகளை அனுசரிக்க வேண்டும். அனுமதி பெறுமல் நிலத்தில் ஆக்கிர மிப்பு செய்துகொண்டு, அந்நிலத்திலிருந்து டில் புதர் அல்லது சப்பாத்திக் கள்ளி முதலியவற்றை அகழ்ந்தெடுத்து அப்புறப்படுத்தி அதிகமாக உழைத்து அல்லது பணம் செலவு செய்து, நிலத்தில் பயிர் செய்வதற்கு நிலத்தை தகுதியாகச் செய்தவர் அல்லது அதற்கு மேம்பாடு செய்திருப்பவர் அல்லது மாவரித் திட்டத்தை அனுசரித்து 'நிலத்திலுள்ள மரங்களைப் பெற்றிருப்பவர்' அல்லது அந்நிலத்திலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்துப் பயிர் செய்பவருக்கு முதல் உரிமை வழங்கத்தக்கதாகும். 'வேறொரு ஆட்சேபணையும் இல்லையெனில், 'அரசுக்குடி முறை நில ஒப்படை நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அந்நில ஒப்படை பெற்றுக் கொள்ளுமாறு அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். நில ஒப்படையை ஏற்றுக் கொள்ள அவர் தவறிவிடுவாரெனில், முதலுரிமை பெறுவதற்குரிய சலுகைகளையெல்லாம் அவர் இழப்பார். மேலும் 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தில் வகுக்கப் பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரித்து நிலத்திலின்றும் அவர் வெளியேற்றப் படுவார். இக்கொள்கைகளுக்கும் இவை போன்ற மற்ற கொள்கைகள் யாவற்றிற்கும் உட்படுத்தி, முதலில் விண்ணப்பம் செய்தவருக்கு முதலுரிமை வழங்கத்தக்கதாகும். கிராமத்தில் குடியிருப்பவர்களுக்குச் சொந்த வீடு இருந்தாலும் இல்லா விட்டாலும் அத்தகையோரும், கிராமத்தில் வீடு அல்லது நிலம் உடையவர்கள் கிராமத்தில் குடியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அத்தகையோரும், "கிராம வாசிகள்" ஆவர். கிராமத்தில் குடியிருப்பவர் ஒருவர் தமது அநுபோகத்திலுள்ள நிலத்தின்[3] உரிமையை விட்டுவிடுதலினால் அல்லது தீர்வையைச் செலுத்தத் தவறியதினால் அந்நிலம் அநுபோகமற்ற தாகும்போது, அந்நில ஒப்படையைப் பெறுவதற்கு அவருக்கு முதல் உரிமை இல்லை.[4] கிராமத்தில் குடியில்லாதவர்களைப் பொறுத்த வரையில், இம் முறைகளை அனுசரித்துக் முதலுரிமை வழங்கத்தகும். மேலே சொல்லி யுள்ள கொள்கைகளை அனுசரித்துக் கிராமத்தில் குடியிருப்பவர்கள் ஒரு சார்பிலும், கிராமத்தில் குடியில்லாதவர்கள் மறு சார்பிலும் உரிமைகளைக் கொண்டாடுவார்கள் எனில் குடியிருப்பு காரணத்தைத் தவிர்த்து, மற்ற வற்றில் நிலைமை சமமாக இருக்குமாயின், கிராமத்தில் குடியிருப்பு காரணமாக அளிக்கப்பட வேண்டிய முதல் உரிமை சலுகை மட்டும் காட்டவேண்டுமே யன்றிக் குடியிருப்பு காரணமாக முதலுரிமை முழுவதையும் வழங்கத் தக்கதில்லை.

1928 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி, 30 என், வ.து.வா.செ.

[4] 1885 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 ஆம் தேதி, 2245 என், வ.து.வ. செ.

[2] 1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் தேதி, 1579 என், வ.து.வா. செ.பலவ.

[4] 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 என், வ.து.வா. செ.

[4] 1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி; 87 என், வ.து. வா.செ.

1928 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் தேதி, 766 என், அ.ஆ. வரு. பலவ.

[2] 1927 ஆம் ஆண்டு ஆகஸ்டு மே மாதம் 30 ஆம் தேதி, 1023 என், அ.ஆ. வரு.பலவ.

[தி. ஆ. 15:10]

[3] 1911 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி, 1425 என், அ.ஆ.

[1] 1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதி, 1735 என், அ.ஆ. வரு. பலவ.

[2] 1929 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதி, 1265 என், வ.து.வா, செ. பலவ.

[6] 1929 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் தேதி, 758 என், அ.ஆ. வரு.

1945 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 280 என், அ.ஆ. வரு. பல.

1945 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி, 7 என், வ.து.வா. செ. அச்சு.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வரு.

(2) யாதொரு நிலத்தையும் அநுபோகம் செய்திருப்பவர்கள் அந் நிலத்தின் ஒப்படை பெறுவதற்குத் தகுதியில்லாதவர்களாக இருப்பின் எச்சமயத்திலும் அந்நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப் படுவதற்குட்படுவார் கள். மேலும், நிலம் ஒப்படை பெறத் தகுதியுடையவருக்கு ஒப்படை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னர், அவ்வாறு அநுபோகம் செய்திருப்பவர்கள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

(3) விலை மதிப்புள்ள நிலத்தில் அனுமதி பெறுது செய்யப்படும் அநுபோகங்களெல்லாம் பார்வையிடப்பட்டவுடன் ஆட்சேபணையுள்ளவை யாகக் கருதப்படவேண்டும். மேலே குறிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனு சரித்து நிலத்தின் ஒப்படை பெறுவதற்கு நிலத்தை அநுபோகம் செய்திருப் வர் தகுதி உடையவரல்லராகில், மேலே கண்டுள்ள விதிகளின் கீழ் நிலத்தைக் கொடுக்க யோசனை செய்யப்பட்டிருப்பினும் அவ்வாறில்லாவிடினும், அவர் உடனடியாக நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறுது அநுபோகம் செய்திருப்பவர் அப்புறப்படுத்தப்படும் வரையில் இத்தகைய நிலத்தைக் கொடுக்க முடிவு செய்வதற்கு வேண்டியதொரு நடவடிக்கையும் எடுக்கலாகாது.

(4) மேலே கண்டுள்ள (2) ஆவது உள்பத்தியில் கூறப்பட்டுள்ளது எவ் வாறு இருப்பினும் (அரசியல் தியாகிகளுக்கு அளிக்கத்தக்க நில ஒப்படையைப் பற்றிய தேதி அல்லது அதற்கு முந்திய தேதியாகிய) 30—4—1948 தேதியிலிருந்து ஒருவர் அனுமதி பெறாமல் நிலத்தில் தொடர்ந்து அநுபோகம் செய்து வந்திருந்து, அதிகமாகச் செலவு செய்தும் உழைத்தும் நிலத்தில் சீர்திருத்தம் அல்லது மேம்பாடு செய்திருப்பாரெனில், அவ்வகையில் அவர் தாம் நிலத்தின் முதலீடு செய்த தொகையைத் திரும்ப அடையவில்லை எனில், அவர் அத்தொகையைத் திரும்ப அடைவதற்கு நிலத்தை அநுபோகம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். மேலே குறிக்கப் அக்காலம் வரையில் அல்லது 30—6—1958 தேதி வரையில், இவற்றில் எது முதலில் இறுதி அடையுமோ அக்காலம் வரையில் அவர் நிலத்தை அநுபோகம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும. மேலே குறிக்கப் பட்டுள்ள காலம் முடிவடைந்த பின்னர் அல்லது 30—6—1958 தேதிக்குப்

ச/நி. ஆ. 15:10–11

பின்னர் தக்கவாறுக அப்போது அத்தகைய நில ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையவருக்கு ஒப்படை செய்யப்படுவதற்காக நிலம் தேவையாக இருப்பின், அநுபோகம் செய்திருப்பவரை நிலத்தினின்றும் அப்புறப்படுத்த வேண்டும்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296, என் அ.ஆ. வரு.

(5) நிலமில்லாதவர்களாகவும், ஏழைகளாகவும் இருப்பவர்களில் குறிப்பான வகுப்பினர் அல்லது ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு முதலுரிமை சிறப்பாக வழங்கப்பட மாட்டாது. நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்களின் தராதர உரிமைகளை நில ஒப்படை செய்யும் அலுவலர்கள் கவனித்துப் பார்த்துத் தாமே முடிவு செய்ய வேண்டும். இவ்வகையில் இப்பத்தியிலுள்ள பொது அறிவுரைகளையும் கவனத்திற் கொண்டு அரசினரின் மதுவிலக்குக் கொள்கையின் காரணமாக முன்னல் டமேறி வாழ்க்கை நடத்தி வந்தவர்கள் நில ஒப்படை பெறுவதற்குப் பெற்றுள்ள தனி உரிமைகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

1953 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி, 91431, ஊ-56-6 என் அ. குறிப்பு வரு.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296 என், அ.ஆ. வரு.

1956 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வரு.

11. நிலத்தின் இருப்பு உரிமையை ஏலத்தில் விற்பனை செய்தல்.—இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்கள் நில ஒப்படை வேண்டுமென விதிகளை அனுசரித்து விண்ணப்பம் செய்திருக்கும்போது அவர்களில் எவருக்கு நில ஒப்படை பெறுவதற்குச் சிறந்த உரிமை இருக்கிறதென்று தாசில்தார் அல்லது கோட்ட ஆட்சியாளர் முடிவு செய்ய இயலவில்லையென்றால், கோட்ட ஆட்சியாளர் பகிரங்கமான ஏலத்தில் அந்நில இருப்பு உரிமை தம்மால் உறுதி செய்யப்படுவதற்குட்படுத்தப்பட்டு, மிக உயர்ந்த விலை கூறுபவருக்கு விற்பனை செய்யப்பட ஆணை பிறப்பிக்கலாம். [2]அத்தகைய விற்பனைகளில் தாசில்தார், துணைத் தாசில்தார், அல்லது வருவாய் ஆய்வாளர் விற்பனை செய்யும் அலுவலராவர். ஒவ்வொன்றிலும் விற்பனை செய்யும் அலுவலரைக் கோட்ட ஆட்சியாளர் நியமனம் செய்வார். அத்தகைய ஏல விற்பனையில் நிலத்தை அடைந்தவர், ஆதியில் அவருக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருந்தால் அந்நிலத்திற்கு அவர் எவ்வளவு தீர்வை செலுத்த வேண்டுமோ, அதே தீர்வையைச் செலுத்தக் கடவர். அத்தகைய நில ஏல விற்பனையில் எவரும் விலை கூறி நிலத்தை எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு நிலம் ஏல விற்பனையாகும்பொழுது 1864 ஆம் ஆண்டு II ஆவது சட்டத்தின் 36 ஆவது பத்தி [3] ஆவது உடபிரிவில் கண்டுள்ளவாறு, ஏல விற்பனையில் 15 சத வீதம் வைப்புத் தொகை செலுத்த வேண்டுமென்றும், ஏல விற்பனை ஆன தேதியிலிருந்து, 30 நாட்களுக்குள் பாக்கித் தொகையைச் செலுத்தாவிடில், அவ்வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதற்குள்ளாகும் என ஏல நிபந்தனைகளுக்குள் ஒரு நிபந்தனை ஏற்பாட்டையும் சேர்த்தும் கொள்ள

நி. ஆ. 15:12]

வேண்டும். மாவட்டத்தின் யாதொரு நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தின் போதும் இந்நிலத்தின் தீர்வை மாறுதல் செய்யப்படுவதற்குட்படும் என்பதை யும் ஏல அறிவிப்பில் குறிக்கப்பிட்டுக்காட்ட வேண்டும்.

[3] 1932 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி, 1477 எண். அ.ஆ.வரு. பல.

1883 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி, 1146 எண், அ. ஆ.

1896 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் தேதி, 232 எண். வ. து.வா. செ.

[3] 1932 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் தேதி, 43 எண். வ.து.வா செ.அச்சு.

[1] 1905 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் தேதி, 147 எண், வ. து. வா. செ.

1905 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் தேதி, 557 எண். அ.ஆ.

1906 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி, 17 எண். வ. து. வா.செ.

12. நில ஒப்படை ஆணைகளை அறிவித்தல்.—(1) ஆணையின் படிவமும் அதில் அடங்கியிருக்க வேண்டியவையும்.—தாசில்தார் பிறப்பிக்கும் நில ஒப்படை ஆணை கிராமத்திலிருந்து வரப்பெற்ற ஒப்படைக் குறிப்பில் பதிவு செய்யப்படவேண்டும். தாசில்தாரின் ஆணையுடன் ஒப்படைக் குறிப்பின் இரண்டாம் பிரதி கிராம அதிகாரிகளுக்கு உடனடியாக அனுப்பப்பட வேண்டும். மேலும் V-ஆவது இணைப்பில் அச்சிடப்பட்டிருக்கும் இ படிவத் தில், அவ்வாணை சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் உடனே தாசில்தாரால் அறிவிக்கப்பட வேண்டும். மற்ற வேலைகளை விட நிலம் ஒப்படை செய் வதில் ஒழுங்கான முறையைக் கைக்கொண்டு உடனே செயலாற்றுவது தாசில்தாரின் கடமையாகும். தமது சுற்றுப் பயணத்தின்போது முடி வடையாமலிருக்கும் நில ஒப்படைகளை அவர் முடிவு செய்ய வேண்டும்.[2]

1886 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி, 1943 எண். வ.து வா.செ.

1893 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி, 406 எண். அ.ஆ.

[4] 1908 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் தேதி, 210 எண். அ.ஆ.

1908 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி, 79 எண். வ.து. வா. செ.

1908 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதி, 123 எண். வ.து.வா. செ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண். அ.ஆ. வரு. கைப.

(2) நிபந்தனைக்குட்படுத்தப்பட்ட ஒப்படை.—நிபந்தனைகளுக்குட் படுத்திச் செய்யப்படும் ஒவ்வொரு ஒப்படையிலும், கிராமக் கணக்குருக்கு அனுப்பும் ஆணையில் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது என்பதையும் கிராம நிபந்தனை ஒப்படைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் எல்லாவற்றையும் தாசில்தார் குறிக்க வேண்டும். கிராமப் பதிவேட்டில் ஒப்படை சம்பந்தமான நிபந்தனைகள் பதிவு செய்யப்பட்

[நி. ஆ. 15:12

டுள்ளது என்ற சான்றறிக்கையை வருவாய் ஆய்வாளரிட மிருந்து தாசில் தார் வரப் பெறும் வரையில் தாலுகா அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட கடிதக் கோப்பு முடிவு செய்யப்படக்கூடாது.

1923 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் தேதி, 123 எண். அ.ஆ. வரு. பலவ.

1928 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி, 5 எண். வ.து. வ. செ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண். அ.ஆ. கைப.

(3) தனி நிபந்தனைகள்.—தனிப்பட்டவர்களுக்குச் செய்யப்படும் நில ஒப்படை, 15 ஆவது நிலை ஆணையின் கீழ் வழக்கமாக விதிக்கப்படும் நிபந் தனைகளுக்குக் கூடுதலாகக் கீழ்க்கண்ட தனி நிபந்தனைகளுக்கும், கலெக்டர் விதிக்க விரும்பத்தக்க நிபந்தனைகளுக்கும் உட்படுத்தப்பட்டுக்க வேண்டும்.

(i) ஒப்படைத் தேதியிலிருந்து பத்தாண்டுகளுக்குள் நிலம் விற் பனை அல்லது பராதினம் செய்யப்படக் கூடாது. இருப்பினும், நில மேம் பாடு சட்டம் அல்லது விவசாயிகள் கடன்கள் சட்டம் ஆகிய இச் சட்டங்களின், கீழ் பினைக் காரியங்களுக்காக அரசினரிடமும், நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் நேர்முகமாக விவசாயத்தில் ஈடுபடக் கூடியவர்களாக இருப்பவர்களை அங்கத்தினராகக் கொண்ட கூட்டுறவுக் கழகத்திடமும் அடைமானம் செய்து கொள்ளலாம்.

(ii) ஒப்படைத்த தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் நிலத்தை விவசாயத்திற்கு கொண்டுவர வேண்டும்.

இருப்பினும் (அ) தாசில்தார் அவசியமெனக் கருதுவார் எனில், மேலே சொன்ன கால அளவை மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு நீடிக்கலாம். கோட்ட ஆட்சியாளர் அவசியமெனத் தாம் கருதுவார் எனில், அந்தக் கால அளவை மேலும் ஓராண்டு நீடிக்கலாம்.

(ஆ) ஒப்படை செய்யப்பட்ட நிலம் அல்லது அதன் பாகம் விவசாயம் செய்யப்படத் தக்கது எனத் தாசில்தார் பதவிக்கும் குறைந்தாத பதவி வகிக்கும் அலுவலர் ஒருவர் சான்று செய்வார் எனில், அந்நிலம் அல்லது அதன் பாகம் யாதாக இருப்பினும் அது இந் நிபந்தனைக்குட்படாது.

(iii) ஒப்படை பெற்றவரும் அவர் வாரிசுகளும் நேர்முக விவசா யத்தில் ஈடுபட வேண்டும்.

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் யாதாயினும் அல்லது விதிக்கப்படத் தக்க ஏனைய நிபந்தனைகள் எவையேனும் மீறப் பட்டால், ஈடு கொடுக்கப்படாமல் நிலம் திரும்ப எடுத்து கொள்ளப்படு வதற்குட்படும்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296 எண். அ.ஆ. வரு.

958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண். அ.ஆ. வரு. கைப.1

நி. ஆ. 15:18-14]

13. (1) பதிவு செய்தல்.—தாசில்தார் பிறப்பித்த ஆணையுடன் கூடிய ஒப்படைக் குறிப்பு கிடைக்க பெற்றவுடன் ஒப்படை பெற்றவர் அடுத்த ஜமாபந்தியில் பட்டா பெறுவதற்குரியரென்பதற்காக அவர் பெயரைக் கிராம அலுவலர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(2) மேல் முறையீட்டின் அல்லது ரிவிஷனின் முடிவு காரணமாக பதிவு மாறுதல் செய்தல்.—தாசில்தாரின் ஆணை மேல் முறையீட்டில் அல்லது ரிவிஷனில்[1] தள்ளுப்படி செய்யப்படுமானால், மேல் முறையீட்டில் அல்லது [1] ரிவிஷனில் பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தாசில்தாரிடமிருந்து வரப்பெற்றவுடன், கிராம அலுவலர்கள் கிராமப் பதிவேடுகளில் தேவையான திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். நிலத்தில் சுவாதினம் பெற்றிருப்பவரை அவரது சுவாதீனத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்துதல் சட்டமுறைப் போக்கை அனுசரித்து உள்ளதாகச் சொல்ல முடியாதாகையால் மேல், முறையீடு அல்லது ரிவிஷனில் பிறப்பிக்கப்பட்ட ஆணையை ஆதாரமாகக் கொண்டு, அவரது சுவாதீனத்தில் தலையிடக் கூடாது. எவர் பெயரில் இறுதியாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளதோ, அவர் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ள இறுதியான ஒப்படை ஆணையை ஆதாரமாகக் கொண்டு, தொடரத்தக்க வழக்கிலுலோ அல்லது வேறு வகையிலோ நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளுமாறு அவரை விட்டு விட வேண்டும்.[2]

1908 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதி, 123 என். வ.து.வா செ.

[1] 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 என். வ.து.வா. செ.

[2] 1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதி, 1732 என். அ.ஆ. வரு. பலவ.

1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் தேதி, 87 என். வ. து. வா.செ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என். அ.ஆ. வரு.கைப.

14. நிலையிலுள்ள மரங்கள், ஈனறுகள், கட்டடங்கள் ஆகிய இவற்றின் மதிப்புத் தொகையைச் செலுத்துதல்.—நில ஒப்படை பெறத்தக்கவராலே வைத்து வளர்க்கப்பட்டவை என மெய்ப்பிக்கப் பெற்ற மரங்கள் நீங்கலாக நிலத்தில் நிலைத்து நிற்கும் இதர மரங்களின் விலைமதிப்புத் தொகையை அவரிடமிருந்து (மேலே குறிக்கப்பட்டுள்ள 9-ஆவது பத்தியைக் காண்க) இறுதியான ஆணை பிறப்பிப்பதற்கு முன்பே வசூலித்துவிட வேண்டும். மரங்களின் நடப்பு விலை மதிப்புத் தொகை அல்லது சென்னை வன சட்டத்தின் 26(h) பிரிவின்கீழ் மாவட்டத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காட்டு வரி வீதங்களின் அளவை அனுசரித்துள்ள மதிப்பு தொகை இவற்றில் எத்தொகை அதிகமாக உள்ளதோ, அத்தொகையை கலெக்டர் தமது யுக்தானுசாரத்தில் வசூல் செய்யலாம். தாசில்தாரின் பொதுவான மேற்பார்வையில், நிலத்திலிருக்கும் மரங்களை எண்ணிக்கை செய்வதற்கும் பொருத்தமான காட்டுவரி வீத அளவை அனுசரித்து அம்மரங்களை வகைப் படுத்துவதற்கும் வருவாய் ஆய்வாளர் பொறுப்பாளர் ஆவார். [1] நிலத்

திற்காக விண்ணப்பம் செய்திருப்பவர், [1] மதிப்பிடு செய்யப்பட்ட தொகையைச் செலுத்த ஏற்றுக் கொள்ளாவிடில், குறித்த காலத்திற்குள் வெட்டி அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்படுத்தி அம்மரங்களை ஏலத்தில் விற்பனை செய்துவிடலாம்; [1] இவ்வாறு செய்வதற்கு முன்னர், நில ஒப்படை செய்யும் அலுவலர் நிலத்திலுள்ள மரங்களை, அதிக உணவுப் பயிர் விளைவிக்கும் பொருட்டு நிலையிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதிலும், வன மகோத்சவத்தை முன்னிட்டு மரம் வளர்ப்பதிலும் எதிர்மாறாக உள்ள நன்மைகளைச் சீர்தூக்கி பார்த்து ஒவ்வொன்றின் தகுதிகளை அனுசரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும். இதற்காகவும் அல்லது வேறு யாதொரு காரணத்தைக் கொண்டும், மரங்களை ஏலத்தில் விற்பனை செய்வது விரும்பத் தக்கதென்றால் அல்லது விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவர் நிலத்தைப் பெறத் தக்கவர் என்றால், ஒப்படை செய்யும் அதிகாரி காட்டுவரி விதத்திற்கும் குறைந்த விதங்களில் அல்லது நடப்பு விலை மதிப்பு விதத்தில் அல்லது இரு விதங்களையும் அனுசரித்து மரத்தின் மதிப்புத் தொகையை வசூலித்துக் கொள்ளலாம். ஏழ்மை என்ற காரணத்தைக் கொண்டு மரத்தின் மதிப்புத் தொகையை முற்றிலுமே தள்ளிக் கொடுத்து விடலாம். இவ்விரு முறைகளில் யாதொன்றிலும், அதாவது மரத்தின் விலை மதிப்புத் தொகை குறைக்கப்படினும் அல்லது தள்ளிக் கொடுக்கப்படினும், ஒப்படை செய்யும் அதிகாரி அதற்குரிய காரணத்தை எழுதிப் பதிவு செய்ய வேண்டும். மரங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் ஏழ்மையென்ற காரணத்தினால் மதிப்பீட்டுத்தொகையைக் குறைத்து விடுவதற்கும் அல்லது அத்தொகையை முற்றிலுமே வசூலிக்காமல் விட்டுவிடுவதற்கும் மாத்தின் மதிப்பு 100 ரூபாய் அல்லது அதற்கும் குறைந்ததாக இருக்குமானால் தாசில்தாரும் 100 ரூபாய்க்கு அதிகமாக ஆனால் 200 ரூபாய்க்குக் குறைந்த திருக்குமானால் கோட்ட ஆட்சியாளரும் ஆணை பிறப்பிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். மதிப்பு 200 ரூபாய்க்கு அதிகமாக இருக்குமானால் அத்தகையவையெல்லாம் கலெக்டரின் ஆணைக்காக மேலனுப்பப்படவேண்டும். இவ் விதிகளை அனுசரிப்பதில் நேரிடக் கூடிய எத்தகைய சூழ்நிலைகளிலும், மாவட்ட வன அலுவலரின் ஆலோசனையைக் கலெக்டர் தம் யுக்தம் போல் கேட்டுக்கொள்ள அவருக்கு உரிமை உண்டு. மேலும், மாவட்ட வனத்துறை அலுவலரால் அல்லது அவர் சார்நிலையில் உள்ள அலுவலர்களில் ஒருவரால் பார்வையிடப்பட்டாலன்றி மரத்தின் மதிப்பீட்டைப் பற்றி எத்தகைய முடிவும் செய்யக் கூடாது என்று பொதுவாகவோ அல்லது சிறப்பாகவோ கலெக்டர் ஆணை பிறப்பிக்கலாம். கட்டடங்கள், கிணறுகள் முதலியவை, விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவரால் அல்லது அவர் முன்னோர்களால் தோற்றுவிக்கப் பெற்றவை என்று மெய்ப்பிக்கப்பட்டவை தவிர, மற்றவற்றின் கிரயம் வசூலிக்கப்பட வேண்டும். [2] கிணறுகளும் கட்டடங்களும் மற்ற கட்டுமானங்களும் விவசாய காரியங்களுக்கு உபயோகப்படாமல் இருந்து அவற்றிற்கு மேற்கொண்டு முதலீடு செய்யப்படாமல், யாதொரு விதத்திலும் ஆதாயம் பெறும் வகையில் அவற்றை உபயோகப்படுத்த இயலாதெனில், அத்தகைய கட்டுமானங்களுக்கு செலுத்தப்படும் விலை அவற்றின் நடப்பு விலை மதிப்புத் தொகையின் ஐம்பது சதவீதத்திற்கு மேற்படக்கூடாது. இவ்வாறு, இவ்விதியின் கீழ்க் கணக்கிடப்படும்

மி. ஆ. 15 :14–15]

தொகை ஒப்படை செய்யப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்டவரால் செலுத்தப்பட வேண்டும்.

கீழ்க் கண்ட குறிப்பான மாவட்டங்களில் நிலங்களை ஒப்படை செய்வதற்கு முன்னர், நிலத்தை ஒப்படை செய்யும் கலத்தில் அதில் இருக்கும் சந்தன மரங்களின் உரிமையையும், பின்னர் அதில் வளரக்கூடிய சந்தன மரங்களின் உரிமையையும் அரசினிடம் ஒதுக்கி வைத்துவிட வேண்டும்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் நீலகிரி.

[1] 1945-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ஆம் தேதி, 2618 என், மு.ஆ வரு.கை.ப.

1953-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆம் தேதி, 259 என், அ.ஆ. வரு. கை.ப.

[1] 1955-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ஆம் தேதி, 147 என், வ.து.வா. செ.அச்சு.

1953-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ஆம் தேதி, 34 என், வ. தூ வா. செ. அச்சு.

1956-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ஆம் தேதி, 22 என், வ. து. வா. செ. அச்சு.

[1] 1953-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதி, 2955 என், அ. ஆ. வரு.

[2] 1954-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி, 296 என், அ.ஆ. வரு.

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வரு. கை.ப.

15. **மேல் முறையீடுகள்.**— தாசில்தார், கோட்ட ஆட்சியாளர், கலெக்டர் ஆகிய இவர்களை பிறப்பிக்கும் ஒவ்வொரு நில ஒப்படை முடிவை எதிர்த்து ஒரே மேல்முறையீடு செய்துகொள்வது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தாசில்தாரின் ஆணையை எதிர்த்துக் கோட்ட ஆட்சியாளரிடமும், கோட்ட ஆட்சியாளரின் ஆணையை எதிர்த்து கலெக்டரிடமும் ஆணை பிறப்பிக்கப் பட்ட அல்லது ஆணை அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்ளும், கலெக்டரின் ஆணையை எதிர்த்து வருவாய்த்துறை வாரியத்திற்கு கலெக்டரின் ஆணை பிறப்பிக்கப்பட்ட அல்லது ஆணை அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 40 நாட்களுக்குள்ளும், மேல் முறையீடு ஒன்று செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காலவரம்பைக் கணக்கிடுவதில், எந்த முடிவை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்படுகிறதோ, அந்த முடிவு பிறப்பிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட நாளையும், முடிவின் நகலைப் பெற்றுக் கொள்வதற்கு எடுத்துக்கொண்ட காலத்தையும், கால வரம்பிலிருந்து விலக்கிவிட வேண்டும். அனுப்பப்படும் எல்லா நகல்களிலும் முடிவு அல்லது அறிவிப்பின் தேதி, நகல் கொடுக்கப்பட வேண்டுமென்று செய்து கொண்ட விண்ணப்பத்தின் தேதி, நகல் கொடுக்கப்படுவதற்குத் தயாராக இருந்த தேதி மேல், முறையீடு செய்வதற்குரிய காலம் முடிவடைகிற தேதி இவற்றை எல்லாம் பதிவு செய்யவேண்டும். ஒப்படையில் அக்கறை கொண்டவர் எவராயினும், இதற்கு எதிராக மேல்முறையீடு

[நி. ஆ. 15:15–18

செய்து கொள்ளலாம்; நிலை ஒப்படைகளில் கோட்ட ஆட்சியாளரிடமும் கலெக்டரிடமும் செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகளுக்கு ஒரு ரூபாய் மதிப்புள்ள நீதிமன்றக் கட்டண வில்லை ஒட்ட வேண்டும். வருவாய்த் துறைக் கழகத்திற்குச் செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகளுக்கு இரண்டு ரூபாய் மதிப்புள்ள நீதிமன்றக் கட்டண வில்லை ஒட்டவேண்டும்.

16. காலாவதியான மேல்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளுதல்.—முந்திய பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மேல்முறையீடு செய்து கொள்வதற்குரிய காலத்திற்குள், மேல்முறையீடு செய்து கொள்ளாததற்குத் தக்க காரணங்கள் மேல்முறையீடு செய்பவருக்குப் போதுமான அளவில் இருந்தனவென்று மேல் முறையீட்டு அதிகாரி மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் கருதுவாரெனில், மேல்முறையீடு செய்து கொள்வதற்குரிய காலம் கடந்த போதிலும் அத் தகைய முறையீட்டை அவர் ஏற்றுக்கொள்ளலாம்.

17. மேல் முறையீடுகளுக்குச் செவி சாய்க்கும் முறை.—முன்னமே பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது ஆணைகளை எதிர்த்து செய்யப்படும் மேல் முறையீட்டுடன், அவ்வாணையின் அல்லது ஆணைகளின் சான்று செய்யப்பெற்ற நகல்கள் இணைத்து அனுப்பப்பட்டிருந்தாலன்றி அம் மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளக் கூடாது. தம்மிடம் நேரில் வந்து சொல்லிக் கொள்ளத்தக்க வாய்ப்பு எதிர்வாதிக்குக் கொடுக்கும் வகையில் அவருக்கு ஓரறிவிப்பு, அனுப்பாமல் அவரது நலனுக்குப் பாதகம் விளையுமாறு எந்த ஆணையையும் மாற்றவோ அல்லது அதைத் திருத்தவோ கூடாது. மேல் முறையீட்டில் பிறப்பிக்கப்படும் ஆணை அதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் முன்னிலையில் கூறப் பெற்றலன்றி, எப்பொழுதுமே எழுத்து வடிவில் இரகசியமின்றி அவ்வாணை அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் போதுமான முத்திரைத் தாள்களுடன் முத்திரை வில்லை தக்கவாறு ஒட்டி விண்ணப்பம் செய்து கொள்வாரெனில், ஆணையின் சான்றிட்ட நகல்கள் நடைமுறை போக்கில் கொடுத்துவிட வேண்டும்.

1872-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ஆம் தேதி, 30 எண், வ. து. வா. செ.

1893-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் தேதி, 406 எண். அ. ஆ.

1887-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி, 677 எண். வ.து. வா.செ.

1922-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி, 10 எண், வ.து.வா. செ.

18. ரிவிஷன்.—மேல்முறையீடு செய்யப்படாவிடின், ஒப்படை செய்யும் அதிகாரி பிறப்பித்த ஆணையும், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு அதிகாரி பிறப்பித்த ஆணையும் முடிவானவை; இரண்டாவது மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இருப்பினும், ஒப்படை சம்பந்தமான நடைமுறையில் குறிப்பிடத்தக்க ஒழுங்கீனம் நடந்துள்ளது என்றுவது, முடிவு முற்றிலுமே நேர்மையற்றதென்றுவது, அம் முடிவு பிறப்பித்த அலுவலர் தமக்குள்ள அதிகார வரம்பை மீறி அவ்வாணையைப் பிறப்பித்து விட்டனர் என்றுவது, அல்லது உண்மைக்குப் புறம்பாக ஒப்படை செய்யப்பட்ட தென்றுவது அல்லது தவறுக முறையிடப்பட்டது அல்லது மோசடி செய்யப்பட்டதென்ற காரணமாக அவ்வாணை பிறப்பிக்கப்பட்டது

நி. ஆ. 15:18]

என்றுவது, முதலில் முடிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து அல்லது மேல் முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட முடிவாணைத் தேதியிலிருந்து மூன்றுண்டு களுக்குள் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் கலெக்டர் கருதுவாரெனில் அவர்தம்சார்நிலை அலுவலர் பிறப்பித்த ஆணையைத் தள்ளிவிடலாம், அல்லது ரத்து செய்து விடலாம்; அல்லது யாதொரு வகையில் மாற்றி அமைக்கலாம். வருவாய்த் துறை வாரியத்தினர் அல்லது அரசினர் தமக்குச் சார்நிலையில் உள்ள எந்த அதிகாரி பிறப்பித்த ஆணை முற்றிலுமே நேர்மையற்ற தென்று மனநிறைவு கொள்ளும் வகையில் கருதுவார் எனில், அவ்வாணை பிறப்பிக்கப் பட்ட தேதியிலிருந்து மூன்றுண்டுகளுக்குள், அவ்வாணையைத் தள்ளுபடி செய்யலாம் அல்லது ரத்து செய்யலாம் அல்லது யாதொரு வகையில் திருத்தி அமைக்கலாம். இவ்வாறே அவர்கள் இத்தகைய அதிகாரத்தை, நடை முறையில் முக்கியமான ஒழுங்கீனம் இருக்குமாறு அல்லது முடிவு செய்த அலுவலர் தமக்குள்ள அதிகார வரம்பிற்கு மீறி நடந்து கொண்டார் என்றால், அல்லது உண்மைக்குப் புறம்பாக மோசடி செய்யப்பட்டது அல்லது தவறுக முறையிடப்பட்டது காரணமாக முடிவு செய்யப்பட்டது என்றால், கால வரம்பில்லாமல் செலுத்தத் தகும். இப் பத்தியில் விதிக்கப்பட்டுள்ளவாறு ரிவிஷனில் ஆணை பிறப்பிக்க அனுமதிக்கப்பட்ட அதிகாரிகள், ரிவிஷனில் ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில் தடுப்பாணை பிறப்பிக்க அதிகாரம் பெற்றுள்ளார்கள்.

இந்த நிலை ஆணைக்குத் திருத்தம் வெளியிடப்படுவதற்கு முன்னர் அரசினரின் சார்நிலையிலுள்ள அதிகாரி பிறப்பித்திருந்த ஆணையில் அரசினர் தலையிட்டு அதில் தாம் பிறப்பித்த ஆணையானது, எல்லாக் காரியங்களுக்குமே, திருத்தம் செய்யப்பட்ட இந்த நிலை ஆணையின் கீழ்ச் செல்லத்தக்க முறையில் பிறப்பிக்கப்பட்டன என்பதாகக் கருத வேண்டும்.

மாவட்டக் கலெக்டருக்கு அல்லது வருவாய்த் துறைக் கழகத்திற்கு அல்லது அரசினருக்கு செய்து கொள்ளும் ரிவிஷன் மனுக்களைப் பொறுத்த வரையில், எந்த முடிவு அல்லது ஆணையை மாற்றியமைக்கப்பட வேண்டு மெனக் கோரப்படுகின்றதோ, அந்த முடிவு அல்லது ஆணை பிறப்பிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்கள் கழிந்த பின்னர் செய்து கொள்ளப்படும் யாதொரு ரிவிஷன் மனுவும் இந்த நிலை ஆணையின் கீழ்ச் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நில ஒப்படை களில் கலெக்டரிடம் தாக்கல் செய்யப்படும் ரிவிஷன் மனுக்களுக்கு 25 பைசா மதிப்புள்ள நீதி மன்றக் கட்டண வில்லையும், வருவாய்த் துறைக் கழகத்திற்குச் செய்து கொள்ளப்படும் அத்தகைய மனுக்களுக்கு ஒரு ரூபாய் ஐம்பது பைசா மதிப்புள்ள நீதிமன்றக் கட்டண வில்லையும் ஒட்ட வேண்டும்.

1958-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி, 495 என். அ.ஆ. வரு. கை. ப.

1958-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7-ஆம் தேதி, 287 என். வ.து. வா. செ.பலவ.

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி, 3316 என், அ.ஆ. வரு.கை.ப.

[நி. ஆ. 15:19—22

19. மேம்பாடுகளுக்கு ஈடு கொடுக்கப்படமாட்டாது.—மேல்முறையீட்டிலாவது ரிவிஷனிலாவது ஒப்படை தள்ளுபடி செய்யப்படுமானால், ஒப்படை நிலத்திற்கு, ஒப்படை பெற்றவர் தாம் செய்திருக்கக் கூடிய மேம்பாடுகளுக்கு ஈடு பெறுவதற்குரியவர் அல்லர்.

1927-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி, 795 என், அ.ஆ. வரு. பலவ.

1927-ஆம் ஆண்டு மே மாதம் 13-ஆம் தேதி, 28 என், வ.து. வா. செ.

20. ஒப்படையை மறுத்ததாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணையை மேல் முறையீட்டு அதிகாரி அல்லது ரிவிஷன் அதிகாரி மாற்றி விடுவானில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.—சார்நிலை அலுவலர் நிலத்தை ஒப்படை செய்ய மறுத்ததாகப் பிறப்பித்த ஆணையை மாற்றிவிடும் மேல் நிலை அதிகாரி (1) அந்நிலத்தை தாமாகவே ஒப்படை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் அல்லது (2) எந்த அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அலுவலர் அந்த நிலத்தை, விதிகளை அனுசரித்து ஒப்படை செய்யுமாறு அவர் கட்டளையிடப்படலாம்.

1908-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் தேதி, 79 என், வ.து. வா. செ.

1922-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி, 1910 என், வ. து. வா.செ.

21. நில ஒப்படைப் பதிவேடுகளை எழுதி வைத்து வருதல்.—ஒப்படைக் குறிப்புக் கோப்பு, ஆக்கிரமிப்பு குறிப்புக் கோப்பு, 'இ' பதிவேடு; இவற்றை கிராம அலுவலர்கள் எழுதி வைத்து வரவேண்டும். தாலுகா நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ள 4 என் படிவப் பதிவேடு தாலுகா அலுவலகத்தில் எழுதி வைக்கப்படவேண்டும். கிராமக் குறிப்புக் கோப்புகளையும் 'இ' பதிவேட்டையும் தாலுகாப் பதிவேட்டுடன் ஆராய்வு செய்து, ஒப்பிட்டுப் பார்த்து அவை தாலுகாப் பதிவேட்டுடன் ஒத்திருக்கின்றன என்று கையெழுத்திட்ட சான்றுடன் தாசில்தார், ஜமாபந்தி அலுவலர் முன் ஒப்புவிக்க வேண்டும். நில ஆணையில் உள்ள விதிகள் எம்மாத்திரம் அனுசரிக்கப்பட்டுள்ளவென்று ஆராய்வு செய்து பார்ப்பது ஜமாபந்தி அலுவலர்களின் கடமையாகும்.

1863-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி, 5632 என், வ.து. வா.செ.

1890-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ஆம் தேதி, 159 என், வ. து. வா. செ.

1922-ஆம் ஆணடு பப்ரவரி மாதம் 28-ஆம் தேதி, 10 என், வ.து.வா. செ.

22. சிறப்பான விலை மதிப்புள்ள நிலம்.—(1) சிறப்பான விலை மதிப்புள்ள நிலத்தைக் கொடுக்க முடிவு செய்தல் (i) சிறப்பான விலை மதிப்புள்ள நிலங்களின் வகைகள்.—

அடியில் கண்டுள்ள வகுப்புக்களின் கீழ் உள்ள நிலங்களை சிறப்பான விலை மதிப்புள்ள நிலங்களெனக் கருத வேண்டும்.

(அ) மூலதனக் கணக்குகளும் வருவாய் கணக்குகளும் வைக்கப் பெற்றுள்ள பெரிய பாசனத் திட்டத்திலிருந்து தண்ணீர் வரத்து பெற்று

நி. ஆ. 15:22]

வரும் அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்தின் கீழ் நன்செய்யாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது அப் பாசனத்தில் நீர் பாய்ச்சப்படக் கூடும் என்று கருதக் கூடிய நிலம்.

(ஆ) மூலதனக் கணக்கலும் வருவாய்க் கணக்குகளும் வைக்கப் பெற்றுள்ள பெரிய பாசனத் திட்டத்திலிருந்து தண்ணீர் வரத்து பெறுத அரசாங்க நீர்ப்பாசன ஆதாரத்தின் கீழ் நன்செயாகப் பதிவு செய்யப்பட் டுள்ள அல்லது அப் பாசனத்தில் நீர் பாய்ச்சப்படக் கூடும் என்று கருதத் தக்க நிலம்.

(இ) அரசாங்கச் செலவில் நிறைவேற்றப் பெற்று வருகிற நீர்ப் பாசனத்தின் கீழ் நீர்ப் பாய்ச்சப்படத் தக்க அல்லது பாயச்சப்படக் கூடிய தாகக் கருதத்தக்க நிலம்.

(ஈ) பெரிய கிராமத்திலிருக்கும் காரணத்தால் சிறப்பான மதிப்பை அடைந்த நிலம்.

(உ) நகர எல்லைகளுக்குள் சேர்க்கப்பட்டு ஆனல் 21-ஆவது நிலை ஆணையின்கீழ்க் கட்டட மனையாக வழங்கப்பட்டாததாய் அரசினர் வசமிருக்கும் நிலம்.

(ஊ) சிறப்பான காரணங்களை முன்னிட்டுச் சிறப்பான மதிப் புள்ள நிலமெனக் கலெக்டர் கருதக்கூடிய யாதொரு மற்ற நிலம்.

(எ) ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்கு அதிகமான விலை மதிப்பிடப்படுகின்ற புன்செய் நிலம்.

(ஏ) நகரங்களுக்கு அருகிலுள்ள நிலங்கள்.

குறிப்பு.—''நகரம்'' என்னும் சொல் 21-ஆவது நிலை ஆணையின் பத்தியில் என்ன பொருள் கொண்டுள்ளதோ அதே பொருள் அதற்கு கொள்ளவேண்டும்.

(ii) கொடுக்க முடிவு செய்யப்படக்கூடுமான சிறப்பான விலை மதிப்புள்ள நிலங்களின் வகைகளில் ஒவ்வொன்றும் எந்நிபந்தனைகளுக் குட்படுத்தி முடிவு செய்யப்படத்தக்கதோ அந்நிபந்தனைகள்.—(i) உட்பிரிவில் உள்ள (ஆ), (ஈ) இனத்திலிருந்து (எ) வரையிலுள்ள இனங்களில் விவரிக்கப் பட்டுள்ள நிலங்கள் அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கு ஒதுக்கி வைக்கப் படலாம். ஆனல் (1) ஆவது உட்பிரிவில் உள்ள (அ) (2), (ஏ) இனங்களில் உள்ள நிலங்களை அவ்வாறு ஒதுக்கி வைக்கலாகாது. (ஏ) இன நிலங்கள் நகரங்களுக்கு அருகில் இருப்பதுண்டு. அந் நிலங்களின் ஒப்படையைப் பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யக் கூடாது. (அ), (இ) உட்பிரிவுகளின் கீழ் உள்ள விலை மதிப்புள்ள நிலங்களையும், (ஆ), (ஈ) முதல் (எ) வரை யிலுள்ள நிலங்களில் அட்டவணையில் கண்ட ஜாதியினர்களுக்கு ஒதுக்கி வைக்கப்படாத நிலங்களையும், கொடுத்துவிட யோசனை செய்யப்படும்போது, முதலில், கோட்ட ஆட்சியாளர் நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்கள் செய்திருக்கும் விண்ணப்பங்களைக் கவனிக்க வேண்டும். அத்தகைய நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்களுக்கு ஒப்படை செய்யத்தக்க விலை மதிப்பில்லாத நிலம் இல்லாவிடினும், விண்ணப்பம் செய்து கொண்டிருக்கும் நிலமில்லாதவர்களாகவும், ஏழை

ளாகவும் இருப்பவர்கள் ஏதாவது சிறிதளவு சலுகை பெறுவதற்கு மற்ற வகையில் தகுதியுடையவர்கள் எனக் கோட்ட ஆட்சியாளர் கருதுவார் எனில், விண்ணப்பம் செய்திருக்கிற நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்களுக்கு நிலத்தை ஒப்படை செய்யக் கீழ்க் குறிப்பிட்டவாறு அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்—

(அ) வெளியார்களுக்கு நிலம் மாற்றப்படாமல், கூடுதலான கூலியாட்கள் உழைப்பைக் கொண்டு அல்லது அவ்வாறில்லாமல் ஒருவர் தாமும் தமது குடும்பத்தினரும் நிலத்தில் விவசாயம் செய்யக் கூடும் எனக் கருதத் தக்க சூழ்நிலை இருக்குமானால், கோட்ட ஆட்சியாளர் நிலத்தை ஏலத்தில் விற்பனை செய்யாமல் நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்களுக்கு நிலத்தை ஒப்படை செய்து உடனடியாக அதன் நடப்பு விலை மதிப்புத் தொகையை வசூலிக்கலாம் அல்லது தகுதியுள்ளவற்றில் அத் தொகையை எளிய தவணைகளில் வசூலிக்கலாம்.

இத்தகையவற்றில், தவணைத் தொகைகளெல்லாம் அரசினருக்குச் செலுத்தப்பட்ட பின்னரே நிலத்தின் உரிமை ஒப்படை பெற்றிருப்பவர்க்குச் சட்ட முறைப்படி சாரும். அதுவரையில் உரிமம் பெற்றிருப்பவர் எந்நிலையில் இருப்பாரோ அந்நிலையில் ஒப்படை பெற்றிருப்பவர் இருப்பார். தவணைத் தொகை ஏதாவது செலுத்தப்படாவிடில், உரிமம் நடைமுறையிலில்லாதவாறு அது இறுதியடையுமாறு செய்விக்க உரிமம் பெற்றிருப்பவர் பின்னர் நிலத்திற்கு யாதொரு உரிமையும் அல்லது அதில் யாதொரு பாத்தியதையும் இல்லாதவராவர். தங்களுக்குத் தக்கது எனத் தோன்றுகிறவாறு அரசினர் இதில் நடவடிக்கை எடுக்க முழு உரிமையும் உண்டு. இதில் ஒப்படை பெற்றவராயினும் அவரது சார்பில் அல்லது அவர் வழியாக மற்றவர்களாயினும் தமக்கு யாதொரு ஈடு அல்லது தொகை திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென உரிமை கொண்டாட முடியாது. நிலத்தில் மதிப்புத் தொகை முற்றிலும் வசூலிக்கப்பட்ட பின்னரே பட்டாக்கள் கொடுக்கப்பட வேண்டும்.

ஒப்படை பெற்றிருப்பவர் நிலமில்லாதவராகவும், ஏழையாகவும் இருப்பவராய், நிலத்தில் அதிகமான தொகை செலவு செய்தும், மிக உழைத்தும் அனுமதி பெறாது நிலத்தை அநுபோகம் செய்துவந்தால், நிலத்தில் மேம்பாடு செய்யப்படுவதற்கு முன்னர் அதற்கிருந்த விலைமதிப்பை அனுசரித்து அதன் நடப்பு விலைத் தொகையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் இருப்பவரிடமிருந்து விலை மதிப்புள்ள நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை ஒரே தடவையில் அல்லது தவணைகளில் வசூலிக்கப்பட்ட பின்னர் அவருக்கு ஒப்படை செய்யப்பட்டவற்றில் இந்நிலை ஆணையின் 12ஆவது பத்தியில் சொல்லப்பட்டிருக்கும் தனி நிபந்தனை பொருந்தாது. அத்தகையவற்றிற்கு வழக்கமான நிபந்தனைகள் பொருந்தும். நில ஒப்படை செய்யப்பட்ட பசலியிலிருந்து நிலத்திற்குரிய தீர்வை செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) கூலி பெற்று உழைப்பவர்களின் உழைப்பைக் கூடுதலாகக் கொண்டு அல்லது அவ்வாறில்லாமல் ஒப்படை பெறுபவரும் அவர் குடும்பத்தினரும் உழைத்து விவசாயம் செய்யக் கூடியவர்களில் நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் உள்ளவர் எவருக்காயினும் நில ஒப்படை பெறுபவர் நிலத்தின்

நி. ஆ. 15 :22]

சுவாதீனத்தை வெளியாளர் எவருக்கும் மாற்றக்கூடாது என்ற நிபந்தனையில் கோட்ட ஆட்சியாளர் விலை மதிப்புள்ள எல்லா வகை நிலத்தையும் இரயமின்றி ஒப்படை செய்யலாம். ஒப்படை பெற்றிருப்பவரின் நில பாத்தியதை வாரிசுரிமையில் அடையத் தக்கதாயினும். பாதீனம் செய்யப்படத் தக்க தன்று. பிரதிபலன் பெற்றுக்கொண்டு அல்லது அவ்வாறன்றி நிலம் பாதீனம் செய்யப்பட்டால் அல்லது நில ஒப்படை பெற்றிருப்பவர் வாரிசுகளின்றி இறந்துவிடுவாரானால், யாதொரு ஈடும் கொடுக்கப்படாமல் நிலம் அரசினருக்குச் சேர்ந்துவிடும். நிலம் ஒப்படை செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் நிலத்தை விவசாயம் செய்யப்பட வேண்டும்.

இருப்பினும், கோட்ட ஆட்சியாளர் இந்தக் கால அளவை, நீடிக்க வேண்டுமெனக் கருதுவார் எனில் அதை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கலாம். இக்கால அளவை நீடிக்க வேண்டுமெனக் கலெக்டரும் கருதுவார் எனில் அவர் மேலும் ஓராண்டு காலத்திற்கு நீடிக்கலாம்.

(இ) (1) சலுகை பெறுவதற்குத் தகுதியுடையவராகி நிலம் இல்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்கள் நிலம் வேண்டுமென விண்ணப்பம் செய்யாவிடில் மாத்திரமே நிலம் பங்கிரங்கமான ஏல விற்பனையில் அல்லது நடப்பு விலை மதிப்புத் தொகை விற்பனை இவற்றில் எது அரசினருக்கு அனுகூலமாக இருக்குமோ அம் முறையில் விற்பனை செய்யப்பட வேண்டும். மேலேயுள்ள அறிவுரைகள் எவ்வாறிருப்பினும், விதிக்கு மிகப் புறம்பாகவுள்ளவற்றில் குடியானவர்களின் நில உடைமைகளைச் சதுரிக்க அல்லது இணறுகள் தோண்டப்பட வேண்டுவன போன்றவற்றிற்கு மிகச் சிறிய பரப்புள்ள நிலங்கள் தேவையாகுமெனில் அவற்றில் தனித்த முறையில் அரசினர் ஆணை பிறப்பிக்கப் பெறுவதற்கு அரசினருக்கு அறிக்கை மேலனுப்பப்பட வேண்டும்.

(2) அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கு நிலங்களை ஒதுக்கி வைத்தலும் அவர்களுக்கு நில ஒப்படை செய்தலும்.—அட்டவணையிற் கண்ட ஜாதியினருக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள விலை மதிப்புள்ள நிலங்களை அவற்றின் நடப்பு விலை மதிப்புத் தொகை வசூலிக்கப்பட்ட பின்னரே சாதாரணமாக ஒப்படை செய்ய வேண்டும். விலை மதிப்புள்ள நிலங்களையும் விலை மதிப்பில்லாத நிலங்களையும் ஒப்படை செய்ய அதிகாரம் பெற்றிருப்பவர் எவர் என்பதும் கொடுக்கப்படத்தக்க பெருமம் பரப்பளவு யாது என்பதும் இந்நிலை ஆணையின் 3 (3) ஆவது பத்தியில் குறிபிடப்பட்டவையேயாம். தனிப்பட்ட விற்பனை செய்யும்போது, பொதுமக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அறிவிப்பின் படிவம் V ஆவது இணைப்பில் உள்ளது.

(3) நில விற்பனையும் ஒப்படையும்.—ஒரு திட்டத்தினால் அக் காலத்திய மதிப்பு அல்லது வருங்காலத்தில் எதிர்பார்க்கத்தக்க மதிப்பு காரணமாக, குறிப்பிட்ட சில கிராமங்களின் நிலங்களுக்குக் கிராக்கி அதிகம் ஏற்படக்கூடுமென்று வெளிப்படையாக தெரியக்கூடிய எந்தக்காலத்திலும் 88 ஆவது நிலை ஆணை 4 ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களுக்குத் தேவையான நிலப் பரப்பை ஒதுக்கி வைத்துக் கொண்ட பின்னர் மேலே குறிக்கப்பட்டுள்ள 1 ஆவது பத்தி (இ) உட்பிரிவின்கீழ்வரும் நிலம் விற்பனை செய்யப்படத்தக்கது. ஆனால், இத்தகைய விற்பனை அறிவிக்கை செய்யுமுன்னர், வருவாய்த்துறை வாரியத்தினிடமிருந்து அதன் ஒப்பளிப்பைப் பெற்றுக்

[நி. ஆ. 15:22

கொள்ள வேண்டும். இத்தகைய நிலங்களை ஏல விற்பனை செய்வதற்கு அல்லது தனிப்பட்ட முறையில் விற்பனை செய்வதற்குள்ள தடைகள் நீர்ப்பாசனத் திட்டத்திலிருந்து எப்பொழுதுமே நீர் பாய்ச்ச முடியாத நிலையிலிருக்கும் நிலங்களின் ஒப்படைக்குப் பொருந்துவனவல்ல. இத்தகைய நிலம் மேலே அ, ஆ, ஈ, உ, ஊ இனங்களில் சேர்ந்திருக்கும் காரணத்தால் சிறப்பான விலையுள்ளதாக ஒப்படை செய்யப்பட வேண்டும். அது சிறப்பான விலை மதிப்புள்ள நிலம் அன்றெனில், அதை 15 ஆவது நிலை ஆணையின் IIஆ (1) ஆவது பிரிவை அனுசரித்துக் கலெக்டர் ஒப்படை செய்யலாம்.

குறிப்பு--(i) (உ) இனத்தின் கீழ் உள்ள நிலத்தின் விற்பனைகள், அந்நிலமோ அதன் ஒரு பாகமோ கட்டடக் காரியங்களுக்கு உபயோகிக்கப்பட்டால் அப்பொது, நிலத் தீர்வைக்குப் பதிலாக (திருத்தி அமைக்கப்படும் காலத்தில், அவ்வப்பொழுது நடைமுறையிலிருக்கிற விதிகளை அனுசரித்துத் திருத்தி அமைக்கப்படத்தக்க) மனைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும் என்ற பொறுப்பிற்கு உட்படுத்த வேண்டும்.

(ii) கிராமத்தில் குடியில்லாதவர்களுக்கு நில ஒப்படை செய்யப்படலாமென்று வருவாய்த் துறை வாரியத்திடமிருந்து முன்னதாகவே ஒப்பளிப்பு பெற்றிருந்தாலன்றிக் கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு மட்டுமே (எ) இனத்தில் உள்ள நிலம் விற்பனை செய்யப்பட வேண்டும்.

(iii) எந்தக் காலத்திலாவது மாவட்டத்தின் நிலத் தீர்வை நிர்ணயம் திருத்தி அமைக்கப்படுமானால், நிலங்களின் தீர்வை மாறுதல் செய்யப் பெறுவதற்குட்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி எல்லா விற்பனைகளும் செய்யப்படத்தக்கன.

(iv) இந்த நிலை ஆணையின் கீழ், ஏலத்தில் விற்பனை செய்தோ அல்லது தனிப்பட்ட விற்பனை செய்தோ அல்லது கிரயம் பெற்றுக்கொள்ளாமலோ நிலத்தைக் கொடுக்க முடிவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கும் நில ஒப்படைகளைப் பற்றி 5 ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் தக்கவாறு விளம்பரம் செய்ய வேண்டும்.

(1941 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் தேதி, 76 எண், வ.து. வா. செ. அச்சு.)

(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண், அ.ஆ. பல.)

(4) நீர்பாசனத் திட்டத்தால் பாதிக்கப்படக்கூடிய கிராமங்களிலுள்ள நிலத்தைக் கொடுப்பது.—அரசாங்கச் செலவில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டு பாசனத் திட்டத்தினால் பாதிக்கப்படலாம் என அரசினரால் விளம்பரம் செய்யப் பெற்ற கிராமத்திலுள்ள நிலத்தையும், அத்தகைய திட்டங்களுக்காக உரிமை பெற வேண்டிய நிலத்திற்குப் பரிவார்த்தனையாகக் கொடுக்கத்தக்கதென விளம்பரம் செய்யப்பட்டுள்ள நிலத்தையும் நிலையாக ஒப்படை செய்யாமல், முதல் முதலில் செய்யப்படும் நில ஒப்படை நிலையானதாகச் செய்விக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் வரையில், எந்தச் சமயத்திலும் அரசினர் தாங்கள் விரும்பும்போது நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ள தக்கவாராவர் என்பதோடு, நில ஒப்படை நிலையானதாகச் செய்யும்போது, நில ஒப்படை பெற்றவரிடமிருந்து நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையை (நடப்பு விலை மதிப்புத் தொகையிலிருந்து, நிபந்தனைக்குட்படுத்தி ஒப்படை செய்த போது வசூலித்த நில மதிப்புத் தொகையைக் கழித்த பின் மீதியுள்ள கிரயத் தொகையை வசூலிக்கத்தக்கதாகும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி ஒப்படையைத்

நி. ஆ. 15:22–23]

தற்காலிகமாகச் செய்ய வேண்டும். அரசினர் நிர்ணயம் செய்த நடப்பு விலை மதிப்புத் தொகையை நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படையைப் பெற்றவர் செலுத்த மறுத்து விடுவார் எனில், நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதைப் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்துவிடலாம். நிலக்கிரயத்தை வசூல் செய்த பின்னரே, ஒப்படை செய்யப்பட்ட நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுமாயின் எடுத்துக்கொள்ளப்படும் நிலத்தின் விற்பனைத் தொகை அல்லது அதன் பாகத்திற்குரிய வீதாச்சாரப் பங்குத் தொகை திருப்பிக் கொடுக்கப்படும். திரும்ப எடுக்கப்படுமுன் நிலத்தில் செய்யப்பட்டிருக்கக் கூடிய மேம்பாடுகளுக்கு அரசினர் ஈடு வழங்குவதற்குக் கடமைப்பட்டவர் களல்லர். நிலம் விற்பனை செய்யப்பட வேண்டுமானால், நிலங்களின் ஒப்படை ஆணையிலும் விற்பனை அறிக்கையிலும், நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப் படுவதற்குட்படும் என்பதையும் அவ்வாறு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஈடு கொடுக்கத்தக்க பொறுப்பு அரசினரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ப தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தாசில்தார், துணைத் தாசில்தார், வருவாய் ஆய்வாளர் இவர்களில் ஒருவர் நிலத்தை விற்பனை செய்யலாம். நிலத்தை விற்பனை செய்ய எந்த அதிகாரி ஆணை பிறப்பிக்கிறாரோ அவரே நிலத்தை விற்பனை செய்யும் அலுவலர் இன்னார் என நியமனம் செய்வார். கோட்ட ஆட்சியாளர் உறுதி செய்வதற்குட்பட்டு விற்பனைகள் செய்யத்தக்கன வையாகும். நிபந்தனைக்குட்படுத்திச் செய்யப்படும் நில ஒப்படைகளைப் பற்றி நிலையான பதிவேடு கிராமத்திலும் தாலுகா அலுவலகத்திலும் எழுதி வைத் திருக்க வேண்டும்.

23. அரசியல் தியாகிகளுக்கு செய்யப்படும் நில ஒப்படை.(1) பழைய திட்டத்திலுள்ள ஏற்பாடுகள்.—(i) 1949 ஆம் ஆண்டில் அரசினரால் வகுக்கப் பட்ட நில ஒப்படைக் கொள்கையின்கீழ், நில ஒப்படை பெறுவதில், அரசினர் முதலுரிமை அளிக்கப்பட்டிருந்தார்கள். அரசியல் தியாகி ஒவ்வொருவரும் அவர் நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் இருந்தாலும் அவ்வாறில்லாவிடினும் அவருக்கு 10 ஏக்கர் புன்செய் அல்லது 5 ஏக்கர் நன்செய் நிலம் ஒப்படை செய்யப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடு அப்பொழுது நடை முறையிலிருந்த விதிகளில் இருந்தது. ஒப்படை, கிரயமில்லாததாக ஆனால், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டிருந்தது. அவையாவன :—

(அ) ஒப்படை செய்யப்பட்ட நிலம் விற்பனை செய்யப்படவோ அல்லது பத்தாண்டுகளுக்குள் வேறு விதமாகப் பாராதீனம் செய்யப்படவோ கூடாது.

(ஆ) ஒப்படை பெற்றிருப்பவர் ஒப்படைத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலத்திற்குள் நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

(இ) மேலேயுள்ள யாதொரு நிபந்தனையும் மீறப்பட்டால் நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்குட்படும்.

(ii) ஒப்படை செய்யப்பட்ட நிலம் முதல் மூன்று பசலிகளுக்கு நிலத் தீர்வை செலுத்துவதற்குட்படுத்தப்படவில்லை. நிலத்திற்கு நீர் பாய்ச்சப் பட்டால் தண்ணீர்த் தீர்வை விதிக்கத்தக்கதாக இருந்தது.

(iii) இந்தியாவின் சுதந்திரத்திற்காகத் துவக்கப்பட்ட இயக்கத்தின் போது அல்லது அதற்குப் பின்னர் அரசியல் தியாகிகள் இறந்து விட்டனர்

[நி. ஆ. 15:23

எனில், அத்தகைய அரசியல் தியாகிகள் குடும்பத்தினர் நிலக் கொடை பெறுவ தற்குத் தகுதியுள்ளவராவார். இச்சலுகையைப் பொறுத்தமட்டில் "குடும்பம்" என்பது தந்தையரை இழந்த அரசியல் தியாகிகளின் தாய்மார்கள், மரண மெய்திய அரசியல் தியாகிகளின் மனைவிகள், புதல்வர்கள், திருமணமாகாத புதல்விகள், வயது வராத சகோதரர்கள், இவர்களையும் குறிக்கும். வேறு யாதாவதொன்றில் நிலக்கொடை செய்வது அவசியமென்று கருதப்படும்போது, அரசினர் ஆணையைப் பெறவேண்டும்.

1947-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ஆம் தேதி, 3202 என், அ.ஆ. வரு.

1950-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதி, 280 என், அ.ஆ. வரு.

(iv) இந்தத் திட்டத்தின் கீழ் அரசியல் தியாகிகளுக்கு நிலம் கொடுக்கப்படுவதற்குச் செய்யப்படும் விண்ணப்பம் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 1948 ஆம் வருடம் மார்ச் மாதம் 31 ஆம் தேதியாக நிர்ணயம் செய்யப்பட்டது.

(2) நிலை மாறின கால ஏற்பாடுகள்.—(i) மேலே குறிப்பிட்டுள்ள இந்தத் திட்டம் 1952 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட பின்னர் நடப்பிலிருந்த வற்றை முடிவு செய்யப்படுவதற்காகக் கீழ்க்கண்ட அறிவுரைகள் வகுக்கப் பட்டன:—

(அ) முடிவடையாமல் நடப்பிலுள்ளவற்றைக் கலெக்டர்கள் ஆராய்ந்து பார்த்து அரசியல் தியாகிக்குச் செய்யப்படும் நிலக் கொடைட் வழங்குவதால், அனுமதி பெறுத ஆக்கிரமிப்பு செய்திருப்பவர் அறிஜன அல்லது முன்னாள் போர் வீரர் அல்லது நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் உள்ளவர் எத்தகையவராக இருப்பினும் அன்னாரை நிலத்தின் சுவாதீனத்திலிருந்து அப்புறப் படுத்த வேண்டிய நிலை ஏற்படாதென்றால் ஒப்படை செய்யப்பட வேண்டிய நிலமும் அதிக மதிப்புள்ள நிலம் அன்றெனில், அரசியல் தியாகிக்கு நிலம் கொடுப்பதற்காக நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்க வேண்டும்.

(ஆ) இத்தகைய ஆட்சேபனையில்லாத நில ஒப்படை செய்வதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில், நிலக்கொடை செய்யப்படுவது நியாயம் என்று கருதத்தக்கவாறு அரசியல் தியாகிகளின் ஏழ்மை நிலைமையிலுள்ளனரா என்பதைக் கவனிக்க வேண்டும்.

(இ) ஒப்படை செய்யப்பட வேண்டிய நிலம் மேலே (அ) உள் பத்தி -ல குறிப்பிட்டுள்ளவாறு அயலாரிடம் அனுமதி பெறுத அநுபோகத்திலிருப் பவை சம்பந்தமான (இ) முடிவாகாமலிருக்கும் மற்றெல்லா வற்றிலும் நடவடிக்கைகள் முற்றுப்பெறுமாறு செய்ய வேண்டும். இதன் நோக்கம் அரசியல் தியாகி நிலத்திற்காக விண்ணப்பம் செய்வதற்கு முன், அனுமதி பெறுத நிலத்தில் அநுபோகம் செய்திருப்பவருக்குப் பாதுகாப்பு அளிப்பதே யாகும். புதர்ச் செடிகள் படர்ந்த நிலம் அல்லது இத்தகைய கடினமாக நிலத்தை முதல் முதலாக விவசாயம் செய்வதற்காக அரசியல் தியாகிகளின் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பின், அத்தகையவற்றிற்கும் இது தடை ஆகாது.

நி. ஆ. 15:23]

1952-ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதி, 21923-ஊ—53—4 என், அ. குறிப்பு வரு.

1952-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதி, 21923-ஊ-53—16 என், அ. குறிப்பு வரு.

1952-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி, 1957 என், அ. ஆ. வரு.

(ii) மேலே உள்ள அறிவுரைகளோடு கீழ்க் கண்டுள்ள விளக்கங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன:

(அ) நடப்பிலுள்ளவை.—"நடப்பிலுள்ளவை" என்பன—

(I) ஆணைகள் பிறப்பிக்கப்படாமல் அலுவல் விசாரணைகள் முடிக்கப் பட்டுள்ளவையும்

(II) தற்காலிகமாக அல்லது நிலையாக ஒப்படை செய்யப்பட்டுச் சுவாதீனம் கொடுக்கப்பட்டவை, ஆனல் பட்டா கொடுக்கப்படாதவை.

ந. க. ஒப்படைக்காக ஆணை பிறப்பிக்கப்பட்டது. பட்டா கொடுக்கப் படாததாகக் கருதக்கூடாது.

1952-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் தேதி 21393-ஊ 52—16 என், அ. குறிப்பு வரு.

1953-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி, 615 என், அ. ஆ. வரு.

(ஆ) அரசியல் தியாகிகளின் ஏழ்மை நிலைமை—"நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் இருப்பவர்" என்ற சொல்லின் விளக்கத்திற்குட்படும் அரசியல் தியாகிகள் நிலக்கொடை அளிக்கப் பெறுவது நியாயமானதெனக் கருதப்படத் தக்க ஏழ்மையான நிலைமையில் அவர்கள் இருக்க வேண்டும். [இந்நிலை ஆணையின் 3 (2) ஆவது பத்தியில் உள்ள "நிலமில்லாதவர் ஏழை" என்னும் இச்சொற்களின் விளக்கங்களைக் காண்க.]

(1952-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் தேதி, 21923-ஊ-52-17, என், அ. குறிப்பு வரு.)

(III) முன்னமே ஆணை பிறப்பிக்கப்பட்ட ஒப்படை சம்பந்தமாக நடைமுறையில் ஒழுங்கீனம் நடந்துள்ளது. என்றுவது அல்லது அதில் முடிவு செய்த அலுவலர் தமக்குள்ள அதிகாரங்களின் வரம்பை மீறி ஆணை பிறப்பித்து விட்டனர் என்றுவது அல்லது உண்மை நிலைமைக்குப் புறம்பாக அல்லது தவருக முறையிட்டது காரணமாக அல்லது மோசம் செய்யப்பட்டது காரணமாகவாவது அவ்வாணை பிறப்பிக்கப்பட்டது என்றதற்காக அவ்வாணையை வருவாய்த் துறை வாரியத்தின் 15-18-வது நில ஆணையில் விதித்துள்ளவாறு திருத்தி அமைக்க வேண்டுமென்பதாக இருந்தாலன்றி, கீழ்க் கண்டுள்ளவற்றில் முன்னமே பிறப்பிக்கப்பட்டுள்ள ஒப்படை ஆணையில் தலையிடக்கூடாது:—

(அ) சுவாதீனம் கொடுக்கப்பட்டிருந்து பட்டாவும் வழங்கப்பட்டிருப்பது.

(ஆ) சுவாதீனம் கொடுக்கப்படாமலிருந்து ஆனல், பட்டா கொடுக்கப்பட்டிருப்பது.

[நி. ஆ. 15:23

குறிப்பு.—மேலே (ஆ) இனத்தில் உள்ளவற்றில், நிலம் அனுமதி பெறுது அயலார் ஒருவர் செய்துகொண்ட சுவாதீனத்தில் நிலம் இருக்குமாஞல் அந்நிலத்தின் சுவாதீனத்தை நில ஒப்படை பெற்றவரே செய்துகொள்ளப்படுமாறு அப்பொறுப்பை அவரிடமே அரசினர் விட்டுவைத்துள்ளார்கள்.

(1953-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி, 615 எண், அ. ஆ. ருவ.பல.)

(IV) அரசியல் தியாகிகள் நிலக் கொடைத் திட்டம் கைவிடப்பட்டதின் விளைவாகத் தனிப்பட்ட வகையில் நேரிடும் இடுக்கண்கள் சமாளிக்கப்படும் பொருட்டு, தற்காலிகமாக முன்னமே செய்யப்பட்ட ஒப்படைகளைப் பற்றிக் கீழ்க்கண்டுள்ள ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன:—

(அ) பழைய நிலை ஒப்படைக் கொள்கையின் கீழ் அரசியல் தியாகி ஒருவர் நிலத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது சுவாதீனத்தில் விட்டு வைக்கப்பட்டிருந்து, அவரும் இந்நிலை ஆணையின் கீழ் இத்தகைய நில ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையவராய் நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் இருப்பாரெனில் அந்நிலத்தை முன்னர் அனுமதி பெறுது சுவாதீனம் செய்து அநுபோகம் செய்பவர் அதில் சீர்திருத்தம் செய்வதில் அல்லது அதில் மேம்பாடு செய்வதில் பணச் செலவு செய்தும் உழைத்தும் இருந்திருந்ததாகத் தெரிய வருமாஞல் அத்தகையோருக்கு, இவ்வகையில் செலவான தொகையை எந்த அளவில் நிலக்கொடை பெறுபவர் கொடுக்க வேண்டுமெனக் கலெக்டர் நிர்ணயம் செய்கிறாரோ, அந்த அளவுத் தொகை அவ்வாறு கொடுக்கப்படுவதற்குட்படுத்தித் தற்காலிகமாகச் செய்யப்பட்ட ஒப்படை நிலையானதாக்கப்பட உறுதி செய்ய வேண்டும். இத்தகையவற்றில் விலை மதிப்புள்ள நிலத்தைப் பொறுத்த மட்டில் நடப்பு விலை மதிப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டும் என்பதான விதியை கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

(ஆ) பழைய ஒப்படைக் கொள்கையின் கீழ் அரசியல் தியாகி ஒருவர் நிலத்தின் சுவாதீனத்திலிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது சுவாதீனத்தில் விட்டு வைக்கப்பட்டிருந்து, அரசினரின் புதிய கொள்கை அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக, அதாவது 1979 ஆம் வருடம் மே மாதம் 16-ம் தேதிக்கு முன்னதாக, நிலத்தைச் சீர் திருத்திவதில் அல்லது அதில் மேம்பாடு செய்வதில். கணிசமாக தொகையை அவர் செலவிட்டிருப்பார் எனில், அந் நிலத்தை முன்னர் அனுமதி பெறுது சுவாதீனம் செய்து அநுபோகம் செய்பவர், அந் நிலத்தைச் சீர்திருத்தம் செய்வதில் அல்லது அதில் மேம்பாடு செய்வதில் பணச் செலவு செய்தும் உழைத்தும் இருப்பாரெனில் அத்தகையோருக்கு நிலக் கொடை பெறுபவர் எந்த அளவில் தொகை கொடுக்க வேண்டுமென இவ்வகையில் கலெக்டர் நிர்ணயம் செய்கின்றாரோ, அந்தத் தொகையை அவ்வாறு கொடுக்கப்படுவதற்குட்படுத்தித் தற்காலிகமாகச் செய்யப்பட்ட ஒப்படையை நிலையானதாக உறுதி செய்ய வேண்டும். இத்தகையவற்றிற்கும் விலை மதிப்புள்ள நிலத்திற்காக நடப்பு விலை மதிப்புத் தொகை வசூலித்தல் பற்றிய விதி பொருந்தாது.

(இ) மேலே (அ), (ஆ) பிரிவுகளில் உள்ளவை எவ்வாறு இருப்பினும், நடைமுறையில் உள்ள மாவட்டத்திற்குரிய விதிகள் காரணமாக (எடுத்துக்காட்டாக மதுரை மாவட்டத்தில், பெரியாறு திட்டத்தில்) யாதொரு ஒப்படையும் செய்யலாகாது என்றாலும் அதிக உணவுப் பயிர் விளைவிக்கும்

நி. ஆ. 15:23]

திட்டத்தின் கீழாவது வேறு தற்காலிக ஒப்படைத் திட்டத்தின் கீழாவது அரசியல் தியாகிகள் நிலத்தைத் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருந்து நிலத்தைச் சீர்திருத்தம் செய்வதில் அல்லது அதில் மேம்பாடு செய்வதில் கணிசமான பணச் செலவு செய்திருப்பாரெனில், முன்னமே அனுமதி பெறுது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வந்திருப்பவர் ஒருவர் இருப்பின், அவர் அந் நிலத்தைத் தம் சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டு நிலத்தைச் சீர் திருத்தம் செய்வதில் அல்லது மேம்பாடு செய்வதில் பணச் செலவு செய்திருப்ப தாகத் தெரியவந்தால் அவருக்கு அரசியல் தியாகிகள் என்ன தொகை கொடுக்க வேண்டுமென்று கலெக்டர் நிர்ணயம் செய்கிறாரோ, அந்தத் தொகை கொடுக்கப்படவேண்டுமென்ற நிபந்தனைக்குட்படுத்தி 1953 ஆம் வருடம் மே மாதம் 29-ம் தேதியிலிருந்து 15 ஆண்டுகளுக்குத் தற்காலிகமாக நிலத்தை அனுபோகம் செய்ய அவ்வரசியல் தியாகிகள் அனுமதியளிக்கப்படலாம். 15 ஆண்டுகளுக்குப் பின்னர் நிலம் அரசினருக்குத் திரும்பச் சேர்ந்துவிடும். இருப்பினும், ஒப்படை செய்வதற்குப் பாதகமாக இருக்கும் நடைமுறை விதிகள் தளர்த்தப்படுமேயாகில், விதிகள் அவ்வாறு தளர்த்தப்படுதலிலும் ஏற்படத்தக்க அநுகூலத்தை அத்தகைய தற்காலிகமாக அனுபோகம் செய்பவர் கள் அடையுமாறு அவர்கள் அனுமதிக்கப்படலாம்.

குறிப்பு.—(i) ''சுவாதீனத்தில் விட்டு வைத்தல்'' என்பது ''அரசினரால் சுவாதீனத்தில் விட்டுவைக்கப்படுதல்'' என்ற பொருள் தரும். ''சுவாதீனத்தில் இருப்பதற்கு அனுமதித்தல்'' என்பது ''அரசியல் தியாகி சுவாதீனத்தை அடைந்த பின்னர், சுவாதீனத்தில் இருப்பதற்கு அரசினரால் அனுமதிக்கப்படுதல்'' என்ற பொருள் தரும்.

குறிப்பு.—(ii) பணச் செலவு செய்தும் உழைத்தும் நிலத்தைச் சீர் திருத்தம் அல்லது மேம்பாடு செய்து அநுபோகம் செய்துள்ளவர்கள் செல்வந்தர் களாக இருப்பினும் அல்லது ஏழைகளாக இருப்பினும் அத்தகையவர்கள் சிவாய் ஜமதார்கள்.

(1953 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி, 1508 எண், அ. ஆ. வரு.)

(1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி, 78584-ஊ-53–1, எண், அ. குறிப்பு வரு.)

(1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி, 81455-ஊ-53–1 எண், அ. குறிப்பு வரு.)

(v) மேலே வகுக்கப்பட்டுள்ள சலுகைகள்.—அரசினரின் பழைய கொள்கையின்கீழ் நிலம் கொடுக்கப்பட்டு நிலம் (அடையாள சுவாதீனத்தில் அல்லது) உண்மையில் சுவாதீனத்தில் விட்டு வைக்கப்பட்டு, ஆனல் பட்டாக்கள் வழங்கப்படாத அரசியல் தியாகிகளுக்கு மட்டுமே பொருந்தும். வேறு வகையில் ஒப்படை பெற்றவர்கள் எவருக்கும் இச் சலுகைகள் அளிக்கப்பட மாட்டா.

(1953 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி, 42810 ஊ- 53-1 என் அ. குறிப்பு. வரு.)

(1953 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி, 64967-ஊ-53-1 என் அ. குறிப்பு. வரு.)

(vi) (அ) மேலே குறிக்கப்பட்டுள்ள ஆணைகள் அரசினரால் 1953-ம் ஆண்டு மே மாதத்தில் பிறப்பிக்கப்பட்டன. அதற்கு அடுத்து முன்னதாகச் சில மாதங்களில் அப்போது நடைமுறையிலிருந்து அறிவுரைகளை

[நி. ஆ. 15:23

அணுசரித்துப் பலவற்றில் கலெக்டர்களும் வருவாய்த் துறை வாரியமும் அரசினரும் அரசியல் தியாகிகளுக்குப் பிரதிகூலமாக ஆணைகள் பிறப்பித் திருக்கக்கூடும். அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பின்னர் பிறப்பிக்கப் பட்டுள்ள (vii) ஆவது உட்பிரிவிலுள்ள அறிவுரைகளுக்கு அணுசரித்தில்லாத போது இவ்வறிவுரைகளை அணுசரித்துக் கலெக்டர்கள் அவ்வாணைகளைத் திருத்தி அமைக்க கலெக்டர் அதிகாரம் பெற்றிருக்கிறனர். (1952 ஆம் வருடம் ஜூலை மாதம் 7 ஆம் தேதி 1957 என் வருவாய்த் துறை அரசாங்க ஆணையின் தேதியாகிய) 1952 ஆம் வருடம் ஜூலை மாதம் 7-ம் தேதிக்குப் பின்னர் பங்கரமான ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு அல்லது தனிப்பட்ட வகையில் நடப்பு விலை மதிப்புத் தொகை வசூலிக்கப்பட்டு நிலம் ஒப்படை செய்யப் பட்டிருந்து விற்பனைகளும் உறுதி செய்யப்பட்டிருந்தால், விற்பனையில் நிலத்தை எடுத்துக் கொண்டவர்களுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்படாம விருந்த போதிலும், விற்பனையில் செலுத்தப்பட்ட தொகைகள் அல்லது விற்பனையில் கூறப்பட்ட தொகைகள் முன்னமே ஒப்புக் கொள்ளப்பட்டு உறுதி செய்யப்பட்டவை நிறைவேற்றப்பட வேண்டுமாதலால் அத்தகைய நிலங்கள் விற்பனையில் எடுத்தவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு அரசியல் தியாகிகளுக்கு கொடுக்கப்படமாட்டா; ஆதலால், செய்யப்பட்ட ஒப்படைகள் நிலை பெற்றவை யாக இருக்கும்.

(ஆ) அரசியல் தியாகிகள், பொருள், சாதனம் படைத்துள்ளவர் களாகயிருப்பினும் மேலே (iv) ஆவது உட் பிரிவில் உள்ள சலுகைகளைப் பெறுவதற்கு அவர்களுக்குத் தகுதியுடையவராவர்.

(இ) எத்தகைய குறைந்த பரப்பையும் நிறைவுசெய்யும் பொருட்டு அரசியல் தியாகிக்கு முன்னமே ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப் பிற்கு அதிகமான பரப்பை ஒப்படை செய்ய முயற்சி செய்தல் ஆகாது. ஆயினும் ஒப்படை செய்யப்பட்ட காலத்தில் எவ்வளவு பெரும் அளவுள்ள பரப்பு கொடுக்கப்படலாமோ, அந்தப் பரப்பின் அளவுக்கு, முன்னமே அரசியல் தியாகிகளுக்குச் செய்த ஒப்படை சட்டமுறையில் செல்லத்தக்க தாகும்.

(ஈ) அரசியல் தியாகி ஒருவர் நிலத்தைச் சீர்திருத்தம் அல்லது மேம்பாடு செய்யக் கணிசமான தொகை செலவு செய்துள்ளனரா என்பதை முடிவு செய்பவர் கலெக்டராவார். அதனுடன் முந்திய சிவாய் ஜமதாருக்கு அரசியல் தியாகி கொடுக்க வேண்டிய ஈட்டுத் தொகையின் அளவையும் கலெக்டர் நிச்சயிப்பார்.

(1953 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி, 32810-ஊ-53-1 அ. குறிப்பு. வரு.)

(vii) மேலே, ஏற்படுத்தப்பட்டுள்ள சலுகையை அரசியல் தியாகி பெறத்தக்கவற்றில், யாதொரு நிலத்தின் சுவாதீனமே கொடுக்கப்படவில்லை என்றால் அவருக்கு விலை மதிப்பில்லாத நிலம் மாத்திரமே கிரயமின்றிக் கொடுக்கப்படும்.

(1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் தேதி, 1957 என் ரு. ஆ. வரு.)

(5) தற்போதுள்ள நிலை.—அரசியல் தியாகிகள் நிலமி தவர்களாகவும், ஏழைகளாகவும் இருந்து, நேர்முக விவசாயத்தில் ஈடுபடக் டியவர்களாகவும்

நி. ஆ. 15:23–24]
இருந்தால் மாத்திரமே அவர்கள் நிரயமின்றி நில ஒப்படை பெறத் தகுதி யுடையவராவர். இதிலும், அவர்கள், நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாக வும் உள்ள மற்றவர்களுக்கும் மேலான முதலுரிமை பெறத் தக்கவர் அல்லர். பழைய திட்டம் நடைமுறையிலிருந்தபோது அரசியல் தியாகி கொடுத்துள்ள விண்ணப்பம் மேலே உள்ள ஆணைகளைப் பொறுத்தவரையில் நிலமில்லாதவர் களாகவும் ஏழைகளாகவும் உள்ளவர்களிடமிருந்து வரப் பெற்ற விண்ணப்ப மாகக் கருதப்படத்தடையில்லை. ஆனால், நிலமில்லாதவர்களாகவும் ஏழை களாகவும் உள்ள மற்றவர்களின் உரிமையைக் கவனத்தில் வைத்துக்கொண்டு அரசியல் தியாகிக்கு நிலம் புதியதாய்க் கொடுக்கப்படும் பிரச்சினையில் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

(1953 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி, 10959 ஊ-5351. எண் அ.) குறிப்பு. வரு.)

(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண் அ.ஆ.வரு.கை.ப

24. முன்னாள் போர் வீரர்களுக்கு நில ஒப்படை செய்தல்.—(1) பழைய திட்டத்திலுள்ள ஏற்பாடுகள்.—1940 ஆம் ஆண்டில் அரசினரால் அறிவிக்கப் பட்ட நில ஒப்படைக் கொள்கையில் 5 ஏக்கர் நன்செய் அல்லது 10 ஏக்கர் புன்செய்க்கும் அதிகமில்லா நிலமுடைய முன்னாள் போர் வீரர்கள், ஒவ்வொரு வரும் முன்னமே தங்களிடமுள்ள நிலங்களுடன் எந்த அளவினதான நிலத்தைச் சேர்த்தால் 5 ஏக்கர் நன்செய் அல்லது 10 ஏக்கர் புன்செய் நிலப் பரப்பாகுமோ அந்த அளவினதான பரப்புள்ள நிலத்தை விலையின்றி ஒப்படை யில் பெறத் தகுதியுள்ளவராக இருந்தனர். அரசியல் தியாகிகளின் ஒப்படை களுக்கு எவ்விதிகளும், நிபந்தனைகளும் பொருத்தமாக இருந்தனவோ, அவற்றிற்கும் இந்நில ஒப்படையும் உட்பட்டிருந்தது. சேவை புரிந்து கொண்டிருந்த நிலையில் இறந்த போர்வீரர்களின் குடும்பங்களும் இத்திட்டத் தின்கீழ் நில ஒப்படை பெறுவதற்கு தகுதி பெற்றிருந்தன. முன்னாள் போர் வீரர்களைப் பொறுத்தமட்டில், உபயோகிக்கப்பட்டு வரும் "குடும்பம்" என்னும் சொல் மேலே அரசியல் தியாகிகளின் குடும்பத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள பொருள் விரிவினையே கொண்டுள்ளது.

(1951 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி, 2600 எண் அ.ஆ. வரு.)
(1949 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் தேதி, 1523 எண் அ.ஆ. வரு.)

(2) நிலை மாறினகால ஏற்பாடுகள்.—(i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டம் 1962ம் ஆண்டில் கைவிடப்பட்டது. முன்னாள் போர்வீரர்களிட மிருந்து விண்ணப்பங்களை வரப் பெற வேண்டிய இறுதித் தேதி 1962-ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் தேதி எனக் குறிப்பிடப்பட்டது. 1952-ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் தேதிக்கு முன்னர் முன்னாள் போர்வீரரால் விண்ணப்பம் மேலனுப்பப்பட்டு, கொடுக்கத் தக்க நிலம் இல்லை என்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டதில், அவர் முன்னமே தாம் விண்ணப்பம் செய்து கொண் டிருந்த நிலம் கொடுப்பதற்கில்லை என்ற தகவல் கிடைத்த மூன்று மாதத் திற்குள் வேறொரு நிலம் வேண்டுமென்று தமது விண்ணப்பத்தைப் புதுப் பித்துக் கொண்டிருக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கால அளவுக்குள் மேலனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் கீழேயுள்ள ஏற்பாடுகளுக் குட்பட்டு 1949-ம் ஆண்டில் ஏற்பட்ட திட்டத்தின்கீழ் வருவனவாகக்கொள்ள வேண்டும்.

[நி. ஆ. 15:24

(ii) பழைய திட்டத்தின்கீழ், மேலே காட்டப்பட்டுள்ள கால வரம்பிற்குள் முன்னுள் போர்வீரர்கள் நில ஒப்படைக்களுக்காக மேலனுப்பிய விண்ணப்பங்கள் கீழேயுள்ள இரண்டு வகைகளில் அடங்கும். அவையாவன:--

(அ) ஐந்து ஏக்கருக்கு குறைந்து ஆனல் 2½ ஏக்கருக்குக் குறைந்திராத நன்செய் நிலம் அல்லது 10 ஏக்கருக்குக் குறைந்த ஆனல் 5 ஏக்கருக்குக் குறைந்திராத புன்செய் நிலமுடையவர்கள்.

(ஆ) ஏழைகளாக இருப்பதோடல்லாமல் 2½ ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் உடையவராக இருந்து நேர்முக விவசாயத்தில் ஈடுபடத் தயாராக உள்ளவர்கள்.

குறிப்பு I.—(அ) வகையின்கீழ் உள்ள முன்னுள் போர்வீரர்கள், நேர்முக விவசாயத்தில் ஈடுபடத் தயாராக இருப்பினும் அல்லது அவ்வாறில்லாவிடினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பழைய திட்டத்தின்கீழ் உள்ளவாறே விலைமதிப்பில்லாத நிலங்களை கிரயமின்றி பெறுவதற்குத் தகுதி உடையவர்களாகின்றனர். ஆனல் அவர்களின் உரிமைகள் நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் உள்ளவர்களுக்கு அடுத்ததாகவே கவனிக்கப்பட வேண்டும். கீழே வகுக்கப்பட்டுள்ளவாறன்றி அவர்கள் விலை மதிப்புள்ள நிலங்களை ஒப்படை பெறுவதற்குத் தகுதி அற்றவர்கள் ஆவார்கள்.

குறிப்பு II.—(ஆ) வகையினகீழ் உள்ள முன்னுள் போர்வீரர்கள் நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் உள்ளவர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பழைய திட்டத்தின்கீழ் விலை மதிப்பில்லாத நிலங்களின் ஒப்படையைக் கிரயமின்றிப் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாக இருப்பதுடன், நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பவர்கள் விலை மதிப்புள்ள நிலங்களின் ஒப்படை பெறுவதற்குரிய சலுகையைப் பெறத்தக்க அனுகூலத்தையும் அடையத்தக்கவராக இருக்கின்றனர். அவர்கள் விலை மதிப்புள்ள நிலங்களின் ஒப்படை பெறுவதற்கான சலுகைகளை பயன்படுத்திக் கொள்வார்கள் எனில், பழைய திட்டத்தின்கீழ் பெறத்தக்க விலை மதிப்பில்லாத நிலங்களின் ஒப்படையைப் பெறுவதற்கு ஏற்பட்ட உரிமையை இழந்துவிடுவார். ஆனல் விலை மதிப்புள்ள நிலங்களின் ஒப்படையைப் பொறுத்தமட்டில் அவர்கள் நிலமில்லாதவர்களாகவும் ஏழைகளாகவும் உள்ள மற்றவர்களுக்கு மேலான முதலுரிமையைப் பெறத்தக்கவராவார்.

(1955 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி, 2976 அ.ஆ.வரு.)

(3) தற்போதுள்ள நிலை.—மேலே சொல்லப்பட்டுள்ள காலவரம்பு கடந்த பின்னரும் நிலங்களுக்காகக் கோரிக்கை செய்திருக்கின்ற முன்னுள் போர்வீரர்கள் நேர்முக விவசாயத்தில் ஈடுபடக் கூடியவர்களாய் நிலமில்லாதவர்களாகவும், ஏழைகளாகவும் இருப்பார்களெனில் மாத்திரம் அவர்கள் நில ஒப்படைக்காகவிண்ணப்பம் செய்து கொள்ளலாம். இவ்வாறு விண்ணப்பம் செய்யப்படினும் நிலமில்லாதவர்களாகவும், ஏழைகளாகவும் உள்ள மற்றவர்களுக்கு மேலதான உரிமை பெறுவதற்குத் தகுதி பெறமாட்டார்கள். பழைய திட்டத்தை அனுசரித்து முன்னுள் போர் வீரர் மேலனுப்பிய விண்ணப்பம் நிலமில்லாதவராகவும் ஏழையாகவும் இருப்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பமாகக் கருதப்படுவதற்குத் தடையில்லை. ஆனல் இப் பிரசினை நிலமில்லாதவர்களாகவும், ஏழைகளாகவும் இருக்கும் மற்றவர்களின் கோரிக்கை

நி. ஆ. 15:26-27]

உரிமைகளையெல்லாம் கவனித்துப் பார்த்தபின்னரும் வழக்கத்திற்கு இசைந்த நடவடிக்கைகளையெல்லாம் எடுத்த பின்னரும் புதிதாகக் கவனிக்கப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(1953 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி, 1959, ஊ-53-1 அ. குறிப்பு. வரு)

25. ஏனையவர்களுக்கு நிலங்களை ஒப்படை செய்தல்.—(1) மேலே சொல்லப்பட்ட விதிகளின்கீழ் நிலம் இல்லாதவர்களாகவும், ஏழைகளாகவும் இருப்பவர் அல்லது அரசியல் தியாகி அல்லது முன்னாள் போர் வீரர் என்ற யாதொரு முறையிலும் நியமின்றி நில ஒப்படை பெறுவதற்குத் தகுதியில்லாதவர்கள் மேலே குறிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்டுப் பகிரங்கமான ஏல விற்பனைகளில் அல்லது நடப்பு விலை மதிப்புத் தொகை வசூலிக்கப்பட்ட பின்னர் செய்யப்படும் தனிப்பட்ட விற்பனையில் விலை மதிப்புள்ள நிலங்கள் ஒப்படை செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராவார். இத்தகையவர்களுக்குச் செய்யப்படும் விலை மதிப்புள்ள நிலங்களின் ஒப்படைகள், இந்நிலை ஆணையிலுள்ள சாதாரண ஏற்பாடுகளை அனுசரித்துச் செய்யப்பட வேண்டுமென்பதோடல்லாமல் அவற்றில் கீழ்க் கண்டுள்ள தனி நிபந்தனைகளை அனுசரித்தும நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(2) நகரங்களுக்கு அருகிலுள்ளவையாய்க் காலப் போக்கில் நகர்ப்புறத் திட்டங்களின் பகுதியாகக்கூடிய நிலங்கள் சிறப்பான விலை மதிப்புள்ள நிலங்களாகக் கருதப்பட்டு, மேலே வகுக்கப்பட்டுள்ள ஏற்பாட்டின்கீழ் அடங்குவன தவிர, மற்றவை பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விலை மதிப்புள்ள வேறு நிலங்கள் பகிரங்கமான ஏலவிற்பனை அல்லது நடப்பு விலை மதிப்புத் தொகை விற்பனை இவற்றில் எந்த முறை அரசினருக்கு அனுகூலமாக இருக்குமோ அந்த முறையில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

(3) ஒவ்வொன்றிலும் ஒப்படை செய்யப்படத்தக்க நிலத்தின் பரப்பு நன்செய் அல்லது நீர் பாய்ச்சப்படத் தக்க புன்செய் நிலமாயின் 1½ ஏக்கருக்கும் புன்செயாயின் 3 ஏக்கருக்கு ஆகும்.

(4) விலை மதிப்புள்ள நிலம் பகிரங்கமான ஏலத்தில் அல்லது நடப்பு விலை மதிப்புத் தொகையை வசூலித்து தனிப்பட்ட வகையில் விற்பனை செய்யப்படும்போது அதற்குப் பிரத்யேகமான நிபந்தனைகள் பொருந்தா. ஆனால் ஒப்படை வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டுச் செய்யப்படுவதோடு நில ஒப்படை செய்யப்பட்ட பசயிலிருந்து நிலத் தீர்வை செலுத்தப்பட வேண்டும்.

(1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி, 336 எண் அ. ஆ. வரு.)
(1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ம் தேதி, 1723 எண் அ. ஆ. வரு.)
(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண் அ.ஆ.கை.ப.)

"இ" பொது ஏற்பாடுகள்.

26. (1) அயல் நாட்டினர்களுக்கு ஒப்படை செய்தல்.—அரசினரின் முன் அனுமதியின்றிக் கலெக்டர் அல்லது வருவாய்த் துறை வாரியம் அரசினருக்குரிய எந்த நிலத்தையும் இந்த நிலை ஆணையின்கீழ், இந்தியக் குடியில்லாத எவருக்கும் ஒப்படை அல்லது விற்பனை செய்யக் கூடாது. இந்த நிலை ஆணையிடப்பட்டுச் செய்யப்படும் ஒப்படை அல்லது விற்பனை ஒவ்வொன்றுக்கும்

[நி. ஆ. 15:26—27

சம்பந்தப்பட்ட நிலம் அரசினர் ஒப்பளிப்பில்லாமல் இந்தியக் குடியில்லாத வேறொருவருக்கு பராதினப்படுத்தப்படுமாயின். அவ்வொப்பனை அல்லது விற்பனை சட்ட முறையில் செல்லாததாகும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருக்கவேண்டும்.

(1918 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி, 1867, எண் அ.ஆ.வரு.)
(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண், அ.ஆ.கை.ப.)

(2) கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கத்திற்கு ஒப்படை செய்வது.—இந்த நிலை ஆணையின்கீழ் அரசினருக்கு சொந்தமான நிலத்தின் ஒப்படைக்காகக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம் செய்துகொள்ளும் விண்ணப்பம், அத்தகைய கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956 ஆம் ஆண்டு 1 ஆவது மத்திய அரசுச் சட்டம்) 3(1) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருந்துகுட்பட்டு வந்தாலன்றி அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860-ம் ஆண்டு XXII ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880 ஆம் ஆண்டு சமயச் சங்கங்களின் சட்டம் (1880 ஆம் ஆண்டு 1 ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1932-ஆம் ஆண்டு சென்னை கூடுறவுச் சங்கங்களின் சட்டம் (1932-ம் ஆண்டு சென்னை V ஆவது சட்டம்), 1942-ஆம் ஆண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சட்டம் (1942-ஆம் ஆண்டு VI ஆவது மத்திய சட்டம்), 1938-ஆம் ஆண்டு ஈட்டுறுதிச் சட்டம் (1938-ஆம் ஆண்டு IV ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926-ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் யூனியன்கள் சட்டம் (1926-ஆம் ஆண்டு XVI ஆவது மத்திய சட்டம்), அல்லது இந்திய யூனியன் பார்லிமென்ட் அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம் ஆகிய இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றிக் கவனிக்கப்பட மாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன் கத்தோலிக் கிருத்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள் எனைய உரோமன் கத்தோலிக் சமயக் குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் ஆகிய இவற்றிற்கு பொருந்தாது.

[1] (1928-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் தேதி. 2501 எண், அ.ஆ.வரு கை.ப.)

[2] (1928 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி, 120 எண், வ.து.வா.செ.
(1949 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் தேதி 2649 எண், அ.ஆ.கை.ப.)
(1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் தேதி, 25 எண் வ.துவாசெ.அச்சு)
(1941 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி, 2395 அ.ஆ.வரு.கை.ப.)
(1942 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் தேதி, 3 எண், வ.து.வா.செ.அச்சு)
(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண், அ.ஆ.வரு.கை.)

27. சவுக்கு மர வளர்ப்பிற்குச் செய்யப்படும் நில ஒப்படை தனி நிபந்தனைகள்.—நிலம் சவுக்குப் பயிர் செய்வதற்கு உபயோகம் செய்யப் படுமாயின் யாதொரு நத்தத்திலிருந்து 200 கெஜங்களுக்குள் அதற்காகக் குழிகள் அல்லது குட்டைகள் தோண்டுவதோ குடங்களினுல் தண்ணீர் பாய்ச்சவோ கூடாது. இந்த வரம்பிற்கு அப்பால் தோண்டப்படும் குழிகளையும் குட்டைகளையும் மறு நடவுக்கு வேண்டியவற்றைத் தவிர மற்றெல்லாவற்றையும் அவற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்பட்ட பயிர்கள் மூன்று ஆண்டுகளானவுடன் நிரப்பிவிட

தி. ஆ. 15:27–31]

வேண்டும். இந்த நிபந்தனைகளில் எதேனும் ஒன்றை மீறுவது யாதொரு ஈடும் கொடுக்கப்படாமல் ஒப்படை அல்லது விற்பனை எதுவாயிருந்தாலும் ரத்து செய்யப் படுவதற்குட்படுத்திவிடும்.

(1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி, 11 என் வ.து.வா.செ.)

(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வரு.கை.)

28. பயிர் செய்வதற்கும் நிலம் வெற்றிடமாக்கப்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பு அளிப்பதற்கும் மலை நிலத்தை ஒப்படை செய்தல்.—மாங்களடர்த்தியாகவுள்ள மலை நில விவசாயப் பயிர் செய்வதற்கு வழங்கப்பட்டால் அந்நிலம், மரச்செடிகளற்ற வெற்றிடமாக்கப்படக்கூடும் என்னும் நிலையை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். அந்நிலம் சரிவுள்ளதாக இருக்குமானால் விவசாயம் செய்யப்படுவதற்காக வழங்கப்பட்ட சரிவுகளுக்கு செங்குத்தில் உள்ள இடை நிலப் பகுதிகளில் எத்தனை இடை வேலிகளில் வளர்ந்த மரச் செடிகளை அழிவுறுமல் நிறுத்தி வைத்தால் அச்சரிவுகள் மரச்செடிகளற்று வெற்றிடமாவதைத் தடுக்குமோ அவ்வாறுக மாஞ்செடிகளை அழிவுறுமல் பாதுகாத்து வைத்து அவை இவ்வாறு வளர்ந்தோங்க வழி செய்ய வேண்டும். இவ்வகையில் ஒரே தன்மையான விதி வகுத்துரை இயலாது. ஆதலால், அந்நிலத்தில் பயிரிடத்தக்க பயிரை அனுசரித்து ஆராய்ந்து பார்த்து ஒவ்வொன்றும் அதன், அதன் நிலைமைக்குத் தக்கவாறு கவனிக்கத்தக்கதாகும். ஒவ்வொரு ஆண்டினும் மற்றவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து குறுகிய காலத்திற்கு மட்டும் நிலத்தில் இருக்கக்கூடியவையாகிய தானியப் பயிர்களை விட, தேயிலை, காப்பிச்செடி போன்ற பயிர்கள் நில அரிப்பை எதிர்த்து அதிகமான பாதுகாப்பிற்கு உதவுகின்றன.

(1918-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் தேதி, 196 என், வ.து.வா.செ)

(1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி 3316 என், அ.ஆ.வரு.கை.)

29. "ஈ" படிவம்—ஒப்படை ஆணை.—ஒப்படை அல்லது விற்பனை எந்த நிபந்தனைகளுக்குட்படுத்தி செய்யப்பட வேண்டுமோ, அந்நிபந்தனைகள் ஈ படிவத்தில் அல்லது V ஆவது இணைப்பில் உள்ள நிலவிற்பனை படிவத்தில் இருக்க வேண்டும். அதே இணைப்பில் அச்சிடப்பட்டுள்ள "நில விற்பனை அறிவிப்புப் படிவங்களை" இவ்விற்பனைகளைப் பற்றி விளம்பரம் செய்யும் போது உபயோகிக்க வேண்டும்.

(1929 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3 ஆம் தேதி, 2020 என், அ.ஆ.வரு.கை.ப)
(1939 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ஆம் தேதி, 2808 என், அ.ஆ.வரு.கை.)
(1929 அம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி, 87 என்; வ.து.வா.செ.)
(1939 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் தேதி; 108 என், வ.து.வா.செ.அச்சு.)
(1958 ஆம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 அ. ஆ. வரு.கை.ப.)

30. தீர்வைகளும் தலவரிகளும் செலுத்தப்படுவதற்கு உட்படும். நிலம்—இந்நிபந்தனைகளின்கீழ் வழங்கப்பெறும் நிலம் சட்ட முறையிலும் வழக்க முறையிலும் செலுத்தத்தக்க பொது தீர்வைகளும் தலவரிகளும் செலுத்தப்படுவதற்குட்பட்டதாகும்.

31. (1) தீர்வையை மாற்றி அமைத்தல்.—இவ்விதிகளை அனுசரித்து ஒப்படை அல்லது விற்பனை செய்யப்படும் நிலத்திற்குரிய ஆண்டுத் தீர்வை அந்த அந்தக் காலத்து நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தின்போதும் மாற்றி அமைக்கப்படுவதற்குட்படும்.

[நி. ஆ. 15:31–32

(2) நிலத் தீர்வைக்குப் பதிலாக மனைத் தீர்வையை விதித்தல்.—நிலம் முழுமையுமாவது அல்லது நிலத்தின் ஒரு பாகமாவது விவசாய மல்லாத காரியத்திற்கு உபயோகிக்கப்பட்டால், நிலத் தீர்வைக்குப் பதிலாக மனைத் தீர்வை விதிப்பதற்கான உரிமையை அரசினர் தங்களிடம் ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். (இத்தகைய மனைத் தீர்வை அந்த அந்தக் காலத்து நடைமுறை விதிகளை அனுசரித்து திருத்தி அமைக்கப்படும் மாறுதலுக்குட் படும்) 15 ஆவது நில ஆணையின்கீழ்ப் பிறப்பபிக்கப்படும் எல்லா ஒப்படை ஆணைகளிலும் இந்நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்தப் பத்தியில் கூறப்பட்ட மனைத் தீர்வை விதிக்கும் அதிகாரம் செலுத்தத்தக்கவர் கலெக்டரே ஆவர்.

(1941 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி, 2217 என், அ.ஆ.வரு.கை.)
(1941 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி, 131 என், வ.து.வா.செ.அச்சு.)
(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வரு.கை.ப.)

32 (i) எந்தத் தேதியிலிருந்து தீர்வை செலுத்தத்தக்கது.—கலெக்டரால் குறிப்பாக இதைப் பற்றி வேறு வகையில் ஆணை பிறப்பிக்கப்பட்டாலன்றி ஒப்படை இறுதியாகச் செய்யப்பட்ட தேதியிலிருந்து தீர்வை செலுத்தத்தக்கது.

(ii) நிலம் ஒப்படை செய்யப்பட்ட பசலியை அடுத்து முன்னதாகத் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளாக நிலம் அல்லது அதன் யாதாவதொரு பாகம் அனுபோகம் செய்யப்படாமல் இருந்திருக்குமானால் நில ஒப்படை செய்யப்பட்ட பசலியிலிருந்து அப்பசலி உட்பட மூன்று பசலிகளுக்கு அந்நிலத்திற்கு அல்லது அத்தகைய அதன் பாகத்திற்குத் தக்கவாறாக தீர்வை வசூலிக்கப்பட மாட்டாது. அதன் பின் வழக்கம் போல் நிலத் தீர்வை வசூலிக்கப்

(iii) இருப்பினும், மேற்சொன்ன ஐந்து பசலிகளின் காலத்திற்குள் ஒப்படை செய்யப்பட்ட நிலம் அல்லது அதன் ஒரு பாகம் மூன்று பசலிகளில் அல்லது அதற்கு அதிகமான காலத்தில் அனுபோகத்தில் இருந்திருக்குமானால், அந்நிலம் ஒப்படை செய்யப்பட்ட பசலிக்கு அந் நிலத்தின் முழுமைக்கும் அல்லது அதன் பாகத்திற்குத் தக்கவாறாகத் தீர்வை வசூலிக்கப்படும். அதன் பின்னர் வழக்கமாகத் தீர்வை வசூலிக்கப்பட்டுவரும்.

(iv) மேற்சொன்ன ஐந்து பசலிகளின் காலத்திற்குள் ஒப்படை செய்யப் பட்ட நிலம் அல்லது அதன் ஒரு பாகம் இரண்டு பசலிகளில் மாத்திரம் அனுபோகத்திலிருக்குமானால், நிலம் ஒப்படை செய்யப்பட்ட பசலிக்கு அந்நிலத்திற்கு அல்லது அத்தகைய பாகத்திற்கு தக்கவாறாக தீர்வை வசூலிக்கப்பட மாட்டாது. ஆனால் அதன் பின்னர் தீர்வை வழக்கமாக வசூலிக்கப்பட்டுவரும்.

(v) மேற்சொன்ன ஐந்து பசலிகளின் காலத்திற்குள் ஒப்படை செய்யப் பட்ட நிலம் அல்லது அதன் ஒரு பாகம் ஒரு பசலியில் மாத்திரம் அனுபோகத்திலிருக்குமானால், நிலம் ஒப்படை செய்யப்பட்ட பசலிக்கும் அடுத்த பசலிக்கும் அந்நிலத்திற்கு அல்லது அதன் பாகத்திற்குத் தக்கவாறாக தீர்வை வசூலிக்கப்பட மாட்டாது. ஆனால் அதற்கப்புறம் வழக்கமாகத் தீர்வை வசூலிக்கப்பட்டுவரும்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதி, 296 என் அ.ஆ.வரு.

(vi) மேலே (v) ஆவது விதி எவ்வாறு இருப்பினும், நில ஒப்படை பெற்றிருப்பவர் சிவாய்ஜமாதாரர் அல்லாதவராக இருந்து அடுத்த தீர்வை வசூல் காலம் தொடங்குவதற்கு முன்னதாகப் பயிர் ஒன்றிலும் விளைவிக்க இயலாதவாறு

நீ. ஆ. 15 : 32-34]

ஒரு பசலியின் பிந்திய காலத்தில் ஒப்படை பெற்றிருந்தாலொழில் ஒப்படை செய்யப்பட்ட பசலி உட்பட ஒப்படை செய்யப்பட்ட பசலியிலிருந்து ஏனைய மாதும் பசலிகளுக்குத் தீர்வை வசூலிக்கப்படும்.

1955 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18-ம் தேதி, 2565 எண் அ.ஆ.வகு.

(vii) நிலத்திற்கு அரசாங்கப் பாசனத்திலிருந்து தண்ணீர் பாய்ச்சப்பட்டால் தீர்வை வசூலிக்கப்படுவதில் அளிக்கப்படுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மேலேயுள்ள சலுகை யாதாயிருப்பினும் அதைப் பொருட் படுத்தாமல் விதி கண் அனுசரித்து தண்ணீர்த்தீர்வை விதிக்கப் பட்டு வசூலிக்கப்படும்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 296 எண் அ.ஆ.வகு.
1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண். வரு.கை.ப.

.. 33. அரசினருக்குரியவையாகிய ஓடைகள், பாதைகள், சாலைகள், கனிப் பொருள்கள் நிலத்திலிருந்து தோண்டி எடுக்கத்தக்கவை, ஆகிய இவற்றின் உரிமைகளை அரசினரிடம் ஒதுக்கி வைத்தல்.—இவ்விதிகளை அனுசரித்துக் கொடுக்கப்பட்ட நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டி உள்ள சாலைகள், பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால்கள் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொதுமக்களுக்கும் நடைமுறையிலும் வழக்க முறையிலும் இருந்தவருகிற உரிமைகளும் அந்நிலத்தின்கீழ் இருக்கும் சுரங்கங்கள் கற்சாரங்கங்கள் இவற்றில் அரசினருக்கு இருக்கும் பங்கு உரிமையும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவை இவ்விதிகளை அனுசரித்துக் கொடுக்கப்படுவதால் பாதிக்கப்படமாட்டா. அரசாங்கத்தால் தங்களுக்கோ அல்லது தங்களால் அனுமதிக்கப் பெற்றவர்களுக்கோ தமிழ்நாடு சாங்க நடைமுறை சட்டம் (viii) ஆவது அத்தியாயம் ix ஆவது பிரிவில் உள்ள சாங்கக் குத்தகை மாதிரிப் படிவம் II ஆவது பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு நடைபாதை போக்கு வரத்து உரிமை, நடைபாதை எக்காலத்திலும் உள்ளே செல்வதும் வெளியேறுவதும் ஆகிய செய்யத்தக்க இவை போன்றவற்றைக் கொண்டு கனிப் பொருள் சோதனை செய்யப்படுவதற்கான அதிகாரங்களை, இத்தகைய உரிமைகள் செயலாற்றப்படுவதில், மேலே பாதிப்புக்குரியவருக்கு நேரிடக்கூடிய சேதத்திற்கு அவர் ஈடு அளிக்கப்படுவதற்கு அல்லது நடு பெறுமாறு செய்யப் படுவதற்குட்பட்டு அரசினர் தங்களிடமும் தங்களால் அதிகாரம் வழங்கப் பெற்றவர்களிடமும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

ஆ. 1932 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4 ஆம் தேதி, 1636 அ.ஆ.வகு.கை.ய.
ஆ. 1923 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் தேதி, 58 வ.து.வா.செ.
ஆ. 1932 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22 ஆம் தேதி, 51 வ.து.வா.செ.
அ. 1923 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் தேதி, 1025 அ.ஆ.பலவ.
1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 அ.ஆ.வகு.கை.ப.

34. அனுமதி பெற்றுள்ள சாரம அலுவலர்கள் நிலத்தை அணுபோகம் செய்தல்.—அணுபோகத்தில் இல்லாத நிலம் சாரம அலுவலர்களுக்கு தம்ம அதிகாரியால் இவ்விதிகளை அனுசரித்து ஒப்படை செய்யப்படும் வரையில், அவர்கள் தங்கள் சொந்தச் சாரமங்களில் அல்லது வேறு சாரமங்களில் அந்தகைய நிலத்தில் பிரவேசிப்பது அல்லது அதில் விசாரணை செய்வது கண்டிப்பாய் தடைசெய்யப்படுகிறது.

42-4—9

[நி. ஆ. 15 : 35-36

பிரிவு I—தனி வகுப்புகளைச் சொந்த நிலங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள சிறப்பு விதிகள்.

35. துவக்கம்—இப்பிரிவின் விதிகளின் நோக்கம்.—சில வகுப்பினர்களுக்கு நிலம் ஒப்படை செய்வதற்காகச் சில தலங்களுக்கும் சிலவகை நிலங்களுக்கும் பொருந்துவனவாக மேலே உள்ள II ஆவது பிரிவில் கண்டுள்ள பொது விதிகளோடு கீழ் வரும் சிறப்பு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இச்சிறப்பு விதிகளில் குறிப்பாகச் சொல்லப்படாதவற்றிற்கு மூரண்பாடு இல்லாத வரையில் பொது விதிகள் பொருந்துவனவாகும். இவ்விதிகளின் ஒழுங்கு முறையை மேற் கொள்ளாமல் அல்லது இவ்விதிகளில் வகுக்கப்பெற்றுள்ள நிபந்தனைகளை விதிக்காமல் அல்லது ஒப்படை செய்ய அதிகாரம் பெற்ற அலுவலர்களால் இவ்விதிகளில் வகுத்துத் தந்துள்ள ஏற்பாட்டு முறைக்கு மாறுபாட்டாகச் செய்யப்படும் ஒப்படை ஆதியந்தம் செல்லத்தகாததாகிறது.

1905 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி, 308 எண்.வ.து.வா.செ.

1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 எண். வ.து.வா.செ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி 3316 எண். அ. ஆ. வரு. கை.ப.

36. தீர்வை விதிக்கப்படாததும், ஒதுக்கி வைக்கப்படாததுமான நிலத்தை ஒப்படை செய்தல்.—(ஒதுக்கி வைக்கப்பட்டவை தவிர) தீர்வை விதிக்கப்படாத நிலத்துக்கான விண்ணப்பங்கள் எழுத்து வடிவில் தாசில்தாருக்குச் செய்து கொள்ள வேண்டும். அவற்றிற்கு முத்திரை வில்லைகள் ஒட்ட வேண்டிய தில்லை. அவற்றில் குறிக்கப்பட்டுள்ள புறம்போக்கு சம்பந்தமாகவும், ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலம் சம்பந்தமாகவும் கீழே 38-வது பத்தியில் வகுத்துப் பட்டுள்ள முறையை அனுசரித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இருப்பினும், ஒப்படை சாதாரணமாக மறுக்க முடியாததாக இருக்கும். ஏதாவது ஒன்றில் (கோரப்படும் முழு நிலம் அல்லது அதன் ஒரு பாகம்) ஒப்படை செய்யப்படுவது ஆட்சேபணையுள்ளதென்று தாசில்தார் கருதுவாரெனில் தீர்வை விதிக்கப்பட்ட நிலத்தின் ஒப்படையைப் பொறுத்த மட்டில் எவ்வாறு செய்வாரோ அவ்வாறு கோட்ட ஆட்சியாளரின் ஆணை பெறுவதற்காக அதற்குரிய அறிக்கையை அவருக்கு அனுப்பவேண்டும். (மேல் வது பத்தி). கோட்ட ஆட்சியாளர் தீர்வை விதிக்கப்படாத நிலத்தைத் தீர்வை விதிக்கப்பட்ட நிலமாக மாற்றுவதற்கும் அதற்குத் தீர்வை நிர்ணயம் செய்வதற்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட நிலம் சிறப்பான மதிப்புள்ள நிலமாக இருக்குமானால் அது தீர்வை விதிக்கப்பட்ட நிலமாக மாற்றப்பட்ட பின்னர் அதைப் பொறுத்த மட்டில் மேலே 22-வது பத்தியை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1894 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி, 41 எண். வ.து.வா.செ

1900 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22 ஆம் தேதி 159 எண். வ.து.வா.செ

1905 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் தேதி, 557 எண். அ.ஆ

1905 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் தேதி, 147 எண். வ.து.வா.செ

1921 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி, 2815 எண். வ ஆ.

நி. ஆ.- 15 : 37-38]

1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 எண். வ.து.வா.செ.

1923 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதி, 992 எண். வ.து.வா.செ. பலவ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 எண். அ.ஆ. வரு. கை.ப.

37. தீர்வை விதிக்கப்படாத நிலங்களை அனுமதி பெறுமல் அனுபோகம் செய்துகொள்ளுதல்.—வழக்கத்திற்கிசைந்த ஒப்பளிப்பு பெற்றுக்கொள்ளாமல், தீர்வை விதிக்கப்படாத நிலத்தை அநுபோகம் செய்து கொண்டால், புறம் போக்கு நிலத்தையும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலத்தையும் பொறுத்த வரையில், எந்த முறையை மேற்கொள்ள வேண்டுமென் 39-வது பத்தியில் வகுக்கப்பட்டுள்ளதோ அம்முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

38. புறம்போக்கு நிலத்தையும் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலத்தையும் ஒப்படை செய்தல்—(i) பொது நடைமுறை.—புறம்போக்கென்று பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது கணக்குகளில் "ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது" என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள அல்லது கீழே உள்பத்தியில் கண்டுள்ள தலைப்புகளில் அடங்கும் நிலத்தை பார்வையிட்டபுடன் அதன் ஒப்படை ஒட்டே பணையுள்ளதாகும் என்பது வெளிப்படையாம். இத்தகைய நிலங்களுக்கான விண்ணப்பங்களைக் கிராம அலுவலர்கள் அல்லது வருவாய்த் துறை ஆய்வாளாகளை பெற்றுக் கொள்ளக் கூடாது. ஆனால், தாசில்தார்கள், அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் எழுத்து வடிவில் இருக்க வேண்டும். அவற்றிற்கு (25 நயா பைசா மதிப்புள்ள நீதி மன்றக் கட்டணை) முத்திரை வில்லை ஒட்ட வேண்டும். அந்நில ஒப்படை பின்வரும் விதிகளில் தடை செய்யப்பட்டிருப்பின் அல்லது II-வது பிரிவில் உள்ள விதிகளுக்கு முரணாக இருப்பின் அல்லது ஒப்படை செய்வது விரும்பத்தக்கதன்று என்று தாசில்தார் கருதுவார் எனில் அவ்விண்ணப்பத்தைத் தாசில்தார் தள்ளுபடி செய்ய வேண்டும். நிலத்தை வழங்கத்தக்கதென்று அவர் நினைப்பாரெனில், நிலம் அனுபோகம் செய்யப்பட்ட நிலத்தை ஒப்படை செய்ய யோசனை செய்திருப்பதைக் குறிப்பிட்ட முறையில் கிராமத்தில் அது பற்றி விளம்பரம் செய்வதோடு 1950 ஆம் ஆண்டு X வது சென்னை பஞ்சாயத்துச் சட்டத்தை அனுசரித்து கிராமத்திற்குப் பஞ்சாயத்து அமைக்கப் பெற்றிருக்குமானால் அப்பஞ்சாயத்துக்கும் அதைப் பற்றித் தெரிவிக்க வேண்டும். அதன் பின் அந்நிலத்தைத் "தீர்வை விதிக்கப்பட்ட" இனத்திற்கு மாற்றுவதற்காகத் தாசில்தார் கலெக்டரின் ஆணை பெற வேண்டும். கலெக்டர் மாறுதல் செய்வதற்கு மறுத்து விடுவாரெனில், தாசில்தார் அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து விண்ணப்பம் செய்திருப்பவருக்கு அவ்வாறே தெரிவிக்க வேண்டும். [5] மாறுதலைக் கலெக்டர் அங்கீகரிப்பாரெனில், அவர் அந்நிலத்திற்கு வசூலிக்கத்தக்க தீர்வையும், அவர் தீர்மானிக்க வேண்டும். அந்தத் தீர்வை சாதாரணமாக அருகில் அதே மாதிரியான நிலத்திற்குரிய தீர்வையை ஒத்திருக்கும். ஆயினும், அவர் தம் புத்தி சாரம் போல் செய்யலாம். பின்னர், "தீர்வை விதிக்கப்பட்ட" நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்திற்கு எந்த முறை கையாள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அம் முறையைத் தாசில்தார் மேற்கொண்டு அந்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[1]1897 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி, 84 எண். வ.து.வா.செ. தனி.வரு.

1900 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் தேதி, 6 எண். அ.ஆ.

[நி. ஆ. 15 : 38

[illegible] ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 10 என், வ.து.வா.செ.

[illegible]1920-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி, 1978 என் அ.ஆ. வகு. சிறப்பு).

1899 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் தேதி, 4291 என், வ.து.வா.செ. தனி. வரு.பலவ.

1917 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம தேதி, 133 என், வ.து.வா.செ.

1905 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி, 308 என், வ.து.வா.செ.

1893 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி, 466 என், அ.ஆ.

[4] 1824 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதி, 1826 என், அ. ஆ. வரு. கை. ப.

1920 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 87 என், வ.து.வா.செ.

[4] 1924 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி, 1846 என், வ.து.வா.செ. பலவ.

[4] 1924 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி, 2941 என், வ.து.வா. செ.பலவ.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வகு. கை.ப.

குறிப்பு.—அட்டவணையில் கண்ட ஜாதியினர் குடியிருக்கும் கிராம தத்தத்தை அளித்திருக்கும் புறம்போக்கு நிலங்களில் பயிர் விளைவிப்பதற்கு அவற்றைக் கொடுக்கு முன் அவர்களின் குடியிருப்பிற்காக அந்த நிலங்கள் தேவையில்லையா என்பதைக் கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

1924 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 ஆம் தேதி, 1231 என், அ.ஆ.வரு. பலவ.

1924 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி, 1483 என், அ.ஆ.வகு. கை.ப.

1924 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி 2237 என், வ.து.வ, செ.கை.ப.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316, அ.ஆ.வகு.கை.ப.

(ii) நீரோடும் புறம்போக்குகள்.—கால்வாய்கள், வரய்க்கால்கள், ஓடைகள் இயற்றின் விளிம்புகளைப் பாதுகாக்க மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய புறம்போக்குகளில், 15-வது நிலை ஆணை 2-வது பத்தியில் குறிப்பிட்ட எல்லைகளுக்கப்பால் இருக்கும் நிலங்கள் மாத்திரமே மாற்றப்பட்டு ஒப்படை செய்யத்தக்கவையாகும்.

1935 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதி 1389 என், அ.ஆ.வகு.கை.ப.
935 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் தேதி, 84 என், வ.து.வா.செ.அச்சு.

(iii) ஓதுக்கக் காடுகளுக்கு அருகிலுள்ள நிலம்.—பதினெட்டு மாதங்களாக அனுபோகத்தில் இல்லாமல் ஓதுக்கக் காட்டை அடுத்திருக்கும் நிலங்கள் அல்லது ஓதுக்கி வைக்கப்படாதவையாய் ஓதுக்கக் காட்டிற்கு அடுத்து ஒரு சதுர மைல் அல்லது அதற்கு மேற்பட்ட நிலப் பகுதியைக் கலெக்டர் மாவட்ட வன அலுவலரைக் கலந்து கொண்டு, நில ஒப்படையைப் பற்றி அவர் தெரிவிக்கக் கூடிய ஆட்சேபணையைக் கவனிப்பதற்கு முன்பாக ஒப்படை செய்யக் கூடாது. ஓதுக்கக் காட்டின் நேர் எல்லை வரையில் ஒப்படை செய்யவும் கூடாது. ஆறல் ஓதுக்கக் காட்டின் எல்லைக்கும் ஒப்படை நிலத்திற்கும் இடை

நி. ஆ. 15 : 38]

வெளியில் இரண்டு அல்லது மூன்று சம்னி அகலமுள்ள திறந்த இடைவெளி நிலம் ஒப்படை செய்யப்படாமல் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 679 என், அ.ஆ.வகு.கை.ய.
1942 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி, 2749 என், அ.ஆ.வகு.கை.ய.
1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் தேதி, 27 என், வது.வா.செ.அச்சு,
1943 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் தேதி, 1 என், வ.து.வா.செ.
1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வகு கை.ப.

குறிப்பு.—(1) வனத் துறையினரால் " பாதுகாப்புப் பரப்புகள் " என்று சொல்லப்படும் பகுதிகள் ஒதுக்கக் காட்டுக்கும் விவசாயம் செய்யப்படும் விளிம்புக் கும் இடையில் " தடுப்புப் பரப்புகள் " ஆக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தப் பட்டுள்ளன. இப்பகுதிகள் முதலில் ஒதுக்கக்காடுகளாயிருந்து பிறகுகாடு அழிக்கப் பட்டதால் புறம் போக்குக்காக மாற்றப் பெற்றுள்ளன. வனத் துறைத் தலைவரைக் கலந்து கொள்ளாமல் இத்தகைய பகுதிகளை அயன் நிலமாக மாற்றக் கூடாது. விவ சாயம் செய்வதற்கு இத்தகைய நிலங்கள் ஏதாவது ஒப்படை செய்யப்பட்டிருந்தால் ஒப்படை பெற்றிருப்பவரின் நிலம் வன எல்லைய நெருங்கியிருப்பதால் விவசாயத் திற்கு கேடுதல் ஏற்படக் கூடுமென்றும் அதைப் பற்றிய முறைவீடுகள் கவனிக்க தக்கன அல்ல என்றும் அவருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்.

1 1920 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி, 1798 என், அ.ஆ.வகு. (திறப்பு).
1920 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 87 என், வ.து.வா.செ.

(iv) தோப்புகள் அல்லது விலை மதிப்புள்ள மரங்கள் உள்ள நிலம்.—பெரும் தொகுதியான பனைகள் அல்லது பழ மரங்கள் அல்லது கட்டட வேலை களுக்கு பயனுகும் விலை மதிப்புள்ள வெட்டு மரங்கள் தாமாகவோ அல்லது வளர்க்கப் பெற்றதாலோ எவ்வளவு வளர்ச்சி அடைந்திருப்பினும், அந்நிலத்தின் உரிமையை வன காரியங்களுக்காக அரசினர் வசம் வைத்துக் கொள்ளுவது விரும்பத்தக்கது. பழ மரங்கள் அல்லது கட்டடங்களுக்குப் பயனுகும் விலை மதிப்புள்ள வெட்டு மரங்கள் தொகுதிகளாக நிற்கும் நிலத்திற்கான ஒப்படைக் கோரிக்கை வரப்பெற்றால் மாவட்ட வன அலுவலருடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். இன்னர் கோட்ட ஆட்சியாளர் ஆணையைப் பெற வேண்டும். இந்நிலைய நிலத்தை அரசினர் தம் வசமே வைத்துக் கொள்வது விரும்பத் தக்கது என்றால், அதை ஒதுக்கி " வைக்கப்பட்ட நிலம் " என்று பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(v) பாலைய எல்லைகளுக்குள்ளிருக்கும் நிலம்.—பாலைய எல்லைக்குள் ளிருக்கும் யாதொரு நிலத்தையும் படைத் துறை அதிகாரிகளின் தனி ஒப்பளிப் பின்றி ஒப்படை செய்யக் கூடாது.

1898 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி, 4727 என், அ.ஆ.மலை.
1894 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் தேதி, 28 என், வ.து.வா.செ.

(vi) விமான நிலையம் அல்லது விமானம் இறங்கும் இடத்திற்கேயுள்ள நிலம்.—விமான நிலையம் அல்லது விமானம் இறங்கும் இடத்தைச் சுற்றிலும் 200 கெஜம் இடைவெளி அளவுக்குள்ளிருக்கும் யாதொரு நிலத்தையும் ஒப்படை

செய்யக் கூடாது. அத்தகைய எல்லா நிலங்களையும் புறம்போக்கு நிலங்களாக மாற்றி அவற்றைத் தடை ஆணை புத்தகத்தில் முன்னமே பதிவு செய்து கொள்ளாமலிருந்தால், அவ்வாறு பதிவு செய்து கொள்ள வேண்டும்.

1940 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி, 430 என், அ.ஆ.வரு.பல.
1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் தேதி, 23 என், வ.தூ.வா.செ.

(vii) வனச் சட்டத்தின் 26 ஆவது பிரிவை அனுசரித்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலம்.—வனச் சட்டத்தின் 26-வது பிரிவின் கீழ் அமைக்கப் பட்டுள்ள விதிகளை அனுசரித்து நிலம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதெனில், நிலவரித் திட்டப் பதிவேட்டிலும் கிராம அடங்கலிலும் அவற்றின் பொருத்தமான கட்டத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதென அந்நில அளவை என் பதிவு செய்யப்பட வேண்டும். கலெக்டரின் தனி அனுமதியின்றி அந்நிலத்தை ஒப்படை செய்யக் கூடாது. கலெக்டர் அவ்வாறு ஒப்படை செய்ய [1] வனப் பாதுகாவலரின் இசைவைப் பெற்றுக வேண்டும்.

1884 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 925 என், வ.து.வா.செ.
1890 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதி, 159 என், வ.து.வா.செ.
1893 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி, 406 என் அ.ஆ.
1894 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் தேதி, 558 என், வ.து.வா.செ.வன
1908 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி, 2892 என், அ.ஆ.
[1] 1928 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் தேதி, 1738 என், அ.ஆ.வரு.கை.ப.
[1] 1928 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் தேதி, 87 என் வ.து.வா.செ.

(viii) துறைமுக எல்லைகளுக்குள்ளிருக்கும் நிலம்—(1) பெரிய துறைமுகங்கள்.—இம்மாநிலத்தில், சென்னை பெரிய துறைமுகமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

(2) (தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் உரிமையிலிருக்கும் நிலம் நீங்கலாகத் தூத்துக்குடித் துறைமுகத்தின், எல்லைகளுக்குள் உள்ள நிலம் உட்பட்ட) சிறிய துறைமுகங்கள்.—1937 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் மத்திய அரசாங்கக் காரியங்களுக்கு உபயோகிக்கப்படாமல் துறைமுக எல்லைகளுக்குள் அரசினர் வசமிருக்கும் எல்லா நிலங்களும் மாதில அரசினருக்குச் சேர்ந்தவையாகும். அவற்றை நிலவரித் திட்டப் பதிவேட்டிலும், அடங்கலிலும் "ஒதுக்கி வைக்கப்பட்டவை" எனப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலே 1-வது பத்தியில் சொல்லியுள்ளவை போன்ற கடல் துறைக் காரியங்களுக்கு நிலத்தைத் தற்காலிகமாக அனுபோகம் செய்து கொள்ளக் கோரப்படும் நிலம் அந்நிலம் அரசினர் வசமிருக்கிறதென்று கலெக்டரிடம் கேட்டறிந்து உறுதி செய்து கொண்ட பின்னர் கடல் துறை அலுவலர்கள் அவற்றை முடிவு செய்வார்கள். விவசாயம் செய்வது, வீடு அல்லது கடை கட்டுவது, சுண்ணாம்புக் காளவாய் வைப்பது ஆகிய இவை போன்ற கடல் துறைக்குச் சம்பந்தமில்லாத காரியங்களுக்கு நிலம் வேண்டுமென்று செய்து கொள்ளும் விண்ணப்பங்களில் வருவாய்த் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்விண்ணப்பங்களை முடிவு செய்யக் கலெக்

தி. ஆ. 15 : 38]

டருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் இது பற்றி முதலில் தலத் துறைமுக அதிகாரியுடன் கலந்து ஆலோசனை செய்து கொள்ள வேண்டும்.

(3) ஒப்படை தற்காலிகமாக இருக்க வேண்டும்.—அந்நிலங்களை நிலையாக ஒப்படை செய்யக் கூடாது. ஆனால் தற்காலிகமான உபயோகத்திற்கு அவற்றைக் கொடுப்பதில் பின்வரும் நிபந்தனைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்—

(அ) ஒரு பசலி முடிவாகிறபோது அல்லது குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னர் இவை போன்ற அறிவிப்பு செய்யப்பட்ட குறிப்பிட்ட காலம் முடிவு அடைந்த பின்னர் பின்பு எச்சமயத்திலும் அநுபோகம் இறுதி அடைந்து விட்டதக்கது.

(ஆ) கொடுக்கப்பட வேண்டிய அறிவிப்புக்குப் பின்னர், திரும்ப எடுத்துக் கொள்ளும்போது நிலத்திலிருக்கக் கூடிய கட்டடங்களுக்கும் பொருள்களுக்கும் ஈடு கொடுக்கத்தக்கதில்லை.

துறைமுகம் நிலை பெற்றிருப்பதற்குத் தேவையாகும் அல்லது அதன் தேவைக்கு உபயோகப்படக்கூடிய நிலத்தை வேளாண்மைக் காரியங்களுக்கு அல்லது துறைமுகம் நிலை பெற்றிருப்பதற்குச் சம்பந்தமில்லாத வேறு காரியங்கள் எவற்றிற்கும் கொடுக்கக் கூடாது. முன்னமே அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால் அக்கொடையைப் புதுப்பிக்கக்கூடாது.

(1) துறைமுகம் நிலைபெற்றிருப்பது சம்பந்தமான காரியங்களுக்குத் தலையாக இருக்கும் அல்லது தேவையாகக்கூடிய நிலமும்,

(2) (அ) பயிர்த் தொழில் செய்வதற்கும்,

: (ஆ) மற்றக் காரியங்களுக்கும்,

நிலம் கொடுக்கப்பட்டால், துறைமுகம் நிலை பெற்றிருப்பது சம்பந்தமான காரியங்களுக்குத் தேவையில்லாத அல்லது தேவை ஏற்படாது எனக் கருதப்படும் நிலமும் கொடுக்கப்படுவதில் விதிக்க வேண்டிய தீர்வையின் அளவுகள் (அ) இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. (1) (2) (ஆ) இனங்களைப் பொறுத்த மட்டில், அவை துறைமுகத்தின் அருகில் இருப்பதால், ஏற்படும் தகுதி, நிலத்தின் மட்டம், அது இருக்கும் இடம், அது என்ன உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுவதாக உள்ளதோ அந்த உபயோகம், எவ்வளவு காலை அளவிற்குக் கொடுக்கப்படுகிறதோ அக்கால அளவு இவை போன்று கவனிக்கத் தக்கவற்றை அனுசரித்துக் குறிப்பிட்ட பெருமத்திற்கும் குறுமத்திற்கும் இடையே கலெக்டர் தமது யுக்தானுசாரத்தில் எத்தகைய வீதம் விதிப்பது பொருத்தமானதெனக் கருதுகிறாரோ அத்தகைய தீர்வை வீதத்தை விதிக்கலாம். குறிப்பிட்டுள்ள பெருமத்திற்கும் குறுமத்திற்கும் புறம்பான தீர்வை விதிக்க வேண்டுமானால் வருவாய்த் துறை வாரியத்தின் ஆணைகளைப் பெற வேண்டும். விதிக்க வேண்டிய வரியை நிர்ணயம் செய்வதில் வீடுகள் கட்டுவதை வேளாண்மையல்லாத காரியமாகக் கருத வேண்டும். இணைப்பில் குறிப்பிடப்படாத துறைமுக நிலத்திற்காக விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தால், அதற்குத் தக்க தீர்வை விதிப்பதற்கான யோசனையைக் கலெக்டர் பிரஸ்தாபிக்க வேண்டும்.

(4) அரசாங்கத் துறைகள் செய்து கொள்ளும் விண்ணப்பம்.—துறைமுக எல்லைகளுக்குள் உள்ள நிலங்களை அனுபோகம் செய்து கொள்ள அரசாங்கத்துறைகள் செய்து கொள்ளும் விண்ணப்பங்களில் கலெக்டர் துறைமுகத் துறையினருடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். இந்தமைய அனுபோகங்களுக்குத் தீர்வை இல்லை. மேலும் இவற்றிற்கு ஒப்பந்தமும் எழுதி நிறைவேற்ற வேண்டியதில்லை. இந்தமைய அனுபோகம் செய்வதில் துறைமுகத் துறையினருக்கு துறைமுகத் துறை சம்பந்தமான ஆட்சேபணையிருக்குமென்றால் அல்லது அவ்வனுபோகத்தை அரசினர் ஏற்றுக் கொள்ளலார் என்பது சந்தேகமென மாநிலத் துறைமுக அதிவலர் கருதுவாரெனில் இதைப் பற்றிய அறிக்கை வருவாய்த் துறை வாரியத்திற்கு மேலனுப்பப்பட வேண்டும்.

(5) கோடை ஆணை என்ன படிவத்தில் இருக்க வேண்டும்.—கலெக்டரின் ஒப்பளிப்பை பெற்று இந்நில ஆணையின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் ஆணைகள் தக்க மாதாதனுக்குட்பட்டு 15 ஆவது நில ஆணை அல்லது 24-அ ஆவது நில ஆணையில் குறிப்பிட்ட படிவத்தில் தக்கவாறு வெளியிடப்பட வேண்டும்.

குறிப்புகள் :—(1) 1924-ஆம் ஆண்டு சாத்துக்குடித் துறைமுகப் பொதுப்புச் சட்டத்தின் 29 ஆவது பிரிவின் கீழ்த் சாத்துக்குடித் துறைமுகப் பொதுப்புக் கழகத்தின் வசம் சாத்துக்குடித் துறைமுக எல்லைகளுக்குள் இருக்கும் நிலங்களுக்கு இந்தப் பத்தி பொருந்தாது.

(2) துறைமுக எல்லைகளுக்குள் உள்ள அரசாங்க நிலங்கள் கடற்கரை சம்பந்தமான எக்காரியங்களுக்கு உபயோகிக்க அனுமதிக்கப் படுவது கவனிக்கப்படத்தக்கனவோ அவை மேலே விவரிக்கப்பட்டுள்ளன :—

(அ) கடலில் செல்லும் மரக்கலத்தை நிறுத்தி வைப்பது.

(ஆ) கடலில் செல்லும் மரக்கலங்கள் செலவது.

(இ) கப்பலில் ஏற்றுவதற்கு முன்னும் இறக்கின பின்னும், மரம், விறகு, களிமண் ஓடுகள் இவற்றைச்சேர்த்து வைப்பது.

(ஈ) (இ) இனத்தில் இல்லாத இதர கப்பற் சரக்குகளை ஏற்றுவதற்கு முன்னும் இறக்கின பின்னும் சேர்த்து வைப்பது.

(உ) சரக்குப் படகுகளையும் மற்றப்படகுகளையும் நிறுத்தி வைப்பது.

(ஊ) கப்பற் சரக்குப் படகு அல்லது மற்ற படகுகள் செல்வது.

(எ) தூக்கும் இயந்திர இடம்.

(ஏ) மரம் அறுக்கும் குழிகள் அல்லது கொட்டகைகள்.

(ஐ) நாட்டு மரக்கலங்களைப் பழுது பார்ப்பது.

(ஒ) மரக்கலங்களை பழுது பார்ப்பதற்கு அவற்றை இழுத்துச் செல்வது.

(ஓ) பெரிய மரத்துண்டுகளையும் வாடகை மரக்கலங்களையும் வைத்திருப்பது.

(ஔ) எண்ணெய் அமைப்புகள்.

1941 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி, 2126 என், அ.ஆ.வ.எ.ப.

1941 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ஆம் தேதி, 2732 என், வ.து.வா.செ.பஎன.

1942 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி, 49 என், வ.து.வா.செ.நீர்.

1956 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வ.எ.ஈ

நி. ஆ. 15 : 38]

(ix) (அ) கடல் நீர் உயர் மட்ட வரம்பிலிருந்து ஒரு பர்லாங்குக்குள் கடற்கரை அருகிலுள்ள நிலங்கள்.—கடலின் உயர்ந்த நீர் மட்டத்திற்கு ஒரு பர்லாங்குக்குள்ளிருக்கும் அரசினர் வசமுள்ள நிலங்களை ஒதுக்கி வைத்துக் கொண்டு அவற்றை தடை ஆணைப் புத்தகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். வருவாய்த் துறை வாரியத்தின் மூன் அனுமதியின்றி அத்தகைய நிலத்தை கலெக்டர் எவரும் ஒப்படை செய்யக் கூடாது. இருப்பினும், உயர் நீர் மட்டத்திற்கு 100 கெஜத்திற்கு அதிக உயரத்தில் இராம நாதபுரத்துக்கு அரை மைலுக்குக் குறைந்தாத தூரத்திலிருக்கும் இடங்களில் சவுக்கு மரம் பயிரிட கலெக்டர்கள் அனுமதிக்கலாம். இவ்வனுமதி 19 ஆவது நில ஆணையின் கீழ் உரிமம் வழங்கப்படுவதும் பகுதியிலிருந்து உரிமத்தில் கண்டுள்ள பரப்பிற்கு முழுத் தீர்வையும் செலுத்த வேண்டுமென்று நிபந்தனைக்குட்படுத்தி வழங்கத்தகும்.

1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ஆம் தேதி, 2071 என், அ.ஆ.வரு. கை.ப.

1948-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் தேதி, 2992 என், வ.து.வா. செ.வரு:பலவ.

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வரு கை.ப.

(ஆ) தென்னை மர வளர்ப்பிற்காகக் கடற்கரை அருகிலுள்ள நிலங்களைக் கோரித்தல்.—கடற்கரை அருகில் தென்னை நடுவதற்காக நிலங்கள் கோரப்படின் கடலின் உயர்ந்த நீர் மட்டத்திற்கு 100 கெஜ உயரத்திற்கும் அதிக மாக இருக்கும் கடற்கரை ஓரத்திலுள்ள நிலங்களை முந்திய உள்பத்தியில் சவுக்கு வளர்ப்பதற்கு விதிக்கப்பட வேண்டிய நிபந்தனைகளோடும் விதிகளோடும் அனுசரித்துத் தென்னை மரங்கள் வளர்ப்பிக்கக் கொடுக்கலாம். உதவி பெறத் தகுதியுள்ள ஏழைகள் எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும், அவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கலாம். ஆனாலும், இதில், கடற்கரையோரத்தில் உண்மையாக மீன் பிடித்து வாழும் மீன் பிடிப்பவர் இனத்தவர்களுக்கே முந்திய சலுகை அளிக்க வேண்டும். இக்கொடைகள் (1) உரிமம் பெறுபவர் நிலத்திற்குச் சுற்றிலும் வேலி இட்டுக் கொள்ளவேண்டுமென்பதும் (2) பட்ட அல்லது காணியால் விதிக்கப்பட்ட மரத்தைத் தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் அனுமதியின்றி வெட்டிக் கொள்ளலாம் என்பதுமான தனிப்பட்ட நிபந்தனை களுடன் 19 ஆவது நில ஆணையில் கண்டுள்ள உரிம முறைமையில் இருக்க வேண்டும். கடற்கரையிலுள்ள எல்லா மாவட்டங்களின் கலெக்டர்கள் எல்லாருமே, அனுபோகம் ஆட்சேபனையற்றதென்று வழங்கத்தக்கவற்றில், வருவாய் துறை வாரியத்தின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டு மேலே சொன்ன நிபந்தனைகளுக்குட்படுத்தி தென்னை நடுவதற்கு உரிமம் கொடுக்கலாம்.

1952-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9-ஆம் தேதி, 2002, என் அ.ஆ.அச்சு.
1952-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ஆம் தேதி, 2862 என், அ.ஆ.
1952-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ஆம் தேதி, 26 என், வ.து.வா.செ.அச்சு.
1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி, 3316 என், அ.ஆ.வரு.

(x) இருப்புப்பாதை நிலையங்களுக்கு அருகிலுள்ள நிலம்.—இருப்புப் பாதை நிலையங்களிலிருந்து அரை மைல் (40 சங்கிலி) தூரத்திற்குள்ளிருக்கும் நிலத்தைப்பற்றி மொத்தமாட்டில் கலெக்டரின் மூன் ஒப்பளிப்பு பெறாமல் ஒப்படை

[சி. ஆ. 15 : 38

செய்யக் கூடாது. [1] இருப்புப் பாதை அதிகாரிகள் நில ஒப்படைக்கு இசைவு தந்தாலன்றி கலெக்டர் ஒப்பளிக்கக் கூடாது. [1] இருப்பினும், கோட்ட ஆட்சியாளர் இருப்புப் பாதை அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் வியாபாரம் செய்வதற்காகத் தற்காலிக ஒப்படை செய்வதற்குத் தடையில்லை. ஒருவருக்கு அதிகமானவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள் எனில், அவர்களில் எவருக்குச் சிறந்த உரிமையிருக்கிறது என்பதைத் தீர்மானிப்பது கடினமாக இருக்குமானால், கோட்ட ஆட்சியாளர் ஓராண்டிற்கு அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகளுக்கு வேளாண்மை செய்து கொள்வதற்கான உரிமையைப் புதுப்பிக்கமான ஏலத்தில் விற்பனை செய்யலாம். நிலத்தில் எத்தகைய கட்டடமும் கட்டக் கூடாதென்றும் நிலத்தில் நிற்கும் பயிர்களைத் தவிர மற்றவற்றிற்கு யாதொரு ஈடும் கொடுக்கப்படாமல் ஒரு மாத முன் அறிவிப்புக்குப்பின் நிலத்தை திரும்ப எடுத்துக் கொள்வதற்கு அரசினருக்கு உரிமை உண்டென்னும் தெளிவான நிபந்தனைகளுக்குட்பட்டுத் தற்காலிக ஒப்படை இருக்க வேண்டும். இவ்வறிவுரைகள், நிர்வை விதிக்கப்பட்ட நிலத்திற்கள்றிக் கிராம நத்தம் உட்பட, உரிமை விட்டுவிடப்பட்ட நிலங்கள் உரிமையற்று அரசினரைச் சேர்ந்த நிலங்கள் போன்று அரசினர் வசமுள்ள எல்லா நிலங்களுக்கும் பொருந்துவனவாகும். இத்தகைய நிலங்களையெல்லாம் கணக்குகளில் "ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன" எனப் பதிவு செய்ய வேண்டும்.

1881-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதி, 2902, எண், வ.து.வா.செ.

1882-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ஆம் தேதி, 1588 எண், வ.து.வா.செ.

1891-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதி, 661 எண். வ.து.வா.செ.

1893-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் தேதி, 365 எண், வ.து.வா.செ.

1908-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி, 28 எண், வ.துவா.செ.

1908-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி, 1152 எண், அ.ஆ.

1908-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி, 95 எண், வ.து.வா.செ.

1912-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ஆம் தேதி, 123 எண், அ.ஆ.

[1] 1902-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ஆம் தேதி, 82 எண், வ.து.வா.செ, அச்சு.

குறிப்பு.—(1) இருப்புப் பாதை நகரம் ஒன்றை அமைக்கத் தொடங்க அனுமதிப்பதற்கு எந்த இடமாவது குறிப்பாகத் தகுதியுடையதாக இருக்குமானால், VII-ஆவது இணைப்பில் உள்ளது பொதுக் கட்டளைகளை அனுசரித்துக் கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1893-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ஆம் தேதி, 279 எண், வா.து.வ.செ.

1902-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ஆம் தேதி, 83 எண், வ.து.வா.செ.

1937-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ஆம் தேதி, 125 எண், வ.து.வா.செ. அச்சு.

(2) ஒப்படை செய்ய உத்தேசிக்கப் பெற்றிருக்கும் நிலத்தை அடையாளம் கண்டுபிடிப்பதை இருப்புப் பாதைஅதிகாரிகள் கடினமாகக்கருதுகிறார்கள். ஆதலால் இதுபற்றி அவர்களுக்குக் கலெக்டர் எழுதிக் கேட்கும் பொழுது, சம்பந்தப் பட்ட நிலத்திற்கும், அதற்கு மிக அருகில் இருப்புப் பாதை வழியில் உள்ள தந்திக் கம்பத்திற்கும் உள்ள தூரம், அந்தக் கம்பத்தின் எண் இவற்றைக் காண்பிக்கும் நிலங்களின் வரைபடக் குறிப்புகளையும் அனுப்ப வேண்டும்.

1925-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20-ஆம் தேதி, 436 எண், அ.ஆ.வரு.கை.ப.

1925-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி, 789 எண், வ.து.வா.செ.பல.

நி. ஆ. 15 : 38]

(xi) கனிப் பொருள்களும் நிலத்திலிருந்து தோண்டி எடுப்பான முதலியவையும் உள்ள நிலம்.—"விலை மதிப்புள்ள கனிப் பொருள்கள் அல்லது கற்கரைத் தோண்டியெடுக்கும் இடம் முதலியவை அடங்கியுள்ள நிலத்தை விவசாயத்திற்காக ஒப்படை செய்தல் கூடாது. அத்தகைய நிலத்திற் காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தைக் கலெக்டர், முழு விவரங்களுடன் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருவாய்த் துறை கழகத்திற்கு அனுப்பி அதன் ஆணைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1885-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ஆம் தேதி, 1293 என், அ.ஆ.
1905-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ஆம் தேதி, 308 என், வ.து.வா.செ.
1928-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் தேதி, 87 என், வ.து.வா.செ.

(xii) படுகைகள் அவையாவன, ஆறுகளின் வெள்ளக் கரைகளுக்குள் அமைந்த நிலம்.— [1] அரசுக் குடி முறையில் அல்லாமல் திட்டு நிலங்கள், மேடுகள், ஆற்றுப் போக்கில் தோன்றிய நிலம், ஆகிய இவற்றின் உரிமை யாளர்கள் இவற்றிற்கு தாங்கள் நிர்வை செலுத்துவதை நிறுத்தி விடுவதுண்டு. இவை அரசினரின் முழு உரிமைக்குட்பட்டவை ஆகும். இவற்றை [1] ஒப்படை [1] செய்யக் கூடாது. பத்து ஆண்டுகளுக்கு அதிக மில்லாத ஏதாவதொரு கால அளவுக்கு இவற்றின் குத்தகையை ஏலத்தில் விட்டுவிட வேண்டும். ஓராண்டிற்கு அதிகமான காலத்திற்குரிய குத்தகைகள், குத்தகைத் தொகை 100 ரூபாய்க்கு மேற்படாவிட்டால், கோட்ட ஆட்சியாளர் உறுதி செய்வ தற்கும், குத்தகைத் தொகை 100 ரூபாய்க்கு மேற்படுமானல் கலெக்டர் உறுதி செய்வதற்கும் உட்பட்டவை யாகும்.

1935-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி, 235 என், அ.ஆ.வரு.
1901-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25-ஆம் தேதி, 535 என், அ.ஆ.
1908-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி, 28 என், வ.து.வா.செ.
1935-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி, 15 என், வ.து.வா.செ.
1901-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18-ஆம் தேதி, 169 என், வ.து.வா.செ.
அ 1928-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ஆம் தேதி, 1738 என், அ.ஆ.வரு பலவ.
அ 1928-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ஆம் தேதி 87 என், வ.து.வா.செ.

(xiii) ஏரி உள்வாய் நிலங்கள்.—பொருத்தமான தொழில் நுட்ப அறி வுரைக் கலந்து ஆலோசனை செய்யாமல் ஏரி உள்வாய் நிலங்களை யாதாரு காரணமாகவும் ஒப்படை செய்யக் கூடாது.

(xiv) மேய்ச்சல் தரைப் புறம்போக்கு.—(ஊராட்சிக் காடுகளும் ஓதுக்கக் காடுகளும் அல்லாத) போதுமான மேய்ச்சல் நிலம், கால்நடை களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஏக்கர் வீதம் போதுமான அளவில் இருந்தா லன்றி மேய்ச்சல் தரை புறம்போக்குகள், ஒப்படை செய்யப்படமாட்டா. இருப்பினும் அதிக உணவு ஆக்கத் திட்டத்தின் கீழ், மேய்ச்சல் தரைப் புறம் போக்குகளில் விவசாயம் செய்ய ஏழை மக்கள் குறிப்பாக அனுமதிக்கப் பட்டிருந்து, அவர்கள் பணம் செலவு செய்தும் உழைத்தும் நிலங்களில் விவசாயம் செய்திருந்தார்கள் எனில் அத்தகைய நிலங்கள்—

(i) நிலத்தை அனுபோகம் செய்கிறவர் நிலமில்லாதவராகவும் ஏழை யாகவும் இருப்பவராக நடைமுறை விதிகளின் கீழ் நிலத்தின் ஒப்படை பெறு வதற்குத் தகுதியுடையவரெனில்,

(ii) அனுபோகத்திலுள்ள நிலத்தின் பாப்பு நீக்லாகக் கொமத்தில் மேய்ச்சல் தரை நிலத்தில் உள்ள மொத்தப் பாப்பு கொமத்தின் கால்நடை களின் மொத்த தேலையில் 75 சத வீதத்திற்கு குறைந்தொன்றல்,

(iii) அதிக உணவு யுக்கத் திட்டத்தின் கீழ் அனுபோகம் அனுமதிக் கப்பட்டிருந்த அனுபோக காலமும் ஐந்து ஆண்டுகளுக்கு குறைந்தா தொன்றல்,

(iv) நிலத்தைச் சீர்திருத்தம் அல்லது மேம்பாடு செய்வதில் அனு போகம் செய்திருப்பவர் கணிசமான அளவில் எக்கர் ஒன்றுக்கு குறைந்தது 100 ரூபாய் (நூறு ரூபாய்) தேலவு செய்திருப்பார் எனில்,

(v) அவ்வாறு செலவு செய்த தொகையை அனுபோகம் செய்திருப் பவர் இன்னும் மீட்டுக் கொள்ளவில்லை எனில்,
அத்தகைய நிலங்கள் அனுபோகம் செய்திருப்பவர்களுக்கு ஒப்படை செய்யப் படலாம்.

குறிப்பு.—மேய்ச்சல் தரைப் புறம்போக்குகளை ஒப்படை செய்வது சம்பந்த மான ஆணையும் கூதலான தலியணைகளுமாகிய 1951-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி 2580 என் வருவாய்த்துறை அரசாணை ஆணையும், 1954-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ஆம் தேதி, 3677 என் (பல) வருவாய்த்துறை அரசாங்க ஆணை யும் நீலகிரி மாவட்டத்திற்குப் பொருந்தும்.

26—10—1953 தேதி, 2955 என் அ.ஆ. வ.
10—2—1954 தேதி, 296 என் அ.ஆ.வ.
13—5—1957 தேதி, 1993 என் அ.ஆ.வ.
5—9—1958 தேதி, 3316 என் அ.ஆ.வ.எ.ம.

39. புறம்போக்கு அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலத்தை அனுமதி பெறுமல் அனுபோகம் செய்தல்.—வழக்கத்திற்கினைந்த விண்ணப்பம் செய்து கொள்ளாமல் புறம்போக்கு அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலத்தில் செய்யும் அனுபோகத்தைப் பற்றிய அறிக்கையைக் கொம அலுவலர்கள் ஒவ் வொரு மாதமும் VIII ஆவது இணைப்பிலுள்ள ஒப்படைப்புக் குறிப்பில் இரண்டு பிரதிகளில் தயாரித்து தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். 1 அனுபோகம் செய்பவர் ஒப்படை செய்து கொள்ள விரும்புவதாக எனில். 1 செய்யப்பட்ட அனுபோகம் ஆட்சேபனை அற்றதென்று தாசில்தாரும் கருதுவாரெனில், மேலே 32, 35 பத்திகளில் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளுக்குட்பட்டு 6 ஆவது பத்தியில் குறிக்கப்பட்டுள்ளவாறு ஒப்படை யோசனையைக் கொமத்தில், அவர் விளம்பரம் செய்து பின்பு அந்நிலம் 2 ஆவது பத்தி (1) ஆவது உட்பிரிவின் கீழ் "நிர்வை விதிக்கப்பட்ட" நிலமாக மாற்றப்பட ஒப்புவிக்குமாறு கலெக்டரை வேண்டிக் கொள்ள வேண்டும். நிலத்தை மாற்றுவதற்குக் கலெக்டர் ஒப்புவிப் பாரெனில் II -வது பிரிவில் கண்டுள்ள விதிகளை அனுசரித்து நிலத்தைக் கொடுப்பதற்கு முடிவு செய்ய வேண்டும். நிலத்தை அனுபோகம் செய்பவர் ஒப்படை பெற்றுக் கொள்ள விரும்பாவிடில், அனுபோகமும் ஆட்சேபனையற்ற தெனில், தாசில்தார் 26 ஆவது நில ஆணையின் கீழ் 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தை அனுசரித்து, அதற்குத் நிர்வை விதிக்கலாம். அனுபோகம் ஆட்சே பனையுள்ளதாயல், அச்சட்டத்தின் கீழ்த் தண்டம் விதிப்பதற்கு வழிகோப்

நி. ஆ. 15 : 40]

பட்டுள்ள வற்புறுத்தினை நிறைவேற்ற வேண்டும். தாசில்தாரின் ஒப்படை ஆணை, குறிப்பின் இரண்டாவது பிரதியில் எழுதப் பெற்றுக் கிராம அலுவலா கருக்கு அனுப்பப்பட வேண்டும்.

2—8—1928 தேதி, 1738 என், அ.ஆ.வ.ப.லவ.
21—8—1928 தேதி, 87 என், வ.து.வா.செ.
15—11—1937 தேதி, 125 என், வ.து.வர.செ.அச்சு.
5—9—1958 தேதி, 3316 என், அ.ஆ.வரு.கை.ப.

40. மலை வாழ் மக்கள்—நிபந்தனைகளோடு கூடிய ஒப்படை.—மின் வழுவன வற்றில் மலையாளிகள் அல்லது சோழகர்கள் இத்தகையோர்களுக்குச் செம்பும் நில ஒப்படை கோட்ட ஆட்சியரின் குறிப்பான ஒப்பளிப்பின்றி ஒப்படை பெற்றவர்கள் தங்கள் இனத்தாரல்லாத வேறு எவருக்கும் நிலத்தின் உரிமையின் மாற்றக் கூடாதென்றும், அத்தகைய ஒப்பளிப்பின்றி நிலத்தின் உரிமை மாற்றப் பட்டால் அல்லது சட்ட முறையில் பிறப்பிக்கப்படும் நிறைவேற்றக் கட்டளையால் நிலம் ஜப்தி செய்யப்பட்டால் அல்லது விற்பனை செய்யப்பட்டால், யாதொரு ஈடும் கொடுக்கப்படாமல் கோட்ட ஆட்சியாளரால் அது திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்குட்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தப்பட வேண்டும்.

25—5—1920 தேதி, 1197 என், அ.ஆ.
23—3—1930 தேதி, 567 என், அ.ஆ.வ.கை.ய.
7—7—1920 தேதி, 57 என், வ.து.வா.செ.
3—4—1930 தேதி, 29 என் வ.து.வா.செ.பலவ.
5—9—1958 தேதி, 3316 என், அ.ஆ.வ.கை.ய.

(i) சேர்வராயன் மலையில் மலையாளிகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட கிராமப் பகுதிகள்.

7—3—1910 தேதி, 714 என், அ.ஆ.வ.
5—9—1958 தேதி, 3316 என், அ.ஆ.வ.ப.ல.

(ii) மலையாளிகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலம்—

(1) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா ஏலகிரி மலைக் கிராமங்கள்.

28—8—1917 தேதி, 2628 என், அ.ஆ.வ.

(2) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர், வேலூர், போளூர் தாலுகாக்களில் ஜாவடிக் குன்றுகள்.

29—5—1918 தேதி, 2080 என், அ.ஆ.வ.
29—8—1938 தேதி, 91 என், வ.து.வர.செ.அச்சு.

(3) வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை தாலுகா, உதயமலைக் குன்றுகள்.

29—5—1918 தேதி, 2080 என், அ.ஆ.வ.

[தி. ஆ. 15 : 40

(4) சேலம் மாவட்டம், சேலம் தாலுகா, சருகு மலைக் குன்றுகள்.

18—5—1916 தேதி, 1130 எண், அ.ஆ.வரு.

(5) சேலம் மாவட்டம், அம்மாபாளையம், குள்ளம்பட்டி கிராமங்கள் நீங்கலாக ஊத்தங்கரை தாலுகா, சிட்டேரி குன்றுகள்,

29—5—1968 தேதி, 2080 எண், அ.ஆ.வரு.

(6) சேலம் மாவட்டம், சேலம் தாலுகாவில் அருநூத்து மலைக் குன்றுகளும் சேலம், ராசிபுரம் தாலுகாக்களில் போதமலைக் குன்றுகளும்

29—5—1918 தேதி, 2080 எண், அ.ஆ.வரு.
26—4—1935 தேதி, 1617 எண், வ.து.வா.செ.

(7) சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பெரிய கல்ராயனிலிருக்கும் கீழ் ஆலவை கிராமம்.

29—5—1918 தேதி, 2080 எண், அ.ஆ.வரு.

(8) சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகாவில் பச்சை மலை, கொல்லி மலைகளிலும் [2] அவற்றிற்கு அருகிலும் [2] உள்ள கீழே குறிப்பிட்டுள்ள கிராமங்கள் :—

I. பச்சைமலைக் குன்றுகள்—

(1) பச்சை மலைத் தரப்பு.

(2) கிருஷ்ணபுரம் தரப்பில் நில அளவை செய்யப் பெற்றுள்ள வலசைக்கள்ளிப் பட்டியும், விப்பன்தட்டைச் சிற்றூரும்.

(3) கூடமலைத் தரப்பில் நில அளவை செய்யப்பட்டு வேறூர் என்பதன் சிற்றூர்களும் (கரட்டூர் எனப்படுபவை) மன்மலையும் (இரண்டாவது பகுதி).

(4) [1] மொடுக்குப்பட்டி கிராமம் நீங்கலாக [2] மன்மலை (முதல் பகுதி) பரப்பு.

II. கொல்லிமலைக் குன்றுகள்—

(5) அவாலன்கொம்பை தரப்பு.

(6) பெயத்தூர் தரப்பு.

26—4—1935 தேதி, 1617 எண், வ.து.வா.செ.வரு.பலவ.
16—6—1917 தேதி, 1749 எண், அ.ஆ.வரு.
அ 7—8—1919 தேதி, 1858 எண், அ.ஆ.வரு.பலவ.
ஆ 30—7—1930 தேதி, 1455 எண், அ.ஆ.வரு.பலவ.
அ 1—12—1922 தேதி, 2839 எண், வ.து.வா.செ. பலவ,
ஆ 25—8—1930 தேதி, 2515 எண், வ.து.வா.செ. ஈக.ப.

தி. ஆ. 15 : 40]

(9) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி தாலூகா, பச்சை மல்பில் கோம்பை, தெம்பாலுடு, வெண்ணுடு கிராமங்கள்.

29—5—1918 தேதி, 2080 என், அ.ஆ.வரு.

(10) சேலம் மாவட்டம், நாமக்கல், ராசிபுரம் தாலூகாக்களில் தொல்லி மலையிலிருக்கும் கீழே கண்டுள்ள நாடுகளும் கிராமங்களும் :—

(i) நாமக்கல் தாலூகா.

(1) வாளவந்தி நாடு.
(2) வாளப்பூர் நாடு.
(3) குண்டூர் நாடு.
(4) தின்னனூர் நாடு.
(5) அரியூர் நாடு.
(6) தேவனூர் நாடு.
(7) சேலூர் நாடு.

(ii) ராசிபுரம் தாலூகா.

(8) குண்டுனி நாடு தரப்பு.
(9) ஆலத்தூர் நாடு தரப்பு.
(10) திருப்புலி நாடு தரப்பு.
(11) எடுப்புலி நாடு தரப்பு.
(12) சித்தூர் நாடு தரப்பு.
(13) பிரக்கரை நாடு தரப்பு.
(14) பெயில் நாடு தரப்பு.
(15) [1]உனந்தங்கல் பரப்பு.
(16) கார்குடல்பட்டி தரப்பின் சிற்றூர்களாகிய மலையாளப்பட்டி கப்பலூத்து.

(17) தனியாக அளவு செய்யப்பட்டுள்ள பெருப்பன் சோலைக் கிராமமும் பெருப்பன் சோலைத் தரப்பின் சிற்றூர்களாகிய பெரிய கோம்பை, புதூர் பாலப்பட்டியும்.

(18) மூள்ளுக்குரிச்சித் தரப்பைச் சேர்ந்த தனியாக அளவு செய்யப் பட்டுள்ள சிற்றூர்களாகிய பெரிய குரிச்சியும் மூலக்குரிச்சியும்.

16—6—1917 தேதி, 1749 என், அ.ஆ.வரு.
அ 7—8—1919 தேதி, 1858 என், அ.ஆ.வரு.
20—6—1918 தேதி, 129 என், வ.து.வா.செ.
அ 1—12—1922 தேதி, 2839 என் வ.து.வா.செ.பலவ.
26—4—1935 தேதி, 1617என், வ,து.வ.செ.பலவ.
5—9—1958 தேதி, 3316 என், அ.ஆ.

(iii) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சோழகர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள்.

குறிப்பு.—(iii) ஆனது இலத்தில் உள்ளவை தவிர மேலே சொல்லியுள்ள நிலப் பகுதிகளில் ஒப்படைகள் அந்த அந்தப் பகுதிகளில் வசிக்கும் (மலைவாசிகள் ஆகிய மலைவாழ்) வகுப்பினருக்கு மாத்திரமே செய்யத்தக்கன. இருப்பினும் பத்தூர் தரப்பில் இருக்கும் நிலங்களை மேலே குறிப்பிட்டுள்ளவாறு உரிமை மாற்றக்கூடாது. நிபந்தனைக்குட்படுத்தி அட்டவணையில் கண்டவகுப்பினருக்கும் ஒப்படைசெய்யலாம்.

பின்வரும் 44 ஆவது பத்தியில் அ (iii) (இ) பாகத்தின்கீழும் ஆ (iii) பாகத்தின் (ஊ) கீழும் நீலகிரி மாவட்டத்திலுள்ள இருளர், குறும்பர், கோட்டர் அந்த மாவட்டத்தில் கூடுர் நாலுக்காவிலுள்ள பனியர்கள் சோழ நாயக்கர்களுக்கும் செய்யப்படும் நில ஒப்படை கீழே கண்டுள்ள நிபந்தனைக் குட்பட்டிருக்க வேண்டும்:—

(1) கலெக்டரால் நிர்ணயிக்கப்படும் காலத்துக்குள் நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

(2) பத்து ஆண்டுகளுக்குள் நிலங்களைப் பாதீனம் செய்யக்கூடாது.

(3) ஒப்படை பெற்றவரின் இனத்திற்கு அப்பாற்பட்டவர் எவருக்கும் எந்தக் காலத்திலும் நிலங்களைப் பாதீனம் செய்யக்கூடாது.

(4) நிலம் பாதீனம் செய்யப்பட்டால் விற்பனை அல்லது சட்ட முறையில் நிறைவேற்றக் கட்டளையால் ஜப்தி செய்யப்பட்டு விற்பனை செய்யாமலிருந்தால் எந்தவகை சுமையும் அனுபவிக்கப்படாமல் கோட்ட ஆட்சியாளரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்குள்ளாகும்.

20—3—1928 தேதி, 696 எண், அ.ஆ. பார்க்க.

30—11—1928 தேதி, 4046 எண் வ.து.க.செ. பார்க்க. இதில் 4—4—1929 தேதி, 7147—27—4 ஆ.வ.அ.வா.செ. குறிப்பு.

குறிப்பு.—நீலகிரி மாவட்டத்தில், கல்லம்பாளையம் தலைமையர் திராமங்களில் இருளர்களுக்கு மாத்திரமே ஒப்படை செய்யப்பெறும்.

9—4—1934 தேதி, 49 எண், வ.து.வா.செ. அச்சு.

24—3—1964 தேதி, 613 எண், அ.ஆ.வரு.ப.எக.

5—9—1956 தேதி, 3316 எண், அ.ஆ. வரு. எக.ப.

(iv) அட்டவணையில் கண்ட மலை ஜாதியினர்களுக்கு நிலங்களை ஒப்படை செய்தல்.

விவசாய உபயோகங்களுக்காக நிலங்களை ஒப்படை செய்வதில் 15—41 எண் நில ஆணையில் என் வரிசையில் உள்ளதும் அட்டவணையில் கண்ட ஜாதியினர்களால் அனுபவிக்கப்பட்டு வரும் சதுலைகள் மலைப்பாங்கான பகுதிகளில் போதுமான நிலங்கள் உள்ளனவெனில் அட்டவணையில் கண்ட மலை ஜாதியினர்களுக்கு ஒப்படை செய்யத்தக்க பெரும் அளவு 10 ஏக்கர் புன்செய் அல்லது ஐந்து ஏக்கர் நன்செய் நிலமாகும் என்ற மாறுதலுக்குட்பட்டு மலை ஜாதியினர்களுக்கும் பொருந்தும். அட்டவணையில் கண்ட ஜாதியினர்களுக்கான வரை பலைகளும், சதுலைகளும் அட்டவணையில் கண்ட மலை ஜாதியினர்களுக்கும்

நி. ஆ. 15 : 41]

பொருந்தும். எந்த ஒப்படை ஆணைப் படிவம் அட்டவணையில் கண்ட ஜாதியினர்களுக்குப் பயனுக்கப்படுகிறதோ மேலே (iii) உட்பிரிவில் கண்ட அதே படிவத்தை அவசியமான இடங்களில் தக்க மாறுதல்களுடன் அட்டவணையில் கண்ட மலை ஜாதியினர்கள் ஒப்படை ஆணைகளிலும் பயன்படுத்த வேண்டும்.

29—10—1958 தேதி, 4027 எண், அ.ஆ. வரு. கை.ப.
17—1—1959 தேதி, 1 எண், வ.து.வா.செ. அச்சு.

41. அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கு ஒப்படை செய்யப்படுவதற்கு நிலத்தை ஒதுக்கி வைத்தல்—(1) நிலத்தை ஒதுக்கி வைக்கப்படுவதற்குக் கோட்ட ஆட்சியாய்ர்களுக்கு உள்ள அதிகாரங்கள்.—அநுபோகத்திற்கு விடத் தக்க நிலையில் அதிகப் பரப்புள்ள நிலங்கள் இருக்கும் கிராமங்களில் ஒரு குறிப் பிட்ட பரப்பு நிலம் அட்டவணையில் கண்ட ஜாதியினர் நலனை முன்னிட்டு அவர்கள் விவசாயம் செய்வதற்காக அவர்களுக்கு ஒப்படை செய்யும்பொருட்டு ஒதுக்கி வைக்கத்தக்கது எனக் கோட்ட ஆட்சியாளர் கருதுவாரெனில், அவர் அவ்வாறு செய்ய வேண்டும். மற்றெல்லாக் கிராமங்களிலும் இவ்வாறு செய்ய லாம். [1] ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலங்களின் பட்டியலில் [2] அனுமதி பெறுமல் அனுபோகம் செய்யப்படும் நிலத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனல் அத்தகைய நிலங்களை ஒருவரே மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளாக அனுபோகம் செய்து வந்த நிலம், இடைக்கால ஆண்டுகளில் வேறொருவரும் அந்த நிலத்தை அனுபோகம் செய்யப்படவில்லை என்றல் ஆக்கிரமிப்பு செய்திருந்தவரும் அந்நிலத்தை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்தா லன்றி அத்தகைய நிலத்தை இந்தப் பட்டியலில் சேர்க்கக்கூடாது. பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நிலம் ஒழுங்கினமாக அனுபோகம் செய்யப்பட்டால் அனு போகம் செய்துள்ளவரை உடனடியாக நிலத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். [1]

அ 11—10—1926 தேதி, 1736 எண், அ.ஆ. வரு.பலவ.
10—7—1933 தேதி, 1215 எண், அ.ஆ. வரு.பலவ.
29—10—1926 தேதி, 2480 எண், வ.து.வா.செ. பலவ.
17—7—1933 தேதி, 53 எண், வ.து.வா.செ. அச்சு.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ. வரு.கை.ப.

(2) நிலங்கள் தீர்வை ஏற்பட்ட தரிசுக்கு மாற்றப்படும்போது அட்ட வணையில் கண்ட ஜாதியினர்களின் தேவைகள் கவனிக்கப்பட வேண்டும்.—மிக அதிகப் பரப்புள்ள நிலங்களைப் புறம்போக்கிலிருந்து அல்லது தீர்வை ஏற்படாத தரிசிலிருந்து தீர்வை ஏற்பட்ட தரிசிற்கு மாற்றும்பொழுதும், உதாரணமாக ஒதுக்கக் காடுகள் அழிக்கப்படும்பொழுது அல்லது மேய்ச்சல் நிலப் புறம் போக்குகளை அயனுக்கு மாற்றும்பொழுது அட்டவணையில் கண்ட ஜாதியினர் களின் அவ்வப்போதைய தேவைகளையும் அவர்களின் எதிர்கால தேவைகளையும் முக்கியமாகக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

(3) நில ஒப்படை மனுக்களில் எவ்வாறு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.—[3] நிலங்களை ஒப்படை செய்ய வேண்டுமென்று செய்து கொள்ளும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிட்டுள்ள பொது விதிகளை அனுசரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனல் விண்ணப்பங்கள் உண்மை

யாக அட்டவணையில் கண்ட ஜாதியினருக்காக அவர் பெயரால் அல்லது அந்த ஜாதியினருக்காக உண்மையில் உழைக்கும் சமய ஊழியர்கள் அல்லது கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றின் பெயரால் இருந்தாலன்றி அவை கவனிக்கப் படமாட்டா. தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார்களால் சமூகங்களுக்குச் செய்யப்பெறும் ஒப்படைகளில் கலெக்டரின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும்[2].

ஈ 11—8—1920 தேதி, 1934 என், அ.ஆ.வரு. கை.ப.
20—8—1920 தேதி, 66 என், வ.து.க.செ.
உ 7—6—1929 தேதி, 1118 என், அ.ஆ.வரு.கை.ப.
7—6—1929 தேதி, 1723 என், வ.து.வா.செ. பலவ.

(4) (i) பராதீனங்களில் விதிக்கப்பட வேண்டிய கட்டுப்பாடுகள்.—இப் பகுதிகளில் சாதாரணமான நிலமாயினும் விலை மதிப்புள்ள நிலமாயினும் ஒப்படை செய்யப்பட்டதிலிருந்து 10 ஆண்டுகளுக்கு முன் எவரும பராதீனம் செய்யக்கூடாதென்றும் (அட்டவணையில் கண்ட ஜாதியினராக இருந்தாலும் அவ்வாறு இல்லாவிட்டாலும்) 10 ஆண்டுகளுக்குப் பின்பும் அந்த ஜாதியினர் களைத் தவிர மற்றவர்களுக்குப் பராதீனம் செய்யக்கூடாதென்றும் நிபந்தனை களுக்குட்பட்டு ஒப்படைகள் இருக்க வேண்டும்.[2]

[2] 1—6—1926 தேதி, 889 என், அ.ஆ.வரு.
[2] 15—6—1926 தேதி, 36 என், வ.து.வா.செ.

வருவாய் வாரிய நில ஆணைகள், தொகுதி 1.

29—1—1970 ஆம் நாளிட்ட 1 என் திருத்தச் சீட்டு.

பக்கம்—வ. வா. நி. ஆ. 15–41 (4) (1)—தற்போதுள்ள உள்பத்திக்குப் பதிலாகக் கீழே உள்ளதை அமைத்துக் கொள்க.

(4) (i) உரிமை மாற்றலுக்கு விதிக்கப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் சாதாரணமான நிலமோ அல்லது விலை மதிப்புடைய நிலமோ எவ்வாறிரும் பினும் இப்பகுதிகளில் ஒப்பனட செய்வது இந்நிலங்களை எந்த நபருக்கும் (அட்டவணையில் கண்ட இனத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் அவ்வாறில்லா விடினும்) யாதொரு விதத்திலும், அளித்த நாளிலிருந்து பத்தாண்டுகள் இறுதி யடையுமுன்பும் அதற்குப் பின்னரும், இவ்வினத்தவர்களின் மற்ற நபர்களுக் கல்லாது உரிமை மாற்றல் செய்யப்படக் கூடாது என்னும் நிபந்தனைக்கு உட் பட்டதாயிருக்கும். இருப்பினும், இத்தகைய நிபந்தனைகளோடு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை ஒப்படை நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் அல்லது அதன் பின்னரும், ஒப்படை பெற்றவர்கள் கிராமதான சர்வோதயக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்து விட முன்வரும் நேர்வுகளில் அத்தகைய நிலக் கொடைகளை ஏற்றுக்கொள்ளத் தமிழ் நாடு மாநில பூதான இயக்க வாரியம் அனுமதிக்கப்படுகிறது. பூதான வாரியம், கொடுப்பவர் ஆகிய இருவரிட மிருந்து கூட்டு வேண்டுகோள் வரப்பெற்றதன் பேரில், நிலங்களின் ஒப்படை நிபந்தனைகளைத் தளர்த்த, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார்கள்.

நி. ஆ. 15 : 41]

(ii) தனி நிபந்தனைகள் எப்போது விதிக்கப்பட வேண்டும்.—இப் பகுதிக்கு அப்பாலுள்ள நிலங்களின் ஒப்படைகளில் அட்டவணையில் கண்ட ஜாதியினர்களென்ற காரணத்தினாலேயே ஒப்படை பெற்றவர்கள் சலுகைகளை அனுபவிப்பார்கள் என்றால் மாத்திரமே இத்தனி நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும்.

22—12—1932 தேதி, 2557 எண், அ.ஆ.கை.ப.
6—1—1933 தேதி, 2 எண், வ.து.வா.செ.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ.வரு.கை.ப.

(iii) நிபந்தனை மீறப்பட்டால் நிலத்தில் திரும்பப் பிரவேசிப்பதற்கான அதிகாரம்.—ஒப்படைத் தேதியிலிருந்து பதது ஆண்டுகளுக்குள் விற்பனை, கொடை, அடைமானம் அல்லது யாதொருவிதமான குத்தகையினை பாதினம் செய்யப்பட்டால் அல்லது இப் பதது ஆண்டுக் காலத்திற்கப்புறம் அட்டவணையில் கண்ட ஜாதியினர் அல்லாதவர் எவர் ஒருவருக்காவது பாதீனம் செய்யப்பட்டால் அல்லது சட்ட நடைமுறை நிறைவேற்றக் கட்டளையால் அல்லது வேறு வகையில் முதன் முதலில் ஒப்படை பெற்றவர் அல்லது அவர் சட்டமுறை உரிமை வாரிசு அல்லது (பத்து ஆண்டுகளுக்குப் பின்னர்) அட்டவணையில் கண்ட ஜாதியினர் உடைமையில் நிலம் இவ்வாறு விடுபடுமாயின் அல்லது குறிப்பிட்ட தேதிகளில் அரசினருக்குத் தீர்வை செலுத்துவதில் தவறுதல் எற்படினும் நிலக் கொடை அரசினரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்குட்படும் யாதொரு ஈடு அல்லது நிலத்தின் விலைத் தொகையைத் திருப்பிக் கொடாமல் நிலத்தில் பிரவேசித்து அதைச் சுவாதீனம் செய்து கொள்ள அரசினருக்கு உரிமை உண்டு.

12—12—1940 தேதி, 3092 எண், அ.ஆ. வரு.கை.
20—2—1941 தேதி, 16 எண், வ.து வ.செ.அச்சு.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ. வரு. கை.ப.

(iv) அரசினருக்கு அடைமானம் வைத்தல்.—இருப்பினும் இந்தகடை நிலை மேம்பாடு சட்டம், விவசாயிகள் கடன்கள் சட்டம் ஆகிய இவற்றின் கீழ் அரசினருக்கும் அட்டவணையில் கண்ட ஜாதியினர்களே அடங்கியுள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கும் பிணையமாகச் செய்யும் நில அடைமானத்திற்குப் பொருந்தாது. மேலும் பின்னர் நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் இத்தகைய நிலங்களின் உரிமை பெறுவதில் ஈடுகொடுக்கப்படுவதற்கு இத்தடை பொருந்தாது. விலை மதிப்புள்ள நிலங்களாயின் நன்செய் அல்லது நீர் பாய்ச்சப்படக்கூடிய புன்செய் நிலப் பெரும் அளவு 2½ எக்கருக்கும் நன்செயோ நீர் பாய்ச்சப்படக் கூடிய புன்செயோ அல்லாத விலை மதிப்புள்ள நிலமாயின் பெரும் அளவு ஐந்து எக்கருக்கும், உட்பட்டு நிலக்கொடையைத் திருப்பி எடுத்துக் கொண்டு அதில் பிரவேசிக்கும் உரிமை கோட்ட ஆட்சியாளரைச் சட்ட முறையில் சாரும். விலை மதிப்பில்லாத நிலங்களைப் பொருத்த வரையில் ஐந்து எக்கர் பெரும் அளவுக்குத் தாசில்தார்களும், தனிப்பட்ட அதிகார வரம்புடைய தனி நிலத் துணைத் தாசில்தார்களும் அதே அதிகாரங்களைச் செலுத்தலாம். இந்த அதிகார வரம்புக்கு அதிகமான அளவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமானால், அரசினரின் முன் ஒப்பளிப்பைப் பெற வேண்டும். யாதொரு காரணத்துக்காக அல்லது வேறு வகையில் ஒப்படை செய்யப்படத் தகுதி

யில்லாத நிலங்கள் ஒப்படை செய்யப்படலாம் என்று ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள நிலங்களின் பட்டியலிலிருந்து விலக்கி விடப்படலாம். நிலக் கொடையைத் திரும்ப எடுத்துக் கொண்டு நிலத்தில் பிரவேசிக்க எத்தகைய அதிகாரங்கள் உள்ளனவோ அவைபோன்றே, ஒதுக்கி வைக்கப்பட்ட நிலங் களின் பட்டியல்களிலிருந்து விலே மதிப்புள்ள நிலங்களே விலக்கிவிடக் கோட்ட ஆட்சியாளரும், விலே மதிப்பில்லாத, நிலங்களே விலக்கிவிடத் தாசில்தார்களும் தனிப்பட்ட வரம்பிலையடைய தனி நிலத் துணைத் தாசில்தார்களும் அதிகார முடையவர்களாவார்கள். ஒதுக்கப்பட்ட நிலங்கள் பட்டியலிலிருந்து நிலத்தை விலக்கிவிடும அதிகார முடைய அலுவலர் குறிப்பான நிலம் ஒப்படைக்குத் தக்கதில்லே என்பதற்குச் சிந்தித்துப் பார்த்து முடிவுக்கு வர வேண்டும்.

குறிப்பு.—இந்தப் பத்தியிலுள்ள ஏற்பாடுகள் செங்கல்பட்டு மாவட்டத் திற்கும் பொருந்தும்.

25—7—1939 தேதி, 1877 என், அ.ஆ.வரு.
11—11—1940 தேதி, 118 என், வ.து.வா.செ. அச்சு.
5—9—1958 தேதி, 3316 என், அ.ஆ.வரு. பல.
16—3—1926 தேதி, 13 என், வ.து.வா.செ.
27—12—1928 தேதி, 2768 என், அ.ஆ. பலவ.
11—12—1928 தேதி, 142 என், வ.து.வா.செ.
ஆ 1—6—1926 தேதி, 1889 என், அ.ஆ. வரு.
ஆ 15—6—1926 தேதி, ℓ7 என், வ.து.வா.செ.
இ 6—4—1927 தேதி, 20 என், வ.து.வா.செ.
இ 11—4—1927 தேதி, 22 என், வ.து.வா.செ.
19—2—1919 தேதி, 20 என், வ.து.வர்.செ.
ஈ 20—8—1920 தேதி, 66 என், வ.து.வா.செ.
ஈ 11—8—1920 தேதி, 1934 என், அ.ஆ.வரு.பலவ.
28—2—1922 தேதி, 10 என், வ.து.வா.செ.
2—11—1920 தேதி, 89 என், வ.து.வா.செ.
உ 7—6—1929 தேதி, 1119 என், அ.ஆ.வரு.பலவ.
உ 17—6—1929 தேதி, 1723 என், வ.து.வா.செ. பலவ.
ஆ 12—12—1940 தேதி, 3092 என், அ.ஆ. பலவ.
ஆ 20—2—1941 தேதி, 16 என். வ.து. வா.செ. அச்சு.
5—9—1958 தேதி, 3316 என், அ.ஆ. வரு.கை.ப.

(5) (i) தீர்வை செலுத்துவதில் வழங்கப்படும் சலுகை.—அதிகமாக உழைத்தும் பணச் செலவு செய்தும் விவசாயத்திற்குக் கொண்டு வரத் தக்க நிலங்கள் அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கு ஒப்படை செய்யப்படும்போது, அவை ஒப்படை செய்யப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்தாற்போல ஐந்து ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு ஆண்டிலும் கொடுக்கப்பட்ட பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு புதிதாக விவசாயத்திற்குக் கொண்டு வந்தால், நில ஒப்படை பெற்றவர் நிலம் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டு காலத்தில் மாத்திரம் தீர்வை விதிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பெறுவார். இவ்விலக்கு குறைந்த கால அளவுகளுக்கில்லே. ஆனாலும் சலுகை பெற்றுள்ள ஒப்படை பெற்றவர் நிபந்தனைக்கிணங்க விவசாயம் செய்யத் தவறினால் அவ்வாறே தவறிய ஆண்டி லிருந்து தீர்வை அவரிடமிருந்து வசூலிக்கத் தக்கதாகும்.

நி. ஆ. 15 : 41]

(ii) சலுகை கொடுப்பதைப் பற்றிய நடைமுறை.—(அனுமதி பெறாதுமுன்னரே அனுபோகம் செய்யப்பட்டு வரும் நிலங்களைத் தவிர) ஒப்படை செய்யப்பட்ட வேண்டுமென்று அட்டவணையில் கண்ட ஜாதியினர் கோரும் நிலங்கள், அதிகமாக உழைத்தும் செலவு செய்தும் விவசாயத்திற்கும் கொண்டு வரத்தக்கன எனத் தாசில்தார் கருதுவாரெனில், அவற்றை ஏழு ஆண்டு காலத்திற்குத் தீர்வை செலுத்தும் பொறுப்பிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்ற பிரச்சினையில் கோட்ட ஆட்சியாளரின் ஆணையைப் பெறுவதற்கு அவருக்கு அறிக்கை செய்ய வேண்டும். விவசாயம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த நிலங்கள் இத்தகைய தரிசு நிலங்களுக்காகத் செய்து கொள்ளும் விண்ணப்பங்களைப் பற்றித் தாசில்தார் கோட்ட ஆட்சியாளருக்கு அறிவிக்காமலே அவற்றை முடிவு செய்து கொள்ள வேண்டும். இச் சலுகையை மறுத்ததாகப் பிறப்பிக்கப்படும் ஆணையை எதிர்த்து மேல் முறையீடு ஒன்று கோட்ட ஆட்சியாளரிடம் செய்து கொள்ளலாம்.

குறிப்பு:— மேலே குறிக்கப்பட்டுள்ள சலுகை வழங்கும் முறையானது விலை மதிப்புள்ளவை எனப் பாகுபாடு செய்யப்படாத நிலங்களுக்கு மட்டுமே பொருந்தும் விலை மதிப்புள்ளவை எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ள நிலத்திற்கு ஓரளவு காலத்திற்குத் நிலத் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதற்கு யோசனை செய்யப் பட்டால், அவ்வகையில் ஒப்படை செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளவரின் ஒப் பளிப்பைப் பெற வேண்டும்.

27—10—1936 தேதி, 141 எண்.வ.து.வா.செ.
5—9—1958 தேதி, 3316 எண். அ.ஆ.வரு.கை.ப.

(iii) உபயோகிக்க வேண்டிய ஒப்படை ஆணையின் படிவம்.—அட்டவணையில் கண்ட ஜாதியினர்களுக்குச் செய்யும் ஒப்படையின் ஆணைத் தனிப் படிவம் ஆவது இணைப்பில் "தனி ஈ படிவம்" என அச்சிடப் பெற்றிருக்கிறது.

7—9—1934 தேதி, 120 எண், வ.து.வா.செ.அச்சு.
5—9—1958 தேதி, 3316 எண். அ.ஆ. வரு.கை. ப.

(iv) அட்டவணையில் கண்ட கூட்டத்தினருக்கு நில ஒப்படை செய்தல்.—மலைப் பகுதிகளில் போதுமான நிலம் இருந்தால் புஞ்சை மூன்று ஏக்கரும் நஞ்சை 1½ ஏக்கரும் அட்டவணையில் கண்ட கூட்டத்தினருக்கு ஒப்படை செய்யப்படும் என்று நிபந்தனைக்குட்பட்டு வ. வா. நி. ஆ. 15-41-ல் கண்டபடி அட்டவணையில் உள்ள ஜாதியினருக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள், அட்டவணையில் கண்ட கூட்டத்தினருக்கும் அளிக்கப்படும். அட்டவணையிற் கண்ட ஜாதியினருக்குரிய உச்ச வரம்புகள் அட்டவணையில் கண்ட கூட்டத்தினருக்கும் செல்லுபடியாகும் வது பகுதியில் சொல்லப் பட்டுள்ள அட்டவணையிற்கண்ட ஜாதியினருக்கு நில ஒப்படை செய்யும் உத்திரவுப்படி தேவையான மாறுதல்களுடன் உபயோகிக்க வேண்டும்.

(அரசு ஆணை 4027, வருவாய். நாள் 29—10—1958. வ.வா. நிலை 1. நாள் 17—1—1959.)

43. செங்கல்பட்டு மாவட்டத்திற்குப் பொருந்தும் வகையில் மேலே உள்ள விதிகளில் செய்யப்பட்ட மாறுதல்கள்.—மேற்கூறிய விதிகள கீழ்க் கண்ட மாறுதல்களுக்குட்பட்டு செங்கல்பட்டு மாவட்டத்திற்குப் பொருந்துவன வாகும் :—

1. சாதாரணத் தீர்வை விதிக்கப் பெற்ற நிலத்திற்குச் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள் IX ஆவது இணைப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள படிவத்தில் இருக்க வேண்டும். கோரிக்கை செய்து கொண்ட நிலத்தின் எல்லைகளைப் பற்றியும் மதிப்பிடப்பட்டுள்ள பாப்பைப் பற்றியுமான விவரம் விண்ணப்பத்தில் இருக்கும்போது, அவ்விண்ணப்பப் படிவத்தை அனுசரித்துக் குறிப்பிட வேண்டிய தகவல்கள் விண்ணப்பத்தில் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தைக் கொண்டே அவ்விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யக் கூடாது.

2. ஒப்படைக் குறிப்புடன் அனுப்ப வேண்டிய அ-1 அறிக்கை IX ஆவது இணைப்பில் குறிப்பிட்ட அ-1 தனிப் படிவத்தில் இருக்க வேண்டும்.

15—11—1937 தேதி, 125 எண், வ.து.வா.செ.அச்சு.

3. அனுபோகத்திலில்லாதத் தீர்வை விதிக்கப்பட்ட நிலத்திற்காக விண்ணப்பம் செயது கொண்டவர் இருவர் அல்லது இருவருக்கு அதிகமானவர் எனில் பொதுவாகப் பின் வரும் ஒழுங்கு முறையில் முதல் சலுகை வழங்க வேண்டும்—

(1) [1] கோரப்படும் நிலத்தில் அங்குமிங்குமாக உள்ள மரங்கள் முன்னமே மரவரித் திட்டத்தின் கீழ் ஒருவர் வசம் இருக்குமானால் அல்லது அந்த நிலத்தில் ஒரு கிணறு இருப்பின், மரங்களை மரவரித் திட்டத்தில் தம் வசம் கொண்டுள்ளவராயினும் கிணற்றின் நீரை விவசாயத்திற்குப் பயனுக்கிக் கொண்டிருக்கும் குடியானவராயினும் சலுகை பெறத் தகுதியுடையவராவர்.

21—4—1928 தேதி, 766 எண், அ.ஆ.பலவ.
19—4—1928 தேதி, 30 எண், வ.து.வா.செ.
அ. 2—9—1928 தேதி, 1738 எண், அ.ஆ. வரு.கை.ப.
21—8—1928 தேதி, 87 எண், வ.து.வா.செ.

(2) மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டினுள் யாதொன்றையாவது ஆதாரமாகக் கொண்டு உரிமை கொண்டாடப்படாதபோது, கீழே குறிக்கப் பெற்றுள்ள வரிசை முறையில் சலுகை வழங்கத்தக்கது :—

(அ) கிராமத்திலுள்ள யாதொரு மிராசு உரிமையாளர்.

(ஆ) கிராமத்தில் [1] மிராசு உரிமைப் பதிவில்லாமல் நிலதைதைத் தம் வசம் வைத்துக் கொண்டுள்ளவர்.

(இ) மேலே குறிக்கப்பட்டுள்ள சலுகைகளைப் பெறத் தக்கவர்கள் இல்லை எனில், முதன் முதலில் விண்ணப்பம் செய்து கொண்டவர். ஆனால் (1) அனுதிக் கரம்பு அல்லது தொன்று தொட்டுத் தருசிற்கு வேறுபட்டதான "செய்கால் கரம்பு" அதாவது விவசாயம் செய்யப்பட்டதாயினும் பின்னர்

தி. ஆ. 15 : 42]

விவசாயம் செய்யப்படாமல் விடுபட்டதென மெய்ப்பிக்கப்பட்டுள்ள நிலத்தைத் தவிரத் தீர்வை ஏற்பட்ட ஏனைய தரிசு நிலங்களைப் பெறுவதற்கு மிராசு உரிமையாளருக்குச் சலுகை உரிமை இல்லை.

21—12—1934 தேதி, 185 எண், வ.து.வா.செ.
8—12—1934 தேதி, 2552 எண், அ.ஆ. வரு.கை.ப.
அ 2—8—1928 தேதி, 1738 எண், அ.ஆ.வரு.கை.ப.
21—8—1928 தேதி, 87 எண்,[வ.து.வா.செ.

(i) [1]மிராசு உரிமைப் பதிவில்லாமல் நிலத்தை நடம் வசட் வைத்துக் கொண்டிருந்தவர் நிலத்தின் உரிமையை விட்டுவிட்டதால் அல்லது நிலத்திற்குச் செலுத்த வேண்டிய தீர்வை செலுத்தத் தவறியதால் நிலம் அவர் அனுபோகத்திலிருந்து விலகிவிட்டதென்றால், அந்நிலத்தைப் பெறுவதற்கு அவருக்குச் சலுகை கொடுக்கத்தக்கதில்லை.

(iii) விண்ணப்பம் செய்து கொள்ளாது நிலத்தை அனுபோகம் செய்து கொண்டுவரும் [1]பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் அந்நிலம் ஒப்படை செய்யப்பட வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொள்ளாமல் இருந்தார் எனில் அல்லது அத்தகைய நிலத்தை அரசுக் குடி உரிமை முறையில் ஒப்படை பெற்றுக் கொள்ள மறுத்திருந்தார் எனில் அவர் அந்நிலத்தைப் பெறுவதற்குரிய சலுகையை இழந்து விடுவார்.

(iv) [1]தீர்வைப் பாக்கிக்காகச் செய்யப்பட்ட நில விற்பனையில் ஏலத்தில் விலை கூறுபவர் இல்லாத காரணத்தால் அரசினரால் விலைக்கு வாங்கப் பட்டு பின்னர் விவசாயம் செய்யப்படுவதற்காக வழங்கத்தக்க நிலம் அல்லது அனுபோகம் செய்யப்பட்டு வந்த பின்னர் உரிமை விட்டுவிடப்பட்டு அவ்வாறு உரிமை விட்டுவிடப்பட்ட பசலிக்குத் தீர்வை செலுத்துவதற்குட்பட்டுள்ள நிலத்திற்கு மிராசு உரிமையாளர்களுக்குச் சலுகை உரிமை இல்லை.

1—8—1912 தேதி, 210 எண், வ.து.வா.செ.
13—5—1911 தேதி, 1425 எண், அ.ஆ.
அ 2—8—1928 தேதி, 1738 எண். அ.ஆ.வரு.கை.ப.
21—8—1928 தேதி, 87 எண், வ.து.வா.செ.

குறிப்பு.—மேலே குறிப்பிட்டுள்ள (1), (2) (அ) (ஆ) உள் பத்திகளின் கீழ் வரும் சமமான தகுதியுள்ள இருவர் அல்லது இருவருக்கு அதிகமானவர்கள் விண்ணப்பம் செய்திருப்பார்களெனில் சாதாரணமாக விண்ணப்பத்தின் வரிசையில் சலுகை வழங்க வேண்டும்.

4. விண்ணப்பம் செய்து கொள்ளாத மிராசு உரிமையாளர்களின் கோரிக்கை கவனிக்கப்படமாட்டாது மிராசுக் குழுவின் பெயரில் எவ்வகையிலும் நிலங்கள் [1]ஒப்படை [1]செய்யப்படமாட்டா.

[நி. ஆ. 15 : 42-43

5. 3 (2)-ஆம் விதியில் IV ஆவது நிபந்தனையின் கீழ்த் தீர்வை பாக்கிக் காகச் செய்யப்படும் நில ஏல விற்பனையில் அரசினர் விலைக்கு வாங்கிய நிலம் அட்டவணையில் கண்ட ஜாதியினர்களுக்கு ஒதுக்கி வைத்துவிட வேண்டும்.

28—2—1922 தேதி, 10 எண், வ.து.வா.செ.
அ 2—8—1928 தேதி, 1738 எண், அ.ஆ. வரு.பலவ.
அ 21—8—1928, தேதி, 87 எண், வ.து.வா.செ.
ஆ 16—4—1929 தேதி, 758 எண், அ.ஆ.வரு.
ஆ 2—5—1929 தேதி, 1265 எண், வ.து.வா.செ. பலவ.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ.வரு.கை.ப.

43. மலைக் குடியேற்றங்கள், நகராட்சிகள், ஊராட்சிகள் இவற்றில் உள்ள நிலங்கள் கொடுக்கப்படுதல்.—இவ்வாணை உதகமண்டலம், கூனூர், வெல்லிங்டன், கோத்தகிரி, கோடைக்கானல், ஆனைமலைக் குடியேற்றம் ஆகிய மலைக் குடியேற்றங்கள், நகராட்சிகள், ஊராட்சிகள் இவற்றிற்குப் பொருந்தும். சேலம் மாவட்டத்தில் ஏர்க்காடு நகரத்திற்கும் இந்த ஆணை பொருந்தும்.

30—11—1936 தேதி, 2575 எண், அ.ஆ.வரு.ப.கை
8—12—1936 தேதி, 153 எண், வ.து.வா.செ.
7—10—1931 தேதி, 2112 எண், அ.ஆ.பல.வரு.
15—10—1931 தேதி, 90 எண், வ.து.வா.செ.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ. வரு.கை.ப.

(அ) கட்டடங்களுக்காக நிலங்கள் கொடுக்கப்படுதல்.—இப்பகுதிகளில் கட்டடங்கள் கட்டுவதற்கான நிலக் கொடையைப் பொருத்தமட்டில் 21-வது விதி ஆணையில் கண்டுள்ள நகர மனை விதிகளை அனுசரிக்க வேண்டும்.

(ஆ) விவசாயம் செய்வதற்காக நிலங்கள் கொடுக்கப்படுதல்.—விவசாயம் செய்வதற்கு இப்பகுதிகளிலுள்ள யாதொரு நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் வரப்பெற்றால், நிலத்தின் இடம் கட்டடம் கட்டுவதற்குத் தகுதியுடையதாக இருக்கிறதா என்பதை முதலில் கவனித்துப் பார்க்க வேண்டும். விண்ணப்பம் செய்து கொண்ட காலத்தில் அந்த இடம் கட்டடம் கட்டுவதற்குத் தேவையில்லை என்பதாகவும், அந்த நிலத்திற்கு அத்தகைய தேவை பிற்காலத்திலும் ஏற்படாது என்பதாகவும் மனநிறைவு கொள்ளத் தக்க வகையில் கலெக்டர் கருதுவார் எனில், அவர் அந்த நிலத்தின் துவக்க விலை மதிப்புத் தொகை, அந்நிலத்திற்கு அருகிலிருக்கும் அதே தன்மைத்தான நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையை அனுசரித்து செலுத்துவதற்கு உட்படுத்தியும் (நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தில் திருத்தி அமைக்கப்படுவதற்குட்படுத்தியும்) அந்நிலத்தில் தோட்டப் பயிர்கள் விளைவிக்கப் பெறுமானால், மலைக் குடியேற்றங்கள், நகராட்சிகள், ஊராட்சிகள் ஆகிய இவற்றிற்கு அப்பாலுள்ள நிலத்தில் தோட்டப் பயிர் விளைவிக்கப் பெற்றிருக்குமானால் அந்நிலத்திற்கு எந்த விதத்தில் தீர்வை விதிக்கத்தக்கதோ அந்த விதத்தில் தீர்வையும் அந்நிலத்தில் தோட்டப் பயிர் அல்லாத வேறு வகையில் விவசாயம் செய்யப் பெற்றிருக்குமானால், [2]அதற்குத் தரத் தீர்வையும் [2]செலுத்துவதற்குட்படுத்தியும், அந்த இடம் அல்லது அதன் பாகம் எப்போதாவது விவசாயமல்லாத காரியங்களுக்கு உபயோகிக்கப்பட்டால் நிலத் தீர்வைக்குப் பதிலாக முழுப்

நி. ஆ. 15 : 44]

பரப்பிற்கும் (அந்த அந்தக் காலத்தின் நடைமுறை விதிகளை அனுசரித்து அல்வட்டோது திருத்தி அமைக்கப்படும் மனைத் தீர்வை மாறுதலுக்குட்பட்டு) மனைத் தீர்வை விதிக்கப்படும் என்ற நிபந்தனையை விதித்து அந்த நிலந்தை ஒப்படை செய்யலாம். 21-ஆவது நிலை ஆணை 11 (2) IX ஆவது பத்தியில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் விவசாயத்திற்காகச் செய்யப்படும் இத்தகைய நிலங்களின் ஒப்படைகளுக்குப் பொருந்தும்.

29—7—1930 தேதி, எண், 2247 அ.ஆ. வரு.கை.ப.
26—9—1941 தேதி, 3364 எண், குறிப்பு வரு.
ஆ 14—7—1930 தேதி, 1344 எண், அ.ஆ. வரு.கை.ப.
17—11—1941 தேதி, 3084 எண், வ.து.வா.செ.பல.

44. (அ) மலைப் பகுதிகளிலும் தோட்டப் பகுதிகளிலும் பயிர் விளையும் பகுதிகளில் உள்ள நிலத்தைக் கொடுத்தல்.—(1) மலைப் பகுதிகள் தோட்டப் பயிர் விளையும் பகுதிகள் இவற்றில் சிலவற்றில் உள்ள நிலம் பின்வரும் விதிகளுக் குட்படுத்தி வழங்கத்தக்கது:—

சேர்வராயன் மலைகள், நீலகிரி—வைநாடு (கூடலூர் தாலூகா) உதக மண்டலம் தாலூகாவில் மசினி குடி கிராமம், குன்னூர் தாலூகாவில் அரக்கோடு, கொக்கோடு, கதினமாலா, நந்திபுரம், ஹல்லிமாயார், கல்லம்பாளையம் கிராமங் கள்.—(i) சேலம் மாவட்டத்தில் சிலவகை நிலங்கள் ஒப்படை செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள்.—சேலம் மாவட்ட மலைப் பகுதிகளில் 4-இல் 1-க்கு மேற்பட்ட செங்குத்துச் சரிவில் உள்ள யாதொரு நிலத்தையும் ஒப்படை செய்யக்கூடாது.

13—8—1937 தேதி, 88 எண், வ.து.கை.செ.அச்சு.
6—11—1941 தேதி, 2545 எண், அ.ஆ. வரு. கை.ப.
18—12—1941 தேதி, 143 எண், வ.து.வா.செ.அச்சு.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ. வரு:கை.ப.

(ii) புறம்போக்கு நிலங்களை அயன் நிலங்களாக மாற்றுதல்.—வருவாய்த் துறை வாரியத்தின் தனி ஒப்பளிப்பின்றி ஒவ்வொன்றிலும் ஐந்து ஏக்கர் வரையில் புறம்போக்கு நிலங்களை அயனுக்கு மாற்றக் கலெக்டருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

(iii) விண்ணப்பங்களை முடிவு செய்தல்.—இப்பகுதியிலுள்ள நிலங் களைக் கொடுப்பதற்குக் கீழே குறிக்கப்பட்டுள்ள மாறுதலுக்குட்பட்டு இந்த நிலை ஆணையின் விதிகள் பொருந்துவனவாம்.—

(அ) விண்ணப்பங்களை முடிவு செய்யத்தக்கவர் யார்.—நிலத்திற் காக வரப்பெறும் விண்ணப்பங்களைக் கோட்ட ஆட்சியாளர் அல்லது கலெக்டர் முடிவு செய்ய வேண்டும். புன்செயாக இருப்பின் 3 ஏக்கரும் நன்செயாக இருப்பின் 1½ ஏக்கரும் ஒப்படை செய்யப்படுவதற்குரிய பெரும் அளவு ஆகும். இந்த வரம்பு மீறப்பட்டால் வருவாய்த் துறைக் கழகத்தின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

[நி. ஆ. 15 : 44

(ஆ) விண்ணப்பங்களைப் பற்றி அறிவிப்பு செய்தல்.—விண்ணப்பங்களைப் பற்றி இந்த நிலை ஆணையில் வகுக்கப்பட்டுள்ளவாறு அறிவிப்பு செய்வது மாத்திரமல்லாமல் அவ்வறிவிப்பை அவ்விண்ணப்பங்களில் கோரப்படும் நிலத்திற்கு அடுத்தாற்போலுள்ள அல்லது அதற்கு மிக அருகிலுள்ள எஸ்டேட்களில் உரிமையாளர்களுக்கேனும் அவற்றின் மேலாளர்களுக்கேனும் பதிவு அஞ்சல் அனுப்ப வேண்டும்.

குறிப்பு:—10 ஆவது பத்தியில் எவ்வாறு இருப்பினும், அத்தகைய எஸ்டேட் உரிமையாளருக்கேனும் மேலாளருக்கேனும் சம்பந்தப்பட்ட நிலம் தேவையாக இருப்பின், அந்நிலம் வேறொருவருக்கு ஒப்படை செய்யப் பெறுமானால அவ்வொப்படை அத்தகைய எஸ்டேட்டுக்கு இடையீறு அல்லது இழப்பை உண்டாக்க கூடும் எனக் கலெக்டராயினும் கோட்ட ஆட்சியாளராயினும் கருதுவார் எனில் அவர் அத்தகைய எஸ்டேட் உரிமையாளருக்கேனும் மேலாளருக்கேனும் அந்நிலத்தைக் கொடுத்து விடலாம். இருப்பினும் ஒப்படை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட நிலம் எவ்வளவு பரப்புள்ளதாக இருந்தாலும் ஒவ்வொரு எஸ்டேட்டுக்கும் 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்படாமல் வழங்கக கோட்ட உட்சியாளருக்கும், 20 ஏக்கர் நிலத்திற்கு மேற்படாமல் வழங்கக் கலெக்டருக்கும் அதிகாரம் உண்டு.

(இ) நிலத்தின் மதிப்புத் தொகை.—சேர்வராயன் மலையில் நிலக்கிரயம் ஏக்காவுக்கு ஐந்து ரூபாய் 50 பைசாவிற்குக் குறையாமல் ஆரம்பத்தில் செலுத்துவதற்குடபடுத்தி நிலத்தை ஒப்படை செய்ய வேண்டும். நீலகிரி வயநாட்டில் நிலங்களுக்குக் குறுமம் விதிக்கப்படவில்லை. விண்ணப்பம் செய்து கொண்டவர் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலைத் தொகையைச் செலுத்துவதற்கு மறுப்பு தெரிவித்து நிலத்தை ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று கோருவார் எனில், குறுமம் வீதங்களை ஏல ஆரம்ப விலைகளாக அமைத்துக் கொண்டு, அத்தகைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம். இவ்விற்பனை 11-ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டிருக்க வேண்டும்.

16—2—1931 தேதி, 366 எண், அ,ஆ.வரு.
2—3—1931 தேதி, 22 எண், வ.து.வா.செ.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ.வரு.கை.ப.

(ஈ) தீர்வையின் விதம்.—தீர்வையின் விதமானது நிலத்தின் தர விதத்திலாவது அல்லது குறிப்பான பகுதியில் எஸ்டேட்கள் மதிப்பிடப்படும் முறையிலாவது வளர்ச்சியடைந்த எஸ்டேட் நிலத்துக்குப் பொருத்தமான தனி விதமாகும்.

(உ) சிறப்பான சலுகைகள்—(1). மலைவாழ் மக்கள்.—நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகாவில் கோட்டர்கள், இருளர்கள், குறும்பர்கள், பணியர், சோழநாயக்கர்களுக்கும், மதுரை மாவட்டம் பழனி மலைப் பகுதிகளில் பாலியர், புலையர்களுக்கும் முதல் தொகையின்றி நில ஒப்படை செய்யத்தகும். அச்சலுகைகளையே கலெக்டர்கள் தங்கள் யுக்தானுசாரத்தில் மற்ற மலை வாழ் ஏழை மக்களுக்கும் கொடுக்கத்தகும்.

4—9—1931 தேதி, 1390 எண், அ.ஆ.வரு.கை.ப.
11—9—1913 தேதி, 79 எண், வ.து.வா.செ.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ.வரு.கை.ப.

நி. ஆ. 15 : 44]

(2) தனிப்பட்ட பயிர்கள்.—சேர்வராயன் மலையில் புகையிலை, ரப்பர் அல்லது மரப் பருத்தி விவசாயம் செய்யப்படும் நிலத்தின் தீர்வை மூன்று முழு ஆண்டுகளுக்குத் தள்ளிக் கொடுக்கப்படும். கலப்புப் பயிர்களின் ஒரு பகுதியாவது பலன் தரக் கூடுமானால் இச்சலுகை கொடுக்கப்படமாட்டாது. சேர்வராயன் மலைப் பகுதியிலும், நீலகிரி வயநாட்டிலும் புதிதாக "அசேன்" நிலங்களாக இருப்பினும், அவற்றிற்கு மேற்கண்ட சலுகைகள் உண்டு.

(iv) அரசுப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் விதி விலக்கு.—விண்ணப்பம் செய்திருப்பவர் அரசுப் பணியாளராகவோ அல்லது அவருக்கு உறவினராகவோ இருப்பார் எனில், அத்தகைய எல்லா சூழ்நிலை களிலும் அரசினரின் ஆணையைப் பெறுவதற்கு அறிக்கை மேலனுப்பப்பட வேண்டும்.

(ஆ) நீலகிரி மேல் பீடபூமி (மலை குடியேற்றங்கள், நகராட்சிகள், ஒன்றியங்கள் நீங்கலாக) உதகமண்டலம் தாலுக்காவில் மசின்குடி கிராமம் கூடலூர் தாலுக்காவைச் சேர்ந்த அரக்கோடு, கொக்கோடு, கதினமாலா, நந்திபுரம், ஹல்லிமாயார், கல்லம்பாளையம் கிராமங்கள்.—

(i) அனுமதி பெறுமல் செய்யப்படும் அனுபோகம்.—நீலகிரி பீட பூமியில் அனுமதி பெறுத நிலத்தை அனுபோகம் செய்து ஆக்கிரமிப்பு செய்து வருபவரின் விண்ணப்பம் உடனடியாகத் தள்ளிவிடப்படுவதும் தவிர, கலெக்டர் அபிப்பிராயத்தில் அவர் அந்த நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதற்குச் காரணங்கள் இருந்தாலன்றி அவர் அந்நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவார்.

13—8—1937 தேதி, 88 எண், வ.து.வா.செ.
10—10—1942 தேதி, 2271, எண், அ.ஆ. வரு.கை.பல.
4—1—1924 தேதி, 64 என், (நிபர்) வ.து.வா.செ.அச்சு.

(ii) புறம்போக்கு நிலங்களை அயன் நிலங்களாக மாற்றுதல்.—வருவாய்த் துறை வாரியத்தின் தனி ஒப்பளிப்பின்றி ஒவ்வொன்றிலும் ஐந்து ஏக்கர் வரையில் புறம்போக்கு நிலங்களை அயனுக்கு மாற்றக் கலெக்டருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

(iii) விண்ணப்பங்களை முடிவு செய்தல்.—கீழே குறிக்கப் பட்டுள்ள மாறுதலுக்குட்பட்டு இந்த நில ஆணையின் விதிகள் இப்பகுதிகளி லுள்ள நிலங்களைக் கொடுப்பதற்குப் பொருந்துவனவாம் :—

(அ) விண்ணப்பங்களை முடிவு செய்யத்தக்கவர் யார்.—நிலத்திற் காக வரப்பெறும் விண்ணப்பங்களைக் கோட்ட ஆட்சியாளர் அல்லது கலெக்டர் முடிவு செய்ய வேண்டும். ஒரு நடவடிக்கையில் ஐந்து ஏக்கர்கள் வரையில் கோட்ட ஆட்சியாளரும், புன்செயாக இருப்பின் 3 ஏக்கர் நன்செயாக இருப்பின் 1½ ஏக்கர் வரையில் கலெக்டரும் ஒப்படை செய்ய, அவரவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வரம்பு மீறப்பட்டால் வருவாய்த் துறை வாரியத்தின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களைப் பற்றி அறிவிப்பு செய்தல்.—விண்ணப்பங்களைப் பற்றி நிலை ஆணையில் வகுக்கப்பட்டுள்ளவாறு

அறிவிப்பு செய்வது மாத்திரமல்லாமல் அவ்வறிவிப்பை அவ்விண்ணப்பங்களில் கோரப்படும் நிலத்திற்கு அடுத்தாற்போலுள்ள அல்லது அதற்கு மிக அருகிலுள்ள எஸ்டேட்டுகளின் உரிமையாளர்களுக்கேனும் அவற்றின் மேலாளர்களுக்கேனும் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

குறிப்பு.-- 10ஆவது பத்தியில் எவ்வாறு இருப்பினும், அத்தகைய எஸ்டேட்டு உரிமையாளருக்குகேனும் மேலாளருக்கேனும் சம்பந்தப்பட்ட நிலம் தேவையாக இருப்பின், அந்நிலம் வேறொருவருக்கு ஒப்படை செய்ய பெறுமானால் அவ்வொப்படை அத்தகைய எஸ்டேட்டுக்கு இடையூறு அல்லது இழப்பை உண்டாக்கக்கூடும் எனக் கலெக்டராயினும் கொட்ட ஆட்சியாளராயினும் கருதுவார் எனில் அவர், அத்தகைய எஸ்டேட்டுக்கு உரிமையாளருக்கேனும் மேலாளருக்கேனும் அந்நிலத்தை கொடுத்து விடலாம். இருப்பினும் ஒப்படை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட நிலம் எவ்வளவு பரப்புள்ளதாக இருந்தாலும், ஒவ்வொரு எஸ்டேட்டுக்கும் 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்படாமல் வழங்க கலெக்டருக்கும் அதிகாரம் உண்டு,

(இ) சில வகை நிலங்கள் ஒப்படை செய்யப்படுவதற்கு விதிக்கப் பட்ட கட்டுப்பாடுகள்.—மலைப் பகுதியில் 4-இல் 1-க்கு மேற்பட்ட செங்குத் துச் சரிவில் உள்ள யாதொரு நிலத்தையும் ஒப்படை செய்யக்கூடாது. இருப் பினும், 1934 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே சமப்படுத்தும் வகையில் நில வளைவை ஒட்டியே உழவு செய்யப்பட்டிருக்குமானால் கலெக்டர் தமது யுக்காலுசாரத்தில் விதி விலக்களிக்கலாம். அவர், வளமான சோலை நிலங்களைத் தீழே கண்டுள்ள (எ) உள் பிரிவில் குறிப்பிட்டுள்ள விதிகளை அனுசரித்து ஏலக்காய் பயிரிடத் தற்காலிகமாகக் கொடுக்கலாம்.

10—10—1942 தேதி, 2271 எண். அ.ஆ.வரு.கை.பல.
4—11—1942 தேதி, 64 எண். வ.து.வா.செ.அச்சு.

(ஈ) நிலத்தின் விலை மதிப்புத் தொகை.—ஒப்படை பெற்றவரிட மிருந்து தோட்டப் பயிர் அல்லது தோட்டப் பயிரல்லாத விளைபொருள் பயிர் செய்ய ஒப்படை செய்வதில் வசூலிக்கத்தக்க நிலத் தீர்வை :—

புல்தரை நிலம்.—மரத்தின் விலை மதிப்புத் தொகை உட்பட ஏக்கர் ஒன்றுக்கு 25 ரூபாய்.

புதர்க்காடு.—மரத்தின் விலை மதிப்புத் தொகை உட்பட ஏக்கர் ஒன்றுக்கு 75 ரூபாய்.

சோலை.—மரத்தின் விலை மதிப்புத் தொகை உட்பட ஏக்கர் ஒன்றுக்கு 125 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரை.

குறிப்பு.—விண்ணப்பம செய்து கொண்டவர் நிர்ணயம செய்யப்பட்டுள்ள விலை மதிப்புத் தொகை செலுத்துவதற்கு மறுப்பு தெரிவித்து, நிலத்தை ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென்று கொருவாரெனில் மேலேயுள்ள வீதங்களை குருமன் ஏல ஆரம்ப விலைகளாக அமைத்துக் கொண்டு, அத்தகைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம் இவ்விற்பனை 11 ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டிருக்க வேண்டும்

(உ) தீர்வையின் வீதம்.— செலுத்த வேண்டிய தீர்வையின் வீதம் தோட்டப் பயிர் விளையும் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 2 ரூபாயும் தோட்டப் பயிரல்லாத விளைபொருளைப் பயிரிடும் நிலத்திற்கு தரத் தீர்வையும் விதிக்கத் தகும்.

நி. ஆ. 15 : 44]

(ஊ) சிறப்பான சலுகைகள்.—(1) மலை வாழ் மக்கள்.—நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகாவில் கோட்டர்கள், இருளர்கள், குரும்பர்கள், பனியர், சோழநாயக்கர்களுக்கும், மதுரை மாவட்டம் பழனி மலைப் பகுதியில் பாலியர், புலையர்களுக்கும் தொடக்கத்தில், தொகையின்றி நில ஒப்படை செய்யத் தகும். இச் சலுகைகளையே கலெக்டர்கள் தங்கள் யுக்தாலுசாரத்தில் மற்ற மலை வாழ் ஏழை மக்களுக்கும் கொடுக்கலாம்.

(2) தனிப்பட்ட பயிர்கள்.—புதிதாக "அகேவ்" வாட்டில் "அகேசியா டிகரன்ஸ" அல்லது "கற்பூர மரம்", "சின்னமம்", "கேம் போரா" "எப்நீஸ்" பயிர் செய்யப்பட்டிருந்தால் அந்நிலங்கள் எத்தகைய உரிமை முறை நிலங்களாக இருப்பினும், அவற்றின் தீர்வை ஐந்து முழு ஆண்டுகளுக்குத் தள்ளிக் கொடுக்கப்படும்.

18—1—1939 தேதி, 115 எண், அ.ஆ.வரு.
19—3—1939 தேதி, 15 எண், வ.து.வா.செ.

(3) தோட்டப் பயிர்கள்.— [1]இவ் விதிகளை அனுசரித்து புதிதாக அல்லது முன்னமே அனுபோகம் செய்யப்பட்டு வரும் நிலங்களில் புதிதாகத் தேயிலை, காபி, சிங்கோனா, ரப்பர் அல்லது இதர சிறப்பான பயிர் விளைத்தால் ஆறுவது ஆண்டு வரையில் தீர்வை [1] தள்ளிக் கொடுக்கப்படும். பயிர் செய்பவர் ஐந்து முழு ஆண்டுகளுக்குத் ஓர்வை செலுத்தாமல் நிலத்தைத் தமது உடமையில் வைத்துக் கொள்ளலாம். இவ் விதிகளை அனுசரித்து எத்தகைய விளை பொருள்கள் சிறப்பானவை எனத் தமது விருப்பம்போல் நிர்மானிப்பதற்கு அரசினருக்கு உரிமையுண்டு.

24—9—1930 தேதி, 1823 எண், அ.ஆ. வரு.கை.ப.
30—4—1931 தேதி, 2832 எண், வ.து.வா.செ.

(எ) தனி நிபந்தனைகள்.—(1) தோட்ட விளைபொருள் பயிர் விளைவிப்பதற்கான ஒப்படை V--ஆவது இணைப்பில் அச்சிடப்பெற்றுள்ள நீலகிரி மேல் பீடபூமி நில ஒப்படை ஆணைப் படிவத்தில் இருக்கும் நிபந்தனைகளுக்குட்படும். 20 ஏக்கர்களுக்கு அதிகமான பரப்பு ஒப்படையில் வருவாய்த் துறை வாரியம், இணைப்பில் அடங்கியுள்ள நிபந்தனைகளைப் போன்றவையாகிய தகுதியானவை எனத் தான் கருதும் இதர நிபந்தனைகளையும் மேற்கொண்டு விதிக்கலாம்.

(2) தோட்டப் பயிர் அல்லாத விவசாயத்திற்குரிய நில ஒப்படை அரசுக்குடி முறை நில ஒப்படை நிபந்தனைகளைத் தவிர, தோட்டப் பயிர் விளைவித்தால் தோட்டப் பயிருக்கு விதிக்கத்தக்க தீர்வை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குள்ளாகும். 20 ஏக்கருக்கு அதிகமான பரப்பொப்படைகளில் வருவாய்த் துறைக் கழகம் தன் யுக்தானுசாரம்போல் இணைப்பில் அடங்கியுள்ள நிபந்தனைகளைப் போன்ற இதர நிபந்தனைகளையும் மேற்கொண்டு விதிக்கலாம்.

(3) இப் பகுதியில் உள்ள எல்லா நிலங்களின் ஒப்படையும் எப்பொழுதும் ஒரேமாதிரியாகக் கீழ் வரும் தனி நிபந்தனைகளுக்குட்பட்டிருக்க வேண்டும்.

(4) நிலத்தைச் சமப்படுத்துவதற்கு வேண்டிய அளவுக்கு அதிகமாக நிலத்தில் இயற்கையாக வளரும் மரஞ்செடிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தலாகாது. நில ஒப்படை செய்யும் அதிகாரி மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் போதுமான அளவில் சமப்படுத்துவதற்கு முன்னதாகவும், நிலவ்னவை ஒட்டியே உழவு செய்யப்படுவதற்கு முன்னதாகவும், விவசாயம் செய்ய அல்லது தோட்டப் பயிர் விளைக்க ஆரம்பம் செய்யலாகாது. நிலத்தில் இயற்கையாகப் பின்னர் வளரும் மரஞ்செடிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தலில் 15—28 ஆவது நில ஆணையில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டும்.

(5) இந்நிபந்தனை மீறப்படுமாறல் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகள் யாவற்றிற்கும் யாதொரு ஈடும் கொடுக்கப்படாமல் நிலத்தை அல்லது அதன் யாதொரு பாகத்தை திரும்ப எடுத்துக் கொள்வதற்கு அரசினருக்கு உரிமை உண்டு.

(6) அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு.—விண்ணப்பம் செய்திருப்பவர் அரசுப் பணியாளராகவோ அல்லது அவருக்கு உறவினராகவோ இருப்பவர் எனில் அத்தகைய எல்லா சூழ்நிலைகளிலும் அரசினரது ஆணையைப் பெறுவதற்கு அறிக்கை மேலனுப்பப்பட வேண்டும்.

(ஏ) சோலை நிலங்கள் தற்காலிகமாகக் கொடுக்கப்படுவதற்கு வகுக்கப்பட்டுள்ள விதிகள்.—(1) வளமான சோலை நிலம் ஒப்படை செய்யப்படமாட்டாது. ஆனால் எலக்காய் பயிரிடுவதற்கு விண்ணப்பம் செய்து கொண்டவர்களில் தெரிந்து ஏற்றுக் கொள்ளப் பெற்றவர்களுக்குக் கலெக்டர் தற்காலிகமாக ஒப்படை செய்யலாம். சாதாரணமாக ஒப்படை ஆரம்பத்தில் 25 ஆண்டுகளுக்கும், விருப்பம் இருக்குமானால் அக்கால இறுதியில் அதைப் பதுக்கிக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கும். பின்வரும் 2 ஆவது உட்பிரிவில் குறிப்பிட்டுள்ளவற்றை தவிர, மற்றவற்றின் ஒப்படை உரிமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(2) அனுமதி பெறாது சோலை நிலத்தில் செய்யப்படும் அனுபோகத்திற்கு தண்டத் தீர்வை விதித்து அனுபோகம் செய்திருப்பவரை அப்புறப்படுத்த வேண்டும். ஆனால் அனுபோகம் செய்யப்படும் நிலம் அரை ஏக்கருக்குக் குறைந்ததாய் முன்னமே ஒப்படை அல்லது குத்தகையில் வழங்கப்பட்ட நிலத்திற்கு அடுத்திருப்பின் அனுபோகம் செய்திருப்பவர் சோலையைப் பாதுகாத்து வருவார் என மன நிறைவு கொள்ளும் வகையில் கலெக்டர் நம்புவார் எனில், அனுபோகம் செய்கிறவருக்கே அவர் அதை வழங்கலாம். இவ்வாறு வழங்கும் போது அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொடக்க தவணைக் கட்டணம் அருகிலுள்ள நிலம் ஒப்படை அல்லது குத்தகையில் எவ்வளவு வீதத்தில் ஏலவிற்பனை செய்யப்பட்டதோ அவ்வீதத்தை அனுசரித்து நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(3) (1) ஆவது உடபிரிவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட அல்லது (2) ஆவது உடபிரிவின் கீழ் வழங்கப்பட்ட சோலை நிலக் கொடைகளிலெல்லாவற்றிலும், ஆண்டு தோறும் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் வளர்ச்சியடையாத நிலமாக இருந்து முதல் முதலாக ஏலக்காய் விளைக்க நேரிட்டால் கொடை பெற்றிருப்பவர் முதல் ஆறு

நி. ஆ. 15 : 44]

ஆண்டுகளுக்கு இதில் பாதி வீதம் செலுத்துவதற்குட்படுவர். கொடை பெற் றிருப்பவருக்கு Vஆவது இணைப்பிலுள்ள படிவத்தில் கொடை ஆணை கொடுக்கப்படும்.

1942 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி, 2271 எண், அ.ஆ. வரு. கை.ப.

1942-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ம் தேதி, 64 எண், வ.து.வா.செ. நிர்.

(இ) ஆனமலைப் பகுதிகள்—

(i) புறம்போக்கு நிலத்தை அயன் நிலமாக மாற்றுதல்.—வரு வாய்த் துறை வாரியத்தின் தனி ஒப்பளிப்பின்றி ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஐந்து ஏக்கர் வரையில் புறம்போக்கு நிலங்களை அயனுக்கு மாற்ற கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

(ii) விண்ணப்பங்களை முடிவு செய்தல்.—எத்தகைய மலை வாழ் மக்களுக்கும் எத்தகைய குறிப்பான பயிர்களுக்கும் எச்சலுகைகளும் கொடுப் பதற்கில்லை என்பதனுடன் கீழ்க்கண்ட மாறுதல்களைத் தவிர, மேலே "அ" பிரிவிலுள்ள விதிகளும் இங்கே அனுசரிக்கத்தக்கன :—

(அ) சிலவகை நிலங்கள் ஒப்படை செய்யப்படுவதற்கு விதிக்கப் பட்டுள்ள கட்டுப்பாடுகள்.—மலைப் பகுதியில் 4-இல் 1-க்கு மேற்பட்ட செங் குத்துச் சரிவில் உள்ள எந்த நிலத்தையும் ஒப்படை செய்யக்கூடாது. வளமான சோலை நிலத்தைக் கீழ்க் கண்டுள்ள (இ) உட்பிரிவு விதிகளை அனுசரித்து ஏலக் காய் பயிர் செய்வதற்குத் தற்காலிகமாக ஒப்படை செய்யலாம்.

6—11—1941 தேதி, 2545 எண், அ.ஆ.வரு.கை.ப.
18—12—1941 தேதி, 143 எண், வ.து.வா.செ.அச்சு.

(ஆ) நிலத்தின் விலை மதிப்புத் தொகை.—ஒப்படை பெற்றவரிட மிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலத்தின் விலை மதிப்புத் தொகை ஏக்கருக்கு 50 ரூபாய் வீதம் ஆகும்.

(இ) சிறப்பான சலுகைகள்.—சிங்கோனு வளர்க்கப்படும் நிலங் களுக்குச் செலுத்த வேண்டிய தீர்வை 1352 ஆம் பசலியிலிருந்து ஏக்கருக்கு 0.63 பை. ஆகும். புதிதாகச் சிங்கோனு வளர்க்கப்பட்ட நிலங்களுக்கு சிங்கோனு வளர்க்கப்பட்ட தேதியிலிருந்து முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படும். ஆனால் 1352 ஆம் பசலிக்கு முன்னதாகச் சிங்கோனு வளர்க்கப்பட்டிருந்து நிலங்களுக்கு 1352 ஆம் பசலி ஆரம்பத்தில் ஐந்து ஆண்டுகளில் பாக்கியாக உள்ள அக்காலத்திற்கு மாத்திரமே இவ்வாறு தீர்வை தள்ளிக் கொடுக்கப்படும். அனுமதி பெறாத நிலத்தில் பயிர் செய்யப் பட்டவற்றிற்கும் இச்சலுகை உண்டு.

10—5—1943 தேதி, 1704 எண், அ.ஆ. வரு.கை.ப.
29—7—1943 தேதி, 2206 எண், அ.ஆ.வரு.கை.ப.
12—8—1943 தேதி, 14 எண், வ.து.வா.செ. அச்சு.

(ஈ) தனி நிபந்தனைகள்.—தோட்ட விளைபொருள் பயிர் விளைவிப்பதற்குரிய ஒப்படை V ஆவது இணைப்பில் அச்சிடப் பெற்றுள்ள ஆனைமலைப் பகுதி நில ஒப்படை ஆணைப் படிவத்தில் உள்ள நிபந்தனைகளுக்குட்படும். இருபது ஏக்கர்களுக்கு அதிகமான பரப்பு ஒப்படையில் வருவாய்த் துறைக் கழகம் இணைப்பில் அடங்கியுள்ள நிபந்தனைகளைப் போன்ற இதர நிபந்தனைகளையும்தான் மேற்கொண்டு விதிக்கலாம்.

(உ) ஆனைமலைப் பகுதிகளில் சோலை நிலங்களைத் தற்காலிகமாக ஒப்படை செய்வதற்கான விதிகள்.—(1) வளமான சோலை நிலம் ஒப்படை செய்யப்படமாட்டாது. ஆனால் ஏலக்காய் பயிரிடுவதற்கு விண்ணப்பம் செய்து கொண்டவர்களில் தெரிந்து ஏற்றுக் கொள்ளப் பெற்றவர்களுக்குக் கலெக்டர் தற்காலிகமாக ஒப்படை செய்யலாம். சாதாரணமாக ஒப்படை ஆரம்பத்தில் 25 ஆண்டுகளுக்கும் விருப்பம் இருக்குமானால் அக்கால இறுதியில் அதைப் புதுக்கிக் கொடுக்கத் தக்கதாகவும் இருக்கும். பின் வரும் 2 ஆவது உட்பிரிவில் குறிப்பிட்டுள்ளவற்றைத் தவிர மற்றவற்றின் ஒப்படை உரிமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(2) அனுமதி பெறாது சோலை நிலத்தில் செய்யப்படும் அனுபோகத்திற்குத் தண்டத் தீர்வை விதித்து அனுபோகம் செய்திருப்பவரை அப்புறப்படுத்த வேண்டும். ஆனால் அனுபோகம் செய்யப்படும் நிலம் அரை ஏக்கருக்குக் குறைந்ததாய் முன்னமே ஒப்படை அல்லது குத்தகையில் வழங்கப்பட்ட நிலத்திற்கு அடுத்திருப்பின், அனுபோகம் செய்திருப்பவர் சோலையைப் பாதுகாத்து வருவார் என மன நிறைவு கொள்ளும் வகையில் கலெக்டர் நம்புவார் எனில், அனுபோகம் செய்கிறவருக்கே அவர் அதை வழங்கலாம். இவ்வாறு வழங்கும்போது அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொடக்கத் தவணைக் கட்டணம் அருகிலுள்ள நில ஒப்படை எவ்வீதத்தில் ஏல விற்பனை செய்யப்பட்டதோ அவ்வீதத்தை அனுசரித்து நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(3) மேலே, (1) ஆவது உடபிரிவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட அல்லது (2) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சோலை நிலக் கொடைகளிலெல்லாவற்றிலும், ஆண்டு தோறும் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் வளர்ச்சியடையாத நிலமாக இருந்து, முதல் முதலாக ஏலக்காய் விளைவிக்க நேரிட்டால் கொடை பெற்றிருப்பவர் முதல் ஆறு ஆண்டுகளுக்கு இதில் பாதி வீதம் மாத்திரமே செலுத்துவதற்குட்படுவர். கொடை பெற்றிருப்பவருக்கு V ஆவது இணைப்பிலுள்ள படிவத்தில் யகொடை ஆணை கொடுக்கப்படும்.

6—11—1941 தேதி, 2545 என், அ.ஆ.வரு.கை.ப.

13—12—1941 தேதி, 143 என், வ.து.வா.செ. அச்சு.

(ஊ) தீர்வை வீதம்.—பண்படுத்தப் பெற்ற நிலமாயின் ஏக்கர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதமும், பண்படுத்தப் பெறுத நிலமாயின் ஏக்கர் ஒன்றுக்கு 63 பைசா வீதமும் விதிக்கத்தக்க தீர்வை வீதமாகும்.

நி. ஆ. 15 : 44]

(i) அரசுப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் விதிவிலக்கு.—விண்ணப்பம் செய்திருப்பவர் அரசுப் பணியாளராகவோ அல்லது அவருக்கு உறவினராகவோ இருப்பார் எனில், அத்தகைய எல்லாச் சூழ்நிலைகளிலும் அரசினரின் ஆணையைப் பெறுவதற்கு அறிக்கை மேலனுப்பப்பட வேண்டும்.

20—1—1930 தேதி, 94 எண், அ.ஆ.வரு.கை.ப.
29—1—1930 தேதி, 7 எண், வ.து.வா.செ.
30—7—1930 தேதி, 1456 எண், அ.ஆ. வரு. பலவ.
11—8—1930 தேதி, 54 எண், வ.து.வா.செ.
24—9—1930 தேதி, 1823 எண், அ.ஆ. வரு.கைப.
அ 30—9—1930 தேதி, 2832 எண், வ.து.வா.செ.பலவ.
ஆ 14—7—1930 தேதி, 1344 எண், அ.ஆ. கை.ப.
ஆ 29—7—1930 தேதி, 2247 எண், வ.து.வா.செ.பலவ.
5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ.வரு.கைப.

(ஈ) பிரிவு I.—மதுரை மாவட்டத்தில் ஒதுக்கி வைக்கப்படாத நிலங்கள்.—மதுரை மாவட்டத்தில் ஒதுக்கி வைக்கப்படாத நிலங்கள் மாத்திற்கு வரித் தொகை வசூலிக்கப்படாமல் ஏலக்காய் விளைவிப்பதற்கு மாத்திரம் கொடுத்தல்—விண்ணப்பங்களை முடிவு செய்தல்—கீழ்க்கண்ட மாறுதல்களைக் கொண்ட இந்நில ஆணை விதிகளை அனுசரித்து இப்பகுதிகளில் நிலங்கள் கொடுக்கப்படுகின்றன :—

(அ) விண்ணப்பங்களை முடிவு செய்யத்தக்கவர் யார்.—விண்ணப்பங்களைக் கலெக்டர் முடிவு செய்ய வேண்டும்.

(ஆ) ஏல விற்பனை செய்தல் எப்பொழுது கைவிடத்தக்கது.—நிலங்களின் இருப்புரிமை பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏல விற்பனையைச் செய்யாது விட்டுவிட 10-22 (3) நில ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள தனி சூழ்நிலைகளில் ஆணை பிறப்பிக்க வருவாய்த் துறை வாரியமும் கலெக்டரும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார்கள். தனிச் சூழ்நிலைகளில் தனிப்பட்ட விற்பனைகளில் அல்லது விலையின்றிச் செய்யப்படும் ஒப்படைகளில் பொது மக்களுக்குக் கொடுக்கத்தக்க அறிவிப்பின் படிவம் V ஆவது இணைப்பில் உள்ளது.

28—10—1939 தேதி, 2808 எண், அ.ஆ.வரு.பல.
27—11—1939 தேதி, 108 எண், வ.து.வா. செ. அச்சு.

(இ) தீர்வையின் வீதம்.—செலுத்த வேண்டிய தீர்வை வீதம் ஏக்கருக்கு 5 ரூபாய் ஆகும். இதன் பாதி, ஒப்படை ஆணைத் தேதியிலிருந்து ஆறும் ஆண்டு வரை தள்ளிக் கொடுக்கப்படும். இந்த வீதம் நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தில் திருத்தி அமைப்பதற்குட்படும்.

(ஈ) தனி நிபந்தனைகள்.—ஏலக்காய் விளைவிக்கச் செய்யப்படும் நில ஒப்படை, இணைப்பில் அச்சிடப்பட்டுள்ள ஒப்படை ஆணைப் படிவத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்குட்படும்.

(உ). அரசுப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் விதிவிலக்கு.— விண்ணப்பம் செய்திருப்பவர் அரசுப் பணியாளராகவோ அல்லது அவருக்கு உறவினராகவோ இருப்பார் எனில், அத்தகைய எல்லாச் சூழ்நிலைகளிலும் அரசினரின் ஆணையைப் பெறுவதற்கு அறிக்கை மேலனுப்பப்பட வேண்டும்

ஈ பிரிவு II.—பழனி மலைப் பகுதி (கொடைக்கானல் நகருக்கப்பால்) பொதுவாகத் தோட்ட விளை பொருளையும் தோட்ட விளை பொருள்கள் அல்லாதவற்றையும் விளைவிக்க நிலத்தைக் கொடுத்தல்—

(i) அனுமதி பெறுமல் செய்யப்படும் அனுபோகங்கள்.—கொடைக்கானல் தாலுகாவில் அனுமதி பெறுமல் நிலத்தை அனுபோகம் செய்கிறவர் நிலத்திற்காகச் செய்யும் விண்ணப்பம் உடனடியாகத் தள்ளுபடி செய்யப்படும். மேலும், நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படாமலிருப்பதற்குக் கலெக்டரின் அபிப்பிராயத்தில் தனிக் காரணங்கள் இருந்தாலன்றி அவர் அப்புறப்படுத்தப் படுவர்.

(ii) புறம்போக்கு நிலங்களை அயன் நிலங்களாக மாற்றுதல்.— வருவாய்த் துறை வாரியத்தின் தனி ஒப்பளிப்பின்றி ஒவ்வொன்றிலும் 5 ஏக்கர் வரையில் புறம்போககு நிலங்களை மாற்றக் கலெக்டருக்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது.

(iii) விண்ணப்பங்களை முடிவு செய்தல்.—இப்பகுதிகளிலுள்ள நிலங்களைக் கொடுப்பதற்குக் கீழே குறிக்கப்பட்டுள்ள மாறுதலுக்குட்பட்டு இந்த நிலை ஆணையின் விதிகள் பொருந்தும் :—

(அ). விண்ணப்பங்களை முடிவு செய்யத்தக்கவர் யார்.—நிலத்திற்காக வரப்பெறும் விண்ணப்பங்களைக் கோட்ட ஆட்சியாளர் அல்லது கலெக்டர் முடிவு செய்ய வேண்டும். ஒரு நடவடிக்கையில் 5 ஏக்கர்கள் வரையில் கோட்ட ஆட்சியாளரும், 20 ஏக்கர்கள் வரையில் கலெக்டரும் ஒப்படை செய்ய, அவரவர்களுக்கு அதிகாரம் வழங்கப் பெற்றிருக்கிறது. இந்த வரம்பு மீறப் பட்டால் வருவாய்த் துறை வாரியத்தின் ஒப்பளிப்பைப் பெறவேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களைப் பற்றி அறிவிப்பு செய்தல்.—விண்ணப் பங்களைப் பற்றி இந்த நிலை ஆணையில் வகுக்கப்பட்டுள்ளவாறு அறிவிப்பு செய்வது மாத்திரமல்லாமல் அவ்வறிப்பை அவ்விண்ணப்பங்களில் கோரப்படும் நிலத்திற்கு அடுத்தாற்போலுள்ள அல்லது அதற்கு மிக அருகிலுள்ள எஸ்டேட்டுகளின் உரிமையாளர்களுக்கேனும் அவற்றின் மேலாளர்களுக்கேனும் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

குறிப்பு—10 ஆவது பத்தியில் எவ்வாறு இருப்பினும் அத்தகைய எஸ்டேட்டு உரிமையாளருக்கேனும் மேலாளருக்கேனும் சம்பந்தப்பட்ட நிலம் தேவையாக இருப்பின், அந்நிலம் வேறொருவருக்கு ஒப்படை செய்யப் பெறுமாறால் அவ்வொப் படை அத்தகைய எஸ்டேட்டுக்கு இடையூறு அல்லது இழப்பை உண்டாக்கக்கூடும் எனக் கலெக்டராயினும் கோட்ட ஆட்சியாளராயினும் கருதுவார் எனில் அவர் அத்தகைய எஸ்டேட்டு உரிமையாளருக்கேனும் மேலாளருக்கேனும் அந்நிலத்தைக் கொடுத்து விடலாம். இருப்பினும், ஒப்படை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட நிலம் எவ்வளவு பரப்புள்ளதாக இருந்தாலும், ஒவ்வொரு எஸ்டேட்டுக்கும் 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்படாமல் வழங்கக் கோட்ட ஆட்சியாளருக்கும் 20 ஏக்கர் நிலத்திற்கு மேற்படாமல் வழங்கக் கலெக்டருக்கும் அதிகாரம் உண்டு.

நி. ஆ. 15 : 43-44]

(இ) சிலவகை நிலங்கள் ஒப்படை செய்யப்படுவதற்கு விதிக்கப் பட்ட கட்டுப் பாடுகள்.—மலைப் பகுதிகளில் 4 இல் 1-க்கு மேற்பட்ட செங்குத்துச் சரிவில் உள்ள யாதொரு நிலத்தையும் ஒப்படை செய்யக்கூடாது இருப்பினும், 1934 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே, சமப்படுத்தும் வகையில் நிலவரையை ஒட்டியே உழவு செய்யப்பட்டிருக்குமானால், கலெக்டர் தமது யுக்தானுதாரத்தில் விதி விலக்களிக்கலாம். அவர், வளமான சோலை நிலங்களைக் கீழே கண்டுள்ள (ஏ) உள் பிரிவில் குறிப்பிட்டுள்ள விதிகளை அனுசரித்து, ஏலக்காய் பயிரிடத் தற்காலிகமாகக் கொடுக்கலாம்.

(ஈ) நிலத்தின் விலை மதிப்புத் தொகை.—பழனி மலைப் பகுதியில் தோட்டப் பயிர் அல்லது மற்றத் தோட்டப் பயிரல்லாதவை விளைவிக்க நிலம் ஒப்படை செய்வதில் ஒப்படை பெற்றவரிடமிருந்து வசூலிக்க வேண்டிய விலை மதிப்புத் தொகை பின்வருமாறு உள்ளது :—

புன்செய் நிலம்.—(i) புல் தரை நிலம்—மரத்தின் விலை மதிப்புத் தொகை உட்பட ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய்.

(ii) புதர்க்காடு—மரத்தின் விலை மதிப்புத் தொகை ஏக்கர் ஒன்றுக்கு 40 ரூபாய்.

(iii) சோலை—மரத்தின் விலை மதிப்புத் தொகை உட்பட ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரையில்.

நன்செய்.—காட்டு வரி விதிதை அனுசரித்துள்ள மரத்தின் விலை மதிப்புத் தொகை உட்பட ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய குறுமத்திற்குட்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலத்தின் விலை மதிப்புத் தொகை—

15—6—1954 தேதி, 1297 எண், அ.ஆ. ச்அசு.

30—5—1939 தேதி, 42 எண், வ.து.வா.செ. அச்சு.

(உ) தீர்வையின் விதம்.—தோட்டப் பயிர் விளையும் பண்படுத்தப் பெற்ற நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 3 ரூபாய் விதத்திலும் பண்படுத்தப் பெறுத நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 62 பைசா விதத்திலும் தீர்வை விதிக்க வேண்டும். தோட்ட விளைபொருள் பயிர் அல்லாதவை விளைவிக்கப்பட்ட நிலத்தை பொறுத்த மட்டில், அந்நிலத்தின் தரத் தீர்வை விதத்தில் அல்லது அப்பகுதியின் எஸ்டேட்டுகளில் நடைமுறையில் பொருத்தமாக உள்ள தனி விதத்தில் தீர்வை விதிக்கப்படவேண்டும்.

(ஊ) சிறப்பான சலுகைகள்.—மலைவாழ் மக்கள்—பழனி மலைப் பகுதிகளில் பாலியர், புலையர்களுக்கும் தொடக்கத் தொகையன்றி நில ஒப்படை செய்யத் தகும். இச்சலுகைகளைக் கலெக்டர் தங்கள் யுக்தானுசாரத்தில் மற்ற மலைவாழ் ஏழை மக்களுக்கும் கொடுக்கலாம்.

(எ) தனி நிபந்தனைகள்.—(i) தோட்ட விளைபொருள் பயிர் விளைவிப் பதற்குரிய ஒப்படை V ஆவது இணைப்பில் அச்சிடப் பெற்றுள்ள பழனிமலைப் பகுதி நில ஒப்படை ஆணைப் படிவத்தில் உள்ள நிபந்தனைகளுக்குட்படும். 20 ஏகர்களுக்கு அதிகமான பரப்பு ஒப்படையில் வருவாய்த் துறை வாரியம் தக்கவை எனக் கருதக் கூடியவையாகிய இணைப்பிலடங்கிய நிபந்தனைகளைப் போன்ற இதர நிபந்தனைகளைக் கூடுதலாக விதிக்கலாம்.

(ii) தோட்டப் பயிர் அல்லாத வேளாண்மைக்குரிய நில ஒப்படை, அரசுக்குடி முறை நில ஒப்படை நிபந்தனைகளைத் தவிர தோட்டப்பயிர் விளைவித்தால் தோட்டப் பயிருக்கு விதிக்கத்தக்க தீர்வை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குள்ளாகும். 20 ஏக்கருக்கு அதிகமான பரப்பொப் படைகளில் வருவாய்த் துறை வாரியம் தக்கவை எனக் கருதக்கூடியவையாகிய இணைப்பிலடங்கிய நிபந்தனைகளைப் போன்ற இதர நிபந்தனைகளைக் கூடுதலாக விதிக்கலாம்.

(iii) இப்பகுதிகளில் உள்ள எல்லா நிலங்களின் ஒப்படை களெல்லாம் எப்பொழுதுமே ஒரே மாதிரியாகக் கீழ் வரும் தனி நிபந்தனைகளுக் குட்பட்டிருக்க வேண்டும்.—

(1) நிலத்தைச் சமப்படுத்துவதற்கு வேண்டிய அளவுக்கு அதிகமாக நிலத்தில் இயற்கையாக வளரும் மரஞ்செடிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தலாகாது. நல ஒப்படை செய்யும் அதிகாரி மனநிறைவு கொள்ளத் தக்க வகையில் போதுமான அளவில் சமப்படுத்துவதற்கு முன்னதாகவும், நில வளைவை ஒட்டியே உழவு செய்யப்படுவதற்கு முன்ன தாகவும், விவசாயம் செய்ய அல்லது தோட்டப் பயிர் விளைவிக்க ஆரம்பம் செய்யலாகாது. நிலத்தில் இயற்கையாகப் பின்னர் வளரும் மரஞ்செடிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தலில் 15-28 ஆவது நிலை ஆணையில் விதிக்கப் பட்டுள்ள கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டும்.

(2) இந்நிபந்தனை மீறப்படுமாறுல் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகள் யாவற்றிற்கும் யாதொரு ஈடும் கொடுக்காமல் நிலத்தை அல்லது அதன் யாதொரு பாகத்தைத் திரும்ப எடுத்துக்கொள்வதற்கு அரசினருக்கு உரிமை உண்டு.

(IV) அரசுப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் விதி விலக்கு.— விண்ணப்பம் செய்திருப்பவர் அரசுப் பணியாளராகவோ அல்லது அவருக்கு உறவினராகவோ இருப்பார் எனில் அத்தகைய எல்லாச் சூழ்நிலைகளிலும் அரசினரின் ஆணையைப் பெறுவதற்கு அறிக்கை மேலனுப்பப்பட வேண்டும்.

(ஏ). சோலை நிலங்களைத் தற்காலிகமாகக் கொடுப்பதற்குரிய விதிகள்.—

(1) வளமான சோலை நிலம் ஒப்படை செய்யப்படமாட்டாது. ஆனால் ஏலக்காய் பயிரிடுவதற்கு விண்ணப்பம் செய்து கொண்டவர்களில் தெரிந்து ஏற்றுக்கொள்ளப் பெற்றவர்களுக்குக் கலெக்டர் தற்காலிகமாக ஒப்படை செய்யலாம். சாதாரணமாக ஒப்படை ஆரம்பத்தில் 25 ஆண்டு களுக்கும், விருப்பம் இருக்குமானால் அக்கால இறுதியில் அதைப் புதுப்பித்துக் கொடுக்கத் தக்கதாகவும் இருக்கும். பின் வரும் (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்டுள்ளவற்றைத் தவிர, மற்றவற்றின் ஒப்படை உரிமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(2) அனுமதி பெறுமல் சோலை நிலத்தில் செய்யப்படும் அனு போகத்திற்கு தண்டத் தீர்வை விதித்து அனுபோகம் செய்திருப்பவரை அப்புறப்படுத்த வேண்டும். ஆனால் அனுபோகம் செய்யப்படும் நிலம் அரை

நி. ஆ. 15 : 44, 15 அ : 1]

ஏக்கருக்குத் குறைந்ததாய் முன்னமே ஒப்படை அல்லது குத்தகையில் வழங்கப்பட்ட நிலத்திற்கு அடுத்திருப்பின் அனுபோகம் செய்திருப்பவர் சோலையைப் பாதுகாத்து வருவார் என மனநிறைவு கொள்ளும் வகையில் கலெக்டர் நம்புவாரெனில், அனுபோகம் செய்கிறவருக்கே அவர் ஆணை வழங்கலாம். இவ்வாறு வழங்கும்போது அதற்காகச் செலுத்தப்படவேண்டிய தொடக்கத் தவணைக் கட்டணம் அருகிலுள்ள நிலம் நில ஒப்படை எவ்விதத்தில் ஏலவிற்பனை செய்யப்பட்டதோ அவ்விதத்தை அனுசரித்து நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

(3) மேலே (1) ஆவது உட்பிரிவின்கீழ் விற்பனை செய்யப்பட்ட அல்லது (2) ஆவது உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சோலை நிலக் கொடைகளிலெல்லாவற்றிலும், ஆண்டுதோறும் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் வளர்ச்சியடையாத நிலமாக இருந்து முதல் முதலாக ஏலக்காய் விளைவிக்க நேரிட்டால் கொடை பெற்றிருப்பவர் முதல் ஆறு ஆண்டுகளுக்கு இதில் பாதி வீதம் மாத்திரமே செலுத்துவதற்குட்படுவர். கொடை பெற்றிருப்பவருக்கு V ஆவது இணைப்பிலுள்ள படிவத்தில் கொடை ஆணை கொடுக்கப்படும்.

6—1—1941 தேதி, 21545 எண், அ.ஆ.வரு.கைப.

18—12—1941 தேதி, 143 எண், வ.து.வா.செ.

5—9—1958 தேதி, 3316 எண், அ.ஆ.வரு.கைப.

12—12—1958 தேதி, 1557 எண், வ.து.வா.செ.

15. அ. தற்காலிக விவசாய அனுபோகத்திற்கு அரசாங்க நிலங்களைக் கொடுத்தல்.—

(1) இந்த நிலை ஆணையின் நோக்கம்.—(அ) இந்த நிலை ஆணையின்கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் ஒப்படைக்காக கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம் செய்துகொள்ளும் விண்ணப்பம், அந்தக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம், 1956-ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956 ஆம் ஆண்டு 1 ஆவது மத்திய அரசுச் சட்டம்) 3 (1) (1) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு வந்தாலன்றி, அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860 ஆம் ஆண்டு XXI ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880 ஆம் ஆண்டு சமயச் சங்கங்களின் சட்டம் (1860 ஆம் ஆண்டு I மத்திய அரசுச் சட்டம்), 1952 ஆம் ஆண்டு சென்னை கூட்டுறவு சங்கங்களின் சட்டம் (1932 ஆம் ஆண்டு சென்னை VI ஆவது சட்டம்), 1942 ஆம் ஆண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942 ஆம் ஆண்டு V-ஆவது மத்திய சட்டம்), 1938-ஆம் ஆண்டு கூட்டுறுதிச் சட்டம் (1938-ம் ஆண்டு IV-ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926-ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர் யூனியன்கள் சட்டம் (1926-ஆம் ஆண்டு XVI-ஆவது மத்தியச் சட்டம்), அல்லது இந்திய ஒன்றிய பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனின் உள்ள மாநிலப் சட்டப் போவையின் சட்டம் ஆகிய இவற்றின்கீழ்ப் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றி கவனிக்கப்பட மாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன்

[தி. ஆ. 15அ : 1-3

கத்தோலிக் கிறித்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள் ஏனைய உரோமன் கத்தோலிக்க சமய குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற்றிற்குப் பொருந்தாது.

30—8—1956 தேதி, 3276 என், அ.ஆ.வரு.
17—9—1956 தேதி, 1294 என், வ.து.வா.செ. கை.ப.

கீழே குறிக்கப்பட்டுள்ள நிலங்கள் உட்பட அரசினர் வசமுள்ள எல்லா நிலங்களையும் விவசாய உபயோகங்களின் தற்காலிக அனுபோகத்திற்காகக் குறிப்பான காலங்களுக்கு அரசினர் கொடுப்பதை நிலை ஆணை விலக்குக் கூறுகிறது.—

(அ) உரிமையற்று அரசினருக்குச் சேர்ந்த நிலங்கள்.

((ஆ) அரிசன விலக்கு வாங்கியுள்ள நிலங்கள்.

(இ) ஆட்சேபணையில்லாத நில ஆக்கிரமிப்புகள்.

(ஈ) படுகை நிலங்கள்.

(உ) பொதுக் காரியங்களுக்காக நில உரிமை பெறப்பட்டிருந்து அப் பொதுக்காரியங்களுக்கு இனித் தேவையில்லாத நிலங்கள்.

(ஊ) இருப்புப் பாதை நிலங்கள்.

(எ) இருப்புப் பாதை நிலத்தின் அருகிலுள்ள நிலங்கள்.

(ஏ) துறைமுகங்களின் எல்லைக்குள் உள்ள நிலங்கள்.

குறிப்பு.—ஒதுக்கக் காட்டு நேர் எல்லைவரையில் தற்காலிகமான ஒப்படை செய்யக்கூடாது. இருப்பினும், ஒதுக்குக் காட்டின் எல்லைக்கும ஒப்படை செய்யப்படவேண்டிய நிலத்துக்கும் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று சங்கலிகள் அகலமுள்ள பிறந்த இடைவெளி நிலத்தை ஒப்படை செய்யப்படாமல் நிறுத்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

21—10—1947 தேதி, 2446 என், அ.ஆ.வரு.கை.ப.
27—1—1948 தேதி, 2 என், வ.து.வா.செ. அச்சு

(2) அனுபோகத்தின் கால அளவு.—ஒவ்வொரு நடவடிக்கையிலும் எத்தகைய அனுபோகம் செய்து நிலத்தை உபயோகிக்க யோசனை இருக்கிறதோ, அத்தகைய தன்மையையும் அந்நிலம் வேறெந்தக் காரியங்களுக்காக அரசினருக்குத் தேவையாக இருக்குமானால், அவ்வாறு எப்போது தேவையாக இருக்குமென்பதையும் குறிப்பாகக்கொண்டு நிலம் தற்காலிகமாக எவ்வளவு காலத்திற்கு அனுபோகம் செய்துகொள்ளப்படுவதற்கு ஒப்பளிக்கலாம் என்பதைக் கவனமாக நிர்ணயம் செய்யவேண்டும்.

(3) கொடையின் நிபந்தனைகள்.—நிலத்தை வழங்குவதற்குப் பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும் தக்க மாறுதல்களுடன் அ—இணைப்புப் படிவத்திலிருக்கவேண்டும். பதினைந்தாவது நிலை ஆணையின்கீழ் செய்யப்படும்

நி. ஆ. 15அ : 3-5]

ஒப்படைகளுக்கு ஏற்றதாக இருப்பதுபோலவே, 1895 ஆம் ஆண்டு (1895 ஆம் ஆண்டு XV-ஆவது) அரசாங்க நிலக் கொடைச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஆதாரமாகக்கொண்டு சுலபமான ஆணைப் படிவம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய கொடைகளுக்குக் கீழே குறிக்கப் பெற்றுள்ளவை விளக்கமான உதாரணங்களாகும் :—

(i) புல் அல்லது இதர தீவனம் பயிர் விளைவிப்பது.
(ii) பூந்தோட்டம் அமைப்பது.
(iii) சவுக்கு வளர்ப்பது.
(iv) தோட்ட விளைபொருள் பயிர் செய்வது.
(v) நெல், பருப்பு வகைகள், மற்ற உணவுத் தானியம் அல்லது புகையிலை, மூத்திரி, நிலக்கடலை போன்ற வாணிபப் பயிர்கள் விளைவிப்பது.

30—8—1956 தேதி, 3276 எண், அ.ஆ.வரு.கை.ப.
17—9—1956 தேதி, 1294 எண், வ.து.வா.செ. பலவ.

(4) பதிவுக் கட்டணமும், முத்திரைக் கட்டணமும் செலுத்துதலிருந்து அளிக்கப்பட்ட விதி விலக்கு.—இக்கொடைகளைப் பதிவு செய்ய வேண்டிய தில்லை. இந்தப் பதிவுச் சட்டத்தின் 90 (i) (d) பிரிவுகளைக் காண்க. இக்கொடைகள் அடங்கியுள்ள ஆணைகள் முத்திரைக் கட்டணம் செலுத்தப் படுவதற்குட்பட்டவையல்ல.

17—12—1938 தேதி, 13 எண் 4]வது அறிக்கையைக் காண்க
30—8—1956 தேதி, 3276 எண், அ.ஆ.வரு.கை.ப.
17—9—1956 தேதி, 1294 எண், வ.து.வா.செ.பலவ.

(5) குத்தகைத் தொகை வசூலித்தல்.—சுகாதாரம், தொழில், வாணிபம், கால்நடை, விவசாயம் ஆகிய இத்துறைகள் தம் வசம் வைத்துவரும் அரசினருக்குச் சொந்தமான நிலங்களைப் பொறுத்தமட்டில் அத்துறைகளின் வேண்டுகோளை அனுசரித்து வருவாய் துறையினர் X அ-இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் இத்தகைய நிலக் கொடைகளை வழங்கி அவற்றிற்கான தீர்வையை வசூல் செய்து அத்தொகையை அந்த அந்தத் துறையின் கணக்கில் வரவு வைத்திடுவர். அந்த அந்தத் துறை அலுவலர்கள் தங்கள் கோரிக்கைகளை அந்த அந்த மாவட்டக் கலெக்டர்களிடம் எடுத்துரைக்கவேண்டும்.

அவசியமாக இருக்கும்போது வருவாய்த்துறைக் கழகத்தினிடம் கலந்தாலோசனை செய்து மற்றத் துறையினர் இத்தகைய நிலக் கொடைகளைத் தாங்களே வழங்கிக் குத்தகைத் தொகைகளைத் தாங்களே வசூலித்துக்கொள்வர். நெடுஞ்சாலைத் துறையினர் வசமிருக்கும் சாலை விளிம்புகளில் உள்ளவையான அனுமதிக்கத்தக்க ஆக்கிரமிப்புகளில் வருவாய் துறையினர் நெடுஞ்சாலைத் துறையினருடன் கலந்து ஆலோசனை செய்து குத்தகைக்குக் கொடுப்பர்.

25—5—1942 தேதி, 1192, அ.அ. வரு.பல. 13—7—1942 தேதி,

1899—42-3 எண் குறிப்ப வரு. 24— 8— 1942 தேதி, 43 நிப. வ.து.வா.செ.
அச்சு

[நி. ஆ. 15அ : 6-8

(6) அறிவிப்புக் கால அளவு.—இந்த நிலக் கொடைகளை வழங்கும் அதிகாரி அல்லது கொடை பெற்றிருப்பவர் X அ-இன் இணைப்பின் 23-ஆவது நிபந்தனைப்படி அனுசரித்துக் கொடுக்க வேண்டிய அறிவிப்பின் கால அளவு எவ்வளவு இருக்கவேண்டுமென்று பொருத்தமாக உள்ள சூழ்நிலைகளை அனுசரித்து நிர்ணயம் செய்துகொண்டு அவற்றை ஒப்படை ஆணையில் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்தக் கால அளவு கொடையின் காலத்திற்கு மேற்படாமல் சாதாரணமாக ஓராண்டு கால அளவுக்குட்பட்ட ஒப்படைகளுக்கு ஒரு மாதமும், இரண்டு ஆண்டுகள் உள்ளவற்றிற்கு இரண்டு மாதங்களும், இதற்கு மேற்பட்ட கால ஒப்படைகளுக்கு மூன்று மாதங்களுமாகவும் இருக்கத் தக்கது.

17—9—1956 தேதி, 1294 எண், வ து.க.பலவ.

(7) கொடைகளைப் புதுப்பிப்பது.—கொடையை முதல் முதலாக ஒப்பளிக்க அதிகாரம் பெற்றிருந்த அதிகாரியே இந்த நிலை ஆணையின்கீழ்க் கொடைகளைப் புதுப்பிக்கத்தக்கவர் ஆவார்.

(30—8—1956 தேதி, 3276 எண், அ.ஆ. வரு.கைப.)
(17—9—1956 தேதி, 1294 எண், வ.து.வா.செ.பலவ.)

(8) நிலத் தீர்வையும், தண்ணீர் தீர்வையும்.—தீர்வை விதிக்கப்பட்ட நிலத்திற்கு முன்னமே விதிக்கப்பட்ட தீர்வையே நிலத்தின் அனுபோகத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தத்தக்க தீர்வையாகும். தீர்வை விதிக்கப்பட்ட நிலமில்லாத நிலத்தைப் பொறுத்தவரையில், அதற்கு அதன் அருகில், அந்நிலத்தைப் போன்ற நிலத்திற்கு எத்தகைய தீர்வை உள்ளதோ, அத்தகைய தீர்வையை நிர்ணயம் செய்யவேண்டும். அந்தத் தீர்வை அவ்வப்போது நடைமுறை விதிகளை அனுசரித்துத் திருத்தி அமைப்பதற்குரிய மாறுதலுக்குள்ளாகும். சென்னை நீர்ப்பாசனச் சட்டத்தையும் (1865 ஆம் ஆண்டு VIII -ஆவது சட்டத்தையும்) அதன்கீழ் அமைக்கப்பெற்றுள்ள விதிகளையும் அனுசரித்துத் தண்ணீர்த் தீர்வை கூடுதலாக விதிக்கப்படும்.

எதடுஞ்சாலைத் துறையினர் பொறுப்பிலுள்ள சாலை விளிம்புகளில் குத்தகைக்குக் கொடுக்கத்தக்க நிலங்களைப் பொறுத்தவரையில், முழுப் போட்டிக் குத்தகைத் தொகையை வருவாய்த் துறை வாரிய 24-ஆவது நிலை ஆணையின்கீழ் வசூலிப்பது போலவே, வசூல் செய்யவேண்டும்.

(27—8—1941 தேதி, 1953 எண், அ.ஆ.வரு.)
(6—12—1941 தேதி, 137 எண், வ.து.வா.செ.அச்சு)
(17—3—1956 தேதி, 1267 எண், அ.ஆ.வரு.அச்சு)
(7—4—1956 தேதி, 457 எண், வ.து.வா.செ.பலவ.)
(30—8—1956 தேதி, 3276 எண், அ.ஆ. வரு.கை.ப.)
(17—9—1056 தேதி, 1294 எண், வ.து.வா.செ. பலவ.)

குறிப்பு.—குறிப்பான இன நிலங்களைப் பற்றி மற்ற நிலை ஆணைகளில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் அந்த அந்த ஆணைகளில் விதிக்கப்பட்டுள்ள வரம்பிற்குட்பட்டு இந்த நிலை ஆணையின்கீழ்க் கொடைகளை வழங்க அதிகாரம் செலுத்துவார்கள்.

25—6—1942 தேதி, 1389 எண், அ.ஆ.வரு.கை.ப.
4—7—1942 தேதி, 37 எண், வ.து.வா.செ.அச்சு.

நி. ஆ. 16 : 1]

16. ஏரி உள்வாய் நிலங்களைக் கொடுத்தல்.—

குறிப்பு.—(1) அரசினரின் முன் அனுமதியுடன் கலெக்டர் அல்லது வருவாய்த் துறை வாரியத்தாலன்றி அரசினருக்குரிய எந்த நிலத்தையும் இந்த நிலை ஆணையின் கீழ், இந்தியக் குடியில்லாத எவருக்கும் விற்பனை செய்யக்கூடாது. இந்த நிலை ஆணையின் கீழ்க் செய்யப்படும் ஒவ்வொரு விற்பனைக்கும் சம்பந்தப்பட்ட நிலம் அரசினர் ஒப்பளிப்பில்லாமல் இந்தியக் குடியில்லாத வேறொருவருக்கு பராதீனப் படுத்தப்படுமாயின், அவ்விற்பனை சட்ட முறையில் செல்லாததாகும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்த நிலை ஆணையின்கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் விற்பனைக் காக கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம் செய்து கொள்ளும் விண்ணப்பம் அந்தக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம், 1956ஆம் ஆண்டு கம்பெனி களின் சட்டத்தின் (1956 ஆம் ஆண்டு Iஆவது மத்திய அரசுச் சட்டம் (3) (1) (1) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு வந்தாலன்றி அல்லது 1960 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860 ஆம் ஆண்டு XXI-வது மத்திய அரசுச் சட்டம்), 1880 ஆம் ஆண்டு சமய சங்கங்களின் சட்டம் (1860 ஆம் ஆண்டு I மத்திய அரசுச் சட்டம். 1932 ஆம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932 ஆம் ஆண்டு சென்னை VI ஆவது சட்டம்), 1942 ஆம் ஆண்டு பல நோக்கு சட்டம் கூட்டுறவுச் சங்கங்களின் (1942 ஆம் ஆண்டு VII ஆவது மத்திய சட்டம்), 1938ஆம் ஆண்டு ஈட்டுறுதிச் சட்டம் (1938ஆம் ஆண்டு VI ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926ஆம் ஆண்டு இந்திய தொழிலாளர் யூனியன்கள் சட்டம் (1926ஆம் ஆண்டு XVII ஆவது மத்தியச் சட்டம்), அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநில சட்டப் பேரவையின் சட்டம், ஆகிய இவற்றின்கீழ்ப் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றிக் கவனிக்கப் படமாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன் கத்தோலிக் கிறித்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள் ஏனைய உரோமன் கத்தோலிக்க சமய குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற் றிற்குப் பொருந்தாது.

(2) நில அளவு செய்தல் எல்லை வரையறுத்தல் ஆகியவற்றின் செலவை வசூலிப்பதைப் பொறுத்த மட்டில், சங்கிலி அளவை நடைமுறை நூலில் உள்ள பொருத்தமான விதிகளைக் காண்க.

13—5—1818 தேதி 432 எண் அ.ஆ,வரு·கை ப.
24—10—1928 தேதி, 2501 எண், அ.ஆ.வரு.கை.ப.
31—10—1928 தேதி, 120 எண், வ.து.வா.செ.
0—3—1929 தேதி, 432 எண், அ.ஆ.வரு.கை.ப.
20—3—1929 தேதி, 854 எண், வ.து.வா.செ.பலவ.
12—10—1949 தேதி, 2649 எண், அ.ஆ.வரு.கை.ப.
12—7—1950 தேதி, 25 எண், வ.து.வா.செ.அச்சு.
22—3—1954 தேதி, 665 எண், அ.ஆ.வரு.கை.ப.
12—5—1954 தேதி, 14 எண். வ.து.வா.செ.அச்சு.
4—10—1956, தேதி 3725 எண், அ.ஆ.வரு.கை.ப.
16—10—1956 தேதி, 5156–4 எண், வ.து.வா.செ. குறிப்பு.

1. ஏரிப் புறம்போக்கையும் நீர்ப் பரப்பையும் கிராமப் படங்களிலும் பதிவேடுகளிலும் காண்பிக்க வேண்டும்.—ஏரியில் நீர் நிரம்பியிருக்கும்போது, அதில் மூழ்கக்கூடிய எல்லா நிலங்களையும் "ஏரிப் புறம்போக்கு" என்று அந்த ஏரி பாதுகாக்கப்பெற்று வரும்வரையில் பதிவு செய்யப்படவேண்டும். ஒவ்வொரு ஏரியின் முழு நீர் மட்டத்தில் அதில் உண்மையாக உள்ள பரப்பைக் கிராமக் கணக்கர் கிராமப் படத்திலும், தாலுகா அலுவலகப் படத்திலும் வண்ணம்

இட்டுக் காண்பிக்க வேண்டும். தவிரவும், அவ்வாறு காண்பிக்கப்பெற்ற ஒவ்வொரு நிலமும் அது அனுபோகத்திலிருந்தாலும், அவ்வாறு இல்லாவிட்டாலும், நிலவரித் திட்டப் பதிவேட்டிலும், அடங்கல் கணக்கிலும் அந்நிலத்திற்கு எதிரில் "எரியின் நீர்ப்பரப்பு" எனப் பதிவு செய்யவேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டவற்றில், அனுபோகத்திலிராத நிலம் அல்லது உட்பிரிவு ஒவ்வொன்றும் எரி புறம்போக்கு என்று முன்னமே பதிவு செய்யப்படாமலிருக்குமானால், அதற்கு எதிரில் அவ்வாறு பதிவு செய்துவிடவேண்டும். அனுபோகத்திலிருக்கும் நிலங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு எரியின் முழு நீர் மட்டத்தில் அதில் உண்மையாக உள்ள நீர்ப் பரப்பிலுள்ள நிலங்கள் நிலத் தீர்வை பாக்கிக்காகச் செய்யப்படும் விற்பனையில் அல்லது அவற்றின் உரிமை விட்டுவிடப்பட்ட காரணத்தினால் அல்லது வேறு வகையில் அரசினர் கைவசம் வந்து சேர்ந்த உடனே அவை எரிப் புறம்போக்காக மாற்றிக்கொள்ளப் படுவதற்காக அவற்றைப் பிரித்துத் தனியாக உட்பிரிவுகள் செய்து, அத்தகைய ஒவ்வொரு உட்பிரிவுக்கும் எதிரில் "நீர்ப் பரப்பு" என அப் பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும். எப்போதாவது, எரி பழுது பார்க்கப்படுவதால், அல்லது அதற்கு மேம்பாடு செய்யப்பெறுவதால், அதன் நீர்ப் பரப்பு அதிகமாகுமானால், மேலே குறிப்பிட்டுள்ள பதிவேடுகளில் தக்க மாறுதல்கள் செய்துகொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள படங்களையும், பதிவேடுகளையும், நாளது வரையில் அவ்வப்போதைய மாறுதல்களுக்கிணங்க எழுதி வைத்துக்கொண்டு வருவதும், புறம்போக்காக மாற்றப்படும் நீர்ப் பரப்பு நிலம் ஒப்படை செய்யப்படாமல் கவனித்துக்கொள்வதும் கிராமக் கணக்கரின் கடமையாகும்.

20—7—1874 தேதி, எண் *1888*, வ.து.வா.செ.
21—1—1875 தேதி, எண் *1200*, வ.து.வா.செ.
20—11—1893 தேதி, எண் *668*, வ.து.வா.செ.
24—7—1894 தேதி, எண் *315*, வ.து.வா.செ.
11—10—1897 தேதி, எண் *331*, வ.து.வா.செ.
22—11—1898 தேதி, எண் *314*, வ.து.வா.செ.
4—2—1899 தேதி, எண் *31*, வ.து.வா.செ.
7—7—1899 தேதி, எண் *436*, அ.ஆ. *12* ஆவது பத்தி.
27—7—1899 தேதி, எண் *494*, அ.ஆ. *11* ஆவது பத்தி.
29—3—1901 தேதி, எண் *67*, வ.து.வா.செ.
21—1—1903 தேதி, எண் *15*, வ.து.வா.செ.
27—1—1922 தேதி, எண் *8*, வ.து.வா.செ.
13—6—1922 தேதி, எண் *61*, வ.து.வா.செ.

குறிப்பு.—எரியின் முழு நீர் மட்டத்திற்கும் அதன் பெரும் நீர் மட்டத்திற்கும் இடையே உள்ள நிலங்களைக் கிராமப் படங்களில் அவ்வாறுகக் காண்பிக்கத் தேவையில்லை. அவற்றைக் கிராமப் பதிவேடுகளில் "நீர்ப் பரப்பு" என்று பதிவுச் செய்யத் தேவையில்லையென்றாலும், இத்தகைய நிலங்களைப் பொறுத்தமட்டில், எரியின் முழு நீர் மட்டத்திற்குள் அனுபோகத்தில் இருக்கும் நிலங்களின் ஒப்படையிலும், இறுதியில் அரசினரைச் சேர்வனவாகிய அனுபோகம் செய்யப்பட்ட நிலங்களை எரிப் புறம்போக்காக மாற்றுதலில் எந்த முறை கையாளத் தக்கதோ அந்த முறையை அனுசரித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

29—4—1938 தேதி; *1119* என், அ.ஆ.கை.ப.
23—5—1958 தேதி *52*, வ.து.வா.செ.அச்சு.

நி. ஆ. 16 : 2]

2. ஏரியின் உள்வாய் நிலங்களைக் கொடுத்தல்.—ஒரே ஏரியானது நீர்ப்பாசன ஆதாரங்களின் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டபின் அதன் ஆயக்கட்டு நிலங்கள் [10] புன்செய்க்கு மாற்றப்பட்டு பதிவு செய்யப்படின் அல்லது வேறொரு ஆதாரத்தின்கீழ்ப் பதிவு செய்யப்படின் அதன் உள்வாய் நிலங்கள் [1] அரை ஏக்கருக்குக் குறைந்திராத [1] சிறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு அவை கிராமத்தில் நடைமுறையில் உள்ள மிக உயர்ந்த புன்செய்த் தீர்வை அல்லது ஏரியினது (1) நீர் பாய்ச்சலாதாரத்திலிருந்து விலக்கப்பட்ட பின்னர் அதன் உள்வாய் நிலம் பாகுபாடு செய்யப்பட்டுத் தீர்வை விதிக்கப்பட்டிருந்தால் நிலவரித் திட்டத்தில் நிர்ணயம் செய்யப்படும் தீர்வை செலுத்துவதற்குட்படுத்தி, ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும். விற்பனை அறிவிப்பில் இத் தீர்வையானது மாவட்டத்தில் பொது நலத் தீர்வை விதிப்பு மாற்றத்தில் செய்யத்தக்க மாறுதலுக்குட்படும் என்னும் நிபந்தனையைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை நூல் VII ஆவது அத்தியாயம் I ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தின் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு கனிபொருள்கள் சரிவர எடுப்பதற்கு உள்ளே போவதற்கும் வெளியே வருவதற்கும் திரும்பி வருவதற்குமான தடையீடில்லா முழு உரிமைகள் போன்ற இன்றியமையாதனவாகிய அதிகாரங்களை இத்தகைய உரிமைகள் செயலாற்றப்படுவதால் நிலத்தின் மேல் பரப்பின் உரிமையாளருக்கு நேரிடக் கூடிய சேதங்களுக்கு ஈடு கொடுப்பதற்குட்பட்டு அரசினர் தங்களிடமும் தங்களால் அதிகாரம் வழங்கபெற்றவர்களிடமும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்த நிலை ஆணையின்கீழ் செய்யத்தக்க ஏல விற்பனைகளுக்குக் கலெக்டரிடமிருந்து அனுமதி முன்னதாகவே பெற வேண்டும். கோட்ட ஆட்சியாளர் உறுதி செய்வதற்குட்பட்டு, தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் அல்லது வருவாய் ஆய்வாளர் விற்பனைகளை நடத்துவார். ஒவ்வொரு விற்பனையைப் பொறுத்த வரையில், கலெக்டர் விற்பனை செய்யும் அலுவலர் இன்னார் என்று நியமிக்க வேண்டும்.

15—7—1932 தேதி, எண் 1477, அ.ஆ.வரு.கை.ப.
28—10—1930 தேதி, எண் 2898, அ.ஆ.வரு.
22—7—1932 தேதி, எண் 43, வ.து.வா.செ.அச்சு.
27—11—1939 தேதி எண் 108, வ.து.வா.செ.அச்சு.

(கா.) தனிப்பட்ட விற்பனைக்கும் அட்டவணையில் கண்ட வகுப்பினர்களுக்கான நிபந்தனை ஒப்படைக்கும் ஒதுக்கிவைத்தலைப்பற்றி 15 ஆவது நிலை ஆணை 22 (3), 41 பத்திகளில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரித்து இந்த நிலை ஆணையின் கீழ், ஏரியின் உள்வாய் நிலங்கள் கொடுக்கத்தக்கனவாம்.

ஊ 7—4—1874 தேதி, எண் 550, அ.ஆ.
ஊ 30—5—1890 தேதி, எண் 380, அ.ஆ.
ஊ 17—7—1890 தேதி, எண் 215, வ.து.வா.செ.
எ 11—6—1884 தேதி, எண் 736, அ.ஆ.
ஒ 31—3—1922 தேதி, எண் 573, அ.ஆ.வரு.பலவ.
ஒ 31—3—1922 தேதி, எண் 28, வ.து.வா.செ.
கா 22—3—1924 தேதி, எண் 27, வ.து.வா.செ.
ஏ 19—12—1906 தேதி. எண் 365. வ.து.வா.செ.

[தி. ஆ. 16 : 3, 17 : 1

ஐ 14—6—1905 தேதி, எண் 557, அ.ஆ.
ஐ 12—7—1905 தேதி, எண் 147, வ.து.வா.செ.
13—9—1909 தேதி, எண் 2536, அ.ஆ.
16—9—1909 தேதி, எண் 333, வ.து.வா.செ.நிர்.
2—7—1923 தேதி, 1025, அ.ஆ.வரு.பலவ.
18—7—1923 தேதி, எண் 52, வ.து.வா.செ.
16—3—1926 தேதி, எண் 13, வ.து.வா.செ.
28—10—1939 தேதி, 280 எண், அ.ஆ.வரு.பல.,
27—11—1939 தேதி, 108 எண், வ.து.க.செ.அச்சு.

(7—1—1957 தேதி, எண் 102, அ.ஆ.வரு.பல.)
(6—5—1957 தேதி, எண் 595, வ.து.வா.செ.அச்சு.)
(4—10—1956 தேதி, 3725, அ.ஆ. வரு.பல)
(16—10—1956 தேதி, 5/56-4 எண், வ.து.வா.செ.)

3. **இனம் நிலங்களைப் பற்றிச் செய்யத்தக்கது யாது.**—எரியின் பாசனத்தின் கீழ் இனம் நிலங்கள் இருக்குமானால் அவ்வினங்களுக்கு உரிமை அளிக்கப்படவில்லை என்றால் அந்நிலங்களைப் புன்செய் நிலங்களாக மாற்றிக் கொண்டு அம் மாறுதலுக்குத் தக்கவாறு விடுவரிகளிலும் மாறுதல் செய்து கொள்ள இனம் பெற்றிருப்பவர்களுக்கு அனுமதி அளிக்கலாம். அவை நேர்முகமாக அரசாங்கத்திற்காகச் சேவைகள் செய்வதற்காகக் கொடுக்கப்பெற்ற இனங்களாயிருக்குமானால், அவற்றிற்காக 63 (11) ஆவது நில ஆணைகளின் நிபந்தனைகளை அனுசரித்து எத்தகைய ஈடு அளிக்கத்தக்கதோ அத்தகைய ஈடு பெறுவதற்கு அவற்றிற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இனங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தால், உரிமை அளிக்கப்பட்டபோது நிர்ணயம் செய்யப்பட்ட விடுவரிக்கு எத்தகைய மாறுதலும் செய்ய அனுமதிக்கத் தக்கதில்லை.

5—7—1914 தேதி, எண் 2098, அ.ஆ.வரு.

17. **நீண்ட நிலக் குத்தகைகள்.**—

குறிப்புகள்.—(1) அரசினரின் முன் அனுமதியுடன் கலெக்டர் அல்லது வருவாய்த் துறை வாரியத்தாலன்றி அரசினருக்குரிய எந்த நிலத்தையும் இந்த நில ஆணையின் கீழ், இந்தியக் குடியல்லாத எவருக்கும் நீண்ட நிலக் குத்தகையில் கொடுக்கக் கூடாது. இந்த நில ஆணையின் கீழ்ச் செய்யப்படும் ஒவ்வொரு கொடைக்கும் சம்பந்தப்பட்ட நிலம் அரசினர் ஒப்பளிப்பில்லாமல் இந்தியக் குடியல்லாத வேறொருவருக்கு நிலம் பராதீனப் படுத்தப்படுமாயின், அவ்வொப்படை அல்லது விற்பனை சட்ட முறையில் செல்லாததாகும் என்ற நிபந்தனைக்குட்டதாக இருக்க வேண்டும்.

இந்த நில ஆணையின் கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் ஒப்படைக்காக கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கமே செய்துகொள்ளும் விண்ணப்பம், அந்தக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம், 1965 ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956-ம் ஆண்டு I-வது மத்திய அரசுச் சட்டம்) 3 (1) (i) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு வந்தாலன்றி அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1980-ஆம் ஆண்டு XXI ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880-ஆம் ஆண்டு சமயச் சங்கங்களின் சடடம் (1860 ஆம் ஆண்டு XXI மத்திய அரசுச் சட்டம்), 1932-ம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932 ஆம் ஆண்டு சென்னை VI ஆவது சட்டம்), 1942 ஆம்

நி. ஆ. 17 : 1]

ஆண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942-ஆம் ஆண்டு VI ஆவது மத்திய சட்டம்), 1938 ஆம் ஆண்டு ஈட்டுறுதிச் சட்டம் (1938 ஆம் ஆண்டு IV-ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926-ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் யூனியன்கள் சட்டம் (1926 ஆம் ஆண்டு XVI-ஆவது மத்தியச் சட்டம்) அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம், ஆகிய இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றிக் கவனிக்கப்படமாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன் கத்தோலிக் கிருத்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள், ஏனைய உரோமன் கத்தோலிக் சமய குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற்றிற்குப் பொருந்தாது.

(19—9—1956 தேதி, 3592 எண், அ.ஆ.வரு.கை.ப.)

(15—10—1956 தேதி, 1438 எண், வ.து.வா.செ.பலவ.)

(2) மரங்களடர்த்தியாகவுள்ள மலை நிலம் வேளாண்மைப் பயிர் செய்வதற்கு வழங்கப்பட்டால் அதனுல் அந்நிலம், மாஞ்செடிகளற்ற வெற்றிடமாக்கப் படக் கூடியதான வினாவை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். அந்நிலம் சரிவுள்ளதாக இருக்குமானுல் விவசாயம் செய்யப் படுவதற்காக வழங்கப்பட்ட சரிவுகளுக்கு நேர்க்கோணத்தில் உள்ள இடை நிலப் பகுதிகளில் எத்தனை இடை வெளிகளில் வளர்ந்த மாஞ் செடிகளை அழிவுறுமல் நிறுத்தி வைத்தால் அச்சரிவு கள் மாஞ் செடிகளற்ற வெற்றிடமாவதைத் தடுக்குமோ அவ்வாறுக மாஞ்செடி களை அழிவுறுமல் நிறுத்தி வைத்து அவை வளர்ந்தோங்க வழி செய்ய வேண்டும். இவ்வகையில் ஒரே தன்மையினதான விதி வகுத்துத் தர இயலாது. ஆதலால் இது பற்றி ஒவ்வொன்றிலும் அதன் நிலமைக்குத் தக்கவாறு அந்நிலத்தில் பயிரிடக்கூடிய பயிரை அனுசரித்து ஆராய்ந்து பார்க்கத்தக்கதாம். ஒவ்வொரு ஆண்டிலும் மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துக் குறுகிய காலத்திற்கு மட்டும் நிலத்தில் இருக்கக்கூடிய தானியப் பயிர்களைவிடத் தேயிலை, காபிச் செடி போன்ற பயிர்கள் நில அரிப்பை எதிர்த்து அதிக பாதுகாப்பு தருகின்றன.

(29—11—1918 தேதி, எண் 196, வ.து.வா.செ.

(3) தீண்ட நிலக் குத்தகைக்குக் கொடுக்கப்படும் நிலம் சவுக்கு வினை விக்க உபயோகிக்கப்படுமாயின் யாதொரு நத்தத்திலிருந்து 200 கெஜங்களுக் குள் அதற்காகக் குழிகள் அல்லது குட்டைகள் தோண்டவோ, குடங்களினுல் தண்ணீர் பாய்ச்சவோ கூடாது. இந்த வரம்பிற்கு அப்பால் தோண்டப்படும் எல்லாக் குழிகளையும் குட்டைகளையும், மறு நடவுக்கு வேண்டியவற்றைத் தவிர அவற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்பட்ட பயிர்களை மூன்று ஆண்டுகளான வுடனே நிரப்பிவிட வேண்டும். இந் நிபந்தனைகளில் எதேனும் ஒன்றை மீறு வது யாதொரு ஈடும் கொடுக்கப்படாமல் ஒப்படை அல்லது விற்பனையோ எது வாயிருந்தாலும் ரத்து செய்யப்படுவதற்குட்படுத்தி விடும்.

(5—2—1919 தேதி, எண் 11, வ.து.வா.செ.)

(4) நில அளைப் செலவையும் எல்லை வரையறுத்தல் செலவையும் வகுப்பதை பொறுத்த மட்டில் சங்கிலி அளவை நடைமுறை நூலில் உள்ள பொருத்தமான விதிகளைக் காண்க.

1—3—1929 தேதி, 432, அ.ஆ.வரு.பலவ.

19—9—1956 தேதி, 3592 எண், அ.ஆ.வரு.கை.ப.

20—3—1929 தேதி, 854, வ.து.வா.செ.பலவ.

15—10—1956 தேதி, 1438 எண், வ.து.வா.செ.

[நி. ஆ. 17 : 1-3

1. நீண்ட நிலக் குத்தகையில் கொடுக்கத் தக்கவை எவை.— விவசாயம் மூன்னேறி வரும் நீண்ட நிலக் குத்தகைகள் மிதமான நிர்வை அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டுமென்ற அவசியம் ஏற்படுவது அரிது. ஆதலால், இத் தகைய மிதத் தீர்வைக் குத்தகைகள் அடர்ந்த காடு, சதுப்பு நிலங்கள் அடர்த்தியான புல் படர்ந்த நிலம் ஆகிய இவற்றைச் சீர் திருத்தம் செய்வ தற்கும் [7] தழை உரத்திற்காக மரங்களையும் செடி கொடிகளையும் பயிர் செய்வ தற்கும் அல்லது இத்தகைய தனிப்பட்ட வகைகளுக்கு மாத்திரமே மட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். [7] கலெக்டர் தமது யுக்தானுசாரத்தில் ஐந்தி லிருந்து [5] பனிரெண்டு ஆண்டு காலத்திற்குத் தீர்வையில்லாமல் [5] நீண்ட நிலக் குத்தகைக்குக் கொடுக்கலாம்.

2. ஆண்டுதோறும் நிலத்தைப் பண்படுத்த வேண்டியதைக் கட்டாயப் படுத்துதல்.—(4) ஆண்டுதோறும் எந்த அளவிற்கு நிலம் பண்படுத்தப்பட வேண்டும் என்பதை நீண்ட நிலக் குத்தகையினுள் அமைத்துக்கொள்ள வேண்டும். இவ்வகையில் ஐந்தாண்டு நீண்ட நிலக் குத்தகையில் ஒவ்வோர் ஆண்டுக் காலத்தில், ஐந்தில் ஒரு பாகம் பண்படுத்தப்பட வேண்டும் என்னும் நிபந்தனை அடங்கியிருக்க வேண்டும். [8] இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படா விட்டால், அல்லது நிபந்தனை மீறப்பட்டால், கொடை திருப்பி எடுத்துக் கொள் வதற்குள்ளாகும். இவ்வாறு கொடை திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்டால், கலெக்டர் தமது யுக்தானுசாரத்தில் நிலத்தில் பிரவேசித்துக் கொடை பெற் றிருப்பவரிடமிருந்து நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்வதற்கு அல்லது தவறுதல் நிகழ்ந்த தேதியிலிருந்து [8] கொடை பெற்றிருப்பவர் கைவசமிருக்கும் நிலத்திற்கு முழுத் தீர்வையையும் விதிக்க உரிமை பெற்றிருக்கிறார். நீண்ட நிலக் குத்தகைகளின் நிபந்தனைகள் கண்டிப்பாய் நிறைவேற்றப்பட வேண்டும்.[9]

இ 19—3—1859 தேதி, 949, வ.து.வா.செ.
இ 11—5—1859 தேதி, 648 எண், அ.ஆ.
இ 10—10—1859 தேதி, 4078, வ.து.வா.செ.
ஈ 25—8—1874 தேதி, 2372, வ.து.வா.செ.
ஏ 19—1—1920 தேதி, 140, அ.ஆ.வரு.
ஈ 29—9—1874 தேதி, 1236, அ.ஆ.
உ 11—4—1893 தேதி, 172, வ.து.வா.செ.
ஊ 5—10—1859 தேதி, 4006, வ.து.வா.செ.
எ 18—1—1908 தேதி, 5 எண் வ.து.வா.செ.
ஏ 9—2—1920 தேதி, 22, வ.து.வா.செ.நிர்.

3. ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டிய உரிமைகள்.—சென்னை சுரங்க நடைமுறை நூல் VIII ஆவது அத்தியாயம் XI ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தின் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு தடையில்லா உரிமை, தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது, அவற்றுள் செய்யத்தக்க போக்குவரத்து இவை போன்ற வற்றைக்கொண்டு கனிப் பொருள்கள் சரிவர எடுக்கப்படுவதற்கான அதிகாரங்களை இத்தகைய உரிமைகள் செயலாற்றப்படுவதால் நிலத்தின் மேல் பரப்பின் உரிமையாளருக்கு

நி. ஆ. 17 : 3-4, 18 : 1]

நேரிடக் கூடிய சேதங்களுக்கு ஈடு கொடுத்ததற்குட்பட்டு அரசினர் தங்களிடமும் தங்களால் அதிகாரம் வழங்கப் பெற்றவர்களிடமும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

18—7—1923 தேதி, எண் 52, வ.து.வா.செ.

2—7—1923 தேதி, எண் 1025, அ.ஆ.வரு.பல.

4. **மேம்பாடுகளுக்கு ஈடு கொடுக்க வேண்டியதில்லை.**—நீண்ட நிலக் குத்தகை மேலதிகாரியால் ரத்து செய்யப்பட்டால் அல்லது மேலே 2 ஆவது பத்தியின் கீழ் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால் நீண்ட நிலக் குத்தகை பெற்றிருப்பவர் நிலத்தில் செய்திருக்கக் கூடிய மேம்பாடுகள் யாவற்றிற்கேனும் ஈடு பெறுவதற்கு அவருக்கு உரிமை இல்லை.

24—9—1927 தேதி, 795 எண், அ.ஆ.வரு.

13—5—1927 தேதி, 28 எண், வ.து.வா.செ.

18. அங்குமிங்குமாகவுள்ள மரங்களும் தோப்புகளும்.—

குறிப்பு.—மாவட்டத்தின் வனத் துறைக்குத் தலைவர் என்ற முறையில் சுலெக்டரது கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் ஒதுக்கக் காடுகளுக்கோ அல்லது ஒதுக்கி வைக்கப் பெற்றுள்ள நிலங்களுக்கோ இந்த நிலை ஆணை பொருந்தாது. இவற்றைப் பற்றிய விதிகளை வன நடைமுறை நூலில் காண்க.

1. **அனுபோகம் செய்யப்படுகின்ற நிலங்களிலுள்ள மரங்கள்.**—கீழே உள்ள புறம்பானவற்றைத் தவிர, அரசுக் குடி முறையில் அல்லது இனாம் முறையில் அல்லது கிராம நத்தமாக அல்லது நகரத்திலுள்ள வீட்டு மனையாக உள்ள கைப்பற்று நிலங்களில் வளரும் மரங்களுக்கு அரசினர் சார்பாக யாதொரு உரிமையும், சாதாரணமாகக் கொண்டாடக் கூடாது. நிலத்தை ஒப்படை செய்யும்போது, அதில் நிற்கும் மரங்களை மரவரித் திட்டத்தை அனுசரித்துத் தனியாகக் கொடுத்துவிடக் கூடாது. மரங்கள் இப்போது தனியான உடைமையில் இருக்குமானால் அம்மரங்கள் எந்த ஆணையில் கொடுக்கப்பட்டனவோ அவ்வாணையை ரத்து செய்து, மரக்கொடைப் பெற்றவரும் அம்மரங்கள் உள்ள நிலத்தை கைப்பற்றல் வைத்துள்ளவரும் வெவ்வேறானவர் எனில் மரக்கொடை பெற்றிருப்பவர் நிலத்தை கைப்பற்றில் வைத்துக்கொண்டிருப்பவரிடம் தக்க ஏற்பாடுகளைத் தாமே செய்து கொள்ளுமாறு விட்டுவிட வேண்டும்.

விதிக்குப் புறம்பானது.—மரங்களை ஒப்படை பெற்றிருப்பவரின் மரங்களுக்கான உரிமைகளுக்கு ஊறு விளைக்கக் கூடிய வகையில் நிபந்தனைகள் ஒப்படை ஆணையில் தெளிவாகச் சேர்க்கப் பெற்றிருந்தால் கீழ்க் கண்ட 2 (ஆ) பத்தி அல்லது தனி நிபந்தனைகளுக்குட்படுத்தி அல்லது நீண்ட நிலக் குத்தகை முறையில் அல்லது குத்தகையில் நிலம் கொடுக்கப்பட்டிருந்தால். அத்தகைய நிபந்தனைகள் கண்டிப்பான முறையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

கா குறிப்புகள்.—தசபந்தம் ஏரிகளின் உட்புறத்திலும் வெளிப் புறத்திலுமுள்ள மரங்கள்—தசபந்தம் ஏரி அல்லது வாய்க்கால் கரைகளில் வளர்ந்து வரும் மரங்கள் இனம் உரிமையாளர்களது சொத்தாகும். ஏரி உள்வாயிலுள்ள மரங்களைத் தசபந்தம் இனம் உரிமையாளர்கள் வழக்கமாக அனுபவம் செய்து வந்திருப்பார்கள் எனில், அவற்றையும் அவ்வாறு அனுபவம் கொள்ளுமாறு அவர்களை அனுமதிக்கலாம். கா

கா 20—3—1926 தேதி, எண் 571, அ.ஆ.வரு.

12—4—1926 தேதி, எண் 841, வ.து.வா.செ.பலவ.

2. அனுபோகத்தில் இல்லாத நிலங்களிலுள்ள மரங்கள்.—அங்குமிங்குமாக மரங்கள் உள்ள நிலங்களையும், தோப்புக்களையும் ஒப்படை செய்யுமுன் கலெக்டர் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

(அ) விலை மதிப்புள்ள தோப்புகள்.—பெருந்தொகுதியான பனை மரங்கள், சுச்ச மரங்கள், பழவகை மரங்கள் அல்லது கட்டடங்கள் கட்டுவதற்குப் பயனுகும் விலை மதிப்புள்ள மரங்கள் தாமாகவோ அல்லது வளர்க்கப் பெற்றோ எவ்வாறு வளர்ச்சி அடைந்திருப்பினும் அத்தகைய மரங்கள் வளர்ந்துள்ள நிலங்களைச் சாதாரணமாக ஒப்படை செய்துவிடாமல் வன வளர்ச்சியை முன்னிட்டு அவை அரசினர் வசமே இருக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். இத்தகைய நிலங்களில் உள்ள மரங்களில் வழங்கப்பட்டால் அல்லது குடும்பக் காரியங்களுக்காக விற்பனை செய்யப்பட்டால் அவற்றிற்குப் பதிலாக வேறு மரங்கள் நடப்படுவதற்குக் கலெக்டர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(ஆ) மேலே (அ) உட் பிரிவில் சோதனவாகிய அங்குமிங்குமாகவுள்ள மரங்களும் தோப்புகளும்.—(i) மாவரித் திட்டத்தின்கீழ் மரங்களுள்ள நிலத்தை ஒப்படை செய்வதில் கடையில்லையாயின் மேற்கொள்ளவேண்டிய நடைமுறை: மாவரித் திட்டத்தில் கொடுக்கப்பட்ட மரங்களுள்ள நிலங்களை ஒப்படை செய்யக் கடையில்லையென்றால் அத்தகைய மரங்களை மாவரித் திட்டத்தில் பெற்றிருப்பவர், அனுமதி பெறுமல் அம்மரங்கள் உள்ள நிலத்தை அனுபோகம் செய்கிறவராகப் பாவிக்கப்பட வேண்டும். இம் முறை, மரங்கள் பட்டாலன்றி அல்லது மரங்கள் கொடுக்கப்பெற்றவர்கள் மரங்களில் தங்களுக்குள்ள உரிமையை விட்டுவிட்டாலன்றி மரங்கள் கொடுக்கப்பட்டது ரத்து செய்ய இயலாது என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி 1905-ம் ஆண்டுக்கு முன்னதாக வழங்கப்பெற்ற மரப்பட்டாக்களைப் பொருத்தவரையில் பொருந்தாது. மரங்கள் உள்ள நிலத்தை ஒப்படை செய்யக் கடையில்லையென்றால் அந்த நிலத்தை, மரங்களுடன் சேர்த்துச் சாதாரணமாக ஒப்படை விதிகளை அனுசரித்து, ஒப்படை செய்துவிடவேண்டும் (வருவாய்த் துறை வாரிய 15 ஆவது நிலை ஆணையைக் காண்க). ஒப்படை செய்யும்போது மாவரித் திட்டத்தின் கீழ் மரங்கள் கொடுக்கப்பட்டதை ரத்து செய்துவிட வேண்டும். இருப்பினும், வருவாய்த் துறை வாரிய 19 ஆவது நிலை ஆணையின் கீழ் நீண்ட நிலக்குத்தகையில் வழங்கப்பெற்ற உரிமைகளில் தலையிடக்கூடாது.

28—3—1950 தேதி, 396, வ.து.வா.செ.
19—9—1956 தேதி, 3592, எண். அ.ஆ.வரு.கைப.
15—10—1956 தேதி, 1438, எண். வ.து.வா.செ.பலவ.

நில ஒப்படை ஆணை வெளியனுப்புவதற்கு முன்னதாகவே அல்லது விண்ணப்பம் செய்வதற்கு நிலத்தின் சுவாதீனத்தைக் கொடுப்பதற்கு முன்பாகவோ சாதாரணமாக மரங்களின் கிரயத்தை அவரிடமிருந்து வசூல் செய்ய வேண்டும். மரக் கிரயத்தைச் செலுத்த அவர் மறுப்பாரெனில், 15-ஆவது நிலை ஆணையின் 14 ஆவது பத்தியை அனுசரித்து மரங்களைக் கொடுத்துவிட வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் அரிசனருக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் தனி மாவரித் திட்டத்தின்கீழ் அனுபவம் செய்யப்பட்டு வரும் மரங்களும், பின்வரும் 2 (ஆ) ( ) ஆவது பத்தியின் குறிப்பில் கண்டுள்ள புறம்போக்கு நில வகைகளில் நடப்பெற்றுள்ள மரங்களும் அவை 1927-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதிக்கு முன்பு நடைப்பெற்றவையென்றால் அவற்றின் கிரயம் வசூலிக்கத்தக்கதன்று.

செய்ய இயலாத அளவிற்கு அதிகமாக இருக்கும் நிலையில், அவ்வலுவலைச் செய்து முடிக்க நியமிக்கப் பெறும் தனிப் பணியாளர் தொகுதியினரை நியமிப்பதில் ஏற்படும் செலவுத் தொகையையும் யார் யாருக்கு வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்பெறுகின்றனவோ, அவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டும்.

குறிப்பு.—மேலே குறிப்பிட்டுள்ள வகைகளில் தல ஆட்சிக் கழகம் செலவு செய்திருக்குமேயாயின் அவ்வகையில் வசூலிக்கப் பெறும் தொகை, சம்பந்தப்பட்ட தல ஆட்சிக் கழகத்திற்கு வரவு வைக்க வேண்டும்.

(x) அளவு வரை படங்கள் தயாரித்தல்.—ஒப்படை செய்ய வேண்டிய வீட்டு மனைகளின் அளவு வரைப் படங்களைத் தவறாமல் தயார் செய்ய வேண்டும். விவகாரங்கள் தோன்றுமானால், மனை இடங்களைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, வீட்டு மனைகளை அவற்றின் அருகில் அல்லது அரைகுறை நிரந்தரமாக உள்ள அடையாளங்கள் அல்லது யூனியன் அளவைக் கற்களுடன் இணைக்கத்தக்க அளவுகள் எடுக்க வேண்டும். இந்த அளவுகளை அளவு வரை படங்களில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு தயார் செய்த அளவு வரை படங்கள் ஒப்படைப் பதிவுக் கட்டுக்களின் பகுதியாக இருக்க வேண்டும்.

(xi) அறிக்கை அனுப்புமாறு கிராம அலுவலர்களைக் கேட்பது.—தாசில்தார் தம்மிடம் நேராக வரப்பெறும் விண்ணப்பங்களில் அவற்றிற்கான அறிக்கையைப் பெறுவதற்காக அவ்விண்ணப்பங்களை கிராம அலுவலர்களுக்குப் அனுப்ப வேண்டும். கிராம அலுவலர் தங்களிடமே முதலில் தாக்கல் செய்த விண்ணப்பங்களில் அவர்கள் எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அவ்வாறு சரியாக அதாவது மேலே (iii) -ஆவது உட்பிரிவில் கூறியுள்ளவாறு பதிவேட்டில் பதிவு செய்துகொண்டு விண்ணப்பத்தைப் பற்றி (iv)ஆவது உட்பிரிவில் கூறியுள்ளவாறு விளம்பரம் செய்து (v)-ஆவது உட்பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தாசில் தாருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

( ) முடிவு செய்தலும் அதில் பிறப்பிக்கப்பட்ட ஆணையை அறிவிப்பு செய்தலும்.—தாசில்தாரால் ஒவ்வொரு விண்ணப்பமும் முடிவு செய்ய படுவதற்கு அவரால் எழுதிய ஆணை இருக்க வேண்டும். அவ்வாணை சம்பந்தப்பட்டவர்களெல்லாருக்கும், பஞ்சாயத்துக்கும் அறிவிக்கப்பட வேண்டும். மேலும், மேல் முறையீட்டில் அல்லது ரிவிஷனில் ஒப்படை ரத்து செய்யப்படுமானாலும் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து அரசினர் நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்வார் எனினும் அந்நிலத்தில் ஒப்படை பெற்றவர் அமைத்திருக்கக் கூடிய கட்டடங்களுக்கும் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகளுக்கும் ஈடு பெறுவதற்கு அவருக்கு உரிமை இல்லை என்பதை அவ்வாணையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

15 ஆவது நில ஆணை 15 முதல் 20 ஆவது பத்திகளில் மேல் முறையீடு, ரிவிஷன் இவற்றைப் பொருத்தவரையில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் இத்தகைய ஆணைகளுக்கும் பொருந்தும். ஆணைகள் பிறப்பிக்கும் போது நெருப்பினால் அபாயம் ஏற்படக் கூடிய இடங்களில், கூரை வீடுகள் அமைப்பதற்கு அனுமதி கோரும் விண்ணப்பங்களில் தாசில்தார் அனுமதி அளிக்க மறுத்துவிடலாம்.

தி. ஆ. 21 :2-3]

(xiii) வழங்கப்படும் வீட்டு மனையின் பரப்பு.—கோட்ட ஆட்சியாளரின் முன் அனுமதியின்றி, வீட்டு மனைகளைப் பொருத்த வரையில், 10 செண்டுகளுக்கு அதிகமாகவும், தனியாக உள்ள மாட்டுத் தொழுவங்களுக்காக 4 செண்டுக்கு அதிகமாகவும் தாசில்தார் நில ஒப்படை செய்யலாகாது.[2]

அ2-10-1899 தேதி, 239, வ.து.வா.செ.
ஆ1-7-1929 தேதி, 1305, அ.ஆ.வபி.
இ8-7-1891 தேதி, 409, வ.து.வா.செ.
ஈ16-9-1898 தேதி, 527, அ.ஆ.
உ6-10-1915 தேதி, 298 வ.து.வா.செ.
ஊ10-10-1918 தேதி, 176, வ.து.வா.செ.
எ4-1-1922 தேதி, 40, அ.ஆ.வரு.பலவ.
ஏ11-1-1922 தேதி, 3, வ.து.வா.செ.
ஐ20-4-1927 தேதி, 795, அ.ஆ.வரு.பலவ.
ஐ13-5-1927 தேதி, 28, வ.து.வா.செ.
ஒ1-3-1929 தேதி, 432, அ.ஆ.வரு.பலவ.
ஓ20-3-1929 தேதி, 854, வ.து.வா.செ.பலவ.
ஆ6-8-1929 தேதி, 60, வ.து.வா.செ.
எ7-8-1924 தேதி, 1846, வ.து.வா.செ.பலவ.
எ24-11-1924 தேதி, 1828, அ.ஆ. பலவ.
எ7-12-1924 தேதி, 2941, வ.து.வா.செ.பலவ.

3. அனுமதி பெறுமல் செய்து கொண்ட அநுபோகத்தைப்பற்றி மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கை— (i) முன் அனுமதி பெறுது யாரும் கிராம நத்தத்தைத் தம்முடையதாக்கிக் கொள்ளக்கூடாது.— [1]முன்னதாகவே அனுமதி பெற்றுக் கொள்ளாமல், கிராம நத்தத்தை யாரும் தம்முடையதாக்கிக் கொள்ளக்கூடாது என்பதை அரசுக் குடி-கிராமங்களில் தெரியப்படுத்தி, இதில் கலெக்டர் அரசினர் வகிக்கும் தனிச் சிறப்பதிகாரத்தை நிலை நாட்ட வேண்டும்.[1]

(ii) அவ்வாறு சொந்தமாக்கிக் கொள்ளப்பட்ட பின் செய்ய வேண்டியவை.—அனுமதி பெறுது எவரேனும் கிராம நகரத்தைத் தம்முடையதாக்கிக் கொண்டுவிட்டாரெனில், அவர் செய்திருக்கும் அநு போகம் தடுக்கத்தக்கது எனில் 26 ஆவது நில ஆணையில் அடங்கியுள்ள அறிவுரைகளை அனுசரித்தும், 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரித்தும் நடவடிக்கை எடுக்கவேணடும். அவ்வனுபோகம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு அந்த மனை இடம் ஒப்படை பெற உரிமை உண்டெனில், அந்த அநுபோகமும் ஆட்சேபனை யற்றது எனில், 2 ஆவது பத்தியிலுள்ள விதிகளை அனுசரித்து அந்த இடத்தை அவருக்கு வழக்கத்திற்கு இசைந்தமுறையில் ஒப்படந்த செய்யலாம். குறிப்பான சூழ்நிலைகளை முன்னிட்டு, தண்டத் தீர்வை விதிப்பது விரும்பத் தக்கதென்றிருந்தால் அன்றித் தண்டத் தீர்வை விதிக்கக்கூடாது. வேண்டு மென்றால், பெயரளவில் தண்டனைத் தீர்வை விதிக்க வேண்டும்

[நி. ஆ. 21 :3-4

(iii) கிராம அலுவர்களின் பொறுப்பு.—ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதும் அவற்றைப் பற்றி அறிக்கையனுப்புவதும் கிராம அலுவர்களின் பொறுப் பாகும்.

அ18–3–1873 தேதி, 401, வ.து.வா.செ.
ஆ16–9–1898 தேதி, 527, அ.ஆ.
இ9–10–1906 தேதி, 279, வ.து.வா.செ.
இ29–9–1908 தேதி, 2403, அ.ஆ.
இ16–9–1908 தேதி, 218, வ.து.வா.செ.
ஈ2–10–1899 தேதி, 239, வ.து.வா.செ.
ஈ17–2–1900 தேதி, 139, அ.ஆ.

4. கிராம நத்தத்தில் அனுபோகமும் பயிர் செய்வதும்.—நீண்டகாலமாக நிலை பெற்றிருக்கும் வழக்கத்தை அனுசரித்து, தனிப்பட்டவரின் சொந்த சொத்தாக அவர் கைவசம் உள்ள கிராம நத்தத்தைக் கீழே உள்ள நிபந்தனை களுக்குட்பட்டுத் தீர்வை செலுத்தாமல் அநுபோகம் செய்து கொள்ள அரசினர் அனுமதித்துள்ளனர். இடத்தைத் தீர்வையின்றி ஒருவர் தம் கைவசம் வைத்துக் கொள்ளத்தக்க மொத்தப் பரப்பு, கட்டடங்களுக்கும் மற்றக் கட்டட அமைப்புகளும் உட்பட, மூப்பத்தைந்து சென்டுகள் ஆகும். இந்தப் பரப்பளவுக்குள் செய்யப்படும் பூக்கள், காய்கறிகள், பழங்கள் ஆகிய இவற்றின் விளைவிற்குத் தீர்வை விதிக்கத்தக்கதில்லை. ஆலில் பூக்கள், காய்கறிகள், பழங்கள் இவற்றை தவிர்த்து மற்றப் பயிர்கள் விளைவிக்கப் பெற்றால், அவற்றிற்குக் கிராமத்தின் மிக உயர்ந்த புன்செய் வீதத்தில் தீர்வை விதிக்கத் தகும். தனிப்பட்டவரின் உடைமையில் உள்ள இடத்தில் 35 சென்டு களுக்கும் மேற்கொண்டு பயிர் விளைவிக்கப்பட்டிருப்பினும் அல்லது அவ்வாறு செய்விக்கப்படாமலிருப்பினும், பூக்கள், காய்கறிகள், பழங்கள் அல்லது மற்றப் பயிர்கள் விளைவிக்கப்பட்டிருந்தாலும், அதற்கு கிராமத்தின் உயர்ந்த புன்செய் வீதத்தில் தீர்வை விதிக்கப்படவேண்டும். இவ்வகையில், சொற்பப் பரப்புள்ளவற்றில் அளவுகள் எடுத்ததற்கு வேண்டிய அவசியத்தைத் களுக்கும் அதிகமான பரப்பில் செய்யும் விவசாயத்திற்கும் விதிக்க வேண்டிய பரப்பிற்குள் செய்யப்பெறும் விவசாயத்திற்கும் மூப்பத்தைந்து சென்டு களுக்கும் அதிகமான பரப்பில் செய்யும் விவசாயத்திற்குட் விதிக்க வேண்டிய குறுமத் தீர்வை ஒரு ரூபாயாகும். இந்தத் தீர்வை 2-அ என் கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனாலும் இதன் கேட்புத் தொகை அறிவிப்பு 1 ஆவது படிவத்தில் தயாரித்தல் வேண்டும். ஆக்கிரமிப்புகளைப் பொருத்த மட்டில் பொருத்தமாக உபயோகிக்கத்தக்க படிவங்கள், இந்த உள்பத்தியின் கீழ் நிலத்திற்கு தீர்வை விதிப்பதற்கு பயனுக்கிக் கொள்ளுதல் கூடாது.

தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இல்லாத கிராம நத்தத்தின் எப்பகுதியிலும் பயிர் விளைவித்தல் சந்தேகமின்றி தகாத செயலாகின்றது. 3 இதில், நீண்ட காலச் சுவாதீனம் காரணமாக நடவடிக்கை எடுப்பதற்குத் தடை இருக்கிறதென்றால் அன்றி, அல்லது நடவடிக்கை எடுப்பது நன்றன்று என்று தோன்றினால் அன்றி, 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தின் கீழ், 15 ஆவது நிலை ஆணை 26 ஆவது பத்தியில் உள்ள அறிவுரைகளை அனுசரித்து

நி. ஆ. 21:4-6]

நடவடிக்கை எடுக்க வேண்டும். [205] இத்தகைய நிலத்தைப் பொருத்தமட்டில் அடுத்து வரும் பத்தியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பெற்றுலன்றி விவசாயம் செய்வதற்கு ஒப்படை செய்தல் கூடாது.

27-7-1944 தேதி, 1522, அ.ஆ.வரு.பல.
19-10-1944 தேதி, 2076, அ.ஆ.வரு.பல.
31-10-1944 தேதி, 34, வ.து.வா.செ.அச்சு.
[6]2-10-1899 தேதி, 239, வ.து.வா.செ.பல.
[3]9-10-1906, தேதி, 277, வ.து.வா.செ.
[4]18-3-1873 தேதி, 401, வ.து.வா.செ.
10-11-1916 தேதி, 305, வ.து.வா.செ.
[2]23-9-1916 தேதி, 2185, அ.ஆ.வரு.
2-8-1928 தேதி, 1738, அ,.ஆ.வரு.
[6]21-8-1928 தேதி, 87, வ.து.வா.செ.

குறிப்பு.—மேற்பத்தியில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்ட பயிர்களான வகுப்பில் வெங்காயம், மிளகாய், மல்லி, கடுகு, மஞ்சள், சர்க்கரை வள்ளி ஆகிய இவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

3-12-1918 தேதி, 1615, வ.து.வா.செ.

5. கிராம நத்தத்தைக் குறைத்தல்—[3]கிராம நத்தம் தற்கால தேவைகளுக்கும், வருங்காலத் தேவைகளுக்கும் மிகுதியாக நத்தப் பரப்புள்ள கிராமங்களில் [3]மிகுதியாக இருப்பதைத் தீர்வை விதிக்கப்பட்ட நிலமாக மாற்றப்படுவதற்குக் [7]கோட்ட ஆட்சியாளர் கலெக்டரின் ஒப்பளிப்பைப் பெற்றும் பின்னர் அதைப் பொருத்தவரையில் அரசுக்குடி முறையில் [11]ஒப்படை [7]செய்தல் வேண்டும். அதன் பகுதிகள் சப்பாத்திக் கள்ளி களினால் மூடப்பட்டிருந்தால், விவசாயம் செய்வதற்கு நிலத்தைப் பண்படுத்து வதற்கான நீண்ட [10]நிலக் குத்தகை வழங்க இசைவு தெரிவிக்கலாம். [10]ஆயினும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒதுக்கி வைத்துக்கொள்ளத்தக்க நத்தம் கிராமத்தாரின் உடனடியான தேவைகளுக்கும் பிற்காலத்திய தேவைகளுக்கும் போதுமா என்பதை நிச்சயம் செய்துகொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

1 18-3-1873 தேதி, 401, வ.து.வா.செ.
6 16-9-1898 தேதி, 527, ஆ.அ.
6 2-10-1899 தேதி, 237, வ.து.வா.செ.
7 14-2-1906 தேதி, 221. து.வா.செ.
7 17-2-1905 தேதி, 151, அ.ஆ.
10 2-8-1928 தேதி, 1738, அ.ஆ.வரு.
11 21-8-1928 தேதி, 87, வ.து.வா.செ.

6. கிராம நத்தத்தை விரிவாக்குதல்.—கிராமத்தில் குடியிருப்பவர்கள் அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர்களுக்கு விவசாயத் தொழிலாளர்கள், கிராமத்தில் குடியிருந்து பணியாற்றுவதற்குக் கிராமத்தை நாடிச் செல்லும் பணியாளர்கள் ஆகிய இவர்களின் தேவைகளை நிறைவேற்று வதற்குக் கிராமத்திற்குத் தற்போதுள்ள கிராம நத்தம் போதுமானதாக

[தி. ஆ. 21:6-7

இல்லையெனில், கலெக்டர்கள் தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களைப் புறம்போக்காக மாற்றிக்கொண்டு அல்லது வேறு வகைப் புறம்போக்குகளைக் கூடுதலாக எடுத்துக்கொண்டு, கிராம நத்தத்தை விரிவாக்கலாம். இத்தகைய மாற்றுதல் களையும் கூடுதல்களையும் கலெக்டர்கள் அரசினர் வசம் இல்லாத தீர்வை விதிக்கப்பட்ட நிலம் நீங்கலாக மற்றவற்றில் செய்யலாம். இவ்வகையில் அரசினர் வசமில்லாத தீர்வை விதிக்கப்பட்ட நிலத்தைப் பொறுத்த வரையில் நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் நில உரிமை பெற வேண்டும்.

குறிப்புகள்.—(1) கிராம நத்தத்தை விரிவாக்கும் பொருட்டு, உரிமை பெறுவதற்கான நிலம் 10 ஏக்கருக்கு அதிகமாக இல்லாதபோது அல்லது அந்நிலத்தை உரிமை பெறுவதற்கான செலவுக்காக 500 ரூபாய்க்கு அதிகமாகாத போது வருவாய்த் துறை வாரியம் அல்லது அரசினரின் முன் அனுமதியின்றி ஒவ்வொன்றிலும் நில உரிமை பெறுவதற்கான வரைவு உறுதி அறிவிப்புகளைக் கலெடர் மேலனுப்பலாம். "நில உரிமை பெறுவதற்கான நிலத்தின் பரப்பு 10 ஏக்கருக்கு அதிகமாகவும் ஆனால் கா20 ஏக்கருக்கு குறைந்ததாகவும் இருக்கும் போதும், அல்லது நில உரிமை பெறுவதற்கான செலவு கா500 ரூபாய்க்கு அதிகமாகவும், ஆனால், 1,000 ரூபாய்க்கு மேற்படாதிருக்கும்போது வருவாய்த்துறை வாரியத்தின் ஒப்பளிப்பை, பெறுதல் வேண்டும். மற்றவற்றிலெல்லாம் நில உரிமை பெறுவதற்கு அரசினரின் ஒப்பளிப்பு வேண்டும். [9]கா மேலே குறிப்பிட்ட தொகைகளின் வரம்புகள், வேறு வகைகளில் கிடைத்துவரும் உதவித் தொகைகள் நீங்கலாக அரசினர் தாங்களாகவே செய்யும் நிகர செலவிற்கு மட்டுமே பொருந்தும். கா.

[6]12-6-1888 தேதி, 525, வ.து.வா.செ.
[10]4-12-1891 தேதி, 1050, அ.ஆ.
[10]16-9-1898 தேதி, 527, அ.ஆ.
[10]2-10-1899 தேதி, 237, வ.து.வா.செ.
30-3-1904 தேதி, 351, அ.ஆ.
[9]3-5-1904 தேதி, 83, வ.து.வா.செ.
கா15-2-1908 தேதி, 28, வ.து.வா.செ.
கி23-8-1915 தேதி, 251, வ.து.வா.செ.

(2) மனைத் தீர்வை வசூலிக்கப் பெற்றுவரும் நகரத்தின் எல்லைக்குள் சேர்க்கப் படாத கிராமங்களின் நத்தங்களை விரிவாக்குவதற்காக ஒன்று சேர்ந்தார்ப் போலுள்ள நிலப் பகுதியின் உரிமையை அரசினர் அடைந்த பின்னர், அந்நிலம் நத்தப் புறம்போக்காக மாற்றப்பட்டு தீர்வை செலுத்தாமல் வைத்துக் கொள்ளப் படத் தக்க வீட்டு மனைகளாக ஒப்பட்டு செய்யப்பட வேண்டும். இத்தகைய கிராமங்களில் நத்தப் புறம்போக்கிலுள்ள வீட்டு மனைகள் அம்மனைகளை அனுபோகம் செய்து வருபவருக்குச் சொந்தமில்லை யென்றால், அவர்களுக்காகவே அத்தகைய இடங்களில் உரிமை அரசினரால் பெறப்படும் போது, உரிமை பெறப்படும் நிலத்திற்குத் தீர்வை விதித்தல் கூடாது. ஆயினும், அரசுக்குடி முறை நிலங்களில் இருக்கும் வீட்டு மனைகளின் நில உரிமைப் பெறப்படும்போது, நில உரிமை பெறுவதற்கு முன் அந்த நிலத்திற்கு தீர்வை விதிக்கப்பட்டிருந்தால் அதேத் தீர்வை விதித்தல் வேண்டும்.

9-6-1928 தேதி, 1242, அ.ஆ.வரு.
25-6-1928 தேதி, 56, வ.து.வா.செ.

7. வீட்டு மனை கொடுக்கப்பட்ட பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கை—(1) ஒப்படைப் பதிவேடு.—தாசில்தார் அலுவலகங்களிலும் கிராம அலுவலர் களும XVII-ஆவது இணைப்பிலுள்ள பாரத்தில் ஒப்படை பெற்ற வீட்டு மனைகளைக் காண்பிக்கும் பதிவேடு ஒன்றை எழுதி வைத்து வருதல் வேண்டும்.

நி. ஆ. 21:7]

ஒவ்வொன்றிலும் பிறப்பிக்கப்பெற்ற ஆணைப் பகுதி நகலை XVI ஆவது இணைப்பில் உள்ள பதிவேட்டில் பொருத்தமான கட்டங்களில் பதிவு செய்ய வேண்டும். இதன் நகல் 2(v) பத்தியின் கீழ்க் கிராம அலுவலர்கள் மேல் அனுப்பிய XVI-ஆவது இணைப்பிலுள்ள இரண்டாவது படிவத்தில் பொருத்தமான கட்டங்களில் அதை அவர்களுக்குத் திருப்பி அனுப்புமுன், பதிவு செய்துவிட வேண்டும். கிராம அலுவலர்களும், தங்கள் அலுவல் முறையில், தாங்கள் எழுதி வைத்து வரும் XV-ஆவது இணைப்பிலும் XV I இணைப்பிலுமுள்ள படிவங்களில் பொருத்தமாகவுள்ள கட்டடங்களில் பதிவு செய்ய வேண்டியவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். தாசில்தார் அலுவலகங்களிலும் XXI-ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் வீட்டு மனைகளுக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்களைக் காட்டும் பதிவேடு எழுதி வைத்தலவருதல் வேண்டும்.

15-11-1937 தேதி, 125, வ.து.வா.செ.அச்சு.
21-11-1935 தேதி, 2798, அ.ஆ.வரு.பல.
30-11-1939 தேதி, 162, வ.து.வா.செ.அச்சு.

(ii) கு ஒப்படை ஆணை பிறப்பிக்க வேண்டிய முறை.—இந்தப் பிரிவின் கீழ்ச் செய்யப்படும் வீட்டு மனை ஒப்படைகள் எல்லாவற்றிலும் -ஆவது அல்லது XIX-ஆவது இணைப்பில் உள்ள படிவங்களில் எது எதற்குப் பொருத்தமோ அப்படிவத்தில் தாசில்தார் தாமே கையெழுத்திட்ட ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். கோட்டாட்சியாளர், வெளிச்சம் காற்றோட்டம் ஆகிய இவை சம்பந்தமாகக் கூடுதலான நிபந்தனைகளை 99 ஆவது நில ஆணையை அனுசரித்து விதிக்கலாம். அத்தகைய நிபந்தனைகளைக் கொடை பெற்றிருப்பவர் நிறைவேற்றுவிடின் அவர் அக் கொடையின் உரிமையை இழந்துவிடுவதாக ஒரு ஒப்பத்தத்தை எழுதிக் கொடுக்குமாறு அன்னாரைக் கேட்கலாம்.

16-10-1915 தேதி, 278, வ.து.வா.செ.வரு.
6-5-1920 தேதி, 41, வ.து.வா.செ.
15-11-1937 தேதி, 125, வ.து.வா.செ.
15-9-1933 தேதி, 1665, அ.ஆ.வரு.பல.
4-10-1933 தேதி, 95, வ.து.வா.செ.அச்சு.

1936-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதி, 859 எண். அரசாங்க வளர்ச்சித் துறை ஆணையினால் அநுமதிக்கப் பெற்றுள்ள திட்டத்தின் கீழ் நிலங்களின் உரிமை பெற்று, அத்தகைய நிலங்களையெல்லாம் வீட்டு மனைகளாக அட்டவணையிற் கண்ட ஜாதியினருக்கும், நிலமில்லாதத் தொழிலாளர்களுக்கும், அவர்கள், அட்டவணையில் கண்ட ஜாதியராக இருப்பினும் அவ்வாறு இல்லாவிடினும் அவ்வகையில் அவர்களுக்கு வழங்கப்பெறும் ஒப்படையின் ஆணைத் தனிப் படிவம் வருவாய்த் துறை வாரியத்தின் 90 ஆவது நில ஆணையின் XIXஅ ஆவது இணைப்பில் உள்ளது. சுத்தமும் சுகாதாரத் துப்புரவும் நிலவ வேண்டும் என்பதற்காகக் கூடுதலான நிபந்தனைகளை விதித்தல் அவசியமென்று தோன்றும்போது, வருவாய்த்துறை வாரியத்தின் 99 ஆவது நில ஆணையை அனுசரித்துக் கூடுதலான நிபந்தனைகளைப் படிவத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த உள் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள ஒப்படை களைப் பொருத்தவரையில் ஒப்படை ஆணையின் 12 ஆவது நிபந்தனையை அனுசரித்து நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு நிலத்தில் பிரவேசிப்பதற்கான

ஆணையை பிறப்பிக்கத் தக்க அதிகாரம் கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. இந்த நிபந்தனையின் கீழ் கொடை பெற்றிருப்பவர் செலுத்திய வைப்புத் தொகையை 100 ரூபாய் வரையில் கலெக்டரும் 500 ரூபாய் வரை தொழில் ஆணை யாளரும் பறிமுதல் செய்ய ஆணை பிறப்பிக்கலாம்.

28–11–1939 தேதி, 3181, அ.ஆ.வரு.
28–8–1940 தேதி, 2057, அ.ஆ.வரு. பலவ.
2–10–1940 தேதி, 102, வ.து.வா.செ.
16–5–1957 தேதி, 2042, அ.ஆ.பல.
1–7–1957 தேதி, 848, வ.து.வா.செ. பலவ.

அமைப்புப்பெற்ற குடியிருப்புகளுக்கான வீட்டுமனைகள் முதல் முதலில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழக்கமாக ஒப்படை செய்யப்படும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படை செய்யப் பெற்றால், கூட்டுறவுச் சங்க செயற் குழுவினர் பகரும் பரிந்துரையிலல்லது வேறு வகையில் ஒப்படை பெறுவதற்கானவர் நன்னடத்தை உடையவராகவும், அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக்கொள்வதிலும் குடியிருப்புக்காக வகுக்கப் பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொண்டிருக்கிறார் என்பதாகவும் மூன்று ஆண்டு காலத்திலாவது வீட்டிடத்தைச் சுகாதாரத் துப்புரவு முறையில் வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதாகவும் கோட்ட ஆட்சியாளர் மன நிறைவு கொள்ளும் வகையில் கண்டுகொள்வதற்கு முன்னதாகத் தனிப்பட்ட ஒப்படை செய்தல் கூடாது. கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் பெருவிடில் தனிப்பட்ட ஒப்படைகள் ஆரம்பத்திலே செய்துவிடலாம். ஆனால் அவை தற்காலிகமாகவே இருக்க வேண்டும். ஒப்படை பெறுவதற்கானவர், நல்ல நடத்தை உடையவராகவும் அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும் குடியிருப்புக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகவும் வீட்டிடத்தை மூன்று ஆண்டு காலத்திலாவது சுகாதாரத்துப்புரவு முறையில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதாகவும் கோட்ட ஆட்சியாளர் மனநிறைவு கொள்ளும் வகையில் கண்டு கொள்ளும் வரையில் அவருக்குத் தனிப்பட்ட வகையில் வீட்டு மனை ஒப்படையை நிலையானதாகச் செய்தல் கூடாது. இவற்றில் XX ஆவது இணைப்பின் படிவத்தில் தனி நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

12–12–1940 தேதி, 3092, அ.ஆ.பல.
20–2–1941 தேதி, 16, வ.து.வா.செ.அச்சு.

குறிப்பு.—வழங்கப்பட்ட இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்காக விதிக்கப் படும் நிபந்தனைகளில், கட்டடத்திற்கு முன்புறத்திலும் பின்புறத்திலும் நிலம் காலியாக விட வேண்டுமென்ற நிபந்தனைக் கட்டுப்பாடு எப்பொழுதுமே விதித்தல் வேண்டும்.

26–5–1937 தேதி, 58, வ.து.பா.செ.அச்சு.

(iii) நிலத்தில் திரும்ப பிரவேசிக்கும் உரிமை.—ஒப்படை ஆணை அல்லது எத்தகைய துணை ஒப்பந்த ஏற்பாடுகளை அனுசரித்து நிலத்தில் பிரவேசிப்பதற்கான உரிமையைக் கோட்ட ஆட்சியாளரின் ஆணையைக் கொண்டுதான் நிறைவேற்றத்தக்கது. இவ்வாறு பிரவேசிப்பதற்கு ஆணை

தி. ஆ. 21:7-8]

பிறப்பிப்பதற்கு முன்பாக ஒப்படை பெற்றிருப்பவரைக் கண்டுபிடிக்க முடியு மானால் கோட்ட ஆட்சியாளர் தனை காட்டும் முறையில் அவருக்கு ஓரு அறிவிப்பு கொடுப்பதோடு அவ்வறிவிப்பை மாவட்ட அரசிதழிலும் வெளி யிடலாம். அரசன நலத்துறையினால் ஒப்படை செய்யப்பட்ட வீட்டு மனைகளைப் பொறுத்த வரையில், கோட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை தக்க காரணங்களுக்காக மாவட்ட அரசன நலத்துறை அலுவலர்கள் செலுத்தலாம்.

(1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ஆம் நாளும் 11279 ஆ 2·70·3 எண்ணுமிட்ட அரசுக் குறிப்பாணை.)

(1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ஆம் நாளும் (ஆ) எண்ணுமிட்ட நிலை வருவாய் வாரிய செ.)

(iv) கட்டடம் கட்டுவதற்காக குறிப்பிட்ட காலத்தை நீடிக்கச் செய்தல்.—கோட்ட அலுவலர், தனை காட்டும் முறையிலும் சலுகை காட்டப் பெறுவதற்கான காரணம் காட்டப்பட்டிருக்கும்போதும் ஒப்படை ஆணையின் (2) ஆவது நிபந்தனையில் குறிப்பிட்ட காலத்தை நீடிப்புச் செய்யலாம். சாதாரணமாக ஒப்படை ஆணையை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறை யீட்டின் ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் ஒப்படை பெற்றிருப்பவருக்கு 12 மாதங்கள் அல்லது ஆறு மாத காலம் தக்கவாறு கிடைக்குமாறு இருக்க வேண்டும்.

18-3-1873 தேதி, 401, வ.து.வா.செ.
கு2-8-1928 தேதி, 1738, அ.ஆ.வரு.
2-10-1899 தேதி, 239, வ.து.வா.செ.
கு21-8-1928 தேதி, 87, வ.து.வா.செ.

(v) பதிவுக் கட்டுகளைப் பாதுகாப்பது.—இந்த நிலை ஆணையின் கீழ்ச் செய்யபபடும் விண்ணப்பங்கள் ஒப்படைகள் சம்பந்தமான பதிவுக் கட்டுகளை ஒழுங்கு செய்தல், நிறுத்தி வைத்தல் அல்லது அழித்தல் ஆகிய இவற்றிற்கு 15 ஆவது நிலை ஆணையின் கீழ் வரும் விண்ணப்பங்களுக்கும் ஒப்படை களுக்கும் சம்பந்தப்பட்ட பதிவுக் கட்டுக்களுக்குரிய விதிகளே பொருந்துவன வாம். தாலுகாக்கணக்குகள் நடைமுறை நூலில் 10 ஆவது பத்தியில் உள்ள விவரமான அறிவுரைகளைக் காண்க.

8-12-1928 தேதி, 2822, அ.ஆ.பலவ.
8-1-1929 தேதி, 1, வ.து.வா.செ.

பிரிவு II நகரங்களில் உள்ள வீட்டு மனைகள்.

8. நகரம் என்பதன் விளக்கம்.—இந்தப் பிரிவை பொருத்தமட்டில் [1] எந்த இடமும் அந்த இடத்தில் நகராட்சி [1] அல்லது பாளையம்! சட்டம் நடைமுறையில் இருந்தாலன்றி அல்லது—

(ஆ) (i) சிற்றூர்கள் இருப்பது போல அங்குமிங்குமாகத் தொகுதி களாக அல்லாமல், எறத்தாழ அடுத்தடுத்துள்ள வீடுகளில் வாசம் செய்யும் 5,000 குடிகளுக்குக் குறைந்திராத மக்கள் தொகையைக் கொண்டும்;

[நி. ஆ. 21:8-10

(ii) வியாபார தலம்போன்று தெளிவாகத் தெரியத்தக்கதான நகரத்தின் தோற்றமும் இருந்தால் அன்றி,

அந்த இடம் நகரம் எனப் பாகுபாடு செய்யப்படமாட்டாது.

1897-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதி, 444, வ.து.வா.செ.
1898-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி, 527, அ.ஆ.
1907-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் தேதி, 69, வ.து.வா.செ.

2. நகரங்களின் பெயர்களடங்கிய பட்டியலை விளம்பரம் செய்தல்.—8 ஆவது பத்தியில் உள்ளவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ள நகரங்களின் பெயர்களடங்கிய பட்டியலைக் கலெக்டர் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய வேண்டும். அவ்வப்போது மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் அறிக்கையினால் இப்பட்டியலை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

1897-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ஆம் தேதி, 444, வ.து.வா.செ.
1898-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ஆம் தேதி, 527, அ.ஆ.

10. நகர மனைகளைப் பற்றிய பொதுவான ஏற்பாடுகள்—(i) கட்டடம் கட்டுவதற்காகச் செய்யப்படும் ஒப்பனை என்ன அளவில் இருத்தல் வேண்டும்.—நகரங்களில் அரசினர்க்குச் சொந்தமான நகர மனைகளின் பகுதிகளைக் கலெக்டர்கள் தங்கள் மாவட்டங்கள் அல்லது குறிப்பான நகரங்கள் அல்லது நகரத்தின் குடியிருப்பின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, விதிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்க வேண்டிய அளவை அனுசரித்துக் கீழே 11 முதல் 15 வரையுள்ள பத்திகளில் வகுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட் படுத்தி ஒப்பனை செய்யலாம். இந்த அளவு விதத்தைக் கலெக்டர்கள் அவ்வப்போது தமது யுக்தம் போல் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். ஆனாலும் அத்தகைய மாறுதல் ஒவ்வொன்றும் முன்னதாகவே மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

(ii) துறைமுகங்களுக்கும் இருப்புப் பாதை நிலையங்களுக்கும் அருகில் உள்ள நிலங்கள்.—மேலே (ii) ஆவது பத்தியில் கிராம வீட்டு மனைகளைப் பற்றி வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் நகர மனைகளுக்கும் பொருந்தும்.

1906-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி, 989, அ.ஆ.
1907-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி, 9, வ.து.வா.செ.
1906-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ஆம் தேதி, 456, அ.ஆ.கடல்.
1912-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ஆம் தேதி, 123, அ.ஆ.
1917-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி, 160, வ.து.வா.செ.
1957-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதி, 2042, அ.ஆ.வரு.
1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி, 848, வ.நு.வா.செ.பலவ.

(iii) மலைப் பகுதியிலுள்ள நகராட்சிக் கழகங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகிய இவற்றின் எல்லைகளுக்குள் இருக்கும் நிலங்கள்.—மலைப் பகுதியிலுள்ள நகராட்சிக் கழகங்கள், பஞ்சாயத்துக்கள ஆகிய இவற்றின் எல்லைக்குள் உள்ள நிலங்கள் கட்டடங்கள் கட்டுவதற்காகத் தேவையாகுமெனில், கீழே 11-15 பத்திகளில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரித்து முடிவு செய்தல் வேண்டும்.

1928-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் தேதி, 2079, அ.ஆ.வரு.பலவ
1928-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ஆம் தேதி, 101, வ.து.வா.செ.

நி. ஆ. 21:10]

(iv) அனுமதி பெறுமல் நகர மனைகளைத் தமதாக்கிக் கொள்ளப் படுவதில் செய்ய வேண்டியது யாது.—முன்னதாகவே அனுமதி பெற்றுக் கொள்ளாமல் எவரும் அரசினருக்குச் சொந்தமான நகர மனையைத் தம்முடையதாக்கிக் கொள்ளக்கூடாது என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கும் வகையில் அரசினருக்குரிய தனிச் சிறப்பதிகாரத்தைக் கலெக்டர் நிலைநாட்ட வேண்டும். இத்தகைய நகர மனையின் யாதொரு பாகமும் தமதாக்கிக் கொள்ளப்பட்டால், அவ்வனுபோகமும் தடுக்கத்தக்கது என்றும், அல்லது அதன் இருப்புரிமையை ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் 26 ஆவது நில ஆணையில் கண்டுள்ள அறிவுரைகளை அனுசரித்தும் 1905-ம் ஆண்டு I.I ஆவது சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1912-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ஆம் தேதி, 351, அ.ஆ.
1928-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதி, 2722, அ.ஆ.வரு.பலவ.
1915-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ம் தேதி, 108, வ.து.வா.செ.
1928-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ஆம் தேதி, 138, வ.து.வா.செ.

(v) கிராம அலுவலர்களின் பொறுப்பு.—ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதும் அவற்றைப் பற்றி அறிக்கையனுப்புவதும் கிராம அலுவலர்களின் பொறுப்பாகும்.

(vi) நகர மனைகளில் பயிர் செய்தல்.—வீட்டு மனைப் புறக் கடைகளின் எல்லைகள் இவை என ஏற்றுக் கொள்ளப்பெற்ற தனிப்பட்ட சொந்த இடங்களில் காய்கறிகள், புகையிலை முதலியவை பயிர் செய்வதில் தலையிட வேண்டியதில்லை. ஆனால் நகர மனையில் சொந்தமானதல்லாத எந்தப் பகுதியிலும் பயிர் விளைவித்தல் சந்தேகமின்றி தகாத செயலாகும். [1] நீண்ட காலச் சுவாதினத்தின் காரணமாக நடவடிக்கை எடுப்பதற்குத் தடை யிருந்தாலன்றி அல்லது நடவடிக்கை எடுப்பது நன்று அன்றென்று தோன்றினால், அன்றி, 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தின் கீழ் 15 ஆவது நில ஆணை 26 ஆவது பத்தியிலுள்ள அறிவுரைகளை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயம் செய்வதற்கு நிலத்தை ஒப்படை செய்யக்கூடாது. இத்தகைய விவசாயத்திற்கு இத்தகைய இடத்தைப் பொருத்த மட்டில் ஒப்படை ஆணை ஒன்றும் பிறப்பிக்கக் கூடாது.

[1]1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ஆம் தேதி, 87, வ.து.வா.செ.
[1]1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் தேதி, 1738, அ.ஆ.வரு.
[2]1906-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ஆம் தேதி, 279, வ.து.வா.செ.
1957-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதி, 2042, அ.ஆ.பல.வரு.
1957-ஆம் ஆண்டுமே மாதம் 1-ஆம் தேதி, 848, வ.து.வா.செ.பலவ.

(vii) நகர மனை இடத்தை விரிவாக்குதல்.—தற்போதைய நகர மனை குடியிருப்போர்கள் தேவைகளுக்குப் போதாதெனில், அதனுடன் அண்மை யிலுள்ள அரசாங்க நிலத்தை கலெக்டர்கள் சேர்த்துக் கொள்ளலாம். அதே நோக்கில், அவர்கள் எந்த எந்த மாவட்டங்களில் அரசினருக்குச் சொந்த மானதல்லாத நிலத்தை நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் வாங்குவது தக்கதோ அம்மாவட்டங்களில் அவ்வாறு செய்யலாம்.

குறிப்பு.—அரசாங்க நிதியிலிருந்து உதவித் தொகை கொடுக்கப்பட்ட பின்னர் நிலம் அரசினரால் சுவாதீனம் செய்யப்பட்ட நிலப் பகுதி வீட்டு

[நி. ஆ. 21:10

மனைக்காகத் துண்டிக்கப்பட்டு ஒப்படை செய்யப்படுவதிலும், மனைத் தீர்வை வசூலிக்கப் பெற்று வரும் நகரத்தின் எல்லைக்குள் சேர்க்கப் பெற்றுள்ள கிராமங்களின் நத்தங்களை விரிவாக்குவதற்காக அவ்வாறு நில உரிமை பெறும்போதிலும் அட்டவணையில் கண்ட வகுப்பினர்களுக்காக அல்லது மற்றவர்களுக்காகப் பெரிய நிலப் பகுதி அரசாங்கத்தின் செலவில் உரிமை பெறப்பட்டால் அல்லது அரசாங்கத்தால் உரிமை பெறப்பட்டால், அத்தகைய பெரும் பகுதி நிலம் நத்தம் புறம்போக்காக மாற்றப்பட்டு அப்பகுதியிலிருந்து ஒப்படை செய்யப்பட்ட வீட்டு மனைகள் ஆண்டுதோறும் மனைத் தீர்வை செலுத்துவதற்குட்பட்டனவையாகும்.

[3] 1928-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ஆம் தேதி, 1242, அ.ஆ.வரு.
[3] 1928-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25-ஆம் தேதி, 56. வ.து.வா.செ.
1957-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதி, 2042, அ.ஆ.வரு.பல.
1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி, 848, வ.து.வ.செ.பலவ.

(viii) சுகாதார துப்புரவுக்காகச் செய்யத்தக்கன.—நகரங்களில் குட்டைகள் கட்டிக் கொள்வதற்காக நகர மனைகள் வழங்குவதில், தெருக்கள் அகலமாகவும் நேராகவும் இருப்பதற்கும், அளவு மீறிய கூட்டத்தைத் தடுப்பதற்காகவும் 99 ஆவது நில ஆணையில் வகுக்கப்பட்டுள்ள பொது விதிகளைக் கோட்ட ஆட்சியாளர்கள் கருத்திற்கொண்டு இயன்ற வரையில் அவற்றை மேற்கொள்ளவேண்டும்.

1899-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி, 239, வ.து.வா.செ.
1928-ஆம் ஆண்டு ஆக்டோபர் மாதம் 26-ஆம் தேதி, 2525, அ.ஆ.வரு.பல.
1900-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி, 139, அ.ஆ.
1928-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ஆம் தேதி, 123, வ.து.வா.செ.
1957-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதி, 2042, எண். அ.ஆ.பல.
1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ஆம் தேதி, 848, எண். வ.து.வா.செ.பல.

நகராட்சி நகரங்களில் குடிசைகள் அமைந்த பகுதிகளில் 1920 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிக் கழகச் சட்டம் 170(2) ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு 20 அடி குறுமம் அகலம் இருக்க வேண்டிய தெருக்களைத் தவிர மற்றவற்றில் தெருக்களின் குறுமம் அகலம் சாதாரணமாக 40 அடி இருக்க வேண்டும். இவற்றிற்குரிய யாதொரு நகாமைப்புத் திட்டமும் நகாமைப்புத் துறை நெறியாளரால் ஏற்றுக் கொள்ளப் பெற்றதாக இருக்க வேண்டும். இதே விதி 1920 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் கழகங்களின் சட்டத்தின் 206 ஆவது பிரிவினால், 1920 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தில் ஆவது அத்தியாயத்தில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பெற்ற கிராமங்களில் செய்யப் பெறும் ஒப்படைகளுக்கும் மற்ற நகரங்களில் செய்யப் பெறும் ஒப்படை களுக்கும் பொருந்தும்.

1931 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி, 417, அ.ஆ.வரு.
1936 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி, 2223, அ.ஆ.வரு.பல.
1931 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி, 19, வ.து.வா.செ.
1936 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி, 136, வ.து.வா.செ.
1957 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் தேதி, 2042, எண். அ.ஆ.வரு.பல.
1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி, 848, எண். வ.து.வா.செ.பலவ.

நி. ஆ. 21:11]

11. விண்ணப்பங்களை முடிவு செய்வதில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை—(1) சென்னை மாநகரில் அரசினருக்குரிய காலி நிலத்திற்கான விண்ணப்பங்களை முடிவு செய்வதில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.

(அ) சென்னை மாநகரில் அரசினருக்குரிய காலி நிலம் ஒப்படை செய்யப்படுவதன் பேரில் அத்தகைய நிலம் (1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு 12 ஆம் சட்டமாகிய) 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர நிலவரிச் சட்டம் 29 ஆவது பிரிவின்கீழ் விலக்கப்படுமிடத்து அத்தகைய நிலத்திற்காக வரப் பெறும் விண்ணப்பங்களை முடிவு செய்வதற்கும் அத்தகைய நிலங்களின் மீது மனைத் தீர்வையைத் திருத்தி அமைப்பதற்கும் வகுக்கப்பட்ட விதிகளை ஆவது இணைப்பில் காணலாம்.

(ஆ) மற்ற நேர்வுகளிலெல்லாம் சென்னை மாநகரில் அரசினருக்குரிய காலி நிலத்திற்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களை முடிவு செய்வதற்கு வகுக்கப்பட்ட விதிகளை XXIIஅ ஆவது இணைப்பில் காணலாம்.

(2) சென்னை மாநகருக்கு வெளியில்.—சென்னை மாநகருக்கு வெளியிலுள்ள நகரங்களில் வீட்டு மனைகளுக்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களில் பின்வரும் முறையை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் :—

(i) விண்ணப்பங்களில் எழுதப்பட வேண்டியவை.—வீட்டு மனைக் காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களில் வேண்டிக் கொள்ளும் நிலம் எது என்பதும் அது எந்த உபயோகத்திற்கு, அதாவது கூரை வீடு, ஓட்டு வீடு அல்லது மாடி வீடு அல்லது மாட்டுத் தொழுவம் என்பது போன்றவற்றிற்குத் தேவை என்பதும் எழுதப் பெற்றிருக்க வேண்டும்.

1932 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி, 790, அ.ஆ.வரு.பலவ.
1932 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி, 19, வ.து.வா.செ.அச்சு.

(ii) எந்த அலுவலரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.—விண்ணப்பங்கள் முதல் முதலில் கிராம அலுவலர்களிடம் கொடுத்துக் கொள்ளலாம். அவர்கள் XVI ஆவது இணைப்பின் படிவத்தில் அறிக்கையை இரண்டு பிரதிகளில் தாசில்தாருக்கு மேலனுப்புவார். தாசில்தாருக்கு நேராகச் செய்துகொண்ட விண்ணப்பங்களில், அதே படிவத்தில் அறிக்கை பெறப்படுவதற்காக, அவ் விண்ணப்பங்களைக் கிராம அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டும்.

1937 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதி, 125, வ.து.வா.செ.அச்சு.
1957 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் தேதி, 2042, எண்.அ.ஆ.வரு.பல.
1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி, 848, எண்.வ.து.வா.செ. பலவ.

(iii) பதிவு செய்தல்.—பக்கங்கள் தொடர்ச்சியாக எண்ணிடப்பெற்று தைத்துக் கட்டப்பெற்றுள்ள ஒரு பதிவேட்டில் விண்ணப்பங்களைக் கிராம அலுவலர்கள் தேதி வரிசையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அது போன்ற பதிவேடுகள் தாசில்தார் அலுவலகங்களிலும் எழுதி வைக்கப் பெற வேண்டும்.

[நி. ஆ. 21:11

(iv) அறிக்கை.—நகரம், எந்த நகராட்சி அல்லது பஞ்சாயத்தின் ஆட்சி வரம்புக்குள் இருக்கிறதோ அந்த நகராட்சிக்கு அல்லது பஞ்சாயத்திற்கு கிராம அலுவலர்களின் அறிக்கையின் நகல் அனுப்பப்பட்டு, அவை ஆட்சேபனைகள் எவையேனும் தெரிவிக்குமாறு அவற்றைத் தாசில்தார் கவனித்துப் பார்க்க வேண்டும். நகராட்சி அல்லது பஞ்சாயத்து, தனது கருத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தாசில்தார் இரண்டு மாத பெருமக் காலம் அனுமதிக்கலாம். இந்தக் கால அளவை ஓட்டிஞற்போல பதில் வந்து சேராவிடில் ஒப்படையைப் பற்றி அந்தக் கழகத்திற்குத் தடையில்லையென்று கருதிக் கொள்ளலாம்.

1931 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி, 1636 என், அ.ஆ.வரு. பல.

1931 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி, 66 என், வ.து.வா.செ. அச்சு.

(v) கொடுக்க முடிவு செய்தல்.—கிராம அலுவலர்களின் அறிக்கையும், நகராட்சி அல்லது பஞ்சாயத்து அனுப்பிய குறிப்புரையும் தம்மிடம் வரப் பெற்ற பின்னர், தாசில்தார் விசாரணை ஏதாவது செய்ய வேண்டுமெனில் அவ்விசாரணையைச் செய்து முடித்துக் கொண்டு நகர மனை இடத்தை இந்தப் பத்தியின்கீழ் ஒப்படை செய்வதற்கு மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் தடையில்லையா என்பதைத் தாமே கவனித்துப் பார்க்க வேண்டும். நகர மனை நிலம் முன்னமே நில அளவை முறையில் நில அளவை செய்யப்படாமல் இருக்குமானால், உடனடியாக அத்தகைய நில அளவை செய்விக்கத் தாசில்தார் ஏற்பாடு செய்ய வேண்டும். மற்ற நகரங்களில் மேலே 2(X) ஆவது பத்தியிலே விதிக்கப்பட்டுள்ள மாற்று அளவு வரைப் படங்களைத் தயார் செய்தல் வேண்டும். இந்த வேலை முடிவு பெற்ற பின்னர், இவ்விதிகளை அனுசரித்து நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்றிருக்கும் மனையிடம் ஒவ்வொன்றும் ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதற்கு முன் அதற்குரிய மனைத் தீர்வையைத் தாசில்தார் கணக்கிட வேண்டும். ஒப்படை செய்யப்பட்ட நகர மனைகளின் பரப்பு ஒரு சென்ட்டிடத்திற்கு குறைந்ததாக இருப்பின், விதிக்கப்பட வேண்டிய மனைத் தீர்வை ஒரு சென்ட்டிடத்திற்கு விதிக்கப்பட வேண்டிய தொகையாகும். இவ்வாறு விதிக்கத்தக்க மனைத் தீர்வை வீதம் மாவட்டத்தில் இதற்காக ஏற்றுக் கொள்ளத்தக்கதான குறிப்பிட்ட விவசாயத் தீர்வை யாகும். 1(IXXII ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்ட அறிவிக்கையைத் தமுக்கடிப்பிஞல் நகரத்தில் விளம்பரம் செய்வதுடன் விண்ணப்பம் செய்து கேட்டுக் கொண்ட நிலத்தில் பகிரங்கமான இடத்தில் ஓட்டி வைக்க வேண்டும்.

1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ஆம் தேதி, 2112 அ.ஆ.வரு. பல,
1936 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி, 2081, அ.ஆ.வரு.பல.
1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி, 45, வ.து.வா.செ.
1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் தேதி, 99, வ.து.வா.செ.

குறிப்பு.—மேலே குறிப்பிட்டுள்ள குறைபாடம் தீர்வைத் தொகை வருங் காலத்தில் செய்யப்படும் ஒப்படைகளுக்குப் பொருந்துமே அன்றி, கடந்த காலத்திய ஒப்படைகளுக்குப் பொருந்தாது. 1937-ம் ஆண்டு மார்ச்சு மாதம்

நி. ஆ. 21:11]

8 ஆம் தேதி 436 எண், அரசாங்க வருவாய்த் துறை ஆணை பிறப்பிக்கப்படு வதற்கு முன்பு வழங்கப்பெற்றவற்றில், ஒரு சென்ட் அல்லது அதற்குக் குறைந்த பரப்புள்ள நிலத்திற்குக் கூறுமம் நிர்வை 13 நயா பைசாவே தொடர்ந்து இருந்து வரும்.

1916 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி, 51, வ.து.வா.செ.அச்சு.
1936 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி, 2677, வ.து.வா.செ.பலவ.
1936 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் தேதி, 1624, அ.ஆ.வரு.பல.
1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி, 45, வ.து.வா.செ.அச்சு.
1937 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் தேதி, வ.து.வா.செ.அச்சு.

(vi) ஏல விற்பனை.—14ஆவது பத்தியின்கீழ் வரும் இனங்களைத் தவிர, நகரத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமாகக் காலியாக இருக்கும் எல்லா நிலங்களையும் பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும். தாசில் தாரால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப் பெற்ற வேறொரு அலுவரால் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தேதியில் அல்லது தக்க காரணத்தை முன்னிட்டு ஏல விற்பனை ஒத்தி வைக்கத் தக்கதாலும், இன்ன தேதியில் ஒத்தி வைக்கப் பெற்றுள்ளதெனப் பொது அறிவிப்பு செய்விக்கப் பெற்ற தேதியில் அந்த ஏல விற்பனை செய்யப்பெற்று, அதிகமான விலை கூறுபவருக்கு அந்த நிலம் கொடுக்கப்படவேண்டும். விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டிருக்கும் மனை யிடம் உட்பட்ட நிலத்தை வீட்டு மனைகளாகப் பிரிப்பதற்கும், அதில் சாலைகள் அமைப்பதற்கும், அதை வேறு வகையாகக் குடியிருப்புக்குத் தகுதியாக்கு வதற்கும் செய்யப்பட்ட செலவுத் தொகையின் விதாச்சாரப் பகுதியை துவக்க விலையாக வைத்து ஏல விற்பனை செய்ய வேண்டும். நகராட்சிச் சட்டம் 175ஆவது பிரிவை அல்லது வேறு சட்டத்தை அரசாங்கம் அனு சரித்துச் சாலை அமைக்கவோ அல்லது நிலத்தைக் குடியிருப்புக்குத் தகுதி யாகச் செய்யக் கடமைப்பட்டிருந்தால் அதற்கான மதிப்பீட்டுச் செலவுத் தொகை அல்லது அதன் விதத்தொகையை ஏலத்தின் துவக்க விலையாக வைத்துக் கொள்ள வேண்டும். நகர நில அளவை முறையில், அளவை செய்யப்பெற்ற நகரங்களில் ஏல விற்பனையில் நகர மனையை எடுத்தவர் ஏலத் தொகையோடு சங்கிலி அளவை நடைமுறை நூலில் கண்டுள்ள் விதிகளை அனு சரித்து நில அளவை எல்லை வரையறை செலவையும் செலுத்த வேண்டும். மற்ற நகரங்களில் மேலே 2 (IX) பத்தியில் வகுக்கப்பட்டுள்ளவாறு நில அளவைச் செலவையும் எல்லை வரையறைச் செலவும் செலுத்தப்பட வேண்டும்.

1934ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் தேதி, 2265, அ.ஆ.வரு.பல.
1938ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி, 1023, அ.ஆ.வரு.பல.
1935ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் தேதி, 2944, அ.ஆ.வரு.
1934ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் தேதி, 168, வ.து.வா.செ. அச்சு.
1939ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் தேதி, 48, வ.து.வா.செ. அச்சு.
1936ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ஆம் தேதி, 30, வ.து.வா.செ.அச்சு.

[நி. ஆ. 21:11

குறிப்பு.—மேலே சொல்லிய செலவைத் தல ஆட்சிக் கழகம் செய்திருக்குமானால் அதற்காக வசூலிக்கப்பெற்ற தொகையைச் சம்பந்தமான தல ஆட்சிக் கழகத்திற்கு வரவு வைக்க வேண்டும்.

1918-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ஆம் தேதி, 17ட, வ.து.வா.செ.

(vii) வைப்புத் தொகை.—நிலத்தை ஏல விற்பனையில் எடுத்தவர் ஏலத் தொகையில் 15 சதவீதம் உடனே வைப்புத் தொகையாகச் செலுத்துவதுடன் மீதி விற்பனைத் தொகையையும் (VI) ஆவது உட்பிரிவின் கீழ் நில அளவைச் செலவுத் தொகையையும் எல்லா வரையறைச் செலவு தொகை இருப்பின் அதையும் ஏல விற்பனை ஆன தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குச் செலுத்தாவிடில் வைப்புத் தொகையை இழந்து விட ஏல விற்பனையில் எடுத்தவர் சம்மதிப்பதாக ஒப்பந்தம் ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று அன்னரைக் கேட்க வேண்டும்.

(VIII) ஏலத்தை உறுதி செய்தல்.—ஏல விற்பனை முடிவை உடனடியாகக் கோட்ட ஆட்சியாளர்க்குத் தெரிவிக்க வேண்டும். (IX) ஆவது உட்பிரிவில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாட்டிற்கிணங்க அதை உறுதி செய்ய அல்லது வேறு தக்க காரணத்திற்காகத் தம் யுக்தம் போல அதைத் தள்ளுபடி செய்ய அவர் அதிகாரம் வகித்துள்ளார். கூரை வீடுகள் கட்டுவதற்கான ஒப்படை ஆணைகள் தீ விபத்து நேரிடக் கூடிய இடங்களில் இருப்பின் அல்லது முன்னமே உள்ள கட்டடங்களுக்கு அருகில் கூரை வீடுகள் இருக்கத்தகா என்றால், கோட்ட ஆட்சியாளர் அவ்விடங்களில் கூரை வீடுகள் கட்டுவதற்காக வழங்கப்பட்ட கொடைகளை உறுதி செய்ய மறுக்கலாம்.

(ix) அரசினர் ஒப்பளிப்பு எப்பொழுது பெறவேண்டும்.—5,000 ரூபாய்க்கு அதிகமான மதிப்புள்ள நிலத்தின் இருப்புரிமை விற்பனைகள் வருவாய்த்துறை வாரியம் உறுதி செய்வதற்குள்ளானவை. மதிப்பு 10,000 ரூபாய்க்கு அதிகமானால், விற்பனை அரசினர் உறுதி செய்வதற்குள்ளாகும். சிறப்பான தன்மைகள் உள்ளவற்றில் அத்தன்மைகளை முன்னிட்டு அரசினர் ஆணைகளைப் பெறுவது விரும்பத் தக்கதென்றால், அரசின் ஒப்பளிப்பைப் பெறவேண்டும்.

1899ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதி, 239, வ.து.வா.செ.
1899ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் தேதி, 847, அ.ஆ.
1909ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் தேதி, 3505, அ.ஆ,
1910ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் தேதி, 7, வ.து.வா.செ.
1893ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் தேதி, 274, வ.து.வா.செ.
1911ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9ஆம் தேதி, 28, வ.து.வா.செ.
1906ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி, 129, வ.து.வா.செ.
1900ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17ஆம் தேதி, 139, அ.ஆ.
1902ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி, 80, வ.து.வா.செ.
1915ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28ஆம் தேதி, 107, வ.து.வா.செ.
1928ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி, 254, வ.து.வா.செ.
அ1929ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20ஆம் தேதி, 854, வ.து.வா.செ. பலவ.
1929ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1ஆம் தேதி, 432, அ.ஆ.வரு.பலவ.

நி. ஆ. 21:12-14]

12. **எந்தத் தேதியிலிருந்து மனைத் தீர்வை விதிக்க வேண்டும்.**—மனைத் தீர்வை செலுத்துவதற்குட்பட்டு விவசாயம் அல்லாத மற்றக் காரியங்களுக்காக நிலம் புதிதாக ஒப்படை அல்லது விற்பனை செய்யப்பட்டவற்றில் நிலத்தில் சுவாதீனம் கொடுக்கப்படாவிட்டால், நிலம் கொடுக்கப்பட்ட தேதியில் பசலி ஆண்டில் அவ்வாண்டு முடிவடைவதற்கு மேலும் எத்தனை காலம் உள்ளதோ அந்தக் காலத்திற்கு வீதாசார மனைத் தீர்வை அல்லது முன்பிருந்தே நிலம் ஒப்படை பெற்றவர் அல்லது கிரயத்திற்குப் பெற்றவரது அனுபோகத்திலிருந்தவரின், அனுபோகம் செய்த தேதியிலிருந்து மனைத் தீர்வை விதிக்க வேண்டும். எவ்வகை மனைத் தீர்வை விதிப்பதாயிருப்பினும், ஒரு மாதத்தின் பகுதியை ஒரு மாதமாகக் கணக்கிட்டுக் கொண்டு அவ்வாறே அத்தீர்வையை விதிக்க வேண்டும்.

1925ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் தேதி, 1595, அ.ஆ.வரு.
1925ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ஆம் தேதி, 2313, வ.து.வா.செ.

13. **காலமுறையில் மனைத் தீர்வை மாற்றி அமைத்தல்.**—எந்தத் தாலுகாவில் நகரம் இருக்கின்றதோ அந்தத் தாலுகாவின் அரசுக் குடித் தீர்வை விதிப்பு மாற்றத்தின் போது, 11 (2) (V)-ஆவது பத்தியில் நிர்ணயம் செய்யப் பெற்ற மனைத் தீர்வை வீதமும் மாற்றி அமைக்கப்படுவதற்குள்ளாகும்.

1898ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் தேதி, 527, அ.ஆ.
1899ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதி, 239, வ.து.வா.செ.
1827ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8ஆம் தேதி, 436, அ.ஆ.வரு.
1827ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் தேதி, 250, அ.ஆ.வரு.

14. **பகிரங்கமான ஏல விற்பனை செய்தல் எப்பொழுது தவிர்க்கலாம்.**—கோட்ட ஆட்சியாளராயினும் கலெக்டராயினும் நகர மனைகளின் அனுபோக உரிமையை ஏலத்தில் விற்பனை செய்யாமல் தனிப்பட்ட வகையில் அவற்றை விற்பனை செய்தல் நேர்மையானது என்று கருதுவார் எனில் நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையும் 1,000 ரூபாய்க்கு மேற்படாதெனில், அவர்கள் கீழ்க் கண்டவற்றில் அவ்வாறு செய்யலாம் :—

(i) ஆக்கிரமிப்பு அனுமதி பெறுது செய்யப்பட்டிருந்து அந்த அனுபோகமும் ஆட்சேபனையற்றது என்றால்,

1949ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதி, 1225, அ.ஆ.வரு.பல.
1949ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் தேதி, 27, வ.து.வா.செ. அச்சு.

(ii) மனை இடம் கலெக்டரின் ஒப்பளிப்பை ஆதாரமாகக் கொண்டு தற்காலிகமாக அனுபோகம் செய்யப்பட்டிருந்து நிலையான ஒப்படை செய்யப்படுவதற்கும் தடையில்லையெனில்,

1935 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் தேதி, 82, அ.ஆ.வரு.பல.
1935ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் தேதி, 6, வ.து.வா.செ.

(iii) உடைமையில் உள்ள நிலத்தைச் சேர்ந்துள்ள சிறிய தண்டு நிலம் ஒப்படை செய்யப்படுவதற்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தால்—

[நி. ஆ. 21:14

நிலத்திற்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டுமெனக் குறிப்பிட்ட மனைத் தீர்வையையும், மனைத் தீர்வைக் குட்பட்டதான நிலத்தின் இருப்பு உரிமையின் மதிப்புத் தொகையையும் செலுத்துமாறு விற்பனையில் எடுத்தவரை கேட்க வேண்டும். நில அளவை செய்வதற்கும் வரையறை செய்வதற்குமான செலவுகள் எவையாகிலும் இருப்பின், மேலே 11 (2) (VI) பத்தியில் வகுக்கப் பட்டுள்ளவாறு அத்தகைய விகிதாசாரச் செலவு தொகையும், அந்த மனையை உள்பட நிலத்தை விட்டு மனைகளாகப் பிரிப்பதற்கும் அதில் சாலைகள் அமைப் பதற்கும் அதை வேறு வகையாகத் தகுதியாக்குவதற்கும், செய்யப்பட்ட செலவுத் தொகையின் விகிதாசாரத்தை செலுத்த வேண்டும்.

கோட்ட ஆட்சியாளர் அல்லது கலெக்டர், அனுபோக உரிமையை ஏலத்தில் விற்பனை செய்தலைத் தவிர்த்து விண்ணப்பம் செய்திருப்பவரிடமிருந்து யாதொரு துவக்கத் தொகையின்றி ஆனால் நிலத்திற்கு ஆண்டுதோறும் செலுத்துவதற் குரியதென குறிப்பிட்ட மனைத் தீர்வை செலுத்துவதற்குட்படுத்தி கீழ்க்கண்ட வற்றில் நிலம் வழங்குவது கருத்துக்குகந்தது என எண்ணுவாரெனில் அவர் அவ்வாறே செய்யலாம் :—

(i) விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவர் நிலத்தை ஏலத்தில் எடுக்க முடியாது அவ்வளவு ஏழ்மையான நிலைமையிலிருப்பதால் ஏல விற்பனை யில் அந்த மனை இடத்தை வாங்க முடியாதெனில்,

(ii) உண்மையில் குடியானவர்களாக உள்ளவர்கள் அல்லது விவசாயத் தொழிலாளர்கள் நகரங்களின் சுற்றுப்புறங்களில் காலியாக இருக்கக் கூடிய பெரும் பரப்பு நிலங்களை மனைகளாகக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டால், கோட்ட ஆட்சியாளரும் கலெக்டரும், இவ் வகையில் நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை கீழ்க் குறிப்பிட்ட வரம் புக்கு மேற்படாதவற்றில் தமது அதிகாரத்தைக் கொண்டு நடவடிக்கை எடுப்பார்.

இந்தச் சூழ்நிலையிலும் மற்றெந்தச் சூழ்நிலைகளிலும் வருவாய்த் துறை வாரியம் தணிப்பட்ட வகையில் நகரத்திலுள்ள மனைகள் விற்பனை செய்வது கருத்திற்குகந்தது எனக் கருதினால், நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை ஒவ்வொன்றிலும் கீழ்க்கண்ட வரம்பிற்கு அதிகமாகவில்லை என்றால், வருவாய்த் துறை வாரியம் அவ்வாறு அனுமதிக்கலாம்.

இந்த நிலை ஆணையிலுள்ள அதிகார வரம்புகள் கீழ்க்கண்ட நடப்பு விலை மதிப்பை அனுசரித்துள்ளன.

அதிகாரி.	நடப்பு விலை மதிப்புத் தொகை. ரூ.
கோட்டம் ஆட்சியாளர்	1,000 ரூபாய் வரையிலும்
மாவட்டக் கலெக்டர்கள் (பொறுப் பிலுள்ள வருவாய்த் துறை வாரியம் உறுப்பினர்)	2,500 ஷி.
	5,000 ஷி.
வருவாய்த் துறைவாரியம் (கூட்டு வாரியம்).	10,000 ஷி.

நி. ஆ. 21:14 அ]

நடப்பு விலை மதிப்புத் தொகை 10,000 ரூபாய்க்கு மேற்படுமானால் சாங்கத்தின் ஆணையைப் பெற வேண்டும்.

1935ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதி, 2944 எண். அ.ஆ. வரு.
1893-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி, 470 எண். வ.து.வா.செ.
1898-ம் ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் தேதி, 527 எண். அ.ஆ.
1899ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி, 239 எண். வ.து.வா.செ.
1907ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதி, 9, வ.து.வா.செ.
15-2-1908 தேதி, 28 வ.து.வா.செ.
23-3-1915 தேதி, 107 வ.து.வா.செ.
அ 21-3-1930 தேதி, 533, அ.ஆ.வரு.பலவ.
10-10-1918 தேதி, 176 வ.து.வா.செ.
28-2-1936 தேதி, வ.து.வா.செ.அச்சு.
28-9-1916 தேதி, 2225 அ.ஆ.வரு.
21-10-1916 தேதி, 290, வ.து.வா.செ.
11-12-1918 தேதி, 200 வ.து.வா.செ.
8-3-1919 தேதி, 28 வ.து.வா.செ.
19-7-1932 தேதி, 1325 அ.ஆ.வரு.
25-7-1932 தேதி, 1324 வ.து.வா.செ.பல.
அ 13-8-1930 தேதி, 55 வ.து.வா.செ.
10-10-1918 தேதி, 176 எண். வ.து.வா.செ.
21-11-1928 தேதி, 2722 அ.ஆ.வரு.பலவ.
ஆ 7-10-1930 தேதி, 1894 அ.ஆ.பலவ.
28-11-1928 தேதி, 133 வ.து.வா.செ.
ஆ 13-10-1930 தேதி, 76 வ.து.வா.செ.
9-8-1956 தேதி, 3101 எண். அ.ஆ.பல.
27-3-1956 தேதி, 4031 எண். வ.து.வா.செ.பல.
16-5-1957 தேதி, 2042 எண். அ.ஆ. பல.
1-7-1957 தேதி, 848 எண். வ.து.வா.செ.பலவ.

குறிப்பு.—இந்தப் பத்தியின் கீழ் கொடுக்கப்படும் நிலங்களுக்கு 21—11 (2) 1 முதல் (v) வரையிலுள்ள நில ஆணையில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பொருந்தும். ஆனால் (v) ஆவது உள்பத்தியில் வெளியிடப்பட வேண்டிய அறிக்கை XIII-அ இணைப்பில் உள்ள படிவத்தில் இருக்கவேண்டுமேயன்றி XIII ஆவது இணைப்பி லுள்ள படிவத்தில் இருக்கலாகாது.

21-4-1938 தேதி 1023 அ.ஆ. வரு பல.
13-5-1938தேதி 48 வ.து.வா.செ.அச்சு.

14. (அ) மேல் முறையீடும் ரிவிஷனும்.—ஏல விற்பனையில் கோட்ட ஆட்சி யாளர் பிறப்பித்த ஆணையை எதிர்த்துக் கலெக்டருக்கு மேல்முறையீடு செய்து கொள்ள அனுமதியளிக்கப்படும். ஏல விற்பனைகளையும் தனிப்பட்ட விற்பனை களையும் பொருத்தவரையில் ரிவிஷன் அதிகாரங்களைச் செலுத்தலாம், வருவாய்த்துறை மேல்முறையீடு ரிவிஷன் ஆகிய சம்பந்தமாக 15ஆவது நில ஆணையின் 15 முதல் 20 வரையிலுள்ள பத்திகளில் வகுக்கப்பட்டுள்ள ஏற்

[நி. ஆ. 21:14 அ-15

பாடுகள் இந்த நிலை ஆணையின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்குப் பொருந்தும்.

14. (ஆ) நிலையிலுள்ள மரங்கள், கிணறுகள், கட்டடங்கள் இவற்றின் விலை மதிப்புத் தொகையைச் செலுத்துதல்.—நகர மனையிலுள்ள மரங்கள், கட்டடங்கள், கிணறுகள் முதலியவற்றைப் பொதுவாக நிலத்துடன் சேர்த்துக் கொடுக்க முடிவு செய்ய வேண்டும். நிலத்தை ஏலத்தில் விற்பனை செய்யும் போது, மரங்கள், கட்டடங்கள், கிணறுகள் முதலியன இருக்குமாயின், அவற்றுடன் நிலத்திற்கான தனிக்க விலை, காட்டு வரியை அனுசரித்து நிர்ணயிக்கப் பெறும் மரக் கிரயம் அல்லது தேவையா இருக்கும்போது, 15 ஆவது நிலை 14 ஆவது பத்தியின் கீழ் கலெக்டர் மாற்றி அமைக்கக் கூடிய கிரயத்திற்கும் அதன் மேலுள்ள கட்டட அமைப்பின் மதிப்பிற்கும் குறைந்ததாக இருக்கக் கூடாது. நிலம் தனியாக விற்பனை செய்யப்படும் போது நிலத்திலுள்ள மரங்களின் கிரயத்தை, காட்டு வரி விதத்தை அனுசரித்து அல்லது கலெக்டரால் மாற்றி அமைக்கப்பட்ட மதிப்புத் தொகையை ஒப்படை செய்வதற்கு முன்னதாக ஒப்படை பெறுவோரிடமிருந்து வசூலிக்க வேண்டும். ஆனால், நிலத்தில் மற்றவரால் வைத்து வளர்க்கப் பெற்றவை என்று மெய்ப்பிக்கப்பட்ட மரங்களின் மதிப்புத் தொகையைச் செலுத்துமாறு ஒப்படை பெறுபவரைக் கேட்கக் கூடாது. விண்ணப்பம் செய்திருப்பவர் அல்லது அவர் முன்னோர்களால் அமைக்கப்பட்டன என மெய்ப்பிக்கப்பட்ட கிணறுகள், கட்டடங்கள் முதலியவற்றைத் தனித்து மற்றவற்றின் மதிப்புத் தொகையை அவரிடமிருந்து வசூலிக்க வேண்டும். நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகை வசூலிக்காமல் நகர மனைகள் ஏழைகளுக்கு ஒப்படை செய்யும் போது கலெக்டர் மரக் கிரயம் வசூல் செய்யாது விடுத்தற்கான காரணங்களைக் காட்டி அவ்வாறு செய்யலாம். அல்லது மரங்களின் மதிப்பு அதிகமாக இருக்குமானால், நில ஒப்படைக்கு முன்னதாக மரங்கள் தனியே ஏலத்தில் விற்பனை செய்யப்பட ஆணை பிறப்பிக்கலாம்.

4-11-1935 தேதி, 2618 அ.ஆ.பல.
9-11-1935 தேதி, 147 வ.து.வா.செ.

15. வீட்டு மனை கொடுக்கப்பட்ட பின்னர் எத்தகைய நடைமுறையை மேற்கொள்ள வேண்டும்—(i) ஒப்படைப் பதிவேடு.—தாசில்தார் அலுவலகங்களிலும் கிராம அலுவலர்களும் XVIII ஆவது இணைப்பிலுள்ள படிவத்தில் ஒப்படை செய்யப் பெற்ற நகர நத்தத்தைக் காட்டும் பதிவேட்டை எழுதி வைத்து வருதல் வேண்டும். ஒவ்வொன்றிலும் பிறப்பிக்கப் பெற்ற ஆணையின் பகுதி நகலை XV ஆவது இணைப்புப் பதிவேட்டில் பொருத்தமான கட்டங்களில் பதிவு செய்ய வேண்டும். மேலும், இந் நகலை, 11 (2) பத்தியின் கீழ் XV ஆவது இணைப்பின் இரண்டாவது படிவத்தில் கிராம அலுவலர்கள் மேலனுப்பும் அறிக்கையை அவர்களுக்குத் திருப்பி அனுப்புமுன் அதில் பதிவு செய்துவிட வேண்டும். XVI ஆவது இணைப்பிலும் XVII ஆவது இணைப்பிலுமுள்ள படிவங்களில் கிராம அலுவலர்களும் தாங்கள் எழுதி வைத்து வரும் கொடை பதிவேட்டில் பொருத்தமாகவுள்ள கட்டத்தில் அவசியமான பதிவுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

2-11-1935 தேதி, 2798 அ.ஆ.வரு. பல.
30-11-1935 தேதி, 162 வ.து.வா.செ.அச்சு.
15-11-1937 தேதி, 125 வ.து.வா.செ.அச்சு.
6-5-1920 தேதி; 41 வ.து.வா.செ.

நி. ஆ. 21:15]

(ii) ஒப்படை ஆணை எந்த முறையில் பிறப்பிக்க வேண்டும்.—இந்தப பிரிவின் கீழ் மனை ஒப்படை எல்லாவற்றிலும் XXIV ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் எது எதற்குப் பொருந்துமோ அதில் தாசில்தார் தாமே கையெழுத்திட்ட ஆணையை பிறப்பிக்க வேண்டும். கோட்டாட்சியாளர் வெளிச்சம், காற்றோட்டம் ஆகிய இவற்றைப பற்றிக் கூடுதலான நிபந்தனைகளை 99 ஆவது நிலை ஆணையை அனுசரித்து விதிக்கலாம். மேல் முறையீடு அல்லது ரிவிஷனில் ஒப்படை ஆணை தள்ளுபடி செய்யப்பட்டாலும், அதில் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து அரசினர் நிலத்தை மறு முறையும் எடுத்துக் கொள்வாரெனினும், ஒப்படை பெற்றவர் கட்டியிருக்கக் கூடிய கட்டடங்கள் எவற்றிற்கேனும் அல்லது நிலத்திற்கு செய்திருக்கக் கூடிய மேம்பாடுகள் எவற்றிற்கேனும் ஈடு கேட்க உரிமையில்லை என்பது அதில் தெளிவாகக் கண்டிருக்க வேண்டும். இத்தகைய நிபந்தனைகளை ஒப்படை பெற்றவர் நிறைவேற்றக் கட்டுப்படுவதாகவும் நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினால் ஒப்படையை இழந்து விடச் சம்மதிப்பதாகவும் ஒப்பத்தம் எழுதிக் கொடுக்குமாறு அன்னைக் கேட்க வேண்டும்.

15—9—1933 தேதி, 1665 அ.ஆ.வரு. பல.

4—10—1933 தேதி, 95 வ.து.வா.செ.அச்சு.

அமைப்பு பெற்ற குடியிருப்புகளுக்கு வேண்டிய வீட்டு மனைகளை முதல் முதலில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படை வழக்கமாகச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்படை செய்யப் பெற்றால் கூட்டுறவுச் சங்கச் செயற் குழுவினர் பகரும் பரிந்துரையில் அல்லது வேறு வகையில் ஒப்படை பெறுவதற்கானவர் நல்லடத்தை உடையவராகவும் அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும் குடியிருப்புக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதாகவும் மூன்று ஆண்டுக் காலத்திலாவது வீட்டிடத்தை சுகாதாரத் துப்புரவு முறையில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதாகவும் கண்டு கொள்வதற்கு முன்னதாகத் தனிப்பட்ட ஒப்படை செய்தல் கூடாது. கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் பெறுவிடில் தனிப்பட்ட ஒப்படைகளை ஆரம்பத்திலே செய்து விடலாம். ஆனால் அவை தற்காலிகமாகவே இருக்க வேண்டும். ஒப்படை பெறுவதற்கானவர் நல்ல நடத்தை உடையவராகவும் அவர் வீட்டைக் கட்டுவதிலும், அதை அமைத்துக் கொள்வதிலும் குடியிருப்புக்காக ஒழுங்கு முறை விதிகள் எவையேனும் வகுக்கப் பெற்றிருக்குமானால் அவற்றிற்குட்பட்டு நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகவும், வீட்டிடத்தை மூன்று ஆண்டுக் காலத்திலாவது சுகாதாரத் துப்புரவு முறையில் வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதாகவும் கோட்ட ஆட்சியாளர் மன நிறைவு கொள்ளும் வகையில் கண்டு கொள்ளும் வரையில் அவருக்குத் தனிப்பட்ட வகையில் வீட்டு மனை ஒப்படையை நிலையானதாகச் செய்தல் கூடாது. இவற்றில் XXI ஆவது இணைப்பில் உள்ள படிவத்தின் தனி நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

12—12—1940 தேதி, 3092 எண். அ.ஆ.வரு.பல.

20—2—1941 தேதி, 16 வ.து.வா.செ.அச்சு.

[நி. ஆ. 21:15-16

குறிப்பு.—நகராட்சி அல்லாத நகரங்களில் வழங்கப்பட்ட மனை இடங்களில் கட்டங்கள் கட்டுவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகளில், கட்டடத்திற்கு முன்புறத்திலும் பின்புறத்திலும் வெற்றிடம் விட வேண்டுமென்ற கட்டுப்பாடு எப்பொழுதுமே விதித்தல் வேண்டும்.

12—12—1940 தேதி, 3092 அ.ஆ.வரு.பல.

20—2—1941 தேதி, 16 வ.து.வா.செ.அச்சு.

(iii) திரும்பப் பிரவேசிக்கும் உரிமை.—(ii) ஆவது பத்தியில் கிராம வீட்டு மனைகளுக்காக வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் நகர மனைகளுக்கும் பொருந்தும்.

(iv) கட்டடம் கட்டுவதற்குக் குறிப்பிட்ட காலத்தை நீடிக்கச் செய்தல்.—தயை காட்டும் வகையிலும், சலுகை காட்டப் பெறுவதற்கான காரணம் தெரிவிக்கப்பட்ட போதும் கோட்ட ஆட்சியாளர் ஒப்படை ஆணை பின் 4-ஆவது நிபந்தனையில் விதிக்கப்பட்ட காலத்தை நீடிப்புச் செய்யலாம். கோட்ட ஆட்சியாளர் ஏல விற்பனையை உறுதி செய்து பிறப்பித்த ஆணையை எதிர்த்து செய்யப்படும் மேல் முறையீட்டில் பிறப்பிக்கப்படும் ஆணைக்குப் பின்னர் ஒப்படை பெறுவதற்குக் கொடுக்கத்தக்க காலம் தெளிவாக ஆறு மாதங்கள் அல்லது பனிரெண்டு மாத காலம் கிடைக்கத் தக்க வகையில் இருக்க வேண்டும். இருப்பினும், கொடைக்கானலில் உள்ள மனை இடங்களில் ஓட்டு வீடுகள் அல்லது மாடிவீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்கத்தக்க காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

2—10—1899 தேதி, 239 வ.து.வா.செ.

10—4—1902 தேதி, 80 வ.து.வா.செ.

16—5—1957 தேதி, 2042 எண். அ.ஆ.வரு.பல.

1—7—1957 தேதி, 848 வ.து.வா.செ.

28—3—1928 தேதி, 693 அ.ஆ. வரு.

6—6—1928 தேதி, 1808 வருவாய்த்துறைப் பலவகைச் செயல்முறையில் உள்ள வருவாய்த் துறை வாரியம் 4—5—1928 எண். 1336/27-3 குறிப்பு.

(v) பதிவுக் கட்டுகளைப் பாதுகாப்பது.—கிராம வீட்டு மனைகளைப் பொருத்த மட்டில் 7 (v)-ஆவது பத்தியில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் நகர மனைகளுக்கும் பொருந்தும்.

3—12—1928 தேதி, 2822 அ.ஆ.வரு.

16—5—1957 தேதி, 2042 எண். அ.ஆ.வரு.பல.

3—1—1929 தேதி, 1 வ.து.வா.செ.

1—7—1957 தேதி, 848 எண். வ.து.வா.செ.பலவ.

16. பாளையங்களிலுள்ள வீட்டு மனைகளையும் மற்ற நிலங்களையும் பற்றி வகுக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள்—(1) வருவாய்த் துறையினால்.—அரசுக் குடி முறையில் உள்ள நிலங்கள் அல்லது சாதாரண நகர மனை விதிகளை அனுசரித்து நிலத் திர்வை செலுத்துவதற்குட்படுத்தி வருவாய்த் துறையினர் ஒப்படை அல்லது விற்பனை செய்த நிலங்கள், மாநில அரசினரின் உபயோகத்தில் அல்லது அவர்கள் வசத்திலிருக்கும் நிலங்கள் ஆகிய இவை வருவாய்த் துறையினர் கட்டுப்பாட்டிலிருக்க வேண்டும். அவற்றின் வருவாயை மாநில நிதியில் வரவு வைக்க வேண்டும்.

நி. ஆ. 21:16]

(ii) பாளைய அதிகாரிகளாலும், இந்திய யூனியனின் அரசாங்கத்தாராலும் பாளைய அதிகாரிகள் அல்லது இந்திய அரசாங்கத்தாரின் கட்டுப்பாட்டிலிருக்கும் நிலங்கள்.—

(i) பாளைய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பவை.—(அ) 1924-ஆம் ஆண்டு பாளையங்கள் சட்டத்தின் 108-ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்கள்.

(ஆ) பாளையங்கள் சட்டத்தின் 116 பிரிவின் கீழும், 1937-ஆம் ஆண்டு பாளைய நில ஆட்சி விதிகளில் 9-ஆவது விதியின் கீழும் பாளைய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் ஒப்புவிக்கப் பெற்ற நிலங்கள்.

(இ) பாளைய நிர்வாகம் சம்பந்தமாகப் பாளைய அதிகாரிகளுக்குத் தேவையானவையாய்ப் பாளைய சொத்து விதிகளில் 6 ஆவது விதியின் கீழ் விதிக்கத் தகுந்தவையென இந்திய யூனியன் அரசாங்கத்தாரால் கருதத்தக்க அத்தகைய நிபந்தனைகளுக்குட்படுத்திப் பாளைய அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டவையுமான இந்திய யூனியன் அரசாங்கத்தார் சட்ட உரிமையுள்ள நிலங்கள்.

(ஈ) பாளையச் சட்டத்தின் 110 ஆவது பிரிவின் கீழ் நில உரிமை சட்டத்தின் கீழ் பாளைய அதிகாரிகளால் உரிமை பெறப்பட்ட நிலங்கள்.

(உ) பாளைய அதிகாரிகளின் மேலாண்மைக்கு மாற்றப்பட்டுள்ள தரிசு நிலங்கள்.

குறிப்பு.—இந்திய அரசினரின் கட்டுப்பாட்டில் பிரத்யேகமாக விட்டு வைக்கப் பெற்றிருந்தாலன்றி 108-ஆவது பிரிவு விளக்கத்தின் கீழ் வராத மற்ற புறம்போக்கு நிலங்கள் மாநில அரசாங்க கட்டுப்பாட்டிலே இருந்து வரும்.

(2) இந்திய கட்டுப்பாட்டிலிருக்கும் நிலங்கள்.

(அ) படைத் துறை அதிகாரிகளின் அனுபோகத்தில் இருப்பவையும், படைத் துறைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அல்லது தேவையாக இருக்கும் நிலங்களும்.

(ஆ) பாளைய அதிகாரிகளால் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் அல்லது பாளைய ஆட்சியின் நிர்வாகத்திற்கு மாற்றப்படாமல் ஆனால் எந்நிலங்களின் அனுபோக உரிமை பாளைய அதிகாரிகளிடமே இருந்து வருகின்றதோ அப் பாளைய நிலங்கள்.

(இ) பாளைய அதிகாரத்தின் மேலாண்மையிலிருந்து இந்திய அரசினரால் திரும்ப எடுத்துக்கொண்ட நிலங்கள்.

பாளைய நில ஆட்சி விதிகள் XXV ஆவது இணைப்பில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

(iii) கீழே உள்ள 1951-ம் வருடம் ஜனவரி மாதம் 29-ம் தேதி மா. நி. ஆ. 134 எண் இந்திய அரசாங்க அறிவிக்கையில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் 294, 298, 299 இந்திய அரசியலமைப்பு விதிகளையும், அரசு நிலங்கள், கட்டடங்கள் ஆகிய இவற்றை மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும்

[நி. ஆ. 21:16-17

தங்களுக்குள் மாற்றிக் கொடுத்துக் கொள்வதை ஒழுங்கு செய்வதற்காக இந்திய அரசாங்கம் அமைத்துத் தந்துள்ள கொள்கைகளையும் அனுசரித்து கிழக்கு இந்திய கம்பெனியார் முதல் முதலில் தங்கள் வசம் வைத்திருந்த பழங் காலத்திய குத்தகைகளை இந்திய அரசாங்கத்திற்கு அல்லது இந்திய அரசாங் கத்தின் பிரதிநிதிகளாகிய பாளையம் அதிகாரிகளுக்கு மாற்றிக் கொடுக்கப் பட்டாலன்றி அல்லது மாற்றிக் கொடுக்கும் வரையில் அவை தமிழ்நாடு அரசாங்க வருவாய்த் துறையினர் கட்டுப்பாட்டிலே இருந்து வரவேண்டும். இக் குத்தகை களின் காலம் முடிவடையும்போது ஒவ்வொன்றின் தகுதியையும் ஆராய்ந்து பார்த்து நிலத்தை மறு முறையும் புதிதாகக் கொடுக்க முடிவு செய்யப்படு மாஞல் அதை எந்நிபந்தனைகள், உரிமை, முறை ஆகியவற்றை அனுசரித்துக் கொடுக்க வேண்டும் என்பதைப் படைத் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். சுகாதாரத் துப்புரவிற்காக அல்லது வேறு காரணங்களுக்காக நிலங்கள் வெற்றிடமாகவே வைத்திருப்பது நல்லது என்று கருதப் பெற்ருலும் படைத் துறை அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றும் வகையில் அவர்களுக்குத் தேவையாக இருக்குமானலும் அந்நிலங்களை இந்திய அரசாங்கத்திற்கு அல்லது பாளைய அதிகாரிகளுக்கு மாற்றிக் கொடுத்துவிட வேண்டும்.

5—4—1938 தேதி, 35, வ.து.வா.செ.அச்சு.
16—5—1957 தேதி , 2042 எண், அ.ஆ.வரு.பல.
28—3—1938 தேதி, 831, அ.ஆ.வரு.பல.
1—7—1957 தேதி, 848 எண், வ.து.வா.செ.பலவ.

பழங்காலத்திய கொடைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை அனுசரித்து மனைத் தீர்வையை வசூலித்துக் கொள்ளவேண்டும். கொடை ஆணையில் கண்டுள்ள பரப்பிற்கு அதிகமாக இருக்கும் நிலம் அல்லது கொடை மூலமன்றி கைவசத்திலிருக்கும் நிலத்திற்கும் அந்நிலம் வீட்டு மனையாக உபயோகிக்கப் பெற்று, வந்தால், கலெக்டர் தமது யுக்தம்போல அந்த நிலத்திற்குப் பொருத்த மான மனைத் தீர்வையைச் செலுத்துமாறு அந்நிலத்தை அனுபோகம் செய்து வருபவரை கேட்கலாம். இவ்வாறு செய்யவில்லையெனில், மேலே 10 ஆவது பத்தி (iv), (vi) உட் பிரிவுகளையும் 14 ஆவது பத்தியையும் அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ம. நி. ஆ. 134.—அரசியலமைப்பின் 258 ஆவது விதியில் I ஆவது உட் பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைச் செயலாற்றும் வகையில் மத்திய அரசினர் இந்திய யூனியனுக்காக 1894 ஆம் ஆண்டு நில உரிமை பெறும் சட்டத்தின் (1894 ஆம் ஆண்டு ஆவது சட்டம்) கீழ் நிலத்தை உரிமை பெறுவதற்கான எல்லாக் கடமைகளையும் தமிழ்நாடு அரசினரிடம் அவர்களின் இசைவு பெற்று ஒப்புவித்திருக்கிறார்கள்.

16—5—1957 தேதி, 2042 எண், அ.ஆ.வரு.பல.
1—7—1957 தேதி, 848 எண், வ.து.வா.செ.

17. கோட்டைகளுக்குள் இருக்கும் இடங்கள்.—வெளியிடங்களிலிருக்கும் கோட்டைகளிலுள்ள மனை இடங்களில் தனிப்பட்டவர்கள் கட்டடங்களைக் கட்டிக்கொள்வார் எனில், அவற்றிற்கு மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வை

நி. ஆ. 21 அ]

விதிக்க வேண்டும். இந்தத் தீர்வை விதிப்பில் வசூலாகும் தொகையை கோட்டை எந்த மாவட்டத்திலிருக்கிறதோ அந்த மாவட்டத்தின் வருவாய்த் துறை அலுவலர் வசூலித்து அதைக் கணக்குக் கொண்டு வரவேண்டும்.

22—8—1928 தேதி, 1952, அ.ஆ.வரு.பல.
3—9—1928 தேதி, 95 வ.து.வா.செ.

21-அ. தல ஆட்சிக் கழகங்களால் உரிமை பெறப்பட்ட நிலங்களுக்கு மனைத் தீர்வை விதித்தல்.—தல ஆட்சிக் கழகங்கள் உரிமை பெற்றுக் கொண்டுள்ள நிலங்களைப் பொருத்த மட்டில் பொதுவாகவும், வீட்டு மனைகளுக்காக அல்லது வீட்டு மனை இடங்களை விரிவாக்குவதற்காக தல ஆட்சிக் கழகங்கள் வாங்கியுள்ள நிலத்திற்குக் குறிப்பாகவும், மனைத் தீர்வை விதிப்பதற்குக் கீழ்க்கண்ட விதி களை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய நிலங்கள் பின்வரும் வகுப்புகளில் ஒன்றில் அல்லது மற்றொன்றில் அடங்கும் :—

(1) அரசினர் வசமிருந்து தல ஆட்சிக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ள நிலங்கள்.

(2) அரசினர் தங்கள் செலவில் வாங்கித் தல ஆட்சிக் கழகத்திற்குக் கொடுத்துவிட்ட நிலங்கள்.

(3) அரசினர் தல ஆட்சி கழகத்தின் செலவில் சென்னை மாநகருக்கு வெளியில் வாங்கி அம் மன்றத்திற்குக் கொடுத்துவிட்ட நிலங்கள்.

(4) அரசினரால் தல ஆட்சிக் கழகத்தின் செலவில் சென்னை மாநகரத்தில் வாங்கப்பட்டு அத் தல ஆட்சி கழகத்திற்கு கொடுக்கப்பட்ட (சென்னை உயர்நீதி மன்றத்தின் சாதாரணமான அசல் சிவில் அதிகார எல்லைகளுக்குட்பட்ட) நிலங்கள்.

(5) தல ஆட்சிக் கழகம் தானாகத் தனிப்பட்ட முறையில் வாங்கிக் கொண்ட நிலங்கள்.

குறிப்பு.—ஒரு பாகம் தல ஆட்சிக் கழகத்தின் செலவிலும், ஒரு பாகம் அரசினர் செலவிலும் நில உரிமை பெறப்பட்ட அல்லது விலைக்கு வாங்கப்பட்ட நிலங்கள். இந்த நில ஆணையைப் பொருத்தவரையில், தல ஆட்சிக் கழகத்தின் செலவில் நில உரிமை பெறப்பட்ட அல்லது விலைக்கு வாங்கப்பட்ட நிலங்களாகக் கருதப்பட வேண்டும். ஆகையால் அவை மேற்கோள் குறிக்கப்பட்டுள்ள (3) அல்லது (4) அல்லது (5) ஆவது வகுப்பின்கீழ் வரும்.

(1) (2) ஆவது வகுப்புகளில் வரும் நிலங்களுக்குச் சாதாரணமாக முழு மனைத் தீர்வையே விதிக்க வேண்டும். (3) ஆவது வகுப்பு நிலம் அதன் உரிமை பெறுவதற்கு முன்பு அதற்கு விதிக்கப் பெற்றிருந்த நிலத் தீர்வை, மனைத் தீர்வை, விடுவரி ஆகிய இவற்றிற்குச் சமமான மனைத் தீர்வை செலுத்து வதற்குள்ளாகும். நிலத்தின் உரிமை பெறுவதற்கு முன்பு நிலத் தீர்வை, மனைத் தீர்வை ஆகிய இவற்றில் யாதொன்றுமே செலுத்தாமல் நிலம் அனுப விக்கப்பட்டிருந்தால் அச் சலுகை சாதாரணமாகத் தொடர்ந்து இருக்கத் தக்கது. இருப்பினும், அந்தகைய சலுகை முற்றிலுமே கருணை அடிப்படை யில் உள்ளது. இச் சலுகையைத் திரும்பப் பெற நியாயமான காரணங்கள் பொதுமன அவளில் இருப்பினவாக அரசினருக்குத் தோன்றினால், அவர்கள்

[நி. ஆ. 21 அ

எந்தச் சமயத்திலும் அச் சலுகையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, அந் நிலத்திற்கு மனைத் தீர்வை விதிக்க அவர்கள் அதிகாரம் வகித்துள்ளனர். 4 ஆவது வகுப்பு நிலங்கள், 1851 ஆம் ஆண்டு சென்னை மாநகர நில வருவாய்ச் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு XII ஆவது) சட்டத்தின் கீழ்ச் சொந்த நிலங்களாகக் கருதப்பட வேண்டும். அத்தகைய நிலங்களுக்கு வருவாய்த் துறை வாரியம் நில ஆணை I ஆவது தொகுதி I ஆவது அத்தியாயத்தின் XXII ஆவது இணைப்பில் கண்டுள்ள விதிகளை அனுசரித்து மனைத் தீர்வை விதிப்பதற்கில்லை. 5 ஆவது வகுப்பு நிலங்களுக்கு அவற்றின் உரிமை பெறு வதற்கு முன்பு அவற்றிற்கு விதிக்கப்பட்டிருந்த மனைத் தீர்வை, நிலத் தீர்வை, ஜமீன் உரிமை வரி, விடுவரி எதுவாயிருப்பினும் அதுவே விதிக்கத் தக்கதாகும். நிலத் தீர்வை அல்லது மனைத் தீர்வை செலுத்தாமல் நிலம் அநுபோகம் செய்யப் பட்டு வந்திருந்தால், அச்சலுகை தொடர்ந்து இருக்க வேண்டும். இருப்பினும், உரிமை பெறுத இனம் நிலத்தைப் பொருத்த மட்டில், அந்நிலம் விடுவரி செலுத்துவதற்குட்படாத நிலமாயிருப்பினும் அவ்வாறில்லாவிட்டாலும் அதற்குச் சாதாரணமாக தரத் தீர்வைக்குச் சமமான விதத்தில் மனைத் தீர்வை விதிக்க வேண்டும். (1), (2), (3) வகுப்பு நிலங்களுக்கு விதிக்கப் பெறும் நிலத் தீர்வை அல்லது மனைத் தீர்வை அவ்வப்போது நடைமுறையில் உள்ள விதிகளை அனுசரித்து அவ்வப்போது ஏற்படக் கூடிய நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தில் திருத்தி அமைக்கப்படும் மாறுதலுக்கு உட்பட்டதாகும். இருப் பினும், 5 ஆவது வகுப்பின் கீழ் வரும் நிலங்களுக்கு விதிக்கப் பெறும் ஜமீன் உரிமை வரி அல்லது விடுவரியை மாற்றி அமைக்கலாகாது. (4) ஆவது வகுப்பு நிலங்களுக்கு முன்னமே விதிக்கப் பெற்றுள்ள மனைத் தீர்வையை, அரசினரின் குறிப்பான ஆணைகளின்றி அடுத்த பதினைந்து ஆண்டில் மாற்றி அமைக்க லாகாது.

3—1—1941 தேதி, 225, அ.ஆ.வரு.பல.
21—1—1934 தேதி, 166, அ.ஆ.வரு.பல.
10—3—1941 தேதி, 27, வ.து.வா.செ.அச்சு.
27—2—1934 தேதி, 32, வ.து.வா.செ.அச்சு.
27—5—1953 தேதி, 1480, அ.ஆ.வரு.பல.
29—5—1956 தேதி, 2086, அ.ஆ.வரு.பல.
6—3—1957 தேதி, 1132, அ.ஆ.வரு.பல.

குறிப்பு.—தல ஆட்சிக் கழகத்திற்கு நிலத்திலிருந்து ஒருவித வருமானமும் கிடைக்கவில்லையென்றும் அல்லது கிடைக்கும் வருமானம் ஆண்டு தோறும் செய்யப் படும் செலவிற்கும் குறைந்ததாக இருக்கும் என்றும், அரசினர் தமது யுக்தம் போல 24 ஆவது நில ஆணை 11 ஆவது பகுதியில் வகுக்கப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து, மனைத்தீர்வை அல்லது நிலத் தீர்வை வசூலிப்பதை விடுக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

18—8—1919 தேதி, 1942, அ.ஆ.பலவ.
9—6—1928 தேதி, 1242, அ.ஆ.வரு.
28—8—1919 தேதி, 88, வ.து.வா.செ.
25—6—1928 தேதி, 56, வ.து.வா.செ.
16—1—1958 தேதி, 154, அ.ஆ.வரு.பல.
21—1—1958 தேதி, 59, எஸ், வ.து.வா.செ.பல.

நி. ஆ. 22:1-2]

22. அரசாங்கத் துறையின் அனுபவத்திலுள்ள நிலம், கட்டடங்கள் இவற்றைக் கொடுக்க முடிவு செய்தல்.—இந்த நிலை ஆணையின் கீழ் அரசினரின் முன் அனுமதியினுலன்றி, கலெக்டராலோ அல்லது வருவாய்த் துறை வாரியத் தாலோ அரசினருக்குரிய எந்த நிலமும் இந்தியக் குடியல்லாத எவருக்கும் விற்பனை செய்யப்படக்கூடாது. இந்த நிலை ஆணையின் கீழ் விற்பனை செய்யப் பட்ட ஒவ்வொரு நிலமும் அரசினர் அனுமதியில்லாமல் இந்தியக் குடியல்லாத வேறொருவருக்குப் பாதினப்படுத்தப்பட்டால், அந்த விற்பனை முற்றிலும் செல்லாததாகும்.

இந்த நிலை ஆணையின் கீழ் அரசினருக்குச் சொந்தமான நில விற்பனை செய்யப்படுவதற்காகக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம் செய்து கொள்ளும் விண்ணப்பம், அந்தக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956 ஆம் ஆண்டு I ஆவது மத்திய அரசுச் சட்டம்) 3 (1) (1) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு வந்தாலன்றி அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860 ஆம் ஆண்டு I ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880 ஆம் ஆண்டு சமயச் சங்கங்களின் சட்டம் (1860 ஆம் ஆண்டு XXI ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1932 ஆம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932 ஆம் ஆண்டு சென்னை ஆவது சட்டம்), 1942 ஆம் ஆண்டு பல நோக்கக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942 ஆம் ஆண்டு ஆவது மத்தியச் சட்டம்), 1938 ஆம் ஆண்டு சட்டுறுதிச் சட்டம் (1938 ஆம் ஆண்டு VI ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926 ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் யூனியன் சட்டம் (1926 ஆம் ஆண்டு ஆவது மத்தியச் சட்டம்) அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம், ஆகிய இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப் பெற்றிருந்தா லன்றிக் கவனிக்கப்படமாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன் கத்தோலிக் கிருத்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகளை ஏனைய உரோமன் கத்தோலிக் சமயக் குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற்றிற்குப் பொருந்தாது.

30—8—1956 தேதி, 3275 எண். அ.ஆ.வரு.பல.

18—9—1956 தேதி, 1305 எண். வ.து.வா.செ.பல.

(1) முடிவு செய்பவர் பொதுவாகக் கலெக்டரேயாவர்.—நிலம் அல்லது கட்டடங்கள் இருக்கும் இடத்துடன் நிலத்தை விற்பனை செய்பவர் சாதாரண மாகக் கலெக்டராவர். ஆனால் அதே சமயத்தில் அரசாங்கத்தின் மற்றத் துறையினர் நிலம் முதலியவற்றை விற்பனை செய்வதற்குக் காரணமிருப்பதாகக் கருதுவாரெனில், அவர்கள் தாங்களே அவ்வாறு விற்பனை செய்ய அனுமதி கேட்டுக் கொள்ளலாம்.

(2) நிலத்தையும் கட்டடங்களையும் விற்பனை செய்ய ஒப்பளிப்பு தரும் அதிகாரம் யாரிடம் உள்ளது.—மனையிடங்களுடன், கட்டடங்கள், ஜப்தி செய்யப் பெற்று நிலங்கள் ஆகிய இவற்றின் மொத்த மதிப்பு 5,000 ரூபாய்க்கு மேற்படா திருக்குமானால், அவற்றை விற்பனை செய்வதற்கான ஆணை பிறப்பிக்க கலெக்டர் களுக்கு அதிகாரமுண்டு. அவற்றின் மதிப்பு 5,000 ரூபாய்க்கு மேற்பட்டால்

[நி. ஆ. 22 :2-3

வருவாய்த் துறை வாரியத்தின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும். அரசினரின் ஆணையைப் பெற வேண்டுமென வருவாய்த் துறை வாரியம் விரும்புமெனில், தன் விருப்பம் போல வருவாய்த் துறை வாரியம் செய்து கொள்ளலாம்.

8—8—1932 தேதி, 1664 எண், அ.ஆ.வரு.
3—10—1932 தேதி, 2907 எண், வ.து.வா.செ.பல.

(3) கட்டடங்களை விற்பனை செய்ய ஒப்பளிக்கத்தக்க அதிகாரம் யாரிடம் உள்ளது—(i) பொறியியல் பணித் துறையின் பொறுப்பில் உள்ள கட்டடங்கள்.—கணக்குகளை அனுசரித்து மாநில அரசாங்கப் பொறியியல் பணித் துறைக் கட்டடங்களின் மதிப்பு 10,000, 5,000, 1,000 ரூபாய்க்கு மேற்படாம விருந்தால் அத்தகைய மதிப்புள்ள கட்டடங்கள் முறையே தலைமைப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர் ஆகிய இவர்கள் அக் கட்டடங்களை விற்கவோ அல்லது பிரித்தெடுத்துவிடவோ ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் அவரவர்கள் பெற்றிருக்கிறார்கள். இருப்பினும், அவர்களுக்கு நிலத்தை விற்கும் அதிகாரம் இல்லையாதலால், கட்டடத்தை விற்பனை செய்வதற்காக அவர்கள் ஆணையைப் பிறப்பிக்கும்போது, அவர்கள் தங்கள் ஆணைகளைக் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும். கலெக்டர் கட்டடத்தையும் நிலத்தையும் ஒருமிக்க விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பார்.

5—8—1937 தேதி, 86 எண், வ.து.வா.செ.அச்சு.

(ii) வருவாய்த் துறையின் பொறுப்பில் உள்ள கட்டடங்கள்.—வருவாய்த் துறைப் பொறுப்பிலுள்ள கட்டடங்களை விற்பதிலும் அல்லது பிரித்தெடுத்து விடுவதிலும் அவற்றின் மதிப்பு 500 ரூபாய்க்கு மேற்படாவிடின் மேற்பார்வைப் பொறியாளர் செலுத்தும் அதிகாரங்களைப் போன்றே மாவட்டக் கலெக்டர்களும், தம் அதிகாரத்தைச் செலுத்துவர். மதிப்பு 5,000 ரூபாய்க்கு மேற்படுமானால், வருவாய்த் துறைக் கழகத்தின் ஒப்பளிப்பைப் பெறவேண்டும். அரசினரின் ஒப்பளிப்பைப் பெறுவது விரும்பத் தக்கது என வருவாய்த் துறைக் கழகம் விரும்பும் எனில் அவ்வாறு அக்கழகம் செய்து கொள்ளலாம்.

8—8—1932 தேதி, 1664 அ.ஆ.வரு.
3—10—1932 தேதி, 2907 வ.து.வா.செ.பல.

(iii) வனத் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்கள்.—வனத்துறை பொறுப்பிலுள்ள மாநில அரசாங்கக் கட்டடங்களை விற்பனை செய்வது அல்லது பிரித்தெடுத்து விடுவதற்கான விதிகள் தமிழ்நாடு வனத் துறை விதித் தொகுப்பில் உள்ளன.

30—8—1956 தேதி, 3275 எண், அ.ஆ.வரு.பல.
18—9—1956 தேதி, 1305 எண், வ.து.வா.செ.பல.

(iv) மின்சாரத் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்கள்.—இயக்குமுறை, வலன் வளர்ச்சிப் பொறியாளர்கள் ஆகிய இவர்கள் மின்சாரத் துறைப் பொறுப்பிலுள்ள மாநில அரசாங்கக் கட்டடங்களின் ஆக மொத்த மதிப்புத் தொகை முறையே 10,000, 5,000, 1,000 ரூபாய்க்கு மேற்படாமலிருக்குமானால்,

நி. ஆ. 22 :3-4]

அத்தகைய மதிப்புள்ள கட்டடங்களை அவர்கள் விற்பனை செய்ய அல்லது பிரித்தெடுத்து விட ஆணை பிறப்பிக்க அவரவர்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இருப்பினும், அவர்களுக்கு நிலத்தை விற்கும் அதிகாரமில்லாததால், கட்டடத்தை விற்பனை செய்வதற்கான ஆணையைப் பிறப்பிக்கும்போது, அவர்கள் அவ்வாணைகளைக் கலெக்டருக்கும் அனுப்ப வேண்டும். அதன் பின்னர், கலெக்டர் கட்டடத்தையும் நிலத்தையும் ஒருமிக்க விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்.

7—4—1955 தேதி, 1174 எண், அ.ஆ.வரு.

30—8—1956 தேதி, 3275 எண், அ.ஆ.வரு.பல.

18—9—1956 தேதி, 1305 எண், வ.து.வா.செ.பலவ.

4. இவ்வதிகாரங்கள் எவற்றுள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.—மேலே 2, 3-ஆவது பத்திகளில் ஒப்புவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பின்வருமாறு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.—

(அ) பொறியியல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்களைப் பொருத்த மட்டில்.—

(i) அரசாங்கத் துறைகளில் எத்துறைக்கும் தேவையில்லை என்று முன்னதாகவே கேட்டறிந்து கொண்டாலன்றி யாதொரு கட்டடத்தையும் விற்பனை செய்யலாகாது. யாதொரு கட்டடத்தையும் விற்பனை செய்ய ஆணை பிறப்பிக்கும் முன்னர், கலெக்டரின் ஏற்பைப் பெற வேண்டும்.

(ii) ஆபத்தான அல்லது பழுது பார்க்க முடியாத நிலையில் இருந்தாலன்றி யாதொரு கட்டடத்தையும் இடித்து விடலாகாது.

(iii) [2]ஒரே வளவுக்குள் சேர்ந்தாற் போலுள்ள பல கட்டடங்களின் ஒரு பாகமாக அமைந்திருக்கும் ஒரு கட்டடம் அல்லது அதற்கு அதிகமான கட்டடங்களை விற்பனை செய்யப்படுதலில் அல்லது பிரித்து விடப்படுவதில், மொத்த ஏல மதிப்பு 10,000 அல்லது 5,000 ரூபாய்க்கு அதிகமானால் அவற்றிற்குத் தலைமைப் பொறியாளர் அல்லதுப் மேற்பார்வைப் பொறியாளர்க்குரிய அதிகாரங்கள் செல்லாது.

(ஆ) வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்களைப் பொருத்த மட்டில்.—(i) விற்பனை செய்ய வேண்டிய யாதோரு கட்டடமும் அரசாங்கத் துறைகளில் எதாவதொரு துறைக்கும் தேவையில்லை என்பதை முன்னதாகவே கேட்டறிந்திருக்க வேண்டும்.

(ii) இடித்து விட யோசனை செய்திருக்கும் கட்டடம் ஆபத்தான நிலையிலுள்ளது அல்லது பழுது பார்க்கத்தகாதது என்று சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர் சான்று கூறியிருக்க வேண்டும்.

(iii) ஒரே வளவில் சேர்ந்தாற்போலுள்ள பல கட்டடங்களின் மொத்த ஏல மதிப்பு மேலே 3 (ii)-ஆவது பத்தியில் கண்டுள்ள தொகைக்கு அதிகமானால் அவற்றை விற்பனை செய்ய அல்லது பிரித்தெடுத்துவிட இந்த அதிகாரம் செல்லாது.[2]

(இ) மின்சாரத் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்களைப் பொருத்த மட்டில்.—(i) அரசாங்கத் துறைகளில் ஏதாவதொரு துறைக்கும் தேவையில்லை என்று கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு முன்பாக எக்கட்டடத்தையும் விற்பனை செய்யலாகாது. கட்டடம் விற்பனை செய்யப்பட ஆணை பிறப்பிப்பதற்கு முன்னதாக சம்பந்தப்பட்ட கலெக்டரின் ஏற்பைப் பெற்றிருக்க வேண்டும்.

(ii) ஆபத்தான அல்லது பழுது பார்க்கத்தகாத நிலையிலிருந்தாலன்றி எந்தக் கட்டடத்தையும் பிரித்தெடுத்து விடக்கூடாது.

(iii) ஒரு கட்டடம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டடங்கள் ஒரே வளாவுக்குள் இருக்கும் கட்டடங்களின் பாகமாக இருந்து அதன் மொத்த விலை மதிப்புத் தொகை 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் அக்கட்டாம் விற்பனை செய்யப்படுதலில் அல்லது பிரித்து விடப்படுதலில் இயக்குமுறை பலன் வளர்ச்சிப் பொது மேற்பார்வையாளர் அதன் விலை மதிப்புத் தொகை 5,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மேற்பார்வைப் பொறியாளர்க்குரிய அதிகாரம் செல்லாது.

7—4—1955 தேதி, 1174 எண், அ.ஆ.வரு.
30—8—1956 தேதி, 3275 எண், அ.ஆ.வரு.பலவ.
18—9—1956 தேதி, 1305 எண், வ.து.வா.செ.பலவ.

(ஈ) பொது.—ஒரு கட்டடத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்ய அல்லது பிரித்துவிட யோசனை செய்யப்படும்போது, இவ்வாறு செய்வதற்கான ஆணையைப் பிறப்பிக்கத் தகுந்த அதிகாரமுள்ள அதிகாரி யாரென நிச்சயம் செய்து கொள்ள, அந்த முழுக் கட்டடத்தின் மதிப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமேயன்றி அதன் பகுதியின் மதிப்பை மாத்திரம் எடுத்துக் கொள்ளலாகாது.

4—2—1918 தேதி, 28 வ.து.வா.செ.
28—2—1918 தேதி, 866 அ.ஆ.வரு.பல.
7—3—1918 தேதி, 59 வ.து.வா.செ.
ஆ15—12—1924 தேதி, 3006 வ.து.வா.செ.பல.
ஆ26—6—1924 தேதி, 961 அ.ஆ.வரு.பலவ.
5—11—1924 தேதி, 1253 அ.ஆ.பணி.

5. விற்பனைத் தொகைகளைக் கணக்கில் பங்கிடு செய்தல்.—கட்டடம் உள்ள இடம் அல்லது அதற்குச் சார்ந்த நிலப் பரப்பு உட்பட்ட பொறியியல் பணித் துறை கட்டடங்களின் விற்பனைத் தொகைகளைப் பின்வருமாறு பங்கிடு செய்ய வேண்டும் :—

(அ) ஒழுங்கான மூலதனக் கணக்குக் வருவாய்க் கணக்கும் எழுதி வைக்கப் பெற்றுள்ள ஒரு திட்டத்தின் மூலதனக் கணக்கு அல்லது வருவாய் கணக்கில் ஒரு கட்டடம் கட்டியதற்கான செலவானது பற்று எழுதி வைக்கட் பெற்றிருந்தால், அல்லது வருவாய்க் கணக்கிற்கு அப்பாலான முதலீட்டுச் செலவில் காட்டப்பெற்றிந்தால் மூலதனச் செலவிற்குச் சம்பந்தமான வேலைக்கு

நி. ஆ. 22:5—6]

ஒழுங்கான மூலதனக் கணக்கும் வருவாய்க் கணக்கும் எழுதி வைக்கப்பெறுமல் இருந்தபோதிலும், விற்பனைத் தொகையை, முதல் முதலில் பற்று எழுதப்பட்ட நிட்டத்தின் மூலதனச் செலவிற்குத் தக்கவாறுகச் செய்த செலவுத் தொகையைத் திரும்பபெறும் வகையில் வைக்கவேண்டும்.

(ஆ) விற்பனையானது மூலதனக் கணக்கு வைக்கப்பெறுத நீர்ப் பாசனம், கப்பலோட்டு இயல் போக்கு வரவு, வடிகால் கரை கட்டுதல், இவற்றைப் பாதிக்குமானால், அந்தொகை "மூலதனக் கணக்குகள் வைக்கப் பெறுத XVIII நீர்ப்பாசனம், கப்பலோட்டு இயல் போக்கு வரவு கரை கட்டுதல், வடிகால் வேலைகள்" என்பவற்றிற்கு வரவு வைக்க வேண்டும்.

(இ) கட்டடங்களின் செலவுத் தொகை முன்னதாகவே "50. சிவில் வேலைகளுக்கு" பற்று எழுதி வைக்கப்பெற்றிருந்தால், அக்கட்டடங்களின் விற்பனைத் தொகை XXX X சிவில் வேலைகளுக்கு" வரவு வைக்கப்பட வேண்டும்.

5—8—1937 தேதி, 86, வ.து.வா.செ.அச்சு.

(ஈ) மற்றவை எல்லாவற்றிலும்—

(i) பொறி இயல் பணித் துறையினரால் விற்பனை செய்யப்பட்டால் அத்தொகை XXX!X சிவில் வேலைகளுக்கு" வரவு வைக்கப்படவேண்டும்.

(ii) சாதாரண சிவில் பிரதிநிதிகள் மூலமாக விற்பனை செய்யப் பட்டால் XXXIX —பலவகை—நிலங்கள் வீடுகளின் விற்பனை" தலைப் பிற்கு வரவு வைக்க வேண்டும். [பொறியியல் பணித் துறை விதித் தொகுப்பு 238 ஆவது பத்தியும் கணக்குத் தணிக்கை விதித் தொகுப்பு 181 (6) ஆம் விதியும்.]

4—4—1930 தேதி, 661, அ.ஆ.வரு.பலவ.
9—4—1930 தேதி, 31, வ.து.வா.செ.

6. விற்பனை அறிவிப்பு, விற்பனைச் சான்றிதழ் உரிமைப் பத்திரம்.— அரசாங்கக் கட்டடங்கள் பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யப்படும் போதெல்லாம் காலமுறையில் திருத்தி அமைக்கப்படுவதற்குட்பட்ட பொருத்த மான மனைத் தீர்வை அல்லது தீர்வை செலுத்துவதற்குட்படுத்தி விற்பனை செய்யப்படுகிறதென்றும் நிபந்தனை ஏல விற்பனைகளில் ஒன்றாக உள்ளது என்பதை ஏல அறிவிப்பில் குறிப்பிட்டுக் காண்பிக்க வேண்டும். கட்டடத்தைப் பொருத்த வரையில் XXV ஆவது இணைப்பில் உள்ள படிவத்தில் ஒரு சான்றிதழும், கட்டடம் உள்ள இடத்தைப் பொருத்த வரையில் XXVII ஆவது இணைப்பிலுள்ள படிவத்தில் ஒரு உரிமைப் பத்திரமும் கொடுக்க வேண்டும்.

27—6—1899 தேதி, 397, அ.ஆ.
14—6—1905 தேதி, 557, அ.ஆ.
12—7—1905 தேதி, 147 வ.து.வா.செ.

[நி. ஆ. 22:7

7. உபயோகிக்காமல் விட்டுவிடப்பட்ட கட்டடங்களை அரசாங்கத் துறைகளில் ஒரு துறையினின்று மற்றொரு துறைக்கு மாற்றிக் கொடுக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது—(i) பொறியியல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்கள்.—பொறியியல் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடம் காலியாகுமானால் கலெக்டர்களையும் மற்ற அரசாங்கத் தலைவர்களையும் கலந்து கொண்டு மேற்பார்வைப் பொறியாளர், அரசினருக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளாமலே, பின்வரும் இனங்களைத் தவிர, மற்றவற்றில் எதாவது ஒரு துறையின் ஓரலுவலகத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளார்—

(அ) கட்டடத்தை தல ஆட்சிக் கழகங்கள் அல்லது தனிப்பட்ட கழகங்கள் அல்லது மத்திய அரசாங்கத் துறை இவற்றில் எதாவதொன்றிற்கு மாற்றிக் கொடுக்க யோசனை செய்யப்படும் போது, அல்லது

(ஆ) கட்டடங்கள் மத்திய அரசுத் துறை ஒன்றிற்குச் சொந்தமானவையாக இருந்தால், அல்லது

(இ) இரண்டு அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையிலுள்ள அரசாங்கத் துறைகள் ஒரே கட்டடத்தைக் கேட்கும்போது,

இவற்றை மாற்றிக் கொடுக்கு முன்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசினர் ஆணையைப் பெற வேண்டும்.

குறிப்பு.—கட்டடங்கள் அரசினரின் உபயோகத்திற்கு உடனடியாகத் தேவையாக இல்லாதபோதிலும், அவற்றைப் பிரித்துவிடுதல் விரும்பத்தக்கதன்று என்று ஏற்படும்போது) அக்கட்டடங்கள் சரியான நிலையில் பழுது பார்க்கப்பட்டதையும் நியாயமான அறிவிப்பு கொடுத்த பின்னர் திரும்பப் பிரவேசித்து எடுத்துக்கொள்ளப் படுவதையும் நிச்சயம் செய்துகொள்ளத் தக்கவாறான நிபந்தனைகளை விதித்து தல ஆட்சிக் கழகங்களுக்கு அரசினர் தங்கள் யுக்தம் போல மாற்றிக் கொடுக்கும் உரிமையை வகிக்கின்றனர்.

24—1—1914 தேதி, 200 அ.ஆ.பணி.
24—3—1914 தேதி, 125 வ.து.வா.செ.

(ii) வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள கட்டணங்கள்.—மேலே (1)-ஆவது உட்பிரிவில் கண்டுள்ள விலக்குகளுக்குட்பட்டு வருவாய்த் துறைப் பொறுப்பிலுள்ள கட்டடங்களைப் பொருத்த மட்டில், அவற்றின் ஒவ்வொன்றின் கணக்கு மதிப்பு 2,500 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால் மேற்பார்வைப் பொறியாளர்களைப் போன்றே கலெக்டர்களும் அதிகாரம் வகிக்கின்றார்கள். 5,000 ரூபாய்க்கு மேற்படாதவற்றில் இத்தகைய அதிகாரத்தை வருவாய்த் துறை வாரியம் வகிக்கிறது. 5,000 ரூபாய்க்கு அதிகமான மதிப்புள்ளவற்றிற்கு அரசாங்கத்தின் அனுமதி வேண்டும்.

குறிப்பு.—மேலே (I) ஆவது உட்பகுதியின் குறிப்புலுள்ள அறிவுரைகள் வருவாய்த்துறை பொறுப்பிலுள்ள கட்டடங்களுக்கும் பொருந்தும.

16—6—1917 தேதி, 200 அ.ஆ.பணி.
9—11—1917 தேதி, 192 வ.து.வா.செ.

(iii) வனத் துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்கள்.—இக்கட்டடங்களை மாற்றிக் கொடுப்பது சமபந்தமான விதிகள் தமிழ்நாடு வனத் துறை விதித் தொகுப்பு 66-ஆவது பிரிவில் வகுக்கப் பெற்றுள்ளன.

[பி. ஆ. 22 அ, 23:1]

30—8—1956 தேதி, 3275 எண். அ.ஆ.வரு.பல.

18—9—1956 தேதி, 1305 எண். வ.து.வா.செ.பலவ.

22அ. சந்தன மரங்களையும் பெருமதிப்பு வாய்ந்த பிற மரங்களையும் மாற்றல் செய்தல்.

துறைகளுக்கிடையே நிலம் மாற்றல் செய்யப்படும்போது நிலத்திலுள்ள சந்தன மரங்கள் போன்ற பெருமதிப்பு வாய்ந்த மரங்கள் திருட்டுத்தனமாக அகற்றப்பட்டு அவ்வகையில் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் கவனத்துக்கு வந்துள்ளன. அரசுக்கு அத்தகைய இழப்பு ஏற்படுவதைத் தடுக்க கீழ்க்காணும் அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிலங்கள் மாற்றல் செய்யப்படும் போது மரங்கள் (சந்தன மரம் அல்லது வேறு வெட்டு மரங்கள் அல்லது விறகு மரங்கள்) கட்டடங்கள் (கல்கட்டுகள் அல்லது மற்ற கட்டுமானங்கள்) போன்ற மதிப்பு வாய்ந்த பொருள்கள் ஏதாவது அந்நிலங்களில் இருப்பின் அப்பொருள்களின் முழுமையானதொரு பட்டியல் மாற்றல் சான்றில் சேர்க்கப்பட வேண்டும். பொறுப்பை ஒப்படைக்கும் துறை பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் துறை ஆகிய இவ்விரு துறைகளின் அலுவலர்கள் உடைமை மாற்றல் சான்றில் இவ்விவரங்களைக் குறிக்கத் தவறுவதற்கும் அவர்களுடைய தாப்பில் ஏற்படும் அத்தகைய தவறு காரணமாக அரசினருக்கு நேரிடக்கூடிய யாதொரு இழப்புக்கும் பொறுப்பாளிகளாக்கப்படுவார்கள்.

23. (1) **மத்திய அரசினர் மாநில அரசினர் இவர்களுக்குள் நிலங்களையும் கட்டடங்களையும் மாற்றிக் கொள்ளுதல்.**—நிலங்களையும் கட்டடங்களையும் **மத்திய,** மாநில அரசினர்களுக்குள் உரிமையாக்குவதின் பொதுவான நிலைமை இந்திய அரசியல் அமைப்பின் 294 (அ) விதியில் குறிக்கப் பெற்றுள்ளது. ஆயினும், அரசியல் அமைப்பு ஆரம்பமாவதற்கு முன்னதாக நடைமுறையிலிருந்து பின்வரும் கொள்கைகள் இத்தகைய உபயோகங்களுக்குத் தொடர்ந்து பொருந்துவனவாகும்—

(i) **மத்திய அரசினர் உபயோகத்திற்காக நிலத்தின் உரிமை பெற.**—மத்திய அரசினர் தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலத்தை விலைக்கு வாங்குவார் எனில் அந்த அரசாங்கச் செலவில் நிலத்தை வாங்க வேண்டும். மாநில அரசினரின் அனுபோகத்திலுள்ள நிலத்தை மத்திய அரசாங்கத்திற்கு மாற்றிக் கொடுக்க வேண்டியிருந்தால், சாதாரணமாக அந்த நிலத்தில் நடப்பு விலை மதிப்புத் தொகையும் கட்டடம் ஏதேனுமிருந்தால், அதன் நடப்பு விலை மதிப்புத் தொகையும் மத்திய அரசாங்கம் கொடுத்துவிட வேண்டும். நிலம் மாற்றிக் கொடுக்கப்படுவதால் மாநில அரசாங்கத்திற்கு நில வருவாய் இழப்பு ஏற்படுமானால், அந்த இழப்பின் முதலீட்டையும் இதனுடன் சேர்த்து மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டும். ஆனால் நில உரிமையைப் பெறும் சட்டத்தை அனுசரித்துக் கொடுக்கத்தக்க 15 சதவீதத் தொகை இவ்வகையில் மாற்றிக் கொடுத்ததற்காக கொடுக்க வேண்டியதில்லை.

(ii) **வேண்டுமளவிற்கும் மிகுதியாக உள்ள மத்திய அரசாங்கத்தின் நிலங்கள்.**—மத்திய அரசினரின் சுவாதீனத்திலுள்ள நிலம் அவ்வரசினருக்கு இனித் தேவையில்லை என்றால் கீழ்க் கண்டுள்ள நிபந்தனைகளுக்கிணங்க அந்த நிலம் எந்த மாநிலத்தில் இருக்கின்றதோ அந்த மாநில அரசினர் அந்த நிலம்

முழுவதையும் அல்லது அதன் பகுதி எதுவாயிருப்பினும் அப்பகுதியை எடுத்துக்கொள்ள மாநில அரசினருக்கு விருப்ப உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது :

(அ) குறிப்பிட்ட நிலம் தங்களுக்குத் தேவையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு மத்திய அரசினருக்கே அதிகாரமுண்டு.

(ஆ) மாநில அரசினர் நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ள விருப்பம் கொண்டால், மத்திய அரசாங்கம் அந் நிலத்தை விட்டுவிடும் தேதிக்கத்தைத் தெரிவித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் மாநில அரசினர் தாங்கள் விரும்பியவாறே அந்நிலத்தைச் சுவாதீனம் செய்து கொள்ள வேண்டும்.

(இ) எல்லாவற்றிலுமே, அந்த நிலத்திற்காகக் கொடுக்கவேண்டிய தொகை மாற்றிக் கொடுக்கும்போது அந்த நிலத்திற்குரிய நடப்பு விலை மதிப்புத் தொகையாகும்.

(ஈ) மத்திய அரசினர் விட்டுவிட்ட நிலத்தின் ஒரு பகுதியை மாத்திரமே மாநில அரசினர் சுவாதீனம் செய்துகொள்ள விரும்பினால் அந் நிலத்தைப் பகுதிகளாகப் பிரிப்பதனால் அந் நிலத்தின் மதிப்பு மிகுதியாகக் குறைவுபடாது என்றால் மாத்திரமே, மாநில அரசினருக்கு அப்பகுதியை எடுத்துக்கொள்ளும் உரிமை உண்டு.

குறிப்பு. மாநில அரசினருக்கு இவ்வுரிமை அளிக்கத்தக்கதா என்பதை உறுதி செய்யும் அதிகாரம் மத்திய அரசினரே வகிக்கின்றனர்.

(iii) "சென்னை மாநகரில் நிலங்களுக்கான தனி விதிகள்" சென்னை மாநகரில் மைய அரசின் நிலங்கள் அயலாருக்கு விற்பனை செய்யப்படுவது கீழ்க்காணும் தனி விதிகளினால் முறைப்படுத்தப்படும்.

"அயலாருக்கு மைய அரசினால் விற்பனை" மாநகரில் நகர நிலவரி விதிப்பதற்காக சட்டத்தில் வகுக்கப்பட்ட நடைமுறைக்கிணங்க மாநில அரசினர் நிலத்திற்குரிய நகர நிலவரியைக் கணக்கிட வேண்டும். விற்பனையினால் கிடைக்கப் பெற்ற தொகையைப் பங்கிடுவதற்காக, நகர நிலவரியின் பாதிக்கு இருபத்தைந்து மடங்கு தொகை மாநில அரசினருக்குச் சேர வேண்டியதாகக் கணக்கிட வேண்டும். இவ்வகையில் விற்று முதல் தொகைக்கும் மேலே உள்ளவாறு முதற்கொருவாக்கப்பட்ட விலை மதிப்பிற்கும் உள்ள வித்தியாசத்தின் பாதித் தொகை பங்கு குறைந்ததாகவுள்ள அரசுக்குக் கொடுப்பதன் மூலம் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே சரிக்கட்டப்பட வேண்டும்.

(iv) உரிமை முதலியவை பற்றிய விவகாரங்களை முடிவு செய்தல்.— மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையே உரிமை முதலியவை பற்றிய எல்லா விவகாரங்களையும் அரசியல் அமைப்பின் 131 ஆவது விதியை அனுசரித்து உச்ச நீதி மன்றம் தீர்ப்பளிக்கும்.

1—8—1950 தேதி, 2110 என். அ.ஆ.வரு.கைப.

சி. ஆ. 23:2, 23 அ:1]

2. நடப்பு விலை மதிப்புத் தொகை—விளக்கம்.—குறிப்பிட்ட நிலத்திற்கு எதிரில் வருவாய்ப் பதிவேடுகளில் காட்டியுள்ள மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வையை அல்லது அந்நிலத்திற்கு எதிரில் வருவாய்ப் பதிவேடுகளில் நிலத் தீர்வை காட்டப்படாமலிருக்குமானால், அந்த நிலத்திற்கு அருகில் சலுகை வீதங்களில் அல்ல : சலுகையில்லாத வீதங்களில் நிர்ணயிக்கப் பெற்றுள்ள மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வை செலுத்துவதற்குட்படாத நிலங்கள் நீங்கலாக, குறிப்பிட்ட நிலங்களைப் போலுள்ள நிலங்களுக்கு எந்த வீதங்களில் மனைத்தீர்வை அல்லது நிலத்தீர்வை விதிக்கப்பட்டுள்ளதோ அதே வீதத்தில் மனைத்தீர்வை அல்லது நிலத்தீர்வையைச் செலுத்துவதற்குட்படுத்தி பகிரங்க மான விற்பனையில் அந்நிலம் விற்கப்படுமானால், அந்த நிலம் என்ன விலை பெறுமோ அந்த விலையே அந்த அந்த நிலத்திற்குரிய பொருத்தமான நடப்பு விலை மதிப்புத் தொகை ஆகிறது. இந்த நடப்பு விலை மதிப்புத் தொகையே மாநில மத்திய அரசாங்கத்தார்கள் தங்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் நடவடிக்கைகளில் தக்கவாறு வரவு வைப்பதிலும் செலவு எழுதுவதிலும் மேற் கொள்ளத்தக்கது.

28—4—1928 தேதி, 936 என். அ.ஆ.வரு.பல.

1—8—1950 தேதி, 2110 என். அ.ஆ.வரு.பல.

5—6—1928 தேதி, 46 என். வ.து.வா.செ.

19—11—1953 தேதி, 20 என். வ.து.வா.செ.வரு.கை.பல.

14—7—1956 தேதி, 46206—சி/56—1 என் அரசு குறிப்பு வரு.

23—8—1956 தேதி, 1185 என். வ.து.வா.செ.பலவ.

(1) நிலத்தின் விலை மதிப்புத் தொகையைத் தண்டல் செய்தல்: இரு துறைகளுக்கும் இடையே நிலம் மாற்றம் செய்யப்படுமிடத்து, இவற்றில் ஒரு துறை வணிகத் துறையாக இருக்கும்போது அல்லது நிலம் எத்தக் காரியத்திற்குத் தேவைப்பட்டதோ அக்காரியம் வணிகமாகவோ ஆதாயம் ஈட்டுவதாக இருக்கும்போது நிலத்தின் விலை மதிப்புத் தொகை தண்டல் செய்யப்பட வேண்டும்.

(1) 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21 ஆம் நாளும் 2308 என் னுமிட்ட நிலை அ, ஆ. வரு.

(2) 1973 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாளும் ஓ.மு. (உ) 7613/72 என் வ.வா.செ.

23 அ. மாநில அரசின் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிலங்களை மாற்றல் செய்தல். 1. நடைமுறையும் பல்வேறு அதிகாரிகளின் அதிகாரங்களும் :—

(i) ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றல் செய்யுமாறு கோரப்படும்போது, அதனைக் கோரும் துறையின் மாவட்டத் தலைமை அதிகாரி மாவட்ட ஆட்சியரிடம் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட இரண்டு துறைகளின் தலைவர்கள் அதன் மீது அதிகார வரம்புடைய கோட்ட ஆட்சியர்

ஆகியோர் அவ்விடத்தைக் கூட்டு ஆய்வு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் யாவரிடையேயும் உடன்பாடு இருக்குமெனில் இக்கூட்டு ஆய்வின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரும் அத்துறைகளின் மாவட்டத் தலைவர்களும் அதை முடிவு செய்ய இயலும். இருப்பினும் மாவட்ட மட்டத்திலுள்ள அலுவலர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருக்குமெனில் இச்செய்தி வருவாய் வாரியம் உட்பட சம்பந்தப்பட்ட துறைகளின் தலைவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் ஒத்துக்கொள்ளத் தக்க முடிவுக்கு வர முயற்சிக்க வேண்டும். தேவையான் நில வருவாய் ஆணையாளர் உள்ளிட்ட துறைத் தலைவர்களின் கூட்டு ஆய்வு ஒன்று, செய்யப்படலாம். அங்கும் கருத்து வேறுபாடு இருக்குமானல் ஆணை பிறப்பிக்கத் தேவையான எல்லா அடிப்படை விவரங்களுடன் அச்செய்தி அரசினருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

(ii) நிலங்களை மாற்றல் செய்ய ஒப்பளிப்பதற்கான அதிகாரங்கள் :—

ஒரே நிலத்திற்காக இரு துறைகளால் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட துறைகளால் விண்ணப்பம் செய்யும். நேர்வுகள் தவிர மற்ற நேர்வுகளில் நிலத்தின் பரப்பு 1.0 ஏக்கர்களுக்கு மேற்படாதபோதும் நிலத்தின் நடப்பு மதிப்பு 50,000 ரூபாய்க்கு மேற்படாமலுமிருப்பின் மாவட்ட ஆட்சியர் ஒரு துறையிலிருந்து மற்றொன்றுககு நிலத்தை மாற்றல் செய்ய ஒப்பளிப்பு வழங்கலாம். ஒரே நிலத்திற்காக இரு துறைகளால் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட துறைகளால் விண்ணப்பம் செய்யும் நேர்வுகள் தவிர மறற நேர்வுகளில் நிலத்தின் மதிப்பு 2,00,000 ரூபாய்க்கு மேற்படாதவிடத்து வருவாய் வாரியம் ஒரு துறையிலிருந்து மற்றொன்றுக்கு நிலத்தை மாற்றல் செய்ய ஒப்பளிப்பு வழங்கலாம். வருவாய் வாரியத்தால் மாற்றல் செய்யப்படக் கூடிய நிலத்தின் பரப்புக்கு வரம்பு இல்லை.

(iii) ஒரே நிலத்திற்காக இரு துறைகளால் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட துறைகளால் விண்ணப்பம் செய்து கொள்ளும் நேர்வுகளில் தவிர மற்ற நேர்வுகளில் மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் வாரியம் தாங்களே மாற்றல் செய்து ஆணையிடத் தகுதி பெற்றுள்ள நேர்வுகளை பொறுத்த மட்டும் ஒப்பளிப்பு வழங்குவதை எதிர்நோக்கி நிலத்தில் புக எந்தத் துறையையும் அனுமதிக்கலாம். மற்ற நேர்வுகளில் அரசினர் அனுமதியைப் பெற வேண்டும்.

(iv) மைய அரசுக்கு நிலம் மாற்றல் செய்யப்படுவதற்கான நேர்வுக்கு ஒப்பளிப்புக்காக அரசினருக்குப் பணிந்தனுப்பப்பட வேண்டும்.

2. மாற்றலுக்குப் பின் பாகுபாடு :—

அரசுத் துறை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நிலங்கள் மாற்றல் செய்யப்படும்போது நில வகைப்பாடு, சம்பந்தப்பட்ட துறையின் பெயரில் மாற்றப்பட வேண்டும். எந்தக் காரியத்திற்காக (ஊர் மன்பாண்டத் தொழில் போன்று) நிலம் பயன்படுத்தப்படுகிறதோ அதையும் குறிக்க வேண்டும்.

3. (i) நில மதிப்பைத் தண்டல் செய்தல் :—வணிக காரியத்திற்காக நிலங்கள் மாற்றல் செய்யப்படும் போதெல்லாம் நிலத்தைக் கேட்கும் துறை

நி. ஆ. 23அ:3—5, 24]

வணிகத் துறையாகப் பாகுபாடு செய்யப்பட்டு அல்லது அவ்வாறு பாகுபாடு செய்யவில்லை என்றும் பொருண்மை கருதாது நிலத்தின் விலை மதிப்புத் தண்டல் செய்யப் பெற வேண்டும்.

(ii) மரத்தின் விலை மதிப்பை தண்டல் செய்தல் :—

எக்காரியத்துக்காகவும் யாதொரு துறைக்கு மாற்றல் செய்யப்பட வேண்டிய நிலத்தில் உள்ள மரங்களின் விலை மதிப்பு அத்துறை வணிகத் துறையாக இருப்பினும் அல்லது அது அவ்வாறில்லையெனினும் மற்றும் அக்காரியம் ஊதியம் அளிக்கக் கூடியதோ அன்றோ எனினும் தண்டல் செய்யப் பெற வேண்டும்.

(iii) கல்விலை மதிப்பையும் உட்பிரிவுக் கட்டணங்களையும் தண்டல் செய்தல் :—

நிலங்கள் மாற்றல் செய்யப்படுகின்ற துறை வணிகத் துறையாக உள்ளது அல்லது அவ்வாறு இல்லை என்னும் பொருண்மை கருதாது கல் மதிப்பையும் உட்பிரிவுக் கட்டணங்களையும் தண்டல் செய்துவிட வேண்டும்.

4. ஊராட்சிகளுடன் கலந்தறிதல் :—

மாற்றல் கருத்துருக்களுக்கு ஒப்பளிப்பு வழங்கு முன் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் ஊராட்சிகளிடம் உரிமையில் உள்ள நிலங்களை அவற்றிடமிருந்து திரும்பப் பெற வேண்டும். பொது நிலங்களை மாற்றல் செய்தல் பற்றி ஊராட்சிகளுடன் தவறாமல் கலந்தறிய வேண்டும். ஆனால் இவ்வாறு கலந்தறிவது பொது நலனுக்குத் தேவையானவிடத்து அவ்வாறு செய்யத் தகுதியுள்ள அதிகாரியால் ஊராட்சியின் தடைகளைத் தள்ளி வைப்பதை விலக்குவதாகாது.

5. நிலங்களை மாற்றல் செய்வதற்கு கருத்துக்களைப் பணிந்தனுப்ப அமைத்த படிவம்.

6. வருவாய் வாரியம் அல்லது மாநில அரசின் ஒப்பளிப்பு தேவைப்படும் நிலங்கள் மாற்றல்களுக்கான கருத்துக்கள் இணைப்பில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் இருக்க வேண்டும்.

24. தனிப்பட்டவர் அல்லது நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் அரசினர் வசமுள்ள நிலத்தை விட்டு வைத்தலும் நிலத்தீர்வை விலக்கு அளித்தலும்.—

குறிப்பு.—(1) "தல ஆட்சிக் கழகம்", "தல அதிகாரி" "தல ஆட்சி நிதி" என்றசொற்றொடர்கள் இந்த நிலை ஆணையில் எங்கெங்கெல்லாம் வருகின்றனவோ அங்கெல்லாம் அவை பஞ்சாயத்துக்களையும் குறிக்கும்.

(2) இந்த நிலை ஆணையின் கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலம் கொடுக்கப்படுவதற்காகக் கம்பெனி அசோசியேஷன் அல்லது சங்கம், செய்து கொள்ளும் விண்ணப்பம் அந்தக் கம்பெனி அசோசியேசன் அல்லது சங்கம் 1956-ஆம் ஆண்டு கம்பெனிகளின் சட்டத்தின் (1956-ஆம் ஆண்டு I-ஆவது மத்திய அரசுச் சட்டம்) 3 (1) (i) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருளுக்குட்பட்டு வந்தாலன்றி அல்லது 1860-ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம், (1860-ஆம் ஆண்டு XVI-ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880-ஆம் ஆண்டு சமயச் சங்கங்களின் சட்டம் (1860-ஆம் ஆண்டு I-ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1932-ஆம் ஆண்டு சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932-ஆம் ஆண்டு சென்னை VI-ஆவது சட்டம்), 1942-ஆம் ஆண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1942-ஆம் ஆண்டு VI-ஆவது மத்திய சட்டம்), 1838-ஆம் ஆண்டு ஈட்டுறுதிச் சட்டம் (1938-ஆம் ஆண்டு VI-ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926-ஆம் ஆண்டு இந்திய தொழிலாளர்கள் யூனியன்கள் சட்டம் (1926-ஆம் ஆண்டு XVI-ஆவது மத்தியச் சட்டம்), அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியன் மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம் ஆகிய இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்பெற்றிருந்தாலன்றிக் கவனிக்கப்பட மாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது உரோமன் கத்தோலிக் கிருத்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள் ஏனைய உரோமன் கத்தோலிக் சமய குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற்றிற்குப் பொருந்தாது.

7—9—1956 தேதி. 3410 என். அ.ஆ.வரு.

17—9—1956 தேதி, 1316 என். வ.து.வா.செ.கை.ப.

(3) நில அளவுச் செலவையும் எல்லை வரையறுத்தல் செலவையும் வசூலிப்பதைப் பொருத்தமட்டில் சங்கிலி அளவை நடைமுறை நூலில் உள்ள பொருத்தமான விதிகளைக் காண்க.

(7—9—1956 தேதி, 3410 என். அ.ஆ.வரு.பல.அ)

(20—9—1956 தேதி, 1316 என். வ.து.வா.செ.பலவ.)

முகவுரை.—தல ஆட்சிக் கழகங்கள் அல்லது தனியான சங்கங்கள் அல்லது தனிப்பட்டவர்களிடம் பொதுப் பணிகளுக்காக (எடுத்துக்காட்டாக பள்ளிகள், கோயில்கள், சத்திரங்கள், சாலைகள், மருத்துவச்சாலை, தல ஆட்சிக் கழக அலுவலகங்கள் முதலியவை) கிரயமின்றி அல்லது முழுக்கிரயம் அல்லது சலுகைக்கிரயம் வசூலிக்கப்பட்டு அரசாங்க நிலத்தை விட்டு வைப்பதைப் பற்றி இந்த நில ஆணை விதி வகுக்கிறது. இது நிலத்தீர்வை விலக்கைப் பற்றியும் கூறுகிறது.

குறிப்பு.—(1) மத்திய அரசாங்க நிலம் அல்லது மத்திய அரசாங்கத்தினிடம் சட்ட உரிமையிலுள்ள நிலத்திற்காகத் தல ஆட்சிக் கழகங்கள் செய்து கொள்ளும் விண்ணப்பங்களை மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கத்தின் வழியாக அனுப்ப வேண்டும். இந்த நில ஆணை மாநில அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை மாத்திரம் மேலே குறிக்கப்பட்டுள்ளவாறு விட்டு வைத்தல் பற்றியதாகும்.ப

(2) தல ஆட்சிக் கழகங்களாயினும் தனிப்பட்ட சங்கங்களாயினும் அவற்றின் அல்லது தனிப்பட்டவர்களின் கல்வி சம்பந்தமான உபயோகங்களுக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள், சிறுவர்கள் நிலையங்களுக்கென்றுள்ள மாவட்டக் கல்வி அலுவலர் வழியாகவும், சிறுமியர் நிலையங்களுக்கென்றுள்ள மகளிர் பள்ளி ஆய்வாளர் வழியாகவும் கலெக்டருக்கு அனுப்பவேண்டும்.

நி. ஆ. 24 :1—2]

(25—10—1943 தேதி, 1359 எண். வ.து.வா.செ.அச்சு.பலவ.)

(11—10—1923 தேதி, 2695 எண். அ.ஆ.வரு.கைப.)

(7—9—1956 தேதி, 3410 எண். அ.ஆ.வரு.கைப.)

20—9—1956 தேதி, 1316 எண். வ.து.வா.செ.பலவ.

பிரிவு 1—தனிப்பட்டவர், நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் அரசினர் நிலத்தை விட்டுவைத்தல்.

7—9—1956 தேதி, 3410 எண். அ.ஆ.வரு.கைப.

(20—9—1956 தேதி, 1316 எண். வ.து.வா.செ.பலவ.)

1. பொதுவான கொள்கைகள்.—வருமானமில்லாத பொது உபயோகங்களுக்காக அனுபோகம் செய்து கொள்ளப்படுவதற்காக அரசினர் நிலம் சாதாரணமாக யாதொரு தொகை வசூலிக்கப்படாமல் கொடுத்துவிடத் தக்கதாகும். இருப்பினும், அரசினர் செலவில் முன்னதாக விலைக்கு வாங்கப் பெற்ற நிலத்திற்கும் வருமானமுள்ள உபயோகங்களுக்காக தல ஆட்சிக் கழகங்களுக்குக் கொடுக்கப்படும் நிலங்களுக்கும், ஒரு கம்பெனிக்கு அல்லது தனிப்பட்டவர் ஒருவருக்கோ ஒரு நிலையத்திற்கோ எத்தகைய பொது உபயோகத்திற்காகக் கொடுக்கப்பெறும் நிலத்தின் நடப்பு விலைக் கிரயம் வசூலிக்க வேண்டுமா என்பதை ஆலோசனை செய்ய வேண்டும்.

2. அரசினர் நிலத்தை கொடுப்பதற்குரிய அதிகார வரம்புகள்.—உண்மையில் பொது உபயோகத்திற்காகத் தல ஆட்சிக் கழகங்களிடம் 20,000 ரூபாய் நடப்பு விலை மதிப்புத் தொகைக்கு அதிகமாக இல்லாத அரசினர் நிலத்தையும் தனிப்பட்ட சங்கம் அல்லது நிலையம் அல்லது தனிப்பட்டவர்களிடம் 3,000 ரூபாய் நடப்பு விலை மதிப்புத் தொகைக்கு அதிகமில்லாத அரசினர் நிலங்களையும் விட்டு வைக்க வருவாய்த் துறை வாரியம் அதிகாரம் பெற்றுள்ளது. கட்டடங்கள் உள்ள அரசினர் நிலம் உட்பட அதன் மதிப்பு ஒவ்வொன்றிலும் 10,000 ரூபாய்க்கு அதிகமில்லாவிடில் அதையும் விட்டு வைக்க வருவாய்த் துறை வாரியம் அதிகாரம் வகித்துள்ளது.

குறிப்பு.—மேற்கண்ட அதிகாரம் வருவாய்த்துறைக் கூட்டுறவுக் கழகத்திற்கு வழங்கப்பெற்றிருக்கிறது.

நிலத்தின் இருப்புரிமையின் (பின்வரும் 3 ஆவது பத்தியில் விளக்கியுள்ளவாறு) நடப்பு விலை மதிப்புத் தொகையும் இழக்க நேரிட்ட நிலத் தீர்வையின் (பின்வரும் 8 ஆவது பத்தியை அனுசரித்து) மூலதன மதிப்பும் சேர்ந்து 10,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால் உண்மையில் பொது உபயோகங்களுக்காகத் தல ஆட்சிக் கழகங்களுக்கு அந்நிலத்தைக் கொடுப்பதற்கு வருவாய்த் துறை வாரியத்திற்கு அதிகாரமுண்டு. நிலத் தீர்வை இழக்க வேண்டிய நிலை ஏற்படாத போது அதன் மூலதன மதிப்புத் தொகையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாகாது. இவ்வாறான மொத்த மதிப்பு 6,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால்

தல ஆட்சிக் கழகங்களிடம் நிலத்தை விட்டுவைக்கக் மொத்த மதிப்பு ரூபாய் 2000க்கு மேற்படாதிருந்தால் தனியார் நிறுவனங்கள், நிலையங்கள், தனிப்பட்டோருக்கு நிலத்தை விட்டு வைக்க, கலெக்டர்களுக்கு அதிகார மூண்டு. சாலைக்காகவும் அதற்குச் சம்பந்தப்பட்ட சால், மற்றப் பொருள் சேகரித்து வைப்பதற்காகவும் நிலம் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் மேலே கணக்கிட்டவாறு மதிப்பு 6,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால், கலெக்டர்கள் அத்தகைய நிலங்களைக் கொடுக்கலாம். இவ்வாறு மதிப்பிட்ட தொகையும் இழக்க நேர்ந்த நிலத் தீர்வையின் மூலதனத் தொகையும் சேர்ந்து 2,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், கோட்ட ஆட்சியாளர்கள் உண்மையில் பொது உபயோகங்களுக்காகத் தல ஆட்சி மன்றங்களுக்கு அரசாங்க நிலங்களைக் கொடுக்கலாம். இவை நீங்கலாகத் தல ஆட்சிக் கழகங்கள் தனிச் சங்கம் அல்லது நிலையம் அல்லது தனிப்பட்டவர்களுக்கு விற்பனையில் அல்லது நன் கொடையில் அல்லது ஒப்படையர் நிலத்திற்கு தீர்வை செலுத்துவதற்குட் படுத்தி, அல்லது நிலத்தீர்வை இல்லாமலே நிலங்களைக் கொடுப்பதற்கு மாநில அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும். இதற்காகக் குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

23—5—1941, தேதி 1182 எண். அ.ஆ.வரு.

7—9—1956 தேதி, 3410 எண். அ.ஆ.வரு.கை.ப.

20—9—1956 தேதி, 1316 எண். வ.து.வா.செ.பலவ.

இவ்வாறு நிலம் கொடுப்பதற்கு அதிகாரம் பெற்றவர்கள் அவசர நிலையில் உரிய முறையில் பிறப்பிக்கத்தக்க ஆணைக்கு முன்னதாக நிலத்தை சுவாதீனம் செய்து அனுபவிப்பதற்கு அனுமதி அளிக்கலாம். இவ்வாறு அனுமதிக்கு முன், அத்தகைய அதிகாரிகள் நிலம் பெறுபவர்களிடமிருந்து நிலம் கொடுக்கப் படுவதற்கு விதிக்கப்படத்தக்க எல்லா நிபந்தனைகளுக்கும் தாம் உட்படுவதாக ஒரு ஒப்பந்தத்தை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

6—7—1955 தேதி, 2081 எண். அ.ஆ.வரு.கை.ப.

7—9—1956 தேதி, 3410 எண். அ.ஆ.வரு.கை.ப.

20—9—1956 தேதி, 1316 எண். வ.து.வா.செ.பலவ.

குறிப்பு.—(i) கொடுக்கத்தக்க நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையை அனுசரித்து இந்தப் பத்தியின் கீழ் மாநில அரசாங்கத்தின் அனுமதி தேவையாகு மானால் அத்தகைய அனுமதி பெறுவதற்காக வருவாய்த்துறை வாரியத்தின் வழி யாக முன்னதாகவே விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

14—6—1920 தேதி, 1310 எண். வ.து.வா.செ.பலவ.

நி. ஆ. 24 :2—3]

அரசாங்கத்திற்குப் பணி செய்யவதற்காக அல்லது சமூகத்திற்குப் பணி செய்வ தற்காகத் தனிப்பட்டவர்களுக்கு ஊதியமாக நிலம் கொடுப்பதற்கும் அவற்றின் நிலத் தீர்வை விலக்கு அளிப்பதற்கும் மாநில அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும்.

சேவை ஊழியர்களுக்கான நிலம் கொடுக்கப் பெறுவதைப் பற்றிய பொது நிபந்தனைகளை 73-வது நில ஆணையின் 5-ஆவது பத்தியில் காண்க.

(ii) அரசாங்க ஆணையினுலன்றி எந்த நிலத்தையும் அயல் நாட்டினர் வசம் விடக்கூடாது.

(iii) உண்மையில் தேவையான பொது உபயோகங்களுக்காகத் தல ஆட்சிக் கழகங்களிடம் நிலத்தை விட்டு வைத்தலில், நிலத்தைக் கோரித் தல ஆட்சிக் கழகம் தம்மிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்குமாலும் நிலங்களை அநுபோகம் செய்து கொள்வதற்குத் தல ஆட்சிக் கழகத்திலிருந்து அனுமதி தந்தால் தான் அந்நிலத்தை உபயோகம் செய்துகொள்வதற்கான வேலையை நிறைவேற்ற முடியும் என்றும் அவசரமான காரியம் என்றும் கலெக்டர் மனநிறைவு கொள்ளத் தக்க வகையில் கருதுவாரெனில் அவர் தமது அதிகார வரம்பிற்குள் நில அளவை மேற் கொள்ளுவதற்கு முன்னதாகவே நிலங்களை அநுபோகம் செய்துகொள்ளத் தல ஆட்சிக் கழகத்திற்கு அனுமதி அளிக்கலாம். நிலத்தை விட்டு வைப்பதற்குரிய ஆணையை வருவாய்த்துறை வாரியம் அல்லது அரசினர் பிறப்பிக்க வேண்டுமெனில் அத்தகைய சூழ்நிலையில் கலெக்டர் வேண்டுமான அனுமதியைப் பெறுவதற்காகப் பொருத்தமான அதிகாரப் பீடத்திற்கு எழுதி மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

3. நடப்பு விலை மதிப்பு என்பதின் விளக்கம்.—பொருத்தமான நிலத் தீர்வை செலுத்துவதற்குட்படுத்தி நிலம் வெளிப்படையாய் விற்கப்பட்டால் அதற்கு என்ன விலை கிடைக்கக் கூடுமோ அதன் விலை மதிப்புத் தொகைதான் நடப்பு விலை மதிப்புத் தொகை அல்லது அனுபோக உரிமை எனப்படும். தீர்வை விதிக்கப்பட்ட நிலத்தைப் பொருத்த மட்டில், வருவாய்ப் பதிவேடுகளில் அதற்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ள நிலத் தீர்வை அல்லது மனைத் தீர்வைதான் அதன் பொருத்தமான தீர்வையாகும். கிராமங்களில் புறம்போக்கு அல்லது தீர்வை விதிக்கப்படாத நிலங்களைப் பொருத்த மட்டில் அந்த இடத்தில் அருகில் தீர்வை செலுத்துவதற்குட்படாத அல்லது சலுகைத் தீர்வை செலுத்தி வரும் நிலங்கள் நீங்கலாக அதே தரமான தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களுக்கு எவ் வீதங்களில் தீர்வை விதிக்கப் பெற்றுள்ளனவோ அவ் வீதங்களில் தீர்வை நிர்ணயம் செய்து கொண்டு இந்த அடிப்படையில் அந்த நிலத்தின் அனுபோக உரிமையின் மதிப்பை நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். 21 ஆவது நில ஆணை, 9 ஆவது பத்தியின்கீழ் நகரங்களாக அறிவிக்கப் பெற்றுள்ள இடங்களில் ஒப்புக்கொள்ளப் பெற்ற விவசாயத் தீர்வை பொருத்தமான நிலத் தீர்வை எனக் கொள்ள வேண்டும். அது இப்போது ஏக்கர் ஒன்றுக்கு 6 ரூபாய் 25 பைசா வாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

19—6—1897 தேதி, 308 எண். வ.து.வா.செ.

18—8—1902 தேதி, 191 எண். வ.து.வா.செ.

8—3—1927 தேதி, 436 எண். அ.ஆ.வரு.

13—12—1927 தேதி, 2598 எண். அ.ஆ.வரு.

16—1—1928 தேதி, 3 எண். வ.து.வா.செ.

4. நிலம் பெற்றவரிடம் மரத்தின் விலை மதிப்புத் தொகையை வசூலித்தல்.— 1882 ஆம் ஆண்டு சென்னை வனச் சட்டம் 26 (ஏ) பிரிவில் மாவட்டத்திற்கு வகுக்கப்பெற்றுள்ள காட்டு வரி விதங்களை அனுசரித்து நிலத்திலுள்ள மரங்களின் கிரயத்தை மதிப்பிட வேண்டும். இந்த அளவு விதத்தைப் பொதுவாக அல்லது குறிப்பானவற்றில் கலெக்டர் தமது யுக்தானுசாரத்தில் குறைத்துக் கொள்ளலாம். நிலக் கொடை பெற்றவரிடமிருந்து மரக் கிரயம் வசூலிக்க வேண்டும். நிலக் கொடை பெறுபவர் மரக் கிரயம் கொடுக்க இயலாதவராக இருப்பாரெனில், இந்த நிலை ஆணையின்கீழ்க் கலெக்டர் கொடுக்கக் கூடிய நிலத்தைப் பொறுத்த வரையில் அவர் மரக் கிரயத்தைத் தள்ளுபடி செய்யலாம். கீழ்க்காணும் மாவட்டங்களில் நிலங்கள் கொடுக்கும்போதே அவற்றில் சந்தன மரங்கள் இருந்தாலும் அல்லது பிற்காலத்தில் சந்தன மரங்கள் வளருமானாலும் அவற்றின் உரிமை அரசாங்கத்துக்குச் சேர்ந்தது என்றே அவ்வுரிமையை அரசினருக்கு ஒதுக்கி வைத்து விட வேண்டும்:

வட ஆற்காடு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், நீலகிரி.

25—5—1929 தேதி, 1025 எண். அ.ஆ.வரு.கை.ப.

5—6—1929 தேதி, 40 வ.து.வா.செ.

21—4—1938 தேதி, 1026 எண். அ.ஆ.வரு.கை.ப.

3—5—1938 தேதி, 43, வ.து.வா.செ.அச்சு.

தல ஆட்சிக் கழகங்களிடம் நிலங்களை விட்டு வைப்பதில், அந்த நிலங்களிலுள்ள மரங்களுக்கு கிரயம் செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ள தல ஆட்சிக் கழகங்களுக்கு விருப்பம் இல்லையென்றால், அந்த நிலங்களிலுள்ள எல்லா மரங்களையும் அல்லது அம்மரங்களில் சிலவற்றைப் பொது நன்மைக்காகப் பாதுகாப்பது தக்கதெனக் கலெக்டர் கருதுவாரெனில், அம்மரங்களில் அரசினருக்கு இருக்கும் உரிமையைப் பாதுகாக்கும்பொருட்டு அவர்— .

(1) கலெக்டர் அனுமதியின்றி உயிர் மரம் எதையும் வெட்டக் கூடாது என்றும்;

(2) உலர்ந்த அல்லது காற்றில் வீழ்த்தப்பட்ட மரங்களின் விற்பனைத் தொகையையும் 1 ஆவது நிபந்தனையை அனுசரித்து வெட்டப்பட்ட மரங்களின் விற்பனைத் தொகையையும் அரசினர் கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்பவை போன்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி அம்மரங்களை தல ஆட்சி கழகங்களிடம் ஒப்பிவித்து விட வேண்டும். நிலம் கொடுக்கப்படும் முன்னர் பொது நன்மைக்காக வேண்டாதனவாகிய மரங்களும், தல ஆட்சிக் கழகங்களால் எடுத்துக்கொள்ள மறுக்கப்பட்ட மரங்களும் விற்கப் பெற்று அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

நி. ஆ. 24:5—6]

30—9—1938 தேதி, 2570 எண். அ.ஆ.வரு.

13—10—1938 தேதி, 2859 எண். வ.து.வா.செ.பல.

5. மாநில அரசினர் நிலத்திற்காகச் செய்து கொள்ளும் கோரிக்கை எந்தப் படிவத்தில் இருக்க வேண்டும்.—மாநில அரசினருக்குச் சொந்தமான நிலம் கொடுக்கப்படுவதற்காக வருவாய்த் துறை வாரியம் அல்லது மாநில அரசினரிட மிருந்து ஒப்பளிப்பு பெற வேண்டியிருக்கும் போது, கலெக்டர் தமது கோரிக் கையை XXIX வது இணைப்பிலுள்ள படிவத்தில் அனுப்ப வேண்டும். நிலம் விட்டு வைக்கப்படுவதுடன், அதற்குரிய நிலத் தீர்வைக்கு விலக்களிக்கப்பட வேண்டும் என்ற யோசனை இருக்குமானால், இந்த நிலை ஆணை II ஆவது பிரிவில் 12 ஆவது பத்தியில் குறிப்பிட்ட படிவத்தில் கூடுதலான கோரிக்கையை மேலனுப்ப வேண்டும். இருப்பினும் 1894 ஆம் ஆண்டு I ஆவது சட்டத்தின் கீழ்ப் பரிவர்த்தனையாக நிலம் கொடுக்கப்படும்போது, மேலே குறிக்கப் பட்டுள்ள படிவங்களுக்குப் பதிலாக, பின்வரும் 90 ஆவது நிலை ஆணையின் 23 ஆவது பத்தியில் குறிப்பிட்ட தனிப் படிவத்தை பயனுக்கிக் கொள்ள வேண்டும்.

22—2—1897 தேதி, 67 எண், வ,து.வா.செ.—7-ம் பக்கம் (II)-ஆவது படிவத் தின் அடி குறிப்பு.

(14—6—1926 தேதி, 1310,எண், து.வா.செ.பல.)

(13—12—1897 தேதி, 436 எண். வ.து.வா.செ.)

(23—11—1898 தேதி, 317 எண், வ.து.வா. செ.)

6. கொடையின் நிபந்தனைகள்—அரசினருக்குச் சொந்தமான நிலம் கொடுக்கப்படுவதற்குரிய நிபந்தனைகள்—(1) அரசினருக்குச் சொந்தமான நிலங்கள்.—சமயம் அல்லது கல்வி, அல்லது மற்றப் பொதுப் பணிக்கு வழங்கப் படும் நிலக் கொடை எப்பொழுதுமே கீழே குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும் :—

(1) நிலம் வேறெருரு பயனுக்கும் அல்லாமல் ..... ஆக பயனுக்கிக் கொள்ளப்பட வேண்டும்;

(2) கொடையின் யாதொரு நிபந்தனையும் மீறப்பட்டால், அரசினர் நிலம் முழுவதையும் அல்லது அதன் பாகத்தை அதிலுள்ள கட்டடங்கள் உட்படத் திரும்ப எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு திரும்பப் பெறுவதற்குக் கொடை பெற்றிருப்பவருக்கு நிலத்தில் செய்திருக்கக் கூடிய மேம்பாடுகள யாவற்றிற்குமோ வேறு எத்தகைய வேலைகளுக்குமோ ஈடு கொடுக்கப்பட மாட்டாது. கொடை பெற்றிருப்பவர் கொடைக்காக அரசினருக்குச் செலுத்தி யிருக்கக்கூடிய தொகையையும் திரும்பப் பெறுவதற்கு அவருக்கு உரிமையில்லை. நிலத்தில் ஏதாவது கட்டடங்கள் இருக்குமானால் அவற்றை அப்புறப்படுத்து மாறு அவருக்கு அரசினர் கட்டளை இடலாம்.

[நி. ஆ.. 24:6

(3) பொதுப் பயனுக்காக அல்லது சுரங்க வேலை செய்வதற்காக நிலம் வேண்டுமென அரசினர் கருதுவாரெனில், நிலம் முழுமையும் அல்லது அதன் பாகத்தை அதிலிருக்கக்கூடிய கட்டடங்கள் யாவற்றுடனும், அரசினர் திரும்ப எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால் அல்லது எத்தகைய காரணத்திற்காகவும் நில உரிமை பெறப்பட்டால் அந் நிலத்திற்கும் மரங்களுக்கும் கொடுக்கத்தக்க ஈட்டுத் தொகை, அவற்றிற்காகக் கொடை பெற்றிருப்பவர் கொடுத்த தொகை அல்லது திரும்ப எடுக்கப்பட்ட போது, அல்லது அதன் உரிமைப் பெறப்பட்டபோது உள்ள அதன் மதிப்புத் தொகை, இவற்றில் எத்தொகை குறைந்ததாக இருக்கிறதோ, அத்தொகைக்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

(4) மேலே (3) ஆவது நிபந்தனையின்கீழ் நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால், நிலத்தில் கட்டடங்கள் இருக்குமானால் அவற்றிற்குரிய ஈட்டுத் தொகை (5) ஆவது நிபந்தனையில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரித்துக் கொடுக்க வேண்டும்.

(5) (3) ஆவது நிபந்தனையின்கீழ் நிலம் திரும்ப எடுத்துக்கொள்ளப் பட்டால் அல்லது யாதொரு காரணத்திற்காக நிலத்தின் உரிமை பெறப் பட்டால், கட்டடங்களுக்கும் மற்ற மேம்பாடுகளுக்கும் கொடுக்கத்தக்க ஈட்டுத் தொகை, கொடை பெற்றிருப்பவர் தாம் கொடை பெற்றபோது கொடுத்தத் தொகை அல்லது அது திரும்ப எடுக்கப்பட்டபோது அல்லது அதன் உரிமை பெறப்பட்டபோது அதற்கிருந்த மதிப்புத் தொகை இவற்றில் எத்தொகை குறைந்ததாக இருக்கிறதோ, அத் தொகையுடன், கொடை நிபந்தனைகளை அனுசரித்து நிலத்தில் கட்டப்பட்டிருக்கக்கூடிய மேம்பாடுகளுக்கு அவற்றிற் காக ஆரம்ப காலத்தில் செய்த செலவுத் தொகை அல்லது அவற்றைத் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அல்லது அவற்றின் உரிமையை பெறப்பட்ட போது அவற்றிற்கிருந்த மதிப்புத் தொகை, இவற்றில் எத்தொகை குறைந்த தாக உள்ளதோ அத்தொகையும் சேர்ந்த தொகைக்கு மேற்படாதிருக்க வேண்டும். மேலும் கட்டடங்களுக்காகவும், மற்ற மேம்பாடுகளுக்காகவும், அரசினரிடமிருந்து பெற்றிருக்கக் கூடிய யாதொரு உதவித் தொகையும் அந் நிபந்தனையில் கீழ்க் கொடுக்கத்தக்க ஈட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

(6) கட்டடங்களை அப்புறப்படுத்துமாறு (2) ஆவது நிபந்தனையின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட கட்டளையைக் கொடை பெற்றிருப்பவர் நிறைவேற்று வதற்கு மறுப்பாரெனில், அரசினர் அவற்றை அப்புறப்படுத்தி, அக் கட்டடப் பொருள்களின் விற்பனையிலிருந்து அப்புறப்படுத்திய செலவைச் சரிசெய்து கொள்ளலாம்.

(7) கொடை பெற்றிருப்பவர் நிலத்தைத் தாமாக விட்டுவிடுவாரெனில், அவர் அந்நிலத்தில் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகள் யாவற்றிற்கேனும் செய்திருக்கக்கூடிய வேலைகளுக்கேனும் யாதொரு ஈடும் கொடுக்கப்படமாட்டாது. இருப்பினும், நிலக் கொடைக்காக அரசினருக்குக் கொடை பெற்றிருப்பவர் செலுத்தியிருக்கக் கூடிய யாதொரு தொகையும் நிலத்தின் உரிமை விட்டுவிடப்

நி. ஆ. 24:6]

பட்ட போது அந்த நிலத்திற்கிருந்த மதிப்புத் தொகை இவற்றில் எது குறைந்ததாக இருக்கிறதோ, அத்தொகையைப் பெறுவதற்கு கொடை பெற்றிருப்பவருக்கு உரிமையுண்டு.

(8) கொடை வழங்கப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் ஆகிய எல்லாவற்றின் உரிமையையும், இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட பின்னர் நிலங்களில் வளரக் கூடிய மரங்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள், அவற்றின் வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்தித் தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் இவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டச் செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்குக் கொடை பெறுபவருக்கு உரிமை இல்லை.

(9) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறாமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் கலெக்டர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் கொடை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(10) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப்படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் கொடை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(11) (8) முதல் (10) வரையுள்ள நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அதை நிறைவேற்றப்படாவிடின் ஒப்படைப்பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ, அத்தகைய ஈட்டுத் தொகையை அவர் அரசினருக்குச் செலுத்திவிட வேண்டும். ஒப்படையை ரத்து செய்த நிலத்தில் திரும்பப் பிரவேசிக்கவும் அரசினருக்கு உரிமை உண்டு. அதன் பின்னர் அந்நில முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு சேர்ந்து விடும். இந்த நிலையில் கொடை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார்.

குறிப்பு.—கீழ்க் குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் கொடுக்கப்படும்பொழுது, சந்தன மரங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதற்குச் சம்பந்தமான (9) முதல் (12) வரையிலுள்ள நிபந்தனைகளை அடித்துவிட வேண்டும் :—

செங்கல்பட்டு.
தஞ்சாவூர்.
சென்னை.

[நி. ஆ. 24:6

இந்நிபந்தனைகள் பூரணமானவை என்று கருத இடமில்லை. நிலங்களைக் கொடுக்கத்தக்க அதிகாரத்தை வகித்துள்ளவர் தமது யுக்தானுசாரத்தில் கூடுதலாக விதிக்கக்கூடிய நிபந்தனைகளையும் விதிக்கலாம். நடப்பு விலை மதிப்புத் தொகையைப் பெற்றுக் கொண்டு வழங்கப்படும் கொடையைப் பற்றிய நிபந்தனைகள் மிகக் கண்டிப்பாய் இருக்க வேண்டியதில்லை. பொதுப்பணிகளுக்காகத் தல ஆட்சிக் கழகங்களுக்குக் கிரயமின்றி நிலம் கொடுக்கப்படும்போது அம் மன்றங்கள் நிலத்திலிருந்து உண்மையான வருமானம் அடையுமாறும் அந் நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகையை அம்மன்றத்திலிருந்து வசூலிக்கும் உரிமையை அரசினர் தங்களிடம் ஒதுக்கி வைத்துக்கொண்டுள்ளார் என்பதான கூடுதலான நிபந்தனையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பள்ளி இடத்திற்காக நிலத்தைக் கொடுக்க யோசனையிலிருக்கும்போது எல்லாச் சமுதாயத்தினரும் சென்று அணுகக் கூடிய இடத்தில் அந்நிலம் இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். நிலம் கொடுக்கும்போது, விதிக்கும் நிபந்தனைகளில் எல்லாச் சமுதாயத்தினருக்கும் பள்ளியில் இடம் பெற உரிமை உண்டு என்ற நிபந்தனையும் இருக்க வேண்டும். பள்ளி விளையாட்டிடங்களுக்காகவும் மற்ற உபயோகங்களுக்காகவும் நிலம் கொடுப்பதில், அதிகமாகச் செலவு செய்து கட்டடங்கள் கட்டுவது நிலம் வழங்கியதின் நோக்கத்திற்கே ஒவ்வாதவாறு, மாநில அரசினர் அல்லது தகுதி வாய்ந்த அதிகாரம் பெற்றுள்ளவர்களின் முன் அனுமதியின்றிக் கட்டடங்கள் கட்டப் பெற்றால் அக் கட்டடங்களுக்கு ஈடு கொடுக்கப்படாமலே, மூன் வழங்கிய நிலக் கொடையை இழக்க வேண்டி வரும் என்பதற்கான கூடுதலான நிபந்தனையும் விதிக்க வேண்டும். எல்லாவற்றிலும் குறிப்பிடப்பட்ட கட்டடங்களைத் தவிர மற்றக் கட்டடங்கள் கட்டுவது தடுக்கப் படுகிறதென்றும், திரும்ப எடுக்கப்பட நேரிடுமாயினும் அல்லது நிலத்தின் உரிமையைப்பெற நேரிடுமாயினும், அனுமதி பெறாது கட்டப்பட்ட கட்டடங்களுக்கு ஈடு கொடுக்கத்தக்கதில்லை என்பதற்கான ஒரு நிபந்தனையை விதிக்க வேண்டும். இந் நிபந்தனை, குறிப்பான ஒன்றில் உதாரணமாக நிலப் பரப்பு சிறிதாக இருக்குமிடத்தில், கட்டடமுள்ளதாக இருக்கும்போது, விதிப்பது பொருத்தமாக இராது என்றால் இந்த நிபந்தனையை விட்டு விட்டதற்கான காரணங்களை முற்றிலும் விளக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் வேண்டிய நிபந்தனைகளெல்லாம் ஒழுங்காக நிறைவேற்றப்படும் பொருட்டு வழங்கிய நிலங்கள் எல்லாவற்றையும் பற்றிய பதிவேடு ஒன்றை, ஒவ்வொரு கிராமத்திலும் தாலூகா அலுவலகத்திலும், கிராமக் கணக்கு நடைமுறை நூலிலும் தாலூகாக் கணக்கு நடைமுறை நூலிலும் குறிப்பிட்டுள்ள படிவத்தில் எழுதி வைக்க வேண்டும்.

(ii) கொடைபெற்றிருப்பவர் செலவில் உரிமை பெறப்பட்ட நிலங்கள்.— தனிப்பட்ட நிலையம் அல்லது சங்கங்களின் செலவி நில உரிமை பெறும் சட்டத்தின்கீழ் நில உரிமை பெறப்பட்ட நிலங்களைக் கல்வி அல்லது மற்றப் பொதுப் பயன்களுக்காக அவர்களிடம் விட்டு வைக்கப்பட்டவற்றில் மேலே உள்பத்தியில் (1) இருந்து (7) எண்ணிக்கை வரையுள்ள நிபந்தனைகளுக்குப் பதிலாகக் கீழே கண்டுள்ள நிபந்தனைகளை விதிக்க வேண்டும் :—

(1) நிலம் ..... (இன்ன பயனுக்குப்) பயன் படுத்தப்பட வேண்டுமே தவிர வேறெதற்கும் பயன்படுத்தக்கூடாது.

நி. ஆ. 24:6]

(2) பொதுப் பயனுக்காக அல்லது சுரங்க வேலைக்காக நிலம் வேண்டுமென அரசினர் கருதுவாரெனில் நிலம் முழுமையும் அல்லது அதன் பாகத்தை அதிலிருக்கும் கட்டடங்களுடன் யாவற்றையும் இவ்வாறு அரசினர் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால், நிலத்திற்கும் மரங்களுக்கும் கொடுக்கப்படத்தக்க ஈட்டுத் தொகை அவற்றின் உரிமம் பெற்ற காலத்தில் அவற்றிற்காகக் கொடை பெற்றிருப்பவர் கொடுத்த தொகையும் அதில் 15 சதவீதமும் சேர்ந்த தொகை அல்லது நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளப்படும்போது நிலத்தின் மதிப்புத் தொகையுடன் அதனுடன் அத் தொகைக்கு 15 சதவீதம் சேர்ந்த தொகை இவற்றில் எத்தொகை குறைந்ததாக இருக்கிறதோ அதுவே யாகும். நிலத்தில் கட்டடங்கள் இருக்குமானால்

(3) ஆவது நிபந்தனையை அனுசரித்து அவற்றிற்கு ஈட்டுத் தொகையை அரசினர் கொடுக்க வேண்டும்.

(3) (2) ஆவது நிபந்தனையின்கீழ் நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால், கட்டடங்களுக்கும் மற்ற மேம்பாடுகளுக்கும் கொடுக்கத்தக்க ஈட்டுத் தொகை, உரிமை பெறப்பட்ட காலத்தில் அவற்றிற்காகக் கொடை பெற்றிருப்பவரால் கொடுக்கப்பட்ட தொகையுடன் அத்தொகைக்கு 15 சதவீதமும் சேர்ந்த தொகை அல்லது அரசினரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் அவற்றிற்கிருந்த மதிப்புத் தொகையுடன் அத்தொகைக்கு 15 சதவீதமும் சேர்ந்த தொகை, இவற்றில் எத்தொகை குறைந்ததாக இருக்கின்றதோ அதனுடன், கொடை நிபந்தனைகளை அனுசரித்து, கொடை பெற்றிருப்பவர் கட்டியிருக்கக்கூடிய கட்டடங்கள் அல்லது செய்திருக்கக்கூடிய மேம்பாடுகளின் யாவற்றின் ஆரம்பச் செலவுத் தொகை அல்லது திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் அவற்றின் மதிப்புத் தொகை, இவற்றில் எத்தொகை குறைந்ததாக இருக்கின்றதோ அத்தகைய செலவுத் தொகை அல்லது மதிப்புத் தொகையும் அதன் 15 சதவீதமும் சேர்ந்த தொகையே ஆகும்.

(4) கொடை நிபந்தனைகளில் யாதேனும் மீறப்பட்டால் அல்லது கொடை பெற்றிருப்பவர் தாமாகவே நிலத்தின் உரிமையை விட்டுவிடுவாரெனில் பொதுப் பயனுக்காக நிலம் தேவையாக இருப்பின் அல்லது அந் நிலம் மூற்றிய உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென அரசினர் கருதுவாரெனில், அரசினர் நிலத்தைத் திருப்பி எடுத்துக் கொள்ளலாம். இவ் வதிகாரத்தை அரசினர் தாம் செயலாற்றுவதாக இல்லையெனத் தீர்மானிப்பாரெனில், கொடை பெற்றிருப்பவருக்கு அவ்வாறே தெரிவித்து விடலாம். அன்னரும், நிலங்கள், கட்டடங்களுக்காக அல்லது மற்ற மேம்பாடுகளுக்கு அரசினர் அவருக்குக் கொடுத்திருக்கக் கூடிய யாதொரு உதவித் தொகையை அரசினருக்குத் திருப்பிக் கொடுத்து விடுவதற்குட்பட்டு அந் நிலத்தைத் தாம் விரும்பு மாறு எவ்வகையிலும் முடிவு செய்து கொள்ளலாம். இந்நிலை ஆணைகளின் கீழ் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால் கொடை பெற்றிருப்பவருக்குக் கொடுக்கத்தக்க ஈட்டுத் தொகை நிலத்தின் உரிமை பெறப்பட்ட காலத்தில் (கட்டாயமாக பெற்ற நில உரிமைக்காக கொடுக்கப்பட்ட 15 சதவீதத் தொகை கழிக்கப்பட்ட) மதிப்புத் தொகை, அல்லது திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் அதற்கிருந்த மதிப்புத் தொகை, இவற்றில் எத்தொகை குறைந்ததாக இருக்கின்றதோ, அத்தொகையுடன் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டக் காலத்தில் கட்டடங்களுக்கும் மற்ற மேம்பாடுகளுக்குமுரிய மதிப்புத் தொகையும் சேர்ந்த தொகையாகும். நிலத்தில் கட்டடங்கள் இருக்குமானால், அவையும் அரசினருக்குத் தேவையில்லை எனில், கொடை பெற்றிருப்பவர் தமது

[நி. ஆ. 24:6—7

செலவில் அவற்றை அப்புறப்படுத்த வேண்டும். கொடை பெற்றிருப்பவர் இவ்வாறு செய்ய மறுப்பாரெனில் அவற்றை அரசினர் அப்புறப்படுத்தி, அப்புறப்படுத்துவதற்கான செலவைக் கட்டடப் பொருள்களின் விற்பனையிலிருந்து சரி செய்து கொள்ளலாம்.

(5) நிலத்திற்கும் கட்டடங்களுக்கும் அல்லது மற்ற மேம்பாடுகளுக்கும் அரசினர் கொடை பெற்றிருப்பவருக்குக் கொடுத்திருக்கக்கூடிய யாதொரு உதவித் தொகையையும் (2), (3), (4) நிபந்தனைகளின் கீழ்க் கொடுக்கத்தக்க ஈட்டுத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு.—நிலக் கொடையின் இறுதியில், கொடையை நிறைவேற்றி வைக்கும் அலுவலரின் கையொப்பத்திற்கு மேலே கீழ் வருபவை சேர்க்கப்பட வேண்டும்.—

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் (மாவட்டக் கலெக்டர்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவர் ஆணையையும், கட்டளையையும் அனுசரித்து ..... ஆண்டு ..... மாதம் ..... தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

1941-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி, 124 என், வ.து.வா.செ.அச்சு.

7. கொடையைத் திரும்ப எடுத்துக் கொள்வதும் காலத்தை நீடிக்க செய்வதும்.—கீழே குறிக்கப்பட்டுள்ளவற்றில் தனிப்பட்டவர், நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் விட்டு வைக்கப்பட்ட நிலத்தை திரும்ப எடுத்துக் கொள்ள வருவாய்த் துறை வாரியம் அதிகாரம் பெற்றுள்ளது :—

(i) திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்குச் சம்பந்தப்பட்டவரின் இசைவு இருக்கும் காரணத்தால் அதற்கு ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டியதில்லை என்ற போதும்,

(ii) ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டியதில்லையாயினும் கொடை பெற்றிருப்பவர் ஏதோ சில காரணங்களுக்காகவோ அல்லது வேறெதற்காகவோ நிலத்தின் உரிமையை விட்டுவிடாமல் இருப்பினும்,

(iii) கொடை பெற்றிருப்பவர்கள் நிலத்தின் உரிமையை விட்டு விட்டாலும், அல்லது விடா விட்டாலும் மரக் கிரயம் மாத்திரமே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியிருந்தாலும்,

ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டாதவற்றில் கலெக்டர்கள் தாங்களே, முன்னமே கொடுத்த நிலத்தையும் அளித்த நிலத் தீர்வை விலக்கையும் திரும்ப எடுத்துக் கொள்ளலாம்.

தனிப்பட்டவர், நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் முதல் முதலில் அரசினர் நிலம் விட்டு வைத்த நிலங்களைப் பொருத்த மட்டில் எப்பயன் களுக்காக நிலம் விட்டு வைக்கப்பட்டனவோ அப்பயன்கள் நிறைவேற்றப்படுவதற்கு வேண்டிய நீடிப்புக் காலத்தை வழங்க வருவாய்த் துறை வாரியம் அதிகாரம் பெற்றுள்ளது.

1934 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி, 349 என், அ.ஆ.பலவ.

1934 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி, 661 என், வ.து.வா.செ. பலவ.

1935-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ஆம் தேதி, 165 என், வ.து.வா.செஅச்சு

1938-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் தேதி, 1026 என், அ.ஆ.வரு.பலவ.

1933-ஆம்ஆண்டு ஜூன் மாதம் 29-ஆம் தேதி, 1142 என், அ.ஆ.வரு.பலவ.

நி. ஆ. 24:8]

1935-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ஆம் தேதி, 2422 எண், அ.ஆ.வரு. பலவ.

1934-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ஆம் தேதி, 506 எண், அ.ஆ.வரு.பலவ.

1934-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி, 53 எண், வ.து.வா.செ.அச்சு

1936-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ஆம் தேதி, 1718 எண், அ.ஆ.பலவ.

1936-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ஆம் தேதி, 112 எண், வ.து.வா.செ.அச்சு.

1938-ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் தேதி, 43 எண், வ.து.வா.செ.அச்சு.

1933-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18-ஆம் தேதி, 55 எண், வ.து.வா.செ.அச்சு.

1935-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி, 142 எண், வ.து.வா.செ. அச்சு.

பிரிவு II—நிலத் தீர்வை விலக்கு.

8. நிலத் தீர்வை விலக்கு.—நிலத் தீர்வை விலக்களிப்பட்டுள்ள நிலம், பாதைகள், மருத்துவசாலை இடங்கள், மருந்தகங்கள் இவை போன்ற தல ஆட்சிக் கழகங்களுக்கும் அவற்றின் உரிமையாளர்களுக்கும் வருமானம் அளிக் காதவைகளாகயிருக்கும்போது, அவற்றிற்கு நிலத் தீர்வை விலக்களிக்கப்படும். அத்தீர்வை விலக்கு எந்நிபந்தனைகளின் கீழ்க் கொடுக்கப்படுகின்றனவோ அந் நிபந்தனைகள் நிறைவேற்றப் பெற்று வரும் காலம் வரையிலும் இருக்கத்தக்கது. தல ஆட்சிக் கழகங்கள் விலை கொடுத்து வாங்கியுள்ள நிலங்களுக்கு மாத்திர மன்றித் தல ஆட்சிக் கழகங்களிடம் அரசினர் விட்டு வைத்துள்ள நிலங்களுக்கும் இத் தீர்வை விலக்கின் அநுகூலத்தைப் பெறுவதற்குக் கோரிக்கை செய்து கொள்ளலாம். பயனுக்கப்படுவதால் வருமானம் அளிக்கக் கூடிய சந்தைகள் உண்டிப் பேட்டைகள் இவை போன்றவை நிலத் தீர்வை செலுத்துதற்குட் பட்டவையாகும்.

நிலத் தீர்வை விலக்கு அல்லது மனைத் தீர்வை விலக்கு அளிக்கப்பட்டுள்ள வற்றில் அல்லது நிலத் தீர்வை அல்லது மனைத் தீர்வை செலுத்துவதற்குட் படுத்தப்படாமல் வழங்கப்பட்ட நிலக் கொடைகளில் விதிக்கப்பட்டுள்ள நிபந் தனைகளில் யாதேனும் ஒன்று மீறப்பட்டால், கொடை திரும்ப எடுக்கப்படுவ தற்குரிய ஏற்பாட்டுடன் எந்த தேதியில் அத்தகைய நிபந்தனை மீறப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து முழுத் தீர்வை அல்லது மனைத் தீர்வை விதிக்கப்படுவ தற்கும் எப்போதாவது நிலத்தினின்றும் நிகர வருமானம் கிடைக்குமானால், அத் தேதியிலிருந்து முழுத் தீர்வை அல்லது மனைத் தீர்வை விதிக்கப்படுவதற் குரிய ஏற்பாடு வகுத்துக் கொள்ள வேண்டும்.

1939-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ஆம் தேதி, 571 எண், அ. ஆ. வரு.

1939-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ஆம் தேதி, 30 எண், வ.து.வா.செ.அச்சு..

[குறிப்பு.—(1) நிலங்கள் அரசுக் குடி, இனம் ஜமீன் முறை என்னும் எவ்வகை நிலங்கள் ஆயினும் அவை மேலே குறிப்பிட்டுள்ள பொதுப் பணிகளுக்குப் பயனுக்கப் பட்டால் அவற்றிற்குப் பொருந்தும். ஆயினும் அத் தீர்வை விலக்கு அத்தகைய நிலத்திற்காக அரசினருக்குச் செலுத்தத்தக்க தீர்வைக்கு அதாவது அரசுக் குடி நிலத்திற்காகச் செலுத்த வேண்டிய நிலத் தீர்வைக்கும் ஜமீன் நிலம் அல்லது இனம் நிலத்திற்குரிய உரிமை வரி அல்லது விடு வரிக்கும் பொருந்தும்.

1892-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8 ஆம் தேதி, 699 எண், வ.து.வா.செ.

(2) பயணம் செய்பவர்கள் வாடகையைக் கொடுத்து உபயோகிக்கும் தல ஆட்சி அல்லது நகராட்சி மாளிகைச் சத்திரம் அல்லது பயண மாளிகை ஆகிய இவற்றில் இடத்திற்குரிய நிலத் தீர்வை விலக்கு, இவற்றிற்குத் தொடர்ந்தாற்போல ஐந்தாண்டுகளின் வரவுச் செலவுக் கணக்குகள் இருக்கிற வரையிலுமே மட்டும் உண்டு அதற்கப்புறம் தல ஆட்சிக் கழகத்திற்கு அந்தக் காலத்திற்குரிய அதன் வரவு செலவுக் கணக்குகளிலிருந்து மிதியாக ஆதாயம் கிடைக்கிறதெனத் தெரிய வந்தாலன்றித் தீர்வை விலக்கு இருந்து வரும். இவற்றிற்கு ஆதாயம் இருப்பதாகத் தெரியுமாலல் அந்த இடம், அத்தகைய மாளிகை, பயண மாளிகை முதலியவற்றிற்காக உபயோகிக்கப்படும் வரையில் தீர்வை விதிக்கப்படுவதற்குட்படும்.

1893-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி, 861 என், அ.ஆ.

1893-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ஆம் தேதி, 591 என், வ.து.வா.செ.

(3) தல ஆட்சி, நகராட்சிப் பள்ளிகளின் இடங்களுக்கும் அவற்றுடன் இணைந்த இடங்களுக்கும் அவற்றிலுள்ள நிலையங்கள் நடைபெற்று வரும் வரையிலும் தீர்வை விலக்கு அளிக்கப்படும்.

1892-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ஆம் தேதி, 609 என், அ.ஆ.

1892-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23-ஆம் தேதி, 377 என், வ.து.வா.செ.

1905-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி, 1712 என், வ.து.வா.செ.

(4) தல ஆட்சிக் கழகத்திற்குச் சொந்தமான நிலங்கள் விற்பனை பரிவர்த்தனை அல்லது நிலையான பராதீனத்தின் காரணமாக மாற்றப்பட்டால், மாற்றப் பெறுபவர் தமக்கு மாற்றப் பெற்ற நிலங்களுக்குக் கலெக்டர் நிர்ணயம் செய்யத் தக்க தீர்வை அல்லது மனைத் தீர்வைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார். இத்தகைய நிலங்கள் குத்தகை அல்லது அடைமானம் அல்லது வேறு வகைத் தற்காலிக பராதீனம் ஆகிய இவற்றினால் மாற்றப்பட்டால், அல்லது தல ஆட்சிக் கழகத்திற்குச் சட்ட உரிமையிலுள்ள நிலங்கள் தற்காலிகமாகக் குத்தகைக்கு விடப்படுமாலல் அவற்றிற்குரிய மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வையைச் செலுத்தும் முக்கிய பொறுப்பு தல ஆட்சிக் கழகத்தைச் சார்ந்ததாகிறது. இத்தகைய மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வை 21 ஆவது நிலை ஆணையில் உள்ள அறிவுரையை அனுசரித்து நில விற்பனைக்கு அல்லது மாற்றுதல் செய்யப்படுவதற்கு முன்னதாக நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு நிர்ணயம் செய்யப்பெற்ற மனைத் தீர்வை அல்லது நிலத் தீர்வை அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் விதிகளை அனுசரித்து திருத்தி அமைக்கப்படும் மாறுதல்களுக்குட்படும். மாவட்டக் கழகங்கள் சட்டத்தின் 160 (3) ஆவது பிரிவின் கீழும், மாவட்ட நகராட்சி சட்டத்தின் 183 (3) பிரிவின் கீழும் விடப்படும் குத்தகைகளுக்கு இவ்விதிகளிலுள்ள அறிவுறைகள் பொருந்தா.

1909-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ஆம் தேதி, 3152 என், அ.ஆ.

1909-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ஆம் தேதி, 281 என், வ.து.வா.செ.

1911-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ஆம் தேதி, 1061 என், தல. அ.ஆ.

1912-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் தேதி, 1175 என், அ.ஆ.

1912-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ஆம் தேதி, 3478 என், அ.ஆ.

1928-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11-ஆம் தேதி, 2114 என், அ.ஆ.வரு. பலவ.

1928-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15-ஆம் தேதி, 103 என். வ,து.வா.செ.

1924-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி, 1559 என். அ.ஆ.வரு.பலவ.

1924-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் தேதி, 2499 என். வ.து.வா.செ. பலவ.

1939-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ஆம் தேதி, 4039 என். தல.அ.ஆ.

9. புதிய கொடைகள்.—இவ்விதிகளின்கீழ் அனுமதிக்கத்தக்க அல்லது சட்ட முறையில் தல அதிகாரிகள் தங்களுக்குரிய அதிகாரத்தினால் அனுமதிக்

நி. ஆ. 24:9—10]

கத் தக்க தீர்வை விலக்குகள் அல்லாதனவாகிய புதிய தீர்வை விலக்குகள் ஒவ்வொன்றிலும் அரசினரின் முன் ஒப்பளிப்பை பெற்றிருக்க வேண்டும்.

1956-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி, 3410 எண். அ.ஆ.வரு.பல.

1956-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி, 1316 எண். வ.வது.செ.பல.

குறிப்புகள்.— (1) கிராம வசூல் கழிவு, அல்லது வருவாய் ஒப்படை அல்லது தீர்வை தள்ளிக் கொடுத்தல் இப்பத்தியில் குறிக்கப்பட்டுள்ள தீர்வை விலக்கு என்பதன் பொருளில் அடங்கும்.

1940-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி, 2646 எண், அ.ஆ.வரு.பலவ.

(2) காலங் கடந்த கொடையைப் புதுப்பித்து, காலங்கடந்த கொடை புதுப்பிக்கப் பட்டால் அதை (உதாரணமாக முதல் முதலில் ஒரு தலை முறை காலத்திற்கும் காடுக்கப்பட்ட கொடை அல்லது வருவாய் ஒப்படை அடுத்த தலைமுறைக்கும் தொடர்ந்து கொடுக்கப்படுவது.) புதுக் கொடையாகக் கொள்வதுடன் நடை முறையி லுள்ள கொடையின் மதிப்புடனும் சேரும் கூடுதலும் அவ்வாறே புதுக் கொடையாக கருதப்பட வேண்டும்.

10. மேலே 9 ஆவது பத்தியின் கீழ் அடங்காத கொடைகள்.—கீழ்வரும் தடவடிக்கைகள் புதிய கொடைகள் அல்ல. இவற்றை மேலே கண்ட 9 ஆவது பத்தி பாதிக்காது :—

(1) மேலே 9 ஆவது பத்தி (2) ஆவது குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளவை போன்ற நடைமுறைக் கொடைகளில் புதுப்பிக்கப்படுதல் அல்லது விரிவாக்கப் படுதலுக்கு மாறுபட்ட பழைய கொடையின் தொடர்ச்சி மாத்திரம். மேலும், நிலத் தீர்வை திருத்தி நிர்ணயம் செய்யப்பட்ட காரணத்தினாலேயே அதிக மாக்கப்படும் நில வருவாய் ஒப்படையின் மதிப்பு அதிகமாக்குதலும்.

குறிப்பு.—பழைய கொடைகளின் தொடர்ச்சிகளுக்கு எடுத்துக் காட்டு கள்—(அ) இனமாக வழங்கப்பட்ட நிலம் பொதுப் பணிக்காக அதன் உரிமை பெறப்படும்போது, அல்லது அரசினர் எடுத்த நடவடிக்கையினால் இனம் பெற் றிருப்பவருக்கு நிலம் ஆதாயமற்றதாய் விடும் எனில் இனம் நிலத்திற்குரிய அதே தொகை அளவினுக்குப் பதிலாக வழங்கப்படும் நில வருவாய் ஒப்படை.

(ஆ) சமய நிலையத்திற்காக முன்னதாக இருந்து வந்த வருவாய் ஒப்படைக்குப் பதிலாகத் தரப்படும் கிராம வசூல் கழிவு.

(2) பருவ காலத்திற்கேற்றவாறு தீர்வை தள்ளிக் கொடுத்தல் என்று பொருத்தமாகச் சொல்லப்பட்டு வருகிற தள்ளிக் கொடுக்கப்படும் தீர்வை.

(3) நிலையாகத் தள்ளிக் கொடுக்கப்பட்ட நிலத் தீர்வைகள் அல்லது அலுவல் நடைமுறையில் அளிக்கத்தக்க, உதாரணமாக நீண்ட நிலக் குத்தகை கள் இறைத்து நீர் பாய்ச்சப்படுவதற்குரிய கழிவுகள், நிலவரித் திட்டத்தில் தீர்வை உயர்த்தப்படுவது போன்றவற்றில் முதல் ஆண்டில் அல்லது ஆண்டு களில் கொடுக்கப்படும் கழிவு, இவை போன்றவற்றில் தள்ளிக் கொடுக்கப்படும் தீர்வை.

(4) செலுத்தப்படத்தகாத வருவாய் உதாரணமாக அரசினர் தாங்கள் உரிமை பெற்ற நிலங்களைத் தங்கள் உபயோகத்திற்காகத் தங்களிடம் வைத்துக் கொண்டிருக்கும் நிலங்களுக்காக இழக்கப்பட்ட தீர்வை.

(5) வருவாய்த் துறை வரியம் 21 (1) ( ) ஆவது நில ஆணையின் கீழ் ஒப்படை செய்யப்பட்ட கிராம நத்த இடத்திற்குரிய தீர்வை.

[நி. ஆ. 24:11—12

11. ஒப்பளிப்பு அதிகாரங்கள்.—தள்ளிக் கொடுக்கப்படும் நிலத் தீர்வையின் 25 ஆண்டு மூலதன மதிப்புத் தொகை 1,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், தனிச் சங்கங்கள் நிலையங்கள், தனிப்பட்டவர்கள் பொது உபயோகங்களுக்காக மேலே 9-ஆவது பத்தியில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி நிலத் தீர்வை விலக்கு அனுமதிக்க வருவாய்த் துறை வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப் பெற்றிருக்கிறது.

குறிப்பு.—மேலே கண்டுள்ள அதிகாரங்கள் வருவாய்த் துறைக் கூட்டு வாரியத்திற்குரியது. சாலைகளையும், அதை சார்ந்துள்ளவற்றையும் பொருத்த மட்டில் இவ்வாறு கணக்கிட்ட மூலதன மதிப்பு 15,000 ரூபாய் வரையில் தீர்வை விலக்கு வருவாய்த் துறை வாரியம் அனுமதிக்கலாம்.

1949-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் தேதி, 1662 எண், அ.ஆ.வரு.பலவ.

1948-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20-ஆம் தேதி, 1059 எண், வ.து.வா.செ. பலவ.

மேலே உள்பத்தியில் கூறியுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டுத் தல ஆட்சி மன்றங்களுக்கு ஒவ்வொரு இனத்திலும் வருவாய்த் துறைக் கழகம் 10,000 ரூபாய் வரை நிலத் தீர்வை விலக்கு அனுமதிக்கலாம். சாலைகள், அதைச் சேர்ந்துள்ள சரல், பண்டசாலை போன்றவற்றிற்கு 10,000 ரூபாய் வரையிலும், மற்ற உபயோகங்களுக்கு 1,000 ரூபாய் வரையிலும் கலெக்டர்கள் நிலத் தீர்வை விலக்கு அனுமதிக்கலாம். இதுபோன்றே சாலைகள், அவற்றைச் சார்ந்துள்ளவை போன்ற வருமான மில்லாத பொதுப் பணிகளுக்காகத் தல ஆட்சிக் கழக நிலங்களுக்கு 4,000 ரூபாய் வரையிலும், மற்ற உபயோகங்களுக்கு 500 ரூபாய் வரையிலும் கோட்ட ஆட்சியாளர்கள் தீர்வை விலக்கு அளிக்கலாம். நிலம் எந்த உபயோகத்திற்குத் தேவையோ அந்த உபயோகம் பொது உபயோகம்தானா என்பதில் சந்தேகம் இருக்குமானால் கலெக்டர்கள் வருவாய்த் துறை வாரியத்தின் ஆணையைப் பெற வேண்டும்.

(10—12—1935 தேதி, 2044 எண், அ.ஆ.வரு.
12—9—1956 தேதி, 3451 எண், அ.ஆ.வரு. பலவ.
20—3—1936 தேதி, 635 எண், அ.ஆ.வரு.பலவ.
15—2—1957 தேதி, 721 எண், அ.ஆ.வரு.பலவ.
1—6—1936 தேதி, 66எ, எண், து. வா. செ. அச்சு.
28—2—1957 தேதி, 293 எண், வ.து.வா.செ.பலவ.)

12. இன்ன படிவத்தில் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும் என்பது.—மேலே 11-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட விதிக்குப் புறம்பானவைகள் நீங்கலாகவுள்ள 8, 9 பத்திகளில் கண்டுள்ளவாறு நிலத் தீர்வை தள்ளிக் கொடுத்தல், வருவாய் ஒப்படை அல்லது தீர்வை விலக்கு ஒப்பளிப்பு பெறுவதற்கான கோரிக்கை பற்றிய யோசனை ஒவ்வொன்றும் வருவாய்த் துறை வாரியத்தின் வழியாக அரசினருக்கு மேனுப்ப வேண்டும். வருவாய்த் துறை

நி. ஆ. 24:12—15]

வாரியத்திற்கு அல்லது அதன் வழியாக மேலனுப்பப்படும் யோசனைகள் ஆவது இணைப்பில் குறிப்பிட்ட படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். இருப் பினும் 1894 ஆம் ஆண்டு I ஆவது சட்டத்தின் கீழ்த் தீர்வை தள்ளுபடி செய்யப் பட்டதைப்பற்றி 90 ஆவது நிலை ஆணை 23 (iii) ஆவது பத்தியில் குறிப்பிட்ட படிவத்தைப் பயனுக்கிக் கொள்ள வேண்டும்.

13—12—1897 தேதி, 436 எண். வ.து,வா. செ.

13. நிலத் தீர்வை விலக்குகள் பதிவேடு.—இந்த பிரிவின்கீழ் நிலத் தீர்வை விலக்கு அளிக்கப்பட்டவற்றையெல்லாம் மேலே 6 ஆவது பத்தியில் கண்டுள்ள பதிவேடுகளில் குறித்துக்கொள்ள வேண்டும்.

(28—10—1892 தேதி, 1104 எண், அ.ஆ.வரு.
8—12—1892 தேதி, 699 எண், வ.து.வா.செ.)

14. தல ஆட்சிக் கழகங்கள் செலுத்தத்தக்க தீர்வை.—மேலே குறிப்பிட் டுள்ள விதிகளை அனுசரித்து நிலத் தீர்வை, மனைத் தீர்வை, ஜமீன் உரிமை வரி அல்லது விடுவரி ஆகிய இவை தள்ளிக் கொடுத்தாலன்றி எத் தல ஆட்சிக் கழகங்களுக்காக நிலம் உரிமை பெறப்பட்டதோ அந்நிலத்திற்கு அத் தல ஆட்சிக் கழகம் நிலத் தீர்வை ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டும்.

(20—5—1895 தேதி, 160 எண், வ.து.வா.செ.
15—7—1895 தேதி, 246 எண், வ.து.வா.செ.
15—6—1912 தேதி, 1772 எண், அ.ஆ.வரு.
23—8—1895 தேதி, 310 எண், வ.து.வா.செ.
6—9—1895 தேதி, 326 எண், வ.து.வா.செ.
25—1—1934 தேதி, 166 எண், அ.ஆ.வரு.
27—2—1934 தேதி, 34 எண், வ.து.வா.செ.அச்சு.)

15. நிலத் தீர்ன்வயை, 1894 ஆம் ஆண்டு I ஆவது சட்டத்தின் கீழ் ஈட்டுத் தொகையாக ஒப்படை செய்தல்.—1894 ஆம் ஆண்டு I ஆவது சட்டத்தின் 31 (4) ஆவது பிரிவின் நோக்கத்தில் வாத்தக்க உரிமை அளிக்கப்படாத பணி யாளர் இறுமாக இருந்த 90-ஆவது நிலை ஆணையின் 25, 28 பத்திகளில் வகுக்கப் பட்டுள்ள விதிகளின் கீழ் வருவாய் ஒப்படை அனுமதிக்கத்தக்கதாக இருந்தா லன்றி, 1894 ஆம் ஆண்டு I ஆவது சட்டத்தின் 31 (4) ஆவது பிரிவின் பார்வை அளவில் ஏதாவது எதிர்மாறுக இருப்பதாலும் கலெக்டர் தமது சொந்த அதிகாரத்தினாலேயே' இச் சட்டப் பிரிவின்கீழ் நிலத்தீர்வை ஈட்டுத் தொகை யாக வருவாய் ஒப்படை செய்யக் கூடாது. இத்தகைய ஒப்படைகளுக்கு விண்ணப்பங்கள் வாப் பெறுவதை இயன்ற வரையில் தவிர்க்க வேண்டும்.

(17—12—1908 தேதி, 3400 எண், ஆ. வரு.
8—12—1915 தேதி, 362 எண், வ.து.வா.செ.)

[நி. ஆ. 24:16, 24 அ

பிரிவு III ஆண்டு விவர அறிக்கைக்குரிய விரிவான அறிவுரைகள்.

16. நாளது தேதி வரை ஒப்பளிக்கப்பட்ட கொடைகளைப் பற்றிய விவர அறிக்கை.—(அ) பொதுப் பணிகள் நடைபெறுவதற்காகவும், (ஆ) மற்றக் காரணங்களுக்காகவும் அவ்வப்போது செய்து வந்த கொடைகள் அல்லது ஒப்படை காரணமாக ஜூன் 30-ஆம் தேதி வரை உரிமை விடப்பட்ட மொத்தத் தொகையைக் காட்டும் விவரப் பட்டியலை XXXI ஆவது இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் ஜமாபந்தி ஆண்டு அறிக்கைகளுடன் கலெக்டர்கள் மேலனுப்ப வேண்டும். அந்த விவர அறிக்கையைத் தொகுப்பதற்கான முறைகள் அதே இணைப்பில் உள்ளன.

(28—2—1899 தேதி, 58 எண், வ.து.வா.செ.
18—10—1904, தேதி, 224 எண், வ.து.வா.செ.
28—1—1921 தேதி, 229 எண், அ.ஆ.வரு.
6—6—1911 தேதி, 1696 எண், அ.ஆ.
23—6—1911 தேதி, 153 எண், வ.து.வா.செ.
11—3—1921 தேதி, 11 எண், வ.து.வா.செ.
19—12—1940 தேதி, 3149 எண், அ.ஆ.வரு.
24—4—1941 தேதி, 1100 எண், வ.து.வா. செ. பலவ.)

24. அ. அரசினர் வசத்திலுள்ள நிலத்தையும் கட்டடங்களையும் தற்காலிக உபயோகத்திற்காகக் கொடுத்தல்.

குறிப்பு.—இந்த நிலை ஆணையின்கீழ் அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் ஒப்படைக்காகக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது சங்கம் செய்து கொள்ளும் விண்ணப்பம், அந்தக் கம்பெனி, அசோசியேஷன் அல்லது கூட்டுச் சங்கம், 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (1956-ஆம் ஆண்டு I-ஆவது மத்திய அரசு சட்டம்) 3 (1) (i) பிரிவில் கண்டுள்ள அச்சொல்லின் பொருள்களுக்குட்பட்டு வந்தாலன்றி அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860-ஆம் ஆண்டு XXI-ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1880-ஆம் ஆண்டு சமயக் சங்கங்களின் சட்டம் (1880-ஆம் ஆண்டு I-வது மத்திய அரசுச் சட்டம்), 1932-ஆம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1932-ஆம் ஆண்டு சென்னை VI-ஆவது சட்டம்), 1942-ஆம் ஆண்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (1942-ஆம் ஆண்டு IV-ஆவது மத்திய அரசுச் சட்டம்) 1938-ஆம் ஆண்டு கூட்டுறுதிச் சட்டம் (1938-ஆம் ஆண்டு VI-ஆவது மத்திய அரசுச் சட்டம்), 1926-ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் யூனியன்கள் சட்டம் (1926-ஆம் ஆண்டு XVI-ஆவது மத்தியச் சட்டம்), அல்லது இந்திய யூனியன் பார்லிமெண்டு அல்லது இந்திய யூனியனில் உள்ள மாநிலச் சட்டப் பேரவையின் சட்டம், ஆகிய இவற்றின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருந்தாலன்றிக் கவனிக்கப்படமாட்டாது. மேலே கண்ட ஆணைக்கு இணங்கப் பதிவு செய்யப்பட வேண்டுமென்பது உரோமன் கத்தோலிக் கிருத்துவக் கோவில்கள், சமய ஆட்சிப் பகுதிகள் ஏனைய உரோமன் கத்தோலிக் சமயக் குழுக்கள், காங்கிரஸ் அமைப்புகள் இவற்றிற்குப் பொருந்தாது.

(23—10—1941 தேதி, 2395 எண், அ.ஆ.வரு.கை.ப. 26—1—1942 தேதி, 3, வ.து.க.செ.அச்சு.)
(12—10—1949 தேதி, 2649, எண், அ.ஆ.வரு.கை.ப.)
(12—7—1960 தேதி, 25 எண், வ.து.வா.செ.அச்சு.)
28—9—1956 தேதி, 3678 எண், அ.ஆ.வரு.கை.ப.
15—10—1956 தேதி, 1436 எண், வ.து.வா.செ. கை.ப.

நி. ஆ. 24அ: 1—4]

1. இந்நிலை ஆணையின் நோக்கம்.—அரசினர் வசமுள்ள (1) நிலம், (2) கட்டடங்கள், (3) கட்டடங்களோடு கூடிய நிலம் இவற்றை விவசாயமல்லாத உபயோகங்களுக்குத் தற்காலிக சுவாதீனத்திற்குக் குறித்த காலத்துக்குக் கொடுப்பதை இந்த நிலை ஆணை எடுத்துக் கூறுகிறது இத்தகைய சுவாதீனத்தை தனிப்பட்டவர்கள் தனிச் சங்கங்கள், கம்பெனிகள் அல்லது அசோசியேஷன்கள் அல்லாட்சிக் கழகங்களுக்குக் கொடுக்கலாம்.

குறிப்பு.—ஒதுக்கக் காட்டு நேர் எல்லை வரையில் தற்காலிகமாக ஒப்படை செய்யக் கூடாது. இருப்பினும், ஒதுக்குக் காட்டின் எல்லைக்கும் ஒப்படை செய்யப்பட வேண்டிய நிலத்துக்கும் இடை வெளியில் இரண்டு அல்லது மூன்று சங்கிலி அகலமுள்ள திறந்த இடைவெளி நிலம் ஒப்படை செய்யப்படாமல் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

21—10—1947 தேதி, 2446 எண், அ.ஆ.வரு.பலவ.
27—1—1948 தேதி, 2 எண், வ.து.வா.செ.அச்சு.
15—9—1942 தேதி, 2066 எண், அ.ஆ.பலவ.
15—10—1942 தேதி, 1745 எண், வ.து.வா.செ.பலவ.

2. தற்காலிக அனுபோகத்தின் கால அளவு.—அரசினர் வசமுள்ள சொத்தின் தன்மையும் அது வேறொரு தேவைக்கு உபயோகமாகக் கூடுமா என்பதையும் கருத்திற் கொண்டு, ஒவ்வொன்றிலும், தற்காலிகமாக அனுபோகத்திற்கு அனுமதிக்கத்தக்க காலத்தை நன்கு கவனித்து நிர்ணயம் செய்ய வேண்டும்.

3. கொடை ஆணையின் படிவம்.—ஒவ்வொரு கொடையையும் XXX -அ இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் தக்க திருத்தங்களுடன் ஆணை வடிவில் அமைத்துக் கொள்ள வேண்டும். வருவாய்த் துறை வாரியம் 51-ஆவது நிலை ஆணையின் கீழ்ச் செய்யப்படும் நில ஒப்படையைப் போலவே, அரசினர் கொடைகள் சட்டம் (1895-ஆம் ஆண்டு XV ஆவது) சட்டத்தின் விதிகளுக்கு இணங்க ஒரு எளிய படிவம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கொடைகளுக்குக் கீழே குறிக்கப்பட்டுள்ளவை உதாரணங்கள் ஆகும்:—

(i) கூடாரம் அல்லது சங்கக் கட்டடத்துடன் அல்லது இவை இல்லாமலே செய்து கொள்ளும் பொழுது போக்கிற்கான உபயோகங்கள்;

(ii) நிலையான அல்லது தற்காலிகமான பாலங்கள், மதகுகள்;

(iii) (வாணிப உபயோகங்களுக்குரிய) பெட்டிக் கடைகள்;

(iv) மாக் கடைகள், விறகுக் கடைகள்;

(vi) சாலை விளிம்புகளிலும் மற்ற அரசினர் புறம்போக்கு நிலங்களிலும் உட்பக்கம் செய்யப்படுகிற ஆக்கிரமிப்புகள்—தடை சொல்வதற்கில்லாதவை;

(vii) உலவும் திரைப் படம், சர்க்கஸ், நாடகக் கம்பெனி, இவற்றிற்காக அரசினர் புறம்போக்கு நிலத்தைத் தற்காலிக அனுபோகத்திற்குக் கொடுத்தல்.

4. கொடைகள் பத்திரப் பதிவு செய்யப்படுவதிலிருந்தும் முத்திரை வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.—இக் கொடைகளைப் பதிவு செய்யத் தேவையில்லை. இந்தியப் பதிவுச் சட்டத்தின் 90 (1) (இ) பிரிவைக் காண்க. இத்தகைய கொடைகளில் பிறப்பிக்கப்படும் ஆணைகள் முத்திரை வரி விதிப்புக்குட்பட்டவையல்ல—17-12-1938 தேதி, 13 ஆவது விளம்பரம், 4 ஆவது இனத்தைக் காண்க.

[பி. ஆ. 24 உ:5—6

5. ஒப்பளிப்பு அதிகாரங்கள்.—கொடையின் மதிப்பு 10,000 ரூபாய்க்கு அதிகமாக இருப்பின் அத்தகைய கொடைகளில் ஒவ்வொன்றிற்கும் அரசினர் அனுமதியைப் பெற வேண்டும். சொத்தின் மதிப்பு 10 000 ரூபாய்க்கு மேற்படாத எல்லாவற்றிலும் வருவாய்த் துறை வாரியம் (கூட்டு வாரியம்) கொடையை அனுமதிக்கலாம். சென்னை நகரத்தில் 5,000 ரூபாய்க்கு மேற்படாமலும், தலை நகரமல்லாத புறப் பகுதிகளில் சொத்து மதிப்பு 3,000 ரூபாய்க்கு மேற்படாமலும், இருப்பின் அவற்றை வருவாய்த் துறை வாரியம் (பொறுப்புள்ள உறுப்பினர்) ஒப்பளிக்கலாம். அதுபோலவே சென்னை நகரத்தில் 3,000 ரூபாய்க்கு மேற்படாமலும் தலை நகரல்லாத புறப்பகுதிகளில் 1,000 ரூபாய்க்கு மேற்படாமலும் மதிப்பு இருப்பின், அத்தகைய மதிப்புடைக் கொடைகளுக்கு கலெக்டர்கள் ஒப்பளிப்பு செய்யலாம். சொத்து மதிப்பு 500 ரூபாய்க்கு மேற்படாத இனங்களில் தாசில்தார்களும், கோட்ட ஆட்சியாளர்களும் முறையே ஒரு மாதத்திற்கும், ஆறு மாதங்களுக்கும் மிகையாகாதெனில் ஒப்பளிக்கலாம். ஆனால் நற்காரிய அனுபோகத்திற்காக கேட்கப்படும் நிலத்தில் கட்டடமோ அல்லது கட்டடங்களோ இருக்குமானால் அந்த விண்ணப்பத்தை கலெக்டரின் ஆணைக்காக மேலனுப்ப வேண்டும்.

அரசினருக்குச் சொந்தமாய்ச் சுகாதாரம், தொழில், வாணிபம், கால்நடை, விவசாயம் ஆகிய இத் துறைகளின் வசமுள்ள நிலங்களைப் பொருத்தமட்டில் மேற் துறைகளின் வேண்டுகோளை அனுசரித்து வருவாய்த் துறையினர் XXX -அ இணைப்பின் கண்டுள்ள படிவத்தில் இத்தகைய நிலக் கொடைகளை ஏற்றுக் அவற்றிற்கான நிர்வாகை வருவி செய்து அத்தொகையை அந்த அந்தத் துறையின் கணக்கில் வரவு வைத்திடுவார். இத்துறை அலுவலர்கள் தங்கள் கோரிக்கைகளை அந்த அந்த மாவட்டக் கலெக்டர்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

மற்றுத் துறையினர் இத்தகைய நிலக் கொடைகளை அவசியமாக இருக்கும் போது வருவாய்த் துறையினரோடு கலந்தாலோசனை செய்து தாங்களே குத்தகைத் தொகையை வசூலித்துக் கொள்வர். நெடுஞ்சாலைத் துறையினர் வசதிருக்கும் சாலை விளிம்புகளில் உள்ள ஆக்கிரமிப்புகளில் குத்தகைக்குக் கொடுத்து அனுபவித்துக்கொள்ளலாம், வருவாய்த் துறையினர் நெடுஞ்சாலைத் துறையினரைக் கலந்து ஆலோசனை செய்து குத்தகைக்குக் கொடுப்பார்கள்.

25—5—1942 தேதி, 1192 எண், அ. ஆ. வரு. கை. ப.
13—7—1942 தேதி, 1899 உஷ 42-3 எண், அ. குறிப்பு.
24—8—1942 தேதி, 43 எண், வ. து. வா. செ. அச்சு.
17—3—1956 தேதி, 1267 எண், அ. ஆ. வரு. அச்சு.
7—4—1956 தேதி, 457 எண், வ. து. வா. செ. பலவ.
28—9—1956 தேதி, 3678 எண், அ. ஆ. வரு. பலவ.
15—10—1956 தேதி, 1436 எண், வ. து. வா. செ. பலவ.

குறிப்பு.—1955-ஆம் ஆண்டு சென்னைத் திரைப்பட ஒழுங்குச் சட்டத்தின் 4-ஆவது பிரிவின் கீழ் அதே சட்டத்தின் 12-ஆவது பிரிவு, 1933-ஆம் ஆண்டு சென்னைத் திரைப்பட விதிகளின் 56-ஆவது விதியை அனுசரித்து உலவும் திரைப்படங்களுக்குப் பெரும்பம் ஓராண்டு வரையில் உரிமம் கொடுக்கக் கலெக்டர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆதலால் உலவும் திரைப்படங்கள், சர்க்கஸ் இடங்கள், நாடக கம்பெனிகள் விலை போன்றவற்றிற்கும் கலெக்டர்கள் ஓராண்டு பெரும்பம் காலத்திற்குக் கொடைகள் வழங்கலாம்.

6. அனுமதியை ரத்து செய்வதற்கு கொடுக்கத்தக்க அறிவிப்புக் காலம்.—ஒப்படை செய்யும் அதிகாரி அல்லது கொடை பெற்றிருப்பவர் XXX -அ இணைப்பின் 21 ஆவது நிபந்தனையை அனுசரித்துக் கொடுக்கத் தக்க

நி. அ. 24:6—9]

அறிவிப்புக் காலத்தை சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு கவனமாக நிர்ணயிப்புடன் அதை அந்த ஆணையிலும் குறிக்க வேண்டும். இந்த அறிவிப்புக் காலம் அனுமதிக் காலத்திற்கு அநியாயமாகாமல் சாதாரணமாக மூன்று மாதங்கள் வரையிலுமுள்ள கொடைக்கு ஒரு மாதமாகவும் ஆறு மாதங்கள் வரையிலுள்ள கொடைக்கு இரண்டு மாதங்களாகவும் ஓராண்டு வரையிலுமுள்ள கொடைக்கு மூன்று மாதங்களாகவும் ஓராண்டுக்கும் அதிகமான காலக் கொடைக்கு ஆறு மாதங்களாகவும் இருக்க வேண்டும்.

7. குழாய்களுக்கு வழங்கப்படும் கொடைகள்.—அரசாங்க அலுவலக வளவுக்குள் ஒரு குழாத்திற்கு நிலம் கொடுக்க உத்தேசமிருக்குமானால், அந்தக் குழாம் கட்டக் கூடிய கட்டடங்கள், கட்டு மானங்கள், பூப்பந்து ஆடு மைதானங்கள் முதலியவற்றிற்கான இடம், திட்டம், மதிப்பீடு ஆகிய இவை அரசாங்கக் கட்டடங்களில் அமைப்புத் திட்டத்திற்கு ஒத்திருக்கின்றனவா என்பதை நிச்சயம் செய்து கொள்வதற்கு அவற்றிற்கு அரசினர் சார்பில் நிர்வாகப் பொறியாளரின் ஏற்பைப் பெற்றிருக்க வேண்டும். நிர்வாகப் பொறியாளரின் ஏற்பு பெற்ற திட்டம், மதிப்பீடு முதலியவற்றின் பிரதிகளை கொடைகளுக்குரிய யோசனைகளுடன் அனுப்ப வேண்டும். 24 மணி நேரத்துள் அறிவிப்பினால் கொடை ஏற்பதற்குள்ளாகும் என்பது கொடை ஆணையில் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். கலெக்டர்கள் அல்லாத அலுவலர்களின் பயன்பாட்டிலுள்ள வளாகங்களில் உள்ள நிலத்திற்கு விண்ணப்பம் தங்களிடம் வரப் பெறும் போது அவ்வலுவலர்களே மாவட்ட கலெக்டருக்கு எழுதிக்கொள்ள வேண்டும்.

8. கொடைகளைப் புதுப்பிப்பது.—முதலில் அனுமதி கொடுப்பதற்குத் தகுதியான அதிகாரம் பெற்றுள்ளவரே இந்த நில ஆணையின் கீழ்க் கொடைகளைப் புதுப்பிப்பதற்கும் தகுதி பெற்றவராவர்.

9. எந்தக் கொள்கைகளை அனுசரித்துத் தீர்வை நிச்சயப்படுத்த வேண்டும்.—(i) அதுபோகந்திகாகத் தீர்வை விதித்தல்.—பலவகை உபயோகங்களுக்காக இந்த நில ஆணையின் கீழ் நிலம் கொடுப்பதில் தரப்படுத்தப்பட்ட வீதங்கள் விதிக்க முயற்சி செய்யலாகாது. ஆகையால், இவ்வகையில் தொகையை நிர்மானிப்பதை ஒப்பளிக்கத் தகுதியுடைய அதிகாரிகளின் யுக்தத்திற்கே விடப்பட்டிருக்கிறது. ஆனாலும் இவ்வாறு நிர்மானிப்பதில் பின்வரும் பொதுக் கொள்கைகளைக் கூடியவரையில் கவனித்துக் கொள்ள வேண்டும் :—

(அ) பொழுது போக்கு உபயோகங்கள்.—அரசிதழ் பதிவு பெறுதவர்களை மாத்திரம் கொண்ட குழாங்களைப் பொருத்த வரையிலும் கல்வி நிலையங்களுக்குத் தேவையான விளையாட்டிடங்களுக்கும் தீர்வை பெயரளவில் விதிக்க வேண்டும். நகராட்சி மன்றங்களையும் சென்னை மாநகர் ஆட்சி நீங்கலாக உள்ள மற்ற இடங்களில் உரிய தரத் தீர்வை அல்லது மனைத் தீர்வை அல்லது சம்பந்தப்பட்ட நிலத்திற்கு தீர்வை விதிக்கப்படாமலிருந்தால், அத்தக் கிராமத்தில் அல்லது அதற்கு அருகில் உள்ள இது போன்ற நிலங்களுக்கு எந்தத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தத் தீர்வை விதிக்க வேண்டும். சலுகைத் தீர்வை விதிக்கப் பரிந்துரை பகருமிடத்தில் சிறப்புக் காரணங்கள் தர வேண்டும். அரசிதழ் பெறுத அரசுப் பணி அலுவலர்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் தக்க சலுகை கொடுக்க வேண்டு

[தி. ஆ. 24அ:9

மென்பதற்குட்பட்டு, நகராட்சி மன்றங்களிலும் சென்னை மாநகரிலும் வழங்கப் பெறும் ஒவ்வொரு கொடைக்கும் தக்க தீர்வை விதிக்க வேண்டும்.

(ஆ) **வாணிபக் காரியங்கள்.**—போட்டி முறையில் கிடைக்கத்தக்க தீர்வையை அறுபோகத்திற்காக விதிக்க வேண்டும். அரசினர் விதிக்கக் கூடிய நிபந்தனைகளுக்கு உட்படுத்தி அந்த இடம் வெளிப்படையாய் அறுபோகத்திற்கு விடப்பட்டால், அதற்கு எவ்வளவு தொகை கிடைக்குமோ அத்தொகை தான் போட்டி முறையில் கிடைக்கத்தக்க தீர்வையாகும்.

(இ) **உலவும் திரைப்படம், சர்க்கஸ்கள், நாடகக் கம்பெனிகள்.**—கலெக்டரால் குறிப்பிடப்பட்ட வீதங்களை அனுசரித்து நேர்மையான தினசரித் தீர்வை விதிக்க வேண்டும். கலெக்டர்கள் தங்கள் மாவட்டங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சதுர கெஜமும், மனை அல்லது சென்டு இடத்திற்கு விதிக்கப்பட வேண்டிய தீர்வை வீதத்தை நிர்ணயிக்க வேண்டும். இவ் வீதங்கள் கிராமம் அல்லது நகரம், அந்த நிலம் இருக்கும் இடத்தையும் பொருந்திருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் கேளிக்கைகள் வழக்கமாக நடைபெறுவதற்கு குறிப்பிட்ட இடங்கள் உண்டு. இத்தகைய இடங்கள் ஒவ்வொன்றிற்கும் கலெக்டர்கள் தீர்வை வீதங்களை நிர்ணயிக்க வேண்டும். அவ்விடங்களுக்கு விண்ணப்பம் செய்துகொண்டால் தீர்வை விதிக்க வேண்டிய வீதத்தைப் பற்றிக் கலெக்டருக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

(ஈ) சென்னை மாநகரில் அரசினர் நிலங்களுக்குக் குத்தகை நிலத்தின் நன்செ வரையறுக்கப்பட்ட நியதிகள் அடிப்படையில் தீர்மானிக்கப் படவேண்டிய நடப்பு விலை மதிப்புத் தொகையின் ஏழு சதவீதத்தில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். செல்வமுடையவர்கள் நேர்வில் நிலத்தின் நடப்பு விலை மதிப்பின் இரட்டிப்புத் தொகையின் அடிப்படையில் குத்தகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

1. 18-12-1970 ஆம் நாளும் 3947 எண்ணுமிட்ட நிலை அ.ஆ.வரு. 11,
111. 29-4-971 ஆம் நாளும் 459 ஆ. எண்ணுமிட்ட நிலை வ.வா.செ.
1 8-9-1971 ஆம் நாளும் 970 ஆ எண்ணுமிட்ட நிலை வ.வா.செ.

(உ) **குழாய் வழிகள் அமைத்தல்.**—இதற்குக் கீழே குறிப்பிட்ட அளவு வீதத்தை அனுசரித்துத் வழித் தீர்வை விதிக்க வேண்டும்.—

	வீதம்	குறுமத் தொகை (ரூபாயில்)
பெரிய நகராட்சிகள் ..	மைலுக்கு 220 ரூபாய் அல்லது கெஜத்துக்கு 13 நயாபைசா.	6
சிறிய நகராட்சிகள் ..	மைலுக்கு 165 ரூபாய் அல்லது கெஜத்துக்கு 10 நயாபைசா.	4
மற்ற நகரங்களில் ..	மைலுக்கு 110 ரூபாய் அல்லது கெஜத்துக்கு 7 நயாபைசா.	2
கிராமப் பகுதிகள் ..	மைலுக்கு 82 ரூபாய் அல்லது கெஜத்துக்கு 5 நயாபைசா.	2

11—12—1951 தேதி, 46 எண், வ.து.வா.செ.அச்சு.

தி. ஆ. 24அ: 9—10]

ஆனால் சென்னை மாநகரத்தில் ஒரு மைலுக்கு 1,000 ரூபாய் வீதம் வழித் தீர்வையாக விதிக்க வேண்டும். இத்தீர்வை வீதம் புதிய உரிமங்களுக்கும், மூந்திய உரிமங்களை புதுப்பிப்பதற்கும் பொருந்தும்.

7—6—1950 தேதி, 19 எண், வ.து.வா.செ.அச்சு.

(ஊ) பொது அல்லது சொந்த உபயோகங்களுக்கான அநுபோகம்.—அந்த அந்த நிலத்துக்குரிய நிலத் தீர்வை அல்லது தீர்வைக்கும் குறைந்தாமல் ஒரு ரூபாய் குறைமதிப்பிற்குட்படுத்தி விதிக்க வேண்டும்.

[எ) சாலை விளிம்புகளில் உள்ள ஆக்கிரமிப்புகள்.—நெடுஞ்சாலைத் துறை பொறுப்பிலுள்ள சாலை விளிம்புகளில் ஆக்கிரமிப்புகளை அநுபோகத்திற்கு விடும்போது, அநுபோகம் எக்காரியத்திற்காயினும் போட்டியில் கிடைக்கத்தக்க முழுத் தீர்வைத் தொகையை வசூலிக்க வேண்டும்.

17—3—1956 தேதி, 1267 எண், அ.ஆ.வருஅச்சு.
7—4—1956 தேதி 457 என் வ.து.வ.செ.பலவ.

(ii) நகராட்சி வரிகள்.—சென்னை மாநகரத்திலும், மற்ற நகராட்சிகளிலும் செய்யப்படும் அநுபோகத்திற்காக விதிக்கப்படும் வரி இரண்டு பாகங்களாக உள்ளன. மேலே (1) உள் பத்தியில் கண்ட அறிவுரைகளை அனுசரித்து விதிக்கத்தக்க ஒரு குறிப்பிட்ட தொகை முதல் பாகமாகும். கொடைக்குட்பட்ட சொத்திற்காக நகராட்சி வரிகள் நிமித்தம் அரசினர் செலுத்த வேண்டிய குறிப்பிட்ட மற்றொரு தொகை இரண்டாவது பாகமாகும். சம்பந்தப்பட்ட மாநகராட்சிக்கு அல்லது நகராட்சிக்குச் சேர வேண்டிய கேட்புத் தொகையில் அம்மாநகராட்சி, அல்லது நகராட்சி மாறுதல் செய்யுமானால் வரியின் இரண்டாவது பாகத்தை மாற்றி அமைக்கவும் அவ்வாறு மாற்றி அமைத்தலால் மேற்கொண்டு ஏற்படும் தொகையை வசூலிக்க வேண்டியதற்கான உரிமை கொடை ஆணையில் ஒதுக்கி வைக்கப்படவும் வேண்டும். கொடை ஆணையில் குறிப்பிடப்படக் கூடியவாறு ஒரே சமயத்தில் மொத்தமாகவோ அல்லது தவணைகளிலோ செலுத்தப்பட வேண்டும். வரியின் இவ்விரண்டு பாகங்களும் கொடை பெற்றவரால் செலுத்தப்பட வேண்டும்.

(iii) நிலக் கொடைகளுக்காகத் தாசில்தாரால் வசூலிக்கப்பட வேண்டிய தீர்வை.—தாசில்தார்கள் வழங்கும் நிலக் கொடைகளில் கொடை ஆணையை கொடுப்பதற்கு முன்னதாகவே கொடை பெறுபவர் நிலத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதற்கு முன்னமே அவரிடமிருந்து முழுத் தீர்வையும் வசூலித்துவிட வேண்டும்.

15—1—1941 தேதி, 103 என், அ.ஆ.வரு.கை.ப.
22—5—1943 தேதி, 1170 என், அ.ஆ.வரு.கை.ப.
31—1—1941 தேதி, 7 என், வ.து.வா.செ.அச்சு.
4—6—1941 தேதி, 60 என், வ.து.வா.செ.அச்சு.

10. அரசினர் வசமுள்ள நிலம் சமயப் பிரிவுகளில் நோக்கத்திற்காகக் கொடுக்கப்படுதல்.

(1) கோயில், பள்ளிவாசல், திறித்துவக்கோயில், பிராத்தனைக்கூடம், பஜனைமடம் முதலியவை போன்று நீண்ட காலமாக நிலைபெற்றுள்ள சமய நோக்கங்களுக்காக நிலம் தேவைப்படும்போது, பொருத்தமான மாற்றங்களுடன் -ஆ இனைப்பில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி அந்த நிலையத்திடம் நிலத்தின் கையாட்சி மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.

[நி. ஆ. 24அ:10, 25, 26:1

(2) மேலே 1 ஆவது உள் பத்தியின் கீழ், மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறை வாரியம், அரசினர் ஆகியோருக்குள்ள அதிகாரங்கள் இந்த நில் ஆணையின் 5-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டவையாகவே இருக்க வேண்டும்

(i) 1953 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் நாளும் 6279 எண்ணிட்ட வரு.நிலை.அ.ஆ.

(ii) 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் நாளும் 1014 (ஈ) எண்ணிட்ட வ.து.வா.செ.நிலை.

(iii) 1972 ஆம் ஆண்டு ஜூனவரி மாதம் 3 ஆம் நாளும் 20 எண்ணிட்ட வரு.நிலை.அ.ஆ.

(iv) 1974 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆம் நாளும் 3424 எண்ணிட்ட வரு.நிலை.அ.ஆ."

25. கனிப் பொருள்களை எடுப்பது பற்றியும் தோண்டி எடுப்பன பற்றியும் வருக்கப்பட்டுள்ள விதிகள் —

இந் நிலை ஆணை ரத்து செய்யப்பட்டது.

5—6—1928 தேதி, 1186 எண், அ.ஆ.வரு.கை. ப.

22—8—1928 தேதி, 2786 எண், வ.து.வா.செ. பலவ.

26. அனுமதி பெருமல் அரசினர் நிலத்தில் செய்யப்படும் அநுபோகங்கள்— (1) அனுமதி பெருமல் அரசினர் நிலத்தில் செய்யப்படும் அநுபோகங்களில் 1905-ஆம் ஆண்டு III ஆவது சட்டம் அமல் நடத்தப்படக் கூடிய நிலங்கள்.—1905 ஆம் ஆண்டு -ஆவது சட்டம், அரசினர் சொத்தாக இருக்கும் நிலங்களில் அனுமதி பெருமல் செய்யப்படும் ஆக்கிரமிப்புகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கை முறையை விதிக்கின்றது.

(அ) "அநுபோகம்" என்ற சொல்லுக்குப் பேச்சு முறை வழக்கத்திலுள்ள பொருள் கொள்ள வேண்டும்; "அநுபோகத்தில்" நிலத்தைத் தற்காலிகமாக அல்லது நிலையாகப் பயலுக்கிக்கொள்ளும் உத்தேசம் இருக்க வேண்டும். "அநுபோகம்" என்பதில் நிலத்தைத் தற்காலிகமாக அல்லது நிலையாகப் பயலுக்கிக் கொள்ளும் நோக்கம் இருக்கின்றது. இந்நோக்கமே அநுபோகத்தை அமைக்கிறது. ஒருவர் மண் அல்லது குப்பையை அரசினருக்குச் சொந்தமான நிலத்தில் குவிக்கும்போது, அதற்கப்புறம் அந் நிலத்தைப் பயலுக்கிக் கொள்ள அவருக்கு எண்ணம் இல்லாவிடினும், அத்தகையவர் அந்நிலத்தில் தமது மண் அல்லது குப்பையைச் சேர்த்து வைப்பதற்காக நிலத்தை "சுவாதினம் செய்து கொள்கிறார்" என்பது ஓர் எடுத்துக்காட்டாகும். ஓரோடையின் குறுக்கே ஓரணையை அமைக்கின்றவர் அல்லது ஒரு பாதையின் குறுக்கே ஒரு வாய்க்காலைத் தோண்டுகிறவர், அவ்வோடையில் தற்காலிகமாகவாவது சுவாதினம் செய்துகொள்கிறார். இருப்பினும், சொந்த நிலத்திலிருந்து அண்மையிலுள்ள அரசினர் நிலத்தில் சப்பாத்திக் கள்ளி படருமென்றால் அதற்கு இச்சட்டம் பொருந்தாது.

சட்டத்தின் 2-ஆவது பிரிவில் விளக்கப்பட்டுள்ள "அரசினர் சொத்து நிலங்கள்" என்ற சொற்றொடரில் தல ஆட்சிக் கழகங்களுக்கும் நகராட்சி பன்றங்களுக்கும் சட்ட உரிமையில் உள்ள பொதுச் சாலைகள், தெருக்கள்,

நி. ஆ. 26:2]

சந்துகள், பாதைகள் நிலையான அல்லது தற்காலிகமான தலைப்புடை வகுப்புப் பிரிவுகளிலுள்ள இருப்புப் பாதை நிலங்களும் அடங்கும். ஆனல் உரிமை யற்று அரசினரைச் சேரும் நிலங்களும், இறுதி வாரிசுரிமையில் அரசினர் திரும்பப் பெறும் நிலங்களும் அரசினரின் சுவாதினத்திற்கு வந்து சேர வில்லையானல் அவற்றிற்கு இச்சட்டம் பொருந்தாது. (16-ஆவது பிரிவைக் காண்க).

8—11—1934 தேதி, 2308 என், அ. ஆ. வரு. பலவ.

26—12—1934 தேதி, 174 என், வ. து. வா. செ.

அ. 1—7—1924 தேதி, 1524 என், வ. து. வா. செ. பலவ.

2. அரசினருக்குச் சொந்தமான நிலம் அனுமதியின்றி அநுபோகம் செய்யப்படும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கை.—அரசினர் நிலம் அனுமதியின்றி அநுபோகம் செய்யப்பட்டால் கீழே குறிக்கப்பட்டுள்ள முறை களில் யாதாவது ஒன்றை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனல் தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் முதலாவது அல்லது இரண்டாவது முறையை மேற்கொள்ள வேண்டும் :—

(1) சட்டத்தின் 3-ஆவது பிரிவு, (1) (ii) உட்பிரிவில் கண்டுள்ள விதிகளின் கீழ்ச் சாதாரணத் தீர்வை விதிக்கலாம்.

(2) தீர்வையுடன் தண்டத் தீர்வையைக் கூடுதலாக விதிக்கலாம்.

(3) [7]தீர்வையும் தண்டத் தொகையும் விதிப்பதுடன் அநுபோகம் செய்திருப்பவரை நிலத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்தலாம் அல்லது தீர்வை விதிப்பதுடன் ஆனல் தண்டத் தீர்வையின்றி உடனடியாக அநு போகம் செய்திருப்பவரை அப்புறப்படுத்தலாம்.

(4) அவ்வாறு அப்புறப்படுத்தப் பிறப்பிக்கப்படும் ஆணையில், நிலத்தில் பயிர் அல்லது விளைச்சல் இருக்குமானல், அல்லது கட்டடங்கள் அல்லது மற்றக் கட்டுமானங்கள் இருக்குமானல் அல்லது வேறு எவையேனும் அதில் விட்டு வைக்கப்பட்டிருப்பின், சட்டத்தில் 6 (1)-ஆவது பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பில் குறிக்கப்பட்டுள்ள கால அளவுக்குள் அவை அப்புறப்படுத்தப்படாவிட்டால், அவை பறிமுதல் செய்யப்படக் கட்டளை பிறப்பிக்கலாம்.

இச்சட்டம் தண்டம் விதிக்கும் தன்மையுடையதாகையால் இதில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கண்டிப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும். ஆதலின், இவ்வேற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரத்தைச் சட்ட உரிமையில் பெற்றிருக்கும் (கோட்ட ஆட்சியாளர்கள், தாசில்தார்கள், துணைத் தாசில்தார்கள் உட்பட) கலெக்டர்கள் சட்டத்தில் குறிப்பிட்ட வரையறைகளை மிகுந்த அக்கறையோடு கவனிக்க வேண்டும்; மேலும் குறிப்பாக 3 (1)-ஆவது பிரிவில் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலத்தின் அநுபோகத்திற்குத் தீர்வை விதிப்பதிலும், 5 (1)-ஆவது பிரிவில் சாதாரணமாக ஓராண்டிற்கு மேற்படாத அநுபோகத்திற்குத் தண்டம் விதிப்பதற்கு விலக்களிப்பதிலும், 6, 7 பிரிவுகளின் கீழ் அறிவிப்பு செய்வதிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

[8] *6—4—1907 தேதி, 95 என், வ. து. வா. செ.*

[7] *15—2—1917 தேதி, 441 என், அ. ஆ. வரு.*

[7] *26—3—1917 தேதி, 47 என், வ. து. வா. செ.*

3. 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டம், 7-ஆவது பிரிவின் கீழ் அறிவிப்பு.—சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் தனித் தனி அறிவிப்புகள் அநுபோகம் செய்பவர் ஒவ்வொருவரிடமும் சேர்ப்பிக்கப் பட வேண்டும்[3] . [3] இத்தகைய அறிவிப்புகளைத் தாலுகாத் தாசில்தாரா யினும் அந்நிலம் எந்த உள் தாலுகா அல்லது தாலுகாவில் இருக்கின்றதோ அதன் துணைத் தாசில்தாராயினும் தாமே இவற்றில் ஆணை பிறப்பிக்க அதிகாரம் பெற்றிருப்பின், மற்றவற்றில் அவர் கலெக்டரால் இவ்வகையில் பொது அல்லது தனி ஆணையினால் அதிகாரம் அளிக்கப்பெற்றிருப்பின், பிறப்பிக்கத்தக்கவராகின்றனர்.

தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் பிறப்பிக்கும் அறிவிப்பில், அவ்வறிவிப்பு யாருக்கு அனுப்பப்படுகிறதோ, அவர் கலெக்டர் முன்னிலையில் நேரில், அல்லது எழுத்து வடிவில், அல்லது அறிவிப்பு பிறப்பிக்கும் தாசில் தார், துணைத் தாசில்தார் முன்பாக அவ்வறிவிப்புக்குக் காரணம் காட்டுமாறு கேட்கப்படலாம். அத்தகைய அறிவிப்புக்குத் தமது முன்னிலையிலே காரணம் காட்டப்பட வேண்டிய இனங்களைப் பற்றிக் கலெக்டர் தமது பொது ஆணை ஒன்றில் குறிப்பிடலாம். தாசில்தார் முன்பாகவோ துணைத் தாசில்தார் முன்பாகவோ சம்பந்தப்பட்டவர் நேரில் செல்வார் எனில் அவர் வாக்கு மூலத்தையும், அவர் தரக்கூடிய சாட்சியத்தையும் அத்தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார், பதிவு செய்து கொண்டு தாம் இதில் ஆணை பிறப்பிக்க அதிகாரம் பெற்றிருப்பவராயின் தாமே ஆணை பிறப்பிப்பர். மற்றவற்றில், சம்பந்தப்பட்ட பதிவுக் கட்டை அவர் தமது கருத்துடன் கலெக்டருக்கு மேலனுப்ப வேண்டும்; இதில் மேற்கொண்டும் எத்தகைய விசாரணை செய்ய வேண்டுமெனக் கலெக்டர் கருதுவாரோ அத்தகைய விசாரணையைத் தாமே செய்துகொள்வர்.

3 (1) ஆவது பிரிவின் கீழ் நிலத்திற்குரிய முழுத் தீர்வையுடன் (அல்லது) தீர்வை விதிக்கப்படாத நிலமானால் சட்டத்தின் 3 (1) ஆவது பிரிவில் குறிப்பிட்ட விதத் தீர்வையுடன் 5-ஆவது பிரிவின்கீழ் விதிக்கத்தக்க தண்டத் தீர்வை ஏன் விதிக்கக் கூடாது அல்லது (அதனுடன்) அந்நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவதுடன், நிலத்திலுள்ள பயிர்கள், விளைச்சல்கள், கட்ட டங்கள், கட்டுமானங்கள், அதில் விட்டு வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் ஆகிய இவற்றைச் சட்டத்தின் 6-ஆவது பிரிவின் கீழ் ஏன் பறிமுதல் செய்யக் கூடாது என்பதற்குக் காரணம் கேட்டு, 7-ஆவது பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப் படும் அறிவிப்பை அவருக்கு அனுப்ப வேண்டும். [1] இவ்வறிவிப்பின் படிவம் X -ஆவது இணைப்பில் உள்ளது.

[1] 3—4—1907 தேதி, 95 எண், வ.து.வா.செ.

[2] 10—11—1913 தேதி, 3326 எண், வ.து.வா.செ.

[3] 23—3—1915 தேதி, 108 எண், வ.து.வா.செ.

[4] 9—6—1915 தேதி, 169 எண், வ.து.வா.செ.

4. அரசினருக்குச் சொந்தமான நிலத்தில் அனுமதி பெறுமல் செய்யப படும் அநுபோகங்கள்.—அனுமதி பெறுது அரசினருக்குச் சொந்தமான நிலத்தில் செய்யப்படும் அநுபோகம் கீழ்க் கண்டுள்ள வகுப்புகளில் பாகுபாடு செய்யலாம் :—

நி. ஆ. 26:4—6]

(அ) அநுபோகங்கள் நிலையானவையெனினும் அல்லது தற்காலிகமானவை எனினும் ஆட்சேபனையில்லாதவை.

(ஆ) அநுபோகங்கள் தற்காலிகமானவை எனின் ஆட்சேபனையில்லாதவை ஆனால் நிலையானவையெனின் ஆட்சேபனையுள்ளவை.

(இ) அநுபோகங்கள் நிலையானவையெனினும் அல்லது தற்காலிகமானவை எனினும் ஆட்சேபனையுள்ளவை.

5. அநுபோகங்கள் நிலையாக இருப்பினும் தற்காலிகமாக இருப்பினும் அவை ஆட்சேபனையில்லாதவையெனில் அவற்றில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை.—(அ) வகுப்பில் உள்ளவற்றிற்குச் சாதாரணமாக சூழ் நிலைகளில் தண்டத் தொகைகள் விதிப்பதைத் தடை செய்து வரும் நடைமுறை விதியை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாதலால் மேலே 2-ஆவது பத்தியில் (2), (3), (4) எண்களினுல் குறிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயலாற்றலாகாது. அநுபோகம் செய்யபட்ட நிலம் தீர்வை விதிக்கப்பட்டதாக இருப்பின், 15 ஆவது நிலை ஆணை 7 ஆவது பத்தியில் வகுக்கப்பட்டுள்ள விதி முறையை மேற்கொள்ள வேண்டும் அனுபோகம் செய்யப்பட்ட நிலம் தீர்வை விதிக்கப்படாத நிலமாக இருப்பின், அது உடனடியாகத் தீர்வை விதிக்கப் பட்ட நிலமாக மாற்றப்பட்டு, இதுபற்றி 15-ஆவது நிலை ஆணை 39-ஆவது பத்தியை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; அந்த இடம் கிராம வீட்டு மனையாக அல்லது நகர வீட்டு மனையாக இருப்பின், அதைக் கொடுப்பதில் கிராம வீட்டுமனைகளும் நகர மனைகளும் கொடுக்கப்படுவது பற்றி 21 நிலை ஆணையில் வகுக்கப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(31—7—1907 தேதி, 214 எண், வ.து.வா.செ.)

6. தற்காலிகமான அனுபோகத்தை மட்டும் அனுமதிக்கத் தக்கவற்றில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.—15 ஆவது நிலை ஆணை 38 VIII ஆவது பத்தியிலும் 90-ஆவது நிலை ஆணை, 32 (1)-ஆவது பத்தியிலும் உள்ளவை போன்றவற்றில் எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ, அவ்வாறே அனுபோகம் நிலையானதென்றால், ஆட்சேபணை உள்ளதாய் ஆனால் அனுபோகம் தற்காலிகமானதென்றால், அனுமதிக்கத்தக்கது என்ற (ஆ) இனத்தின் கீழ் வருவனவற்றில் ஏதாவதொரு காரணத்தின் நிமித்தமாக அனுபோகத்தை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டாலன்றி, சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள தண்டத் தன்மையுடைய ஏற்பாடுகளைச் சாதாரணமாக நாடுவதற்கு அவசியமில்லை. ஆயினும் அனுபோகம் செய்திருப்பவர்களுக்கு ஏதாவது ஒப்படை அல்லது குத்தகை ஆணை கொடுக்கப்பட்டிருந்தால், அதன் உரிமை முறையின் தற்காலிகத் தன்மையை அவ்வாணையில் தெளிவுற விளக்கியிடுவதற்கு கவனம் செலுத்த வேண்டும்.

அ 2—8—1928 தேதி, 1738 எண், அ.ஆ.வரு.
ஆ 21—8—1928 தேதி, 97 எண், வ.து.வா.செ.

நெடுஞ்சாலைத் துறையினர் பொறுப்பில் இருக்கும் சாலை விளிம்புகளில் உள்ள ஆக்கிரமிப்புக்களில், முற்றிலும் தற்காலிகமாக ஒரு பசலிக்கு மேற்படாத

[நி. ஆ. 26:6—7

மிகக் குறுகிய கால அளவுக்கு விவசாயம் செய்யப்படுவதற்காயினும் விவசாயமில்லாத காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதற்காயினும் அனுமதிக்கத் தக்கவற்றிற்கு சென்னை 1905-ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தின் 3, 5 பிரிவுகளின் கீழ்த் தீர்வையுடன் தண்டனைத் தொகையும் விதித்து அத்தொகைகளை வசூலிக்க வேண்டும்.

(17—3—1956 தேதி, 1267 என், அ.ஆ.கை.ப.)
(7—4—1956 தேதி, 457 என், வ.து.வா.செ. பலவ.)
(11—8—1956 தேதி, 3123 என், அ.ஆ.கை.ப.)
(17—9—1956 தேதி, 1293 என், வ.து.வா.செ.பலவ.)

7. அனுபோகங்கள் நிலையானவை எனினும் தற்காலிகமானவை எனினும் அவை ஆட்சேபணையுள்ளவை எனில் அவற்றில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை.—மேலே 4-ஆவது பத்தியில் (இ) வகுப்பின் கீழ் வருபனவாயின் அனுமதி பெறாத எல்லா நிலங்களிலும் செய்யப்படும் அனுபோகங்களில் சட்டத்தின் 5, 6 பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். அச்சட்டத்தின் கீழ்ச் செயலாற்றும் அலுவலர்கள், அவசியமில்லாத கடுமையான நடவடிக்கைகளைத் தவிர்த்து, அனுபோகம் இல்லாதவாறு செய்வதற்கு அவசியமில்லாத தாமதமின்றி எத்தகைய நடவடிக்கையை எடுக்க வேண்டுமோ, அவற்றை மட்டும் மேற்கொண்டு தாங்கள் அனுசரிக்க வேண்டிய நடைமுறையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்வதில் நுண்ணறிவுடன் நடந்து கொள்ளவேண்டும். நிலத்தின் உரிமை பெறப்பட்டிருக்கிறது என்று விசாரணையில் தெரிய வந்தாலன்றி அல்லது வேறு வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு தனிக் காரணம் இருந்தாலன்றி, அனுமதி பெறுமல் செய்யப்பட்ட ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்தப்பட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அப்புறப்படுத்துதலை நிறைவேற்றுவதில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறையைப்பற்றி விவரமான அறிவுரைகள் -அ இணைப்பில் உள்ளன.

அனுபோகத்தை அப்புறப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் ஆணை காலங்கடந்ததாக ஆகாதில்லை. எந்தப் பசலியில் அது பிறப்பிக்கப்படுகிறதோ அந்தப் பசலியில் முடிவு அடைந்த பின்னரும், அது நிறைவேற்றத் தக்கதாகும். உரிய முறையில் அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஓராண்டில் விதிக்கப்பட்ட தண்டத் தொகை அல்லது அப்புறப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ஆணை அதற்கடுத்து வரும் ஆண்டில் மேலும் அறிவிப்பு செய்யாமலே வசூலிக்கப்படுவதற்கு அல்லது நிறைவேற்றப்படுவதற்குச் சட்ட முறையில் தடையொன்றுமில்லை

6 (1) பிரிவின் கீழ் அப்புறப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ஆணையுடன் அனுமதி பெறுமல் ஆக்கிரமிப்பு செய்தவர், அந்த நிலத்தில் செய்திருக்கும் பயிர்கள் அல்லது விளைபொருள்கள் அல்லது கட்டின கட்டடங்கள் அல்லது கட்டுமானங்களை அல்லது அதில் விட்டுவைத்துள்ள பொருள்களைக் குறிக்கப்பட்டுள்ள தேதிக்குள் அப்புறப்படுத்த வேண்டும் என அவருக்குத் தெரிவிக்கத்தக்க அறிவிப்பும் அவருக்கு அனுப்ப வேண்டும். அத்தேதி வரையில் நிலத்திலிருந்து ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதை நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். அதற்குள் பயிர்கள் முதலியவை அகற்றப்படாவிட்டால், அவற்றைப் பறிமுதல் செய்ய கலெக்டர் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆனால்,

நி. ஆ. 26:7—8]

நிலத்தில் உணவுப் பயிர்கள் இருக்குமானால், அவற்றை உரிய காலத்தில் அறுவடை செய்து கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகளை அனுபோகம் செய்திருப்பவருக்கு கலெக்டர் அனுமதிக்கலாம். அவ்வாறு அனுபோகம் செய்தவர் மறுமுறையும் நிலத்தில் ஆக்கிரமித்தால் அல்லது இச் சலுகை ஒரு முறை வழங்கப்பட்ட வேறொருவர் அதே பசலியிலோ அல்லது பின் பசலிகளிலோ ஒரு முறை விளைபொருளை அப்புறப்படுத்திக் கொள்ளச் சலுகை அளிக்கப்பட்ட பின்னர் ஆக்கிரமிப்பு செய்தால் இச் சலுகை அளிக்கலாகாது. இத்தகைய ஆக்கிரமிப்புகளில் உணவுப் பயிர் முதிர்ந்த காலத்தில் அறுவடை செய்து நியாய விலைக்கு விற்று, விற்று முதல் அரசாங்கத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

ஆக்கிரமிப்பு செய்திருப்பவர் ஆக்கிரமிப்பு நிலத்தைப் பயன்படுத்தாதவாறு அவர் கண்டிப்பாய் தடுக்கப்படும் வரையிலும், ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ஆணை முற்றுப்பெற்றதாகாது.

அ 23—3—1915 தேதி, 108, வ.து.வா.செ.
ஆ 8—9—1916 தேதி, 2051, அ.ஆ.வரு.
ஆ 25—9—1916 தேதி, 261, வ.து.வா.செ.
20—7—1954 தேதி, 1974, அ.ஆ.வரு.
19—8—1954 தேதி, 25, வ.து.வா.செ.அச்சு.
11—8—1956 தேதி, 3123, அ.ஆ.வரு.பல.
17—9—1956 தேதி, 1293, வ.து.வா.செ.பலவ.

1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தின் 6 ஆவது பிரிவின்கீழ் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துதல் சம்பந்தமாக வருவாய்த் துறை அலுவலர்கள் செய்யும் செலவை அரசினர் ஏற்றுக்கொள்வர்.

8—11—1934 தேதி, 2308, அ.ஆ.வரு.பலவ.
12—4—1906 தேதி, 101, வ.து.வா.செ.
26—11—1934 தேதி, 174, வ.து.வா.செ.

குறிப்பு.—1905-ஆம் ஆண்டின் III-ஆவது சென்னை நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த ஆணையைப் பிறப்பிக்கும் அலுவலர்களுக்கு அத்தகைய ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவதில் ஏற்படக்கூடிய செலவையும் அனுமதிக்க அதிகாரமுண்டு. " 25. பொது ஆட்சி—உள் மாவட்ட ஆட்சி ஒதுக்கி வைக்கப்பட்டது. பொதுப் பணியாளர் தொகுதி—கலெக்டர்களும் குற்ற விசாரணை நீதிபதிகளும் வாக்களிப்புப் பெற்றது—எதிர்பாரா வகைகள், வழங்கல்கள், பணிகள் மற்றச் செலவுகள் " என்பதில் இந்தச் செலவை எழுத வேண்டும்.

1—10—1934 தேதி, 1966, அ.ஆ.வரு.பலவ.
23—10—1934 தேதி, 150, வ.து.வா.செ.

8. மிகச் சிறிய ஆக்கிரமிப்புகள்.—(i) புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகள்.—புறம்போக்குகளில் சிறிய ஆக்கிரமிப்புகளைப் பொறுத்த வரையில் கண்டிப்பான விதியை மேற்கொள்ள வேண்டியதில்லை. சாதாரணமாக 13 நயா பைசாக்களுக்கு மேற்படாத தீர்வையுடைய மிகச் சிறிய ஆக்கிரமிப்புகளை விட்டுவிட வேண்டும் என்பது விதி. அத்தகைய ஆக்கிரமிப்புகளை முதல் ஆண்டில் கிராமக் கணக்கர் ஆக்கிரமிப்புக் குறிப்பில் தாக்கல் செய்ய வேண்டும். இந்த உற்பத்தியை அனுசரித்து அவற்றைவிட்டு விடவேண்டும் என்று தாசில்தார் கட்டளையிடுவாரெனில், பின்வரும் ஆண்டுகளில் அவற்றை ஆக்கிரமிப்புக்

குறிப்பில் தாக்கல் செய்ய வேண்டியதில்லை ஆனால் நடவடிக்கை எடுக்கப் படத் தகாதன என விட்டுவிட ஆணையிடப்பட்டவை என்று குறிப்புரையுடன் அடங்கலில் இவை காட்டப்பட வேண்டும். இருப்பினும், புறம்போக்கு நிலங் கள் எப்பயன்களுக்காகப் புறம்போக்காக ஒதுக்கப்பட்டுள்ளனவோ அப் படனையே குறைத்துவிடக் கூடிய அல்லது அப் புறம்போக்குகளைப் பயனற்றவை யாய்ச் செய்யும் ஆக்கிரமிப்புகள் எவ்வளவு சிறியனவாக இருப்பினும் அவற்றை அப்புறப்படுத்துவதில் கடுமையான நடவடிக்கை எடுத்து அத்தகைய ஆக்கிர மிப்புகள் செய்யப்படாமலிருக்க உடனடியாகத் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனிச் சந்தர்ப்பங்களின் நிலைமைக்குத் தக்கவாறு இந்தப் பொது விதிகளைத் தம் யுக்தானுசாரம் அலுவலர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு நகரத்தில் அல்லது ஒரு நகராட்சியில் 13 நயா பைசாவிற்கு மேற்படாத தீர்வையுள்ள மிகச் சிறிய ஆக்கிரமிப்புகள் அதிக எண்ணிக்கையில் இருப்பின் அவை சம்பந்தப்பட்ட புறம்போக்குகளின் பயனை மிகக் குறைத்துவிடக் கூடும் அல்லது மிகக் கெடுத்துவிடக் கூடும் என்பது வெளிப்படை. அதே சமயத்தில், நிலத் தீர்வைகள் மிகவும் குறைந்த விகிதங்களில் இருக்கும் கிராமத்தில், இத் தகைய ஆக்கிரமிப்புகள் குறிப்பாகச் சில புறம்போக்குகளின் உபயோகத்தை மிகக் குறைந்துவிடத்தக்க அல்லது அப்புறம்போக்குகள் மிக பயனற்றவை யாய்ச் செய்யத் தக்க அளவில் பாவலாக இருக்கக் கூடும். நோக்கவுள்ள புறம்போக்கின் எல்லையைக் கோணலாகச் செய்யும் எந்தச் சிறிய ஆக்கிரமிப்பும் பார்த்தவுடன் ஆட்சேபனையுள்ளதாகக் கருத்ததகும். ஆனால், முன்னதாகவே, கோணலாக இருந்து எல்லையை ஒரு ஆக்கிரமிப்பு நோக்கச் செய்யுமானால் அந்த ஆக்கிரமிப்பிற்கு ஆட்சிப் பொது முறையில் ஆட்சேபனையில்லையெனில், கோண லான எல்லையை நேராகச் செய்யும் காரணத்தையே, அந்த ஆக்கிரமிப்புப் பாகத்தை உட்பிரிவு செய்து ஒப்படை செய்ய முடிவு செய்வதற்கு முக்கிய ஆதாரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பான சூழ்நிலைகள் இல்லா விடில், இத்தகைய ஆக்கிரமிப்புகளைத் தடுக்க அல்லது அப்புறப்படுத்த வேண்டிய தில்லை.

குறிப்பு.—தல ஆட்சிக் கழகங்கள் அவை சட்ட உரிமையில் அடைந்த சாலை களிலும் தெருக்களிலும், உள்ள ஆக்கிரமிப்புகளுக்கு 7, 8 (அ) பத்திகளில் உள்ள அறிவுரைகள் பொருந்துவன அல்ல. இத்தகைய ஆக்கிரமிப்புகளில் பின்வரும் 10-ஆவது பத்தியில் கண்டுள்ள அறிவுரைகளை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15—5—1941 தேதி, 1115, அ.ஆ.வரு.அச்சு.
14—6—1941 தேதி, 1590, வ.து.வா.செ.பலவ.

(ii) தீர்வை விதிக்கப்பட்ட அல்லது தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள்.—தீர்வை விதிக்கப்பட்ட அல்லது தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலங்களில் உள்ள சிறு ஆக்கிரமிப்புகளைப் பார்த்தவுடன் ஆட்சேபனையுள்ளவையாகக் கருதலாகாது. உதாரணமாக, ஒதுக்கி வைக்கப் படாத புன்செய் தரிசாக இருக்கும் 20 சென்ட் பரப்பு வரையுள்ள நிலத்தை விவசாயம் செய்து கொள்வதற்காகச் சொந்த நிலத்துடன் சேர்த்துச் செய் திருக்கும் ஆக்கிரமிப்புகளை விட்டுவிட வேண்டும். இத்தகைய ஆக்கிரமிப்பு களையெல்லாம் முதல் ஆண்டில் கிராமக் கணக்கர் ஆக்கிரமிப்புக் குறிப்பில் தாக்கல் செய்ய வேண்டும். அவற்றை விட்டுவிட வேண்டுமென்று தாசில்தார்

நி. ஆ. 26:8—9]

கட்டளை பிறப்பிப்பார் எனில் பின் ஆண்டுகளில் அவற்றைப்பற்றி ஆக்கிரமிப்புக் குறிப்பில் பதிவு செய்யலாகாது. ஆனல் இவ்வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளையை அனுசரித்து, அவை விட்டுவிடப்பட்டன என்பதான குறிப்புடன் அவற்றைப் பற்றி அடங்கலில் குறித்து வைக்க வேண்டும். எத்தகைய ஆக்கிரமிப்புகள் கவனிக்கத்தக்கவை என்பதையும், ஆக்கிரமிப்பு ஒன்றை எந்த அளவில் வழக்கத்தை அனுசரித்துக் கவனிக்காமல் விடுதல் நல்லது எனக் கருதி அதை அனுமதிக்கலாம் என்பதையும் தல அலுவலர்கள் யோசனை செய்து தாங்களே முடிவு செய்ய வேண்டும்.

14—5—1917 தேதி, 70, வ.து.வா.செ.

(iii) புறம்போக்கு எல்லைகளை நேராக்குதல்.—மறு மூறை நில அளவு செய்யப்படும் தருணத்தில் இல்லாத மாவட்டங்களில் கிராமத்தார்கள் தேவைகளுக்குத் தக்க முக்கியத்துவம் கொடுத்து எல்லைகளை நேராகவும், இலகுவாகவும், ஆக்கிக் கொள்வதின் நன்மையை முன்னிட்டு புறம்போக்கின் எல்லைகளை அவ்வப்போது திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். அதற்காக பிர்க்கா வருவாய் ஆய்வாளர் புறம்போக்கு ஆக்கிரமிப்புக்களைப் பற்றி அறிக்கை அனுப்பும்போதோ அல்லது ஒரு புறம்போக்கை யாதொரு பாகு பாட்டின் தலைப்பிற்கு மாற்ற யோசனையை மேலனுப்பும்போது கிராமத்தார்களின் நலனைப் பாதிக்காதவாறு அந்தப் புறம்போக்கின் எல்லைகளை நேராகச் செய்ய முடியுமா என்பதை தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்ய முடியுமானல் புறம்போக்கிலிருந்து விலக்கி விட வேண்டிய பகுதியின் பரப்பு சொற்பமாக (ஐந்து சென்டும் அல்லது அதற்கு குறைந்ததாகவும்) அல்லது நீண்டு குறுகலாக இருப்பதால் அல்லது வேறு காரணத்தால் அது உட்பிரிவாக வைத்திருப்பது விரும்பத் தகாது என்றால், அத்தகையவற்றிற்கு நில அளவுச் சுவடியிலிருந்து ஒரு நகல் எடுத்து எல்லையைத் திருத்துவதற்கான யோசனை அறிக்கையை அவர் மேலனுப்ப வேண்டும். ஆதியிலிருந்த புறம்போக்கிலிருந்து இவ்வாறு விலக்கத் தக்க பகுதிகளை வருவாய்த் துறை வாரியம் 15ஆவது நிலை ஆணையின் கீழ் முடிவு செய்ய வேண்டும். அ. நில ஒப்படை செய்யும் உத்தேசத்திலிருக்குமானல், அந்த வாய்ப்பைப் பயனுக்கிக்கொண்டு புறம்போக்கின் எல்லைகளைத் தேவையாயின் ஆக்கிரமிப்புப் பகுதியின் வரம்பிற்கும் அப்பாலும் கூட, நேராக்கிக் கொள்ளலாம். இத்தகைய யோசனை அறிக்கைகளை கோட்டாட்சியாளர் வழியாகக் கலெக்டருக்கு அனுப்புவதற்கு முன்னர், தாசில்தார் அந்த நிலத்தைப் பார்வையிட்டு வருவாய் ஆய்வாளரின் யோசனை ஏற்றுக் கொள்ளப்படுமானல், மீதி உள்ள புறம்போக்கு கிராமத்தாரின் தற்காலத்திய தேவைக்கும் வருங்காலத்திய தேவைகளுக்கும் மன நிறைவு கொள்ளத் தக்க வகையில் போதுமானதா என்பதைக் கவனித்து வருவாய் ஆய்வாளரின் யோசனையை எவ்வகையிலாயினும் அமைக்க வேண்டுமென்று கருதுவார் எனின் அவ்வாறு செய்வார்.

அ 8—11—1934 தேதி, 2308, அ.ஆ.வரு.
4—7—1928 தேதி, 1449, அ.ஆ.வரு.பலவ.
அ 26—11—1934 தேதி, 174, வ.து.வா.செ.
14—7—1928 தேதி 2275, வ.து.வா.செ.பலவ.

9. துறைமுக எல்லைகளுக்குள் இருக்கும் அரசினர் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை.—துறைமுக எல்லைகளுக்குள்

[நி. ஆ. 26:9—10

இருக்கும் அரசினர் நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகளைப் பற்றி, 1905ஆம் ஆண்டு சென்னை நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்குரிய அறிக்கையைத் துறைமுக அலுவலர் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும். அத்தகைய நிலங்களின் ஆக்கிரமிப்புகள் ஆட்சேபணையில்லாதவையாயினும் அவற்றின் தற்காலிக அனுபோகத்தை மாத்திரமே அனுமதிக்க முடியும். 15 ஆவது நிலை ஆணையின் 38 ஆவது பத்தியைக் காண்க.

17—9—1906 தேதி, 456, அ.ஆ.கடல்.

5—1—1907 தேதி, 9, வ.து.வா.செ.

10. ஆக்கிரமிப்பு வகைகள்.—(i) தல ஆட்சிக் கழகங்களில் அல்லது நகராட்சிகளில் சட்ட உரிமையிலுள்ள சாலைகள் தெருக்கள்.—தல ஆட்சிக் கழகங்களில் சட்ட உரிமையிலுள்ள சாலைகள், தெருக்கள் இவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளில் நடவடிக்கை எடுத்தல் அம்மன்றங்களின் பொறுப்பேயாகும். குறிப்பாக ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துதல் அவற்றின் கடமையும் ஆகும். தல ஆட்சிக் கழகங்களில் உரிமையிலுள்ள சாலைகளிலும் தெருக்களிலுமுள்ள ஆக்கிரமிப்புகள் இரு வகையின—

(அ) விட்டுவிடத் தக்கவை.

(ஆ) விட்டுவிடாமல் கவனிக்கத்தக்கவை.

விட்டுவிடாமல் கவனிக்கத் தக்க ஆக்கிரமிப்புகள் கீழ்க்கண்டவாறு மூவகையின :—

(1) ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகள்.

(2) ஆட்சேபணையில்லாத ஆக்கிரமிப்புகள்.

(3) தற்போது ஆட்சேபணையில்லாதன. ஆனால், வருங்காலத்தில் எப்போதாவது ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகளாகலாம்.

(ii) விட்டு விடத் தக்க ஆக்கிரமிப்புகள்.—"அ" வகுப்பில் வரும் ஆக்கிரமிப்புகள் இவற்றில் அக்கறை கொண்டவர்களால், அவர்கள் யாரெனில், தல ஆட்சிக் கழகத்தாலும், வருவாய்த் துறையினராலும் கவனியாது விட்டு விடப்படத் தக்கவை. இவர்களில் எவரேனும் ஏதாவது ஒரு காலத்தில் இத்தகைய ஆக்கிரமிப்பு ஆட்சேபணை உள்ளதாகிவிட்டது எனக் கருதுவாயின் அதை விட்டுவிடாமல், அதை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க அவர் அதிகாரம் பெற்றுள்ளார்.

(iii) முக்கியத்துவம் வாய்ந்த ஆக்கிரமிப்புகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கை முறை.—"ஆ" வகுப்பின் கீழ் வரும் ஆக்கிரமிப்புகளைப் பொறுத்த வரையில் தல ஆட்சிக் கழகங்களின் சட்ட உரிமையுள்ள சாலைகளையும் தெருக்களையும் உபயோகிக்கும் பொது மக்களுக்கு இடைஞ்சலுண்டாக்குவனவாகப் பார்த்தவுடன் தெரியக்கூடிய எல்லா முக்கியமான ஆக்கிரமிப்புகளையும் தல ஆட்சிக் கழகங்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய நிலை வருவாய்த் துறை அலுவலர்களின் கடமையாகும். இந்த வகுப்பின் கீழ் வரும் ஆக்கிரமிப்பு ஆட்சேபணையில்லாததாகக் கருதப்படுமானால், தனது கட்டுப்பாட்டிலே வைத்துக்கொள்வதற்காக அதை சம்பந்தப்பட்ட தல ஆட்சிக் கழகம் சாதாரண மாகக் குத்தகைக்குக் கொடுத்துக் கொள்ளும். மாவட்ட நகராட்சிகள்

நி. ஆ. 26:10]

சட்டத்தின் 183 (5) ஆவது பிரிவு, மாவட்டக் கழகங்கள் சட்டத்தின் 160 (5) ஆவது பிரிவு இவற்றின் கீழ் அரசாங்கம் அமைத்துள்ள விதிகளின் xxxii-அ இணைப்பைக் காண்க) ஏதாவதொரு முக்கியத்துவம் வாய்ந்த ஆக்கிரமிப்பைக் குத்தகைக்கு விடுவதற்குக் கலெக்டரின் முன் ஏற்பு தேவையாகும். ஆகையால் ஏதாவதொரு முக்கியத்துவம் வாய்ந்த ஆக்கிரமிப்புக்களில் சம்பந்தப்பட்ட நல ஆட்சிக் கழகமே அந்த ஆக்கிரமிப்பு நிலத்தைக் குத்தகைக்கு விட அனுமதிக்கப்பட வேண்டுமா அல்லது அதைக் நல ஆட்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துக்கொண்ட பின்னர் ஒப்படை செய்ய வேண்டுமா அல்லது ஆக்கிரமிப்பு ஆட்சேபணையுள்ளதெனக் கருத வேண்டுமா என்பவனவற்றில் தாமே முடிவு செய்யும் நிலையில் கலெக்டர் இருக்கின்றார்.

(iv) **ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கை முறை.**—ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புக்களிலன்றி ஏனைய வற்றில் வருவாய்த் துறையினர் தலையிடுவதற்கு அநேகமாகத் தேவையிராது. அத்தகைய ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டவுடனே மாவட்டக் கழகச் சட்டம், மாவட்ட நகராட்சிகளின் சட்டங்கள், இவற்றின் கீழ் வகுக்கப்பட்டு உள்ள ஏற்பாடுகளை அனுசரித்து அவற்றை அப்புறப்படுத்த வேண்டியதற்குத் நல ஆட்சிக் கழகங்கள் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். நடவடிக்கை பயன் தராவிடில், நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு, வருவாய்த் துறையினரைத் நல ஆட்சிக் கழகங்கள் எந்தக் காலத்திலும், கேட்டுக்கொள்ள அவற்றிற்கு உரிமை உண்டு. நல ஆட்சிக் கழகம் இவ்வகையில் தனது அதிகாரங்களை முற்றிலும் செலுத்தியும், பயன் கிடைக்கவில்லை என்பதாக மன நிறைவு கொள்ளத் தக்க வகையில் கலெக்டர் கருதுவாரெனில், சாதாரணமாக நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரே ஒரு குற்றச்சாட்டு வழக்கைத் தொடர்ந்து விடுவதிலுலே, நல ஆட்சிக் கழகம் தனது அதிகாரத்தை முற்றிலும் செலுத்தியதாகச் சாதாரணமாகக் கருதத் தக்கதன்று. ஆனல் நல ஆட்சிக் கழகம் திரும்ப திரும்பத் தொடர்ந்து வழக்குகளிலுல் ஆக்கிரமிப்பை அப்புறப் படுத்த முடியாவிட்டால், நல ஆட்சிக் கழகம் தனது அதிகாரங்களை முற்றி லுமே செலுத்தி விட்டதாகக் கருதலாம்.

ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள் நல ஆட்சிக் கழகம் போதுமான நடவடிக்கை எடுக்கத் தவறினுல், இவ்வகையில் நல ஆட்சிக் கழகம் தனது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக 1920ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் கழகங்கள் சட்டத்தின் 41ஆவது பிரிவிலும், மாவட்ட நகராட்சி மன்றங்களின் சட்டத்தின் 39ஆவது பிரிவிலும் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைத் தக்கவாறு அனுசரித்துக் கலெக்டர்கள் குறுக்கிட்டு நடவடிக்கை எடுக்கலாம். இந்த ஏற்பாடு இருப்பதால், மூன்று ஆண்டுகளாக இருந்து வரும் அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேல் கண்டுபிடிக்கப் பட்ட ஆக்கிரமிப்பில் தானுகவே நடவடிக்கை எடுப்பதற்கு நல ஆட்சிக் கழகத் நிற்குத் தடை இருப்பதாகக் கருதலாகாது. சென்னை நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு தம்மை உள்ளாட்சிக் கழகம் கேட்டுக் கொண்டாலும் கேட்காவிட்டாலும் கலெக்டர் எந்தக் காலத்திலுமே இவ்வாறு குறுக்கிட்டு நடவடிக்கை எடுக்கலாம்.

ஒரு ஆக்கிரமிப்பு ஆட்சேபணையுள்ளதா இல்லையா என்பதின் இறுதி முடிவு செய்பவர் கலெக்டர் ஆவர். நல ஆட்சிக் கழகம் ஒரு ஆக்கிரமிப்பை அப்புறப்

[நி. ஆ. 26:10—11

படுத்துமாறு கலெக்டரைக் கேட்டுக் கொண்டால், கலெக்டர் அந்த ஆக்கிரமிப்பு ஆட்சேபணையில்லாததாகக் கருதுவார் எனில், அதை அப்புறப்படுத்த அவர் மறுக்கலாம்.

மிகவும் அழுத்தமான காரணங்கள் இருந்தாலன்றி, தல ஆட்சிக் கழகம் தன்னிடம் சட்ட உரிமையிலுள்ள அரசினர் நிலத்தில் இருக்கும் ஆக்கிரமிப்பைத் தல ஆட்சிக் கழகம் அப்புறப்படுத்துவதைத் தடுப்பதற்காகக் கலெக்டர் தமது அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

மாவட்டக் கழகங்களின் உரிமையுள்ள சாலைகளிலும் தெருக்களிலும் இருக்கும் ஆக்கிரமிப்புகளை முடிவு செய்வதில் கலெக்டருக்கும் மாவட்டக் கழகத் தலைவர், அல்லது மாவட்டக் கழகப் பொறியாளர் இவர்களுக்குள் கருத்து வேற்றுமை இருக்குமானால் (போக்குவரத்து) மேற்பார்வைப் பொறியாளரின் கருத்தைக் கலெக்டர் தெரிந்து கொள்ள வேண்டும். (போக்குவரத்து) மேற் பார்வைப் பொறியாளரின் கருத்தை ஒத்துக் கொள்வதற்குக் கலெக்டரால் முடியவில்லையெனில், அவர் வருவாய்த் துறை வாரியத்தின் வழியாக அரசினருக்கு எழுதிக் கொள்ள வேண்டும். அத்தகையவற்றில் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கையைத் தேவையாக இருக்கும்போது, கலெக்டர் நிறுத்தி வைக்கலாம்.

(7—9—1945 தேதி, 1641, அ.ஆ.வரு.)
(8—10—1945 தேதி, 31, வ.து.வா.செ.அச்சு.)

(v) முக்கியத்துவம் குறைந்த ஆக்கிரமிப்புகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கை முறை.—விட்டு விடாமல் கவனிக்க வேண்டிய வகுப்பைச் சேர்ந்த வையாய் முக்கியத்துவம் அதிகமில்லாத ஆக்கிரமிப்புகளைப் பொருத்த மட்டில், என்றது, தல ஆட்சிக் கழகம் கலெக்டரைக் கலந்து கொள்ளாமலே குத்தகைகள் அல்லது உரிமங்கள் கொடுக்கத் தகுதியாயுள்ளவற்றைப் பற்றி, வருவாய்த் துறை சாதாரணமாக கவனிக்க வேண்டியதொன்றுமில்லை.

எனினும், உரிமங்களாலும் குத்தகைகளாலும் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்புகள் ஆட்சேபணையானவை எனக் கலெக்டர்களுக்குத் தோன்று மானால் அவற்றின் குத்தகைகளையும், உரிமங்களையும் முடிவு அடையுமாறு செய்து விடுவதற்காக அரசினர் பிறப்பித்துள்ள (xxxi-அ) இணைப்பின் பகுதி நகலில் உள்ள) விதிகளின் கீழ்த் தங்களுக்கு வழங்கப் பெற்றுள்ள தனி அதிகாரங்களைக் கலெக்டர்கள் கருதுதில் வைத்துக் கொள்ள வேண்டும். தல ஆட்சிக் கழகங்கள் கலெக்டருக்கு அறிவிக்காமல் ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகளைக் குத்தகைக்கு விட்டிருந்தால் அல்லது அவற்றிற்கு உரிமங்கள் வழங்கியிருந்தால், பார்வையிடும் வருவாய்த் துறை அலுவலர்கள் அவற்றைப் பற்றிக் கலெக்டருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். பொது மக்கள் தாக்கல் செய்யும் மனுக்களின் வழியாகவும், சிறிய அளவில் கலெக்டர் தாம் ஆய்வு செய்யும்போதும் இத்தகைய ஆக்கிரமிப்புகள் தமது பார்வைக்கு வருகிறபோதெல்லாம் கலெக்டர் இதில் தல ஆட்சிக் கழகங்கள் சொல்லிக்கொள்ள வேண்டும் என்பதைக் கேட்டறிந்துகொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(15—5—1941 தேதி, 1115, அ.ஆ.வரு.அச்சு.)
(14—6—1941 தேதி, 1590, வ.து.வா.செ.பலவ.)

11. தல ஆட்சிக் கழகம் அல்லது நகராட்சியின் சட்ட உரிமையில் இல்லாத சாலைகளும், தெருக்களும்.—தல ஆட்சிக் கழகம் அல்லது நகராட்சியின் சட்ட உரிமையில் இல்லாத சாலைகள் அல்லது தெருக்கள் அல்லது தல ஆட்சிக் கழகம்

நி. ஆ. 26:11—12]

அல்லது நகராட்சியின் சட்ட உரிமையில் உள்ள சாலைகள் தெருக்களின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் அல்லது அவற்றின் நியாயமான எல்லைகள் நிலையெனக் கலெக்டரால் நிர்மாணிக்கப்பட்ட எல்லைகளுக்கு வெளியே சாலை அல்லது பாதை புறம்போக்காகப் பாகுபாடு செய்யப் பெற்றுள்ள நிலங்கள் ஆகியவற்றின் பொறுப்பு மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளைச் சார்ந்துள்ளது. அனுமதி பெறுமல் செய்யப்படும் ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்பு களைத் தடுப்பது அவர்களின் கடமையாகும். அத்தகைய நிலங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்போது அரசினர் பொது மக்களின் பிற்காலத்திய தேவைகளை எல்லாம் கூர்ந்து கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நிலவரித் திட்டத்தை அனுசரித்துப் பொதுச் சாலைகளின் பதிவிலும் புறம்போக்குகளின் பதிவிலும் மாறுதல் என் செய்யக் கூடாது என்பதற்குக் காரணம் சொல்லுமாறு சம்பந்தப்பட்ட தல ஆட்சிக் கழகத்தைக் கேட்காமல் கலெக்டர்கள் அப்பதிவில் எத்தகைய மாறுதலும் செய்யலாகாது.

அ 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதி, 4780, அ.ஆ.தல.ந.க.
அ 1927 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் தேதி, 105, வ.து.வா.செ.பலவ
அ 1934 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் தேதி, 2308, அ.ஆ.வரு.பல.
அ 1934 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி, 174, வ.து.வா.செ.

குறிப்பு.—தல ஆட்சிக் கழகத்திற்கு அல்லது நகராட்சிக்குப் பொதுத் தெருக்களைச் சட்ட முறையில் உரிமையாக்குதலினுல் அத்தெருக்கள் உள்ள இடத்தை அல்லது அத்தெருக்கள் எந்தப் பூபாகத்தில் அமைந்துள்ளனவோ அந்தப் பூபாகத்தின் உடைமை அந்தத் தல ஆட்சிக் கழகத்திற்கு அல்லது நகராட்சிக்குச் சேர்ந்து விடாது. தெரு, தெருவாகப் பயனுகுமாறு, அதைப் பராமரிக்க அவசியமான பூபாகம் எவ்வளவோ அந்தப் பூபாகத்தையும், அதன் கீழ்ப் பாகத்தையும், அதற்கு மேலே உள்ள இடத்தையும் போதுமான அளவிற்கு மேலாட்சி செய்து தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள மாத்திரமே தல ஆட்சிக் கழகத்திற்கு உரிமை உண்டு. ஆனுல் தெருவில் முறை தவறி பிரவேசிக்கிறவர்கள்மீது, நிலத்தில் சுவாதீனம் உடையவர்கள் எத்தகைய நடவடிக்கை எடுக்கத்தக்கதோ அத்தகைய நடவடிக்கை எடுக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். பொதுத் தெருக்கள் சாலைகளில் நிலையாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யப்படும் ஆக்கிரமிப்புக்களில் முறை தவறிப் பிரவேசித்தவர் 30 ஆண்டுகள் சுவாதீனம் அல்லது அநுபோகம் செய்து வந்தால் தல ஆட்சிக் கழகம் அல்லது நகராட்சி எதிர் உரிமையை இழந்து விட்டதாகக் கருதப்பட்டு ஆக்கிரமிப்பு இடத்தின் உரிமை அந்த 30 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து மேலும் 30 ஆண்டுகள் அதாவது கால வரைச் சட்டத்தின் கீழ் கணக்கிடப்படக் கூடிய 60 ஆண்டுகள், எதிர் உரிமை இருந்தால் அன்றி அரசினரைச் சேரும். அவ்வாறு அரசினரை சேரும் உரிமைகள் காலங்கடந்தன என்றுக விஸ்லியாயின் கலெக்டர்கள் அவ்வுரிமைகளைக் கொண்டாடுவதில் உடனடியாகவும் கட்டாயமாகவும செயலாற்றவேண்டும்.

12. இருப்புப் பாதை நிலங்கள்.—இருப்புப் பாதை நிலங்கள், நிலையான வைகளாகவோ அல்லது தற்காலிகமானவைகளாகவோ எவ்வாறு பாகுபாடு செய்யப்பட்டிருப்பினும் அவை அரசினரின் சொத்தாகும். அவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகள் 1905ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கத்தக்கன. அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிலங்களிலுள்ள இத்தகைய ஆக்கிரமிப்புகளில் நேரடியாகவும், இருப்புப் பாதை ஆட்சித் துறையிலுள்ள நில ஆக்கிரமிப்புகளில், அவ்வாட்சி கேட்டுக்கொண்ட பின்னரும் நடவடிக்கை எடுக்க வேண்டியது வருவாய் அலுவலர்களின் கடமையாகும்.

6—6—1933 தேதி, 998, அ.ஆ.வரு.பலவ.
16—6—1933 தேதி, 43, வ.து.வா.செ.அச்சு.
அ 14—8—1920 தேதி, 1959, அ.ஆ.வரு.
8—2—1921 தேதி, 5, வ.து.வா.செ.

[தி. ஆ. 26:13, 26அ:1

13. **கோவில் புறம்போக்குகள்.**—கோவில் புறம்போக்குகளில் அரசாங்கத்திற்குள்ள உரிமையைப் பாதுகாக்கும்பொருட்டு அத்தகைய எல்லாப் புறம்போக்குகளையும் ஒவ்வொரு ஆண்டும் பார்வையிட வேண்டும். கோவிலில் திருப்பணி செய்து வரும் பூசாரிகள், கோவில் பணியாளர்கள், கோவில் திருப்பணி சம்பந்தமாகத் தங்கள் கடமையை நிறைவேற்றுவதற்கும், திருவிழாக்கள் சமயச் சடங்குகள் இவை சம்பந்தமாக முற்றிலும் தற்காலிகமாகச் செய்யப்படும் அநுபோகங்கள் நீங்கலாகவுள்ள ஏனையவற்றை ஆக்கிரமிப்புகளாக கருத வேண்டும். நடப்பு பசலியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளின் பட்டியல் ஒன்றை ஜமாபந்தியின்போது ஜமாபந்தி அலுவலர் முன்னிலையில் இருக்க வேண்டும். திருவிழாக்கள், சமயச் சடங்குகள் சம்பந்தமான முற்றிலும் தற்காலிகமான ஆக்கிரமிப்புகள் நீங்கலாக ஏனையவற்றை அப்புறப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பற்றி ஒவ்வொரு பசலி முடிவிலும் கலெக்டர் ஆய்வுரை செய்ய வேண்டும்.

(31—5—1947 தேதி, 1317, அ.ஆ.வரு.பலவ.)
(14—6—1947 தேதி, 15, வ.து.வா.செ.அச்சு.)
(3—10—1950 தேதி, 2651, அ.ஆ.வரு.பலவ.)
(14—10—1950, 31, வ.து.வா.செ.அச்சு.)

குறிப்பு.—மேலே உள்ள ஏற்பாடுகள் தக்க மாறுதல்களுடன் கிறித்துவ ஆலயப் புறம்போக்குகளுக்கும் பள்ளிவாசல் புறம்போக்குகளுக்கும் பொருந்துவன ஆகும். கிறித்துவ ஆலயப் புறம் போக்குகள் நேர்வில் சம்பந்தப்பட்ட கிறித்துவக் கோயில் அதிகாரிகளுடன் பள்ளிவாசல் புறம்போக்குகள் நேர்வில் இசுலாமியர் அறக்கட்டளை வக்ப் வாரியத்துடனும் கலந்தறிந்து கொண்டு ஒப்படை செய்யப்படும்.

(1968 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாளும் 781 எண்ணுமிட்ட நிலை வ.வா.செ.)

(1967 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ஆம் நாளும் 1438 எண்ணுமிட்ட அ.ஆ.வரு.)

(1967 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் நாளும் 1324 (உ) எண்ணுமிட்ட நிலை வ.வா.செ. மற்றும்.)

(1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் நாளும் 101517/2/67 எண்ணுமிட்ட அரசுக் குறிப்பாணையும்.)

26. அ. அரசினர் வசமுள்ள நிலத்தை தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலத்திற்குப் பதிலாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளுதல்.

1. எப்போது பரிவர்த்தனை செய்து கொள்ளலாம்.—தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலத்திற்குப் பதிலாக அரசினர் வசமுள்ள நிலத்தைக் கொடுத்தல்—

(i) ஆறு, நீர் வழி, வண்டிப் பாதை முதலியன தன் வழி மாறி தனிப் பட்டவரின் நிலத்தின் வழியாக செல்லுமானால், அவற்றின் உரிமையாளர் அத்தகைய நிலத்தின் உரிமையை விட்டுவிட்டு கணக்குகளில் ஆறு முதலியவை யாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலத்தின் பகுதியைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு ஒப்புக் கொண்டாலும்;

நி. ஆ. 26அ:1—3]

(ii) கால்வாய் அல்லது பாதை முதலியவை செல்லும் வழியின் பாகத்தை நேராக்குவதற்காகவும் அல்லது ஒரு சொந்த நிலத்தை இரண்டாகத் துண்டிக்கும் சொந்த கால்வாய் அல்லது பாதையைப் பொது மக்களின் வசதிக்கு குந்தகம் விளைவிக்காமல் அந்தச் சொந்த நிலத்தின் எல்லையை அனுசரித்தே திருப்பிவிட முடியுமானாலும்;

(iii) பாசன ஏரி அல்லது ஆற்றின் உள்பாகத்தில் பயிர் செய்வதைத் தடுப்பது விரும்பத்தக்கதானால் தனிப்பட்டவர் அத்தகைய உள்பாகத்தில் உள்ள நிலத்தின் உரிமையாளர் தனது நிலத்தை விட்டு விட்டு அரசினர் வசமுள்ள நிலத்தைப் பெற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டாலும்;

(iv) நீர்ப் பாசனங்களுக்காக சிறு மேம்பாடுகள், சாவடிகள், கால் நடைப்பட்டிகள், கிணறுகள், அல்லது பள்ளிக்கூடங்கள் போன்றவற்றிற்கான பொது உபயோகங்களுக்காக, ஒவ்வொன்றிலும் 25 செண்டுகளுக்கு மேற்படாமல் தனிப்பட்டவர் நிலத்தின் சிறு பகுதிகள் தேவையாக இருப்பினும்;

குறிப்பு.—தேவையான நிலத்தில் நிலையான யாதொரு கட்டுமானம் கட்டப் படுவதாக இருந்தால், நிலத்தின் பரப்பு அல்லது அதன் விலை எவ்வளவாக இருப் பினும், அந்நிலத்தின் உரிமை தவறாமல் பெறப்பட வேண்டும்.

(19—9—1938 தேதி, 2453, அ.ஆ.வரு.பலவ.)
(15—3—1939 தேதி, 18 வ.து.வா.செ.அச்சு.)

(v) அரசினர் எடுக்கும் நடவடிக்கை ஒன்றினால் தனிப்பட்டவரின் நிலம் அல்லது அதன் ஒரு பகுதி விலை மதிப்பில்லாமலோ அல்லது மதிப்பில் குறைந்தோ ஆய்விடும்போது தனிப்பட்ட உரிமையாளர் அத்தகைய நிலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்குப் பதிலாக அரசினர் வசமுள்ள நிலத்தை பரிவர்த்தனையாக எடுத்துக்கொள்ள விரும்பினும்;

(vi) தனிப்பட்டவர் கிராம நத்தங்களை விரிவு செய்வதற்காகத் தமது நிலத்தை அரசினர் வசமுள்ள நிலத்திற்குப் பதிலாகப் பரிவர்த்தனை செய்ய ஒப்புக் கொண்டாலும்;

(vii) தனிப்பட்டவர் தமது நிலப் பகுதிகளை ஒன்று சேர்த்துக் கொள் வதற்காக ஒவ்வொன்றிலும் 25 செண்டுகளுக்கு மேற்படாத சிறு நிலப் பகுதி களின் உரிமை விட்டு விட ஒப்புக் கொண்டாலும்;
பரிவர்த்தனை செய்து கொள்ளலாம்.

2. **பரிவர்த்தனை செய்து கொள்ளும் முறை.**—தனிப்பட்டவர் தமக்குச் சொந்தமான நிலத்தின் உரிமையை விட்டு விடுவதும், அரசினர் வசமுள்ள நிலத்தை வழக்கமான நிபந்தனைகளை அனுசரித்து ஒப்படை செய்வதும் பரிவர்த்தனையின் முறையாகும்.

3. **வில்லங்கச் சான்று ஒப்புவித்தல்.**—நிலத்தின் உரிமையை விட்டு விடுப வருக்கு அந்நிலத்தின் முழு உரிமை இருக்க வேண்டும் என்பதையும் அவ்வா அவர் யாதொரு நிபந்தனைக்குட்படுத்தாது உரிமையை விட்டு விட வேண்டும் என்பதையும் கவனித்துப் பார்க்க வேண்டும். உரிமை விட்டு விடப்படும் நிலத்தின் மதிப்பு 100 ரூபாய்க்கு மேற்படுமானால், அதை ஒப்புக் கொள்வதன்

[நீ. ஆ. 26அ: 3—5, 27:1—2

மூன்னர், அந்த நிலத்தின் உரிமையாளரை வில்லங்கச் சான்று அவர் செலவிலே ஒப்புவிக்க வேண்டுமென்று கேட்க வேண்டும். ஏனையவற்றில், நிலத்தை விட்டு விடுபவரின் உரிமையைப்பற்றி ஏதாவது சந்தேகமிருக்குமானால் வில்லங்கச் சான்று வேண்டுமென்று கேட்க வேண்டும்.

4. **ஒப்பளிப்பு அதிகாரங்கள்.**—அரசினர் வசமுள்ள நிலம் பரிவர்த்தனையில் கொடுக்கப்படும்போது அதன் மதிப்பு தனிப்பட்டவரின் உரிமை விட்டு விடும் நிலத்தின் மதிப்பிற்கு அதிகமாக இருப்பின், சம்பந்தப்பட்டவரிடமிருந்து அந்த வித்தியாசத் தொகையைத் தவறுமல் வசூலித்து விட வேண்டும். வழக்கமாக உள்ள நிபந்தனைகளை அனுசரித்து ஒப்படை செய்யும்போது, ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால் கலெக்டரும், அந்த மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால் வருவாய்த் துறை வாரியமும் பரிவர்த்தனையை அனுமதிக்கலாம். ஒப்படை நிலத்தின் மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டாலும், அல்லது வழக்கமாக உள்ள ஒப்படை நிபந்தனைகளில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்றாலும், அல்லது இது 1894 ஆம் ஆண்டு நில உரிமை பெறும் சட்டம் (1894 ஆம் ஆண்டு 1 ஆவது சட்டம்), 31 (3) ஆவது பிரிவின்கீழ் வாக்கூடும் என்றாலும் அரசினரின் அனுமதி பெற வேண்டும்.

5. **பரிவர்த்தனையை ரத்து செய்தல்.**—தனிப்பட்டவர் நிலம் அல்லது அதன் ஒரு பகுதியின் உரிமை விட்டுவிடப்பட்ட அரசினர் அந்நிலத்தை ஒப்படை செய்வதற்கு ஆட்சேபணையிருக்குமானால், அல்லது மேல் முறையீட்டில் அல்லது ரிவிஷனில் ஒப்படை ஆணை தள்ளுபடி செய்யப்பட்டிலும் நிலத்தின் உரிமை விட்டுவிட்டதை ஒப்புக் கொண்ட அதிகாரிக்கு அடுத்த மேல் அலுவலராயினும் ஒப்படை ஆணையைத் தள்ளுபடி செய்த அதிகாரியாயினும் நில உரிமை விட்டு விட்டதை ஒப்புக்கொண்ட ஆணை ரத்து செய்து, அந்நிலத்தை அதன் உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுத்து விடலாம்.

14—7—1937 தேதி, 1422, அ.ஆ.வ்ரு.அச்சு.
20—9—1937 தேதி, 100, வ.து.வா.செ.
29—5—1950 தேதி, 29597-அ 50—1 எண். வரு.அ. குறிப்பு.
31—5—1956 தேதி, 44065-அ 56—1 எண். வரு.அ. குறிப்பு.
16—8—1956 தேதி, 1159, வ.து.வா.செ.பலவ.

பாகம் III —பட்டாக்கள்.

27. பட்டாக்கள் கொடுத்தல்.

1. **பட்டாவின் படிவம்.**—கிராமக் கணக்கு நடைமுறை நூலில் பட்டாவின் படிவம் உள்ளது.

2. **பட்டாவை புதுப்பிப்பது.**—சம்பந்தப்பட்ட குடிகள் புதுப் பட்டாக்கள் வேண்டுமென்று விரும்பிக் கேட்கும்போது மட்டும் புதுப் பட்டாக்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுமானால் அவ்வாறு கொடுத்தலே போதுமானதாகும் என்பது பொது விதி. குடியானவர் ஒருவரது கைப்பற்று நிலங்களில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை எனில், அவருக்கு பட்டா புதிதாகக் கொடுப்பது அவசியமில்லை என்பது நன்கு விளங்கும். பட்டா தயார் செய்யப்பட்ட பொழுது ஒருவர் உடைமையில் இருந்த நிலங்களின் விவரமான பட்டியலைக்

கி. ஆ. 37:2—3]

கொண்டுள்ள அசல் பட்டா ஒவ்வொரு குடியானவரிடமும் இருக்க வேண்டும். [1] கைப்பற்றில் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தால் முன் கொடுக்கப்பட்ட பட்டா கொண்டு வரப் பெற்றவுடன், அதில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் அல்லது அசல் பட்டாவில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்குமானால், பட்டா புதிதாகக் கொடுக்கத்தக்கதாகும். இருப்பினும், குடியானவர் ஒருவர் தமது கிராம ஜமாபந்தி நடைபெறும் சமயத்தில் ஒரு திருத்தமான பட்டா வேண்டுமென்று கேட்டுக்கொண்டால், உடனடியாகப் பட்டா தயார் செய்யப்பட வேண்டும். அப்பட்டாவை ஜமாபந்தி அலுவலர் அவருக்குக் கொடுக்க வேண்டும். [1]

11—7—1940 தேதி, 1683, அ.ஆ.பல.

16—8—1860 தேதி, 3756, வ.து.வா.செ.

9—8—1940 தேதி, 72, வ.து.வா.செ.அச்சு.

21—7—1860 தேதி, 3330, வ.து.வா.செ.

20—12—1905 தேதி, 406, வ.து.வா.செ.நிர்.

[1]*28—2—1928 தேதி, 453, அ.ஆ.பலவ.*

15—6—1958 தேதி, 2419 எண். அ.ஆ.வரு.பல.

[1]*5—3—1928 தேதி, 17, வ.து.வா.செ.*

13—8—1956 தேதி, 1144, எண். வ.து.வா.செ.பலவ.

3. அந்த அந்தக் கிராமத்தின் ஜமாபந்தியில் மாத்திரமின்றி, ஆண்டின் எல்லாக் காலங்களிலுமே பட்டாக்கள் கொடுத்தல்.—பட்டா வேண்டுமென்று செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். ஜமாபந்தியில் வாய்மொழியாக அல்லது எழுதிக் கேட்டுக் கொள்ளப்பட்டால், செலவு யாதொன்றுமின்றித் திருத்தமான பட்டாக்கள் அல்லது புதிதாகத் தயார் செய்யப்பட்ட பட்டாக்களைக் கொடுக்க வேண்டும். வேண்டிய காலங்களில் பட்டா வேண்டுமென்றால் அதற்காக எழுதிக் கேட்டுக் கொள்ள வேண்டும். வாய் மொழியாகக் கேட்டுக்கொண்டால் அக் கோரிக்கையை எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும். அத்தகைய விண்ணப்பங்களுக்கு 25 பைசா மதிப்பிற்கு முத்திரை வில்லை ஒட்ட வேண்டும். வருவாய் ஆய்வாளர் அல்லது மற்ற அலுவலர்கள் தம்மிடம் வரப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வலுவலர்கள் தங்களிடம் வரப் பெறும் விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவற்றை வருவாய் ஆய்வாளரிடம் அனுப்ப வேண்டும். வருவாய் ஆய்வாளர் தாம் நேராகவோ அல்லது மற்ற அலுவலர் வழியாகவோ வரப்பெறும் விண்ணப்பங்கள் 10—1 என் கணக்கிலிருந்து பட்டாக்களைத் தயாரிக்குமாறு செய்வித்து அவற்றைத் தாம் சரி பார்த்ததற்காக அவற்றில் சான்றிட்டு அப்பாட்டாக்களை யும், விண்ணப்பங்களையும் தாசில்தாருக்கு மேலனுப்ப வேண்டும். அவற்றைக் கோட்ட ஆட்சியாளருக்குத் தாசில்தார் அனுப்ப வேண்டியதில்லை. ஆகலால் அவற்றில் அவர் தாமே கையெழுத்திட்டு தமது அலுவல் முத்திரையிட்டு அவற்றைக் கொடுத்துவிடலாம். பட்டாக்களை உறைகளிலிட்டு அவ்வுறைகளைப் பணித் துறை அஞ்சலில் விண்ணப்பம் செய்து கொண்டவர்களுக்கு தாலுகா அலுவலகங்களிலிருந்து நேராக அனுப்ப வேண்டும்.

11—7—1940 தேதி, 1683, அ.ஆ.வரு.பல.

15—6—1956 தேதி, 2419, எண். அ.ஆ.வரு.பல.

9—8—1940 தேதி, 72, வ.து.வா.செ.அச்சு.

13—8—1956, தேதி, 1144 எண். வ.து.வா.செ.பலவ.

[கி. ஆ. 27:4, 28:1—3

4. கூட்டுப் பட்டாவில் பெயர்களைப் பதிவு செய்தல்.—கூட்டுப் பட்டாவில் நிலமுடையவர்களில் ஒவ்வொருவரது அனுபோகத்திலுள்ள நிலப் பரப்பு எவ்வளவாயினும் அவ்வொருவர் பெயரும் கூட்டுப் பட்டாவில் பதிவு செய்யப் படும்.

23—5—1871, தேதி [2]124, வ.து.வா.செ.

28. அரசுக் குடி நிலமுடையவரின் உரிமைகளும் கட்டுப்பாடுகளும்.

1. அரசுக்குடி முறையில் நிலத்தின் உரிமையாளராகப் பதிவு செய்வதின் பயன்.—அரசுக்குடி முறையில் நிலத்தின் உரிமையாளராகப் பதிவு செய்யப் பெற்றவர் ஒருவர் [1] அரசினரைப் பொருத்த வரையில், தீர்வை பாக்கிக்கான விற்பனையில்; அல்லது வேறு சட்ட முறையில் அவரது சுவாதீனத்திலிருந்து நிலம் மாறிவிடும் வரையில், அரசுக்குடி முறையில் மாவட்ட நிலப் பதிவேட்டில் அந் நிலத்தின் பதிவு செய்யப் பெற்ற உரிமையாளராவர் என்ற முறையில் அவரே பொறுப்பாளராவர். குடியானவர் ஒருவர் விவசாயம் செய்யாது தரிசாக நிலங்களை விட்டிருப்பாராயின் அக் காரணம் நிமித்தமாக அந் நிலங்கள் அவரது பட்டாவிலிருந்து நீக்கப்படமாட்டா.

16—4—1861 தேதி, 1974 எண். வ.து.வா.செ.

2. பதிவு செய்யப்பட்ட நிலமுடையவர் எந்நிபந்தனைகளில் நிலத்தைப் பராதீனம் செய்யலாம்.—அரசுக்குடி நில உரிமையாளர், அரசினரைப் பொருத்த வரையில், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தமது உடைமையிலிருக்கும் நிலம் முழுவதும் அல்லது அதன் எப்பாகத்தையும் பராதீனம், உள் குத்தகை, அடைமான விற்பனை, இறுதிச் சாசனக் கொடை மூலமாக அல்லது வேறு வகைகளில் பிறருக்குக் கொடுத்து விடலாம். ஆனால் (1) மாவட்ட நிலப் பதிவேட்டில், அத்தகைய மாறுதல் அல்லது முடிவு பதிவு செய்யப் பெற்றுள்ளன்றியும் அவ்வாறு பதிவு செய்யப்படும் வரையிலும் அத்தகைய மாறுதல்கள் ஏற்பட வில்லை என்பதாகவே பதிவு செய்யப்பட்ட நிலமுடையவரே நிலத்திற்குரிய தீர்வையை மற்றச் சட்ட முறையில் அரசினருக்குச் செலுத்தத்தக்க தொகைகளையும் செலுத்தப் பொறுப்பாளராவர். (2) நிலத்தின் தீர்வைப் பாக்கிகளை அல்லது சட்ட முறையில் அரசினருக்குச் சேரவேண்டிய தொகைகளைச் செலுத்துவதற்கும் உட்பட்டும் எத்தகைய தனி அல்லது பொதுக் கட்டுபாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு மாற்றியவர் நிலத்தைத் தம் வசம் வைத்துக் கொண்டிருந்தனரோ, அக் கடமைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும் பதிவு மாற்றப் பெற்றவர் தம் பெயரில் பதிவு மாற்றப்படும்போது நிலத்தை எடுத்துக் கொள்கிறார்.

குறிப்புகள்.—(1) இருப்பினும், 15-40 ஆவது நிகி ஆணையின் கீழ்வரும் ஒப்படை நிலங்கள் பராதீனம் செய்யப்படுவதில் கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

(2) [1]நிபந்தனைகளுக்குட்படுத்திய ஒப்படை நிலங்கள் அந்நிபந்தனைகளுக்குட் பட்டுப் பராதீனம் செய்யத்தக்கது.

[1]9—11—1920 தேதி, 89, வ.து.கு.செ.வரு.

3. [1]பதிவு செய்யப்பட்ட நிலமுடையவர் [1]ஊரை விட்டுச் சென்று விடுவதில் நேரிடக்கூடிய விளைவு.—நீண்ட காலமாக ஊரை விட்டுச் சென்று விடுவதனால் அல்லது அனுபோகம் செய்யாததால் நிலத்தை மாற்றிக் கொடுத்து விடுவதற்கான உரிமை செல்லாததாகிவிடாது.

நி. ஆ. 28:4—8, 29, 30—1]

4. நிலங்களில் மேம்பாடு செய்வதால் பட்டா பாதிக்கப்படமாட்டாது.—அரசுக்குடி முறையில் நிலமுடையவர் நிலத்தில் குளம் வெட்டி, கிணறு வெட்டி அல்லது கட்டடங்கள் கட்டி நிலத்தில் மேம்பாடு செய்து கொண்டால், அத்தகைய மேம்பாடுகளுக்காகக் கூடுதலான தீர்வை செலுத்தவேண்டியதில்லை. ஆனால், அத்தகைய மேம்பாடுகளுக்காக உபயோகப்படுத்தப்படும் இடத்திற்காகத் தீர்வையைக் குறைக்குமாறு கேட்டுக்கொள்ள அவருக்கு உரிமை இல்லை.

5 [1]அரசுக்குடி நிலமுடைவ்யரின் கட்டுப்பாடுகள்.—[1]அரசுக்குடி முறையில் நிலமுடையவராகப் பதிவு செய்யப்பட்டவருக்கு 13-ஆவது நிலை ஆணையில் உள்ளவாறு தீர்வை தள்ளுபடி கொடுக்கப்பட்டாலன்றி, அவர் நிலத்தில் விவசாயம் செய்தாலும் அதைத் தரிசாகவே விட்டு விட்டாலும், உழுது பயிரிடாமல் விட்டு வைத்திருந்தாலும் நிலத்தின் தீர்வையைக் குறிப்பிட்ட தவணைகளில் செலுத்த அவர் கடமைபட்டுள்ளார்.

6. பட்டாவின் நடைமுறைக் காலம்.—ஒரு தேதியில் கொடுக்கப்பட்ட பட்டா பிந்திய தேதியில் கொடுக்கப்பட்ட பட்டாவினால், தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலன்றி முந்திய தேதியில் கொடுக்கப்பட்ட பட்டா செல்லத்தக்கதாகும். ஒவ்வொரு ஆண்டும் அதைப் புதுப்பிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

7. [1]அரசுக்குடி நிலத்திலுள்ள கனிப் பொருள்களுக்கு அந்நிலமுடையாவரின் உரிமைகள்.—அரசுக்குடி முறையில் நிலமுடையவர் தமது நிலத்திலிருந்து கனிப் பொருள்களை எடுப்பதற்கு உரிமை உண்டு. ஆனால் அதற்காக அந்நிலத்தின் மேற்பரப்புக்குரிய தீர்வையுடன் தனிப்பட்ட தீர்வையும் இவர் செலுத்த வேண்டும்.

26—11—1883 தேதி, 3587, வ.து.வா.செ.
20—3—1884 தேதி, 1006, வ.து.வா.செ.
6—10—1858 தேதி, வ.து.வா.செ. (மா. 1858 தொகுதி III பக். 161-168)
8—8—1859 தேதி, வ.து.வா.செ. (மா.1859 தொகுதி III பக் 164-174).
16—7—1897 தேதி, 240, வ.து.வா.செ.

8. அரசுக்குடி கூட்டுடமையாளர்களுக்குப் பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் வழங்குவது நீக்கப்பட்டது.

24—8—1956 தேதி, 3213 எண். அ.ஆ.வரு.பல.
5—9—1956 தேதி, 1238 எண். வ.து.வா.செ.பலவ.

29. ஜமீன்தாருடைய சன்னத்தின் படிவம் நீக்கப்பட்டது.
13—5—1950 தேதி, 27202 கா. 50—1 எண். அ. குறிப்பு. வரு.
15—6—1956 தேதி, 44896-இ, 56—1 எண். அ. குறிப்பு. வரு.
(13—8—1956 தேதி, 1145, எண். வ.து.வா.செ.பலவ.)

30. உரிமைப் பத்திரங்கள் தயாரித்தல்.

(1) பொறுப்பு.—அரசினர் கட்சிக்காரராக உள்ள உரிமைப் பத்திரங்களைத் தயாரிப்பதற்காகக் கீழே 2—15 பத்திகளிலுள்ள அறிவுரைகள் கலெக்டர்களுக்கு பயனுகும் வகையில் பிறப்பிக்கப்படுகின்றன. [1] இவ்வுரிமைப் பத்திரங்களைச் சரியாகத் தயாரிக்க வேண்டிய பொறுப்பைக் கலெக்டர் தமது அலுவலகத்தின் எழுத்தர் ஒருவரிடம் ஒப்புவிக்க வேண்டும். [1]

[1]17—12—1864 தேதி; 8084, எண். வ.து.வா.செ.

[நி. ஆ. 30:2—6

(2) பத்திரங்களில் எழுதா இடங்களைப் பூர்த்தி செய்தல்.—பத்திரத்தின் தலைப்பில் உள்ள எழுதா இடங்களை அரசினர் செயலாளர் பத்திரத்தில் தாம் கையெழுத்திடும்போது பூர்த்தி செய்ய வேண்டும். பத்திரம் எழுதி முடிவடைந்தபின் அதிலுள்ள மற்ற எழுதா இடங்களில் இடைச் செருகல்கள் நேரிடா வண்ணம் கலெக்டர் அலுவலகத்தில் அவ்வெழுதா இடங்கள் கோடிட்டு நிரப்பப்பட வேண்டும்.[2]

(3) பத்திரங்களின் நகல்கள் ஒரே சரி மாதிரியில் இருக்க வேண்டும்.—[1] பத்திரங்களின் நகல்களிரண்டும் சரி மாதிரியில் இருக்க வேண்டும். ஒவ்வொன்றுடனும் ஒரு அமைப்புப்படம் சேர்க்கப்பட வேண்டும். படத்தின் கூடுதல் நகல் ஒன்று அனுப்பவேண்டும்.

[1]14—1—1864 தேதி, 218, வ.து.வா.செ.
[2]9—2—1891 தேதி, 87, வ.து.வா.செ.
[3]27—7—1897 தேதி 2812, வ.து.வா.செ.பலவ.

(4) அமைப்புப் படங்கள்.— இயன்றபோதெல்லாம் பத்திரத்திலேயே அமைப்புப் படம் வரைந்திருக்க வேண்டும். மற்றையவற்றில் பத்திரங்களுடன் அமைப்புப் படத்தை நன்றாகச் சேர்த்து தைத்து வைக்க வேண்டும். அமைப்புப் படங்கள் பத்திரங்களிலே வரையப்பட்டிருந்தாலும் அல்லது வேறாக இருப்பினும் அவை சரியானவை எனக் கலெக்டரால் சான்றிடப்படும் வகையில் அவற்றுடன் கலெக்டர் கையொப்பம் இணைக்கப்பட வேண்டும்; மாநில கவர்னரின் சார்பில் பத்திரத்தை எழுதிக் கொடுக்கும் அரசாங்கச் செயலாளரும் அவற்றில் கையெழுத்திட வேண்டும்.

14—1—1864 தேதி, 218, வ.து.வா.செ.
17—12—1864 தேதி, 8084, வ.து.வா.செ.
29—4—1890 தேதி, 213, வ.து.வா.செ.
5—8—1890 தேதி, 466, வ.து.வா.செ.
30—5—1956 தேதி, 2101 எண், அ.ஆ.வரு.பல.

5. அமைப்புப் படங்களில் தேதி குறிப்பிடுதல்.—அரசாங்கச் செயலாளர் கையொப்பத்திற்காக வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்பும் உரிமைப் பத்திரங்களுடன் இணைக்கப்படும் அமைப்புப் படங்களில் தேதி தவறாமல் குறிப்பிடவேண்டும். அவற்றில் குறிப்பிடும் தேதி அவை எந்தத் தேதியில் தயாரிக்கப்பட்டனவோ அத்தேதியாகும்.

4—4—1867 தேதி, 21287, வ.து.வா.செ.

6. மக்களை விவரித்துக் குறிப்பிடுதல்.—பத்திரத்தில் எவரையேனும் குறிப்பிடும்போது "திரு" என்னும் சொல்லை உபயோகிக்கலாகாது. பத்திரத்திற்குச் சம்பந்தப்பட்டவர்களின் பெயர் முழுமையும் அவர் இருப்பிடம், பட்டம் தொழில் இவற்றை எல்லாம் விவரித்துக் குறிக்கவேண்டும்.

14—1—1864 தேதி, 218, வ.து.வா.செ.
5—8 1890 தேதி 466, வது வா. செ.

நி. ஆ. 30:7—12]

(7) எல்லைகளை விவரித்துக் குறித்தல்.—பத்திரத்துடன் சேர்க்கப்பட்ட விவர அட்டவணையில் குறிப்பிடப்படும் எல்லைகள் விற்பனை செய்யப்பட்டுள்ள நிலத்தைச் சுற்றியிருக்கும் நிலங்களாகும். வடபுறம் ..... (இன்னது) என்றவாறு சொல்ல வேண்டுமே தவிர, சம்பந்தப்பட்ட நிலம் ..... இன்னதற்கு வடக்கே உள்ளது முதலியவாறாக விவரிக்கக் கூடாது.

14–1–1864 தேதி, 218 வது. வா. செ.

(8) [3] விவர அட்டவணைக்கும் வரைபடத்திற்கும் இருக்க வேண்டிய ஒற்றுமை.—அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள எல்லைகளும், வரை படங்களில் குறிக்கப்பட்டுள்ள எல்லைகளும் முற்றிலும் ஒத்திருக்க வேண்டும். விற்பனை செய்யப்படும் சொத்தின் பாப்பு வரை படத்தில் எந்த நில அளவு முறைகளில் குறிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நில அளவு முறைகளில் விவர அட்டவணையின் கடைசிக் கட்டத்தில் எழுதுவதில் கவனம் செலுத்த வேண்டும். [4]

[5]7–9–1893 தேதி, 519, வ.து.வா.செ.
[6]14–1–1864 தேதி, 218, வ.து.வா.செ.

(9) பெயர்களையும் இடங்களையும் எழுதுதல்.—[7] பெயர்களையும் இடங்களையும் சரியாக எழுத்துக் கூட்டி எழுத வேண்டும். பத்திரம் வரை படங்கள் இவற்றில் எங்கும் அவை ஒரே சரி மாதிரியில் இருக்க வேண்டும்.

[7]17–12–1864 தேதி, 8084, வ.து.வா.செ.

(10) பத்திரங்களை அரசினருக்கு மேலனுப்புதல்.—பத்திரத்தின் நகல்கள் தயாரிக்கப் பெற்றதும் அவற்றில் கையெழுத்து பெறுவதற்காகக் கலெக்டர் அவற்றை வருவாய்த் துறை வாரியத்தின் வழியாக அரசினருக்கு அனுப்ப வேண்டும். அரசினர் சார்பில் பத்திரத்தில் எந்தத் தேதியில் கையெழுத்து இடப்படுகிறதோ அந்தத் தேதியைப் பத்திரத்தின் தேதியாகவும் நகல்களின் தேதியாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் அவை கலெக்டருக்குத் திருப்பி அனுப்பப்படும்.

(11) பத்திரத்தைக் கொடுத்துவிடுதல்.—பத்திரமும் அதன் நகலும் திரும்ப வரப்பெற்றவுடன் அவற்றினிரண்டிலும் கொடை பெற்றிருப்பவரின் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு வரை படத்துடன் பத்திரத்தையும், வரை படத்தின் நகலையும் அவரிடம் கலெக்டர் கொடுத்து விட வேண்டும். வரை படத்தின் நகலை 1908-ஆம் ஆண்டு XVI ஆவது இந்தியச் சட்டம் 21 (4)-ஆவது பிரிவின்கீழ்ப் பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்ய வேண்டும். மற்றொரு நகலைக் கலெக்டர் தம் அலுவலகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

9–2–1891 தேதி, 87, வ.து.வா.செ.
27–7–1897 தேதி, 2813, வ.து.வா.செ.பலவ.

(12) பத்திரத்தில் சாட்சிக் கையெழுத்து பெறுதல்.—சாட்சியாக ஒருவர் இருத்தலே போதும். அவர் இருப்பிடம், தொழில் மற்றும் அவரைப் பற்றிய விவரங்களை அவர் பெயரின்கீழ்க் குறிக்கவேண்டும்.

[நி. ஆ. 30:13—16, 31:1

(13) திருத்தங்களுக்கு அரசாங்கச் செயலாளர் சுருக்கொப்பமிட வேண்டும்.—கலெக்டர் பத்திரத்தில் அல்லது நகலில் எவ்வகையான சுருக்கொப்பமோ அடையாளமோ இடக்கூடாது. பத்திரத்தில் அழித்தல் சேர்த்தல், இடை வரித் திருத்தம் இவற்றிற்கெல்லாம் பத்திரத்தில் எழுதிக் கொடுக்கும் அரசாங்கச் செயலாளர் சுருக்கக்கொப்பமிட வேண்டும். பத்திரத்துடன் அத் தாட்சி [1]செய்யப்பட்ட திருத்தங்களின் பட்டியல் ஒன்று சேர்க்க வேண்டும்.

[1]9–2–1891 தேதி, 87, வ.து.வா.செ.
27–7–1897 தேதி, 2813, வ.து.வா.செ.பலவ.

(14) பத்திரத்தின் வரிசை எண்.—உரிமைப் பத்திரங்கள் கொடுப்பதில் பத்திரத்தின் வரிசை எண்ணும் அது எழுதிக் கொடுக்கப்பட்ட ஆண்டும் "1866 ஆம் ஆண்டு 7 ஆவது எண்" என்றவாறு ஒரு புது வரிசைக் கிரம எண்ணிக் கையைத் தொடங்கிப்பிக்க வேண்டும்.

21–10–1868 தேதி, 7553, வ.து.வா.செ.

(15) முத்திரைக் கையெழுத்துக்கள் ஒப்புக்கொள்ளப்படமாட்டா.—அரசினர் சார்பில் அலுவலர்கள் எழுதிக் கொடுக்கும் உரிமைப் பத்திரங்களில் அவர்கள் தாங்களாகவே கையெழுத்து செய்ய வேண்டுமேயன்றி அவர்களின் முத்திரைக் கையெழுத்து ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

(16) அரசுக்குடி நிலப்பட்டாக்களில் கையெழுத்து செய்யும் முறை.—இப் பட்டாக்கள், பதிவு செய்யப்பட்ட நிலமுடையவர் வசமிருக்கும் நிலங்களுக்குச் செலுத்த வேண்டிய தீர்வையைக் காட்டக் கூடிய குறிப்புகளே அன்றி உரிமைப் பத்திரங்களல்ல. ஆகையால் மேற்கண்ட 15 ஆவது பத்தியின் விதி இவற்றிற்குப் பொருந்தாது.

23–4–1890 தேதி, 213, வ.து.வா.செ.
5–6–1890 தேதி, 466, வ.து.வா.செ.

31. நில உடைமைப் பதிவை மாற்றுவதற்குரிய விதிகள்.—1. விதிகளின் நோக்கம்.—பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவரிடமிருந்தே செலுத்தத் தக்க நிலத் தீர்வையைக் கலெக்டர் எதிர் பார்க்க வேண்டுமாதலால் ஒவ்வொரு கிராமத்திலும் எழுதி வைக்கப்பட்டு வரும் நில உடைமைப் பதிவேடு இயன்ற வரையில் நிலத்தின் உண்மையான உரிமையாளர்கள் அல்லது எத்தன்மைத்தான உரிமையையாயினும் ஆதாரமாகக் கொண்டு அனுபோகம் செய்து வருபவர்கள் பெயர்களைக் காட்டுவதாக இருக்க வேண்டுமென்பதோடு இப்பதிவேடு பிழை யேதுமின்றி நாளது வரை திருத்தம் பெற்றதாக இருக்க வேண்டுமென்பது முக்கியமானதாகும். ஆதலால் நிலங்களாகிய சொத்துக்கள் கைமாறும் பொழுது வருவாய்க் கணக்கில் அம்மாறுதல்களின் பதிவைச் செய்து கொள்ளும் வகையில் பின்வரும் விதிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அவை வகுக்கப்பட்டுள்ளன.

19–6–1914 தேதி, 1778, அ.ஆ.
3–11–1914 தேதி, 3150, அ.ஆ.வரு.

நி. ஆ. 31:2—3]

2. மூவகை மாறுதல்கள்.—(அ) உரிமையாளர்கள் தாங்களாகவே தங்கள் உரிமையை மாற்றிவிடுவதாலும் அல்லது (ஆ) நீதி மன்றங்களின் தீர்ப்புச் சுருக்கங்களினால் அல்லது வருவாய்த் துறையினர் செய்யும் விற்பனைகளினாலும் அல்லது (இ) வாரிசு கிரமத்தில் சட்ட முறையினாலும் சொத்து மாற்றப்படுகிறது. பதிவேடுகளின் இம்மூவகை மாறுதல்களையும் பதிவு செய்வதில் பின் வரும் முறையை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. (i) நிலமுடையவர் தாங்களாக உரிமையை மாற்றுதல்.—உரிமை முற்றிலும் மாற்றப்பட்டால், அவ்வாறு மாற்றப்பட்டதற்குச் சம்பந்தப்பட்ட இரு தரத்தினர்கள் அல்லது ஒரு கட்சியினர் விண்ணப்பம் எழுதி அதில் கையெழுத்திட்டு அதைத் தாக்கல் செய்வார்களானால், உடைமையிலுள்ள நிலத்தின் உரிமை மாற்றப்பட்டதை அனுசரித்து அதன் பதிவை மாற்றலாம். அவ்விண்ணப்பம் அஞ்சல் வழியாக அனுப்பலாம் அல்லது நேரிலோ அல்லது அதிகாரம் வழங்கப்பெற்ற பிரதிநிதி வழியாகத் தாக்கல் செய்யலாம். நிலம் எந்தக் கிராமத்திலிருக்கிறதோ அந்தக் கிராமத்தின் கணக்கரும், கிராமத் தலைமை அலுவலரும் சரி பார்த்து விண்ணப்பத்தில் கையெழுத்திட வேண்டும் என்று கட்சிக்காரர் விரும்புவாரெனில், கிராம அலுவலர்கள் அவ்வாறே செய்யலாம். அத்தகைய கையெழுத்துக்களை மாற்றியவர், மாற்றப்பெற்றவர் ஆகிய இருவரின் அடையாளம் காட்டும் சான்றுக எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய விண்ணப்பத்தை இரு தரத்தினரும் தாக்கல் செய்திருந்து மாற்றியவர் மாற்றப் பெற்றவர் ஆகிய இரு தரத்தினர்களில் ஒரு தரத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவராக இருப்பின், பதிவு செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கேட்டுக்கொண்டவாறே உடனடியாக ஆணை பிறப்பிக்கலாம். ஆனால் மாறுதல் செய்யப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட இரு தரத்தார்களில் ஒரு தரத்தார் மட்டுமே விண்ணப்பம் செய்திருப்பின் அரசினர் கடைநிலைப் பணியாளர் அல்லது கிராமப் பணியாளர்கள் வழியாக மற்றத் தரத்தினருக்கு அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது மற்ற தரத்தினர் முகவரி சரிவரத் தெரியுமானால் அறிவிப்பை அவருக்கு அஞ்சலில் அனுப்பலாம். ஆனால் அவரது முகவரி தெரியவில்லையெனில் அவர் கடைசியாகக் குடி இருந்ததாகத் தெரிய வரும் இடத்தின் முகவரிக்கு அறிவிப்பைப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும். நேராகச் சேர்ப்பது இயலாதெனில், 1864 ஆம் ஆண்டு சென்னை வருவாய் வசூல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள வழிகளை அனுசரித்து அறிவிப்பைச் சேர்ப்பிக்க வேண்டும். நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர்கள் அல்லர் எனில் பதிவு மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்கும் இரு தரத்தினர்களும் அல்லது ஒரு தரத்தினர் மட்டுமே விண்ணப்பம் தாக்கல் செய்து கொண்டிருப்பின் சம்பந்தப்பட்ட நிலமுடையவர்களுக்கும் அறிவிப்பு அனுப்ப வேண்டும். நடவடிக்கைகளில் ஒரு தரத்தினர் மட்டும் பதிவு மாறுதல் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்து. அவ்விரு தரத்தினர்களில் ஒரு தரத்தினர் ஆட்சேபனை செய்வாரெனில் அல்லது யாதொன்றும் தெரிவிக்காமல் வாளாவிருப்பாரெனில், பதிவு மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்பவருக்கும் பதிவு செய்யப்பட்ட நிலமுடையவர்களுக்கு மிடையே நிலத்தைப் பற்றிய தொடர்பு முற்றிலும் தொடர்ச்சியாக உள்ள பத்திரங்கள் மூலமாக ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தத் தொடர்பு சரியாக இல்லாவிடில் மதிப்புடைய குடியானவர்களின் வாக்கு மூலங்கள் தீர்வை செலுத்திய பற்றுச் சீட்டுகள், முதலியவை போன்ற இதர சான்றுகளைக்

கொண்டு இத்தகைய தொடர்பைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய இரண்டு வார காலம் அனுமதிக்க வேண்டும். ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டால் அதைப் பற்றி விசாரணை நடத்தி ஆட்சேபனை செல்லத் தகுந்ததாகயிருந்தாலன்றிப் பதிவு மாற்ற வேண்டும்.

19–6–1914 தேதி, 1778, அ.ஆ.வரு.
11–9–1928 தேதி, 2114, அ.ஆ.வரு.பலவ.
3–11–1914 தேதி, 3150 அ.ஆ.வரு.
15–9–1928 தேதி, 103, வ.து.வா.செ.
20–7–1920 தேதி, 106, வ.து.வா.செ.நிர்.
28–10–1932 தேதி, 2203, அ.ஆ.வரு.கை.ப.
22–11–1932 தேதி, 73, வ.து.வா.செ.

(ii) நீலகிரி வைநாட்டில் நிலத்தை அனுபோகம் செய்பவர் அல்லது நிலத்தில் விவசாயம் செய்பவர் அல்லாதவர் வழியாக நிலத்தின் சுவாதீனத்தை நிலத்தை அனுபோகம் செய்பவர் பெற்றிருப்பார் எனில் அத்தகைய நிலத்தை அனுபோகம் செய்பவர் அல்லது நிலத்தை விவசாயம் செய்பவர் பெயரில் பதிவு மாறுதல் செய்ய வேண்டுமென்று பதிவு செய்யப்பட்டுள்ள ஜன்மி கேட்டுக் கொண்டால், மாற்றப்பட்டது உண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஜன்மியின் உரிமையே என்பதைப் பார்த்தவுடன் மெய்ப்பிக்கக்கூடிய சான்று தாக்கல் செய்யப்பட வேண்டுமெனக் கலெக்டர் கேட்கவேண்டும்.

25–6–1895 தேதி, 394, அ.ஆ.
13–7–1895 தேதி, 238, வ.து.வா.செ.

4. உரிமையைக் கட்டாயமாக மாற்றுதல்.—(i) தீர்ப்புச் சுருக்கம் பெற்றவர்கள் பெயரில் மாற்றுதல்.—சிவில் மன்றத்தின் தீர்ப்புச் சுருக்கம் பெற்ற வகையில் அல்லது சிவில் மன்றத்தின் தீர்ப்புச் சுருக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் தீர்ப்புச் சுருக்கம் பெற்றவர் பெயரில் அல்லது நில ஏல விற்பனையில் எடுத்துக்கொண்டவர் பெயரில் அக் கைப்பற்று நிலங்களின் உரிமை மாற்றப் படுவனவற்றில், தீர்ப்புச் சுருக்கத்தின் மெய்யொப்பம் செய்யப்பட்ட நகல் அல்லது விற்பனைச் சான்றிதழ், இவற்றில் பொருத்தமாக உள்ளது எதுவோ அதையும் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் கைப்பற்று நிலத்தை மாற்றியிருப்பாரெனில், அவ்வகையில் அவர் சுவாதீனம் கொடுத்ததாக அளித்த சான்றையும், வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சினரில் ஒரு கட்சியினர் அல்லது ஏல விற்பனையில் கைப்பற்று நிலத்தை எடுத்துக்கொண்டவர் தாக்கல் செய்து தமது பெயரில் பதிவு மாறுதல் செய்து கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டால் உடனடியாக அவ்வாறு அவர் பெயரில் பதிவு மாறுதல் செய்யவேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் அல்லாத ஒருவர் மாற்றியிருப்பாரெனில், பதிவு மாறுதல் பற்றி ஆணை பிறப்பிக்குமுன்னர் 3 ஆவது பத்தியில் வகுக்கப்பட்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடைய வருக்கு ஓரறிவிப்பு கொடுக்க வேண்டும். நிறைவேற்று நடவடிக்கை எடுக்காத போதே சுவாதீனம் ஒத்துக்கொள்ளப்பட்டு தீர்ப்புச் சுருக்கமும் வெளிப்படையாக இறுதியானதாக ஏற்படுவது போன்ற சுவாதீனம் கொடுத்ததாக அளிக்கத் தக்க சான்று வழங்க முடியாதனவற்றில் பதிவு மாறுதல் செய்வதற்காக, பதிவு

நி. ஆ. 31:4—5]

மாறுதலுக்குச் சம்பந்தப்பட்டவர்களில் ஒரு தரத்தினர் விண்ணப்பம் செய்து கொண்டால் 3 (அ) பத்தியில் வகுக்கப்பட்டுள்ளவாறு எவ்வாறு நடவடிக்கை எடுக்கத் தகுமோ அவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

19—6—1914 தேதி, 1778, அ.ஆ.
3—11—1914 தேதி, 3150, அ.ஆ.வரு.

(ii) **உறுதிமொழி அளிக்கப்பெற்ற தீர்ப்புச் சுருக்கங்களை அனுசரித்து பதிவு மாற்றுதல்.**—தீர்ப்புச் சுருக்கம் தனிப்பட்டவர் ஒருவரிடம் சட்ட முறையில் உரிமை இருப்பதாக அறிவிப்பு செய்து அவர் பெயரில் பதிவு மாறுதல் செய்யப்படுவதற்கு உரிமை அளிக்கும் உறுதி மொழி தீர்ப்புச் சுருக்கம் போன்ற வையாகிய நிறைவேற்று நடவடிக்கை எடுக்க முடியாதெனவற்றில், பதிவு மாறுதல் செய்யப்படக் கோரிக்கை செய்யப்படும்போது கலெக்டர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் மெய்யொப்பம் செய்யப்பட்ட அத்தகைய தீர்ப்புச் சுருக்கத்தின் நகல் தாக்கல் செய்யப்பட்டவுடனே பதிவில் மாறுதல் செய்ய வேண்டும.

5. (i) **பதிவு மாற்றுதல்களைப் பற்றிக் கிராமக் கணக்கர் அறிக்கை அனுப்ப வேண்டும்.**—உரிமை முற்றிலுமே மாற்றப்பட்டதை அனுசரித்து சம்பந்தப்பட்ட ஒரு தரத்தினர் அல்லது இரு தரத்தினரும் பதிவு மாற்றுதலுக்கு விண்ணப்பம் செய்து கொண்டவற்றில் எடுக்க வேண்டிய நடவடிக்கையைப் பற்றி 3 ஆவது விதியின் (1) ஆவது உட்பிரிவும் 4 ஆவது விதியும் எடுத்துக் கூறுகின்றன. பதிவு மாற்றுதல் செய்யுமாறு ஒரு தரத்தினரேனும் வருவாய்த் துறை அலுவலர்களிடம் கேட்டுக் கொள்ளவில்லை என்றால் அவற்றில் 1936 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் தேதி 87 என் வருவாய்த் துறை வாரிய அச்சுச் செயல்முறை ஆணையில் விதித்துள்ள நடைமுறையைக் கைகொள்ள வேண்டும். அம் முறையில், இவ்வாறு பதிவு மாற்றுதல் செய்ய வேண்டியவற்றைப் பற்றி விவர அறிக்கை XXIV இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் இரண்டு பிரதிகளில் மேலனுப்ப வேண்டும். ஒவ்வொன்றும் தனிப் படிவத்தில் இரு பிரதிகளில் எழுதப்படவேண்டும். இயலுமாறால் மாற்று பவரது கையொப்பமும் மாற்றுப்பெறுபவர் கையொப்பமும், இந்த நடவடிக் கைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் ஒரு தரத்தினர் அல்லர் எனில், அவரது கையெழுத்தும் கிராமக் கணக்கர் பெற வேண்டும். இந்த விவர அறிக்கை சம்பந்தப்பட்ட கிராமம் எந்த வரம்பிற்குள் உள்ளதோ அதன் தாசில்தாருக்கோ துணை தாசில்தாருக்கோ அனுப்பப்பட வேண்டும். விவர அறிக்கையின் பிரதியொன்றை அதன் மீது பிறப்பிக்கப்பெற்ற ஆணையுடன் கிராமக் கணக்கருக்கு அனுப்பப்படும் மற்றப் பிரதி தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் அலுவலகத்தில் வைத்திருக்கவேண்டும். விவர அறிக்கைகள் வரப்பெற்றவுடன் தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் சமபந்தப்பட்ட எல்லாருடைய கையெழுத்துக்களும் கொண்டுள்ள விவகாரம் அல்லது சந்தேகமில்லாதவற்றையெல்லாம் உடனடியாக முடிவு செய்ய வேண்டும். 1936 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி 87 என் வருவாய்த் துறை வாரிய அச்சுச் செயல் முறை ஆணையில் குறிப்பிட்டுள்ள மாதாந்திர முன்னேற்ற அறிக்கையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏனையவற்றில். 3—1 ஆவது அல்லது 4 ஆவது பத்தியில் வகுத்துள்ள விதிகளைத் தக்கவாறாக அனுசரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(11) வருவாய் ஆய்வாளர்கள் பதிவு மாற்றுதல்களில் முடிவு செய்தல்.—ஒவ்வொரு பிர்க்கா வருவாய் ஆய்வாளரும் தமது பிர்க்காவின் ஒவ்வொரு கிராமத்திலும் அரை ஆண்டில் குறைந்தது ஒரு முறை ஆய்வு செய்து முடிவு செய்யப்படாமல் பாக்கியாக இருக்கும் ஒவ்வொன்றையும் விசாரித்து தாமே முடிவு செய்யத்தக்கவற்றில் ஆணை பிறப்பிக்கவேண்டும். மற்றவற்றைப் பற்றி கீழே 8 ஆவது பத்தியில் வகுக்கப்பட்டுள்ளவாறு தாசில்தார் அல்லது துணைத் தாசில்தாருக்கு அறிக்கை அனுப்பவேண்டும். தாசில்தார்களும், துணைத் தாசில்தார்களும் ஆண்டுதோறும் ஒவ்வொரு பிர்க்காவிலும் ஓரிரண்டு கிராமங் களில் வருவாய் ஆய்வாளரின் வேலையைச் சரி பார்க்கவேண்டும்.

19–6–1914 தேதி, 1778, அ.ஆ.
3–11–1914 தேதி, 3150, அ.ஆ.வரு.
18–9–1941 தேதி, 104, வ.து.வா.செ.அச்சு.
27–7–1956 தேதி, 2962, அ.ஆ.வரு.
20–8–1956 தேதி, 1168, வ.து.வா.செ.பலவ.

6. வழியுரிமை முறையில் உரிமை மாற்றுதல்.—பதிவு செய்யப்பட்ட நில முடையவர் மரணமெய்துவதால் அல்லது 7 ஆண்டுகளுக்கு மேல் நீடித்த காலமாக அன்னர் ஊரை விட்டுச் சென்று விட்ட காரணமாக பதிவு மாற்றுதல் செய்யப்பட வேண்டியவையெல்லாம் இந்த வகுப்பில் அடங்கும்.

(i) வாரிசு முறையில் வரப் பெறும் வழியுரிமை.—வாரிசு முறையில் வழி உரிமை வரப் பெறுவதில்[1] விவகாரம் ஒன்றுமில்லாவிடில், கலெக்டர் அல்லது அதிகாரம் பெற்றுள்ள அலுவலர் உட்னடியாகவாவது அல்லது ஜமா பந்தியிலாவது பதிவு மாற்றுதல் செய்யுமாறு ஆணை பிறப்பிக்கலாம். வழி உரிமை பற்றி ஆட்சேபனை இருக்குமானால், மரண மெய்திய பதிவு செய்யப் பட்டுள்ள நிலமுடையவரது சொத்திற்குப் பொருத்தமான வழியுரிமை சட்டத்தின் கொள்கைகளை அனுசரித்து அதற்கு வழி உரிமை எவருக்கு இருக்கிறது என்பதைச் சுருக்க முறையில்[1] விசாரணை செய்துகொண்டு, தீர்வினைப்பு வெளியிடவேண்டும். அத்தகைய வழியுரிமை உடையவர் பெயரில் பதிவு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கக் கூடியவர் எவராயினும் அந்த அறிவிப்பு தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் தமது மேலான உரிமையை நிலைநாட்டச் சிவில் மன்றத்திடம் வழக்குத் தொடர்ந்துள்ளதாக உறுதிமொழி கூறி அவ்வழக்கில் மெய்யொப்பம் செய்யப்பட்ட பிராதின் நகலைத் தாக்கல் செய்தாலன்றி, அந்தகைய வழியுரிமை உடையவர் பெயரில் பதிவு செய்யப் படும் என்பதாக 3 (1)[2] ஆவது பத்தியில் வகுக்கப்பட்டுள்ள முறையில், இதில் சம்பந்தப்பட்டவர்களாகத் தெரிய வந்தவர்கள் அல்லது சம்பந்தப்பட்டவர் களாக கருதப்பட்டவர்களிடம் அந்த அறிவிப்பைச் சேர்ப்பிக்க வேண்டும். அத்தகைய உறுதிமொழி தாக்கல் செய்யப்படாவிட்டால், அறிவிப்பில் தெரிவித் துள்ள மூன்று மாதங்கள் கழிந்தவுடன் அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு பதிவு செய்யவேண்டும். அத்தகைய உறுதிமொழி தாக்கல் செய்யப்பட்டால், மேல்நடவடிக்கை எடுக்குமுன் வழக்கின் முடிவை எதிர்பார்க்கவேண்டும்.[3] பாகப் பிரிவினையாகாத குடும்பங்களின் வாரிசுகளின் பெயர்களைப் பதிவு செய்வ தில், நடவடிக்கை நிர்வாகம் செய்பவர் அல்லது நிர்வாகம் செய்பவர்கள்

நி. ஆ. 31:6—7]

பெயரில் பதிவு செய்யப்படவேண்டும். மற்றவற்றில் சொத்தில் பங்குகளுக குரிய எல்லா வாரிசுகளின் பெயர்களும் பதிவு செய்ய வேண்டும்.

[1]15–3–1886 தேதி, 630, வ.து.வா.செ.
[2]19–6–1914 தேதி, 1778, அ.ஆ.
[3]3–11–1914 தேதி, 3150, அ.ஆ.வரு.
[3]25–8–1886 தேதி, 1168, வ.து.வா.செ.

(ii) பதிவு செய்யப்பட்ட நிலமுடையவர் காணப்படாவிட்டால் வழியுரிமை மாற்றுதல் செய்தல்.—பதிவு செய்யப்பட்ட ஒரு கைப்பற்றின் நிலமுடையவர் 7 ஆண்டுகளுக்கு அதிகமான காலமாகக் காணப்படவில்லை என்ற நிலையில் அவர் உயிருடனிருக்கிறாரா என்பதற்குயாதொரு சான்றுமில்லாவிட்டால் அவர் இறந்துவிட்டதாகக் கருதி, அவ்வாறே பதிவையும் மாற்றுதல் செயயவேண்டும். பதிவு மாற்றுதல் செய்ய வேண்டுமென்று உரிமை கொண்டாடும் வாரிசு ஒருவரும் இல்லாவிட்டால், இதுபற்றி மாவட்ட அரசிதழில் ஓறிவிப்பு வெளியிட வேண்டும். நிலங்கள் எவர் சுவாதீனத்தில் இருக்கின்றனவோ அவர் பெயரில் பதிவு மாற்றுதல் செய்யப்படுவதற்கு ஆட்சேபணையுள்ளவர் எவரேனும் தமது மேலான உரிமையை நிலைநாட்டச் சிவில் மன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததாக உறுதிமொழி கூறி அவ்வழக்குப் பிராதிற்கு மெய்யொப்பம் செய்த நகலை அந்த அறிவிப்பின் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தாக்கல் செய்தாலன்றி, அந்நிலங்களைச் சுவாதீனம் செய்துள்ளவர் பெயரில் பதிவு மாற்றுதல் செய்யப்படும் என்று அவ்வறிவிப்பில் தெரிவிக்க வேண்டும். உறுதிமொழியொன்றும் தாக்கல் செய்யப்படாவிட்டால், மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு பதிவு செய்தல் வேண்டும். உறுதிமொழி தாக்கல் செய்யப்படின், இதில் பதிவு மாற்றுதல் சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமுன் வழக்கின் முடிவை எதிர்பார்க்க வேண்டும்.

19–6–1914 தேதி, 1778, அ.ஆ.
3–11–1914 தேதி, 3150, அ.ஆ.வரு.

7. பனிரெண்டு ஆண்டுகளாகச் சுவாதீனம் இருப்பதாக மெய்ப்பிக்கிறவர் பெயரில் பதிவு மாற்றுதல்.—உரிமையை மெய்ப்பிக்க உதவக்கூடிய பத்திரங்களிலுலன்றி 12 ஆண்டுகளாகவும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் ஊரறிந்த உரிமையுடையவர் போலவே நிலங்களில் சுவாதீனம் செய்து வந்திருக்கிறார்கள் என்பதாகச் சுருக்க விசாரணையில் தெரிய வருமாலுல், 3 (1) ஆவது விதியில் கூறப்பட்டுள்ளவாறு அறிவிப்புக் கொடுத்தல் முதலியவற்றிற்குப் பின்னர் பதிவை மாற்றுதல் செய்யலாம் வருவாய் அலுவலர்கள் தாங்களாகவோ அல்லது சம்பந்தப்பட்ட கட்சியினர்கள் தாக்கல் செய்யும் மனுவை அனுசரித்தே இந்தப் பத்தியில் வகுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

[2]நிலத் தீர்வை செலுத்தியதைக் காட்டுவதற்குத் தாக்கல் செய்யப்படும் பற்றுச் சீட்டுகளும், கிராம அலுவலர்களின் சான்றும் சுவாதீனத்தை மெய்ப்பிக்கத் தக்கன என எடுத்துக்கொள்ளலாம். ஆயினும் அத்தகைய சான்றில்

லாத காரணத்தைக் கொண்டே உரிமை சட்ட முறையில் மூற்றிலும் செல்லா தெனக் கருதலாகாது. சுவாதீனத்தைப் பற்றிய வாய்மொழிச் சான்றும் ஒப்புக்கொள்ளப்படலாம்[1].

[1]25–2–1897 தேதி, 69, வ.து.வா.செ.
19–6–1914 தேதி, 1778, அ.ஆ.
3–11–1914 தேதி, 3150, அ.ஆ.வரு.

8. யாருக்கு மனுக்கள் செய்து கொள்ள வேண்டும்.—பதிவை மாற்றுதல் செய்வதற்கு விண்ணப்பங்களைக் கலெக்டர், கோட்ட ஆட்சியாளராவது, தாசில்தார் அல்லது தாலுகா அல்லது உள் தாலுகா அல்லது துணைத் தாசில் தார், தாலுகாவின் தலைமைக் கணக்காளர் [3]சம்பந்தப்பட்ட நிலம் எந்தப் பிர்க்காவில் உள்ளதோ அந்தப் பிர்க்கா வருவாய் ஆய்வாளர் இவர்கள் ஒரு வரிடம் கொடுக்கலாம். பத்திரங்களைப் பதிவு செய்யும்பொழுது அல்லது பத்திரப் பதிவாளரிடமாயினும் தாக்கல் செய்து கொள்ளலாம். [3]பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் இறந்துவிடுவாரெனில், கிராமக் கணக்கர் அது பற்றி அவருக்குத் தெரிந்த வரையில் இறந்தவரின் வாரிசுகளின் பெயர் களுடன் தாசில்தாருக்காயினும் சம்பந்தப்பட்ட துணைத் தாசில்தாருக்காயி னும் அறிக்கை செய்யவேண்டும். [3]மாறுதல்கள் எவ்வாறு ஏற்படினும் [7]அவற்றையெல்லாம் தாமாகவோ அல்லது [5]வருவாய் ஆய்வாளர் பதவிக்கும் கீழ் நிலையில் அல்லாதோர் பதவி வகிக்கும் அலுவலர் விசாரணை செய்து அனுப்பிய அறிக்கையை அனுசரித்தோ கலெக்டர் கோட்ட ஆட்சியாளர், தாசில்தார், துணைத்தாசில்தார் இவர்களில் ஒருவர் பதவி மாற்றுதல் செய்ய பதிவு முடிவான ஆணை பிறப்பிக்கலாம். தாசில்தார் அல்லது துணைத் தாசில் தார் பிறப்பிக்கும் பதிவு மாற்றுதல் ஆணையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய இயலாது. இருப்பினும், கோட்ட ஆட்சியாளரும் கலெக்டரும் தங்கள் பொது அதிகாரங்களைச் செலுத்தும் வகையில் தங்கள் சார்நிலைப் பணியாளர் களின் ஆணையை எதிர்த்துச் செய்யும் ரிவிஷன் மனுக்களை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளலாம். அரசினரை சிவில் வழக்குகளுக்கு உட்படுத்தக்கூடும். எனக் கருதத்தக்க சூழ்நிலைகளிலெல்லாம் அவர்கள் அவ்வாறு கட்டாயமாகச் செய்யவேண்டும்[1]. [5]வருவாய் ஆய்வாளர்கள் தங்களிடம் தாக்கல் செய்யப்படும் மனுக்களில், ஆட்சேபனையுள்ளவற்றையும் புதிய உட்பிரிவுகள் செய்யவேண்டிய வற்றையும் தவிர, பதிவு மாற்றுதல் சம்பந்தமான நிலம் இருக்கும் கிராமத்தில் நேராகவே விசாரணை செய்து பாக்கியாயிருப்பதாகத் தாம் கேட்டறிந்து கொண்ட மேலே எல்லாவற்றையும் 5 (ii) ஆவது பத்தியில் வகுக்கப்பட்டுள்ள வாறு முடிவு செய்யலாம்.[5] வருவாய் ஆய்வாளர் ஆட்சேபனையுள்ளவற்றையும் உட்பிரிவுகள் செய்யவேண்டியவற்றையும் தாசில்தார் துணைத் தாசில்தாரின் ஆணைக்கு மேலனுப்பவேண்டும். அவ்வாறே உரிமை அளிக்கப்பட்ட சிறிய இனங்களில் ஜோடி அல்லது விடுவரியைப் பகிர்க்க வேண்டியிருப்பின், அக் கையவற்றையும் வருவாய் ஆய்வாளர் முடிவு செய்யக் கூடாது.

[1]6–9–1890 தேதி, 571, வ.து.வா.செ.
[2]6–11–1890 தேதி, 678, வ.து.வா.செ.
[1]15–3–1886 தேதி, 630, வ.து.வா.செ.
[3]11–11–1899 தேதி, 276, வ.து.வா.செ.
[4]2–7–1900 தேதி, 120, வ.து.வா.செ.

தி. ஆ. 31:9—10]

[5]19–6–1914 தேதி, 1778, அ.ஆ.
[5]3–11–1964 தேதி, 3150, அ.ஆ.
14–4–1917 தேதி, 55, வ.து.வா.செ.
[8]8–6–1918 தேதி, 119, வ.து.வா.செ.
[1]2–10–1920 தேதி, 2514, அ.ஆ.வரு.
[1]11–11–1920 தேதி, 181, வ.து.வா.செ.
[6]6–2–1928 தேதி, 262, அ.ஆ.வரு.பலவர.
[6]9–2–1928 தேதி, 12, வ.து.வா.செ.

9. பத்திரப் பதிவு செய்யும் அலுவலர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.—நிலச் சொத்தின் முழு பாத்தியதையும் எந்தப் பத்திரத்தில் அல்லது சுவாதீனம் எந்தப் பத்திரத்தில் மாற்றப்படுகிறதோ அத்தகைய யாதொரு பத்திரம், பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் பொழுதே பத்திரப் பதிவாளர் அப்பத்திரத்தைத் தாக்கல் செய்பவரிடமிருந்து அப் பத்திரம் ஒவ்வொன்றிலும் விற்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட நிலத்தின் பதிவு, வருவாய் பதிவேட்டில் மாறுதல் செய்யப்படுவதற்காக XXXV–I ஆவது இணைப்பிலுள்ள படிவத்தில் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாற்றுகிறவரும் மாற்றப் பெற்றவரும் இருவரும் பதிவு செய்யும் அலுவலர் முன்னிலையில் வந்திருப்பார்கள் எனில் அவ்விண்ணப்பத்தில் அவ்விருவரின் கையெழுத்தும் பெற வேண்டும். தம் முன் வராத பத்திரத்திற்குச் சம்பந்தப்பட்ட தரத்தின் அத்தகைய பதிவு மாற்றுதலுக்கான விண்ணப்பம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும். மாற்றியவரும் மாற்றப் பெறுபவரும் இருவருமே அவ்விண்ணப்பத்தை எழுதிக் கொடுக்க இசையாவிடில், பதிவு செய்யும் அலுவலரே பதிவு மாறுதலுக்கான XXXIV இணைப்பின் படிவத்தில் ஒரு அறிவிப்பு தயார் செய்து தாம் கொடுக்க முடியுமான தகவலை அதன் கட்டங்களில் எழுதிப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்யும் அலுவலர்கள் தங்களிடம் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் தாங்கள் தயாரித்த அறிவிப்புகளையும் அச்சொத்து இருக்கும் தாலுகா தாசில்தாருக்காயினும் உள் தாலுகாத் துணைத் தாசில் தாருக்காயினும் அனுப்பவேண்டும். அவர்கள் அவை வருவாய் அலுவலர் களுக்கு நேரிடையாக வந்தவையாக கருதி அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பார்.

15–11–1937 தேதி, 125, வ.து.வா.செ.அச்சு.
[2]3–11–1914 தேதி, 3150, அ.ஆ.
11–11–1914 தேதி, 445, வ.து.வா.செ.

10 அரசுக்குடி அல்லாத கைப்பற்று நிலங்களையும் எஸ்டேட்டுகளையும் பதிவு மாற்றுதல்.—(i) மேற்பத்திகளின் விதிகளை அனுசரித்து நடவடிக்கை எடுத்தல்.—நிலத்தீர்வை நிர்ணயமான ஜமீன்கள் உரிமையளிக்கபெற்ற முழு இனம்கள் அல்லது சிறிய இனம்கள், திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள ஈவு திட்டப் படிகள், வரி விதிக்கப்பட்ட மானியங்கள் இவற்றின் பதிவு மாற்றுதல்களுக்கும் மேலே கண்ட விதிகள் பொருந்துவதாகும். ஆனால் நிலையாக தீர்வை நிர்ணயமான ஜமீன் மாற்றுதல்களைக்

கலெக்டரே தமது அலுவலகத்தில் 1802 ஆம் ஆண்டு XXVI ஒழுங்கு முறை விதியை அனுசரித்து எழுதி வைக்கப்பட்டு வரும் பதிவேடுகளில் பதிவு செய்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தகைய ஜமீன்களின் பாகங்களின் மாறுதல்களையும், பிரிக்கப்பட்டுள்ள பாகங்களுக்கான அரசாங்கத் தீர்வையை கலெக்டரே நிர்மாணித்து விதித்த பின்னர் தாமே செய்யலாம். அவ்வாறு செய்யும் பொழுது 1876 ஆம் ஆண்டு சென்னை ஆவது சட்டத்தின் விதித் துள்ள முறையை அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலையாகத் தீர்வை நிர்ணயமான ஜமீன்களில் வரையறுக்கப்பட்ட உரிமையை மட்டும் பெற்றுள்ளவர் 1911 ஆம் ஆண்டு ஆவது சட்டத்தை அனுசரித்துப் பெறத் தக்கதைத் தவிர்த்து பதிவு மாற்றுதலுக்கு உரியவரல்லர்

(ii) எல்லாக் கூட்டு உரிமையாளர்களின் இசைவும் தேவையில்லை.— 1876 ஆம் ஆண்டு I-ஆவது சட்டத்தின்கீழ்ப் பராதினம் செய்யப்பட்டவற்றில் தனியாகப் பதிவு செய்வதற்கு ஜமீனில் கூட்டாகப் பதிவு செய்யப்பட்டுள்ள வெல்லோரின் இசைவும் எப்பொழுதுமே தேவை என்பதில்லை.

(iii) எத்தகைய அடிப்படையில் ஜமீன் உரிமை வரியைப் பங்கிடு செய்யலாம்.—[1] தாமாகவே பராதீனம் செய்யப்படுவனவற்றில் 1876 ஆம் ஆண்டு V ஆவது சட்டம், 1864 ஆம் ஆண்டு II ஆவது சட்டம் 45 ஆவது பிரிவில் குறிப் பிட்ட கணக்குகள் கொடுக்க வேண்டிய ஆண்டிற்கு முந்திய 3 ஆண்டுகளில் களில் கணக்குகளிலும்,

(ஆ) நிலத் தீர்வை பாக்கிக்காகச் செய்யப்படும் விற்பனைகளில் 1802-ஆம் ஆண்டு XXV ஆவது ஒழுங்குமுறை விதி 9 ஆவது பிரிவிலும் 1864 ஆம் ஆண்டு II ஆவது சட்டத்தின் 45 ஆவது பிரிவிலும் வகுக்கப்பட் டுள்ளவாறு பங்கிடு செய்யப்படும் ஆண்டுக்கு முந்திய மூன்று ஆண்டு கணக்கு களிலும்,

(இ) மன்றத் தீர்ப்புச் சுருக்கத்தை அனுசரித்து செய்யும் அல்லது பாகப் பிரிவினையில் செய்யப்பெறும் விற்பனை அல்லது பாகப் பிரிவினையிலும் தக்கவாறு 1802 ஆம் ஆண்டு XXV ஆவது ஒழுங்குமுறை விதியில் குறிப்பிட்ட வாறு முந்திய மூன்று ஆண்டுக் கணக்குகளின் ஆதாரத்திலும், [10] உட்பிரிவு செய்யப்பட்டுள்ள ஜமீன் பாகங்களுக்கு ஜமீன் உரிமையைப் பங்கிடு செய்ய லாம்.

(iv) நிபந்தனைகளிலிருந்து உரிமை பெற்ற முழு இனம் கிராமங்கள்.— நிபந்தனைகளிலிருந்து உரிமை பெற்ற முழு இனம் கிராமங்களின் பதிவை மாற்றுதல் செய்ய அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அத்தகைய பதிவு மாற்று தல்களைப்பற்றி மாவட்டத்தின் கலெக்டருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். அவரது அலுவலகத்தில் ஒரு தனிப் பதிவேடு இவ்வகையில் எழுதி வைக்கப் பட்டு வர வேண்டும்.

(v) நிபந்தனைகளிலிருந்து உரிமை பெற்ற சிறிய இனங்கள்.—தனிப் பொறுப்பில் இல்லாத துணைத் தாசில்தார் தமது அதிகார எல்லைக்குள் ஜோடி அல்லது விடு வரியைப் பங்கிடு செய்ய அவசியமில்லாதனவாகிய உரிமை அளிக்

நி. ஆ. 31:10—12]

கப்பட்டுள்ள சிறிய இனம்களைப் பற்றிப் பதிவு மாறுதல் செய்யலாம். இதற்கு மாறுக இருப்பனவற்றில் அவர் தமது விசாரணை முடிவைத் தாசில்தாரின் ஆணைக்கு அனுப்ப வேண்டும்.

[6]1896-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி, 630, வ. து. வா. செ.
1192-ஆம்ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் தேதி, 358, வ. து. வா. செ.
1907-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7-ஆம் தேதி, 160, வ.து. வா. செ.
[8]1898-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ஆம் தேதி, 970.
க1914-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி, 3150, அ. ஆ.
கா 1914-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி, 445, வ.து.வா.செ.
சி1922-ஆம் ஆண்டு அகஸ்டு மாதம் 22-ஆம் தேதி, 1556, வ.து.வா.செ.பலவ.
கு1913-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி, 247, வ.து.வா.செ.
[9]1886-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ஆம் தேதி, 2553, வ. து. வா. செ.
[10]1906-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் தேதி, 337, வா .து.வா.செ.
கி1922-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ஆம் தேதி, 1491, அ.ஆ.பலவ.
கு1898-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ஆம் தேதி, 209, வ.து.வா.செ.
[10]1906-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9-ஆம் தேதி, 87, வ.து.வா.செ.
1906-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5-ஆம் தேதி, 47.
1908-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி, 3375, அ.ஆ.
1914-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ஆம் தேதி, 1778.
1923-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி, 121, வ.து.வா.செ.பலவ.
1937-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் தேதி, 2103, அ.ஆ.வரு.
1937-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி, 117, வ.து.வா.செ.அச்சு.

11. பதிவு மாற்றுதல் விண்ணப்பங்களை திரும்பப் பெறுதல்.—மாற்றுதல் பதிவு செய்யும் அலுவலர்களிடமும், வருவாய் அலுவலர்களிடமும் பதிவு மாற்றுதல்களுக்காகக் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் மாறுதல் செய்யப்படுவதற்குமுன் தமது விண்ணப்பத்தைத் திரும்ப பெற்றுக் கொண்டதாக அறிவிப்பு செய்வாரெனில் பதிவு மாற்றுதல் செய்தல் கூடாது. ஆயினும், பதிவு மாற்றுதலுக்கு ஆதாரமாகப் பதிவு செய்யப்பட்டதாகத் தக்க பத்திரமிருக்குமாலல் மாற்றுதலுக்கு மாற்று பெறுபவர் மாத்திரம் விண்ணப்பம் செய்து கொண்டதாகக் கருதி, மேலே 3 (அ) பத்தியின் கடைசி பாகத்தில் வகுத்துள்ள முறையை அனுசரிக்க வேண்டும்.

1894-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24-ஆம் தேதி, 314, வ.து.வா.செ.
1894-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ஆம் தேதி, 435, வ.து.வா.செ.

12. முத்திரை வரி.—வருவாய்க் கணக்குகளில் அரசுக் குடி பற்றிய நிலங்களின் பதிவு மாற்றுதலுக்குச் செய்துகொள்ளும் விண்ணப்பங்களுக்கு முத்திரை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதர வகை நிலங்களின் மாற்றுதலுக்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் அலுவலர்களிடத்தில் தாக்கல் செய்யப்படினும் வருவாய் அலுவலர்களிடம் தாக்கல் செய்யப்படினும் அவற்றிற்குச் சென்னை நீதி மன்றக் கட்டணச் சட்டம் வழக்கு மதிப்பீட்டுச் சட்டத்தின் கீழ் ஒரு ரூபாய் மதிப்புள்ள முத்திரை வில்லை ஒட்ட வேண்டும்.

[நி. ஆ. 31:13, 32

பத்திரப் பதிவாளர்கள் தங்களிடம் விண்ணப்பம் தாக்கல் செய்பவர்களிடம் உரிய முத்திரைவில்லை ஒட்டப்படாத விண்ணப்பங்கள் வருவாய் அலுவலர்களால் கவனிக்கப்படமாட்டா என்று தெரிவிக்க வேண்டும்.

1914-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ஆம் தேதி, 1778, அ.ஆ.
[1]1896-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ஆம் தேதி, 2140, அ.ஆ.வரு.
1956-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27-ஆம் தேதி, 2962, அ.ஆ.வரு.கை.ப.
1914-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி, 3150, அ. ஆ.வரு.
[1]1926-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ஆம் தேதி, 2987, வ.து.வா.செ.பலவ.
1956-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ஆம் தேதி, 1168, வ.து.வா.செ.பலவ.

13. கூட்டுப்பட்டாக்களின் பெயர்களில் மாறுதல் செய்தல்—(i) மரணம் ஏற்படும் காரணத்தால்.—மரணம் ஏற்பட்ட காரணத்தால் பட்டாக்களில் பெயரை மாற்ற வேண்டுமானால் மரணம் ஏற்பட்ட காரணத்தால் தனிப்பட்டாவில் மேலே 6 ஆவது பத்தியில் கூறியுள்ள மாற்றுதலுக்குரிய முறையைப் போலவே கூட்டுப்பட்டாவிலும் இத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) மாற்றப்பெறுபவர் பெயரைக் கூட்டாக பதிவு செய்தல்.— [1]அரசுக் குடி கூட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடைவர் [1] தமது உரிமையை மாற்றி விட்டாரெனில் மாற்றப்பெறுபவர் பெயரைச் சேர்க்க வேண்டும். மாற்றுபவர் தமது உரிமையில் ஒரு பாகத்தை மட்டும் மாற்றி யிருந்தாலன்றி அவர் பெயரை நீக்கிவிட வேண்டும். மற்றக் கூட்டுப் பங்குதாரர்களின் இசைவு தேவையில்லை.

1932-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் தேதி, 2203, அ.ஆ.வரு.பலவ.
1914-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ஆம் தேதி, 1778 அ.ஆ.வரு.பலவ.
1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் தேதி, 1738, அ.ஆ. வரு.
1932-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் தேதி, 73 வ.து.வா.செ.
1914-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி, 3150, அ.ஆ.வரு.
[1]1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ஆம் தேதி, 87, வ.து.வா.செ.

(iii) கூட்டுடைமை நிலங்களை உட்பிரிவு செய்து தனியாக பதிவு செய்தல்.—அரசுக்குடி முறைக் கூட்டு நிலமுடையவரின் பங்கு முழுமையோ அல்லது அதில் ஒரு பாகமோ மாற்றப்பட்டு தனிப் பதிவு வேண்டப்பட்டால் நிலத்தில் அவர் பங்குகளின் எல்லைகளுக்குச் சரியான முறையில் வரம்பு கட்டப் பட்டு இருக்குமானால் கூட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ள மற்ற நிலமுடையவர்களின் இசைவு இல்லாமல் கூட்டுடமை நிலங்களை உட்பிரிவு செய்து தனியாகப் பதிவு செய்யலாம்.

1932-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் தேதி, 2203, அ.ஆ.வரு.பலவ.
1914-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ஆம் தேதி, 1778, அ.ஆ.வரு.பலவ.
[1]1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் தேதி, 1738, அ.ஆ.வரு.பலவ.
1932-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் தேதி, 73, வ.து.வா.செ.
1914-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி, 3150, அ.ஆ.
[1]1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ஆம் தேதி, 87, வா.து.வா.செ.

32. ஜமீன் எஸ்டேட் கிராமங்களுக்கு வழியுரிமை கொண்டாடுதல்.—நீக்கப்பட்டது.

நி. ஆ. 33:1—4]

33. அரசுக்குடி நிலங்களின் உரிமைகளை விட்டுவிடுதல்—1. இதற்குரிய விண்ணப்பம் எழுத்து வடிவிலிருக்க வேண்டும்.—அரசுக்குடி நிலங்களின் உரிமையை விட்டு விட வேண்டுமானால் எழுதிக் கேட்டுக்கொள்வதுடன் மற்றொரு குடியானவர் அந்த நிலத்தை விவசாயம் செய்வதற்கு ஏற்றவாறு இருக்க விவசாய ஆரம்ப காலத்திலே உரிமையை விட்டு விடுவதாக இருக்க வேண்டும்.

1958 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ஆம் தேதி, வ.து.வா.செ. (க. தொகுதி III பக். 165—1858).

2. நிலத்தின் உரிமையை விட்டுவிடத் தக்க காலம்.—முதல் பருவ மழைக் காலம் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டிருப்பதால் நிலத்தின் உரிமை விட்டு விடும் காலமும் வெவ்வேறு மாவட்டங்களுக்கும் வெவ்வேறு விதமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலங்களின் உரிமை விட்டு விடுவதற்குரிய தேதிகள் எவை என அரசினரால் நிர்ணயம் செய்யப்பட்டவை XXVI ஆவது இணைப்பில் உள்ளன.

1858 ஆம் ஆண்டு அக்டோக்பர் மாதம் 6-ஆம் தேதி, வ.து.வா.செ. (மா. தொகுதி III பக். 165—1858).

1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ஆம் தேதி, 3179, அ. ஆ.வரு.கை.ப.

1956 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் தேதி, 1231, வ.து.வா.செ. பலவ.

3. நில உரிமை விட்டுவிடப்படும் நிலத்திற்கு போக்குவரத்து வசதி.—குடியானவர்களால் உரிமை விட்டுவிடப்பட்ட நிலத்திற்குப் போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். அதாவது ஒருவர் சுற்றிலுமுள்ள நிலங்களைத் தான் வைத்துக் கொண்டு நடுவிலிருக்கும் பாகத்தின் உரிமையை மட்டும் விட்டுவிடுவாரெனில் மற்ற ஒரு குடியானவர் அந்தப் பாகத்தை எடுத்துக்கொள்ளுவதற்கு வசதி ஏற்படாது. ஆதலால் அதை அனுமதிக்கலாகாது. மேலும் வெள்ளத்தாலோ அல்லது குடியானவர்களின் கட்டுக்கு மீறின வேறு காரணங்களோ சேதப்பட்டிருந்தாலன்றி புன்செயில் இரண்டு ஏக்கர்களுக்கும் நன்செய்யில் ஒரு ஏக்கருக்கும், குறைந்த பாகத்தில் உரிமையை விட்டுவிடுவதற்கு அனுமதிக்கலாகாது.

[1]1885 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் தேதி, 3001, வ.து.வா.செ.
1886 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் தேதி, 19, வ.து.வா.செ.
1886 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் தேதி, 2781, வ.து.வா.செ.
1909 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் தேதி, 1936, அ.ஆ.
[1]1909 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதி, 319, வ.து.வா.செ.நிர்.

4. உரிமையை விட்டுவிடும் முறை.—விண்ணப்பத்திலுள் நிலத்தின் உரிமையை விட்டு விடத்தக்கது. விண்ணப்பம் செய்து உரிமை விட்டு விடும் நிலங்களையும் அவற்றின் தீர்வைகளையும் குறித்து அந்நிலங்களின் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவரே யாதொரு நிபந்தனையுமின்றி உரிமையை விட்டு விடுவதாகத் தெரிவிக்க வேண்டும். விண்ணப்பத்தில் எழுதப்பட்டிருப்பவை சரியானவை என்பதற்கும் விண்ணப்பம் எந்நிலையில் செய்து கொள்ளப்பட்டது என்பதற்கும் சான்றுகள் கிராமத் தலைமை அலுவலர், கிராமக் கணக்கர் இவர்களும் மனுவில் மேலொப்பம் செய்ய வேண்டும். அத்தகைய

[நி. ஆ. 33:4—6

விண்ணப்பம் ஒன்றைக் கிராமத் தலைமை அலுவலரிடமாயினும் கிராமக் கணக்கரிடமாயினும் ஒப்புவிப்பதே போதுமானது. நிபந்தனைகளுக்குட்பட்டு நிலங்களின் உரிமையை விட்டுவிடுவதை அனுமதிக்கலாகாது.

1858 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ஆம் தேதி, வ.து.வா.செ. (மா. தொகுதி III பக். 166—1858.)

[1]1927 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் தேதி, 2358, அ.ஆ.வரு.பலவ.

[2]1886 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19-ஆம் தேதி, 1627, வ.து.வா.செ.

[1]1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ஆம் தேதி, 91, வ.து.வா.செ.

5. உரிமை விட்டுவிடப்பட்ட நிலத்திற்காகச் செலுத்தப்படாமல் இருக்கும் பாக்கிகள்.—நிலத்திற்கு செலுத்த வேண்டிய தீர்வை பாக்கியாக இருக்கிறதென்ற காரணத்திற்காக உரிமையை விட்டு விடுவதை மறுக்கக்கூடாது. நிலங்களுக்கு விற்கப்படத்தக்க மதிப்பிருக்குமானால் அவற்றின் உரிமையை ஒருபொழுதும் விட்டு விடமாட்டார்கள். ஆதலால் பாக்கியை வசூல் செய்வதற்காக வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் நிலங்கள் விற்கப்படவேண்டி வரும் என்று நிலங்களின் உரிமையை விட்டு விடப்படுவதை மறுக்க வேண்டியதில்லை. நிலத்தின் உரிமைவிட்டு விடப்படுவது தீர்வை பாக்கியைத் தள்ளுபடி செய்விக்காது. ஆனால் பாக்கி செலுத்தத் தவறியவருக்கு உரிமையை விட்டு விடும் நிலங்களைத் தவிர வேறு சொத்தில்லாவிடில் பாக்கியை அவசியமாகத் தள்ளுபடி செய்யவேண்டும். உரிமை விட்டுவிடப்பட்ட நிலத்தைப் பிற்காலத்தில் விற்பது தேவை அல்லது நலமென்று தோன்றினால் அவ்வாறு செய்வதற்கும் நிலத்தின் உரிமை விட்டுவிடப்பட்டதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அது போலவே உரிமை விட்டு விடும்பொழுது அந்த நிலத்திற்குச் செலுத்த வேண்டிய பாக்கியை வசூலிக்க வேண்டுமா அல்லது தள்ளிவிட வேண்டுமா என்பதைக் கவனிக்க வேண்டியதில்லை. உரிமை விட்டு விடப்பட்ட நிலத்தைப் பின்னர் விற்பனை செய்யும்பொழுது விற்பனை அறிவிப்பில் அந்நிலத்தின் தீர்வை மாவட்ட நிலத் தீர்வைப் பொது விதிப்பு மாற்றத்தில் நிர்ணயம் செய்யப்படும்போது செய்யப்படக்கூடிய மாறுதலுக்கு உட்படக்கூடுமென்று தெளிவாய்க் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

1936 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18-ஆம் தேதி, 1316. அ.ஆ.வரு.பலவ.

1936 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29-ஆம் தேதி, 81 வ.து.வா.செ.அச்சு.

1884 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-ஆம் தேதி, 2684, வ.து.வா.செ.

1905 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ஆம் தேதி, 557, அ.ஆ.

1908 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12-ஆம் தேதி, 147 வ.து.வா.செ.

6. கூட்டுப் பட்டாவிலிருக்கும் நிலத்தின் உரிமையை விட்டுவிடுதல்.—கூட்டுப் பட்டாவிலிருக்கும் நிலத்தின் உரிமையைக் கூட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் ஒருவர் விட்டுவிடுவாரெனில் மற்றக் கூட்டு பதிவு செய்யப்பட்டுள்ள நிலம் உடையவர் எல்லாரும் இசைவு தந்தால் அன்றி அதை ஒப்புக்கொள்ளலாகாது.

[1]1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் தேதி, 1738. அ.ஆ.வரு.

1928 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ஆம் தேதி, 87, வ.து.வா.செ.

885 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ஆம் தேதி, 165, வ.து.வா.செ.

நி. ஆ. 33:7]

7. (i)தாசில்தார், துணைத் தாசில்தார் இவர்களின் அதிகாரங்கள்.—மேலே கூறுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டுத் தாசில்தார்களும் துணைத் தாசில்தார்களும் தங்கள் தங்கள் அதிகார வரம்புகளுக்குள்ளிருக்கும் நிலங்களின் உரிமை விட்டு விடுவதை ஒப்புக் கொள்ளலாம்.

1886 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் தேதி, 60, வ.து.வா.செ.

(ii) வட்டார வளர்ச்சி அலுவலர்களின் அதிகாரங்கள்.—சமுதாய வளர்ச்சி திட்டத்தின்கீழும் தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழும் நியமிக்கப் பெற்றுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அவரவர்கள் திட்டங்களை நிறை வேற்றுவதற்கு வேண்டிய நிலங்களின் உரிமை விட்டு விடப்பட்டால் அதை அல்லது அவற்றைக் கொடையாகவோ ஒப்புக் கொள்ளலாம். அவ்வாறு செய் வதில் அவர்கள் ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு ஆணையின் நகலையும் சம்பந்தப் பட்ட கிராமக் கணக்கர் தாலுகாக் கணக்குகளில் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு ஒப்புக் கொள்ளப்பட்டதில் பிறப்பிக்கப்பட்ட அசல் ஆணையின் பதிவுக் கட்டு களையும் ஒவ்வொரு பசலி ஆண்டின் முடிவிலும் சம்பந்தப்பட்ட தாலுகா அலு வலர்களுக்கு அனுப்ப வேண்டும்.

1954 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ஆம் தேதி, 2495, பொது (கி.வ.து) அ.ஆ.பல.

1955 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ஆம் தேதி, 180, வ.து.வா.செ.(வாலாயம்)

1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ஆம் தேதி, 3179. அ.ஆ.வரு.கை.ப.

(1959 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் தேதி, 1231, வ.து.வா.செ.பலவ.

குறிப்பு.—இன்ன காலத்தில் இன்ன பரப்பு நிலங்களின் உரிமையை விட்டு விட வேண்டுமென்பதாக 2, 3 பத்திகளில் கண்டுள்ள விதிகள், பொதுக் காரியங் களுக்கு வேண்டிய நடைபாதை, பாதைக்குரிய விளிம்பு, ஏரிக்கரை விரிவாக்கு தல் முதலியவற்றிற்குத் தேவையான நிலங்களின் உரிமையாளர்கள் தாங்க ளாகவே அந்நிலங்களின் உரிமையை விட்டு விடுவதற்குப் பொருந்தா. அத் தகைய நிலங்களின் பரப்பு 25 சென்டுக்கு அதிகமாகுமானால் அல்லது அந் நிலத்தில் நிலையான கட்டடம் கட்டப்படுவதானால் நில உரிமை பெறும் சட்டத்தை அனுசரித்து அந்நிலத்தின் உரிமை பெற வேண்டும். நிலத்தின் உரிமை விட்டு விடுவது ஒப்புக் கொள்ளும்பொழுது அவ்வாறு விட்டுவிடுகிற வருக்கு நிலத்திற்கு முழு உரிமை இருக்கிறதா என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உரிமையைப் பற்றிச் சந்தேகமிருக்குமானால், கட்டணம் செலுத்தி உதவிப் பத்திரப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து தல அதிகாரிகள் வில்லங்கச் சான்றுகள் பெற வேண்டும்.

இந்த நிலை ஆணை 3-ஆவது பத்தியில் உள்ள பரப்பை பற்றிய கட்டுப்பாடு கள் 26-அவது நிலை ஆணையில் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளுக்குப் பொருந்தா.

1939 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி, 132, அ.ஆ.வரு.கை.ப.

1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி, 18, வா.து.வா.செ. அச்சு.

34. வயதடையாதவர்களின் காப்புப் பொறுப்பாளர் எடுக்கத்தக்க நடவடிக்கைகள்.—சொத்து சம்பந்தமாய் 1890-ஆம் ஆண்டு காப்புப் பொறுப்பாளர் காப்புக்குரியவர் சட்டம், மூன்று வகைக் காப்புப் பொறுப்பாளர்களை ஏற்றுக் கொள்கிறது—

(1) **உயில்** அல்லது இதர பத்திரங்கள் ஆதாரமாக நியமிக்கப்படும் காப்புப் பொறுப்பாளர்கள்.

(2) சிவில் மன்றங்களால் நியமிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட காப்புப் பொறுப்பாளர்கள்.

(3) இதர காப்புப் பொறுப்பாளர்கள்.

முதல் இரண்டு வகுப்புக் காப்புப் பொறுப்பாளர்களும் சட்டத்தின் 28, 29 பிரிவுகளைப் போன்ற தீர்மானமாக உள்ள சில ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்களாவர். இவ்விரு வகுப்புக் காப்புப் பொறுப்பாளர்களும் தம் வசம் ஒப்விக்கப்பட்டிருக்கும் வயது அடையாதவர் பெயரில் பதிவு செய்யப்பட்ட நிலங்களின் பதிவை மாற்றவோ அல்லது கைவிடவோ கோரிக்கை செய்து கொண்டால், 28 ஆவது அல்லது 29 ஆவது பிரிவை அனுசரித்து மன நிறைவு கொள்ளத் தக்க வகையில் தக்கவாறு அக்கோரிக்கை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை வருவாய்த் துறை அலுவலர்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். மூன்றும் வகைப் பாதுகாப்புப் பொறுப்பாளர் வயது அடையாதவருக்காக இத்தகைய நிலத்தின் பதிவை மாற்றுதல் செய்வதற்காவது நிலத்தை கைவிடுவதற்காவது கோரிக்கை செய்து கொள்ளப்பட்டால். அந்நடவடிக்கை சட்டத்தின் 27 ஆவது பிரிவை அனுசரித்து இருக்கிறதா என்பதையும் காப்புப் பொறுப்பாளர், இந்து சட்டம் அல்லது பொருத்தமான இதர (1890 ஆம் ஆண்டு VIII-ஆவது) சட்டத்தின் 6 ஆவது பிரிவை அனுசரித்து நியமிக்கப்பட்ட அல்லது ஒப்புக் கொள்ளப்பட்ட காப்புப் பொறுப்பாளரா என்பதையும் வருவாய் அலுவலர்கள் தெரிந்து கொண்டால் போதுமானது. ஆனால் மூன்றாவது வகுப்புப் பொறுப்பாளர் விஷயங்களில் வெகு முக்கியமான உரிமைகள் சம்பந்தப்பட்டிருக்குமானால்; மேற்கொண்டு தேவையான முன்னெச்சரிக்கையின் அவசியத்தை முன்னிட்டுக் காப்புப் பொறுப்பாளராக இருக்க யாராயினும் இசைவார் எனில் கலெக்டர் தாமாகவே 10 (2)-ஆவது பிரிவின்கீழ் காப்புப் பொறுப்பாளரை மன்றம் நியமிக்கவோ அல்லது உறுதி கூறவோ கேட்டுக் கொள்ளலாம் அல்லது காப்புப் பொறுப்பாளரை அத்தகைய நியமனம் செய்யவோ அல்லது உறுதி கூறவோ 10 (1)-ஆவது பிரிவின் கீழ் மன்றத்திடம் கேட்டுக் கொள்ளுமாறு சொல்லி விடலாம். இருப்பினும் வயது அடையாதவர் மிட்டாக்ஷரா சட்டத்தின்கீழ்த் தமக்கென்று தனிச் சொத்திலாவது பிரிவினை ஆகாத பொது இந்துக் குடும்பத்தின் உறுப்பினராக இருப்பாரெனில், மேலே குறிப்பிட்டுள்ள விண்ணப்பம் செய்வதற்கு அல்லது ஆணை பிறப்பிப்பதற்கில்லை. அவற்றில் 1890-ம் ஆண்டு VIII ஆவது சட்டத்தை அனுசரித்து வயது அடையாதவரின் சொத்து பாதுகாப்பிற்காகக் காப்புப் பொறுப்பாளரை நியமிக்க நீதி மன்றத்திற்கு அதிகாரமில்லை யென்று ஏற்பட்டிருக்கின்றது.

[இந்திய முன் தீர்ப்புச் சட்ட வெளியீடு, 19 கல்கத்தா, பக்கம் 301;
இந்திய முன் ஓர்ப்புச் சட்ட வெளியீடு, 19 பம்பாய், பக்கம் 309;
இந்திய தீர்ப்புச் சட்ட வெளியீடு 17, அலகாபாத். பக்கம் 529.]

நி. ஆ. 34]

குறிப்பு.—வயது அடையராதவர்களுக்குச் சொந்தமான அரசுக்குடி முறை நிலமில்லாத மற்ற நிலங்களின் பதிவு மாற்றுதல்கள் அல்லது உரிமைகள் விட்டு விடுதல் வயது அடையாதவர்களுக்காகக் காப்புப் பொறுப்பாளர்கள், வருவாய் அலுவலர்களிடம் செய்து கொள்ளும் விண்ணப்பங்களில், மேற்கண்ட விதிகளைத் தக்க மாறுதல்களுடன் அனுசரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(1899 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதி 101, எண் வ.து.வா.செ.)

Verified RealEstate

இணைப்பு 1 [நி. ஆ. 4.—பத்தி 2].

தமிழ் நாட்டில் நடைமுறையிலிருக்கும் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு வகுக்கப்படடுள்ள விதிகள் (1865-ம் ஆண்டு சென்னை VII-ஆவது சட்டம்).

இணைப்பு I.

(4 ஆவது நிலை ஆணை 2 வது பத்தி)

அ.—புன்செய் நிலங்களுக்குத் தரப்படுத்தப்பட்ட தண்ணீர்த் தீர்வை வீதம்

பயிரின் விவரம்.	ஏக்கர் ஒன்றுக்கு செலுத்த வேண்டியது,	
	முதல் வகுப்பு ஆதாரம்.	இரண்டாவது ஆதாரம்.
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
(அ) நிலத்தில் சாதாரணமாக ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நிலையிலிருக்கும் பயிர்கள்.	6 00	4 50
(ஆ) மற்றப் பயிர்கள்—		

முதல் போகப் பயிர்	இரண்டாம் போகப் பயிர்.	முதல் வகுப்பு ஆதாரம்.			இரண்டாவது வகுப்பு ஆதாரம்.		
		முதல் போகம்.	இரண்டாம் போகம்.	மொத்தத் தீர்வை.	முதல் போகம்.	இரண்டாம் போகம்	மொத்தத் தீர்வை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
		ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
நன்செய் ..	நன்செய் ..	4.00	2.00	6.00	3.00	1.50	4.50

நன்செய் ..	புன்செய் .. (ஒழுங்காக நீர்ப் பாய்ச்சப் பட்டது).	4.00	1.50	5.50	3.00	1.13	4.13	
நன்செய் ..	புன்செய் .. (எப்போதாவது நீர்ப் பாய்ச்சப் பட்டது).	4.00	1.00	5.00	3 00	0.75	3.75	
புன்செய் .. .. (ஒழுங்காக நீர்ப் பாய்ச்சப் பட்டது).	நன்செய் ..	3.00	2.50	5.50	2.25	1.88	3.58	
புன்செய்.. ..	புன்செய் .. (ஒழுங்காக நீர்ப் பாய்ச்சப் பட்டது.)	3.00	1.50	4.50	2.25	1.50	3.75	
புன்செய்.. ..	புன்செய் .. (எப்போதாவது நீர்ப் பாய்ச்சப் பட்டது).	3.00	1·50	4.50	2.25	1.13	3.58	
புன்செய்.. .. (எப்போதாவது நீர்ப் பாய்ச்சப் பட்டது).	நன்செய் ..	2.00	3.00	5.00	1.50	2.25	3·75	
புன்செய்.. ..	புன்செய் .. (ஒழுங்காக நீர்ப் பாய்ச்சப் பட்டது).	2.00	2.50	4.50	1.50	1.88	3.38	
புன்செய்.. ..	புன்செய் .. (எப்போதாவது நீர்ப் பாய்ச்சப்பட்டது).	2.00	2.00	4.00	1.50	1·50	3.00	

Verified RedEstate ™

(இ) மூன்றும் போகம்— பயிரின் விவரம்.	முதல் வகுப்பு ஆதாரம்.	இரண்டாவது வகுப்பு ஆதாரம்.
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
நன்செய்ப் பயிராயின்	2.00	1.50
ஒழுங்காக எப்போதாவது நீர்ப் பாய்ச்சப்பட்ட புன்செய்ப் பயிராயின்.	1.00	0.75

விளக்கம் (1).—நிலையான வீதத் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்காக நீர்ப்பாசன ஆதாரங்கள் இரண்டு வகுப்புக்களாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. நில வரித் திட்ட துறையினரால் முதல் அல்லது இரண்டாவது இனத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் நீர்ப் பாசன ஆதாரங்கள் முதல் வகுப்பு ஆதாரங்கள் எனவும், இரண்டாம் வகுப்பு ஆதாரத்திற்குக் குறைந்தவற்றை இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவை எனவும் கருத வேண்டும்.

விளக்கம் (2).—தென்னை மரங்களுக்கும், தோப்புகளாக உள்ள மற்ற மரங்களுக்கும் ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டால், [2]அவற்றிற்கு (அ) உட்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள பயிர்களுக்கு எத்தீர்வை விதிக்க வேண்டுமோ அத்தீர்வை விதிக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில், அவற்றிற்கு (ஆ) உட்பிரிவில் குறிப்பிடபட்டிருக்கும் ஒரே ஒரு நன்செய் பயிருக்குரிய தீர்வை வீதத்தை விதிக்க வேண்டும்.

விளக்கம் (3).—அரசாங்க நீர்ப் பாசன ஆதாரத்தில் சாதாரணமாக நெற்பயிர் விளைவிப்பதற்கு எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் வேண்டுமோ அவ்வளவு காலத்திற்கு அதிகமாகப் பாசன ஆதாரத்தில் தண்ணீர் இருக்குமானால், அப்பாசன ஆதாரத்தின்கீழ் விளைவிக்கப்பட்ட (அ) உட்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள பயிர்களுக்கு அந்நீர்ப் பாசன ஆதாரத்திலிருந்து உண்மையாகவே தண்ணீர் எவ்வளவு காலத்திற்குப் பாய்ச்சப்பட்டிருந்தாலும், அந்தக் கால அளவை அனுசரிக்காமல், அப்பயிர்களுக்கு எவ்வீதங்களில் தீர்வை விதிக்கலாமோ அவ்வீதங்களில் தீர்வை விதிக்க வேண்டும். அவ்வாறு தண்ணீர் இல்லையெனில் முதல் நன்செய்ப் பயிருக்கு எந்தத் தீர்வை விதிக்கப்பட வேண்டுமென (ஆ) உட்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறதோ, அத்தீர்வை விதிக்க வேண்டும்.

விளக்கம் (4).—இந்த விதிகளின்கீழ் ஒழுங்காக நீர் பாய்ச்சப்பட்ட பயிர்கள் எவை என்றும், எப்போதாவது நீர் பாய்ச்சப்பட்ட பயிர்கள் எவை என்றும் தெரிவிக்கக்கூடிய பட்டியலைக் கலெக்டர்கள் அவ்வப்போது சம்பந்தப்பட்ட மாவட்ட அரசிதழில் ஒரு அறிக்கை வெளியிட வேண்டும்.

நி. ஆ. 4, பத்தி 2]

அவ்வாறு வெளியிடப்பட்டிருப்பினும், புன்செய்ப் பயிரைப் பொறுத்த வரையில் அவற்றின் பாகுபாட்டில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள மாறுதல், அம்மாறுதல் அறிவிக்கை செய்யப்பட்ட பின்னர் அடுத்த பசலி ஆரம்பமாகும் வரையில் நடைமுறைக்கு வராது.

1933 ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி, 806, அ.ஆ.வரு.

1933 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி, 1634, வ.து.வா. செ. பலவ.

1941 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி, 2499, அ.ஆ.வரு.பல.

1942 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி, 2034 என், வ.து.வா.செ.நிர்.

1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ஆம் தேதி, 3200 என், அ.ஆ.வரு.பல.

1956 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதி, 1327 என், வ.து.வா. செ.பல.

I. செங்கல்பட்டு மாவட்டம்.

ஆ.—செங்கல்பட்டு மாவட்டத்தில் அரசாங்கப் பாசன ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்படும் நிலங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள தண்ணீர்த் தீர்வை விதிகள்.—(I) அயன் கிராமங்களில் புன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டால், கீழ்க்கண்ட வீதங்களில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப் படும்:—

(1) ஒரே நன்செய்ப் பயிருக்கு	அந்த நிலத்திற்கு விதிக்கப் பட்ட புன்செய்த் தீர்வை வீதத்திற்கும் நன்செய்த் தீர்வை வீதத்திற்கு முள்ள வித்தியாசம்.
(2) இரண்டாம் அல்லது மூன்றும் போக நன்செய் பயிருக்கு.	முதல் இனத்திற்கு எதிரில் காட்டப்பட்டிருக்கும் தீர்வை யில் பாதியும் புன்செய்த் தீர்வையில் பாதியும்.
(3) முதல், இரண்டாம் அல்லது மூன்றும் புன்செய்ப் பயி ருக்கு.	முதல் இனத்திற்கு எதிரில் காட்டப்பட்டிருக்கும் தீர் வையில் மூன்றில் ஒரு பங்கு.
(4) கரும்பு, வெற்றிலை, வாழை 6 மாதங்களுக்கு அதிக மான காலத்திற்குச் சாரணமாக நிலத்தில் நிலை யிலிருக்கும் மற்ற நன்செய்ப் பயிர்களுக்கு.	முதல் இனத்திற்கும் இரண் டாம் இனத்திற்கும் எதிரில் காட்டப்பட்டிருக்கும் தீர் வைகளின் மொத்தம்.
(5) சாதாரணமாக நிலத்தில் 6 மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நிலையிலிருக்கும் புன்செய்ப் பயிர்களுக்கு.	மூன்றுவது இனத்திற்கு எதிரில் காட்டப்பட்டிருக்கும் தீர்வை யைப்போல் ஒன்றரை மடங்கு

[நி. ஆ. 4, பத்தி 2

குறிப்பு.—(1) மானுவாரி நிலங்களுக்கு அரசாங்க நீர்ப் பாசன ஆதாரங்களிலிருந்து நீர்ப் பாய்ச்சப்பட்டால், நன்செய் நிலத்திற்கும் மானுவாரி நிலத்திற்கும் உள்ள தீர்வை வீதங்களில் உள்ள வித்தியாசத்தைத் தண்ணீர்த் தீர்வையாக விதிக்க வேண்டும்.

(2) நன்செய் தரமும், ஏதாவதொரு புன்செய் நிலத்தின் தீர்வை வீதமும் நில வரித் திட்டப் பதிவேட்டில் காணப்படவில்லையானால், அத்தகைய தரமும் வீதமும் கலெக்டரால் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

II. நில அளவை செய்யப்பட்டுப் பாகுபாடு செய்யப்பட்டுள்ள ஜமீன் முறைக் கிராமங்களிலும் முழு இனம் கிராமங்களிலும் உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படுமானால் 1 ஆவது விதியில் உள்ளவாறே அவ்வீதங்களிலே தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படும்.

III. நில அளவை செய்யப்படாமலும் பாகுபாடு செய்யப்படாமலும் இருக்கும் ஜமீன் முறைக் கிராமங்களிலும் முழு இனம் கிராமங்களிலும் உள்ள நிலங்களுக்கு முதல் வகுப்பு ஆதாரங்களிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டால் கீழ்க்கண்ட வீதங்களில் தீர்வை விதிக்கப்படும் :—

	ஏக்கர் ஒன்றுக்கு ரூ- பை,
(1) கரும்பு, வெற்றிலை, வாழை நிலத்தில் சாதாரணமாக ஆறுமாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நிலைத்திருக்கும் மற்ற நன்செய் பயிர்கள் முதலியவற்றிற்கு	6·00
(2) ஒரே முதல் நன்செய்ப் பயிர் ஒன்றுக்கு ..	4.00
(3) இரண்டாம் அல்லது மூன்றும் நன்செய்ப் பயிருக்கு.	2.00
(4) சாதாரணமான நிலத்தில் ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நிலைத்திருக்கும் புன்செய்ப் பயிர் ஒன்றுக்கு.	2.00
(5) மற்றப் புன்செய்ப் பயிர்களுக்கு	1.32

1958-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ஆம் தேதி, 3365 என், அ.ஆ.வரு.பல.
1959-ஆம் ஆண்டு பிப்ரவரிமாதம் 13-ஆம் தேதி, 221, என் வ.து.வா.செ.பலவ

குறிப்பு.—இரண்டாம் வகுப்பு நீர்ப் பாசன ஆதாரங்களிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டால் மேற்கண்ட வீதங்களில் முக்கால் பங்குத் தீர்வை விதிக்கப்படும்.

IIIஅ.—அரசாங்க ஆதாரத்தில் சாதாரண நெற்பயிர் விளைவுக்குத் தண்ணீர் எவ்வளவு காலத்திற்குத் தேவையோ அந்தக் காலத்திற்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் இல்லையெனில், நிலத்தில் சாதாரணமாக ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு இருக்கும்

நி. ஆ. 4, பத்தி 2]

நன்செய்ப் பயிர் அல்லது புன்செய்ப் பயிர் ஒன்றுக்கு, ஒரு போக நன்செய்ப் பயிர் அல்லது புன்செய்ப் பயிருக்கு தக்கவாறு எந்தத் தீர்வை விதிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அவ்விதத்தில் தீர்வை விதிக்க வேண்டும்.

IV. பாசனத்திற்கு உபயோகமாகக்கூடிய தண்ணீர் இறைக்கப்படாமல் அல்லது யாதொரு இயந்திர சாதனத்தால் உயர்த்தப்பட்டால் அன்றி. தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள முடியாதென்றால் I, II, III, IV அ விதிகளில் குறிக்கப்பட்டுள்ள வீதங்களில் முக்கால் பங்குத் தீர்வை விதிக்க வேண்டும்.

(குறிப்பு.—1958ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7ஆம் தேதி, 1190, எண், அ.ஆ. வரு. 1958ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 26ஆம் தேதி, 1459, எண், வ.து.வா.செ. பலஸ இவற்றை அனுசரித்து விட்டுவிடப்பட்டது.)

V. மேலே குறிப்பிட்டுள்ள I, II, III, விதிகளின்கீழ் இரண்டாவது நன்செய் பயிர் என்பது அதே பசலியில் நீர்ப் பாய்ச்சிப் பயிரடப்பட்ட பயிர் ஒன்றைப் பின் தொடர்ந்து வரும் நன்செய்ப் பயிராகும். மூன்றுவது நன்செய்ப் பயிர் என்பது அதே பசலியில் நீர் பாய்ச்சிப் பயிரிடப்பட்ட இரண்டு பயிர்களைப் பின் தொடர்ந்து வரும் நன்செய்ப் பயிராகும்; இரண்டாவது புன்செய்ப் பயிரென்பது முதல் போக நன்செய்ப் பயிர் அல்லது முதல் போக புன்செய் பயிரைத் தொடர்ந்து விளைவிக்கப்பட்ட புன்செய்ப் பயிராகும். மூன்றுவது புன்செய்ப் பயிர் என்பது நன்செய் ஆக அல்லது புன்செயாக உள்ள வேறு இரண்டு பயிர்களைப் பின் தொடர்ந்து விளைவிக்கப்பட்ட புன்செய்ப் பயிராகும்.

குறிப்பு.—மேலே கண்ட விதிகள் மாவட்டத்தின் எல்லா தாலுக்காக்களிலுங் 1321ஆம் பசலியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

4–9–1911 தேதி, 2683, எண், அ.ஆ.வரு.
12–9–1911 தேதி, 3122, எண் வ.து.வா.செ. பலவ.
28–11–1916 தேதி 3024, எண், அ.ஆ. வரு.
10–1–1917 தேதி, 8, எண், வ.து.வா.செ.
1–11–1941 தேதி, 2499, எண், அ.ஆ.பல.வரு.
11–12–1941 தேதி, 2034, எண், வ.து. வா.செ.பலவ. எண் 2 கோயம்புத்தூர் மாவட்டம்.

2. கோயம்புத்தூர் மாவட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசாங்க ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்படும் நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்குரிய விதிகள்.— I அயன் கிராமங்களில் புன்செய்களுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டால் கீழ்க்கண்ட வீதங்களில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படும் :—

1. நன்செய்ப் பயிர் ஒன்றுக்கு	அந்த நிலத்திற்கு விதிக்கப்பட்ட நன்செய் வீதங்களுக்குள் வித்தியாசம்.	புன்செய் உள்ள

[நி. ஆ. 4, பத்தி 2

2. இரண்டாவது மூன்றுவது பயிருக்கு.	அல்லது நன்செய்ப்	முதல் இனத்திற்கு எதிரில் குறிக்கப்பட்டிருக்கும் தீர்வையில் பாதியுடன் புன்செய்த் தீர்வையில் பாதியும் சேர்ந்ததொகை.
3. முதல் அல்லது புன்செய்ப் பயிருக்கு.	இரண்டாவது மூன்றுவது	முதல் இனத்திற்கு எதிரில் குறிக்கப்பட்டிருக்கும் தீர்வை மூன்றில் ஒரு பங்கு.
4. கரும்பு, வெற்றிலை, வாழை மற்றும் நிலத்தில் ஆறு மாதங்களுக்கு அதிக காலத்திற்கு சாதாரணமாக நிலையிலிருக்கக்கூடிய மற்ற நன்செய் பயிர்களுக்கு.		முதல் இனத்திற்கும் இரண்டாவதுஇனத்திற்கும் எதிரில் குறிக்கப்பட்டிருக்கும் தீர்வைகளின் மொத்த தொகை
5, சாதாரணமாய் நிலத்தில் ஆறு மாதங்களுக்கும் அதிகமான காலத்திற்கு இருக்கும் புன்செய்ப் பயிருக்கு.		மூன்றுவது இனத்திற்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தொகையைப் போல் ஒன்றரை மடங்கு.

இருப்பினும், சம்பந்தப்பட்ட நீர்ப்பாசன ஆதாரத்தில் ஒரு சாதாரண நெற்பயிர் விளைவிப்பதற்கு எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் தேவையோ, அந்த அளவுக்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லையானால், நிலத்தில் சாதாரணமாய் ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நிலையிலிருக்கும் நன்செய் அல்லது புன்செய்ப் பயிருக்கு ஏற்றவாறு நன்செய்ப் பயிர் அல்லது புன்செய்ப் பயிர் ஒன்றுக்குரிய தீர்வை விதிக்க வேண்டும்.

குறிப்பு.—நன்செய் தரமும் ஏதாவதொரு புன்செய் நிலத்தின் தீர்வை வீதமும் நிலவரித் திட்டப் பதிவேட்டில் காணப்படவில்லையானால், அத்தகைய தரமும் வீதமும் கலெக்டரால் நியமிக்கப்பட வேண்டும்.

II. நில அளவை செய்யப்பட்டு பாகுபாடு செய்யப்பட்டுள்ள ஜமீன் முறைக் கிராமங்களிலும், முழு இனம் கிராமங்களிலும் ஜாகீர் கிராமங்களிலும் உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படுமானால் ஆவது விதியில் உள்ளவாறே அவ்வீதங்களிலே தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படும்.

III. நில அளவை செய்யப்படாமலும் பாகுபாடு செய்யப்படாமலும் இருக்கும் ஜமீன் முறைக் கிராமங்களிலும், முழு இனம் கிராமங்களிலும் ஜாகீர் கிராமங்களிலும் உள்ள நிலங்களுக்கு முதல்

நி. ஆ. 4, பத்தி 2]

வகுப்பு நீர்ப்பாசனங்களிலிருந்து தண்ணீர் வழங்கப்படுமானால் கீழ்க்கண்ட விதங்களில் தீர்வை விதிக்கப்படும்:—

	ஏக்கர் ஒன்றுக்கு ரூ.
(1) கரும்பு, வாழை, வெற்றிலை, கழுகு, தென்னை இவற்றிற்கு.	6.00
(2) மஞ்சளுக்கு	5.00
(3) முதல்போக நெல்லுக்கு	4.00
(4) இரண்டாவது அல்லது மூன்றுவது போக நெல்லுக்கு.	3.00
(5) மிளகாய், புகையிலை, கத்திரி, கரணை, வேர்க்கடலை, சக்கரை வள்ளி, சோளம், கேழ்வரகு இவற்றிற்கு.	3.00
(6) கம்பு, தினை, எள், வரகு. கொத்தமல்லி, கோதுமை, வெங்காயம் இவற்றிற்கு.	2.00

1958ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் தேதி, 3365 என், வரு.பல.
1958ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி, 221 என், வ.து.வா.செ.பல,

இருப்பினும், சம்பந்தப்பட்ட அரசாங்க ஆதாரத்தில் சாதாரண நெற்பயிர் ஒன்றின் விளைவுக்குத் தேவையான காலத்திற்கும் அதிகமான, காலத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லையானால், கரும்பு, வாழை, வெற்றிலை, தென்னை, கழுகு, மஞ்சள் இவற்றிற்கு முதல் போக நெல் பயிருக்கு எந்தத் தீர்வை விதிக்கத்தக்கதோ அந்தத் தீர்வையை விதிக்க வேண்டும்.

1941ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் தேதி, 2499 என், அ.ஆ.பல.வரு.
1942ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி, 2034 என், வ.து.வா.செ. பலவ.

குறிப்பு.—இரண்டாவது வகுப்பு ஆதாரங்களிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டால் மேற்கண்ட விதங்களில் முக்கால் பங்குத் தீர்வை விதிக்கப்படும்.

IV. பாசனத்திற்கு உபயோகமாகும் தண்ணீர் இறைக்கப்படாமல் அல்லது யாதொரு இயந்திர சாதனத்தால் உயர்த்தப்பட்டாலன்றி தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள முடியாதென்றால் I, II, III, விதிகளில் குறிப்பிட்டுள்ள தீர்வை விதங்களில் முக்கால் பங்குத் தீர்வை விதிக்க வேண்டும்.

V. மேலே குறிப்பிட்டுள்ள I, II, III, விதிகளின்கீழ் இரண்டாவது நன்செய்ப் பயிர் என்பது அதே பசலியில் நீர் பாய்ச்சிப் பயிரிடப்பட்ட பயிர் ஒன்றைப் பின் தொடர்ந்து வரும் நன்செய்ப் பயிராகும். மூன்றுவது நன்செய்ப் பயிர் என்பது அதே பசலியில் நீர் பாய்ச்சிப் பயிரிடப்பட்ட இரண்டு பயிர்களைப் பின் தொடர்ந்து வரும் நன்செய்ப் பயிராகும். இரண்டாவது புன்செய்ப் பயிர் என்பது முதல் போக நன்செய்ப் பயிர் அல்லது முதல் போக புன்செய்ப் பயிரைப் பின்

[நி. ஆ. 4, பத்தி 2

தொடர்ந்து விளைவிக்கப்பட்ட புன்செய்ப் பயிராகும். மூன்றுவது புன்செய்ப் பயிர் என்பது நன்செய்யாக அல்லது புன்செய்யாக உள்ள வேறு இரண்டு பயிர்களைப்பின் தொடர்ந்து விளைவிக்கப்பட்ட புன்செய்ப் பயிராகும்.

குறிப்பு.—மேலே கண்ட விதிகள் பவானி, தாராபுரம், தாலுக்காக்களில் 1320 பசலியிலிருந்தும், மாவட்டத்தின் ஏனைய தாலுக்காக்களில் அவற்றில் நிலத் தீர்வை விதிப்பு மாற்ற வீதங்கள் அமுலுக்கு வரும் பசலியிலிருந்தும் நடைமுறைக்கு வரும்.

1910ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் தேதி, 3714 எண், அ.ஆ.வரு.

1910ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் தேதி, 4529 எண், வ.து.வா.செ. பலவ.

3. மதுரை மாவட்டம்.

மதுரை மாவட்டத்தில் பெரியாறு பாசன முறையிலிருந்து நீர் பாய்ச்சப்படும் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை விதிப்பதற்குரிய விதிகள்.

பாகம் I.

அயன் புன்செய் நிலங்களும், சிறு இனம் புன்செய் நிலங்களும் முழு இனம் கிராமங்களிலும் ஜமீன்முறைக் கிராமங்களிலும் உள்ள புன்செய் நிலங்களும்.

அயன் புன்செய் அல்லது சிறு இனம் புன்செய் நிலங்களுக்கு அல்லது முழு இனம் அல்லது ஜமீன் முறைக் கிராமங்களிலுள்ள புன்செய் நிலங்களுக்குப் பெரியாற்று நீர் வழங்கப்பட்டால் கீழ்க் கண்ட வீதங்களில் தீர்வை விதிக்கப்படும் :—

	ஏக்கர் ஒன்றுக்கு ரூ.
(1) *முதல் நன்செய்ப் பயிருக்கு ..	5.00
(2) *இரண்டாவது நன்செய்ப் பயிருக்கு ..	3.00
(3) கரும்பு, வெற்றிலை, மஞ்சள், இரண்டு நன் செய்ப் பயிர்களின் காலத்திற்கு அதாவது ஆறு மாதங்களுக்கும் அதிகமான காலத் திற்கு நிலைத்திருக்கும் பயிருக்கு.	8.00
(4) மூன்றுவது நன்செய்ப் பயிருக்கு	2.00
(5) ஒழுங்காக நீ பாய்ச்சப்பட்ட முதல் புன்செய் பயிருக்கு.	5.00
(6) ஒழுங்காக நீர் பாய்ச்சப்பட்ட இரண்டாவது புன்செய்ப் பயிருக்கு.	3.00
(7) எப்போதுதாவது பாய்ச்சப்பட்ட முதல் அல்லது இரண்டாவது புன்செய்ப் பயிருக்கு.	2.50
(8) நீர் பாய்ச்சப்பட்ட மூன்றுவது புன்செய்ப் பயிருக்கு.	1.00

நி. ஆ. 4, பத்தி 2]

ஏக்கர் ஒன்றுக்கு

(9) தனிப்பட்ட பயிர்கள்—

அ. வெங்காயம் .. .. } ஒழுங்காக நீர்ப்பாய்ச்சப்பட்ட
ஆ. சர்க்கரைவள்ளி .. } புன்செய்ப் பயிருக்குரிய
இ. மிளகாய் .. .. } அதே தீர்வை மேலேயுள்ள
ஈ. புகையிலை .. .. } (5) ஆவது இனம் 5.00

2. மாந்தோப்புகள், தென்னந்தோப்புகள் மற்ற தோப்புகள் முதலியன.—(i) ஓராண்டில் இரண்டு நன்செய்ப் பயிர் விளைவிப்பதற்குப் போதுமான அத்தனை மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நீர்ப்பாய்ச்சப்பட்டால் 8-00

*(ii) மற்றவற்றில் 5-00

1958ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் தேதி, 3365 என், அ.ஆ.வரு, பல.

1958ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி, 221 என், வ.து.வா.செ.பல.

சம்பந்தப்பட்ட அரசாங்கப்பாசன ஆதாரத்தில் சாதாரண நெற்பயிர் ஒன்றின் விளைவுக்குத் தேவையான காலத்திற்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லையானால், மேலே (3) ஆவது இனத்தில் கண்டுள்ள பயிர்களுக்கு, முதல் போக நெற்பயிருக்கு எந்த தீர்வை விதிக்கத் தக்கதோ அந்தத் தீர்வை விதிக்கவேண்டும்.

1942ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28ஆம் தேதி, 817 என், அ.ஆ. வரு. பல.

1942ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதி, 2034 என், வ.து.வா. செ.வரு.பல.

*இருந்தபோதிலும், 1922ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28ம் தேதி 1552 என் வருவாய்த் துறை அரசாங்க ஆணையினாலும், 1923ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ம் தேதி 311 என் வருவாய்த்துறை அரசாங்க ஆணையினாலும் பெரிய குளம் தாலுக்கா உத்தம பாளையம் கோட்டத்தைச் சேர்ந்த கும்பம் பள்ளத்தாக்கில் நன்செய்ப் பயிர் விவசாயம் விரிவாக்கப்பட்டுள்ள அயன் கிராம புன்செய் நிலங்களுக்கும் இனம் கிராமப் புன்செய் நிலங்களுக்கும் பெரியாறு தண்ணீர் வழங்கப்பட்டால் மேலேயுள்ள வீதங்களில் இருமடங்கு விதிக்கப்படும்.

குறிப்பு.—(1) சவுக்கும், மூங்கிலும், கட்டடங்கள் அல்லது விறகுக்குப்பயனாகும் வெட்டு மரங்களும் மற்றத் தோப்பு மரங்களும் புன்செய்ப் பயிர்களாகக் கருதப்பட வேண்டும். அவற்றிற்கு ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு நீர் பாய்ச்சப்பாட்டால், அவற்றிற்கு எப்போதாவது நீர் பாய்ச்சப்படும் முதல் புன்செய் பயிருக்கு விதிக்கத்தக்க தீர்வையையும். அதற்கு மேற்பட்ட காலத்திற்கு நீர் பாய்ச்சப்பட்டால் அந்தத் தீர்வையைப் போல ஒன்றரை மடங்கு தீர்வையும் விதிக்க வேண்டும்.

1943ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி, 2431, என், அ.ஆ.பல,

1943ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி, 23 என், வா.து.வா.செ. அச்சு.

[நி. ஆ. 4, பத்தி 2

குறிப்பு.—(2) இரண்டாவது பயிர் என்பது அதே பசலியில் முன்னமே ஒரு பயிர் விளைவிக்கப்பட்ட நிலத்தின் பயிரிடப்பட்ட பயிராகும்.

*1923-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ஆம் தேதி, 1798 எண், அ.ஆ. வரு.

1923-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ஆம் தேதி, 2723 எண், வ.து.வா.செ. பலவ.

*1923-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ஆம் தேதி, 1852 எண், அ.ஆ. வரு.

1924-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதி, 8 எண், வ.து.வா.செ.பலவ.

II. நிலத்தில் பயிர் விளைவிக்கப்பட்டாலன்றி புன்செய் நிலத்தை நன்செய் நிலமாகத் திருத்துவதற்கு உபயோகித்த தண்ணீருக்கு முதல் ஆண்டிற்குத் தீர்வை விதிக்கத்தக்கதில்லை. அவ்வாறு திருத்தப்பட்ட பின் பயிரிடப்பட்ட முதல் பயிருக்கு பாதி தீர்வை வீதத் தீர்வையே விதிக்கப்படும்.

III (அ) அயன் புன்செய் நிலங்களுக்கும், சிறு இனம் புன்செய் நிலங்களுக்கும், முழு இனம் கிராமங்களிலும், ஜமீன் முறை கிராமங்களிலுள்ள புன்செய் நிலங்களுக்கும் நீர் பாய்ச்சிக் கொள்வதற்குக் கலெக்டரின் ஒப்பளிப்புப் பெற வேண்டும். தண்ணீர் வழங்கப் பெறுவதற்கு முன்னமே ஒப்பளிக்கப்படாத மேலே விவரிக்கப்பட்டுள்ள நிலங்களில் யாதொன்றிலும் பயிரிடுபவர் அந்நிலத்திற்குத் தண்ணீர் வழங்கப்பெறக் கலெக்டருக்கு, ஜூன் மாதம் முதல் தேதியில் அல்லது அதற்குள் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும், தண்ணீர் எடுத்துக்கொள்ள ஆண்டு தோறும் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமென்ற முறையில் இல்லாமல் நிலையான அனுமதிக்காக செய்துகொள்ளும் விண்ணப்பமாகக் கருதப்படும். கீழ்க்கண்ட விவரங்கள் அவ் விண்ணப்பத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் :—

(1) தேதி.
(2) கிராமம்.
(3) குடியானவரின் பெயரும் அவரது முகவரியும்.
(4) அளவை எண்.
(5) எந்த நிலத்துக்குத் தண்ணீர் தேவையோ அதன் பரப்பு.
(6) குறிப்புரை (தண்ணீருக்காகச் செய்து கொண்ட முந்தின விண்ணப்பங்கள் இருப்பின் அவற்றைப் பற்றி இங்கே குறிப்பிடுக).

அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கிராமக் கணக்கர்கள் அல்லது நில வருவாய் ஆய்வாளர்கள் அல்லது தாசில்தார்களிடம் பெற்றுக் கொள்ளலாம். இத்தகைய ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் முத்திரை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

1928-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் தேதி, 213 எண், அ.ஆ.வரு.
1928-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ஆம் தேதி, 413 எண், வ.து.வா.செ.பல,
1936-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2-ஆம் தேதி, 1400 எண், அ.ஆ.வரு.
1936-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ஆம் தேதி, 2301 எண், வ.து.வா.செ.பல.

நி. ஆ. 4, பக்தி 2]

(ஆ) இவ்விண்ணப்பங்கள் எல்லாவற்றிலும் கலெக்டர் ஆணைகள் பிறப்பிப்பார். தண்ணீர் வழங்கப்படுவதை அவர் மறுப்பாராயின், மறுக்கப் பட்டதென்ற மேல் குறிப்புடன் விண்ணப்பம் செய்வதற்கு நேராக விண்ணப் பத்தைத் திரும்ப அனுப்பி விடுவார். விண்ணப்பம் அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதற்குக் காரணங்கள் கொடுக்கப்பட வேண்டும். முழு அளவு அல்லது ஓரளவு தண்ணீர் வழங்கப் பெறக் கலெக்டர் அனுமதி கொடுப்பா ரெனில், அவ்வாணையை மூன்று பிரதிகளில் ஒன்றைத் தாசில்தாருக்கும், ஒன்றைக் கிராமக் கணக்கருக்கும், ஒன்றை விண்ணப்பம் செய்தவருக்கும் அனுப்புவர். ஜூன் மாதம் முதல் தேதிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப் பங்கள் காலங்கடந்தவையாக கருதப்பட்டு திருப்பி அனுப்பப்படும். வரப் பெற்ற விண்ணப்பங்களையும் அவை எவ்வாறு முடிவு செய்யப்படுகின்றன என்ப தையும் காட்டும் ஒரு பதிவேட்டைக் கலெக்டர் எழுதி வைத்து வர வேண்டும். விண்ணப்பங்களில் தண்ணீர் வழங்கப்பெற்றவற்றைக் காட்டும் பதிவேடுகளைத் தாசில்தார் கிராமக் கணக்கர் இவர்களும் எழுதி வைத்து வர வேண்டும். கிராமக் கணக்கரின் பதிவேடுகள் கிராமத்தார்களால் பார்வையிடப்படத்தக்கவையாக இருக்க வேண்டும்.

1924 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11-ஆம் தேதி, 865 என். அ.ஆ.வரு.பல.

1924 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17-ஆம் தேதி, 1396 என். வ.து.வா.செ.பல.

1925 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ஆம் தேதி, 1839 என். அ.ஆ.வரு.

1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ஆம் தேதி, 2686 என், வ.து.வா.செ. பல.

(இ) மேலே உள்ள இரு வகைப் புன்செய் நிலங்களில் விளை விக்கப்படும் நன்செய்ப் பயிர்களுக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளுவதற்குக் கலெக்டர் ஒப்பளிப்பு செய்த பின்னர் அந்நிலத்திற்குத் தண்ணீர் வழங்கப்பட வேண்டுமென்று மற்றுமொரு விண்ணப்பம் செய்வது அவசியமில்லை. அவ் வொப்பளிப்பு "கோடை" "காலம்" ஆகிய இரு வகைப் பயிர்களின் விவசா யத்திற்கும் போதுமானதாகும்.

எப்புலங்களைக் குறிப்பிட்டு, எந்தப் பசலியிலிருந்து தண்ணீர் வழங் குவது நிறுத்தப்பட்டிருக்கிறதென்று ஆவது விதியின் கீழ்க் கலெக்டர் கிராமத்தில் ஓர் அறிவிப்பு செய்யும் வரையில் அல்லது தண்ணீர் நிறுத்தப்பட வேண்டுமென்று வழக்கத்திற்கிசைந்த விண்ணப்பம் செய்து கொள்ளப்படும் வரையில் தண்ணீர் வழங்கப்படும்.

1925-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ஆம் தேதி, 649 என், வ.து.வா.செ.பல.

(ஈ) தண்ணீர் வழங்குவதை நிறுத்துவதற்குக் கொடுக்கப்படும் விண்ணப்பம் கீழ்க்கண்ட விவரங்களுடன் இரண்டு பிரதிகளில், ஒன்று கிராமக் கணக்கருக்கும் மற்றொன்று கலெக்டருக்கும், ஏப்ரல் மூப்பதாந்தேதி அல்லது அதற்குள் அனுப்பப்பட வேண்டும். அச்சுப் படிவங்களைக் கிராமக் கணக்கர் அல்லது நில வருவாய் ஆய்வாளர் அல்லது தாசில்தாரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் :—

(1) தேதி.

(2) கிராமம்.

(3) குடியானவரின் பெயர்.

(4) அளவை எண்.

(5) பரப்பு.

(6) எந்தத் தேதியிலிருந்து தண்ணீர் தேவையில்லை

(7) ஆதியில் தண்ணீர் வழங்குவதற்கு கலெக்டர் பிறப்பித்த ஆணையின் எண், தேதி.

(உ) புன்செய்ப் பயிர்களுக்குத் தண்ணீர் தேவையானால், நீர் பாய்ச்சிக் கொள்வதற்குக் குறைந்தது. மூன்று நாட்களுக்கு முன்பாக விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். அவ்விண்ணப்பம், இரண்டு பிரதிகளில் ஒன்று கிராமக் கணக்கருக்கும் மற்றொன்று கலெக்டருக்கும் அனுப்ப வேண்டும்.

குறிப்பு.—ஓராண்டிற்கு மட்டும் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி கொடுப்பது அவசியமென்று கலெக்டர் கருதுவாரெனில் அதற்குரிய காரணங்களை எழுதி வைத்து அவ்வாறு அவர் செய்வதற்கு மேலே கண்ட விதியில் ஒன்றும் அவரைத் தடுக்காது.

1919-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 19-ஆம் தேதி, 650 எண், அ.ஆ.வரு.

1921-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி, 2217 எண், வ.து.வா. செ.நிர்.

1915-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி, 282 எண், வ.து.வா.செ.

IV. *முறை தவறுக நீர் பாய்ச்சப்படுவனவற்றிலெல்லாம் வருவாய்த் துறைக் கழக 4 (2) ஆவது நில ஆணை 1-ஆவது இணைப்பின் "இ" பிரிவில் குறிக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய காலத்தில் விண்ணப்பம் அனுப்பியதில், முடிவில் தண்ணீர் வழங்க அனுமதியளிக்கப் பெற்று இருந்தால், அவ்வனுமதி ஆணை வரப் பெறுவதற்கு முன்பு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டதற்காகத் தண்ணீர் தீர்வை கூடுதலாக விதிக்கலாகாது.

1918-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 6-ஆம் தேதி, 929 எண், அ.ஆ.வரு.

1918-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ஆம் தேதி, 65 எண், வ.து.வா.செ.நிர்.

1953-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி, 805 எண், அ.ஆ.வரு.

1933-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி, 1634 எண், வ.து.வா.செ.பலவ

V. முந்திய விதிகளில் யாதிருப்பினும், யாதொரு புன்செய் நிலத்திற்குக் காரணம் கொடுத்தோ அல்லது காரணம் கொடுக்கப்படாமலோ, தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகத் தண்ணீர் வழங்கப்படுவதை நிறுத்துவதற்கும் அவ்வப்போது அரசினரின் யுக்தானுசாரம் போல அவசியமெனத் தங்களுக்குத் தோன்றுமாயின் புன்செய் ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ள எந்நிலத்திற்காவது வழங்கப்பட்ட தண்ணீருக்கான தீர்வையில் மாறுதல் செய்வதற்கு முழு உரிமையை அரசினர் தாமே வகித்துள்ளனர்.

நி. ஆ. 4, பத்தி 2]

பாகம் II.

சிறு இனம் நன்செய் நிலங்கள்.—கணக்குகளில் ஒரு போக நன்செய் ஆகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் சிறு இனம் நன்செய் நிலங்களில் பெரியாறு தண்ணீரைக் கொண்டு இரண்டாம் போகப் பயிர் செய்யப்பட்டால் கீழே கண்டுள்ள தீர்வைகள் விதிக்கப்படும் :—.

	ஏக்கர் ஒன்றுக்கு ரூ. பை.
1. சிறு இனம் நன்செய் நிலங்களில் இரண்டாவது நன்செய்ப் பயிர் அல்லது ஒழுங்காக நீர்ப்பாய்ச்சப்பட்ட இரண்டாவது புன்செய் பயிருக்கு.	3.00
2. சிறு இனம் நன்செய் நிலங்களில் எப்போதாவது நீர் பாய்ச்சப் பட்ட இரண்டாவது புன்செய்ப் பயிருக்கு.	2.50
3. மூன்றுவது நன்செய்ப் பயிருக்கு.	2.00
4. நீர் பாய்ச்சப்பட்ட மூன்றுவது புன்செய்ப் பயிருக்கு.	1.00

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி, 3365 எண். அ.ஆ.பல.

1959-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி, 221 எண். வ.து.வா.செ. பலவ.

குறிப்பு.—(1) கணக்குகளில் ஒரு போக நன்செய் ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ள அரசுக் குடி முறை சிறு இடம் நிலத்திற்குப் பெரியாற்றிலிருந்து பசலியில் ஒரே பயிருக்கு தண்ணீர் எடுத்துக் கொள்வதற்குத் தண்ணிர்த் தீர்வை இல்லை.

(2) இரண்டாவது பயிர் என்பது அதே பசலியில் முன்னமே ஒரு பயிர் விளைவிக்கப்பட்ட நிலத்தில் விளைவிக்கப்பட்ட மற்றொரு பயிர் ஆகும்.

பாகம் III.

முழு இனம் கிராமங்களிலும் ஜமீன் முறைக் கிராமங்களிலும் உள்ள நன்செய் நிலங்கள்.— I. முழு இனம் கிராமங்களிலும் ஜமீன் முறைக் கிராமங்களிலும் உள்ள பழைய நன்செய் நிலங்களுக்கும் நன்செய்யாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலங்களுக்கும் தண்ணீர் வழங்கப்படுவதற்காக விண்ணப்பங்கள், பயிருக்கு நீர் பாய்ச்சிக் கொள்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கலெக்டருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவ்விண்ணப்பங்கள் நில உரிமையாளர்களால் அல்லது ஏரியின்கீழ் உள்ள நிலங்கள் எந்தக் குடியானவர்கள் வசமுள்ளனவோ அக்குடியானவர்களால் கையெழுத்திடப் பெற்றிருந்தால், அல்லது விண்ணப்பம் செய்து கொள்பவர்கள் ஏரிப் பாசனத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு அவ்வேரியிலிருந்து நீர் பாய்ச்சப்பட்டால் அதற்காகச் செலுத்தப் படவேண்டிய முழுத் தண்ணீர் தீர்வையையும் கொடுக்கவும் அவ்வேரியின் பெரும்பான்மை பாகத்தை கட்டுப்பாடு செய்யவும் அவர்கள் ஒப்புக்கொண்டால் அல்லது கலெக்டரின் அபிப்பிராயத்தில் அவர்கள் செல்வந்தவர்கள் எனக் கருதப் பட்டாலன்றி, அவ்விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யத்தக்கவையாகும்.

II. விண்ணப்பங்கள் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஓராண்டில் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள அளிக்கப்பட்ட அனுமதி அதற்கு அடுத்த ஆண்டில் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ள உரிமையை அளிக்காது. இருப்பினும், தனியுரிமையுள்ள ஜமீன் முறைக் கிராமங்களில் ஒழுங்காகத்

[நி. ஆ. 4, பத்தி 2

தொடர்ந்து ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பெரியாற்றுத் தண்ணீர் ஏரிகளுக்கு வழங்கப்பட்டிருந்தால், அவ்வேரிகளின் கீழ் உள்ள பழைய நன்செய் நிலங்களுக்கும் நன்செயாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலங்களுக்கும் நீர் பாய்ச்சிக் கொள்வதற்காக ஆண்டுக்கொரு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும் என்பது தவிர்க்கப்பட்டு, அந்தகைய நிலங்களுக்கு நிலையான அனுமதிச் சீட்டுக் கொடுக்கப்படும்.

குறிப்பு.—இவ்விண்ணப்பங்களுக்கு முத்திரை வரி விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

III. பெரியாற்றுத் தண்ணீர் பாய்ச்சப்பட்டுள்ள முழுப் பரப்பிற்கும் ஒரு பயிருக்கு ஒரே சீராக ஏக்கர் ஒன்றுக்கு 4 ரூபாய் விதத்தில் தீர்வை விதிக்கப்படும். இதற்குக் கூடுதலாக ஏக்கர் ஒன்றுக்கு 3 ரூபாய் வீதம் இரண்டாவது பயிருக்குத் தீர்வை விதிக்கப்படும். சம்பந்தப்பட்ட அரசாங்க நீர் பாசன ஆதாரத்தில் ஒரு சாதாரண நெற்பயிர் விளைவுக்குத் தேவையான காலத்திற்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் கிடைக்குமாகில், நிலத்தில் ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்தில் நிலையிலிருக்கும் பயிர்களுக்கு முன் குறிப்பிட்டுள்ளவாறு ஏக்கர் ஒன்றுக்கு 3 ரூபாய் கூடுதல் தீர்வை விதிக்கப்படும். மூன்றாவது பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் தீர்வை விதிக்கப்படும்.

IV. முறை தவறுதலாக நீர் பாய்ச்சப்பட்டவற்றில் எல்லாம் 4 (2) ஆவது வருவாய் வாரியத் துறை நில ஆணை I ஆவது இணைப்பில் (இ) பிரிவிலுள்ள விதிகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

V. இவ்விதிகளின்கீழ் இறைம் நிலங்களுக்கும் ஜமீன் முறை நிலங்களுக்கும் விதிக்கத் தக்க தண்ணீர்த் தீர்வை பிப்ரவரி மாதத்திலும், மார்ச்சு மாதத்திலும் இரண்டு சமமான தவணைகளில் அல்லது வருவாய்த் துறை வாரியம் வேறுவகையில் எவ்வாறு ஆணை பிறப்பிக்குமோ அவ்வாறு வசூலிக்கப்படும். தீர்வை செலுத்தப்படுவதற்காகக் குறிப்பிடப்பட்ட நேதிக்குள் எப்பொழுதாவது பயிராய்வு செய்து முடிக்கப்படவில்லை எனில் தற்காலிகமான கேட்புத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

குறிப்பு.—நில உரிமையாளர்களின் தலையீடின்றி குடியானவர் ஒருவர் தாமே விண்ணப்பம் செய்த வகையில் தமக்கு வழங்கப்பட்ட தண்ணீருக்குத் தீர்வை செலுத்தத் தவறுவராயின் அவர் வசமுள்ள அசையும் பொருளும் அவர் உரிமையிலுள்ள நிலத்தில் அவருக்கு இருக்கக்கூடிய பாத்தியதையும், பங்கும் உரிமையும் அசையாப் பொருளும் விற்பனை செய்யப்படலாம். அவ்வசையாப் பொருள்கள் விலங்க சுத்தியாய் ஏலம் விடப்படும். இது நிலக்கிழார் நில உரிமையைப் பாதிக்காது. குடியானவருக்கு சேர்ந்த அத்தகைய உரிமையை அரசினர் சார்பாக ஏலத்தில் எடுக்கக்கூடாது.

நன்முய்க் கவனிக்க.—இரண்டாவது பயிர் என்பது அதே பசலியில் முன்னமே ஒரு பயிர் செய்யப்பட்ட நிலத்தில் மறுமுறையும் விளைவிக்கப்பட்ட பயிராகும்.

1908-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் தேதி, 417 எண், வ.து.வா.செ.நிர்.
1910-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி, 561 எண், வ.து.வா.செ.நிர்.

VI. மூந்திய விதிகளில் யாதிருப்பினும் யாதொரு நிலத்திற்குக் காரணம் கொடுத்தோ அலேது காரணம் கொடுக்காமலோ தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகவோ தங்கள் யுக்தானுசாரம் போலத் தண்ணீர் வழங்கப்

நி. ஆ. 4, பத்தி 2]

படுவதை நிறுத்துவதற்கும், அவ்வப்போது எந்த நிலத்திற்காவது வழங்கப் பட்ட தண்ணீருக்காகத் தீர்வையில் மாறுதல் செய்வதற்குமான முழு உரிமையை அரசினர் தாமே வருத்துள்ளனர்.

1933-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ஆம் தேதி, 1785 என், அ.ஆ.வரு.
1933-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் தேதி, 129 என், வ.து.வா.செ.
1933-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி, 806 அ.ஆ.வரு.
1933-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி, 1634 வ.து.வா.செ.
பலவ.

4. சேலம் மாவட்டம்.

I. சேலம் மாவட்டத்தில் காவேரியிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படும் பயிர்களுக்குத் தண்ணீர் தீர்வை விதிப்பதற்குரிய விதிகள்—

(1) இவ்விதிகள் "1934-ஆம் ஆண்டு சேலம் மாவட்டக் காவேரித் தண்ணீர்த் தீர்வை விதிகள்" என்ற பெயர் பெறும்.

(2) இவற்றின் அமல் 1934-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து ஏற்பட்டுள்ளது.

அ. (i) இவ்விதிகள் அனுசரிக்கப்படுவதில், அரசுக்குடிமுறை நன்செய் நிலமாக இருந்து அதற்குரிய பாசன ஆதாரத்திலிருந்து அதற்குக் குறிப்பிட்டுள்ள நீர் பாய்ச்சும் முறையை அனுசரித்து, எத்தனை பயிர்களுக் காயினும் பொறி இயல் பணித்துறையினரால் அந்த ஆதாரத்திற்கு வழங்கப் பட்ட தண்ணீரைப் பாய்ச்சிக் கொள்வதும்; அல்லது

(ii) சேலத்துப் பாசன நிர்வாகப் பொறியாளரின் எழுத்து வடிவில் முன் ஒப்பளிப்பைப் பெற்று அதில் நிபந்தனைகள் எவையேனும் இருப்பின், அவற்றை அனுசரித்துப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சிக் கொள்வதும்; அல்லது

(iii) ஏற்பட்ட ஆதாரத்திலிருந்து நிலத்திற்குத் தண்ணீர்த் தீர்வை செலுத்தும் பொறுப்பில் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளலாம் என கலெக்டர் தீர்மானிக்கக்கூடியதில் கலெக்டரால் நிச்சயிக்கப்படத்தக்க அத்தனை பயிர்களுக்கும் நீர்பாய்ச்சிக் கொள்வது முறையானது எனக் கருதப்படும்.

மற்றெல்லாப் பாசனங்களும் முறையற்றவையாகும்.

ஆ. இரண்டாவது பயிர் என்பது அதே பசலியில் இரு பசலிப் பயிர் அல்லது நீர் பாய்ச்சப்பட்ட பயிர் ஒன்று முன்னமே விளைவித்தபின் அதே நிலத்தில் செய்யப்படும் பயிராகும்.

இ. மூன்றுவது பயிர் முன்னமே நீர் பாய்ச்சப்பட்ட இரண்டு பயிர்கள் அல்லது நீர் பாய்ச்சப்பட்ட இரு பசலிப் பயிர் ஒன்று விளைவிக்கப்பட்ட பின் அதே நிலத்தில் அதே பசலியில் பயிர்செய்யப்படும் பயிராகும்.

ஈ. இரு பசலிப் பயிர் என்பது கரும்பு, வெற்றிலை, மஞ்சள் போன்று சாதாரணமாக ஆறுமாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நிலத்தில் பயிராகும்.

விளக்கம் I.—வழக்கமாக ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு நீர் பாய்ச்சப்படும் தென்னந்தோப்புகளும் மற்ற மரத்தோப்புகளும் இரு பசலிப் பயிர்களாகும். மூன்று வயதிற்கு மேற்பட்ட அத்தகைய மரங்கள் கசிவினால் அல்லாமல் மற்ற வகையில் நீர் பாய்ச்சப்பட்டாலன்றி, நீர் பாய்ச்சப்பட்ட பயிர்களாகக் கருதப்படமாட்டா. வரப்புகளில் அல்லது மற்ற இடங்களில் தனித்த மரங்கள் வளர்க்கப்பட்டால் அவற்றில் ஒவ்வொரு மரமும் ஒரு செண்டு நிலத்தில் இருப்பதாகக் கருதி ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு செண்டு வீதத்தில் தீர்வை விதிக்க வேண்டும்.

விளக்கம் II.—சம்பந்தப்பட்ட ஆசாரங்க ஆதாரத்தில் ஒரு சாதாரண நெற்பயிர் விளைவுக்குத் தேவையான காலத்திற்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் இல்லாவிட்டால் இரு பசலிப் பயிர் ஒன்றை இரு பசலிப் பயிரல்லாத நீர் பாய்ச்சப்பட்ட முதல் பயிராகவே கருத வேண்டும்.

1941-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி, 2499 அ.ஆ.வரு.பல.
1942-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் தேதி, 2034 வ.து.வா.செ. பலவ.

விளக்கம் II.—ஒரே தடவை மாத்திரம் அறுவடையாகும் எவ்விதமான நெற்பயிரும் அதற்குத் தண்ணீர் தேவையான காலம் எதுவாயினும் ஒரு போகப் பயிராகவே கருதப்படும்.

III. காவேரி ஆற்றிலிருந்தே அல்லது விளிம்பில் குறிக்கப்பட்டிருக்கும் வாய்க்கால்கள் வழியாக அல்லது மூன் சொன்ன வாய்க்கால்களுக்குச் சம்பந்தப்பட்டிருக்கும் யாதொரு ஏரி அல்லது ராஜ வாய்க்கால், கொமர மற்ற ஆதாரத்தின் வழியாகத் தண்ணீர் ஒழுங்கான பாளையம் வாய்க்கால், நீர்ப் பாசனத்துக்கு வழங்கப்பட்டால் அல்லது மோஹனூர் வாய்க்கால், உபயோகம் செய்யப்பட்டால், அரசுக்குடி கிராமங் களில் அல்லது தனி உரிமை கிராமங்களில் உள்ள புன்செய் நிலங்களுக்கும், ஜமீன் முறைக் கிராமங்களிலும் முழு இனம் கிராமங்களிலும் உள்ள எல்லா நிலங்களுக்கும், அரசுக்குடி கிராமங்களிலும், ஜமீன்முறைக் கிராமங்களிலும் முழு இனம் கிராமங்களிலும் உள்ள இனம் நன்செய்களுக்கும், நீர்ப் பாசனத்திற்குக் கீழ்க்கண்ட வீதங்களில் தண்ணீர் தீர்வை விதிக்க வேண்டும்.

(i) இரு பசலிப் பயிரல்லாத நீர் பாய்ச்சப்பட்ட முதல் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 6.25 வீதம்.

(i) இரு பசலிப் பயிரல்லாத இரண்டாவது நீர் பாய்ச்சப்பட்ட பயிர் ஒன்றுக்கு ரூ. 3.13 வீதம்.

(iii) நீர் பாய்ச்சப்பட்ட இரு பசலிப் பயிர் ஒன்றுக்கு ரூ. 9.38 வீதம்.

(iv) நீர் பாய்ச்சப்பட்ட மூன்றாவது பயிருக்கு ரூ. 1.57 வீதம்.

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி, 3365 என். அ.ஆ.வரு.பல,
1959-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி, 221 என்.வது.வா.செ.,

நி. ஆ. 4, பத்தி 2]

(i) சிறு இனம் நன்செய் நிலங்களிலும் அல்லது ஜமீன் முறைக் கிராமங்களிலும் முழு இனம் கிராமங்களிலும் உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை செலுத்தாமல் ஒரு பயிர் பாசனத்திற்கு உரிமை உண்டு என்று கலெக்டரால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய நிலங்களில் அந்த ஒரு பயிர் பாசனத்திற்கும்.

(ii) இரு போகமாகப் பதிவு செய்யப்பட்ட சிறு இனம் நன்செய் நிலங்களில் இரண்டு பயிர்களுக்கும், ஜமீன்முறைக் கிராமங்களிலும், முழு இனம் கிராமங்களிலும உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வை செலுத்தாமல் இரண்டு பயிர்களுக்கும் நீர்ப் பாசனம் செய்து கொள்ள உரிமை உண்டு என்று கலெக்டரால் தீர்மானிக்கக்கப்படக்கூடிய நிலங்களில் இரு பயிர்களின் நீர்ப் பாசனத்திற்கும் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட மாட்டாது.

1938-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி, 2623 என், அ.ஆ.வரு.
1938-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதி, 3004 என், வ.து.வா. செ.பலவ.

IV. பாசனத்திற்கு உபயோகமாகக் கூடிய தண்ணீர் இறைக்கப் படாமல் அல்லது யாதொரு இயந்திர சாதனத்தால் உயர்த்தப்பட்டாலன்றி நீர் பாய்ச்சிக் கொள்ள முடியாதென்றால், இவ்விதிகளின் கீழ் விதிக்கப்படும் தீர்வையிலிருந்து நீர் பாய்ச்சப் பெறும் இரு பசலிப் பயிர் ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3 ரூபாய் வீதமும், இரு பசலிப் பயிரல்லாத நீர் பாய்ச்சப்பட்ட முதல் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2 ரூபாய் வீதமும், இரு பசலிப் பயிரல்லாத நீர் பாய்ச்சப்பட்ட மூன்றுவது பயிருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதமும் தள்ளுபடி செய்யப்படும்.

ஆனால், எதாவதொரு சூழ்நிலையில் தண்ணீர்த் தீர்வை III-ஆவது விதியில் கண்டுள்ள வீதத்திலும் குறைந்ததாகவே உண்மையில் விதிக்கப் படுமானால் இவ்விதியின்கீழ் அளிக்கப்பட வேண்டிய தள்ளுபடியும் உண்மையில் விதிக்கப்பட்ட தீர்வை வீதத்திற்கும் III-ஆவது விதியில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் வீதத்திற்கும் உள்ள அதே தாரதர வீதத்தில் குறைக்க வேண்டும்.

(1936-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி, 825 என், அ.ஆ.வரு.)
(1936-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி, 1657 என், வ.து.வா.செ. பலவ.)

V. முந்திய விதிகளில் யாதிருப்பினும், யாதொரு நிலத்திற்கும் காரணம் கொடுத்தோ, கொடுக்கப்படாமலோ தங்கள் யுக்தானுசாரம் போல் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தண்ணீர் வழங்கப்பட்டு நிறுத்திவிடுவதற்கும் அவ்வப்போது எந்த நிலத்திற்காவது வழங்கப்பட்ட தண்ணீருக்குரிய தீர்வையில் மாறுதல் செய்வதற்குள்ள முழு உரிமையையும் அரசினர் தாமே வகித்துள்ளனர்.

VI. III-ஆவது விதியில் குறிப்பிட்ட வாய்க்கால்கள், அல்லது ஆதாரங்களிலிருந்து முறையற்றதான பாசனத்திற்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டால் அவற்றிற்கு 1933-ஆம் ஆண்டு மே மாதம் 23-ஆம் தேதி மாநில அரசிதழ் முதல் பாகம் 779—780 பக்கங்களில் வெளியிடப்பட்டு 1933-ஆம்

[நி. ஆ. 4, பத்தி 2

ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி வருவாய்த்துறை 138-ஆவது அறிக்கையில் அவ்வப்போது மாற்றப்பட்டு அல்லது திருத்தப்பட்டுள்ள விதிகளை அனுசரித்துத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படும்.

(1934-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி, 736 என், அ.ஆ.வரு.)

(1934-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி, 1714 என், வ.து.வா.செ. பலவ.)

II. சேலம் மாவட்டத்தில், சேலம், ஆத்தூர், நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு, ஓமலூர், கரூர் தாலூகாக்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிரி தாலூகாவில் சில கிராமங்களிலும் காவேரி அல்லாத மற்ற பாசன அரசாங்க ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்படுவதற்குத் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்குரிய விதிகள்—(1) இவ்விதிகள் காவேரி அல்லாத மற்ற பாசன அரசாங்க ஆதாரங்களிலிருந்து—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட சேலம், ஆத்தூர், நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு, ஓமலூர், கரூர் தாலூகாக்களிலும்—

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிரி தாலூகாவின் கீழ்க்கண்ட கிராமங்களாகிய—

(1) அஞ்சலம்.
(2) அவயாச்சி.
(3) கல்லாத்துக் கோம்பை.
(4) கார்குடி.
(5) சங்கம்பட்டிக் கோம்பை பாகம்— I.
(6) சங்கம் பட்டிக் கோம்பை பாகம்.. II.
(7) சர்க்கார் ஊரக்கரை.
(8) சுக்கலாம்பட்டி.
(9) ஜம்புடை.
(10) சோகுடி.
(11) தாத்தய்யங்கார் பேட்டை.
(12) தேவனூர்.
(13) நல்லமட்டி கோம்பை.
(14) பயத்தம்பாறை.
(15) பாசரிக் கோம்பை.
(16) பிள்ளத்துறை.
(17) பிள்ளை பாளையம்.
(18) புளியஞ்சோலைக் கோம்பை.
(19) பூலன்சேரி.
(20) பொங்கலாயிக் கோம்பை.

கி. ஆ. 4, பத்தி 2]

(21) மகாதேவி.

(22) மோருப்பட்டி.

(23) ருத்ராக்ஷக் கோம்பை.

(24) வடமலைப்பட்டி.

(25) வழசிராமணி.

(26) வாழையெடுப்பு.

ஆகிய இவற்றிலும் தண்ணீர் பாய்ச்சப்படும் பயிர்களுக்குத் தண்ணீர் நிர்வை விதிக்கப்படுவதை முறைப்படுத்துவதற்குரியன.

II. (அ) எந்த ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்படுகிறதோ அது வருவாய்த் துறையின் பொறுப்பில் இருக்குமாயின், மாவட்டக் கலெக்டரால் அது சம்பந்தமாக மாவட்ட அரசிதழ் அறிவிக்கை செய்யப் பட்ட அதிகாரியால் கொடுக்கப்பட்ட அனுமதிச் சீட்டிலுள்ள நிபந்தனைகளை அனுசரித்தும், அந்த ஆதாரம் பொறி இயல் பணித்துறையின் பொறுப்பில் இருக்குமாயின் மேற்பார்வைப் பொறியாளரால் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை அனுசரித்தும் பயிருக்குத் தண்ணீர் உபயோகம் செய்து கொள்வது முறையான பாசனம் என்று கொள்ளப்படும். மற்றெல்லா நீர்ப் பாசனங்களும் முறை யற்றவையாகும்.

(ஆ) கீழ்க்கண்ட நீர்ப் பாசன ஆதாரங்கள் I -ஆவது தொகுதியில் வைக்கப்படும், அவையாவன :—

(i) நன்செயாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலங்களின் நீர்வை நிர்ணயம் செய்வதற்காக நிலவரி திட்டத் துறையினரால் I, II, வகுப்பு களில் சேர்க்கப்பட்டுள்ள ஆதாரங்கள்.

(ii) திருமணிமுத்தாறுநதி, பொன்னி ஆறு, எடப்பாடி ஆறு, வாணியாறு.

(iii) பாசனத்திற்கு ஆறு மாதங்களுக்குத் தண்ணீர் கொடுத்து உதவுமென வருவாய்க் கணக்குகளிலாவது அல்லது அச்சடிக்கப்பட்டுள்ள நிலவரித் திட்டப் பதிவேடுகளிலாவது பதிவு செய்யப்பட்டுள்ள ஏரிகள்.

மற்றெல்லா நீர்ப் பாசன ஆதாரங்களும் II -ஆவது தொகுதியில் சேர்க்கப்படும்.

(இ) (i) "நன்செய்ப் பயிர்" என்பது நெற்பயிரையும் ஆறு மாதத்திற்கு மேற்படாமல் ஒழுங்காக நீர் பாய்ச்சப்படும் மற்றொரு பயிரையும் குறிக்கும்.

(ii) "இரு பசலிப் பயிர்" கரும்பு, வெற்றிலை, வாழை, மஞ்சள், காணை, கழுகு, எலுமிச்சை, ஆரஞ்சு, நாரத்தை, மாதுளை இவற்றையும் நிலத்தில் சாதாரணமாய் ஆறு மாதங்களுக்கும் அதிகமான காலத்திற்கு இருக்கும் மற்றுமுள்ள பயிரையும் குறிக்கும்.

[நி. ஆ. 4, பத்தி 2

(iii) "புன்செய்ப் பயிர்" என்பது நன்செய்ப் பயிர் அல்லது இரு பசலிப் பயிர் அல்லாத பயிராகும். இருப்பினும் "மண்டலப் பயிர்" நெற் புன்செய்ப் பயிராகக் கருதப்படும்.

மேலும் தென்னந்தோப்பு அல்லது மற்ற மரவளர்ப்பு ஒரு பசலியில் ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு ஒழுங்காக நீர் பாய்ச்சப் படுமானால், அது இரு பசலிப் பயிராகவும் ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்திற்கு அவ்வாறு நீர் பாய்ச்சப்படாவிட்டால் நன்செய் பயிராகவும் கருதப்பட வேண்டும்.

மேலும், சம்பந்தப்பட்ட அரசாங்க ஆதாரத்தில் ஒரு சாதாரண நெற்பயிர் விளைவுக்குத் தேவையான காலத்திற்கு அதிகமான காலத்திற்குத் தண்ணீர் இல்லையானால் அதில் விளைவிக்கப்படும் இரு பசலிப் பயிர் ஒன்றுக்கு, முதல் நெற்பயிர் ஒன்றுக்கு ஏற்பட்ட தீர்வையை விதிக்க வேண்டும்.

1941 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி, 2499 என், அ.ஆ.வரு.,
1942] ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி, 2034 என், வ.து.வா.செ.
பலவகை நிர்.

விளக்கம்.—சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் கலெக்டர்கள் அவரவர்கள் சம்பந்தமான மாவட்ட அரசிதழ்களில் இந்த உட்பிரிவின் பொருளில் அடங்கும் நன்செய்ப் பயிர்கள் அல்லது இரு பசலிப் பயிர்கள் தவிர அவ்வாறு கருதத்தக்க மற்றைய நன்செய்ப் பயிர்கள் எவையென்றும் இரு பசலிப் பயிர்கள் எவையென்றும் காட்டக் கூடிய பயிர்கள் பட்டியல்களை அவ்வப்போது வெளியிட வேண்டும்.

(ஈ) இரண்டாவது பயிரென்பது அதே பசலியில் முன்னமே நீர் பாய்ச்சப்பட்ட முதல் நன்செய் அல்லது புன்செய்ப் பயிர் ஒன்று விளைவிக்கப் பட்ட நிலத்தில் செய்யப்படும் பயிராகும்.

(உ) மூன்றாவது பயிர் என்பது அதே பசலியில் முன்னமே நீர் பாய்ச்சப்பட்டுள்ள நன்செய் அல்லது புன்செய்ப் பயிர்கள் இரண்டு அல்லது நீர் பாய்ச்சப்பட்ட இரு பசலிப் பயிர் ஒன்று விளைவிக்கப்பட்டுள்ள நிலத்தில் செய்யப்படும் பயிராகும்.

III. இவ்விதிகள் கையாளப்படும் பகுதிகளில் காவேரி அல்லாத மற்றப் பாசன அரசாங்க, ஆதாரங்களிலிருந்து தண்ணீர் ஒழுங்காக வழங்கப் பட்டால் அல்லது ஒழுங்காக உபயோகம் செய்து கொண்டால், கீழ்க் கண்டுள்ள விதங்களில் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் நிலத் தீர்வை தவணை முறையை அனுசரித்து அத்தீர்வை வசூலிக்கப்பட வேண்டும்.

இருப்பினும் தண்ணீர் இறைக்கப்படாமல் அல்லது யாதொரு இயந்திர சாதனத்தால் உயர்த்தப்பட்டாலன்றி, பாசனத்துக்குத் தண்ணீர் உபயோகப் படுத்த முடியாதெனில் இதில் கண்டுள்ள விதங்களில் நாலில் ஒரு பாகம் கழிவு செய்யப்பட வேண்டும்.

தி. ஆ. 4, பத்தி 27

பயிர் விவரம்,	ஏக்கர் ஒன்றுக்கு வீதம்.	
	I-ஆவது பிரிவில் வைக்கப்பட்ட ஆதாரங்கள்.	II-ஆவது பிரிவில் வைக்கப்பட்ட ஆதாரங்கள்.
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
1 முதல் நெற்பயிர் ஒன்றுக்கு அல்லது நன்செய் பயிராகக் கருதப்படும் தென்னை அல்லது மற்றத் தோப்புப் பயிர்களுக்கு.	5 00	3. 82
2 மற்ற நன்செய்ப் பயிருக்கு	3. 75	2. 82
3 இரு பசலிப் பயிர் ஒன்றுக்கு	7. 50	5. 63
4 முதல் புன்செய்ப் பயிர் ஒன்றுக்கு அல்லது இரண்டாவது அல்லது மூன்றுவது நன்செய் பயிர் அல்லது புன்செய்ப் பயிர் ஒன்றுக்கு	2. 50	1. 88

(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி, 3365 என், அ.ஆ.கை. ப.,)

(1959 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதி, 221 என், வ.து.வா.செ. பலவ.)

காவேரிப் பாசனம் அல்லாத மற்றப் பாசன அரசாங்க ஆதாரங்களிலிருந்து முறையற்றதான பாசனத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டால் அவற்றிற்கு 1933 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி மாநில அரசிதழ் முதல் பாகம் 779-780 பக்கங்களில் வெளியிடப்பட்டு 1933 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் தேதி வருவாய்த் துறை 138 ஆவது அறிக்கையில் அவ்வப்போது மாற்றப்பட்டு அல்லது திருத்தப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படும்.

மூந்திய விதிகளில் யாதிருப்பினும் யாதொரு நிலத்திற்கும் காரணம் கொடுத்தோ அல்லது கொடுக்காமலோ தங்கள் யுக்தானுசாரம்போல தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தண்ணீர் வழங்கப்படுவதை நிறுத்திவிடுவதற்கும் யாதொரு நிலத்தின் பாய்ச்சலாதாரத்திலும் மாறுதல் செய்வதற்கும் தண்ணீர்த் தீர்வை விதிக்கும் முறையிலும் தீர்வை விகிதங்களிலும் மாறுதல் செய்வதற்கும் உரிமையும் அரசினர் வகித்துள்ளனர்.

1937 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் தேதி, 97 அ.ஆ.அச்சு.

1937 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் தேதி, 220 வ.து.வா.செ. பலவ.

நி.ஆ. 11 அ. பத்தி 9]

எண் 6

[11 அ ஆவது நிலை ஆணை 9 ஆவது பத்தி]

அரசாங்க ஆதாரங்களிலிருந்து மின்சார வலன் உண்டாக்குவதற்குப் பெற வேண்டிய உரிமத்தின் படிவம்.

19 ஆம் ஆண்டு மாதம் தேதி ஒரு சார்பில் தமிழ்நாடு கவர்னரும் (இதன் பிற்பகுதியில் கவர்னர் என்று குறிப்பிடப் பெறுபவர்) இத்தச் சொல் சந்தர்ப்பத்திற்கேற்ப அவருக்குப் பின் அப்பதவிக்கு வருபவர்களையும் அவரது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதிகளையும் குறிக்கும். மற்றொரு சார்பில் கம்பெனிச் சட்டத்தின்கீழ் இணைக்கப் பட்டதாய் வசிக்கும் மகன் (இதன் பின் உரிமம் பெறுபவர் எனக் குறிக்கப்படுவர் இடத்தில் இந்தியாவில் பதிவானதன் அலுவலகத்தை உடையதாய், இதன்கீழ் கம்பெனி என்று அழைக்கப்படுவதாய் உள்ள கம்பெனி) இச்சொல்லில் சந்தர்ப்பத்திற்கேற்ப அதன் பின்வருவோருக்கும் அனுமதி பெற்றுப் பொறுப்பேற்றவர்களையும் குறிக்கும் நிர்வாகிகள், சட்ட முறைப்பிரதிநிதி அனுமதி பெற்றுப் பொறுப்பேற்றவர்களையும் அவர்களிடையே செய்து கொண்ட எழுத்து உடன்படிக்கை.

அந்தக் கம்பெனி/உரிமம் பெறுபவர் மாவட்டம் தாலுகா பதிவு உப மாவட்டத்தில் எல்லைக்குட்பட்டதான -இல் இருந்து, இதன் பிற்பகுதியில் உள்ளவற்றிற்குட்பட்டு, மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக உரிமம் வழங்குமாறு (இதன் பிற்பகுதியில் அரசாங்கம் என்று வழங்கப் பெறும்) தமிழ்நாடு அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்து கொண்டிருப்பதாலும், இதன் பின் விவரித்துள்ள வாசகங்களின் மீதும் நிபந்தனைகளின் மீதும் உரிமம் வழங்கக் கவர்னர் உடன்படுகிறார்கள் ஆதலாலும்,

இந்த எழுத்து உடன்படிக்கை கீழ்க்கண்டவாறு இங்கு சான்று பகர்கிறது.—

1. கம்பெனிக்கு உரிமம் பெறுபவருக்கு முன் சொன்ன—எல்லைக்குட்பட்டதான முன் சொன்ன இடத்தில் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் தரைப் படத்தில் நீல நிறத்தில் வரைந்து காட்டப்பெற்று இருக்கும் மின்சார பலன் உற்பத்தி செய்யத் தண்ணீர் எடுத்து உபயோகித்துக் கொள்ள கவர்னர் இதனால் உரிமமும், அதிகாரமும் வழங்குகிறார்கள்.

2. முன்சொன்ன வழங்கலில் கீழே கண்டுள்ள சுதந்திரங்கள் அடங்கியுள்ளன :—

(1) முன் சொன்ன -ன் குறுக்கே இதனுடன் சேர்ந்திருக்கும் தரைப் படத்தில் கண்டுள்ள இடங்களில் ஒவ்வொன்றுக்கும் இடையே முறையே மீட்டர் இடைவெளி விட்டுத் தண்ணீரின் ஆழத்தை அதிகப்படுத்தவும் அவற்றிற்கு இடையில் தண்ணீரின் உயரத்தை உயர்த்தவும் அணைகள் கட்டவும்.

(2) முன்சொன்ன தரைப்படத்தில் கண்டுள்ள முன்சொன்ன இடத்திலிருந்து ஏதேனும் ஒரு மாதிரியான நீர் வழி அல்லது கால்வாய் கட்டி அமைத்து அதைப் பாதுகாத்து வரவும், அந்த நீர் வழி அல்லது கால்வாய்த் தரைப்படத்தில் காட்டியுள்ள மார்க்கமாகச் சென்று காட்டியுள்ள குளத்தில் விழவும் பின்னர் அங்கிருந்து முன்சொன்ன இன் கரையில் மின்சார உற்பத்தி செய்வதற்காகக் காட்டியுள்ள மின்சார (மனைக்குத் தண்ணீர் கொண்டு போக ஒரு வரிசையில் அல்லது வரிசைகளில் அல்லது குழாய்கள் வைத்து கட்டியும் அமைத்தும் அதன் பின் இத்துடன் சேர்த்துள்ள முன்சொன்ன தரைப் படத்தில் கண்டுள்ள இடங்களில் வடியவும் வேண்டும்.

(3) முன்சொன்ன -இல் தண்ணீர் சரளமாக ஓடுவது ஒரு நொடிக்கு (செகண்டுக்கு) கன அடிகளுக்கு அதிகமான அளவுக்கு அல்லது அவ்வப்போதைய மேற்பார்வைப் பொறியாளர் இன்னும் குறைத்த அளவு தீர்மானிப்பார் எனில் அந்த அளவுக்கும் குறைக்காமல் அல்லது சிறியதாக்காமல் இருக்குமாறு தண்ணீரை எடுக்கவும் அதைக் கொண்டு போகவும்.

(4) பொதுவாக இந்த உரிமத்தினுல் வழங்கப்பெற்ற சுதந்திரங்களினுலும் சிறப்புரிமைகளினுலும் முழு அனுகூலத்தையும் அடைய எது எது அவசியமாக அல்லது வசதியாக இருக்குமோ அதைச் செய்யவும்.

3. இதனால் வழங்கப் பெற்ற உரிமத்தையும், சுதந்திரங்களையும் 19ஆம் ஆண்டு மாதம் -தேதியிலிருந்து (இதன் பின் நிர்ணயிக்கப்படுமாறு) ஆண்டுகள் கால அளவுக்கு கம்பெனிக்கு/உரிமம் பெறுபவர் வகித்து நடத்தி வர வேண்டும்.

4. குறிப்பிட்ட காலத்தில் அந்த நிறுவனம்/உரிமதாரர் நிறுவப்பட்ட நிறனுக்கு கீழ்க்கண்ட விகிதாச்சாரம்படி ஆண்டு ஒன்றுக்கு அரசுரிமைப் பணம் செலுத்த வேண்டும்.

குதிரை வேகம்.	பயனடையக்கூடிய குதிரை வேகம் ஒவ்வொன்றும் ரூபாய்கள்.
1 முதல் 9 முடிய	60.
10 முதல் 19 முடிய	55 1,000 ரூபாய் பெருமத்திற்கும் அதிகமாகாமல்.
20 முதல் 39 முடிய	50 1,800 ரூபாய் பெருமத்திற்கும் அதிகமாகாமல்.
40 முதல் 99 முடிய	45 4,000 ரூபாய் பெருமத்திற்கும் அதிகமாகாமல்.
100 முதல் 249 முடிய	40 8,750 ரூபாய் பெருமத்திற்கும் அதிகமாகாமல்.
250 முதல் 499 முடிய	35 15,000 ரூபாய் பெருமத்திற்கும் அதிகமாகாமல்.

[நி.ஆ. 11 அ. பத்தி 9]

குதிரை வேகம்.	பவனடைவக்கூடிய குதிரை வேகம் ஒவ்வொன்றும் ரூபாய்கள்.
500 முதல் 999 முடிய	30.
1,000 (ஆயிரமும்) அதற்கு மேலும் ..	(ஒவ்வொன்றிலும் உண்டாகும் குதிரை வேகத்தையும், பணிகளில் முதலீடு செய்த தொகையும் அனுசரித்து குதிரை வேகம் ஒன்றிற்கு 30 ரூபாய் பெருமம் வீதத்திற்கு அதிகம் ஆகாம ஆகாமல் நிர்ணயம் செய்ய வேண்டும்

(1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி, 3365 என், அ.ஆ.வரு. பல.)

(1959 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதி, 221 என், வ.து.வா.செ. பலவ.)

முன்சொன்ன உரிமை ஊதியம் ஒவ்வொரு அரை ஆண்டிற்காகவும், அந்த அந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலும் அக்டோபர் மாதம் முதல் தேதியிலும் முன் பணமாக யாதொரு கழிவுமின்றி செலுத்த வேண்டும். அதில் முதல் அரை ஆண்டுக்கான தொகை 19 ஆம் ஆண்டு மாதம் தேதியில் செலுத்த வேண்டும்.

(1952 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் தேதி, 8 என், வ.து.வா.செ.)

(1932ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் தேதி, 2401 என், அ.ஆ.வரு. பலவ.)

(1952ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் தேதி, 3779 என், வ.து.வா.செ. பலவ.)

5. வழங்கப் பெற்றதின் கால அளவு முழுவதும் கடமை தொடர்ந்து நடக்க வேண்டிய நோக்கத்துடன் கம்பெனி/உரிமம் பெறுபவர்களுக்கு உடன் படுகிறது/உடன்படுகிறார்.

(1) மேலே 4வது உட்பிரிவில் குறித்துள்ள அரசுரிமையை முன் சொன்ன காலத்திலும் வகையிலும் செலுத்தவும்.

(2) முன்சொன்ன இடத்தில் அல்லது அதன் அண்மையில் முன்சொன்ன ஓடும் தண்ணீரை அளக்கத்தக்க அணை கட்டி அதை சரிவர வைத்துக்கொண்டு வரவும், இதற்கு முன் இதன் பொருட்டு, கொடுக்கப் பட்டுள்ள சுதந்திரங்களின்கீழ் முன்சொன்ன இருந்து எடுக்கும் தண்ணீரின் அளவை 7வது உட்பகுதி 2வது நிபந்தனையில் குறிக்கப் பட்டுள்ள பெருமம் அளவுக்கு அதிகமாகாமல் தண்ணீர் எடுக்கும் இடத்திற்கும் தண்ணீர் விரிந்து செல்லும் இடத்திற்கும் மத்தியில் அதிகமாக வரும் தண்ணீரை அப்புறப்படுத்த ஒரு அணை கட்டி அதைச் சரிவர வைத்துக்கொண்டு வரவும்.

(3) மனித சக்திக்கு அடங்காமல் மற்ற வகையில் முன்சொன்ன குளங்கள், வாய்க்கால்கள் அல்லது குழாய் வரிசைகள் வெடித்து அல்லது பிளந்துவிடுவதால் அல்லது அதில் ஒழுக்கு ஏற்படுவதால் அவற்றின் தண்ணீர்ப்

போக்கின் காரணமாக உண்டாக்கக் கூடிய அல்லது வேறு வகையில் இழப்பு அல்லது இது சம்பந்தமான கட்டப்பட்ட மதகு அல்லது வேறெந்த கட்டத் தினுல் ஓடையின் கரைகளின் மேல் தண்ணீர் வழிந்தோடக்கூடிய காரணத்தால் உண்டாகும் இழப்பு அல்லது சேதம் பற்றியும், இது சம்பந்தமாகக் கட்டப்பட்ட கட்டடப் பணிகள் வேலே செய்வதில் தவறு ஏற்படும் காரணத்தால், உண்டாகும் இழப்பு அல்லது சேதம் பற்றியும் உரிமைகள், வழக்குகள், நடவடிக்கைகள், செலவுகள், செலவழிக்கப்பட்டவை இவற்றில் அரசினருக்கு இழப்பீடு செய்யவும்.

(4) இதனுல் வழங்கப் பெற்ற சுதந்திரங்களைச் செயலாற்றுவதினுல் அரசினருக்கு அல்லது அவர்களின் குடிகளுக்கு அல்லது அவர்களின் நிலங் களுக்கு ஏற்படும் சேதத்திற்கு நியாயமான ஈடு செலுத்தவும்.

(1934ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் தேதி, 1096 எண், அ.ஆ.வகு.)
(1934ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் தேதி, 75 எண், வ.து.வா.செ.)

(5) இதனுல் வழங்கப் பெற்ற உரிமைகளையும், சுதந்திரங்களையும், சிறப்பு உரிமைகளையும், செயலாற்றுவதினுல் அல்லது செயலாற்றும் நோக்கத் தினுல் கம்பெனியால்/உரிமம் பெறுபவரால் ஏதேனும் ஒன்று செய்யப்பட்டதின் காரணமாய் மற்றவர்களுக்கு நிகழும் தீங்குகள் சேதங்கள் அல்லது செலுத்தத் தக்க கடமைகள், சம்பந்தமான வரும் வழக்குகள், நடவடிக்கைகள், உரிமைகள் வரவேண்டிய தொகைகள் இவற்றிற்காக அரசினருக்கு ஈடு செய்யவும்.

(6) ..... வட்டத்திய மேற்பார்வைப் பொறியாளரையும் அவர் கீழுள்ள பொறியாளரையும் அவர் கீழுள்ள அலுவலர்களையும் இதன் பொருட்டு அதிகாரம் பெற்ற மற்ற நபர்களையும் உரிமத்தின் நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்று தெரிந்துகொள்வதற்காக உள் பிரவேசித்து மின்சார மனையையும் அதிலுள்ள இயந்திரத்தையும் அல்லது அதன் ஒவ்வொரு பாகத்தையும் அணைகளையும் நீர் வழிகளையும், நீர் நிலையையும், குழாய் வரிசை களையும் பார்வையிடவும் நியாயமான எல்லாச் சமயங்களிலும் அனுமதிக்கவும்.

(7) ..... இருந்து எடுக்கப்படும் தண்ணீரில் இதனுல் கண்டுள்ள சுதந்திரங்களின் நோக்கத்திற்காக உபயோகப்படுத்தப் பெறுதலான அந்தப் பகுதியை முன்சொன்ன -க்கு இதனுடன் உள்ள தளைப் படத்தில் காட்டப்பட்டுள்ள மின்சார மனைக்கும் முன்சொன்ன இடையே உள்ள வாய்க்கால் அல்லது நீர் வழியாய்த் திருப்பி அனுப்பவும்

(8) அரசினரின் சம்மதத்தை எழுத்து வடிவில் முதலிலேயே பெற்றுக் கொண்டாலன்றி, முன் சொன்ன உரிமத்தின் உடமையையும் அனுகூலத்தையும், அல்லது இதனுல் வழங்கப் பெற்ற சுதந்திரங்களையும், சிறப்புரிமைகளையும், அல்லது அவற்றின் ஒரு பாகத்தை மாற்றிக் கொடுக்காமல் அல்லது குறைந்த வாடகைக்கு விடாமல் அல்லது தம்மிடம் இருப்பதைக் கொடுத்து விடாமல இருக்கவும்.

(9) அரசினரின் சம்மதத்தை எழுத்து வடிவில் பெற்றடைந்தாலன்றி புதியதான அல்லது கூடுதலான இயந்திரம் அமைக்காமல் அல்லது இது

தி.ஆ. 11 அ. பத்தி 9]

வழங்கப் பெற்ற காலத்தில் முன்னமே பொருத்தப்பட்டிருக்கும் இயந்திரத்திற்குப் பதில் வேறு பொருத்தாமலிருக்கவும், இருப்பினும் அத்தகைய சம்மதமின்றி, அவற்றின் ஒரு பாகத்தை அல்லது சில பாகங்களைப் புதுப்பிக்கலாம்.

6. கம்பெனியிடமிருந்து/உரிமம் பெறுபவரிடமிருந்து அரசினருக்கு வர வேண்டிய எல்லாத் தொகைகளும் நிலத் தீர்வை பாக்கிகளைப் போன்றே அதனிடமிருந்து/அவரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

(1050ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி, 2996 எண், அ.ஆ.வரு.)
(1951ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதி, 1086 எண், அ.ஆ.பல.)
(1951ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதி, 18 எண், வ.து.வா.செ.அச்சு.)

7. கம்பெனி/உரிமம் பெறுபவர் இதன் முன் பகுதியில் குறிப்பிட்டிருக்கும் தொகைகளையும், அரசுரிமைகளையும், செலுத்திக்கொண்டும் இதில் கண்ட உடன் படிக்கைகளையும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளவற்றையும் செயலாற்றிக் கொண்டும், அனுசரித்துக்கொண்டும், முன்சொன்ன கால அளவுக்குள் அரசினருக்கு அல்லது அவர்களின்கீழ் அல்லது அவர்களுக்காக நம்பிக்கைக்குப் பாத்திரமாக உரிமை கோரும் எவரொருவரால் தடை ஒன்றும் இல்லாமல் உரிமத்தை இதனால் வழங்கப் பெற்ற உரிமைகளையும் சலுகைகளையும், அமைதியாக உரிமை வகித்துக்கொண்டு அவற்றின் நன்மைகளை அனுபவித்துக்கொள்ளலாமென்று கவர்னர்/கம்பெனியுடன் உரிமம் பெறுபவருடன் இதனால் உடன்படுகிறார்கள்.

இது அனுமதிக்கும்போதெல்லாம், இதனால் கீழ்க்கண்டவாறு ஒப்புக் கொண்டு உறுதி செய்யப் பெறுகிறது:—

(1) அமைக்கப்பட்டுள்ள நீர் இயக்க இயந்திரம் உபரியாகத் தரத்தக்க பலன் நீங்கலாக உள்ள பயனளிக்கக்கூடிய அதன் பெருமம் அளவு வன்மை ..... குதிரை வேகத்துக்கு/ஆற்றலுக்கு அதிகமாகக் கூடாது. இந்தப் பெருமம் அளவுக்கு அதிகமாகக் கம்பெனி/உரிமம் பெறுபவர் வேண்டுமாயின் வேண்டுவாரயின் அதற்காக அரசினரின் சம்மதத்தை எழுத்து வடிவில் முதலிலேயே பெற வேண்டும். சம்மதம் வழங்கப் பெற்றால் அதில் எந்த அளவுக்கு அத்தகைய அதிகமானது வழங்கப்பெற்றதென விவரித்து எழுதியிருக்க வேண்டும்.

(2) உபயோகிக்க எடுக்கும் தண்ணீர் ஓட்டம் நொடி (செகண்டு)-க்கு ..... கன அடிக்கு அதிகமாகக் கூடாது.

(3) கம்பெனி[உரிமம் பெறுபவர் அது/அவர் தண்ணீர் எடுக்கும் .... ஆதாரம் வற்றிவிடுவதில் அல்லது அதில் தண்ணீர் குறைவது என்னும் காரணத்தினால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம் அல்லது வசதியின்மைக்கு அக்குறைவு அரசினரின் செயல் ஒன்றினால் அல்லது அச்செயலின் விளைவால் ஏற்பட்டிருந்தாலன்றி கம்பெனிக்கு/உரிமம் பெறுபவருக்கு அரசினர் பொறுப்பாளியாகவோ உட்பட்டவராகவோ ஆக மாட்டார்கள்.

(4) இதனால் செலுத்துவதற்குரியதான தொகைகள் எவையென்றும் அல்லது உரிமை ஊதியம் ஏதேனும் அல்லது அவற்றில் ஒன்றுவதும் அல்லது இவற்றில் ஒன்றில் ஒரு பாகத்திலாவது அது, சட்ட முறையில் செலுத்தத்

[நி.ஆ. 11: அ. பத்தி 9

படுமாறு கேட்கப்பட்ட பின் அடுத்து பதினைந்து நாட்கள் காலம் வரையில் அது பாக்கியாக இருக்குமாயின் அல்லது கம்பெனி/உரிமம் பெறுபவர் இதன் முன் செய்துகொண்ட உடன்படிக்கைகளில் ஒன்றை அனுசரிப்பதில் அல்லது செயல் ஆற்றுவதில் தவறு இயற்றியது/இயற்றினர் என்றால், முன் சொன்னவற்றில், யாதொன்றிலும் இதனால் வழங்கப் பெற்றதை நிர்ணயிக்கும் பொருட்டு, அரசினர் எழுத்து வடிவில் கம்பெனிக்கு/உரிமம் பெறுபவர்க்கு/அதன் அவர் பதிவான அலுவலகத்திற்கு/கடைசியில் இருந்ததாகத் தெரியவரும் முகவரிக்கு அறிவிப்பு அஞ்சல் பதிவு செய்து அனுப்புவது அல்லது அவவிடத்தில் விட்டுவைப்பது நியாயமான தாகும். ஆயினும், கம்பெனி/உரிமம் பெற்றவர் உடன்பட்டதாய் இதில் அடங்கியுள்ள உடன்படிக்கைகளில் ஒன்றை அது/அவர் முன்னமே மீறியதாக அரசினர் எடுக்கத்தக்கதான நடவடிக்கை அல்லது மேற்கொள்ளும் பரிகாரத்தைச் செய்யும் உரிமையைப் பாதிக்காதவாறு, இதனால் வழங்கப்பட்ட உரிமம் உடனே முடிவு அடைந்துவிட்டதாக நிர்ணயிக்கப் பெறும். அவ்வாறு இல்லையாயின் முன்சொன்ன.....ல் இருந்து கம்பெனி/உரிமம் பெறுபவர் தண்ணீர் எடுத்துப் பயன் ஆக்குவதைத் தடுத்து நிறுத்திவிடலாம். இவ்வாறு செய்யும்பொருட்டு, பாக்கியில் இருக்கக்கூடிய தொகைகள், அவ்வாறு தடுப்பது அல்லது நிறுத்திவிடுவதைப் பற்றிச் செலவாகும் தொகை முழுமையும் செலுத்தும் வரையில், அவசியமான அத்தகைய அணைகள், மதகுகள், வாயில்கள் மற்றும் இதர பணிகள் செய்து/அமைக்கப் பெறும்.

இதற்குச் சான்றாக மேலே முதலில் எழுதியுள்ள .... ஆண்டு .... (மாதம்) .....தேதியில் தமிழ்நாடு கவர்னரின் சார்பாகவும் அவர்களின் ஆணையின் கீழும் கட்டளையின் கீழும் பணியாற்றும் கலெக்டராகிய மேற் பார்வைப் பொறியாளராகிய ..... தமது கையொப்பத்தையும் உரிமம் பெறுபவரும் அலுவலர் முத்திரையும் இடுகிறார். மேலும் தங்கள் கையொப்பமும் கம்பெனியின் பொது அலுவல் முத்திரையும் இதனுடன் இடம் பெறுகிறது/ இடுகிறார்கள்.

..... முன்னிலையில் மேலே பெயர் குறித்துள்ள கலெக்டர் மேற்பார்வை பொறியாளரால் கையொப்பமும் முத்திரையுமிட்டு ஒப்படைக்கப்பட்டது ....

முன்னிலையில் கம்பெனியின் பொதுவான அலுவல் முத்திரை இதில் இடப் பட்டுள்ளது அல்லது .....

.... முன்னிலையில் மேலே பெயர் குறித்துள்ள .. கையொப்பமும் முத்திரையிடப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

(1940-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் தேதி, 1840 எண், அ.ஆ.வரு.)

(1940-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ஆம் தேதி, 127 எண், வ.து.வா.செ. அச்சு.)

(1956-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ஆம் தேதி, 3200 எண், அ.ஆ.வரு.பல.)

(1956-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதி, 1327 எண், வ.து.வா. செ.பல.)

நி. ஆ. 4, பத்தி 13]

எண் 7.

[11-அ. ஆவது நிலை ஆணை 3, 5 பத்திகள்].

தண்ணீரை உபயோகிக்கக் கொடுக்கப்படும் உரிமங்களுக்கு விதிக்கப்படும் கட்டணங்களின் கேட்பு, வசூல், நிலுவைப் பதிவேட்டின் படிவம்.

கேட்பு.			வசூல்.		நிலுவை.		
வரிசை எண்.	தாலூகா.	விபரங்கள்.	பாக்கி.	நடப்பு.	மொத்தம்.	பாக்கி.	நடப்பு.	மொத்தம்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)

எண். 8.

[4-ஆவது நிலை ஆணை 13-ஆவது பத்தி.]

ஒதுக்கக் காடுகளின் ஓடைகளிலிருந்து நீர் பாய்ச்சிக் கொள்வதற்கு வழங்கப்படும் உரிமங்களின் பதிவேட்டின் படிவம்.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
வரிசை எண்.	உரிமம் பெறுபவரின் பெயரும் முகவரியும்.	தாலூகா.	கிராமம்.	ஆதாரம் (இங்கே ஓடையைப் பற்றிய விவரங்களையும் கண்ணோரத் திருப்பிக் கொள்ள அலுமதிக்கப்பட்ட இடத்தையும் பற்றிய விவரங்களையும் குறிக்க.)	நீர் பாய்ச்சிக் கொள்ள அலுமதிக்கப்பட்ட நிலங்களின் அளவை எண்கள்.	கண்ணோர் நீர்வைபோடு நீர் வழியிக்கப்பட்ட உரிமக் கட்டணம் ஏதேனும் இருந்தால் அது.	குறிப்புரை (இதற்குரிய தனி நிபந்தனைகள் எவையே இருந்தால் இங்கே குறிக்க.)

[தி. ஆ. 11 அ., பத்திகள் 5, 7

எண் 9.

[11-அ நிலை ஆணை 3-ஆவது பத்தி.]

(பசை செய்தல் உட்பட்ட) மனை வாழ்க்கை உபயோகங்களுக்காகக் கொடுக்கப் படும் உரிமங்களின் பதிவேடு.

(1) வரிசை எண்.	(2) பெயர்.	(3) தாலுகா.	(4) கிராமம்.	(5) கண்ணோட்டத் திருப்பிக் கொள்ள எந்த ஆதாரத்தில் விருந்து அனுமதிக்கப்பட்டது என்பதா ஆதாரத்தின் அலை எண்.	(6) ஆணையின் எண், தேதி.	(7) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம்.	(8) நிபந்தனைகள்.	(9) குறிப்புரை.

மனை வாழ்க்கைகளுக்கான உபயோகங்கள்.
பொறியியல் பணித்துறை ஆதாரங்கள்.
வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள ஆதாரங்கள் பசை செய்வது.
பொறியியல் பணித்துறை ஆதாரங்கள்.
வருவாய் துறையின் பொறுப்பி ள் ஆதாரங்கள்

எண் 10.

[11-அ நிலை ஆணை 5, 7 பத்திகள்.]

தண்ணீரை உபயோகிப்பதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளின் குறிப்பு முதலியவற்றின் உடன்படிக்கைப் பதிவேடு.

(1) வரிசை எண்.	(2) உரிமம் பெறுபவரின் பெயர்.	(3) தாலுகா.	(4) கிராமம்.	(5) ஆதாரத்தின் அலை எண்.	(6) உபயோகம் யாதென்பது சுருக்கம்.	(7) அதிகாரம்.	(8) குறிப்புரை (இதற்குரிய தனி நிபந்தனைகள் எவையே னும் இருக்குமாயின் இங்கே குறிக்க).

தொழில் நிலையங்கள்.
தகராட்சிகள்.
இருப்புப் பாதைகள்.

தி. ஆ. 11 அ. பத்தி 9]

எண் 11.

[11-அ நீதிக் ஆணை 9-ஆவது பத்தி.]

தீர் மின்சார வலனே உண்டாக்குவதற்காகக் கொடுக்கப்படும் உரிமம்களின் பதிவேடு.

(1) வரிசை எண்.	(2) கம்பெனியின் பெயர்.	(3) ஆதாரத்திலிருந்து பயனைப் பெறுகிற தண்ணீர் அந்த ஆதாரத்தின் பெயர்.	(4) எத்தனை குதிரை வேகம் கிறது.	(5) அதிகாரம், அரசு ஆணையின் தேதி, எண்.	(6) குறிப்புரை.

1930 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி, 1190 எண், அ.ஆ.வரு.

1930 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் தேதி, 40 எண், வ.து.வா.செ.

1932 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி, 3779 எண், வ.து.வா. செ. பலவ.

Verified by RegEstate ™

[நி. ஆ. 12 பத்தி 6

இணைப்பு (1).

[12 ஆவது நிலை ஆணை, 6 ஆவது பத்தி.]

அரசுக் குடிக்கிராமங்களின் ஜமாபந்தித் தணிக்கைக் குறிப்பு (திருத்தியமைக்கப்பட்டது).

பிரிவு I

நிலையான பதிவேடுகளும் மற்றப் பதிவேடுகளும்.

அ. பதிவேடு.

1. 3 எண் கணக்கில் பதிவு செய்யப்பெற்றுள்ளவை உட்பட எல்லாப் புதுப் புலங்களும் எல்லாப் புது உட்பிரிவுகளும் ஒப்பளிப்புப் பெற்ற மற்ற நிலையான மாறுதலகளும், ஒப்பளிப்பு ஆணையின் தேதி, எண் உட்பட தேவையான எல்லா விவரங்களும் குறிப்புரை முறையில் கட்டத்தில் அல்லது கிராமப் பிரதிப் பதிவேட்டின் எழுதாத இதழ்களில் உரியமுறையில் குறிக்கப் பெற்றுள்ளனவா?

புதிதாய் ஏற்பட்ட புலன்கள், அவை எந்தப் புலங்களிலிருந்து உண்டாயினவோ அவற்றின் எதிரிலும் பதிவேட்டின் எல்லாக் கட்டங்களிலும் பதிவேட்டின் இறுதியிலும் அவ்வாறுகப் பூர்த்தி செய்து குறிக்கப் பெற்றுள்ளனவா?

கீழ்க்கண்டவற்றில் தாலுகாப் பிரதி கிராமப் பிரதியுடன் ஒத்திருக்கிறதா?

(அ) முழுப் புலங்களையும் பதிவு செய்யப்பட்டு உட்பிரிவுகளையும் பற்றிய நிலையான மாறுதல்கள்.

(ஆ) வருவாய் பதிவேட்டு வரைவாளர் ஆய்ந்து பார்த்துத் தாலுகா நில அளவைச் சுவடியில் அளந்து வரைந்து புதுப் புலங்களும் உட்பிரிவுகளும்.

குறிப்பு:—தாலுகா நில அளவு பணியாளர் அளவு சரிபார்த்துக் கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டவை நில அளவு மாவட்ட அலுவலரால் ஆய்ந்து பார்க்கப்பட்டு, தாலுகா நில அளவைச் சுவடியில் இன்னும் அளந்து வரையப்படாதவற்றை பொறுத்த மட்டில், 'அ' பதிவேட்டின் இரு பிரதிகளும் ஒவ்வா.

2. தடை ஆணைப் புத்தகத்தில் பதிவாகியுள்ள எல்லாப் புலங்களும் 15-ஆவது நிலை ஆணை 2 ஆவது பத்தியில் விதிக்கப்பட்டுள்ளவாறு நிலவரித் திட்டப் பதிவேட்டிலும் அடங்கலிலும் குறிக்கப் பெற்றுள்ளனவா; அவற்றில் ஏதாவது தடை ஆணைப் புத்தகத்தில் உள்ள அறிவுரைகளுக்கு மாறுக ஒப்பனை செய்யப் பெற்றுள்ளதா?

1934ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் நாநி, 148, வ. து. வா. செ. அச்சு.

3. கட்டடங்கள், கிணறுகள், அவை போன்ற விவரம் குறிப்புரைப் பத்தியில் குறிக்கப் பெற்றுள்ளனவா?

4. பாதைகள், வாய்க்கால்கள், மரங்கள் இவை போன்றவை புலங்களில் உட்பிரிவு செய்யப்படாமல் ஒதுக்கப்படுவதற்குட்பட்டு, ஒப்பனை செய்யப்பட்ட

நி. ஆ. 12 பத்தி 6]

நிலங்களைப் பொறுத்த வரையில் அவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்டது நிலையான 'அ' பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளதா ?

5. (அ) பதிவேட்டின் கிராமப் பிரதியின் உள்ளடக்கம் நாளது தேதி வரையில் எழுதப் பெற்றுள்ளதா ?

(ஆ) புதிதாக நகர அளவை ஆன அரசக்குடி கிராமங்களின் புலங்கள் அளவை எண்கள் அ பதிவேட்டு ஆவது பாகத்திலிருந்து விலக்கப்பட்டு நகர அளவை விவரங்களுடன் ஆவது பாகத்தில் சேர்க்கப்பட்டுள்ளனவா ?

(1959ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி, 3396 எண், அ.ஆ.வா.பல.)

(1960ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் தேதி, 38 எண், வ.து.வா.செ.) பலவ.

'ஆ' பதிவேடு (இனம் பதிவேடு).

6. எல்லா உட்பிரிவுகளும், 3 ஆவது எண் கணக்கில் பதிவு செய்யப்பட்ட மற்றெல்லா நிலையான மாறுதல்களும 'ஆ' பதிவேட்டின் கிராமப் பிரதியில் ஒப்பளிப்பு ஆணையின் எண் தேதியுடன் உரிய முறையில் குறிக்கப்பெற்று உள்ளனவா ?

கீழ்கண்டவற்றில் கிராமப் பிரதியும் தாலூகா பிரதியும் ஒத்திருக்கின்றனவா ?

(அ) முழுப் புலங்களையும் அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள உட்பிரிவுகளையும் பற்றிய நிலையான மாறுதல்கள்

(ஆ) வருவாய்ப் பதிவேட்டு வரைவாளர் ஆய்ந்து பார்த்துத் தாலூகா நில அளவைச் சுவடியில் அளந்து வரைந்த புதுப் புலங்களும், உட்பிரிவுகளும்.

7. உரிமை பெற்ற இனங்கள் அல்லது மற்றவற்றில் 'ஆ' பதிவேடு தாலூகா விடுவிப்பதிவேட்டுடனும், கலெக்டர் அலுவலகத்திலுள்ள இனங்களின் சுத்தப் பதிவேட்டுடனும், சரிபார்க்கப் பெற்று வித்தியாசங்கள் சரி செய்யப்பட்டனவா ? (கலெக்டர் நடத்தும் ஐமாபந்திக்கு மாத்திரம்).

(1936ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் தேதி, 48 எண், வ.து.வா.செ.)

8 (அ) 1963-ஆம் ஆண்டு தமிழ் நாடு 30 ஆவது சட்டத்தின் 21 ஆவது பிரிவின் கீழ் பணி நிபந்தனைகள் விதிக்கப்பட்ட நிலங்கள் யாவும் இந்தப் பதிவேட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனவா ? இந்தப் பதிவேட்டின் நகல் ஊரில் பேணி வரப்படுகின்றதா ?

(ஆ) ஊருக்கு வரும்போது வருவாய் ஆய்வாளர் துணை வட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர் ஆகியோரால் இந்த ஊர்ப் பதிவேடு சரிபார்க்கப் படுகின்றதா ? அவ்வாறுயின் அதன் முடிவு யாது ?

(இ) பணிநிபந்தனையோடு கூடிய நிலத்தை வைத்திருப்பவர்கள் பணி புரியத் தவறியது எதாவதிருப்பின் அதனை அறிவிக்கை செய்யவும் 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு 30 ஆவது சட்டம் 21(6)(ஆ) அல்லது 21(7)(ஆ) பிரிவின் கீழ் வேண்டியுள்ளவாறு ஒரு சாற்றறிக்கை வெளியிடவும் கோட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துள்ளாரா ?

[நி. ஆ. 12 பத்தி 6

(ஈ) அவ்வூரில் 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு இனங்கள் (ஒழிப்பு அரசுக் குடிமுறையாக மாற்றுச்) சட்டம் 8(2)(1)(ஆ) பிரிவு, 21(3)(1)(அ) பிரிவு ஆகியவற்றின் கீழ் வருகின்ற நேர்வுகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

2. இதில் உட்பட்ட புலங்களின் மொத்த எண்ணிக்கையும் அவற்றின் பரப்பும் என்ன?

3. அச்சட்டத்தின் 8(2)(1)(ஆ) பிரிவு 21(3)(1)(அ) பிரிவு ஆகியவற்றின்கீழ்ப் பட்டாவின் பேரில் கொடுக்கப்பட்ட நேர்வுகள் குறித்து அவ்வூரிலிருந்து வரவேண்டிய மொத்தக் கேட்பு மதிப்பு என்ன?

4. செய்யப்பட்ட மொத்தத் தண்டல்களின் தொகை என்ன?

5. நிலுவைத் தொகை என்ன? மேலும் ஏன் அத்தொகை இன்னும் நிலுவையில் உள்ளது?

(1) 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் நாளும் 2279 எண்ணுமிட்ட நிலை அ.ஆ.வரு.

(2) 1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் நாளும் 1489:68 (க) எண்ணுமிட்ட நிலை வ.வா.செ.

(3) 1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாளும் 11 எண்ணுமிட்ட திருத்தச் சீட்டு.

நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படைப்புகளின் பதிவேடு

9. நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படைப்புகளின் கிராமப் பதிவேடு சரிவரவும் நாளது வரையிலும் எழுதப் பெற்று வருகின்றனவா? அவ்வாறுஞல் ஒப்படை நிபந்தனைகளில் எதாவது ஒன்று மீறப்பட்டால் அதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பெற்றுள்ளதா?

10. கிராமப் பதிவேடு அடங்கலின் 2 ஆவது எண் கிராமக் கணக்கின் குறிப்புரைக் கட்டத்திலுள்ள பதிவுகளுடனும் தாலுகா அலுவலகக் கட்டுகளுடனும் சரிபார்க்கப் பெற்றதா? சரி பார்த்ததில் சரியாக இருப்பதாகத் தெரிகிறதா?

11. தமது சுற்றுப்பயணத்தில் நில வருவாய் ஆய்வாளரோ தாசில்தாரோ அல்லது துணைத் தாசில்தாரோ கிராமப் பதிவேட்டை ஆய்வு செய்துள்ளாரா? நிபந்தனைகள் இருக்குமாயின் அவற்றில் ஏதேனும் மீறப் பட்டுள்ளதா என்று கண்டுபிடிக்கும் பொருட்டு நிபந்தனைக்குட்பட்ட நில ஒப்படைகளில் ஒரு கணிசமான சத விகிதத்தை அவர்கள் சரிபார்த்துள்ளார் களா?

கீழ்க்கண்ட விவரங்களையும் கொடுக்க—

ஒப்படைகளின் எண்ணிக்கை

நில வருவாய் ஆய்வாளர் பார்வையிட்டவற்றின் எண்ணிக்கை.

தாசில்தார் பார்வையிட்டவற்றின் எண்ணிக்கை

ஒப்படைகளின் மொத்த பரப்பு.

விவசாயமான பரப்பு.

நி. ஆ. 12 பத்தி 6]

தரிசாக இருக்கும் பரப்பும் மற்ற விவரமும்.

அதில் முழுப் புலம்.

பகுதியாக உள்ள புலம்.

1929 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் ஒப்படைக்கப் பெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளாகத் தரிசாக இருப்பவை.

சந்தன மரங்களின் பதிவேடு.

12. இந்தப் பதிவேட்டை நில வருவாய் ஆய்வாளரோ தாசில்தாரோ அலல்து துணைத் தாசில்தாரோ தமது பயிராய்வின்போது ஆய்ந்து பார்த்துள்ளனரா? உண்மை தெரியத்தக்க முறையில் அவர்கள் மரங்களைச் சரி பார்த்திருப்பதாகத் தோன்றுகிறதா?

குறிப்பு.—இப்பிரத்தியேகமான பதிவேடு எழுதி வைக்க வேண்டாத மாவட்டங்களில் ஜமாபந்தி அலுவலர் இக்கேள்வியை அடித்துவிடலாம்.

1936 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 16-ஆம் தேதி, 41 என், வ.து.வா.செ. அச்சு.

வீட்டு மனைப் பதிவேடுகள்.

13. வீட்டு மனைப் பதிவேடுகள் சரியாக எழுதி வைக்கப்பட்டு வருகின்றனவா? ஒப்படை ஆணையின் நிபந்தனைகள் நிறைவேற்றப் பெறுதவற்றில் அவற்றைச் செயற்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பெற்றுள்ளன?

14. (அ) வீட்டு மனை ஒப்படைக்கு ஒப்பளிப்பு பெற்ற தரைப் படம் இருக்கின்றதா (ஒப்பளிப்பு ஆணையின் எண் , தேதி இவற்றைக் குறிக்க).

(ஆ) ஒப்பளிப்பு பெற்ற தரைப் படத்துக்கிணங்க ஒப்படைகள் உரிய முறையில் செய்யப் பெற்றுள்ளனவா?

(இ) கிராம ஒப்படைப் பதிவேடும் தரைப்படமும் தாலுக்காப் பதிவேட்டுடனும் தரைப் படத்துடனும் சரி பார்க்கப் பெற்றுள்ளனவா?

1937 ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் தேதி, 38 என், வ.து.வா.செ. அச்சு.

15. (1) (i) அவரவர்களுக்கே சொந்தமான வீட்டு மனைகள் இல்லாதவர்களான அட்டவணையில் கண்ட ஜாதியினரும் அட்டவணையில் கண்ட மலைவாழ் மக்களும் கிராமத்தில் இருக்கின்றனரா? இருப்பின் அவர்களின் எண்ணிக்கை எத்தனை?

(ii) அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கும் அட்டவணையில் கண்ட மலைவாழ் ஜாதியினருக்கும் ஒப்படைக்கத் தகுதியான வீட்டு மனைகள் உள்ளனவா? உள்ளனவாயின், அவற்றின் அளவை என், பாகுபாடு, பரப்பு இவ்விவரங்களையும் அவ்வீட்டு மனைகள் தற்போது எவ்வாறு பயனுகின்றன என்ற விவரங்களையும் கொடுக்க.

(iii) (அ) அரசினர் வசமுள்ள நிலங்களில் ஒப்படை செய்யப்பட்ட விட்டு மனைகள் எத்தனை? அவற்றில் வீடுகள் கட்டப்பட்டவை எத்தனை?

(ஆ) வீட்டு மனைகளாக ஒப்படை செய்வதற்காக உரிமை பெறப் பட்ட தனிப்பட்டவர் நிலங்களின் பரப்பு என்ன? அவற்றில் உண்மையில் ஒப்படை செய்யப்பட்ட வீட்டு மனைகளில் பரப்பும் எண்ணிக்கையும் என்ன? அவற்றில் கட்டிய வீடுகளின் எண்ணிக்கை எத்தனை?

(இ) அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கும், அட்டவணையில் கண்ட மலைவாழ் ஜாதியினருக்கும் ஒப்படை செய்யப்பட்ட விட்டு மனைகளில் வீடு கட்டத் தவறியதற்கு அல்லது வீடு கட்ட ஏற்பட்ட தாமதத்திற்குக் காரணங்கள் என்ன?

(2) அவ்வாறுயின், 1931 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி, 46 எண், வருவாய்த் துறை வாரிய அச்சுச் செயல் முறைகளில் குறிப்பிட்ட பதிவேடு எழுதி வைக்கப்பட்டு வருகிறதா? தாலூகாப் பதிவேட்டுடன் ஒத்துப் பார்த்திடுக. (கேட்பு, வசூல், நிலுவையைக் காட்டக்கூடிய விவரப் பட்டியல் ஒன்றைத் தயாரித்துப் பாக்கியை வசூல் செய்ய எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுக.)

(3) நில வருவாய் ஆய்வாளரோ, தாசில்தாரோ அல்லது துணைத் தாசில்தாரோ தமது சுற்றுப் பயணத்தில் கிராமப் பதிவேட்டை ஆராய்வு செய்தார்களா? நிபந்தனைகள் இருக்குமாயின் அவற்றில் ஏதேனும் மீறப் பட்டுள்ளதா என்று கண்டு பிடிக்கும் பொருட்டு நிபந்தனைகளுக்குட்பட்ட நில ஒப்படைகளில் ஒரு கணிசமான சதவிகிதத்தை அவர்கள் சரிபார்த் தார்களா?

1939 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி, 38 எண், வா.து.வா.செ.அச்சு.

நீண்டகால குத்தகை முறையில் உள்ள நிலங்கள்.

16. குத்தகை முறையில் உள்ள நிலங்களின் பதிவேடு சரியாக எழுதி வைக்கப் பெற்று வருகின்றதா? இதில் நீண்ட கால குத்தகைகளும், குறுகிய கால குத்தகைகளும் வெவ்வேறு பிரிவுகளில் தாலூகா (இ) பதிவேட்டில் எழுதப்பட்டிருப்பதற்கு ஒப்பு எழுதப் பெற்றுள்ளதா? (இ) பதிவேட்டுடன் ஒத்துப் பார்த்ததில் கிராம 2-ம் எண் கணக்கில் குறிப்புரை கட்டத்தில், குத்தகைக்குச் சம்பந்தமான பதிவுகள் சரியாகவும் நாளது தேதி வரையிலும் சரிவர எழுதப் பெற்றுள்ளதா?

நீண்ட நிலக் குத்தகைகள் பதிவேடு.

17. தாலூகா 13 எண் பதிவேட்டுடன் ஒத்துப் பார்த்ததில், கிராம நீண்ட நிலக் குத்தகைப் பதிவேடு நாளது தேதி வரையில் சரிவர எழுதி வைக்கப் பெற்றுள்ளதா?

1934 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி, 13 எண், வ.து.வா.செ. அச்சு.

1926 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் தேதி, 44 எண், வ.து.வா.செ.

18. தனிப்பட்டவர் அல்லது நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் விட்டு வைக்கப்பட்டுள்ள நிலங்களின் பதிவேடு சரிவர எழுதி வைக்கப் பெற்று

நி. ஆ. 12 பத்தி 6]

வருகிறதா? அவ்வாறு விட்டு வைக்கப்பட்டவை எல்லாம் இப்பதிவேட்டில் உள்ளனவா? இப்பதிவேடு தாலூகா பதிவேட்டுடன் (பதிவேடு 'ஊ') ஒத்துப் பார்த்ததில், ஒத்து இருப்பதாகத் தோன்றுகிறதா?

19. கொடை ஆணையின் நிபந்தனைகள் நிறைவேற்றப் பெற்றுள்ளனவா? இல்லையாயின் நிபந்தனைகளை மீறப்பட்டவற்றில் எடுத்த நடவடிக்கை என்ன?

மீன் குத்தகைப் பதிவேடு.

20. பாக்கி குத்தகைப் பதிவேடு சரியாக எழுதி வைக்கப் பெற்றுள்ளதா? தக்க காலத்தில் மீன் குத்தகை விடப்பட்டுள்ளதா என்பதைப் பற்றியும் குத்தகை நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட அவை பொதுவாகக் கட்டாயப் படுத்தப்பட்டனவா என்பதைப் பற்றியும் குறிப்பிடுக.

1941ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் தேதி, 43 என், வ.து.வா.செ. அச்சு.

ஏலத்தில் அரசினர் எடுத்துக்கொண்ட நிலங்களின் பதிவேடு.

18-அ என் பதிவேடு

21. இப்பதிவேடு சரிவர எழுதி வைக்கப் பெற்றுள்ளனவா? வருவாய்த் துறை வாரிய 45 (4) ஆவது நிலை ஆணையில் வகுக்கப்பட்டுள்ள அறிவுரை களுக்கு இணங்க நிலங்களைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதா என்று ஆராய்வு செய்க. முந்திய உரிமையாளர் அல்லது அவர் வழியுரிமை பெற்றவர் குறித்த காலத்துக்குள் அந்த நிலத்திற்காக விண்ணப்பம் செய்து கொள்ளத் தவறி விட்டவற்றில் அல்லது நிலம் அவருக்குத் தேவையில்லாதவற்றில் எந்நிலங்கள் மறு விற்பனை செய்யப்பட வேண்டும் அல்லது சாதாரண கிராமத் தரிசாக மாற்றப்பட்டு அவ்வப்போது திருத்தப்படும் வருவாய்த் துறைக் கழக 15ஆவது நிலை ஆணையின்கீழ் ஒப்படை செய்யப்பட வேண்டுமோ அதை ஆராய்வு செய்க.

22. தெடுஞ்சாலைகளின் சாலை விளிம்புகளைக் குத்தகைக்கு அல்லது உரிமம் கொடுக்கப்பட்டவற்றில் வருவாய்த்துறைக்கு வர வேண்டிய கட்டணங்களை வசூலிப்பதைக் கவனிக்க. 1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி, வருவாய்த்துறை வாரிய 462 என் கை.ப. செயல் முறைகளில் குறிப்பிட்டுள்ள பிரத்தியேகமான பதிவேடு சரிவர எழுதி வைக்கப் பெற்று வருகின்றதா? சாலைகள் எந்த மாவட்டக் கழக எல்லையில் அல்லது பஞ்சாயத்தின் எல்லையில் உள்ளனவோ அந்த மாவட்டக் கழகத்துக்கு அல்லது பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படத்தக்க குத்தகைத் தொகையில் அல்லது உரிமைக் கட்டணத்தில் ஒரு பாதி சம்பந்தப்பட்ட தல ஆட்சிக் கழகத்திற்குக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறதா?

கிராம அலுவலர்களிடம் உள்ள பதிவேட்டைத் தாலூகா அலுவலகத்தில் எழுதிவைத்து வரும் பதிவேட்டுடன் ஒத்துப்பார்த்ததில் அது சரியாக இருப்பதாகத் தோன்றுகிறதா?

1950ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் தேதி, 38 என், வ.து.வா.செ. அச்சு.

[நி. ஆ. 12 பத்தி 6

புள்ளி விவரப் பதிவேடு.

23. மிகக் கடைசியாக உள்ள அறிவுரைகளுக்கிணங்க கிராமப் புள்ளி விவரப் பதிவேடுகளின் பல்வேறு பிரிவுகள் எழுதப்பெற்று வருகின்றனவா?

பிரிவு II

எல்லை வரையறுத்தலும் வரை படங்களும்.

24. அளவைக் கல் பதிவேடுகளும் எல்லை வரையறுக்கும் வரைபடம் அல்லது விளக்கப் படங்களும் சரிவர வைக்கப்பட்டுள்ளனவா?

25. நில அளவைக் கற்களின் மொத்த எண்ணிக்கை :—

ஆண்டில் கிராமக் கணக்கர்கள் சரிபார்க்க வேண்டிய கற்களின் எண்ணிக்கை.

ஆண்டில் கிராமக் கணக்கர்கள் சரி பார்த்த கற்களின் எண்ணிக்கை.

ஆண்டில் தாலுகா நில அளவுப் பணியாளர், வருவாய் ஆய்வாளர் சரிபார்த்த கற்களின் எண்ணிக்கை.

ஆண்டில் நில அளவை மாவட்ட அலுவலர்/தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் சரி பார்த்த கற்களின் எண்ணிக்கை.

26. புதுப்பிக்க வேண்டிய அல்லது பழுது பார்க்க வேண்டிய கற்களின் எண்ணிக்கை.

குடிகளே கவனித்த கற்களின் எண்ணிக்கை.

தாலுகா நில அளவுப்பணியாளர் தலத்தில் சரி பார்த்த கற்களின் எண்ணிக்கை.

தாலுகா நில அளவுப்பணியாளர் புதுப்பித்த அல்லது பழுது பார்த்த கற்களின் எண்ணிக்கை.

27. முந்திய ஆண்டின் பாக்கி உட்பட கவனிக்க வேண்டிய உட்பிரிவு செய்யப்படவேண்டியவற்றின் எண்ணிக்கை.

தாலுகா நில அளவுப்பணியாளர் ஆண்டில் அளந்து சரிபார்த்தவற்றின் எண்ணிக்கை.

பாக்கி.

28. தாலுகா நில அளவுப்பணியாளர்/வருவாய் ஆய்வாளர், நில அளவு மாவட்ட அலுவலர்/தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் கற்களின் இருப்பை கல் இடங்குப் பதிவேட்டுடன் சரி பார்த்திருக்கிறாரா? அவ்வாறு பார்த்ததின் முடிவு பற்றித் தாலுகாப் பதிவேட்டில் சரியாய் பதிவு செய்யப் பட்டுள்ளதா?

29. கிராமக் கணக்கர் தமது நில அளவைக் கருவித் தொகுதி முழுவதையும் கிராம வரைப் படங்களையும் நல்ல நிலைமையில் கொணர்ந்து காட்டுகின்றாரா?

30. கிராமக் கணக்கரிடம் உள்ள நில அளவைச் சுவடியும், தாலுகா அலுவலகப் பிரதியும் நல்ல நிலைமையிலும் நாளது தேதி வரையிலும் பதிவு செய்யப்பட்டு வைக்கப்பெற்று வருகின்றனவா? அவற்றில் எதிலேனும் அளவு வரைவு செய்யப்பட வேண்டிய உட்பிரிவு வரைவு செய்யப்படாமல் உள்ளதா? 3 எண் விவரப் பட்டியலுடன் ஒத்துப் பார்க்க.

நி. ஆ. 12 பத்தி 6]

31. கிராமத்தில் எழுதி வைத்து வரும் பதிவேடு நில அளவு மாவட்ட அலுவலர் தணிக்கை செய்து குறித்துள்ள குறைபாடுகள் சரியாகத் திருத்த மாகிவிட்டனவா? (கிராமத்தில் எழுதி வைத்து வரும் பதிவேடுகளை நில அளவு மாவட்ட அலுவலர் செய்த தணிக்கைக் குறிப்புகளுடன் சரி பார்த்து அதன் மூடிவைக் குறிக்க.)

(1938ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி. 102 என். வ.து.வா. செ.அச்சு.)

பிரிவு III

விவசாய சம்பந்தமான கணக்குகள்.

கைப்பற்று நிலமும் நில வருவாய்க் கேட்புத் தொகையை நிர்ணயிப்பதும்.

32. விவசாயக் கணக்கும் அதன் உள்ளடக்கமும் வருவாய் ஆய்வாளருக்கு பிரதி மாதமும் அனுப்பப்பட்டனவா? அவர் அவற்றைத் தாமதமின்றித் திருப்பி அனுப்பி வந்தனரா?

32. 1 எண் விவரப் பட்டியலிலும் அதன் உள்ளடக்கத்திலும் கண்டுள்ள விவசாயப் பாப்பு அடங்கலில் கண்டுள்ள விவசாயப் பாப்புடன் ஒத்திருக் கிறதா?

2 விவரப் பட்டியல் (அடங்கல்).

33 (அ) (i) அப்பசலியின் பயிரிடும் பருவத்தில் பயிரிடப்படாத பட்டா நிலங்கள் எல்லாம், அவற்றின் உரிமையாளர்கள் அல்லது அவற்றில் அக்கறை கொண்டுள்ளவர்களின் மூகவரிகளுடன் பதிவேட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளனவா? இப்பட்டிகள் அடங்கலில் உள்ள பதிவுகளுடன் சரி பார்க்கப் பட்டுள்ளனவா? அவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தமிழ்நாடு நிலப்பயன் பாட்டுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைக்காகப் பணிந்தனுப்பப்பட்டுள்ளனவா?

(ii) 1961 ஆம் ஆண்டு நிலப்பயன்பாட்டுச் சட்டத்தின் கீழ்க் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களெல்லாம் பயிரிடப்பட்டுள்ளனவா? அவ்வாறுயின், நிலங்களைக் குத்தகைக்கு விட்டதன் விளைவாகக் கூடுதல் உணவு உற்பத்தி என்ன?

1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி, 2208 என், நிலை அ.ஆ.வரு.
1968 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி, 125 (க) என், வா.வா.செ.
1968 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி, 1 என், திருத்தச்சிட்டு.

34. விவசாய மாதமும், தானிய மதிப்பும் சரிவர குறிக்கப்பட்டுள்ளனவா?

35.—

புலன்களின் எண்ணிக்கை.	வருவாய் ஆய்வாளர் பயிர் ஆய்வு செய்த புலன்களின் எண்ணிக்கை.	பயிர் மேல் ஆய்வு செய்த புலன்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
(அ) (i) நன்செய் விவசாய மான தரிசு.		
(ii) புன்செய் விவசாய மான தரிசு.		
(iii) தீர்வை விதிக்கப் படாத தரிசு.		
(iv) புறம்போக்கு ..		
(ஆ) பயிராய்வு அல்லது மேலாய்விலிருந்து கிராமக் கணக்கர் வேலையில் அல்லது தருவாய் ஆய்வாளர் வேலையில் குறைபாடுகள் எவையேனும் காணப்படுகின்றனவா :		

36. (அ) சென்ற ஜமாபந்திக்குப் பின்னர் உரிமை விட்டுவிடப்பட்ட வற்றிலும் மாறுதல்களாலும் அவை போன்றவற்றிலும் உண்டான மாறுதல்கள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளனவா ? உரிமை விட்டுவிடப்பட்ட வற்றில் வருவாய் ஆய்வாளர் நிலத்தைப் பார்வையிட்டுள்ளாரா ?

(ஆ) புதிதாக நகர அளவையான அரசுக்குடி கிராமங்களின் பாகங் களைப் பொறுத்த மட்டில் அடங்கல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதா ?

1959 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி, 3896 என், அ.ஆ.வரு.பல.
1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் தேதி, 38 என், வ.து.வா.செ. பலவ.

37. அரசினரைச் சேர்ந்தவற்றில் உண்டான மாறுதல்கள் இக்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளனவா ? கணக்கில் 6 ஆவது கட்டத்தில் "தமிழ் நாடு (அரசினரைச் சேர்ந்தது) என்று குறிக்கப்பட்டுள்ளதா ? இதைத் தாலுகா விவரப் பட்டியலுடன் ஒத்துப் பார்க்க. அரசினருக்குச் சேர்ந்த நிலங்களைக் காட்டும் தாலுகா ('எ' பதிவேடு) பதிவேட்டுடன் ஒத்துப் பார்த்து மூரண்பாடுகள் எவையேனும் இருக்குமாயின் அவற்றைக் குறிக்க.

நி. ஆ. 12 பத்தி 6]

38. சமுதாயப் புறம்போக்குகளின் பல்வேறு தலைப்புகளிலும் கிராமத்தின் இப்போதைய தேவைகளுக்கும் வருங்காலத் தேவைகளுக்கும் போதுமான நிலம் உள்ளதா என்று ஆராய்வு செய்து அதன் முடிவைக் கீழ்க்கண்ட விவரப் பட்டியலில் குறிக்க :—

சமுதாயப் புறம்போக்கின் தலைப்பு.	இப்போதுள்ள ஏற்பாட்டில். நில அளவை எண்.	பரப்பு.	இப்போதுள்ள நிலம் போதுமானதா என்பதைப் பற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பற்றியும் குறிப்புரை கோட்டு ஜில்லாவும் பார்வையிட்டிருந்தால் குறிப்புரைகளும்.)	ஜமாபந்தி குறிப்புரைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
(i) கிராம நத்தம்				
(ii) பள்ளி மனை இடம் அல்லது விளையாட்டு இடம்.				
(iii) மேய்ச்சல் தரை				
(iv) களத்து இடம்				
(v) இடுகாடு				
(vi) கால்நடை நிற்குமிடம்				
(vii) பாட்டை (பாதை)				
(viii) மற்றவை (விவரம் குறிக்க).				

குறிப்பு.—சமுதாயத் தேவைக்கான நிலம் போதுமானதா இல்லையா என்று நிர்ணயிக்க உதாரணமாகச் சொல்லக் கூடிய கீழ்க் கண்டவற்றைக் கவனிக்க வேண்டும்—

(அ) கிராமத்திலுள்ள மக்கள் தொகையும் குடும்பங்களின் எண்ணிக்கையும் பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கையும்.

(ஆ) கிராமத்திலுள்ள கால் நடைகளின் எண்ணிக்கை.

(இ) விவசாயத்தின் நிலைமைகள்.

(ஈ) கிராமத்தார்களின் தொழில்.

(உ) கிராம நத்தத்திற்கு அருகில் தகுதி வாய்ந்த அரசாங்க நிலம் இடைக்குமா என்பது.

(1954 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் தேதி, 634 என், வ. து. வா இ., அச்சு. பலவ.)

[நி. ஆ. 12 பத்தி 6

2 எண் விவரப் பட்டியல் 'அ' உள்ளடக்கம்

(சிவாயிஜமா.)

39. இது 2 எண் விவரப் பட்டியலுடன் சரியாக இருக்கிறதா ?

40. முந்திய ஆண்டில் இருந்தவை இவ்வாண்டுக் கணக்குக்கு வராதவற்றை வருவாய் ஆய்வாளர் பார்வையிட்டுள்ளாரா ? தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் எத்தனை பார்த்துள்ளார் ?

41. அனுமதியின்றி தரிசு நிலங்களையும் புறம்போக்கு நிலங்களையும் அனுபோகம் செய்வது பற்றி மாதந்தோறும் அறிக்கை அனுப்பப்பட்டு தாமதமின்றி முடிவு செய்யப்பட்டுள்ளதா ?

42. சீர் தூக்கிப் பார்த்து, ஆக்கிரமிப்புகளில் நடவடிக்கையும் தண்டத் தொகைகள் விதிப்பும் மேற்கொள்ளப்பட்டனவா ? தக்க அதிகாரியால் அபராதத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு சம்பந்தமானவருக்கு அறிவித்த பின், அதிலிருந்து 30 நாட்களுக்குள் அந்தத் தொகை வசூலிக்கப் பெற்றுள்ளதா ? தடுக்கத்தக்க ஆக்கிரமிப்புகளில் அப்புறப்படுத்துதல் முறையைக் கையாளப்பட்டதா ?

குறிப்பு.—புறம்போக்கு ஆக்கிரமிப்புகள் மிக அதிகமான எண்ணிக்கை இருக்கும் யாதொரு கிராமத்தில் தாசில்தார் பிறப்பித்த ஆணைகளை ஜமாபந்தி அலுவலர் தாமாகவே ஆய்ந்து பார்க்க வேண்டும்.

(1936 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் தேதி, 85 என்,.வ.து.வா.செ.விச்சு.)

43. (அ) பசலியில் எல்லாக் கோவில் புறம்போக்குகளும் பார்வையிடப் பெற்றுள்ளனவா ?

(ஆ) அத்தகைய புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளின் பட்டியல் தனியாக வைக்கப்பட்டுள்ளதா ?

(இ) விழாக்கள் அல்லது சமய கொண்டாட்டங்கள் சம்பந்தமான தற்காலிகமான ஆக்கிரமிப்புகள் நீங்கலாக மற்ற ஆக்கிரமிப்புகளை அப்புறப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(1947 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி, 1371 என், அ.ஆ.வரு.)
(1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் தேதி, 15 என், வ.து.வா.செ.அச்சு.)

2 எண் விவரப் பட்டியலின் 'இ' உள்ளடக்கம் (வரி விதிக்கப்பட்ட மரங்கள்).

44. முன் ஆண்டுக் கணக்குடன் ஒத்துப் பார்க்க. புறம்போக்குகளைப் பார்வையிடும்போது வருவாய் ஆய்வாளர் இந்தக் கணக்கைச் சரி பார்த்து புதியதாய்ப் பருவமடைந்த மரங்கள் கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டனவா, என்பதைக் குறித்துள்ளாரா ? மரங்களின் மேல் பலன் ஏலவிற்பனை முடிவை முன் பசலி மேல் பலன் ஏல விற்பனை முடிவுடன்

நி. ஆ. 12 பத்தி 6]
ஒப்பிட்டுப் பார்த்து அதைப் பற்றிக் குறிக்க. வரி விதிக்கப்பட்ட மாகா
களையும், அரசாங்கத் தோப்புகளையும், நீண்ட நிலக் குத்தகைத் தோப்பு
களையும் வருவாய் ஆய்வாளர், தாசில்தார் அல்லது துணைத்தாசில்தார்
பார்வையிட்டுள்ளனரா ?

3 எண் விவரப் பட்டியல் (கைப்பற்றிலுள்ள நிலங்களில் மாறுதல்கள்.)

45. முடிவான நில ஒப்படைகளின் எண்ணிக்கை.

முடிவாகாமல் பாக்கி நிற்கும் பதிவு மாறுதல்களின் எண்ணிக்கை எவையேனும் அவசியமின்றி முடிவாகாமல் உள்ளனவா ? நில ஒப்படை கள் உரிமை விட்டுவிடப்பட்டவை அல்லது பதிவு மாறுதல்களை முடிவு செய்வதில் அல்லது உட்பிரிவு சுவடியில் அளவு வரைவு செய்வதில் ஏதாவது கால தாமதம் அல்லது முறைகேடு ஏற்பட்டுள்ளதா ?

அட்டவணையில் கண்ட ஜாதியினருக்குச் செய்யப்பட்ட நில ஒப்படைகளில் நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்காகச் செய்த உழைப்பு காரணமாகவும் ஏற்பட்ட செலவு காரணமாகவும் தீர்வை செலுத்துவ திலிருந்து தற்காலிகமான தீர்வை விலக்கு அளிக்கும் பிரச்சினை ஒவ்வொன் றிலும் உரிய முறையில் கவனிக்கப்பட்டதா என சம்பந்தப்பட்ட பதிவுக்கட்டு களிலிருந்து தோன்றுகிறதா ?

(1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் தேதி, 102 எண், அ.ஆ.பல.)

46. (அ) பதிவு மாறுதல் தனிப் பதிவேடுகள், அதைச் சேர்ந்த நிலப் பதிவேடுகளும் சரியாய் வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) பதிவுகளில் மாறுதல் செய்யத்தக்கவற்றில் தாசில்தாருக்கு அல்லது துணைத் தாசில்தாருக்கு கிராமக் கணக்கர் அறிக்கை செய்வதில் ஏதேனும் தாமதம் உள்ளதா ?

(இ) கிராமக் கணக்கர் அறிவித்தவற்றைத் தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் உடனடியாக முடிவு செய்துள்ளாரா ?

(ஈ) வருவாய் ஆய்வாளரும் மற்ற அலுவலர்களும் தனிப் பதிவேட்டில் கிராமக் கணக்கர் செய்துள்ள பதிவுகளைப் போதுமான அளவுக்குச் சரி பார்த்துள்ளார்களா ?

(உ) கிராமக் கணக்கர் தாம் செய்ய வேண்டியதான சுறுமம அளவுக்குக் குறையாமல் சரி பார்த்துள்ளாரா ?

(1936 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி 87 எண். வ.து.வா.செ. அச்சு.)

4. எண் விவரப் பட்டியல்

(அரசிறைக் கழிவுகள்.)

47. தாலுகா 10 எண் விவரப் பட்டியலுடன் சரி பார்த்து அதன் முடி வுக் குறிக்க.

[நி. ஆ. 12 பத்தி 6

எந்த அற்பப்பணிகளுக்காக ஆசிறைக்கழிவுகள் செய்யப்படுகின்றனவோ, அவை சரியாய் நடைபெற்று வருகின்றனவா? கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் அவற்றைச் சரி பார்த்து அவை சரிவர நடப்பதாக 4 எண் விவரப் பட்டியலின் அடியில் அதற்குச் சான்று செய்திருக்கிறாரா?

(1941 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி, 808 எண். அ.ஆ.வரு.)
(1941 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் தேதி, 66 எண். வ.து.வா.செ.அச்சு)

5. எண் விவரப் பட்டியல் (தள்ளிக் கொடுத்தல்).

48. இறவை, நிண்ட நிலக் குத்தகை வரியில்லா நிலம படிப்படியாக தள்ளிக் கொடுத்தவை, இவற்றில் தள்ளிக் கொடுக்கப்பட்டவை, சரியாய்க் கணக்குக் கொண்டு வரப்பட்டனவா?

(1936 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி, 892 அ.ஆ.வரு.)
(1936 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் தேதி, 1111, அ.ஆ.வரு.)
(1936 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் தேதி, 63, வ.து.வா.செ.அச்சு.)

6. எண் விவரப் பட்டியல்.

49. இறவை நன்செய் நிலங்களுக்கு இயல்பான ஆண்டில் அதற்காக ஏற்பட்ட பாசன ஆதாரத்திலிருந்து தாணுகப் பாய்த்தக்கதாகுமாயின் அத் தகையவற்றில் அவசியமான மாறுதல்கள் அடங்கலிலும் "அ" பதிவேட்டி லும் செய்யப் பெற்றுள்ளனவோ?

(1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் தேதி 23 வ.து.வா.செ.அச்சு.)

ஏரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன ஏரி எதாவது பழுது பார்க்கப்பட்டுள்ளதா? இவ்வாறுரல், தானாகா அலுவலகத்தில் எழுதி வைக்கப்பட்டு வரும் பதிவேட்டுடன் கிராமக் கணக்கர் எழுதி வைத்துவரும் பதிவேட்டை ஒத்துப்பார்த்து, வகுல்கள் சரிவர காட்டப்பட்டுள்ளனவா என்பதைப் பற்றிக் குறிப்பிடுக. ஏதாவது பாக்கி இருக்குமானால், எடுக்கப் பட்ட நடவடிக்கையை குறிப்பிட்டுக் காட்டுக.

50. தண்ணீர் தீர்வை விதிக்கத்தக்கவையெல்லாம் கணக்குக்கு வந்துள் ளனவா? வீதங்களும் கணக்கீடுகளும் சரியாயிருக்கின்றனவா? வருவாய்த் துறைக் கழகத்தின் 12 ஆவது நிலை ஆணை, 7 ஆவது பத்தியின் இறுதியில் விதிக்கப்பட்டுள்ளவாறு எல்லா இனங்களையும் ஒத்துப் பார்த்தும் அவசியமான சான்று கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஒழுங்கு தவறித் தண்ணீரை உபயோகித்த தற்குச் சீர்தூக்கிப் பார்த்து தண்டத் தீர்வைகள் விதிக்கப்பட்டுள்ளனவா?

(1963 ஆம் ஆண்டு, தமிழ்நாடு 8-ஆவது சட்டமாகிய) 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி விதிப்பு கூடுதல் தண்ணீர்த் தீர்வைச் சட்டம்:

51. (அ) தனிப்பதிவேடுகளாகிய கூடுதல் வரி விதிப்புப் பதிவேட்டையும் கூடுதல் தண்ணீர்த் தீர்வைப் பதிவேட்டையும் குறிப்பிட்ட படிவத்தில் கணக்கர் பேணி வருகிறாரா?

நி. ஆ. 12 பத்தி 6]

(ஆ) பதிவேடுகள் கணக்காலும் வட்ட அலுவலகத்திலும் பேணி வரப்படுகின்றனவா ?

(இ) கணக்கரால் பேணி வரப்படும் பதிவேடுகள் வருவாய் ஆய்வாளர், துணைவட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர் ஆகியோர்களால் சரி பார்க்கப் பட்டு வருகின்றனவா ?

(ஈ) கணக்கரால் பேணி வரப்படும் பதிவேடுகளில் வட்ட ஆட்சியர் பிறமேல் நிலை அலுவலர் ஆகியோரின் ஆணைகள் பதிவு செய்யப்படுகின்றனவா ?

52. (அ) கூடுதல் வரி விதிப்புப்பதிவேடும் கூடுதல் தண்ணீர்த் தீர்வைப் பதிவேடும் பட்டா வரிசையில் ஒவ்வொரு நில அளவைப் புலத்தைக் காட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளனவா ?

(ஆ) நில அளவைப் புலங்கள், உட்பிரிவுகள் யாவும் கணக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனவா ?

(இ) கூடுதல் வரிவிதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றின் கீழ், பட்டாதார் ஒவ்வொருவருக்கும் கேட்பு சரியாகக் கணக்கிடப் பட்டுள்ளதா ?

53. தனிப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டுள்ளவாறு நில உடைமையாளர் ஒவ்வொருவரும் கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகிய வற்றிற்காகச் செலுத்த வேண்டிய தொகை 10 எண் ஊர்க்கணக்கின் பிரிவு 11, 18(ஆ) கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளனவா ? (ஜமாபந்தி அலுவலரால் சில பதிவுகள் சரிபார்க்கப்பட வேண்டும்).

54. ஊர்க்கணக்கு 10 எண், பிரிவு 11 18 (ஆ) கட்டத்தில் காட்டப் பட்டுள்ள தொகை 12 எண் ஊர்க்கணக்கின் 38 (அ) புதிய கட்டத்தில் காட்டப்பட்டுள்ளதா ? (ஜமாபந்தி அலுவலரால் சில பதிவுகள் சரிபார்க்கப் பட வேண்டும்).

55. ஒவ்வொரு மாதத்திலும் தண்டல் செய்யப்பட வேண்டிய கூடுதல் வரி விதிப்பையும் கூடுதல் தண்ணீர்த் தீர்வையையும் கணக்கர் நில வருவாய்த் தற்காலிகக் கேட்புப் பட்டியில் குறித்துள்ளாரா ?

56. தனிப்பட்டவர் கேட்பு சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளதா ? (ஜமா பந்தி அலுவலரால் சில நேர்வுகள் சரிபார்க்கப்பட வேண்டும்.)

57. தண்டல் கணக்கமின்றிச் செய்யப்பட்டுள்ளதா ? (இங்கே ஒவ்வொரு பசலிக்கும் கேட்பு, தண்டல், நிலுவை விவரங்கள் கொடுத்திடுக.)

58. விதிகளில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள் 1 எண் படிவத்திலும் ஆணை 11 எண் படிவத்திலும், வரி விதிக்கப்பட்டவர்கள் எல்லாருக்கும் அனுப்பப்பட்டுள்ளனவா ?

59. கூடுதல் வரி விதிப்பும் கூடுதல் தண்ணீர்த் தீர்வையும் (நில வருவாய், பிற இனங்கள் ஆகியவை உட்பட) மொத்த ஊர்த் தண்டலுக்கு எத்தனை சதவீதத்தில் உள்ளன ?

[நி. ஆ. 12 பத்தி 6

60 தீர்வை ஜாஸ்தி பசலி ஜாஸ்தி.	வருவாய் ஆய்வாளரால் பார்வை இடப் பட்டவை.	பார்வையிட்ட மாதம்.	தாசில்தார் பார்வை யிட்டவை.	மேற்பார்வை யாளர் சரி பார்த்தவை.

61. கடந்த ஆண்டில் தண்ணீர்த் தீர்வை விதிப்புக்கு வந்தவற்றில் இந்த ஆண்டில் வராதவை எத்தனை? அவற்றில் வருவாய் ஆய்வாளர் எத்தனை? எந்த மாதங்களில் பயிராய்வு செய்துள்ளார்? தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் எத்தனை எந்த மாதங்களில் பார்வையிட்டிருக்கிறார்.

(1934 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் தேதி 94, வா.செ.அச்சு.)

7. எண் விவரப் பட்டியல்.

(பலவகை வருவாய்)

62. ஆ பதிவேட்டுடனும், 2அ, 2இ, 5, 6; 10; பிரிவு II எண்கள் பதிவேடுகளுடனும், தாலுகா 11 எண் கணக்கு தாலுகா வன சொக்கச் சிட்டா, பதிவேடு இவற்றுடனும் வருவாய் ஆய்வாளரின் அடிச்சீட்டுப் புத்தகங்களுடனும் சரி பார்த்ததின் முடிவைக் குறிக்க

63. வாரிசு இல்லாமல் அரசாங்கத்திற்குச் சேர்ந்து குத்தகைக்கு விடப் பெற்ற நிலங்களின் குத்தகைப் பணங்கள் இந்தப் பதிவேட்டுக்குக் கொண்டு வரப் பெற்று, சுருக்கத்தின் 8-ஆவது இனத்திற்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ளதா? தாலுகா 'எ' பதிவேட்டுடன் ஒத்துப் பார்த்து மூரண்பாடு ஏதேனும் இருப்பின் அதைக் குறிக்க.

(1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி, 29, வ.து.வா.செ.அச்சு.)

"63. (அ) பணிவெல்லத் தொழிலுக்காக, 1968 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாளிட்ட ஊரக உள்ளாட்சித் துறை 133809/67 • எண் அரசுக் குறிப்பாணையில் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகள், பணப் பலன்கள் கிடைக்கப் பெறுவதையும் வரப்பெற்ற விண்ணப்பங்களையும் அனுசரித்து சரிவர நிறைவேற்றப்பட்டுள்ளனவா?

(1968 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் நாளும் 1163 எண்ணுமிட்ட நிலை அ.ஆ.வரு.)

(1968 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் நாளும் 716 (க) எண்ணுமிட்ட நிலை வ.வா.செ. (அச்சு.)

(அ) (1) 1956-ஆம் ஆண்டு இறும் (தீர்வை) சட்டத்தின் கீழ் விதிக்கப் பட்ட எல்லாத் தீர்வை விதிப்புகளும் 7 எண் கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனரா? கவனிக்க (1) 1956 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து தீர்வைகள் வசூலிக்கப்பட வேண்டும். (2) சட்டத்தின் கீழ்ப்பசலி வரிசையில் விளக்கத்துடன் கேட்பு வசூல் பாக்கிகளைக் குறிப்பிட்டுக் காட்டுக.

நி. ஆ. 12 பத்தி 6]

8. எண் விவரப் பட்டியல்.

(நன்செய் அனுபோகங்களின் விவரங்கள்.)

64. நடப்பு பசலியின் 8அ, 8ஆ எண் பாசன விவரப் பட்டியல்கள் அறிவரை களுக்கிணங்கச் சரியாய்த் தயாரிக்கப்பட்டுள்ளனவா? அவற்றை 2, 5, 6 எண் கிராமக் கணக்குகளுடன் ஒத்துப் பார்த்து முடிவைக் குறிக்க.

குறிப்பு.—இரண்டாவது ஜமாபந்தியின் தீர்ப்பை முடிவு செய்யும்போது இந்தக் கேள்விக்கு விடையளிக்க வேண்டும். அதற்குள் இந்தக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு மற்றக் கிராமக் கணக்குகளுடன் ஒத்துப் பார்ப்பதை முடித்துவிட வேண்டும்.

9. எண் விவரப் பட்டியல்.

(மேல் வரிகள்.)

65. "ஆ" பதிவேட்டுடனும், 2அ, 2இ, விவரப் பட்டியல்களுடனும (சொந்தத் தோப்பைப் பொறுத்த வரையில்) 6, 7 விவரப் பட்டியல்களுடனும், கடந்த ஆண்டின் 9-ஆவது விவரப் பட்டியலுடனும் ஒத்துப் பார்க்க.

10. எண் விவரப் பட்டியல்.

(சிட்டா).

66. (அ) 3-ஆவது எண் விவரப் பட்டியலில் காணக் கூடிய மாறுதல்கள் 1-ஆவது பிரிவில் சரியாய் எடுத்துப் பதிவு செய்யப்பட்டுள்ளனவா? I பிரிவிலிருந்தும் மற்றக் கணக்குகளிலிருந்தும் II பிரிவு சரியாகத் தயார் செய்யப் பட்டிக்கிறதா?

(1935 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் தேதி, 2580, வ.து.வா.செ. பலவ.)

66. (ஆ) புதிதாக நகர அளவையான அரசுக்குடி கிராமங்களின் பாகங் களைப் பொறுத்த மட்டில் சிட்டா திருத்தி அமைக்கப்பட்டுள்ளதா?

(1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் தேதி, 38, வ.து.வா.செ. பலவ.)
(1959 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி, 3896 எண். அ.ஆ.வரு.பல.

67. பாதைகள், வாய்க்கால்கள், மரங்கள் இவை போன்றவை புலங்களில் உட்பிரிவு செய்யப்படாமல் ஓடுக்கப்படுவதற்குட்பட்டு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை பொறுத்த மட்டில் அவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்டவற்றில் ஒதுக்கி வைக்கப்பெற்றது சிட்டாவில் குறிக்கப்பட்டுள்ளதா?

68. வருவாய்த்துறைக் கழக 19 -ஆவது நிலை ஆணையின்கீழ் வழங்கப் பட்ட பொதுத் தோப்புகளிலும், சொந்தத் தோப்புகளிலும், நிபந்தனைக்குட் படுத்தி வழங்கப்பட்டு நில ஒப்படைகளிலும், அவை வழங்கப் பெற்றவரின் சாதாரணமான கைப்பற்று நிலங்களுடன் சேர்க்கப்படாமல் 10 எண் கணக்கில் தனியாகக் காட்டப்பட்டுள்ளனவா?

[நி. ஆ. 11 பத்தி 6

12 எண் விவரப் பட்டியல்.

(தீர்வை நிர்ணயச் சுருக்கம்).

69. அரசினரால் விதிக்கப்பட்ட சரியான தொகை 2, 5, 6, 7 எண்கள் கணக்குகளை அனுசரித்துச் சரியான இந்தக் கணக்கில் காட்டப்பட்டுள்ளதா? அன்று வரை மொத்தக் கேட்புத் தொகையையும் மொத்த வசூலையும், பாக்கியையும் குறிப்பிடுக.

20 எண் விவரப் பட்டியல்.

(பருவ நிலை அறிக்கை)

70. இது பிரதி மாதமும் 1 ஆவது எண் விவசாயக்கணக்குடன் உரிய முறையில் கிராமத் தலைவரின் சான்றுக் கையெழுத்துடன் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டதா?

71.

பாசன ஆதாரங்களின் எண்ணிக்கை.	வருவாய் ஆய்வாளர் பார்த்தவற்றின் எண்ணிக்கை.	தாசில்தாரால் பார்த்த வற்றின் எண்ணிக்கை.

71. (அ) ஊரில் உள்ள பாசன ஆகாரங்களின் பெயர்கள்.

(ஆ) பொதுப்பணித்துறையினுல்/உணவு உற்பத்தி வட்டத்தினுல்/ ஊராட்சியினுல் பராமரிப்புப் பணியின் தனிப் பழுதுபார்த்தல் ஏதாவது மேற்கொள்ளப்பட்டதா?

(அவ்வாறுயின் அத்தகைய வேலையின் செலவு, அவ்வேலை செய்து முடிக்கப் பட்ட ஆண்டு (பொதுப்பணித்துறை/உணவு உற்பத்தி வட்டம்/ஊராட்சி முதலியவை போன்று எந்த முகமையினுல் திட்டம் நிறைவேற்றப்பட்டதோ அதன் விவரம் கொடுக்கப்பட வேண்டும்).

(இ) தனிப்பழுதுபார்த்தல் எதுவும் இந்தப்பாசன ஆதாரத்திற்கு ஏழு ஆண்டுகளுக்குள் செய்யப்படவில்லை என்றுல், வழக்கமான பழுதுபார்த்தல்/ பராமரிப்பு நீங்கலாக வேறு பழுதுபார்த்தல் இந்த ஆதாரத்திற்குத் தேவைப் படுகிறதா? அவ்வாறுனுல் தேவைப்படும் தனிப்பழுதுபார்த்தல் வேலைகள் எவை?

(ஈ) பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு யாது? (இந்த பாசன ஆதாரத் திற்குத் "தனிப் பழுதுபார்த்தல் வேலைகள்" செய்யப்பட்டபோது, இப்பரப்புக்கு மாற்றப்பட்டிருந்தால் அப்போது நிர்ணயம் செய்யப்பட்ட இறுதி ஆயக்கட்டின் பரப்பு யாது?

(உ) சென்ற ஏழு பசலி ஆண்டுகளின் போது இந்தப் பாசன ஆதாரத் தினுல் நீர் பாய்ச்சப்பட்ட பரப்பு (ஆண்டு வரிசையில் எண்கள்) வரையறுக்கப் பட்ட ஆயக்கட்டில் நீர்பாய்ச்சப்பட்ட பரப்பு, வரையறுக்கப்பட்ட ஆயக் கட்டுக்கு அப்பாற்பட்டு நீர்பாய்ச்சப்பட்ட பரப்பு, ஒரு போக நன்செய் நிலத்தில் இரண்டாம் பயிர் நீர்ப்பாசன பரப்பு தீர்வை மிகைப்பரப்பு முதலியவற்றைப் பற்றிய விவரங்கள், கொடுக்கப்பட வேண்டும். இந்தப் புள்ளி விவரங்கள் 2 மற்றும் 8அ, எண் ஊர்க்கணக்குகளிலிருந்து பெறலாம்.

நி. ஆ. 12 பத்தி 6]

(ஊ) பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டில்/இறுதி ஆயக்கட்டில் ஏதாவது குறைவு இருக்குமானால் அதன் காரணங்கள்.

(எ) முழு ஏரிமட்ட நிலைகளில் முன்கரைப்பகுதியில் நீரில் மூழ்குவதற்கு உட்படக்கூடிய பட்டா நிலங்களின் பரப்பு.

71. (ஆ) (1) 1963 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் நாளும் வருவாய் வாரிய 41567 உணவு உற்பத்தி (உ-உ) எண்ணுமிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட திட்ட வேலைகளின் கீழ் நீர்ப்பாசன வளர்ச்சியைக் காட்டும் பதிவேடு நாளது வரையிலாக பேணிவரப்படுகிறதா?

(2) 1965 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் நாளும் வருவாய் வாரிய 33542/64 உணவு உற்பத்தி (ஆ-1) எண்ணுமிட்ட கடிதத்தின் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்ட படிவத்தில் பாசன ஆதாரங்களைப் பற்றி வட்ட அலுவலகப் பதிவேடு வரிசையில் நாளது வரையிலாக எழுதி வைக்கப் பட்டு வருகிறதா? வட்ட ஆட்சியரால் இது சான்று கையொப்பமிடப் பட்டுள்ளதா? ஊர்கணக்குகளுடன் இப்பதிவேட்டிலுள்ள ஒரு சில பதிவு களைச் சரிபார்த்திடுக.

(1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாளும் 909 எண்ணுமிட்ட வருவாய் நிலை அ.ஆ.)

(1968 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாளும் வ.வா. 615 எண்ணுமிட்ட செ).

72. (i) கிராமத்திலுள்ள சிறு பாசன ஆதாரங்களுக்கு இயற்றப் பெற்ற அச்சிட்ட ஆராய்ச்சிக் குறிப்புகள் உள்ளனவா? அவ்வாறுஎல் எவ்வாதாரங் களுக்கு அத்தகைய குறிப்புகள் உள்ளனவோ அவற்றின் பெயர்களைக் குறிக்க.

(ii) அக்குறிப்பில் கண்டுள்ளவாறும் கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறும் ஆதாரம் ஒவ்வொன்றிலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயக்கட்டு என்ன? அவை வெவ்வேறுயின் அவ்வாறிருப்பதற்கு காரணம் யாது?

(iii) அச்சடித்த ஆராய்ச்சிக் குறிப்புக்குத் திருத்தங்கள் கொடுக்கத் தக்க வகையில் ஏரியின் கரையை வரிக்கற்களால் அமைத்தல் தொட்டி, அணை, மதகு அல்லது வேறு கட்டடங்கள் இவற்றில் ஒன்றுக்கு யாதேனும் மாறுதல் இயற்றப்பட்டுள்ளதா அவவாறுயின் அது யாது?

(iv) தக்க திருத்தங்களைப் பிறப்பிக்க, தாசில்தார் நடவடிக்கை எடுத் துள்ளாரா?

(1950 ஆம் ஆண்டு ஜன் மாதம் 24 ஆம் தேதி, 790, வ.து.வா.செ.பலவ.)
(1951 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் தேதி, 2, .வ.து.வா.செ.அச்சு.)

73. எவற்றில் பழுதுபார்ப்பது அவசியம் என்று குறிக்கப்பட்டுள்ளது?

74. கடந்த ஐமாபந்தியில் பழுது பார்க்க வேண்டுமென்று குறிக்கப் பட்டுள்ளவை எல்லாம் இப்பால் பழுதுபார்க்கப் பெற்றுள்ளனவையா? (கிராம அலுவலர்களையும் குடியானவர்களையு விசாரிக்க வேண்டும்).

[நி. ஆ. 12 பத்தி 6

பிரிவு IV அ.

வருவாய் வசூல் சம்பந்தமான கணக்குகள்

தற்காலிகமான கேட்பு.

75. (1) 1925 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி வருவாய்த் துறை வரிய 5 எண் செயல் முறை ஆணையில் உள்ள விதிகளுக்கிணங்க தற்காலிகமான கேட்பு விவரப் படியல்களைக் கிராமக் கணக்கர்கள் சரிவர தயாரித்து மேல் அனுப்பியுள்ளார்களா?

(2) அவ்விவர பட்டியல்களின் கூட்டுத் தொகைகள் தாலூகா V ஆவது படிவத் தலைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

(1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் தேதி 90, வ.து வா. அச்சு)

15 எண் அறிக்கை

(பணம் செலுத்துதல் பட்டியல்).

தீர்வை செலுத்துவதற்குரிய தேதிகள்.	செலுத்தின தேதி	தாமதத்திற்குக் காரணம்.
1		
2		
3		

76. (அ) (1) குறிப்பிட்ட படிவத்தில் 13 எண் கிராமக் கணக்கு கிராமத் தலைமை அலுவலரால் எழுதி வைக்கப்பட்டுள்ளதா? கிராமத் தலைமை அலுவலரால் வரப் பெற்ற தொகைகள் அவ்வப்போது 13 எண் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஒவ்வொரு நாள் வசூல் மொத்தமும் செலுத்து தேதியில் செலுத்தப்படும் மொத்தமும் எழுதிப்பட்டுள்ளதா? (18 ஆம் படிவம்) அடிசீட்டுகளுடன் சில இனங்களை ஒத்துப் பார்த்து அதன் முடிவைக் குறிப்பிடுக.

(2) ஒவ்வோர் நாளும் அல்லது சில நாட்களுக்குச் சேர்த்து கிராமக் கணக்கருக்கு அனுப்பப்பட்ட பற்றுச் சீட்டுகளின் இரண்டாம் பிரதிகளிலிருந்து அவரால் 13 எண் கணக்கில் தாலூகாப் பிரதி அவ்வப்போது தயாரிக்கப்பட்டதா? தாலூகாவில் உள்ள 13 எண் தாலூகாக் கணக்கைக் கொண்டுவரச் செய்து இக்கேள்விக்கு விடை பகர வேண்டும்.

(3) வசூல் காலத்தில் 13 எண் கணக்கை வருவாய் ஆய்வாளர்கள் துணைத் தாசில்தார்கள், தாசில்தார்கள் தாங்கள் கிராமத்துக்குச் சென்ற போதெல்லாம் சரி பார்த்ததாக இக்கணக்கைப் பார்ப்பதில் தெரிய வருகிறதா? (வருவாய் ஆய்வாளர், துணைத் தாசில்தார், தாசில்தார் இவர்களின் நாட் குறிப்புடன் ஒத்துப் பார்த்து அதன் முடிவைக் குறிப்பிடுக).

14 எண் கிராமக் கணக்கு.

76. (ஆ) (1) 14 எண் கணக்கு குறிப்பிட்ட படிவத்தில் கிராமக் கணக்கரால் எழுதி வைக்கப்பட்டு வருகிறதா? கிராமத் தலைமை அலுவலரால் பற்றுச் சீட்டுகளின் இரண்டாம் பிரதிகள் வரப்பெற்றவுடனும் 13 எண் கணக்கின் தாலூகா நகல் தயாரிக்கப்படும் போதும், இக்கணக்கில் இப் பதிவு செய்யப்படுகின்றதா?

நி. ஆ. 12 பத்தி 6]

(2) ஒவ்வொரு செலுத்துதலுடன் இந்தக் கணக்கு தாலுகா அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(3) கருவூலத்தில் தொகை செலுத்தும் சமயத்தில் இக்கணக்கின் அடியில் மொத்தம் கூட்டல் தொகை குறித்துக் காட்டப்பட்டுள்ளதா ? இந்த மொத்தம் 13 எண் கணக்கின் தாலுகா நகலின் மொத்தத்துக்கு ஒத்திருக்கிறதா ?

16 எண் கிராமக் கணக்கு.

76. (இ) (1) தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரின் பெயர் வரிசையில் நிலத் தீர்வையின் கேட்பு, வரவு, வசூல் நிலுவை விவரப் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் எழுதி வைக்கப்பட்டு வருகின்றதா ?

(2) 16 எண் கணக்கில் வசூல் செய்யப்பட்டவை பற்றி அவ்வப்போது எடுத்து எழுதப்பட்டு ஒவ்வொரு செலுத்துதலுக்கும் கேட்பு வசூல் அதிக வசூல், நிலுவை ஆகிய இவை எடுத்து எழுதப்பட்டுள்ளதா ?

(3) வருவாய்த் துறை வாரிய அலுவலர்கள் வசூல் காலத்தில் பிற்போக்கு கிராமத்திற்குச் சென்று 16 எண் கணக்கை அனுசரித்து வசூலாகாமலிருக்கும் பாக்கிகளைப் பற்றி விசாரணைகள் செய்திருக்கிறார்களா ?

18 எண் கிராமக் கணக்கு.

[76. (ஈ) (1) திருத்தப்பட்ட]ப்பிரதி பற்றுச் சீட்டுப்படிவம் நடை முறை உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(2) குடியானவர்கள் செலுத்திய தொகைகளுக்காகப் பற்றுச் சீட்டு வரிசைக் கிராமத்தில் கொடுக்கப்பட்டனவா ?

(3) கிராமத்தலைமை அலுவலருக்குக் கொடுக்கப்பட்ட பற்றுச் சீட்டுப் புத்தகங்கள், கணக்கை அனுசரித்துச் சரியாக உள்ளனவா ? கணக்கெடுக்கப் பட்டுள்ளனவா ? (கொடுக்கப்பட்ட பற்றுச் சீட்டு புத்தகங்களைப் பற்றிய தாலுகாப்பதிவேட்டுடன் ஒத்துப் பார்த்து புத்தகங்கள் சரியாக கணக்கை அனுசரித்து உள்ளனவா ? என்று கண்டறிக.)

(4) தணிக்கை செய்யும் அலுவலர்கள் தாங்கள் சரி பார்த்த முடிவைப் பற்றிப் பற்றுச் சீட்டுகளின் அடிச் சீட்டு பின்புறத்தில் குறித்திருக்கின்றார்களா ?

பிரிவு IV–ஆ.

பஞ்சாயத்து வருவாய் வசூல் பற்றிய கணக்குகள்.

77. (அ) (1) கிராமப் பஞ்சாயத்து 15 எண் படிவத்தில் வீட்டு வரி விதிப்புப் பட்டியல் கிராமக் கணக்கரால் சரிவரத் தயாரிக்கப்பட்டு எழுதி வைக்கப்பட்டு வருகின்றதா ?

(2) வீட்டு வரி கேட்பு பதிவேடு கிராமப் பஞ்சாயத்து 3 எண் படிவத்தில் கிராமக் கணக்கரால் சரியாக நாளது வரை எழுதி வைக்கப்பட்டு வருகின்றதா ?

[நி. ஆ. 12 பத்தி 6

(3) வீட்டுப் பழைய பாக்கி வரி கேட்புப் பதிவேடு பஞ்சாயத்து 4 எண் பதிவேட்டில் கிராமக் கணக்கால் சரியாக நாளது வரை எழுதி வைக்கப்பட்டு வருகின்றதா ?

(4) வீட்டு வரி பட்டி, பற்றுச் சீட்டு அடிச் சீட்டுப் பதிவேடு பஞ்சாயத்து 5, 6 எண் படிவங்களில் கிராமக் கணக்கால் எழுதி வைக்கப் பட்டு வருகின்றனவா ?

(5) கேட்புப் பதிவேட்டிலும் பழைய பாக்கிக் கேட்புப் பதிவேட்டிலும் வசூல்களை எடுத்தெழுதிக் கொண்டு கிராமக் கணக்கர் வசூல் பதிவேட்டைத் தாமதமின்றி கிராமத் தலைமை அலுவலருக்குத் திருப்பி அனுப்பிவிட்டிருக் கிறாரா ?

(6) மொத்தக் கேட்பு மொத்த வசூல் நாளது வரையுள்ள பாக்கி இவற்றைக் குறிப்பிடுக.

77. (ஆ) (1) தொழில் வரி விதிப்பிற்குட்படுபவர்களின் பட்டியலைக் கிராம பஞ்சாயத்து 19 எண் படிவத்தில் கிராமக் கணக்கர் சரியாக எழுதி வைத்திருக்கிறாரா ?

(2) தொழில் வரி கேட்புப் பதிவேடு கிராமப் பஞ்சாயத்து 17 எண் படிவத்தில் கிராமக் கணக்கால் சரியாக எழுதி வைக்கப்பட்டு வருகின்றதா ?

(3) தொழில் வரிப் பற்றுச் சீட்டு, பட்டியல் பதிவேடு கிராமப் பஞ்சாயத்து 18 எண் படிவத்தில் கிராமக் கணக்கரால் சரியாக எழுதி வைக்கப்பட்டு வருகிறதா ?

(4) கேட்புப் பதிவேட்டில் வசூல்களைக் கிராமக் கணக்கர் எடுத்து எழுதிக் கொண்டு வசூல் பதிவேட்டைத் தாமதமின்றிக் கிராமத் தலைமை அலுவலருக்குத் திரும்பி அனுப்பியிருக்கிறாரா ?

(5) மொத்தக் கேட்புத் தொகை, மொத்த வசூல், நாளது வரை பாக்கி இவற்றைக் குறிப்பிடுக.

77. (இ) (1) வரிக்குட்பட்ட வாகனங்களின் பட்டியலைக் கிராமப் பஞ்சாயத்து 101 எண் படிவத்தில் கிராமக் கணக்கர் சரியாக நாளது வரை எழுதி வைத்து வருகிறாரா ?

(2) வாகன வரிக் கேட்பு உரிமமும் அடிச் சீட்டுப் பதிவேடும் 103 எண் படிவத்தில் கிராமக் கணக்கரால் சரியாக எழுதி வைக்கப்பட்டு வருகின்றனவா ?

(3) வசூல்களை வரிக்குட்பட்ட வாகனங்களின் பட்டியலில் எடுத் தெழுதிக்கொண்டு கிராமக் கணக்கர் வசூல் பதிவேட்டைக் கிராமத் தலைமை அலுவலருக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறாரா ?

(4) மொத்தக் கேட்புத் தொகை, மொத்த வசூல் நாளது வரையுள்ள பாக்கி, இவற்றைக் குறிப்பிடுக.

77. (ஈ) (1) ஆக்கிரமிப்புப் பதிவேடு கிராமப் பஞ்சாயத்து 81 எண் படிவத்தில் கிராமக் கணக்கரால் சரியாக எழுதி வைக்கப்பட்டு வருகிறதா ?

(2) மொத்தக் கேட்புத் தொகை, மொத்த வசூல் நாளது வரை பாக்கி இவற்றைக் குறிப்பிடுக.

நி. ஆ. 12 பத்தி 6]

77. (உ) (1) கிராமக் கணக்கரால் எழுதி வைக்கப்பட்டு வருவதற்கு பஞ்சாயத்தின் மற்ற வருவாய் இனங்களின் வசூலைப் பற்றிய மற்றப் பதிவேடுகள் கிராமக் கணக்கரிடம் ஒப்புவிக்கப்பட்டனவா? இவ்வாறு இருப்பின் அவை யாவை?

அவை கிராமக் கணக்கரால் சரியாக எழுதப்பட்டு வருகின்றனவா?

(2) அத்தகைய ஒவ்வொரு வருவாய் இனத்தின் மொத்தக் கேட்பு, மொத்த வசூல், நாளது வரை பாக்கி இவற்றைத் தனித் தனியாகக் குறிப்பிடுக.

77 (உ) (3) 1963 ஆம் ஆண்டு 32 ஆவது சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாசன (மேம்பாட்டு உதவித் தொகை வரி விதிப்புச்) சட்டம்.

(1) 4(அ), 4(ஆ) பிரிவுகளின் விலக்குடன் படித்துணரப்படும் 2(6)(அ) பிரிவிலுள்ள விளக்கத்திற்குட்பட்ட அறிவிக்கை செய்யப்பட்ட நாளது வரையிலுள்ள எல்லா வேலைகளும் விடுபாடில்லாத மேம்பாட்டு உதவித் தொகை வரி விதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனவா? இல்லை என்றால் ஒவ்வொரு நேர்விலும் காரணங்கள் கூறப்படலாம் (பொதுப்பணித் துறை அலுவலர்கள் முதலியோருடன் கொண்ட கடிதத் தொடர்பின் நடப்பு எண்ணும் சாரமும் கொடுத்திடுக.)

(2) இந்தச் சட்டத்தின் கீழ் வரும் தண்டல்களைக் கவனித்து வரவும் பதிவு செய்யவும், 1959 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் நாளும் 25 எண்ணுமிட்ட நிலை வ. வா. செ. மற்றும் 1965 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாளும் 1599/65 எண்ணுமிட்ட நிலை. வ. வா. செ. ஆகியவற்றில் வருவாய் வாரியத்தால் குறிப்பிடப்பட்ட பதிவேடுகளெல்லாம் பேணி வரப்பட்டு பதிவுகள் நாளிது வரையிலாகச் செய்யப்பட்டு வருகின்றனவா?

(3) மேம்பாட்டு உதவித்தொகை 11 ஆவது படிதத்தில் கேட்பு விவரப் பட்டி நில தீர்வைப் பருவத்தின் தொடக்கத்தில் கணக்கரால் தயாரிக்கப்பட்டு, வருவாய் ஆய்வாளரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு நில வருவாய்க்கான தற்காலிகக் கேட்புடன் வட்ட அலுவலகத்திற்கு மேலனுப்பப்படுகிறதா?

III (ஆ) மேம்பாட்டு உதவித்தொகைக் கேட்பின் வட்டப் பதிவேடு மே.உ. 3-வது படிவத்தில் பேணி வரப்படுகிறதா? மற்றும் கணக்கரால் மே.உ. II ஆவது படிவத்தில் அனுப்பப்படும் விவரப்பட்டி வட்டாட்சியர் பதிவேடுக் குறிப்புகளுடன் சரிபார்க்கப்பட்டு வட்ட ஆட்சியரால் ஏற்கப்பட்டு, தண்டல் செய்யப்படுவதற்காக கணக்கமின்றி கணக்கருக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றதா? விவரப்பட்டி வட்ட அலுவலகத்தில் வரப்பெற்ற நாளினையும் குறிப்பிடுக.

(4) கேட்பு விவரப்பட்டி முதலியவற்றை ஜமாபந்தியின் போது சரிபார்க்க வசதியளிக்கும் வகையில் மொத்த தொகை கொடுப்புப் பதிவேட்டின் நகல் ஒன்று மே.உ. ஆவது படிவத்தில் கணக்கருக்கு வழங்கப்பட்டதா?

[நி. ஆ. 12 பத்தி 6

(5) எண் மே.உ. படிவத்தில் மேம்பாட்டு உதவித் தொகைச் சிட்டாவை கணக்கர் பேணி வருகின்றாரா? மற்றும் பட்டா மாற்றல் காரணமாக ஏற்படும் மாறுதல்கள் அவ்வப்போது இப்பதிவேட்டில் எழுதப் படுகின்றனவா? (உடைமை மாறுதல்கள்) 3 எண் விவரப்பட்டியுடனும் பட்டாப் பதிவு பற்றிய மாறுதல்களின் தனிப்பதிவேட்டுடனும் சில இனங்களைச் சரி பார்த்திடுக.

(6) (அ) மே.உ. படிவத்தில் தனித்தண்டல் ஊர்த்தலைமை அலுவலராலும் மே.உ. படிவத்தில் தனிக்கணக்கு எண் 14 கணக்காராலும் எழுதி வைத்து வரப்படுகின்றனவா?

(ஆ) மேம்பாட்டு உதவித்தொகையைத் தண்டல் செய்ததற்காகக் கொடுக்கப்பட்ட நிலவருவாய்ப் பற்றுச் சீட்டுகளில் ஊர்த்தலைமை அலுவலர், வேலியின் பெயரைக் குறிக்கின்றாரா? (பற்றுச் சீட்டுகளில் உள்ள சிலப் பதிவுகளைக் கூர்ந்தாய்வு செய்க.)

(இ) தண்டல் பருவத்தில் தாங்கள் ஊர்களுக்குச் செல்லும்போது வருவாய் ஆய்வாளர் துணை வட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர் ஆகியோர் தவறாமல் கணக்குகளைச் சரிபார்த்திருக்கிறார்கள் என்பதை மே.உ. எண் படிவங்களின் கூர்ந்தாய்வு காட்டுகின்றதா?

(ஈ) மே.உ. படிவத்திலுள்ள தண்டலின் சில இனங்களை மேம்பாட்டு உதவித்தொகையைத் தண்டல் செய்ததற்காகக் கொடுக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளின் அக இதழுடன் ஒப்பிட்டுப் பார்த்து முடிவைக் குறிப்பிடுக.

(7) மேம்பாட்டு உதவித்தொகைத் தண்டல் தொகைகளெல்லாம் உடனடியாகவும் முறையாகவும் செலுத்தப் பட்டனவா? (கணிசமான சதவீத அளவுக்குச் சரிபார்த்திடுக.)

(8) மொத்தக் கேட்பு மொத்தத் தண்டல் நாளிதுவரையிலான நிலுவை ஆகியவற்றைக் குறிப்பிடுக (பசலி வாரியாக விவரங்கள் கொடுக்கப் பட வேண்டும்.)

(9) ஒவ்வொரு மாதமும் உரிய நாளில் கேட்பு, தண்டல் நிலுவை விவரப்பட்டியை வட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி யுள்ளாரா?

(10) மேம்பாட்டு உதவித்தொகையைத் தண்டல் செய்வதற்காக தனி நிறைவேற்றுக் கட்டளைப் பதிவேடுகள் வட்ட அலுவலகத்தில் பேணி வரப் படுகின்றனவா? இப்பதிவேடுகள் வட்ட ஆட்சியரால் ஒழுங்காகவும் வட்ட அலுவலகத்திற்குச் செல்கிறபோது கோட்ட ஆட்சியராலும் கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றனவா?

(1966 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் நாளும் 3379 எண்ணுமிட்ட நிலை வரு.அ.ஆ.)

(1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் நாளும் 147 எண்ணுமிட்ட நிலை வ.வா.செ.)

தி. ஆ. 12 பத்தி 6]

77. (ஊ) (1) வசூல் பதிவேடு கிராமப் பஞ்சாயத்து 9 எண் படிவத்தில் கிராமத் தலைமை அலுவலரால் வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி இவற்றிற்குத் தனித்தனியாக எழுதி வைக்கப்பட்டு வருகின்றனவா?

வசூல் பதிவேடு கிராமத் தலைமை அலுவலரால் பஞ்சாயத்துத் தலைவருக்கு மாதந்தோறும் 25 ஆம் தேதியில் அனுப்பப்பட்டதா?

(2) பஞ்சாயத்து சார்பில் செய்யப்பட்ட வசூல்களை வரப் பெற்றுக் கொண்டதற்குரிய செல்லு சீட்டுகள் கிராமப் பஞ்சாயத்து 1 எண் படிவ அடிச் சீட்டுகளுடன் ஒட்டி வைக்கப்பட்டுள்ளனவா?

(3) பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் கிராமத் தலைமை அலுவலரால் வைக்கப்பட்டு வரும் கேட்புப் பதிவேட்டுடன் ஒத்திருக்கின்றனவா?

77. (எ) (1) பஞ்சாயத்து வருவாய்கள், செலுத்தப்படுதலில் தாமதம் யாதேனும் காணப்படுகின்றதா? அவ்வாறுயின் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை?

ஆணைகளின் பதிவேடு கிராமத் தலைமை அலுவலரால் சரியாக எழுதி வைக்கப்பட்டு வருகிறதா?

77. (ஏ) வருவாய்த் துறை அலுவலர்கள் (வேலையின் பெயரைக் குறிப்பிடுக), மண்டல பஞ்சாயத்து அலுவலர் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் (பஞ்சாயத்து), வளர்ச்சி அலுவலர் இவர்களால் கணக்குகள் அடிக்கடி செய்யப்பட்டுள்ளனவா? அவ்வாறுயின் எப்பொழுது எவ்வளவு, அடிக்கடி?

77. (ஐ) கிராமத் தல மேல்வரி, வருமான மேல்வரி பங்கீடு செய்யப் பட்டுள்ளனவா? கீழ்க்கண்ட விவரங்களைக் குறிப்பிடுக.

(1) தல மேல் வரி, தல வருமான மேல் வரி தலைப்புகளின் கீழ் எதிர் பார்க்கப்படுகின்ற வசூல்களை முன்னிட்டு பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்ட முன் பணத் தொகை.

(2) மொத்தக் கேட்பை அனுசரித்து ஒவ்வொரு தலைப்பின்கீழும் நிகரத் தொகை.

(3) ஒவ்வொரு தலைப்பின்கீழும் சரிகட்டப்பட வேண்டிய இறுதி நிலைப் பயன்பாட்டுத் தொகை.

பிரிவு V.

பிறப்பு-இறப்புக் கணக்குகளும் கால்நடை மரணக் கணக்குகளும். 19 எண் விவரப் பட்டியல்.

78. பிறப்பு-இறப்புப் பதிவேடுகள் காலக் கிராமத்தில் சரிபார்க்கப் பெற்றுள்ளனவா? அவ்வாறுயின் யாரால் எப்பொழுது சரிபார்க்கப் பெற்றுள்ளன? விட்டுவிடப்பட்டனவை எவையேனும் குறிக்கப் பெற்றுள்ளனவா?

[தி. ஆ. 12 பத்தி 6

79. இந்தக் கிராமத்தில் சென்னை பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டம் (1899 ஆம் ஆண்டு III ஆவது சட்டம்) நடை முறையில் உள்ளதா? அவ்வாறு இருப்பின் எழுதி வைக்கப்படவேண்டிய பதிவேடுகள் சரியாய் எழுதி வைக்கப்பெற்றுள்ளனவா?

80. கால்நடை மரணப் பதிவேடு சரிவர எழுதி வைக்கப் பெற்றுள்ளதா? வருவாய் அலுவலர்கள் தங்கள் சுற்றுப் பயணங்களில் அதைச் சரி பார்த்துள்ளார்களா? அவ்வாறுயின் விட்டுவிடப்பட்டவை எவையேனும் எப்பொழுதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா?

பிரிவு VI.

அம்மை குத்துதல் பற்றிய பதிவேடு.

81. பாதுகாப்பளிக்கப் பெறாத (அம்மை குத்தப் பெறாத) குழந்தைகளைப்பற்றிய பதிவேடு 19-ஈ எண் படிவத்தில் எழுதிவைக்கப் பெற்றுள்ளதா?

82. அம்மை குத்துபவர் கிராமத்திற்குச் சென்ற தேதிகளில் ஒவ்வொரு முறையும் அம்மை குத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை. பாதுகாக்கப் பெறுதவரின் எண்ணிக்கை.

83. பதிவேடு காலக் கிராமத்தில் சரி பார்க்கப்பெற்றுள்ளதா? அவ்வாறுயின் யாரால் எப்பொழுது?

பிரிவு VII.

பலவகையானவை பற்றிய கணக்குகள்.

சிவில், குற்ற இயல் நீதி பற்றிய பதிவேடுகள்.

84. கிராம சிவில் நீதிமன்றப் பதிவேடுகளும், குற்ற இயல் நீதி பற்றிய பதிவேடுகளும், சரிவர வைத்து அன்றுவரை எழுதப் பெற்றுள்ளனவா?

85. எத்தனை (அ) சிவில் வழக்குகளும் (ஆ) குற்ற வழக்குகளும் இந்த ஆண்டில் விசாரிக்கப் பெற்றுள்ளனரா? முடிவு செய்வதில் ஏதேனும் தகாத தாமதம் இருந்ததா?

சந்தேகிக்கப்பட்டவர்களைப் பற்றிய பதிவேடு.

86. சந்தேகமான தோற்றமுள்ள அன்னியர்களைப் பற்றிய பதிவேடுகள் எழுதி வைக்கப்பட்டுள்ளனவா? அவற்றில் இவ்வாண்டில் பதிவுகள் எவையேனும் உள்ளனவா?

நி. ஆ. 12 பத்தி 6]

போலீஸ் கண்காணிப்பில் உள்ளவர்களைப் பற்றிய பதிவேடு.

87. நாடறிந்த கொள்ளைக்காரர்கள் மிகக் கொடியவரெனச் சந்தேகப் படத் தக்கவர்கள், குற்றச் செயல் புரியும் நிலையான கூட்டத்தைச் சேர்ந்த வர்கள், கிரிமினல் நடைமுறை விதித் தொகுப்பு 565 பிரிவின் கீழ் போலீஸாரிடம் நேரில் சென்று தெரிவித்துக்கொள்ள ஆணையிடப்பட்டவர்கள் இவர்களையும் பற்றிய பதிவேடுகள் எழுதி வைக்கப் பெற்றுள்ளனவா?

அயல்நாடு சென்றவர்களைப் பற்றிய பதிவேடு.

88. கிராம அலுவலர்கள் குடியானவர்கள் நடைமுறை நூலின் 10 ஆவது இணைப்பு 2 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டவாறு அயல்நாடு சென்றவர்களைப் பற்றிய பதிவேடு சரிவர எழுதி வைக்கப்பெற்றுள்ளதா?

பிரிவு VIII

கிராம அலுவலர்கள்.

89. கிராம அலுவலர்களின் தகுதிகளைக் குறிப்பிடுக. தேர்ச்சி பெறாதவர் அல்லது வேலை செய்ய இயலாத அவ்வளவு வயதானவர் அல்லது வேலைக்குத் தகுதி அற்றவர், அல்லது நொடித்தவர் என்பதற்காக அவர்களில் எவருக்காயினும் பதிலாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமா?

6-2-1942 தேதி, 6 வ.து.வா.செ.

பிரிவு IX.

பஞ்ச நிவாரண வேலைகளின் நிகழ்ச்சி முறை.

90. பஞ்சத்தின் ஆரம்ப நிலைகளில் அவசியமென்று தேர்ந்தெடுத்து வேலைகளில் எதையேனும் நிகழ்ச்சி முறையிலிருந்து விலக்கிட வேண்டும் என்று கோட்ட ஆட்சியாளர் அல்லது கலெக்டர் கருதுகிறாரா? அவ்வாறாயின் என்ன காரணங்களுக்காக?

1-10-1937 தேதி, 1990 அ.ஆ.வரு.பல.
12-10-1937 தேதி, 109 வ.து.வா.செ.

பிரிவு X.

கடன்களைப் பற்றிய பதிவேடு.

91. (அ) கிராமக் கடன் பதிவேடு 27 எண் படிவத்தில் நாளது வரையில் எழுதி வைக்கப்பட்டுள்ளதா?

வசூல் கணக்குகள்.

(1) கிராமத் தலைமை அலுவலர் கடன் தவணைத் தொகைகளின் நிலுவை வசூலைப் பற்றி தனியாக எழுதி வைத்து வருகிறாரா?

[தி. ஆ. 12 பத்தி 6

(2) வசூல் செய்யப்பட்ட தவணைத் தொகைகளுக்குரிய பற்றுச் சீட்டுகள் புதிய முப்பிரதி படிவத்தில் கொடுக்கப்பட்டனவா?

(3) கிராமக் கடன் பேரேடுகள், கிராமத் தலைமை அலுவலரால் தவணைத் தொகைகள் வசூலிக்கப்படும்போதே எடுத்து எழுதப்படுகின்றனவா?

(4) சுற்றுப் பயணம் செய்யும் அலுவலர்கள் கிராமங்களுக்குச் செல்லும் போதெல்லாம் கிராமக் கடன் பேரேடுகளைத் தணிக்கை செய்து பற்றுச் சீட்டுகளைச் சரி பார்த்து இருக்கிறார்களா?

(5) கடன் தவணைத் தொகை பாக்கி விழுந்த உடனடியாக அத் தவணைத் தொகை வசூல் செய்வதற்காக நிறைவேற்றக் கட்டளைகள் தாமதமின்றிப் பிறப் பிக்கப்பட்டனவா? கடன் ஆணை எண், செலுத்தப்பட வேண்டிய தேதி, செலுத்தப்பட வேண்டிய தொகை, அறிவித்த தேதி, ஜப்தி செய்யப்பட்ட தேதி, விற்பனை செய்யப்பட்ட தேதி முதலியவற்றைக் காட்டக்கூடியதொரு விவரப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதா? தாமதம் ஏதேனும் இருப்பின், அதன் காரணங்களை விளக்குக.

பலவகைத் தலைப்புகளில் கடன் தொகைகள்.

(6)கேட்பு, வசூல், நிலுவை என்ன? (பல தலைப்புகளின் கீழும் உள்ள பாக்கிகளின் காரணங்களை விளக்க வேண்டும்.)

(ஆ) கடன் தவணைகள் வசூலிப்பதில் ஏதேனும் தாமதம் இருக்கிறதா?

(இ) வசூலிக்கப் பெற்றவை வசூலானவுடன் செலுத்தப் பெற்றனவா? கூட்டுறவுக் கடன் பேரேட்டைத் தாலுகா கடன் பேரேட்டுடன் (படிவம் 26) ஒத்துப் பார்த்து அதன் முடிவைக் குறிப்பிடுக.

1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் தேதி 2574 வது ஆ.வா.செ.பலவ.

(ஈ) பெற்றுக் கொண்ட கடன் தொகையைக் கொண்டு செய்த வேலைகளைப் பார்வையிட்ட விவரங்களைக் காட்டும் பதிவேடு கிராமக் கணக்கரால் சரிவர அன்றுவரை எழுதி வைக்கப் பெற்றுள்ளதா?

வருவாய் ஆய்வாளர், தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் தங்கள் சுற்றுப் பயணங்களில் அதை ஆராய்வு செய்துள்ளாரா?

கிராமக் கணக்கர்கள் மாதாந்திர அறிக்கைகளை, சம்பந்தமான நில வருவாய் ஆய்வாளருக்கு, உரிய காலங்களில் அனுப்பியுள்ளார்களா?

(1953 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் தேதி, 2616, அ.ஆ.வரு.)

(1953 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதி, 94824/அ-3, அரசாங்கக் குறிப்பாணை வரு.)

(1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத 4 ஆம் தேதி, 124, வ.து.வா.செ. பலவ.)

நி. ஆ. 12 பத்தி 6]

கூடுதல் வரி விதிப்பும் கூடுதல் தண்ணீர் தீர்வையும்.

92. (அ) தனிப் பதிவேடுகளாகிய கூடுதல் வரி விதிப்புப் பதிவேட்டையும் கூடுதல் தண்ணீர்த் தீர்வைப் பதிவேட்டையும் குறிப்பிட்ட பாடவத்தில் கணக்கர் பேணி வருகிறாரா?

(ஆ) பதிவேடுகள் கணக்காளும் வட்ட அலுவலகத்திலும் முறையாகப் பேணி வரப்படுகின்றனவா?

(இ) கணக்கரால் எழுதி வைத்து வரப்படும் பதிவேடுகள் வருவாய் ஆய்வாளர், துணை வட்ட ஆட்சியர், வட்ட ஆட்சியர் ஆகியோரால் சரிபார்க்கப் பட்டு வருகின்றனவா?

(ஈ) கணக்கரால் பேணிவரப்படும் பதிவேடுகளில் வட்ட ஆட்சியர், பிற மேல் நிலை அலுவலர்கள் ஆகியோரின் ஆணைகள் பதிவு செய்யப்படுகின்றனவா?

93. (அ) கூடுதல் வரி விதிப்புப் பதிவேடும் கூடுதல் தண்ணீர்த் தீர்வைப் பதிவேடும் நில உடைமை வாரியாக ஒவ்வொரு நில அளவைப் புலத்தையும் காட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளனவா?

(ஆ) நில அளவை எண்கள், உட்பிரிவுகள் ஆகியவையெல்லாம் கணக்குக்குச் சொண்டு வரப்பட்டுள்ளனவா?

(இ) கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றின் கீழ் நில உடைமையாளர் ஒவ்வொருவருக்கும் கேட்பு சரியாகக் கணக்கிடப் பட்டுள்ளதா?

94. தனிப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டுள்ளவாறு நில உடைமையாளர் ஒவ்வொருவரிடமிருந்து கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றிற்காகச் செலுத்த வேண்டிய தொகை ஊர்க்கணக்கு எண் 10 பிரிவு 18 (ஆ) கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளனவா? (ஜமாபந்தி அலுவலரால் சில பதிவுகள் சரிபார்க்கப்பட வேண்டும்.)

95. ஊர்க்கணக்கு 10 என் பிரிவு 11, 12 (ஆ) கட்டத்தில் காட்டப் பட்டுள்ள தொகை 12 என். ஊர்க்கணக்கின் 38 (ஆ) புதிய கட்டத்தில் காட்டப் பட்டுள்ளதா? (ஜமாபந்தி அலுவலரால் சில பதிவுகள் சரிபார்க்கப்பட வேண்டும்.)

96. ஒவ்வொரு மாதமும் தண்டல் செய்யப்பட வேண்டிய கூடுதல் வரி விதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை கேட்பை கணக்கர் சில வருவாய்த் தற்காலிகக் கேட்புப் பட்டியில் குறித்துள்ளாரா?

97. தனிப்பட்டவர் கேட்பு சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளதா? (ஜமாபந்தி அலுவலரால் சில நேர்வுகள் சரிபார்க்கப்பட வேண்டும்.)

98. தண்டல் கணக்கறின்றிச் செய்யப்பட்டுள்ளதா? (இங்கே ஒவ்வொரு பகுதிக்கும் கேட்பு, தண்டல், நிலுவை விவரங்களைக் கொடுத்திடுக.)

[நி. ஆ. 12 பக்கி 6

99. விதிகளில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள் 1 என் வடிவத்திலும், அனை 11 என் படிவத்திலும், வரிவிதிக்கப் பட்டவர்கள் எல்லோருக்கும் அனுப்பப்பட்டுள்ளனவா ?

100. கூடுதல் வரி விதிப்பும் கூடுதல் தண்ணீர்த் தீர்வையும் (நில வருவாய், பிற இனங்கள் ஆகியவை உட்பட) மொத்த ஊர்ந் தண்டலுக்கு எந்தவிகித பீதத்தில் உள்ளன ?

வ. நி. ஆ. தொகுதி 1 (இயல் பதிப்பு) நி. ஆ. 12—(6) இணைப்பு (11) பகுதிகள்

தற்போதுள்ள முதல் பிரிவுகள் முறையாக முதல் பிரிவுகள் என மறு எண்கள் கொடுக்கப்பட வேண்டும். தற்போதுள்ள 82 முதல் 92 வரையுள்ள கேள்வி எண்களுக்கு 91 முதல் 101 வரையுள்ள எண்கள் கொடுக்கப்பட வேண்டும்.

[1965 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் நாளும் 182 என்னுமிட்ட நிலை (ஊ).அ.ஆ.வரு.]

(1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் நாளும் 2353 என்னுமிட்ட நிலை வ.வா.செ.)

(1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் நாளும் 147 என்னுமிட்ட நிலை வ.வா.செ.)

பிரிவு X அ.

பஞ்சாயத்து வருவாய்த் தண்டல் பற்றிய கணக்குகள்.

101. ஆ. (1) 15 ஆவது என் ஊராட்சிப் படிவத்தில் வீட்டு வரி விதிப்பு பட்டியல் கணக்கரால் தயாரிக்கப்பட்டுள்ளதா மேலும் முறையாகப் பேணி வரப்படுகின்றதா ?

(2) 3 ஆவது என் ஊராட்சிப் படிவத்தில் வீட்டுவரிக் கேட்புப் பதிவேடு கணக்கரால் முறையாகவும் நாளிதுவரையிலுமாக பேணி வரப்படுகின்றதா?

(3) 4 ஆவது என் ஊராட்சிப் படிவத்தில் நிலுவைக் கேட்புப் பதிவேடு கணக்கரால் முறையாகவும், நாளிதுவரையிலுமாக பேணி வரப்படுகின்றதா?

(4) 5, 6 ஆவது என் ஊராட்சிப் படிவங்களில் வீட்டு வரிப்பட்டி, பற்றுச்சீட்டு, அக இதழ்ப் பதிவேடு ஆகியவை கணக்கரால் முறையாகப் பேணி வரப்படுகின்றனவா ?

(5) தண்டல்களைக் கேட்புப் பதிவேடுகளிலும் நிலுவைக் கேட்புப் பதிவேட்டிலும் பதிவு செய்த பின் கணக்கர் தண்டல் பதிவேட்டைத் தாமதமின்றி ஊராட்சித் தலைவருக்குத் திருப்பி அனுப்பியுள்ளாரா ?

(6) மொத்த கேட்பு, தண்டல், நிலுவை ஆகியவற்றை நாளிதுவரையிலுமாகக் குறிப்பிடுக.

101. இ. (1) தொழில் வரி விதிப்புக்குட்பட்டவர்களின் பட்டியல் 19 ஆவது என் ஊராட்சிப் படிவத்தில் கணக்கரால் முறையாகப் பேணப்படுகின்றதா ?

நி. ஆ. 12 பத்தி 6]

(2) தொழில் வரிக் கேட்புப் பதிவேடு ஊராட்சி 17 ஆவது எண் படிவத்தில் கணக்கரால் முறையாக பேணப்படுகின்றதா?

(3) தொழில் வரிப் பற்றுச் சீட்டு மற்றும் பட்டிப் பதிவேடு 18 ஆவது எண் படிவத்தில் கணக்கரால் முறையாகப் பேணி வரப்படுகின்றதா?

(4) கேட்புப் பதிவேட்டில் தண்டல்களைப் பதிவு செய்த பின்னர் கணக்கர் தண்டல் பதிவேட்டை உடனடியாக ஊராட்சித் தலைவருக்குத் திருப்பியனுப்பியுள்ளாரா?

(5) நாளிதுவரையிலாக மொத்தக் கேட்பு, தண்டல் நிலுவையைக் குறிப்பிடுக.

101. ஈ. (1) வரிக்குட்பட்ட வண்டிகளின் பட்டி ஊராட்சி 101 ஆவது படிவத்தில் கணக்கரால் முறையாகவும் நாளிது வரையிலுமாகப் பேணப் பட்டுள்ளதா?

(2) தொழில் வரிக்கேட்புப் பதிவேடு ஊராட்சி 17 ஆவது எண் படிவத்தில் கணக்கரால் முறையாகப் பேண்ப்படுகின்றதா?

(3) தொழில் வரிப் பற்றுச் சீட்டு மற்றும் பட்டிப் பதிவேடு 18 ஆவது எண் படிவத்தில் கணக்கரால் முறையாகப் பேணி வரப்படுகின்றதா?

(4) கேட்புப் பதிவேட்டில் தண்டல்களைப் பதிவு செய்த பின்னர் கணக்கர் தண்டல் பதிவேட்டை உடனடியாக ஊராட்சித் தலைவருக்குத் திருப்பியனுப்பியுள்ளாரா?

(5) நாளிதுவரையிலாக மொத்தக் கேட்பு, தண்டல், நிலுவையைக் குறிப்பிடுக.

101. ஈ. (1) வரிக்குட்பட்ட வண்டிகளின் பட்டி ஊராட்சி 101 ஆவது படிவத்தில் கணக்கரால் முறையாகவும் நாளிதுவரையிலுமாகப் பேணப் பட்டுள்ளதா?

(2) வண்டி வரிக் கேட்பு உரிமம் மற்றும் அக இதழ்ப் பதிவேடு 103 ஆவது எண் ஊராட்சிப் படிவத்தில் கணக்கரால் முறையாகப் பேணி பரப்படுகின்றதா?

(3) வரிக்குட்பட்ட வண்டிகளின் பட்டியில் தண்டலைப் பதிவு செய்த பின்னர் தண்டல் பதிவேட்டைக் கணக்கர் ஊராட்சித் தலைவருக்கு உடனடியாகத் திருப்பியனுப்பியுள்ளாரா?

(4) நாளிதுவரையிலாக மொத்தக் கேட்பு, தண்டல், நிலுவை ஆகியவற்றைக் குறிப்பிடுக.

101. உ. (1) 81 ஆவது எண் ஊராட்சிப் படிவத்தில் ஆக்கிரமிப்புப் பதிவேடு கணக்கரால் முறையாகப் பேணி வரப்படுகின்றதா?

(2) நாளிது வரையிலான மொத்தக் கேட்பு, தண்டல், நிலுவை ஆகியவற்றைக் குறிப்பிடுக.

[கி. ஆ. 12 பத்தி 6

101. ஊ. (1) பேனி வருவதற்காக பிற ஊராட்சி வருவாய் இனங்களின் தண்டல் பற்றிய பிற பதிவேடுகள் எவையேனும் கணக்கரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனவா? அவ்வாறாயின் அவை யாவை?

அவை கணக்கரால் முறையாகப் பேணி வரப்படுகின்றனவா?

(2) இத்தகைய வருவாய் இனங்களில் ஒவ்வொன்றையும் பற்றித் தனியாக நாளிது வரையில் மொத்தக் கேட்பு, தண்டல், நிலுவை ஆகியவற்றை நாளிதுவரையிலுமாகக் குறிப்பிடுக.

101. எ. (1) 9 ஆவது எண் ஊராட்சிப் படிவத்தில் தண்டல் பதிவேடு வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி முதலியவற்றிற்குத் தனித்தனியாக ஊராட்சித் தலைவரால் முறையாகப் பேணி வரப்படுகின்றதா?

ஒவ்வொரு மாதம் 25 ஆம் நாளில் தண்டல் பதிவேடு ஊராட்சித் தலைவருக்கு ஊர்த் தலைமை அலுவலரால் அனுப்பப்பட்டதா?

(2) ஊராட்சியின் சார்பில் செய்யப்பட்ட தண்டல்களைப் பற்றிய வரவுச் செலவுத்துச் சீட்டுகள் ஊராட்சி 1 ஆவது எண் படிவ அக இதழில் ஒட்டி வைக்கப்பட்டுள்ளதா?

(3) பற்றுச்சீட்டு புத்தகங்கள் ஊர்த்தலைமை அலுவலரால் வைத்து வரப்படும் கேட்புப் பதிவேட்டுக்கு ஒத்திருக்கின்றனவா?

101. ஏ. (1) ஊராட்சி வருவாய்களைச் செலுத்துவதில் சுணக்கம் ஏதேனும் காணப்படுகின்றனவா அவ்வாறாயின் காரணங்கள் யாவை?

ஜப்தி ஆணைகள் பதிவேடு ஊர் தலைமை அலுவலரால் முறையாக பேணப் படுகின்றனவா?

101. ஐ. (1) வருவாய்த்துறை அலுவலர்கள் (பதவிப் பெயர் குறிப்பிடுக) கோட்ட ஊராட்சி அலுவலர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஊராட்சி விரிவாக்க அலுவலர் ஆகியோர்களால் கணக்குகள் சரிபார்க்கப்பட்டனவா அவ்வாறெனில் எப்போது எவ்வளவு அடிக்கடி?

101. ஒ. (1) உள்ளாட்சி மேல்வரி உள்ளாட்சி மேல்வரியின் மிகுவரி ஆகிய தண்டல்கள் பகிர்வு செய்யப்பட்டனவா?

கீழ்க்காணும் விவரங்களைக் குறிப்பிடுக:—

(i) உள்ளூர் மேல்வரி, உள்ளூர் மேல்வரியின் மிகுவரி ஆகிய தலைப்புகள் ஒவ்வொன்றின் கீழும் எதிர் பார்க்கப்பட்ட தண்டல்களுக்கு உதிராக ஊராட்சிகளுக்கு முன்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை.

(ii) மொத்தக் கேட்பு பொறுத்து ஒவ்வொரு தலைப்பின் கீழ் நிகரத் தொகை.

(iii) ஒவ்வொரு தலைப்பின் கீழும் சாக்கட்டப்பட வேண்டிய மிகுதித் தொகை.

நி. ஆ. 12 பத்தி 6]

பிரிவு XI.

கிராமக் குடி தண்ணீர்த் திட்டம்.

102. கிணறுகளைப் பற்றிய பதிவேடு சரிவர நாளது வரையில் எழுதிவைக்கப் பெற்றுள்ளதா? நில வருவாய் ஆய்வாளர், தாசில்தார் அல்லது துணைத் தாசில்தாரும் சுகாதார ஆய்வாளரும் தங்கள் சுற்றுப் பயணங்களில் அதைத் தணிக்கை செய்துள்ளார்களா? வருவாய் ஆய்வாளர், தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார், சுகாதார ஆய்வாளர் ஆகிய இவர்கள் எத்தனைக் கிணறுகளைப் பார்த்தார்கள்?

(1940 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி, 956, அ.ஆ.வரு.)
(1940-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19]ஆம் தேதி, 91, வ.து வா.செ. அச்சு.)

பிரிவு XII.

வாணிக வரிகள்.

103. 1939 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர்களையும் வரி விதிக்கப்பட்டவர்களையும் கொண்ட பட்டியலை வாணிக வரித் துறையினர் கிராமத் தலைவருக்குக் கொடுத்திருக்கிறார்களா?

104. விற்பனை வரிகளைக் கருவூலகத்தில் பெற்றுக் கொண்டதற்குரிய செலுத்து பட்டியல்கள் கிராமத் தலைவரால் சரிவர வைக்கப் பெற்றுள்ளனவா? 1939 ஆம் ஆண்டு சென்னைப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வருவாய்களைக் கருவூலத்தில் செலுத்தியதற்குரிய பட்டியல்கள் வசூலிக்கப் பட்ட தொகைகளுடன் ஒவ்வொரு மாதமும் அந்த மாதக் கருவூல கடைசித் தேதிக்குள் அனுப்பப்படுகின்றனவா?

கிராமத் தலைவரிடம் இருக்கும் பட்டியல்களின் நகல் பிரதிகளுடன் பற்றுச் சீட்டுப் புத்தகம் ஒத்துள்ளதா?

வருவாய் ஆய்வாளர் அவை இரண்டையும் சரி பார்த்துள்ளாரா? அவ் வாறாயின் எப்போது?

(1949 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ஆம் தேதி, 25, வ.து.வா.செ. அச்சு.

105. கேளிக்கைப் பதிவேடு சரிவர எழுதி வைக்கப்பெற்று அதிலிருந்து சம்பந்தப்பட்ட பகுதியின் நகல் ஒவ்வொரு மாதத்திற்கும் அதற்கு அடுத்த மாதம் 10-ஆம் தேதிக்குள் வாணிக வரி உதவி அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

பிரிவு XIII.

வருவாய்த் துறைப் பொறுப்பிலுள்ள அரசாங்கக் கட்டடங்களைப் பற்றிய பதிவேடு.

106. வருவாய்த் துறையின் பொறுப்பிலுள்ள பொது அரசாங்கக் கட்டடங்களைப் பற்றிய பதிவேடு வருவாய் ஆய்வாளரால் சரியாக நாளது வரையில் எழுதி வைக்கப் பெற்றுள்ளதா? (இதைக் கலெக்டர் அல்லது கோட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலும் தாலுகா அலுவலகத்திலும் உள்ள பதிவேட்டுடன் ஒத்துப்பார்க்க.)

(1944-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ஆம் தேதி, 2, வ.து.வா.செ. பலவ.)
(1944-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் தேதி, 35, அ.ஆ.பலவ.)

[நி. ஆ. 12 பத்தி 6

107. 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் தேதி (கல்வி சுகாதார) ஆணையில் விதிக்கப்பட்டுள்ளவாறு பண்டைக்கால வாணிபச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரக் கூடியதான சரித்திரக் காலத்துக்கு முற்பட்ட இடங்களும், பாதுகாக்கப்பட்ட சின்னங்களும், அவை எவையேனும் இருப்பின் அவற்றை கிராம அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், தாசில்தார்கள், தாசில்தார்கள் இவர்களில் யார் பார்க்க வேண்டுமோ அவர்கள் காலக் கிரமத்தில் பார்த்துள்ளாரா? அவை நல்ல நிலைமையில் வைத்துப் பாதுகாக்கப் பெற்று உள்ளனவா?

(1948-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ஆம் தேதி, 1166, வ.து.வா.செ.பலவ.)

பிரிவு XIV.

மரம் நடுதல் பற்றிய கேள்வி.

108. (அ) மரம் வளர்ப்பதற்கான நாற்றங்கால்கள் கிராமத்தில் உள்ளனவா? அவ்வாறுயின் எத்தனை உள்ளன? யாரால் வைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றின் நிலைமை என்ன?

109. (அ) ஆண்டில் எத்தனை மரங்கள் கிராமத்தில் நடப்பெற்றன?

(ஆ) எத்தனை அழிந்தன?

(இ) அவற்றிற்குப் பதிலாக எத்தனை வைக்கப் பெற்றன?

(ஈ) முன் ஆண்டில் நடப்பெற்றவையும் சேர்த்து எத்தனை நல்ல நிலைமையில் உள்ளன?

(உ) எத்தனை மரங்கள் கிராமத் தலைவராலும், கிராமக் கணக்கராலும், சுற்றுப் பயணம் செய்யும் அலுவலர்களாலும் பார்வையிடப் பெற்றுள்ளன?

110. 1949 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6 ஆம் தேதி வருவாய்த் துறைக் கழக உணவு உற்பத்தி 1085/49-1 என் கேட்பில் விதித்துள்ள பதிவேடு சரிவர வைக்கப்பெற்றுள்ளதா?

(1950-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதி, 36, வ.து.வா.செ.)

பிரிவு XV.

பலவகை.

கனிப் பொருள்கள் பற்றிய பதிவேடு.

111. இப்பதிவேடு சரிவர எழுதி வைக்கப் பெற்றுள்ளதா? அது வருவாய் ஆய்வாளராலும், தாசில்தாராலும், கோட்ட ஆட்சியாளராலும் அடுத்தடுத்து சரி பார்க்கப் பெற்றுள்ளதா?

பிரிவு XVI

பல்வகைச் சட்டம்.

112. (அ) 1961 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயச்) சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப்பட்ட நிலங்களின் தனிப்பதிவேடு ஒன்று பேணி வரப்படுகிறதா?

(ஆ) ஊரில் விலக்கு அளிக்கப்பட்ட புலங்களின் எண்ணிக்கை.

(இ) வருவாய் ஆய்வாளரால் ஆய்வுக்காகவுள்ள புலங்களின் எண்ணிக்கை.

(ஈ) வட்ட ஆட்சியரால் அல்லது துணை வட்ட ஆட்சியரால் ஆய்வு செய்யப்பட்ட புலங்களின் எண்ணிக்கை.

(உ) வேறு மேல்நிலை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்ட புலங்களின் எண்ணிக்கை.

(ஊ) நிலங்கள் தோப்பு, பழத் தோட்டம், மேய்ச்சல் நிலம் முதலிய வையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா?

(எ) விதிமுறைகளுக்கு மீறிய நேர்வுகள் எத்தனை கண்டுபிடிக்கப் பட்டன? அந்நேர்வுகள் யாவற்றிலும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளனவா?

112 (அ). (அ) உச்சவரம்பு நிறைவேற்றப்பட்டவற்றைப் பொறுத்த வரையில் ஒரு பதிவேடும் அதன் எல்லையில் உள்ள நேர்வுகளைக் காட்டும் மற்றொன்றுமாக இரண்டு பதிவேடுகள் ஆயத்தம் செய்யப்பட்டுக் கணக்கருக்கு வழங்கப்பட்டனவா?

(ஆ) மேலே (அ) வில் குறிக்கப்பட்ட இரு வகைகளுக்கும் சேர்ந்த நில உடைமையாளர்களின் எல்லா நேர்வுகளும் இந்த ஊரில் தங்கள் நிலங்கள் முழுமையுமோ அவற்றின் ஒரு பகுதியையோ உடையவர்களாக இருப்பவர்கள் இந்தப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளார்களா?

(இ) இந்தப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டவர்களை ஊர் அலுவலர் கள் சரிபார்த்து உச்சவரம்பு நிகையாகவுள்ள நேர்வுகளைப் பற்றி டிசம்பர் மாத இறுதிக்குள் வருவாய் ஆய்வாளருக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்களா?

(ஈ) அத்தகைய அறிக்கைகள் எத்தனை நேர்வுகளில் அனுப்பப்பட்டன? அவற்றின் பேரில் வட்ட அலுவலகத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

9 ஜூஜ்ா 21 ஜீ ழு]

பிரிவு XVII.

பொது.

113. கடந்த ஜமாபந்தியில் எழுந்த பிரச்சினைகள் எல்லாவற்றிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை முற்றுப் பெற்றதா?

(1949-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி, 13, வ.து.வா.செ. அச்சு.)
(1926-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26-ஆம் தேதி, 44, வ.து.வா.செ.)
(1934-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ஆம் தேதி, 13, வ.து.வா.செ.அச்சு.)
(1932-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி, 714, அ.ஆ.வா.வரு.)
(1932-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ஆம் தேதி, 18, வ.து.வா.செ.அச்சு.)
(1933-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி, 11, வ.து.வா.செ.அச்சு.)
(1933-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ஆம் தேதி, 129, வ.து.வா.செ.அச்சு.)
(1957-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ஆம் தேதி, 220, அ.ஆ.வா.வரு.)
(1957-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் தேதி, 169, வ.து.வா.செ.பலவ.)

பாக்கி வசூலுக்காக எடுககப்பட்ட நடவடிக்கைகளின் விவரம்.

1362, 63, 64, 65, 66, 67, 68, 69, 70 மொத்த நட்டப்பு, மொத்த பாக்கிகளும், நடப்பும்.

1. வசூலிக்கப்பட்ட தொகைகள் (இவை ஜமாபந்தி நிர்ணயத் தேதிக்கு ஒரு நாள் முன்னதாகவேனும் கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.)

2. வசூலிக்க முடியாதனை 14 ஆ விவரப் பட்டியலில் சேர்க்கப்பட்ட தொகை.

3. தடுப்பாணைக்குச் சம்பந்தப்பட்ட தொகை.

4. எத்தொகையைப் பற்றி விசாரணையும், கடிதப் போக்கு வரத்தும் செய்யப்பட்டு வருகிறதோ அத்தொகை.

5. எண் கேட்பு அறிவிப்பிற்குட்பட்ட தொகை.

6. 2,3 எண் அறிவிப்பிற்குட்பட்டவை.

[அசையும் பொருள்களைப் பற்றி விற்பனைத் தேதி.]

7. 4 எண் ஜப்தி அறிவிப்பிற்குட்பட்ட தொகை.

8. 5, 6 அறிவிப்புகளுக்குட்பட்டவை [அசையும் பொருள்களைப் பற்றி விற்பனைத் தேதி.]

9. நில விற்பனை செய்யப்பட்டு 30 நாட்களின் கால அறிவிப்பிற்குட்பட்ட தொகை.

10. நில விற்பனைகளுக்குட்பட்டு, விற்பனை அறிக்கைகளில் கோட்டாட்சியாளர் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்குட்பட்ட தொகை.

தி. ஆ. 12 பத்தி 6]

11. எஸ்டேட் கிராம நிலமுடையவர்களால் செலுத்தப்பட வேண்டிய பாக்கிகளுக்காக எஸ்டேட் மேலாளர் வைப்புத் தொகைகளிலிருந்து சரிகட்டப் பட வேண்டியதற்குட்பட்ட தொகை.

12. நிறைவேற்றக் கட்டளைக்குட்பட்ட தொகை.

13. மற்றவை எவையேனும் இருப்பின் :—

(அ) மோசடி செய்யப்பட்ட தொகை.

(ஆ)

(இ)

மொத்தம்

நில வருவாய்.

கிராமத்தின் எண், பெயர்.	கேட்புத் தொகை.	வசூல்.	திரை பட்ட வகுவிக்கப்	பாக்கி.	குறிப்புரைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

பிரிவு 1—பழைய பாக்கிகள் (1370 பசலிக்கும் அதற்கு முற்பட்ட காலத்திற் குரியனவும்.)

1.
2.
3.
4.
5.

மொத்தம்

பிரிவு நடப்புப் பசலி (1371)

1.
2.
3.
4.
5.

மொத்தம்

ஆக மொத்தம் (பாக்கிகளும் நடப்பும்)

[கி. ஆ. 12 பத்தி 6

பிரிவு XVII

வருமான மேல் வரியும் கூடுதல் வருமான மேல் வரியும்.

(சென்னை நில வருவாய் வருமான மேல் வரிச் சட்டம், 1954 ஆம் ஆண்டு XIX ஆவது சட்டம்.)

1. இக்கிராமத்தில் வரி விதிக்கப்பட்ட குடியானவர்களின் வேறு கிராமத்தில் உள்ள சொத்துக்களையும் சேர்த்துக் கொண்டால் இந்தச் சட்டத்தின் வருமான மேல் வரி விதிப்பிற்குட்படுத்தத் தக்கவாறு அக்கிராமங்களில் சொத்துக்கள் வைத்துள்ளனர் எனத் தெரிய வருகிறதா அல்லது நம்பிக்கையுள்ளதா?

(அ) நிலமுடையவர் பட்டா எண், பெயர்.

(ஆ) அவரால் தண்ணீர்த் தீர்வை உட்படச் செலுத்தப்பட்ட நிலத் தீர்வை.

(இ) 1364 ஆவது பசலிக்கு இறுதியான தீர்வை விதிப்பு செய்யப் பட்டதா, அவ்வாறுயின் எப்பொழுது?

(i) கேட்பு என்ன?

(ii) அது வசூலிக்கப்பட்டுள்ளதா?

(iii) செலுத்தச் சீட்டு எண் செலுத்தப்பட்ட தேதி.

(iv) செலுத்தப்பட வேண்டிய பாக்கி.

(v) பாக்கியை வசூலிக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கை.

(ஈ) 1366 ஆம் பசலிக்குத் தற்காலிக விதிப்பு செய்யப்பட்டுள்ளதா?

(i) அவ்வாறுனால் அதன் கேட்புத் தொகை என்ன?

(ii) இதுவரை செய்யப்பட்ட வசூல்.

(iii) செலுத்தச் சீட்டு எண்ணும், செலுத்தப்பட்ட தேதியும்.

(iv) செலுத்தப்பட வேண்டிய பாக்கி.

(v) பாக்கியை வசூலிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை.

2. இவற்றிற்காகக் கிராம அலுவலர்கள் தனிப்பதிவேடு எழுதி வைத்து வருகிறார்களா? இதன் பதிவுகள் (தாசில்தாரால்) தணிக்கை செய்யப்படுகின்றனவா?

3. தாலுகா தனிப் பதிவேடுகளில் விதிப்புகள் சரியாக அவ்வப்போது பதிவு செய்யப்பட்டு எடுத்தெழுதப்பட்டு வருகின்றனவா? தாசில்தாரால் அவை தணிக்கை செய்யப்பட்டு வருகின்றனவா? சம்பந்தப்பட்ட கிராமத்தின் இனங்களுடன் ஒத்துப்பார்த்து அதன் முடிவைக் குறிப்பிடுக.

கடன்கள்.

1. கிராமக் கடன்களைப் பற்றிய பேரேடு நாளது வரையிலும் எடுத்தெழுதப் பட்டு வருகிறதா? அதில் பாக்கி நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளவை தாலுகா பேரேட்டின் பல்வகைத் தலைப்புகளில் காட்டப்பட்டுள்ளவற்றோடு ஒத்து இருக்கின்றனவா?

நி. ஆ. 12 பத்தி 6]

2. கிராமக் கணக்கால் எழுதிவைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்ற கினைவுகளைப் பற்றிய பதிவேட்டிலிருந்து பகுதி தகவல் அவர் தாசில்தாருக்கு அனுப்பிக்கொண்டு வருகிறார்?

3. கிராமத்தில் வசூலிக்கப்பட வேண்டிய பாக்கியின் நிலைமை என்ன?

விவரங்கள்.

மொத்த கேட்புத் தொகை—பாக்கி.

	மொத்தக் கேட்புத் தொகை.			பாக்கி.		
	பழைய பாக்கி.	நடப்பு.	மொத்தம்.	பழைய பாக்கி.	நடப்பு.	மொத்தம்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)
நில மேம்பாடு சட்டம், விவசாயக் கடன்கள் சட்டம்.						
2. வித்துக்களும் உரமும் நீரேற்ற அமைப்புகள் தீவிர உரத் திட்டம் (விவசாயத் துறையினரால்) ரசாயன உரங்கள் வாங்கிக் கொள்வதற்காக.						
விவசாயத் துறை நிவாரணச் சட்டம் (தமிழ் நாடு) திருத்தச் சட்டம்.						
மொத்தம்.						

4. முடிவு பெறுத வேலைகள் எத்தனை? கடன் கொடுக்கப்பட்டதின் திடீர் தனைகளைக் கட்டாயப்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? இத னுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு முடிவு பெறுத வேலைகளின் விவரங்களைத் தனித் தாளில் குறிப்பிட்டுக் காட்டுக. பார்வை யிடுவதில் தாமதம் ஏதாவது உண்டா? அவ்வாறுனால் அதனையன பானவை? வருவாய் ஆய்வாளரின் விளக்கம்.

[தி. ஆ. 12 பத்தி 6

கடன் தொகைகளெல்லாம் உதவித் தொகைகளாக மாற்றப்பட்டனவா? பல்வேறு திட்டங்களில் கொடுக்கப்பட்ட மொத்தக் கடன் தொகைகளின் விவரங்களைக் குறித்துக் கீழ்க் கண்டுள்ள படிவத்தில் தற்போதைய நிலையை எடுத்துக் காட்டுக :—

திட்டத்தின் எண், பெயர்.	கொடுக்கப்பட்ட மொத்தக் கடன்கள்.	உதவித் தொகைகளாக மாற்றப் பட்ட தொகை.	ஆதாயமில்லாத் தள்ளுபடி தொகை.	உடனடியாக வசூலுக்குட்பட்ட தொகை.	தொக்கமாக வசூலிக்கப்பட்ட தொகை.	நடவடிக்கை எடுக்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1948-49						
1949-50						
1950-51						
1951-52						
1952-53						
மொத்தம், 1948-53 . .						

(இந்தத் திட்டத்தின் விவரங்களைத் தனியாகக் குறிப்பிடுக.)

1. குறிப்பிட்ட தனிப் பதிவேடு எல்லாக் கட்டங்களும் பூர்த்தி செய்யப் பட்டுக் கிராமக் கணக்கரால் எழுதி வைக்கப்பட்டு வருகின்றதா?

2. மூடிக்கப்பட்ட கிணறுகளைப் பொறுத்த வரையில் அடங்கலிலும் "அ" பதிவேட்டிலும் (கிராமப் பதிவேட்டிலும் தாலுகாப் பதிவேட்டிலும்) பதிவுகள் செய்யப்பட்டு அவற்றிற்குரிய ஆதார ஆணைகள் சரியாகக் குறிக்கப் பட்டுள்ளனவா?

4. கிராமத்தில் தொகைகள் ஐந்து தவணைகளில் வசூலிக்கப்பட வேண்டிய வைப் பற்றிய பேரேடுகள் இருக்கின்றனவா?

5. வேலைகளின் பதிவேடு சரி கட்டுதல்கள், பதிவேடு வருவாய்த் துறைக் கழகம் குறிப்பிட்ட பதிவேடு 19 என் பதிவேடு இவை தனியாக எழுதி வைக்கப்பட்டு தாளது வரை எடுத்தெழுதி வைக்கப்பட்டுள்ளனவா?

நி. ஆ. 12 பத்தி 6]

இனம் பதிவேட்டின்கீழ் கேள்விகள்.

1. 1956 ஆம் ஆண்டு இனங்கள் விதிப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட விதிகளின் 6-ஆவது விதியில் குறிப்பிட்டுள்ளவாறு, அச் சட்டத்தின் கீழ் தீர்வை விதிக்கத்தக்க எல்லா இனங்களைப் பற்றி அச் சட்டத்தின் 3 (3) ஆவது பிரிவின் கீழ் அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டுள்ளதா?

2. சட்டத்தின் விதிகளில் 16-ஆவது விதியில் வகுக்கப்பட்டுள்ளவாறு அச் சட்டத்தின்கீழ்த் தீர்வை விதிக்கத்தக்க எல்லா இனங்களின் பட்டியலையும் அவற்றின் தீர்வை வீதங்களையும், இறுதியாக முடிவு செய்யப்பட்டவாறு விளம்பரம் செய்யப்பட்டுள்ளதா?

3. விதிக்கப்பட வேண்டிய தீர்வைகள் அப்பதிவேட்டில் சம்பந்தப்பட்ட புலத்திற்கு எதிரே குறிப்புரைக் கட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

4. சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படாத அல்லது எடுத்த நடவடிக்கை முடிவு பெறுத இனங்கள் உள்ளனவா?

5. சட்டத்தின்கீழ்த் தீர்வை விதிக்கப்படாதவை என்ற காரணத்திற்காகத் தீர்வை விதிக்கப்படாத இனங்கள் உள்ளனவா? அவ்வாறு இருப்பின் அவற்றைக் குறிப்பிட்டு அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்குச் சரியானதா?

சென்னை நில வருவாய் இனங்களின் தீர்வைகள் விதிப்புச் சட்டம்.

1. நிலத் தீர்வையுடன் வசூலிக்கப்பட வேண்டிய கூடுதல் வருமான மேல் வரியைப் பற்றிய தற்காலிக கேட்பைக் கிராமக் கணக்கர் தயார் செய்துள்ளாரா? பசலிக்குக் கிராம மணியக்காரருக்குப் பட்டியல் கொடுத்துள்ளாரா? அது தாசில்தாரால் தணிக்கை செய்யப்பட்டதா? கிராமத்தின் கேட்புத் தொகை என்ன?

2. இந்தத் தவிப்பின்கீழ்ச் செய்யப்பட்ட வசூல்களுக்குக் கிராம மணியக்காரர் தனியாகத் தண்டல் எழுதி வைத்து வருகிறாரா? அது தாசில்தாரால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறதா?

3. நில வருவாய்க் கேட்பு வசூலுடன் கலந்து எழுதாமல் தனியாகக் கிராம 14 என் கணக்கின் கேட்புக் கணக்கில் கிராமக் கணக்கர் எடுத்தெழுதி வருகிறாரா? இது தாசில்தாரால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறதா?

4. கிராம 16 என் கணக்கில் தனியாகக் கேட்பு வசூல் பாக்கி கணக்கிடப்பட்டு எழுதப்பட்டு வருகின்றனவா? இந்தக் கணக்கு கால முறைகளில் வருவாய் ஆய்வாளராலும் தாசில்தாராலும் தணிக்கை செய்யப்பட்டு வருகிறதா? கிராமத் தவிலமை அலுவலரால் கொடுக்கப்படும் பற்றுச் சீட்டில், அச்சீட்டு கூடுதல் வருமான மேல் வரிக்குச் சம்பந்தமான வசூல்களுக்குச் சம்பந்தமான தெனத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இது செய்யப்பட்டு வருகின்றனவா?

[நி. ஆ. 12 பத்தி 6

5. 1366 ஆவது பசலி ஆண்டில் கூடுதல் வருமான மேல் வரி வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி என்ன? அதை வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

6. முறையான நில வருவாய் சம்பந்தமாகக் கிராமக் கணக்கரால் அனுப்பப் படும் தற்காலிகக் கிராமக் கேட்புப் பதிவேட்டிலிருந்து தாலூகா அலுவலகத்தில் எழுதி வைக்கப்பட்டு வரும் கூடுதல் வருமான மேல் வரிப் பதிவேட்டில் எடுத்தெழுதப்பட்டு வருகின்றதா? இது தாசில்தாரால் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றதா?

இனம் தீர்வை விதிப்பு.

1. கிராமத்தின் மொத்த இனம்களின் எண்ணிக்கை.

2. 1956 ஆம் ஆண்டு இனம்கள் (விதிப்பு) சட்டத்தின்கீழ் முழுத் தீர்வையும் விதிக்கத்தக்க எல்லா இனம்களும் சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்ட தனிப் பதிவேட்டிற்குக் கொண்டுவரப்பட்டனவா?

3. சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய இனம்களின் எண்ணிக்கை.

4. சட்டத்தின் 3 (2) ஆவது பிரிவின்கீழ் வரைவு அறிவிக்கை அனுப்பப் பட்டவற்றின் எண்ணிக்கை.

5. சட்டத்தின் 3 (3) ஆவது பிரிவின்கீழ் இறுதியான வரைவு அறிவிக்கை அனுப்பப்பட்டவற்றின் எண்ணிக்கை.

6. சட்டத்தின்கீழ் விதிக்கத்தக்க மொத்தக் கேட்பின் மதிப்பீடு.

7. சட்டத்தின் 3 (3) ஆவது பிரிவின்கீழ் இறுதி அறிவிக்கையில் விதிக்கப் பட்ட மொத்தத் தொகை.

இணைப்பு II -அ.

(12 ஆவது நிலை ஆணை 6 ஆவது பத்தி.)

எஸ்டேட் கிராமங்களின் ஜமாபந்தி தணிக்கைக் குறிப்பு.

1. பொது விதி முறையில் வைத்து வர வேண்டிய குறிப்பிட்ட கணக்கு களில் கலெக்டர் ஆணையின்கீழ் அவ்வாறு வைத்துவராதவை எவையேனும் இருந்தால் அவை யாவை?

2. கிராமம் முழுமையும் அல்லது கிராமத்தின் ஒரு பாகம் மாத்திரம் அளவை செய்யப் பெற்று நிலத் தீர்வை நிர்ணயம் முடிவு செய்யப்பெற்றுள் ள்தா? அவ்வாறுயின் அளவை சம்பந்தமான என்ன என்ன பதிவேடுகள் உள்ளன? அவற்றின் நிலைமை என்ன? அவை நாளது தேதி வரை எழுதப் பெற்றுள்ளனவா?

3. நிலையான பதிவேடுகள் "அ" பதிவேடு உட்பிரிவு ஆனவை யாவும் 3 எண் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள எல்லா உட்பிரிவுகளும் மற்ற நிலை

நி. ஆ. 12 பத்தி 6]

யான மாறுதல்களும் அவற்றின் ஒப்பளிப்பு ஆணையின் எண் தேதியுடன் இப் பதிவேட்டின் குறிப்புரைக் கட்டத்தில் அல்லது இப்பதிவேட்டில் எழுதாத இதழ்களில் உரிய முறையில் குறிக்கப் பெற்றுள்ளனவா ?

4. இப் பதிவேட்டின் பிரதி ஒன்று நாளாகா அலுவலகத்தில் எழுதி வைக்கப் பட்டு மாறுதல் ஒவ்வொன்றும் ஒப்பளிக்கப்படும்போது குறிக்கப்படுகின்றனவா?

5. இருக்குமிடம் தெரியாத திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்ட இனம்கள் உள்ளனவா ? அவ்வாறுயின் பதிவேட்டின் இரண்டாம் பாகத்தில் அவற்றின் பரப்பும் தீர்வையும் குறிக்கப்பெற்றுள்ளனவா ?

6. நிலையான "ஆ" பதிவேடு 3 என் கணக்கில் பதிவு செய்யப் பெற்ற நிலையான மாறுதல்கள் எல்லாம் ஒப்பளிப்பாணையின் தேதி, என் இவற்றுடன் குறிக்கப் பெற்றுள்ளனவா ? நாளாகா "ஆ" பதிவேட்டுடன் சரி பார்த்து மூரண்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைக் குறிக்க.

7. உரிமை வழங்கப் பெறுதவையாய்த் தனிப்பட்டவருக்கு வழங்கிய இனம் கள் எவையேனும் உள்ளனவா ? அவ்வாறுயின் அவற்றை ஆதியில் வழங்கப் பெற்றவரின் வழிவழி வந்தவர்களுடைய அனுபவத்தில் அவை உள்ளனவா ? அல்லது அன்னியரிடம் உள்ளனவா ?

8. சமயம், அறம் அல்லது தொழிலாளர் பணி இனம்கள் உள்ளனவா ? ஒவ்வொன்றிலும் அப்பணி ஆற்றப் பெறுகிறதா ?

9. மேலே உள்ள வகை இனம்களின் பராதீனம் செய்யப்பட்டவை எவை யேனும் உள்ளனவா ? அவ்வாறுயின் அவற்றைத் திரும்பி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா ?

10. இனம் விடுவரியைப் பங்கிடு செய்வது தேவையாக இருக்குமாயின் பங்கீடு சரியாகச் செய்யப் பெற்றுள்ளதா ?

11. இருக்குமிடம் தெரியாத உரிமை வழங்கப் பெற்ற இனம்களின் ஜமீன் தார் அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய ஜமீன் வரியுடன் விடுவரி சேர்க்கப் பெற்றுள்ள இனம்கள் உள்ளனவா ? அவ்வாறுயின் ஒவ்வொன்றிலும் பரப்பும் செலுத்தத்தக்க விடுவரியும் பதிவேட்டின் இரண்டாம் பாகத்தில் குறிக்கப் பட்டுள்ளதா ?

12. இப் பதிவேட்டில் கண்டுள்ள விடுவரிக்கும், விடுவரி நாட்டுமொழிப் பதிவேட்டில் கண்டுள்ள விடுவரிக்கும் மூரண்பாடுகள் எவையேனும் இருப்பின் இவற்றைச் சரி செய்து குறிப்பிட்ட படிவத்தில் சுருக்கமாகப் பதிவேட்டின் கடைசியில் எழுதப் பெற்றுள்ளதா ?

13. நிலையான "இ" பதிவேட்டின் கிராம நகலும், தாலுகா நகலும் நாளது தேதி வரையில் சரிவர எழுதி வைக்கப் பெற்றுள்ளதா ?

1928 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் தேதி 52 என் அரசாங்க ஆணை யின் (வருவாய்த் துறை) கீழ் வீட்டு மனைகளுக்காக நிலம் உரிமை பெறப்படும் அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கு ஒப்படைக்கப் பெற்ற மனைகளைக் காட்டும் பதிவேடு.

[நி. ஆ. 12 பக்கி 6

14. (அ) (i) அவரவருக்குச் சொந்தமான வீட்டு மனை இல்லாத, அட்டவணையில் கண்ட ஜாதியினரும் அட்டவணையில் கண்ட மலிவாசிகளும் கொடுத்தில் உள்ளார்களா? அவ்வாறுயின் எத்தனை பேர்கள் உள்ளனர்?

(ii) அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கும் அட்டவணையில் கண்ட மலிவாசிகளுக்கும் ஒப்படைக்கத்தக்க வீட்டு மனைகள் உள்ளனவா? அவ்வாறுயின் அவற்றின் (நில அளவை) என் வகை, பரப்பு, அளவை இப்பொழுது எவ்வாறு உபயோகத்தில் உள்ளன முதலிய விவரங்களைக் கொடுக்க.

(iii)(1) அரசினர் ஒப்படை செய்யக் கூடிய நிலங்களில் ஒப்படைக்கப் பெற்ற வீட்டு மனைகளின் மொத்த எண்ணிக்கையும் அவற்றில் கட்டிய வீடுகளின் மொத்த எண்ணிக்கையும் எத்தனை?

(2) வீட்டு மனைகளாக ஒப்படைப்பதற்காக தில உரிமை பெறப்பட்ட தனியார் நிலங்களின் பரப்பு என்ன? அவற்றில் உண்மையில் ஒப்படைக்கப்பட்ட வீட்டு மனைகளின் பரப்பும் எண்ணிக்கையும் என்ன? அவற்றில் கட்டிய வீடுகளின் எண்ணிக்கை எத்தனை?

(3) அட்டவணையில் கண்ட ஜாதியினருக்கும் அட்டவணையில் கண்ட மலிவாசிகளுக்கும் ஒப்படைக்கப்பட்ட மனைகளில் வீடு கட்டத் தவறியதற்கு அல்லது தாமதத்திற்குக் காரணங்கள் என்ன?

1952 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் தேதி, 20, என் வ.து.வா.செ.

(ஆ) அவ்வாறுயின் 1931 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் தேதி, 46 என், வ.து.வா.செ. (அச்சு) விதிக்க, பதிவேடு சரியாக எழுதி வைக்கப்பெற்றுள்ளதா? காலுகாப் பதிவேட்டுடன் ஒத்துப் பார்க்க (ஒரு கேட்பு, வசூல், நிலுவை விவர அறிக்கை இதனுடன் சேர்க்க நிலுவையை வசூலிக்க எடுத்துக் கொண்ட ஏற்பாடுகளைக் குறிக்க).

(இ) வருவாய் ஆய்வாளர், தாசில்தார், துணைத் தாசில்தார் தமது சுற்றுப் பயணத்தில் கிராமப் பதிவேட்டைப் பரிசீலித்துள்ளாரா? நிபந்தனைகள் இருக்குமாயின், ஏதேனும் மீறப்பட்டுள்ளதா என்று கண்டுபிடிக்கும் பொருட்டு நிபந்தனைகளுக்குட்பட்ட ஒப்படைகளில் கணிசமான சதவிகிதத்தை அவர்கள் சரி பார்த்துள்ளார்களா?

1939 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி, 38, என் வ.து.வா.செ.

15. நிலையான "உ" பதிவேடு.—பிறர் உரிமையில் விட்டு வைக்கப்படும் நிலங்களின் பதிவேடு சரிவர எழுதி வைக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு விட்டு வைக்கப்பட்டுள்ள நிலங்களெல்லாம் இப்பதிவேட்டில் உள்ளனவா? பிறரிடம் விட்டு வைக்கப்பட்ட நிலங்களை காட்டும் தாலுகா "ஊ" பதிவேட்டுடன் இப்பதிவேடு ஒத்துப் பார்க்கப்பட்டதா? ஒத்துப் பார்த்ததில் ஒன்றுக்கொன்று ஒத்திருப்பதாகத் தோன்றுகின்றதா?

நி. ஆ. 12 பத்தி 6]

16. அரசாங்க நிலக் கொடை நிபந்தனைகள் நிறைவேற்றப் பெற்றிருக்கின்றனவா? இல்லையானால் நிபந்தனைகள் மீறப்பட்டவற்றில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

1940 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி, 2917, அ.ஆ.
1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் தேதி, 2, வ.து.வா.செ.

எல்லை வரையறுத்தலும் புலங்களின் படங்களும்.

17. நில அளவைக் கல் பதிவேடுகளும், எல்லை வரையறுத்தல் வரைபடமும் அல்லது விளக்கப் படங்களும் சரிவர வைக்கப் பெற்று வருகின்றனவா?

18. கிராமத்தில் மொத்த நில அளவைக் கற்களின் எண்ணிக்கை—

இந்த ஆண்டில் கிராமக் கணக்கர் சரி பார்க்க வேண்டிய கற்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டில் கிராமக் கணக்கர் சரி பார்த்த கற்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டு நில அளவுப் பணியாளர்/நில வருவாய் ஆய்வாளர் சரி பார்த்த கற்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டு நில அளவு மாவட்ட அலுவலர்/தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் சரி பார்த்த கற்களின் எண்ணிக்கை.

ந. க. தொகுதியாக உள்ள கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திற்கும் தகவல் தனித் தனியாய்க் குறிப்பிடுக.

19. புதுப்பிக்க வேண்டிய அல்லது பழுது பார்க்க வேண்டிய கற்களின் எண்ணிக்கை.

அவற்றில் குடியானவர்கள் தாங்களே கவனித்த கற்களின் எண்ணிக்கை, அவற்றில் தாலுகா நில அளவுப் பணியாளர் நிலத்தில் சரி பார்த்த கற்களின் எண்ணிக்கை.

தாலுகா நில அளவுப் பணியாளர் புதுப்பித்த அல்லது பழுது பார்த்த கற்களின் எண்ணிக்கை.

பாக்கி.

20. மூன்று ஆண்டுகள் பாக்கி உள்படக் கவனிக்க வேண்டிய உட்பிரிவுகளின் எண்ணிக்கை.

இந்த ஆண்டு தாலுகா நில அளவுப் பணியாளர் அளந்து சரி பார்த்த வற்றின் எண்ணிக்கை.

[நி. ஆ. 12 பத்தி 6

பாக்கி.

21. கற்களின் இருப்பை "கற்கள் கிடங்குப் பதிவேட்டுடன் தாலுகா நில அளவுப் பணியாளர்/வருவாய் ஆய்வாளர் அல்லது நில அளவு மாவட்ட அலுவலர், தாசில்தார் அல்லது துணைத் தாசில்தார் சரிபார்த்திருக்கிறாரா?" அதன் முடிவு தாலுகாப் பதிவேட்டில் சரியாய்ப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?

22. கிராமக் கணக்கர் தம் நில அளவைக் கருவிகள் எல்லாவற்றையும் கிராமப் படங்களையும் நன்னிலைமையில் வைத்து வந்து அவற்றைக் காட்டுமாறு கொண்டு வந்திருக்கிறாரா?

23. கிராமக் கணக்கரிடம் உள்ள நில அளவைச் சுவடியும் தாலுகா அலுவலகத்திலுள்ள நில அளவைச் சுவடியும் நன்னிலைமையில் வைக்கப்பட்டு இன்று வரைக்கும் சரியாயிருக்கின்றனவா? அவற்றில் ஏதாவது ஒன்றில் உட்பிரிவுகள் வரையப்படாமல் இருக்கின்றனவா? 3 என் விவரப் பட்டியலுடன் ஒத்துப் பார்க்க.

24. எழுதி வைத்து வரும் கிராமப் பதிவேடுகளை நில அளவு மாவட்ட அலுவலர் ஆய்வு செய்து அனுப்பிய குறிப்புகளில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் சரிபடுத்தப்பட்டுள்ளனவா? எழுதி வைக்கப்பட்டு வரும் கிராமப் பதிவேடுகளை நில அளவு மாவட்ட அலுவலரின் ஆய்வுக் குறிப்புகளுடன் சரிபார்த்து முடிவைக் குறிக்க.

1938 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி, 102 என், வ.து.வா.செ. அச்சு.

விவசாயம், நில உரிமை, நில வருவாய்க் கேட்பு நிர்ணயம் செய்தல் இவை பற்றிய கணக்குகள்.

25. என் கணக்கு.—உண்மையில் அவ்வப்போது பரிசாய்வு செய்யப்பட்டதை அனுசரித்து இக்கணக்கு மாதந்தோறும் எழுதப்பட்டு வந்ததாகத் தெரிகிறதா?

26. முன் பசலி நிலையான "அ" பதிவேட்டிலும், நிலையான "ஆ" பதிவேட்டிலும் 3 என் கணக்கிலும் பதிவு செய்யப்பட்டுள்ள மாறுதல்கள் நடப்பு 2 என் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளனவா?

27. வாரிசு இல்லாததால், அரசினரைச் சேர்தலினால் ஏற்பட்ட மாறுதல்கள் இந்த 2 என் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளனவா? இவை இக் கணக்கின் 5 ஆவது கட்டத்தில் "தமிழ் நாடு அரசினரைச் சேர்தல்கள்" என்று குறிக்கப்பட்டுள்ளனவா? இதைத் தாலுகா "எ" பதிவேட்டுடன் ஒத்துப் பார்த்து முரண்பாடுகள் எவையேனும் இருக்குமாயின் அவற்றைக் குறிப்பிடுக.

1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி, 29 என். வ.து.வா.செ. அச்சு.

28. விவசாயம் செய்யப்பட்ட பரப்பை அனுசரித்துப் புலங்களின் பாகங்கள் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட வேண்டியவற்றில் அத்தகைய பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதா?

நி. ஆ. 12 பத்தி 6]

29. 1 என் கணக்கு 2 என் கணக்கிலிருந்து சரியாய் எடுத்தெழுதப் பட்டிருக்கிறதா? அது "அரசாங்க நிலங்களும் அரசினர் அக்கறை கொண் டுள்ள நிலங்களும்" "ஜமீன்களும்" என்னும் இரு பிரிவுகளில் எழுதப்பட்டுள் ளதா? அதன் உள்ளடக்கத்துடன் அது ஒவ்வொரு மாதமும் வருவாய் ஆய் வாளருக்கு அனுப்பப்பட்டு வருகிறதா? அவர் அதைத் தாமதமின்றித் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறாரா?

1939 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி, 72 என், வ.து.வா.செ. அச்சு.

மேலும் நிலக்கொடை பெற்றிருப்பவர் வருவாய்த் துறைக் கழகத்தாலும் கலெக்டராலும் அவ்வப்பொழுது விதிக்கக் கூடிய கட்டுப்பாடுகளுக்குட்பட்டும், தீர்வை செலுத்துவதற்குட்பட்டும், ஓடைகளிலிருந்து நாற்றங்கால் பாசனம் செய்வதற்கும் குடி தண்ணீர் வழங்குவதற்கும், காப்பி அரைப்பதற்கும் மின்சார வலன் உற்பத்தி நீங்கலாக மற்ற கொழிற்சாலை உபயோகங்களுக்காகத் தண்ணீர் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் இத்தகைய உபயோகம் ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்கு தண்ணீர் எடுத்துக் கொள்ளத் தக்க அதிகாரிகளிடமிருந்து முன்னதாகவே உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

1931ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6ஆம் தேதி, 518, அ.ஆ.வரு.பல.
1931ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18ஆம் தேதி; 29, வ.து.வா.செ.

(11) கீழே குறிக்கப்பட்டுள்ள பாதைகளும், சாலைகளும் கொடையிலிருந்து விலக்கப்பட வேண்டும். கொடை பெற்றிருப்பவர் கோயமுத்தூர் கலெக்டர் குறிப்பிட்டவாறு விலக்கப்பட்ட பாப்புகளின் எல்லைகளை வரையறுக்க வேண்டும்.

(12) கொடை பெற்றிருப்பவர் நிலம் வழங்கப்பெற்ற தேதியிலிருந்து 15 ஆண்டுகளுக்குள் கொடையில் அடங்கியுள்ள நிலத்தில் 60 சதவீதம் 1 ஆவது ஷட்பிரிவில் குறிக்கப்பட்டுள்ள தோட்ட வினைபொருள் பயிர் செய்ய வேண்டும்.

(13) கொடையின் 12 ஆவது நிபந்தனையை மீறப்பட்டிருந்தால் அந்நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ள கால அளவில் இறுதியில், வழங்கப் பெற்றிருக்கும் நிலப்பரப்பின் 60 சதவீதத்திற்குக் கொடையின் 4 ஆவது நிபந்தனையில் வளர்ச்சியடைந்த நிலத்திற்கு வருக்கப்பட்டுள்ள வீதத்தில் தீர்வையைச் செலுத்துவதற்குக் கொடை பெற்றிருப்பவர் உட்பட வேண்டும்.

(14) ஒப்படை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் இனங்கள், வேர்கள், இலைகளின் உரிமையையும், இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட பின்னர் நிலங்களில் வளர்க்கக்கூடிய சந்தன மரங்கள்,

தி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

அவற்றின் இலைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் அரசினர் தங்களிடமே தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது அவற்றின் வேர்கள் அல்லது அவற்றின் இலைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப் படுத்தித் தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். கோயமுத்தூர் மாவட்டக் கலெக்டர் அனுமதி யில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டச் செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு ஒப்பனை பெறுபவருக்கு உரிமை இல்லை.

(15) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறாமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் செய்வதில் கலெக்டர் மன திறைவு கொள்ளத்தக்க வகையில் எத்துக் கொள்ளத் தக்க எல்லா நடவடிக்கை களையும் ஒப்பனை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(16) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப் படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் ஒப்பனை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(17) மேலே குறிப்பிட்டுள்ள (14), (15) அல்லது (16) ஆவது நிபந்தனை களில் எதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப்படா விடின், ஒப்பனை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் கோயமுத்தூர் மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்ய வேண்டுமென்று நிர்மானிக்கிறாரோ, அத்தகைய ஈட்டுத் தொகையை, அவர் அரசினருக்குச் செலுத்தி விட வேண்டும். ஒப்பனையை ரத்து செய்து நிலத்தில் திரும்பப் பிரவேசிக்கவும் அரசினருக்கு உரிமையுண்டு. அதன் பின்னர் அந்நில முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்துவிடும். இந்த நிலையில் ஒப்பனை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார்.

1941 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி, 138, ம.து.வா.செ.

(18) கொடையின் 12 ஆவது நிபந்தனையைத் தவிர மற்ற நிபந்தனை களில் யாதொன்றும் மீறப்பட்டிருந்தால் நிலம் முழுமையும் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் பிரவேசிக்கும் முறையில், நிலத்தின் யாதொரு பாகத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் திரும்பப் பிரவேசிக்க அரசினருக்கு உரிமை உண்டு. அந்நில முழுமையும் அதில் உள்ள கட்டடங்கள், சாலைகள், வேலிகள், மரங்கள், செடிகள் அந்நிலத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற எல்லாம் அரசினருக்கே சட்ட முறையில் முற்றிலும் சேர்ந்துவிடும். இவ்வாறு நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் பிரவேசம் செய்யப்பட்டதால், கொடை பெற்றிருப்பவருக்கு யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமை இல்லை.

[நி. ஆ. 15 பக்கிகள் 9, 12, 29, 41, 48

(19) கொடை பெற்றிருப்பவர் கொடையில் அடங்கியுள்ள ஒவ்வொரு ஏக்கர் நிலத்திற்கும் 50 ரூபாய் தவக்கச் செலுத்துத் தொகையாக அரசினருக்குக் கொடுத்துவிட வேண்டும். நிலத்தில் இருக்கும் மரங்களின் மதிப்பின் நிமித்தமாகத் தனித் தொகை விதிக்கப்பட மாட்டாது.

1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் தேதி, 94, அ.ஆ.வரு.

1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் தேதி, 7, வ.து.வா.செ.

(20) இந்த ஒப்படை தேர்மையற்றது என்றுவது, அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டதென்றுவது, அல்லது தவறுக முறையிடப்பட்டது அல்லது மோசம் செய்யப்பட்ட காரணத்தினால் அல்லது ஒப்படை செய்யும் அதிகாரிக்கு 15 ஆவது நிலை ஆணையின்கீழ் வழங்கப்பெற்ற அதிகார வரம்புக்கு மீறித்தாம் ஒப்படை செய்திருக்கிறதென்றுவது, அல்லது நடை முறையில் ஒழுங்கீனமாயிருந்ததென்றுவது ஏற்பட்டால் ஒப்படை ரத்து செய்யப்படுவதற்குட்படும்.

(21) மேல்முறையீட்டிலாவது அல்லது ரிவிஷனிலாவது ஒப்படை ரத்து செய்யப்படுமாயின் ஒப்படை பெற்றிருப்பவர் தாம் ஒப்படை பெற்ற நிலத்தில் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகளுக்கு யாதொரு ஈடும் பெறுவதற்குரியவர் ஆகார்.

1942ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி, 471, அ.ஆ.வரு.பல.

1942ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5ஆம் தேதி, 10, வ.து.வா.செ.அச்சு.

இதற்குச் சான்றுக இவற்றைத் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவரது ஆணையையும், கட்டளையையும் அனுசரித்து ஆண்டு மாதம் தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

1941ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் தேதி, 1448, அ.ஆ.வரு.பல.

1941ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் தேதி, 124, வ.து.வா.செ.அச்சு.

இணைப்பு V—தொடர்ச்சி.

பழனிமலைப் பகுதியில் (கொடைக்கானல் நகர எல்லைக்கு வெளியில்) தோட்ட வினைபொருள் பயிர் செய்வதற்குரிய நில ஒப்படை ஆணையின் படிவம்.

கோட்ட ஆட்சியாளர் கலெக்டர் வருவாய்த் துறை வாரியாபத்தார் இதன் மூலமாக, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு தாலுகா, மாமத்தில் நில அளவை எண் ஏக்கர் பரப்பு நிலத்தைத் தோட்ட வினை பொருள் பயிர் செய்வதற்காக க்கு வழங்குகிறார்.

(1) காபி, தேயிலை, கொக்கோ, கொய்ரு மரம், ஏலம், ரப்பர் அல்லது இதர தோட்டப் பயிர் அல்லது அரசினர் தனி ஆணைகளினால் தோட்டப் பயிர் என ஏற்றுக் கொள்ளத் தக்க யாதொரு பயிர் வினைவிப்பதற்கு அல்லது

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

அத்தகைய பயிர் வினைவை மேற்பார்வையிடுவதற்கும், அதில் விளைவானது சரியாக விற்கப்படுவதற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டுவதற்கும், அதன் மீது சாலைகளை அமைப்பதற்கும் மாத்திரமே நிலம் உபயோகம் செய்யப்பட வேண்டும்.

(2) கொடை பெற்றிருப்பவர் நில அளவை செய்வதற்கான செலவைச் செலுத்திவிட வேண்டும். எல்லைகள், மரஞ்செடிகள் அகழ்ந்தெடுக்கப் பெற்று சுத்தமாக வைத்து வருவதுடன் சென்ற நில அளவை எல்லைகள் சட்டத்தின் ஏற்பாடுகளை அனுசரித்து நில அளவைக் குறிகளைப் பாதுகாத்து வரவும் வேண்டும்.

(3) பொதுச் சாலைகள், பொதுக் கிளைச் சாலைகள் என அறிவிக்கப்பட்ட பரப்பு நீங்கலாக உள்ள தோட்ட விளைபொருள் பயிர் செய்யப்பெற்றதால் அல்லது கட்டடங்கள் கட்டப்பட்டதால் வளர்ச்சியடைந்துள்ள நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3 ரூபாய் வீதமும், வளர்ச்சி பெறுத நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 63 நயா பைசா வீதமும் கொடை பெற்றிருப்பவர் தீர்வை செலுத்த வேண்டும். தீர்வை வீதங்கள், நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தில் இருந்து அமைக்கப்படுவதற்குட்படும்.

(4) நிலக்கொடை பெற்றவர் சட்ட முறையிலும் வழக்க முறையிலும் செலுத்தத் தக்க எல்லாப் பொது வரிகளையும் தல வரிகளையும் செலுத்த வேண்டும்.

(5) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள சாலைகள், பாதைகள் ஆகிய இவற்றின் அரசினருக்கும், பொது மக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை இவ்வொப்படை ஒரு வகையிலும் பாதிக்காது.

வனத்துறை அலுவலர்கள், வனத்துறையினர் வேலையில் ஈடுபட்டுள்ள எல்லா ஒப்பந்தக்காரர்கள், ஏஜண்டுகள், கூலி வேலை செய்வோர்கள், கால்நடைகள் அல்லது வாகனங்கள் இவற்றுடன் அல்லது இனமின்றி நிலக்கொடை பெற்றிருப்பவர் ஏற்படுத்தியிருக்கும் யாதொரு சாலை அல்லது பாதை வழியாக ஒதுக்கக் காட்டினுள் உள்ள யாதொரு பகுதிக்கு அல்லது இடத்திலிருந்து செல்வதற்கு அல்லது திரும்பி வருவதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள். அத்தகைய சாலை அல்லது பாதை வழியாக வனத்துறையினர் அல்லது வனத்துறை சார்பில் மரங்களை எடுத்துச் செல்ல வேண்டியிருந்தால், அது பாதுகாக்கப்பட்டு வருவதற்காக நிலக்கொடை பெற்றிருப்பவர்களுக்கு உதவித்தொகை அளிக்கப்படும். இத்தொகை இன்ன அளவில் இருக்க வேண்டுமென்பதை வனத் துறையினரும் நிலம் பெற்றிருப்பவரும் ஒப்பந்தத்தால் முடிவு செய்து கொள்ள வேண்டும். இத்தகைய ஒப்பந்தம் செய்யப்படாதபோது மாவட்டக் கலெக்டர் இதை முடிவு செய்வார்.

(6) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொது மக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில்

[நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 43

இருந்து வருகிற உரிமைகளும் முன் சொன்ன நிலத்தின்கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படையினால், அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப்படமாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை நூல் ஆவது அத்தியாயம், ஆவது, இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தில் இரண்டாம் பாகத்தில் விளக்கப் பட்டுள்ளவாறு கடையிலா உரிமை, கடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது, அவற்றுள் செய்யத்தக்க இவை போன்றவற்றைக் கொண்டு கனிப் பொருள்கள் சரி வர, எடுக்கப்படுவதற்கான அதிகாரங்களையும் இத்தகைய உரிமைகள் செயலாற்றப்படுவதால் நிலத்தின் மேல் பரப்பின் உரிமையாளருக்கு நேரிடக் கூடிய சேதங்களுக்கு ஈடு கொடுத்தற்குட்பட்டு அரசினர் தங்களிடமும் தங்களால் அதிகாரம் வழங்கப் பெற்றவர்களிடமும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

(7) கொடை பெற்றிருப்பவர் அரசினர் ஒப்பளிப்பின்றி இந்தியக் குடி அல்லாத வேறொருவருக்கும் நிலத்தைப் பாதீனம் செய்யலாகாது.

(8) நிலத்தைத் தட்டையாகச் சமப்படுத்தும் வகையில் அளவுக்கு அதிகமாக அதில் இயற்கையாக வளரும் மரஞ்செடிகளை அப்புறப்படுத்தலாகாது; நில ஒப்பனட செய்த அதிகாரி மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் போதுமான அளவில் நிலத்தைத் தட்டையாகச் சமப்படுத்தப்படுவதற்கு முன்னதாகவும் நில அளவை ஒட்டியே உழவு செய்யப்படுவதற்கு முன்னதாகவும் பயிர் அல்லது தோட்ட வினை பொருள் பயிர் விளைவிக்க ஆரம்பம் செய்யலாகாது. அடுத்தபடியாக இயற்கையாக வளரும் மரஞ்செடிகளை அப்புறப்படுத்துதல் 15-25 ஆவது நில ஆணைகள் விதித்துள்ள கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருக்க வேண்டும்.

(9) நிலத்தின் யாதொரு பாகத்தில் மரஞ்செடிகள் அகழ்ந்தெடுக்கப் பட்டிருக்கும் போதும். அப்பாகம் மேலே 1 ஆவது உட்பிரிவில் கண்டுள்ள கட்டடங்கள் அல்லது சாலைகளுக்குத் தேவையாக இருந்தாலன்றி, மதுரை மாவட்டக் கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படத்தக்க காலத்திற்குள் தோட்ட வினை பொருள் பயிர்கள் செய்ய வேண்டும்.

(10) இதனால் வழங்கப்பெற்ற நிலங்களில் தற்போது இருக்கும் ஓடைகளிலும் அரசினருக்கு தடைமுறையிலும் வழக்கத்திலும் இருந்து வருகிற உரிமைகளும் இந்நிலங்களில் வழியாக ஓடும் அல்லது அவற்றின் எல்லையை ஒட்டியிருக்கும் அல்லது அந்நிலங்களை யாதொரு வகையில் பாதிக்கும் தண்ணீர்த் தலைப்புகளிலும், நீர் வீழ்ச்சிகளிலும், ஓடைகளிலும், நடை முறையிலும், வழக்கத்திலும் அரசினருக்கு இருந்து வரும் கட்டுப்பாடும் ஒதுக்கி வைக்கப்பெற்றுள்ளன. அவை இவ்வொப்படை ஆணையினால் அல்லது இங்கே கண்டுள்ளவற்றில் எதனாலாவது பாதிக்கப்படமாட்டா.

இருப்பினும் கொடை பெற்றிருப்பவர் கலெக்டரால் அல்லது வருவாய்த் துறைக் கழகத்தால் அப்போதைக்கப்போது விதிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு ஆறுகள், ஓடைகள், வாய்க்கால்களிலிருந்து (ஜிகினை

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

அனுசரித்துத் தண்ணீர்த் தீர்வை செலுத்துவதற்குட்பட்டு) நாற்றங்கால் களுக்கு நீர் பாய்ச்சிக் கொள்ளவும் குடிதண்ணீர் வழங்கவும் அனுமதிக்கப் படுவார்.

(11) கொடை பெற்றிருப்பவர் கொடையில் அடங்கியுள்ள நிலத்தின் நடப்பு விலைக் கிரயத்தை ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் விதம் செலுத்த வேண்டும். நிலத்திலிருக்கும் மரங்களின் கிரயத்தின் நிமித்தமாகத் தனியாகத் தொகை செலுத்த வேண்டியதில்லை.

(12) கீழே குறிக்கப்பட்டுள்ள பாதைகளும், சாலைகளும் கொடையி லிருந்து விலக்கப்பட வேண்டும். கொடை பெற்றிருப்பவர் மதுரை மாவட்டக் கலெக்டர் குறிப்பிட்டவாறு விலக்கப்பட்ட பாப்புகளின் எல்லைகளை வரை படுக்க வேண்டும்.

(13) கொடை பெற்றிருப்பவர் நிலம் வழங்கப்பெற்ற தேதியிலிருந்து 15 ஆண்டுகளுக்குள் கொடையில் அடங்கியுள்ள நிலத்தில் 60 சதவீதம் 1 ஆவது உட்பிரிவில் குறிக்கப்பட்டுள்ள தோட்ட வகை பொருள் பயிர் செய்ய வேண்டும்.

(14) கொடையின் 12 ஆவது நிபந்தனையை மீறப்பட்டிருந்தால் அந் நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ள கால அளவின் இறுதியில், வழங்கப் பெற்றிருக்கும் நிலப்பரப்பின் 60 சதவீதத்திற்குக் கொடையின் 3 ஆவது நிபந்தனையில் வளர்ச்சி அடைந்த நிலத்திற்கு வகுக்கப்பட்டுள்ள விகிதத்தில் தீர்வையைச் செலுத்துவதற்குக் கொடை பெற்றிருப்பவர் உட்பட வேண்டும்.

(15) ஒப்படை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள்) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள், இவற்றின் உரிமையையும், இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட பின்னர் நிலங்களில் வளர்க்கக்கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது அவற்றின் வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்தித் தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மதுரை மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டச் செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு ஒப்படை பெறுவதற்கு உரிமை இல்லை.

(16) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறாமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் செய்வதில் மதுரை மாவட்டக் கலெக்டர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக் கொள்ளத் தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்க வேண்டும்.

[நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42

(17) ஆசாரங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அனுபோகங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப் படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் ஒப்படை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(18) மேலே குறிப்பிட்டுள்ள (13), (14) அல்லது (15) ஆவது நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப்படாவிடின், ஒப்படை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் மதுரை மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்யவேண்டும் என்று தீர்மானிக்கிறாரோ, அத்தகைய ஈட்டுத் தொகையை, அவர் அரசினருக்குச் செலுத்தி விட வேண்டும். ஒப்படையை ரத்து செய்து நிலத்தில் திரும்பப் பிரவேசிக்கவும் அரசினருக்கு உரிமை யுண்டு. அதன் பின்னர் அந்நிலம் முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்துவிடும். இந்த நிலையில் ஒப்படை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார்.

1941ஆம் ஆண்டு. ஆகஸ்டுமாதம் 13-ந் தேதி 138 எண். வ.து.க.செ.அச்சு.

(19) இக்கொடையின் எந்நிபந்தனை மீறினாலும் நிலம் முழுமையும் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் பிரவேசிக்கும் முறையில் நிலத்தின் யாதொரு பாகத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் திரும்பப் பிரவேசிக்க அரசினருக்கு உரிமை உண்டு. அதன் பின்னர் அந்நிலம் முழுமையும் அதில் உள்ள கட்டடங்கள், சாலைகள், வேலிகள், மரங்கள், செடிகள் அந்நிலத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற எல்லாம் அரசினருக்கே சட்ட முறையில் முற்றிலும் சேர்ந்து விடும். இவ்வாறு நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசம் செய்யப்பட்டால், கொடை பெற்றிருப் பவருக்கு யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமையில்லை.

(20) இந்த ஒப்படை நேர்மையற்றது என்றுவது, அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டதென்றுவது அல்லது தவறுக முறை யிடப்பட்டது அல்லது மோசம் செய்யப்பட்ட காரணத்தினால் என்றுவது, அல்லது ஒப்படை செய்யும் அதிகாரிக்கு 15 ஆவது நில ஆணையின் கீழ் வழங்கப்பெற்ற அதிகார வரம்புக்கு மீறித் தாம் ஒப்படை செய்திருக்கிறு சென்றுவது, அல்லது நடைமுறையில் ஒழுங்கீனமாயிருந்ததென்றுவது ஏற்பட்டால் ஒப்படை ரத்து செய்யப்படுவதற்குட்பட்டும்.

(21) மேல்முறையிட்டிலாவது அல்லது சிவிந்னிலாவது ஒப்படை ரத்து செய்யப்படுமாயின் ஒப்படை பெற்றிருப்பவர் தாம் ஒப்படை பெற்ற நிலத்தில் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகளுக்கு யாதொரு ஈடும் பெறுவதற்குரியவர் ஆகார்.

1943ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி, 471, அ.ஆ.வரு,பல.

1943ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5ஆம் தேதி, 10, வ.து.வா.செ.அச்சு.

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

ஏலக்காய் விளைவிப்பதற்குக் கொடுக்கப்படும் சோலை நிலக் கொடை ஆணையின் படிவம்.

மாவட்டக் கலெக்டர் இதனால், பின்வரும் நிபந்தனைகளுக்குட்படுத்தி இருந்து 25 ஆண்டுகளுக்கு இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் முதல் விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள எக்கர் சென்ட் நிலத்தை க்கு வழங்குகிறார்.

(1) இந்தக் கொடை நேர்மையற்றது என்றுவது, அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டதென்றுவது, அல்லது தவறுக முறையிடப்பட்டது அல்லது மோசம் செய்யப்பட்ட காரணத்தினால் என்றுவது, அல்லது கொடை செய்யும் அதிகாரிக்கு 15 ஆவது நில ஆணையின் கீழ் வழங்கப் பெற்ற அதிகார வரம்புக்கு மீறித் தாம் ஒப்படை செய்திருக்கிறரென்றுவது, அல்லது நடை முறையில் ஒழுங்கினமாயிருந்ததென்றுவது ஏற்பட்டால் ஒப்படை ரத்து செய்யப்படும். ஒப்பளித்த அதிகாரி ஆட்சித் துறையில் எந்த மேல் நில அதிகாரியின் சார்பில் உள்ளாரோ, அந்த மேல் நில அதிகாரியால் மேலே கண்டுள்ள காரணங்களில் ஏதாவதொன்றை முன்னிட்டு கொடை ரத்து செய்யப்படலாம்.

(2) இவ்வாறு கொடை ரத்து செய்யப்பட்டதால் கொடை பெற்றிருப் பவருக்கு நேரிடும் யாதொரு இழப்பிற்கும் ஈடு பெறுவதற்கு அவருக்கு உரிமையில்லை.

(3) ஏலக்காய் அனுகூலமான வேளாண்மை முறையில் விளைவிப்பதற்கு மாந்திரம் நிலங்கள் உபயோகம் செய்யப்பட வேண்டும். இருப்பினும் நிலக் கொடை பெற்றிருப்பவர் அவ்வாறு விளைவிப்பதற்கு, உதவக் கூடிய நிழல் மரங்களை வளர்க்கலாம் அல்லது அவ்வாறு விளைவிப்பதற்குத் தேவையாக இருக்கக்கூடிய தற்காலிகமான கட்டடங்களைக் கட்டிக் கொள்ளலாம்.

(4) கொடை பெற்றிருப்பவர் எல்லைகள், மரஞ்செடிகள் அகழ்ந்தெடுக்கப் பட்டு சுத்தமாக வைத்து வருவதுடன் நில அளவைக் குறிகளை நன்கு பழுது பார்த்து வர வேண்டும்.

(5) கொடை பெற்றிருப்பவர் தவணைக் கட்டணமாக ரூபாய் செலுத்த வேண்டும்.

(6) கொடை பெற்றிருப்பவர் ஆண்டுதோறும் கொடையில் சேர்க்கப் பட்டுள்ள நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் தொகை செலுத்த வேண்டும். ஆனால் வளர்ச்சியடையாத நிலமாக இருந்து முதன் முதலாக ஏலக்காய் விளைவிக்க நேரிட்டால் முதல் ஆறு ஆண்டுகளுக்கு இதில் பாதி வீதம் கணக்கிட்டுச் செலுத்துவதற்குட்படுவர். இவ்வுள்பிரிவில் முழு ஏக்கருக்கு மேலிருக்கும் பாகம் எதுவாயிருப்பினும் அது ஒரு ஏக்கராக எடுத்துக் கொள்ளப்படும்.

[நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42

(7) கொடை பெற்றிருப்பவர் 6-ஆவது நிபந்தனையில் வகுக்கப்பட்டுள்ள ஏற்பாட்டை அனுசரித்து ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் தேதிக்குள் உள்ள அரசாங்கக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். முழுத் தொகை அல்லது அதன் பாகத்தை அவ்வாறு செலுத்தாவிட்டால் ஆண்டுக்கு 6½ சதவீதம் வட்டி வசூலிக்கப்படலாம்.

(8) கொடை பெற்றிருப்பவர் சட்ட முறையிலும் வழக்க முறையிலும் செலுத்தத்தக்க எல்லாப் பொது வரிகளையும் தலவரிகளையும் செலுத்த வேண்டும்.

(9) இந்தக் கொடையானது இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள இரண்டாவது விவர அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சாலைகளிலும், பாதைகளிலும், அரசினருக்கும், பொது மக்களுக்கும் வழக்கமாக உள்ள அல்லது வேறு உரிமைகளை யாதொரு விதத்திலும் பாதிக்காது.

(10) ஒப்படை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் அரசினர் இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் பின்னர் வளரக்கூடிய சந்தன மரங்கள் அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்திக் தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதி இல்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டப்படுமாறு செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்குக் கொடை பெறுபவருக்கு உரிமை இல்லை.

(11) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறாமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் செய்வதில் கலெக்டர் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக் கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(12) நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற்சுரங்கங்களில் உள்ள உரிமை அரசினர் தங்களிடம் ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசினரிடம் அரசினரால் அதிகாரம் அளிக்கப்பெற்றவர்களும் தரப்படுத்தப்பட்டுள்ளதான சுரங்கக் குத்தகைப் படிவம் II ஆவது பாகத்தில் விவரிக்கப்பட்டுள்ள உரிமைகள், அதிகாரங்கள் போன்றவற்றைக் கொண்டு கனிப் பொருள்கள் சரிவர எடுப்பதற்கு அவசியமான அதிகாரங்களைச் செலுத்தலாம். ஆனால் இந்த உட்பிரிவில் அரசினரிடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள உரிமைகளும், அதிகாரங்களையும் அரசினர் செயலாற்றுவதினால் கொடை பெற்றிருப்பவருக்கு நேரிடக்கூடிய சேதத்திற்கு ஈடு பெறுவதற்கு அவருக்கு உரிமை உண்டு.

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

(13) கொடை பெற்றிருப்பவர் கலெக்டரது முன் அனுமதியில்லாமல் தமது கொடையில் உள்ள உரிமை முழுமையும் அல்லது யாதொரு பாகத்தையும் மாற்றி விடக்கூடாது அல்லது முழு நிலத்திலோ அல்லது பாகத்திலோ தமக்குள்ள சுவாதீனத்தையும் விட்டுவிடக்கூடாது.

(14) கொடை பெற்றிருப்பவர் நிலத்தில் வளரும் கட்டட வேலைக்குப் பயனுகும் வெட்டு மரங்களையும், மற்ற மரங்களையும், உச்சிப்பாகம் வெட்டப் பட்டு வளர்க்கப்படும் மரங்களையும், இள மரங்களையும் சேதமுறுமல் அழிவுறுமல் பாதுகாக்கவேண்டும். குறிப்பாக அத்தகைய மரங்களில் எவற்றையேனும் உச்சியை வெட்டி வளர்க்கப்படும் மரங்களையும், இள மரங்களையும் வெட்டி அல்லது அவற்றிலிருந்து பால் வடிக்கக் கூடாது. 3-ஆவது நிபந்தனையில் கண்டுள்ளவாறு பயிர் செய்வதற்கு மிகவும் அவசியமான அளவுக்கு மாத்திரமே நிலத்திலிருக்கும் தழை, செடிகள் முதலியவற்றை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்யலாம். இவ்வாறு செய்யு முன் கலெக்டரிடமிருந்து எழுத்து வடிவில் அனுமதியைப் பெறவேண்டும்.

(15) கொடையில் சேராத நிலத்தில் நிலம் பெற்றிருப்பவர் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது. நிலத்தின் எல்லைகளிலிருந்து 50 அடிக்கு அனுமதி பெறுமல் விவசாயம் செய்யப்பட்டிருந்தால் இது பற்றி அவர் கலெக்டருக்கு அறிவிக்க வேண்டும்.

(16) நிலத்தில் அல்லது அதன் எல்லையில் ஓட்டியுள்ள தண்ணீர் தேப்புகள், நீர்வீழ்ச்சி, ஆறுகள், ஓடைகள், வாய்க்கால்கள் இவற்றில் அரசினருக்கு நடை முறையில் அல்லது வழக்கமாக உள்ள உரிமைகளை இதனால் தங்களிடம் ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருப்பினும், நிலக்கொடை பெற்றிருப்பவர் வருவாய்த் துறைக் கமுகத்தாலும், கலெக்டராலும் அடுத்தடுத்து விதிக்கக்கூடிய கட்டுப்பாடு களுக்கும் தீர்வை செலுத்துவதற்குட்பட்டும், யாதொரு ஆறு; ஓடை அல்லது வாய்க்கால்லிலிருந்து நாற்றங்கால்கள் பாசனத்திற்கும் குடி தண்ணீர் வழங்கப் படுவதற்கும் தண்ணீர் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் இத்தகைய உபயோகம் ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்குத் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்குத் தக்க அதிகாரியிடமிருந்து உரிமம் முன்னதாகவே பெற்றிருக்க வேண்டும்.

(17) 6-ஆவது நிபந்தனையின் கீழ் செலுத்த வேண்டிய தொகையும் கொடை பெற்றிருப்பவரிடமிருந்து வர வேண்டிய இதர தொகைகளும் நிலத் தீர்வை பாக்கிகளை வசூல் செய்வது போலவே வசூல் செய்யப்படும்.

(18) கொடையின் கால அளவு முடிவடைந்தவுடன், காலாவதியான வுடனும் அல்லது அதற்கு முன்னதாகவே அது முடிவு அடையுமாறு செய்யப் பட்டபோது, தக்கவாறுக நிலத்தை அப்பொழுது அதிலுள்ள பயிர்கள், மரங்கள், கட்டடங்கள் உட்பட அரசினரிடம் ஒப்புவித்து விடவேண்டும்.

(19) கொடை பெற்றிருப்பவர் இக்கொடையின் நிபந்தனைகளில் எதை யேனும் மீறினால் நிலம் முழுமையும் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் பிரவேசிக்கும் பெயர் முறையில் நிலத்தின் யாதொரு பாகத்தைத் திரும்ப

[நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42

எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்க அரசினருக்கு உரிமை உண்டு. அதன் பின்னர் அந்நிலம் முழுமையும் அதில் உள்ள கட்டடங்கள், சாலிகள், வேலிகள், மரங்கள், செடிகள் அந்நிலத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற எல்லாம் அரசினருக்கே சட்ட முறையில் முற்றிலும் சேர்ந்து விடும். இவ்வாறு நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசம் செய்யப்பட்டால், கொடை பெற்றிருப்பவருக்கு யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமை இல்லை.

(20) நிலம் முழுமையும் அல்லது அதன் யாதொரு பாகத்தைத் திருப்பி எடுத்துக் கொள்வதற்கான தங்கள் எண்ணத்தை அரசினர் மூன்று மாத கால முன்னறிவிப்பு கொடை பெற்றிருப்பவருக்குக் கொடுத்துவிட்டு அவ்வாறு செய்ய அரசினருக்கு உரிமை உண்டு. இதன் பின்னர், இந்நிலையில் கொடை பெற்றிருப்பவர் ஏதாவது தவணைத் தொகை செலுத்தியிருந்தால் கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படக்கூடிய அதன் விகிதாசார பாகத்தைத் திருப்பிப் பெறுவதற்குக் கொடை பெற்றிருப்பவருக்கு உரிமை உண்டு.

(21) கொடை காலாவதியாவதற்கு மூன்று முழு மாதங்களுக்கு முன்னதாகக் கொடை புதுப்பிக்கப்படுவதற்குக் கலெக்டரிடம் விண்ணப்பம் தாக்கல் செய்யப்படுமெனில் அரசினர் கொடையைப் புதுப்பிக்கலாம். ஆனால் யாதொன்றிலும் அவ்வாறு செய்வதற்கு அரசினர் கடமைப்பட்டவரல்லர்.

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் (மாவட்டக் கலெக்டர்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும், அவர் ஆணையையும், கட்டளையையும் அனுசரித்து ஆண்டு மாதம் தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

முதல் விவர அட்டவணை.

கொடுக்கப்பட்ட நிலத்தின் விவரம்.

மாவட்டம், தாலூகா.	ஒதுக்கக் காட்டின் பெயர்.	நில அளவு எண். பரப்பு. ஏ. செ.	நிலத்திலுள்ள பயிரின் பெயர்.	குறிப்புரை.

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

இரண்டாவது விவர அட்டவணை.

9-ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ள சாலைகள், பாலைகள் இவற்றின் விவரம்.

1941 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி, 2545, அ.ஆ.வரு.பல.
1911 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி, 143, வ.து.வே.செ.அச்சு.

மூன்றாவது விவர அட்டவணை.

10-ஆவது நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள சந்தன மரங்கள் முதலியவற்றின் விவரம்.

ஏலக்காய் விளைவிப்பதற்கு கொடுக்கப்படும் சோலை நிலத்தை எடுத்துக் கொள்ளும் உரிமை விற்பனை அறிவிப்பின் படிவம்.

ஏலக்காய் விளைவிப்பதற்காக விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நிலங்களின் கொடை உரிமையை பகிரங்கமான ஏலத்தில் (கலெக்டரது உறுதிசெய்வதற்கும், இது சம்பந்தமாக வருவாய்த் துறை வாரியத்திற்குச் செய்து கொள்ளக் கூடிய யாதொரு முறையீட்டின் முடிவுக்கும் உட்பட்டு) இடத்தில் ஆண்டு மாதம் தேதியில் மணிக்கு அல்லது ஒத்தி வைக்கப்படக்கூடிய மற்றொரு தேதியில் விற்பனை செய்யப்படும் என்ற அறிவிப்பு இதனால் செய்யப்படுகிறது. மிகவும் உயர்ந்த விலை கூறுபவருக்குக் கொடை வழங்கப்படும்.

மாவட்டம், தாலூகா.	கிராமம்.	நில அளவை எண், அதன் உட்பிரிவுகள்.	பரப்பு.	எல்லைகள்.

[நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42

நில விற்பனை கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டுள்ளது :—

(i) ஏல விற்பனையில் நிலத்தை எடுத்துக்கொண்டவர் தமக்கு நிலம் விடப்பட்டவுடனே, நாம் ஏலத்தில் கூறிய விலையில் 15 சதவிகிதம் வைப்பு தொகையாகச் செலுத்த வேண்டும். மீதித் தொகையையும், நில அளவைக்கும் எல்லை வரையறுத்தற்குமான செலவு எதாவது இருப்பின் அதையும், விற்பனைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்திவிட வேண்டும். இதைச் செய்யத் தவறினால், செலுத்தப்பட்டுள்ள வைப்புத் தொகை பறி முதல் செய்யப் படுவதற்குட்படும்.

(ii) அத்தகைய வைப்புத் தொகை செலுத்தப்படாவிட்டாலும் அல்லது மீதித் தொகை கொடுக்கப்படாவிட்டாலும் முதலில் விலைக்கு எடுத்துக் கொண்டவரது செலவிலும் பொறுப்பிலும், நிலம் மறுமுறை விற்பனை செய்யப்படும்.

(iii) விற்பனையில் விலை கூறுகிறவர்கள் தங்களுக்காகவா அல்லது பிறருக்காக அவர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் விலை கூறுகிறார்களா என்பதைத் தெரிவிக்குமாறும், அவர்களின் பிரதிநிதியாக இருப்பார்களெனில் தங்களது முதல்வர்களிடமிருந்து அவர்களின் எழுத்து வடிவில் கையெழுத் திட்ட அதிகாரத்தை ஒப்புவிக்குமாறு விலை கூறுகிறவர்களை கேட்க வேண்டும்.

(iv) நிலத்தின் விவரங்களில் அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள அதன் பாப்பில் தவறுதல்கள் எவையேனும் இருக்குமாயின், அவற்றிற்கு அரசினர் பொறுப்பேற்கமாட்டார்களென்று தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நிலத்தைச் சுவாதீனம் பெற்றுக் கொண்ட பின் கீழே உள்ள நிபந்தனை களுக்குட்பட்டு அது உடைமையில் இருக்கத்தகும் :—

(1) கொடை விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 25 ஆண்டுகளுக்காகும்.

(2) நிலங்களை ஏலக்காய் அனுகூலமான வேளாண்மை முறையில் விளைவிப்பதற்கு மாத்திரம் உபயோகம் செய்யப்படவேண்டும். இருப்பினும் நிலக்கொடை பெற்றிருப்பவர் அவ்வாறு விளைவிப்பதற்கு உதவக் கூடிய நிழல் மரங்களை வளர்க்கலாம், அல்லது அவ்வாறு விளைவிப்பதற்குத் தேவையாக இருக்கக் கூடிய தற்காலிகமான கட்டடங்களைக் கட்டிக்கொள்ளலாம்.

(3) கொடை பெற்றிருப்பவர் எல்லைகள், மரஞ்செடிகள் அகற்றுதெடுக்கப் பட்டுச் சுத்தமாக வைத்து வருவதுடன் நில அளவைக் குறிகளை நன்கு பாதுகாத்து வரவேண்டும்.

(4) கொடை பெற்றிருப்பவர் ஆண்டுதோறும் கொடையில் சேர்க்கப் பட்டுள்ள நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் தொகை செலுத்த வேண்டும். ஆனால் வளர்ச்சியடையாத நிலமாக இருந்து முதன் முதலாக ஏலக்காய் விளைக்க வேண்டி நேரிட்டால் முதல் ஆறு ஆண்டுகளுக்கு இதில்

நி. ஆ. 15 பத்திகள் 9, 12. 29, 41, 42]

பாதி வீதம் கணக்கிட்டுத் தீர்வை செலுத்துவதற்குட்படுவர். இவ்வட்டியின் முழு ஏக்கர்களுக்கு மேலிருக்கும் பாகம் எதுவாயிருப்பினும் அது ஒரு ஏக்கராவாக எடுத்துக்கொள்ளப்படும்.

(5) கொடை பெற்றிருப்பவர் (4-ஆவது நிபந்தனையில் வகுத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகையை) ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் தேதிக்குள் அரசாங்கக் கருவூலத்தில் முன்னதாகச் செலுத்த வேண்டும். முழுத் தொகை அல்லது அதன் பாகத்தை அவ்வாறு செலுத்தாவிட்டால் ஆண்டுக்கு 6¼, 6½ சதவீதம் வட்டி வசூலிக்கப்படலாம்.

(6) கொடை பெற்றிருப்பவர் நிலத்திற்குச் சட்ட முறையிலும் வழக்க முறையிலும் செலுத்தத் தக்க எல்லாப் பொது வரிகளையும், தல வரிகளையும், செலுத்த வேண்டும்.

(7) இந்தக் கொடையானது இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள இரண்டாவது விவர அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சாலைகளிலும், பாதைகளிலும், அரசினருக்கும், பொது மக்களுக்கும் வழக்கமாக உள்ள அல்லது வேறு உரிமைகளை யாதொரு விதத்திலும் பாதிக்காது.

(8) ஒப்படை செய்யப்படும் பொழுது நிலத்திலிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் அரசினர் இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் பின்னர் வளர்க்கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே தொங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளை வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்திக் தங்கள் விருப்பம்போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டப்படுமாறு செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு கொடை பெறுவருக்கு உரிமை யில்லை.

(9) சந்தன மரங்கள் கவனமாடப்படாமல் அல்லது சேதமுறுமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிர்ந்த மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் செய்வதில் கலெக்டர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(10) நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற்சுரங்கங்களில் உள்ள உரிமை அரசினர் தங்களிடம் ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசினரும் அரசினரால் அதிகாரம் அளிக்கப் பெற்றவர்களும் தாப்படுத்தப் பட்டுள்ளதான சுரங்கக் குத்தகைப் படிவம் II-ஆவது பாகத்தில் விவரிக்கப் பட்டுள்ள உரிமைகள் அதிகாரங்கள் போன்றவற்றைக் கொண்டு கனிப் பொருள்கள் சரிவர எடுப்பதற்கு அவசியமான அதிகாரங்களைச் செலுத்தலாம்.

[நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 43

இந்த உட்பிரிவில் அரசினரிடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள உரிமைகளையும், அதிகாரங்களையும் அரசினர் செயலாற்றுவதிலுல் கொடை பெற்றிருப்பவருக்கு நேரிடக் கூடிய சேதத்திற்கு ஈடு பெறுவதற்கு அவருக்கு உரிமை உண்டு.

(11) கொடை பெற்றிருப்பவர் கலெக்டரின் முன் அனுமதியில்லாமல் தமது கொடையில் உள்ள உரிமை முழுமையும் அல்லது யாதொரு பாகத்தையும் மாற்றிவிடக் கூடாது, அல்லது முழு நிலத்திலோ அல்லது பாகத்திலோ தமக்குள்ள சுவாதீனத்தையும் விட்டுவிடக் கூடாது.

(12) கொடை பெற்றிருப்பவர் நிலத்தில் வளரும் கட்டட வேலைக்குப் பயனுக்கும் வெட்டு மரங்களையும், மற்ற மரங்களையும், உச்சி வெட்டப்பட்டு வளர்க்கப்படும் மரங்களையும் இள மரங்களையும் சேதமுறுமலும் அழிவுறுமலும் பாதுகாக்க வேண்டும்; குறிப்பாக அத்தகைய மரங்களில் உச்சி வெட்டப்பட்டு வளர்க்கப்படும் மரங்கள் இருப்பின் அவற்றையும் இள மரங்களையும் வெட்டி அல்லது அவற்றிலிருந்து பால் வடிக்கக் கூடாது. 3-ஆவது நிபந்தனையில் கண்டுள்ளவாறு பயிர் செய்வதற்கு மிகவும் அவசியமான அளவுக்கு மாத்திரமே நிலத்திலிருக்கும் தழை, செடிகள் முதலியவற்றை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்யலாம். இவ்வாறு செய்யுமுன் கலெக்டரிடமிருந்து எழுத்து வடிவில் அனுமதியைப் பெற வேண்டும்.

(13) கொடையில் சேராத நிலத்தில் நிலம் பெற்றிருப்பவர் ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது. நிலத்தின் எல்லைகளிலிருந்து 50 அடிக்குள் அனுமதி பெறுமல் விவசாயம் செய்யப்பட்டிருந்தால் இதுபற்றி அவர் கலெக்டருக்கு அறிவிக்க வேண்டும்.

(14) நிலத்திலும் அதன் எல்லையை ஒட்டியிருக்கும் அல்லது அதை யாதொரு வகையில் பாதிக்கும் தண்ணீர் தேக்கங்களிலும் நீர்வீழ்ச்சிகளிலும் ஓடைகளிலும் அரசினருக்கு வழக்கமாக உள்ள அல்லது வேறு உரிமைகள் அரசினரிடமே இதனுல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், நிலக்கொடை பெற்றிருப்பவர் வருவாய்த் துறை வாரியத்தாலும் கலெக்டராலும் அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய கட்டுப் பாடுகளுக்கும் தீர்வை ஒன்று செலுத்துவதற்குட்பட்டும், யாதொரு ஆறு, ஓடை அல்லது வாய்க்காலிலிருந்து நாற்றங்கால்கள் பாசனத்திற்கும் குடி தண்ணீர் வழங்கப்படுவதற்கும் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். ஆனல் இத்தகைய உபயோகம் ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்குத் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்குத் தக்க அதிகாரியிடமிருந்து உரிமம் முன்னதாகவே பெற்றிருக்க வேண்டும்.

(15) 4-ஆவது நிபந்தனையின்படிச் செலுத்தவேண்டிய தொகையும், கொடை பெற்றிருப்பவரிடமிருந்து வர வேண்டிய இதர தொகைகளும் நிலத் தீர்வை நிலுவை பாக்கிகளை வசூல் செய்வது போலவே வசூல் செய்யப் படும்.

(16) கொடையின் கால அளவு முடிவடைந்தவுடன், காலாவதியான உடனுக்கு அல்லது அதற்கு முன்னதாகவே அது தீர்த்து முடிவு செய்யப்பட்ட போது, தக்கவாறுக நிலத்தில் அப்பொழுதுள்ள பயிர்கள், மரங்கள், கட்டடங்கள் உட்பட அரசினரிடம் ஒப்புவித்துவிட வேண்டும்.

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

(17) கொடை பெற்றிருப்பவர் இக் கொடையின் நிபந்தனைகளில் எதையேனும் மீறுவார் எனில் நில முழுமையும் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்கும் முறையில் நிலத்தின் யாதொரு பாகத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்க அரசினருக்கு உரிமை உண்டு. அந்நிலம் முழுமையும் அதில் உள்ள கட்டடங்கள், சாலைகள், வேலிகள், மரங்கள், சொடிகள் அந்நிலத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற எல்லாம் அரசினருக்கே சட்ட முறையில் முற்றிலும் சேர்ந்துவிடும். இவ்வாறு நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் பிரவேசம் செய்யப்பட்டால், கொடை பெற்றிருப்பவருக்கு யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமை இல்லை.

(18) நிலம் முழுமையும் அல்லது அதன் யாதொரு பாகத்தைத் திருப்பி எடுத்துக்கொள்வதற்கான தங்கள் எண்ணத்தை அரசினர் மூன்று மாத கால முன்னறிவிப்பினால் கொடை பெற்றிருப்பவருக்குத் தெரிவித்து அவ்வாறு செய்ய அரசினருக்கு உரிமை உண்டு. இதன் பின்னர் இந்நிலையில் கொடை பெற்றிருப்பவர் ஏதாவது தவணைத் தொகை செலுத்தியிருந்தால் கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படக் கூடிய அதன் விகிதாசார பாகத்தைத் திருப்பிப் பெறுவதற்குக் கொடை பெற்றிருப்பவருக்கு உரிமை உண்டு.

(19) கொடை காலாவதியாவதற்கு மூன்று முழு மாதங்களுக்கு முன்னதாகக் கொடையைப் புதுப்பிக்கப்படுவதற்குக் கலெக்டரிடம் விண்ணப்பம் தாக்கல் செய்யப்படுமேனில் அரசினர் கொடையைப் புதுப்பிக்கலாம். ஆனால் யாதொன்றிலும் அவ்வாறு செய்வதற்கு அரசினர் கடமைப்பட்டவரல்லர்.

7-ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ள சாலைகள், பாதைகள் இவற்றின் விவர அட்டவணை.

7-ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ள நிலைப் படத்தை இதனுடன் சேர்க்க வேண்டும்.

8-ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ள சந்தன மரங்களின் விவர அட்டவணை.

1941-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி, 209, அ. ஆ. வரு. பல.
1942-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ஆம் தேதி, 11, வ. து. வா. செ. அச்சு.

[நி. ஆ. 15 பக்கங்கள் 9, 12, 29, 41, 43

அட்டவணையில் கண்ட ஜாதியினர்களின் ஒப்பனை ஆணைப் படிவம்.

இராமநாதபுரம் இன்னார் மேலே விவரிக்கப்பட்டிருக்கும் நிலத்தின் ஒப்பனைக்காகச் செய்து கொண்ட அவரது விண்ணப்பத்தை அனுசரித்து அது சம்பந்தமாக ஏதாவது மேல் முறையீடு செய்து கொள்ளப்படுமாயின், அம் முறையீட்டின் முடிவிற்குட்படுத்தி ஒப்பனை செய்யப்படுகிறது :—

(1) இந்த ஒப்பனை நேர்மையற்றது என்றுவது, அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டதென்றுவது, அல்லது தவறுக முறையிடப்பட்டது அல்லது மோசம் செய்யப்பட்ட காரணத்தினால், அல்லது ஒப்பனை செய்யும் அதிகாரி தமக்கு 15 ஆவது நிலை ஆணையின் கீழ் வழங்கப்பெற்ற அதிகார வரம்புக்கு மீறித் தாம் ஒப்பனை செய்திருக்கிறாரென்றுவது, அல்லது நடை முறையில் ஒழுங்கினமாயிருந்ததென்றுவது ஏற்பட்டால் ஒப்பனை ரத்து செய்யப்படுவதற்குட்பட்டும் ;

(2) மேல்முறையீட்டிலாவது அல்லது றிவிஷனிலாவது கொடை ரத்து செய்யப்படுமாயின், ஒப்பனை பெற்றிருப்பவர் தாம் ஒப்பனை பெற்ற நிலத்தில் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகளுக்கு யாதொரு ஈடும் பெறுவதற்குரியவராகார்.

(3) அரசினரின் ஒப்புவிப்பின்றி இந்தியக் குடி அல்லாத வேறொருவருக்கு நிலத்தைப் பாதினம் செய்வது ஒப்பனையை செல்லாததாக்கிவிடும்.

(4) சவுக்குப் பயிர் செய்வதற்கு நிலம் உபயோகம் செய்யப்படுமாயின் அதற்காக யாதொரு நத்தத்திலிருந்து 200 கெஜங்களுக்குள் குழிகள் அல்லது குட்டைகள் தோண்டக்கூடாது என்பதோடு இத்தகைய பயிர்களுக்கு குடங்களினால் தண்ணீர் பாய்ச்சக்கூடாது. இந்த வரம்பிற்கப்பால் தோண்டப் படும் குழிகளும், குட்டைகளும், அவற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்பெற்ற பயிர்கள் மூன்றாண்டுகள் ஆனவுடனே நிரப்பிவிடப்பட வேண்டும். இந்நிபந்தனைகளில் எதேனும் ஒன்றை மீறுவது யாதொரு ஈடும் கொடுக்கப் படாமல் ஒப்பனை ரத்து செய்யப்படுவதற்குட்படுத்திவிடும்.

(5) நிலத்திற்குரிய ஆண்டுத் தீர்வை அந்த அந்தக் காலத்திய நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தில் திருத்தி அமைப்பதற்குட்படும்.

(6) நிலம் முழுவதையும்வாவது அல்லது அதில் ஒரு பாகத்தையாவது விவசாயமல்லாத காரியத்துக்கு உபயோகித்தால், நிலத் தீர்வைக்கு பதிலாக, மனைத் தீர்வை விதிப்பதற்குரிய உரிமையை அரசினர் தங்களிடம் ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தகைய மனைத் தீர்வை அந்த அந்தக் காலத்தின் நடைமுறை விதிகளை அனுசரித்து திருத்தியமைக்கப்படும். மாறுதலுக்குட்படும்.

1941-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், 1-ஆம் தேதி, 2217, அ. ஆ. வரு. பல.
1942-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் தேதி, 131, வ. து. வா. செ. அச்சு.

(7) சட்ட முறையிலும் வழக்க முறையிலும் செலுத்தத்தக்க எல்லாப் பொது வரிகளும் தல வரிகளும் செலுத்தப்படுவதற்கு நிலம் உட்பட்டதாகும்.

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

(8) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொது மக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகளையும் முன்சொன்ன நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள், நிலத்திலிருந்து தோண்டப்படுபவை இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படையினால், அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப்படமாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை நூல் VIII ஆவது அத்தியாயம் IX ஆவது இணைப்பின் உள்ள மாதிரிப் படிவத்தின் II ஆவது பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு தடையிலா உரிமை, தடையின்றி எக் காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது, அவற்றுள் செய்யத்தக்க போக்குவரத்து இவை போன்றவற்றைக் கொண்டு கனிப் பொருள்கள் சரிவர எடுக்கப்படுவதற்கான அதிகாரங்களையும் இத்தகைய உரிமைகள் செயலாற்றப்படுவதால் நிலத்தின் மேல் பாப்பின் உரிமையாளருக்கு நேரிடக்கூடிய சேதங்களுக்கு ஈடு கொடுத்ததற்குட்பட்டு அரசினர் தங்களிடமும் தங்களால் அதிகாரம் வழங்கப்பெற்றவர்களிடமும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

9. விற்பனை, கொடை, அடைமானம் அல்லது யாதொருவகைக் குத்தகை காரணமாக ஒப்படை நாளிலிருந்து பத்தாண்டுக்கால அளவிற்குள் எவரொருவருக்கும் அல்லது அந்தக்கால அளவிற்குப் பின்னர் அட்டவணையில் கண்ட இனங்களுக்கு சேர்ந்தவரல்லாத எவரொருவருக்கும் நிலம் உரிமை மாற்றல் செய்யப்பட்டால், அல்லது முறை அல்லது மற்றவகையில் முதலில் ஒப்படைப் பெற்றவர் அல்லது அவருடைய சட்டவழிமுறை அல்லது பத்தாண்டுகளுக்குப் பின்னர், அட்டவணையில் கண்ட இனங்களுக்குச் சேர்ந்த மற்றவர்கள் உரிமையில் இல்லாது விடுமாயின் அல்லது குறிப்பிட்ட நாட்களில் அரசு வரி செலுத்தத் தவறி விடுமிடத்து அந்நிலக்கொடை அரசு திரும்பப் பெறுவதற்கு உட்பட்டதாகும். மற்றும் நிலத்தில் புகுந்து, யாதொரு இழப்பீடு கொடுக்காமலோ நிலம் வாங்கியவர் கட்டிய தொகையைத் திருப்பிக் கொடுக்காமலோ நிலத்தின் உடைமை கைக்கொள்ள அரசினருக்கு உரிமை உண்டு. இருப்பினும் இந்தத் தடை (i) நிலமேம்பாடு வேளாண்மை செய்வோர் கடன்கள் சட்டத்தின் கீழ் அரசினருக்கு அல்லது அட்டவணையில் கண்ட இனங்களைச் சேர்ந்தவர்களே முற்றிலுமாகக் கொண்ட கூட்டுறவு சங்கத்திற்கு நிலத்தை அடைமானம் செய்வதற்கும் பொருந்தாது மற்றும் அத்தகைய நிலங்கள் பின்னர் நில-எடுப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்போது இத்தகையவற்றிற்கு இழப்பீடு கொடுப்பதற்குரிய உரிமையைத் தடுப்பதற்கும் செயற்படாது. மேலும்

(ii) இத்தகைய நிபந்தனைகளோடு நாளிலிருந்து பத்தாண்டுகளுக்குள் அல்லது பின்னரும் கிராமதான சர்வோதயக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்க, ஒப்படை பெற்றவர்கள் முன்வருவார்கள் எனில் அவற்றிற்கும் இத்தடை பொருந்தாது. முன் சொன்ன கொடை நிலத்தைத் திரும்பக் கைக் கொண்டு நிலத்தில் புகுவதற்கு ஆணை பிறப்பிப்பதற்கான அதிகாரம், நன்செய் அல்லது நீர்பாய்ச்சப் படத்தக்க புன்செய் 2½ ஏக்கர் நிலம் பெருமத்தின் வரம்பிற்குட்பட்டு விலை மதிப்புடைய நிலங்களுக்கும் விலை மதிப்புடைய நிலமாயிருந்து நன்செயாகவோ நீர்ப் பாய்ச்சப்படத்தக்க

[நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42

புன்செயாகவோ இருப்பின் 5 ஏக்கர் பெருமத்திற்குட்பட்டும் கோட்ட ஆட்சியரின் உரிமையில் இருக்கும். இதுபோன்றே இந்த அதிகாரம் வட்ட ஆட்சியர்கள் தனி ஆட்சி வரம்புடைய தனி நிலத் துணை வட்ட ஆட்சியர்கள் உள் வட்டங்களின் பொறுப்பிலுள்ள சார்பு வட்ட ஆட்சியர்கள் ஆகியோர்களால் விலை மதிப்பில்லா நிலங்களைப் பொறுத்த வரையில், ஐந்து ஏக்கர் பெருமத்திற்குட்பட்டு, செலுத்தப்படும்.

(1967 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ம் நாளும் 882 எண்ணுமிட்ட ஆ.அ.வரு.)

(1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் நாளும், 546 எண்ணுமிட்ட நிலை வ.வா.செ.)

(10) விலை மதிப்புள்ள நிலம் அதன் நடப்பு விலை மதிப்புத் தொகை தவணைகளில் செலுத்தப்படுவதற்குட்படுத்தி ஒப்பனை செய்யப்பட்டிருக்கும் தொகை முழுமையும் செலுத்தப்படுவதற்கு முன்னர் கொடை பெற்றவர் நிலத்திற்குரிய முழு உரிமையையும் அடையமாட்டார். யாதொரு தவணைத் தொகையும் செலுத்தத் தவறினிட்டால், முன்னமே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படுவதற்குட்படும் நிலமும் திரும்ப எடுத்துக்கொள்ளப் படுவதற்குட்படும்.

(11) கொடை பெற்றவர் நிலத்தில் பயிர் விளைவிக்கக்கூடிய எல்லாப் பாகங்களையும் ஐந்து ஆண்டுகளுக்குள் விவசாயத்திற்குக் கொண்டு வர வேண்டும். இந்த நிபந்தனை மீறப்படுமாறால் மேலே (1) ஆவது நிபந்தனையை அனுசரித்து கொடை திரும்ப எடுத்துக்கொள்ளப்படுவதற்குள்ளாகும்.

(12) நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கான உழைப்பையும் செலவையும் முன்னிட்டு தீர்வை விலக்குச் சலுகை அளிக்கப்பட்டவற்றில், இந்நிலம் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்தாற்போல் ஐந்து ஆண்டு களுக்கு, ஒவ்வொரு ஆண்டிலும் கொடுக்கப்பட்ட நிலத்தின் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு புதிதாக விவசாயத்திற்கு கொண்டு வந்தால் நில ஒப்பனை பெற்றவர் நிலம் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டு கால்த்திற்குத் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பெறுவார்.

(13) ஒப்பனை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் அரசினர் இவ்வாறு ஒப்பனை செய்யப்பட்ட நிலங்களின் வளரக்கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அந்தமைய மரங்கள் அல்லது வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்தித் தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப் படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டச் செய்வதற்கு அல்லது அப்புறப் படுத்துமாறு செய்வதற்கு ஒப்பனை பெறுபவருக்கு உரிமை இல்லை.

நி. ஆ. 15 பத்திகள் 9, 12, 29, 41, 42]

(14) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறுமல் இருப்பதற்கான பாதுகாப்புப், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிர்ந்த மரங்களுக்கு வேண்டிய களவான பாதுகாப்பும் பாவட்டக் கலெக்டர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஏற்றுக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(15) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இவர் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப் படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் ஒப்படை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(16) கொடை பெற்றிருப்பவர் இக் கொடையின் நிபந்தனைகளில் எதையேனும் மீறுவார் எனில் நில முழுமையும் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்கும் முறையில் நிலத்தின் யாதொரு பாகத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்க அரசினருக்கு உரிமை உண்டு. அந்நிலம் முழுமையும் அதில் உள்ள கட்டடங்கள், சாலிகள், வேலிகள், மரங்கள், செடிகள் அந்த நிலத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற எல்லாம் அரசினருக்கே சட்ட முறையில் முற்றிலும் சேர்ந்து விடும். இவ்வாறு நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசம் செய்யப்பட்டால், கொடை பெற்றிருப்பவர் எடுத்துக்கொண்டு அதில் பிரவேசம் செய்யப்பட்டால், நிலத்தைத் திரும்பவும் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமை இல்லை.

(17) ஒப்படை தாளிலிருந்து இரண்டாண்டு கால அளவுக்குள் ஒப்படைப் பெற்றவர் பொருத்தமான மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறுமிடத்து யாதொரு இழப்பீடு கொடுக்கப்படாமல் நிலம் திரும்பக் கைக்கொள்ளப்படும்.

(1965 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாளிட்ட 39 (ஆ) எண் வ. நி. செ. அச்சு).

குறிப்பு.—கீழே குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் ஒப்படை செய்யப் படும்பொழுது, சந்தன மரங்கள் ஒதுக்கி வைக்கப்படுவது சம்பந்தமாக 13 முதல் 16 வரையிலுள்ள நிபந்தனைகளை அடித்துவிட வேண்டும்.

செங்கற்பட்டு-சென்னை.

1942-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் பத்தி, 409, ஊ 42-1, அரசாங்க குறிப்பு வரு.

1935-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ஆம் தேதி, 602, அ. ஆ. வரு. பல.

தஞ்சாவூர்.

1942-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 16-ஆம் தேதி, 15 வ. து. வா. செ. அச்சு.

1935-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி, 34, வ. து. வா. செ.

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவர் ஆணையையும், கட்டளையையும் அனுசரித்து ஆண்டு மாதம் தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

1941-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் தேதி, 1448, அ. ஆ. வரு. பல.

1941-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதி, 124, வ. து. வா. செ. அச்சு.

இணைப்பு V அ.

15 ஆவது நிலை ஆணை 38 (VIII) ஆவது பத்தி.

துறைமுகங்களின் எல்லைகளுக்குள் இருக்கும் நிலங்களைக் கடல் துறை சம்பந்தம் அல்லாத வற்றின் உபயோகங்களுக்காக வருவாய்த் துறையினரால் கொடுக்கப்பட்டவற்றின் குத்தகைத் தொகைகளின் விதங்கள்.

குறிப்பு.—ஓராண்டுக்கு ஒரு ஏக்கருக்கு செலுத்தத்தக்கவை.

மாவட்டம்.	துறைமுகம்.	துறைமுக நிலையத்தின் உபயோகத்திற்குத் தேவையாக இருக்கும் எனக் கருதக்கூடிய நிலங்களுக்கு.	துறைமுகம் நிலைத்திருப்பதற்குரிய தேவையில்லாத அல்லது தேவையிராதெனக் கருதக்கூடிய நிலங்களுக்கு.					
			விவசாய உபயோகங்களுக்கு.			விவசாயமில்லாத உபயோகங்களுக்கு.		
(1)	(2)	(3)	(4)			(5)		
		ரூபாய்.	ரூ.		பை.			
தென்னாற்காடு	கடலூர்	600 இருந்து	800	25	00	100	இருந்து	200
	ஸ்பாயில் தீவு ..							
	மற்றவை	1,800 ,,	2,400	25	00	100	,,	200
	பரங்கிப்பேட்டை ..	600 ,,	1,000	12	50	50	,,	100
தஞ்சாவூர்	நாகப்பட்டினம் ..	400 ,,	600	12	50	50	,,	100
	அதிகாரப்பட்டினம்	100 ,,	150	6	25	25	,,	50
	தோப்புத்துறை ..	80 ,,	120	12	50	50	,,	100
	கோடிக்கரை. ..	80 ,,	120	12	50	50	,,	100

Verified by TrueEstate™

இராமநாதபுரம்	தொண்டி பாம்பன் கீழக்கரை தூத்துக்குடி	120	,,	160	6	25	25	,,	50
	தீர்த்தாண்டதானம் மரையூர்	50	,,	80	6	25	25	,,	50
திருநெல்வேலி	குலசேகரப்பட்டினம்	400	,,	600	6	25	25	,,	50
	பைப்பாறு ..	50	,,	75	விவசாயக்காரி யங்களுக்கு தகுதியற்றது.		25	,,	50
	தூத்துக்குடி ..	1500	,,	1200	50	00	20	,,	50

1957ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் தேதி 2538 என். அ.ஆ.வரு.பல.

1958ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், 5ஆம் தேதி, 3888 என். அ.ஆ.வரு.பல.

Verified RealEstate ™

தி. ஆ. 15 பத்தி 38 (X) குறிப்பு]

இணைப்பு VI—நீக்கப்பட்டது.

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி, 3618 எண்
அ. ஆ. வகு.பல

இணைப்பு—VII

[15 ஆவது நிலை ஆணை 38 ஆவது உட்பத்தி (X) குறிப்பு.]

இருப்புப்பாதை நகரங்களை ஏற்படுத்தும்பொழுது கவனிக்க வேண்டியவை.

1. ஏற்படுத்தப்படுகிற இருப்புப்பாதை நகரங்களில் வீட்டு மனைகளுக்கென கலெக்டர் தேர்ந்தெடுக்கக்கூடிய இருப்புப்பாதை நிலையங்களுக்கு அருகில் உள்ள நிலத்தைப் பற்றிக் கலெக்டர் அறிவிப்பு செய்யவேண்டும். அந்த அறிவிப்பில் விண்ணப்பம் செய்துகொள்ளத்தக்க வீட்டு மனைகளின் பெருமம், குறுமம் அளவு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அதில் மேலும் இருப்புப் பாதையின் வருங்கால உபயோகத்தின் தேவைக்கு ஒதுக்கி வைத்துக்கொள் வதற்காக இருப்புப்பாதை அதிகாரிகள் விரும்பக்கூடிய இடம் நீங்கலாக உள்ள பரப்பு மட்டுமே குறிப்பிட வேண்டும்.

2. காலியாக இருக்கும் பாகத்திற்கு மாவட்டச் சுகாதார அலுவலரைக் கலந்து ஆலோசனை செய்துகொண்டு, கலெக்டர் தேராய்ய தரைப்பட மொன்று தயாரித்துக்கொள்ளவேண்டும். புதிய நகரம் ஏற்படுத்துவதற்குப் போதுமான இடமிருக்குமாறும், அப்படத்தில், புதிதாக ஏற்படுத்த வேண்டிய தெருக்கள், சந்துகள், பக்க வடிகால்கள், குடி தண்ணீர் ஆதாரம், குப்பை கொட்டுமிடம், சுடுகாடு இவற்றையும் இன்னும் பொது மக்களின் பொது உபயோகங்களுக்குத் தேவையான இடங்களைக் குறிப்பிட வேண்டும். மாவட்டக் கழகப் பொறி யாளரின் பணியாளர் தொகுதியைக் கொண்டு இப்படம் தயாரிக்கப்பட்டு, அதற்குச் சம்பந்தப்பட்ட தல ஆட்சி மன்றங்களின் தலைவர்களாலும், நகரமைப்பு நெறியாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அப்படத்தின் நகலொன்றைச் சுகாதார குழுவினருக்கும் அனுப்ப வேண்டும்.

3. 21 ஆவது நிலை ஆணையில் அடங்கிய விதிகளை அனுசரித்து வீடுகள் "கூரை" "ஓடு" அல்லது மாடி வீடுகளாகப் பிரிக்கப்படவேண்டும். இவற்றிற் குரிய விண்ணப்பங்களும், ஒப்படைகளும் 21 ஆவது நிலை ஆணையில் "நகரங் களில் உள்ள வீட்டு மனைகள்" என்ற தலைப்பில் (ii) பிரிவில் உள்ள அறி வுரையை அனுசரித்திருக்கவேண்டும்.

4. இந்நகர அமைப்பில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் கூரை வீடுகள் கட்டலாமென்று கலெக்டர் நீபந்தனை விதிக்கலாம். தவிர, விண்ணப்பம் செய்து கொண்டவர் எவராயினும் அவர் 21 ஆவது நிலை ஆணை 15 ஆவது பத்தியில் உள்ள அறிவுரையை அனுசரித்துக் கீழ் கண்டுள்ள உபயோகங்கள் சம்பந்தமாய்க் கிடை ஒப்பத்தமொன்று எழுதிக் கொடுக்குமாறு கலெக்டர் கேட்கலாம். சாக்கடை, மோகால், வசதி, தரைப் படத்தில் குறிக்கப்பட்டுள்ள வாறு தெருவின் ஒழுங்குக்கு வீட்டின் வாயில்களின் அமைப்பு வீட்டுக்குப் பின் புறம் சுத்தம் செய்பவர் வருவதற்குத் தேவையான வழி முதலிய ஏற்பாடுகள்.

நி. ஆ. 15 பத்தி 38 (X) குறிப்பு]

5. வியாபார வசதி மாற்றும் இதர வசதிகளை அனுசரித்து மனைகளை "முதல் வகுப்பு" "இரண்டாம் வகுப்பு" என்று பிரிக்கலாம்.

6. ஒரே வகுப்பைச் சேர்ந்த மனைகளெல்லாம் ஒரே பரப்பளவில்—இருக்க வேண்டும். அவற்றில் கட்டும் வீடுகளும், இடத்தின் தேவைக்கும் வழக்கத்துக்கும் தக்கவாறு கலெக்டரால் குறிப்பிடப்படும் அளவுகளை—அனுசரித்து இருக்க வேண்டும்.

7. மனை இடங்களைத் துண்டிப்பதையும், ஒவ்வொரு மனையிலும் ஒரு வீட்டுக்கு அதிகமாகக் கட்டுவதையும் தடை செய்யவேண்டும்.

8. இக்கட்டளைகள் பொதுவாக இருக்க வேண்டியவை இவற்றை அனுசரிப்பதில் கணிசமான அளவில் விதிகளைத் தளர்த்துவதில் தல அதிகாரிகளுக்கு வருவாய்த் துறைக் கழகம் அனுமதி அளிக்கும்.

1899 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் தேதி, 279 வ.து.வா.செ.
1902 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி, 82 வ.து.வா.செ.
1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் தேதி, 151 வ.து.வா.செ.

Verified Redirect

(1) பரிவுச் சரம்.

(2) நிலுத்தி வை வினாடி, நிற்ற வை வி நிற்க்கப்படாத நிறுத்த

(3) நிறுத்தவை வினாடி நிறுத்தப்படாத நிறுத்தக்கூடாத நிறுத்தப்படாத நிறுத்தக்கூடாத நிறுத்தவை வினாடி

(4) முடிந்த, பழுத்திருந்த பழம்.

(5) நிலை வினாடி வரை இருந்திருந்த, அழுத்த வரம்.

(6) அழைத்தல் கடன் கொள்ளல்.

(7) இடம் நோக்கி கடந்து செல்லும் கால்
பழம் பறிக்க நிற்றல்.

(8) பயிற்சி வினா.

(9) கூறுவது போல் செய்யும் செயல்.

(10) ஏ. தி. டை. வரை.

(11) ஏ. தி. டை.

ஒரு பயிற்சி வினா. செய்யப்படாத வினா
வினாவிற்கு விடை
கூறுவதற்கு முன்
செய்யப்படும் வினா.

(12) ஒரு வினாவிற்கு விடை கூறுவதற்கு முன் வினா செய்யப்படும்.

(13) வெற்று வேற்றுமை இறுதிப்பெயர்.

1905 ஆம் ஆண்டு
7 ஆவது
பிரிவை
ஆவது
ஒரு
ஒரு
ஒரு

(14) ஒரு பிரிவை ஒரு பிரிவாகக் கூறுதல்.

(15) வேற்றுமை செய்தி குறிப்பாளர் எழுதிய
செய்தல்.

(16) அ. தரை வெற்றிடம்/தேர்வுக்கு தொ தெரிவித்தல் அல்லது அல்லது ஆணை.

(17) தொடர்பு வினைப்பெயர் ஆனை.

(18) குறிப்பாளர்.

(19) ஆகுபெயர். ஆ. 7, 39

[15 ஆவது வரை, 7, 39 பார்க்க.]

VIII. தொடர்பு வினைகள்.

எழுவாய் ..... முதல் வேற்றுமை ..... பயனிலை
செயப்படுபொருள் ..... இரண்டாம் வேற்றுமை
கருவி ..... மூன்றாம் வேற்றுமை
கொள்பொருள் ..... நான்காம் வேற்றுமை
ஏது ..... ஐந்தாம் வேற்றுமை
இடம் ..... ஏழாம் வேற்றுமை
காலம் ..... ஏழாம் வேற்றுமை
பண்பு ..... ஆறாம் வேற்றுமை
அடை ..... வினையடை
சினை ..... ஆறாம் வேற்றுமை
முன்னிலை ..... விளி

Verified

குறிப்பு.—ஆ (12), (13), (16) ஆவது கட்டங்களில் பார்வையிடும் அலுவலர்கள் தாங்கள் பார்வையிட்ட தேதியையும், ஆக்கிரமிப்பு ஆட்சேபனையுள்ளதா என்பது பற்றியும் குறிக்க வேண்டும். அவையாவன பொது நன்மைக்கு விரோதமானவை அவ்வாறு இருந்தால் அது விட்டு விடப்படுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்திருந்தால் ஆக்கிரமிப்பு செய்துள்ளவரை அப்புறப்படுத்த வேண்டாமா என்பனவற்றைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். (ஆ).

1886-ஆம் ஆண்டு செபடம்பர் மாதம் 1-ஆம் தேதி 1943, வ.து.வா.செ.

1893-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் தேதி, 406, அ.ஆ.

1907-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26-ஆம் தேதி, 209, வ.து.வா.செ.

(ஆ) 1915-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி, 130, வ.து.வா.செ.

(அ) 1917-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி, 441, அ.ஆ.வ.

1917-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம், 26-ஆம் தேதி, 47, வ.து.வா.செ.

42 4—354

RealEstate™

[நி. அ 15 பத்தி 42

இணைப்பு. IX.

[15 ஆவது நில ஆணை, 42 ஆவது பத்தி.]

செங்கற்பட்டு மாவட்டத்திற்குரிய தனிப்பட்ட படிவங்கள்.

(2) மேலே (1) ஆவது பிரிவில் குறிக்கப்பட்டவர்களிடம் கையொப்பங்கள் பெறுவதற்கு விலக்கம்.

29—7—1933 தேதி, 1348, அ.ஆ.வரு.பல.
10—8—1933 தேதி, 65, வ.து.வா.செ.அக்க

தேதி :

மணியக்காரர்.

கோபம் :

கோட கணக்கர்.

8—10—1899 தேதி, 259, வ.து.வா.செ.
2—8—1928 தேதி, 1738, அ.ஆ.வரு.
28—10—1939 தேதி, 2808, அ.ஆ.வரு.
17—2—1900 தேதி, 139, அ.ஆ.
21—8—1928 தேதி, 87, வ.து.வா.செ.
27—11—1939 தேதி, 108, வ.து.வ.செ.அக்க.

இணைப்பு XVI.

[21-வது நிலை ஆணை, 2-வது பத்தி, V (vii) பிரிவுகள்; 7-வது பத்தி, (i) ஆவது பிரிவு, 11 ஆவது பத்தி 2 ஆவது உட்பத்தி, (ii) ஆவது உட்பிரிவு, 15-ஆவது பத்தி, (1) ஆவது பிரிவு.]

விண்ணப்பங்களின் பதிவேடு.															
விண்ணப்பத்தின் அறிக்கை.							கிராமத்தின் நகரத்தின் வீட்டு மனைக்காகச் செய்யப்படும்								
வரிசை எண்.	தேதி.	பெயரும், இருக்குமிடமும் (தெருவும்).	தொழில் அல்லது அலுவல்.	விண்ணப்பதாரரால் தேடிய நிலத்தின் விவரம்.	விண்ணப்பதாரர் செய்துள்ள மனுவின் சுருக்கம்.	விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை.									
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(14)	(13)	(15)	(16)

2—10—1899 தேதி, 239, வ.து.வா.செ.
26—10—1928 தேதி, 2525, அ.ஆ.வரு. பல வ.
17—2—1900 தேதி, 139, அ.ஆ.
28—3—1938 தேதி, 693, அ.ஆ.வரு.
20—12—1959 தேதி, 3505, அ.ஆ.
5—11—1928 தேதி, 133, வ.து.வ.செ.

6—10—1915 தேதி, 298, வ.து.வ.செ.
6—6—1928 தேதி, 1808, வ.து.வ.செ.பலவ.
உள்ள வ.து.வ.செ. குறிப்பு ஆ.
4—5—1928 தேதி, 1336/27-3.
26—5—1937 தேதி, 58 வ.து.வ.செ.அக்.
10—1—1910 தேதி, 7, வ.து.வ.செ.
13—5—1918 தேதி, 1867, அ.ஆ.வரு.

இணைப்பு XVII.

[21 ஆவது நில ஆணை, 2 ஆவது பந்தி, (vii) ஆவது உட்பிரிவு.]

21 ஆவது நில ஆணை, 2 (vii) இதன் கீழ்க் குறிப்பிட்ட கரைப் படங்களும் பதிவேடும்.

பாகம் I.

தோட்டத்தின் அளவோடத்தினால் நிலப்பருதிகளையும், அளவுப் படத்தின் கண்ட அளவோடத்தினதாக இடங்களையும் காட்டும் மாதிரிப் படம்.

Verified © ReadEstate ™

விளக்கம்

எல்லைகளும் பக்கங்களின் அளவுகளும்.

எல்லைகளும் பக்கங்களின் அளவுகளும்.
சிழக்கு. மேற்கு. வடக்கு. தெற்கு. பரப்பு.

அநுபோகத்திலுள்ள அ ..
நிலப்பகுதிகள்— ஆ ..
உ ..
ஊ ..
ஓ ..
ஒ ..
அமைப்புத் திட்டத் இ ..
தில் கண்ட அநு ஈ ..
போகத்தில் எ ..
இல்லாத இடங்கள் ஏ ..
ஐ ..
க ..

குறிப்பு:—சாலைகள், தெருக்கள், சந்துகள் இவற்றின் ஒழுங்கையும் அநுபோகம் செய்யப்படாத அமைப்புத் திட்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் பொதுநன்மைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெளியிடங்களையும், அவை பிரிக்கப் பட்டிருக்கும் நிலப் பகுதிகளையும் இந்தப் படத்தில் காட்ட வேண்டும். அமைப்புத் திட்டத்தில் இடப்பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் I, II, III என்றவாறு எண் கொடுக்க வேண்டும்.

பாகம் II.

பாகத்தில் குறித்திருக்கும் அநுபோகம் செய்யப்படாத அமைப்புத் திட்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகளையும், வீட்டு மனைகளின் அமைப்பையும் காட்டும் திட்ட தரைப்படங்கள்.

அமைப்புத் திட்ட இடம்—இ.

ஒதுக்கப்பட்டுள்ள பரப்பு.

(1) அலைப்புத் திட்ட அட்டவணை எண்.	(2) இடத்தின் எண்.	(3) சாலைகள் சந்துகளுக்காக.	(4) மற்றப் பொதுப் பயன்பாடுகளுக்காக.	(5) நிலப்பரப்பு திட்ட அட்டவணை எண்ணும் பரப்பும்.	(6) நிலப்பரப்பு திட்ட அட்டவணை எண்ணுக்கு உள்ள மனைகளின் எண்ணிக்கை.	(7) குறிப்புரை.
	ஏக்கர்.	ஏக்கர்.	ஏக்கர்.	ஏக்கர்.		
(1)	..	3·25	1·15	0·40	0·30 3	..
..	..	..	..	..	0·30 3	..
..	..	..	..	..	0·30 3	..
..	..	..	..	..	0·30 3	..
..	..	..	..	..	0·30 3	..

26—5—1937 தேதி, 58, வ.து.வர.செ. அக்சு.

Verified RealEstate

இணைப்பு XVIII.

[21-ஆவது நிலை ஆணை, 7 (i), 15 (ii)-ஆவது பத்திகள்.]

மாவட்டம் தாலூகா கிராமத்திலுள்ள நகரத்திலுள்ள வீட்டு மனை

ஒப்படைப்பதிவேடு.

	நில ஒப்படை பெற்றிருப்பவர்.			ஒப்படை நிலம்							
வரிசை எண்.	பெயர் (இந்தியக் குடியரசு இல்லாவிட்டால் தேசிய இனம்.)	தொழில், இருப்பிடம், ஒப்படை தேதி.	இருக்குமிடம், நில அளவை எண், தொகுக்களின் பெயர்கள் முதலியன.	பரப்பு.	அனுமதிக்கப்பட்ட தரைப் படமிருந்தால் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு பக்கங்களின் அளவு, அடிக்கணக்கில், அமைப்புத் திட்ட இடத்தின் எழுத்து நிலப் பகுதி எண், வீட்டு மனை இடத்து எண்.	கொடுக்க வேண்டிய மனைத் தீர்வை.	ஒப்படை ஆணையின் எண்ணுடன் தேதியும்.	தனி நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தால் அவை.	கட்டடம் கட்டி முடிக்க தேதி அல்லது நிபந்தனைகளை மீறியதற்காக அரசினர் திரும்ப எடுத்துக் கொண்ட தேதி அதன் காரணத்துடன்.	நிலத் தீர்வை விதிப்பு மாற்றத்தில் ஏற்பட்ட மனைத் தீர்வை.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)

2—10—1899 தேதி, 239, வ.து.வா.செ.
13—5—1918 தேதி, 1867, அ.ஆ.வரு.
17—2—1900 தேதி, 139, அ.ஆ.

2—8—1928 தேதி, 1738, அ.ஆ.வரு.
29—11—1912 தேதி, 3580, அ.ஆ.
21—8—1928 தேதி, 87, வ.து.வா.செ.

இந்த பதிவேட்டில் எல்லாக் கட்டங்கள் முழுவதும் எழுதப்பட வேண்டும். "விண்ணப்ப பதிவேட்டைக் காண்க" என்பது போன்ற குறிப்புகளை எழுதக்கூடாது. ஏனென்றால் அந்தப் பதிவேடு நிலையாக வைத்திருக்கப்படும் பதிவேடு அன்று.

15—2—68 தேதி 361 வ.து.க.செ.பலவ

இணைப்பு XIX .

[21-ஆவது நிலை ஆணை 7-ஆவது பத்தி (iii)-ஆவது உட்பிரிவு.]

கிராமங்களில் வீட்டுமனை ஒப்படை ஆணைப்படிவம்.

கிராமத்திலிருக்கும் க்குத்

தெரிவிப்பது தாலூகா

கிராமத்தில் வீட்டு மனைக்காக அவர் செய்துகொண்ட விண்ணப்பத்தை அனுசரித்து வீட்டு மனை அவருக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது.

வடக்கில் கிழக்கில்

தெற்கில் மேற்கில்

இந்நான்கெல்லைகளுக்குட்பட்ட சென்டுகள் அல்லது சதுர கெஜங்கள் பரப்புள்ள பின்வரும் நிலப் பகுதி வருவாய்த் துறை 21-ஆவது நிலை ஆணையின் கீழ் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அவருக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது.

அமைப்புத்திட்ட இடத்தின் விவர எழுத்து. பகுதி எண். இட எண்

* XVIII -ஆவது இணைப்பின் தரைப் படங்களும் பதிவேடும் வைக்கப் பட்டிருந்தால் அவை சம்பந்தப்பட்ட வரையில் இவற்றில் பூர்த்தி செய்ய வேண்டும். மற்றவற்றில் இந்தப் படிவத்தையும் முன்னுரையிலுள்ள "பின்வரும்" என்ற சொல்லையும் அடித்துவிட வேண்டும்.

26—5—1937 தேதி, 58, வ.து.வா.செ.அச்சு.

நிபந்தனைகள்.

(1) ஒரு வீடு மட்டுமே இந்த மனையில் கட்ட வேண்டும்.

(2) இதனுடனுள்ள விவர அட்டவணையில் கண்டுள்ள விவரத்தையும் அளவுகளையும் அனுசரித்துக் கரை க் கட்டத்தை ஓட்டு அல்லது மாடி

19 (மாதம்) தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் கட்டி முடித்துவிட வேண்டும். பன்னிரண்டு

(3) கட்டத்திற்கு முன்புறத்திலும், பின்புறத்திலும் அடி இடத்தைக் காலியாக வைக்க வேண்டும்.

(4) அட்டவணையில் கண்ட விவரத்தையும் அளவுகளையும் அனுசரித்து அல்லது முன் அனுமதி பெற்ற மற்ற விவரத்தையும் அளவுகளையும் அனுசரித்துக் கட்டடத்தைக் குறித்த காலத்திற்குள் கட்டி முடிக்காவிட்டால் அல்லது (3)-ஆவது நிபந்தனைக்கு இணங்க கட்டடத்திற்கு முன்புறத்திலும் பின் புறத்திலும் அடி காலி நிலம் விடாவிட்டாலும் அல்லது கட்டடம் கட்டின பின் அது விட்டுவிடப்பட்டால், அதாவது ஓராண்டு காலத்திற்குத் குடியில்லாமல், பழுது அடைந்து இருந்தால், அப்போது நிலத்திலுள்ள கட்டடங்களுக்கும்

நி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (iii)]

அதற்குச் செய்திருக்கும் மற்ற சீர்திருத்தங்களுக்கும் யாதொரு ஈட்டுத் தொகையும் கொடுக்காமலே அரசினர் அந்த மனை அல்லது மனையையும் வீட்டையும் உடனடியாகத் திரும்ப எடுத்துச் சுவாதீனப்படுத்துவதற்கு உரிமையுண்டு.

26—5—1937 தேதி, 58, வ.து.வா.செ.அச்சு.

---

(5) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொதுமக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்துவருகிற உரிமைகளையும் முன்சொன்ன நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற் சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படையினால் அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப்பட மாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை சட்டம் VIII -ஆவது அத்தியாயம், IX -ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தின் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு தடையிலா உரிமை, தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது, அவற்றுள் செய்யத்தக்க இவை போன்றவற்றைக்கொண்டு கனிப்பொருள்கள் தங்கக் கனிப் பொருள் அல்லது மற்ற கனிப் பொருள்கள் அல்லது நிலக்கரி, கல் அல்லது தங்கமும் மற்றக் கனிப்பொருள்களையும் கொண்டுள்ள அல்லது கொண்டுள்ளவை என்று கருதத்தக்க பாறைகளின் அரசினருக்குரிய உரிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒப்படை பெற்றவர் அரசினரிடமிருந்து அனுமதி அல்லது உரிய முறையில் உரிமம் பெற்ற பின்னர் அன்றி மேற்கொள்ளத் தங்கம் அல்லது மற்றக் கனிப் பொருள்களை எடுத்து வேலை செய்வதற்கு உரிமை இல்லை.

4—8—1632 தேதி, 1936. வ.து.வா.செ. அ.ஆ.வரு.

2—8—1932 தேதி, 51, வ.து.வா.செ. அச்சு.

---

(6) பிற்காலத்தில் இந்த கிராமம் ஒரு நகரமாக அறிவிக்கப்பட்டால் இந்த இடத்திற்கு மனைத் தீர்வை விதிக்கும் உரிமையையும் அரசினர் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(7) அரசினரின் ஒப்பளிப்பின்றி இந்தியக் குடியல்லாத வேறொருவருக்கு நிலத்தைப் பாதனம் செய்து ஒப்படையைச் செல்லாததாக்கிவிடும்.

(அ) இந்த ஒப்படை முற்றிலும் தேர்மையற்றது என்றுவது அல்லது உண்மைக்கு புறம்பாக செய்யப்பட்டது என்றுவது அல்லது தவறான முறையீடு அல்லது மோசடி காரணமாக செய்யப்பட்டது என்றுவது அல்லது அதனை ஒப்படை செய்யும் அலுவலருக்கு கொடுக்கப்பட்ட அதிகார வரம்புக்கு மிகையாக உள்ளது அல்லது நடைமுறையில் முக்கியமான ஒழுங்கீனம் உள்ளது

நி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (iii)]

என்றுவது தெரியவந்தால் ஒப்படை தள்ளுபடி செய்யப்படுவதற்கு உட்பட்ட தாகும்.

(8) மேல் முறையீட்டிலாவது அல்லது ரிவிஷனிலாவது ஒப்படை ரத்து செய்யப்படுமாயின் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து நிலம் அரசினரால் திரும்ப எடுத்துக்கொள்ளப்படுமாயின் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் கட்டியிருக்கக் கூடிய கட்டடங்கள் அல்லது எவற்றிற்கேனும் செய்திருக்கும் மேம்பாடுகளுக்கும் ஈடு கேட்க அவருக்கு உரிமையில்லை.

(9) ஒப்படைத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் நிலம் விற்பனை கொடை அடைமானம் அல்லது யாதொரு விதமான குத்தகை மூலமாகப் பாதீனம் செய்யப்பட்டால் அல்லது இப் பத்து ஆண்டுக் காலத்திற்கப்புறம் அல்லது சட்ட நடைமுறை நிறைவேற்றக் கட்டளையால் அல்லது வேறுவகையில் முதன் முதலில் ஒப்படை பெற்றவர் அல்லது அவரது, சட்ட முறை உரிமை வாரிசு அல்லது (பத்து ஆண்டுகளுக்குப் பின்னர்) அட்டவணையில் கண்ட வகுப்பினர்களின் உடமையில் நிலம் இல்லாது விடுபடுமாயின், நிலக் கொடை அரசினரால் திரும்ப எடுத்துக்கொள்ளப்படுதற்குட்படும் யாதொரு ஈடாவது அல்லது நிலத்தின் விலைத் தொகையைத் திரும்பக் கொடாமல் நிலத்தில் பிரவேசித்து அந்த இடத்தை (அதில் கட்டப்பட்டிருக்கக்கூடிய கட்டடம் உட்பட) சுவாதீனம் செய்துகொள்ள அரசினருக்கு உரிமை உண்டு. இருப்பினும் இந்தத் தடை நில மேம்பாடு சட்டம், விவசாயிகள் கடன் சட்டம் ஆகிய இவற்றின் கீழ் அரசினருக்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் செய்யும் நில அடமானத்திற்குப் பொருந்தாது. கொடையைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்கும் உரிமை கோட்ட ஆட்சியாளரைச் சட்ட முறையில் சாரும்.

(10) ஒப்படை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும், இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் வளரக்கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்தித் தங்கள் விருப்பம்போல் அவற்றை விற்பதற்கான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப் படுத்துவதற்கு அல்லது அவை வெட்டப்படுமாறு செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு ஒப்படை பெறுபவருக்கு உரிமை இல்லை.

(11) சந்தனமரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறுமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்துகொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும், செய்வதில் கலெக்டர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்க வேண்டும்.

நி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (iii)]

(12) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப்படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் ஒப்படை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(13) மேலே குறிப்பிட்டுள்ள (10), (11) அல்லது (12) நிபந்தனைகளில் எதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப்படாவிடின் ஒப்படை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ, அத்தகைய ஈட்டுத் தொகையை அவர் அரசினருக்குச் செலுத்திவிட வேண்டும். ஒப்படையை ரத்து செய்து நிலத்தில் பிரவேசிக்கவும், அரசினருக்கு உரிமை உண்டு. அதன் பின்னர் அந்த நிலம் முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்துவிடும். இந்த நிலையில் ஒப்படை பெற்றவர் யாதொரு சுடும் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார்.

(14) ஒபபடை நிபந்தனைகளுக்கு மாறுக ஏதேனும் செய்யப்பட்டதாக அரசினர் கருதுவாரெனில், நிலம் திரும்ப எடுத்துக்கொள்ளப்படும். நிபந்தனைகளுக்கு மாறுக ஏதாவது செய்யப்பட்டதா இல்லையா என்று ஏதேனும் கேள்வி எழுமானால் அப்போது அரசினரை எழுதிக் கேட்க வேண்டும். இதில் அவர்கள் செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

17–2–1950 தேதி, 423, அ.ஆ.பலவ.

15–7–1950 தேதி, 34852—50–1 அரசாங்க குறிப்பு வரு.

(9–9–1950 தேதி, 28, வ.து.வா.செ.அச்சு.)

குறிப்பு.—கீழே குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் ஒப்படை செய்யப்படும் பொழுது சந்தன மரங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டது சம்பந்தமான (10) முதல் (13) வரையிலுள்ள நிபந்தனைகளை அடித்து விடவேண்டும்.

செங்கற்பட்டு சென்னை, தஞ்சாவூர்.

குறிப்புகள்.—(i) விவர அட்டவணையில் எவ்வகைக் கட்டடம் கட்ட வேண்டுமென்பதைச் சாதாரணமாகக் காட்டுவதுடன், நீட்டல் அளவில் குறிக்கப்பட்ட தரைப் படமும் அதில் இருக்க வேண்டும். படம் வரய முடியாவிட்டால் ஒவ்வொரு திசையின் கீழ் நீள அளவுகளைக் குறிப்பிடவேண்டும்.

(ii) கூட்டுறவுச் சங்கங்களல்லாதபோது அமைக்கப்பட்ட குடியேற்றங்களில் தனித்தனி வீட்டு மனைகள் ஒப்படை செய்யும்போது பின்வரும் நிபந்தனையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

ஒப்படை பெற்றவர் நன்னடத்தை அற்றவரெனில் அல்லது அவர் வீட்டைக் கட்டுவதிலும், அதை அமைத்துக்கொள்வதிலும், குடியிருப்புக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு நடந்துகொள்ளவில்லையெனில் அல்லது வீட்டிடத்தைச் சுகாதார முறையில் வைத்துக்கொள்ளவில்லையெனில் ஒப்படை தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் கோட்ட ஆட்சியாளரால் கொடை ரத்து செய்யப்படுவதற்குட்படும். மேலும் ஒப்படை பெற்றிருப்பவர்

நி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (ii)]

நன்னடத்தை உடையவராகவும, அவர் வீட்டைக் கட்டுவதிலும், அதை அமைத்துக்கொள்வதிலும், குடியிருப்புக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொண்டிருக்கிறார் என்பதாகவும் கோட்ட ஆட்சியாளர் மன நிறைவு கொள்ளும் வகையில் கண்டுகொண்டாலன்றி அக்கொடையை மூன சொன்ன மூன்று ஆண்டின் இறுதியில் நிரந்தரமாக்கக் கூடாது.

2–10–1899 தேதி, 329, வ.து.வா.செ.
17–2–1900 தேதி 139, அ.ஆ.
30–3–1914 தேதி, 134, வ.து.வா.செ.
2–8–1928 87, வ.து.வா.செ.
21–8–1928 தேதி, 87, வ.து.வா.செ.
29–4–1927 தேதி, 795, அ.ஆ.வரு.பலவ.
12–12–1940 தேதி, 3092, அ.ஆ.வரு.வலவ.
22–12–1915 தேதி, 375, வ.து.வா.செ.
15–12–1917 தேதி, 217, வ.து.வா.செ.
13–5–1918 தேதி, 1867, அ.ஆ. வரு.
2–7–1923 தேதி, 1025, அ.ஆ.வரு.பலவ.
18–7–1923 தேதி, 52, வ.து.வா.செ.
13–5–1927 தேதி, 28, வ.து.வா.செ.
20–2–1941 தேதி, 16, வ.து.வா.செ. அச்சு.

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவரது ஆணையையும், கட்டளையையும் அனுசரித்து ஆண்டு தம் தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

24–6–1941 தேதி, 1448, அ.ஆ.வரு.பலவ.
14–11–1941 தேதி, 124,.வ.து.வா.செ. அச்சு.

இணைப்பு XIX அ—நீக்கப்பட்டது.

இணைப்பு— XX

[21-ஆவது நில ஆணை, 7-ஆவது பத்தி (ii)-ஆவது உட்பிரிவு.]

கிராமங்களில் கால்நடைகளை வைத்திருப்பதற்காக மனைகள் ஒப்படை செய்வதற்குப் பிறப்பிக்கப்படும் ஆணையின் படிவம்.

கிராமத்திலுள்ள அறிவிக்கப் படுவது தாலுகாவில்

கிராமத்தில் கால்நடை வைத்திருப்பதற்காக மனை இடத்திற்காக அவர் செய்து கொண்ட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (ii)]

சென்டுகள் அல்லது சதுர கெஜங்கள் அளவுள்ளதும்
வடக்கில் -க்கு கிழக்கில்
தெற்கில் -க்கு மேற்கில் இந் நான் கெல்லைக்குட்
பட்ட பின்வரும் நிலப்பகுதி அவருக்கு வருவாய்த் துன்ற வாரியம் 21 ஆவது நிலை ஆணையின்கீழ் பின்வரும் நிபந்தனைக்குட்படுத்தி ஒப்படை செய்யப் பெற்றிருக்கிறது :—

இட அமைப்பு விவர எழுத்து* நிலப்பகுதி எண்* மனை எண்*

*XVII-ஆவது இணைப்பில் குறிப்பிட்ட தனிப்] படங்களும் பதிவேடும் எழுதி வைக்கப்பட்டு வருபவற்றில் இவை பூர்த்தி செய்யப்பட வேண்டு, மற்றவற்றில் படிவத்தையும்.

நிபந்தனைகள்.

(1) இந்த இடத்தைக் கால்நடைகளையும், மற்ற வீட்டு விலங்கினங்களையும் வைத்திருப்பதற்கும், உரம் சேமிப்பதற்கும் மாத்திரமே உபயோகிக்க வேண்டும்.

(2) ஒப்படை செய்யப்பட்ட நிலத்தில் தொழுவம் அல்லது கட்டடம் கட்டுவதாலுல், அந்தத் தொழுவம் அல்லது கட்டடத்திற்கு முன்னும் பின்னும் அடி அகல நிலம் காலியாக விட்டுவைக்க வேண்டும்.

(3) இடத்தை உபயோகப்படுத்தாவிட்டாலும் அல்லது கொடுக்கப்பட்ட உபயோகத்திற்கின்றி வேறு வகைக்கு அதைப் பயன்படுத்தினர் அல்லது (2)-ஆவது நிபந்தனையை அனுசரித்துத் தொழுவம், கட்டடம் இவற்றின் முன்னும் பின்னும் அடி அகல நிலம் காலியாக விட்டுவைக்காவிட்டாலும், நிலத்தில் இருக்கக்கூடிய கட்டங்களுக்கும் பிரவேசித்து இடத்தையும் அதிலுள்ள யாதொரு கொட்டகை அல்லது கட்டடத்தையும் உடனடியாகச் சுவாதீனம் செய்துகொள்ள அரசினருக்கு உரிமையுண்டு.

26–5–1937 தேதி, 58, வ.து.க.செ. அச்சு.

(4) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொது மக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகளையும் முன் சொன்ன நிலத்தின்கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற் சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படையினுல் அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப்படமாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை நூல் VIII -ஆவது அத்தியாயம் IX -ஆவது இணைப்பில் உள்ள மாதிரி படிவத்தில் இரண்டாம் பாகத்தில் விலக்கப்பட்டுள்ளவாறு தடையிலா உரிமை, தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது, அவற்றுள் செய்யத் தக்க இவை போன்றவற்றைக் கொண்டு கனிப் பொருள்கள் தங்கக் கனிப் பொருள் அல்லது மற்ற கனிப் பொருள்கள், நிலக்கரி, கல் அல்லது

தி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (ii)]

தங்களும் மற்றக் கனிப் பொருள்களையும் கொண்டுள்ள அல்லது கொண்டுள்ளவை என்று கருதத்தக்க பாறைகளின் அரசினருக்குரிய உரிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன; ஒப்படை பெற்றவர் அரசினரிடமிருந்து அனுமதி அல்லது உரிய முறையில் உரிமம் பெற்ற பின்னர் அன்றி மேற்சொன்ன தங்கம் அல்லது மற்ற கனிப் பொருள்களை எடுத்து வேலை செய்வதற்கு உரிமையில்லை.

4-8-1932 தேதி, 1636, அ.ஆ.வரு.பலவ.
22-8-1932 தேதி, 51, வ.து.க.செ. அச்சு.

(5) பிற்காலத்தில் இந்தக் கிராமம் ஒரு நகரமாக அறிவிக்கப்பட்டால் இந்த இடத்திற்கு மனைத் தீர்வை விதிக்கும் உரிமையையும் அரசினர் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(6) அரசினரின் ஒப்பளிப்பின்றி இந்தியக் குடியல்லாத வேறொரு வருக்கு நிலத்தைப் பாதீனம் செய்வது ஒப்படையைச் செல்லாததாக்கிவிடும்.

"இந்த ஒப்படை முற்றிலும் நேர்மையற்றது என்றுவது அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டது என்றுவது அல்லது தவறான முறையீடு அல்லது மோசடி காரணமாக செய்யப்பட்டது என்றுவது அல்லது அதனை ஒப்படை செய்யும் அலுவலருக்கு கொடுக்கப்பட்ட அதிகார வரம்புக்கு வகைப்பட்டதாக உள்ளது என்றுவது அல்லது நடைமுறையில் முக்கியமான ஒழுங்கீனம் உள்ளது என்றுவது தெரிய வந்தால் ஒப்படை தள்ளுபடி செய்யப் படுவதற்கு உட்பட்டதாகும்.

1970ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 11ஆம் நாளும் 750 எண்ணுமிட்ட நிலை அ.ஆ.வரு.

1970ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ஆம் நாளும் 454/70 ஆ. எண்ணுமிட்ட நிலை வ.வா.செ.

(7) மேல் முறையீட்டிலாவது அல்லது ரிவிஷனிலாவது ஒப்படை ரத்து செய்யப்படுமாயின் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து நிலத்தை அரசினர் திரும்ப எடுத்துக்கொண்டாலும் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் கட்டியிருக்கக்கூடிய கட்டடங்கள் அல்லது எவற்றிற்கேனும் செப்பிருக்கக் கூடிய மற்ற மேம்பாடுகளுக்கும் ஈடு கேட்க அவருக்கு உரிமையில்லை.

6-10-1915 தேதி, 298, வ.து.க.செ.
2-8-1928 தேதி, 1738, அ.ஆ.வரு.
21-8-1928 தேதி, 87, வ.து.வா.செ.
18-7-1923 தேதி, 52, வ.து.வா.செ.
13-5-1918 தேதி, 1867, அ.ஆ.வரு.
29-4-1927 தேதி, 795, அ.ஆ.வரு.பலவ.
13-5-1927 தேதி, 28, வ.து.வா.செ.
2-7-1922 தேதி, 1025, அ.ஆ. வரு. பலவ.

(8) ஒப்படைத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் நிலம் விற்பனை கோடை, அடைமானம் அல்லது யாதொரு விதமான குத்தகை மூலமாகப்

நி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (ii)]

பாதீனம் செய்யப்பட்டால் அல்லது இப் பத்து ஆண்டுக் காலத்திற்கப்புறம் சட்ட நடைமுறை நிறைவேற்றக் கட்டளையால் அல்லது வேறு வகையில் முதன் முதலில் ஒப்படை பெற்றவர் அல்லது அவரது, சட்ட முறை உரிமை வாரிசிடம் நிலம் இல்லாது விடுமாயின், நிலக்கொடை அரசினரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்குட்பட்டும் யாதொரு ஈடாவது அல்லது நிலத்தின் விலைத் தொகையைத் திரும்பக் கொடாமல் நிலத்தில் பிரவேசித்து அந்த இடத்தை (அதன் மீது கட்டப்பட்டிருக்கக் கூடிய கட்டடம் உட்பட) அதைச் சுவாதீனம் செய்துகொள்ள அரசினருக்கு உரிமையுண்டு. இருப்பினும் இந்தக் கடை நில மேம்பாடு சட்டம், விவசாயக் கடன் சட்டம் ஆகிய இவற்றின் கீழ் அரசினருக்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் செய்யும் நில அடமானத்திற்குப் பொருந்தாது. மேலே குறிக்கப்பட்டுள்ளவாறு கொடையைத் திரும்பி எடுத்துக்கொண்டு அதில் பிரவேசிக்கும் உரிமை கோட்ட ஆட்சியாளரைச் சட்ட முறையில் சாரும்.

12–12–1940 தேதி, 3092, அ.ஆ.வரு.
20–2–1941 தேதி, 16, வ.து.க.செ. அச்சு.

(9) ஒப்படை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும், இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் வளரக்கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள், இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்தித் தாங்கள் விருப்பம்போல் அவற்றை விற்பதற்கான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவை வெட்டப்படுமாறு செய்வதற்கு அல்லது அப்புறப் படுத்துமாறு செய்வதற்கு உரிமை இல்லை.

(10) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறுமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்துகொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் செய்வதில் கலெக்டர் மனநிறைவு கொள்ளத் தக்க வகையில் ஒத்துக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(11) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப்படாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதில் ஒப்படை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(12) மேலே குறிப்பிட்டுள்ள (9), (10) அல்லது (11)-ஆவது நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப் படாவிடின் ஒப்படை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் மாவட்டக் கலெக்டர் எத்தகைய

நி. ஆ. 21, பத்தி 7, உட்பிரிவு (iii)]

ஈடு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ, அத்தகைய ஈட்டுத் தொகையை அவர் அரசினருக்குச் செலுத்திவிட வேண்டும். ஒப்படையை ரத்து செய்து, நிலத்தில் பிரவேசிக்கவும், அரசினருக்கு உரிமை உண்டு. அதன் பின்னர் அந்நில முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்துவிடும். இந்த நிலையில் ஒப்படை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமை யுடையவர் ஆகார்.

(13) ஒப்படை நிபந்தனைகளுக்கு மாறுக ஏதேனும் செய்யப்பட்டதாக அரசினர் கருதுவாரெனில், நிலம் திரும்ப எடுத்துக்கொள்ளப்படும் நிபந்தனை களுக்கு மாறுக, ஏதாவது செய்யப்பட்டதா இல்லையா என்று ஏதேனும் கேள்வி எழுமாறு, அப்போது அரசினரை எழுதிக் கேட்க வேண்டும். இதில் அவர்கள் செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

(17-2-1950 தேதி, 423, அ.ஆ.வரு.பலவ.)

(15-7-1950 தேதி, 34852—50-1, அரசாங்கக் குறிப்பு. வரு.)

(9-5-1950 தேதி, 28, வ.து.க.செ. அச்சு.)

குறிப்பு.—கீழே குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் ஒப்படை செய்யப் படு பொழுது, சந்தன மரங்கள் ஒதுக்கி வைக்கப்படுவது சம்பந்தமான (9) முதல் (12) வரையிலான நிபந்தனைகளை அடித்து விடவேண்டும்.

செங்கற்பட்டு—சென்னை, தஞ்சாவூர்.

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவரது ஆணையையும், கட்டளையையும் அனுசரித்து, ஆண்டு மாதம் தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

(1) விண்ணப்பத்தில் எல்லா விஷயங்களும் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

(2) விண்ணப்பம் தெளிவாகவும் தெளிவாகவும் (இந்திய மொழிகளில்) இருக்க வேண்டும்.

(3) விண்ணப்பம் தெளிவாகவும் தெளிவாகவும் இருக்கும் அனைத்து விவரங்களும் அதன் இடத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(4) விதிக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணம் மட்டுமே ஏற்கப்படும்.

(5) விண்ணப்பம் தெளிவாகவும் தெளிவாகவும் இருக்கும் இடத்தில் நான்கு கல்வெட்டுகளும், அனைத்து விவரங்களும் அதன் இடத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(6) கோட்டுக் கடிதம் மாதிரி அனுப்பப்பட்டது.

(7) பதில் மாதிரியிலிருந்து வேறுபட்டால் தேதியும்.

(8) எழுத்துத் தேர்வுக்கான கோட் தேதி.

(9) எழுத்துத் தேர்வுக்கான கோட் தேதி.

(10) தகுதிகாண் அதிகாரி முடிவின் தேதியும்.

(11) நிரந்தர அலுவலர்களுக்குச் சம்பளத்தை அதன் அலுவலர்களுக்கு தேதி.

(12) சம்பந்தப்பட்டவர் தொடர்பான தேதி.

(13) ஒப்படைப்பு பதிவேட்டில் அதிகாரிகளின் வரிசை எண்.

(14) பதிவுக் காப்பாளரிடம் பதிவுக்கப்பட்ட தேதியும் அவரது குறிப்பும்.

(15) குறிப்பு.

ஜோடி XXI.

[21-ஆம் நூற்றாண்டு, 7-ஆம் நூற்றாண்டு, (1)-ஆம் தொடர்பு.]

தொழிலாளர்களுக்கு வீட்டுவசதிகளுக்கான விண்ணப்பங்கள் பெறுதல்.

1-5-1937 முதல், 895, ஜ.ஷ.வெ.பகல.

26-5-1937 முதல், 58, ல.நி.க.மே.அக்க.

தொழிலாளர்களுக்கான வீட்டுவசதி திட்டங்கள், தொழிற்சாலை மற்றும் அரசு வீட்டுவசதி திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் பெறுதல்.

[நி. ஆ. 21, பத்தி 11 (ii)

இணைப்பு XXII.

[21 ஆவது நில ஆணை, 11 (1) ஆவது பத்தி.]

சென்னை மாநகரில் அரசினருக்குச் சொந்தமான காலி நிலத்தை கொடுப்பதற்கும் மனைத் தீர்வையைத் திருத்தி அமைப்பதற்கும் வகுக்கப்பட்டுள்ள விதிகள்.

சென்னை மாநகரில் அரசினருக்குச் சொந்தமான காலி நிலத்தைக் கொடுப்பதற்கு வகுக்கப்பட்டுள்ள விதிகள்.—(1) அரசாங்கத்தின் காலி நிலத்துக்குச் செய்துகொள்ளும் விண்ணப்பங்கள். சென்னை மாநகரத்திலுள்ள காலியாக இருக்கும் அரசாங்க நிலத்திற்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பங்களில் கீழ்க்கண்ட நடைமுறையை மேற்கொள்ளவேண்டும் :—

(i) தெரிவிக்க வேண்டிய தகவல்கள்.—அரசினருக்குச் சொந்தமான காலி நிலத்திற்குச் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள் எழுத்து வடிவில் இருக்க வேண்டும். அதில் தேவையான நிலத்தைப் பற்றியும், எந்த உபயோகத்திற்காக அந்த நிலம் வேண்டப்படுகிறது என்பதைப் பற்றியும் விளக்கமாகக் குறிக்க வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் எந்த அலுவலரிடம் தாக்கல் செய்யவேண்டுமென்பது.—ஒவ்வொரு விண்ணப்பமும் முதலில் சென்னை தாசில்தாருக்கு செய்து கொள்ள வேண்டும். விண்ணப்பங்கள் பக்கங்கள் வரிசையில் எண்ணிடப்பட்டுத் வைத்துக் கட்டப்பட்ட பதிவேட்டில் தேதி வரிசையில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

(2) விண்ணப்பங்களை முடிவு செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய முறை.—(i) வருவாய் ஆய்வாளரிடமிருந்து வரப்பெறத்தக்க அறிக்கை.—விண்ணப்பம் கிடைத்ததும் தாசில்தார் "அ" படிவத்தில் அறிக்கைக்காக அதை வருவாய் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும். அறிக்கை கிடைத்ததும் அதைத் தாசில்தார் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும்.

(ii) நகர அமைப்பு நெறியாளருக்குக் கேட்புக் கடிதம் அனுப்புதல்.—அமைப்புத் திட்டத்துடன் வீட்டு மனைகளுக்காகச் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தைக் கலெக்டர் நகர அமைப்புத் துறை நெறியாளருக்கு அனுப்ப வேண்டும். அவருக்கு ஆட்சேபணை ஏதேனும் இருக்குமானால் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டும். எந்த அமைப்புத் திட்டமும் அதிலடங்கியுள்ள தெருக்கள், சந்துகள் இவற்றின் அகலம் சம்பந்தப்பட்டவரையில் 1919 ஆம் ஆண்டு சென்னை நகர மன்றச் சட்டம் iv 212 (2) 216 (2), பிரிவுகளுக்கிணங்கி இருந்தாலன்றி அவற்றைக் கவனிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ கூடாது.

23–8–1931 தேதி, 427, அ.ஆ. வரு.
22–8–1931 தேதி, 19, வ.து.வா.செ.

(iii) சென்னை மாநகர் மன்ற ஆணையாளருக்கு எழுதிக் கேட்பது.—வருவாய் ஆய்வாளர் அறிக்கையின் நகல் ஒன்றை கலெக்டர் சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். மாநகராட்சி ஆட்சேபணைகள் எவையேனும் தெரிவிக்குமெனில் அவற்றைப் பற்றிக் கலெக்டர்

நி. ஆ. 21, பத்தி 11 (ii)]

கவனிக்க வேண்டும். தன் கருத்தைத் தெரிவிப்பதற்காக மாநகராட்சிக்குக் கலெக்டர் இரண்டு மாதப் பெருமக் காலம் அனுமதிக்கலாம். அதற்குள் அதனிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லையானால் ஒப்படை செய்வதில் மாநராட்சிக்கு ஆட்சேபணையில்லை என்பதாக கலெக்டர் கருதலாம்.

1-8-1931 தேதி, 1636, அ.ஆ. வரு. பலவ.
10-8-1931 தேதி, 66, வ.து.வா.செ. அச்சு.

(iv) முடிவு.—வருவாய் ஆய்வாளர் அறிக்கையும், சென்னை மாநகராட்சி குறிப்புரையையும் பார்வையிட்டு, மேலும் தேவையான விசாரணை செய்த பின்னர் இவ்விதிகளை அனுசரித்து நிலத்தைக் கொடுப்பதில் ஆட்சேபணையில்லை என்க் கலெக்டர் கருதுவாரெனில் அந்நிலம் முன்பே நில அளவு செய்யப்படாதிருந்தால், அதை நில அளவு செய்து எல்லை வரையறுப்பை ஏற்பாடு செய்ய வேண்டும். பின்னர் அவர் மனை தீர்வையையும் நிலத்தின் இருப்பு உரிமைக்குரிய நிலக் கிரயத்தையும் 5 ஆவது உள் விதிகளுக்கிணங்க தீர்மானித்து, இது பின்வரும் 6 ஆவது விதியின் (1) ஆவது உள்விதியின் கீழ் வந்தாலன்றி வருவாய்த் துறைக் கழகத்தின் ஒப்பளிப்பு பெற வேண்டி அதை மேல் அனுப்ப வேண்டும். அது, 5 ஆவது விதியின்கீழ் வருமானால், கலெக்டர் தீர்மானித்திருக்கும் மனைத் தீர்வை விதத்துக்குக் காரணங்கள் கொடுக்க வேண்டும். அது, (6) ஆவது விதியின் 2 ஆவது உள் விதியின் கீழ் வருமாயின் இருப்பு உரிமைக்குரிய நிலக் கிரயம் வசூல் செய்யாமலே அதைத் தள்ளிவிட யோசனை இருக்கிறதா என்பதற்கும் அறிக்கை அனுப்ப வேண்டும்.

வருவாய்த் துறை கழகத்தின் ஆணை கிடைத்ததும் நிலம் பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டியதாக இருந்தால், கலெக்டர் "ஆ" படிவத்தில் தயாரிக்க அறிவிப்பை தமுக்கடிப்பினால் விளம்பரம் செய்வதுடன் தெளிவாகத் தெரியக்கூடிய எடுப்பான இடத்திலும் சம்பந்தப்பட்ட நிலத்திலும் அதை ஒட்டி வைக்க வேண்டும்.

8-8-1932 தேதி, 1664, அ.ஆ. வரு.
3-10-1932 தேதி, 2907, வ.து.வா.செ. பலவ.

(v) மனைத் தீர்வை விதம் தீர்மானித்தல்—மனைத் தீர்வை விதம் பின்வருமாறு தீர்மானிக்கப்பட வேண்டும் :—

அருகில் அதைப் போன்றுள்ள நிலங்களின் விற்பனை விவரங்களைத் தெரிந்து கொண்டு, சலுகையுள்ள அல்லது சலுகை இல்லாத விதங்களில் அனுபவிக்கப்படும் நிலங்களை விலக்கிவிட்டு மற்ற நிலங்களின் விற்பனை விலையுடன் விண்ணப்பம் செய்து கொண்டுள்ள நிலத்திற்காக ஏற்பட்ட மனைத் தீர்வை அல்லது தீர்வையின் 25 மடங்குத் தொகையும் சேர்த்துத் தீர்வையில்லா நிலத்தின் கிரயம் இன்னதென்று முதலில் கணக்கிட வேண்டும். இத்தகைய தீர்வையில்லாத நிலத்தின் கிரயத்தை தீர்மானிக்கும்போது பின்வரும் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும் :—

(1) மனைத் தீர்வை நிர்ணயம் செய்ய ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டிய மதிப்புத் தொகை அந்நிலத்திற்குத் தற்கால நிலைமை அனுசரித்துள்ள மதிப்பேயன்றி வருங்காலத்தில் அது கட்டட இடமாக இருக்கும் என்பதான எதிர்கால மதிப்பன்று.

(2) அண்மையிலுள்ள நில விற்பனைகளையொட்டி நிலத்தை மதிப்பிட வேண்டியிருக்கையில், சிறு நிலப் பகுதிகள் அல்லது முகப்பு நிலங்களிலுள்ள விலையை அனுசரித்துப் பெரிய நிலப்பகுதிகளின் விலையை கணக்கிட்டு நிர்ணயிக்கக் கூடாது.

(3) சந்தேகமுள்ளபோது, மனைத் தீர்வை நிர்ணயம் செய்வதற்காகச் சென்னை நகராட்சி மன்ற 1919 ஆம் ஆண்டு சட்டத்தின் 100 ஆவது பிரிவில் கண்ட சொத்து வரி விதிப்பு முறையைக் கவனித்து பார்த்துக் கொள்ளவேண்டும்.

(4) முன்னமே கட்டடங்களுள்ள நிலத்திற்கு அந்தக் கட்டடங் களின் மதிப்புத் தொகையை நீக்கி, நிலத்திற்குத் தனியாக மதிப்பு கணக்கிட வேண்டும்.

தீர்வையில்லா நிலத்தின் மதிப்பீட்டுத் தீர்வை தொகையின் இருபத்தைந்தில் ஒரு பாகமே போட்டியில் வரக்கூடிய முழுத் தீர்வையாகும். இதற்குச் சிறிது குறைந்ததாகவே மனைத் தீர்வை விதிக்கப்படவேண்டும். கீழே கண்ட வீதங்களில் யாதொரு வீதம் பெரும்பான்மையாகச் சற்றேறத்தாழ இந்நிபந்தனைகளுக்கு இணங்குமோ அதைக் கலெக்டர் சாதாரணமாக அனுசரிக்க வேண்டும். தீர்வையில்லா நிலத்தின் மதிப்பீட்டுத் தொகைக்கும் மூலதன ஈடாகிய 25 ஆண்டு மனைத் தீர்வைக்கும் (அதாவது மனைத் தீர்வையைப் போல் 25 மடங்குகள்) உள்ள விந்தியாசமே அதன் இருப்பு உரிமையின் விலை மதிப்பாகும். இந்தத் தொகையையே ஏல விற்பனையில் அல்லது தனி விற்பனை யிலிருந்து திரும்பப்பெற வேண்டும் :—

ஏக்கர், சென்ட், மனை இவற்றிற்கு மனைத் தீர்வைத் தரவீத வரி அட்டவணை.

ஏகிகர்.	வீதம் சென்ட்	மனை
(1)	(2)	(3)
ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
6 25	0 07	0 38
அல்லது	அல்லது	
12 50	0 13	0 69
18 75	0 19	1 07
25 00	0 25	1 38
37 50	0 38	2 07
அல்லது	அல்லது	
50 00	0 50	2 75
75 00	0 75	4 13
100 00	1 00	5 50
125 00	1 25	6 88
150 00	1 50	8 25
175 00	1 75	9 63
200 00	2 00	11 00

நி. ஆ. 21, பத்தி 11 (ii)]

ஏக்கர்		வீதம் சென்ட்		மனை	
ரூ.	பை.	ரூ.	பை.	ரூ.	பை.
225	00	2	25	12	38
250	00	2	50	13	75
275	00	2	75	15	13
300	00	3	00	16	50
325	00	3	25	17	94
350	00	3	50	19	32
375	00	3	75	20	69
400	00	4	00	22	07
425	00	4	25	23	14
450	00	4	50	24	82
475	00	4	75	26	19
500	00	5	00	27	57
550	00	5	50	30	72
600	00	6	00	33	07
650	00	6	50	35	82
700	00	7	00	38	57
750	00	7	50	41	32
800	00	8	00	44	07
850	00	8	50	46	82
900	00	9	00	49	57
950	00	9	50	52	32
1,000	00	10	00	55	13
1,100	00	11	00	60	63
1,200	00	12	00	66	13
1,300	00	13	00	71	63
1,400	00	14	00	77	13
1,500	00	15	00	82	63
1,600	00	16	00	88	13
1,700	00	17	00	93	63
1,800	00	18	00	99	13
1,900	00	19	00	104	65*
2,000	00	20	00	110	13

* 64.06 நயா பைசாக்களை 65 நயா பைசாக்களாக முழுமையாக்கி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பு.—வேண்டுமானால் மனைத் தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதத்தில் விதிக்கலாம்.

4–10–1922 தேதி, 1779, அ.ஆ. வரு. பலவ.
13–10–1927 தேதி, 1957, வ.து.வா.செ. பலவ.
24–9–1940 தேதி, 3172-(1) 40-1, குறிப்பு வரு.
7–3–1941 தேதி, 26, வ.து.வா.செ. அச்சு.

[மி. ஆ. 21, பத்தி 11 (ii)

(vi) ஏல விற்பனை.—6 ஆவது விதியில் கண்டுள்ளவாறன்றி காலியாக இருக்கும் அரசாங்க காலி நிலங்கள் எல்லாவற்றையும் பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும். ஏலம் சாதாரணமாக கலெக்டரால் அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலரால் நடத்தப்படவேண்டும். பூனல் தீர்வையில்லா நிலத்தின் தோராய மதிப்பு 5,000 ரூபாய்க்கு அதிகமாக இருந்தால் கலெக்டரே ஏலத்தை நடத்த வேண்டும். V ஆவது உள்விதியை அனுசரித்து தீர்மானிக்கப்பட்ட இருப்பு உரிமையின் மதிப்புத் தொகைக்குக் குறையாத தொகையை ஏலத்தின் ஆரம்ப விலையாக வைத்துக் கொள்ள வேண்டும். விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட மனை நிலத்தை வீட்டு மனையாக அமைப்பதற்கு அல்லது அதில் சாலை அமைப்பதற்கு அல்லது அதைக் குடியிருப்புக்குத் தகுதியாக்குவதற்கு தொகை ஏதேனும் செலவிடப்பட்டிருந்தால் அதற்குள்ள மதிப்பீட்டை ஏல ஆரம்பத் தொகையுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். அறிவிக்கையில் குறித்த தேதியில் அல்லது தகுந்த காரணத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டு வெளியிடப்பட்ட தேதியில் ஏல விற்பனையை நடத்த வேண்டும். அதிக தொகை கூறுபவருக்கு ஏலம் விட வேண்டும். ஏலத்தில் நிலத்தை எடுத்துக் கொண்டவர் ஏலத் தொகையைச் செலுத்துவதுடன் சங்கிலி அளவை நடைமுறை நூலில் உள்ள விதிகளை அனுசரித்து நில அளவை எல்லை வரையறுத்தல் முதலியவற்றிற்கான செலவையும் சேர்த்துக் செலுத்த வேண்டும்.

(v) ஆவது உள்விதியில் உள்ள அறிவுரைகளை அனுசரித்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மனைத் தீர்வை விதத்திற்கும் துவக்க விலைக்கும் உட்படுத்தி நடத்தப்பட்ட ஏல விற்பனையில் ஒருவரும் விலை கூறவில்லை என்றால் அந்த நிலத்துக்கு ஏலத்தில் விலை கூற இருந்தவர்கள் கூட்டுச் சேர்ந்தது அல்லது ஏல விற்பனையைப் பற்றி அறிவிப்பு செய்யப்படாததால் இது போன்ற மற்றக் காரணங்கள் இருந்தாலன்றி, அரசினர் ஒப்பளிப்பைப் பெற்று மனைத் தீர்வையைக் குறைக்கலாம்.

(vii) வைப்புத் தொகை.—ஏலத்தில் எடுத்தவர் உடனடியாக ஏலத் தொகையில் 15 சதவீதம் செலுத்துவதுடன், ஏல விற்பனைத் தொகையின் மீதித் தொகையையும் (vi) ஆவது உள்விதியில் குறிக்கப்பட்டுள்ளவாறு நில அளவை எல்லை வரையறுத்தல், இவற்றிற்குரிய செலவேதாவேனுமிருப்பின் அதையும் ஏல விற்பனைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால் வைப்புத் தொகையை தாம் இழந்துவிட ஒப்புக் கொள்ளுவதாக அவரிடமிருந்து ஒப்பந்தம் எழுதி வாங்கி கொள்ள வேண்டும்.

(viii) ஏலத்தை உறுதி செய்வது.—கலெக்டரிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரால் ஏலம் நடத்தப்பட்டால் அவர் ஏல முடிவை உடனடியாகக் கலெக்டருக்கு அறிவிக்க வேண்டும். கலெக்டர் தமக்குரிய அதிகாரத்தைச் செலுத்தும் வகையில் தம் யுக்தத்தில் ஏல விற்பனையை உறுதி செய்யலாம் அல்லது தகுந்த காரணங்களுக்காகத் தள்ளுபடி செய்யலாம்.

(ix) மேல்முறையீடு.—(viii) ஆவது விதியின் கீழ்ப் பிறப்பித்த ஆணையை எதிர்த்து வருவாய்த் துறைவாரியத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். ஆயினும் எந்த ஆணையை எதிர்த்து முறையீடு செய்யப் படுகிறதோ அந்த ஆணையை அது பிறப்பித்த தேதியிலிருந்து இரண்டு

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

மாதத்திற்குள் முறையீடு செய்யப்பட்டாலன்றி அதை ஏற்றுக்கொள்ளலாகாது. வருவாய்த் துறைக் கழகம் செய்யும் தீர்வை எதிர்த்து செய்யக்கூடிய இரண்டாவது மேல் முறையீடு இல்லை.

(3) எந்தத் தேதியிலிருந்து மனைத் தீர்வை விதிக்கத்தக்கது.—நிலம் புதிதாக ஒப்படை செய்யப்பட்டால் அல்லது மனைத் தீர்வைச் செலுத்தப் படுவதற்குட்படுத்தி விவசாயமல்லாத காரியங்களுக்காக விற்கப்பட்டால் சுவாதீனம் கொடுக்கப்படாத இனங்களில் ஒப்படைத் தேதிக்குப் பின் அந்தப் பசலியில் உள்ள கால அளவிற்கு விதாசாரத்தில் முதல் பசலிக்குரிய மனைத் தீர்வையை விதிக்க வேண்டும்./ ஒப்படை பெற்றிருப்பவர் அல்லது விலைக்கு வாங்கியவர் முன்னமே நிலத்தை அநுபோகத்தில் வைத்திருந்தார் என்றால் அவ்வாறு அநுபோகம் செய்த தேதியிலிருந்து மனைத் தீர்வை விதிக்க வேண்டும். இவ்விருவகையிலும் மாதத்தின் ஒரு பகுதியை ஒரு மாதமாகக் கணக்கிட வேண்டும்.

14–10–1925 தேதி, 1595, அ.ஆ.வரு.பல.
22–10–1925 தேதி, 2312, வ.து.வா.செ. பல.
18–8–1932 தேதி, 1740, அ.ஆ.வரு. பல.
26–8–1932 தேதி, 2538, வ.து.வா.செ. பல.

(4) மனைத் தீர்வையைக் குறிப்பிட்ட காலங்களில் திருத்தி அமைத்து நிர்ணயம் செய்தல்.—விதிக்கப்பட்டுச் செலுத்தப்பட்டு வரும் சென்னை மாநகரின் மனைத் தீர்வை அத்தீர்வை ஒழுங்கு செய்யப்படுவதற்கு அத்தீர்வை அவ்வப் போது வகுக்கப்பட்டு நடைமுறையிலுள்ள விதிகளை அனுசரித்துத் திருத்தி அமைக்கப்படுவதற்குட்படும். இவ்வாறு திருத்தி அமைப்பதில் கட்டடங்கள், மேல் கட்டுமானங்கள் அல்லது மற்ற மேம்பாடுகள் இவற்றைத் தவிர்த்து தீர்வையில்லா நிலத்தின் தோராய மதிப்புத் தொகையை மாத்திரமே கவனத்தில் கொண்டு ஒவ்வொன்றின் தகுதிகளைத் தனித்தனியே ஆராய்ந்து அதில் நடவடிக்கை எடுக்கவேண்டும். சென்னை மாநகரில் மனைத் தீர்வையைத் திருத்தி அமைத்து நிர்ணயம் செய்வதற்குரிய விதிகள் இந்த இணைப்பின் II ஆவது பாகத்தில் இருக்கின்றன.

(5) தனிப்பட்ட இனங்களில் மனைத் தீர்வை குறைப்பது.—குறிப்பான சில தனிப் பகுதிகளில் மனைத் தீர்வை விதத்தைக் குறைக்கலாம். ஏழை வகுப்பினர் குடியிருக்கும் நகரப் பகுதிகளில் அல்லது வீடு கட்டுவதற்கு ஆகும் செலவு வழக்கமாக ஏற்படக்கூடியவற்றில் அதிகமாக ஏற்படும் இடங்களில் இதற்கு உதாரணங்களாகும். விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவரின் வறுமையை முன்னிட்டு இச்சலுகை அளிக்கப்படும் போது அச்சலுகையைப் பெற உரிமையல்லாதவரென கருதப்படும் சவுக்கார்கள் போன்றவர்களில் அதை அடையாத வண்ணம் இவ்வகையில் உரிய முறையில் ஒப்படை ஆணையின் சொற்களைக் கவனித்து அமைக்க வேண்டும்.

(6) ஏல விற்பனை தேவையில்லையென அதை அப்போது விட்டுவிடலாம்.—(1) தற்போதிருக்கும் வீட்டு மனையை விரிவு செய்வதற்காகச் செய்து கொண்டிருக்கும் விண்ணப்பத்திலும்,

(2) விண்ணப்பம் செய்திருப்பவர் ஏலத்தில் போட்டியிட்டு விலைக்கு எடுக்க முடியாதவாறு அவ்வளவு ஏழையாக இருப்பினும்,

[நி. ஆ. 21, பத்தி 11 (i)

(3) சில குறிப்பான தன்மைகளை முன்னிட்டு ஏலத்தில் விடாதிருத்தல் நேர்மையாக இருக்கும் என்றபோதும் இருப்பு உரிமையை ஏலத்தில் விற்பனை செய்வதை விட்டு விடலாம்.

தற்சமயமுள்ள மீட்டு மனையை விரிவுபடுத்துவதற்காக விண்ணப்பம் செய்து கொண்ட பரப்பு 15 சென்டுகளுக்கு மேற்படாதிருந்தால் கலெக்டர் தாமே அந்த நிலத்தை ஒப்படை செய்யலாம். மேலே (3) ஆவது வகுப்பின் கீழ் வரும் இனங்களில் வருவாய்த் துறைக் கழகம் ஒவ்வொன்றிலும் 15 சென்டுகள் வரை தனி விற்பனையில் ஒப்படை செய்யலாம். விண்ணப்பம் செய்திருப்பவர்களிடமிருந்து இருப்பு உரிமையின் மதிப்புத் தொகை முழுவதையும் வசூல் செய்துகொள்ள வேண்டும். ஏலத்தில் எடுக்க முடியாதவாறு விண்ணப்பம் செய்திருப்பவர் அவ்வளவு ஏழையாக இருப்பாரெனில் நிலம் 15 சென்டுக்கு மேற்படாதிருந்தாலன்றி யாதொரு தொகையையும் வசூல் செய்யாமல் இலவசமாகச் சாதாரண மனைத் தீர்வை செலுத்துவதற்கு அல்லது 5 ஆவது விதியில் கண்டுள்ளவாறு தனி மனைத் தீர்வை செலுத்துவதற்கு உட்படுத்தி, நிலத்தை வருவாய்த்துறை வாரியம் ஒப்படை செய்யலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள எல்லா இனங்களிலும் நில அளவு செய்தல், எல்லை வரையறுத்தல் இவற்றிற்கான விதாசாரத் தொகையையும், வீட்டு மனைக்காக அமைப்புத் திட்டம் வகுப்பதற்கு அல்லது சாலைகள் அமைப்பதற்கு அல்லது குடியிருப்புக்குத் தகுதியாக்குவதற்கு ஆகக் கூடிய செலவையும் ஒப்படை பெற்றிருப்பவர் செலுத்தக் கட்டுப்பட வேண்டும்.

8–8–1932 தேதி, 1664, அ.ஆ.வரு.
3–10–1932 தேதி, 2907, வது.வா.செ. பலவ.

(6—அ). மேல்முறையீடு.—ii viii ஆவது விதியின் கீழ்ப் பிறப்பித்த ஆணையை எதிர்த்து வருவாய்த் துறை வாரியத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். ஆயினும் எந்த ஆணையை எதிர்த்து முறையீடு செய்யப்படுகிறதோ அந்த ஆணை அது பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் மேல் முறையீடு செய்யப்பட்டாலன்றி அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேல் முறையிட்டில் வருவாய்த் துறை வாரியம் செய்யும் தீர்ப்பே முடிவானது.

(6—ஆ) ரிவிஷன்.—கலெக்டர் செய்த முடிவு முற்றிலும் நேர்மையற்றதென, வருவாய்த் துறை வாரியம் மன நிறைவு கொள்ளும் வகையில் கருதும் எனில், அது ஏல விற்பனைகளிலும் தனி ஏற்பாட்டு விற்பனைகளிலும் அவர் செய்த முடிவைத் தள்ளுபடி செய்யலாம் அல்லது ரத்து செய்யலாம் அல்லது யாதொரு வகையில் மாறுதல் செய்து திருத்தி அமைக்கலாம். இவ்வாறே, நடைமுறையில் முக்கியமான ஒழுங்கீனம் இருந்திருக்குமானால், அல்லது கலெக்டர் தமக்குள்ள அதிகார வரம்பிற்கு மீறி நடந்து கொண்டார் என்றால், அல்லது உண்மை நிலைக்குப் புறம்பாக மோசம் அல்லது கவருக முறையிட்டது காரணமாக முடிவு செய்யப்பட்டது என்றால், வருவாய்த் துறை வாரியம் இத்தகைய அதிகாரத்தைக் கால வரம்பில்லாமல் செலுத்தத் தகும்.

10–4–1937 தேதி, 772, அ.ஆ.வரு.பலவ.
29–4–1937. கே.தி. 46, வ.து.வா.செ. அச்சு.

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

(7) நிலம் வழங்கியபின் அனுசரிக்கத்தக்க நடைமுறை—ஒப்படைப் பதிவேடு.—சென்னை மாநகரத்தில் ஒப்படை செய்யப்படும் அரசாங்க நிலத்திற்கெல்லாம் "இ" படிவத்தில் ஒரு பதிவேடு எழுதி வைத்து வர வேண்டும். "ஆ" படிவத்திலுள்ள பதிவேட்டின் உரிய கட்டங்களில் ஆணைகளின் பகுதி நகலைப் பதிவு செய்து வர வேண்டும்.

ஒப்படை ஆணைப் படிவம்.—இவ்விதிகளை அனுசரித்து ஒப்படை செய்யப்பட்ட மனைகள் எல்லாவற்றிற்கும் "ஈ" படிவத்தில் அல்லது "உ" படிவத்தில் தக்கவாறுக கோட்ட ஆட்சியாளர் தாமே கையெழுத்திட்ட ஒப்படை ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். ஆயினும் 1920 ஆம் ஆண்டு சென்னை மாநகரமைப்புச் சட்டத்தின் விதிகளுக்கிணங்க அல்லது சுகாதாரம் அல்லது ஆட்சி முறைத் தேவைகளுக்காகக் கூடுதலான நிபந்தனைகளைக் கலெக்டர் விதிக்கலாம். மேல் முறையிடு அல்லது ரிவிஷனில் ஒப்படை ரத்து செய்யப் பட்டால் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து அரசினர் நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டால் நிலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு அல்லது மற்ற மேம்பாடுகளுக்கு ஈட்டுத் தொகை பெற ஒப்படை பெற்றிருப்பவருக்கு உரிமையில்லை என்பதை ஒப்படை ஆணையில் தெளிவாகக் குறிக்க வேண்டும்.

10–4–1937 தேதி, 772, அ.ஆ.வரு.பலவ.
29–4–1937 தேதி, 46, வ.து.வா.செ. அச்சு.

அமைப்பு பெற்ற குடியிருப்புகளுக்குரிய வீட்டு மனைகள் முதல் முதலில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழக்கமாக ஒப்படை செய்யப்படும். கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்படை செய்யப்பெற்றால், கூட்டுறவுச் சங்கச் செயற்குழுவினர் பகரும் பரிந்துரையினால் அல்லது வேறு வகையில் ஒப்படை பெறுவதற்கான நன்னடத்தை உடையவராகவும் அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும் குடியிருப்புக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக் குட்பட்டு நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகவும் மூன்று ஆண்டு காலத்தி லாவது வீட்டிடத்தைச் சுகாதார முறையில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதாகவும் கலெக்டர் மன நிறைவு கொள்ளும் வகையில் கண்டு கொள் வதற்கு முன்னதாகத் தனிப்பட்ட ஒப்படை செய்தல் கூடாது. கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் பெருவிடில் தனிப்பட்ட ஒப்படைகளை ஆரம்பத்திலே செய்து விடலாம். ஆனால் அவை தற்காலிகமாகவே இருக்க வேண்டும். ஒப் படை பெறுவதற்கானவர் நல்ல நடத்தை உடையவராகவும் அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும் குடியிருப்புக்காக வகுக்கப் பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகவும் கலெக்டர் மன நிறைவு கொள்ளும் வகையில் கண்டுகொள்ளும் வரையில் அவருக்குத் தனிப்பட்ட வகையில் வீட்டு மனை ஒப்படையை நிலையானதாகச் செய்தல் கூடாது. இவற்றில் XXII ஆவது இணைப்பின் உள் படிவத்தில் தனி நிபந்தனை ஒன்றைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

12–12–1940 தேதி, 3092, அ.ஆ.வரு.பலவ.
20–2–1941 தேதி, 16, வ.து.வா.செ.

(iii) திரும்ப எடுத்துக் கொள்ளும் உரிமை.—ஒப்படை நிபந்தனைகளின் கீழ் திரும்ப எடுத்துக் கொள்ளும் உரிமையைக் கலெக்டர் பிறப் பிக்கும் ஆணையை அனுசரித்துச் செயலாற்ற வேண்டும். அவ்வாறு திரும்ப

[நி. ஆ. 21, பத்தி 11 (i)

எடுத்துக் கொள்ள ஆணை பிறப்பிக்குமுன் கலெக்டர் தனை காட்டும் வகையில் (அ) ஒப்படை பெற்றிருப்பவருக்கு அறிவிப்புக்கொடுத்து (ஆ) சென்னை, செங்கல்பட்டு அரசிதழிலும் அறிவிப்பு செய்யலாம்.

(iv) கட்டடம் கட்டுவதற்கு விதிக்கப்பட்ட கால அளவை நீடிப்பது.— குறித்த காலத்தில் கட்டடம் கட்ட வேண்டும் அல்லது இடத்தைச் சுற்றிலும் அடைப்பு அமைக்கவேண்டுமென்ற நிபந்தனை ஒப்படை ஆணையில் இருக்கும் போது தக்க காரணம் தெரிவிக்கப்பட்டால், கலெக்டர் அந்தக் கால அளவை நீடிக்கலாம். இந்தக் கால அளவு விற்பனையை உறுதி செய்யும் யாதொரு ஆணையை எதிர்த்துச் செய்யப்பட்டதில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து தெளிவாக 12 மாதகாலம் ஒப்படைப் பெற்றிருப்பவருக்குக் கிடைக்குமாறு நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

Verified Red Flag

இணைப்பு XXII.

'அ' படிவம்.

சென்னை மாநகரத்தில் அரசினருக்குச் சொந்தமான காலி நிலத்திற்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பங்களின் பதிவேடு.

விண்ணப்பத்தின் மீது அனுப்பப்படும் அறிக்கை.

விண்ணப்பம்.		விண்ணப்பம் செய்துகொண்ட நிலத்தின் விவரங்கள்.													
(1) எண்.	(2) தேதி.	(3) விண்ணப்பம் செய்து கொண்டவரின் பெயர், முகவரி (இந்திய மில்லாவிட்டால் தேசிய இனம்).	(4) விண்ணப்பம் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்ட அல்லது அவர் பெற்றுக் கொண்ட தேதி.	(5) கிராமம்.	(6) இடத்தின் நில அளவை எண்ணும் விண்ணப்பம் செய்துகொண்ட நிலம் முழுவதற்குமா அல்லது பகுதிக்கு மாத்திர மா என்பதும்.	(7) விண்ணப்பம் செய்துகொண்ட மனை யின் பரப்பு. காலி மனை சதுர அடி.	(8) விண்ணப்பம் செய்துகொண்ட மனை யின் நான்கெல்லைகள்.	(9) தீர்வையில்லாக் கைப்பற்று நிலத்தின் மதிப்பும் அது எந்த அடுப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தென்பதும்.	(10) நிலத்தில் உள்ள மரங்களின் எண்ணிக்கையும், அவற்றின் வகையும்.	(11) குடியிருப்பவர்களுக்கு ஆறுமாதத்துக்கு மேலும் இருக்குமாறும் வருவாய் ஆய்வாளரின் கருத்து.	(12) தாசில்தாரின் பரிந்துரை.	(13) கலெக்டருக்கு அறிக்கை அனுப்பிய தேதியும் அவர் கொண்ட தேதியும்.	(14) முடிவான ஆணையும் முடிவான தேதியும்.	(15) குறிப்புரை.

பத்தி (6):— விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட நிலம், ஒரு நில அளவைப் புலத்தின் ஒரு பகுதியாக இருக்குமானால் முழு நில அளவைப் புலமும் அதில் விண்ணப்பம் செய்துகொண்ட பகுதியின் பரப்பு அகல நீளமும் குறிக்கப்பட்ட தரைப்படம் ஒன்றை வருவாய் ஆய்வாளர் இத்துடன் இணைத்தனுப்ப வேண்டும்.

[நி. ஆ. 21, பத்தி 11 (i)

இணைப்பு XXII —தொடர்ச்சி.

ஆ. படிவம்—அறிவிப்பு.

சென்னை மாநகரில் அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் இருப்பு உரிமை விற்பனை.

விண்ணப்பத்திற் கண்டுள்ள நிலத்தின் இருப்பு உரிமையை ஆண்டு பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இதனடியில் குறிக்கப்பட்டுள்ள மாதம் பரப்பு அளவை எண்

அரசினர் இடத்தில் 19 தேதி கிராமம் நான்கெல்லைகள்.

ஆம் மணிக்கு நில

இந்த நிலம் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலத்தில் விடப்படும் :—

(1) ஏலத்தில் விலைக்கு எடுத்துக் கொண்டவர் ஏலம் முடிவடைந்த தும் ஏலத் தொகையில் 15 சதவீதத்தை உடனடியாகச் செலுத்த வேண்டும். ஏலத்தின் பாக்கித் தொகையையும், நில அளவை எல்லை வரையறுத்தல் இவற்றிற்கான செலவு இருந்தால் (அதைக் குறிப்பிட வேண்டும்) அதையும் ஏல விற்பனைத் தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் செலுத்தாவிட்டால் வைப்புத் தொகையை இழந்துவிட ஒப்புக் கொள்வதாக ஏலத்தில் எடுத்தவர் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கவேண்டும்.

(2) ஏலம் பெற்றிருப்பவர் ஏலத் தொகையில் 15 சதவீதம் கட்டத் தவறினால் அல்லது பாக்கி நிற்கும் தொகையையும் நில அளவை எல்லை வரை யறுத்தல் ஆகியவற்றின் செலவு ஏதேனும் இருந்தால் அதையும் ஏலத் தேதி யிருந்து முப்பது நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் அந்த நிலத்தை மறு ஏலத்தில் விட ஆணை பிறப்பித்து அதனால் ஏதாவது இழப்பு ஏற்பட்டால் அதை யும் அத்தொகையைச் செலுத்தத் தவறிய ஏலத்தில் எடுத்தவரிடமிருந்து வசூல் செய்வதற்குக் கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

(3) கலெக்டரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் அலுவலரால் ஏல விற்பனை நடத்தப்பட்டிருந்தால் அந்த ஏல விற்பனை கலெக்டரால் உறுதி செய்யப்படுவ தற்கும் கலெக்டரின் முடிவை எதிர்த்து வருவாய்க் கழகத்திற்கு மேல் முறை யீடு ஏதேனும் செய்யப்பட்டிருந்தால் அந்த மேல் முறையீட்டின் முடிவுக்கும் உட்படும்.

(4) ஏல விற்பனை கலெக்டரால் அல்லது மேல்முறையீட்டில் அல்லது ரிவிஷனில் கலெக்டரால் அல்லது வருவாய்த் துறைக் கழகத்தால் தள்ளுபடி செய்யப்பட்டால் 1 ஆவது நிபந்தனையின் கீழ் அல்லது ஏலத்தில் எடுத்தவர் செய்த மோசம் அல்லது தவறான முறையீட்டின் காரணமாக வைப்புத் தொகை இழந்ததாக அறிவிக்கப்பட்டால் அன்றி விற்பனைத் தொகை அல்லது ஏலத்தில் எடுத்தவர். அதில் ஒரு பகுதி மாத்திரம் செலுத்தியிருந்தால், அத்தகையத் தொகை நில அளவை எல்லை வரையறுத்தல் சம்பந்தமாக அவர் செலுத்தி யிருக்கும் தொகையுடன் ஏலத்தில் எடுத்திருப்பவருக்குத் திரும்பக் கொடுக்கப் படவேண்டும்.

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

சுவாதீனம் பெற்றுக் கொண்ட பின் நிலத்தை உடைமையில் வைத்துக் கொண்டிருப்பதற்குரிய நிபந்தனைகள்.

(1) ஆண்டு மனைத் தீர்வையாகிய ரூபாயாவது அல்லது சென்னை நகரத்தில் மனைத் தீர்வையை ஒழுங்கு செய்வதற்காக அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் விதிகளின் கீழ் விதிக்கப்படும் மனைத் தீர்வையாவது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 15 ஆம் தேதியில் அல்லது அதற்கு முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

(2) அவ்வாறு செலுத்தத் தவறினால் அந்த மனைத் தீர்வை அவ்வப்போது நடைமுறையிலுள்ள நில வருவாய் பாக்கியை வசூலிப்பதற்குரிய சட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும்.

(3) அந்த நிலம் ஆக மட்டும் உபயோகிக்க வேண்டுமே தவிர வேறு எக்காரியத்திற்கும் உபயோகிக்கக்கூடாது. கலெக்டர் குறிக்கும் தேதியிலிருந்து ஓராண்டுக்குள் உறுதியுள்ள நிலையான வீடோ அல்லது மற்றக் கட்டுமானமோ அந்த நிலத்தில் கட்டப்பட வேண்டும் அல்லது அதே காலத்திற்குள் உறுதியுள்ள நிலையாக இருக்கும் சுவர் அல்லது வேலியால் நிலம் அடைப்பு செய்யப்பட வேண்டும்.

1—12—1940 தேதி, 3149, அ.ஆ.வரு.

24—4—1941 தேதி, 1100, வ.து.வா.செ.பலவ.

(4) மேலே சொன்ன நிபந்தனைகளில் ஏதாவதொன்றை மீறிய காரணத்திற்காக மனை விற்பனை ரத்து செய்யப்பட்டால், விற்பனைத் தொகை அல்லது நில அளவு செய்தல் எல்லை வரையறுத்தல் இவற்றிற்கான செலவு முதலியவற்றை அரசினர் திருப்பிக் கொடுப்பதற்குட்பட்டவரல்லர்.

(5) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொதுமக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகளையும் முன் சொன்ன நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற் சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படைப்பினால் அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப்படமாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க நடை முறை நூல் ஆவது அத்தியாயம், ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தில் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு தடையிலா உரிமை, தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது அவற்றுள் செய்யத்தக்க இவை போன்றவற்றைக் கொண்டு தங்கக் கனிப் பொருள் அல்லது மற்ற கனிப் பொருள்கள் அல்லது நிலக்கரி, கல் அல்லது தங்கமும் மற்ற கனிப் பொருள்களையும் கொண்டுள்ள அல்லது கொண்டுள்ளவை என்று கருதத்தக்க பாறைகளின் அரசினருக்குரிய உரிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒப்படை பெற்றவர் அரசினரிடமிருந்து அனுமதி அல்லது உரிய முறையில் உரிமம் பெற்ற பின்னர் ஆண்டி

[நி. ஆ. 21, பத்தி 11 (i)

மேற்சொன்ன தங்கம் அல்லது மற்றக் கனிப் பொருள்களை எடுத்து வேலை செய்வதற்கு உரிமையில்லை.

4–8–1932 தேதி, 1636, அ.ஆ.வரு.பலவ.
22–8–1932 தேதி, 51, வ.து.வா.செ.அச்சு.

(6) இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை நூல் VIII ஆவது அத்தியாயம் IX ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தின் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு தடையில்லா உரிமை, தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது அவற்றுள் செய்யத்தக்க போக்குவரத்து இவை போன்றவற்றைக் கொண்டு கனிப்பொருள்கள் சரிவர எடுக்கப்படுவதற்கான அதிகாரங்களை அரசினர் தங்களிடமும் தங்களால் அதிகாரம் பெற்றவர்களிடமும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

(7) அரசினரின் ஒப்பளிப்பின்றி இந்தியக் குடியில்லாத வேறொருவருக்கு நிலத்தைப் பாத்தீனம் செய்வது ஒப்படையைச் செல்லாதாக்கிவிடும்.

(8) ஒப்படை நிபந்தனைகளில் யாதொரு நிபந்தனையும் மீறப்பட்டால் அரசினர் நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டு அதில் திரும்ப பிரவேசித்துக் கொள்ளலாம்.

19–12–1940 தேதி, 3149, அ.ஆ.வரு.
24–4–1941 தேதி, 1100, வ.து.வா.செ.பலவ.

(9) மேல்முறையீட்டில் அல்லது ரிவிஷனில் ஒப்படை ஆணை ரத்து செய்யப்பட்டால் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து நிலத்தை அரசினர் திரும்ப எடுத்துக்கொள்வாரெனில் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் கட்டியிருக்கக்கூடிய கட்டடங்கள் அல்லது செய்திருக்கக் கூடிய மற்ற மேம்பாடுகளுக்கு ஈடுபெற உரிமையில்லை.

10–4–1937 தேதி, 772, அ.ஆ.வரு.பல.
29–4–1937 தேதி, 46, வ.து.வா.செ.அச்சு.

(10) ஒப்படை நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று மீறப்பட்டதாக அரசினர் கருதுவாரெனில் நிலம் திரும்ப எடுத்துக்கொள்ளப்படும். ஒப்படை நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று மீறப்பட்டதா இல்லையா என்பதைப் பற்றி ஏதேனும் கேள்வியெழுமேயானால் அதைப்பற்றி அரசினரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வகையில் அரசினரின் தீர்ப்பே முடிவானதாகும்.

17–2–1950 தேதி, 423, எண். அ.ஆ.வரு.பல.
15–7–1950 தேதி, 34853 எண். 50-1, குறிப்பு. வரு.
9–9–1950 தேதி, 38 எண். வ.து.வா.செ.அச்சு.

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

இ.படிவம்.

சென்னை மாநகரில் அரசினருக்குச் சொந்தமான நிலங்களின் ஒப்படைப் பதிவேடு.

ஒப்படை பெற்றிருப்பவர்.			
வரிசை எண்.	பெயர் (இந்தியக் குடியாக இல்லாவிட்டால் தேசிய இனம்).	தொழில் : இருப்பிடம், ஒப்படைத் தேதி.	
(1)	(2)	(3)	
ஒப்படை நிலம்.			
கிராமம்.	நில அளவை எண்.	பரப்பு, காணி மனை, சதுர அடி.	செலுத்த வேண்டிய மனைத் தீர்வை.
(4)	(5)	(6)	(7)
			ரூ.

படை ஆணையின் எண்ணுடன் தேதியும்.	தனி நிபந்தனை ஏதேனும் லிகிக்கப் பெற்றிருந்தால் அது.	கட்டடம் அல்லது வேலி அடைப்பு முடிந்த அல்லது நிபந்தனை மீறியதற்காக அரசினர் திரும்ப எடுத்துக்கொண்ட தேதி (திரும்ப எடுத்துக்கொண்டதற்கு காரணங் களுடன்) அல்லது மேல் முறையீடு அல்லது ரிவிஷனில் வருவாய்த் துறைக் கழக ஒப்படையைத் தள்ளுபடி செய்த ஆணையின் எண்ணுடன் தேதியும்.
(8)	(9)	(10)

திருத்தியமைத்த மனைத் தீர்வைத் தொகை.	குறிப்புரை.
(11)	(12)

10–4–1947 தேதி, 772, அ.ஆ.வரு.பல.
29–4–1937 தேதி, 46, வ.து.வா.செ. அச்சு.

[நி. ஆ. 21, பக்கி 11 (i)

சென்னை மாநகரில் செய்யப்படும் நில ஒப்படை ஆணைப் பொதுப்படிவம்.

ஈ.—படிவம்.

21 ஆவது நிலை ஆணை ஏற்பாடுகளின் கீழ் இதன் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் அவ்வப்போது மாவட்ட ஆட்சியரால் விதிக்கப்படக்கூடிய பிற ஏதாவது தன் நிபந்தனைகளுக்கும் உட்படுத்தி, சென்னை மாவட்டம்
ஊரில் வடக்கில்
கிழக்கில் மேற்கில்
தெற்கில் ஆகிய இந்தான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ளதும் பற்றுரிமை இலவசமாக அல்லது ஏல விற்பனையில்
ரூபாய்க்கு (இன்னருக்கு) அளிக்கப்பட்டதும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள அமைப்புப் படத்தில் விவரிக்கப்பட்டுள்ளதும் ஆகிய
காணி மனை சதுரஅடி நிலத்தை (இன்னருக்கு) இதனால்
சென்னை மாவட்ட ஆட்சியராகிய நான் ஒப்புவை செய்கிறேன்.

(1) ஆண்டு மனைத்தீர்வையாகிய அல்லது நகரக நிலவரியாகிய
ரூபாய் அல்லது மனைத்தீர்வை அல்லது நகரக நிலவரி ஒழுங்கு செய்வதற்காக அவ்வப்போது நடைமுறையிலுள்ள விதிகளில் கீழ்த் தீர்மானிக்கப்படக்கூடிய எத்தகைய வேறு ஏதாவது வரி, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதம் 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னதாக அரசினருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

(2) அத்தகைய மனைத்தீர்வை அல்லது நகரக நிலவரி அல்லது யாதொரு வேறு வரி செலுத்தத் தவறினால் அத்தொகை நிலவருவாய் நிலுவைகளைத் தண்டல் செய்வதற்காக நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ்த் தண்டல் செய்யப்பட வேண்டும்.

(3) அந்த நிலம் வீட்டு மனையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி வேறெந்தக் காரியத்திற்கும் பயன்படுத்தக்கூடாது. சென்னை மாநகராட்சி அனுமதித்துள்ள அளவுகளையும் விவரத்தையும் அனுசரித்து போதுமான உறுதியானதும் நிலையாகவுள்ளதுமான வீடு அல்லது வேறு கட்டுமானம் ஒன்றை அல்லது போதுமான உறுதி உடையதும் நிலையானதுமாகிய சுவர் அல்லது வேலியை ஒப்படை நாளிலிருந்து பன்னிரண்டு மாத கால அளவிற்குள் அமைத்து முடிக்க வேண்டும்.

(4) நிலத்திற்கு அடைப்பு அமைக்காவிடில் அல்லது சென்னை மாநகராட்சி அனுமதித்த அளவுகளும் விவரமும் உள்ள வீடு அல்லது கட்டுமானத்தைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் போதுமான அளவில் கட்டி முடிக்காவிட்டால் அல்லது அவ்வாறு வீடு அல்லது அடைப்பு கட்டப்பட்டு பின்னர் கைவிடப்பட்டால் அதாவது அனுபோகம் செய்யப்படாமலும் பழுதடையுமாறும் கைவிடப்பட்டால், அரசினர் அதில் உடனடியாகத் திரும்பப்

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

புகுந்து தக்கவாறுக நிலத்தை அல்லது நிலத்தையும் சட்டத்தையும் கைக் கொள்ள உரிமை பெற்றுள்ளார்கள்.

(5) மேலே (4) ஆவது கூறில் ஒதுக்கியுள்ள உரிமையைச் செயலாற்ற அரசினர் நிலத்தில் திரும்பப்புகும்போது விற்பனை விலை அல்லது நில அளவை செய்தல், எல்லை வரையறுத்தல் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட செலவுகளுக்கு அல்லது அப்போதுள்ள கட்டடங்கள் அல்லது பிற மேம்பாடுகளுக்கு இழப்பீடு செய்வதற்கு அரசினர் பொறுப்புடையவர் ஆகமாட்டார்கள்.

(6) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டி யுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் அரசினருக்கும் பொது மக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இக்கொடையினால் அவை எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டா. மற்றும் முன்சொன்ன நிலத்தின் அல்லது அதன் யாதொரு பகுதியின் மீதும் அல்லது அதன் உள் அல்லது கீழே இருப்பதாகத் தெரியவரும் அல்லது இதன் பின்னர் யாதொரு சமயத்தில் கண்டு பிடிக்கப்படக் கூடிய தங்கங்கள் யாவையும் பிற கனிப்பொருள்கள் அல்லது நிலக்கரி, தங்கம் அடங்கிய அல்லது அடங்கியதாகக் கருதப்பட்ட கல் அல்லது பாறை மற்றும் கனிப்பொருள்கள் ஆகியவற்றின் உரிமைகள் அரசினருக்கு ஒதுக்கி வைக்கப்படுகின்றன. அரசினரிடமிருந்து உரிய முறையில் ஒப்புவிக்கப்பட்ட உரிமை பெறவில்லை. இவ்வாறே சுரங்க நடைமுறைநூல் ஆவது இயல், பொருள்களிலும், நிலக்கரியிலும் ஒப்படை பெறுபவரோ அவருடைய வழி முறையரோ அவரிடமிருந்து உரிமை பெறுபவரோ ஈடுபட்டு வேலை செய்ய உரிமை பெறவில்லை. இவ்வாறே சுரங்க நடைமுறைநூல் VIII ஆவது இயல், IX ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தின் இரண்டாம் பகுதியில் விளக்கப் பட்டுள்ளவாறு தடையிலா உரிமை, தடையின்றி எக்காலத்தும் உள்ளே செல்வது, வெளியேற்றுவது, அவற்றுள் செய்யத் தக்க இவை போன்ற மற்ற வற்றைக் கொண்டு இக்கனிப்பொருள்களை எடுத்து வேலை செய்வதற்குத் தேவைப்பட்ட அதிகாரங்களை அரசினர் இத்தகைய உரிமைகளைச் செலுத்துவ தால் நிலத்தின் மேல் பாகத்திற்கு உரிமையுடையவருக்கு ஏற்படக்கூடிய எல்லாச் சேதத்திற்கும் இழப்பீடு செய்வதற்கும் அதனைக் கொடுப்பதற்கு உட்பட்டுத் தங்களிடமோ தங்களால் அதிகாரம் அளிக்கப்பட்டவர்களிடமோ ஒதுக்கி வைத்துக் கொண்டுள்ளார்கள்.

(7) இதன் பின்னரும் 11 ஆவது கூறு வகுக்கும் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அரசினர் ஒப்பளிப்பின்றி இந்திய குடியில்லாத வேறொருவருக்கு நிலத்தை மாற்றல் செய்வது ஒப்படையைச் செல்லாததாக்கிவிடும்.

(8) இந்த ஒப்படை முற்றிலும் நேர்மையற்றது என்றுவது அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டது என்றுவது அல்லது தவறான முறையீடு அல்லது மோசடி காரணமாகவாவது அல்லது மாவட்ட ஆட்சியர் அதிகாரத்திற்கு மீறியது அல்லது நடைமுறையில் ஒழுங்கீனம் இருந்தது என்றுவது ஏற்பட்டால் ஒப்படை தள்ளுபடி செய்யப்படுவதற்குட்பட்ட தாகும்.

(9) ஒப்படை நிபந்தனைகளில் யாதொரு நிபந்தனை மீறப்பட்டால் அரசினர் நிலத்தை திரும்ப எடுத்துக் கொண்டு அதில் புகலாம்.

(10) மேல் முறையீட்டில் அல்லது மறு ஆய்வில் ஒப்படை தள்ளுபடி செய்யப்பட்டால் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து நிலத்தை அரசினர் திரும்ப எடுத்துக் கொள்வார் எனில், ஒப்படை பெற்றவர் நிலத்தில் கட்டியிருக்கக்கூடிய கட்டடங்கள் அல்லது செய்திருக்கக்கூடிய மற்ற மேம் பாடுகளுக்கு இழப்பீடு பெற உரிமை இல்லை.

(11) (i) ஒப்படை நாளிலிருந்து பத்து ஆண்டு கால அளவு விற்பனை, கொடை அடைமானம் அல்லது யாதொரு வகைக் குத்தகை காரணமாக நிலம் அல்லது வீட்டு மனை மாவட்ட ஆட்சியர் முன் அனுமதியின்றி ஒப்படை பெற்றிருப்பவரின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் உட்பட எவரொருவருக்கும் மாற்றல் செய்யக் கூடாது.

(ii) விற்பனை கொடை, அடைமானம் அல்லது யாதொரு வகைக் குத்தகைக் காரணமாக ஒப்படை நாளிலிருந்து பத்து ஆண்டுக்கால அளவுக்குள் எவரொருவருக்கும் அல்லது அந்தக் கால அளவிற்குப் பின்னர் அட்டவணையில் கண்ட இனங்களுக்குச் சேர்ந்தவர் அல்லாதவராகிய எவரொருவருக்கும் நிலம் மாற்றல் செய்யப்பட்டால் அல்லது விற்பனை, சட்டமுறை அல்லது மற்ற வகையில் முதலில் ஒப்படை பெற்றவர் அல்லது அவர் சட்டவழிமுறையர் அல்லது பத்தாண்டுகளுக்குப் பின்னர் அட்டவணையில் கண்ட இனங்களுக்குச் சேர்ந்த மன்னவர்களின் உரிமையில் அது போன்ற கால அளவுக்கு இல்லாது விடுமாயின், அம்மானியம் அரசினரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்கு உட்படும். மற்றும் அதில் புகுந்து, அதில் செய்யப்பட்ட யாதொரு மேம்பாட்டுக்கும் அல்லது கட்டப்பட்ட யாதொரு கட்டிடத்திற்கும் ஈடு கொடுக்காமலே வீட்டு மனை நிலத்தைக் கைக்கொள்ள அரசினருக்கு உரிமை உண்டு. இருப்பினும் இந்தத் தடை (வீட்டு மனையில் கட்டப்பட்ட யாதொரு கட்டடத்துடன்) வீட்டுமனை மேம்பாட்டுச் சட்டம், வேளாண்மை செய்வோர்கள் கடன்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் அல்லது கூட்டுறவுச் சங்கத்திற்கு அடைமானம் வைக்கப்படுவதற்கு பொருந்தாது, மற்றும் இது இத்தகைய நிலங்கள் பின்னர் நில எடுப்புச் சட்டத்தின் கீழ்ப் பெறப்படும் போது இழப்பீடு கொடுப்பதற்குரிய உரிமையைத் தடுப்பதற்கும் பொருந்தாது. இந்த மானியத்தை திரும்ப எடுத்துக் கொண்டு இதில் புகுவதற்காக ஆணை பிறப்பிப்பதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சியரிடம் இருக்கும்.

(12) ஒப்படை நாளிலிருந்து மூன்றாண்டு கால அளவின் போது ஒப்படை பெற்றவர் நன்னடத்தை உள்ளவராக இருக்கவில்லை என்றால், தமது வீடு கட்டப்படுதலைப் பற்றியும் அதன் இருப்பிடத்தைப் பற்றியும் வகுக்கப்பட்ட குடியமைப்பு ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி அவர் நடக்கவில்லை என்றால் அல்லது வீட்டு மனையைத் துப்புரவு முறையில் வைக்கவில்லை என்றால் மானியம் மாவட்ட ஆட்சியரால் தள்ளுபடி செய்யப்படுவதற்கு உட்படும். மற்றும் ஒப்படை பெற்றவர் நல்ல நடத்தையுடையவராக உள்ளார் எனவும், வீடு கட்டுவது பற்றியும் வீட்டின் இருப்பிடம் பற்றியும் குடியிருப்புக்காக வகுக்கப்

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

பட்ட ஒழுங்கு முறைகளுக்கு இணங்கி நடந்து கொண்டுள்ளார் எனவும் மனை யிடத்தைத் துப்புரவு, முறையில் வைத்துள்ளார் எனவும் மாவட்ட ஆட்சியர் தாம் மன நிறைவு கொண்டாலன்றி இக்கால அளவின் இறுதிக்கு முன்னர் மானியம் நிலையானதாகச் செய்யப்படக்கூடாது.

(13) மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன் அனுமதி பெற்றால் அன்றி மேலே உள்ள 3 ஆவது நிபந்தனையின் குறிக்கப்படுவதற்குக் கூடுதலாக நிலத் தில் யாதொரு வகை கட்டுமானமும் கட்டப்படவோ நிறுவப்படவோ கூடாது.

(14) மேலே 3 ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்ட வீட்டின் யாதொரு பகுதியையும் ஒப்படை பெற்றவர் எந்தச் சூழ்நிலைகளிலும் உள் குத்தகைக்கு விடக்கூடாது.

(15) மேலே உள்ள 3-ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்ட வீடு ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்களால் அனுபோகம் செய்யப்படக்கூடாது.

(16) நிலத்தின் பேரிலோ அதன் யாதொரு பகுதியிலோ ஒப்படை பெற் றவர் யாதொரு வாணிபமோ தொழிலோ நடத்தாமல் வீட்டு மனையாக பயன் படுத்த வேண்டும். அடுத்துள்ள சொத்திற்குச் சேதம் விளைவிக்கவோ தீமை விளையுமாறு பாதிக்கவோ கூடுமென அரசினர் கருதக் கூடியவாறு வீட்டு மனை யில் அல்லது அதன் யாதொரு பகுதியை ஒப்படை பெற்றவர் பயன்படுத்தவோ அல்லது பற்றுரிமை கொள்ளவோ அல்லது அவ்வாறு பயன்படுத்தப்பட அல்லது பற்றுரிமை கொள்ள அனுமதிக்கவோ கூடாது.

(17) மேலே குறிக்கப்பட்ட நிபந்தனைகளில் யாதேனும் மீறப்பட்டால் அல்லது வீட்டை பற்றுரிமையில் கொள்ளாமல் மானியம் பெற்றிருப்பவர் ஓராண்டு காலம் வீட்டு வைப்பார் எனில் மாவட்ட ஆட்சியரால் மானியம் திரும்பக் கைக்கொள்ளப்படுவதற்கு உள்பட்டதாகும். மேலும் தமிழ் நாடு ஆக்கிரமிப்புச் சட்டத்தின் 2 ஆவது பிரிவில் விளக்கப்பட்டுள்ளவாறு அரசினரிடம் மீண்டும் சென்றடைந்து அரசின் சொத்தாகிவிடும். இவ்வாறு விதிகளைப் பின்பற்றத் தவறியவர் அதிகார ஒப்பளிப்பின்றி அரசினரின் நிலத்தை பற்றுரிமையில் கொண்டுள்ளவர் எனக் கருதி, நிலத்திலிருந்து அவரை அப்புறப்படுத்த முன்சொன்ன நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படும். அப்போது விற்பனைத் தொகையையும் நில அளவைச் செலவும் வல்லே வரையறுத்தல் செய்யவும் இவையேனும் இருப்பின் அவற்றையும் அரசினர் திருப்பிக் கொடுக்க பொறுப்புடையவராகமாட்டார். மற்றும் நிலத் தின் பேரில் அப்போதுள்ள யாதொரு சட்டத்திற்கோ அல்லது வேறு மேம்பாடு களுக்கோ அரசு யாதொரு இழப்பீடும் அளிக்க பொறுப்புடையதல்ல.

இதற்குச் சான்றாகத் தமிழ் நாடு ஆளுநருக்காகச் செயலாற்றும் வகை யிலும் அவரது சார்பிலும் அவருடைய ஆணைக்கும் கட்டளைக்கும் இணங்கவும் 197 ஆம் ஆண்டு மாதம் ஆம் நாளில் இதில் கையொப்பமிடுகிறேன்.

சென்னை மாவட்ட ஆட்சியர்.

[நி. ஆ. 21, பத்தி 11 (i)

உ. படிவம்.

சென்னை மாநகரில் அட்டவணையில் கண்ட வகுப்பினருக்குச் செய்யும் நில ஒப்படை ஆணை.

சென்னை மாவட்டத்தில் கிராமத்தில் இதனுடன் சேர்க்கப் பட்டுள்ள தரைப்படத்தில் விளக்கப்பட்டிருக்கும் ..... க்குத் வடக்கில் ..... க்கு கிழக்கில் ..... க்குத் தெற்கில் ..... க்கு மேற்கில் இந்த நான்கெல்லைக்குட்பட்டதும், 19 மாதம் தேதியில் ரூபாய்க்கு இருப்பு உரிமை விற்கப்பட்டதும், இருப்பு உரிமை இலவசமாகக் கொடுக்கப்பட்டதும், சதுர அடி பரப்புள்ளதுமான நிலத்தைக் கீழ் கையெழுத்திட்டிருக்கும் நான் ..... க்கு ..... 21 ஆவது நில ஆணை விதிகளின்கீழ், பின்வரும் நிபந்தனைகளுக்குட்படுத்தி இதனால் ஒப்படை செய்கிறேன்—

(1) நிலம் ..... ஆக உபயோகிக்க வேண்டுமே தவிர வேறு எந்தக் காரியத்திற்கும் உபயோகிக்கக்கூடாது.

(2) (அ) இந்த ஒப்படை நேர்மையற்றது என்றுவது, அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டதன்றுவது, அல்லது தவறுக முறையிடப்பட்டது அல்லது மோசம் செய்யப்பட்ட காரணமாக கொடுக்கப்பட்டது என்றுவது அல்லது ஒப்படை செய்யும் அதிகாரி தமக்கு வருவாய்த் துறை வாரியத்தால் கொடுக்கப்பட்ட அதிகார வரம்புக்கு மீறி ஒப்படை செய்திருக்கிறரென்றுவது அல்லது நடைமுறையில் ஒழுங்கீனமாயிருந்தென்றுவது தெரிய வந்தால் அல்லது (ஆ) முறையாக நியமிக்கப்பட்ட மேல்முறையீட்டு அதிகாரியால் மேல்முறையீட்டில் ரத்து செய்யப்படுவதற்குட்படும். இவ்வாறு ரத்து செய்யப்படுவதற்கு யாதொரு ஈடும் கொடுக்கப்படமாட்டாது.

(3) மேல்முறையீட்டில் அல்லது ரிவிஷனில் ஒப்படை ஆணை ரத்து செய்யப்பட்டால் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து நிலத்தை அரசினர் திரும்ப எடுத்துக் கொள்வாரெனில் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் கட்டியிருக்கக்கூடிய கட்டடங்கள் அல்லது செய்திருக்கக்கூடிய மற்ற மேம்பாடுகள் எவற்றிற்கும் ஈடு பெற உரிமையில்லை.

(4) நிலத்தின் உரிமை பெறுவதற்கு அரசினர் செலவிட்டுள்ள வீகாச் சாரத் தொகைக்காக ரூபாய் முதல் வைப்புத் தொகையாகவும் பின்பு ஆண்டு ஒன்றுக்கு ரூபாயாக ஆண்டுத் தொகைகளாகவும் அரசினருக்கு ஒபபடை பெற்றிருப்பவர் செலுத்த வேண்டும்.

(5) நில உரிமை பெறல் சட்டத்தின்கீழ் கேட்டுக்கொண்டதில் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு அல்லது அதன் மீது எழும் மேல்முறையீட்டில் நிலத்தின் உரிமையைப் பெறுவதற்காகக் கொடுக்க வேண்டிய ஈட்டுத் தொகை

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

அதிகமாக்கப்பட்டால் நிலத்திற்குரிய கூடுதலான ஈட்டுத் தொகைக்காகவும், நீதி மன்ற நடவடிக்கைகள் நடத்த அரசினர் செய்திருக்கக்கூடிய செலவுகளுக் காகவும், நில ஒப்படை பெற்றிருப்பவர் கொடுக்க வேண்டிய தவணைகளின் எண்ணிக்கையை அல்லது தொகையை அரசினர் தம் யுக்தானுசாரத்தில் அதிகப்படுத்தலாம். அவ்வாறு அதிகப்படுத்திய தவணைத் தொகைகளை ஒப்படை பெற்றிருப்பவர் செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்.

(6) தவணைத் தொகையையும் விற்பனைத் தொகையில் செலுத்தப்படாமல் நிற்கும் தொகைக்கு ஒப்படை பெற்றிருப்பவருக்காக அரசினர் முதல் முதலில் நிலத்திற்காகத் தொகை கொடுத்த தேதியில் 1889 ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ்க் கொடுக்கப்பட்ட கடன்களுக்கு என்ன வட்டி வீதம் நடைமுறையில் இருந்ததோ அந்த வீதத்தில் வட்டியையும் ஒவ்வொரு தவணைத் தொகையையும் செலுத்த வேண்டுமெனக் குறிக்கப்பட்ட தேதியில் செலுத்த வேண்டும். முதலுக்கான ஆண்டுத் தவணை ஆகிய இவற்றின் வட்டி முழுமையு மாவது, அல்லது அதன் யாதொரு பாகத்தையாவது குறித்த தேதியில் அல்லது அதற்கு முன்னதாகச் செலுத்தாவிட்டால் செலுத்தத்தவறிய தேதியினி நந்து செலுத்தும் தேதி வரையிலுள்ள காலத்திற்கு முன்னமே செலுத்தியிருக்க வேண்டிய தொகைக்கு மேலே குறிக்கப்பட்ட வீதத்தில் வட்டியைச் செலுத்த வேண்டும்.

(7) பாக்கி நிற்கும் விற்பனைத் தொகையை அல்லது அதன் பகுதியை ஒப்படை பெற்றிருப்பவர் தமது விருப்பம் போல எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம். ஆனால் அவர் அதே சமயத்தில் அதற்கான வட்டி அப்பொழுது அரசினருக்குச் செலுத்தப்பட வேண்டிய மீனத் தீர்வை ஆகியவற்றை அவர் செலுத்த வேண்டும். முன் தொகை எவையேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை முதலில் ஏற்படக்கூடிய வட்டிக்காகவும், பின்னர் முதலுக்காகவும் வரவு வைக்கப்படும்.

(8) ஆண்டுக்குரிய மீனத் தீர்வையாகிய ரூபாயாவது அல்லது சென்னை மாநகராட்சி மீனத் தீர்வை விதிப்புக்காக அவ்வப்போதுள்ள நடை முறையிலுள்ள விதிகளை அனுசரித்துத் தீர்மானிக்கப்படக்கூடிய தொகையை யாவது ஒவ்வொரு ஆண்டில் ஜூலை மாதம் 15 ஆம் தேதியிலாவது அதற்கு முன்னதாகவே அரசினருக்குச் செலுத்திவிட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் அவ்வப்போது நடைமுறையிலுள்ள வருவாய் பாக்கி வசூலிப்பதற்குரிய சட்டத்தின்கீழ்த் தொகை வசூலிக்கப்படும்.

(9) (இப்போதுள்ள நில மட்டத்தை விட ..... அடி ..... அங்குலத்திற்கு மட்டம் உயர்த்தப்படும்.) (அவ்வாறு உயர்த்தப்பட்ட) நிலத் தின் மீது 19 ..... மாதம் ..... ஆம் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் சென்னை மாநகராட்சி மன்றம் அனுமதித்த விவரமும், அளவும் கொண்ட உறுதியாய் நிலைத்திருக்கக்கூடிய தன்மையுடைய வீட்டைக் கட்டி முடிக்க வேண்டும். குறிப்பான சந்தர்ப்பங்களில் கலெக்டர் இந்தக் கால அளவை நீடிக்கலாம்.

(10) கலெக்டரின் முன் அனுமதியின்றி, மேலே (9) ஆவது நிபந்தனையில் உள்ளவற்றிற்கு அதிகமாக நிலத்தில் எத்தகைய கட்டுமானம் கட்டவோ அல்லது எழுப்பவோ கூடாது.

(11) மேல் (9) ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு அல்லது நிலத்தின் பகுதியை ஒப்படை பெற்றவர் எந்தச் சூழ்நிலைகளிலும் உள் வாடகைக்கு விடக்கூடாது.

(12) மேல் (9) ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டில் ஒரு குடும்பத்திற்கு அதிகமான குடி இருக்கக் கூடாது.

(13) அந்த நிலத்தையோ, அதன் பகுதியையோ ஒப்படை பெற்றவர் வீட்டு மனையாகவே உபயோகிக்க வேண்டுமே தவிர அதில் யாதொரு வியாபாரமோ; தொழிலோ நடத்தக் கூடாது. அருகிலுள்ள சொத்துக்குச் சேதம் அல்லது தீங்கு அல்லது தொல்லை விளைவிக்கும் என்று அரசாங்கம் கருதத்தக்க வகையில் மேலே (9) ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ள வீட்டை அல்லது அதன் பகுதியை உபயோகிக்கவோ அனுபோகம் செய்யவோ கூடாது. அவ்வாறு செய்ய அனுமதிக்கவும் கூடாது.

(14) நிலம் அல்லது வீடு ஒப்படைத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் நிலம் விற்பனை, கொடை அடைமானம் அல்லது யாதொரு விதமான குத்தகையினால் பராதீனம் செய்யப்பட்டால் அல்லது இப்பத்து ஆண்டுக் காலத்திற்குப்புறம் அட்டவணையில் கண்ட வகுப்பினர் அல்லாதவர் எவர் ஒருவருக்காவது பராதீனம் செய்யப்பட்டால் அல்லது சட்ட நடைமுறை நிறைவேற்றக் கட்டளையால் அல்லது வேறு வகையில் முதன் முதலில் ஒப்படை பெற்றவர் அல்லது அவரது, சட்ட முறை உரிமை வாரிசு அல்லது (பத்தாண்டுகளுக்குப் பின்னர்) அட்டவணையில் கண்ட வகுப்பினர்களின் உடைமையில் நிலம் இல்லாது விடுபடவும் கூடாது. இருப்பினும் இந்தத் தடை நில மேம்பாடு சட்டம், விவசாயிகள் கடன் சட்டம், ஆகிய இவற்றின்கீழ் அரசினருக்கும், அட்டவணையில் கண்ட வகுப்பினர்களே அடங்கியுள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கும் நிலத்திற்கும் (கட்டடம் உட்பட) நிலத்தை அடைமானம் செய்வதற்குப் பொருந்தாது. மேலும் இத்தடை, பின்னர் நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் இத்தகைய நிலங்களின் உரிமை பின்னர் பெறப்படுவதில் ஈடு கொடுக்கப்படுவதற்கு இத்தடை இடையூறாகாது.

(15) அரசினரின் ஒப்பளிப்பின்றி இந்தியக் குடியல்லாத வேறொருவருக்கு அதைப் பராதீனம் செய்வது ஒப்படையைச் செல்லாததாக்கிவிடும்.

(16) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொதுமக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகளையும் முன் சொன்ன நிலத்தின்கீழ் இருக்கும் சுரங்கங்கள்,

கற சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படைப்பினால் அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப்படமாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை நூல் VIII ஆவது அத்தியாயம், IX ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தில் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு தடையிலா உரிமை தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது. வெளியேறுவது அவற்றுள் செய்யத்தக்க இவை போன்றவற்றைக் கொண்டு தங்கக் கனிப் பொருள் அல்லது மற்றக் கனிப் பொருள்கள் அல்லது நிலக்கரி, கல் அல்லது தங்கமும் மற்ற கனிப் பொருள்களையும் கொண்டுள்ள அல்லது கொண்டுள்ளவை என்று கருதத்தக்க பாறைகளின் அரசினருக்குரிய உரிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன;

ஒப்படை பெற்றவர் அரசினரிடமிருந்து அனுமதி அல்லது உரிய முறையில் உரிமம் பெற்ற பின்னர் அன்றி மேற்சொன்ன தங்கம் அல்லது மற்ற கனிப் பொருள்களை எடுத்து வேலை செய்வதற்கு உரிமையில்லை.

(17) மேலே உள்ள நிபந்தனைகளில் யாதேனும் மீறப்பட்டால் அல்லது ஒப்படை பெற்றிருப்பவர் ஓராண்டுக்கு வீட்டில் குடியில்லாமல் வீட்டை விட்டு விட்டால் ஒப்படை நிலம் கலெக்டரால் திரும்ப கைக்கொள்ளப்பட்டு நிலம் அரசினரின் உரிமைக்குள்ளாகி நில ஆக்கிரமிப்புச் சட்டம் 2 ஆவது பிரிவில் விளக்கப்பட்டுள்ளவாறு நிலம் அரசாங்கச் சொத்தாகிவிடும். அதன் பின்னர் நிபந்தனையை நிறைவேற்றத் தவறியவர் அரசாங்க நிலத்தை அனுமதியின்றி அனுபோகத்தில் வைத்திருப்பதாகக் கருதப்பட்டு, அவர் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் 6 ஆவது பிரிவில் உள்ள வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்நிலையில் விற்பனைத் தொகையையும், நில அளவு செய்தல், எல்லை வரையறுத்தல் செலவு ஏதாவது இருப்பின் அதை யும் திரும்பிக் கொடுப்பதற்கும் நிலத்திலுள்ள கட்டடங்கள் எவையேனும் இருப்பின் அவற்றிற்கும், நிலத்தில் செய்திருக்கக்கூடிய மேம்பாடுகள் எவற் றிற்கும் யாதொரு ஈட்டுத் தொகையும் கொடுப்பதற்கும் அரசினர் கட்டுப்பட் டவரல்லர்.

குறிப்பு.—(i) நிலக் கிரயமின்றி அல்லது நிலக் கிரயம் மொத்தமாக முழு வதும் செலுத்தப்பட்ட ஒப்படையில் (4) முதல் (7) வரையுள்ள நிபந்தனைகள் பொருந்தா.

(i) மேலே (9) ஆவது நிபந்தனையில் அடைப்புகளுக்குள் இருக்கும் பகுதி பள்ளத்தாக்கான நிலத்திற்கு மட்டுமே பொருந்தும்.

16–5–1936 தேதி, 1094, அ.ஆ.வரு.பல.
5–6–1936 தேதி, 68, வ.து.வா.செ.அச்சு.
19–12–1940 தேதி, 3149, அ.ஆ.வரு.
24–4–1941 தேதி, 1100, வ.து.வா.செ.பலவ.
25–7–1939 தேதி, 1877, அ.ஆ.வரு.
11–11–1940 தேதி, 118, வ.து.வா.செ. அச்சு.
12–12–1940 தேதி, 3092, அ.ஆ.வரு.பல.
20–2–1941 தேதி, 16, வ.து.வா.செ.அச்சு.

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவரது ஆணையையும் கட்டளையையும் அனுசரித்து ஆண்டு மாதம் தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

24–6–1941 தேதி, 1448, அ.ஆ.வரு.பல.
14–11–1941 தேதி, 124, வ.து.வா.செ.அச்சு.

II

சென்னை நகரில் தனிப்பட்டவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட அரசாங்க நிலங்களின் மனைத் தீர்வையைத் திருத்தி அமைப்பதற்கு வகுக்கப் பட்டுள்ள விதிகள்.

(1) தனிப்பட்டவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட அரசினர் நிலங் களுக்கு மனைத் தீர்வையைத் திருத்தி அமைப்பதில் நிலத்தை வாங்கினவர்கள் கட்டிய கட்டடங்கள் அல்லது கட்டுமானங்கள் அல்லது செய்திருக்கக்கூடிய மேம்பாடுகள் இவற்றின் மதிப்பீடு நீங்கலாக அந்த மனைக்குக் கிடைக்கத்தக்க வாடகை மாத்திரம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மனைத் தீர்வையைத் திருத்தி அமைக்கும்போது, ஒப்படையின்போது இருந்த நிலைமையில் நிலம் என்ன விலைக்கு விற்கப்படுமோ அந்த நிலையில் மனைத் தீர்வையைத் திருத்தி அமைக்க வேண்டும்.

(2) முதலில் விதிக்கப்பட்ட பசலியிலிருந்து 11 ஆவது பசலியிலும் அதன் பிறகு ஒவ்வொரு பத்து ஆண்டுக்கொரு முறையும் மனைத் தீர்வை திருத்தி அமைப்பதற்குள்ளாகும்.

(3) இதன் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி யில், அரசினருக்குச் சொந்தமான நிலங்களின் விற்பனையைப் பற்றிய விதிகளின் 6 ஆவது விதியை அனுசரித்து அடுத்த பசலிக்குள் மனைத் தீர்வை திருத்தி அமைப்பதற்குரிய நிலங்களின் பட்டியல் ஒன்றை, அரசினர் மேற்சொன்ன விதி களில் குறிக்கப்பட்டுள்ள ஒப்படைப் பதிவேட்டிலிருந்து தாசில்தார் தயாரித்து முன்பிருந்த மனைத் தீர்வைக்குப் பதிலாக ஒவ்வொன்றிலும் என்ன தொகை விதிக்கலாம் என்று தம் யோசனைகளைக் கலெக்டருக்குத் தனியாக மேல் அனுப்ப வேண்டும். அத்தகைய யோசனைகளை அப்படிவத்தில் இரண்டு, பிரதிகளில் மார்ச்சு மாதம் 31 ஆம் தேதிக்குள் கலெக்டருக்குச் சேருமாறு அனுப்ப வேண்டும். இப்படிவத்தின் 8 ஆவது கட்டத்தில் கலெக்டரின் ஆணை பதிவு செய்யப்பட்ட நகல்களின் தாசில்தாருக்கு திருப்பி அனுப்பப்படும். மனைத் தீர்வை திருத்தி அமைக்கப்பட்டிருப்பதைப் பற்றிக் கலெக்டரின் ஆணை வரப் பெற்றவுடன் ஆ படிவத்தில் ஓர்றிவிப்பு நிலத்தை அனுபோகம் செய்து வரும வருக்குத் தாசில்தார் கொடுக்க வேண்டும். ஜூலை மாதம் 1 ஆம் தேதியில் தொடங்கும் பசலிக்கும் அந்தப் பசலி முதற்கொண்டு இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மனைத் தீர்வை விதிக்கப்படும்.

(4) தமது சொத்தின் மேல் இவ்வாறு விதிக்கப்பட்ட தொகைக்கு ஆட்சேபணையுள்ளவர் எவரும் ஆ—படிவத்தில் அறிவிப்பு கிடைத்த தேதி யிலிருந்து 30 நாட்களுக்குள் கலெக்டருக்கு ஆட்சேபணை விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அத்தகைய விண்ணப்பத்தைக் கலெக்டர் கவனித்துத் தமக்குத் தக்கதென தோன்றக்கூடிய ஆணைகளை பிறப்பிப்பார்.

(5) கலெக்டர் ஆணையினால் பாதிக்கப்பட்டவர் அந்த ஆணைத் தேதி யிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வருவாய்த் துறை வாரியத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். வருவாய்த் துறை வாரியத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

(6) ஒரு ரூபாய்க்கு மேற்படாத மனைத் தீர்வைகள் திருத்தி அமைப்ப தற்குட்படா. ஆனல் தீர்வை விதிக்கப்பட்டபோது ஒரு ரூபாய்க்கு மேற்

நி. ஆ. 21, பத்தி 11 (i)]

பட்டிருந்து பிறகு சிறு பகுதிகளாக உட்பிரிவு செய்யப்படும்போது ஒவ்வொரு உட்பிரிவுக்கும் ஒரு ரூபாய்க்குக் குறைந்த மனைத் தீர்வை ஏற்பட்டிருக்கும் இனங்களுக்கு இவ்விலக்கு பொருந்தாது.

10–7–1941 தேதி, 1403, எண். அ.ஆ.வரு.பலவ.
14–7–1944 தேதி, 1274 எண். வ.து.வா.செ.பலவ.

(7) ஒப்படை பெற்றிருப்பவரின் ஏழ்மையை முன்னிட்டு அல்லது மற்ற தனிக் காரணங்களுக்காக சலுகையுள்ள மனைத் தீர்வை விதிக்கப்பட்டிருந்தால் நிலமானது சலுகை பெறுவதற்கு உரியவர்கள் அல்லர் என்று கருதப்படத்தக்க ஒருவர் கைவசம் சேர்ந்திருந்தாலன்றி அதன் மனைத் தீர்வையை அதிகப்படுத்தக் கூடாது.

(8) முதன் முதலில் ஒப்படை செய்யும்போது அரசினருக்குச் சொந்தமான நிலத்தின் இருப்புரிமை மதிப்பின் ஒரு பாகத்தை வசூலித்துக் கொண்டு திருத்தி அமைக்கத்தக்க தீர்வை பெயரளவில் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தால் தீர்வையைத் திருத்தி அமைக்கும்போது முன்பு செலுத்தப்பட்ட தொகையைக் கழிக்கில் எடுத்துக்கொண்டு தீர்வையில்லாக் கைப்பற்று நிலத்தின் மதிப்புத் தொகைக்கும் முதலில் ஒப்படை செய்தபோது செலுத்தப்பட்ட முழுத் தொகைக்கும், உள்ள வித்தியாசத் தொகையின் அடிப்படையில் தீர்வையைக் கணக்கிட வேண்டும்.

10–4–1937 தேதி, 772, எண். அ.ஆ.வரு.பலவ.
29–4–1937 தேதி, 46 எண். வ.து.வா.செ.பலவ. 3
16–5–1957 தேதி, 2042 எண். அ.ஆ.வருகைப.

அ—படிவம்.

மனைத் தீர்வை திரும்ப ஆய்வு செய்வதற்காக மேல் அனுப்பப்படும் அறிக்கை.

கிராமம்.	மறுநில அளவை எண்.	பரப்பு.	தற்போதையத் தீர்வைத் தொகை.	தற்போதையத் தீர்வைத் தொகை முதல் முதலில் விதிக்கப்பட்ட பசலி.
(1)	(2)	(3)	(4)	(5)
			ரூ. பை.	
		காணி மனை சதுர அடி.		

திருத்தி அமைப்பதற்கான யோசனை கூறும் தீர்வைத் தொகை.	பரிந்துரை பகர்வதற்குரிய காரணங்கள்.	கலெக்டர் ஆணை.
(6)	(7)	(8)

[நி. ஆ. 21, பத்தி 11 (1) (ஆ)

ஆ. படிவம்—அறிவிப்பு.

.... கிராமத்தின் மறு நில அளவை எண்

நில உடமையாளருக்கு

உங்களுக்குச் சொந்தமான

மறு நில அளவை எண் நிலத்திற்குச் செலுத்த வேண்டிய மனைத் தீர்வை ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மனைத் தீர்வை திருத்தி அமைக்கப்பட்ட விதத்தில் அடுத்து வரும் ஜூலை மாதம் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கும் பசலிக்கும் அதைத் தொடர்ந்த பசலிகளுக்கும் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படத்தக்கது. இந்தத் தொகையைப் பற்றி உங்களுக்கு ஆட்சேபனை இருக்குமானால் இந்த அறிவிப்பைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அதைக் குறைப்பதற்காகக் கலெக்டருக்கு நீங்கள் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

5–7–1929 தேதி, 1344, அ.ஆ.வரு.பலவ.
25–7–1929 தேதி, 53 வ.து.வா.செ.

இணைப்பு XXII அ.

[நில ஆணை 21 பத்தி 11 (1) (ஆ)]

1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் நாளுக்குப் பின் சென்னை மாநகரில் அரசினருக்குரிய காலி நிலங்களை முடிவு செய்வதற்காக வகுக்கப்பட்ட விதிகள்.

1. அரசினருக்குரிய காலி நிலத்திற்காக வரப்பெறும் விண்ணப்பங்கள்.— சென்னை மாநகரில் அரசினருக்குரிய காலி நிலத்திற்காக வரப்பெறும் விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுப்பதில் கீழ்க்காணும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் —

(i) பொருளடக்கம்.—அரசினருக்குரிய காலி நிலத்திற்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எழுத்து வடிவில் இருக்க வேண்டும். மேலும் தேவைப்படும் நிலமும் எக்காரியத்திற்காக அது தேவைப்படுகிறது என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(ii) எந்த அலுவலருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.— முதலில் ஒவ்வொரு விண்ணப்பமும் வட்ட ஆட்சியருக்குச் செய்து கொள்ளப்பட வேண்டும். அத்தகைய விண்ணப்பங்கள் யாவற்றிற்கும் அவர் நாள் வரிசையில் பக்கங்கள் தொடர்ச்சியாக எண்ணிடப்பட்டு தைத்துக் கட்டப்பட்ட புத்தகவடிவிலான பதிவேடொன்றை வைத்து வருவார்.

2. விண்ணப்பங்களை முடிவு செய்வதில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.—(i) வருவாய் ஆய்வாளர்களிடமிருந்து வரப்பெறும் அறிக்கை விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதும் வட்ட ஆட்சியர் அதை 'அ' படிவத்தில் அறிக்கை அனுப்புமாறு வருவாய் ஆய்வாளருக்கு அனுப்புவார். அவ்வறிக்கை வரப்பெற்றதும் வட்ட ஆட்சியர் அதை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

நி. ஆ. 21, பத்தி (1) (ஆ)]

(ii) நகர அமைப்பு இயக்குநருக்குக் கடிதம் எழுதுதல்.—மனை அமைப்புத் திட்டத்துடன் சேர்ந்த மனை இடங்கள் ஒப்படைக்கான விண்ணப்பமாக இருப்பின் அவ்விண்ணப்பம் நகர அமைப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். அவரது மறுப்பு ஏதாவதிருப்பின் அது கவனித்துப் பார்க்கப்பட வேண்டும். மனைப்பிரிவுத் திட்டம் அதில் சேர்க்கப்பட்டுள்ள தெருக்கள் நிலங்கள் ஆகியவற்றின் அகலத்தைப் பொறுத்தவரையில், (1919 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவது சட்டமாகிய) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகர் நகராட்சிச் சட்டத்தின் 212(2) 216(2) பிரிவுகளுக்கு இணங்க இருந்தாலன்றி அதனைக் கருதிப்பார்த்து ஏற்றுக் கொள்ளலாகாது.

(iii) ஆணையாளருக்கு எழுதிக் கேட்டறிதல்.—சென்னை மாநகராட்சி வருவாய் ஆய்வாளரது அறிக்கையின் நகலொன்று மாவட்ட ஆட்சியரால் சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டும். மாநகராட்சியின் மறுப்புரைகள் எவையேனுமிருப்பின், அவை மாவட்ட ஆட்சியரால் கவனித்துப் பார்க்கப்பட வேண்டும். மாநகராட்சி தனது கருத்தைத் தெரிவிக்க மாவட்ட ஆட்சியின் இரண்டு மாத காலப் பெருமவரம்பு அனுமதிக்கலாம். இந்தக் கால அளவில் பதில் எதுவும் வரப் பெறவில்லை என்றால் ஒப்படைக்கு தடையெதுவும் மாநகராட்சிக்கு இல்லையென்பதாக அவர் எண்ணலாம்.

(iv) முடிவு செய்தல்.—வருவாய் ஆய்வாளர் அறிக்கையையும் சென்னை மாநகராட்சி குறிப்புரையையும் படித்ததின் பேரிலும் இந்த விதிகளின் கீழ்த் தேவைப்படக் கூடிய விசாரணைக்குப் பின்னரும் நிலத்தைக் கொடுத்து விடுவதில் தடையில்லை யென்பதாக மாவட்ட ஆட்சியர் கருதுவார் எனில் அது ஏற்கனவே எல்லை வரையறுக்கப்பட்டு நில அளவை செய்யப்படவில்லை என்றால் இவற்றைச்செய்ய அவர் ஏற்பாடு செய்ய வேண்டும். பின்னர் அவர் அதன் நடப்பு விலை மதிப்பையும் (1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு 13 ஆவது சட்டமாகிய) 1966 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகரகச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படத் தக்க நகர நிலவரியையும் நிர்மானிக்க வேண்டும். கீழே உள்ள 5 ஆவது விதி (1) ஆவது உள் விதியின்கீழ் அது வந்தாலன்றி ஒப்பளிப்புக்கான அவர் அதை வருவாய் வாரியத்துக்குப் பனிந்தனுப்ப வேண்டும். 4 வது விதியின்கீழ் அது வருவாயின் கருதப்பட்டுள்ள விலை வீதத்திற்கான காரணங்களைக் கொடுக்க வேண்டும். அந்நோர்பு விதி 5 உள்விதி (2)-ன் கீழ் வருமாயின் அந்நிலத்தின் நடப்பு விலை மதிப்புத் தொகைத் தண்டல் செய்வதற்குள் உரிமை விட்டுவிடப் பாக் கருதப்படுகிறதா என்பதையும் அவர் தெரிவிக்க வேண்டும்.

வருவாய் வாரியத்தின் ஆணைகள் வரப்பெற்றதன்பேரில் பொது ஏல விற்பனை நோர்வாய் இருக்குமாயின் மாநகரில் தனக்கடிப்பிரல் 'ஆ' படிவத்தில் அறிவிக்கை வெளியிடப்படுமாறும் நன்றுகத் தெரியக்கூடிய ஏதாவதொரிடத்திலுமின்றி விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட நிலத்திலும் ஒட்டி வைக்கப் படுமாறும் மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(v) ஏல விற்பனை.—5 ஆவது விதியில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவாறு தவிர காலியாகவுள்ள அரசு நிலங்களெல்லாம், பொது ஏல விற்பனையில் விற்கப் பட கொடுக்கப்பட வேண்டும். வழக்கமாக ஏல விற்பனை மாவட்ட ஆட்சியரால் அல்லது உரிம முறையில் அவரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற வேறு

[நி. ஆ. 21, பத்தி 11 (1) (ஆ)

அலுவலரால் நடத்தப்பட வேண்டும். ஆனால் நிலத்தின் நடப்பு விலை மதிப்பு 5,000 ரூபாய்க்கு மேற்படும் நேர்வுகளில் மாவட்ட ஆட்சியரே ஏல விற்பனையை நடத்த வேண்டும். (1966 ஆம் ஆண்டு தமிழ் நாடு 12 ஆவது சட்டமாகிய) 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரக நிலவரிச் சட்டத்தின் கீழ்த் தீர்மானிக்கப் பட்ட நடப்பு விலைக்குக் குறைந்தாகாதான ஒரு தொகை ஏலக்குறை விலையாக நிர்ணயம் செய்யப்பட வேண்டும். விண்ணப்பம் செய்து கொள்ள மனை இடம் உட்பட்ட மனைப் பிரிவுகள் செய்ய அல்லது அதில் சாலைகள் ஏற்பாடு செய்ய அல்லது அதை பற்றுரிமை கொள்ளத்தக்கதாகச் செய்ய செலவு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டிருந்தால் தீர்ப்படியான ஒரு பகுதி ஏலக்குறை விலையுடன் சேர்க்கப்பட வேண்டும். அறிவிக்கையில் நிர்ணயம் செய்யப்பட்ட நாளில் அல்லது தக்க காரணத்திற்காகத் தள்ளி வைக்கப்பட்ட பின்னிட்ட எதாவது ஒரு நாளில் ஏல விற்பனை நடத்தப்பட வேண்டும் ஏலம் தள்ளி வைக்கப்பட்ட பொருண்மை குறித்து பொது அறிப்பொன்று வெளியிடப்பட வேண்டும். மிக உயர்ந்த விலை கேட்டவருக்கு அப்பகுதி ஏல விற்பனையில் விடப்பட வேண்டும். ஏல விற்பனையில் எடுத்துக் கொண்டவர் ஏல விற்பனைத் தொகையுடன் சங்கிலி நில அளவை நடைமுறை நூலின் விதிகளுக்கு இணங்க குறிப்பிடப்பட்டுள்ள நில அளவைச் செலவையும் எல்லை வரையறுத்தலுக்காக ஏற்பட்ட செலவையும் செலுத்த வேண்டும்.

(vi) வைப்புத் தொகை.—அப்பகுதியை ஏல விற்பனையில் எடுத்த நபரை தாம் கூறிய தொகையின் 15 சதவிகிதத்தை உடனே வைப்புத் தொகை யாகச் செலுத்துமாறும் விற்பனைத் தொகையின் பாக்கி உள்ள தொகையையும் ( ) ஆவது உள் விதியில் குறிக்கப்பட்ட நில அளவை மற்றும் எல்லை வரையறுத்தலுக்கான செலவுத் தொகையும் ஏதாவதிருப்பின் அவற்றையும் அதிலிருந்து மூப்பது நாள்களுக்குள் செலுத்தவில்லை. என்றால் வைப்புத் தொகையை இழக்க ஒத்துக் கொள்வதாக ஓர் உடன்படிக்கையில் கையொப்ப மிடுமாறும் கேட்க வேண்டும்.

(vii) விற்பனையை உறுதி செய்தல்.—மாவட்ட ஆட்சியரால் அதிகாரம் அளிக்கப் பெற்ற ஒருவரால் விற்பனை நடத்தப்பட்டால் விற்பனையின் முடிவு உடனடியாக மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அவர் விற்பனையை உறுதி செய்யலாம் அல்லது தனக்குள்ள விருப்புரிமையை செலுத்தும் வகையில் அல்லது யாதொரு சிறந்த காரணத்திற்காக அதைத் தள்ளிவிடலாம்.

(viii) மேல்முறையீடு.—(iv) ஆவது உள்விதியின்கீழ் மாவட்ட ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து வருவாய் வாரியத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். இருப்பினும் இந்த ஆணையை எதிர்த்து மேல் முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த ஆணையின் நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செய்து கொள்ளப்பட்டாலன்றி மேல் முறையீடு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. எந்த நாளிலிருந்து நகரக நிலவரி விதிக்கப்பட்டது.—நகரக நிலவரிக்குட்பட்டு வேளாண்மை அல்லாத காரியங்களுக்காக, புதிதாக நிலம் ஒப்படை செய்யப்பட்டால் அல்லது விற்பனை செய்யப்பட்டால், உடைமை கொடுக்கப்படாதவிடத்து முதல் பசலிக்கு விதிக்கப்பட்ட நகரக நிலவரி

நி. ஆ. 21, பத்தி 11 (1) (ஆ)]

நிலக்கொடை நாளில் அந்த பசலியில் எஞ்சியுள்ள பகுதிக்குரிய வீதாச்சார நகர்க நிலவரியாக இருக்க வேண்டும். அல்லது ஒப்படை பெற்றவரால் அல்லது விலைக்கு வாங்கியவரால் நிலம் ஏற்கனவே பற்றுரிமை கொள்ளப்பட்டிருந்தால் உள்ளபடி பற்றுரிமை கொள்ளப்பட்ட நாளிலிருந்து நகர்க நிலவரி விதிக்கப் பட வேண்டும். இவ்விரண்டிலும் ஒரு மாதத்தின் பகுதி ஒரு மாதமாகக் கணக்கிடப்பட்டு அவ்வாறே வரி விதிக்கப்பட வேண்டும்.

4. தனிப்பட்ட நேர்வுகளில் நகர்க நிலவரி குறைக்கப்படுதல் (1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு 12ஆவது சட்டமாகிய) 1966-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்க நிலவரிச் சட்டம் 27ஆவது பிரிவின்கீழ் மிக ஏழை வகுப்பினர்கள் வசிக்கும் மாநகர் பகுதிகள் அல்லது வீடுகள் கட்டும் செலவு வழக்கம் போலன்றி மிக அதிகமாக உள்ள தனிப்பகுதிகளில் நகர்க நிலவரி வீதம் அரசினரால் குறைக்கப்படலாம். விண்ணப்பம் செய்து கொண்டவரது ஏழ்மை காரணமாக அச்சலுகை அளிக்கப்பட்டால் அச்சலுகையால் நன்மை அடைய வேண்டும் எனக் கருதப்படாத சௌகார்கள் போன்ற நில ஒப்படை பெற்றவர்கள் சலுகையின் நன்மையை கோருவதைத் தடுக்கும் வகையில் ஒப்படை ஆணையின் சொற்களை அமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

5. எல விற்பனை எப்போதும் தேவையில்லை:—

கீழ்க்கண்ட நிலங்களில், இருப்புரிமையை ஏலம் மூலம் விற்னை செய்யத் தேவையில்லை :

(1) தற்போதுள்ள மனையிடத்தில் விரிவாக்கத்திற்கான விண்ணப்பம் ஒன்றில் நேர்வில்.

(2) விண்ணப்பம் செய்து கொண்டவர் ஏல விற்பனையில் நிலத்தை வாங்கிக் கொள்ள இயலாதவாறு அவ்வளவு ஏழையாக இருக்குமிடத்தில் அவ்வித நடவடிக்கையை நேரிடையானதாகச் செய்யும்.

(3) தனித் தன்மைகள் உள்ளவிடத்து தற்போதுள்ள மனை இடத்தை விரிவாக்கம் செய்து கொள்ள விண்ணப்பம் செய்யப்படும்விடத்து, நிலப்பரப்பு 15 சென்டுகளுக்கு மேற்படவில்லை என்றால் மாவட்ட ஆட்சியரே அந்நிலத்தை ஒப்படை செய்யலாம். மேலே (3) ஆவது இனத்தின் கீழ் வரும் நேர்வுகளில் ஒவ்வொரு நேர்விலும் 15 சென்டுகள் வரையில் தனி வகை விற்பனை மூலம் வருவாய் வாரியம் நிலத்தை ஒப்படை செய்யலாம். விண்ணப்பம் செய்து கொண்டவர்களிடமிருந்து முழு நடப்பு விலை மதிப்புத்தொகை தண்டல் செய்யப்பட வேண்டும். ஏல விற்பனையில் நிலத்தை விலைக்கு வாங்க இயலாத அளவுக்குமிக ஏழையாகவுள்ள விண்ணப்பதாரர் நேர்வில் நிலப்பரப்பு 15 சென்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமாயின், முதலில் யாதொரு தொகையும் பெறாமல் ஆரல் வழக்கமான வீதத்தில் அல்லது 4ஆவது விதியில் குறிக்கப்பட்ட தனி வீதத்தில் நகர நிலவரி செலுத்துவதற்கு உட் படுத்தி வருவாய் வாரியம் நிலத்தை ஒப்படை செய்யலாம்.

மேலே குறிக்கப்பட்ட எல்லா நேர்வுகளிலும் நிலத்தின் எல்லை வரையறுத்தல் நில அளவை செய்தல் மனை இடமாகக் கோரப்பட்ட இடம் உட் பட நிலத்தை மனைபிரிவுகளாக்கல் அல்லது அதில் சாலைகள் அமைத்தல் அல்லது மற்றவகையில் பற்றுரிமை கொள்ளத் தகுதியாக்கல் ஆகியவற்றிற்கு எற்பட்ட செலவின் வீதாச்சாரத்தைச் செலுத்த ஒப்படை பெற்றவர் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

[நி. ஆ. 21, பத்தி 11 (1) (ஆ)

6. சோய்வு.—ஏலம் மூலம் விற்பனை செய்த நேர்வுகள் மற்றும் தனிப் பட்ட பேச்சு வார்த்தைகள் மூலம் விற்பனை செய்த நேர்வுகள் ஆகிய இரண்டிலும் மாவட்ட ஆட்சியரின் முடிவை வருவாய் வாரியம் அம்முடிவு முற்றிலும் நேர்மைக்கு மாறுக உள்ளது என்று தான் கருதினால் மூன்றாண்டுகளுக்குள் அதனை நீக்கி விடலாம், தள்ளிவிடலாம் அல்லது யாதொரு வகையில் மாற்றி அமைக்கலாம். நடைமுறையில் முக்கியமான ஒழுங்கீனம் இருந்திருக்குமானால் அல்லது செய்த முடிவு மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்கு மீறியதாயிருக்குமானால் அல்லது அதிகாரத்தை தவறுகப் புரிந்து கொண்டதன் காரணமாக அல்லது மோசடி காரணமாக ஆணை அல்லது தவறான முறையீடு காரணமாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தால் இது போன்ற அதிகாரத்தை வருவாய் வாரியம் யாதொரு கால வரம்பின்றி செலுத்தலாம்.

7. நிலம் அளிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.—(i) மானியங்கள் பதிவேடு.—சென்னை நாகரில் கொடுக்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும் "இ" படிவத்தில் பதிவேடு ஒன்றைப் பேணி வர வேண்டும். "அ"" படிவத்தில் உள்ள பதிவேட்டில் ஒவ்வொன்றிலும் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் பகுதி நகலொன்றைப் பொருத்தமான கட்டங்களில் பதிவு செய்ய வேண்டும்.

(ii) நில ஒப்படை ஆணைப்படிவம்.—பொருத்தத்தக்கதாகவுள்ள "ஈ" படிவத்திலோ "உ" படிவத்திலோ கோட்ட ஆட்சியராலே கையொப்பமிடப் பட்ட ஒப்படை ஆணை இவ்விதிகளின்கீழ் ஒப்படை செய்யப்பட்ட மனையிடங்கள் எல்லாவற்றிற்கும் பிறப்பிக்கப்பட வேண்டும். ஆனால் மாவட்ட ஆட்சியர் (1920ஆம் ஆண்டு ஆவது சட்டமாகிய) 1920ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர அமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது வேறு ஏதாவது துப்புரவு அல்லது ஆட்சிமுறை தேவைகளுக்கு இணங்கக் கூடுதல் நிபந்தனை களை விதிக்கலாம். ஒப்படை ஆணை நிபந்தனைகளுக்கு இணங்க மேல் முறையீட்டில் அல்லது சோய்வில் ஒப்படைத் தள்ளுபடி அல்லது செய்யப் பட்டால் அரசினர் திரும்பக் கைக்கொண்டால் நிலத்தின் ஒப்படை பெற்றவரால் கட்டப்பட்டிருக்கக் கூடிய எந்தக் கட்டடங்களுக்கோ அல்லது நிலத்திற்கு அவரால் செய்யப்பட்ட மேம்பாடுகளுக்கோ இழப்பீடு கோர அவருக்கு உரிமை இல்லை என்பதாக அவ்வாணையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

திட்டமிடப்பெற்ற குடியிருப்புப் பகுதிகளுக்குரிய வீட்டு மனைகள் முதல் முதலில் கூட்டுறவுச் சங்கங்களுக்கே வழக்கமாக ஒப்படை செய்யப்படும். இத்தகைய நேர்வுகளில் கூட்டுறவுச் சங்க மேலாண்மைக்குழுவினர் பகரும் விலைத்தாரையில் பேரில் அல்லது வேறு வகையில் ஒப்படை பெறுவதற்காக உள்ளவர். நன்டத்தை உடையவராகவும் அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும் அக்குடியிருப்புப் பகுதிகளுக்காக வகுக்கப் பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகவும் குறைந்தது மூன்று ஆண்டு காலத்திற்காவது வீட்டிடத்தைத் துப்புரவு முறை யில் வைத்திருக்கிறார் என மாவட்ட ஆட்சியர் மனநிறைவு கொள்ளும் வரை யில் அவருக்கு தனிப்பட்ட வீட்டுமனை ஒப்படை எதுவும் செய்யப்படக்

நி. ஆ. 21, பத்தி 11 (1) (ஆ)]

கூடாது. கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பெறுதலிடத்து தனிப்பட்ட ஒப்படைகள் முதற்கண் செய்யப்படலாம். ஆனால் அவை தற்காலிகமாகவே இருக்க வேண்டும். ஒப்படை பெறுவதற்காக உள்ளவர் நன்னடத்தையுடையவராகவும் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும் அக்குடியிருப்புப் பகுதிகளுக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு அவர் நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகவும் குறைந்தது மூன்று ஆண்டுக் காலத்திற்காவது வீட்டிடத்தை துப்புரவு முறையில் வைத்து வருகிறார் என்பதாகவும் மாவட்ட ஆட்சியர் தாம் மனநிறைவு கொள்ளும் வகையில் அவருக்குத் தனிப்பட்ட வீட்டு மனை ஒப்படை எதுவும் நிலையான முறையில் செய்தல் கூடாது. இத்தகைய நேர்வுகளிலே 'ஈ' அல்லது 'உ' படிவ ஒப்படை ஆணைப் படிவத்தில் தனி நிபந்தனை ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

(iii) நில ஒப்படை நிபந்தனைகளின்கீழ் நிலத்தில் திரும்பப்புகும் உரிமை மாவட்ட ஆட்சியரின் ஆணைகளின் படி செலுத்தப்படும். அவ்வாறு நிலத்தில் திரும்பப்புக ஆணை பிறப்பிக்குமுன்னர் கருணை காட்டும் வகையில் மாவட்ட ஆட்சியர் ஒப்படை பெற்றவருக்கு அறிவிப்பு கொடுக்கலாம். மற்றும் அந்த அறிவிப்பைச் சென்னை செங்கற்பட்டு மாவட்ட ஆசிதழில் வெளியிடலாம்.

(iv) கட்டடத்திற்காகக் குறிப்பிடப்பட்ட கால அளவை நீட்சி செய்தல்.—ஒப்படை ஆணை நிர்ணயம் செய்யப்பட்ட கால அளவிற்கும் இடம் கட்டப்பட வேண்டும் அல்லது அடைப்புச் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டிருக்கும்போது போதுமான காரணம் காட்டப்படுவதன் பேரில் மாவட்ட ஆட்சியர் கால நீடிப்பு அளிக்கலாம். வழக்கமாக, விற்பனையை உறுதி செய்து பிறப்பிக்கப்படும் ஆணையை எதிர்த்து செய்யப்படும் யாதொரு மேல்முறையீட்டின் முடிவு நாளிலிருந்து தெளிவாகப் பன்னிரண்டு மாத காலம் ஒப்படை பெற்றவருக்கு அளிக்குமாறு அக்கால அளவு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

21ஆவது வருவாய் வாரிய நில ஆணையின் கீழ்க் குறிப்பிடப்பட்ட எல்லாப் படிவங்களையும் கீழ்க்காணும் திருத்தங்களுடன் பயன்படுத்திக் கொள்ளலாம் :—

(1) 'அ' படிவத்தில் 9 ஆவது கட்டத்தில் உள்ள "தீர்வையில்லாக் கைப்பற்று நிலத்தின் மதிப்பிடப்பட்ட விலை மதிப்பு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நடப்பு விலை மதிப்பு" என்னும் சொற்களை அமைத்துக் கொள்க.

(2) 'ஆ' படிவத்தில் உள்ள நிபந்தனைகளில் எங்கெங்கே "மனைத் தீர்வை" என்னும் சொற்கள் காணப்படுகின்றனவோ அங்கங்கே "நகர நிலவரி" என்னும் சொற்களை அமைத்துக் கொள்க.

(3) 'இ' படிவத்தில் 7 (11) ஆகிய கட்டங்களில் உள்ள "மனைத் தீர்வை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நகர நிலவரி" என்னும் சொற்களை அமைத்துக் கொள்க.

[நி. ஆ. 21, பத்தி 11(2) (ii)

(4) 'ஈ' படிவத்தில் உள்ள நிபந்தனைகளில் எங்கெங்கே "மனைத் தீர்வை" என்னும் சொற்கள் காணப்படுகின்றனவோ அங்கங்கே "நகரக நிலவரி" என்னும் சொற்களை அமைத்துக் கொள்க.

(5) 'உ' படிவத்தில் உள்ள நிபந்தனைகளில் எங்கெங்கே "மனைத் தீர்வை" என்னும் சொற்கள் காணப்படுகின்றனவோ அங்கங்கே "நகரக நிலவரி" என்னும் சொற்களை அமைத்துக் கொள்க.

(1970 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் நாளும் 783 என்னுமிட்ட நிலை வ.வா செ.)

(1965 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் நாளும் 1326 என்னுமிட்ட வரு. நிலை. அ. ஆ.)

இணைப்பு XXIII

[21 ஆவது நிலை ஆணை, 11(2) ஆவது பத்தி, (ii) ஆவது உட்பிரிவு.]

வீட்டு மனை இருப்பு உரிமை விற்பனை அறிவிப்பு.

ஆல் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள வீட்டு மனையின் இருப்பு உரிமை அதிலுள்ள மரங்களுடன் 19 , மாதம் தேதி மனிக்கு இடத்தில் (கோட்ட ஆட்சியாளர் உறுதி செய்வதற்கும் கலெக்டருக்குச் செய்யப்படும் யாதொரு மேல்முறையீட்டின் முடிவு செய்யப்படுவதற்குட்படுத்தி) பகிரங்கமான ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு முடிவு செய்யப்படும்.

கிராமம்.	நகரம்.	பரப்பு.	நான்கெல்லைகள்.

2. கீழே சொல்லப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு மனை இடம் அதிலுள்ள மரங்களுடன் விற்பனை செய்யப்படும்:—

(i) ஏல விற்பனையில் நிலத்தை எடுத்துக் கொண்டவர் தமக்கு நிலம் விடப்பட்டவுடனே, தாம் ஏலத்தில் கூறிய விலையில் 15 சத வீதம் வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். மீதித் தொகையையும், நில அளவைக்கும் எல்லை வரையறுத்ததற்குமான செலவு ஏதாவது இருப்பின் அதையும், விற்பனைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்திவிட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் தாம் செலுத்திய வைப்புத் தொகையை இழந்துவிடச் சம்மதிப்பதாக ஒரு உடன்படிக்கையில் கையெழுத்து இட்டு கட்டுப்பட வேண்டும்.

(ii) ஏலத்தில் எடுத்தவர் உடனடியாக ஏலத் தொகையில் 15 சத வீதம் வைப்புத் தொகை செலுத்தத் தவறினால், கலெக்டர் மறுமுறை ஏலம் விடலாம். அதனால் ஏற்படும் இழப்புத் தொகை முதலில் ஏலம் எடுத்தவரிடம் வசூலிக்கக் கலெக்டருக்கு உரிமை உண்டு.

20–2–1902 தேதி, 37, வ.து.வா.செ.

4–11–1935 தேதி, 2618, அ.ஆ.வரு.பல.

9–11–1935 தேதி, 147, வ.து.வா.செ.அச்சு.

நி. ஆ. 21, பத்தி 11 (2) (ii)]

(iii) விற்பனையில் விலை கூறுகிறவர்கள் தங்களுக்காக அல்லது பிறருக்காக அவர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் விலை கூறுகிறார்களா என்பதைத் தெரிவிக்குமாறும், அவர்கள் பிரதிநிதிகளாக இருப்பார்களெனில் தங்கள் முதல்வர்களிடமிருந்து அவர்களின் எழுத்து வடிவில் கையெழுத்திட்ட அதிகாரத்தை ஒப்புவிக்குமாறும் விலை கூறுகிறவர்களைக் கேட்க வேண்டும்; இல்லாவிடின், அவர்கள் கூறிய விலைகள் தள்ளி விடப்படும்.

(iv) நிலத்தின் விவரங்களில் அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள அதன் பரப்பில் தவறுதல்கள் எவையேனும் இருக்குமாயின், அவற்றிற்கு அரசினர் பொறுப்பேற்க மாட்டார்களென்று தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(v) ஏல விற்பனை கோட்ட ஆட்சியாளரால் அல்லது கலெக்டரால் ரத்து செய்யப்பட்டால் ஏலத்தில் எடுத்தவர் மோசம் அல்லது தவறுன முறையிட்டின் காரணமாக வைப்புத் தொகை இழந்ததாக அறிவிக்கப்பட்டால் அன்றி விற்பனைத் தொகை அல்லது ஏலத்தில் எடுத்தவர் அதில் ஒரு பகுதி மாத்திரம் செலுத்தியிருந்தால், அத்தகைய தொகை நில அளவை எல்லை வரையறுத்தல் சம்பந்தமாக அவர் செலுத்தியிருக்கக் கூடிய தொகையுடன் ஏலத்தில் எடுத்திருப்பவருக்குத் திருப்பி கொடுக்கப்பட வேண்டும்..

3. நிலம் சுவாதீனமான பின்னர் பின்வரும் நிபந்தனைகுட்பட்டு அந்நிலம் உடைமையில் இருக்கத்தக்கது :—

(i) ஆண்டு மதிப்பு தீர்வையாகிய ரூபாயாவது அல்லது தாலுகாவின் அவ்வப்போது குறிக்கப்பட்ட காலங்களில் நடக்கும் நிலத் தீர்வை விதிப்பு மாற்றம் ஒவ்வொன்றிலும் நிர்ணயம் செய்யப்படக்கூடிய மற்றத் தொகையாவது ஒவ்வொரு ஆண்டும் தேதியில் அல்லது அதற்கு முன்னதாக அரசினருக்குச் செலுத்த வேண்டும்.

(ii) அவ்வாறு செலுத்தத் தவறினால் தீர்வை பாக்கி வசூலிக்கப்படுவதற்கு அவ்வப்போதுள்ள சட்டத்தை அனுசரித்து அத்தொகை வசூலிக்கத் தக்கது.

(iii) இந்த நிலம் க்காக உபயோகிக்கலாமே தவிர வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது. இந்த நிலத்தில் கூரை/ஓட்டு அல்லது மாடி வீடு அல்லது கலெக்டரின் அனுமதி பெற்று அதிலுள்ள அளவுக்கிணங்கி வேறு கட்டடம் ஒன்று அவரால் நிர்ணயம் செய்யப்படக்கூடிய தேதியிலிருந்து ஆறு/பன்னிரண்டு மாதங்களுக்குள் கட்டிக் கொள்ளவேண்டும்.

(iv) அனுமதியில் கண்டுள்ள கட்டடம் குறித்த காலத்திற்குள் கணிசமான அளவில் கட்டி முடிக்காவிட்டாலும் அல்லது அத்தகைய கட்டடம் கட்டப்பட்ட பின்னர் அநுபோகம் செய்யாமல் விட்டு விடப்பட்டாலும் ஓராண்டு காலமாகப் பழுது பார்க்கப்படாமல் கிடந்தாலும், குறிப்பிட்ட தேதி மூடிவடைந்ததும் அதில் பிரவேசித்து நிலத்தை அல்லது நிலத்தையும் கட்டடத்தையும் சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ள அரசினருக்கு உரிமையுண்டு.

[நி. ஆ. 21, பத்தி 11(2) (ii)

(v) மேலே (iii), (v) ஆவது உட்பிரிவுகளை அனுசரித்து [2] அவ் வுரிமையைச் செயல்படுத்தி நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் போது, விற்பனை விலையாவது அல்லது நில அளவு செய்தல் எல்லை வரை யறுத்தல் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட செலவானது அல்லது அப்போதுள்ள கட்டடங்கள் அல்லது மற்ற மேம்பாடுகள் எவற்றிற்கேனும் [2] ஈடு கொடுப்ப தற்கு அரசினர் உட்பட்டவரல்லர். [2]

(vi) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாயக்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொது மக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகளையும் முன் சொன்ன நிலத்தின்கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படை யினால் அவ்வுரிமைகள் ஒரு வகையிலும் பாதிக்கப்படமாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க நடைமுறை நூல் viii ஆவது அத்தியாயம் xi ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தில் இரண்டாம் பாகத்தில் விளக்கப் பட்டுள்ளவாறு தடையா உரிமை, தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது வெளியேறுவது அவற்றுள் செய்யத்தக்க இவை போன்றவற்றைக் கொண்டு தங்கக் கனிப் பொருள் அல்லது மற்றக் கனிப் பொருள்கள் அல்லது நிலக்கரி, கல் அல்லது தங்கமும் மற்றக் கனிப் பொருள்களையும் கொண்டுள்ள அல்லது கொண்டுள்ளவை என்று கருதத்தக்க அல்லது கண்டு பிடிக்கப்பட்ட பாறைகளின் அரசினருக்குரிய உரிமைகளும் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. விலைக்கு வாங்கினவர், அவர் வாரிசுகள் அல்லது அவரிட மிருந்து உரிமை பெற்றவர்களுக்கு அரசினரிடமிருந்து அனுமதி அல்லது உரிய முறையில் உரிமம் பெற்ற பின்னர் அன்றி மேற்சொன்ன தங்கம் அல்லது மற்றக் கனிப் பொருள்களை அடுத்து வேலை செய்வதற்கு உரிமையில்லை.

4–8–1932 தேதி, 1636, அ.ஆ.வரு.பலவ.

22–8–1932 தேதி, 51, அ.து.வா.செ.அச்சு.

(vii)[3] அரசினர் ஒப்பளிப்பின்றி இந்தியக் குடியல்லாத வேறொரு வருக்கு நிலத்தைப் பராதீனம் செய்வது ஒப்படையைச் செல்லாததாக்கி விடும்.

(viii) ஒப்படை நிபந்தனைகளில் யாதொரு நிபந்தனையும் மீறப்பட்டால் அரசினர் நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் திரும்பப் பிரவேசிக்கலாம்.

19–12–1910 தேதி, 3149, அ.ஆ.வரு.

24–4–1941 தேதி, 1100, வா.து.வா.செ.பலவ.

(ix) மேல்முறையீட்டில் அல்லது ரிவிஷனில் ஒப்படை ஆணை ரத்து செய்யப்பட்டால் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து நிலத்தை அரசினர் திரும்ப எடுத்துக் கொள்வாரெனில் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் கட்டியிருக்கக்கூடிய கட்டடங்கள் அல்லது செய்திருக்கக்கூடிய மற்ற மேம்பாடுகளுக்கு ஈடு பெற உரிமையில்லை.

(x) ஒப்படை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும், இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட பின்னர் நிலங்களில் வளரக்கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது அவற்றின் வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்திக் தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர் மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவை வெட்டப்படுமாறு செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு ஒப்படை பெறுபவருக்கு உரிமையில்லை.

(xi) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறுமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பு செய்வதில் கலெக்டர் மனதிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத் தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்படை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(xii) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப்படாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதில் ஒப்படை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(xiii) மேலே குறிப்பிட்டுள்ள (x), (xi) அல்லது (xii) நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப்படாவிடின், ஒப்படை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ அத்தகைய ஈட்டுத்தொகையை, அவர் அரசினருக்குச் செலுத்திவிட வேண்டும். ஒப்படையை ரத்து செய்து நிலத்தில் பிரவேசிக்கவும் அரசினருக்கு உரிமை உண்டு. அதன் பின்னர் அந்நிலம் முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்து விடும். இந்த நிலையில் ஒப்படை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமை உடையவராகார்.

(xiv) ஒப்படை நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று மீறப்பட்டதாக அரசினர் கருதுவாரெனில் நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப்படும். ஒப்படை நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று மீறப்பட்டதா இல்லையா என்பதைப் பற்றி ஏதேனும் கேள்வியெழுமேயானால் அதைப்பற்றி அரசினரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வகையில் அரசினரின் தீர்ப்பே முடிவானதாகும்.

17-2-1950 தேதி, 423, அ. ஆ. வரு. பலவ.

15-7-1950 தேதி, 34852-50—1, அரசாங்கக் குறிப்பு.

9-9-1950 தேதி, 28 வ. து. வா. செ, அச்சு.

குறிப்பு.—கீழே குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் ஒப்பனை செய்யப்படும்பொழுது, சந்தன மரங்கள் ஒதுக்கி வைக்கப்படுவது சம்பந்தமாக (x) முதல் (xiii) வரையிலுள்ள நிபந்தனைகளை அடித்துவிட வேண்டும்.

செங்கற்பட்டு, சென்னை, தஞ்சாவூர்.

13–12–1941 தேதி, 138, வ.து.வா.க.செ.அச்சு.
2–10–1899 தேதி, 239, வ.து.வா.செ.
[1]17–2–1900 தேதி, 139, அ.ஆ.
[1]10–4–1902 தேதி, 80, வ.து.வா.செ.
[2]30–3–1914 தேதி, 134, வ.து.வா.செ
[4]18–7–1923 தேதி, 52, வ.து.வா.செ.
[5]1–3–1929 தேதி. 432. அ.ஆ.வரு.பலவ.
[6]29–4–1927 தேதி, 795, அ.ஆ.வரு.பல.
[5]3–10–1929 தேதி, 2019, அ.ஆ.வரு.பல.
[3]1–5–1918 தேதி, 1867, அ.ஆ.வரு.
[4]2–7–1923 தேதி, 192, அ.ஆ.வரு.பலவ.
[5]20–3–1929 தேதி, 854, வ.து.வா.செ.பலவ.
[6]13–5–1927 தேதி, 28, வ.து.வா.செ.
[7]9–10–1929 தேதி, 86, வ.து.வா.செ.
16–5–1957 தேதி, 2042, அ.ஆ.வரு.பல.
1–7–1957 தேதி, 848, வ.து.வா.செ.பலவ.

இணைப்புXXIII--அ:

21-ஆவது நிலை ஆணை, 14-ஆவது பத்தி, குறிப்பு.

தனிப்பட்ட விற்பனையில் அல்லது ஆரம்பத்திலேயே கிரயத்தொகை எதுவுமின்றி வீட்டு மனை கொடுப்பதற்குச் செய்யவேண்டிய அறிவிப்பு.

கிராமத்திலுள்ள
———— ————
நகரத்திலுள்ள

க்கு வடக்கில் க்கு கிழக்கில் , க்கு தெற்கில் , க்கு மேற்கில் இந்த நான் கெல்லைகளுக்குட்பட்ட சென்ட் அல்லது சதுரத் நடப்பு விலை மதிப்புக் கிரயத்தை
———— ————
திற்காக விளம்பரம் செய்திருப்பதால் அதை ———— ————
யாதொரு கிரயமுமின்றி இலவசமாக
பின் வரும் காரணங்களுக்காக (இங்கே காரணங்களைச் சுருக்கமாக எழுத வேண்டும்.) அவருக்கு செய்ய யோசனை செய்திருப்பதை இதனால் அறிவிக்கப்படுகிறது.

(இங்கே காரணங்களைக் கூறுக.)

இந்த நில ஒப்படைக்கு ஆட்சேபணையுள்ளவர்கள் இந்த அறிவிப்புத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் தாசில்தாருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

இடம்:

தாசில்தார்.

தேதி:

தமுக்கடிப்பிலல் இந்த அறிக்கை விளம்பரம் செய்யப்பட்டதென்றும் இடத்திலும் (இடத்தை குறிக்க வேண்டும்), சம்பந்தப்பட்ட நிலத்திலும் இந்த அறிவிப்பு ஒட்டப்பட்டதென்றும் உறுதி கூறுகின்றேன்.

இடம்:

தாசில்தார்.

தேதி:

21–4–1938 தேதி, 1023, அ.ஆ.வரு.பலவ.
12–5–1938 தேதி, 48, வ.து.வா.செ.அச்சு.

இணைப்பு XXIV

[21-ஆவது நிலை ஆணை, 15-ஆவது பத்தி, (ii) ஆவது உட்பிரிவு நகர மனைகளின் ஒப்படை ஆணைப் படிவம்.]

தெரிவிப்பது ——— கிராமத்திலுள்ள ——— க்குத் தாலுக்கா

கிராமத்திலுள்ள நில அளவை எண்	இதன் கிழக்கில்	வடக்கில் தெற்கில்	மேற்கில்

இந்த நான்கெல்லைக்குட்பட்டதும் உங்களுக்கு 19 ——— மாதம் ——— தேதி ஏலத்தில் ——— ரூ. ——— க்கு விற்கப் பட்டதும்

தனிப்பட்ட ஏற்பாட்டினால்

சென்ட்டுகள் அல்லது சதுர கெஜங்கள் பரப்புள்ளதுமான அரசாங்க நிலத்தை வருவாய்த் துறைக் கழக 21-ஆவது ஆணையில் கண்டுள்ள விதிகளுக்குட்படுத்தியும், பின்வரும் நிபந்தனைகளுக்குட்படுத்தியும் இதனால் உங்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது:—

(1) இந்த ஒப்படை நேர்மையற்றது என்றுவது, அல்லது உண்மைக்குப் புறம்பாகச் செய்யப்பட்டதென்றுவது, அல்லது தவறுக முறையிடப்பட்ட அல்லது மோசம் செய்யப்பட்ட காரணமாக, அல்லது ஒப்படை செய்யும் அதிகாரிக்கு 21-ஆவது நிலை ஆணையின் கீழ் வழங்கப்பெற்ற அதிகார வரம்புக்கு மீறித் தாம் ஒப்படை செய்திருக்கிறரென்றுவது அல்லது நடைமுறையில் ஒழுங்கீனமாயிருந்ததென்றுவது ஏற்பட்டால் ஒப்படை ரத்து செய்யப்படுவதற்குட்படும்.

4–8–1932 தேதி, 1636, அ.ஆ.வரு.பலவ.
22–8–1932 தேதி, 51, வ.து.வா.செ. அச்சு.

(2) ஆண்டு மனைத் தீர்வையாகிய ரூபாயாவது அல்லது தாலுக்காவின் அவ்வப்போது குறிப்பிட்ட காலங்களில் நடக்கும் நிலத் தீர்வை விதிப்பு மாற்றம் ஒவ்வொன்றிலும் நிர்ணயம் செய்யக்கூடிய அத்தகைய மற்றத் தொகையையாவது ஒவ்வொரு ஆண்டும் தேதியில் அல்லது அதற்கு முன்னதாக அரசினருக்குச் செலுத்த வேண்டும்.

(3) அவ்வாறு செலுத்தத் தவறினால் தீர்வை பாக்கி வசூலிக்க அப்போதுள்ள சட்டத்தை அனுசரித்து அது வசூலிக்கத்தக்கது.

(4) இந்த நிலம் க்கு உபயோகிக்கலாமே தவிர வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக்கூடாது. இந்த நிலத்தின் மேல்கூரை/ஓட்டு அல்லது மாடி வீடு அல்லது கலெக்டரின் அனுமதி பெற்று அதிலுள்ள அளவுக்கினங்கி வேறு கட்டடம் ஒன்றைக் கலெக்டரால் தீர்மானிக்கப்படும் தேதியிலிருந்து ஆறு/பன்னிரண்டு மாதங்களுக்குள் கட்டிக் கொள்ள வேண்டும்.

(5) கட்டடத்திற்கு முன்புறமும் அடி அகல இடத்தைக் காலியாக விட்டுவைக்க வேண்டும்.

(6) விவர அட்டவணையில் குறிப்பிட்ட விவரத்தையும், அளவுகளையும் அல்லது அதற்குப் பதிலாக முன்பு அனுமதிக்கத்தக்க விவரத்தையும், அளவுகளையும் அனுசரித்து கட்டடத்தைப் போதுமான அளவில் குறிப்பிட்ட காலத்துக்குள் உறுதியாகக் கட்டி முடிக்காமல் விட்டுவிட்டால் அல்லது (5) -ஆவது நிபந்தனையில் கண்டுள்ளவாறு கட்டடத்திற்கு முன் புறத்திலும், பின்புறத்திலும் அடி அகலம் காலியிடம் விடாவிட்டால் அல்லது அத்தகைய கட்டடம் கட்டிய பிறகு அது விட்டு விடப்பட்டால் அதாவது வீடு குடியில்லாததாக பழுது பார்க்கப்படாமல் ஓராண்டு காலத்திற்கு விடப்பட்டால் அரசினர் அதில் உடனடியாகத் திரும்பப் பிரவேசித்துச் சம்பந்தப்பட்ட மனை அல்லது கட்டடமுள்ள மனையைச் சுவாதினப் படுத்திக்கொள்ள உரிமையுண்டு.

12–12–1940 தேதி, 3092, அ.ஆ.வரு.பல.
20–2–1941 தேதி, 16, வ.து.வா.செ.அச்சு.

(7) மேலே (4), (5) ஆவது உட்பிரிவுகளில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள உரிமைகளைச் செயலாற்றும்போது விற்பனைத் தொகையைத் திருப்பிக் கொடுக்கவோ அல்லது நிலத்தில் அப்போதுள்ள கட்டடங்கள் அல்லது மேம்பாடுகள் எவையேனுமிருப்பின் அவற்றிற்கு ஈட்டுத்தொகை கொடுக்கவோ அரசினர் கடமைப்பட்டவர் அல்லர்.

(8) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால் ஆகிய இவற்றில் அரசினருக்கும் பொதுமக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற உரிமைகளையும் முன் சொன்ன நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் இவற்றின் பங்கு உரிமையையும் அரசினர் தங்களுக்கே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வொப்படையினால் அவ்வுரிமைகள் ஒரு

வகையிலும் பாதிக்கப்பட மாட்டா. இவ்வாறே சென்னை சுரங்க தடைமுறை நூல் VIII ஆவது அத்தியாயம் IX ஆவது இணைப்பில் உள்ள மாதிரிப் படிவத்தில் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு தடையிலா உரிமை, தடையின்றி எக்காலத்திலும் உள்ளே செல்வது, வெளியேறுவது அவற்றுள் செய்யத்தக்க இவை போன்றவற்றைக் கொண்டு தங்கக் கனிப் பொருள் அல்லது மற்றக் கனிப் பொருள்கள் அல்லது நிலக்கரி, கல் அல்லது தங்கமும் மற்றக் கனிப் பொருள்களையும் கொண்டுள்ள அல்லது கொண்டுள்ளவை என்று கருதத்தக்க பாறைகளின் அரசினருக்குரிய உரிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒப்படை பெற்றவர் [1]. அரசினரிடமிருந்து அனுமதி அல்லது உரிய முறையில் உரிமம் பெற்ற பின்னர் அன்றி மேற்சொன்ன தங்கம் அல்லது மற்றக் கனிப் பொருள்களை எடுத்து வேலை செய்வதற்கு உரிமையில்லை.

(9) [2]அரசினரின் ஒப்பளிப்பின்றி இந்தியக் குடியல்லாத வேறொருவருக்கு அதைப் பாதீனம் செய்வது ஒப்படையைச் செல்லாததாக்கிவிடும். [3]

(10) ஒப்படை நிபந்தனைகளில் யாதொரு நிபந்தனையும் மீறப்பட்டால் அரசினர் நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டு அதில் பிரவேசிக்கலாம்.

19–12–1940. தேதி 3149, அ.ஆ.வரு.
24–4–1941 தேதி, 1100, வ.து.வா.செ.பலவ.

(i) மேல்முறையிடு அல்லது ரிவிஷன் * ரிவிஷன் இல்£ ஒப்படை ஆணை ரத்து செய்யப்பட்டால் அல்லது ஒப்படை நிபந்தனைகளை அனுசரித்து நிலத்தை அரசினர் திரும்ப எடுத்துக்கொள்ளவாரெனில் ஒப்படை பெற்றிருப்பவர் நிலத்தில் கட்டியிருக்கக்கூடிய கட்டடங்கள் அல்லது செய்திருக்கக்கூடிய மற்ற மேம்பாடுகளுக்கு ஈடு பெற உரிமையில்லை.

* வீட்டு மனை ஏலத்தில் விடப்பட்டால்,

£வீட்டு மனை தனி உடன்படிக்கையின் பேரில் விற்கப்பட்டால்.

குறிப்பு.—(i) விவர அட்டவணையில் எவ்வகைக் கட்டடம் கட்ட வேண்டும் என்பதைச் சாதாரணமாகக் காட்டுவதுடன், நீள அளவு குறிக்கப்பட்ட தரைப் படமும் அதில் இருக்க வேண்டும். படம் வரைய முடியாவிட்டால் ஒவ்வொரு திசை நீள அளவுகளைக் குறிப்பிட வேண்டும்.

(ii) ஒப்படை பெற்றிருப்பவர்களின் ஏழ்மை காரணமாக விலையில்லை மற்றும் அல்லது தீர்வையில்லாமல் வீட்டு மனைகள் ஒப்படை செய்யும்போது அதற்குப் பின்வரும் நிபந்தனைகளைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும் :—

ஒப்படைத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் நிலம் விற்பனை, கொடை அடைமானம் அல்லது யாதொரு விதமான குத்தகையிலும் பாதீனம் செய்யப்பட்டால் அல்லது இப் பத்து ஆண்டுக் காலத்திற்குப்புறம் சட்ட முறை நிறைவேற்றக் கட்டளையால் அல்லது வேறு வகையில் முதல் முதலில் ஒப்படை பெற்றவர் அல்லது அவரது சட்ட முறை வாரிசுகளின் உரிமையில் நிலம் இல்லாது விடுபடுமாயின் நிலம் கொடை அரசினரால் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதற்குட்பட்டு யாதொரு ஈடும் கொடாமல் அல்லது நிலத்தின் விலைத் தொகையைத் திரும்பக் கொடாமல் நிலத்தில் பிரவேசித்து அதைச் சுவாதீனம் செய்து கொள்ள அரசினருக்கு உரிமை உண்டு இருப்பினும் இந்தத் தடை நில மேம்பாடு சட்டம், விவசாயிகள் கடன் சட்டம் ஆகிய இவற்றின் கீழ் அரசினருக்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் கட்டடத்துடன்

நிலம் அடைமானத்திற்கும் செய்யப்படுவதற்குப் பொருந்தாது. மேலும் இக் கடை, பின்னர் நில உரிமை பெறும் சட்டத்தின் கீழ் இத்தகைய நிலங்களின் உரிமை பெறுவதில் ஈடுகொடுக்கப்படுவதற்கு இத்தடை இடையூறாகாது. கொடையைத் திரும்பி எடுத்து கொண்டு அதில் பிரவேசிக்கும் உரிமை கோட்ட ஆட்சியாளருக்கு சட்ட முறையில் சாரும்.

13–2–1932 தேதி, 355, அ.ஆ.வரு. கைப.
18–2–1932 தேதி, 6, வ.து.வா.செ.

(iii) தோற்றுவாயிலும் 11-ஆவது நிபந்தனையிலும் உள்ள கோட்டிற்குக் கீழ் அல்லது மேல் உள்ள சொற்களை சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு அடித்து விட்டு கருக்கொப்பம் இட வேண்டும்.

22–1–1934 தேதி, 128, அ.ஆ.வரு.
5–2–1934 தேதி, 18, வா.து.வா.செ.

(iv). (5)-ஆவது நிபந்தனை நகராட்சியல்லா நகரங்களில் மாத்திரம் நிறைவேற்ற வேண்டும்.

(V) கூட்டுறவுச் சங்கங்களில்லாதபோது அமைக்கப்பட்ட குடி இருப்புகளில் தனித்தனி வீட்டு மனைகள் ஒப்படை செய்யும்போது பின்வரும் நிபந்தனையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்—

ஒப்படை பெற்றவர் நன்னடத்தை அற்றவரெனில் அல்லது அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும், குடியிருப்புக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு நடந்துகொள்ளவில்லையெனில் அல்லது வீட்டிடத்தைச் சுகாதாரத் துப்புரவு முறையில் வைத்துக் கொள்ளவில்லையெனில் ஒப்படை தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் கோட்ட ஆட்சியாளரால் கொடை ரத்து செய்யப்படுவதற்குட்படும். மேலும் ஒப்படைப் பெற்றிருப்பவர் நன்னடத்தை உடையவராகவும், அவர் வீட்டைக் கட்டுவதிலும் அதை அமைத்துக் கொள்வதிலும், குடியிருப்புக்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகவும் கோட்ட ஆட்சியாளர் மனை நிறைவுகொள்ளும்வகையில் கண்டுகொண்டாலன்றி அக்கொடை முன் சொன்ன மூன்று ஆண்டின் இறுதியில் நிரந்தரமாக்கக் கூடாது.

12–12–1940 தேதி, 3092, அ.ஆ.வரு.பலவ.
20–2–1941 தேதி, 16, வ.து.வா.செ.அச்சு.
*2–10–1899 தேதி, 239, வ.து.வா.செ.
17–2–1900 தேதி, 139, அ.ஆ.
[1]10–4–1902 தேதி, 80, வ.து.வா.செ.
2–8–1928 தேதி, 1738, அ.ஆ. வரு.
18–7–1923 தேதி, 52, வ.து.வா.செ.
[6]7–10–1930 தேதி, 795, அ.ஆ.வரு.பலவ.
[7]7–10–1930 தேதி, 1894, அ.ஆ.வரு.பலவ.
[1]1–5–1937 தேதி, 772, அ.ஆ.வரு.பலவ.
3–3–1914 தேதி, 134, வ.து.வா.செ.
[1]15–12–1917 தேதி, 217, வ.து.வா.செ.
[8]13–5–1918 தேதி, 1867, அ.ஆ.வரு.
[4]21–8–1928 தேதி, 87, வ.து.வா.செ.
[5]2–7–1928 தேதி, 1025, அ.ஆ.வரு.பலவ.
[6]13–5–1927 தேதி, 28, வ.து.வா.செ
[1]13–10–1930 தேதி, 76, வ.து.வா.செ.
29–4–1937 தேதி, 48, வ.து.வா.செ.அ.சு.

(12) ஒப்பனை செய்யப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விலை அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் இவ்வாறு ஒப்பனை செய்யப்பட்ட பின்னர் நிலங்களில் வளரக்கூடிய சந்தன மரங்கள் அவற்றின் கிளைகள், வேர்கள், இவற்றின் உரிமையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது அவற்றின் வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்திக் தங்கள் விருப்பம் போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதி யில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவை வெட்டச் செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு ஒப்பனை பெறுபவருக்கு உரிமை இல்லை.

(13) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறாமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் செய்வதில் கலெக்டர் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் ஒப்பனை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(14) அரசாங்க அலுவலர்கள் மரங்களின்மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் மோசக் கருத்துடன் திருத்தப்படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் ஒப்பனை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(15) மேலே குறிப்பிட்டுள்ள (12), (13) அல்லது (14)-ஆவது நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப்படாவிடின் ஒப்பனை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ, அத்தகைய ஈட்டுத் தொகையை, அவர் அரசினருக்குச் செலுத்தி விட வேண்டும். ஒப்பனையை ரத்து செய்து நிலத்தில் பிரவேசிக்கவும் அரசினருக்கும் உரிமை உண்டு. அதன் பின்னர் அந்நிலம் முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்துவிடும். இந்த நிலையில் ஒப்பனை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமையுடையவராவர்.

(16) ஒப்பனை நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று மீறப்பட்டதாக அரசினர் கருதுவாரெனில் நிலம் திரும்ப எடுத்துக்கொள்ளப்படும். ஒப்பனை நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று மீறப்பட்டதா இல்லையா என்பதைப்பற்றி ஏதேனும் கேள்வியெழுமேயானால் அதைப்பற்றி அரசினரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வகையில் அரசினரின் தீர்ப்பே முடிவானதாகும்.

17–2–1950 தேதி, 423, அ.ஆ.வரு.பலவ.
15–7–1940 தேதி, 34852 க!50-1 குறிப்பு. வரு.
9–9–1950 தேதி, 28, வ.து.வா.செ. அச்சு.

குறிப்பு.—கீழே குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் ஒப்பனை செய்யப்படும் பொழுது, சந்தன மரங்கள் ஒதுக்கி வைக்கப்படுவது சம்பந்தமாக (12) முதல் (15) வரையிலுள்ள நிபந்தனைகளை அடித்துவிட வேண்டும்.

செங்கல்பட்டு, சென்னை, தஞ்சாவூர்.

[இ. ஆ. 21, பக்தி 16

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவரது ஆணையையும் கட்டளையையும் அனுசரித்து.

மாதம் ஆண்டு தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

24-6-1941 தேதி, 1448, அ. ஆ. வரு. பலவ.
14-11-1941 தேதி, 124, வ. து. வா. செ. அச்சு.

இணைப்பு —XXV

(21-ஆவது நிலை ஆணை, 16-ஆவது பத்தி.)

பாளைய நில ஆட்சி விதிகள்.

அத்தியாயம் 1—பொது.

1. சுருக்கமான தலைப்பும் இயங்கும் அளவு.—(1) இவ்விதிகள் 1937-ம் ஆண்டு பாளைய நில ஆட்சி விதிகள் என்று பெயர் பெறும்.

(2) இவை இந்திய யூனியனிலுள்ள எல்லாப் பாளையங்களுக்கும் பொருந்தும்.

2. விளக்கமாகப் பொருள் கூறும் உட்பிரிவுகள்.—இந்த விதிகளில் பொருளில் அல்லது சூழ்நிலையில் ஏதேனும் மாறுபாடாக இருந்தாலன்றி—

(அ) "இந்தச் சட்டம்" என்பது 1924-ம் ஆண்டு பாளையங்கள் சட்டம் ஆகும்.

(ஆ) "அங்காடி" என்பது இந்த விதிகளின் பொருட்டு அங்காடி என்று அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட ஏதேனும் ஒரு பாப்பாகும்.

(இ) "கட்டட மனை" என்பது கட்டடம் கட்டப்பட்டாலும் அல்லது கட்டப்படாவிட்டாலும் கட்டடம் கட்டுவதற்காக அல்லது கட்டடம் கட்டும் நோக்கத்துடன் உடைமையில் வைக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு நிலத்தின் பாகம் ஆகும். மேலும் அதில் கட்டப்பட்ட யாதொரு கட்டடத்தால் அடைப்பு செய்யப்பட்ட அல்லது அதை ஒட்டியுள்ள திறந்த வெளியிடம் அல்லது முற்றம் இவையும் கட்டட மனை என்பதில் அடங்கும்.

(ஈ) "படைத்துறை" என்பதில் "கப்பற்படை", விமானப்படை இவையும் அடங்கும்.

(உ) "படைத்துறை எஸ்டேட் அலுவலர்" என்றால் மத்திய அரசாங்கத்தால் இந்த விதிகளின் கீழ் படைத்துறை எஸ்டேட் அலுவலராகக் கடமைகளை ஆற்ற மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட அலுவலர் ஆவர்.

(ஊ) "நில அளவை எண்" என்பது பாளைய நிலப்பகுதியில் தனியாகப் பதிவு செய்யப்படச் சுட்டிக் கர்ட்டக் கூடிய எண்ணினால் குறிக்கப்படக்கூடிய நிலப் பகுதி நிலத்தின் பாகமாகும்.

நி. ஆ. 21, பத்தி 16]

அத்தியாயம் II.

நிலப் பாகுபாடும் மாறுதலும் தீர்வைகளின் தர வரிசை அட்டவணையும் மேலாண்மையும்.

3. பொது நிலப் பதிவேடு.—(1) படைத் துறை எஸ்டேட் அலுவலர் பாளையத்திலுள்ள எல்லா நிலங்களுக்கும் I ஆவது விவர அட்டவணையில் குறிப்பிட்ட படிவத்தில் பொது நிலப் பதிவேடு ஒன்று தயாரிக்க வேண்டும். அந்நிலங்கள்—

(அ) உட்புற அங்காடிகள்.

(ஆ) வெளிப்புற அங்காடிகள்,

என இவ்வினத்தின்

(2) மத்திய அரசாங்கத்தார் அல்லது மத்திய அரசாங்கத்தாரால் இதன் பொருட்டு நியமிக்கப்படும் வேறு அதிகாரி இவர்களின் முன் அனுமதியின்றியும் ஒப்பளிப்பின்றியும் அல்லது 10, 45 விதிகளை அனுசரிக்காமல் பொது நிலப் பதிவேட்டில் யாதொரு மாறுதலும் அல்லது கூடுதலும் செய்யலாகாது.

4. நிலப் பாகுபாடு.—3ஆவது விதியில் குறிப்பிடப்பட்ட பொது நிலப் பதிவேட்டின் பொருட்டு—

(அ) மத்திய அரசாங்கத்தார் அல்லது அவர்களால் இதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட வேறு அதிகாரி இந்திய அரசாங்கத்தாருக்குச் சட்ட உரிமையில் உள்ள பாளைய நிலத்தை இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கலாம். அவையாவன :—

(i) குறிப்பிட்ட படைத்துறை உபயோகங்களுக்காக வேண்டிய அல்லது ஒதுக்கப்பட்ட நிலம் "அ" வகுப்பு நிலமாகும்.

(ii) அவ்வாறு வேண்டப்படாத அல்லது ஒதுக்கிவைக்கப்படாத ஆனால் படைத்துறை ஆட்சி சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தாருடைய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்காகப் பாளையத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருக்கும் நிலம் "ஆ" வகுப்பு நிலமாகும்.

(ஆ) அந்தச் சட்டத்தின் 108ஆம் பிரிவின் கீழ்க் கழகத்தின் உரிமையிலுள்ள நிலம் "இ" வகுப்பு நிலம் எனப்படும்.

5. "அ" வகுப்பு நிலம்.—மத்திய அரசாங்கத்தாரால் அல்லது இதற்காக அதனால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற அதிகாரியால் "அ" வகுப்பு நிலம் பின் வரும் உள் வகுப்புகளாகப் பிரிக்கப்படும் ; அவையாவன :—

(i) "அ" வகுப்பு (1)—இந்தியப் படை ஒழுங்கு முறைகள் 419, 421, 425 பத்திகளில் கண்டு வகுக்கப்பட்டுள்ளவாறு படைத்துறை அலுவல் முறையில் தேவைப்படுவனவாகிய அரண்கள், பாளையங்கள், பண்டசாலைகள், படைக்கலச் சாலைகள், வாலூர்தி நிலையங்கள், அரசினர் சொத்தான படைத் துறை

அதிகாரிகள் மாளிகைகள், பயிற்சி இடங்கள், படைத்துறைப் பொழுது போக்கிடங்கள், துப்பாக்கிப் பயிற்சியிடங்கள், புல்பண்ணைகள், பால் பண்ணைகள், செங்கல் சூளைகள், படைவீரர்களுக்கும் மருத்துவ நிலையத் தோட்டங்கள் முதலியவற்றிற்காக படைத்துறை அதிகாரிகளுக்கும் உண்மையாகவே பயனுக்கப்பட்டு அல்லது அநுபோகம் செய்யப்பட்டு வரும் நிலம்.

(ii) "ஆ" வகுப்பு (2).—படைத்துறை அதிகாரிகளால் உண்மையாக உபயோகிக்கப்படாத அல்லது அநுபோகத்திலில்லாத ஆனால் தற்காலிகமாக அன்றி வேறு உபயோகங்களுக்கு அல்லது அநுபோகத்திற்குக் குறிப்பிட்ட படைத்துறை ஆட்சேபணைகள் உள்ள நிலம்.

விளக்கம்.—இந்த விதியின் பொருட்டு—

(அ) படை வகுப்புகளின் ஒழுங்குமுறை, சுகாதாரம், நன்மை இவற்றிற்காக அல்லது பாளையத்தின் பாதுகாப்பிற்காகவும் அதில் குடியிருப்பவர்களின் பாதுகாப்பிற்காகவும் மத்திய அரசாங்கத்தாரால் விரும்பத்தக்கதென்று அறிவிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டு வரும் நிலத்தை உபயோகப்படுத்துவதற்கு அல்லது அநுபோகம் செய்யப்படுவதற்குக் குறிப்பிட்ட படைத்துறை ஆட்சேபணைகள் இருக்கின்றன என எடுத்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) படைத் துறைப் பொழுதுபோக்கிடங்கள் என்பவை படை வகுப்பு அங்கத்தினர்களின் தனியுரிமைக்குட்பட்ட மேலாண்மை, கட்டுப்பாடு இவைகளுக்குட்பட்ட பொழுதுபோக்கிடங்கள் ஆகும்.

6. "ஆ" வகுப்பு நிலம்.—மத்திய அரசாங்கத்தாரால் அல்லது இதற்காக அதனுல் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் அதிகாரியால் பின்வரும் உள் வகுப்புகளாகப் பிரிக்கப்படும்; அவையாவன :—

(i) "ஆ" வகுப்பு (1) நிலம்.—பாதுகாப்புத் துறையும் இருப்புப் பாதை ஆட்சியும் தவிர மற்ற மத்திய அரசாங்கத் துறைகளில் யாதொன்றுல் உண்மையாக அநுபோகம் செய்யப்பட்டு அல்லது பயன்படுத்தப்பட்டு வரும் நிலம்.

(ii) "ஆ" வகுப்பு (2) நிலம்.—மாநில அரசாங்கத் துறைகளில் யாதொரு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது உண்மையான அநுபோகத்தில் அல்லது உபயோகத்தில் இருந்து வரும் நிலம்.

(iii) இவ்விதிகளை அனுசரித்துத் தனிப்பட்டவர் தம் உடைமையில் வைத்துக்கொண்டிருக்கும் நிலம் அல்லாத 1899 அல்லது 1912ஆம் ஆண்டு பாளைய விதித் தொகுப்பில் கண்டுள்ளவற்றின் கீழ் அல்லது அவற்றிற்கு முன்னர் நடைமுறையிலிருந்த நிர்வாக ஆணைகளுக்கிணங்க, எந்நிபந்தனைகளின் கீழ் மத்திய அரசாங்கத்தார் நிலத்தின் தனியுரிமையைத் தங்களிடமே வைத்துக்கொள்கிறார்களோ அல்லது வைத்துக் கொண்டிருக்கின்றனரோ, அந்நிபந்தனைகளுக்குட்பட்டு வைத்துக் கொண்டிருக்கும் அல்லது வைத்துக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் நிலம்.

(iv) "ஆ" வகுப்பு (4) நிலம்.—மற்ற எந்த வகுப்பிற்குள்ளும் சேர்க்கப்படாத நிலம்.

நி. ஆ. 21, பத்தி 16]

7. நிலம் ஒரு வகுப்பிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுதல்.—இந்திய அரசாங்கத்தார் அல்லது கழகத்தின் உரிமைக்குட்பட்ட நிலத்தின் பாகுபாட்டில் மத்திய அரசாங்கம் அல்லது இதற்காக அவர்களிடமிருந்து அதிகாரம் பெற்ற அதிகாரி இவர்களாலன்றி மாறுதல் எதுவும் செய்யக்கூடாது. ஒரு வகுப்பினின்றும் மற்றொரு வகுப்புக்கு நிலத்தை மாற்றுவதற்குரிய நிபந்தனைகள், மத்திய அரசாங்கத்தாரின் ஆணைகளை அனுசரித்து அல்லது அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் ஏதேனும் சட்டம் அல்லது விதிக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். ஆனால், 15 முதல் 48 வரையுள்ள விதிகளில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு "ஆ" (4)ஆவது வகுப்பு நிலத்தை "ஆ" 3ஆவது வகுப்பு நிலமாக அந்த அதிகாரி மாற்றலாம்.

8. தீர்வைகளின் தவிர விவர அட்டவணை.—நிலம் இருக்குமிடம், மண்ணின் தன்மை, அண்மையிலிருக்கும் விவசாய நிலங்களுக்கு அருகிலுள்ள கட்டடம் கட்டும் இடங்களுக்கு உரிய விதங்கள் இவற்றை அனுசரித்து பாகுபத்திலுள்ள இடங்களுக்கு விவசாயத்திற்காக அல்லது மற்ற உபயோகங்களுக்கு உபயோகித்துக் கொள்ளுவதற்காகத் தகுதியான தரப்படுத்தப்பட்ட வாடகை வரிசை அட்டவணைகளைப் படைத்துறை எஸ்டேட் அலுவலர் கலெக்டரைக் கலந்து கொண்டு II ஆவது விவர அட்டவணையில் கண்டுள்ள படிவத்தில் அப்போதைக்கப்போது தொகுக்க வேண்டும்.

9. நிலத்தின் மேலாண்மை.—(1) படைத்துறை அதிகாரிகளின் நேரடியான நிர்வாகத்திலுள்ளவை என மத்திய அரசாங்கத்தாரால் அவ்வப்போது அறிவிக்கப்படும் நிலப் பகுதிகள் அல்லது நிலப்பகுதி வகுப்புகள் நீங்கலாக உள்ள "அ" (1) வகுப்பு நிலம் படைத்துறை எஸ்டேட் அதிகாரியின் மேலாண்மைக்கு ஒப்படைக்கப்படும்.

(2) "அ" (2) வகுப்பு நிலம் எஸ்டேட் அலுவலரின் சட்ட உரிமை மேலாண்மையிலிருக்கும்.

(3) "அ" வகுப்பு (1) நிலம் அந்த நிலத்தைச் சுவாதீனத்தில் வைத்திருக்கும் அரசாங்கத்துறை அல்லது ஆட்சியின் சட்ட உரிமை மேலாண்மையிலிருக்கும்.

(4) "அ" வகுப்பு (2) நிலம், நிலத்தை அநுபோகத்தில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மாநில அரசாங்கத்தின் சட்ட உரிமை மேலாண்மையிலிருக்கும்.

(5) "ஆ" வகுப்பு (3) "ஆ" வகுப்பு (4) நிலங்கள் சாதாரணமாகப் படைத்துறை அதிகாரியின் சட்ட உரிமை மேலாண்மையிலிருக்கும். ஆனால், அந்நகைய எஸ்டேட் நிலத்தின் மேலாண்மையை மத்திய அரசாங்கத்தார் ஒவ்வொரு வகையிலும் தீர்மானிக்கும் நிபந்தனைகளுக்குட்படுத்தி கழகத்தின் மேலாண்மைக்கு ஒப்படைக்கலாம்.

(6) "இ" வகுப்பு நிலத்தின் மேலாண்மை அந்த சட்டத்தின் 108 ஆம் பிரிவை அனுசரித்துக் கழகத்தின் மேலாண்மையிலிருக்கும்.

அத்தியாயம் III.

படைத்துறை எஸ்டேட் அலுவலரால் மேலாண்மை செய்யப்படுவது.

10. பொது நிலப் பதிவேடு வைத்து வருதல்.—(1) கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது சட்ட முறையில் உரிமை நிர்வாகத்திலிருக்கும் அங்காடிகள் உள்ள நிலம் நீங்கலாக மற்ற எல்லா நிலங்களுக்கும் 3 ஆவது விதியை அனுசரித்து தயாரிக்கப்பட்ட பொது நிலப் பதிவேடு ஒன்றை படைத்துறை எஸ்டேட் அலுவலர் எழுதி வைத்துவர வேண்டும். அதன் 1ஆவது சட்டத்தில் எல்லா மாறுதல்களையும் பதிவு செய்வதுடன் கீழ்க்கண்ட விவரங்களையும் அதில் எழுதி வைக்க வேண்டும் :—

(i) 1882 ஆம் ஆண்டு சொத்து மாற்றுதல் சட்டத்தின் 54, 59, 107 அல்லது 123ஆவது பிரிவின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ள பாளைய நிலங்களில் உரிமை அல்லது பாத்தியதையில் ஏற்படும் மாறுதல்களைப்பற்றி 1924-ம் ஆண்டு பாளையச் சட்டத்தின் 287 ஆவது பிரிவின் கீழ் வரப்பெறும் தகவலை அனுசரித்தும், அந்தப் பதிவேட்டின் எந்தக் கட்டத்திலுள்ள பதிவிற்கு மாறுதல் செய்யத்தக்க தகவலைக் கழகம் கொடுக்கும் போதும்.

(ii) அத்தகைய உரிமை அல்லது பாத்தியதையில் மத்திய அரசாங்கத்தார் வழங்கும் ஒவ்வொரு கொடையையும்.

அந்தச் சட்டத்தின் 73ஆவது பிரிவின்கீழ் செய்யப்படும் அத்தகைய உரிமை அல்லது பாத்தியதையின் மாறுதலைப் பற்றி 45ஆவது விதியின் கீழ் கழகம் தமக்கு அனுப்பும் ஒவ்வொரு அறிக்கையும்—

(1) மத்திய அரசாங்கத்தார், மாநில அரசினரின் துறைகள் இருப்புப் பாதை ஆட்சியினர் இவர்களுக்குள் ஏற்படும் ஒவ்வொரு அநுபோக மாறுதலையும்.

(2) மேலே சொல்லப்பட்டவாறு உரிமை அல்லது பாத்தியதை இவற்றில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருப்பதாகத் தாம் நம்புவதற்குக் காரணமிருந்த அதைப்பற்றித் தமக்கு அறிக்கை செய்யப்படாவிட்டாலும் படைத்துறை எஸ்டேட் அலுவலர் அதையும் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

11. வரவினங்களை வரவு வைத்தல்.—படைத்துறை எஸ்டேட் அலுவலர் மேலாண்மைக்கு ஒப்படைக்கப்பட்ட நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய் முழுமையும் மத்திய அரசாங்கத்திற்கு வரவு வைக்க வேண்டும்.

12. படைத்துறை எஸ்டேட் அலுவலர் நில வருவாய்ப் பதிவேடு.—படைத்துறை எஸ்டேட் அலுவலர் மேலாண்மையில் ஒப்படைக்கப்பட்ட எல்லா "ஆ" வகுப்பு (2) "ஆ" வகுப்பு (3) நிலங்களின் வருமானத்தைக் காட்டும், III ஆவது விவர அட்டவணையில் கண்டுள்ள படிவத்தில் பதிவேடு ஒன்றைப் படைத்துறை எஸ்டேட் அலுவலர் எழுதி வைத்திருக்க வேண்டும். இந்தப் பதிவேடு ஒன்றைப் படைத்துறை எஸ்டேட் அலுவலரின் நில வருவாய்ப் பதிவேடு எனப்படும். கட்டட மனைகள், விவசாய நிலம், மற்ற நிலங்கள் இவற்றிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் வருவாயைக் காட்டுவதற்காக ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இது தயாரிக்கப்பட வேண்டும்.

நி. ஆ. 21, யத்தி 16]

அத்தியாயம் IV.

"அ" வகுப்பு நிலத்திற்குச் சிறப்பு விதிகள்.

13. "அ" வகுப்பு நிலப் பட்டியல்கள்.—(1) தம்முடைய செயலாண்மையில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பாளையத்திலுள்ள "அ" (1), (2) ஆவது வகுப்பு நிலத்தின் தரைப்படங்களும் விவர அட்டவணைகளும் எஸ்டேட் அலுவலர் எழுதி வைத்திருக்க வேண்டும்.

(2) மத்திய அரசாங்கத்தார் அனுமதியின்றி தரைப்படங்களிலும் விவர அட்டவணைகளிலும் யாதாரு மாறுதலும் செய்யக்கூடாது.

(3) ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதம் மூதல் தேதிக்குப் பின்னர் ஜூலை மாதம் 1ம் தேதிக்கு அப்பால் அல்லாமல் "அ" வகுப்பு நிலத்தின் தரைப்படங்களும் விவர அட்டவணைகளும் தவறேதுமின்றிச் சரியாக இருக்கின்றனவா என்பது பற்றிய சான்று* நிலைய ஆணை அதிகாரியின் எதிர் கையொப்பத்துடன் அவற்றில் அனுமதி பெறுத கட்டுமானங்கள் அல்லது ஆக்கிரமிப்புகள் உள்ளனவா என்பதைப் பற்றிய ஒரு அறிக்கையுடன் மேல னுப்ப வேண்டும்.

14. "அ" வகுப்பு நிலங்களுக்குரிய சிறப்பு விதிகள்.—(1) "அ" வகுப்பு (1) நிலத்தின் ஆட்சி நிர்வாகமும் அதில் செய்யக்கூடிய ஆக்கிரமிப்புகளும் கண்டு பிடிப்பது தடுப்பது உட்படக் கடமைகளும் அவ்வப்போது நிலத்தின் அநுபோக பொறுப்பை வகிக்கும் படைத்துறை அலுவலரைச் சாரும்.

"அ" (2) வகுப்பு நிலத்தின் நிர்வாக அதிகாரம் மத்திய அரசாங்கத் தாரை சார்ந்தது.

(2) படைத்துறை நிலைய ஆணை அதிகாரியைக் கலந்து கொண்டு அவரது பொதுவான மேற்பார்வையில், படைத்துறை எஸ்டேட் அலுவலர் "அ" நிலத்தின் (மூல வளத்தைப் பெருக்குதல், அதில் உள்ள மரங்களின் மேல் பல்னை விற்பனை செய்தல் அதில் மரங்களை வைத்து வளர்த்தல் உட்பட) நிர்வா கத்தை மேற்கொள்வார். படைத்துறை நிலை ஆணை அதிகாரியின் விருப்பத் திற்குட்பட்டு மரம் நட்டு வளர்ப்பதைப் பற்றியும் படைத்துறை நிலப்பரப்பு களில் விவசாயம் செய்வதைப்பற்றியும் நடைமுறையிலுள்ள படைத்துறை ஒழுங்கு முறைகளை அனுசரித்தும் படைத்துறை எஸ்டேட் அலுவலர் தமக்கு அளிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுத் தொகைக்குள் "அ" வகுப்பு நிலத்தை மேலாண்மை செய்து வருவார்.

(3) மத்திய அரசாங்கத்தாரின் அல்லது இதற்காக அவர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் முன் ஒப்பளிப்பின்றி 5 ஆவது விதி (1) ஆவது உள்விதியில் குறிப்பிடப்பட்ட உபயோகங்களுக்கெல்லாம் வேறு எக்காரியங் களுக்கும் "அ" வகுப்பு (1) நிலத்தைப் பயனுக்கிக் கொள்ள அல்லது அனுபோகம் செய்யக்கூடாது.

இருப்பினும், படைத்துறை நிர்வாகத்திலிருக்கும் "அ" வகுப்பு (1) நிலத்தை அரசாங்க வேலை நடத்துவதற்கான பொருள்களைச் சேகரித்து

வைக்குமிடமாக ஒப்பந்தக்காரர்களின் தற்கால உபயோகத்திற்கு படைத்துறை அதிகாரிகள் அனுமதிக்கலாம். இவ்வனுமதியும் அந்த வேலையின் பொறுப்புடைய படைத்துறை பொறி இயல் பணித்துறை அதிகாரி ஒருவரால் கொடுக்கப்பட்டு, அவர் நேர்மையானதென்று கருதக் கூடிய கால அளவு வரையில் மாத்திரமே நடைமுறையில் இருக்க வேண்டும்.

(4) "ஆ" வகுப்பு (2) நிலத்தைச் சாதாரணமாகக் காலியாக வைத்திருக்க வேண்டும். இருப்பினும், அதன் தற்கால உபயோகம் அல்லது அநுபோகத்திற்குப் படைத்துறை எஸ்டேட் அதிகாரி 39ஆவது விதியின் கீழ் உரிமம் கொடுக்கலாம். அல்லது தலைமை ஆணை அதிகாரியின் முன் ஒப்பளிப்புடன் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கோ அல்லது மத்திய அரசாங்கத்தாரின் முன் அனுமதியுடன் வேறு எந்தக் கால அளவுக்கோ படைத்துறை எஸ்டேட் அலுவலர் குத்தகைக்கு விடலாம்.

(5) மத்திய அரசாங்கத்தாரின் அல்லது இதற்காக அவர்களால் நியமிக்கப்படும் அதிகாரியின் முன் ஒப்பளிப்புடன் அவர்கள் விதிக்கத்தக்க நிபந்தனைகளுக்குட்பட்டு அன்றி "அ" வகுப்பு நிலத்தில் நிலையான அல்லது தற்காலிகமாக எத்தகைய கட்டடமும் கட்டக்கூடாது.

ஆனால் (அ) படைத்துறை எஸ்டேட் அலுவலர் (4)ஆவது உள்விதியின் கீழ் எந்த "அ" வகுப்பு நிலத்திற்கு உரிமம் வழங்குகின்றாரோ அந்த நிலத்தில் நிலை ஆணை அதிகாரியின் முன் ஒப்பளிப்புடன் தற்காலிகமாகக் கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்படலாம்.

(ஆ) படைத்துறை ஆதின அதிகாரியின் (4)ஆம் உள் விதியின் கீழ் குத்தகைக்கு விடப்பட்ட "அ" வகுப்பு (2) நிலத்தில், குத்தகைக்கு விடும் அலுவலரின் முன் அனுமதி பெற்றுத் தற்காலிகக் கட்டடம் கட்டிக் கொள்ளப்படலாம்.

அத்தியாயம் V.

படைத்துறை எஸ்டேட் அலுவலர் நிலம் கொடுக்க முடிவு செய்தல்.

15. நில விற்பனை தடுக்கப்பட்டிருக்கிறது.—மத்திய அரசாங்கத்தாரின் குறிப்பான ஆணையின்றி எந்த உபயோகத்திற்கும் நில விற்பனை தடை செய்யப்பட்டிருக்கிறது.

16. கட்டடங்கள் கட்டக்கூடிய இடங்கள்—குத்தகைகள் (சாதாரண ஒப்பந்தங்கள்).—(1) இவ்விடங்களைச் சாரணமாக முதலில் மூப்பது ஆண்டுகளுக்குக் குறைந்திராத காலத்துக்கு குத்தகையில் கொடுத்து முடிவு செய்யலாம். ஒப்பந்தக்காரர் விரும்பினால், அத்தகைய சம இடைக்காலங்களுக்குப் பெரும்மம் தொண்ணூறு ஆண்டுகளுக்கு மேற்படாத காலம் வரை புதுப்பிக்கலாம்.

(2) 19ஆவது விதியில் குறிப்பிட்டவாறு விதிக்கப்படும் ஆண்டுத் தீர்வைக்குக் குத்தகை உட்படும் ஒவ்வொரு குத்தகையும் புதுப்பிக்கப்படும்

நி. ஆ. 21, பத்தி 16]

போது அந்த ஆண்டு வரி திருத்தி அமைக்கப்படுவதற்குள்ளாகும். ஆரம்பத் தொகையிலிருந்து ஏல விற்பனையைத் தொடங்கி மிக அதிகமான விலை கூறுப வருக்குக் குத்தகையைப் பகிரங்க ஏலத்தில் விட்டு விற்பனை முடிவு செய்யப் படும்.

(3) குத்தகை முதற்காலப் பகுதி அல்லது பிற்பட்ட காலப் பகுதிகள் முடியும் போது புதுப்பிக்கப்பட்ட வரப்பெறும்போது IV ஆவது விவர அட்டவணையில் கண்டுள்ள படிவத்தில் அதற்கு எழுத்து வடிவில் ஒரு உடன் படிக்கை பெற வேண்டும்.

17. கட்டடம் கட்டக்கூடிய மனைகளுக்கு விண்ணப்பங்கள்.—(1) படைத் துறை எஸ்டேட் அதிகாரியின் மேலாண்மையிலுள்ள நிலத்தில் கட்டட மனைகளுக்காகச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்கள் V ஆவது விவர அட்டவணையில் குறிப்பிட்ட அச்சுப் படிவத்தில் படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு மேலனுப்ப வேண்டும்.

(2) ஒவ்வொரு விண்ணப்பத்திலும், வேண்டப்படும் நிலம் இருக்கும் இடம், எந்த உபயோகத்திற்காக அது வேண்டப்படுகிறது, விண்ணப்பம் செய்கிறவருக்கு பாளையத்தில் முன்னமே ஏதாவது நிலம் இருந்தால் அதன் பரப்பு முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பம் செய்து கொண்டவர் சொந்த செலவில் தயாரிக்கப்பட்ட மனையின் தரைப்படம் ஒன்றையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

18. நிலைய ஆணை அதிகாரி தள்ளுபடி செய்தபின் அனுசரிக்க வேண்டிய நடைமுறை.—படைத்துறை எஸ்டேட் அலுவலர், நிலையாணை அதிகாரிக்கு அந்த விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். நிலைய ஆணை அதிகாரி காரணங் களை எழுத்து வடிவில் பதிவு செய்து விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யலாம். அக்காரணங்கள் விண்ணப்பத்தின் படிவத்தில் எழுதப்படுவதுடன், 29ஆவது விதியில் கண்டுள்ளவாறு அப்படிவம் பூர்த்தி செய்யப்பட்வேண்டும். நிலைய ஆணை அதிகாரியின் முடிவை விண்ணப்பம் செய்தவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

19. நிலைய ஆணை அதிகாரி ஏற்பு அளித்த பின்னர் அனுசரிக்கத்தக்க நடை முறைத் தீர்வையும் தவணைக் கட்டண ஒதுக்கு விலையும் விதித்தல்.—(1) நிலைய ஆணை அதிகாரி விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டால், படைத் துறை எஸ்டேட் அலுவலர் தேவையாக இருக்குமாறு அந்த இடத்தை நில அளவை செய்வித்து விவர எல்லை வரையறுப்பு செய்விக்க வேண்டும். 8ஆவது விதியின் கீழ் தயாரிக்கப்பட்ட தீர்வை தர வரிசை அட்டவணையில் குறிப்பிட்ட வீதத்திற்கிணங்க ஆண்டுத் தீர்வையையும், குத்தகைக்குத் தோன்றக்கூடிய தவணைக் கட்டணத்தின் ஒதுக்கி வைக்கத்தக்க விலையையும் நிர்ணயிக்க வேண்டும்.

(2) எக்காரணத்தாலும் விதிக்கப்பட்டதுமான ஒதுக்கி வைத்துள்ள விலையைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கக்கூடாது. ஆண்டுத் தீர்வை தரப் படுத்தப்பட்ட வரிசை அட்டவணையில் விதிக்கப்பட்டுள்ள வீதத்திற்குக் குறைந்த வீதத்தில் விதிக்கக்கூடாது.

[நி. ஆ. 21, பத்தி 16

20. நில அளவு செய்தலும் எல்லை வரையறுத்தலும்.—(1) இடத்திற்கு நில அளவு செய்தல், எல்லை வரையறுத்தல் இவற்றில் ஏதேனும் ஒன்று செய்யப்பட்டிருந்தால் அத்தகைய அதன் செலவும், கட்டடம் கட்டுவதற்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட மனையுள்பட நிலத்திற்குத் திட்ட அமைப்புத் தயாரிப்பதற்காகச் செய்யப்பட்ட செலவில் ஒரு விதமும் அடங்குமாறு ஒதுக்கி வைத்துக்கொள்ளத் தக்க விலையைக் கணக்கிட வேண்டும்.

(2) இவ்வாறு நில அளவு செய்தலுக்கும் எல்லை வரையறுத்தலுக்கும் ஆகும் செலவை விண்ணப்பம் செய்து கொண்டவர் வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். அவர் கடைசியில் கொடுக்க வேண்டிய விலையிலிருந்து அது கழிக்கப்பட்டுச் செலுத்தியவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

21. ஏல அறிவிப்பு.—பிறகு, விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட இடத்தின் குத்தகையை ஏலத்தில் விற்பனை செய்வதற்குத் தேதி, இடம் காலம், நிபந்தனைகள் இவை அடங்கிய அறிவிப்பு ஒன்று VI ஆவது விவர அட்டவணையில் குறிப்பிட்ட எஸ்டேட் அலுவலர் விளம்பரம் செய்ய வேண்டும்.

22. ஏலம்.—குறித்த தேதியிலும் காலத்திலும் குறிப்பிட்ட இடத்தில் குத்தகையை ஏலத்திலும் விற்பனை செய்யப் படைத்துறை எஸ்டேட் அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகமான தவணைக் கட்டணம் செலுத்த ஒப்புக்கொள்பவருக்கு விற்பனை செய்ய வேண்டும். ஆனால், இந்தத் தவணைக் கட்டணம், 19 ஆவது விதியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கு விலைக்குக் குறைந்திராமல் இருந்தாலன்றி யாதொன்றிலும் குத்தகையை விற்பனை செய்யலாகாது.

23. ஏலத்தில் எடுத்தவர் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை.—ஏலத்தில் எடுத்தவர் ஏலத் தொகையில் பத்து சதவீதம் உடனடியாகச் செலுத்த வேண்டியதுடன், ஏலம் உறுதி செய்யப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் பாக்கித் தொகையைச் செலுத்தாவிட்டால் வைப்புத் தொகையை இழந்துவிட இசைவதாக ஓர் ஒப்பந்தமும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

24. ஏலத்தை உறுதி செய்தல்.—படைத்துறை எஸ்டேட் அலுவலர் ஏல முடிவைப் பற்றிய அறிக்கையையும், ஏல நடவடிக்கைகளையும் கலெக்டரின் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் ஏல நடவடிக்கைகளைத் தலைமை ஆணை அதிகாரிக்காயினும் அல்லது மத்திய அரசாங்கத்தாரால் இதற்காக நியமிக்கப்படும் அதிகாரிக்காயினும் ஒப்புவிப்பு பெறுவதற்காக அனுப்பி அத்தகைய ஒப்புவிப்பு வரப்பெற்ற பின்னர்தான் ஏல விற்பனை சரியாக, உறுதி செய்யப்பட்டதாகக் கொள்ள வேண்டும். ஆயினும் மதிப்பிட்ட நடப்பு விலை மதிப்புத் தொகை 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் ஏலம் உரிய முறையில் உறுதி செய்யப்பட்டதாகக் கருதப்படுவதற்கு முன் மத்திய அரசாங்கத்தாரின் ஏற்பையும் பெற வேண்டும்.

விளக்கம்.—இந்த விதியின் பொருட்டாக அந்தலத்தில் அலுவலகத்தில் இல்லாத வீட்டு மனைகளில் நில விற்பனைகளைக் கூடிய வரையில் அடிப்படையாகக் கொண்டு நடப்பு விலை மதிப்புத் தொகையை மதிப்பிட வேண்டும். அத்தகைய அடிப்படையில் கணக்கிட முடியாவிடின் அதை அந்த நிலத்தின்

தி. ஆ. 21, பத்தி 16]

நடப்பு விலை மதிப்புத் தொகை ஆண்டு மதிப்பின் இருபது மடங்குகளாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஆண்டு மதிப்பைக் கணக்கிடும்போது, விதிக்கப் பட்ட தீர்வையையும், ஏலத்தில் அதிகமாக வசூலித்த தவணைக் கட்டணத்தை யும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

25. கலெக்டரின் அதிகாரங்கள்.—(1) 24 ஆவது விதியின் கீழ், தமக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைகள் கிடைத்ததும், தமது இசைவைத் தெரிவிப்ப தற்கு முன் கலெக்டர்,

(அ) நடவடிக்கை முழுமையும் இந்த விதிகளைக் கண்டிப்பாக அனு சரித்து நடத்தப்பட்டனவா என்பதையும்,

(ஆ) ஆண்டுத் தீர்வையும் ஏலத்தில் கிடைக்கப்பெற்ற விலை முன் கட்டணத் தொகையும் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் நேர்மை யானவை என்பதைக் கவனிக்க வேண்டும்.

(2) இவ்விரண்டு அம்சங்களில் ஏதாவது ஒன்றிலும் கலெக்டர் மன நிறைவு கொள்ளாவிட்டால், அந் நடவடிக்கைகளை ரத்து செய்து விடலாம் என்று பரிந்துரையுடன் அவற்றைப் படைத்துறை எஸ்டேட் அதிகாரிக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். பின்னர் மேற்கண்ட விதிகளை அனுசரித்துப் புதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(3) அந்த இடத்தைக் கொடுப்பது எக்காரணத்தினாலாவது பொது நன்மைக்கு இடஞ்சலாக இருக்குமென்று கலெக்டர் கருதுவாரெனில் அதற் குரிய காரணங்களைக் குறிப்பிட்டுத் தம்முடைய பரிந்துரைகளை அனுசரித்து அதைப் புனராலோசனை செய்யுமாறு அந் நடவடிக்கைகளைப் படைத்துறை எஸ்டேட் அலுவலருக்குத் திருப்பி அனுப்பிவிடலாம்.

(4) நிலைய ஆணை அதிகாரி, கலெக்டருடைய பரிந்துரைகளை ஒப்புக் கொள்ளாவிட்டால் நிலத்தின் நடப்பு விலை மதிப்பு 5,000 ரூபாய்க்கு அதிகப் படாமல் இருந்தால் தலைமை ஆணை அதிகாரியின் ஆணையையும் மற்ற இனங் களுக்கு அரசினரின் ஆணையையும் பெற வேண்டும்.

26. தனிப்பட்ட ஒப்பந்தத்தில் குத்தகைக்கு விடுதல்.—16 முதல் 24 என் வரையுள்ள விதிகள் எவ்வாறு இருப்பினும் குறிப்பாக உள்ள படைத்துறை எஸ்டேட் அலுவலர் தனிப்பட்ட இனங்களில் அவற்றின் தனிக் காரணங்களைப் பதிவு செய்து கொண்டு மத்திய அரசாங்கத்தால் அல்லது இதற்காக அவர் களால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் இசைவுக்குட்பட்டு 20 ஆவது விதியில் குறித்த நில அளவை எல்லை வரையறுத்தல் செலவை வைப்புத் தொகையாகப் பெறுமல் அல்லது 22 ஆவது விதியை அனுசரித்து குத்தகையை ஏலத்தில் விடாமலும் அல்லது இவ்விரு விதிகளுக்கும் மாறுபாடாக எந்த நிலத்தையும் தனிப்பட்ட ஒப்பந்தத்தில் குத்தகைக்கு விடலாம். இவ்வாறு செய்யும்போது ஆல்லது அதனால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் ஒப்புக் கொள்ளப்படும் தீர்வை விதத்தையும், அதிகமான் தொகையையும் செலுத்துவதற்கு அங் உட்பட்டிருக்கும்.

தவிரவும், மத்திய அரசாங்கத்தால் அல்லது இவ்வகையில் நியமிக்கப்பட்ட அதிகாரியின் இசைவுக்கு விண்ணப்பத்தை அனுப்புவதற்குமுன் கலெக்டரின் ஒப்புதலையும் நிலைய ஆணை அதிகாரியின் ஒப்புதலையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

27. பழைய நிலக் கொடைகளை ஒழுங்கு செய்வதற்கான தனிக் குத்தகை.—16 முதல் 26 என் வரையுள்ள விதிகள் எவ்வாறு இருப்பினும் முறையாகக் குத்தகையில் பெறாமல் நிலத்தை உடைமையில் கொண்டுள்ளவர் செய்து கொள்ளும் விண்ணப்பத்தில் மேலதிகாரிக்கு அறிவிக்காமல் படைத்துறை எஸ்டேட் அலுவலர் ஆவது விவர அட்டவணையில் கண்ட படிவத்தில் அந்நிலத்தைக் குத்தகைக்கு விடலாம்.

28. குத்தகை எழுதிக் கொடுத்து நிறைவேற்றல்.—(1) ஏலம் முறையாக உறுதி செய்யப்பட்டதும் ஏலத்தில் எடுத்தவரிடமிருந்து ஆவது விவர அட்டவணையில் கண்ட படிவத்தில், அந்த நிலத்திற்குக் குத்தகைச் சீட்டு ஒன்று எழுதி வாங்க வேண்டும்.

(2) இந்த குத்தகை இந்திய அரசாங்கத்தாரின் சார்பாக அல்லது அவர் களின் அதிகாரம் பெற்ற அதிகாரியால் எழுதிக் கொடுக்கப்பட்டுக் குத்தகைப் பத்திரத்தில் நகல் ஒன்றை படைத்துறை எஸ்டேட் அலுவலரின் அலுவல கத்தில் வைத்திருக்க வேண்டும்.

(3) அந்தப் பத்திரத்தின் நகல் ஒன்றை XVI ஆவது விவர அட்ட வணையின் படிவத்திலான உறைக்குள் கவனமாக வைத்திருக்க வேண்டும்.

29. நிலக்கொடைப் பதிவேடு (கட்டட மனைகள்).—(1) 17 ஆவது விதியின் கீழ்ச் செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தை அதற்குரிய எல்லாக் குறிப்புகளையும் எழுதி முடித்ததும் இதற்கென ஏற்பட்ட விடுதி ஏடுகளான பதிவேட்டில் படைத்துறை எஸ்டேட் அலுவலர் கோவையாகச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(2) தகுந்த பருமன் ஆனதும் இந்தத் தொகுதியைத் தைத்துக் கட்டிப் புத்தகமாக்கிய பின்னர் புதிய பதிவேடு ஒன்றைத் தொடங்க வேண்டும்.

(3) இப் பதிவேடு, படைத்துறை எஸ்டேட் அலுவலரின் நிலக்கொடைப் பதிவேடு (கட்டட மனைகள்) எனப்படும்.

30. நிலக் கொடைப் பதிவு.—நடவடிக்கைகள் முடிவடைந்ததும் படைத் துறை எஸ்டேட் அலுவலர் படைத்துறை எஸ்டேட் அலுவலரின் நில் வருவாய்ப் பதிவேட்டிலும், பொது நிலப் பதிவேட்டிலும் தேவையான குறிப்பு களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

31. (1) கட்டட மனைக்காக தனிப்பட்ட காரணங்களை முன்னிட்டு 30 ஆண்டுகளுக்கு மேற்படாமல் அல்லது நிரந்தரமாகக் குத்தகைக்கு விடுதல் மத்திய அரசினருக்கு அனுகூலமாக இருக்குமென்று படைத்துறை எஸ்டேட் அலுவலர் கருதுவாரெனில் IX, X விவர அட்டவணையில் குறிப்பிட்ட படிவங் களில் அத்தகைய குத்தகையை அனுமதிக்கலாம்.

நி. ஆ. 21, பத்தி 16]

ஆனால், கலெக்டரை முன் கலந்தாலோசிக்காமலும், மத்திய அரசினரின் முன் அனுமதியின்றியும் அத்தகைய குத்தகைக்கு விடக்கூடாது.

மேலும், மற்ற ஒவ்வொரு விதத்திலும் 16 முதல் 30 வரையுள்ள விதிகளில் கண்ட முறையை அனுசரிக்க வேண்டும்.

(2) ஒரு குறிப்பிட்ட பொது அல்லது சமய சம்பந்தமான உபயோகத்திற்குத் தேவையான XI ஆவது விவர அட்டவணையில் கண்ட படிவத்திலுள்ள அதிக சலுகையுள்ள குத்தகையை மேற்கொள்வது நியாயமாக இருக்குமானால், படைத் துறை எஸ்டேட் அலுவலர் கட்டட மனையை ஆவது விவர அட்டவணையில் குறிப்பிட்ட படிவத்தில் 26 ஆவது விதியில் வகுக்கப்பெற்றுள்ள முறையை அனுசரித்து நிரந்தரமான குத்தகைக்கு விடலாம்.

ஆனால், கலெக்டரை முன்னதாகக் கலந்து ஆலோசிக்காமலும் மத்திய அரசினர் முன் அனுமதியில்லாமலும் இத்தகைய குத்தகைக்கு விடக்கூடாது.

32. விவசாய நிலக் குத்தகைகள்.—(1) படைத் துறை எஸ்டேட் அலுவலரின் நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் விவசாய நிலத்தை தவணைக் கட்டணமின்றி குத்தகைக்கு விடுவதுதான் முறை. குத்தகையின் கீழ் கொடுக்கப்படவேண்டிய நீர்வை ஏலத்தில் விடப்பட வேண்டும்.

(2) ஏலத்தில் விடக்கூடிய குத்தகைக் கால அளவு சாதாரணமாக ஓராண்டாக இருக்க வேண்டும். ஆனால், படைத்துறை எஸ்டேட் அலுவலர் புக்தத்தில் அதை நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவுக்கு நீடிக்கச் செய்யலாம்.

(3) நடப்பு விலை மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்படாமலிருக்குமானால் கலெக்டரின் இசைவையும், தலைமை ஆணை அதிகாரி அல்லது இதன் பொருட்டு மத்திய அரசினரால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் ஏற்பையும் பெற்று ஏலத்திற்கு விடப்படும் குத்தகையின் காலத்தைப் பத்து ஆண்டுகள் வரையில் நீடிக்கச் செய்யலாம்.

(4) பத்து ஆண்டுகளுக்கு மேல் குத்தகையின் காலம் நீடிக்கச் செய்யப்பட்டால் அல்லது நிலத்தின் நடப்பு விலை மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்ட இனங்களில் குத்தகைக் கால அளவு நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்டால் குத்தகைக்குக் கலெக்டரின் இசைவும் மத்திய அரசினரின் ஏற்பும் தேவை.

ஆனால், மத்திய அரசினர் இதன்பொருட்டுக் குறிப்பான பாகையங்களில் ஒவ்வொரு இனத்திலும் அவர்களின் முன் ஒப்பளிப்பு அல்லது இதற்காக நியமிக்கப்பட்ட மற்ற அதிகாரிகளின் ஒப்பளிப்புடன் குத்தகைக் காலத்தை நான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கலாம். தவிரவும் அவற்றின் குத்தகையை அனுசரித்துச் செலுத்த வேண்டிய நிர்வையும் குத்தகைக்கு எடுத்தவரிடம் தனி உடன்படிக்கை மூலம் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

33. விவசாய நிலம்—முடிவு செய்யும் முறை.—(1) பயிர் செய்யும் காலம் தொடங்குவதற்கு மிக முன்பே குத்தகைக்கு விடத்தக்க நிலத்தின் விவரங்கள், ஏலத் தேதி, காலம், இடம், நிபந்தனைகள் இவற்றைக் குறித்து XII ஆவது விவர அட்டவணையில் உள்ள படிவத்தில் படைத்துறை எஸ்டேட் அலுவலர் ஓரறிவிப்பு விளம்பரம் செய்ய வேண்டும். மேலும் 8 ஆவது விதியின் கீழ்த்

[நி. ஆ. 21, பத்தி 16

தயாரிக்கப்பட்ட வாடகைத் தர வரிசை அட்டவணையில் கண்டுள்ள விதத்தில் அவர் ஒவ்வொரு வகைக்கும் ஒதுக்குவிலை நிர்ணயம் செய்து கொண்டு அதைப் பொது மக்களுக்குத் தெரிவிக்காமல் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் தேதியில் குறித்த காலத்தில் இடத்திலும் அதிக விலை கூறுபவருக்கு நிலங்களின் குத்தகையை ஏலத்தில் விட வேண்டும்.

ஆனால், சில தனிப்பட்ட இனங்களில் சிறப்பான காரணங்களுக்காக, தலைமை ஆணை அதிகாரியின் முன் ஒப்பளிப்புடன் பகுதித்துறை எஸ்டேட் அலுவலர் குத்தகை ஏலத்தில் விடுவதற்குப் பதிலாக அவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கும் தொகைகளைப் பற்றிய ஒப்ப அறிவிப்பு எழுத்து வடிவில் குறித்து அனுப்புமாறு அவரிடம் கேட்கலாம்.

(2) ஏலம் அல்லது இக்குறிப்பின் முடிவைத் தலைமை ஆணை அதிகாரியின் ஏற்புக்காக அனுப்ப வேண்டும். அதை ஏற்றுக் கொண்டவுடன் குத்தகை விற்பனையானது முறையாக உறுதி செய்யப்பெற்றதாகக் கருதப்படும்.

ஆனால், ஒதுக்கு விலைக்கு குறைந்த தொகைக்குக் குத்தகையை விடக் கூடாது.

ஆயினும் சில தனிப்பட்ட இனங்களில் எழுத்து வடிவில் தனிக் காரணங்களைப் பதிவு செய்து கொண்டு ஒதுக்கு விலைக்கு ஓராண்டுக்கு மேற்படாத காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதைத் தலைமை ஆணை அதிகாரி அனுமதிக்கலாம்.

34. விவசாயக் குத்தகைகளின் பதிவு.—(1) விவசாய நிலங்கள் எவ்வாறு ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டன என்பதைக் காட்டும் பொருட்டு தொடர்ந்த பதிவாக அமைந்த XIII ஆவது விவர அட்டவணையில் கண்டுள்ள படிவத்தில், ஒரு தனிப் பதிவேட்டைப் படைத்துறை எஸ்டேட் அலுவலர் எழுதி வைக்க வேண்டும்.

(2) இப்பதிவேடு படைத்துறை ஆதன அதிகாரி (விவசாய நிலங்கள்) நிலக்கொடைப் பதிவேடு எனப்படும்.

(3) இதன் பொருட்டு விவசாய நிலங்களை ஐந்து அல்லது ஆறு என்னிக்கைக்கு மேற்படாத நில உடைமைகளடங்கிய வசதியுள்ள பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் இப்பதிவேட்டில் ஒரு பக்கம் விடுவதுடன் எதிர்ப்பக்கத்தில் அதன் நில அளவைப் படத்திலிருந்து எடுத்த நகலொன்றையும் வரைந்து வைக்க வேண்டும்.

35. விவசாயக் குத்தகைகளை எழுதி நிறைவேற்றுவது.—(1) XIV ஆவது பட்டியலில் கண்டுள்ள படிவத்தில் குத்தகை எடுத்தவர்கள் விவசாய நிலக் குத்தகைப் பத்திரங்களை எழுதிக் கொடுக்க வேண்டும்.

(2) மத்திய அரசினருக்காக இதற்காக அதிகாரம் பெற்ற அதிகாரி குத்தகை எழுதி நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அதன் ஒரு பிரதி படைத்துறை எஸ்டேட் அலுவலரின் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

(3) இப்பிரதியை XVI ஆவது பட்டியலில் கண்டுள்ள படிவத்திலுள்ள உறைகளுக்குள் கவனமாக வைத்திருக்க வேண்டும்.

நி. ஆ. 21, பத்தி 16]

36. விவசாய நிலக் கொடைப் பதிவு.—எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முடிவு அடைந்தவுடன் முடிந்ததும் படைத்துறை எஸ்டேட் அலுவலர் விவசாய நிலக் கொடைப் பதிவேட்டிலும் படைத்துறை எஸ்டேட் அலுவலர் நில வருவாய்ப் பதிவேட்டிலும் பொது நிலப் பதிவேட்டிலும் தேவையான குறிப்பு களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

ஆனால், நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத விவசாய நிலக் குத்தகையைப் பொது நிலப் பதிவேட்டின் 1 ஆவது பத்தியில் குறிக்கத் தேவையில்லை.

37. பலவகைப்பட்ட உபயோகங்களுக்கான குத்தகைகள்.—(1) படைத் துறை எஸ்டேட் அலுவலர் இவ்விதிகளுக்குட்படாத மற்ற எந்த உபயோகத் திற்கும் "ஆ" (4) வகுப்பு நிலத்தைக் குத்தகைக்கு விடலாம்.

ஆனால், நிலத்தைக் கொடுப்பதற்கான நிபந்தனைகளைப் பற்றியும் குத்தகைப் படிவத்தைப் பற்றியும் ஒவ்வொரு குத்தகையிலும் மத்திய அரசினர் அல்லது இதற்காக அவர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் முன் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

(2) இந்த விதியின்கீழ் நிலக் கொடைக்காக படைத் துறை எஸ்டேட் அலுவலருக்குச் செய்து கொள்ளும் விண்ணப்பம் XV ஆவது விவர அட்ட வணையில் கண்டுள்ள படிவத்தில் இருக்க வேண்டும்.

(3) தேவையாக உள்ள நிலம் இருக்கும் இடத்தையும் அது எந்த உபயோகத்திற்குத் தேவையோ அதைப்பற்றிய விவரமும் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் விண்ணப்பம் செய்து கொண்டவரின் செலவில் தயாரிக்கப்பட்ட தரைப்படமும் சேர்த்தனுப்பப்பட வேண்டும்.

(4) விண்ணப்பம் ஒப்பளிக்கப்படுமாயின் ஆனல் குறிக்கத்தக்கன யாவும் குறிப்பிடப்பட்டு இதன் பொருட்டுப் படைத்துறை எஸ்டேட் அலுவலரால் எழுதி வைக்கப்படும் படைத்துறை எஸ்டேட் அலுவலரின் பலவகை இடங்கள் கொடைப் பதிவேடு எனப்படும் பதிவேட்டில் தனித்தனியாகக் கோவையில் வைக்கப்பட வேண்டும். குத்தகையின் நகல் ஒன்று XVI ஆவது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் உறைக்குள் கவனமாக வைத் திருக்க வேண்டும்.

(5) விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டால் அதைப் பற்றிய குறிப்பை விண்ணப்பத்திலேயே எழுதி, அதை (4) ஆவது உள் விதியில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவேட்டுடன் சேர்த்து வைக்க வேண்டும்.

38. பலவகைக் காரியங்களுக்காக குத்தகைகளில் நிலத்தைக் கொடுத்தல்.—37 ஆவது விதியின் கீழ் நிலத்திற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தை 20 முதல் 24 வரையுள்ள விதிகளிற்கண்டுள்ள முறையில் முடிவு செய்ய வேண்டும். சிறப்பான தனிக் காரணங்களுக்காக அக்காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்து கொண்டு 26 ஆவது விதியில் கண்ட முறையில் ஒப்ப ளிக்கும் அதிகாரி முடிவு செய்யலாம்.

[நி. ஆ. 21, பத்தி 16

39. உரிமம் பெற்று நிலத்தைத் தற்காலிக அநுபோகம் செய்து கொள்ளுதல்.—(1) மேற்கண்ட விதிகள் எவ்வாறு வகுக்கப்பட்டிருப்பினும் 14 ஆவது விதியிற்கண்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, படைத்துறை எஸ்டேட் அலுவலர் தமது நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள "அ" (2) அல்லது "ஆ" (4) வகுப்பு நிலத்தைத் தற்காலிக உபயோகம் அல்லது அநுபோகத்திற்காக XVII ஆவது பட்டியலில் கண்ட படிவத்தில் ஓராண்டுக்கு மேற்படாத கால அளவுக்கு உரிமம் கொடுக்கலாம்.

(2) அத்தகைய உரிமத்திற்காக வேண்டிய கட்டணத் தொகையை படைத் துறை எஸ்டேட் அலுவலர் நிர்ணயிக்க வேண்டும்.

(3) 1924-ம் ஆண்டு பாஸையக் கணக்கு விதித் தொகுப்பின் 81-ஆ விதியின் கீழுள்ள பதிவேட்டில் குறிக்கப்படும் மோட்டார் வண்டிகள் நிறுத்து வதற்கான உரிமங்களைத் தவிர மற்றவற்றைப் படைத்துறை எஸ்டேட் அலுவலர் XVIII ஆவது விவா அட்டவணையில் கண்டுள்ள படிவத்தில் படைத் துறை எஸ்டேட் அலுவலரின் தற்காலிக உரிமங்கள் கொடைப் பதிவேடு என்னும் ஒரு பதிவேட்டில் செய்து கொள்ள வேண்டும். ஆனால் இத்தகைய உரிமங்களை வேறு எந்தப் பதிவேட்டிலும் குறிக்க வேண்டியதில்லை.

40. தற்காலிக அநுபோகத்திற்காக நிலம் விடுவதற்கான உரிமங்கள் கொடுக்கும் உரிமையை மாற்றுதல் செய்வது.—39 ஆவது விதி எவ்வாறிருப்பினும் தலைமை ஆணை அதிகாரியின் முன் ஒப்பளிப்புடனும், அவர் ஒவ்வொரு இனத்திலும் ஒப்புக் கொண்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டும் படைத்துறை எஸ்டேட் அலுவலரின் நிர்வாகத்திலுள்ள பாஸையத்திலிருக்கும் குறிப்பான நிலங்களை, குறிப்பான உபயோகங்களுக்காக, 39 ஆவது விதியில் குறித்துள்ள வாறு மேய்ச்சலுக்குக் கொடுக்கும் உரிமையை அல்லது உரிமங்கள் கொடுக்கும் உரிமையை மாற்றுதல் செய்யும் பொருட்டு படைத்துறை எஸ்டேட் அலுவலர் கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

41. கட்டட-மனைகள்-தனிக்குத்தகைகள்-தனி நிபந்தனைகள்.—குறிப்பிட்ட குத்தகை படிவத்தில் மாறுதல்கள் எவையேனும் செய்ய மத்திய அரசினருக்கு அதிகாரம் உண்டு.

42. பாக்கியைத் திரும்ப வசூல் செய்வது.—இவ்விதிகளின் கீழ் வரும் தீர்வையைச் செலுத்த வேண்டிய ஏனைய பாக்கிகளையும் செலுத்தப்பட வேண்டிய தேதியிலிருந்து அவை வசூலாகும் தேதி வரை பாக்கித் தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏழரை சதவீதம் வட்டியுடன் சட்டத்தின் 259 ஆம் பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்டிருப்பவரின் அல்லது படைத்துறை எஸ்டேட் அலுவலரின் விண்ணப்பத்தை அநுசரித்து அந்தப் பிரிவில் கண் டுள்ள முறையில் வசூலிப்பதற்குள்ளாகும்.

ஆனால், 1925 ஆம் ஆண்டு பாஸைய நில ஆட்சி விதிகளின் 15 ஆவது விதி ஏற்பட்ட பிறகும் இவ்விதிகள் விளம்பரம் செய்யப்படுவதற்கு முன்பு முன்னும் கொடுக்கப்பட்ட குத்தகையைப் பற்றிய மட்டில் எல்லாத் தீர்வையும் செலுத்த வேண்டிய மற்ற பாக்கிகளையும் அவ்விதிக்கிணங்கவே வசூல் செய்ய வேண்டும்.

நி. ஆ. 21, பத்தி 16]

அத்தியாயம் VI

பாளையக் கழகத்தின் மேலாண்மை.

43. மேலாண்மைக்குரிய பொது நிபந்தனைகள்.—9 ஆவது விதியின் கீழ்க் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிலத்தின் மேலாண்மை பின்வரும் நிபந்தனைகளுக்குட்படும், அவையாவன :-

(i) அத்தகைய மேலாண்மையானது கழகத்திற்கு நிலத்தில் உள்ள சொந்த உரிமையை விற்க, பரிவர்த்தனை செய்ய அல்லது கொடுக்க அதிகாரத்தை அளிக்காது. கழகத்தின் மேலாண்மைக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களின் பொது நன்மையை முன்னிட்டு எப்பகுதிகளின் உபயோகத்தை அல்லது அநுபோகத்தைப் பற்றி விதிகள் விதிக்க வேண்டுவது தேவை என்று மத்திய அரசினர் கருதுகின்றனரோ அந்நிபந்தனைகளை அவ்வாறு விதிப்பதற்கு அவர்களுக்கு எப்பொழுதும் அதிகாரமுண்டு.

(ii) மத்திய அரசினரின் ஒப்பளிப்பின்றி நிலத்தை இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள உபயோகங்களுக்காயினும் அல்லது தனது சொந்த உபயோகத்திற்காயினும் அநுபோகம் செய்ய அல்லது பயனுக்கக் கழகத்திற்கு அதிகாரமில்லை. ஆனால் மேற்சொன்ன உபயோகங்களுக்காகத் தேவையான நிலத்தை "இ" வகுப்புக்கு மாற்றி 7 ஆவது விதிக்கிணங்க மத்திய அரசினர் அவை சட்ட உரிமையில் கழகத்திற்குச் சாருமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(iii) நிலத்தின் சொந்த உரிமைகளை பாதிக்கும் வழக்குகள் மத்திய அரசினராலோ அல்லது அவர்களின் மீதோ தொடரப்படலாமேயன்றி கழகத்தாலோ அல்லது அதன் மீதோ தொடரப்படுவதற்கில்லை. ஆனால் அவ்வழக்கிற்கான செலவைக் கழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) நிலத்திலிருந்து கிடைக்கத்தக்க வருவாய்கள் எல்லாம் சாதாரணமாக பாளைய நிதிக்கு முழுவதும் வரவு வைக்க வேண்டும்.

(v) மத்திய அரசினருக்கு எப்போது வேண்டுமானாலும், நிலம் அல்லது அதன் பகுதியின் மேலாண்மைக் கழகத்திற்கு ஈட்டுத் தொகை கொடுக்காமல் எடுத்துக்கொள்ள அல்லது கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மேலாண்மை நிபந்தனைகளில் மாறுதல் செய்ய உரிமை உண்டு.

ஆனால் அவ்வாறு செய்வதற்கு முன் அதைப்பற்றித் தம் கருத்தைத் தெரிவிப்பதற்குக் கழகத்திற்கு வாய்ப்பளிப்பதுடன் அதன் ஆட்சேபனைகளையும் கவனிக்க வேண்டும்.

(vi) படைத்துறை எஸ்டேட் அலுவலர் கழகத்தின் அநுபோகத்தில் அல்லது மேலாண்மையிலுள்ள நிலத்திற்குச் சம்பந்தப்பட்ட பதிவு, கடிதப் போக்குவரத்து, தரைப்படம், பதிவேடு அல்லது வேறு பத்திரம் இவற்றைத் தம் முன் கொண்டு வந்து தாக்கல் செய்யுமாறு கழகத்திற்கு எப்பொழுதும் ஆணையிடலாம்.

44. பொது நிலப்பதிவேடு.—பாளையக் கழகம்.—கழகத்தின் மேலாண்மைக்கு ஒப்படைக்கப்பட்ட அல்லது அதன் சட்ட உரிமையில் அதனிடம் உள்ள அங்காடி நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் 3 ஆவது விதியின் கீழ்த் தயார் செய்யப்படும் பொது நிலப் பதிவேட்டிலிருந்து எடுத்து எழுதிய பதிவுகளைப் படைத்துறை எஸ்டேட் அலுவலர் கழகத்திற்கு வழங்க வேண்டும்.

45. பொது நிலப் பதிவேட்டை எழுதி வைத்து வருவது.—(1) 10 ஆவது விதியின் கீழ் பொதுப் பதிவேட்டை எழுதி வைத்து வருவதில் படைத்துறை எஸ்டேட் அலுவலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளும் வேலைகளும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது தம்மிடம் சட்ட உரிமையிலுள்ள அங்காடி நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் கழகத்தால் நிறைவேற்றப் படும்.

(2) (i) கழகம் தன் மேலாண்மையிலுள்ள அங்காடி நிலம் அல்லாத வேறு நிலத்தின் பாத்தியதை அல்லது உரிமையைக் கொடுப்பதைப் பற்றியும்;

(ii) சட்டத்தின் 73 ஆவது பிரிவின் கீழ் நிர்வாக அதிகாரிக்கு அங்காடி நிலங்களல்லாத மற்ற நிலத்தின் பாத்தியதை அல்லது உரிமையை ஒவ்வொன்றிலும் மாற்றுவதைப்பற்றியும் ஒவ்வொரு அறிக்கையையும் பற்றி படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

(3) (2) ஆவது உட்பிரிவை அனுசரித்துக் கொடுக்க வேண்டிய தகவலுடன், 1882 ஆம் ஆண்டு சொத்து மாற்றுச் சட்டத்தின் 54, 59, 107 அல்லது 123 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 1924 ஆம் ஆண்டு பாளையச் சட்டத்தின் 287 ஆவது பகுதியின் 2 ஆவது உட்பிரிவின் கீழ்த் தமக்குத் தகவல் கிடைத்த அங்காடிகளுக்கு வெளியிலுள்ள அசையாச் சொத்தின் பாத்தியதை அல்லது உரிமையைப் பற்றிய ஒவ்வொரு மாற்றுதலையும் பற்றி மாதாந்திர அறிக்கை ஒன்றை நிர்வாக அதிகாரி, படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு அனுப்ப வேண்டும். தவிரவும் அங்காடிகளுக்கு வெளியிலுள்ள அசையாச் சொத்தின் உரிமை அல்லது நிலத்தின் ஒவ்வொரு மாறுதல் பற்றித் தமக்குத் தெரிந்திருந்த, ஆனால் அறிக்கை செய்யப்படாத இனங்களைப் பற்றியும் அவ்வாறு அறிக்கை அனுப்ப வேண்டும். இவ்வறிக்கைகளுடன் குத்தகைகள், தரைப்படங்கள் அல்லது சம்பந்தப்பட்ட மற்றப் பத்திரங்கள் இவற்றையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

46. பாளைய வாரியம் எழுதி வைத்து வர வேண்டிய பதிவேடு.—(1) 12, 29, 37, 39 ஆவது விதிகளையும், 1924 ஆம் ஆண்டு பாளையக் கணக்குத் தொகுப்பு 81-ஆ விதியிலுள்ளவாறு எழுதி வைக்கப்பட்டிருக்கும் பதிவேடுகள் போன்ற பதிவேடுகளை வாரியம் எழுதி வைத்து வர வேண்டும். அவை முறையே பாளைய வாரிய நில வருவாய்ப் பதிவேடு, நிலக் கொடைப் பதிவேடு (கட்டடங்கள்) நிலக் கொடைப் பதிவேடு (பலவகை இடங்கள்), நிலக் கொடைப் பதிவேடு (தற்காலிக உரிமங்கள்) மோட்டார் வண்டிகள் நிறுத்துவதற்கான கட்டணப் பதிவேடு ஆகும், இவ்விவர அட்டவணைகளில் உள்ள படிவங்களை வாரியத்தின் தேவைகளுக்கு இணங்க திருத்தியமைத்துக்கொள்ள வேண்டும்.

நி. ஆ. 21, பத்தி 16]

(2) வாரியத்தினிடம் சட்ட உரிமையிலுள்ள எல்லா நிலங்களையும் காட்டு வதற்காக XIX ஆவது விவர அட்டவணையில் குறிப்பிட்ட படிவத்தில் பதிவேடு ஒன்றையும் வாரியம் வைத்து வர வேண்டும். இது, மத்திய அர சாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகைகளைக் காட்டும் பாலைய வாரியப் பதிவேடு எனப்படும். மத்திய அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகை களையும் அதற்குச் செலுத்தப்படும் தொகைகளையும் காட்டுவதற்காக இது ஆண்டுதோறும் தயாரிக்கப்பட வேண்டும்.,

47. பாலைய வாரியம் நிலங்களை முடிவு செய்து கொடுத்தல்.—படைத்துறை எஸ்டேட் அலுவலரின் மேலாண்மையில் இருக்குமாறு கொடுக்கப்பட்ட நிலத்தை முடிவு செய்வதற்குரிய விதிகளை கூடிய வரையில் 9 ஆவது விதியை அனுசரித்து வாரியத்தின் மேலாண்மையில் விடப்பட்ட நிலங்களைக் கொடுப்ப தற்கும் பொருந்தும். ஆனல் பின்வரும் திருத்தங்களுக்குட்பட்டிருக்கும்:—

(அ) தலைமை ஆணை அதிகாரிக்கு 24, 33 விதிகளின் கீழ் அளிக்கப்பட் டுள்ள அதிகாரத்தையும் வேலைகளையும் கழகம் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) நிலைய ஆணை அதிகாரிக்குக் கீழ் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு 18, 19, 26 விதிகளை அனுசரித்து அளிக்கப்பட்ட அதிகாரத்தையும் வேலைகளை வாரியம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(இ) படத்துறை எஸ்டேட் அலுவலருக்கு அதிகாரத்தை 26, 27, 28, 29, 31, 32, 34, 35, 37-ல் (1), (4), 30 இந்த விதிகளை அனுசரித்து அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையும் வேலைகளையும் வாரியம் மேற்கொள்ள வேண்டும்.

(ஈ) படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு 17, 18, 19, 21, 22, 24, 30, 33, 36, 37-(2) இவ்விதிகளை அனுசரித்து அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையும் வேலைகளையும் நிர்வாக அதிகாரி மேற்கொள்ள வேண்டும்.

(உ) 24, 26 விதிகளின் கீழ்க் கலெக்டருக்கு அறிக்கை ஒன்றும் செய்யத் தேவையில்லை.

அத்தியாயம் VII

படைத்துறை எஸ்டேட் அலுவலர் நிலத்தில் திரும்பப் பிரவேசிப்பதும் பார்வையிடுதலும்.

48. படைத்துறை எஸ்டேட் அலுவலரின் மேலாண்மையிலுள்ள நிலத்தில் திரும்பப் பிரவேசிப்பதும் பார்வையிடுதலும்.—(1) படைத்துறை எஸ்டேட் அலுவலர் அல்லது அவரால் எழுத்து வடிவில் பொது அல்லது தனி ஆணையை அனுசரித்து அதிகாரம் பெற்றவர் தேவையென்று கருதினால் தாமாக அல்லது உதவியாளர்கள் அல்லது வேலையாட்களுடன் படைத்துறை எஸ்டேட் அலுவலரின் மேலாண்மையிலுள்ள யாதொரு நிலம் அல்லது கட்டடத்தில்

[நி. ஆ. 21, பத்தி 16

அல்லது அதற்குள் விசாரணை, தணிக்கை, அளவு மதிப்பீடு அல்லது நில அளவை செய்வதற்காக அரல்லது அத்தகைய கட்டடம் அல்லது நிலத்தில் செய்யப்பட்ட, செய்யப்படுகிற அல்லது இனிச் செய்யக்கூடிய வேலைகளை ஆராய்வதற்காக அல்லது பார்வையிடுவதற்காகப் பிரவேசிக்கலாம்.

(2) மேற்குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும்போது அந்த அதிகாரி அல்லது தனிப்பட்டவர் சட்டத்தின் XIX அத்தியாயத்தில் பிரவேசிப்பதற்கும் பார்வையிடுவதற்கும் ஏற்பட்டிருக்கும் முறையை அனுசரிக்க வேண்டும்.

49. பாளைய வாரியத்தின் மேலாண்மையிலுள்ள நிலத்தில் திரும்பப் பிரவேசிப்பதும் பார்வையிடுதலும்.—(1) படைத்துறை எஸ்டேட் அலுவலர் அல்லது எழுத்து வடிவில் பொது அல்லது தனி அதிகாரம் பெற்றவர் தாமாக அல்லது உதவியாளர்கள் அல்லது வேலையாட்களுடன் தேவையானால் ஒரு வாரியத்தின் மேலாண்மையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலம் அல்லது கட்டடத்தில் அல்லது அதற்குள் விசாரணை, தணிக்கை, அளவு மதிப்பீடு அல்லது நில அளவை செய்வதற்காக அல்லது அத்தகைய கட்டடம் அல்லது நிலத்தில் செய்யப்பட்ட, செய்யப்படுகிற அல்லது இனி செய்யக்கூடிய வேலைகளை ஆராய்வதற்காக அல்லது பார்வையிடுவதற்காகப் பிரவேசிக்கலாம்.

(2) மேற்சொன்ன கடமைகளைச் செய்யும்போது அந்த அலுவலர் அல்லது தனிப்பட்டவர் சட்டத்தின் XV ஆவது அத்தியாயத்தை அனுசரித்துத் திரும்பப் பிரவேசிப்பதற்கும் பார்வையிடுவதற்கும் ஏற்பட்டிருக்கும் முறையை அனுசரிக்க வேண்டும்.

விவர அட்டவணை I.

[3 (1) ஆவது விதியைக் காண்க.]

பொதுநலப் பதிவேடு	தொகுதி	பக்கம்

பொது நலப் பதிவேடு.	பகுதி.	பக்கம்.	ஆண்டுக்குத் தீர்வை மதிப்பு.											
மாறுதல் துறை கருக்கொள்ளும்	நில அளவை எண்—100 மாறுதல்கள்.	பதிவேட்டின் எண்ணும் தேதி, படைத்த அலுவலரின் கையொப்பம்.	பரப்பு (ஏக்கர், சதுர அடி.)	விளக்கம்.	வகுப்பு.	யார் தீர்மானித்தார்.	விலக்கிலுள்ளார்.	இருப்பு உரிமையாகத்திற்குட்பட்டது.	உடையாரின் உரிமையாளரின் தன்மை.	மத்திய அரசாங்கத்திற்குச் சார்ந்த கழகத்திற்கு.	குத்தகை முடிவடையும் தேதி.	குறிப்புகள்.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)		
4.5 ஏக்கர்கள்.	100/1 பகுதி 6 பக்கம் 3.	7.5 ஏக்கர்	காலி.	ஆ.க	ப.எ.அ.	இ.அ.	இல்லை.	ப.எ. ஆ.		தொகுதி பக்கத்தில் தொடரும்.				

42A 42A

ஆ ஆக்குக் குத்தகை விடப்பட்டது.
(ஒப்பம்).

Verified © RealEstate ™

விவர அட்டவணை II.

[81 ஆவது விதியைக் காண்க.]

தரப்படுத்தப்பட்ட தீர்வைகளின் வரிசை அட்டவணை.

பாளையம்.

நில அளவை எண்.	விவரம்.	ஆண்டுத் தீர்வை மதிப்பு.		குறிப்புரை.
		விவசாயம். ஏக்கர் 100 ச.அடி.	விவசாய மல்லாத. பரப்பு 100 ச.அடி.	
(1)	(2)	(3)	(4)	(4)

Verified RealEstate ™

(1) நீல அரளை சக்ர.

(2) வெடிப்பு.

(3) வினைக்கம்.

(4) குத்தகை எடுத்தவர் அந்தத் தினம் பயன் பெறும் முகவரியும்.....

(5) அறுபோகம் செய்து கொண்டு தெற்கு

(6) குத்தகைக் காலம்.

(7) தவணை.

(8) தொகை.

(9) தவணைத் தேதி.

(10) பாக்கிகள் ஏதேனுமிருப்பின்.

(11) மொத்தக் கூட்டுத் தொகை.

(12) செலுத்திய தேதி.

(13) வருஷத்தை குறிப்பிட.

(14) பற்றுச் சீட்டு எண்.

(15) பொது ரொக்க சேர்ப்பு பதிவேட்டு எண்.

(16) ஆண்டின் மொத்த வருவாய்.

(17) கல்வரிக் தொகை.

(18) வரவேண்டிய பாக்கி.

(19) பலருக்குரிய தனித்தனி எல்லைகள்.

(20) குறிப்புரை.

19

நிலம் வைத்திருப்பவர் தன்னுடைய பங்கிற்குரிய வருவாயை அறுவடை நாளன்றே பெற்றுக் கொள்ளுதல்.

III. பிரிவு அட்டவணை

[12-ஆம் விதிமுகப்புக் காண்க.]

பாலக்குறிச்சி ஜமீன்தார் நிலம் பயிரிடுவோர்.

19

[நி. ஆ. 21, பத்தி. 16

IV. விவர அட்டவணை.

[16 (3) ஆவது விதியைக் காண்க.]

குத்தகையைப் புதுப்பிப்பதற்கான படிவம்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஆண்டு மாதம் தேதியில் இந்திய யூனியன் தலைவர் (இதில் குத்தகை விடுபவர் என்று சொல்லப்படுபவர்) ஒரு சார்பிலும் (இதில் குத்தகை எடுப்பவர்/எடுப்பவர்கள் என்று சொல்லப்படுபவர்) மற்றொரு சார்பிலும், குத்தகை எடுப்பவர்க்கு/எடுப்பவர்களுக்கு, எழுதப்பட்ட எண் தேதியுள்ள இடத்தில் எண்ணைகப் பதிவு செய்யப்பட்ட குத்தகை முடிவாகும் தேதியில் சலுகைக்குத் தனி உரிமையும் உள்ளதாலும் (சொல்லப்பட்ட குத்தகை முடிவடைந்த உடனே திரும்பியடைய எதிர்பார்த்துள்ள) குத்தகை விடுபவரை III ஆவது உட்பிரிவிற்கிணங்க அதைப் புதுப்பிக்கக் கேட்டுக் கொண்டமையாலும், குத்தகை விடுபவர் பின் சொல்லப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டுக் குத்தகைக்கு விட ஒப்புக்கொண்டு இருவருக்குமிடையே இந்த எழுத்து உடன்படிக்கை செய்யப்படுகிறது.

இப்போது இந்த எழுத்து உடன்படிக்கைப் பின்வருமாறு சான்று கூறுகிறது :—

(1) மேற்சொன்ன காரணத்தால் குத்தகை விடுபவர், குத்தகை எடுப்பவருக்கு/எடுப்பவர்களுக்குக் கூட்டாகவும், தனியாகவும் இக்குத்தகையில் அடங்கிய சொத்துக்களையும், இடங்களையும் அதில் தற்போதிருக்கும் கட்டடங்கள் முதலியவற்றுடனும் இதில் விவரிக்கப்பட்டுள்ள விலக்குகளுக்கும் ஒதுக்குகளுக்கும் உட்பட்டு குத்தகை எடுப்பவர்/எடுப்பவர்கள் 19 ஆம் ஆண்டு மாதம் தேதியிலிருந்து 30 ஆண்டுகளுக்கு உடமையில் வைத்துக்கொள்ளுமாறு இதனால் முடிவுசெய்து எழுதிக் கொடுக்கிறார். அதே தேதிகளில் அதே விதமாக ஆண்டு குத்தகை ரூ. - கட்டுவதற்கும் (இந்த குத்தகையை அனுசரித்து முதலில் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை தேதிக்குள் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும்), குத்தகை எடுத்தவர்/குத்தகை விட்டவர் இவர்களுடைய நன்மைக்கும், எழுதப்பட்ட குத்தகையில் அடங்கிய விதிகள் நிபந்தனைகள் (திரும்பப் பிரவேசிப்பதற்கான விதியுட்பட) இவற்றிற்கும் எல்லா வகையிலும் இது உள்ளாகும்.

(2) குத்தகை விடுபவர், குத்தகை எடுப்பவர்/எடுப்பவர்கள் இவர்களாலும் இருவருக்குமிடையேயும், இதனால் ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் செய்தும் இசைந்தும் கொள்வதென்னவென்றால் இதில் ஏற்பட்ட கால முழுமைக்கும் இதன் கீழ்க் காணும் கடமை நீடித்திருக்கும் என்றும் இதில் கண்ட சொத்துக்களில் அக்கறையுள்ளவர்களான பின் வருபவர்களையும் இது கட்டுப்படுத்தும் என்றும், இதில் கண்ட விதிகளும், கட்டுப்பாடுகளும், தேவையான திருத்தத்துடன் இக்குத்தகையில் கண்டவர்களுக்குப் பதிலாக அவர்களுக்குப் பின் வருபவர்களும் பின்பற்ற வேண்டுமென்றும், இருப்பினும்

நி. ஆ. 21, பத்தி 16]

சான்றுக (5) உட்பிரிவில் கண்ட எழுப்பப்பட்ட பின், குத்தகை எடுத்தார்/எடுத்தவர்கள் மற்றொன்று எழுதுவதற்கு எந்த விதமான கடமைக்குட்பட்ட வரல்லவரென்றும் சான்று கூறப்படுகிறது.

இதற்குச் சான்றுக மேலே முதலில் சொல்லப்பட்ட ஆண்டு, தேதியில் இரு தரப்பினரும் இதன் கீழ்க் கையெழுத்திடுகின்றனர் :—

இந்திய யூனியர் தலைவருக்காக.....
முன்னிலையில்.....ஆல்
கையெழுத்து செய்யப்பட்டது.

.....முன்னிலையில்
.....ஆல்
கையெழுத்திடப்பெற்றது.

Verified Legal Reference

[தி. ஆ. 21, பத்தி 16

விவர அட்டவணை.

[17 ஆவது விதியைக் காண்க.]

நில அளவை எண்.

படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாளைய வாரியத்தின் நிலக்கொடைப் பதிவேடு.

(கட்டட மனைகள்.)

நிலக் குத்தகைக்காக விண்ணப்பம் செய்துகொண்டிருப்பவர் பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்பத்தின் படிவம்.

படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு

பாளைய நிர்வாக அலுவலருக்கு.

தேதி

ஐயா,

கட்டுவதற்காக இருக்கும் ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்குக் கொடுக்குமாறு தான் கேட்டுக் கொள்கிறேன்.

விண்ணப்பம் செய்துகொண்ட நிலத்தில் தரைப்படம் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முன் சொன்ன பாளையத்தில் கீழ்க்காணும் நிலங்கள் என்னிடம் இருக்கின்றன.

படைத்துறை எஸ்டேட் அலுவலர் நிலத்தை முடிவு செய்வது சம்பந்தமாக விதிக்கும் நிபந்தனைகளுக்கு இணங்க, ஒரு வேளை நிலம் வேறு ஒருவருக்குக் கொடுக்கப்பட்டால் கட்டடப்பட்ட தொகை திருப்பிக் கொடுக்கப்படும் என்ற நிபந்தனையில் நிலத்தை அளவை செய்து கல் நடுவதற்கான செலவுத் தொகையைச் செலுத்துவதற்கும் நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

கீழ்க்காணும் காரணங்களுக்காக ஏலத்தில் விற்பனையில் செய்யாமல் நிலத்தைத் தனி ஒப்பந்தத்தில் எனக்குக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்குத் தங்கள்,

குறிப்பு.—(1) இந்த விண்ணப்பத்தில் பிறப்பிக்கப்படும் ஆணை அதில் கட்டடம் கட்டுவதை அனுமதிக்காது. அதற்கு வேண்டிய அனுமதி பாளையங்களின் சட்டம் அல்லது அதன் துணை விதிகளுக்கிணங்க பாளையக் கழகத்திடமிருந்து பெற வேண்டும்.

குறிப்பு.—[2] தனி ஒப்பந்தத்தில் நிலம் வேண்டுமென்றால் அதற்குள்ள காரணங்களை முற்றிலும் விளக்க வேண்டும்.

நி. ஆ. 21, பக்தி 16]

நிலக்கொடைப் பதிவேடு—கட்டட மனைகள் :—

(குறிப்பிடப்பட்ட அதிகாரியால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது, விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவரால் அன்று).

நில அளவை எண்ணும் இருப்பிடமும் அல்லது இருக்குமிடம்

நில அளவை எண் இருப்பின் அதன் பரப்பு.

1 விண்ணப்பத்தின் தேதி .. ..

2 விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட பரப்பு.

3 விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவர் பெயர், முகவரி.

4 எந்தக் காரியத்துக்காக வேண்டியது.

5 நிலைய ஆணை அதிகாரியின் ஆணை, கழகத்தின் தீர்மான நகல் (18, 19 விதிகளைக் காண்க).

6 நில அளவை, கல் நட்டு எல்லை வரையறுத்த தேதியும், அவற்றின் செலவுத் தொகை செலுத்திய தேதியும்.

7 குத்தகை தரப்படுத்தப்பட்ட அட்டவணையை அனுசரித்துள்ள ஆண்டுத் தீர்வை.

8 குத்தகை தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்குத் தொகை.

9 ஏல அறிக்கை விளம்பரம் செய்தது.

10 ஏலத் தேதி .. .. ..

11 அதிகத் தொகை கூறியவர் ..

12 கூறிய தொகை .. .. ..

13 கலெக்டரின் கருத்து ..

14 தலைமை ஆணை அதிகாரியின் ஆணை (விதி 24) பாளைய கழகத்தின் தீர் மானம்.

15 மத்திய அரசாங்கத்தின் ஆணை

தலைமை ஆணை அதிகாரியின்

(அ) நடப்புக் கிரயம் 10,000 ரூபாய்க்கு மேல் பட்டால் (விதி 24).

(ஆ) ஏலம் கலெக்டரால் ஒத்துக் கொள்ளப்படா விட்டால் (விதி 25).

(இ) நிலம் 26 அல்லது 31ஆம் விதியின் முடிவு செய்யப் படுவதாக இருந்தால்.

16 குத்தகை எண், தேதி .. ..

17 குத்தகைப் பதிவுத் தேதி .. ..

படைத் துறை எஸ்டேட் அலுவலர்

நிர்வாக அலுவலர்.

தேதி:

இடத்தின் தரைப்படம்.

நில அளவை எண்.

உட்பகுதி.

பரப்பு.

நிலத்தில் அளவை செய்து எல்லை வரையறுத்தல்.

படைத்துறை எஸ்டேட் அலுவலர்
நிர்வாக அதிகாரி.

தேதி.

இந்திய நாட்டுப் படத்திலுள்ள பாளையத்தில் இந்த நில அளவை உட்பகுதி குறிக்கப்பட்டதற்குப் பொது நிலப் பதிவேட்டில் உரிய குறிப்பு செய்யப்பட்டதிற்கும் இதனால் உறுதி கூறப்படுகிறது.

படைத்துறை எஸ்டேட் அலுவலர்.

நி. ஆ. 21, பத்தி 16]

VI. விவர அட்டவணை

[21-வது விதியைப் காண்க.]

கட்டட மனைக் குத்தகை—அறிவிப்பு.

மனை இடத்தில்	கீழே குறிக்கப்பட்டிருக்கும் இடத்தை	தேதி	மணிக்கு	கீழே குறிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு காலத்திற்கு	தீர்வை செலுத்துவதற்கு	உட்படுத்தி

அவரால் உறுதி செய்வதற்குட்படுத்தி ஏலத்தில் விடப்படும் என்பது இதனால் அறிவிக்கப்படுகிறது.

ஏலத்தில் எடுப்பவர் எழுதிக் கொடுக்க வேண்டிய குத்தகைப் படிவத்தையும் மனையின் தரைப்படங்களையும் படைத்துறை எஸ்டேட் அலுவலர்/ பாளையக் கழகத்தின் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

படைத்துறைச் எஸ்டேட் அலுவலர்
நிர்வாக அலுவலர்.

விவரங்கள்.

1 பகுதி, நில அளவை எண் அல்லது நான்கெல்லைகள்.

2 பரப்பு.

3 குத்தகைக் காலம்.

உரிமை முறை நிபந்தனைகள்.

1. குத்தகையில் குறிக்கப்பட்டுள்ள தேதியில் தவறாமல் குத்தகை எடுத்தவர் குத்தகைத் தொகையைச் செலுத்த வேண்டும். (30 ஆண்டுகளுக்குக் குறையாத இடைக் காலங்களில் இந்தக் குத்தகை திரும்ப ஆய்வு செய்து திருத்தி அமைத்துக்கொள்ளப்படுவதற்குட்படும்.)

---

* குத்தகை புதுப்பிக்கக் கூடியதா அல்லாததா என்பதை இங்கே கூற வேண்டும்.

*குத்தகை 30 ஆண்டு காலத்திற்குக் குறைந்ததாய் இருந்து அது புதுப்பிக்கக்கூடியதாக இல்லையாயின் அடைப்புகளுக்குள் இருக்கும் பகுதியை விட்டுவிடவேண்டும்.

[நி. ஆ. 21, பத்தி 16

ஏலம் எடுத்தவர், குத்தகை எழுதிக் கொடுத்த தேதியிலிருந்து மாத காலத்துக்குள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள தரைப்படத்திலுள்ள விளக்கத்தையும், அளவுகளையும் அனுசரித்து பாளையச் சட்டத்தின் விதிகளை அனுசரித்துக் கழகம் இசைந்துள்ள வகையில் கட்டடம் அல்லது கட்டடங்களை அந்த மனையிடத்தில் கட்டவேண்டும். இக்கட்டடம் அல்லது கட்டடங்களைப் பழுதில்லாமல் நல்ல நிலையில் பராமரித்துவர வேண்டியதையும் தவிர, படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாளையக் கழகத்தினரின் எழுத்து வடிவில் இசைவு இல்லாமல் இக்கட்டடத்துக்கு எவ்வகையான மாறுதல் அல்லது கூடுதல். யாதொன்றும் செய்தலாகாது.

3. அந்த மனையிடம், கட்டடம் அல்லது அதன் பகுதி ஒப்படை, மாற்றுதல் அல்லது உட்குத்தகைக்கு உட்படுத்தப்பட்டால் அத்தகைய ஒப்படை, மாற்றுதல் அல்லது உட்குத்தகைக்கு விடும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு அதை அறிவிக்கவேண்டும்.

4. இந்திய அரசினர் இந்த மனையிடத்தில் அல்லது நிலத்தின் அடியிலுள்ள உலோகங்கள், எவ்விதமான கனிப்பொருள்கள், மணல், களிமண் இவற்றிலும் அந்த இடத்தில் இப்போது இருக்கும் அல்லது ஒரு காலத்தில் வளரக்கூடிய மரங்கள், பழ மரங்கள் முதலியவற்றின் உரிமையையும் தமக்கே ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்நிபந்தனை அவற்றிலுள்ள பழங்கள், இலைகள், மரத்தினின்றும் விழுந்த கிளைகள் இவற்றின் உரிமையும் படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாளையக் கழகத்தின் எழுத்து மூலமான இசைவு பெற்று வெட்டப்பட்ட மரக்கிளைகளின் உரிமையையும் பாதிக்காது.

5. குத்தகை எடுத்தவர், நிபந்தனைகளில் எதையேனும் பின்பற்றுவதில் அல்லது நிறைவேற்றுவதில் தவறிவிட்டார் எனப் படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தினர் கருதினால், இந்திய அரசாங்கத்திற்கு நிலம், கட்டடம் அல்லது கட்டடங்களில் பிரவேசித்து அவற்றைக் கைப்பற்றி குத்தகையை முடித்துவிட உரிமை உண்டு. இதன் பொருட்டு குத்தகை எடுத்தவர் எத்தகைய நட்டுத் தொகையும் பெறுவதற்கு உரிமை யுடையவராகார்.

..விற்பனை நிபந்தனைகள்.

1. ஏல விற்பனைத் தலைமை ஆணை அதிகாரியின்/பாளையக் கழகத்தின் இசைவுக்குட்படுத்தி ஏலத்தில் அதிகத் தொகைக்குக் கோருபவருக்குக் குத்தகை விடப்படும். ஏலம் எடுத்தவர்கள் இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்களுக்குள் விவாதம் ஏற்பட்டால் கடைசியாக விவாதமில்லாத ஏலத்தில் விலை கூறிய தொகையிலிருந்து தொடங்கி மீண்டும் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் விடுவோர் குறிக்கும் தொகைக்குக் குறையாமல் ஏலத்தில் விலை கூற வேண்டும். ஒரு தடவை ஏலம் கேட்ட பிறகு பின்வாங்கக்கூடாது. விலைக்கு விற்பவர் ஏலத்தைப் பற்றிய உரிமையைத் தம்மிடம் ஒதுக்கி வைத்திருக்கிறார்.

2. ஏலம் எடுத்தவர், விற்பனை முடித்தவுடனே விற்பனைத் தொகைக்காகவும் பிணைப் பணமாகவும் ஏலம் எடுத்த தொகையில் பத்துச் சதவீதம்

நி. ஆ. 21, பத்தி 16]

ஏலம் விட்டவரிடம் கட்டுவதுடன், விற்பனையைப் பூர்த்தி செய்வதற்காக இந்த நிபந்தனைகளுக்கிணங்கி கீழ்காணும் படிவத்திலுள்ள உடன் படிக்கையும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

3. ஆல் உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மிகுதித் தொகையைச் செலுத்தி, பண்டத்துறை எஸ்டேட் அலுவலகத்தில்/பாளையக் கழகத்தின் அலுவலகத்தில் விற்பனையைப் பூர்த்தி செய்ய வேண்டும். விற்பனை உறுதி செய்யப்படாவிட்டால் கட்டிய தொகையை ஏலம் எடுத்தவருக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

4. மனை இடத்தைப் பற்றிக் கொடுத்திருக்கும் விவரங்கள் அடங்கிய விளக்கம் சரியானவை என்று நம்பப்படுவதுடன் அவ்வாறே கருதப்படும். அதில் ஏதேனும் தவறு ஏற்பட்டாலும் அதனால் விற்பனை தள்ளுபடி செய்யப் படமாட்டாது. அதற்காக ஈட்டுத் - தொகையையும் அனுமதிக்கப்பட மாட்டாது.

5. ஏலம் எடுத்தவர் இந்த நிபந்தனைகளை அனுசரித்து நடக்கத் தவறி னால் அவரது வைப்புத் தொகை ஏலத்தில் விற்றவரால் பறிமுதல் செய்யப் படுவதுமின்றி ஏலம் எடுத்தவருக்குத் தெரிவித்து அல்லது தெரிவிக்காமல் ஏலத்தில் விற்றவர் பகிரங்கமான ஏலத்தில் அல்லது தனி உடன்படிக்கை யில் அக்குத்தகையை மறு ஏலத்தில் விற்பதற்கு விற்பவருக்கு உரிமை உண்டு. இதில் ஏற்படும் இழப்பை அதற்கான செலவுகளுடன் ஏலம் முடிந்ததும் தவறியவர் செலுத்தக் கடமைப்பட்டவர். அதை அவர் கட்டாவிட்டால் அவரிடமிருந்து இழப்புகளுக்கான தொகையாக அது ஏலம் விற்றவரால் வசூலிக்கப்படும். மறு ஏலத்தில் இலாபம் கூடுதலாதாயம் ஏதேனும் ஏற்பட்டால், அதை ஏலம் விற்பவர் தாமே வைத்துக் கொள்ள அவருக்கு உரிமை உண்டு.

6. ஆகக் கட்டடம் கட்டுவதற்கின்றி வேறு எக்காரியத்திற்கும் இவ்விடத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

குறிப்பு.—மேற்கண்ட விவரங்களுள்ள மனை இடத்தின் குத்தகையை இன்று ஏலத்தில் விட்டதில் (ஊர்) என்பவர் அதிக தொகையாகிய ரூபாய்க்குக் கூறியிருப்பது இன்னால் உறுதி செய்வதற்குட்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதென்று தெரிவிக்கப்படுகிறது. அந்த இந்திய அரசினரின் (ஏலத்தில் விற்பனை செய்தவர்) பொருட்டு அவர்களின் பிரதிநிதியாகிய இடம் பினையல் தொகை விற் பனைத் தொகை பகுதியாகவும் செலுத்தப்பட்ட தொகை ரூபாய். அவர் இதனால், மேற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து ஏலத்தில் எடுத்துக் கொண்டதைப் பூர்த்தி செய்யவும், அதனுடன் சேர்த்துள்ள படிவத்தில் குத்தகை எழுதிக் கொடுக்கவும் இசைகிறார். (அதை அனுசரித்து ஏலம் உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து தீர்வை செலுத்துவதற்குரிய தாகும்.) ஏல விற்பனை செய்தவரின் பிரதிநிதியான முன் தொகையைப் பெற்றுக் கொண்டதை ஒப்புக் கொண்டு பாளையத்தில் 19 மாதம் தேதியில் கையெ ழுத்து செய்யப்படுகிறது.

கையெழுத்துக்கள்

[நி. ஆ. 21, பத்தி 16

VII. விவர அட்டவணை.

[27 ஆவது விதியைக் காண்க.]

இந்தியக் கூட்டரசுத் தலைவர் (குத்தகை விடுபவர் என்று இனி இதில் கூறப்படுபவர்) ஒரு சார்பிலும் (ஊர்)
(பெயர்) குத்தகை எடுத்தவர்(கள்) என்று இதில் கூறப்படுபவர்(கள்) மற்றொரு சார்பிலும் இவர்களுக்கிடையே 19 ஆம் ஆண்டு மாதம் தேதியில் இந்த உடன்படிக்கை செய்யப்படுகிறது

இதன் பின் விவரிக்கப்பட்டுள்ளதும், குத்தகை எடுத்தவர் சுவாதீனத்திலு முள்ள நிலத்திலும், கட்டடங்களிலும் இரு தரப்பினர் களின் உரிமைகளும் எழுத்தில் விளக்கப்படவில்லையென்று தோன்றுவதாலும், அதை இதன் மூலம் விளக்க வேண்டுமென்று இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ள விரும்புவதாலும் இந்த ஒப்பந்தம் சான்று கூறுகின்றது. முன்பு கூறப் பட்டுள்ளவற்றை உத்தேசித்து குத்தகை எடுத்தவர்(கள்) இதன் பின் விவரிக்கப்பட்டிருக்கிற நிலம் இந்திய யூனியனின் முழுச் சொத்து என்பதை இதனுல் ஒப்புக்கொள்கிறார்; குத்தகை விடுபவர் இதில் இணைக்கப் பட்டுள்ள தரைப்படத்தில் இன்ன கோடுகளால் காட்டப்பட்டிருக்கும் கட்டடங்கள் குத்தகை எடுத்தவரின் சொத்து என்பதை ஒப்புக் கொள்கிறார்; இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படும்போது அல்லது அதற்கு முன்பு சொற்ப முன் கட்டணமாக ரூபாய் 5 செலுத்தப்பட்டதை உத்தேசித்தும் (செலுத்தப் பட்ட தொகையை இதனால் குத்தகை விடுபவர் ஒப்புக் கொள்கிறார்). குத் தகை எடுத்தவரின் பின் வரும் உடன்படிக்கையைக் கருதியும், குத்தகை விடு பவர் குத்தகை எடுத்தவர்(களு)-க்கு இதன் கீழ் எழுதப்பட்டுள்ள விவர அட்ட வணையில் குறிப்பாக விவரிக்கப்பட்டதும், இந்த ஒப்பந்தத்துடன் இணைக்க பட்டுள்ளதுமான தரைப் படத்தில் கோடுகளால் நான்கெல்லைக் குறிக்கப் பட்டு, இளஞ்சிவப்பு நிறத்தால் விளிம்புடையதுமான பரேயத் தின் இடத்திலிருக்கும் அளவுடைய முழு நில்ப் பகுதியையும், அதைச் சார்ந்த எல்லா அனுபோக பாத்தியத்தையும், புறக்கடைகள் உடமைப்பொருள்களுடன் ஆண்டு தேதியிலிருந்து எழுதிக் கொடுக்கிறார். ஆனல், எல்லாச் சுரங்கங்களும் எல்லா வகைக் கனிப்பொருள்களும், நிலத்தின் மேல்பரப்பிலும் அடியிலும் உள்ள மணல், களிமண் இவை இந்திய யூனியனுக்கு ஒதுக்கப்படுவதுடன், அவை இருக்கு மிடத்தை கண்டறிய அல்லது அவற்றைத் தோண்டுவதற்கும் வேலை செய்வதற்கும் எடுப்பதற்கும் அநுபோகம் செய்வதற்கும் தேவையான்தும் சாதாரணமானதுமான நடவடிக்கைகளையும் காரியங்களையும் எப்போது வேண்டுமானலும் செய்ய முழு உரிமையும் சுதந்திரமும் உண்டு.

19 ஆம் ஆண்டு மாதம் தேதியிலிருந்து இதனால் இறுதியாக எழுதிக் கொடுக்கப்பெற்று வைத்துக் கொள்ளப்பெற்றிருக்கும் நிலத்திற்கு ஏற்படும் சேதத்திற்கு ஏற்றவாறு நியாயமான ஈட்டுத் தொகை கொடுக்கப்படும்.

நி. ஆ. 21, பத்தி 16]

I. குத்தகை எடுத்தவர்(கள்) குத்தகை விட்டவரிடம், கீழ்க்கண்ட முன்றையில் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார் :—

(1) ஒப்பந்த நிலம், அதன் மேல் எழுப்பப்பட்டுள்ள கட்டடங்கள் இனி எழுப்பப்படும் கட்டடங்கள், அல்லது கட்டட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் இவர்கள் செலுத்துமாறு இப்போது விதிக்கப்பட்டிருக்கும் அல்லது பின்பு எப்போதாவது விதிக்கப்படும் எல்லாவகையான வீருங்கள், வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் முதலியவற்றை அவ்வப்போது எல்லாக் காலங்களிலும் செலுத்த உடன்படுகிறார் என்றும்,

(2) பாஞையக் கழகத்தின் எழுத்துமூலமான இசைவு அன்றி, ஒப்பந்த நிலத்தில் வளரும் எந்த மரங்களையும் வெட்டுவதில்லை என்றும், ஆனால் அவற்றை வெட்டுவது அண்மையிலுள்ளவரின் சௌகரியத்திற்கு இடைஞ்சலானது என்று அக்கழகம் கருதினாலன்றி, வெட்டுவதற்கான தமது இசைவைக் கொடுக்க கழகம் மறுக்கக் கூடாதென்றும்.

(3) இந்த ஒப்பந்தம் எழுதிக் கொடுப்பதற்கு முன்னமேயே ஒப்பந்த நிலத்தின் மேலுள்ள கட்டடங்களைத் தவிர, இந்த நிலத்தில் எப்பகுதியிலும் வேறு கட்டடம் எழுப்ப அல்லது மறுபடியும் எழுப்ப அல்லது எழுப்ப அனுமதிக்க அல்லது எழுப்புமாறு விடக்கூடாதென்றும், தரைப் படத்திலுள்ளவற்றைத் தவிரக் கூடுதலாக அல்லது மாறுதலாக ஒப்பந்த நிலத்தின் தன்மையை மாற்றக் கூடிய வகையில் கட்டடத்தை மாற்றி அமைக்கக் கூடாதென்றும் சம்பந்தப்பட்ட தலைமை ஆணை அதிகாரியின் எழுத்து வடிவிலான இசைவு இல்லாமல், ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கும்போது உள்ள உபயோகங்களுக்கன்றி அந்த நிலத்தையும் கட்டடங்களையும் வேறெவ்வகையிலும் பயன்படுத்த அல்லது பயனுக்குமாறு அனுமதிக்கக்கூடாதென்றும், ஆனால் முன் சொன்ன நிலமும், கட்டடங்களும் குடியிருப்புக்குத் தகுதியற்றதாகிவிடும் என்று அல்லது சுகாதார நோக்கத்திற்கு ஆட்சேபனையுள்ள தன்மையுடையதாகிவிடும் என்று கருதினாலன்றி படைத்துறை நிலைய ஆணை அதிகாரி அந்த அனுவலர் இசைவு கொடுக்க மறுக்கக் கூடாதென்றும்,

(4) ஒப்பந்த நிலத்தைத் தூய்மையாகவும், ஒழுங்கான முறையிலும் வைத்துக் கொள்வதோடு அதிலுள்ள கட்டடங்களை ஒழுங்காகவும், போதுமான அளவுக்குப் பழுதில்லாமலும் எப்பொழுதும் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும்,

(5) முன் சொன்ன நிலம், கட்டடங்கள் அல்லது அவற்றின் பகுதியை ஒப்படை மாற்றுதல் அல்லது உட்குத்தகை செய்யும் ஒவ்வொரு தடவையும் அதில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பெயர்களையும், விளக்கங்களையும், விவரங்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் காட்டி, சம்பந்தப்பட்ட படைத் துறை எஸ்டேட் அனுவலருக்கு அத்தகைய ஒப்படை, மாற்றுதல் அல்லது உட்குத்தகை பற்றிய அறிவிப்பொன்றை அனுப்ப வேண்டுமென்றும் உடன்படுகிறார்.

II. தவிரவும் எப்போதும் இதனால் இசைந்து வெளிடப்படுவது யாதெனில், குத்தகை எடுத்தவர் அல்லது அவர் வழியாக உரிமை கொண்டாடும் அல்லது அவருக்கு கீழுள்ள எவரும் இந்த உடன்படிக்கை, நிபந்தனைகள் எதையேனும்

மீறினால் அல்லது அதன்படி நடக்கத்தவறினாலும், அதைத் திருத்திக் கொள்ள நியாயமான வாய்ப்பு கொடுத்தும் அத்தவறு தொடர்ந்திருக்குமானாலும், குத்தகை விடுபவர் அதை அதற்கு முன்பு பொருட்படுத்தாது விட்டு விட்டிருந்த போதிலும் சட்டுத் தொகையை கொடாமல் உடனடியாக இந்தக் குத்தகையை முடித்து விடுவதற்கு குத்தகைக்கு விடுபவருக்கு உரிமையுண்டு. இவ்வாறு முடித்துவிடும்போது சம்பந்தப்பட்ட இடத்தை குத்தகை எடுத்தவர், இந்த உடன்படிக்கை எழுதிக் கொடுப்பதற்கு முன் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த இடத்தை வைத்திருந்தாரோ அவ்வாறே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

III. இன்னும் இதனில் மேலும் ஒப்புக் கொண்டு வெளியிடப் பெறுகிறது யாதெனில் 1923 ஆம் ஆண்டு VII ஆவது சட்டமாகிய பாலையங்கள் (இட வசதி) சட்டம் அந்தந்தக் காலத்தில் திருத்தப் பெற்றுத் திரும்பச் சட்டமாக்கப்பட்டதிலுள்ள விதிகளை அனுசரித்து முன் சொன்ன நிலத்தையும் கட்டடங்களையும் எப்போதும் குத்தகை விடுபவர் எடுத்துக் கொண்டு தம்முடையதாக்கிக் கொள்ள அவருக்கு உரிமையுண்டு.

IV. மேலும் இதனில் இசைந்து வெளிடப்படுவது யாதெனில் இதில் முன கண்டுள்ள யாதொரு வாடகையும் கேட்பதற்கு உரிமையில்லாதத்தாலும் சொற்பமாக இருக்கும் இடத்தையும் இதற்கு யாதொரு வரி செலுத்த வேண்டும் என்று உரிமையை ஒதுக்கி வைத்துக் கொள்ளாது, சொற்ப முன் கட்டணம் மாத்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதால், முன் சொன்ன நிலமாவது, கட்டடங்களாவது அல்லது அவற்றின் எப்பகுதியாவது உத்தியோகங்களுக்காகத் தேவையாகுமானால் குத்தகை விட்டவர், இந்த உடன்படிக்கையை முடித்துவிட்டு, அந்த நிலத்திற்கும் அதில் அனுமதி பெற்றுக் கட்டியுள்ள கட்டடங்களுக்கும் நடப்பு விலை மதிப்புத் தொகை (15 சதவீதக் கூடுதலுடன்) கொடுத்து நிலத்தையும் கட்டடங்களையும் கைப்பற்றிக் கொள்ள உரிமையுண்டு. இதற்கு ஒப்புக் கொள்ளாவிட்டால் நிலத்திற்காகவும், உடன்படிக்கையை முடித்துவிட்ட தற்காகவும் சட்டுத் தொகை கொடுக்கப்பட மாட்டாது என்று அடிப்படையில் மற்ற உரிமைகளையெல்லாம் 1894 ஆம் ஆண்டு I ஆவது நில உரிமை பெறல் சட்டத்தின் கீழ் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். எனினும், நிலம் அல்லது கட்டடங்களின் ஒரு பகுதி மாத்திரமே தேவையாகுமானால், குத்தகை எடுத்தவர்கள் விரும்பினால், கட்டடங்கள் முழுமையும் குத்தகைக்கு விட்டவர் கைப்பற்றுதல் செய்ய வேண்டும்.

கடைசியாக, "குத்தகை விடுபவர்", "குத்தகை எடுப்பவர்(கள்)" என்ற சொற்றொடர்களில், அந்த அந்தச் சமயத்தில் பொருத்தமில்லாதிருந்தால் அன்றி முன்னவர் சம்பந்தப்பட்டவரையில் அவர் வழியுரிமை பெற்றவர்களையும், ஒப்படை உரிமை பெற்றவர்களையும், பின்னவர்(கள்) சம்பந்தப்பட்டவரையில் அவர்/அவர்களுடைய வாரிசுகளையும், நிறை வேற்றுபவர்களையும் ஆட்சியாளர்கள் அல்லது மற்ற சொந்தப் பிரதிநிதிகளையும் உரிமை பெற்றவர்களையும் உட்படுத்தும்.

நி. ஆ. 21, பக்தி 16]

முன் சொன்ன விவர அட்டவணை.

பாளையப்-பொது நிலப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நில அளவை எண்ணுள்ள (அதன் பருதியான), நிலத்தின்—

வடக்கில்	வும்
தெற்கில்	வும்
கிழக்கில்	வும்
மேற்கில்	வும் ஆகிய

எல்லைகளுக்குட்பட்ட இடத்திலுள்ள நிலப்பகுதி முழுமையும்.

இதற்குச் சான்றாக, இரு தரப்பினரும் மேலே முதலில் சொல்லப்பட்டிருக்கும் ஆண்டு, தேதியில் கையெழுத்திடுகின்றனர்.

இந்திய யூனியனின் தலைவருக்காக
..... என்பவரால்
..... முன்னிலையில்
கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி:—

மேலே சொல்லப்பட்ட.....
..... என்பவரால்
..... முன்னிலையில்
கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி :—

விவர அட்டவணை VIII.

[28 (1) ஆவது விதியைக் காண்க.]

தொண்ணூறு ஆண்டுகள் வரை புதுப்பிக்கக்கூடிய முப்பது ஆண்டு கால கட்டடக் குத்தகை.

இந்திய யூனியன் தலைவர் (குத்தகை விடுபவர் என்று இனி இதில் கூறப்படுபவர்) ஒரு சார்பிலும் (குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் என்று இனி இதில் கூறப்படுபவர்) மற்றொரு பக்கமும் இவர்களுக்கிடையே 19 ஆம் ஆண்டு, மாதம் தேதியில் செய்து கொண்ட உடன்படிக்கை 1924 ஆம் ஆண்டு பாளையங்கள் சட்டத்தின் 280 ஆவது பிரிவின் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கிணங்கப் படைத்துறை எஸ்டேட் அலுவலர் பாளையத்திலுள்ள பாளையக் கழகத்தினர் (இதில் இனி, படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் என்று கூறப்படுவது) குத்தகை விடுபவர் சார்பாக இசைந்து உறுதி

செய்வதில் இதன்பின் விளக்கப்பட்டிருக்கும் நிலப் பகுதியைப் பின்வரும் முறையில் குத்தகை எடுத்தவர்க்கு/எடுத்தவர்களுக்கு எழுதிக் கொடுக்க ஒப்புக் கொள்கிறார். இந்த ஒப்பந்தம் சான்று கூறுவதென்ன வென்றால் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படும்போது அல்லது அதற்குமுன் ரூபாய் முன் கட்டணமாக செலுத்தினையும் கட்டப்பட்ட (தொகையை இதனால் குத்தகை விடுபவர் வரியை ஒப்புக்கொள்கிறார்). இனிக் கொடுக்க வேண்டிய குத்தகை செலுத்துவதையும் உத்தேசித்தும் குத்தகை எடுத்தவர் பின்வரும் உடன்படிக்கைக்கு உட்பட்டிருப்பதை உத்தேசித்தும், குத்தகை விடுபவர் இதன் கீழ் எழுதப்பட்டுள்ள விவர அட்டவணையில் விளக்கப்பட்டதும், இந்த ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டுள்ள தரைப் படத்தில் வர்ணத்தில் காண்பிக்கப்படும் இதில் குறிக்கப்பட்ட நான்கெல்லைக்குட்பட்ட பாளையத்தின் இடத்திலிருக்கும் அளவுடைய முழு நிலப் பகுதியையும், அதைச் சார்ந்த எல்லா உரிமைகள், புறக்கடைகள் உடமைப் பொருள்களுடன் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு எழுதிக் கொடுக்கிறார். ஆனால் எல்லாச் சுரங்கங்கள், எல்லா வகைக் கனிப் பொருள்கள், நிலத்தில் மேல் பரப்பிலும் அடியிலுமுள்ள மணல், களிமண் இவை குத்தகை விடுபவருக்கு ஒதுக்கப்பட்டிருப்பதுடன், அவை இருக்குமிடம் கண்டறிய அல்லது அவற்றைத் தோண்டுவதற்கும் வேலை செய்வதற்கும் எடுப்பதற்கும் அனுபோகம் செய்வதற்கும் தேவையானவையும், சாதனமானவையுமான நடவடிக்கைகள் நிறைவேற்ற முழுஉரிமையும் பாத்தியதையுமுண்டு. இதனால் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நேர்மையான ஈட்டுத் தொகை கொடுப்பதற்குட்பட்டும், வெட்டு மரங்கள், பழ மரங்கள், மற்ற மரங்கள் (ஆனால் பழங்கள் அல்லது இலைகள் அல்லது படைத் துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் எழுத்து மூலமான அனுமதி பெற்று வெட்டிய மரங்களில் விழுந்த கிளைகளைத் தவிர) இவற்றிற்குக் குறியிட, விழ்த்த, வெட்ட அவற்றை எடுத்துச் செல்லவும் இதற்காக உள்ளே செல்வதற்கும் குத்தகை விடுபவருக்குரிய உரிமைக்குட்பட்டும், 19 ஆம் ஆண்டு, மாதம் தேதியிலிருந்து, மூப்பது ஆண்டுகளுக்கு இந்த இடத்தைக் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் வைத்துக் கொள்ளலாமென்று எழுதிக் கொடுக்கிறது. அந்த குத்தகைக் காலத்தில் கழிவுகள் நீங்கலாக ஆண்டுக் குத்தகை ரூபாயை ஒவ்வொரு ஆண்டிலும் மாதம் தேதியிலும் மாதம் தேதியிலும் சமமான அரை-ஆண்டுத் தொகைகளாக, படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளைய வாரியத்தின் அலுவலகத்தில் அல்லது படைத் துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் அந்த அந்தக் காலத்தில் குறிக்கும் வேறிடத்தில் செலுத்த வேண்டும். இத்தகைய முதல் தவணை ஆடித்துவரும் மாதம் தேதி செலுத்துவதற்காகும்.

I. குத்தகை எடுத்தவர்(கள்) குத்தகை விடுபவரிடம் கீழ்க்கண்ட முறையில் செய்து கொள்ளும் ஒப்பந்தமாவது :—

(1) குத்தகை விடுபவருக்கு குத்தகைக் காலத்தில் ஏற்பட்ட ஆண்டுக் குத்தகையைக் குறிப்பிட்ட தேதிகளிலும், முறையிலும் செலுத்திவிட வேண்டுமென்றும்,

நி. ஆ. 21, பக்தி 16]

(2) ஒப்பந்த நிலம், அதில் எழுதப்பட்டுள்ள கட்டடங்கள் அல்லது கட்டட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் இவர்கள் செலுத்துமாறு தற் போது விதிக்கப்பட்டிருக்கும் அல்லது குத்தகைக் காலத்திற்குள் பின்னர் எப்போதாவது விதிக்கப்படக்கூடிய எல்லா வகையான வீதங்கள், வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் முதலியவற்றை அந்த அந்த காலங்களிலெல்லாம் குத்தகை காலத்திற்குள் கொடுத்துத் தீர்க்க வேண்டுமென்றும்,

(3) படைத் துறை எஸ்டேட் அலுவலர்/பாஸையக் கழகத்தின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி ஒப்பந்த நிலத்தில் இப்போதுள்ள அல்லது இனி மேல் வளரக்கூடிய வெட்டு மரங்கள், பழ மரங்கள் அல்லது மற்ற மரங்களை வெட்டாமலிருப்பதோடு அவற்றை நல்ல நிலையில் பாதுகாத்தும் வர வேண்டு மென்றும்,

(4) படைத் துறை எஸ்டேட் அலுவலர்/பாஸைய வாரியத்தின் எழுத்து மூலமான அனுமதி பெறுமலும், அவர் விதிக்கும் ஏற்பாடுகள், நிபந்தனைகளுக் கிணங்காமலும் ஒப்பந்த நிலத்தில் குறிகள் தோண்ட அல்லது அதிலிருந்து எத்தகைய உலோகங்கள், சுரங்கப் பொருள்கள், மணல் அல்லது களிமண் இவற்றை எடுத்துச் செல்வதில்லையென்றும்,

(5) பாஸையச் சட்ட விதிகளின்கீழ் பாஸைய வாரியம் எழுத்து மூலமாக அங்கீகாரம் பெற்ற தரைப்படம் அல்லது படங்களில் உள்ளவற்றிற்கிணங்கத் தேவையான புற வீடுகள், சாக்கடைகள், வடிகால்கள், அவற்றிற்குச் சம்பந்தப் பட்ட மற்றவையுடன் குடியிருப்பு வீடு ஒன்றை/குடியிருக்க தகுதியாக, அவருடைய/அவர்களுடைய செலவில்/ஒப்பந்தத் தேதியிலிருந்து அடுத்து வரும் ..... மாதங்களுக்குள் ஒப்பந்த நிலத்தில் எழுப்பி முடிக்க வேண்டு மென்றும், தலைமை ஆணை அதிகாரி/பாஸையக் கழகத்தின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி ஒப்பந்தப்படியுள்ள குடியிருப்பு வீடு/ ..... தவிர வேறு எந்தக் கட்டடத்தையும் ஒப்பந்த நிலத்தின் எந்தப் பகுதியிலும் எழுப்புகிறதில்லை அல்லது எழுப்ப அனுமதிப்பதுமில்லையென்றும்,

(6) மேற்கண்ட அனுமதி பெறுமல் தரைப்படத்தில் அல்லது குடியிருப்பு வீட்டின்/ ..... மட்டத்தில் எந்த மாறுதல்களும் செய்வதில்லை என்றும் குடியிருப்பு வீடாக அன்றி/ ..... வேறு எக்காரியத்திற்கும் அதைப் பயன்படுத்துவதில்லை அல்லது அவ்வாறு பயன்படுத்த அனுமதிப்ப தில்லையென்றும்,

(7) ஒப்பந்தக் காலத்தில் எப்போதும் குடியிருப்பு வீட்டை/ ..... சுற்றுப்புறங்களுடன் தக்க நிலையில் போதுமான வகையில் பழுதில்லாமல் வைத்துக்கொண்டு குத்தகைக் காலம் முடிவடைந்தவுடன் அல்லது முடித்து விடப்பட்டவுடன் அதைத் தக்க நிலையில் போதுமான வகையில் பழுதில்லாமல் சமதான முறையில் குத்தகை விடுபவருக்கு விட்டுவிடுவதென்றும்,

(8) ஒப்பந்த நிலம் அல்லது பகுதியை ஒவ்வொரு ஒப்படை, மாற்றுதல் அல்லது உள் குத்தகை செய்யும்போதோ அல்லது அதன் பிறகு ஒரு மாதத்திற் குள்ளோ அத்தகைய ஒப்படை, மாற்றுதல் அல்லது உள் குத்தகையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பெயர்களும், விளக்கங்களையும், விவரங்களையும் அதனுல் ஏற்படும் விளைவுகளையும் காட்டி, படைத் துறை எஸ்டேட் அலுவல ருக்கு ஓரறிவிப்பு அனுப்ப வேண்டுமென்றும் உடன்படுகிறார்.

II இதனுல் ஏற்பட்ட குத்தகை அல்லது அதில் ஒரு பகுதி பாக்கியாக நின்றாலும், அது கேட்கப்பட்டாலும் கேட்கப்படாமல் இருந்தாலும் அதைச் செலுத்த வேண்டிய தேதிகளிலிருந்து அடுத்த ஒரு மாதத்திற்குள் செலுத்தப் படாமல் இருந்தால், அல்லது குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் அல்லது அவரின்/அவர்களின் மூலமாகப் பாத்தியதைக் கொண்டாடும் அல்லது கீழுள்ள ஒருவரோ உடன்பாடுகள் அல்லது நிபந்தனைகளில் எதையேனும் மீறினதாகப் படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் கருதினால், அதை முன்பு பொருட்படுத்தாமல் விட்டு விட்டிருப்பின் அல்லது திரும்பப் பிரவேசிக்கும் உரிமையை மேற்கொள்ளாமல் இருப்பின் குத்தகை விடுபவர், ஒப்பந்த முழு நிலம் அல்லது கட்டடங்களில் பிரவேசிக்கும் உரிமையை அனுசரித்து அவற்றில் பிரவேசிக்கலாம். அவ்வாறு செய்யப்பட்ட பின்னர் அந்த நிலமும் கட்டடங்களும் குத்தகை விடுபவரின் பயனுக்காகவும் அவர் உரிமை அதிகாரத் திற்குட்பட்டும் இந்த ஒப்பந்தம் முழுமையாக முடிவடையுமென்றும் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு எந்தவகைய ஈட்டுத் தொகையையும் பெறுவதற்கும் உரிமையில்லையென்றும்.

III. மேலும், இதனுல் கொடுக்கப்பட்ட ஆண்டுக்காலம் முடிவடைந்தும் அதன் பிறகு அவ்வாறு தொடர்ந்து கொடுக்கப்பட்ட ஆண்டுக்காலம் ஒவ்வொன்றின் முடிவிலும் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் கேட்டுக் கொண்டால் அவர் செலவிலும் குத்தகை விடுபவர் குத்தகை எடுப்பவருக்கு ஒப்பந்த நிலத்தை முப்பது ஆண்டு காலத்துக்குப் புதுப்பிக்கும் முறையில் ஒரு புதுக் குத்தகை எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு புதுப்பிக்கும் காலத்துடன் முதல் குத்தகைக் காலத்தையும் சேர்த்து மொத்தமாகத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு அதிகமாகக் கூடாதென்றும் குத்தகைத் தொகை யானது முதல் குத்தகை அல்லது பிறகு புதுப்பிக்கப்படும் குத்தகைத் தொகைக்கு ஐம்பது சதவீதத்திற்கு அதிகப்படாமல் குத்தகைவிடுபவர் குத்தகையை உயர்த்தலாமென்றும் ஒதுக்கப்படும் குத்தகைத் தொகையையும், காலத்தையும் தவிர முதல் ஒப்பந்தத்தில் கண்ட மற்ற உடன்பாடுகளும் நிபந்தனைகளும் புதுப்பிக்கப்படும் குத்தகைகளுக்கும் கூடுமானவரை அவ்வாறே பொருந்தும் என்றும்,

IV. "குத்தகை விடுபவர்", "குத்தகை எடுப்பவர்(கள்)" என்ற சொற்றொடர்களில் அந்த அந்தச் சமயத்திற்குப் பொருத்தமில்லாதிருந்தால் அன்றி முன்னவர் சம்பந்தப்பட்ட வரையில் அவர் வழியுரிமை பெற்றவர்களையும் ஒப்படை உரிமை பெற்றவர்களையும், பின்னவர்(கள்) சம்பந்தப்பட்ட வரையில் அவர்/அவர்களுடைய வாரிசுகளையும் நிறைவேற்றுபவர்கள், ஆட்சியாளர்கள், பிரதிநிதிகள், உரிமை பெற்றவர்களையும் உட்படுத்துமென்றும் உடன்படுகிறார்.

நி. ஆ. 21, பத்தி 16]

மேற்சொன்ன விவர ஆட்டவணை.

பாளையப் பொது நிலப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் அளவை எண்ணுள்ள (அதன் பகுதியான) நிலத்தின்

வடக்கில்	வும்
தெற்கில்	வும்
கிழக்கில்	வும்
மேற்கில்	வும் ஆகிய

எல்லைக்குட்பட்ட இடத்திலுள்ள நிலப் பகுதி முழுமையும்.

இதற்குச் சான்றாக, இரு தரப்பினரும் மேலே முதலில் சொல்லப்பட்டி இருக்கும் ஆண்டு தேதியில் கையெழுத்திடுகின்றனர்.

இந்திய யூனியன் தலைவருக்காக
..... என்பவரால்
..... முன்னிலையில்
கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி :—

மேற்சொல்லப்பட்ட .....
என்பவரால் .....
முன்னிலையில் .....
கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி :—

குறிப்பு.—குத்தகை எழுதிக் கொடுப்பதற்கு முன் கலெக்டர்/தலைமை ஆணை அதிகாரி/மத்திய அரசினரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

விவர அட்டவணை IX

[31 (1)-ஆவது விதியைக் காண்க.]

முப்பது ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்குக் கொடுக்கத்தக்க ஆனால் புதுப்பிக்கப்படத்தகாத குத்தகை.

இந்திய யூனியன் தலைவர் (குத்தகை விடுபவர் என்று இதில் இனி குறிப்பிடப் பெறுபவர்) ஒரு சார்பிலும் (குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் என்று இதில் இனி குறிப்பிடப் பெறுபவர்) மற்றொரு சார்பிலும் இவர்களுக்கிடையே 19 ஆம் ஆண்டு மாதம் தேதியில் செய்துகொண்ட உடன்படிக்கை. 1924-ஆம் ஆண்டு பாஸையங்கள் 280-ஆவது பிரிவின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க, படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாஸையத்திலிருக்கும் பாஸையக் கழகம் (இதில் இனி. படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாஸையக் கழகம்) என்று குறிப்பிடப் பெறுபவர்/குறிப்பிடப்பெறுவது குத்தகை விடுபவருக்காக ஒப்புக் கொண்டு உறுதிப்படுத்தியதில் பின்னர் விவரிக்கப்பட்டிருக்கும் நிலப்பகுதியை பின்வரும் முறையில் குத்தகை எடுத்தவர்க்கு/எடுத்தவர்களுக்கு எழுதிக்கொடுக்க ஒப்புக் கொள்கிறார். இந்த உடன்படிக்கை சான்று கூறுவதென்னவென்றால், இந்த உடன்படிக்கை நிறைவேற்றப்படும்போது அல்லது அதற்கு முன்னதாக ரூபாய் தவணைக்கட்டணம் செலுத்தியதையும் (செலுத்தப்பட்ட தொகையை இதனால் குத்தகை விடுபவர் ஒப்புக்கொள்ளுகிறார்). இதனால் ஏற்படுத்தப்பட்ட குத்தகையைச் செலுத்துவதைக் கருதியும், குத்தகை எடுத்தவரின் பின்வரும் உடன்பாடுகளுக்குச் செலுத்தப்பட்டிருப்பதையும் கருதி குத்தகை விடுபவர், இதன்கீழ் எழுதப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிப்பாக விளக்கப்பட்டதும் இந்த உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள தரைப்படத்தில் கோடிட்டுக் காட்டப்பட்ட நான்கெல்லைக் குறிக்கப்பட்டதுமான பாளையத்தின் இடத்திலிருக்கும் அளவுள்ள முழு நிலப் பகுதியையும் அதைச் சார்ந்த எல்லா உரிமைகள், புழக்கங்கள், உடமைப் பொருள்களுடன் குத்தகை விடுபவர் குத்தகை எடுப்பவர்க்கு/எடுத்தவர்களுக்கு எழுதிக் கொடுக்கிறார். ஆனால் எல்லாச் சுரங்கங்கள், எல்லாவகைக் களிப் பொருள்கள், நிலத்தின் மீதும் கீழும் உள்ள மணல், களிமண், இவை குத்தகை விடுபவர்களுக்கு ஒதுக்கி வைத்துக் கொள்ளப்படுவதுடன், அவற்றைத் தேடுவதற்கும் வேலை செய்வதற்கும் எடுப்பதற்கும் அனுபோகப்படுத்துவதற்கும் தேவையானதும் சாதனமானதுமான நடவடிக்கைகள் காரியங்கள் செய்ய முழு உரிமையையும் பாத்தியத்தையும் உண்டு. இதனால் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நேர்மையான ஈட்டுத்தொகை கொடுப்பதற்குட்பட்டும், கட்டட வேலைக்கு உதவும் வெட்டுமரங்கள், பழ மரங்கள், மற்ற மரங்கள் (ஆனால் பழங்கள் அல்லது இலைகள் அல்லது படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாஸையக் கழகத்தின் எழுத்து வடிவில் அனுமதி பெற்று வெட்டிய மரங்களில் வீழ்ந்த இலைகளைத் தவிர) இவற்றை அடையாளமிட வீழ்த்த, வெட்ட அவற்றை எடுத்துச் செல்லவும் இதற்காக உள்ளே செல்வதற்கும் குத்தகை விடுபவருக்குரிய உரிமைக்குட்பட்டும் ஆம் ஆண்டு ..... மாதம் ..... தேதியிலிருந்து ..... ஆண்டு காலத்துக்கு இந்த இடத்தைக் குத்தகை

நி. ஆ. 21, பத்தி 16]

எடுத்தவர்/எடுத்தவர்கள் தமது உடைமையில் வைத்துக்கொள்ளலாமென்று எழுதிக் கொடுக்கப்படுகிறது. மேலே குறிப்பிட்ட குத்தகைக் காலத்தில் கழிவுகள் நீங்கலாக ஆண்டு குத்தகைத் தொகையாகிய ரூபாயை ஒவ்வொரு ஆண்டிலும் மாதம் தேதியிலும் சமமான அரை ஆண்டுத் தொகைகளாக, படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் அலுவலகத்தில் அல்லது படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் அவ்வப்போது குறிப்பிடக்கூடிய வேறிடத்தில் செலுத்த வேண்டும். இத்தகைய முதல் தவணைக் கட்டணம் அடுத்து வரும் ..... மாதம் .. .. தேதியில் செலுத்தப்பட வேண்டும்.

I. குத்தகை எடுத்தவர்(கள்) குத்தகை விடுபவரிடம் கீழ்க்கண்ட முறையில் இதனால் உடன்படிக்கை செய்து கொள்கிறார்(கள்) :—

(1) குத்தகை விடுபவருக்குக் குத்தகை காலத்தில் ஆண்டு குத்தகைத் தொகையைக் குறிப்பிட்ட தேதிகளிலும் உரிய முறையிலும் செலுத்தி விடுவதாகவும்,

(2) உடன்படிக்கையை அனுசரித்து எழுப்பப்பட்டுள்ள கட்டடங்களுக்காக அல்லது கட்டட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் இவர்கள் செலுத்துமாறு தற்போது விதிக்கப்பட்டிருக்கும் அல்லது குத்தகைக்காலத்திற்குள் பின்னர் எப்போதாவது விதிக்கப்படும் எல்லாவகை வீதங்கள், வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் முதலியவற்றைக் குத்தகைக் காலத்திற்குள் அவ்வப்போது எக்காலத்திலும் கொடுத்துத் தீர்த்துக்கொள்ளுவதாகவும்,

(3) படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் எழுத்து வடிவில் முன் அனுமதியின்றி உடன்படிக்கை நிலத்தில் கட்டடங்களுக்குப் பயனுகும் இப்போதுள்ள அல்லது இனிமேல் எப்போதேனும் வளரும் வெட்டு மரங்கள், பழமரங்கள் அல்லது மற்ற மரங்களை வெட்டாமலிருப்பதன்றி அவற்றை நல்ல நிலையில் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும்,

(4) படைத் துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் எழுத்து வடிவிலான அனுமதியின்றியும் அவர் விதிக்கக்கூடிய ஏற்பாடுகள், நிபந்தனைகள் இவற்றை அனுசரிக்காமல் உடன்படிக்கை நிலத்தில் குழிகள் தோண்டவோ அல்லது அவற்றிலிருந்து எத்தகைய உலோகங்கள், சுரங்கப் பொருள்கள், மணல் அல்லது களி மண் இவற்றை எடுத்துக் கொள்வதில்லையென்றும்,

(5) பாளையக் கழகங்கள் சட்ட ஏற்பாடுகளின்கீழ் பாளையக் கழகத்தின் எழுத்து வடிவில் ஏற்றுக்கொண்ட தரைப்படம் அல்லது படங்களை அனுசரித்துத் தேவையான புற வீடுகள், சாக்கடைகள், வடிகால்கள், மற்ற உடைமைப் பொருள்களுடன் குடியிருப்பு வீடு ஒன்றை/. . . . . குடியிருக்கத் தகுதியாக, அவரது/அவர்களுடைய செலவில் உடன்படிக்கைத் தேதியிலிருந்து அடுத்து வரும்.....ஆண்டு.....மாதங்களுக்குள் உடன்படிக்கை நிலத்தில் எழுப்பி முடிப்பதாகவும் தலைமை ஆணை அதிகாரி/பாளையக் கழகத்தின் எழுத்து வடிவிலான முன் அனுமதியின்றி உடன் படிக்கையிலுள்ளவாறு குடியிருப்பு வீடு.....தவிர வேறு

எந்தக் கட்டடத்தையும் உடன்படிக்கை நிலத்தின் எந்தப் பகுதியிலும் எழுப்புவதோ அல்லது எழுப்ப அனுமதிப்பதோ இல்லையென்றும்,

(6) மேற்குறிப்பிட்டவாறு அனுமதி பெறுமல் தரைப்படத்தில் கண்டுள்ள அல்லது குடியிருப்பு வீட்டின்/.....மட்டத்தில் எந்த மாறுதல்களும் செய்வதில்லை என்றும் குடியிருப்பு வீடாக அல்லாமல் வேறு எக்காரியத்திற்கும் அதை உபயோகிப்பதில்லை அல்லது உபயோகம் செய்ய அனுமதிப்பதில்லையென்றும்.

(7) உடன்படிக்கை காலத்தில் எப்போதும் குடியிருப்பு வீட்டை .....சுற்றுப் புறங்களுடன் நன்கு போதுமானவாறு பழுதில்லாமல் வைத்துக் கொள்ளுவதாகவும் குத்தகைக் காலம் முடிவானதும் அல்லது தீர்த்து முடிவு செய்யப்பட்டதும், அதை நன்முறையில் பழுதில்லா நிலையில் போதுமான சமதான முறையில் குத்தகை விடுபவருக்கு விடுவதாகவும்,

(8) உடன்படிக்கை நிலம் அல்லது பகுதியை ஒவ்வொரு ஒப்படை, மாறுதல் அல்லது உட்குத்தகை செய்யும் போது அல்லது அதன் பிறகு ஒரு மாதத்துக்குள் அத்தகைய ஒப்படை மாறுதல் அல்லது உட்குத்தகையில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களையும், விளக்கங்களையும், விவரங்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் காட்டி, படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு ஓரறிவிப்பு அனுப்புவதாகவும்,

II. இதனால் ஏற்பட்ட வாடகையின் ஒரு பகுதி பாக்கியாக நின்றாலும் அது கேட்கப்பட்டாலும், கேட்கப்படாவிட்டாலும், செலுத்த வேண்டிய தேதி களிலிருந்து அடுத்த ஒரு மாதத்திற்குள் செலுத்தப்படாமல் இருந்தாலும் அல்லது குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் அல்லது அவரின்/அவர்களின் வழியாக பாத்தியதை கொண்டாடும் ஒருவரோ அல்லது கீழுள்ள ஒருவரோ, உடன்பாடுகள் அல்லது நிபந்தனைகள் இவற்றில் எதையேனும் நீறியதாக படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் கருதினாலும் அதை முன்னர் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டபோதிலும் அல்லது திரும்பப் பிரவேசிக்கும் உரிமையைச் செலுத்தாமலிருந்தாலும், குத்தகை விடுபவர் உடன்படிக்கை முழு நிலம் அல்லது கட்டடங்களில் பிரவேசிக்கும் உரிமையை அனுசரித்து அவற்றில் பிரவேசிக்கலாம். அவ்வாறு செய்யப்பட்டபிறகு அந்த நிலமும் கட்டடங்களும் குத்தகை விடுபவரின் பயனுக்காகவும் அவர் உரிமை அதிகாரத்திற்கும் உட்பட்டு, இந்த உடன்படிக்கை முழுமையுமாக முடிவுபெ யுமென்றும் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் எத்தகைய ஈட்டுத் தொகைக்கும் உரிமையுடையவராக மாட்டாரென்றும்,

III. "குத்தகை விடுபவர்", "குத்தகை எடுப்பவர்(கள்)" என்ற சொற்றொடர்களில் சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாதிருந்தாலன்றி முன்னவர் சம்பந்தப்பட்டவரையில் அவர் வழியுரிமை பெற்றவர்களையும், ஒப்படை உரிமை பெற்றவர்களையும், பின்னவர்(கள்) சம்பந்தப்பட்ட வரையில் அவர்/அவர் களுடைய வாரிசுகளையும், நிறைவேற்றுபவர்களையும், ஆட்சியாளர்கள், பிரதி நிதிகள், உரிமை பெற்றவர்களையும் உட்படுத்தும் என்றும் உடன்படுகிறார்.

நி. ஆ. 21, பத்தி 16]

மேற்சொன்ன விவரப் பட்டியல்.

பாளைய பொது நிலப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நில அளவை எண்.....ஐயுள்ள (அதன் பகுதியான), நிலத்தின்—

வடக்கில்.....வும்

தெற்கில்.....வும்

கிழக்கில்.....வும்

மேற்கில்.....வும் ஆகிய இந்த நான்கு எல்லைக்குட்பட்ட.....இடத்திலுள்ள நிலப்பகுதி முழுமையும்.

இதற்குச் சான்றாக, இரு தரப்பினரும் மேலே முதலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆண்டு தேதியில் கையெழுத்திடுகின்றனர்.

இந்திய யூனியன் தலைவருக்காக
என்பவரால்
முன்னிலையில்
கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி :—

மேற்சொல்லப்பட்ட.....
என்பவரால்.....
முன்னிலையில் கையெழுத்து செய்யப்பட்டது

சாட்சி :—

குறிப்பு.—குத்தகை நிறைவேற்றுவதற்கு முன்னர் தலைமை ஆணை அதிகாரி மத்திய அரசினரின் அனுமதியைப் பெற வேண்டும்.

[நி. ஆ. 21, பத்தி 16

விவர அட்டவணை X.

[31 (1) ஆவது விதியைக் காண்க.]

நிலையான கட்டடக் குத்தகை.

இந்திய யூனியன் தலைவர் (குத்தகை விடுபவர் என்று இனி இதில் கூறப் பெறுபவர்) ஒரு சார்பிலும்.....(குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் என்று இனி இதில் கூறப் பெறுபவர்) மற்றொரு சார்பிலும் இவர்களுக்கிடையே 19ஆம் ஆண்டு. . . மாதம். . . தேதியில் செய்து கொண்ட உடன்படிக்கையாவது, 1924 ஆம் ஆண்டு பாளையங்கள் சட்டத்தின் 230 ஆவது பிரிவின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளை அனுசரித்துப் படைத்துறை எஸ்டேட் அலுவலர்/.....பாளையத்திலுள்ள பாளையக் கழகம் (இதில் இனி, படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் என்று குறிப்பிடப் பெறுபவர்) குத்தகை விடுபவருக்காக இசைந்து . . . உறுதி செய்ததில் குறிப்பிடப் பெறுவது பிள்ளர் விளக்கப்பட்டிருக்கும் நிலப் பகுதியை பின் வரும் முறையில் குத்தகை எடுத்தவருக்கு/எடுத்தவர்களுக்கு எழுதிக் கொடுக்க ஒப்புக்கொள்கிறார். இந்த உடன்படிக்கை சான்று கூறுவதென்னவென்றால், இந்த ஒப்பந்தம் நிறைவேற்றும்போது அல்லது அதற்கு முன்னர்..... ரூபாய் முன் தவணைக் கட்டணமாகச் செலுத்தியதையும் (கட்டப்பட்ட குத்தகைக் தொகையை இதனால் குத்தகை விடுபவர் ஒப்புக் கொள்கிறார்) ஏற்பட்ட குத்தகைத் தொகையைச் செலுத்துவதைக் கருதியும், குத்தகை எடுத்தவரின் பின்வரும் உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டிருப்பதைக் கருதியும், குத்தகை விடுபவர், இதன்கீழ் எழுதப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிப்பாக விலக்கப்பட்டதும். இந்த உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள தரைப்படத்தில் கோடிட்ட நான்கெல்லைக்குட்பட்டதென.....பாளையத்தின்.....இடத்திலிருக்கும் அளவுள்ள முழு நிலப் பகுதியையும், அதைச் சார்ந்த எல்லா உரிமைகள், புழக்கங்கள், உடமைப் பொருள்களுடன் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு எழுதிக் கொடுக்கிறார். ஆனால், எல்லாச் சுரங்கங்கள், எல்லா வகை கனிப் பொருள்கள், நிலத்தின் மீதும் கீழுள்ள மணல், களிமண் இவை குத்தகை விடுபவருக்கு ஒதுக்கி வைக்கப்படுவதுடன், அவற்றைத் தேடுவதற்கும் அல்லது தோண்டுவதற்கும் வேலை செய்வதற்கும் எடுப்பதற்கும் அனுபோகம் செய்வதற்கும் தேவையானதும் சாதனமானதுமான நடவடிக்கைகள், காரியங்கள் செய்ய முழு உரிமையையும் பாத்தியதையும் உண்டு. இதனால் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு தேர்மையான ஈட்டுத் தொகை கொடுப்பதுடன், கட்டடங்களுக்குதவும் வெட்டு மரங்கள், பழமரங்கள், மற்ற மரங்கள் (ஆனால் பழங்கள் அல்லது இலைகள் அல்லது படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் எழுத்து வடிவில் அனுமதி பெற்று வெட்டிய மரங்களின் விழுந்த கிளைகளைத் தவிர) இவற்றை அடையாளமிட விழுக்க, வெட்ட அவற்றை எடுத்துச் செல்லவும் இதற்காக உள்ளே செல்வதற்கும் குத்தகை விடுபவருக்குரிய உரிமைக்குட்படும். 19....ஆம் ஆண்டு..... மாதம். . . தேதியிலிருந்து நிலையாக இந்த இடத்தைக் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் உடமையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று எழுதிக் கொடுக்கப்படுகிறது. மேலே குறிக்கப்பட்டுள்ள குத்தகை காலத்தில்

நி. ஆ. 21, பத்தி 16]

கழிவுகள் நீங்கலாக ஆண்டுக் குத்தகைத் தொகையாகிய..... ரூபாயை ஒவ்வொரு ஆண்டிலும்.....மாதம்..... தேதியிலும் சமமான அரை ஆண்டுத் தொகைகளாக, படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் அலுவலகத்தில் அல்லது படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் அவ்வப்போது குறிப்பிடக் கூடிய வேறிடத்தில் செலுத்த வேண்டும். இத்தகைய முதல் தவணைக் கட்டணம் அடுத்துவரும் ..... மாதம்..... தேதியில் செலுத்தப்பட வேண்டும்.

குத்தகை எடுத்தவர்(கள்) குத்தகை விடுபவரிடம் கீழ்க்கண்ட முறையில் இதனால் செய்து கொள்ளும் உடன்படிக்கை :—

(1) குத்தகை விடுபவருக்குக் குத்தகைக் காலத்தில் ஆண்டுக் குத்தகைத் தொகையைக் குறிப்பிட்ட தேதிகளிலும் உரிய முறையிலும் செலுத்துவ தாகவும்,

(2) உடன்படிக்கையை அனுசரித்து எழுப்பப்பட்டுள்ள கட்டடங் களுக்காக அல்லது கட்டட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் இவர்கள் செலுத்துமாறு தற்போது விதிக்கப்பட்டிருக்கும் அல்லது குத்தகைக் காலத்திற்குள் பின்னர் எப்போதாவது விதிக்கக் கூடிய எல்லா வகையான வீதங்கள், வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் முதலியவற்றைக் குத்தகைக் காலத்தில் அவ்வப்போதும் எப்போதும் கொடுத்துத் ஓர்த்துக் கொள்ளுவ தாகவும்,

(3) படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் வடிவிலான முன் அனுமதியின்றி ஒப்பந்த நிலத்தில் கட்டடங்களுக்குப் பயனுகும் வெட்டு மரங்கள் இப்போதுள்ள அல்லது இனிமேல் வளரும் பழமரங்கள், அல்லது மற்ற மரங்களை வெட்டாமலிருப்பதுமன்றி அவற்றை நல்ல நிலையில் பாதுகாத்து வைத்திருப்பதாகவும்,

(4) படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் எழுத்து வடிவிலான அனுமதியின்றியும், அவர் விதிக்கும் ஏற்பாடுகள் நிபந்தனைகளுக் கிணங்காமலும் ஒப்பந்த நிலத்தில் குழிகள் தோண்டவோ அல்லது அவற்றி லிருந்து எத்தகைய உலோகங்கள், சுரங்கப் பொருள்கள், மணல் அல்லது களிமண் இவற்றை எடுத்துக்கொள்வதில்லையென்றும்,

(5) பாளையச் சட்டங்களின் ஏற்பாடுகளில் விதிகளின் கீழ் பாளையக் கழகம் எழுத்து வடிவில் ஏற்றுக் கொண்ட தரைப்படம் அல்லது படங்களி லுள்ளவற்றை அனுசரித்துத் தேவையான புறவீடுகள், சாக்கடைகள், வடிகால்கள், மற்ற உடைமைப் பொருள்களுடன் குடியிருப்பு வீடு ஒன்றை .....குடியிருக்கத் தகுதியாக, அவருடைய/அவர்களுடைய செலவில் உடன்படிக்கைத் தேதியிலிருந்து அடுத்து வரும் .....மாதங்களுக்குள் மேலே குறிக்கப்பட்டுள்ள நிலத்தில் எழுப்பி முடிப்ப தலைமை ஆணை அதிகாரி/பாளையக் கழகத்தின் வடிவில் முன் அனுமதியின்றி ஒப்பந்தத்தை அனுசரித்துக் குடியிருப்பு வீடு/.....தவிர வேறு எக்கட்டத்தையும் உடன்படிக்கை நிலத்தின் எப்பகுதியிலும் எழுப்புவதில்லை அல்லது எழுப்ப அனுமதிப்பதில்லையென்றும்,

[நி. ஆ. 21, பத்தி 16

(6) மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனுமதி பெறுமல் தரைப் படத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அல்லது குடியிருப்பு வீட்டின்/.....உயர்மட்டத்திலோ எந்த மாறுதலும் செய்வதில்லை என்றும் குடியிருப்பு வீடன்றி வேறு எக் காரியத்துக்கும் அதை உபயோகிப்பதில்லை அல்லது உபயோகிக்க அனுமதிப் பதில்லையென்றும்,

(7) உடன்படிக்கைக் காலத்தில் எப்போதும் குடியிருப்பு வீட்டை/.... .....சுற்றுப்புறங்களுடன் நன்முறையில் பழுதில்லாமல் வைத்துக் கொள்வதாகவும், குத்தகைக் காலம் முடிவானதும் அல்லது முடிவு செய்யப் பட்டதும் அதை நன்முறையில் பழுதில்லாத நிலையில் போதுமான சமாதான முறையில் குத்தகை விடுபவருக்கு விடுவதாகவும்,

(8) உடன்படிக்கை அல்லது பகுதியை ஒவ்வொரு ஒப்படை, மாறுதல் அல்லது உட்குத்தகை செய்யும்போது அல்லது அதன் பிறகு ஒரு மாதத்துக்குள் அந்தகைய ஒப்படை மாறுதல் அல்லது உட்குத்தகையில் சம்பந்தப்பட்ட வர்களின் பெயர்களையும் விளக்கங்களையும், விவரங்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் காட்டி, படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு ஓர்நிலிப்பு அனுப்புவதாகவும்,

II. இதனால் ஏற்பட்ட குத்தகைத் தொகையின் ஒரு பகுதி பாக்கியாக நின்றாலும் அது கேட்கப்பட்டாலும் கேட்கப்படாவிட்டாலும் செலுத்த வேண் டிய தேதிகளிலிருந்து அடுத்த ஒரு மாதத்திற்குள் செலுத்தப்படாமல் இருந்தாலும், அல்லது குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் அல்லது அவரின்/அவர்களின் வழியாக பாத்தியதைக் கொண்டாடும் அல்லது கீழுள்ள ஒருவரோ, உடன்பாடுகள் அல்லது நிபந்தனைகளில் எதையேனும் மீறினதாக படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் கருதினாலும் அதை முதலில் பொருட்படுத்தாமல் விட்டுவிட்ட போதிலும், அல்லது திருப்பிப் பிரவேசிக்கும் உரிமையைச் செலுத்தாமலிருந்தாலும் குத்தகை விடுபவர் உடன்படிக்கை முழு நிலம் அல்லது கட்டடங்களில் பிரவேசிக்கும் உரிமையை அனுசரித்து எந்தப் பகுதியிலும் பிரவேசிக்கலாம். அதன் பிறகு அந்த நிலமும் கட்டடங்களும் குத்தகை விடுபவரின் பயனுக்காகவும் அவர் உரிமை அதிகாரத்திலும் இருந்து இந்த உடன்படிக்கை முழுமையாக முடிவடையு மென்றும் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு எவ்விதமான சட்டத் தொகையும் பெற உரிமை கிடையாதென்றும்,

III. ஒப்பந்த நிலத்துக்குரிய வாடகை மூப்பது ஆண்டுகளுக்குக் குறைந்ததாக ஒவ்வொரு காலத்தின் முடிவிலும் திரும்ப அமைப்பதற்குட்படு மென்றும், ஆனால், அப்படி அமைக்கும்போது அதற்கு முன்புள்ள காலத்தில் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகைக்கு ஐம்பது சதவிகிதத்துக்கு அதிகமாக எவ்வாறு அது உயர்த்தப்படக் கூடாதென்றும்,

IV. "குத்தகை விடுபவர்", "குத்தகை எடுப்பவர்(கள்)" என்ற சொற்றொடர்களில் சூழ்நிலைக்குப் பொருந்தாமல்லாதிருந்தாலன்றி ..முன்னவர் சம்பந்தப்பட்ட வரையில் அவர் வழியுரிமை பெற்றவர்களும், ஒப்படை உரிமை

நி. ஆ. 21, பத்தி 16]

பெற்றவர்களும், பின்னவர்(கள்) சம்பந்தப்பட்ட வரையில் அவர்/அவர்களுடைய வாரிசுகள், நிறைவேற்றுபவர்கள், நிர்வாகிகள், பிரதிநிதிகள், உரிமை பெற்றவர்களையும் உட்படுத்தவும் இதனால் உடன்படுகிறார்.

மேற்சொன்ன பட்டியல்.

பாளையப் பொது நிலப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நில அளவை எண்ணுள்ள (அதன் பகுதியான), நிலத்தின்—

வடக்கில்.....வும்

தெற்கில்.....வும்

கிழக்கில்.....வும்

மேற்கில்.....வும் ஆகிய இந்த நான்கு எல்லைக்குட்பட்ட.....இடத்திலுள்ள நிலப் பகுதி முழுமையும்.

இதற்குச் சான்றாக, இரு தரப்பினரும் மேலே முதலில் சொல்லப்பட்டிருக்கும் ஆண்டு தேதியில் கையெழுத்திடுகின்றனர்.

இந்திய யூனியன் தலைவருக்காக
..... என்பவரால்
..... முன்னிலையில் கையெழுத்து
செய்யப்பட்டது.

சாட்சி—

மேலே குறிப்பிட்ட .....
என்பவரால் .....
முன்னிலை கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி—

குறிப்பு.—குத்தகை நிறைவேற்றுவதற்கு முன் தலைமை ஆணை அதிகாரமத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும்.

விவர அட்டவணை XI.

[51 (1) ஆவது விதியைக் காண்க.]

பொதுப்பணிக்காகச் சலுகையுள்ள நிலையான கட்டடக் குத்தகை.

இந்திய யூனியன் தலைவர் (குத்தகை விடுபவர் என்று இனி இதில் குறிக்கப் பெறுபவர்) ஒரு சார்பிலும்.....(குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்கள் என்று இனி இதில் குறிக்கப் பெறுபவர்) மற்றொரு சார்பிலும் இவர்களுக்கிடையே 19.....ஆம் ஆண்டு.....மாதம்..... தேதியில் செய்து கொண்ட உடன்படிக்கை 1924 ஆம் ஆண்டு பாலையங்கள் சட்டம் 280 ஆவது பிரிவின் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து படைத் துறை எஸ்டேட் அலுவலர்/.....பாலையத்திலுள்ள பாலையக் கழகம் (இதில் இனி, படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாலையக் கழகம் எனக் குறிக்கப்படுவது) குத்தகை விடுபவர் சார்பாக ஒப்புக் கொள்ளப் பட்டு உறுதி செய்யப்பட்டதில் பின்னர் விளக்கப்பட்டிருக்கும் நிலப் பகுதியைக் கட்டடம் கட்டுவதற்காகப் பின்வரும் முறையில் குத்தகை எடுத்தவர்க்கு/எடுத்தவர்களுக்கு எழுதிக்கொடுக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தம் சான்று கூறுவதென்னவென்றால், இந்த உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் முன் கட்டணத் தொகையாகவும் (செலுத்தப்பட்ட தொகையை இதனால் குத்தகை விடுபவர் ஒப்புக் கொள்ளுகிறார்) ஏற்பட்ட குத்தகைத் தொகையைச் செலுத்துவதைக் கருதியும், குத்தகை எடுத்தவர் பின்வரும் உடன்படிக்கையைக் கருதியும், குத்தகை விடுபவர், இதன் கீழ் எழுதப்பட்டுள்ள விவர அட்டவணையைக் கருதியும், குறிப்பாக விளக்கப்பட்டதும், இந்த உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள தரைப் படத்தில் கோடிட்ட நான் கெல்லிக்கு உட்பட்டதுமான.....கோடிட்ட.....பாலையத்தின் .....இடத்திலிருக்கும்.....அளவுடைய முழு நிலப் பகுதியையும், அதைச் சார்ந்த எல்லா உரிமைகள், புழக்கங்கள் உடைமைப் பொருள்களுடன் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு எழுதிக் கொடுக்கிறார். இந்தக் குத்தகை காலத்தில் கழிவுகள் நீங்கலாக ஆண்டுக் குத்தகையான .....ரூபாயை ஒவ்வொரு ஆண்டிலும்.....மாதம்..... தேதியிலும்.....படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாலையக் கழகத்தின் அலுவலகத்தில் அல்லது படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாலையக் கழகம் அவ்வப்போது குறிக்கும் வேறிடத்தில் செலுத்த வேண்டும். இத்தகைய முதல் தவணை அடுத்து வரும்.....மாதம்..... தேதியில் செலுத்தப்பட வேண்டும்.

I. குத்தகை எடுத்தவர்(கள்) குத்தகை விடுபவருடன் கீழ்க்கண்டவாறு இதனால் உடன்படுகிறார்கள்.

(1) குத்தகைவிடுபவருக்கு குத்தகை காலத்தில் ஆண்டுக் குத்தகையை இதன் முன் குறிப்பிட்ட தேதிகளிலும், முறையிலும் செலுத்துவதாகவும்,

(2) உடன்படிக்கையை அனுசரித்து எழுப்பப்பட்டுள்ள கட்டடங்களுக்காக அல்லது கட்டட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் ஆகிய இவர்கள் செலுத்துமாறு தற்போது விதிக்கப்பட்டிருக்கும் அல்லது குத்தகை காலத்

நி. ஆ. 21, பத்தி 16]

திற்குப் பின்னர் எப்போதாவது விதிக்கப்படும் எல்லா வகை வீதங்கள், வரிகள், கட்டணங்கள், நிர்வகள் முதலியவற்றை அவ்வப்போது கொடுத்துக் கொள்ளுவதாகவும்,

(3) பாடசாலைக் கழக சட்ட விதிகளின் கீழ் பாடசாலைக் கழகம் எழுத்து மூலமில் ஏற்றுக் கொண்ட தரைப்படம் அல்லது படங்களிலுள்ளவாறு ஒரு .....உபயோகிப்பதற்கு தகுதியாக, அவர்/அவர்களுடைய சொந்த செலவில், ஒப்பந்தத் தேதியிலிருந்து அடுத்து வரும்..... .....மாதங்களுக்குள் ஒப்பந்த நிலத்தில் எழுப்பி முடிப்பதாகவும், தலைமை ஆணை அதிகாரி/பாடசாலைக் கழகத்தின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி உடன்படிக்கையை அனுசரித்த ஒரு.....தவிர வேறு எக்கட்டடத்தையும் ஒப்பந்த நிலத்தின் எப்பகுதியிலும் எழுப்புவதில்லை என்றும் அல்லது எழுப்ப அனுமதிப்பதில்லையென்றும்,

(4)மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனுமதியின்றி தரைப்படத்திலோ .....உயரப் படத்திலோ எந்த மாறுதலும் செய்வதில்லை யென்றும்.....தவிரவும் வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகிப்பதில்லை அல்லது அவ்வாறு உபயோகம் செய்ய அனுமதிப்பதுமில்லை யென்றும்,

(5) குறிப்பிடப்பட்டுள்ள.....யும், சுற்றுப்புறங்களையும் பழுதில்லாத நன்னிலையில் எப்போதும் வைத்திருந்து, குத்தகை முடிவில் அதைப் பழுதில்லாத நன்னிலையில் குத்தகை விட்டவரிடம் போதுமான சமாதான முறையில் விட்டுவிடுவதாகவும்,

(6) உடன்படிக்கை அல்லது பகுதியை ஒவ்வொரு ஒப்படை, மாறுதல் அல்லது உட்குத்தகை செய்யும்போது அல்லது அதன் பிறகு ஒரு மாதத்துக்குள் அத்தகைய ஒப்படை, மாறுதல் அல்லது உட்குத்தகையில் சம்பந்தப்பட்டவரின் பெயர்களையும், விலக்கங்களையும், விவரங்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் காட்டி, படைத் தரை எஸ்டேட் அலுவலருக்கு ஓர் அறிவிப்பு அனுப்புவதாகவும்,

II. இதனால் ஏற்பட்ட குத்தகைத் தொகையின் ஒரு பகுதி பாக்கியாக நின்றாலும் அது கேட்கப்பட்டாலும், கேட்கப்படாவிட்டாலும் செலுத்த வேண்டிய தேதிகளிலிருந்து அடுத்த ஒரு மாதத்துக்குள் செலுத்தப்படாமல் இருந்தாலும் அல்லது குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களின் அல்லது அவரின்/அவர்களின் வழியாக பாத்தியதைக் கொண்டாடும் ஒருவரோ அல்லது கீழுள்ள ஒருவரோ உடன்பாடுகள் அல்லது நிபந்தனைகளில் எதையேனும் மீறினதாகப் படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகம் கருதினாலும் அதை முன்னர் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டிருப்பின் அல்லது திரும்பப் பிரவேசிக்கும் உரிமையைச் செலுத்தாமலிருப்பின் குத்தகைக்கு விடுபவர் உடன்படிக்கை முழு நிலம் அல்லது கட்டடங்களில் பிரவேசித்ததாக எந்தப் பகுதியிலும் பிரவேசிக்கலாமென்றும் அதன் பிறகு அந்த நிலமும் கட்டடங்களும் குத்தகை விடுபவரின் பயனுக்காகவும் அவர் உரிமை அதிகாரத்திலும் இருந்து இந்த ஒப்பந்தம் முழுமையாக முடிவடையுமென்றும், இதன் பொருட்டு குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு எத்தகைய சட்டத் தொகையும் பெறுவதற்கு உரிமை இடையாதென்றும்,

[நி. ஆ. 21, பத்தி 16

"குத்தகை விடுபவர்"., "குத்தகை எடுப்பவர்(கள்)" என்ற சொற் றொடர்களில் சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாதிருந்தால் அன்றி, முன்னவர் சம்பந்தப்பட்ட வரையில் அவர் வழியுரிமை பெற்றவர்களும், ஒப்படை உரிமை பெற்றவர்களும் பின்னவர்(கள்) சம்பந்தப்பட்ட வரையில் அவர்/அவர்களுடைய வாரிசுகள், நிறைவேற்றுபவர்கள், ஆட்சியாளர்கள், பிரதிநிதிகள், உரிமை பெற்றவர்களையும் உட்படுத்தி மென்றும் உடன்படுகிறார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவர அட்டவணை.

பாளையப் பொது நிலப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நில அளவை எண்ணுள்ள (அதன் பகுதியான), நிலத்தின்

வடக்கில்.....ஏம்

தெற்கில்.....ஏம்

கிழக்கில்.....ஏம்

மேற்கில்.....ஏம், ஆகிய இந்த நான்கு எல்லைக்குட் பட்ட.....இடத்திலுள்ள நிலப் பகுதி முழுமையும்.

இதற்குச் சான்றாக, இரு தரப்பினரும் மேலே முதலில் சொல்லப்பட் டிருக்கும் ஆண்டு தேதியில் கையெழுத்திடுகின்றனர்.

இந்திய யூனியன் தலைவருக்காக
.....என்பவரால்
.....முன்னிலையில்
கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி :—

மேற்சொல்லப்பட்ட.....
என்பவரால்.....
முன்னிலையில் கையெழுத்து செய்யப் பட்டது.

சாட்சி :—

குறிப்பு.—குத்தகை எழுதிக் கொடுப்பதற்கு முன் மத்திய அரசினரின் அனுமதி பெறவேண்டும்.

நி. ஆ. 21, பத்தி 16]

விவர அட்டவணை XII.

[33 (1) ஆவது விதியைப் பார்க்கவும்]

விவசாய நிலங்களின் குத்தகை—அறிவிப்பு.

இதனால் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 19.....மாதம்.....தேதி.....மணிக்கு.....இடத்தில் கீழே குறிக்கப்பட்டிருக்கும் நிலம் குத்தகைக்கு ஏலம்/ஏல விற்பனையில்/குத்தகையில் அதிகமான தொகை கூறுபவருக்கு விடப்படும். குத்தகைக காலநிபந்தனைகளும் கீழே குறிப்பிட்ட வகையில் (குத்தகை.....அவரால் உறுதி செய்வதற்குட்பட்டும்) இருக்கும் அதிகத் தொகை கூறுபவருக்கு எழுதிக் கொடுக்க வேண்டிய குத்தகைப் படிவத்தையும் நிலத்தின் தரைப் படங்களையும் படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாளையக் கழகத்தின் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

விவரங்கள்.

1. பகுதி, நில அளவை எண் அல்லது நான்கெல்லைகள்.

2. பரப்பு

3. குத்தகைக் காலம்.

உரிமைமுறை நிபந்தனைகள்.

(1) குத்தகை எடுத்தவர் குத்தகைப் பத்திரத்தில் குறித்த தேதிகளில் தவறாமல் குத்தகைத் தொகையைச் செலுத்த வேண்டும்.

(2) விவசாயத்துக்கன்றி வேறு காரியத்துக்கு இந்த நிலத்தை குத்தகைக் காரர் உபயோகிக்காமலும், 1924 ஆம் ஆண்டு பாளையங்கள் சட்டம் 144 ஆவது பிரிவை அனுசரித்தும் நடந்து கொள்ள வேண்டும். படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாளையக் கழகத்தின் எழுத்து வடிவில் ஒப்புதலன்றி மரங்கள் நட, கட்டடங்கள் எழுப்ப, குழி தோண்ட அல்லது நிலத்தின் மேற் பரப்பில் அதன் அடியில் அல்லது அதிலிருந்து *சரள்கல், மணல், களிமண் அல்லது எவ்வகையான கனிப் பொருள்கள் எடுக்கவோ கூடாது.

(3) படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாளையக் கழகத்தில் எழுத்து வடிவிலான அனுமதியின்றி குத்தகை எடுத்தவர், நிலக் கொடை அல்லது உள் குத்தகை நிலத்தை அல்லது அதன் பகுதியை அல்லது அதன் எந்த உரிமைகளை அல்லது அனுகூலத்தை வேறெவருக்கு மாற்ற அல்லது விட்டுவிடக் கூடாது. ஆனால், குத்தகை எடுத்தவர் குத்தகைக் கால முடிவிற்குள் இறந்துவிட்டால் படைத்துறை எஸ்டேட் அலுவலர் பாளையக் கழகம் பாக்கிக் குத்தகைக் காலத்திற்கு இறந்தவரின் வாரிசு அல்லது வாரிசுகள் அந்நிலத்தைத் தம் உடைமையில் வைத்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

---

* பழத் தோட்டங்கள் ஏற்படுத்துவதற்கும், கல் எடுப்பதற்கும், செங்கற்கள் செய்வதற்கும் குத்தகைக்கு விடப்பட்டால், இந்த நிபந்தனைகளைச் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ள வேண்டும்.

[நீ. ஆ. 21, பத்தி 16

(4) குத்தகை எடுத்தவர் நிபந்தனைகளைப் பின்பற்றுவதிலும் அவற்றை அனுசரித்து நடந்து கொள்வதிலும் ஏதேனும் தவறியதாக படைத்துறை எஸ்டேட் அலுவலர் / பாளையக் கழகம் கருதினால், இந்திய யூனியன் தலைவர் நிலத்திலும் பிரவேசித்து சுவாதீனப்படுத்தி, குத்தகையைத் தீர்த்து விடலாம். அப்போது எத்தகைய ஈட்டுத் தொகையையும் பெற குத்தை எடுத்தவருக்கு உரிமையில்லை.

(5) குத்தகை காலத்திலும் எப்போதும் .....நாட்கள் எழுத்து வடிவில் முன் அறிவிப்பு அனுப்பி நிலத்தை திரும்ப எடுத்துச் சுவாதீனம் செய்து கொள்வதற்குச் சட்ட முறையில் உரிமையுண்டு. அவ்வாறு நிலத்தை எடுத்துக் கொள்ளும்போது நிலத்தில் இருக்கும் பயிர்களுக்கு நேர்மையான ஈட்டுத்தொகை கொடுக்கப்படும். எஞ்சியிருக்கும் குத்தகைக் காலத்திற்கான குத்தகைத் தொகையில் விதாசாரம் தள்ளிக் கொடுக்கப் படும்.

ஏல நிபந்தனைகள்

(1) ஏலத்தில் அதிக தொகைக்குக் கூறுபவருக்குக் குத்தகை விடப்படும். ஏலத்தில் விலை கூறுபவர்களில் இருவரோ அல்லது மேற்பட்டவர்களுக்கிடையே தகராறு ஏற்படுமாறுல் தகராறு இல்லாத கடைசி ஏலத்தொகையிலிருந்து நிலத்தை ஏல விற்பனை விலை கூற வேண்டும். ஒவ்வொரு ஏல விற்பனையிலும் ஏலம் விடுவோர் குறிக்கும் குறைந்த தொகைக்குக் கீழ் எவரும் ஏல விலை கூறக் கூடாது. கூறிய விலையிலிருந்து பின் வாங்கவும் கூடாது. விலைக்கு விற்பவருக்கு ஏலத்தைப் பற்றிய உரிமையைத் தம்மிடம் ஒதுக்கி வைத்திருக்கிறார்.

(2) அதிகத் தொகைக்கு விலை கூறுபவர், ஏலம் முடிந்தவுடனே ஏலத்தில் கூறிய விலை விதிதந்தில் ஓராண்டு குத்தகைத் தொகை/கால் ஆண்டுக் குத்தகைத் தொகை/ஒரு மாத வைப்புத் தொகையாக ஏலம் விட்டவரிடம் செலுத்தவ தோடு நில்க் குத்தகை எழுதிக் கொடுப்பதற்காகக் கீழ்க்கண்டுள்ள படிவத்தில் உடன்படிக்கையும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

(3) குத்தகை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாளையக் கழத்தின் அலுவலகத்தில் குத்தகைக் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். குத்தகை உறுதி செய்யப் படாவிட்டால் ஏலம் எடுத்தவரின் வைப்புத் தொகை அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(4) நிலத்தைப் பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்கள் சரியானவை என்று நம்பப்படுவதுடன் அவ்வாறே கருதப்பட வேண்டும். அவற்றில் தவறுகள் எவையேனும் இருப்பதாகத் தெரியவந்தால் அதனால் குத்தகை தள்ளுபடி செய்யப்பட மாட்டாது. அதற்காக ஈட்டுத் தொகை எதுவும் கொடுக்கப்படவும் மாட்டாது.

(5) அதிகத் தொகைக்கு ஏலத்தில் விலை கூறுபவர் இந்த நிபந்தனைகளை அனுசரித்து நடக்கத் தவறினால் அவரது வைப்புத் தொகையை ஏலத்துக்கு விடுபவர் பறிமுதல் செய்து ஏலத்தில் எடுத்தவருக்கு அறிவிப்பு அனுப்பியோ அனுப்பாமலோ மேற்கொண்டு மறுமுறை ஏலத்தில் விற்பனை செய்ய அவருக்கு உரிமையுண்டு.

தி. ஆ. 21, யத்தி 16]

* கையெழுத்திடுவதற்கு முன், எழுதிக் கொடுக்க வேண்டிய குத்தகைப் படிவம் இந்தக் குறிப்புடன் சேர்க்கப்பட வேண்டும்.

குறிப்பு.—இந்தத் தேதியில் மேற்சொன்ன விவரங்களுக்குள்ள நிலத்தின் குத்தகையை ஏல விற்பனை செய்யப்பட்டதில் ..... (ஊர்) ..... என்பவர் ஓராண்டு/கால் ஆண்டு/ஒரு மாதத்திற்கு .... ரூபாய்க்கு அதிகத் தொகை விலை கூறியிருந்தது .... (இன்னாரால்) உறுதிச் செய்வதற்குட்பட்டு ஒப்புக் கொள்ளப்பட் ...ருக்கிறதென்று தெரிவிக்கப்படுகிறது. சொல்லப்பட்ட ..... (அவர்), (குத்தகைக்கு விடுபவரான) இந்திய யூனியன் தலைவருக்காகவும் அவர் பிரதிநிதியாகவுள்ள ..... (அவரிடம்) முன் வைப்புத் தொகையாக ..... ரூபாய் செலுத்தியுள்ளார். நிலக்கொடை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து குத்தகை செலுத்துவதற்கான * சேர்க்கப்பட்டுள்ள குத்தகைப் படிவம் எழுதிக் கொடுக்கவும் இசைகிறார். சொல்லப்பட்ட ஏலம் விடுபவரின் பிரதிநிதியாக அவர் வைப்புத் தொகை பெற்றுக் கொண்டதையும் ஒப்புக்கொள்கிறார்.

19 ..... மாதம் ..... தேதி .....

பாஷையத்தில் கையெழுத்து செய்யப்பட்டது.

கையெழுத்துக்கள்

[நி. ஆ. 21, பத்தி 16

விவர அட்டவணை XIII

[34 (1) ஆவது விதியைக் காண்க.]

படைத்துறை எஸ்டேட் அலுவலர், பாளையக் கழக நிலக்கொடை பதிவேடுகள் (விவசாய நிலங்கள்).

100	2.25	1923 குழி தோண்டப்பட்டது. ஆண்டுதோறும் குத்தகைக்கு விடவேண்டும்.
101	1.75	1913 ஆம் ஆண்டுக்குப் பின் குழி தோண்டப்படவில்லை. ஆண்டு தோறும் குத்தகைக்கு விட வேண்டும். நீர்ப்பாசனம் இல்லை.
102	0.85	மணற்பாங்கானது. உழவுக்குத் தகுதியற்றது.
103	3.30	மாந்தோப்பும் இரண்டு கிணறுகளும் உள்ளன. ஒரு முறையில் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடலாம்.
104	7.50	பொழுதுபோக்கு இடம். 3-4-1924 தேதி 1234 எண்ணுள்ள இந்திய அரசு ஆணையில் ஜிம்கானா குழாத்திற்கு 30 ஆண்டுகளுக்குக் குத்தகை ஒப்பளிக்கப்பட்டது.

	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1924-25 ..	10 00	7 00	14 00	9 00
1925-26 ..	9 50	7 00	14 00	9 00
1926-27 ..	8 00	5 00	14 00	9 00
1927-28 ..	7 00	6 00	15 00	9 00

தி. ஆ. 21, பக்தி 16]

விவர அட்டவணை XIV

[35 (1) ஆவது விதியைக் காண்க.]

விவசாய நிலக்குத்தகை

இந்திய யூனியன் தலைவர் (குத்தகை விடுபவர் என்று இனி இதில் குறிக்கப்பெறுபவர்) ஒரு சார்பிலும் (குத்தகை எடுப்பவர்/எடுப்பவர்கள் என்று இனி இதில் குறிக்கப் பெறுபவர்) மற்றொரு சார்பிலும் இவர்களுக்கிடையே 19 ஆம் ஆண்டு, மாதம் தேதியில் செய்து கொண்ட எழுத்து உடன்படிக்கை.

1924 ஆம் ஆண்டு பாஸையங்கள் சட்டத்தின் 280 ஆவது பிரிவின் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளின்கீழ் படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாஸைய வாரியம் (படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாஸைய வாரியம் என்று இனி இதில் குறிக்கப்பெறுபவர்) குத்தகைவிடுபவருக்காக (உடைய உறுதியளிப்புடன்) பின்னர் விவரிக்கப்பட்டுள்ள நிலப் பகுதியைப் பின்வரும் முறையில் குத்தகை விடுவதற்கு உடன்படுகிறார்/உடன்படுகிறது.

இப்போது இந்த எழுத்து உடன்படிக்கை சான்று கூறுகிறது. இதனால் ஏற்படுகிற குத்தகைத் தொகையைக் கருதியும், குத்தகை எடுப்பவரின்/எடுப்பவர் பின்வரும் உடன்பாடுகளுக்குட்பட்டிருப்பதைக் கருதியும் கீழ்க் கண்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டதும், உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள தரைப்படத்தில் கோடிட்டு காட்டப்பட்டுள்ள, நான்கெல்லைகளையுடையதும், இதில் குறிக்கப்பட்ட பாஸையத்தில் இடத்திலுள்ள அளவுடைய அல்லது சற்றேறக் குறைய உள்ள நிலப்பகுதி முழுவதையும் நிலம் குத்தகைக்கு விடுபவர், நிலக் குத்தகைக்கு எழுதிக் கொடுக்கிறார்.

குத்தகை எடுப்பவர் அவரிடம் குத்தகை எடுப்பவர்கள், அனுமதிக்கப் பட்ட அவருடைய வழியுரிமையுடையவர்கள், அவரிடம் உரிமை பெற்றவர் கள் தேதியிலிருந்து ஆண்டுக் காலத்துக்கு ஆண்டு/கால் ஆண்டு/மாத குத்தகைத் தொகை ரூபாயை முன் பணமாக செலுத்துவதற்குட்பட்டு மேலே குறிக்கப்பட்டுள்ள நிலத்தைக் குத்தகைக்கு உடைமையில் வைத்துக் கொள்ளலாம்.

I. குத்தகை எடுப்பவர்/குத்தகை எடுப்பவர்கள், அவருக்காக அவரது/அவர்களுக்காக அவர்களுடைய வாரிசுகள், உரிமை பெற்றவர் கள், குத்தகை விடுபவருடன் இதனால் செய்து கொள்ளும் உடன்படிக்கை யாவது,

(1) குத்தகைக் காலத்தில் மேலே குறிக்கப்பட்டுள்ள ஆண்டு/கால் ஆண்டு/மாதக் குத்தகையையும் நிலத்திற்கு இப்போதைய அல்லது பின்னர் விதிக்கப்படும் மேல்வரிகள், வீதங்கள், தீர்வைகள் இவற்றையும் குறிப்பிட்ட காலங்களிலும் செலுத்துவதாகும்.

[மி. ஆ. 21, பத்தி 16

(2) மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தை விவசாய உபயோகத்தைத் தவிர வேறு உபயோகத்திற்காவது 1924 ஆம் ஆண்டு பாசேயங்கள் சட்டம் 144 ஆவது பிரிவின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்காமல் மற்ற வகையில் உபயோகம் செய்வதில்லை என்றும் படைத்துறை எஸ்டேட் அலுவலின் *பாசேய வாரியத்தின் எழுத்து வடிவிலான அனுமதியில்லாமல், *மரங்கள் நடவும், கட்டடங்கள் எழுப்பவும், சாலைத் தோண்டவும், அந்த நிலத்தின் மேல் பரப்பிலிருந்து அல்லது அடியிலிருந்து மணல், களிமண் அல்லது எத்தகைய சுரங்கப் பொருள்களும் எடுப்பதில்லையென்றும்,

(3) உடன்படிக்கை நிலத்தைக் குத்தகைக் காலம் முடிவடைந்ததும் அல்லது நீக்க முடிவு செயப்பட்டதும் குத்தகை விடுபவருக்குச் சமாதான முறையில் நிலத்தை விட்டுவிடுவதாகவும்,

(4) படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாசேய வாரியத்தின் எழுத்து வடிவிலான அனுமதியின்றி உடன்படிக்கை நிலத்தை அல்லது அதன் பகுதியை அல்லது அவர் அல்லது அவர்களுக்கு உடன்படிக்கையில் உள்ள உரிமை அல்லது அனுகூலத்தை, ஒப்படை உள் குத்தகை, மாற்றுதல் அல்லது சுவாதீனத்திற்கு விடல் உட்படுத்துவதில்லையென்றும்,

II. குத்தகைக் காலத்திற்குள் எந்தக் காலத்திலோ அல்லது காலங்களிலோ எழுத்து வடிவிலான நான் அறிவிப்புக்குப் பின் மேலே குறிப்பிட்டுள்ள நிலம் அல்லது அதன் பகுதியைத் திரும்பச் சுவாதீனம் எடுத்துக் கொள்ளவும் குத்தகையைத் தீர்த்து முடித்து விடவும் குத்தகை விடுபவருக்குச் சட்ட முறையில் அதிகாரம் உண்டு என்பதையும், ஆனால் அவ்வாறு திரும்ப எடுத்துக் கொள்ளும்போது அந்த நிலத்திலப்போதிருக்கும் பயிர்களுக்காக நேர்மையான தொகையை எஞ்சியுள்ள குத்தகை காலத்துக்குரிய விதாசாரமான கழிவையும் தனிர வேறெந்த ஈட்டுத் தொகையும் குத்தகைத் தொகையில் குத்தகை எடுத்தவருக்கு/எடுத்தவர்களுக்குக் கொடுக்கப்பட மாட்டாதென்றும்;

II குத்தகை எத்தவர்/எடுத்தவர்கள் அல்லது அந்த நிலத்தை அபோது வைத்திருக்க உரிமை பெற்றவர் அல்லது பெற்றவர்கள், குத்தகைக் காலம் முடிவதற்கு அல்லது தீர்த்து முடிவு செய்வதற்கு முன்னர் இறந்து விடுவாரெனில் அவ்வாறு. இறந்தவரின் அல்லது இறந்தவர்களின் வாரிசு அல்லது வாரிசுகள், படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாசேய வாரியம் அனுமதித்தால், இதில் கண்டுள்ள உடன்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு எஞ்சியுள்ள குத்தகைக் காலத்துக்கு அந்நில உடைமையில் வைத்துக் கொள்ளலாமென்றும், அந்நிலத்திற்குரிய அத்தகைய வாரிசு இல்லாவிடில் குத்தகைத் எடுத்தவர் இறந்த தேதியிலிருந்து குத்தகை தீர்த்து முடிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுமென்றும்,

---

* பழமரங்கள் நட, கல்உடைத்தெடுக்க, செங்கல் உற்பத்தி செய்ய இந்தக் குத்தகைகள் விடப்பட்டால் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு நிபந்தனைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தி. ஆ. 21, பத்தி 16]

IV. இதனால் ஏற்படுத்திய குத்தகைத் தொகையின் பகுதி ஏதேனும் பாக்கியாக நின்றாலும், அது கேட்கப்பட்டாலும், கேட்கப்படாவிட்டாலும், அது செலுத்தப்பட வேண்டிய தேதியிலிருந்து நாட்களுக்குள் செலுத்தப்படாதிருந்தாலும், அல்லது இதிலுள்ள உடன்பாடுகளை அல்லது நிபந்தனைகளை, குத்தகை எடுத்தவர், எடுத்தவரின்/எடுத்தவர்களின் வாரிசுகள், உரிமை பெற்றவர்கள் மீறியதாகப் படைத்துறை எஸ்டேட் அலுவலர்/பாஜிய வாரியம் கருதினாலும், குத்தகை விடுபவர் நிலத்தில் பிரவேசித்து சுவாதீனம் செய்து கொள்ள உரிமை உண்டென்றும், அதன் பின்னர் குத்தகை முழுவதுமாக முடிவு செய்யப்படுமென்றும், அதன்பொருட்டுக் குத்தகை எடுத்தவர்/எடுத்தவர்களுக்கு எத்தகைய ஈட்டுத் தொகையும் : பெற உரிமை கிடையாதென்றும் உடன்படுகிறார்.

மேலே குறிக்கப்பட்டுள்ள விவர அட்டவணை

இதற்கு சான்றாக மேலே முதலில் கண்டுள்ள ஆண்டு, தேதியில் இரு சார்பினரும் இதன்கீழ் கையெழுத்திடுகின்றனர்.

இந்திய யூனியன் தலைவருக்காக
.....என்பவரால்
..... முன்னிலையில்
கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி :—

மேற் சொல்லப்பட்டவரால் .....
முன்னிலையில் கையெழுத்து செய்யப்பட்டது.

சாட்சி :—

குறிப்புகள்.—(i) தொடக்கத்தில் பாஜிய வாரியம் தானாகவே நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு குத்தகைகள் விடலாம். படைத்துறை எஸ்டேட் அலுவலரின் மேலாண்மையிலுள்ள "அ" நிலங்களின் நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத குத்தகை தற்காலிக ஆணை அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். படைத்துறை எஸ்டேட் அலுவலரின் மேலாண்மையிலுள்ள "அ (2)" நிலங்களின் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத குத்தகைகளுக்குத் தற்காலிக ஆணை அதிகாரியின் ஒப்பளிப்பு வேண்டும்.

(ii) நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலக் குத்தகைகளுக்குக் கலெக்டரின் ஏற்பும் தற்காலிக ஆணை அதிகாரியின் உறுதியளிப்பும் வேண்டும்.

(iii) பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலக் குத்தகைகளுக்கு கலெக்டரின் ஒப்புதலும் மத்திய அரசாங்கத்தினரின் உறுதியளிப்பும் வேண்டும்.

[சி. ஆ. 21, பக்கி 16

விவர ஏட்டவணை XV

[37 (2) ஆவது விதியைக் காண்க.]

படைத்துறை எஸ்டேட் அலுவலரின்/பாஸேய வாரியத்தின் நிலக்குத்தகைப் பதிவேடு.

(பலவகை இடங்கள்.)

(விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவர் பூர்த்தி செய்ய வேண்டிய நிலக் குத்தகை விண்ணப்பத்தின் படிவம்)

படைத்துறை எஸ்டேட் அலுவலருக்கு

பாஸேயம் நிர்வாக அலுவலருக்கு

தேதி

ஐயா,

நான் உபயோகத்திற்காக

உள்ள ஏக்கர்/சதுர அடி நிலத்தின் குத்தகைக்காக விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன்.

தேவையாக உள்ள நிலத்தின் வரைப்படம் இதனுடன் சேர்க்கப் பட்டிருக்கிறது.

நிலத்தில் எந்த கட்டடமும் எழுப்புவதில்லை. குத்தகையை ஒப்பளிக்கும் அதிகாரி அனுமதித்தவாறு எல்லைச்சுவர்கள், அடைப்புகள் அல்லது வேலிகள் மாத்திரம் அமைத்துக் கொள்கிறேன்.

ஆண்டுக் காலத்துக்குக் குத்தகைக்குக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நிலத்தை முடிவு செய்வதில் மத்திய அரசினர் அல்லது அதனால் இதற்காக நியமிக்கப்படும் அதிகாரி விதிக்கக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்குக் கட்டுப்படத் தயாராக இருப்பதுடன், நில அளவைக்கும் எல்லை வரையறுத்திலுக்கும் ஆகும் செலவு ஏதேனும் இருப்பின் அதை நிலம் ஒரு வேளை வேறுயாருக்கேனும் கொடுக்கப்பட்டால் செலுத்தப்பட்டத் தொகை திருப்பி கொடுக்கப்படும் என்று எற்பட்டால் வைப்புத் தொகையாகச் செலுத்தவும் தயாராக இருக்கிறேன்.

பின் வரும் காரணங்களுக்காக அந்த நிலத்தை ஏலத்துக்கு விடாமல் தனி உடன்படிக்கையில் எனக்குக் கொடுக்குமாறு கேட்டுக் கொகிறேன்.

இப்படிக்கு,

தங்கள்,

நி.ஆ. 21, பத்தி 16]

நிலக்குத்தகைப் பதிவேடு

(பலவகை இடங்கள்.)

(குறிப்பிட்ட அதிகாரி பூர்த்தி வேண்டும், விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்படத்தக்கதன்று.)

நில அளவை எண்/இருக்குமிடம்.

நில அளவை எண் இருந்தால் புலத்தின் முழுப் பரப்பு

1. விண்ணப்பத்தின் தேதி .. ..

2. கேட்டுக்கொள்ளப்பட்ட பரப்பு ..

3. விண்ணப்பம் செய்து கொண்டிருப்பவர் பெயரும் முகவரியும்.

4. விண்ணப்பம் செய்து கொண்டிருக்கும் குத்தகைக் காலம்.

5. எந்த உபயோகத்திற்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

6. படைத்துறை எஸ்டேட், அலுவலரின் பரிந்துரை, கழகத்தின் தீர்மானத்தின் நகல்.

7. கலெக்டரின் கருத்து .. ..

8. தலைமை ஆணை அதிகாரிக்கு அனுப்பப்பட்டது.

9. மத்திய அரசாங்கத்தின் 37 ஆவது விதியின்கீழ் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் ஆணை.

10. நில அளவை, எல்லை வரையறுத்தல் தேதியும், செலவுத் தொகை செலுத்திய தேதியும்.

11. அட்டவணையை அனுசரித்து விதிக்கப்பட்ட ஆண்டு குத்தகைத் தொகை.

12. குத்தகையின் தவணைக் கட்டணத்துக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட விலைத் தொகை.

13. ஏல அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டது.

[மி. ஆ. 21, பக்கி 16

14. ஏலத் தேதி .. .. ..

15. ஏலம் எடுத்தவர் .. .. ..

16. ஏலத்தில் கூறப்பட்ட அதிகத்தொகை.

17. மத்திய அரசாங்கத்தின் அல்லது 37 ஆவது விதியின் கீழ் நியமிக்கப் பட்ட அதிகாரியின் ஆணை.

(9 ஆவது இனத்தின் கீழ்ச் சாதாரண முறையில் ஆணையிடப்பட்டால் 10 முதல் 17 வரையுள்ள இனங் களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.)

18. குத்தகை எண் தேதி .. ...

19. குத்தகை பதிவு செய்யப்பட்ட தேதி.

படைத்துறை எஸ்டேட் அலுவலர்.

நிர்வாக அலுவலர்.

நிலத்தின் தரைப்படம்:

நில அளவை எண்..

உட்பிரிவு.

பரப்பு.

நிலம் அளவை செய்யப்பட்டு எல்லைக்கல் நடப்பட்டது.

படைத்துறை எஸ்டேட் அலுவலர்

நிர்வாக அலுவலர்.

தேதி

இந்திய நாட்டுப்பாளையம் தரைப்படத்தில் இந்த உட்பிரிவு குறிக்கப் பட்டுப் பொது நிலக் கொண்டப் பதிவேட்டில் தக்கவாறு பதிவு செய்யப்பட்ட தாக உறுதி கூறப்படுகிறது.

தேதி:

[தி. ஆ. 21, பத்தி 16]

விவர அட்டவணை XV.

[28 (3), 35 (3), 37 (4) ஆவது விதிகளைக் காண்க.]

வட்டம் படைத்துறை எல்டேட் அலுவலர் பாளையம் பாளைய வாரியம்

பாளையம் குத்தகை எண் நில அளவை எண் பாப்பு

படைத்துறை எல்டேட் அலுவலரின் பாளைய வாரியத்தின் கட்டட நிலங்கள், பக்க எண். விவசாய

விவரங்கள்—

கட்டட என் பெயர்.

விவசாய நிலப்பகுதி என்.

குத்தகை—

(விவர அட்டவணை) விளக்கம்.

எந்தக் காரியத்துக்காக.

எவ்வளவு காலத்திற்கு.

எழுதிக் கொடுத்த தேதி.

பதிவு செய்யப்பட்ட தேதி.
முடிவு தேதி.

செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ரூபாய் வருஷத் தவணைகளில் செலுத்த வேண்டும்.

முதல் குத்தகை எடுத்தவர்

மாறுதல்கள்—எவ்வாறு செய்யப்பட்ட தென்பதற்கு முழு விவரங்கள்.

குறிப்புகள்

[மி. ஆ. 21, பக்தி 16

விவர அட்டவணை XVII.

[39 (1) ஆவது விதியைக் காண்க.]

பாகேயத்திலுள்ள மனை இடத்தை அனுபோகம் செய்வதற்கு வழங்கப்படும் உரிமம்.

அளவை எண்	*(இணைக்கப்பட்ட தரைப்படத்தில் குறிக்கப்பட்ட பாப்புடைய நில உரிமையை என்ற முறையில் ஒன்றுக்கு கழுக்குட்பட்டு இந்த உரிமம் கொடுக்கப்படுகிறது:—	இதிலுள்ள சதுர அடியுள்ள மகன்	சதுர கெஜம் இடத்தை அனுபோகம் செய்யும் க்கு காரியத்திற்காக மாதம்/நான் ரூபாய் செலுத்தியதால் பின்வரும் நிபந்தனை

(1) இந்த உரிமத்தினால் நிலத்தின் புழக்க உரிமை அல்லது அனுகூலம் ஏற்படுத்தினதாக ஆகாது.

(2) நீர்த்து முடிவு செய்வதற்கான முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டாலன்றி இந்த உரிமம் பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து வரையில் சட்ட முறையில் செல்லத்தக்கதாகும்.

(3) உரிமம் பெற்றவருக்கு நான்/மாத அறிவிப்பு கொடுத்து உரிமம் கொடுப்பவர் இந்த உரிமம் முடிவு செய்ய உரிமை உண்டு.

(4) உரிமம் முடிவு அடையுமாறு செய்யப்பட்ட வாரங்கள் வரையில் அவ்விடத்திலுள்ள பொருள்கள் அல்லது கட்டடங்களை அப்புறப்படுத்த உரிமம் பெற்றவருக்கு உரிமையுண்டு. ஆனால் அவ்விடத்திலுள்ள பொருள்களை அல்லது உரிமம் பெற்றவர் அவ்வாறு அப்புறப்படுத்தத் தவறினால் அவை மத்திய அரசாங்கத்தின்/பாளையக்கழகத்தின் சொத்தாகி, அதற்கு ஈட்டுத் தொகை எதுவும் கொடுக்கப்படமாட்டாது. உரிமம் பெற்றவருக்கு அதற்கப்புறம் எந்தவைய உரிமையும் கிடையாது. அப்புறப்படுத்துவதில் சேதம் ஏற்பட்டால் உரிமம் பெற்றவர் அதற்கு ஈடு கொடுக்க வேண்டும்.

(5) உரிமம் பெற்றவர் இந்த உரிமத்தைக் கொடுத்துவிடவோ மாற்றவோ கூடாது. அவர் வேலையாட்கள் அல்லது பிரதிநிதிகள் இதைச் செயற்படுத்துவதற்கும் உரிமையில்லை.

(6) உரிமத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கன்றி வேறு எக்காரியத்திற்கும் இந்த நிலத்தை உபயோகிக்கக் கூடாது.

(7) அனுமதிக்கப்பட்டால், தற்காலிகமான கட்டடத்தை மாத்திரம் அந்த இடத்தில் கட்டிக் கொள்ளலாம். உரிய அதிகாரி பிறப்பிக்கக்கூடிய கட்டளைகளுக்கினங்க இக்கட்டடங்கள் இருக்க வேண்டும்.

---

*ஒரு மாதத்திற்கு மேற்பட்ட உரிமங்களுக்குத் தரைப்படம் ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

தி. ஆ. 21, பத்தி 16]

(8) இறுதி அடையுமாறு செய்யப்படுவதற்கான அறிவிப்பை அனுசரித்தோ அல்லது உரிமக் காலம் இறுதியானதாலோ உரிமம் முடிவாய் விட்டால் மத்திய அரசாங்கத்தினர்/பாகேய வாரியத்தினர் உரிமம் பெற்ற வருக்கு எந்த ஈட்டுத் தொகையும் கொடுக்கக் கடமைப்பட்டவர்களல்லர்.

கையெழுத்து.

படைத்துறை எஸ்டேட் அலுவலர்.

நேதி.

பாகேய வாரியத்தினர்.

உரிமம் பெற்ற என்ற நான் உரிமத்தில் அடங்கியுள்ள வாசகங்களையும், நிபந்தனைகளையும் நன்முகத் தெரிந்து கொண்டு அவற்றை இதனால் நான் ஒப்புக் கொள்கிறேன்.

கையெழுத்து.

Verified RealEstate

விர அட்டவணை XVIII.

[39 (3)-வது விதியைக் காண்க.]

நிலத்தைத் தற்காலிக அனுபோகம் செய்யக் கொடுக்கப்படும் உரிமங்களின் பதிவேடு——————————ஆண்டு பாகுபாயம்.

(1)	உரிமம் வரிசை எண்.	
(2)	நில அளவை எண்ணும்	
(3)	பரப்பு.	
(4)	உரிமம் கொடுக்கப்பட்ட	
(5)	உரிமம் பெற்றவரின் பெ	
(6)	உரிமத்தின் காலம், முதல் தேதியும் கடைசி தேதியும் எல்லை அதிலடங்கிய நாட்கள்	
(7)	பாசன வாரியத்தின் தீர்மானத்தின் எண், தேதி அல்லது உரிமம் அனுமதிக்கும் பயிர் வகை, எல்லை, தேதி	
(8)	விதிக்கப்பட்ட கட்டணம்	
(9)	வசூல் தேதியும், பட்டத்தின் அல்லது அதிலுள்ள நிர் சுருக்கமும்.	
(10)	வரைச் சீட்டு எண்.	
(11)	பொது ரொக்க ஏட்டில் பட்ட எண், தேதி.	
(12)	சுவாதீனம் முழுவதும் பாக பயன்—தற்காலிக அல்லது நிர் வாக அதிகாரி கொடுப்பதும் தேதியும்.	

குறிப்பு.—ஒவ்வொரு கால்நடையும் மேய்வதற்குத் தனி அனுமதி கொடுக்கும் முறை நடைமுறையிலிருந்தால், அனுமதிச் சீட்டு, அடிச் சீட்டுமுள்ள புத்தகங்களில் எழுதவேண்டும். இத்தப் பதிவேட்டில் அதற்குக் குறிப்புகள் எழுதத் தேவையில்லை.

விவர அட்டவணை XIX.

[46 (2)-ஆவது விதியைக் காண்க.]

பாளைய வாரியத்தின் மத்திய அரசாங்க வருவாய்ப் பதிவேடு.

'இ' வகுப்பு நிலங்கள்.

மத்திய அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை.		
(1)	வரிசை எண்.	
(2)	மத்திய அரசாங்க வருவாய் முறை உரிமை தேதி.	வாரியத்திற்குச் சட்ட அனித்த ஆணை எண்
(3)	எந்தக் காரியத்திற்காக கொடுக்கப்பட்டது.	அதிகார உரிமை
(4)	பாக்கி	
(5)	கடப்பு ஜமீன்தாரின் பெயர்.	
(6)	(4), (5) கட்டணங்களுக்குரிய	
(7)	மத்திய அரசாங்கத்திற்குச் செலுத்திய தொகை, சுருக்கமான வரலாறு எண்:: தேதி.	
(8)	கொடுக்க வேண்டிய பாக்கி.	
(9)	குறிப்புரை (தொகை செலுத்துவது பற்றிய புலனாய்வுக்கு ஏதாவது தேதியை மத்திய அரசாங்கம் குறிப்பிட்டிருந்தால் அத்தகைய தேதியும் இங்கே குறிக்கப்பட வேண்டும்.)	

28-3-1928 தேதி 851 அ. ஆ. கை.ப. வரை.

5-4-1938 தேதி 35 வா.து.க.செ. அச்சு.

Verified Real Estate ™

இணைப்பு XXVI

[22-ஆவது நில ஆணையின் 6-ஆவது பத்தி.]

கட்டட விற்பனைச் சான்றுப் படிவம்.

தேதியில் இடத்தில் விடப்பட்ட
ஏல விற்பனையில் என்பவரால் கீழ்க்காணும்
ஆளையாச் சொத்து ஏலத்தில் எடுக்கப்பட்டதற்கும் ஏலத் தொகை முழுவது
மான ரூபாய் செலுத்தப்பட்டதற்கும் இதனால் சான்று
கொடுக்கப்படுகிறது.

தேதியும் பத்திரம் பதிவு மாவட்டமும்.	பத்திரப் பதிவு உள்மாவட்டம்.	நாலுகாலும் இராமும்.	கட்டடத்தின் குறிப்புரை. விவரம்.
(1)	(2)	(3)	(4) (5)

குறிப்பு—

* கட்டடத்தை அடையாளம் கண்டு கொள்வதற்குத் தேவையான எல்லா விவரங்களையும் இங்கே குறிப்பிடுக.

† நிலமின்றிக் கட்டடத்தை மாத்திரம் விற்றதற்கு இது சான்றாகும்.

27-6-1899 தேதி, 397 அ.ஆ.

இணைப்பு XXVI அ—நீக்கப்பட்டது.

19-11-1953 தேதி 20 என். ல.து.வா.செ.
14-7-1956 தேதி 46206 இ-56-1 அ. குறிப்பு. வரு.
23-8-1956 தேதி 1185 என். வ.து.வா.செ.பலவ.

இணைப்பு XXVII

கட்டடத்துடன் மனை நில விற்பனை உரிமைப் பத்திரப் படிவம்.

இதனால் எல்லோருக்கும் தெரிவிப்பது, நில அளவை எண்
செண்டுகள் அல்லது சதுர கெஜங்கள் பரப்புள்ள
வடக்கே, கிழக்கே, தெற்கே, மேற்கே
இந்த நான்கெல்லைக்குட்பட்டதும் இதனுடன் இணைக்கப்பட்ட தளைப்
படத்தில் வரைந்து காட்டப்பட்டுள்ளதுமான சொமத்திலுள்ள
நிலத்தை ரூபாய்க்கு க்குப் பின்வரும்
நிபந்தனைகளுக்குட்பட்டு விற்கப்பட்டிருக்கிறது:—

(1) ஆண்டு மனைத் தீர்வை ரூபாய் அல்லது குறிப்பிட்ட காலங்களில் திருத்தி அமைக்கப்பட்ட தொகையை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15 தேதிக்குள் கேட்கப்பட்டவுடன் அரசாங்கத்திற்குச் செலுத்திவிட வேண்டும்.

(2) மனைத் தீர்வை அவ்வாறு செலுத்தத் தவறினால் 1864-ஆவது ஆண்டு சென்னை -ஆம் சட்டத்தின் கீழ் அல்லது வருவாய்ப் பாக்கியை வசூல் செய்ய அவ்வப்போது நடைமுறையிலுள்ள அதுபோன்ற சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும்.

(3) நிலத்தின் வழியாகச் செல்லும் அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ள சாலைகள், பாதைகள் ஆகிய இவற்றின் அரசினருக்கும், பொதுமக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருந்துவருகிற உரிமைகளை ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை இவ்வொப்பனை ஒரு வகையிலும் பாதிக்காது. நிலத்திலுள்ள தங்கம் அல்லது மற்ற கனிப் பொருள்கள் அல்லது நிலக்கரி இவற்றிற்கு அரசினருக்கு உள்ள உரிமை அரசினரிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலத்தின் உட்சென்று பொருள்களை எடுப்பதற்கு வேண்டிய வேலை செய்வதனால் உண்டாகும் சேதத்திற்கு ஈட்டுத் தொகை கொடுக்கப்படுவதற்குட்பட்டு நிலத்தில் உட்சென்று கனிப் பொருள்களை எடுத்து வேலை செய்வதற்கு அரசினர் எப்போதும் அனுமதிக்கப்பட வேண்டும்.

(4) அரசினர் ஒப்பளிப்பின்றி நிலத்தை அல்லது கட்டடத்தை இந்தியக் குடி அல்லாத வேறொருவருக்குப் பராதீனம் செய்வது கொடையைச் செல்லாததாக்கிவிடும்.

(5) (சேர்க்கப்பட்டிருக்கும் விவர அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள) நிலத்தில் இப்போதிருக்கும் அல்லது இனி முளைக்கும் எல்லா சந்தன மரங்கள், அவைகளின் கிளைகள் வேர்கள் இலைகளின் உரிமையையும், இவ்வாறு கொடை அளிக்கப்பட்ட பின்னர் நிலங்களில் வளரக்கூடிய சந்தன மரங்கள் அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது அவற்றின் வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்திக் தங்கள் விருப்பம்போல் அவற்றின் விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவற்றை வெட்டுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டச் செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு ஒப்பனை பெறுபவருக்கு உரிமை இல்லை.

(6) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறாமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்ந்துகொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் கலெக்டர் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத் தக்க எல்லா நடவடிக்கைகளையும் கொடை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(7) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின்மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் மோசக் கருத்துடன் திருத்தப்படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் கொடை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(8) மேலே குறிப்பிட்டுள்ள (5), (6) அல்லது (7) ஆவது நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப்படவில்லையாயின் கொடை பெற்றவர் அவ்வாறு அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறியதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடேறும் செய்ய வேண்டுமென்று தீர்மானிப்பாராயின், அத்தகைய ஈட்டுத் தொகையை, அவர் அரசினருக்குச் செலுத்திவிட வேண்டும். கொடை சாத்து செல்லு நிலத்தில் பிரவேசிக்கவும் அரசினருக்கு உரிமையுண்டு. அதன் பின்னர் அந்நில முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்துவிடும். இந்த நிலையில் கொடை பெற்றவர் யாதொரு ஈடு பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார்.

குறிப்பு.—கீழே குறிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலங்கள் கொடுக்கப்படும் பொழுது சந்தன் மரங்கள் சம்பந்தப்பட்ட (5) முதல் (8) வரையுள்ள நிபந்தனைகளை அடித்துவிட வேண்டும்—

செங்கல்பட்டு, சென்னை, தஞ்சாவூர்.

9—12—1935 தேதி, 2931 அ.ஆ.வரு.
13—5—1935 தேதி, 1116 அ.ஆ.பலவ.
1—5—1937 தேதி, 895 அ.ஆ.பலவ.
30—8—1956 தேதி, 3275 அ.ஆ.பலவ.வரு.
23—1—1936 தேதி, 4 வ.து.வா.செ.அச்சு.
27—5—1935 தேதி, 58 வ.து.வா.செ.
13—12—1941 தேதி, 138 வ.து.வா.செ. அச்சு.
18—9—1956 தேதி, 1305 வ.து.வா.செ.பலவ.

இதற்குச் சான்றாக இவற்றை தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக அவர் சார்பிலும் அவரது ஆணையையும் கட்டளையையும் அனுசரித்து ..... ஆண்டு ..... மாதம் ..... தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

24—6—1941 தேதி, 1448 அ.ஆ.வரு.பலவ.
30—8—1956 தேதி, 3275 எண்.அ.ஆ.வரு.கைப.
14—11—1941 தேதி, 124 வ.து.வா.செ.அச்சு.
18—9—1956 தேதி, 1305 எண்.வ.து.வா.செ.பலவ.

இணைப்பு XXVIII

நீக்கப்பட்டது.

7—9—1956 தேதி, 3410 எண்., அ.ஆ.வரு.கை.ப.
20—9—1956 தேதி, 1316 எண் அ.ஆ.வரு.பலவ.

இணைப்பு XXVIII அ

அமைத்த படிவம்.

பொருள்: மாற்றல்—நிலம்—வ.நி.ஆ. நாள் , வட்டம்
, ஊர் , நில அள்ளை எண்
, முதலியவை , வரைக்கு

மாற்றல் கருத்துக்கள் பணித்தனுப்பப்படுகின்றன.

பார்வை : மாவட்ட ஆட்சியரிடமிருந்து
மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து

1. நில அளவை எண்கள்.
2. பரப்பு.
3. பாருபாடு.
4. ஊர்.
5. வட்டம்.
   (i) யாருக்காகத் தேவைப்படுகின்றன ?
   (ii) என்ன காரியத்திற்கு ?
6. இடத்தை ஆய்வு செய்த அலுவலர்.
7. அவ்விடங்களில் ஆக்கிரமிப்புகள் எதாவது இருப்பின் அவற்றின் விவரங்கள் :
8.
   (அ) அவ்வூரில் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டதா ? உள்ளாட்சி மன்றத்திடமிருந்தோ மற்ற நபர்களிடமிருந்தோ தடை ஏதேனும் இருந்தால் அதன்மீது மாவட்ட ஆட்சியரின் / மாவட்ட வருவாய் அலுவலரின்
   குறிப்புரைகள்.
9. மேம்பாடுகள்.
10. மரங்கள், கட்டடங்கள் முதலியவையும் அவற்றின் மரங்கள் கட்டடங்கள் விலை மதிப்பீடும்.
11. ஏதேனுமிருப்பின் மாற்றதலின் நிபந்தனை.
12. ஓர் ஏக்கர் வீதத்தில் நிலங்களின் விலை மதிப்பு.
13. கருதப்பட்ட மாற்றலுக்குத் தொடர்பாயுள்ள பொருத்தமாக மற்றெந்த விவரமும்.
14. மாவட்ட ஆட்சியரின் / மாவட்ட வருவாய் அலுவலரின் பரிந்துரை
15. இணைக்கப்பட வேண்டிய இடம் அமைப்புப் படமும் நிலத்தின் வரைப்படமும்.

(1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாளும் 348 என்னுமிட்ட நிலை வரு.அ.ஆ.)

(1963ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் நாளும் 3034 எண்ணுமிட்ட நிலை வரு.அ.ஆ.)

(1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் நாளும் 1407 எண்ணுமிட்ட நிலை வரு.அ.ஆ.)

(1965ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் நாளும் 60071/3, 65-2 எண்ணுமிட்ட வ்ரு. அரசுக் குறிப்பாணை.)

(1965ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் நாளும் 33/1உ எண்ணுமிட்ட வ.வா.செ.அச்சு.)

(1966ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1ஆம் நாளும் 17 எண்ணுமிட்ட திருத்தச் சீட்டு.)

இணைப்பு—XXIX

(24-ஆவது நிலை ஆணையின் 5-ஆவது பத்தி.)

அரசினருக்குச் சொந்த உரிமையுள்ள நிலத்தில் தனிப்பட்டவர் நிலையம் அல்லது தல ஆட்சிக் கழகத்திடம் விட்டு வைக்கப்படுவதற்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பம்.

மாவட்டம்

(1) விவரமும் பாப்பும் ..... தாலுகா ..... கிராமத்திலுள்ள எக்கர் பரப்பு ..... நில அளவை எண்.

(2) நடப்பு வில நிர்ப்புத் தொகை.

(3) ஒப்படை பெற்றவர்களும் இன்ன காரியத்திற்காக ஒப்படை என்பதும்.

(4) கலெக்டரின் குறிப்புரை.

22—8—1921 தேதி, 1899 அ.ஆ.வரு.பலவ.
31—8—1928 தேதி, 2016 அ.ஆ.வரு.பலவ.
8—9—1921 தேதி, 60 வ.து.வா.செ.
6—9—1928 தேதி, 97 வ.து.வா.செ.

இணைப்பு XXX

(24 ஆவது நிலை ஆணை 12 ஆவது பத்தி.)

அரசினருக்குச் செலுத்த வேண்டிய நிலத் தீர்வை விலக்குக்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம்.

மாவட்டம்.

(1) விவரமும் பாப்பும் ..... தாலுகா ..... கிராமத்திலுள்ள ..... எக்கர் பாப்புடைய நில அளவை எண் .....

(2) (அ) ஆண்டு நிலத்தீர்வை அல்லது மனை தீர்வை.

(ஆ) முதலீட்டு மதிப்புத் தொகை (நிலத் தீர்வை அல்லது மனைத் தீர்வையின் 25 மடங்குகள்).

நி. ஆ. 24 அ.]

(3) தீர்வை விலக்கு கோருவோரும் என்ன காரியத்திற்காகக் கோரப்படு கிறது.

(4) கலெக்டரின் தீர்ப்புரை.

22—8—1921 தேதி, 1899 அ.ஆ.வரு.பலவ.
31—3—1932 தேதி, 714 அ.ஆ.வரு.பலவ
8—9—1911 தேதி, 60 வ.து.வா.செ.
8—4—1932 தேதி, 18 வ.து.வா.செ-அச்சு.

இணைப்பு XXX அ.

(24-அ. நில ஆணை.)

விவசாயமல்லாத உபயோகங்களுக்காக, அரசினரின் நிலத்தைத் தற்காலிக அனுபோகத்திற்குக் கொடுப்பதற்குப் பிறப்பிக்கப்படும் ஆணையின் படிவம்.

ஆயிரத்தெழுநூற்றுத்து -ஆம் ஆண்டு மாதம்
தேதி இதன் பின்னர் கவர்னர் என்று குறிக்கப் பெறுபவர் (இச்சொல் அவரது பதவியில் வழியுரிமை பெறுபவர்களையும், பதவி ஒப்புக் கொள்கிறவர்களையும் குறிக்கும்) ஆகிய தமிழ்நாடு கவர்னர் ஒரு சார் பிலும்
ஊரில் குடியிருக்கும்
(கொடை பெற்றிருப்பவருடைய வாரிசுகளையும், நிறைவேற்றுபவர்களையும், நிர்வாகிகளையும், சட்டமுறைப் பிரதிநிதிகளையும், பதவி ஒப்புக்கொள்வோர் களையும் குறிக்கும்) இதன் பின்னர் கொடை பெற்றிருப்பவர் என்று குறிக்கப் படுபவர், மற்றொரு சார்பிலும் கீழ்க்கண்டவாறு செய்துகொண்ட கொடைப் பத்திரம்.

இதன் கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிலத்தை
தேதியிலிருந்து ஆரம்பித்து ஆண்டுகள் காலத்திற்கு (இன்ன முகவரியுடைய இன்னார் குமாரருக்கு) அவர் ஒப்புக்கொண்டவாறு கண்ட. வாசகங்களுக்கு நிபந்தனைகளுக்கும் உட்படுத்தித் தற்காலிக அனுபோகத் திற்கு தமிழ்நாடு கவர்னர் அளிக்கின்றார்கள்.

(1) கொடை முற்றிலும் நேர்மையற்றது என்றுவது அல்லது தவருக முறையிடப்பட்டது அல்லது மோசம் செய்யப்பட்ட காரணத்தினால் அல்லது நடைமுறையில் ஒழுங்கினம் இருந்தது என்றுவது ஏற்பட்டால் கொடை ரத்து செய்யப்படுவதற்குட்படும்.

(2) அவ்வாறு கொடை ரத்து செய்யப்பட்டால் அவ்வாறு ரத்து செய்யப்படுவதால் கொடை பெற்றிருப்பவருக்கு நேரிடக்கூடிய யாதொரு இழப்பிற்கும் ஈடு பெறுவதற்கு அவருக்கு உரிமையில்லை.

(3) கொடை பெற்றிருப்பவர் கொடையில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து நடந்து கொள்வதற்கும் அவற்றை நிறைவேற்றுவதற்கும் பிணை யாக ரூபாய் செலுத்த வேண்டும். கொடை பெற்றிருப்பவர், கொடையின் நிபந்தனைகளை அனுசரிக்கவும் நிறைவேற்றவும் தவறினால் இந்தப் பிணைத் தொகை கலெக்டரின் (இனி கலெக்டர் என்று குறிப்பிடப்படுகிறவர்) ஆணையினால் அரசினருக்குப் (இனி அரசினர் எனக் குறிக்கப்படுகிறவர்) பறிமுதல் செய்யப்படும்.

(4) அரசினரின் முன் ஒப்பளிப்பின்றி கொடை பெற்றிருப்பவர் தமக்கு இதனால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை வேறு ஒருவருக்கும் மாற்றக்கூடாது.

(5) கொடை பெற்றிருப்பவர், கொடை நடைமுறையிலிருக்கும் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு எல்லாக் கழிவுகளையும் நீக்கி ரூபாயை மாநிலப் பொது வருவாய்க்கும், அவர் நிலத்தை அநுபோகம் செய்வதனால் அரசாங்கம் மாநகராட்சிக்கு/நகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய வரிகள், தங்கள் நீர்வைகள் மற்றும் செலுத்தத்தக்க வரிகளுக்காகவும் ரூபாயையும் மேலும் செலுத்த வேண்டும். இவ்வாறு ஒன்று சேர்ந்த தொகையை அரசினருக்கு ஆண்டுதோறும்/மாதந்தோறும் முன்பணமாகக் கட்ட வேண்டும். முதல் தவணையை / தேதியில் செலுத்த வேண்டும். அதன் பின் ஆண்டு/மாதத் தவணைகளைப் பின்வரும் ஒவ்வொரு ஆண்டிலும்/மாதத்திலும் அதே தேதியில் செலுத்த வேண்டும்.

(6) மாநகராட்சி, நகராட்சி தனக்குச் சேர வேண்டிய தொகைகளில் மாறுதல் செய்து கொண்டால் அறிவிப்பு செய்யாமலே அரசினர் அதற்கான 5-ஆவது நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள கொடை பெற்றிருப்பவர் செலுத்த வேண்டிய இரண்டாவது போக வரித் தொகையைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம். அவ்வாறு திருத்தி அமைத்துக் கொள்வதால் கொடை பெற்றிருப்பவர் செலுத்த நேரிடும் பாக்கித் தொகையை அவர் உடனடியாகச் செலுத்திவிட வேண்டும்.

குறிப்பு.—நகராட்சியல்லாத பகுதியிலுள்ள நிலங்களைப் பொறுத்தவரையில் (5) (6) நிபந்தனைகளுக்குப் பதிலாகப் பின்வரும் நிபந்தனைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கொடை பெற்றிருப்பவர் கொடை, நடைமுறையிலிருக்கும் காலத்துக்கு அரசினருக்கு ஒவ்வொரு ஆண்டு/மாதமும் எல்லாவற்றிற்கும் கழிவுகளை நீக்கி ..... ரூபாயை முன் பணமாகச் செலுத்த வேண்டும். முதல் தவணையை ..... மாதம் ..... தேதியில் செலுத்த வேண்டும். அதன் பின் ஆண்டு/மாதத் தவணைகளைப் பின்வரும் ஒவ்வொரு ஆண்டும்/மாதமும் அதே தேதியில் செலுத்த வேண்டும்.

(7) குத்தகை நடைமுறையிலிருக்கும்போதே, குத்தகைத் தொகையை உயர்த்த அரசினருக்கு உரிமையுண்டு. கொடை பெற்றிருப்பவர் அவ்வாறு உயர்த்தப்பட்ட தொகையைச் செலுத்துமாறு கேட்கப்படும்போது அதற்கு அவர் இசையாவிடில் கொடை ரத்து செய்யப்படுவதற்குட்படும்.

குறிப்பு.—(i) இந்த நிபந்தனை, 1948-ஆம் ஆண்டு சென்னை ஜமீன் (ஜமீன் ஒழிப்பு அரசுக் குடிக்கு மாற்றம்) சட்டத்தின்கீழ் அரசினர் எடுத்துக் கொள்ளும் ஜமீன்களிலுள்ள நிலங்களின் கொடைகளுக்கும் பொருந்துவதாகும்.

(ii) நடப்பிலிருக்கும் கொடையைப் பொறுத்தவரையில் இந்நிபந்தனை கொடையைப் புதுப்பிக்கும்போது மாத்திரமே இந்நிபந்தனை விதிக்க முடியும். ஆனால், நடப்பிலிருக்கும் கொடை முன்கொடை நிபந்தனைகளை அனுசரித்தே கொடையை புதுப்பிக்க வேண்டுமென்ற நிபந்தனை நடப்புக் கொடை நிபந்தனைகளுள் இருக்குமாயின் நிலம் பெற்றிருப்பவர் புதுப்பிக்கும்போது அதிகத் தொகை கொடுப்பதற்கு இசைவு அளித்தாலன்றி அதிகத் தீர்வைப் பிரச்சினைக்கு இடமில்லை.

(8) நிலக் கொடை பெற்றிருப்பவர் பின்வரும் காரியங்களுக்காகவன்றி நிலத்தை உபயோகிக்கக் கூடாது.

நி. ஆ. 24 அ.]

(9) இணைக்கப்பட்ட தரைப்படங்களுக்கிணங்க நிலக் கொடை பெற்றிருப்பவர் ஐ கட்டிக் கொள்ளலாம்.

(10) நிலத்தையும் அதிலுள்ள கட்டடங்களையும் அரசியல் கூட்டங்களுக்கு ஏன் உபயோகிக்கக் கூடாது.

(11) கலெக்டரின் எழுத்து வடிவிலான முன் ஒப்பளிப்பின்றி நிலக் கொடை பெற்றிருப்பவர் (9) ஆவது நிபந்தனையில் சொல்லப்பட்டதைத் தவிர்த்து வேறு எந்தக் கட்டடங்கள், வேலிகள் அல்லது கட்டுமானங்கள் நிலையாகவோ அல்லது தற்காலிகமாகவோ கட்டக்கூடாது.

(12) நிலம் பெற்றிருப்பவர் அந்நிலத்தைத் தூய்மையாகவும், சுகாதாரத் துப்புரவு முறையிலும் அரசினர் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ளவாறு கட்டப்பட்ட கட்டுமானங்களையும் கலெக்டர் மனநிறைவு கொள்ளும் வகையில் பழுதில்லாமல் நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

(13) (அ) கொடை அளிக்கப்படும்பொழுது நிலத்திலிருக்கும் (அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள) எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள் இவற்றின் உரிமையையும் அரசினர் இவ்வாறு ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் வளரக்கூடிய சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள் வேர்கள் இவற்றின் உரிமையையும் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அத்தகைய மரங்கள் அல்லது வேர்கள் அல்லது அவற்றின் கிளைகளையும் வெட்டி அல்லது தோண்டி எடுத்து அவற்றைச் சம்பந்தப்பட்ட நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி தங்கள் விருப்பம்போல் அவற்றை விற்பதற்குமான உரிமையை அரசினர் வகித்துள்ளனர். மாவட்டக் கலெக்டர் அனுமதியில்லாமல் அவை வெட்டப்படுமாறு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது அவற்றை வெட்டப்படுமாறு செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துமாறு செய்வதற்கு ஒப்படை பெறுபவருக்கு உரிமையில்லை.

(ஆ) சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறுமல் இருப்பதற்கான பாதுகாப்பும், நிலத்தில் வளர்த்து கொண்டிருக்கும் முதிராத மரங்களுக்கு வேண்டிய கவனமான பாதுகாப்பும் கலெக்டர் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் ஒத்துக்கொள்ளத்தக்க எல்லா நடவடிக்கைகளையும் கொடை பெற்றவர் எடுக்க வேண்டும்.

(இ) அரசாங்க அலுவலர்கள் சந்தன மரங்களின் மீது இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மோசக் கருத்துடன் திருத்தப்படாமலிருப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதில் ஒப்படை பெற்றவர் கவனம் செலுத்த வேண்டும்.

(ஈ) மேலும், மேலே குறிப்பிட்டுள்ள (அ), (ஆ) அல்லது (இ) நிபந்தனைகளில் எதாவது ஒன்று மீறப்படுமாயின் அல்லது அது நிறைவேற்றப்படவில்லையாயின் கொடை பெற்றவர் அத்தகைய நிபந்தனையைத் தாம் மீறினதால் அல்லது அதை நிறைவேற்றத் தவறியதனால் ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு மாவட்டக் கலெக்டர் எத்தகைய ஈடு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ அத்தகைய ஈட்டுத் தொகையை, கொடை பெற்றவர் அரசினருக்குச் செலுத்திவிடவேண்டும். கொடையை ரத்து செய்து

[நி. ஆ. 24 அ.

நிலத்தில் பிரவேசிக்கவும் அரசினருக்கு உரிமையுண்டு. அதன் பின்னர் அந்நில முழுமையுமே சட்ட உரிமையில் அரசினருக்கு முற்றிலும் சேர்ந்துவிடும். இந்த நிலையில் கொடை பெற்றவர் யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமையுடையவ ராகார்.

குறிப்பு.—கீழே குறிக்கபட்டுள்ள மாவட்டங்களில் நிலக்கொடை அளிக்கப்படும் பொழுது சந்தன மரங்கள் ஒதுக்கி வைக்கப்படுவது சம்பந்தமாக (அ) முதல் (ஈ) வரையிலுள்ள நி பந்தனைகளை அடித்துவிடவேண்டும்.

செங்கல்பட்டு, தஞ்சாவூர்.

(14) அந்த நிலத்தை ..... காரியத்திற்காகத் தகுதியாக்கு வதற்கு அதிலிருக்கும் மரங்கள், செடிகள், தோப்புகள், புதர்கள் இவற்றை அகழ்ந்தெடுப்பதோ வெட்டுவதோ அல்லது அழிப்பதோ அவசியமென்று கலெக்டர் கருதினால் நிலக் கொடை பெற்றிருப்பவர் அவற்றை அகழ்த்தெடுத்து லெட்டி அல்லது அழித்து இலவசமாக எடுத்துக்கொண்டு அவற்றைத் தம் விருப்பம்போல் செய்து கொள்ளலாம். ..... காரியத்திற்காக நிலத்தைத் தகுதியாக்கும் பொருட்டு நிலக் கொடை பெற்றிருப்பவர் கரைகளின் பாதைகளை அகற்றியும் பள்ளமான இடங்களை நிரப்பியும், நிலத்தை மட்டமாக்கி, நிலத்திலுள்ள புல்லை அறுத்தும், வெட்டி எடுத்தும் தம் விருப்பம்போல அதைச் செய்து கொள்ளலாம். இன்னும் அவை போன்ற காரியங்களுக்காகவும் அவசியமென்று அரசினர் கருதத்தக்க எவ்வேலையையும் அந்த நிலத்தில் செய்துகொள்ளலாம்.

குறிப்பு.—விலை மதிப்புள்ள மரங்களாயிருக்குமாறால், வெட்டப்படும் மரங் களைக் கலெக்டரிடம் அல்லது அவரால் அதற்காக நியமிக்கப்பட்டவரிடம் ஒப்ப டைக்க வேண்டுமென்று கட்டுப்பாடு செய்யலாம்.

(15) கலெக்டரிடமிருந்து அறிவிப்பு கிடைத்தவுடனே, நிலக் கொடை பெற்றிருப்பவர், அனுமதிக்கப்படாத கட்டடம், வேலி, கட்டுமானம் இவற்றை அகற்றிவிட வேண்டும். அவ்வாறு உடனடியாகச் செய்யத் தவறினால், கலெக் டருக்கு அவற்றை அப்புறப்படுத்துவதற்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு அகற்றுவதற்கும் அகற்றப்பட்ட பொருள்களைச் சேமித்து வைப்பதற்கும் ஏற்பட்ட செலவைக் கலெக்டர் கேட்டபோது செலுத்திவிட்டு அப்பொருள்களை நிலக் கொடை பெற்றிருப்பவர் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்நிபந்தனையை அலுசரித்து, பொருள்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லையாயின், அக்காரணமாக அபபுறப்படுத்தப்பட்ட பொருள்களுக்கோ, அல்லது மேலே குறிப்பிட்டவாறு பொருள்கள் அகற்றப்படுவதற்கும் சேமிக்கப்படுவதற்கும் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டவாறு தாம் செலுத்திய செலவுத் தொகைக்கோ நிலக்கொடை பெற்றிருப்பவர் உரிமை கொண்டாடுவதற்கில்லை.

(16) (8) ஆவது நிபந்தனையில் கண்டபடியல்லாமல் கலெக்டருடைய எழுத்து வடிவில் உள்ள முன் அனுமதியின்றி அந்த நிலத்தையோ அல்லது அதிலுள்ள கட்டுமானமோ அல்லது அவைகளின் பாகத்தையோ வேறு எல்லா வகையிலும் பயன்படுத்த எவரையும் அனுமதிக்கக் கூடாது.

(17) இக்கொடை ரத்து செய்யப்பட்டாலும் அல்லது அது முடிவு அடையுமாறு செய்யப்பட்டாலும் மேலே கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமான வகையில் நிலத்தை நல்ல நிலைமையில் நிலம் பெற்றிருப்பவர் அரசினிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

நி. ஆ. 24 அ.]

(18) மேலே கண்ட நிபந்தனைகளில் அனுமதிக்கப்பட்டதைத் தவிர வேறு விதமாக நிலத்திற்கும் நிலத்திலிருக்கும் அரசினருக்கு உரிய இதர சொத்துக்கும் கெடுதல் அல்லது சேதம் ஏற்பட்டால் கொடை பெற்றிருப்பவர் அரசினருக்குப் பொறுப்பாளியாவார்.

(19) (5)-ஆவது நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள தொகை அல்லது அதன் பாகம் வழக்கத்திற்கு இசைந்து கேட்கப்பட்டோ, அல்லது கேட்கப் படாமலோ அது கொடுக்கப்பட வேண்டிய தேதியிலிருந்து 15 நாட்கள் வரையில் கொடுக்கப்படாமலிருந்தால் அல்லது இதில் குறிப்பிட்டுள்ள எந்த நிபந்தனையாவது மீறப்பட்டாலும் அரசினர் கொடை முழுவதையும் அல்லது அதன் பாகத்தை ரத்து செய்து கொடையின் உரிமையைத் தாம் வகித்துக் கொண்டு, நிலத்தின் எப்பாகத்தையும் அதிலுள்ள கட்டடங்கள், வேலிகள், இதர நிலையங்கள் முழுமையுமாவது அல்லது பாகத்தையாவது வேறு வகையில் கொடுத்துவிட முடிவு செய்யலாம். அதற்காகக் கொடை பெற்றிருப்பவருக்கு யாதொரு ஈடும் பெறுவதற்கு உரிமை இல்லை.

குறிப்பு.—தாசில்தார் வழங்கிய நிலக் கொடையில் (19)-ஆவது நிபந்தனையைப் பின்வருமாறு திருத்தியமைக்க வேண்டும் :—

" இதனால் வழங்கப்பட்ட கொடையை நெருக்கடி நிலை ஏற்பட்டால் அரசினரும் வருவாய்த்துறை வாரியமும் (நெருக்கடி நிலை எது என்பதை அரசினர் அல்லது வருவாய்த் துறை வாரியத்தினர் தீர்மானிப்பார்கள்) அறிவிப்பு இல்லாமல் ரத்து செய்யலாம். நிலம் பெற்றிருப்பவரும் எழுத்து வடிவில் கலெக்டருக்கு மாத அறிவிப்பு கொடுத்துக் கொடை முடிவு அடையுமாறு செய்து கொள்ளலாம். ஆனால் கொடை பெற்றிருப்பவர் முன்னமே இந்த நிபந்தனைகளை மீறியிருந்தால் அதற்காக அவர்மீது நடவடிக்கை எடுத்தற்குரிய உரிமை இதனால் பாதிக்கப்படாமலிருத்தல் வேண்டும். இவ்வாறு கொடை ரத்து செய்யப் பட்டால் அல்லது அது முடிவு அடையுமாறு செய்யப்பட்டால், நிலத்தில் இருக்கும் கட்டுமானங்களுக்காயினும் அல்லது அவரால் நிலத்தில் செய்யப்பட்ட மேம்பாடு களுக்காயினும் அல்லது அநுபோகம் தடை செய்யப்பட்டதால் அவருக்கு ஏற்படக்கூடிய இழப்பிற்காவது அவருக்கு யாதொரு ஈடும் கொடுக்கப்படமாட்டாது. அவ்வாறு கொடை ரத்து செய்யப்பட்டது அல்லது முடிவு அடையுமாறு செய்யப் பட்டது நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக அல்லது அறிவிப்பு கொடுக்கப் படாமல் ரத்து செய்யப்பட்டாலும் அரசினர் அல்லது வருவாய்த் துறை வாரியம் தக்கவாறுகக் கொடுக்கப்படும் கால அளவுக்குள், அதிலிருக்கும் கட்டுக் கோப்பு களை அப்புறப்படுத்திக் கொள்ளலாம்.

(20) (5) ஆவது அல்லது (6) ஆவது நிபந்தனையில் கண்டுள்ள தொகை முழுவதையுமாவது அல்லது பாகமாவது பாக்கியாக இருக்குமானால் அதை அரசினருக்கு கொடை பெற்றிருப்பவரிடமிருந்து நில வருவாய் பாக்கியைப் போலவே வசூல் செய்வதற்கு அரசினருக்கு உரிமை உண்டு.

(21) இதனால் வழங்கப்பட்ட கொடையே, தமிழ்நாடு கவர்னர் சார்பில் கலெக்டர் எழுத்து மூலமாக மாத அறிவிப்பு கொடுத்து நெருக்கடி நிலை ஏற்பட்டால் அரசினரும் வருவாய்த் துறை வாரியமும் (நெருக்கடி நிலை எது என்பதை அரசினர் அல்லது வருவாய்த் துறை வாரியத்தினர் தீர்மானிப்பார்கள்.) அறிவிப்பு இல்லாமல் ரத்து செய்யலாம். நிலம் பெற்றிருப்பவரும் எழுத்து வடிவில் கலெக்டருக்கு மாத அறிவிப்பு கொடுத்துக் கொடை முடிவடையுமாறு நீர்த்து செய்துகொள்ளலாம். ஆனால் கொடை பெற்றிருப்பவர் முன்னமே இந்த நிபந்தனைகளை மீறியிருந்தால், அதற்காக அவர் மீது நடவடிக்கை எடுத்தற்குரிய உரிமை இதனால் பாதிக்கப்

தி. ஆ. 24 அ.]

படமாட்டாது. இவ்வாறு கொடை ரத்து செய்யப்பட்டால் அல்லது அது முடிவடையுமாறு செய்யப்பட்டால், நிலத்திலிருக்கும் நிலையங்களுக்காவது அல்லது அவரால் நிலத்தில் செய்யப்பட்ட மேம்பாடுகளுக்காவது அல்லது அநுபோகம் தடை செய்யப்பட்டதால் அவருக்கு ஏற்படக்கூடிய இழப்பிற்காவது அவருக்கு யாதொரு ஈடும் கொடுக்கப்படமாட்டாது. அவ்வாறு கொடை ரத்து செய்யப்பட்டது அல்லது முடிவடையுமாறு செய்யப்பட்டால் நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக அல்லது அறிவிப்பு கொடுக்கப்படாமல் ரத்து செய்யப்பட்டாலும் கலெக்டரால் கொடுக்கப்படும் கால அளவுக்குள் அதிலிருக்கும் கட்டுக் கோப்புகளை அப்புறப்படுத்திக்கொள்ளலாம்.

(22) நிலத்துடன் வழக்கத்தில் அநுபோக முறையில் நிலத்திலுள்ள வழக்க உரிமை அதனுடன் சேர்ந்த பொருள்களின் உரிமை முதலிய எல்லா உரிமைகளும் இக்கொடையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், நிலத்தின் வழியாக அல்லது அதன் எல்லையை ஒட்டியுள்ளசாலைகள், பாதைகள், ஆறுகள், ஓடைகள், வாய்க்கால்கள் இவற்றில் அரசினருக்கும் பொதுமக்களுக்கும் நடைமுறையில் அல்லது வழக்கத்தில் இருக்கும் உரிமைகளையும் நிலத்தின் கீழ் இருக்கும் சுரங்கங்கள் நிலத்தில் தோண்டும் இடங்கள் இவற்றின் உரிமையையும் தாங்களே ஒதுக்கிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இக்கொடை அவ்வுரிமைகளை ஒரு விதத்திலும் பாதிக்காது.

(23). (19) அல்லது (21)-ஆவது நிபந்தனையை அனுசரித்துக் கொடை முடிவடையுமாறு செய்யப்பட்டால் அவ்வாறு முடிவடையுமாறு செய்யப்பட்ட தேதி வரையில் உரிய வீதக் குத்தகைத் தொகையை வசூலிக்க அரசினருக்கு உரிமை உண்டு.

(24). (3)-ஆவது நிபந்தனையை அனுசரித்துக் கொடை பெற்றிருப்பவர் வைப்புத் தொகையாக செலுத்தியிருக்கும் ரூபாயாவது அல்லது அவருக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்றுள்ள எத்தப் பாகமாவது கொடை முடிவு அடையும் காலத்திலாவது அல்லது அதற்கு முன்னதாகவே முடிவடையுமாறு செய்யப்பட்டால் அப்பொழுதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

(25) இதற்குப்பின் எப்பொழுதாவது அரசினர் அல்லது அவர்களின் அலுவலர்கள் நிலம் பெற்றிருப்பவருக்குள் கொடை சம்பந்தமான அவரவர்கள் உரிமைகள், கடமைகள், வாதங்கள் இவற்றிலும் அல்லது இந்த நிபந்தனைகளை அனுசரித்து பொருளிலும் நடைமுறையிலும் ஏதாவது விவகாரம் அல்லது கருத்து வேற்றுமை ஏற்படுமானால் அந்த விவகாரமும் கருத்து வேற்றுமை கலெக்டரின் மத்தியஸ்தத்திற்கும் தீர்ப்புக்கும் விடவேண்டும். அவரது தீர்ப்பு முடிவானதாகும்.

(26) கொடை பெற்றிருப்பவர், கொடைக்காகத் தொகை செலுத்த வேண்டிய தேதிகளில், அவ்வாறு அரசினருக்குத் தொகையைச் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து தொகை, தொகை செலுத்தப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட தேதி வரையிலும் ஆண்டுக்கு 12 சதவீதம் வட்டி அவர் செலுத்தவேண்டும்.

[தி. ஆ. 24 அ.

விவர அட்டவணை

மாவட்டம்.	தாலூகா.	நகரம் அல்லது கிராமம்.	தொகுதி எண்ணும் பகுதி எண்ணும்.	நில அளவு எண்.	பரப்பு.	எல்லைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

இதற்குச் சான்றாக இவற்றைத் தெரிவிக்கும் நான் (பெயரும் வேலையின் பெயரும்) சென்னை கவர்னருக்காக, அவர் சார்பிலும் அவர் ஆணையையும், கட்டளையையும் அனுசரித்து மேலே சொல்லப்பட்ட நிலம் பெற்றிருப்பவரும் ஆண்டு மாதம் தேதி இதில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

மேலே சொன்ன கையெழுத்து.

1

2.

மேலேசொன்ன கையெழுத்து.

1.

2.

சேர்ப்பு

தரைப்படம்/தரைப்படங்கள் ஏதேனும் இருப்பின் அது/அவை குறிப்பிடப்பட வேண்டும்.

20—12—1955 தேதி, 3913, அ.ஆ. வரு.கை.ப.

15—10—1956 தேதி, 1436 என், வ.து.வா. செ. பலவ.

இணைப்பு XXX ஆ.

(நில ஆணை எண் 14 அ பத்தி 10.)

சமயப் பிரிவுகளின் நோக்கங்களுக்காக அரசினர் நிலத்தைக் கொடுக்கப் படுவதற்குரிய நிபந்தனைகள் :—

1. இதன் கீழ் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நிலம் . . . பயன்படுத்தப்பட வேண்டுமென்றி வேறெந்த நோக்கத்திற்கும் பயன் படுத்தப்படக்கூடாது.

2. நிலத்தின் நடப்பு வரி மற்றும் தொகையும் தீர்வையுமின்றி இலவசமான மானியமாக வழங்கப்பட வேண்டும்.

3. இதன் கீழ் மானியமாக அளிக்கப்பட்ட நிலத்தை மானியம் பெற்றவர் மேலே, 1 ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்ட நோக்கத்திற்காக அதன் மீது கட்டடம் கட்டிக்கொள்ளும் உரிமையுடன் தமது கையாட்சியில் வைத்திருக்கும் உரிமை மட்டுமே பெற்றிருப்பார்.

[தி. ஆ. 24 அ, பத்தி 10

4. இந்த மானிய நாளிலிருந்து .... ஆண்டு கால அளவிற்குள் கருதப்படும் கட்டடம் கட்டப்பட வேண்டும்.

5. நிலத்தின் மீதுள்ள யாதொரு கட்டடத்துடனே கட்டடம் இன்றியோ நில முழுமையுமோ அதன் பகுதியையோ அரசினர் தமது உடைமையில் எடுத்துக்கொள்ளார் எனில் அதற்காக அரசினர் யாதொரு காரணமும் குறிப்பிடத் தேவையில்லை. சமய நோக்கத்தின் தொடர்பாக மானியம் பெற்றவரால் செய்யப்பட்டிருக்கக்கூடிய யாதொரு மேம்பாட்டிற்கோ நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய பிற வேலைகளுக்கோ இழப்பீடு எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.

6. மேலே 5 ஆவது நிபந்தனையில் குறிக்கப்பட்டுள்ளவாறு நிலத்தை எடுத்துக்கொள்வதெனத் தாம் மேற்கொண்ட முடிவை அரசினர் மானியம் பெற்றவருக்குத் தெரிவிக்கும்போது நிலத்தின் மீது கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றிக் கொள்ள அவருக்கு உரிமையுண்டு.

7. நிலத்தின் மீது கட்டப்பட்ட கட்டடத்தை அகற்றிக்கொள்ள மானியம் பெற்றவர் மறுப்பார் எனில் அக்கட்டடத்தை அரசினர் அகற்றி அவ்வாறு அகற்றப்படுவதற்கான செலவுத் தொகையை கட்டடம் பொருள்களின் விற்பனைத் தொகையிலிருந்து எடுத்துக்கொள்ளலாம்.

8. மானியம் பெற்றிருப்பவர் தாமாகவே நிலத்தை விட்டுவிடுமிடத்து சமய நோக்கின் தொடர்பாக அல்லது அ தல்லாது செய்யப்பட்டிருக்கக் கூடிய யாதொரு மேம்பாட்டிற்கோ நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய வேலைகளுக்கோ ஈடு எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.

9. நிலத்தை எடுத்துக்கொள்வதென்ற அரசின் முடிவைத் தெரிவிக்கும் கொடை பெற்ற அறிவிப்பு வரப்பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் மானியம் பெற்றவர் நிலத்தைக் காலி செய்து அதன் உடைமையை அரசினரிடம் ஒப்புவிக்க வேண்டும்.

10. மேலே 4-வது நிபந்தனையில் குறிக்கப்பட்ட கால அளவிற்குள் சமய நோக்கங்களுக்காக நிலம் பயன்படுத்தப்படவில்லை என்றால் அந்நிலம் அரசுக்கு தானாகவே திரும்பவந்து சேர்ந்து அரசினரிடம் முற்றிலுமாக உரிமையினிருக்கும் அத்தகைய நேர்வில் அறிவிப்பு எதுவும் மானியம் பெற்றவருக்குக் கொடுக்கத் தேவையில்லை.

11. மானியம் வழங்கப்படும் காலத்தில் நிலத்தில் உள்ளவையும் பின்னர் அந்நிலத்தில் வளரக்கூடியவையுமாகிய எல்லாச் சந்தன மரங்கள், அவற்றின் கிளைகள், வேர்கள், ஆகியவற்றின் உரிமையை அரசினர் தங்களிடமே ஒதுக்கி வைத்துக்கொண்டுள்ளார்கள். மேலும் அத்தகைய மரங்களை அல்லது அவற்றின் வேர்கள், கிளைகள் ஆகியவற்றை வெட்டிக் கொள்ளவும் அல்லது தோண்டி எடுத்துக் கொள்ளவும் நிலத்திலிருந்து அவற்றை அகற்றிக் கொள்ளவும், தாங்கள் விரும்புமாறு அவற்றை விற்பனை செய்துகொள்ளவும் அரசினருக்கு உரிமை உண்டு. மாவட்ட ஆட்சியல் அனுமதியின்றி அவற்றை வெட்டிக்கொள்ள அல்லது அகற்றிக்கொள்ள அல்லது அவை வெட்டப்பட்டு அகற்றப்படுமாறு செய்ய மானியம் பெற்றிருப்பவருக்கு உரிமை இல்லை.

12. சந்தன மரங்கள் களவாடப்படாமல் அல்லது சேதமுறுமா இருப்பதற்கான பாதுகாப்புக்கும் நிலத்தில் வளர்ந்து வரும் முதிரா மரங்களின்

நி.ஆ. 24 அ, பந்தி 10]

கவனமான பாதுகாப்புக்கும், மாவட்ட ஆட்சியல் மனநிறைவு கொள்ளத் தக்கவகையில் நியாயமான எல்லா நடவடிக்கைகளும் மானியம் பெற்றிருப்பவர் மேற்கொள்ள வேண்டும்.

13. சந்தன மரங்களின் மீது அரசு அலுவலர்கள் இடும் அடையாளங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் அதில் குறுக்கிட்டு தீங்கான முறையில் மாற்றப்படாதிருப்பதற்கு மானியம் பெற்றிருப்பவர் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

14. மேலே 11 முதல் 13 வரையிலுள்ள யாதொரு நிபந்தனை மீறப்படுமாயின் அல்லது நிறைவேற்றப்படவில்லையெனில் மானியம் பெற்றிருப்பவர் அவர் தரப்பிலான அத்தகைய மீறுதல் அல்லது தவறுதல் காரணமாக ஏற்படக்கூடிய யாதொரு இழப்பிற்கும் அல்லது சேதத்திற்கும் மாவட்ட ஆட்சியரால் நிர்மானிக்கப்படும் அத்தகைய இழப்பீட்டுத் தொகையை மானியம் பெற்றவர் அரசிற்குச் செலுத்த வேண்டும். அறிவிப்பு கொடுக்கப்படாமலோ யாதொரு காரணம் காட்டப்படாமலோ கொடை கள்ளுபடி செய்யப்படுவதற்கும் உட்பட்டதாகும். அவ்வாறு மானியம் கள்ளுபடி செய்யப்படுவதன் மீது அதன் பின்னர் நிலம் முழுமையும் அரசினிடம் முற்றிலும் சேர்ந்துவிட்டதாகும். இந்த தேர்விலும் கொடை பெற்றிருப்பவர் யாதொரு இழப்பீடும் பெற உரிமையுடையவராகமாட்டார்.

15. மானியம் அளிக்கப்பட்ட நிலம் பரப்பளவில் 50 சென்டுக்கும் அதிகமாக இருக்கும் தேர்வுகளில் மானிய நாளிலிருந்து ஓராண்டிற்குள் மானியம் பெற்றவர் ஓர் ஏக்கர் நிலத்திற்குக் குறைந்தது ஐந்து மரங்கள் வீதத்தில் பொருத்தமான மரங்களை நட்டு அவற்றைப் பராமரித்து வர வேண்டும்.

விவர அட்டவணை

மாவட்டமும் வட்டமும்	நகரம் அல்லது கிராமம்	நில அளவை எண்.	பகுதி எண் தொகுதி வரப்பு	எல்லைகள்
1	2	3	4	5

(வரைப்படம் ஏதேனும் இருப்பின் அது இணைக்கப்படவேண்டும்)

ந.க மானியத்தின் வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி நடக்க மானியம் பெற்றிருப்பவர் உடன்பட வேண்டும். கூடுதலான நிபந்தனைகள் எவையேனுமிருப்பின், அவை, ஒப்பளிப்பு வழங்கத் தகுதி வாய்ந்த அதிகாரியால் விதிக்கப்படவேண்டும்

குறிப்பு; நிலத்தை கொடுக்க பிறப்பிக்கப்படும் ஆணையின் இறுதியில் மானியத்தை நிறைவேற்றும அலுவலரது கையொப்பத்திற்கு மேலே கீழ்க்காணும் சான்றுரை சேர்க்கப்படவேண்டும்.

"இதற்குச் சான்றுக (பெயரும் பதவியின் பெயரும்) ஆகிய நான் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் அவரது ஆணைப்படியும்கட்டளைப்படியும் இங்கே.....நாளில் கையொப்பமிடுகிறேன்

[தி. ஆ. 24, பத்தி 16

இணைப்பு XXXI.

[24-ஆவது நிலை ஆணை 16-ஆவது பத்தி.]

(தற்காலமாகத் தீர்வை அமைக்கப்பட்ட) அரசுக்குடி-முறைப் பகுதிகளில் அளிக்கப்படும் நிலத்தீர்வை விலக்கு.

கொடை விவரங்கள்.	கொடைகளின் ஆண்டு மதிப்பு.					
	அரசுப் பணியாளர்கள் பேணுதற்காக.			மற்ற காரணங்களுக்காக.		
	இது முதல் முன்னாண்டு வரை.	தடைப்பு ஆண்டில்.	மொத்தம்.	இது முதல் முன்னாண்டு வரை.	தடைப்பு ஆண்டில்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
(அ) அரசு முறைப் பகுதிகளில்—						
(1) முழு இனம் கிராமங்கள்— தீர்வைக்கும் ஜோடி அல்லது விடுவரி ஏதேனும் இருந்தால் அதற்கும் உள்ள வித்தியாசம்.						
(2) சிறிய இனங்கள் முழுத் தீர்வைக்கும் ஜோடி அல்லது விடுவரிக்கும் உள்ள (இனம் பற்றிய) வித்தியாசம்.						
(ஆ) நில வருவாய் ஒப்படைகள் அல்லது தள்ளிக் கொடுக்கப்பட்டது:—						
(1) கடந்த அல்லது இப்போதைய பணிகளுக்காகத் தனிப்பட்டவர்களுக்கு ஆதரவாக. உதாரணமாக, படைத் துறை இந்திய ஊதியம் பெற்றிருப்பவர்களுக்கும் நில வருவாய் ஒப்படையால் ஊதியம் பெறும் கிராமப் பணியாளர்களுக்கும்.						

தி. ஆ. 24, பத்தி 16]

இகாடை விவரங்கள்.

	கொடைகளின் ஆண்டு மதிப்பு.					
	அரசுப் பணியாளர்கள் பேறுதற்காக.			மற்ற காரணங் களுக்காக.		
	முன்னொன்று இறந்து வரை.	தடப்பு ஆண்டில்.	மொத்தம்.	முன்னொன்று இறந்து வரை.	நடப்பு ஆண்டில்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.

(2) சமய நிலையங்களின் ஆதர வாக, முன் உடனடி ரொக்கப் படியாகக் கொடுத் ததற்கு பதிலாக ஒப்படை.

(3) பொதுச் சங்கங்கள், கிருத் தவக் கோயில்கள், கோயில் கள் முதலியவற்றின் ஆதரவுக்காக, உதாரணமாக, கோயில்கள், கிருத்தவக் கோயில் முதலியவற்றின் இடங்களுக்குரிய தீர்வை யைத் தள்ளிக் கொடுத்தல்.

(4) பதிவு செய்யப்பட்ட சிறப் பான காரணங்களுக்காக தனிப்பட்டவர் ஆதரவுக் காக. . . .

(இ) வசூல் கழிவுகள் அதாவது அரசுக் குடிமுறை பற்றிய வருவாய் வசூலிலிருந்து, கரு வூலத்திற்குச் செலுத்தப்படு முன் குறைக்கப்படுபவை—

(1) சமய நிலையங்களுக்கான ஆதர வாக, நில வருவாய் ஒப்பனைகள் அல்லது ரொக்கமாக கொடுப்பன வற்றிற்குப் பதிலாக.

[தி. ஆ. 24, பத்தி 16

கொகை விவரங்கள்.	கொடைகளின் ஆண்டு மதிப்பு.					
	அரசுப்பணியாளர்கள் பேணுதற்காக.			மற்ற காரணங்கள் கருதிக்காக.		
	(1) இதற்கு முன்னுள்ள ஆண்டு வரை.	(2) இதற்கு முன்னுள்ள ஆண்டு.	(3) மொத்தம்.	(4) இதற்கு முன்னுள்ள ஆண்டு வரை.	(5) இதற்கு முன்னுள்ள ஆண்டு.	(6) மொத்தம்.
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
(2) நில வருவாய், நீதி, போலீஸ் வேலை செய்யும் இராம வனுழியர்களின் ஆதரவுக் காக.						
(3) சேலத்தில் அரசாங்கத் தின் மேற்பார்வையிலுள்ள இளம்களுக்குச் சொந்தக் காரர்களாக சில இளம் தாரர்கள், திருநெல்வேலி யில் உடனடி. ரொக்க இளம்கள் உடைமையில் வைத்திருப்பவர்களின் ஆதரவுக்காக.						
(4) சிறப்பாகப் பதிவு செய்யப்பட்ட காரணங் களுக்காகத் தனிப்பட்டவர் களின் ஆதரவுக்காக.						
குறிப்புகள்.—(1) பின்வரும் இனங்கள் மேலேயுள்ள புள்ளி விவரங்களில் சேர்க்கப்படவேண்டியதில்லை :—						
(ஈ) மற்ற இனங்கள்*						
மொத்தம் ..						

(i) தள்ளிக் கொடுக்கப்பட்டவற்றில் (பருவ காலத்திற்கேற்ப) தள்ளிக் கொடுக்கப்படுபவை—வருவாய்த் துறை வாரியம் ஜமாபந்தி அறிக்கை எண் 8-இல் 1 முதல் 7 இனங்கள்.

(ii) தள்ளிக் கொடுக்கப்படுபவை—நிலையானவை—வருவாய்த் துறை வாரியம் ஜமாபந்தி அறிக்கை எண் 8-அ இல் 1 முதல் 7, 9, 10 இனங்கள்.

(iii) கிராமப்பணி நிதிக்கு அரசாங்க உதவித் தொகை.

நி. ஆ. 24, பத்தி 16]

(iv) நிலத் தீர்வையில் சேர்க்கப்பட்டுள்ள சாலை, கிராம மேல்வரி களுக்காகத் தள்ளிக் கொடுக்கப்படுபவை.

(v) நிலங்கள் நன்செயிலிருந்து புன்செய்க்கு மாற்றியதாலும் அல்லது விவசாயத்திற்கு விட்டுவிடப் பயனற்றதென விடப்பட்டதாலும் ஏற்பட்ட வருவாய் இழப்புகள்.

(vi) நிலங்கள் பொதுக் காரியங்களுக்காக உரிமை பெறப்பட்டதால் அல்லது எடுத்துக் கொள்ளப்பட்டதால் இழக்கப்பட்ட வருவாய்.

(vii) தீர்வையை முதலீடாக்கி மொத்தமாகக் கொடுக்கப்பட்டதால் தள்ளிக்கொடுக்கப்படுபவை.

(viii) நில ஆணை 21 (1) (i)-அ இன் கீழ்க் கிராம நத்தம் ஒப்படை செய்யப்பட்டதால் இழக்கப்பட்ட வருவாய்.

(ix) அரசாங்கம் செய்ய வேண்டிய ஊழியங்களை தல ஆட்சிக் கழகங்கள், நகராட்சிகள் செய்வதற்காக நிலங்கள் அவற்றிற்கு கொடுக்கப் பட்டதால் நேர்ந்த வருவாய் இழப்பு.

(x) முழு இனம் கிராமங்கள், சிறு இனம்கள் உட்பட்ட நிலையான நிலவரித் திட்டம் நிர்ணயம் செய்யப்பட்ட பகுதிகளுக்குரிய வருவாய்கள் இழப்பு.

(xi) பொதுக் காரியங்களுக்காக வேறு காரணங்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களுக்கு ஈட்டுத் தொகையாக அனுமதிக்கப்படும் எல்லா வகையான வருவாய் ஒப்படைகள் அல்லது தள்ளிக் கொடுக்கப்பட்டவை.

(2) "ஈ மற்ற இனங்கள்" என்பதின் கீழ் வரும் குறிப்புகள் விவரமாக விளக்கப்பட வேண்டும்.

(3) ஜமாபந்தியின் போது, கிராம "அ" பதிவேடு அல்லது நிலவரித் திட்டப் பதிவேடு, கிராம "ஆ" பதிவேடு கிராம 5 எண் கணக்கு தாலூகா எண் கணக்கு இவற்றிலிருந்து புள்ளிவிவரங்களைத் தொகுக்க வேண்டும். 24 ஆவது நில ஆணை 6 ஆவது பத்தியில் அனுசரித்துள்ள பதிவேட்டையும் பார்த்து விவரம் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு முறை புள்ளிவிவரங்களைத் தொகுத்த பின்னர் ஒவ்வொரு ஆண்டிலும், திரும்ப எடுத்துக் கொள்ளப் பட்டவை, கூடுதலான ஒப்படைகள், தீர்வை திருத்தி அமைக்கப்பட்டால் திருத்தி அமைக்கப்பட்ட வீதங்கள் இவற்றை அனுசரித்துப் புள்ளி விவரத்தைச் சரிப்படுத்தப்பட வேண்டும்.

(4) முழு இனம் கிராமங்களுக்குரிய தீர்வையைப் பற்றிய தகவல் யாதொன்றும் கிடைக்காவிடில், பழைய கணக்குகளைப் பார்த்து அத்தகைய கிராமம் கொடுக்கப்பட்டதால் அளிக்கப்பட்ட தீர்வை விலக்கை சரிப்படுத்திய வேண்டும்.

28—2—1899 தேதி. 58 வ.து.வா.செ.
—12—1911 தேதி. 244 வ.து.வா.செ.
——1912 36 தேதி. 1765 அ.இ

42-4—46

இணைப்பு XXXI அ.

[26 ஆவது நிலை ஆணை 7 ஆவது பத்தி.]

ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதில் மேற்கொள்ளவேண்டிய முறையைப் பற்றிய அறிவுரைகள்.

ஆட்சேபணையாயுள்ள ஆக்கிரமிப்புகளை அவை ஏற்பட்ட ஆண்டிலே சாதாரணமாக அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். தாமதம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு முன் பசலியில் தாசில்தாரால் ஆட்சேபணையில்லாதவை என்று தெரிவிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளைத் தவிர மற்றவற்றில், தண்டத் தீர்வை விதிக்கப்படுவதற்காகவும் நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காகவும் 7 ஆவது பிரிவின் கீழ் அறிவிப்புகள் தயார் செய்து கிராமக் கணக்கர் ஆக்கிரமிப்புக் குறிப்புடன் அனுப்ப வேண்டும். இவ்வாக்கிரமிப்புக் குறிப்பு கிடைத்தவுடன் அவ்வறிவிப்புகள் கால தாமதமின்றி ஆக்கிரமிப்புதாரர்களிடம் சேர்ப்பிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட காலம் கடந்த பின் வருவாய் ஆய்வாளர் கவனமாய் ஆக்கிரமிப்பைப் பார்வையிட்டு ஆக்கிரமிப்பு ஆட்சேபணையுள்ளதா அல்லாததா என்பதில் தமது அபிப்பிராயத்தை முழுக் காரணங்களுடன் தாசில்தாருக்கு ஒரு அறிக்கை செய்ய வேண்டும். கோட்ட ஆட்சியாளர் அல்லது தாசில்தாருக்கு ஆக்கிரமிப்பைப் பற்றித் தெளிவாக விளக்குமாறு, ஆக்கிரமிப்பு ஆட்சேபணையுள்ளதாலும் அதற்கு அளவுகளுடன் வரைபடமும், ஆட்சேபணையற்றதாலும் அதற்குக் கண்கூடான சாதனை வரைபடமும் ஆக்கிரமிப்புக் குறிப்புடன் மேல் அனுப்ப வேண்டும். 13 நயே பைசாவுக்கு மேற்படாத தீர்வையுள்ள மிகச் சிறிய ஆக்கிரமிப்புகளைத் தாராளமாக தம் யுக்தம் போல விட்டு விடலாமென்று வருவாய் ஆய்வாளர் அறிக்கை செய்யலாம். ஆக்கிரமிப்பு ஆட்சேபணையுள்ளதென்று வருவாய் ஆய்வாளர் கொடுக்கக்கூடிய அபிப்பிராயத்தை தாசில்தார் ஒப்புக் கொள்வாரெனில் அத்தகைய இனங்களைத் தாசில்தார் கூடுமான வரையில் விரைவாக நேரில் பார்வை இட வேண்டும். பொதுவாக அத்தகைய ஆக்கிரமிப்பில் தாசில்தார் பார்வையிடும் வரையிலும் அதைப்பற்றி எத்தன்மைத்தான ஆணைகளும் பிறப்பிக்கக் கூடாது. தண்டத் தீர்வை விதிக்கப்பட வேண்டுமாலால் விதிக்க வேண்டிய காலம் தாசில்தார் பார்வையிட்டவுடனடியான காலமேயாகும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில், ஆக்கிரமிப்புக் குறிப்புக்கள் கிடைக்கப் பெறுவதற்குக் கால தாமதம் ஏற்பட்டதால் தாசில்தார் ஜமாபந்திக்கு முன்னர் ஆக்கிரமிப்புகளைப் பார்வையிட முடியாவிட்டால், வருவாய் ஆய்வாளரின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு ஆணைகள், பிறப்பிக்கப்படலாம். ஆனால் ஜமாபந்தி முடிந்த உடனே தாசில்தார் அவற்றைப் பார்வையிட வேண்டும். ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகள் அதிகமாகவுள்ள தாலுகாக்களில் தாசில்தார் முக்கியமான ஆக்கிரமிப்புக் களைப் பார்வையிடுவதுடன் நிறுத்திக் கொள்ளலாம். தாசில்தார் ஆட்சேபணை யுள்ளதென்று கருதக்கூடிய ஒவ்வொரு ஆக்கிரமிப்பையும் அப்புறப்படுத்து வதற்காகக் கோட்ட ஆட்சியாளருக்கு உடனடியாகப் பரிந்துரை பகர வேண்டும். கோட்ட ஆட்சியாளர் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த முடிவு

தி.ஆ. 26, பத்தி 7]

செய்வார் எனில், அதற்கான ஆணையை ஆக்கிரமிப்புக் குறிப்பில் பதிவு செய்து தமது அலுவலகத்திலேயே 6 ஆவது பிரிவு அறிவிப்புகள் தயார் செய்து தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும். 6 (1) பிரிவின்கீழ் அப்புறப்படுத்துவதற்கான ஆணையுடன் அனுமதி பெறுது ஆக்கிரமிப்பு செய்தவர், அந்நிலத்தில் செய்திருக்கும் பயிர்கள் அல்லது விளை பொருள்கள் அல்லது கட்டியுள்ள கட்டடங்கள் அல்லது கட்டுமானங்களையும் அல்லது அதில் விட்டு வைத்துள்ள பொருள்களை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அப்புறப்படுத்த வேண்டுமென்று அவருக்குத் தெரிவிக்கத்தக்க அறிவிப்பும் அவருக்கு அனுப்ப வேண்டும். அத்தேதி வரையில் நிலத்திலிருந்து ஆக்கிரமிப்பை அப்புறப் படுத்துவதை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் தேதிக்குப் பின் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த வேண்டும். அதற்குள் பயிர்கள் முதலியவை அகற்றப்படாவிட்டால் அவற்றைப் பறிமுதல் செய்யக் கலெக்டர் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆனல் நிலத்தில் உணவுப் பயிர்கள் இருக்குமானுல் அவற்றை உரிய காலத்தில் அறுவடை செய்து கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகளை அநுபோகம் செய்திருப்பவருக்குக் கலெக்டர் அனுமதிக்கலாம். அவ்வாறு அநுபோகம் செய்தவர் மறுமுறையும் நிலத்தில் ஆக்கிரமித்தால் அல்லது இச் சலுகை ஒருமுறை வழங்கப்பட்ட வேருெருவர், அதே பசலியிலோ அல்லது பின்பசலிகளிலோ ஒருமுறை விளைபொருளை அப்புறப் படுத்திக் கொள்ளச் சலுகை அளிக்கப்பட்ட பின்னரும் ஆக்கிரமிப்புச் செய்தால் இச்சலுகை அளிக்கப்படக் கூடாது. இத்தகைய ஆக்கிரமிப்புக்களில் உணவுப் பயிர் முதிர்ந்த காலத்தில் அறுவடை செய்து நியாய விலைக்கு விற்று, விற்று முதல் அரசாங்கத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

20—7—1954 தேதி, 1974 அ.ஆ.வரு.

19—8—1954 தேதி, 25 வ.து.வா.செ.அச்சு.

11—8—1956 தேதி, 3123 அ.ஆ.வரு.கை.ப.

17—9—1956 தேதி, 1293 வ.து.வா.செ.

1905 ஆம் ஆண்டு சென்னை III ஆவது சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் அறிவிப்பு.

..... வட்டத்தில் ..... கிராமத்தில் வசிக்கும் ..... க்கு

அரசாங்கத்திற்குச் சொந்தமானதும், 1905 ஆம் ஆண்டு III ஆவது சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ்த் தீர்வை செலுத்துவதற்குட்பட்டதுமான கீழ்க் கண்டுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நிலத்தை அனுமதி யின்றி பெறுது நீங்கள் அநுபோகம் செய்திருப்பதாகத் தெரிய வருவதால் இவ்வறிவிப்பு பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ..... நாட்களுக்குள் அந்நிலத்தைக் காலி செய்து, அதிலுள்ள பயிர்கள் அல்லது விளைபொருள், கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் அல்லது கட்டுமானங்கள் அல்லது அதில் விட்டுவைக்கப்பட்டிருக்கும் பொருள்களை நீங்கள் அப்புறப்படுத்திவிட

வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினுல் உங்களை உடனடியாக நிலத்தி லிருந்து அப்புறப்படுத்துவதுடன் அந்நிலத்திலுள்ள பயிர்கள் அல்லது வீணை பொருள்கள், கட்டப்பட்டிருக்கும் கட்டடங்கள் அல்லது கட்டுமானங்கள் அல்லது அதில் விட்டுவைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படுவதற்குட்படும்.

விவர அட்டவணை.

கிராமம்.	நில அளவை எண். உட்பகுதியும்.	நிலத்தின் முழு விவரம்.	பரப்பு.	அநுபோகத் திலுள்ள பரப்பு.	அநுபோகத் தின் தன்மை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			ஏ. செ.	ஏ. செ.	

அப்புறப்படுத்துவதற்கான ஆணையை நிறைவேற்றவும், பறிமுதலுக்கு உட்படும் நிலத்தின்மேலிருக்கும் யாதொன்றையும் அது முடிவு செய்யப் படுவதற்கான ஆணையை கலெக்டர் பிறப்பிக்கும் வரை அதைச் சுவாதீனப் படுத்திக் கொள்ளப்பட்டு பாதுகாப்பில் வைத்திருப்பதற்குப் பிர்க்கா வருவாய் ஆய்வாளருக்கு இதலுல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பு.—மேலே குறிக்கப்பட்டுள்ள நிலத்தை அநுபோகம் செய்திருப்பவருக்கு நேரிலோ அல்லது அவர் வழக்கமாகக் குடியிருக்கும் வீட்டிலுள்ள குடும்பத்தில் வயது வந்த இனத்தவர் ஒருவரிடத்தில் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதி நிதியிடத்தில் இந்த அறிவிப்பைக் கொடுத்தோ அல்லது அவர் கடைசியாகக் குடி யிருந்ததாகத் தெரியும் வீட்டில் அல்லது அவர் அநுபோகம் செய்துள்ள நிலத்தில் தெளிவாகத் தெரிகிற ஒரு எடுப்பான இடத்தில் ஒட்டியோ சேர்ப்பிக்க வேண்டும்.

14—9—1915 தேதி, 269 வ.து.வா.செ.அச்சு.

28—10—1935 தேதி, 140 வ.து.வா.செ.அச்சு.

8—11—1934 தேதி, 2308 அ.ஆ.வரு.பலவ.

26—11—1934 தேதி, 174 வ.து.வா.செ.

இணைப்பு XXXII

[26 ஆவது நிலை ஆணை, 3 ஆவது பத்தி.]

1905 ஆம் ஆண்டு சென்னை III -ஆவது நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் 7-ஆவது பிரிவின் கீழ் அறிவிப்பு

..... தாலுகா ..... கிராமத்தில் வசிக்கும் ..... க்கு

கீழே கண்டுள்ள விவரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசினர் சொத்தாக இருக்கிற நிலத்தை அனுமதி பெறுமல் நீங்கள் அநுபோகத்தில் வைத்துக் கொண்டு இருப்பதாகத் தெரிய வருவதால், சட்டத்தின் 3 (i)

சட்டத்தின் 3 (ii)

பிரிவின் கீழ் நிலத்தின் முழுத் தீர்வையுடன்

1905 ஆம் III ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட வீதத்துடன் சட்டத்தின் 5-ஆவது பிரிவின் கீழ் ஏன் உங்களுக்குத் தீர்வை விதிக்கக்கூடாது என்பதற்கும், அதனுடன்/அல்லது உங்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி, அதிலுள்ள பயிர்கள், விளைச்சல்கள், கட்டடங்கள், கட்டுமானங்கள், அதில் விட்டு வைத்திருக்கப்பட்டுள்ளவை ஆகிய இவைகள் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் கீழ் ஏன் பறிமுதல் செய்யப்படக்கூடாது என்பதற்கும் காரணத்தை நீங்கள் விரும்பினால் 19 மாதம் தேதிக்குள் நேரிலாவது எழுத்து வடிவிலாவது என்/கலெக்டர் முன்பாக தெரிவிக்கலாம் என்பதை இதனால் உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

விவர அட்டவணை

கிராமம்.	அளவை எண் உட்பிரிவு.	நிலத்தின் அவரம்.	முழு பரப்பு.	அநுபோகத்திலுள்ள பரப்பு.	அநுபோகத்தின் தன்மை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

ஏ. செ.

குறிப்பு.—மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தை அநுபோகம் செய்திருப்பவருக்கு நேரிலோ அல்லது அவர் வழக்கமாகக் குடியிருக்கும் வீட்டிலுள்ள குடும்பத்தில் வயது வந்த ஆண் இனத்தவர் ஒருவரிடத்தில் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியிடத்தில் இந்த அறிவிப்பைக் கொடுத்தோ அல்லது அவர் கடைசியாக குடியிருந்ததாகத் தெரியும் வீட்டில் அல்லது அவர் அநுபோகம் செய்துள்ள நிலத்தில் தெளிவாகத் தெரிகிற ஒரு எடுப்பான இடத்தில் ஒட்டி சேர்ப்பிக்கவேண்டும்.

9—10—1906 தே தி, 279 வ.து.வா.செ.

[நி. ஆ. 26, பத்தி 10

இணைப்பு XXXII அ

[26 ஆவது நிலை ஆணை, 10 ஆவது பத்தி.]

மாவட்ட நகராட்சிகளின் (சென்னை 1920 ஆம் ஆண்டு) சட்டத்தின் 188 (5) ஆவது பிரிவின்கீழும் சென்னை மாவட்டக் கழகங்களின் (சென்னை 1920 ஆம் ஆண்டு) சட்டத்தின் 160—5 ஆவது பிரிவின்கீழும் இயற்றப் பட்டுள்ள விதிகள்.

மாவட்ட நகராட்சி மன்றங்களில் சென்னை 1920 ஆவது ஆண்டு சட்டம் (1920 ஆண்டு சென்னை சட்டம் V) 183-ஆவது பிரிவு (5) உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கு மேலே குறிப் பிடப்பட்டுள்ள பிரிவின் (3) ஆவது உட்பிரிவின்கீழ் நகராட்சி மன்றங் களுக்குச் சட்ட உரிமை செய்யப்பட்டுள்ள சாலைப் பக்க இடங்கள், தெரு விளிம்புகள் இவற்றைக் குத்தகைக்கு விடும் அதிகாரமானது கீழே கண்ட நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருக்குமென்று அமைச்சர் களுடன் புணியாற்றும் கவர்னர் இதனால் அறிவிக்கின்றார். அவையாவன :

1. சம்பந்தப்பட்ட நகராட்சி மன்றத்திற்குப் பின்னரும் விவரங்கள் அடங்கிய விண்ணப்பம் செய்யப்பட்டால் அன்றி எந்நிலமும் குத்தகைக்கு விடப்படக்கூடாது :—

(அ) தேவையாகும் குத்தகையின் காலம்.

(ஆ) நிலத்தை எவ்வாறு உபயோகிக்க யோசனை செய்யப்பட்டுள்ளது.

(இ) நிலத்தில் ஏதேனும் கட்டுமானம் கட்டுவதாக இருந்தால் அதற்கு உபயோகப்படுத்த வேண்டிய பொருள்கள்.

2. (அ) குத்தகைக் காலம் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற் படாமலும்,

(ஆ) கட்டுமானம் ஏதேனும் அந்த நிலத்தில் கட்டினால் அது) டனை அல்லது தென்னை ஓலைகள், மூங்கில் அல்லது மற்ற பாய்கள், கோணி அல்லது அது போன்ற வேறு தற்காலிக பொருள்களாகவும்,

(ii) நாள்தோறும் அப்புறப்படுத்தக் கூடிய தன்மையுடை யதாகவும் இருந்தால்

மாவட்டக் கலெக்டருக்கு அறிவிக்காமல் குத்தகைக்கு விடலாம்.

3. 2-ஆவது விதியின் கீழ் வரும் குத்தகைகளுக்கு அவற்றின் காலத்திற் குரிய குத்தகைத் தொகை முன்னதாகவே விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட வேண்டும்.

4. (1) 2 ஆவது விதியின் கீழ் வாராதவைகளில் மாவட்டக் கலெக்டரை முதலில் கலந்துகொண்டு குத்தகைக்கு விடுவதற்கு அவரது இசைவு பெற்றுவன்றி நகராட்சி மன்றம் குத்தகைக்கு விடக்கூடாது.

(2) 1 ஆவது உள் விதியை அனுசரித்தும், தனக்குத் தகவல் கிடைத்ததும் கலெக்டர் தேவையென்று கருதினால் நகரமைப்பு நெறியாளரைக் கலந்து கொண்டு குத்தகையை அனுமதிக்கவோ அல்லது மறுக்கவோ

நி. ஆ. 26, பக்கி 10]

அவருக்கு அதிகாரமுண்டு. குத்தகையை அவர் அனுமதிப்பார் எனில் அதற்குரிய நிபந்தனைகளையும் அவர் குறிப்பிடலாம். இந்நிபந்தனைகளைக் குத்தகைப் பத்திரத்தில், குத்தகை விடுவதற்கு முன்னதாகவே நகராட்சி மன்றம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(3) இவ் விதியின்கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு குத்தகையிலும் அது அமலில் இருக்கும் வரை நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டுமென்றும், குத்தகை செலுத்தத் தவறினால் குத்தகை ரத்து செய்வதற்குள்ளாகுமென்றும் தெளிவாகக் கண்டிருக்க வேண்டும்.

(4) இவ் விதியின் கீழ் விடப்படும் குத்தகை சாதாரணமாக ஒரு முறையில் மூன்று ஆண்டுகட்கு மேற்படக்கூடாது.

(5) கலெக்டரின் ஏற்பை முன்னதாகப் பெற்று இவ்விதியின் கீழ் விடப்பட்ட குத்தகையை ஒரே முறையில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாமல் புதுப்பிக்கப்படுவதற்கு இவ் விதியின்கீழ் கலெக்டரின் முன் அனுமதி தேவையில்லை.

5. 2 ஆவது அல்லது 4 ஆவது விதியின்கீழ் விடப்படும் ஒவ்வொரு குத்தகைப் பத்திரத்திலும் அந்த நிலத்தில் கட்டப்பட்ட கட்டுமானம் பொது நலத்தை முன்னிட்டு அகற்றப்பட வேண்டுமென்று நகராட்சி மன்றம் அல்லது மாவட்டக் கலெக்டர் கருதுவாரெனில், குத்தகை காலத்துக்குள் எப்போது வேண்டுமானாலும், குத்தகை எடுத்தவருக்கு ஈட்டுத் தொகை எதுவும் கொடுக்கப்படாமல் குத்தகை முடிவு அடையுமாறு செய்வதற்குட்படும் என்று தெளிவாகக் கண்டிருக்க வேண்டும்.

18—5—1934 தேதி, 2428 அ. ஆ:

சென்னை மாவட்டக் கழக 1920-ஆவது ஆண்டு சட்டம் 160 (5) பிரிவின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகள்.

குத்தகை விடுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படும் என்பதை அரசினர் இதனால் விளம்பரம் செய்கிறார்கள் :—

(1) சென்னை மாவட்டக் கழக 1920 ஆவது ஆண்டு சட்டத்தின் 160 ஆவது பிரிவு (3) ஆவது உட்பிரிவின் கீழ் மாவட்ட வாரியத்திற்குச் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு குத்தகை விண்ணப்பத்திலும் நிலம் எதற்காக உபயோகிக்கப்படும் என்பதையும் குத்தகை எவ்வளவு காலத்திற்குத் தேவை என்பதையும கண்டிருக்க வேண்டும். அதில் ஏதேனும் கட்டுமானம் கட்டுவதாக இருந்தால் அதற்கு உபயோகப்படுத்தப்படும் பொருள்களின் விவரத்தையும் குறிக்க வேண்டும்.

(2) கட்டுமானம், பனை அல்லது தென்னை ஓலைகள், மூங்கில் அல்லது மற்ற பாய்கள் அல்லது கோணி அல்லது அது போன்ற வேறு பொருள்களைத் தற்காலிகப் பொருள்களாலும் கட்டப்படுவதாக இருந்தாலும் அல்லது நாள்தோறும் அகற்றப்படக்கூடிய தன்மையுடையதாக இருந்து குத்தகைக்

[நி. ஆ. 26, பத்தி 10

காலம் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாதிருந்தால் மாவட்ட வாரியம் குத்தகைக்கு விடலாம். ஒவ்வொரு குத்தகைக்கும் ஒரு கட்டணம் விதிக்கப் பட்டு அது முன்பணமாக வசூலிக்கப்பட வேண்டும்.

(3) 2 ஆவது பத்தியில் குறிக்கப்பட்டுள்ள பொருளைத் தவிர மற்றப் பொருள்களால் கட்டுமானம் கட்டப்படுவதாலும் அல்லது குத்தகைக்குப் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்டாலும் மாவட்டக் கலெக்டரின் முன் அனுமதி பெறுமல் உள்ளாட்சி மன்றம் குத்தகைக்கு விடுவதற்கில்லை. கலெக்டர் ஒப்புதல் அளிக்கும்போது தமக்குத் தேவையெனத் தோன்றக் கூடிய நிபந்தனைகளையும் விதிக்கலாம். குத்தகைக்கு விடுமுன் மாவட்டக் கழகம் நிபந்தனைகளையும் குத்தகைப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். குத்தகை நடைமுறை இருக்கும் வரையில் குத்தகைத் தொகையை மாவட்ட வாரியத்திற்கு முன் பணமாகச் செலுத்தவேண்டும் என்பதையும் அதை அவ்வாறு செலுத்தத் தவறினால் குத்தகை ரத்து செய்வதற்குட்படும் என்பதையும் ஒவ்வொரு குத்தகைப் பத்திரத்திலும் தெளிவாகக் கண்டிருக்க வேண்டும்.

ஒரே தடவையில் மூன்று ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட எக் குத்தகையும் சாதாரணமாக விடக்கூடாது. இந்த விதியின் கீழ் விடப்படும் குத்தகையைப் புதுப்பிப்பதற்கு கலெக்டரின் அனுமதி தேவையில்லை.

(4) 2 ஆவது அல்லது 3 ஆவது விதியின் கீழ் வரும் ஒவ்வொரு குத்தகைப் பத்திரத்திலும் அந்நிலத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டி மானத்தைப் பொது நலத்தை முன்னிட்டு அகற்றப்பட வேண்டுமென்று உள்ளாட்சி மன்றம் அல்லது மாவட்டக் கலெக்டர் கருதுவார் எனில் குத்தகை எடுத்தவருக்கு எந்த ஈட்டுத்தொகையும் கொடுக்கப்படாமல் குத்தகை காலத்திற்குள் குத்தகை முடிவு அடையுமாறு செய்யப்படுவதற்குட்படும் என்பது தெளிவாகக் கண்டிருக்க வேண்டும்.

26-3-1936 தேதி, 1236 அ.ஆ.

ஆ. உரிமங்கள்.

நகராட்சிகள், சட்டம் 183 (5) ஆவது

1950 ஆம் ஆண்டு சென்னை

மாவட்ட வாரியங்கள் சட்டம் 160 (5) ஆவது பிரிவின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகள்.

மாவட்ட நகராட்சி 1930 ஆம் ஆண்டு சட்டம் (1920, சென்னைச் சட்டம்)

சென்னை உள்ளாட்சி மன்ற 1920 ஆம் ஆண்டு சட்டம் (1920, சென்னைச் சட்டம்) 183-ஆவது பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்

கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும்

160 ஆவது பிரிவின் (5) ஆவது உட்பிரிவின் அதிகாரங்களைச் செயற்படுத்தவும், 1936 மார்ச்சு 31-ம் தேதி மாநில அரசிதழில் -அ பாகத்தில் 179 ஆவது பக்கத்தில் வெளியிடப்பட்டும் பின்னர் திருத்தப்பட்டும் 1936 மார்ச்சு 16-ஆம் தேதி 399 என் அரசாங்கத் தல ஆட்சித் துறை விளம்பரம் நீங்கிவிடுமாறு அதற்குப் பதிலாகவும், மேலே குறிப்பிட்டுள்ள சட்டத்தின் 183/160 ஆவது பிரிவு 1 ஆவது உட்பிரிவின் கீழ் நகராட்சி மன்றங்கள்/மாவட்ட வாரியங்கள் உரிமங்கள் வழங்கும்

தி. ஆ. 26, பத்தி 10]

அதிகாரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடு களுக்கும் உட்பட்டு இருக்கும் என்பதை இதனால் சென்னை கவர்னர் அறிவிக்கிறார்கள் :—

1. சென்னை மாவட்ட நகராட்சி 1920 ஆம் ஆண்டுச் சட்டம் 183 (1) ——— மாவட்ட வாரிய 1920 ஆம் ஆண்டுச் சட்டம் 160

ஆவது பிரிவின்கீழ் நகராட்சி மன்றத்துக்கு/மாவட்ட வாரியத்துக்கு உரிமத் திற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்திலும், கட்டுமானம் எப்பொருள்களால் கட்டப்படும் என்பதையும் உரிமம் எவ்வளவு காலத்துக்குத் தேவை என்பதையும் குறித்து எழுத வேண்டும்.

2. கட்டுமானம், பனை அல்லது தென்னை ஓலைகள், மூங்கில் அல்லது மற்றப் பாய்கள், கோணி அல்லது அது போன்ற வேறு தற்காலிகப் பொருள் களால் கட்டப்படுவதானாலும் அல்லது கட்டுமானம் நாள்தோறும் அகற்றப் படக்கூடிய தன்மையுடையதாக இருந்து உரிமம் காலம் பன்னிரண்டு மாதங் களுக்கு மேற்படாதிருந்தால், நகராட்சி மன்றத்திற்கு/மாவட்டக் கழகத்திற்கு உரிமம் கொடுக்கவும் புதுப்பிக்கவும் அதிகாரமுண்டு.

3. கட்டுமானம் 2 ஆவது பத்தியில் சொல்லப்பட்டுள்ள விவரத்திற் கிணங்காவிட்டாலும் அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு என்றாலும் நகராட்சி மன்றம்/மாவட்ட வாரியம் மாவட்டக் கலெக்டரின் முன் அனுமதியில்லாமல் யாதொரு உரிமமும் வழங்கக்கூடாது. கலெக்டர் அனுமதி கொடுக்கும்போது தமக்குத் தேவையென்று தோன்றும் நிபந்தனைகளையும் குறிப்பிடலாம். உரிமம் கொடுப்பதற்கு முன் நகராட்சி மன்றம்/மாவட்டக் கழகம் அந்நிபந்தனைகளையும், உரிமத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பத்தியின்கீழ்க் கொடுக்கப்படும் உரிமத்தைப் புதுப்பிப்பதினால் அதன் காலம் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாமலிருக்குமானால் புதுப்பிப் பதற்காகக் கலெக்டரின் அனுமதி தேவையில்லை.

4. மனையிடத்துக்குப் போக்குவரத்துக்காகப் படிக்கட்டுகள் அல்லது சாக்கடை மூடிகள் கட்டுவதற்குக் கொடுக்கப்படும் உரிமங்கள் பின்வரும் கூடுதலான நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கும் அவற்றை உரிமங்களில் குறிப்பிட வேண்டும் :—

(1) படிகள் அல்லது சாக்கடை மூடிப் பலகைகள் சாக்கடைச் சுவருக்கு வெளியே தெரு/சாலைப்பக்கம் நீட்டிக் கொண்டிருக்கக்கூடாது. மனைக்குச் செல்வதற்காக அல்லது தெருவை அடுத்திருக்கும்படி அல்லது சாக்கடை மூடி முன்பாக வரை சுவர் உள்ள மனைக்குள் சாக்கடைக்கு மேல் வண்டிகள் போக்குவரத்திற்கு ஏற்பட்டாலன்றி மூன்று அடி நீளத்துக்கு மேற்படக்கூடாது. விலக்கப்பட்ட இனங்களில் நகராட்சி மன்ற நிர்வாக அதிகாரி/மாவட்ட வாரியத் தலைவர் மூடியின் நீளத்தை நிர்ணயிக்க வேண்டும்.

(2) சாக்கடையை மூடுவன, சாக்கடைச் சுவர்களின் மேல் மட்டத்திலேயே இருக்க வேண்டும். ஆனால் மழைத் தண்ணீர் முழுவதையும் வெளிப்படுத்தக்கூடிய அளவில் மூடி பலகைகளுக்குக் கீழுள்ள சாக்கடையின்

[நி. ஆ. 26, பத்தி 10

ஆழம் போதுமானதாக இருக்கிறதா என்பதை நகராட்சி மன்றம்/மாவட்ட வாரியம் கவனித்துக்கொள்ள வேண்டும். சில தவிர்க்க முடியாத இனங்களில் சாக்கடை நீர் செல்வதற்கு இடஞ்சலில்லாதிருக்கும்போது அல்லது உரிமம் கொடுக்கும் அதிகாரி ஆட்சேபனை இல்லை என்று கருதும்போது சாக்கடை மூடியை அதன் இரு புறச் சுவர்களின் மட்டத்திலில்லாமல் அவற்றின் மீது அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அதற்குக் கலெக்டரின் முன் அனுமதி வேண்டும். தனிர சாக்கடை மூடிக்கும் சாலை/தெருவுக்கும் இடையேயுள்ள சாலை/தெரு பாகத்திற்குக் கெட்டிக் காரைக் கட்டால் சுண்ணாம்பு சரிவு கட்டி விடவேண்டும்.

(3) தெருவை ஒட்டிய மனையிடங்களிலுள்ள சாக்கடை மூடிகள், 6 அங்குலம் முதல் 36 அங்குலம் அகலமுள்ள சாக்கடைகளின் அளவுக்குத் தக்கவாறு 2 அங்குலம் முதல் 4 அங்குலம் வரையிலும் பருமன் இருக்க வேண்டும். மனைகளுக்கு முன் வளை சுவருள்ள இனங்களில் சாக்கடை மேலே பருவான வண்டிகள் செல்லக்கூடிய இடங்களில் மூடிகள் பின்வரும் கனமுள்ள கருங்கல் அல்லது வலிவுள்ள காரைக் கட்டுகளாகவும் இருக்கலாம்.

	வலிவுள்ள காரைக் கட்டுப் பலகைகள்.	மேலே மூடியில்லாதிருந்தால் ஒவ்வொன்றும் 18 அங்குலம் அகலமுள்ள கருங்கல் பலகைகள்.
(1)	(2)	(3)
சாக்கடை மேல் 6 அங்குலம் முதல் 12 அங்குலம்.	4	3
சாக்கடை மேல் 15 அங்குலம் முதல் 24 அங்குலம்.	6	5
சாக்கடை மேல் 27 அங்குலம் முதல் 36 அங்குலம்.	7	6

மிகப் பெரிதான சாக்கடைகளுக்கு (அ) கல்லின் தரம் அல்லது பயன்படுத்தப்படும் மற்றப் பொருள், (ஆ) பளுவைத் தாங்கும் கற்பலகைகளின் அகலம், (இ) எதிர்பார்க்கப்படும் பளுவின் தன்மை, (ஈ) கல்லின் நிரப்பப்படும் அதன் ஆழம் இவற்றிற்குத் தகுதியாக, ஒவ்வொரு வகைக்கும் நகராட்சி நிர்வாக அதிகாரி மாவட்டக் கழகத் தலைவர் தீர்மானிக்கும் வகையில் மூடுபலகைகளின் கனமும் கட்டுவதற்குப் பயன்படும் பொருளும் இருக்க வேண்டும்.

(4) சாக்கடையைப் பார்வையிடுவதற்கு அல்லது பழுது பார்ப்பதற்கு, தேவையானபோது உரிமம் பெற்றிருப்பவர் செலவில் அது அகற்றப்படுவதற்கு உட்படும்.

நி. ஆ. 26, பத்தி 10]

(5) நகராட்சி மன்ற நிர்வாக அதிகாரி
மாவட்ட வாரியத் தலைவர்
தோன்றில் ஆக்கிரமிப்பு முழுவதையும் ஈட்டுத் தொகை கொடுக்கப்படாமல் அப்புறப்படுத்துவதற்கு அவருக்கு முழு உரிமையுண்டு.

(6) சாக்கடை மூடியின் மேல் பாகத்தை சாக்கடையின் ஒரு பகுதியாகவாவது அல்லது வேறு ஆக்கிரமிப்பாகவாவது உபயோகிக்கக் கூடாது.

குறிப்பு.—சிறப்பான காரணங்களுக்காகக் கலெக்டரின் முன் அனுமதியுடன் (3) ஆவது நிபந்தனை தளர்த்தப்படலாம்.

6. உரிமம் வழங்கப்பட்டதான நீட்டிக் கட்டியது, கட்டடம் வல்லது கட்டுமானம் ஆட்சேபனையுடையதாக ஆகிவிட்டது என்று தம் கருத்தில் தோன்றினாலும் அல்லது அவ்வாறு நீட்டிக் கட்டியது, கட்டடம் அல்லது கட்டுமானம் பொது நலத்தை முன்னிட்டு அகற்றப்பட வேண்டுமெனக் கலெக்டர் கருதுவார் எனில், 2, 3 அல்லது 4 பத்திகளின்கீழ்க் கொடுக்கப் பட்டிருக்கும் எந்த உரிமத்தையும் ரத்து செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு அவர் ஆணை பிறப்பித்ததும் நகராட்சி/மாவட்டக் கழகம் உடனடியாக உரிமத்தை ரத்து செய்து நீட்டிக் கட்டியது கட்டிடத்தை அல்லது கட்டுமானத்தை அகற்ற வேண்டும்.

6. (1) 5 ஆவது பத்தியில் கண்ட சூழ்நிலைகளில் உரிமம் எப்பொழுதும் ரத்து செய்யப்படுவதற்குட்படுமென்பதும்,

(2) உரிமம் நடைமுறையில் உள்ளவரையில், முன் தொகையாக
கட்டணம் நகராட்சிக்குச்
விதிக்கப்பட்ட ஆண்டுக் செலுத்தப்பட
மாவட்டக் கழகத்துக்குச்
வேண்டும் என்பதும் அவ்வாறு கட்டத் தவறினால், உரிமம் ரத்து செய்யவதற்குட்பட்டிருக்கும் என்பதும் 2, 3 அல்லது 4 பத்திகளின்கீழ்க் கொடுக்கப்படும் ஒவ்வொரு உரிமத்திலும் நிபந்தனைகளாக இருக்க வேண்டும்.

7—4—1941 தேதி, 991 அ.ஆ.
15—4—1941 தேதி, 1115 அ.ஆ.வரு.
14—6—1941 தேதி, 1590 வ.து.வா.செ.பலவ.

இணைப்பு XXXIII —நீக்கப்பட்டது.

1870 ஆம் ஆண்டுக்கு முன்னதாக கொடுக்கப்பட்ட நிரந்தரமான உரிமைப் பட்டயத்தின் படிவம்.

(13—5—1950 தேதி, 27202 க/50-1 என் குறிப்பு வரு.)
(15—6—1956 தேதி, 44896 இ/56-1 என். குறிப்பு வரு.)
(13—8—1956 தேதி, 1145 என். வ.து.செ. பலவ.)

இணைப்பு XXXIV.

[31-ஆவது நிலை ஆணை, 5 ஆவது பத்தி.]

..... பதிவு மாற்றுதலுக்காக ஒரு தரத் தினராலும் விண்ணப்பம் செய்து கொள்ளப்படாத நிலத் தின் முழு உரிமைப் பதிவு மாற்றுதலின்..... பசலிக்கான விவரப் பட்டியல்.

பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர்.		மாற்றுபவர்.		மாற்றப் பெறுபவர்.	
(1) கிராமம்.	(2) எண்.	(3) பெயர்.	(4) தகப்பனார் பெயர்.	(5) முகவரி.	(6) பெயர்.

(7) தகப்பனார் பெயர்.	(8) முகவரி.	(9) பட்டா எண் இருப்பின்	(10) பெயர்.	(11) தகப்பனார் பெயர்.	(12) முகவரி.

உரிமை பாராதீனங்களின் விவரங்கள்.

(13) நில அளவை எண்ணுடன் உட்பிரிவும்	(14) அரசாங்க நிலம் அல்லது இலவசம்.	(15) நன்செய் அல்லது புன்செய்.	(16) மொத்த நிலத்தின் பரப்பு.	(17) திர்வை அல்லது விடுவரி.	(18) பதிவு மாற்றப்படும் பரப்பும் நில அளவை எண் அல்லது உட்பிரிவு எண், அது பாகமாயிருந்தால் அதற்கு வேறு அடையாளங்கள் இருக்கின்றனவா.	(19) நிலம், நில மேம்பாட்டுக் கடன் அல்லது விவசாயிகள் கட்டத்தின் கீழ் அவை வைக்கப்பட்டிருக்கிறதா ஆம் எனில் கடன் அளித்த பின் எண் தேதியுடன்.	(20) மாற்றுதலின் விவரங்கள்.	(21) கிராம அலுவலர்களின் குறிப்பு.	(22) தாலுகா அலுவலகத்தில் நடவடிக்கைகளின் விவரங்கள்.

*(14-வது கட்டத்தில்) சேர்க்க வேண்டியது.

இணமாக இருக்குமானால், எத்தகைய இனம், உரிமைப் பத்திரத்தின் என், உரிமை அளிக்கப்பட்டதா, அளிக்கப்படாததா, அதே உரிமைப் பத்திரத்தில் வேறு ஏதாவது நிலங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா.

1. பதிவு மாற்றுதலுக்கும் தேவையானால் உட்பிரிவு செய்யப்படுவதற்கும் அவரது இசைவைத் தெரிவிக்கும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவரின் கையெழுத்து.

2. மாற்றுதலை ஒப்புக் கொள்வதன் அறிகுறியாக மாற்றுபவரின் கையெழுத்து.

3. அவர் பெயரில் பதிவை மாற்றுவதற்கும், தேவையானால் உட்பிரிவு செய்யப்படுவதற்கும் இசைவைத் தெரிவிக்கும் வகையில் மாற்றப் பெறுபவரின் கையெழுத்து.

கிராம கணக்கர்.

கிராமத் தலைமை அலுவலர்

(20—7—1920 தேதி, 106-வ.து.வா.செ.திர்).

[நி. ஆ. 31, பத்தி 9

இணைப்பு LXXXV.

[31-வது நிலை ஆணை 9-வது பத்தி.]

வருவாய்ப் பதிவு மாற்றுதலுக்காகச் செய்துகொள்ளும் விண்ணப்பத்தின் I-ம் படிவம்

பத்திரப் பதிவாளரிடமும் உதவிப் பத்திரப் பதிவாளரிடமும் தாக்கல் செய்யும்போது உபயோகிக்க வேண்டிய விண்ணப்பத்தின் படிவம்.

.....வசிக்கும்.....ரது மகன்.....ஆகிய நான் விவர அட்டவணையில் குறிக்கப்பட்டும் ..... பெயரில் பதிவும் செய்யப்பட்டும் இருக்கும் நிலங்களின் வருவாய்ப் பதிவை.....வசிக்கும் .....ரது மகன்..... பெயரில் மாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கையெழுத்து.

மேலே சொன்ன.....ஆகிய நான் விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நிலங்களின் வருவாய்ப் பதிவை என் பெயரில் மாற்றிக் கொள்ள ஒப்புக் கொள்கிறேன்.

கையெழுத்து.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
தாலுகா.	கிராமம்.	நில அளவு எண்.	உட்பிரிவு எண்.	நிலம் அல்லது இறும்.	தண்ணீர்ப் பாய்ச்சப்பட்ட அல்லது புன்செய் நிலமா.	பரப்பு.	தீர்வை.	மாறுதலின் தன்மை.

என் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

பத்திரப் பதிவாளர் அல்லது உதவிப் பத்திரப் பதிவாளர்

தி. ஆ, 31, பத்தி 9]

ந. க. :—ஜமீன்கள் இனம் கிராமங்கள் முதலியவற்றில், நிலம் பதிவு செய்யப்படும் பத்திரத்தில் சொல்லியவாறு அதன் நான்கு எல்லைகளை விவரமாய்க் கண்டெழுத வேண்டும். விவர அட்டவணையில் சொல்ல வேண்டிய விவரங்களைக் கட்சியினர்கள் கொடுக்க முடியாவிடில் விண்ணப்பம் நிறைவேற்றப்படத் தகாது என்பது இல்லை. நிலங்களைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுப் போதுமான அடையாளங்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அவையே போதுமானவை என விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பதிவு மாறுதல் செய்வது தீர்வை விதிக்கப்பட்ட மரங்களாக இருக்குமானால் விண்ணப்பத்தில் "நிலங்கள்" என்னும் வார்த்தைக்குப் பதிலாக "மரங்கள்" என்று எழுதிக் கொள்ள வேண்டும். விவர அட்டவணையின் 3, 4, கட்டங்களின் தலைப்பில் " " என்னும் வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். (7)-வது கட்டத்தின் தலைப்பை "மரங்களின் எண்ணிக்கையும் விவரங்களும்" என்று மாற்றிக் கொள்ளவேண்டும்.

14—2—1899 தேதி. 44. வ.து.வா.செ.
3—12—1901 தேதி. 303. வ.து.வா.செ.
27—8—1894 தேதி. 360. வ.து.வா.செ.

குறிப்பு —விண்ணப்பத்தில் மாற்றுபவர் மாற்றப் பெறுபவர் இருவர்களுமே கையெழுத்து செய்ய வேண்டுமென்பது அவசியமில்லை. அவர்களில் ஒருவர் மாத்திரம் கையெழுத்து செய்திருப்பாரெனில் காலியாக இருக்கும் உறுதி மொழி பாகத்தை பத்திரப்பதிவாளர் அடித்து விட்டு அதன் குறுக்கே சுருக்கொப்பம் இட வேண்டும்.

11-11-1914 தேதி, 445, வ.து.வா.செ.
20-7-1920 தேதி, 106 வ.து.வா.செ.
3. வ.து.வா.செ.

வ்ருவாய்த்துறை அலுவலர்களிடம் தாக்கல் செய்யும்போது உபயோகிக்க வேண்டிய விண்ணப்பத்தின் படிவம்.

.....தாலூகா.....கிராமத்தில் வசிக்கும் .....ருடைய மகன்/மகள் ஆகிய நான்/நாங்கள்.....பின் பக்கத்திலுள்ள விவர அட்டவணையில் குறிக்கப்பட்டும் பெயரில் பதிவு செய்யப்பட்டுமுள்ள நிலத்தை ..... கிராமத்தில் வசிக்கும்.....மகன்.....பெயரில் மாற்றுதல் செய்யுமாறு இவ்விண்ணப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்/கிறோம்.

மாற்றுபவர் கையெழுத்து.

தேதி :

[தி. ஆ. 31, பத்தி 9

மேலே சொன்ன நான்/நாங்கள் விவர அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நிலத்தின் பதிவு என்/எங்கள் பெயரில் மாற்றிக் கொள்ள ஒப்புக்கொள்கிறேன்/கிறோம்.

தேதி :

மாற்றப் பெறுகிறவர் கையெழுத்து

விவர அட்டவணை.

.....தாலூகா.....கிராமம்.

விவர அட்டவணை.

தாலூகா. கிராமம்.

நில அளவு எண்.	உட்பிரிவு.	புன்செய் அல்லது நன்செய்.	அரசாங்க நிலம் அல்லது இனம்.	பரப்பு.	தீர்வை.	மாற்று நவின் தன்மை	குறிப்புரை.
(1)	(2).	(3)	(4)	(5) ஏக்கர்.	(6) ரூ. பை.	(7)	(8)

சான்றுகள்—

(1) நிலத்தின் விவரம், பரப்பு, தீர்வை, மாற்றுபவர் பெயர் முதலியவற்றை நிலப் பதிவேட்டுடன் சரி பார்க்கப்பட்டதென்றும்

(2) விண்ணப்பத்தில் கண்டுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள நிலமுடையவர் பெயர் சரியென்றும் மாற்றுபவர்கள் மாற்றப் பெறுகிறவர்களின் கையெழுத்துக்கள் உண்மையானவை என்றும்

சான்று செய்கிறோம்.

கிராமக் கணக்கர் கையெழுத்து.

தேதி :

எண் :

கிராமத் தலைமை அலுவலர்
கையெழுத்து.

தி. ஆ, 31, பக்தி 97

முடிவாணை.

இரு தரத்தினரும் கேட்டுக்கொண்டவாறு..... ..... பசலியின் மாற்றுதல்களைச் செய்யுமாறு கிராம அலுவலர் களுக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

தாசில்தார்.

தேதி :

குறிப்பு.—இந்தப் படிவத்தைக் கால் பாகமுள்ள தாளிலும், விண்ணப் பத்தை ஒரு பக்கத்திலும், விவர அட்டவணையை அதன் பின் பக்கத்திலும் அச்சிட்டுக் கொள்ளவேண்டும். கலெக்டர்களுக்கு ஆங்கிலப் படிவங்களையோ அல்லது ஆங்கிலமும் மண்டல மொழி இவ்விரண்டு மொழிகளிலுமுள்ள படி வங்களையோ சேர்த்துள்ள படிவங்களை அனுப்பாமல், மண்டல மொழியிலுள்ள படிவங்களை மாத்திரமே அனுப்ப வேண்டும். அசல் விண்ணப்பங்களைத் தாலூகா அலுவலகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆணைகளைக் கிராம அலுவலர் களுக்குத் தனியாக எழுதி அனுப்ப வேண்டும். எழுத்து வேலை குறைக்கும் பொருட்டு அதற்குரிய அச்சிட்ட படிவங்களை உபயோகிக்கலாம் அல்லது விண் ணப்பம் செய்கிறவர்களைத் தங்கள் விண்ணப்பங்களை இரண்டு பிரதிகளில் தாக் கல் செய்ய வேண்டுமென்றும் கேட்கலாம்.

14-2-1899 தேதி, 44 வ.து.வா.செ.
23-7-1901 தேதி, 173 வ.து.வா.செ.
13-12-1901 தேதி, 303 வ.து.வா.செ.
23-5-1902 தேதி, 144 வ.து.வா.செ.
அ2-4-1906 தேதி, 90 வ.து.வா.செ.
ஆ19-6-1914, தேதி, 1778 அ.ஆ.
ஆ3-11-1914 தேதி, 1250 அ.ஆ.
20-7-1920 தேதி, 106 வ.து.வா.செ.

இணைப்பு XXXVI.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் நூகூர் தாலூகா அரசுக் குடிப்பகுதிகளிலுள்ள நிலத்தின் உரிமை விட்டுவிடுவதற்காக வகுக்கப்பட்ட விதிகள்— நீக்கப்பட்டது.

20-8-1956 தேதி, 2179 என். அ.ஆ.வகு.கை.ப.
4-9-1956 தேதி, 1231 என். வ.து.வா.செ.பலவ.

42—4—47

இணைப்பு XXXVII.

[33-வது நிலை ஆணை 2-வது பத்தி.]

நில உரிமையை விட்டுவிடுவதற்குரிய கடைசியான நாள்.

மாவட்டங்கள்.		நில உரிமையை விடுவிடுவதற்குரிய கடைசி நாள்.
முதல் வட்டம்	.. நீலகிரி	.. ஏப்ரல் 30-ம் தேதி.
இரண்டாவது வட்டம்	கோயமுத்தூர்	ஜூலை 15-ம் தேதி
	சேலம்	
மூன்றுவது வட்டம். ..	செங்கற்பட்டு	ஆகஸ்டு 15-ம் தேதி
	வட ஆற்காடு	
	தென் ஆற்காடு	
	தஞ்சாவூர்	
	திருச்சிராப்பள்ளி	
	மதுரை	
	இராமநாதபுரம்	
	திருநெல்வேலி	

13-2-1891 தேதி, 992 என். வ.து.வா.செ.

20-6-1901 தேதி, 1835 என். வ.து.வா.செ.பலவ.

13-2-1912 தேதி, 33 என். வ.து.வா.செ.

அ 11-6-1892 தேதி, 3597 வ.து.வா.செ.

29-11-1906 தேதி, 1181 என். ஆ.ஆ.

13-12-1866 தேதி, என். வ.து.வா.செ.நிர்.

8-11-1933 தேதி, 115 என். வ.து.வா.செ.அச்சு.

(20-8-1956 தேதி, 3179 என். அ.ஆ.வரு.பல.)

(4-9-1956 தேதி, 1231 என். வ.து.வா.செ.பலவ.)

(4-1-1957 தேதி, 119237-அ/56-1 என். அ.குறிப்பு.வரு.)

(11-1-1957 தேதி, 49 வ.து.வா.செ.பலவ.)

அகரவரிசை அட்டவணை.

INDEX.

	நிலையாணை எண்.	பக்கம்.
அ		
அட்டவணையில் குறிப்பிட்ட சாதியினர் (Scheduled Castes).	15, 22 (2)	107
நிலம் ஒதுக்கி வைத்தல் ஒப்படை (Land Reservation Assignment)—	15-41	137
அநுபோக உரிமை (Occupancy right)..	23, 2	229
விலை மதிப்பு (Valuation)	24, 3	235
அநுபோகம் (அனுமதி பெறுதது) [Occupation (Unauthorised)]—		
தீர்வை விதிக்கப்படாத நிலம், புறம் போக்குகள், ஒதுக்கப்பட்ட நிலம் (Unassessed land Porambokes and Reserved land)	15, 37, 39	123, 132
வீட்டு மனை, கிராமங்கள் (House site, Village)	21.3	197
வீட்டு மனை, நகரங்கள் (House site, Towns)	21, 10 (IV)	205
"ஆக்கிரமிப்பு" காண்க (*See* Encroachments).		
அயல்நாட்டவர்கள் (Aliens)	15,26(1)	117
ஒப்படை-நிலம் (Assignment-Land).	16, குறிப்பு (1)	161
நீண்ட நிலக்குத்தகைகள் (Bowles)	17, குறிப்பு (1)	164
தோப்புகள் (Topes)..	19, குறிப்பு (1)	177
கால்நடை அல்லது பாற் பண்ணைகள் (Cattle or dairy Farms)	19, அ குறிப்பு (1)	183
வீட்டு மனைகள் (House-sites) ..	21,	190
அரசியல் தியாகிகள் (Political Sufferers)—		
நில ஒப்படை (Land Assignment) ..	15, 23	109
அரசினர் (இந்திய) [Government (India)]—		
நிலங்கள் கட்டுப்பாடு (Lands Control)	21, 16, (2)	217
நிலத் தீர்வை, விலக்கு, அதிகாரங்கள் (Land Revenue Exemption Powers)	24, 15	247

	நிலையாணை எண்.	பக்கம்
அ—தொடர்ச்சி.		
அரசினர் (மாநில) [Government (State)]		
நகர மனைகள்—விற்பனை—ஒப்பளிப்பு (Town sites—Sale Sanction) ..	21, 11(2) (IX)	210
நிலத் தீர்வை விலக்கு அதிகாரங்கள் (Land Revenue Exemption Powers).	24, 15	247
நிலம் விட்டு வைத்தலும், நிலத் தீர்வை விலக்கும் அதிகாரங்கள் —ஒப்படைப்பு — வருவாய்த் துறைக் கழகமும், கலெக்டர் களும் (Land Placing at the disposal—Exemption from land revenue—Assignment Board of Revenue and Collectors)	24, 8, 11	243, 246
அரசினர் விதித்த தொகை (Government demand)—		
எவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளது (How Calculated at)—	1, 2	5
எதைக் குறிக்கிறது! (Represents what)	1, 2	5
அரசுக்குடி நிலமுடையவர்கள் (Ryotwari Land Holder).		
உரிமைகளும் கட்டுப்பாடுகளும் (Rights and Obligations)	28, 1–5, 7	270-271
கூட்டு, பற்றுச்சீட்டு புத்தகங்கள் (Joint Receipt Books)		
அரசுப்பணியாளர் (Public Servants)—		
ஒப்படை விண்ணப்பம் (Application Assignment)	15–44	153
அலுவலர்கள் (Officers)—		
தண்ணீர்த் தீர்வை வீதம் (Water rate)	4,3	11
அனுமதி, தண்ணீரைப் பயனுக்கிக் கொள்ள (Permission taking water)	4, 10	12
இரண்டாவது பயிருக்குத் தீர்வை (Second crop charge)	5	14–16

	நிலையாணை எண்.	பக்கம்.
ஆ		
ஆக்கிரமிப்புகள் (Encroachments)—		
அரசினர் நிலம் (Government Land)	26, 1-7	254-259
மிகச் சிறிய ஆக்கிரமிப்புகள் (Petty Encroachments)	26, 8	259
கீழுள்ளவற்றைக் காண்க (*See* below)—		
அநுபோகம் (அனுமதி பெறுதது) [Occupation (unauthorised)]		
இருப்புப்பாதைகள் (Railways) ..		
உள்ளாட்சி மன்றங்கள் (Local Bodies)		
கிராம அலுவலர்கள் (Village Officers)		
சாலைகள் (Roads)		
துறைமுகங்கள் (Ports)		
ஆற்றுக் கழிமுகப் பகுதிகள் (Delta areas)		
நன்செய் நிலங்கள்— இரண்டாவது புன்செய் பயிர் (Wet lands— Second Dry Crop)	5, 2,	15
ஆறிடு மேடுகள் (River accretions)— ஒப்படை (Assignment)	15, 38 (XII)	131
இ		
இடர்கள் (அந்த அந்தத் தலத்து) [Calamities (local)]—	14, 10	77
நிவாரணம் அளித்தல் (Grant of relief)		
இடர்கள் (பரவலான) [Calamities (wide spread)]		
நிவாரணம் அளித்தல் (Grant of relief)	14, 1	70
இணக்கம் செய்து கொள்ளல் (Composition)—		
இரண்டாம் போகம்— தீர்வை (Second Crop Charge)	1, 1 (5)	2

	நிலையாணை எண்.	பக்கம்.
இ— தொடர்ச்சி.		
இருப்புப்பாதை (Railways)—		
இருப்புப்பாதை. நிலையத்திற்கு அருகிலுள்ள நிலம், ஒப்படை (Lands in the Vicinity Railway Stations Assignment).	15, ,38 (X)	129
இருப்புப்பாதை நிலையத்திற்கு அருகில் வீட்டுமனை— கொடை (House Sites near Railway Stations —Grant)	21 1 (II)	192
	10 (II)	204
ஆக்கிரமிப்பு— இருப்புப்பாதை நிலம் [Encroachments Railway (Lands)] ..	26, 12	265
இருப்புரிமை (Occupancy rights)—		
ஏலத்தில் விற்பனை (Sale in auction).	15–11	96
இறைத்தல் (தண்ணீர்) (Baling)—		
தண்ணீர்த் தீர்வை செய்தல் (Water rate deduction)	4, 8	12
நன்செய் நிலங்கள்— தீர்வைக் கழிவு (Wet lands—Assessment deduction)	5, 5	16
இனாம்கள் (Inams)—		
சிறு— தீர்வை வசூல் நிறுத்தி வைத்தல் (Minor Suspension of revenue collection)	14, 6	75
" துறக்கப்பட்ட ஏரிகள் " காண்க (See Tanks abandoned)		
ஊ		
உரிமம் (Licence)—		
புறம்போக்குகளில் மரங்களை நடுதல் (Planting trees on porambokes) ..	19 ஆ	187
தண்ணீரைப் பயனுக்கிக் கொள்ளுதல். மனை வாழ்க்கை அல்லது தொழிலுக்கு (Taking water for domestic and industrial purposes)..	11 அ	34
உரிமைப்பட்டயங்கள் (Title deeds)—		
அரசினர்— தயாரித்தல் (Government— Preparation)	30	271

	நிலயாணை எண்.	பக்கம்.
உ— தொடர்ச்சி.		
உரிமை வரி (ஜமீன்) (Peishkush)—		
பகிர்வு-ஜமீன்கள்-உட்பிரிவு (Apportionment Estates subdivision) ..	31, 10 (III)	282
உரிமையை விட்டு விடுதல் (Relinquishment)—		
அரசாங்க ஏரிகள் (Government Lakes)	8, 5	31
அரசினருக்கு உரியனவாக இருந்து சொந்தத்தில் பழுது பார்க்கப் பட்ட ஏரிகள் கீழ் உள்ள கைப்பற்று நிலங்கள் (Holdings under privately repaired tanks)—	8, 9	32
அரசுக்குடி உடைமை (Ryotwari Holding)	33	285
கீழுள்ளவற்றைக் காண்க (See below)		
காப்புப் பொறுப்பாளர்களும் பொறுப்பில் உள்ளவர்களும் (Guardians and Wards)		
வயதடையாதவர்கள் (Minors) ..		
வருவாய் பாக்கிகள் (Revenue arrears)		
உள்ளாட்சி மன்றங்கள் (Local Bodies)—		
அரசாங்க நிலம்— விட்டு வைத்தல் (Government land—Placing at the disposal of)	24, 6	237
நிலத் தீர்வை— விலக்கு (Land revenue—Exemption)	24, 8	243
தீர்வை, அம்மன்றங்களால் செலுத்தத் தக்கது (Assessment payable by such bodies)	24, 14	247
கீழுள்ளவற்றைக் காண்க (See below)		
சாலைகள் (Roads)		
தள்ளிக் கொடுத்தல் (Remission) ..		

	நிலையாணை எண்.	பக்கம்.
ஏ		
ஏரிகள் உள்வாய் நிலங்கள் (Tank Bed Lands)—		
ஒப்படை (Assignment)	15–38 (XIII)	131
ஏரிகள் (சொந்தம்) [Tanks (Private)]—		
வெட்டப்படுதல் (Constructions) ..	7	25
கீழுள்ளவற்றைக் காண்க (*See* below)—		
தீர்வை (Assessment)		
பொறி இயல் பணித் துறை (Public Works Department)		
ஏரிகள் (தசபந்தம்) Tanks (Dasa-pandhan)—		
மரங்கள் (Trees)	18, 1 குறிப்பு	167
ஏரிகள் (நீர்ப் பரப்பு) [Tanks (Water spread)]—		
குறியிடல்— கிராமப் படங்களும், நிலத் தீர்வை திட்டப் பதிவேடுகளும் (Marking Village Maps Settlement Registers)	16, 1	161
ஏரிகள் (துறக்கப்பட்டவை) [Tanks (Abandoned)]—		
ஏரி உள்வாய்— விற்பனை (Tank bed sale)	16, 2	163
ஏரியாக உள்ள இனம் நிலம் நடவழக்கை எடுக்கப்படுவது (Inam Lands—Treatment of)	16, 3	164
"தாழ் நிலை வகுப்பினர்" காண்க (*See* depressed classes)		
ஏரிகள் (தூர்ந்தவை— அரசினர்) (Tanks ruined—Government) ..		
சொந்தத்தில் பழுதுபார்த்தல் (Private repairs)	8	29
கீழுள்ளவற்றைக் காண்க (*See* below)		
உரிமை விட்டு விடுதல் (Relinquishment)		
கிராமத்தார்கள் (Village Communities)		

	நிலையாணை எண்.	பக்கம்.
ஏ—தொடர்ச்சி.		
தீர்வை (Assessment)		
நிலத் தீர்வை விதிப்பு] மாற்றம் (Re-settlement)		
பொறி இயல் பணித் துறை (Public Works Department) ..		
ஏரிகள் (வானம் பார்த்த) [Tarks (Rain Fed)]		
சொந்தத்தில் பழுது பார்த்தல் (Private Repairs)	8, 2	30
ஏற்றங்கள் (Baling)		
ஏற்றங்களால் பாசனம் (Irrigation by Baling)	4, 8	12
"இறைத்தல்" காண்க (*See baling*) ..		
ஒ		
ஒதுக்கக்காடு (அருகில் உள்ள நிலம்) [Reserved Forest (land near)]		
ஒப்படை (Assignment)	15, 38 (III)	124
ஒதுக்கப்படாத நிலம் (Un Reserve land)		
ஒப்படை (Assignment)	15–36	124
ஒப்படை (Assignment)—		
தீர்வை விதிக்கப்பட்ட நிலமும் தீர்வை விதிக்கப்படாத நிலமும் (Assessed land and unassessed land)	15, 8–10, 37	91-96, 123
சிறப்பான விலை மதிப்புள்ள நிலம் (Specially Valuable land)	15, 22	104
தனி விதிகள்—தனி வகுப்புகளில் உள்ள நிலங்கள் (Special Conditions Special Classes of land)	15, 35	122
தனி விதிகள்—செங்கல்பட்டு (Special Conditions—Chingleput)	15, 42	142
விண்ணப்பம் (Appiication) ..	15, 4–7	89-91
ஆணை தெரிவித்தல் (Communication of orders)	15–12 (1)	97

	நிலையாணை எண்.	பக்கம்.
ஓ—தொடர்ச்சி.		
நிபந்தனையுடன் கூடிய (Conditional)	15-12-2-3	97-98
நிலையிலுள்ள மரங்கள் கிணறுகள் கட்டடங்களுக்கு விலை கொடுத்தல் (Payment for standing trees, wells)	15—14	99
மேல் முறையீடுகள் (Appeals) ..	15—16—18	102-103
பதிவுக் கட்டுகள் (Records) ..	15—21	104
பாசன திட்டம்—சம்பந்தமானது (Irrigation—Relating)	15—22(4)	108
ஒப்படை நிலம்—பராதீனம் (Assigned land—Alienation)	15—41—(4)	138
திரும்பப் பிரவேசம் (Re-entry) ..	15—41-4 (III)	139
அரசினருக்கு அடைமானம் (Hypothecation to Government)	15—41, 4 (IV)	139
கீழுள்ளவற்றைக் காண்க (See below)		
அட்டவணையில் குறிப்பிட்ட சாதியினர் (Scheduled Castes)		
அநுபோகம் (Occupation)		
அயல் நாட்டவர்கள் (Aliens) ..		
அரசியல் தியாகிகள் (Political Sufferers).		
ஆறிடு மேடுகள் (River accretions) ..		
அனுமதி பெறுத அநுபோகம் (Unauthorised Occupation) ..		
இருப்புப்பாதை (Railways) ..		
இருப்புரிமை (Occupancy Right) ..		
ஏரிகள் உள்வாய் நிலங்கள் (Tank bed lands)		
ஒதுக்கக்காடு அருகில் உள்ள நிலம் (Reserved Forests near)		
ஓடைகள் (Streams)		
கம்பெனி (Company)		
கனிப் பொருள்கள் (Minerals) ..		
கிராம அலுவலர்கள் (Village Communities)		

நிலையான
எண். டக்கம்.

ஓ—தொடர்ச்சி

குத்தகை (Lease) .. .. ..
சங்கம் (Association) .. ..
சாலைகள் (Reads) .. .. ..
தாழ்நிலை வகுப்பினர்கள் (Depressed Classes) .. ..
தீர்வை (Assessment) .. ..
துறைமுகங்கள் (Ports) .. ..
தோட்டப்பயிர் விளையும் பகுதிகள் (Planting areas) .. .. ..
தோப்புகள் (Topes) .. ..
நில அளவையும், எல்லை வரையறுத்தலும் (Survey and Demarcation) .. ..
நிலங்கள் (கடற்கரை) [Lands (Coastal)] .. ..
நிலம் (மலைப்பாங்கான) (Land Hilly) .. ..
நிலவரித் திட்ட அலுவலர்கள் (Settlement Officers) .. ..
நீண்ட நிலக் குத்தகைகள் (Cowles).
நீரோடு புறம்போக்குகள் (Water course porambokes) .. ..
பதிவுக் கட்டுகள் (Records) ..
பாகுபாடு (Classification) .. ..
பாதைகள் (Paths) .. .. ..
புறம்போக்குபள் (Poramdokes) ..
மரங்கள் (Trees) .. . ..
பாசன ஆதாரங்கள் (Irrigation Sources) .. ..
மரங்கள் (சந்தனம்) [Trees (Sandal wood) . .. .
மலைவாழ்மக்கள் (Hill Tribes) ..
மலையும் தோட்டப் பயிர் விளையும் பயிர்களும் (Hills and P lantation Products) .. . .
மலைப்பாங்கான நிலம் (Hilly land) ..

	நிலையாணை எண்.	பக்கம்.
ஓ—தொடர்ச்சி.		
முன்னாள் போர் வீரர்கள் (Ex-service-men)		
மேய்ச்சல் தரை புறம்போக்கு (Grazing Ground Poramboke) ..		
மேல் முறையீடுகள் (Appeals) ..		
வழக்கமான உரிமைகள் (Customary rights)		
வனம் (ஒதுக்கப்பட்டது) [Forest (Reserved).]		
விமான நிலையம் அல்லது விமானம் இறங்கும் இடம் (Aerodrome or landing place)		
விண்ணப்பம் (Application)		
விற்பனை (Sale)		
வீட்டு மனைகள் (House sites)		
ஓ		
ஓடைகள் (Streams)—		
ஒப்படை செய்யப்பட்ட நிலம்—		
ஒதுக்குதல் (Assigned land reservation)	15, 33	121
க		
கசிவு (Percolation)—		
புன்செய் நிலம், தீர்வை (Dry land charge)— ..	4, 2 குறிப்புகள் 1, 2	9
கட்டடங்கள் (அரசினர், மாநில) [Buildings (Government, Local)] ..		
விற்பனையும் பிரித்தெடுத்தலும் (Sales and dismantlement) ..	22, 3, 4	222–224
மாற்றிக் கொடுத்தல்—துறைகளுக்குள் (Transfer—Inter departmental)	22, 7	226
கணக்குகள் (Accounts)—		
நிறுத்திவைக்கப்பட்ட நிலத்தீர்வையைச் சரிக்கட்டல்(Suspended land revenue)	14, 8, 9	76–77

	திலையாக்கை எண்.	பக்கம்.
க—தொடர்ச்சி.		
மர வருவாய்-வரவு வைத்தல் (Adjustment Tree Revenue—Crediting)	18, 4	173
கம்பெனி (Company)—		
"குழு" காண்க (*See* Association).		
கனிப்பொருள்கள் (Minerals)—		
அவை உள்ள நிலங்கள் ஒப்படை (Lands containing)	15, 38 (XI)	131
